



குமரன் துணை.

# விவேகபாநு.

மதுரையில் பிரகாமாகும்,

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

ஆறாவதுவால்யூம்.


பத்திராதிபர் { எஸ். சாமிநாதையர்.<br>மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.


சொந்தக்காரர் மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

வருஷ சந்தா ரூபா இரண்டுதான்.

12 சஞ்சிகை சேர்த்துப் பயிண்டுசெய்த இந்த வால்யூம்

விலை ரூ 2—4—0


விவேகபாநு ஆபீஸ், வடக்காவணி மூலவீதி. 251 நிர். வீடு.

1907ஹு டிசம்பர்மீ

விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை.

# விவேகபாநு 6-வது வால்யத்தின் பொருளடக்கம்.

162472


| விஷயங்கள் | விஷயதானஞ்செய்தோர். | பக்கம். |
|---|---|---|
| அமீரின் வரவு ... | ...பத்திராதிபர் | 25. |
| அமெரிக்க தனவான்களும் வித்தியாதானமும் | ஷை | 136. |
| ஆயுர்வேதத்தின் வரலாறு ... | ஓர் ஆயுர்வேதி | 339. |
| இந்தியாவில்ராஜதுரோக சரித்திரம் | சுதேசமித்திரன் | 421. |
| இராஜநிந்தனைச்சட்டம் ... | பத்திராதிபர் | 414. |
| இரக்கம் ... ... ... | ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள் | 345. |
| இராஜபக்தி ... ... | ஷை | 342. |
| ஒரு கரடிவேட்டை ... | எஸ். சாமிநாதையர் அவர்கள் | 154. |
| ஓர் விவரணம் ... | எளியார்க்கெளியன் | 18. |
| கர்னல்ஆல்காட்துரையின் நிர்யாணம் | பத்திராதிபர் | 41. |
| கல்விப் பொருட்காட்சி... | ஷை | 321. |
| கல்கத்தா கைத்தொழிலாளர் கூட்டத்தில் சுதேசிய பிரசங்கம் | சுதேசமித்திரன் | 354. |
| புதுவை ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்கள் சரமகவிகள் | ஓர் அன்பன். | 465. |
| காங்கிரெஸ் மகாசபை ... | ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள் | 441. |
| காதம்பரி ... ... | P. R. கிருஷ்ணமாச்சாரியாரவர்கள் | 346, 385. |
| குமண சரித்திரம் ... | மு. ரா. கந்தசாமிக்கவிராயர் அவர்கள் | 33. 73. |
| முகவுரை ... ... ... | மே சொ. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் | 189. |
| கோதிலாமுனம் ... | ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள் | 343. |
| சகாய நிதிகள் ... | ...பத்திராதிபர் | 241. |
| சமாசாரக்கொத்து ... | ஷை | 28. 66, 181. 315, 357. 377. 426. |
| சர்க்கரைக் கைத்தொழில் ... | பத்திராதிபர் | 417. |
| சிங்கமும். புலியும் பிராணியும் | ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள் | 246. |
| சிந்தாமணி சரித்திரம் | பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள் | 7. 57. 260. 407 |
| சுயராஜ்யம் ... | ...சுதேசாபிமானி | 70. |
| சுதேசாபிமானம் ... | மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் | 249. |
| சென்னை இராஜதானியின் ஜில்லா பிரிவினை | தக்ஷிணதீபம் | 142 |
| தமிழ் முதுமொழியின் வளர்ச்சியும் தளர்ச்சியும் | ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள் | 281. |





| விஷயங்கள். | விஷயதானஞ்செய்தோர். | பக்கம். |
|---|---|---|
| தர்மபரிபாலனம் ... | பத்திராதிபர் | 401. |
| தலைமருடன் சரித்திரம் | ம. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் | 449. |
| திருஉருமாமலைச் சிலேடை வெண்பா | மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் | 429. 467. |
| தீமை ... ... | ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள் | 248. |
| தீநெறி ... ... | ஷை | 344. |
| துஷ்யந்தன் சரித்திரம் | C. நாராயணசாமி அய்யர் அவர்கள் | 367. |
| தென்னாட்டுக்கு ஓர் நாஷனல் காலேஜ் I. II. | பத்திராதிபர் | 81. 145. |
| தேசப்பயிற்சி ... | ..இந்தியா | 173. |
| நமது நாட்டுப்பருத்தித் தொழில் | சுதேசமித்திரன் | 176. |
| நாட்டின் நலத்தைத்தேடுவது எவ்விதம் | பத்திராதிபர் | 361. |
| நரிகுராஜன்கதை .. | R. ராகவேந்திராச்சார் அவர்கள் | 51. |
| புத்தகக் குறிப்பு ... | பத்திராதிபர் | 161. |
| மகமதியமதமும் இந்திய ஜனசமூகமும் | வ. அனந்தையர் அவர்கள் | 125. |
| மதுரைத் தமிழ்ச்சங்க மஹோத்சவம் | பத்திராதிபர் | 119. |
| மீன் உரம் ... ... | ஷை | 337. |
| மிஸ்டர் ராமாராவும் ஜப்பான் விருத்தாந்தமும் | சுதேசமித்திரன் | 61. |
| ராபர்ட்கிளைவ் ... | எஸ். சாமிநாதையர் அவர்கள் | 167. 324. |
| ராய் பகதூர் சீதாராம் விசுவநாத் பட்டவர்த்தன் அவர்கள் பீ. ஏ. | M. ராகவேந்திராச்சார் அவர்கள் | 14. |
| ராய் பகதூர் C. நாகோஜிராவ் அவர்கள் | எஸ். சாமிநாதையர் அவர்கள் | 164 |
| ஸ்ரீ மீனாக்ஷிஸ்தோத்திரம் | பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள், | 329. 457. |
| ரோஜா ... ... ... | ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள் | 343. |
| லாலா லஜபதிராய்சரித்திரம் ... | சுதேசமித்திரன் | 92. |
| வித்தியா இலாகாவின் புதுச் சட்டங்கள் | பத்திராதிபர் | 1. |
| விநோதங்கள் ... | ... ஒரு விநோதப்பிரியன். | 138. |
| வியவசாய இந்தியாவில் கடிர்தீர்வை | சுதேசமித்திரன் | 251. |
| ஜகத்ஜோதி ... ... | எஸ். சாமிநாதையர் அவர்கள் | 45. 85. |
| ஜனநிலையும் அக்நிலைக்கு இன்றியமையாதவைகளும் | தேசாபிமானி | 106. |


பத்திராதிபர்.

# சுதேசிய ஏலக்கிருஷிக் கம்பெனி.

சுதேசிய ஏலக்கிருஷிக் கம்பெனி:— இப்பெயர்கொண்ட சங்கம் ஒன்று மதுரை ஜில்லா கோம்பை நகரத்தில் ஸ்தாபிக்கப் பெற்றுள்ளது. இக்கம்பெனியின் நோக்கம் அவ்வூருக்குச் சமீபத்துள்ள திருவநந்தபுரம் சமஸ்தான எல்லையில் தற்காஸ்து மூலம் நிலங்களைப் பெற்று ஏலப்பயிர்செய்து பலனடையவேண்டுமென்பதேயாம். இதைப்பற்றிய அறிக்கைப்பத்திரமொன்று நமது நவம்பர்பாதுவுடன் சேர்த்தனுப்பப் பெற்றிருப்பதால் முழு விவரமும் நம் நேயர்களறிந்துகொள்வார்கள். அறிக்கையிற் கண்டபடி பங்கு 1-க்கு 25 ரூபா கொடுத்தால 5-வது வருடமுதல் பிரதி வருடமும் (பங்கு 1-க்கு) 20 ரூபா லாபம் வரக்கூடும். இக்கம்பெனியார் 2000 பங்கு ஏற்படுத்தியதை **4000** (நாலாயிரம்) பங்குகளாக்கி ஒருலட்ச ரூபா மூலதனமாகஏற்படுத்தியிருக்கிறார்கள். சுதேசிய வளர்ச்சிக்கு இதுவுமொரு நற்காரியமென்றே கூறலாம். சொற்பத்தொகை பெற்றுச் சமீபத்தில் பெருந்தொகை கொடுப்பதாகச் சொல்லி ஏமாற்றிவரும் மரணப்பண்டு, கலியாணப்பண்டுகளில் பணத்தைப்போட்டு ஏமாந்துபோகும் நம்மவர்கள் கண்விழித்து இப்படிப்பட்ட தேசநன்மைக்கேற்ற காரியங்களில் பிரவேசித்துப் பங்குபெற்றால்தான் முன்னுக்குவரலாம். இக்கம்பெனியின் அக்கிராசனாதிபதியான ஸ்ரீமத் உ. ம. சே. தபக்கல்சாய்பு ராவுத்தரவர்களையும் மற்றும் இக்கம்பெனி அங்கத்தவர்கள் பலரையும் நாம் நேரிலறிவோம். இவர்கள் உண்மையான தேசாபிமானிகள். வியாபாரமுறையில் மிகத்தேர்ந்தவர்கள். பொதுஜனக்ஷேமத்தையே நினைப்பவர்கள். வேறு பலதுறை வர்த்தகங்களை நன்கு செய்து மதிக்கப்பெற்றவர்கள். இவர்களில் எமதின்னுயிர் நண்பர் ஸ்ரீமத் உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தரவர்களிவ்விஷயத்தில் மிகவும் பாடுபடுகிறார்கள். சுதேசாபிமானச்செல்வர்கள் ஒவ்வொருவரும் இக்கம்பெனியில் பங்குபெற்றுப் புகழும் பொருளுமெய்தி வாழ்வார்களாக. இவ்விஷயமாக மற்றும் விவரம் தெரியவேண்டியவர்கள் மேற்குறிப்பிட்ட இருவரிலொருவர்க்கெழுதித் தெரிந்துகொள்ளலாம்.

பத்திராதிபர்.

உ

குமரன் துணை

# விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 6 } 1907௵ ஜனவரி௴ { பகுதி 1

## வித்தியாஇலாகாவின் புதுச்சட்டம் II.

சென்ற சஞ்சிகையில் பிரதம வித்தியா விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட புதுச்சட்டங்கள் சிறுகிராமங்களுக்கு அநுகூலமானவையென்றும் பெருங்கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் பிரதிகூலமானவையென்றும் கூறினோம். அவ்வித அபிப்பிராயத்தைத் திருஷ்டாந்தமூலமாகவும் ருஜூப்படுத்திக்காட்டினோம். பிரதமவித்தியா விஷயமாய் கவரன்மெண்டார் எத்துணையோ பாடுபட்டுவரத் தொடங்கியிருக்கிறார்கள் என்பது வாஸ்தவமே. வருஷாவருஷம் அதற்கென்றே தனிமையாய் 6-லக்ஷம் ரூபா எடுத்துக் கொடுக்கிறார்கள் அதனைக்கொண்டு வித்தியா இலாகாதார் பிரதமவித்தையை மிக அபிவிருத்திபண்ண உத்தேசித்திருப்பதும் உசிதமே. இனி லோகல் போர்டுகளும் முனிஸிபாலிடிகளும் இக்கல்விவிஷயமாய் அநேக பணம் செலவிடும்படி நேரிடும். அவர்கள் அக்கல்விக்கு என்று தற்காலம்செலவுசெய்து வருவது மிகவும் சொற்பமே. அத்தொகையை அபிவிருத்திபண்ணிக்கொடுக்கக் கவரன்மெண்டார் தயாராயிருக்கிறார்கள்.

இதுநிற்க,—தற்காலம் கவரன்மெண்டார் இதுவரை ஏற்படாத ஒருபுதுயோசனை செய்துவருகிறார்கள். அஃதென்னவெனில், பிரதமபாடசாலைகளில் சம்பளமில்லாமல் கல்விகற்பிப்பதே. தற்காலம்பிரதமபாடசாலைகள் கவரன்மெண்டாராலும், லோகல் போர்டாரவர்களாலும், மிஷனரிகளாலும், சுதேசிகளாலும் போற்றப்பட்டு வருகின்றன. கல்வி மிகவும் குறைவாயிருக்கிற மலைநாடு முதலான சிற்சில

இடங்களில்மட்டும் கவரன்மெண்டார் சொந்தத்தில் தாங்களே சாலைகள் ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள். அவைகள் மிகச்சொற்பமே. லோகல் போர்டார் நடத்திவரும் பாடசாலைகளும் அதிகமாகவில்லை. ஒவ்வொரு ஜில்லா போர்டாரும், ஒவ்வொரு முனிஸிபாலிடியாரும் பிரதம கல்வி விஷயமாய்த் தற்காலம் செலவிடுகிற தொகை அவர்கள் வருவாயை உத்தேசிக்க மிகச்சொற்பமென்றே கூறலாம். இது விஷயத்தில் யாதொரு ஸ்திரமான ஒழுங்குகளும் ஏற்படவில்லை. நூற்றுக்கு இவ்வளவு செலவிடுகிறது என்ற நிபந்தனை ஏற்படுத்தி அத்தொகைகளை அவர்கள் சரிவரச்செலவிடுகிறார்களா என்று பார்ப்பது இன்றியமையாதது. முனிஸிபாலிட்டி விஷயமாகவாவது பேருக்கு ஒரு நிபந்தனையிருந்து வருகிறது. லோகல்போர்டு விஷயத்தில் யாதொரு நிபந்தனையும்காணோம். அவ்வித நிபந்தனைகள் ஏற்பாடுசெய்து அவ்வாறு சேர்ந்த தொகைகளைச் சரிவரச் செலவிடச்செய்வது வித்தியா இலாகாதாரின் கடமையாம். கவரன்மெண்டார் இதுவிஷயத்தில் எவ்வித உதவியும்செய்யத் தயாராயிருப்பார்களென்பது திண்ணம். இதனுடன் அவர்களுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கிற ஆறு லக்ஷ ரூபாவினின்று அவரவர்களுக்கு வேண்டுமளவு கொடுத்துப் பிரதம வித்தையை அபிவிருத்திசெய்தல் வித்தியா இலாகாதாரின் கடமையாம். அவ்விதமே நடத்த அவர்களும் கருத்துக்கொண்டிருக்கிறார்களென்பது யாவரும் அறிந்தவிஷயம். ஆனால் அவ்விதம் செய்வதில் பணத்தை வாரியிறைக்காமல் யுக்தமாகச் செலவிடல் வேண்டும். லோகல்போர்டாரும் இது விஷயத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்து எங்கும் பாடசாலைகளை ஏற்படுத்திப் பிரதமகல்வியை அபிவிருத்திசெய்தல்வேண்டும்.

இவ்விதம் பிரதமபாடசாலைகளை அபிவிருத்திசெய்யும்பக்ஷத்தில் தேசத்துக்குப் பெருத்த நன்மை உண்டாகும் என்பதிற்றடையில்லையாயினும் உயர்தரக் கல்விக்குச்சொற்பம் தடை யேற்படு மென்பது நம்கருத்து. தற்காலம் முனிஸிபாலிடியாரும், லோகல் போர்டாரும் அநேக இடங்களில் ஹைஸ்கூல்களும், காலேஜ்களும் ஏற்படுத்தி உயர்தரக் கல்வியை அபிவிருத்திசெய்து வருகிறார்கள். அவையெல்லாம் இனி அடியோடே தொலைந்துபோகும். உதாரணமாகக் கரூர்,



திண்டுக்கல், குளித்தலை, தாராபுரம் முதலிய இடங்களில் ஏற்பட்டு நடந்துவரும் ஹைஸ்கூல்களும், லோயர் ஸெகண்டரி பாடசாலைகளும் கைவிடப்படுமென்று அஞ்சுகிறோம். பிரதம பாடசாலைக்குச் செலவிடப் போதுமான பணமில்லாத இந்த போர்டார்கள் உயர்தரக் கல்வியை எங்கு ஆதரிக்கப்போகிறார்கள். அவர்கள் ஆதரிப்பதாகஇருந்தாலும் வித்தியாஇலாகாதார் அவர்களை அவ்வாறுசெய்யும்படி விடுவார்களோ என்பது சந்தேகம். அநேக இடங்களில் இம்மாதிரிப்பாடசாலைகள் அவர்கள் ஆதரணையிலிருந்து வருவதால்தான் நம்நாட்டு உயர்தரக் கல்வி அபிவிருத்தி யடைய இடமுண்டாகின்றது. அவைகளுக்கு லோபம்வந்துவிடும் பக்ஷத்தில் நாட்டின் உயர்தரக்கல்வி யடியோடே அற்றுப்போகாவிடினும் மிகவும் குறைவுபடும் என்பது திண்ணம். இதுவிஷயமாகத் தற்காலம் ஏற்பட்டிருக்கிற செலவையே அந்த போர்டார்களில் அநேகர் ஆக்ஷேபித்துக்கொண்டிருக்கிறார்கள். இனி இப்பாடசாலைகள் புதுச்சட்டப்படி அபிவிருத்தியாக வேண்டுமானால் அதிகப்பணம் செலவிடல் வேண்டும். அது நடக்கும் என்று தோற்றவில்லை. கவரன்மெண்டாரும் பிரதமகல்வி விஷயத்தில் ஊர்ஜிதமாய்க் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதால் உயர்தரக் கல்வி இவர்களால் ஆதரிக்கப்படுமோ என்பது சந்தேகமே. இதுவிஷயமான தீர்மானங்களும், அபிப்பிராயங்களும் இச்சமயம் முடிவுபெறாவிடினும் மூன்றுவருஷங்களுக்குள் ஒரு முடிவுக்குவரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆகையால், லோகல்போர்டார் பிரதமகல்வியை அதிகம் பரவச்செய்வார்கள். பணம் அதிகம்கிடையாததால் இப்பொழுது இருக்கப்பட்ட நிலைமையினும் அபிவிருத்தியடைந்தாலும் நாடு எங்கும் இவர்கள் பாடசாலைகளை ஏற்பட்டுப் பிரதம கல்வி போதுமான அளவு இவர்களால் ஆதரிக்கப் படுமென்று நாம் ஒருகாலும் எதிர்பார்க்கமுடியாது. ஆகையால் இம் முக்கியமான கல்வி ஏனைய இருவராலேயே அபிவிருத்தியாகவேண்டும்.

மிஷனரிகள் இதுவிஷயத்தில் தற்காலம் செய்துவருகிற ஏற்பாட்டினும் அதிகபலமான ஏற்பாடுசெய்து வருவார்கள். கவரன்மெண்டாருடைய சகாயம் அவர்களுக்கு முன்னிலும் அதிகமாகக்கிடைக்க வழியேற்பட்டு விட்டபடியால் அவர்கள் அதுவிஷயத்தில் மிகவும்

ஊக்கத்துடன் உழைக்க முன்னுக்குவருவார்கள். இதனால் நம் நாட்டுக்கு அதிகக்ஷேமம் உண்டாகுமென்று நாம் நினைக்கக் கூடாது. இதனால் நம் சுதேசகல்வி க்ஷீணிக்க இடமுண்டாகும் என்று பயப்படுகின்றோம். ஏனெனில் நம் நாட்டில் தற்காலம் பிரதம கல்வியானது பாதிக்குமேல் சுதேசிகளுடைய கையிலேயே இருந்து வருகின்றது. கவரன்மெண்டார் நினைத்துக்கொண்டிருக்கிற விதம் பிரதம பாடசாலைகளில் பிள்ளைகளுக்குச் சம்பளம் வாங்கக்கூடாது என்ற ஏற்பாடு ஊர்ஜிதத்துக்கு வந்துவிட்டால் பாதிக்குமேல் நம் சுதேசிகள்கையிலிருக்கிற பிரதம கல்வியானது அபாயத்துக் குட்படும் என்பது திண்ணம். எவ்வாறு என்று ஆராய்ந்துபார்ப்போம்.

தற்காலம் சுதேச பாடசாலைகள் எல்லாம் வசூலாகிற சம்பளத்தாலும், கவரன்மெண்டு கிராண்டினாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கவரன்மெண்டார் சம்பள வசூலை நிறுத்திக் கிராண்டை அதிகரிக்கச்செய்தாலும் கிராண்டைமட்டுங்கொண்டு பள்ளிக்கூடங்களை நடத்துவோர் மிகச்சொற்பமே ஆவார்கள். கிராண்டு என்று எப்பொழுது ஏற்படுகின்றதோ கவரன்மெண்டார் பூராச்செலவையும் கொடார்களென்பது திண்ணம். ஆகையால் சம்பளவசூல் நிறுத்தப்பட்டால் ஜனங்களுக்கு மிகவும் அநுகூலமாகுமென்று மேற்பார்வையாகத்தோன்றினாலும் அதனால் சுதேசகல்விக்குப் பிரதிகூலமே உண்டாகும் என்பது நம் துணிபு. சுதேசிகள் எப்பொழுது பள்ளிக்கூடங்களை நடத்த முன்னுக்கு வரவில்லையோ அப்பொழுது ஏனை மூன்று பேர்கள் கையில் போக நேரிடும். கவரன்மெண்டாரோ தாங்களே நேரில் பிரதம கல்வி விஷயமான பாடசாலைகளை ஸ்தாபித்து ஆதரிக்கப்போகிறதில்லை. லோகல்போர்டார் தலைமேல் அப்பாரத்தைச் சுமத்தி அவர்களுக்குத் திரவியசகாயம்செய்து அவர்களைக்கொண்டு நடத்துவார்கள். லோகல்போர்டுகளுக்கோ எத்துணையோ செலவுகளில் இஃதொன்று. ஆகையால் பிரதமகல்விக்கென்று போதுமான பணம் செலவிடச் சக்தியிராது. ஆகையால் எல்லாம் மிஷனரிகளுக்கே அநுகூலமாகமுடியும். அவர்களோ எப்பாடுபட்டும் கீழ்ஜாதியாருக்குள் கல்வியைப் பரவச்செய்து அவர்களைத் தங்கள்மதத்துக்குக் கொண்டுவர முயலச்சித்தமாயிருக்கிறார்கள்.



ஆகையால் அவர்கள் காட்டிலேயே மழைபெய்யும். நம் நாட்டார் இதுவிஷயத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்து தக்க ஏற்பாடுகள் செய்யாமற்போனால் இப்புதுச்சட்டங்களால் நம் தேசத்துக்கல்விக்கு அநுகூலமுண்டாவதினும் பிரதிகூலமே அதிகமாய் விளையும். ஆகையால் நம் நாட்டுப் புத்திமான்கள் இது விஷயத்தில் ஏனோதானோவென்று இருத்தல் கூடாது. தற்காலம் நம் சுதேச பாடசாலைகளாற்றான் நம் மதத்துக்கு க்ஷேமமுண்டாகி வருகின்றது. கிராமாந்தரங்களிலுள்ள பாடசாலைகளே நம்மதத்தைச் சிறிது போற்றி வருகின்றன. இன்னும் அநேகம் கிராமப்பள்ளிக்கூடங்களில் அம்பிகைமாலை விநாயகர் தோத்திரம் சரஸ்வதி தோத்திரம் முதலிய மதப்பாடங்கள் நடந்துவருகின்றன. அப்பாடசாலைகளை நடத்தும் உபாத்தியாயர்கள் கிராமத்துப்பழைய குடித்தனக்காரர்களுடைய பிரீதியைச் சம்பாதிக்கும் வண்ணமும் தங்கள் வருவாயை உத்தேசித்தும் இவைகளை நடத்திவருகிறார்கள். புதுச்சுவடி தொடங்கும்பொழுதெல்லாம் உபாத்தியாயருக்குச் சொற்ப வரும்படி உண்டு. அவைகளெல்லாம் அடியோடே தொலைய நம் நாட்டுக்கல்வி பட்டணங்களிலுள்ள கல்வியைப்போலச் சிறிதும் மதசம்பந்தமில்லாமல் போய்விடும். இம்மட்டும் நின்றாலும் பாதகமில்லை. மிஷனரிகள் வியாபித்துவிடின் இவைகளுக்கு மாறுதலான விஷயங்களும் ஏற்பட்டுவிடும். நம் மதத்துக்கே அநர்த்தம் விளையும். ஆகையால் உயர்தரக்கல்வி எவ்வாறு போயினும் அடிப்படைக்கல்வியாகிய இம்முக்கியகல்வியையாவது நம்மைவிட்டு விலகாமல் நாம் பாதுகாத்துக்கொள்ளவேண்டியது. ஒவ்வொரு தேசாபிமானியின் கடமை யாகும். வெள்ளம் வருமுன்னரே அணை கோலிக்கொள்ளல் அவசியம். நாம் வருமுன் காப்போனாக இருந்து தப்பித்துக்கொள்ளவேண்டுமேயொழிய வருங்காற்காப்போனாகவாவது வந்தபின் காப்போனாகவாவது இருந்து சங்கடத்திற்குட்படக்கூடாது. பிரதம பாடசாலைகளில் சம்பளவசூல் வேண்டியது இல்லையென்று சட்டம் ஏற்படுவதால் நம் நாட்டுக்குப் பெருத்த நலமுண்டாகும் என்று அநேகர் நினைத்துமோசம் போகாமல் நம் மதத்துக்குப் பெருங்கேடே விளைவிக்கும் என்று நடுநடுங்கிப் பிரதமகல்வி விஷயத்தில் அங்கியர்கள் ஆக்கிரமிக்காதவண்ணம் தக்க ஏற்பாடு நாம் செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டாலொழிய நாம் உண்மைத்தேசா

பிமானிகளாகமாட்டோம். நம்முயற்சிக்குறைவே நம்மைக்கெடுக்கிறதேயொழிய நம் தாரித்திரியம் நம்மைஅவ்வளவாகக்கெடுப்பதாகநாம் சொல்லத் துணியோம். அன்னவஸ்திரத்துக்குள்ள புத்திமான்கள் பணம் சம்பாதிப்பதிலேயே தங்கள் புத்தியையும் காலத்தையும் செலவிடுவதைக்காட்டிலும் தேச அபிவிருத்தி விஷயமான இம்முக்கிய விஷயத்தில் தங்கள் காலத்தையும் யுக்தி புத்திகளையும் செலவிடுவார்களானல் நம் நாட்டுக்குப்பெருத்த க்ஷேமமுண்டாகும். நம்மனத்துக்கும் மிக்க சந்துஷ்டியும் திருப்தியும் உண்டாகும். எல்லாவித சீர்திருத்தங்களுக்கும் இப்பிரதம கல்வியே ஆதாரமாயிருக்கிறது என்பதை நாம் சிறிதும் மறக்க ஒண்ணாது. "கரணம் தப்பினல் மரணம்" என்பதை நாம் உய்த்துணரக்கடவோமாக. "நாடெங்கும் வாழக்கேடொன்றுமில்லை" என்பது நம் முதுமொழி. நம் கிராமக் கல்வியபிவிருத்தி விஷயத்தில் நாம் முயற்சிக்கவேண்டிய வழிவகைகளைப் பற்றி அடுத்த முறை எழுதுவோம்.

பத்திராதிபர்.



# சிந்தாமணி சரித்திரம்.

(328-ம் பக்கத்தொடர்ச்சி.)

*

ஒருநாட் பகல் பத்துமணியிருக்கும். குற்றாலத்தில் ஒரு தபால் சேவகன் சந்திரசேகர ஐயரிடத்தில் ஒரு பத்திரிகையைக் கொணர்ந்து கொடுத்தான். அக்காலத்தில் சந்திரசேகர ஐயருடன் இராமையரும் சந்திரசேகர ஐயருடைய ஸம்ஸாரமும் பல சங்கதிகள் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சந்திரசேகர ஐயர் அப்பத்திரிகையை அங்கு வந்திருந்த கோபாலன் கையில் கொடுத்து அதைப் படிக்கும்படி கேட்டுக் கொண்டார். அந்தப்பத்திரிகையானது கொல்லத்திலிருந்து சந்திரசேகர ஐயருடைய தம்பி கிருஷ்ணையரால் அனுப்பப்பட்டு அதில் அவரும் மகாதேவையரும் சிந்தாமணியுடன் திருவனந்தபுரத்துக்குப் படகுகள் ஏறிச்சென்றதும் சிந்தாமணிக்கு நேரிட்ட விபத்துக்களும் கிருஷ்ணையருக்கும் மகாதேவையருக்கும் உண்டான சங்கடங்களும் கடைசியாக "தருமம் தலைகாக்கும்" என்னும் நீதிவசனப்படி சிந்தாமணிக்கு எக்குறையும் நிகழாது அவள் கொல்லம் வந்து கிருஷ்ணையருடைய கிருகத்தில் வாஸம் செய்து கொண்டிருப்பதும் வரையப்பட்டிருந்தன. இவ்வரலாறுகளைப் படிக்கக்கேட்ட சந்திரசேகர ஐயர் இராமையரை நோக்கி "என்ன ! இராமையரே! ஸாதுக்களுக்கு இப்படியா கஷ்டம் சம்பவிக்கும் ? அந்தச் சிந்தாமணி மகாபதிவிரதை. அவளுடைய கணவன் அவளை மறந்துவிட்டுத் துன்மார்க்கத்தில் அழுந்தி அநேகவருஷங்களாகக் கெட்டலைந்துதிரிந்தபோதிலும் அப்பெண்மணி அவனுடைய அக்கிரமத்தைச் சற்றேனும் மனத்துட் கொள்ளாமல் பதியே தெய்வமென்னும் மேலான கருத்துடன் அவனிருக்கும் இடத்தை ஆவலாகத் தேடிச் சென்றும் அதற்குத் தெய்வம் அநுகூலமாயிருக்கக் கூடாதா ? கலியின் பிரபாவம் மேன்மேலாக அதிகரிக்கத் தெய்வமும் தருமமும் மறைந்து நிற்கின்றனவே. தாய்தகப்பனை யிழந்து செல்வத்தையுமிழந்து கணவனாலும் கைவிடப்பட்ட அச்சிறிய பெண்ணுக்கு கிருபாநிதியாகிய பரமேசுவரனன்றி வேறு எத்துணை இருக்கின்றது.?"

என்று பரிதாபத்துடன் உரைத்தார். இதைக் கேட்ட கோபாலன் தன்னருகிலிருந்த கனகசபையை நோக்கி:—

"ஏன் கனகசபை! அப்பெண் யார் தெரியுமா? முன்னொருநாள் அவள் வயிற்றில் ஒருசெப்பு பாயஸம் நுழைந்தவுடன் அம்பிகை திருப்தியடைந்தாள் என்று அருவிக்கரைமண்டபத்தில் தாத்தாவும் பாட்டியும் வெகு ஜம்பமாகப் பேசிக்கொண்டார்கள் அல்லவா? அது சம்பந்தமாகத்தானே இராமையரும் நம்முடன் சண்டைக்கு வந்தது. அந்தப் பெண்ணினுடையபாடு மிக்க திண்டாட்டமாய் முடிந்திருக்கின்றதாம். அந்த அம்பிகை கண்மூடித் தூங்கிக்கொண்டிருக்கிறாளோ? நம்மவர்கள் அஞ்ஞானத்தினால் எவ்வளவு சீரழிவை யடைந்தாலும் அவர்களை மூடபக்தி விடுகிறதில்லையே. நம் நாட்டின் அலங்கோலமான சாஸ்திரப்படி கணவன் கொடுமையுடன் அகற்றிவிட்டால் மனைவிக்கு ஓர்கதியுமில்லை. கணவனைவிட்டு மனைவி அரை நாழிகை பிரிந்துவிட்டால் அந்தச் சாஸ்திரம் எவ்வளவு கோபமாகச் சீறுகின்றது. இவ்விதமாகவே ஒரு பெண்ணுக்குச் சுய அறிவு ஏற்படுவதற்கு முன் அவளை ஒருவன் காலில் கட்டுவதனால் அல்லவோ பிறகு அத்தம்பதிக்குள் பரஸ்பரம் பிரேமையின்றிப் போகின்றது. நம்முடைய நாடு கெடுவதற்கு ஒரு காரணமா ஏற்பட்டிருக்கின்றது? ஐயோ! பெண்ணுக்குப் பருவகாலம் வருவதற்கு முன் விவாகம் செய்கிறது ஒரு தீங்கு. அதனால் இரக்கமின்றி மனைவியின் மீது அபிமானமில்லாமல் அவளைக் கணவன் அகற்றி விடுகின்றதைப் பல இடத்தில் பார்க்கின்றோம். அதுமட்டுமா? இளம்பருவத்தில் கணவன் இறந்துவிட வைதவ்வியத்தினால் துயரப்பட்டு மறுவிவாகத்துக்கு இடமின்றி வருந்துகிற மாதர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? காலத்துக்குத் தக்கபடி நம் ஆசாரங்களைச் சீர்திருத்தி வேண்டியவாறு மாற்றிக் கொண்டு நடந்தாலல்லவோ நம் நாட்டுக்கு க்ஷேமம் உண்டு. மேற்றேசத்தாருடைய நாகரிகத்தின் உதவியை நாம் இவ்வளவு அடைந்தும் சாஸ்திரமென்று சொல்லப்படுகிற பழஞ்சுவடிகள் எத்தனை கேடுகள் விளைவிக்கின்றன? ஒருமுயற்சியுமின்றித் தெய்வமே கதி என்றாவது தர்மமே தலைகாக்கு மென்றாவது இருப்பவனுக்கு இவ்வுலகத்தில் ஒருகவளம் சோறாவது அகப்படுமோ?



சீ! சீ!! நம் நாட்டினருடைய மதக் கொள்கைகளும் ஆலயங்களும் துராசாரங்களும் இருக்கும் வரை அவர்கள் என்று தலையெடுக்கப் போகிறார்கள்? சிந்தாமணியின் புருஷன் அவளைவேண்டாது ஒழித்துவிடின் அவள் அவனை விட்டு வேறொரு தகுதியான கணவனை விவாகஞ் செய்துகொண்டு சுகமாய் இருந்தால் நாரதரும் பராசரரும் வைத்திநாத தீக்ஷிதரும் இன்னும் கூறுகெட்ட பைத்தியக்காரர்களும் ஒப்பமாட்டார்களாம். அவளுக்குப் பதிவிரதம் முக்கியம் என்று சொன்ன சாஸ்திரம் அவள் கணவனுக்கும் பத்னீவிரதத்தை வற்புறுத்திச் சொல்லாதிருக்கும் பொழுது அந்தச் சாஸ்திரத்தைக் கொளுத்தி விட்டாலென்ன?" என்று சொன்னான்.

அதைக் கேட்ட கனகசபை:—

"கோபாலா! அந்தச் சாஸ்திரத்தையாவது சரியாக அர்த்தம் பண்ணிக்கொண்டு நம்மவர்கள் அதைஅனுசரித்து நடக்கின்றார்களா? சாஸ்திரம் தாறுமாறுமாக இருந்தாலுங்கூட அதையனுசரித்து நடந்தாலும் குணமாயிருக்குமே. சாஸ்திரம் கற்றோமென்று சொல்லிக் கொள்ளுகின்ற வைதிக பிண்டங்களுடைய மூடத்தனத்தினால் எத்தனை துராசாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முதலாவது—"சாதியிரண்டொழிய வேறில்லை" என்றும் "இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்" என்றும் மொழிகின்ற அழகான நீதிமுறையை அகற்றிவிட்டு ஜாதிகளென்றும் வர்ணாச்சிரமமென்றும் கணக்கற்ற தெய்வங்களென்றும் அநாவசியமாகப் பாராட்டிக் கொண்டு கேடு கெட்டலைகின்றோமே. பிராமணனாவது சூத்திரனாவது அவர்களைச் சிருஷ்டித்த ஈசுவரன் அவர்களுடைய அவயவங்களிலாவது உருவத்திலாவது யாதொரு பேதத்தையும் அமைக்கவில்லை. ஆயிரம் இரண்டாயிரம் கொடுத்தாவது ஜாதிவரம்புக்கு உட்பட்டு ஒருபெண்ணை ஒருவன் காலில் கட்டுவதைக் காட்டிலும் ஒருஜாதிப்பெண்ணை மற்றொரு ஜாதியிற் பிறந்தவனுக்கு விவாகம் செய்து கொடுத்தால் அவர்களுக்கு சந்ததி உண்டாகாதோ? ஜாதியிற் பிறந்த வெள்ளைக்காரச்சி பறையனாய்ப்பிறந்து சட்டைக்காரனாகிவிட்ட ஒருவனைக் கணவனாக வரித்து அவனுடன் வாழ்ந்து பிள்ளை குட்டிகளுடன் வாழ்கின்றதை எத்தனை இடத்தில் பார்க்கின்றோம். அவர்களுக்குச் சந்ததியைக்

கொடுக்கமாட்டோமென்று கடவுள் மறுத்து விடுகின்றாரா? அந்தச் சிந்தாமணிக்குச் சௌந்தரியமிருந்து என்ன பிரயோஜனம். அதற்குத்தக்க அறிவும் அவளிடம் பொருந்தியிருக்கின் அவள் இவ்விதம் பரிதபிப்பாளா? இன்னும் நான்கு வருஷம் தெய்வத்தை நினைத்துக் கொண்டு தலைவிரிகோலமாகத் திரிந்தால் அதற்குள் அவள் சௌந்தரியமெல்லாம் கதையாகப் போய்விடும். அப்பால் பதினாயிரம் தருகிறேனென்றாலும் அவளை எவன் விரும்புவான்?" என்று சொன்னான். இதைக்கேட்ட இராமையர் கோபாலனையும் கனகசபையையும் நோக்கி:—

"அட! அறிவற்றவர்களே! நீங்கள் சாஸ்திரத்தின் மரியாதையையும் ஆசாரங்களின் தாத்பரியங்களையும் ஒருவாறு அறிந்துபேசினாலும் அல்லது அவைகளை அறிந்துகொள்ளவேண்டுமென்கிற கருத்துடன் வினவினாலும் உங்களுடன் வசனிக்கலாம். உங்களுக்கு அறிவும் இல்லை. மிக அறிந்தோமென்கிற செருக்கினால் ஒன்றையாவது நன்கு விசாரித்து அறியவேண்டுமென்கிற நோக்கமுமில்லை. ஆனால் ஒவ்வொரு சமயத்திலும் நீங்களும் உங்களைப் போன்றவர்களும் பிதற்றும் மொழிகளுக்கு உத்தரம் சொல்லாமல் மௌனமாயிருந்தால் நீங்கள் உரைத்ததே மெய்யானதென்று இன்னும் அதிகமான கர்வம் பாராட்டிக் கெட்டலைந்து போவீர்கள். ஆதலால் உங்கள் நிமித்தமாக நான் உரைக்கும் வசனங்களைக் கேட்கும் மற்றவர்களுக்காவது பிரயோசனம் உண்டாகுமென்கிற கருத்துடன் இப்பொழுது சொல்லுகின்றேன். நீங்கள் அம்மொழிகளைக் கேட்டு அவைகளின் கருத்தை அங்கீகரித்தாலும் சரி அல்லது செவிடன் காதில் சங்கு ஊதுவது போல அம்மொழிகள் உங்களுக்கு நல்லறிவைப்பயவாமற் போனாலும் போகட்டும்.

நம் நாட்டில் தொன்று தொட்டுத் தெய்வம், தர்மம், ஆசாரம் என்கிற மூன்று தாத்பரியங்களை ஒன்றைவிட்டு மற்றொன்றைப் பிரிக்காமல் சாஸ்திரமானது மானிடர்களுக்கு நிலைவரமாக உபதேசிக்கின்றது. மிருகங்கள் இருப்பது உண்பது, உறங்குவது மருவுவது தவிர மற்றொன்றையும் உணர்வதற்கு மதியின்றி இருப்பதுபோல இவ்வுலகத்தையன்றி வேறொரு மேலுலகத்தையாவது இப்பிறப்பு ஒழியின் பின் மறுபிறப்பையாவது அவனவன்புரியும் கருமங்களுக்குக் கைக்



கு மெய்யாக அநுபவிக்கும் பலன்களைத்தவிர வேறுபலன்களையாவது ஒப்புக்கொள்ளாத கொள்கையையுடைய மூட ஜாதியார்கள் பலர்கள் உலகத்தின் கண் இருக்கிறார்கள். அவர்களுக்கும் மிருகங்களுக்கும் என்னபேதம்? மானிடப்பிறவிக்கு உரித்தாகிய மேலான மதி, மிருகங்களைப் போல இச்சை முதலிய பண்புக்கு ஆளாகாமல் எந்த ஆசாரத்தினால் தர்மம் சித்திக்குமோ, எந்தத்தர்மத்தினால் தெய்வத்தின் அருள் பெறத்தக்கதோ அவ்வருளால் இவ்வுலகத்துக்கு இயற்கையாகிய துக்கங்களினின்று விலகிஎவ்வாறு நிரந்தரமான சுகத்தையடையலாமோ இம்முறைகளையெல்லாம் அறிந்து ஒழுகவேண்டுமென்பது நமது நாட்டினருடைய பூர்விகமான கொள்கை. மானிடர்கள், உத்தமர்கள், மத்திமர்கள், அதமர்கள், அதமாதமர்கள் என நான்கு வகுப்பினர்களாக அமைந்திருக்கின்றனர். அந்த நான்கு வகுப்பினர்க்குள்ளும் அடங்காதவர்களை இராட்சஸர்களென்றும் ஆத்மதுரோகிகளென்றும் சாஸ்திரமானது விவகரிக்கின்றது. வித்தையினால் தெய்வத்தின் அருளை அறிந்து அநுபவிப்பவர்கள் உத்தமர்கள். வித்தையைப் பெற அதிகாரமில்லாமல் தர்மத்தைத் தவத்துடன் அநுஷ்டித்து மேன்மை பெறுவோர் மத்திமர்கள். கர்மங்களின் நுட்பமான பொருளை அறியும் தகுதியற்றுச் சிரத்தையுடன் நல்ல ஆசாரங்களைக் கைக்கொண்டு அவைகளை விடாது அநுசரிக்கும் மேம்பாடுடையோர் அதமர்கள். வித்தை, தவம் சிரத்தை என்னும் இம் மூன்று முறைகளையும் பற்றுநடப்பதற்கு மனவலி அற்று அம்மூன்றுமுறைகளையும் பற்றி நடப்பவர்களை வழிபாடு செய்வது தவிர வேறொரு முறையும் அற்றவர்கள் அதமாதமர்கள், நீங்கள் அந்த நான்கு வகுப்பினர்க்குள்ளும் அடங்காமல் தெய்வம், தர்மம், ஆசாரம் இவைகளை இகழ்ந்து பேசுவதையே கௌரவமாகக் கொண்டிருப்பதால் எந்தஜாதியிற் பிறந்திருந்தாலுமென்ன? எந்த அருமையான கல்வி பயின்றிருந்தாலுமென்ன? உங்களிடத்தில் உங்களுடைய தொல்வினையால் ஐந்தாவது வகுப்பின் தன்மையாகிய இராட்சஸபாவம் மிகநிறைந்திருக்கின்றது.

நம்மவருடைய மேலான கொள்கை யாதெனில் உடலொடு பிறப்பதே பெரும்பிணியென்றும் அப்பிணியை யகற்றுவதற்கு வித்தையே அரிய மருந்தென்றும் கருமமே அம்மருந்துக்கு அநுபானமென்றும் நல்ல ஆசாரமானது அம்மருந்துக்குப் பழுதுவாராமல் அம்மருந்

தின் பிரயோஜனம் சடுதியில் சித்திக்கும்படியாகச் செய்கிற பத்தியமென்றும் வெகு காலமாக அங்கீகரித்திருப்பதுதான். மதக்கொள்கைகள் எவ்விதமிருப்பினும் தெய்வத்தின் அருளை ஒப்புக்கொள்ளாத ஜாதியார் எவருளர்? ஆத்ம வித்தையை நன்கறியாமல் கேவலம் லௌகிக (Materialistic) முறையிலேயே அழுந்தியிருக்கும் சில அந்நியமதஸ்தர்கள்கூடத் தெய்வத்தின் அருளை மறுப்பதில்லை. கர்மானுஷ்டானமென்கிற நியமம் அவர்களுக்கில்லாமற் போனாலும் நல்ல ஆசாரம் கெட்ட ஆசாரம் என்கிற வித்தியாசத்தை அவர்களும் பாராட்டியே நடக்கின்றார்கள். நாகரிகமுள்ள மேல் நாட்டினருடைய கொள்கையையே வியந்து பேசுகிற நீங்கள் அக்கொள்கையையாவது இன்னதென்பதை நன்கு விசாரித்திருக்கிறீர்களா? அவர்களில் எந்த யோக்கியர்களுடைய நடத்தையை நீங்கள் கண்ணுற்றறிந்தீர்கள். தங்களுடைய ஜாதி நியமம் எல்லாம் விட்டு வயிற்றுச் சோற்றுக்காகவும் ஏராளமான திரவிய சம்பாத்தியத்துக்காகவும் இந்நாட்டுக்கு வந்து கருணை முதலிய உயர்ந்த குணமொன்றுமின்றி எல்லாவற்றையும் மறுப்பதே (Nihilistic) சுவாபமாகவுடைய சிலர்களைத் தாமே நீங்கள் கண்டீர்கள். ஏகபத்நி விரதத்தை அநுஷ்டிக்கிற எத்தனை மகாநுபாவர்களும் பாதிவிரத்தியத்தையே பரம தருமமாகப் பாராட்டி வரும் எத்தனை ஆயிரக்கணக்கான புண்ணியவதிகளும் மேல்நாட்டில் இருக்கிறார்கள். அவர்களைப்பார்த்து நீங்கள் நடக்கக்கூடாதா? விவாகம் செய்தபின் அதர்மமான விருத்தியில் பிரவேசித்து கௌரவமின்றிக் கலியாணத்தை ரத்துசெய்துகொள்ளுகிறவர்களையும் பின் மறுகல்யாணத்தில் பிரவிர்த்திக்கிறவர்களையுந்தானே நீங்கள் பார்த்து அவர்களைப்போல நடக்க முயல்கிறீர்கள். மேல் நாட்டில் வைதவமடைந்த கோமாட்டிகள் மறுபடியும் இல்வாழ்க்கையை விரும்பாமல் நல்ல ஒழுக்கத்துடன் உலகத்துக்காகப் பாடுபட்டுக்கொண்டு தங்களுடைய காலத்தைக் கழிக்கும் பிரமசாரிணிகளாக இருப்பவர்கள் எத்தனைபேர்கள்? மதுபானத்தை வெறுத்து அக்கொடிய துராசாரமானது இம்மைக்கும் மறுமைக்கும் அளவற்ற கேட்டை விளைவிக்குமென்று கருதி குடிப்பவருடைய முகத்தைக்கூடப் பார்க்க விரும்பாத புனிதர்கள் எத்தனை பேர் மேனாட்டிலிருக்கிறார்கள்.



இந்நாட்டுக்குவரும் சில அதமர்களுடைய ஆசாரந்தானே மேலானதென்று நினைத்துக் குடிப்பதும் புகைச்சுருட்டை உபயோகிப்பதும் நீசர்களால் அமைக்கப்பெறும் ரொட்டி முதலிய ஆபாச உணவுகளை நாணமின்றி உண்ணுவதும் முதலிய துராசாரங்களில் அழிந்து நிற்கிறீர்கள். அந்தச் சிந்தாமணிக்குத் தெய்வம் உடனே அருள் புரியாதது குற்றமா? அவள் இப்பிறப்பில் மகாகுணவதியாக இருந்தாலும் முன் பிறப்பில் புரிந்த சில தீவினைகளின் பயனை அவள் கொஞ்சங்கூட வெறுப்பின்றி அநுபவிக்கிறாள். அதுதான் உத்தம குணம். அவளுக்கு இவ்வளவு சங்கடம் நேர்ந்ததும் அச்சங்கடங்களெல்லாம் முன் வினையின் பயன் என்று நன்றாகத்தெரிந்துகொண்டவளாகையால் அவள் தெய்வத்தையும் அளவில்லாத பக்தியுடன் வணங்குகிறாள். அதுதான் வித்தை. அவள் கர்மாநுஷ்டானத்திலாவது ஆசாரத்திலாவது சற்றேனும் குன்றவில்லை. யௌவனமும் ஆண் பெண் வாழ்க்கையும் மிருகங்களும் பாராட்டும் பண்புகள் பிறந்துவளர்ந்து சடுதியில் அழிகின்ற உடலின் அழகும் யௌவனமும் எவ்வளவு காலமிருக்கும்? உடலுக்கு வேறுபட்டு ஆத்மவடிவாக 'நானிருக்கிறேன்' என்னும் கொள்கையுடையார்க்கு உடலின் அழகும் யௌவனமும் இருந்தென்ன போயென்ன? அடா! புத்தியற்றவர்களே! ஆலயங்கள் உங்களை என்ன செய்கின்றன? உணவுக்காகக் காலமெல்லாம் ஓடித்திரிந்தாலும் கொஞ்சம் அவகாசங் கிடைத்தபோது ஆலயங்களுட்சென்று கடவுளென்று பாவிக்கப்படும் புண்ணிய பிம்பத்தின் முன்னர் நின்று "நான் ஏதோ அஞ்ஞானத்தினால் உன்னை மறந்தேன். உன் கருணையால் என் அஞ்ஞானம் அகன்று யானுமுய்யவேண்டும்" என்று தொழுது நல்ல கதியை யடைவதற்காக மேலோர்கள் ஏற்படுத்தியிருக்கும் மகா புனிதமான இடங்களல்லவோ ஆலயங்கள். உன்னுடைய தலையெழுத்து ஆலயந்தொழவொட்டாமல் உங்களுக்கு முன் நின்று மறுத்தபோதிலும் ஆலயந்தொழுகிற புண்ணியசாலிகளைக்கூட நீங்கள் இகழவேண்டுமோ?

(இன்னும் வரும்)

உமாதாஸ்.

# *Rai Bahadur Shitaram Visvanath Patwarthanam B. A.*

# ராய் பகதூர் சீதாராம் விஸ்வநாத்பட்டவர்த்தன் அவர்கள் பி. ஏ.

---

சென்ற நூற்றாண்டின் துவிதியார்த்தத்தில் எழுதப்பட்டதக்கண நவீன சரித்திரத்தில், கேவலம் தரித்திர குடும்பத்திற் ஜனித்தும் தங்களுடைய பொறுமை, விடாமுயற்சி இவைகளின் பலத்தால் முடிவில் அறிவு தனம் பெருகி அதிக உன்னத ஸ்திதியை யடைந்தவர்கள் பலருளர் என்பதைக் காணலாம். இவ்விஷயத்தில் உண்மை பீரார் மாகாணங்களில் பொது வித்யா விசாரணைத்தலைவராக இருந்து (Direcor of Public Instruction) இந்த ஆறு ஆண்டுகளாகப் பென்ஷன் பெற்றுவரும் ராய்பஹதூர் சீதாராம் விஸ்வநாத் பட்டவர்த்தனர் அவர்களின் சரித்திரம் வாசிப்பவர்களுக்குத்தெளிவாய் விளங்கும்.

Mr. சீதாராம் அவர்களின் பூர்வ (முன்னோர்) புருஷர் ராஜப்பூர் தாலூகாவையடுத்த ஒரு சிறு கிராமத்தினர். Mr. விஸ்வநாத் கிருஷ்ண பட்டவர்த்தன ரென்னும் நாமம் வகித்த இவர் பிதா பிக்ஷாடனம் செய்துவந்த ஓர் வறிய அந்தணர். அவருக்கு இருபது பிராயம் முடியவே தம் முன்னோர்கள் விர்த்தியை விட்டொழித்து ராஜப்பூர் வந்தடைந்து ஓர் வர்த்தகனிடம் ஓர் குமாஸ்தாவாக அமர்ந்தனர். அமர்ந்து பத்து வருஷம் கழிந்த பின்னர், தம் குடும்பத்தை வரவழைத்துக்கொண்டு ராஜப்பூரிலேயே ஸ்திரமாய் வசிந்து வந்தனர். அவருக்கு பத்து புத்திரர்களும் இரண்டு கன்னிகைகளுமுண்டு. அவர்களுள் Mr. சீதாராம் என்பவர் தான் ஐந்தாவது புத்திரர்.

சீதாராம் என்பவர் 1840 ஆம் ஆண்டு மார்ச்சு மாசம் 30 தேதியில் ராஜப்பூரில் ஜனித்தனர். இவரது ஆரம்பிராயத்தில் இவரை மராத்தி பாடசாலைக்கு அனுப்பினர். 1856-ம் வருஷத்தில் இரத்தினகிரியில் உபாத்தியாயர் பரீக்ஷையிற் றேர்ந்தனர். இப்பரீக்ஷையிற் றேர்ந்த பின்னர் ராஜப்பூரில் ஓர் உபாத்திமைத்தொழில் கிடைக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்க மற்றொருவருக்கு அவ்வேலை கிடைக்கவே தகுந்தவேலை சம்பாதிக்க இரத்தினகிரிக்குத் திரும்பிப்போகத் தீர்மானித்தனர். கடைசியாக ஆங்கிலம் கற்கப் பூனாவுக்குப்போகத்தீர்மானித்தனர். தமக்குக் கிட்டுமென்றெண்ணியிருந்த உபாத்திமை வேலை தவிர்ந்துபோனதே சீதாராம் உலகிற் பிரக்யாதி யடைந்து அதிக உன்னத பதவிக்கு வரக் காரணமாயிருந்தது. பூனாவு



க்குச்சென்று ஆங்கிலம் அப்பியசிக்க அதிக ஆவலிருந்தும் அங்ஙனம் பிரயாணஞ் செய்வதற்குக் கையில் ஒரு காசுங் கிடையாது.

ராஜப்பூரின்கண் வசிந்த Mr. கேசவராவ் பட்கி என்ற ஓர் வியாபாரி இச்சமயத்தில் பண்டராபுரத்திற்கு யாத்திரைபோகச் சித்தமாயிருந்தனர். இவ்வாலிப சீதாராம் அன்னவரோடு கூடப்போகத் தீர்மானித்து இரத்தினகிரி ஜில்லாவிலுள்ள தஹிவாடி என்னுமோர் கிராமம் வரையிலும் பின்சென்றனர். இவ்விடத்தில் அவ்வர்த்தகனைப் பிரியவேண்டியிருந்தது. தஹிவாடியிலிருந்து சதாராவுக்கும் அங்கிருந்து பூனாவிற்கும் செய்த பிரயாணம் மிகப்பிரயாசமாயிருந்தது. இவ்வளவுதூரப் பிராயாணத்திற்குசீதாராமிடம் இருந்த பொருள் ஒருரூபாய் நான்கே அணா (1—4—0) வும் உண்டி பதார்த்தத்தில் ஒரு துண்டு வெல்லப்பாகும் அரை சேர் அரிசிமாவுமே.

தஹிவாடிக்கும் சதாராவுக்குமுள்ள தூரம் 36 மயில். சீதாராம் தம்மிடமிருந்த சொற்ப ஆகாரத்தைப் புசித்துக்கொண்டு இவ்வளவு தூரம் கால் நடையாகவே சென்று கடைசியாக மிக்ககளைப்புடனும் கால் வீக்கத்துடனும், சதாரா வந்தடைந்தனர். இவிடமிருந்து பூனாவுக்குப்போக ஒரு ரூபாய் வாடகை கொடுத்து ஓர் குதிரையைப்பேசி 1856ம்ஞூ நவம்பர் மாசத்தில் பூனாவை யடைந்தனர். வழியில் மீதியிருந்த நான்கணாவை சாப்பாட்டுச் செலவு செய்தனர்.

பூனாவை யடைந்தவுடனே (Training College) பிரவேசப் பரீக்ஷைக்குச் சென்று அதில் தேறினார். ஆனால் மாணவர்களுக்குக்கொடுக்கும் உபகாரச்சம்பளம் இவருக்குக் கிடைக்கவில்லை. அக்காலத்தில் அந்த காலேஜ் பிரின்சிபாலாயிருந்த கிருஷ்ண சாஸ்திரி சிப்லுன்கார் என்பவர் அதிர்ஷ்டஹீனரான சீதாராமுக்கு யாதொரு சகாயமும் செய்யக்கூடவில்லை. இதனால் மனக்கவலைகொண்ட நம்சிறுவாலிபருக்கு சிலமாசங்கள்வரையில் யாதொரு சகாயமும் செய்யக்கூடவில்லை. இதனால் மனக்கவலைகொண்ட நம் சிறுவாலிபர் சில மாசங்கள் வரையில் யாதொரு நோக்கமுமின்றி அங்குமிங்கும் திரிந்துகொண்டிருந்தனர். கடைசியாக 1857ஞூ ஜூன் மாசத்தில் பூனா ஹைஸ்கூலில் சம்பளமில்லாமற் சேர்ந்தார். சேர்ந்த பல மாசங்கள் வரையில் இவருக்குச்சாப்பாட்டிற்கு வழியில்லாமல் வீடுவீடாய்ச் சென்று அன்னபிக்ஷைவாங்கி ஜீவனஞ்செய்து வந்தனர். ஆங்கிலம்கற்கத் தொடங்குகையில் இவருக்கு வயது 18 உபாத்தியாயர் சொல்வதை மிக்க கவனமாய் கேட்டுவந்தார். 1860ம்ஞூ ஜூன் மாசத்தில் இவர் பூனா ஹைஸ்கூலை விட்டு பம்பாய்க்குச் சென்றார். பம்பாயிலுள்ள ராபர்ட்டு மோனி வித்தியாசாலையில் இவர் சேர்ந்தார். அப்பொழுது அப்பாடசாலைக்குப் பிரின்சிபல் கனம்

ஆர். கரல்பிரெய்த் என்பவர். சீதாராம் என்பவர் கணிதத்தில் மிக்கதேய்ச்சி யடைந்தவராயிருந்ததால் மிஸ்டர். கால்பிரெய்த் அவர்களுக்கு மிகவும் வேண்டியவராக இருந்தார். அதனால் சீதாராம் என்பவருக்கு மாசம் எட்டு ரூபாய் உபகாரச்சம்பளம் கொடுக்கப்பட்டது. சீதாராம் இவ்வித உபகாரச் சம்பளத்தை 1862ம் வருஷம் வரையிலும் பெற்றுவந்தார். அதே வருஷம் ஜூன் மாசத்தில் எல்பின்ஸ்டன் காலேஜில் சம்பளமில்லாமல் சேர்ந்தார் 1863ம் வருஷத்தில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேர்ந்தார். கணிதத்தின் பொருட்டு கொடுக்கப்படும் உபகாரசம்பளமாகிய மாசம் 20ரூபாய் வீதம் இரண்டு வருஷம் வரையில் பெற்றுவந்தார். 1865௵ எப்பிரேல் மாசத்தில் எப். ஏ. பரீக்ஷையிற் றேர்ந்தார். பிறகு பி. ஏ. பரீக்ஷைக்குப்போர் இருமுறை தேறவில்லை. முதல் முறை லத்தின் பாஷையிலும் இரண்டாவது முறை ஆங்கிலத்திலும் பிறகு 1867ம் வருத்திய பி. ஏ. பரீக்ஷைக்குச் சென்று முதல் வகுப்பில் தேர்ந்தார்.

1867௵ ஜனவரி மாசத்தில் வித்தியா இலாகாவில் பிரவேசித்து பம்பாயில் மராத்தி பாடசாலைகளுக்கு டிப்டி இனிஸ்பெக்டராக நியமனம் பெற்றார். அக்காலத்தில் டைரெக்டராயிருந்த ஸர். அலெக்சாண்டர் கிராண்டு என்வபவரால்தான் இவருக்கு டிப்டி இனிஸ்பெக்ட்டர் வேலை கிடைத்தது பிறகு அதி சீக்கிரத்தில் இவருக்கு உயர்வு கிடைத்து வந்தது 1867 வருஷம் எப்ரேல் மாசத்தில் பூனா சோலாப்பூர் சப்டிவிஷன் டிப்டி இனிஸ்பெக்ட்டராக நியமனம் பெற்றார். இதே வேலையில் 1875-ம் வருஷம் நவம்பர் மாசம் வரையிலும் இருக்கவே பூனா டிரெய்னிங்கு காலேஜ் பிரின்சிபாலாக நியமனம் பெற்றார். இதில் இருக்கும்பொழுது மிக்க சமர்த்தர் என்று பிரக்யாதி அடைந்தார். இதற்கு மூன்று வருஷத்திற்குப்பிறகு அதாவது 1878 ௵மார்ச்சில்மி Mr. M. A. ரஸ்ஸல் என்பவர் 16 மாசம் பர்லோவில் போயிருந்தபொழுது தென் டிவிஷன் வித்யா இலாகா இனிஸ்பெக்ட்டர் வேலையைப்பார்த்துவந்தார். இந்த வேலையில் இருக்கும்பொழுது மிஸ்டர் சீதாராம் அதிக தீரன் சூரன் என்று அனைவராலும் புகழப்பெற்றார். தவிர இந்த வேலையைப்பார்த்துவந்த காலத்தில் தம் டிவிஷனில் நூதனமாக 120 பாடசாலைகளை ஸ்தாபனம் செய்தார். ஆனால் அப்பாடசாலைகளுக்குச்செலவு டிபார்ட்மெண்டிலிருந்து கொடுத்தபாடில்லை. அக்காலத்தில் கவர்னராயிருந்த ஸர். ரிச்சார்டு டெம்பிள் என்பவர் இவரைப்பற்றி அதிகமாகப் புகழ்ந்து பேசியிருக்கிறார். பின்னர் சின்னாட்களில் மிஸ்டர் ரஸ்ஸல் என்பவர் தம் வேலையிலிருந்து விலகியபொழுது இவரை அந்த ஸ்தானத்தில் நிலைத்த இனிஸ்பெக்ட்டராக நியமித்தார். 1884வருஷத்தில் இவரை பம்பாய் சர்வகலாசாலையின் பெல்லோவாக (Fellow) ஆக்கினர். 1894ம் வருஷம் மார்ச்சு மாச



ம் 24ம் தேதியில் மிஸ்டர் சீதாராம் என்பவர் வித்யா இலாகா டைரெக்டராக நியமனம் பெற்று அந்த உன்னத பதவியில் 1899ம் வருஷம் எப்பிரேல் மூசாம் முதல் தேதி வரையில் இருந்து அதன்பின்னர் வருஷம் 5000 ரூபாய் பென்ஷன் பெற்று கவர்ன்மெண்டு அலுவலிலிருந்து விலகினார்.

இவருடைய உண்மையான சாமர்த்தியம் இவர் வித்யா இலாகா டைரெக்டராயிருந்தபொழுது இவர் தயார் செய்த 4 அபீஷியல் ரிபோர்ட்டில் விளங்கிவருகிறது.

1897 வருஷம் ஜனவரி மாதத்தில் இவருக்கு ராய் பஹதூர் பட்டம் அளிக்கப்பட்டது அப்பொழுது லார்டு எல்ஜின் அவர்கள் ராஜப்பிரதிநிதியாயிருந்தார்.

மிஸ்டர் சீதாராம் அவர்களுக்கு இப்பொழுது வயது 66 ஆகியும் இன்னும் சுறுசுறுப்பாய் வேலை செய்து பொதுநன்மைக்காகப் பிரயாசைப்பட்டு உழைத்து வருகிறார். மகாராஷ்டிர பெண்கல்வி சங்கத்திற்கு இவர் காரியதரிசியாயிருக்கிறார். பூனா பெர்கூசன் காலேஜ் சபைக்கு இவர் ஓர் மெம்பராக இருக்கிறார்.

ராய்பஹதூர் சீதாராம் விஸ்வநாத் பட்டவர்த்தன் என்பவர் உலோகசாலை ஒன்றை வாங்கியிருக்கிறார்.

இவ்விதமாக இவர் ஆசாரசீர்திருத்தசபை மதசம்பந்தமான சபை முதலிய சகல சபைகளிலும்போய் பேசுவதில் ஆழ்ந்த புத்தியை உபயோகித்து சாதுரியமாயும் யுக்தியாயும் பேசி வருகிறார்.

இப்படிக்கு,

**M.** ராகவேந்திராச்சார்,

ஸ்கூல் உபாத்தியாயர், ஸ்ரீரங்கம்.

# ஓர் விவரணம்.

இம்மதுரையில் நடைபெறும் பிரஹமஞானசபை (Theosoph-
ical Society) யினுடைய உபகாரத்தினுல் பிரசித்தப் படுத்தப்பட்
டதும் விசிஷ்டாத் வைதக்கொள்கைகளை விவரித்துப்பேசியதுமான
ஒரு துண்டுப் பத்திரிகையின் கீழாக அவ்விசிஷ்டாத் வைதத்தைச்
சைவசித்தாந்தத்தினின்றும் வேறுபடுத்துவதற்காக "ஒரு குறிப்பு"
என்று தொடங்கிச் சில வசனங்கள் எழுதப்பட்டிருந்தன.
அவ்வசனங்களை வரைந்ததின்கருத்து என்னவெனில் விசிஷ்டாத்
வைதமென்று பொதுப்பெயராக அப்பத்திரிகையின் மேலாகக் கண்
டிருந்ததால் அதைப்படிப்பவர் சைவசித்தாந்தத்தைப்பற்றி எழுதப்
பட்டதோவென்று ஐயமுறுவண்ணம் அச்சைவசமயத்தின் கொள்
கைகளை வேறுபத்திரிகை வாயிலாய் விவரிக்கப்படுமென்றும் மேற்க
ண்ட துண்டுப்பத்திரிகை அச்சைவமதத்தினின்றும் வேறுகிய வை
ணவ விசிஷ்டாத் வைதத்தைப்பற்றி மட்டும் கூறியதென்றும் துல
க்குவதுதான்.

அக்குறிப்பின் கீழாகவரைந்த வசனங்கள் வருமாறுகாண்க.

"மூன்று வைதிக மதங்களில் ஒன்றாகிய விசிஷ்டாத் வைதத்
தைப்பற்றி இஃது எழுதப்பட்டதாகையால் இதில் சைவமதமானது
அடங்கவில்லை. உபநிஷத் வசனங்களை ஆதாரமாகக்கொண்டு ஸ்ரீ நீ
லகண்ட சிவாசாரியார் அவர்கள் வியாஸசூத்திரங்களுக்குப் பாஷ்யம்
எழுதி " பிர்மம், என்ற சப்தத்துக்குச் சிவனே பொருள் என்று
அறிவித்தும் அந்தத்தாத்பரியத்தையே உறுதிப்படுத்தி ஸ்ரீமத் அப்
பயதீக்ஷிதர் அவர்கள் "சிவார்க்கமணிதீபிகை" "அத்வைதலேசசங்கி
ரகம்" "சிவதத்துவவிவேகம்" முதலிய கிரந்தங்களால் சைவத்தை
வைதிகமதங்களில்ஒன்றாகவும் சைவவிசிஷ்டாத்வைதமென்றும், சுத்
தாத்வைதமென்றும் நாம தேயத்துடனும் பிரசித்தப்படுத்தியிருந்த
போதிலும், பின்வந்த சிவஞானமுனிவர் முதலியவர்கள் சைவத்
தை வேதாந்தத்தைவிட்டு முற்றும் விலக்கி, வேதத்துக்குப்புறம்பா
ன ஆகமசாஸ்திரங்களையே ஆதாரமாகவைத்துச் சில வேறுபாடுகளு
ள்ள தாத்பரியங்களுடனும் "சித்தாந்தம்" என்கிற நாம தேயத்துட
னும் சைவமதத்தை ஸ்தாபித்து அது அவருக்குப் பின்வந்தவர்களா
ல் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அதை வைதிக விசிஷ்டாத் வை
தத்துடன்சேர்க்காமல் பிரத்தியேகமாக விவரித்துப் பேசுவதுதான்



உசிதம் என்றெண்ணி இப்பத்திரிகையின்கண், பிரஸ்தாபப்படுத்தவி
ல்லை" என்பதே. சைவத்தில் மிக்க அபிமானம் பாராட்டும் சில புத்தி
மான்கள் அவ்வசனங்கள் சைவமதத்தை இகழ்ந்து பேசுந் தன்மையு
டையனவென்றும் அம்மதத்தையும் அம்மதத்தைப் பிரகடனஞ்செ
ய்த சமயாசாரியர்களையும் நிந்தித்தல் என்னும் மாபாதகத்தைச் செ
ய்துவிட்டனவென்றும் ஆறுச்சினங்கொண்டு மிக்க பரிதாபத்தை அ
டைவதாகக் கேள்வியுற்றனம்.

அட! பிடாரியைக்கண்டு வெருண்ட ஒரு செவிடன் பின்னர்
கிடாரி என்று ஒருவன் சொல்லக்கேட்டவுடன் அதைப் பிடாரி என்
று உட்கொண்டு அலறிவிழ அதனுல் ஊரெல்லாம் அல்லோல கல்
லோலமானதுபோல அக்குறிப்பில் அடங்கிய கருத்து ஒன்றுயிருக்க
அதனை உய்த்துணராது "துரோணசாரியரை ஒணன் விழுங்கிற்று"
என்று கேள்வியுற்ற சுயோதனன் முதலோர்கள் மிக்க சம்பிரமத்து
டன் ரத கஜ துரகபதாதிகளுடனும் அஸ்திர சஸ்திரங்களுடனும்
போர்க்கோலங்கொண்டு ஆரவாரித்துப்புறப்பட்டவாறு இந்நகரத்தின்
கண் அத்துண்டுப்பத்திரிகையால் இந்நாட்டிற் றெண்டுதொட்டு மே
லாகி வழங்கிவரும் சைவசமயத்துக்கே சகிக்கவொண்ணுத் தீங்குநே
ர்ந்ததெனக் கருதிச் சிலர் மனம் புழுங்குகிறார்களாம். அவ்விதமாக
வே அத்துண்டுப்பத்திரிகையின் குறிப்பைப்பற்றி சித்தாந்ததீபிகை
யின் 1906-ஆு மேமீ சஞ்சிகையில் வெகுகோபத்துடன் பேசப்ப
ட்டிருந்ததைக் கண்ணுற்றபின்னர் அக்குறிப்பின் கருத்தை விளக்கி
யும் சைவத்தையாவது அதனை வற்புறுத்திய சமயாசாரிகளையாவது
இகழ்வது அக்குறிப்பின் தாத்பரியமன்றென்றும் அச்சமயத்தையும்
அச்சமயாசாரியர்களையும் எந்நாளும் வியந்துபோற்றிக் கொண்டாடும்
நாமாவது, சர்வசமயங்களுக்கு முன்னும் தலைவணங்குவதையே சங்க
ற்பமாகக்கொண்ட (Theosophical Society)யாராவது அவ்விதம்
இகழ்ந்துபேசும் கருத்துடையவரல்லரென்றும் அக்குறிப்பில் வரை
ந்துள்ள வசனங்களுக்கு ஆதாரங்களை எடுத்துரைத்தும் இரு நிருப
ங்கள் எழுதி அவைகளைச் சித்தாந்ததீபிகையில் பிரசுரஞ் செய்யும்வ
ண்ணம் சென்ற ஆண்டு ஜூலைமீ அனுப்பப்பட்டன. அப்பத்திரா
திபர் அந்த நிருபங்களைப் பிரசுரஞ்செய்யவில்லை. அது ஒருவாறு
பிழையாகாது. அந்நிருபங்களைப் பிரசுரஞ்செய்யாமல் அவைகளிற்

புலப்படும் தாற்பரியங்களை மறுத்துமட்டும் மேற்கூறிய ஜூபிலிமாதத்துப்பத்திரிகையில் எழுதியிருக்கின்றார். அந்நிருபங்களை அவர்பிரசித்தம்செய்திருந்தால் அப்பத்திரிகையின் கௌரவத்துக்கு மிக்க பொருத்தமாயிருப்பதுமல்லாமல் பலர்கள் காரணமின்றிக் கொள்ளும் சங்கைகளுக்கும் பரிகாரமாயிருந்திருக்கும். நம்முடைய நிருபங்களைப்பிரசித்தம்செய்ய விரும்பாத அப்பத்திராதிபர் அந்நிருபங்களில் அடங்கிய விஷயங்களையும் எடுத்துச்சொல்லாமல் அவைகளை மறுத்துமட்டும் சில வசனங்கள் அவருடைய பத்திரிகையில் எழுதியிருப்பது அவருடைய (Journalistic) பத்திராதிபத்திய நிலைமைக்கு உசிதமோ இல்லையோ என்பதை நாம் சொல்லவேண்டுவதில்லை. அதைப்பற்றி இங்கு எழுதுவதிலும் பயனில்லை.

மேற்கூறிய சித்தாந்ததீபிகைப் பத்திராதிபர் கூறியிருக்கும் மறுப்புமொழிகளையும் சிலர் மூலமாக நாம் கேள்வியுற்ற வசனங்களையும் ஆராய்ந்து பார்க்கையில் மேற்கண்ட குறிப்பை அடியில்வருமாறு குற்றங்கூறுவதாக வெளியாகின்றது.

1. சைவத்தை வைதிகமதங்களில் ஒன்றாகச் சொல்லாதது பிழையாம்.

2. 'பரப்பிரம' சப்தத்துக்குச் சிவனே பொருளென்று ஸ்ரீநீலகண்ட சிவாசாரியார் அறிவித்தார் என்று எழுதியிருப்பதால் அவர் அவ்விதம் அறிவித்தது பிழையென்று நாம் வெளியிட்டோமாம்.

3. வேதங்களின் கருத்தும் ஆகமங்களின் கருத்தும் ஒன்றாக இருக்க வேதம் வேறு ஆகமம் வேறு என்றும் "ஆகமம் வேதத்துக்குப் புறம்பானது" என்றும் நாம் சொன்னது ஒருபிழையாம்.

4. வெகுகாலமாக வழங்கிவந்திருக்கும் சைவசமயத்தை சிவஞான முனிவர் முதலியவர்கள் ஸ்தாபித்தார்கள் என்று நாம் சொன்னதும் ஒரு பிழையாம்.

இவைகளில் முதலாவது பிழையைப்பற்றி:—வைதிகமென்றும் ஆகமிகம் என்றும் இருவகையானமொழிகள் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன. வேதருக்குக்களை விஷயவாக்கியங்களாகக்கொண்டு அவைகளை விவரித்து எழுதப்பட்ட பாஷியம் முதலிய நூல்கள் வைதிகம். அந்த வசனங்களையும் அந்த பாஷியத்தையும் ஆதாரமா



க்கொண்டு மொழியப்பட்டிருக்கும் மதம் வைதிகமாம். அப்படியே விஷயவாக்கியங்கள் ஆகமவாக்கியங்களாகவும் அந்த ஆகமவாக்கியங்களை மதக்கொள்கைக்குப் பிரமாணங்களாகவும் ஏற்படுத்தப்பட்டிருப்பது ஆகமிகம். வேதருக்குக்களை விஷயவாக்கியங்களாகக்கொண்டு ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியார் அவர்களும் ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதர் அவர்களும் எழுதியிருப்பனவெல்லாம் வைதிகம் என்பது கருத்து. வேதவசனங்களை விஷயவாக்கியங்களாகக்கொள்ளாமல் ஆகமவசனங்களை விஷயவாக்கியங்களாகக் கொண்டு மற்றவர்கள் எழுதியிருப்பது ஆகமிகம் என்பது கருத்து. இதற்காதாரம் வாயுஸம்ஹிதை. அதில் சைவம் இருவிதம் என்றும் ஒன்று "சுருதம்" என்றும் மற்றொன்று 'அசுருதம்' என்றும் சுருதம் வேதவசனங்களை அனுசரித்ததென்றும் அசுருதம் காமிகம் முதலிய ஆகமங்களை அனுசரித்ததென்றும் கண்டிருக்கிறது. வேதத்தை நாலாவது வர்னத்தார்கள் அத்தியயனம் செய்யக்கூடாதென்றும் அவர்கள் காதில்விழும்படியாக மற்ற மூன்றுவர்னத்தார்களும் வேதமொழிகளை உச்சரிக்கக்கூடாதென்றும் கண்டித்து விதிக்கின்ற பரம்மசூத்திரங்களில் "அபசூத்திராதிகரணம்" என்கிறபாகத்திற்கும் நாலாவது வர்னத்தார்களுக்கு ஆகமங்களும் புராணங்களுமே கதியென்று வற்புறுத்தும் இதர சாஸ்திர வசனங்களுக்கும் விரோதமாக ஆகமவசனங்களை ஆதாரமாகவைத்து மேலோர்களால் நாலாவது வர்னத்தாருக்கும் உபபோகப்படும்படியாக ஏற்படுத்திருக்கும் சமயத்தை அவர்கள் வைதீகமதமென்று சொல்லிக்கொண்டால் நமக்கு யாதொரு ஆட்சேபணையுமில்லை. வைதீகம் ஆகமிகம் என்கிற வகுப்புகளும் சைவசமயநூல்களிலேயே பிரித்துமொழியப்பட்டிருக்கின்றன. ஆனால் வேதங்களின்கருத்தும் ஆகமங்களின்கருத்தும் வெவ்வேறு என்று யார்சொன்னார்கள்? இதல்லாமலும் அநுஷ்டானங்களில் வேதவசனங்களை மொழிந்துகொண்டு அனுஷ்டிக்கப்படுவதற்கு வைதிக அனுஷ்டானமென்றும் வேதவசனமல்லாத சாமான்யமான சமஸ்கிருதவசனங்களை மொழிந்து அநுஷ்டிக்கப்படுததற்கு ஸ்மார்த்தம் அல்லது தாந்தரீக அநுஷ்டானமென்றும் பெயர்கள் வழங்கிவருகின்றன. வேதங்களின் கருத்துப்படிக்கே அமைந்திருந்தும் வேதங்களில் சொல்லப்படாமல் இதரசாஸ்திரங்களால் தந்திரங்கள் ஏற்பட்டிருப்பனவாதலால் அவைகளை வைதிகமென்று

சொல்லாமல் ஸ்மார்த்தமல்லது தாந்திரீகமென்று சொல்லப்படுவதை காண்கின்றோம்.

## இரண்டாவது பிழையைப்பற்றி.

இதற்கு நிமித்தமேயில்லை. மேற்கண்ட குறிப்பையும் ஆராய்ந்துபார்க்க "பிரமம்" என்னும்பதத்திற்கு சங்கராச்சாரியார்அவர்கள் நிர்விசேஷ சைதன்யம் என்றும் இராமானுஜாசாரியாரவர்கள் சவிசேஷஸ்வரூபமுள்ள நாராயணனென்றும் அர்த்தம் செய்திருக்கிறபிரகாரம நீலகண்டசிவாசாரியாரவர்களும் அவருக்குப்பின்வந்தவர்களும் அப்பதத்திற்கு "விச்வாதிகோருத்திர" என்கிறவசனம் முதலிய வேதவசனங்களைக் கொண்டு சிவனென்று அர்த்தம் செய்திருக்கிறார்களென்பது சாஸ்திரப் பிரசித்தமாகையால் அதை அக்குறிப்பில் சங்கேதமாக மொழிபப்பட்டது.

## மூன்றாவது பிழையைப்பற்றி.

வேதங்கள் நான்கு. ஆகமங்கள் இருபத்தெட்டு. வேதருக்குகள் உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் என்கிற ஸ்வரங்களோடு உச்சரிக்கப்படவேண்டியவைகள். ஆகமவசனங்கள் ஸ்மிருதிமுதலியன ஒப்பந்தம் சுலோகரூபமாக இருக்கின்றன. அவ்விரண்டும் கருத்தில் வேறுபடாமலிருந்தாலும் வேதங்கள் ஸ்வரூபத்தில் ஆகமங்களாகுமா? ஆகமங்களும் ஸ்வரூபத்தில் வேதங்களாகுமா? அஃதெப்படி எனில் இராமாயணத்தை ஸாக்ஷாத் வேதமென்று பிரசித்தமாகச்சொல்வதுண்டெனினும் ஸ்வரூபத்தில் இராமாயணம் வேறுதான். வேதம் வேறுதான். அப்படியே மகாபாரதத்தைப்பற்றிய கொள்கையும். ஸ்வரூபங்கள் வெவ்வேறாக இருப்பதினால் கருத்தும் வெவ்வேறென்று ஏற்படமாட்டாது. இஃதன்றியும்

"வேதநூல் சைவநூலென்றிரண்டேநூல்கள்" என மொழியும் சித்தியார் எட்டாம் சூத்திரம் (15-ம் பாடலினால்) வேதநூல் ஒருநூலென்றும் சைவநூல் ஒருநூலென்றும் ஆக இரண்டு நூல்களென்றும் பிரித்துக்கூறப்பட்டுள்ளது. "இரண்டு" என்பதினால் ஸ்வரூபத்தில் வெவ்வேறென்று அர்த்தங்கொள்ளாமல் ஒன்றே என்று அர்த்தங்கொள்வது நியாயத்துக்குப்பொருந்தாது.

திருமந்திரம் முதலியவற்றில் வேதம் பொதுநூலெனவும் ஆகமம் சிறப்புநூலெனவும் வேறுபடுத்தி மொழிந்திருப்பதை அறியவேண்டும்.

"வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றும்" என்னும் வசனத்தினால் இரண்டையும் வேறுபடுத்திக்கூறியிருப்பதையும் அறியவேண்டும். வேதம் மேம்பாடுற்றதென்றாவது



ஆகமம் மேம்பாடுற்றதென்றாவது விசாரிப்பது இப்பொழுது பிரகிருதமின்று. ஆனால் சைவநூல்களில் வேதத்தை வேறாகவும் ஆகமத்தை வேறாகவும் பிரித்து வேதத்தினும் ஆகமத்திற்கு மேம்பாடுடைமை கூறப்பட்டுள்ளது.

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"

என்று கூறப்பட்டுள்ளதை சைவநூல்களைக்கற்றவர் நன்கறிவர்.

வேதாந்தத்தை ஒரு மரமாகவும் சைவசித்தாந்தத்தை அம்மரத்திற்பழுத்த கனிரசமென்றும் சித்தாந்தஞான ரத்நாவளியில் தாரதம்யப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. வேதாந்தம் பொதுவென்றும் சைவசித்தாந்தம் சிறப்பென்றும் அந்நூல்வற்புறுத்துகின்றது. பொதுவுக்கும் சிறப்புக்கும் பேதமில்லையா. அக்கருத்துகளின் நிலைமை எப்படி இருந்தாலும் வேதம் வேறு ஆகமம்வேறு என்பது சைவர்களுடைய கொள்கையாகவே இருக்கின்றது.

## நான்காவது பிழையைப்பற்றி:—

எல்லாச்சமயங்களும் எக்காலத்திலுமிருக்கின்றன. ஸ்தாபிப்பது என்னும் மொழிக்குப் புதிதாகச் சிருஷ்டிப்பது என்றாவது ஏற்படுத்துவது என்றாவது பொருள்படாது. முன்இருந்ததையே சுருதி யுக்தி அநுபவம் இவைகளினால் உறுதிப்படுத்துவது என்பது பொருளாம்.

"ஆகமங்கள் வேதங்களுக்குப் புறம்பாயுள்ளன" என்னும் வசனங்களுக்கு "வேதபாஹ்யம்" என்று சிலர் அர்த்தம் பண்ணிக்கொண்டு சங்கடப்படுகிறார்களாம். அது பிழை. ஆகிருதியில் வேதவசனமில்லாமலும் பொருளிலும் வேதவசனத்துடன் பொருந்தாமலும் இருக்கிற வசனத்துக்குத்தான் வேதபாஹ்யமென்று பெயர். உதாரணம். பகவத்கீதைவேதமன்று. ஆனால்அது வேதத்தின் பொருளையுடையதுவே. ஆனதுபற்றிப் பகவத்கீதையினால் உபதேசிக்கப்படும் மதம் வேதபாஹ்யமாகாது. பகவத்கீதையைப்போலவே ஆகமங்களும் ஸ்வரூபத்தால் (சப்தவடிவால்)வேதங்களினின்று வேறுபட்டவைகளாயிருந்தாலும் பொருளால் வேதங்களுடன் பொருந்துவதால் வேதபாஹ்யமாகா. இதுவேநம்கருத்து. நாம்நினையாததும் நம்முடைய வசனங்கள் இடங்கொடாததுமான கருத்துக்களை ஆரோபணஞ்செய்துகொண்டு ஒருவர் இடர்ப்படுவாராயின் அதற்கு நாமெ

ன்னசெய்வோம். இதுநிற்க. பின்னர் விஸ்தாரமாய்எழுதப்படுமெ
ன்று கண்டிருப்பதால் அஃது எவ்விதமாக எழுதப்படுகிறது பார்ப்
போமென்று பொறுமையுடன் காத்திருக்கக்கூடாதா? அல்லது அ
க்குறிப்பிற்கண்ட வசனங்கள் தெளிவாய் இல்லாதபக்ஷத்தில் அவை
களுக்குப் பொருள் என்னவென்று ஓர் பத்திரிகை வாயிலாக வினவி
யாவது அறியலாகாதா? மேலும் சர்வக்ஞத்துவம்பொருந்தியவர்களு
ம் ஈசுவரப்பிரசாதம் பெற்றவர்களுமான ஆசாரியர்களால் நிலைநிறுத்
தப்பெற்ற ஒரு கொள்கையை ஒருகால் ஒருவர் குறைவாகக் கூறிவி
டினும் அக்கொள்கைக்கு யாதுகுறைவு நேர்ந்துவிடும்? உலகத்தின்க
ண் பலகொள்கைகள் விரவி நிற்கின்றமையால் ஒவ்வொரு கொள்கை
யையும் உலகத்திலுள்ள அனைவோரும் அங்கீகரிக்கவேண்டுமென்று
எதிர்பார்ப்பது சாத்தியமாகாது. ஒருகொள்கையை வாதத்திற்காக
வாவது கேள்விக்குறையாலாவது ஒருவாறு ஒருவர் இகழ்ந்துபேசிவி
டின் அக்கொள்கைக்காவது அக்கொள்கையினர்க்காவது அகங்காரம்
உண்டாகவேண்டுவது அவசியமில்லையே. அவ்விதம் அகங்காரம்நிர
ம்புமாயின் அவர்பால் ஈசுவரகடாக்ஷத்துக்குப் பாத்திரமாயுள்ள எக்
குணம் பொருந்தி நிற்கும்? அறிவோர் பாராட்டுவதும் மதமே. வெ
குளுவோர் பாராட்டுவதும் மதமே. "தன்னைத்தான்காக்கின் சினங்
காக்ககாவாக்காற் றன்னையே கொல்லுஞ்சினம்" என்னும் நீதிவசனம்
எல்லாச் சமயவாதிகளுக்கும் பொதுவாயிற்றே. தந்தஞ்சமயமே மு
டிவாகத்தீர்ந்த கொள்கையென்றும் மற்ற சமயங்களெல்லாம் பூர்வப
ட்சங்களென்றும் பாராட்டிக்கொள்வது அந்தந்த சமயவாதிகளின்அ
பிமானத்துக் கியற்கையாயினும் எல்லாச்சமயங்களும் ஒருஉண்மைப்
பொருளையே விளக்கிக்கூறுமென்பது மேலோர் கருத்து. அவ்வுண்
மைப்பொருள் மனோவாக்குக்கு எட்டாத தன்மை யுடைத்தாதலா
ல் யானைகண்ட குருடர்போல ஒவ்வொரு சமயவாதியும் மற்ற சமய
நெறிகளை ஒருவாறு நிராகரித்துப் புகன்றிடினும் அது ஆணவமற்ற
ஞானிகளுக்குக் கோபத்தை விளைக்காது.

"யானென் செருக்கா லிருவினையா மச்செருக்கு
மூன மலத்தானு முயிர்க்கு"

என்னும் முறைப்படி வெகுளியல்பு ஆணவமலத்தின் காரியம
ன்றோ? நமது கருத்தில் அத்துவைதமும் சைவந்தான். விசிஷ்டாத்
துவைதமும் சைவந்தான். துவைதமும் சைவந்தான். ஒரு விகாரமு
மற்ற ஜோதியானது நோக்கும் கண்ணின் இயல்புக்குத்தக்கபடி ஒளி
யில் பேதிக்குமெனின் அது கண்ணின்குற்றமே தவிர வேறல்ல. அ
வ்வாறே பிழை கருதாத நமது வசனங்களின்மீது பிழைபாராட்டுத
ல் அபிமானத்தால் விளைந்த குற்றமேயன்றி உய்த்துணரின் அவ்வச
னங்கள் எப்பிழையும் பொருந்தாப்பான்மையுடையன.

எளியார்க்கெளியன்.

## அமீரின் வரவு.

நம் பரதகண்டத்தின் மேற்புறத்தி லிருக்கப்பட்ட தேசமாகிய
ஆப்கானிஸ்தான் அரசருக்கு அமீர் என்ற பட்டப்பெயர் வழங்கும்.
அவர், சுயாதீனமுடைய அரசர். நம் ஆங்கிலேயருக்குப் பிரியமான
நண்பர். அவர்கள் நம் பரதகண்டத்தைப் பார்க்க எண்ணங்கொண்டு
ஜனவரிமீ 10உ ஆக்ராவுக்கு விஜயம் செய்தனர். நம் கவர்னர் ஜனர
லாகிய மிண்டோ பிரபுவும் அமீரை எதிர்கொண் டழைத்து மரியா
தை செய்ததுமன்றி அவருடன் கூடவே இருந்து பற்பலகாட்சிகளைக்
கண்ணுறச் செய்தனர். அமீர் ஆங்கிலேயர் பெருஞ்சேனைக் காட்சி
யைக் கண்டு களிப்புற்றார். அவர் வரவால் இந்தியாவிலுள்ள மகமதி
யர்கள் அனைவரும் ஆனந்தமடைந்ததுமன்றி இந்துக்களும் சந்தோஷ
மடைந்து அவருக்கு நல்வரவு கூறினார்கள். ஆக்ரா, டில்லி, முதலிய
புராதன நகரங்களைக் கண்ணுற்றுக் களிப்படைந்து கல்கத்தா வந்து
சேர்ந்தனர். அவ்விடமுள்ள பிரபுக்கள் அவர்களுக்கு வந்தனோபசா
ரப் பத்திரிகை வாசிக்கத்தயாராயிருந்தும் அமீர் அவர்கள் வேண்டா
மென்று மறுத்விட்டனர். இவர் விஜயஞ் செய்த சமயம் பக்ரீத்
பண்டிகை. அப்பொழுது மகமதியர் இவரது விருந்துக்கென்று நூறு
பசுக்களைக் கொல்வதாகத் தீர்மானஞ் செய்திருந்ததை இப்புத்திமான்
முன்னரே அறிந்து அவ்வாறு செய்வது தமக்குச்சிறிதும் பிரிய
மில்லை என்று தெரிவித்து அக்கொடிய செய்கையை நிறுத்தச்செய்
தனர். அந்நிய மதஸ்தர் மனம் புண்பட்டு நோகாதபடி இருக்கவேண்
டுமென்பதே இவரது முக்கிய கருத்து. ஒருமகமதிய அரசர் பிற
மதஸ்தரிடம் இவ்வளவு கருணைபாராட்டியது மிகவும் புகழற்பாலது.
இதுவிஷயத்தில் இவரை நம் ஆக்பர் சக்கரவர்த்திக்குச் சமானமாகக்
கூறலாம். அமீர் மகம்மதிய மதத்தில் அந்தரங்க விசுவாசமும் பக்தியு
முடையவர். அதனால் பிறமதங்களை அவர் சிறிதும் வெறுப்பவரல்லர்.
உலகத்தில் புத்திமான்களும் பக்திமான்களும் இவ்வாறே இருப்பது
வழக்கம். எம்மதஸ்தராயிருப்பினும் பிறமதங்களை இகழ்தல் நியாய
மன்று. சொந்த மதத்தில் அதிகப்பற்று வைத்தால் பிறர் மதங்களை
இகழவேண்டுமோ? பாதிரிமார்கள் இதனை நன்குணராமல் நம்மதத்
தைக் கண்டபடி தூஷிக்கின்றனர். இவர்கள் இக்கனவானது முன்
மாதிரியைப் பின்பற்றுவார்களாக. அமீர் அவர்களுக்கு நம் காருண்ய

சக்கரவர்த்தியாகிய எட்வேர்ட்மன்னர் "கெ. ஜி. சி. பி." என்றபட்டப் பதக்கத்தை நம் வைஸிராய் மூலமாகச் சேர்ப்பித்து மரியாதை செய்தனர்

மகமதியர்களது பெரிய கலாசாலையாகிய அலிகர் கல்லூரிக்கு அமீர் அவர்கள் இருபதினாயிர ரூபா நன்கொடை யளித்ததுமன்றி மாசம் ஒன்றுக்கு அதன்செலவுக்கு ரூ 500-ம் கொடுத்துதவுவதாக வாக்களித்ததைப் பற்றிப் பரம சந்தோஷ மடைகிறோம். இதனால் அமீரது மதப்பற்றும், கல்விப்பிரியமும், தாராளசிந்தையும் நன்கு விளங்குகின்றன. நவாப் சையத் ஆலியும் சில மகம்மதியர்களும் அமீர் அவர்களைக் கண்டுகொள்ளப் போயிருந்தபோது சந்தோஷமாய்ப் பேசி மகம்மதியர்களாகிய சகோதரர்களுக்காகத் தாம் ஜபிக்கிறதாகச் சொல்லி ஒவ்வொருவருடைய க்ஷேமலாபத்தையும் விசாரித்து ஜபம்செய்தனராம், ஹாபீஸ்மகம்மத்ஹஸன் என்பவர்கள் தம்மைத்தனிமையாகப் பார்த்து அவர் கையினால் எழுதிமுடிக்க 300 வருஷ காலஞ்சென்ற ஒரு கொரான்புஸ்தகத்தையும் மற்றொரு வைதிகபுஸ்தகத்தையும் கையுறைதந்தனர். அதனை அமீர் அவர்கள் மிக்க பக்தி சிரத்தையுடன் ஏற்றுச் சந்தோஷித்தனராம். இதனாலும் இவரது அந்தரங்கபக்தி தெளிவாகப் புலப்படுகின்றது. குவாலியர் மகாராஜாவும் இவரை எதிர்கொண்டழைத்து உபசாரஞ் செய்தனர். இச்சமயம் அமீர் அவர்கள் புலிவேட்டையாடி ஒரு புலியைக் கொன்றனர். இவ்வாறு யாவராலும் உபசரிக்கப்பட்டு மிகக் கொண்டாடப் பட்டனர். இதனால் சிநேக வாஞ்சை யென்கிற முக்கிய மனுஷகுணம் விளங்குகின்றது. தம் நாட்டில் ஹிந்துக்களுக்கும் மிகப் பெரியவேலைகள் கொடுத்திருப்பதாகக் கூறினராம். இம்மாதிரி மனோவிசாலமுள்ள ஒரு மகம்மதியஅரசர் நம் நாட்டுக்கு அயலிலிருக்கும்படியான பாக்கியம்நமக்குக் கிடைத்ததைப்பற்றி மிகவும் சந்தோஷிக்கிறோம்.

இவர்கள் குணம் இம்மட்டோ? ஏழைகளிடத்தில் இவர்களுக்குள்ள இரக்கம் மிகவும்அதிசயிக்கத்தக்கது. கல்கத்தாவைத்தியசாலையை அமீர் பார்க்கப் போயிருந்த பொழுது பலர் கூட்டங்கூடினார்கள். அக்கூட்டத்திலிருந்த ஒரு பிச்சைக்காரி அமீரைப்பார்த்து ஏதாவது திரவியம் பெற வேண்டுமென்று இச்சைகொண்டு வெகு ஆவலுடன் வந்தாள். போலீஸ்காரர்கள் அவளைப் பிடித்துத் தள்ளவே அவள் பெருங் கூச்சலிட்டாள். அக்கர்ணகடூரமான சப்தம் அமீர் காதில் விழவே அதனைச்சிறிதும் சகிக்கக் கூடாமல் அதைப்பற்றி விசாரித்து அப்பிச்சைக்காரியைக் கொணர்வித்து அவள் குறையைக் கேட்டு இரங்கி அவளுக்குக் கொடுத்துதவினராம். இஃதன்றோ பிரபுத்தன்மை. முன் ஒரு சஞ்சிகையில் ஒரு ஆங்கிலப்பிரபுவின் உதாரகுணத்தைச் சுட்டிக்காட்டி எழுதினோம். அதற்கு இது எவ்விதத்திலும் குறைவாகமாட்டாது. ஏழைகளிடத்தில் கருணையுள்ளவர் என்பதினாலேயே இவர் தெய்வ அம்சம் பொருந்தியவர் என்பது திண்ணம். தீனதயாளு என்ற சப்தம் பகவானுக்கே உரித்தன்றோ. அத்திவ்விய குணம் எவரிடத்தில் அதிகம் விளங்குகின்றதோ அவர்களே தெய்வாம்சம் பெற்றவர்கள். இவர் நீடூழிகாலம் சௌக்கியமாய் வாழ்ந்து தம் தேசத்துக்கும் அயல் நாடுகளுக்கும் பெருத்த நன்மைகளைச்செய்வாராக. பகவத் பக்தியுள்ளவர்கள் அரசர்களாகவிருந்தால் எவருக்கும் சுகமுண்டு. நம் காருண்ய ஆங்கிலேயருக்கு இவ்வருமை நண்பர் கிடைத்தது அவர்கள் அதிர்ஷ்டவசமே. ஸர் புல்லரைப் போன்ற அதிகாரிகள் இப்படிப்பட்ட குணசாலிகளுடைய முன்மாதிரியை நன்கு கவனித்துத் தம்மைத் திருத்திக்கொண்டு ஜனரஞ்சிதராயிருப்பார்களாயின் நன்றாகும். தம் பிரஜைகளுக்கு வேண்டிய சௌகரியங்களைத் தேடிக்கொடுப்பதில் அமீர் அவர்கள் கண்ணுங் கருத்துமுள்ளவரென்றும் தெரியவருகிறது. தாம் இப்பூவுலகில் பகவானால் அனுப்பப்பட்டநோக்கத்தை நன்குஅறிந்தவராக அமீர்அவர்கள் சில குறிப்புகளால் வெளியிட்டனர். அவ்வித பயபக்தி அரசர்களுக்கு உள்ளவரையில் இராஜாங்கத்துக்கும் குடிகளுக்கும் யாதொரு குறையும் நேரிடாது என்பது திண்ணம். இதுவே அமீர் அவர்கள் இந்தியாவுக்கு முதல் விஜயமானது. இதனால் நம் இராஜாங்கத்தாருக்கும் அவர்களுக்கும்உள்ள சிநேகம் பலப்படக் காரணமாயிற்று. அது நம் நாட்டுக்கும் க்ஷேமகரமே. என்றும் இது போலவே சமாதானமாய்ச் சிநேகவாஞ்சை அதிகரித்து க்ஷேமம் உண்டாக்குவதாக.

பத்திராதிபர்.

# சமாசாரக்கொத்து.

—:-o-:—

சுதேசபாங்கி.—நம்சென்னைக்கு ஓர் பெரிய சுதேசபாங்கி ஏற்பட்டு ஆர்டிகின்ஸ் ஆப் அஸோஸியேஷன் அச்சிடப்பட்டு வருகின்றது, டைரக்டர்களும் நியமனமாய் விட்டார்கள். கூடிய சீக்கிரம் பாங்கி வேலை செய்ய ஆரம்பிக்கும் என்று கேள்வியுற்றுப் பரமானந்தமடைகின்றோம்.

• • • • •

இந்தியர்களின் கைத்தொழில் சாஸ்திரப் பயிற்சியபிவிருத்திக்காக கல்கத்தாவில் ஏற்பட்டிருக்கும் சங்கத்தார் இப்பயிற்சிக்காக 60 மாணவர்களைச் சென்ற வருஷம் புறநாடுகளுக்கு அனுப்பியிருந்தார்கள். இவ்வருஷம் இன்னும் 40 பேரை அனுப்பப்போகின்றனர் என்று அறிய அதிக ஆனந்தமடைகிறோம்.

• • • • •

பிளேக்:—சென்ற ஜனவரிமீ 26உ யோடு முடிவாகிற வாரத்தில் இந்தியாவில் பிளேக் கண்டவர்களின் தொகை 19, 452 மரணம் 15 550, இதில் பம்பாய் மகாணம் 25 வங்காளம் 1,366. ஐக்கியமாகாணம் 4,432. பஞ்சாப் 5303. பர்மா 304. மத்தியமாகாணம் 1520 மத்திய இந்தியா 241.

• • • • •

புதிய இருப்புப்பாதை:—திருச்சிராப்பள்ளியிலிருந்து திருக்கோயிலூருக்கு 96 மைல் தூரம் இருப்புப்பாதை போடச் சர்வே செய்யும் படியாகத் தென் இந்திய இருப்புப்பாதைக் கம்பெனியாருக்கு ரெயில்வே போர்டார் உத்தர வளித்திருக்கின்றனராம். சென்னை கவரன்மெண்டாரின் ஆதீனத்தில் சர்வே நடக்கும்.

• • • • •

உப்புச்சுரங்கம்:—பஸிபிக் சமுத்திரக் கரைக்கும் டென்வா என்னும் இடத்துக்கும் இடையில் ஒரு ரயில்வே போடப்பட்டிருக்கின்றதில் வேலைசெய்துகொண்டிருந்த கூலிக்காரர்கள் ஓர் உப்புச்சுரங்கம் கண்டுபிடித்திருக்கறார்கள். 15 மைல் நீளமும் 8 மைல் அகலமும் அநேக அடி ஆழமுமாக தனி உப்புக்கட்டிகளாய் நிறைந்திருக்கின்றனவாம். இந்த இடத்தில் முன் ஒரு பெரிய உப்புக்கடல் இருந்



ததாகவும் அந்தக்கடல் ஏதோகாரணத்தால் தானுகவற்றிவிட்டபொழுது அதிலிருந்த உப்பு இவ்வாறு உறைந்துகிடப்பதாகவும் ஊகிக்கபடுகின்றது.

• • • • •

ஒரு புதிய உலோகம்:— அமெரிக்கா தேசத்தில் கானடா நாட்டில் காட்பரி என்னும் கிராமத்தில் கானடியன் காப்பர்கம்பெனியால் மானல் (Monel) என்ற ஓர் உலோகம்கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது இது சற்றேறக்குறைய நிக்கல்போன்றது. இதில் செம்பு; நிக்கல், இரும்பு ஆக மூன்றும் இன்னும் இரண்டொரு வஸ்துவும் சேர்ந்திருக்கின்றன. நிக்கலைப்போல் கேடுறுகிறதில்லையாம். அதைப்போல் வேலைக்கு நயமுள்ளதாகவுமிருக்கிறது. இஃது இப்பொழுது பளபளப்புடன் வெளியிடும் அநேக நிக்கல் சாமான்களுக்குப் பிரதி உபயோகப்படுத்தக் கூடுமோ என்று பரீட்சிக்கப்படும்.

• • • • •

ஐரோப்பாவில் குளிர்;—இங்கிலாந்து யார்க்குஷைபர் என்னுமிடத்தில் பிஸ்ளார்ட் என்னும் ஒரு கொடியபுயற்காற்று வீசிவருகின்றது சிலதினங்களுக்கு முன் ஜப்பானுக்கென்று புறப்பட்டு வந்த கிளாவரிங் என்னும் கப்பல் துறையை விட்டுப் புறப்படவும் காற்றினுல் நாலாபக்கமும் அடித்துச்சாய்க்கப்பட்டு முடிவில் மூழ்கிவிட்டது. மூன்று பேர்கள் ஜலத்தில் அமிழ்ந்து இறந்தார்கள், 40 பேர்களைக்காணவேயில்லை. பெர்லின் நகரத்தில் பனியின் கொடுமை சகிக்கமுடியவில்லை. தெருக்களெல்லாம் பனிக்கட்டி உறைந்துவிட்டால் வண்டிகளும் ஜனங்களும் வெளியேறுவதற்கு இடமில்லாதிருக்குமாம்.

• • • • •

கல்கத்தா சர்வகலாசாலையார் தங்கள் மேற்பார்வையின் கீழுள்ள கலாசாலைகளுக்கெல்லாம் சேர்த்து ரூ. 110000 உபகார நன்கொடை கொடுத்தார்கள். அப்படிக்கொடுக்கப்பட்டதில் பாபுபானர்ஜியன் ரிப்பன் கலாசாலைக்கும் ஒருபாகம் கொடுக்கப்பட்டது,ஆனுல் அப்படிப்பட்ட உபகாரம் கவான்மெண்டாரிடம் வாங்குவது சுதேசியக்கொள்கைக்கு விரோதமாயிருப்பதால் அதனைப்பெற இஷ்டமில்லையென்று

பாபுபூனர்ஜி வேண்டாமென்று மறுத்து விட்டதைக்கேட்டுச் சந்தோஷமடைகின்றோம்.

“கொள்ளெனக் கொடுத்தலுயர்ந்தன்று—அதனெதிர்
கொள்ளேனென்றல் அதனினுயர்ந்தன்று”

என்ற ஆன்றோர்வாக்குக் கிணங்க இம்மகான் நடந்தது மிகவும் புகழற்பாலது.

• • • • •

சில தினங்களுக்குமுன் பாரிஸால் பட்டணத்திலுள்ள அம்பட்டர்களெல்லாம் ஒரு கூட்டங்கூடி சுதேசியல்லாத சாமான்களைத் தாங்கள் உபயோகிப்பதில்லையென்று சத்தியம் செய்ததுமன்றிப் பரதேச சாமான்களை உபயோகிப்பவர்களுக்கு க்ஷௌரம் செய்வதில்லையென்றும் தீர்மானித்துவிட்டார்கள். இதனை இதரமாகாணவாசிகள் கவனிப்பார்களாக.

• • • • •

ஆசார சீர்திருத்தம் பெருகிவருவதற் கரிகுறியாகப் பம்பாயில் “பதிதசுத்திஸபா” என்ற பெயருடன் ஒரு ஸபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மிஸ்டர் கோகுலதாஸ்கான் தாஸ்பாரக் B.A.L.L.B. அக்கிராசனாதிபதியாகவும் மிஸ்டர் S. S. ஹோல்கார் காரியதரிசியாகவும் இருந்து வருகிறார்கள். அந்நியமதஸ்தர்கள் யாராயிருந்தாலும் அவர்களைத்தடையின்றி இந்து மதத்திற் சேர்த்துக்கொள்வதும் என்ற நோக்கந்தான் அந்தச்சபையாரின் கொள்கை. இம்மாதிரியான சபை ஏற்பட்டது நலமே. ஆனால் இப்படிச் சேர்ப்பவர்களைப் பிரத்தியேக ஜாதியாராக ஏற்படுத்தி அவர்களுக்குள்ளேயே கொள்வன கொடுப்பன செய்யும்படி ஏற்பாடு செய்தால் நலமாயிருக்கும்.

• • • • •

குருடர்களுக்குப்பத்திரிகை:—லண்டன் நகரில் பிரசுரிக்கப்படும் தினசரி மெயில் பத்திரிகையின் சொந்தக்காரர் இங்கிலாந்து தேசத்திலுள்ள 40,000 குருடர்கள் வாசிப்பதற்காக ஒரு வாராந்திரப் பத்திரிகையை ஒரு மாசமாக வெளிப்படுத்தி வருகின்றார்கள். இஃது



அவரவர்கள் பிறருதவியின்றி வாசிக்கும்படியாக அச்சிடப்பட்டிருக்கின்றது. நம் இராஜதானியில் குருடர்கள் வாசிப்பதற்கென்று பாளையங் கோட்டையிலும் சென்னையிலுமாக இரண்டு பள்ளிக்கூடங்களிருக்கின்றன. குருடர்களே சேர்ந்து தாமாகவே ஒரு பத்திரிகை தங்கள் உபயோகத்திற்காகப் பிறர் உதவியின்றி அச்சிட்டு வருகிறார்களென்று ஒரு ஆங்கிலப்பத்திரிகையிற் சிலநாட்களுக்கு முன்னர் படித்தோம். உலகத்தில் நடந்துவரும் பற்பல அதிசயங்களுக்குள் இதுவும் ஒன்றாயினும்“கண்ணைக்கெடுத்ததெய்வம் மதியைக்கொடுக்கும்” என்ற பழமொழிப்படி குருடர்களுக்குப் புத்தி தீக்ஷண்யம் அதிகம். அவர்கள் வாத்தியங்கள் வாசிப்பதையும் பாய் பின்னுவதையும் நாம் நம் நாட்டிலேயே பல இடங்களிற் காண்கிறோம். இஃது ஓர் அதிசயமா? சர்வேசுரன் அபாரகருணையுடையர். ஆகையால் ஓர் அங்கக் குறைவை நிவிர்த்திக்க மற்றோர் உபாயம் செய்கிறார் அவர் வலிமையை யார் அறிவார்கள்.

• • • • •

திருவனந்தபுரம்ஸம்ஸ்கிருதகலாசாலை:—மேற்படி கலாசாலையில் கமிட்டிபரீக்ஷைகளெனப்படும் சாஸ்திரீ, உபாத்தியாயர், மஹோபாத்யாயர், பரீக்ஷைகளில் ஜயம்பெற்றவர்களின் விவரம். சாஸ்திரப்பரீக்ஷையில் 15 மாணாக்கர்களில் 9 மாணாக்கர்களுக்கு ஜயம்; உபாத்தியாயர் பரீக்ஷையில் போன 4 மாணாக்கர்களுக்கும் ஜயம்: வியாகரண மஹோபாத்தியாய பரீக்ஷையில் மூவரில் இருவருக்கு ஜயம், தர்க்கமஹோபாத்தியாய பரீக்ஷையில் பரீக்ஷைகொடுத்த ஒருவருக்கு ஜெயம் ஸ்மிருதி,மீமாம்ஸா மஹோபாத்தியாய பரீக்ஷைக்குச்சென்ற மூவர்க்கும் ஜயம் என்பதாக ஷை கமிட்டிக்கு அதிபராகிய கோளவர்மாவலிய கோவில் தம்பிரான்அவர்களால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. சென்னைசர்வகலாசாலையார்கள் ஸமஸ்கிருதத்தை எவ்வளவு அநாதரவுசெய்தபோதிலும் அப்பாஷை ஒழிந்து போகாவண்ணம் ஜீவித்திருக்கும்படி சுதேச அரசாங்கத்தாராவது போற்றுவார்களென்று நம்புகிறோம். பாஷைவிஷயத்திலும் சுதேசியமுயற்சியே பயன்பெறும் போலும், சுவதேசபாஷை அபிவிருத்தியே தேசக்ஷேமத்துக்குப் பேருபகாரம்,அதனை அநாதரவுசெய்வோர் அடியோடே தொலையவேண்டுவதுதான்.

**கற்பூரப்பஞ்சம்:** கற்பூரத்தின் விலையேறிக்கொண்டேவந்து இப்போது அந்தர் (112 ராத்தல்) 1-க்கு 20 பவுன் விலையாய்விட்டது. கொஞ்ச காலத்துக்கு முன்னே இவ்விலை 3 பவுனுக் குட்பட்டிருந்தது இதற்குக் காரணமாவது சரக்கு விளைவு நமக்கு வேண்டுமளவுக்குப் போதாமையாம். இந்தசரக்கு விளைவிடம் சீனாவுக்கடுத்த பார்மோஸா என்னும் தீவாகும். இவ்விளைவு குறைவுபட்டுப்போனதற்குக் காரணமாவது இரண்டொரு வருஷத்திற்குமுன் ஜப்பானிய யுத்தகாலத்தில் பெருந்திரளான (கற்பூர) மரங்கள் வெட்டி விடப்பட்டனவாம். ஆகவே யாவருக்கும் போதுமான சரக்கு பழையபடி கிடைப்பதற்கு சில வருஷங்களாக வேண்டு மெனப்படுகிறது. இதனால் கை (செய்) சரக்கு (artificial manufacture)போடும் முயற்சி நடந்தேறாவிடின் இவ்வேறு விலை யிறங்க வழியில்லை. தந்தம், ஆமையோடு இவற்றிற்குப் பிரதி சரக்காகிய கிளிஞ்சில்(celluloid)தொழிலுக்கும், புகையில்லா வெடிமருந்துக்குங்கூட கற்பூரம் ஏராளமாய் செலவாகிறது. இவ்வாறு குறைவுள்ள (கற்பூர) மரங்களைப் பயிரிடத் தோட்டக்காரர் (Planters) களும் முயன்றால் நல்ல லாபமெனச் சொல்ல வேண்டியதில்லை யென்று ஐரோப்பியர் யோசனை செய்து வருகிறார்கள்.

மேற்கூறியவாறு (கற்பூர) மரப்பயிர்த்தொழில் லாபகரமானதென்பது நிச்சயமாயிருந்தும் முயற்சியில்லாமைக்குக் காரணமாவது அம்மரத்தின்மிலாறுகளிலிருந்தும் இலைகளிலிருந்தும்கற்பூரரசத்தையெடுக்கும் முறை தெரியாமையாம். மற்றொருகஷ்டமாவது(கற்பூர) நாற்றுக்கிடைப்ப தில்லாமையாம். மேலும், ஜப்பான் கற்பூர விதைகள் முன்னாடியே அவித்தனுப்பப்படுவதால் முளைப்பதில்லையென்றும் ஒரு சிலோன் பேப்பரில் வெளியாயிருக்கிறது. ஆயினும் ஜப்பானிய விதைகளைக் கொண்டே அநேக செடிகள் விளைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. கிளைகளைக்கொண்டு இதைப் பயிரிடக் கூடாதாவென்றும் யோசிக்கப்படுகிறது.

சு—மி.

பத்திராதிபர்.

---

11 APR 1907 MADRAS

உ

குமரன் துணை.

# விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 6 } 1907ஹு பிப்ரவரிமீ { பகுதி 2

## கர்னல் ஆல்காட் துரையின் நிர்யாணம்.

பிரமஞானசபைக்குத் தலைவராயிருந்த கர்னல் ஆல்காட் நாளிது பராபவஹு மாசிமீ 6உ (17—2—07) ஞாயிற்றுக்கிழமை காலை 7-17மணிக்குப் பரலோகப்பிராப்தமானார் என்ற சங்கதியைக்கேள்வியுற்று மிக்க விசனம் அடையலானோம். இவர் அமெரிக்காவில் ஐக்கிய மாகாணத்திற் பிறந்துவளர்ந்தவராயினும் நம் பரதகண்டத்தையே ஜனன தேசம்போல் பாராட்டிவந்தவர். 1832-ம் வருஷம் ஐக்கிய மாகாணத்தில் ஒரு நல்ல குடும்பத்திற் பிறந்தவர். இவர் இளம் பருவத்தில் கல்விகற்றுத் தேர்ந்து கௌரவம் பெற்றனர். பின்னர் அம்மாகாண இராஜதானியாகிய வாஷிங்டன் என்னும் நகரில் விவசாய இலாகா டைரக்டராயிருந்தனர். அமெரிக்கர் தங்கள் சுயாதீனத்தையடையத் தங்கள் தாய் நாடாகிய ஆங்கிலநாட்டாரோடு புரிந்த யுத்த சமயத்தில் இவர் இராணுவத்தில் சேர்ந்து பல பிரசித்திபெற்ற உத்தியோகத்தைவகித்துச் சிறந்த தேசாபிமானியாயும் வீரராயும் விளங்கினர். இச்சமயத்தில் இவர் பிரமஞான விஷயத்தைக் கவனிக்க நேர்ந்தது. கத்தி யெடுத்து வீரத்தைக்காட்டிப் பலரையுயிர்ச்சேதம் செய்து தம் சொந்த நாட்டை மாத்திரம் காப்பாற்றுவதினும் புத்தி என்கிற கத்தியைக் கைப்பிடித்து, அஞ்ஞானம் என்கிற அந்தகாரச் சத்துருவுடன் போர்புரிந்து வீரங்காட்டி உலகத்தாரைக் காப்பாற்றுவதே மேலானதொழில் என்று கருதி இவ்வீரர் கத்தியைக் கீழே

எறிந்து வாயாற்கந்திப் பிரசங்கம் செய்யவும் கைசலியாது எழுதி அறிவைப் பரவச்செய்யவும் தீர்மானித்துக் கங்கணம் கட்டிக்கொண்டனர். ஒத்துக்கு மத்தளம் சேர்ந்ததுபோல் இச்சமயத்தில் இவருக்கு பிளவாட்ஸ்கியம்மையாரின் சிநேகம் கிடைத்தது. இருவரும் ஒன்றுசேர்ந்து பிரமஞான சபையை 1875-ம் ஆண்டு முதல்முதல் நியூயார்க்கில் ஸ்தாபித்தார்கள். 1878 வருஷத்தில் இருவரும் நம் பரதகண்டத்திற்கு விஜயமானார்கள். இந்தியாவின் முக்கிய நகராகிய பம்பாயிலிருந்துகொண்டே பிரமஞான விஷயமாய்ச் சிலகாலம் வேலை செய்துவந்தார்கள். 1882-ம் வருஷம் நம் சென்னை அடையாற்றில் நிலம்வாங்கிக் கட்டிடங்கள் கட்டி நம் அடையாற்றையே பிரமஞானசபையாரின் தலைமை நகராக்கி அச்சபையார் அனைவருக்கும் அடைஆறு ஆக்கினார்கள். முதல் 9 வருஷங்கள் இருவர்களும் கூடியுழைத்து அச்சபையை மிகவும் விருத்திக்குக்கொண்டுவந்தார்கள். பின்னர் தாமே 6 வருஷகாலம் ஸ்ரீ அன்னிபெஸன்டு அம்மையாரின் பேருதவிபெற்று இச்சபையை மிகவும் சீருஞ் சிறப்புமாய் நடத்தி வந்தனர். யுத்தவீரர் ஆகையால் யுத்தகளத்தில் சேனைகளை நடத்தும்விதமாகவே ஒழுங்காகவும் தைரியமாகவும்காரியங்களை இவர் நடத்திவந்தது எவரும் புகழற்பாலது. இவரது தேக வன்மையும் காம்பீர சரீரமும் மனோதிடமும் எவரையும் வசிகரஞ்செய்துவந்தன. இவரது கம்பீர தொனியும் ஹாஸ்ய மந்தஹாஸமான பேச்சுச் சாதுரியமும் எவரையும் பற்றியிழுத்தன. முக்கியமாய் இளைஞர்கள் இவரது பேச்சுச் சாதுரியத்தில் ஈடுபட்டு இவர் இட்டதே கட்டளை என விசுவாசத்துடன் மதித்துவந்தனர். உலகமெங்கும் சுற்றுப்பிரயாணம்பண்ணி இச்சபை விஷயமாய் இவர் அஞ்சாத்தீரத்துடனும் விடாமுயற்சியுடனும் ஏகாக்ர சித்தத்துடனும் உழைத்து வந்ததை உலகம் அறியும். நம் நாட்டு ஆசாரிய புருஷர்களைப்போன்ற அற்புதத் தத்துவஞானம் இவரிடத்தில் காணப்படாவிடினும் இவர் நம் தேசத்தின்மீது மிகவும் அநுதாபம் காட்டி நம் நாட்டை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று புத்தியாலும் தேகத்தாலும் மிகவும் பாடுபட்டு உழைத்துவந்தபடியால் இம்மகோபகாரிக்கு நம் நாட்டார் மிகவும் நன்றி பாராட்டவேண்டுவது இன்றியமையாதது. பௌத்தமதத்தில் இவருக்கிருந்த



பற்று அதிகம். அந்த மதக்கிரந்தங்களில் இவருக்குப் பரிச்சியம் அதிகம். இலங்கைத்தீவிலும் ஜப்பானிலும் இவரைப் பௌத்தர்கள் தேவதா விசுவாசத்தோடு பாராட்டுவது வழக்கம். சிற்சில சமயங்களில் இவர் விஷயமாய் அவர்கள் ஊர்கோலம் நடத்திய விருத்தாந்தத்தை வாசித்துப் பார்க்கும்பக்ஷத்தில் நம் பூர்வ ஆசார்யர்களுக்கும் நாம் அப்படிச்செய்தோமா என்று தோற்றும். இந்தியாவிற்கு இவர் புதிதாய் வந்தபொழுது பிரசங்கமாரி பொழிந்து வந்தனர். பிற்காலங்களில் பிரசங்கத்தை அநேகமாய் நிறுத்திவிட்டனர். இவர் செய்துவந்த வேலை அபாரமானது. இத்தேசோபகாரியும் லோகோபகாரியுமான இவரது செயல்களை எவரும் பின்பற்றி ஒழுகுவாரானால் நாட்டுக்கு நன்மையுண்டு. இவ்வுத்தம சீலரது ஒழுக்கமும் செய்தொழில் ஊக்கமும் நமக்கு என்றும் நிதர்சனமாகவே நிலைநிற்கும் என்பது திண்ணம். இவரை நம் ஹிந்துமதத்துக்கு ஒருகாலும் ஆசாரிய புருஷராக எவரும் ஒப்புக்கொள்ளார். இருந்தாலும் நம் மதவிஷயத்தை நாம் நன்குகவனிக்கும்வண்ணம் நமக்குப்பெருந்தூண்டுகோலாயிருந்தனர் என்பதை எவரும் மறுக்கார். இவர் இந்தியாவிற்கு வருமுன்னர் லௌகீகர்கள் நம் மதவிஷயமாய்ப் புத்தி செலுத்தி வந்தது அபூர்வமாகவே இருந்துவந்தது. நம்மதத்தில் பல புதையல்களிருப்பதை இவர் மூலமாகவே பலர் அறிந்து விசாரணை செய்யத்தொடங்கினர். கிறஸ்துவபாதிரிகளுக்கு இவர் ஒரு பெருங்கோளரிபோலிருந்து வந்தனர். இவரது முயற்சியாலே நம்முடைய அரிய கிரந்தங்களும் கலைஞானங்களும் முதல் முதல் ஆங்கில பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டன.

இப்பேருபகாரி சென்ற சிலநாட்களாகப் பிணிவாய்ப்பட்டுப் படுக்கையோடு படுக்கையாயிருந்து மனோசஞ்சலம்சிறிதுமின்றி எப்பொழுதும் சபையின் க்ஷேமார்த்த விஷயத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து வந்தனர். பிரக்ஞைதப்பிக்கிடந்த காலத்தும் சபைவிஷயமாகவே பிதற்றுவாராம். இறங்கிய காரியத்தில் அவ்வளவு பிடிவாதத்தோடு ஊக்கம்காட்டி வேலைசெய்தல் எவர்க்கும் சுலபமன்று. இவரது நிர்யாணம் லோகத்தார் அனைவராலும் துக்கிக்கப்படும் என்பதிற்றடையில்லை. ஞாயிற்றுக்கிழமை 3½-மணிக்கு இவரது பிரேத ஸம்ஸ்காரச் சடங்குகள் தொடங்கப்பட்டன. அச்சமயம் இவரது

அத்தியந்த நண்பராகிய ஸ்ரீ பெஸன்ட் அம்மையார், ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் முதலிய கனவான்களும் பல அரிய நண்பர்களும் கூடவே இருந்து உத்தரகிரியைகளைச் சிறப்பாக நடப்பித்தனர். உலகின்கண்ணுள்ள பிரசித்த மதக்கிரந்தங்களினின்றும் மகா வாக்கியங்கள் ஓதப்பட்டன. அபூர்வ மதக்கிரந்தங்கள் அவர் தலைமாட்டில் வைக்கப்பட்டன. ஆறு அந்தணர்களும் நான்கு பௌத்தர்களும் இவரது ஸ்தூலதேகத்தைப் பாடையிலிட்டு மாடியிலிருந்து தூக்கிக் கீழே இறக்கித் தகனபூமிக்குக்கொண்டுபோய்ச் சந்தனக்கட்டைகள் அடுக்கிய சிதையிலிட்டபின்னர் தகன ஸம்ஸ்காரம் நடந்தேறியது. பஞ்சபூதமான சரீரம் பஞ்சபூதமாகவே மாறிற்று. மறுநாள் அஸ்திகளை எடுத்து இருபாகங்களாகச்செய்து ஒருபாகத்தைச் சமுத்திரத்திலிட்டு மறுபாகத்தைக் கங்கைக்கு அனுப்பிச் சேமித்து வைத்தார்களாம். பிரமஞான சபையானது சர்வசமயங்களையும் தழுவி நிற்பதால் சகல மதஸ்தர்களும் அச்சபையின் அக்கிராசனாதிபதியின் ஸ்தூலதேக ஸம்ஸ்காரத்தில் கலந்து வேலை செய்திருப்பார்களானால் உசிதமாக இருந்திருக்கும். அவ்வாறு செய்வதற்குப்போதுமான அவகாசமில்லாதிருந்ததுபோலும்.

நிர்யாண சமயத்தில் மகாத்மாக்களால் நேர்ந்த சில அபூர்வ சம்பவங்களைக்குறித்து அவரது நண்பர்கள் பிரசங்கவாயிலாக வெளியிட்டிருக்கிறார்கள். காலஞ்சென்ற மேடம் பிளவாட்ஸ்கி அம்மையாரே நேரில்வந்திருந்து அவரைத் தம்மிருப்பிடத்திற்கு அழைத்துச்சென்றனராம். இவை விசுவாசத்தைப் பொறுத்தவிஷயங்கள். இவ்வற்புத புருஷருடைய சத்கிருத்தியங்களைமட்டும் நாம் சீர்தூக்கிப் பார்க்கும் பக்ஷத்தில் அபூர்வ ஆத்மகோடிகளில் இவரையும் ஒருவராகச் சொல்ல எவரும் பின்வாங்கார்கள். சாதுக்களுக்குத் திவ்விய லோகப்பிராப்தம் கிடைக்குமென்பதிலும் சிறிதும் ஐயமில்லை. இவர் வகித்த அக்கிராசனாதிபத்தியத்தை அந்நிபெஸன்ட் அம்மையார் வகித்திருப்பதால் இச்சபைமேன்மேலும் விருத்தியடைந்து முன்னிலும் பிரசித்திபெறும் என்பது திண்ணம்.

பத்திராதிபர்.

# ஜகத்ஜோதி.

(முன்தொடர்ச்சி)

ஜகத்ஜோதி உயிரோடுள்ளவரை தன் பிராணனுக்கு அபாயந்தான் நேரிடும் என்று மொகபத்கான் கருதினபடியால் அவன் ஒரு வீரனையழைத்து அவள் உயிரை வாங்கிவரும்படி அவனுக்குக்கட்டளையிட்டான். அவனும் அதற்கு இணங்கிப்புறப்பட்டு ஜகத்ஜோதி படுத்துத் தூங்கும் கூடாரத்துக்குள் நடுநிசியில் நுழைந்தான். அச்சமயம் அவள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனள். அவளுடைய அழகுவாய்ந்த அவயவங்கள் பார்ப்போர் கண்களைப்பறிக்கும்படியான இரத்னகம்பளத்தில் அசைவற்றுக்கிடந்தன. அவளது படுக்கைக்குச் சமீபத்தில் எரிந்துகொண்டிருந்த விளக்கின் வெள்ளித்தண்டில் அக்கம்பளத்தின் பல வர்ணங்கள் பிரதி பிம்பித்து அழகைச்செய்தன. தூக்கத்தில் யாதொரு சலனமுமின்றி அவள் தங்கத்தை உருக்கிவார்த்த விக்கிரகம்போற் கிடந்தனள். ஒழுங்காகவும் மிருதுவாகவும் விடுகின்ற அவள் சுவாசத்தால் மட்டும் அவள் ஒருயிருள்ள ஜந்து என்று அவ்வீரன் அறியலாயினன். முன் யுத்தத்தில் அவள் வலப்புயத்தில் ஒருவடுப்பட்டிருந்தது. அவள் தூக்கத்தில் அவளது வலக்கை மார்பின்மீது மடக்கிக்கிடக்கையில் அக்காயம் செக்கச்செவேலென்று விளக்கின் பிரகாசமாய்த் தெரிந்தது. அக்கையின் அடியிலிருந்த மார்பும் வட்டமாயும் அழகாயுமிருந்தபடியால் அவ்வீரன் கண்களைக்கவர்ந்தது. அந்தக்குறிப்பிட்ட ஸ்தானத்திலேயே குத்தி மாய்க்கும்படி அவனுக்குக் கட்டளை பிறந்திருந்தபடியால் அவன் சற்று உற்றுப்பார்த்தனன். ரக்ஷணையாக இருந்த அந்தக்கையை அப்புறப்படுத்த அவன் மனம் சகிக்கவில்லை. அவன் சிறிது நேரம் யாதொன்றும் தோன்றாமல் பிரமித்து நின்றான். அவளுடைய அழகைக்கண்டு அடக்கொணா ஆச்சரியமடைந்தான். அவள் வீரத்தன்மையைக்குறித்துச் சிந்திக்கச் சிந்திக்க அவனுக்கு வியப்பு ஒருபக்கமும் இரக்கம் ஒருபக்கமும் உண்டாயிற்று. தான்கொண்ட எண்ணத்தை அவன் முற்றிலும் தவிர்த்துத் தன் கையாயுதத்தைக் கீழே எறிந்தான். அந்தச்சப்தத்தால் ஜகத்ஜோதி திடுக்கிட்டு எழுந்தனள். அங்கு ஒருமனிதன் நிற்பதைக் கண்ணுற்று உடனே அவள் படுக்கையைவிட்டுத் தாவிக்குதித்து அவன் பக்கல் வந்து நின்று அவனை உற்றுப்பார்த்துப் பின்வரும் மொழிகளைக்கூறினாள்.

"உன் கருத்தை யறிந்தேன், நீ ஒரு கொலைபாதகன், கொலையாளியின் குத்து ஈட்டியால் ஜகத்ஜோதி சாகச் சிறிதும் பின்வாங்காள். இதோ குத்து" என்று மனவுறுதியோடு கூறித் தன் மார்பைத் திறந்து காட்டினள்.

அவ்வீரன் துக்கித்து அடியற்ற மரம்போல் அவள் பாதங்களில் விழ்ந்து கீழே எறிந்த ஆயுதத்தைச் சுட்டிக்காட்டி தான் கெட்ட எண்ணத்துடன் அக்கூடாரத்துக்குள் நுழைந்ததற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். "நான் பிறன் ஏவலால் வந்தவன்" என்று துக்கித்துக்கூறினன். ஜகத்ஜோதியும் அவனது பச்சாத்தாபத்தைக்கண்டு வியந்து "வீர ! நீ போகலாம். போய் உன் யஜமானனிடத்தில் சாவு வருகிற சமயத்தில் அதனை எவ்வாறு ஏற்றுக்கொள்ளுகிறதென்பதை சக்கரவர்த்தினி அறிவாளென்றும் ஆனால் நியாயம் தப்பி நடவா வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறாளென்றும் சொல். இரகசியமாய்க் குத்தச்சொன்னது கொடுந்தண்டமாகுமே யொழிய நியாயதண்டமாகாது. நான் இப்பொழுது அவன் வசத்திலிருக்கிறேன். இருந்தாலும் அவன் வீரத்தன்மையோடும் நற்குணத்தோடும் தன் அதிகாரத்தைச் செலுத்தக்கடவன்" என்றாள்.

தான் கருதியகாரியம் முடியாமற்போனதைக்குறித்து மொகபத்துக்கு ஒருபக்கம் வியப்பும் மற்றொருபக்கம் விசனமுமுண்டாயிற்று. உடனே அவன் சக்கரவர்த்தியைத் தேடிச்சென்று ஜகத்ஜோதியைக் கொல்வதற்கு உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்றான். ஜிஹாங்கிரோ ஜகத்ஜோதி மொகபத்துக்குச்செய்த கொடுமையை நன்கு அறிந்தவன். ஆகையால் அவன் கேட்பதை அநியாயம் என்று கூறத்துணியவில்லை. அவனை மறுத்துப்பேசி எதிர்ப்பதற்கும் சக்தியில்லை. ஜகத்ஜோதியை விட்டுச்சிலகாலம் பிரிந்திருந்தமையால் அவள் ரூபலாவண்ணியத்தை ஒருவாறு மறந்துவிட்டான். ஆகையால் மிகவும் அசம்மதத்துடன் அவ்வேண்டுகோளுக்கிணங்கினன். இப்பயங்கரமான சங்கதியை ஜகத்ஜோதி கேள்வியுறவே அவள் மனஞ்சிறிதும் கலங்காமல் கூறியதாவது: "சிறைபுண்ட அரசர்களுக்குச் சுயாதீனம் ஏது, அதுபோலவே பிரஜைகளின் உயிரை வாங்குவதற்கு அதிகாரமுங்கிடையாது. ஒருமுறை சக்கரவர்த்தியைத் தரிசிக்க



எனக்கு விடையளிக்கவேண்டும். அப்பொழுது அவ்வரிய உத்தரவுக்குக் கைச்சாத்திட்ட திருக்கரத்தை நான் என் கண்ணீரால் நனைத்துத் திருப்தியடைவேன்" என்றாள். சக்கரவர்த்தியினிடம் தனக்குண்டான செல்வாக்கை அவள் அறியாதவளல்லள். அவள் விருப்பம் அளிக்கப்படவே அவள் தூய வெண்மையான வஸ்திரம்தரித்து ஜிஹாங்கீரைப் பார்க்கச்சென்றனள். அவள் அவயவங்களின் அழகு அதிக சோபையுடன் விளங்கிற்று. அச்சமயம் மொகபத்தும்கூட இருந்தான். அவள் சிறிதும் விசனக்குறியை முகத்தில்காட்டாமல் சக்கரவர்த்தியை அணுகினாள். அது அவள் அழகைப்பின்னும் நன்றாக எடுத்துக்காட்டிற்று. மிக்க கம்பீரத்துடன் அவள் கிட்டினாள். ஆனால் ஒரு மொழியேனும் கூறாமலே அவள் மண்டியிட்டு சக்கரவர்த்தியின்கையை எடுத்துத் தன்மார்போடு வைத்தணைத்தாள் அதனால் தான் வாய்மொழியாகக் கூறாமலே தன் மனோபாவத்தைத் தெரிவித்தனள். ஜிஹாங்கீர் மனம் மிகவும் தளர்ச்சியுற்றது. வாய்விட்டும் அழத்தொடங்கினான். நெடுநாள் விட்டுப்பிரிந்த காதலியைக்கரத்தால் பிடித்துத்தூக்கி முகத்தைப்பார்த்து மிகவும் உருக்கத்துடன் கூறினதாவது " முகபத் ! இம்மாதரசியைக் காப்பாற்றக்கூடாதா ? "என்றான். முகபத்தும் சக்கரவர்த்தியின் துன்ப நிலைமையைக்கண்டு மனமிரங்கி " மொகலாயச் சக்கரவர்த்தியின் விருப்பம் வீணாவதுண்டா " என்றுகூறி உடனே காவலாளிகளை விலகிப்போம்படி கைச்சாடைகாட்டவே அவர்களும் அக்கணமே விலகினார்கள். ஜகத்ஜோதியும் சுயாதீனம்பெற்றாள். ஆனால் அவள்மட்டும் முகபத் தனக்கிழைத்த தீங்கைச்சிறிதும் மறக்கவில்லை. பகைக்குணம் சிறிதும் காட்டாமல் எச்சமயமும் மலர்ந்த முகத்துடனும் மரியாதையுடனும் தளகர்த்தனுடன் அளவளாவி வருவாள். அதனால் அவளைப்பற்றி அவனுக்கு யாதொரு சந்தேகமும் உண்டாகவில்லை. சேனைகளால் மிகவும் மதிக்கப்பட்டவனாகையாலும் ரஜபுத்திரர்களுடைய விசுவாசத்தில் அவனுக்குப் பூரண நம்பிக்கையிருந்ததாலும் அவன் தன் பிராணனைக்குறித்துச் சிறிதும் பயங்கொள்ளவில்லை. இதுநிற்க, ஜகத்ஜோதிவிஷயத்தில் தான் தாராளசிந்தைகாட்டி நடந்துகொண்ட மாதிரியால் ஜிஹாங்கீருக்கும் அவனிடத்தில்மிகவும் நல்ல எண்ணம் உண்டாயிற்று. அதனால் அவன் தன் பிராணனைப்பற்

றியதொரு கவலையுங் கொள்ளவில்லை. "வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை" என்று அவன் வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல்லாம் தண்ணீர் என்றிருந்தான். ஜகத்ஜோதியின் குணத்தை அவன் நன்கு அறிந்துகொள்ளவில்லை. ஸ்திரீகளின் கொடுமை அவளிடத்துமிருக்கும் என்று அவன் சிறிதும் கருதவில்லை. தன் கம்பீரகுணமே எவரிடத்தும் இருக்கும் என்று அவன் எண்ணினான். ஜகத்ஜோதியோ தான்கொண்ட எண்ணத்தை நிறைவேற்றுவதிலேயே கண்ணாயிருந்துகொண்டு சமயம்பார்த்துவந்தாள். தன்னை முகபத் சிறையிலிட்டுச்செய்த அவமானத்தை அவள்மனம் சிறிதும் சகிக்கவில்லை. சிறையுண்ட புத்திரி அவள்வசம் வந்துவிட்டனள். ஆயினும் தன்னைப்போலவே அவளுக்கும் சுயாதீனம் கிடையாது. சிறையிலிடப்பட்டவள்போலவே நடத்தப்பட்டுவந்தனள். தன் புத்திரிக்குப்பட்டகாயம் பலமாயில்லாதபடியால் சீக்கிரம் ஆறிவிட்டது. இருந்தாலும் தாயின்மனம் இருவருக்கும் இழைக்கப்பட்ட தீங்கைச் சிறிதும் மறக்கவில்லை. எவ்வாறு பழிவாங்கலாமென்பதையே அவள் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. முகபத்தின் மனம் சிறிதும் சந்தேகங்கொள்ளாதபடி ஆறுமாதகாலம் அவள் பழிவாங்கும்யோசனையை விடாது செய்துகொண்டே வந்தனள். சக்கரவர்த்தியோ முகபத்தைத் தன் இன்னுயிர் நண்பனைப்போல் பாராட்டிவந்தனன். ஜகத்ஜோதியும் அவனிடம் எப்பொழுதும் மிகவும் பிரியமாகவே நடந்துவருவதுபோல் நடித்தனள். இது புயலுக்கு முன்காணப்படும் அமரிக்கைபோலிருந்தது. ஸ்திரீகளின் ஆழ்ந்தமனத்தை யறிய வல்லவர் யாவர்? ஒருநாட்காலையில் வழக்கப்படி தளகர்த்தன் தன் பரிவாரங்களுடன் சக்கரவர்த்தியைப் பார்க்கப்போனபொழுது அவன் போன சந்தின் இருபுறங்களினின்றும் காவலாட்கள் வந்து எதிர்த்தனர். அநேகம் வீடுகளிலிருந்து அவன்மேல் குண்டுமாரிகள் பொழியப்பட்டன. எங்கும் குழப்பம் உண்டாயிற்று. முகபத்தின் சேனாவீரர்கள் நல்ல கைதேர்ந்தவர்களாதலால் சத்துருக்களைச் சிறிதும் லட்சியம்பண்ணாமல் எதிர்த்துச்சென்றார்கள். சத்துருக்களுடைய உபாயம் பலிக்கவில்லை. அச்சமயம் முகபத் அவ்வபாயத்தினின்றுதப்பியது மிகவும் ஆச்சரியமே. அவன் பரிவாரத்தாரில் அநேகர்மடிந்தார்கள். அநேகர் காயப்பட்டார்கள். அவனுக்குமட்டும் யாதொருஅபாயமும்



நேரிடவில்லை. இந்த ஏற்பாடு நடக்கும்வரை எவர்க்கும் தெரியாது. எங்கும் அதிருப்தியுண்டாயிற்று. ஜனங்கள் சக்கரவர்த்தியைச் சூழ்ந்திருந்த படையைத் தாக்கினார்கள். எல்லோரும் கத்திக்கிரையானார்கள். காபூல் முழுவதும் அல்லோலகல்லோலப்பட்டது. முகபத்தும் பட்டணத்துக்கு வெளிப்புறத்தில் தங்கியிருந்த பாளையத்துக்கு ஓடித் தப்பித்திராவிடின் அவன் உயிரையும் அக்கோபத்தில் மாய்த்திருப்பார்கள். இத்துணிகரமான செய்கையைத்தக்கவண்ணம் தண்டிக்க முகபத் ஏற்பாடுசெய்தான். தன் எண்ணம் நிறைவேறாததுகண்டு ஜகத்ஜோதியும் தனக்கு அபாயம் நேரிடுமென்று நடுங்கினாள். தளகர்த்தன் தங்களைத் தக்கவண்ணம் தண்டிக்க ஏற்பாடு செய்வதை அறிந்த ஜனங்கள் ஒரு கூட்டங்கூடித் தங்களில் முக்கியமானவர்களை அவனிடம் அனுப்பிப் பிழைபொறுத்தருளும்படி வேண்டிக்கொண்டதுமன்றி கலகம் சில நாடோடிகளால் உற்பத்தியாயிற்றென்றும் அப்படிப்பட்டவர்களைத் தாங்களேபிடித்து அவனிடம் ஒப்புக்கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார்கள். ஜகத்ஜோதியே இதற்கு மூலகாரணம் என்பதை முகபத் அறிந்திருந்தபோதிலும் அதனை அவன் வெளிக்காட்டவில்லை. பிரஜைகளின் பிரார்த்தனைக்கு அவனும் இணங்கி அவர்களுக்கு மன்னிப்புக்கொடுத்தான். அன்றுமுதல் காபூலுக்குள் இனி நுழைவதில்லை என்று விரதம் செய்துகொண்டான். கலகக்காரர்களைத் தக்கவண்ணம் தண்டித்தான். மறுநாளே புறப்பட்டுச் சக்கரவர்த்தியுடன் லாகூருக்குச்சென்றான். போகும் வழியில் ஒரு ஆற்றங்கரையின் அழகான கரையில் ஓர் இனிய சோலையைக்கண்ணுற்று அதில் பாளைய மிறங்கினான். அதன் அழகைச்சுற்றிப்பார்க்க ஆசைகொண்டவனாய் ஏகாந்தமாய்ப் புறப்பட்டான். "குரவமேம் கமழ் குளிர் பொழிலூடு குயிலொடு மயில்கள் நின்றால, இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியா" இடங்களையும், "கருங்குருகு பசும்பாளை வெண்முத்தீன்று காயெல்லாம் மரகதமாய்ப் பவளங்காட்ட, செருந்தி மிகமொட்டலர்த்தும் தேன்கொள்" இடங்களையும். "கொங்குசெண்பகக் கொம்பினில் குதிகொடு குரக்கின மிரைத்தோடி தேன்கலந்த தண்பலங்கனி நுகர்தரு" மிடங்களையும். "மீனுந்தமுழவி விழுந்தெழு மள்ளர்க்கலமர்ந்து நாணப்புதவிலாமை யொளிக்கும்" இடங்களையும் "செந்துவாய் செய்தல் பூமதுமாந்திக்கமலத்தின் நடுவாய் மலர்மே

லன்னமுறங்கும்" இடங்களையும், கண்ணுற்றுப்பின் வருமாறு சிந்திக்கத் தொடங்கினான். "இனிது இனிது ஏகாந்தம் இனிது" "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" மானிடசரீரத்துக்கோ பிராயம் நூறே. அதில் பாதியும் உறங்கிப்போகும். நின்றதில் பதினையாண்டு பேதைபாலகனதாகும் பிணி பசி மூப்புத்துன்பம்" "மணிமாடமாளிகை மேடை சதுரங்கசேனையுடனே வந்ததோர் வாழ்வுமோர் இந்திரஜாலக்கோலம்" ஆகையால் பிறவியை யொழிக்க வழி தேடுவதே உத்தமம். ஏகாந்தத்திலிருந்துகொண்டு பகவத்தியானம் பண்ணிக்கொண்டிருந்தால் மட்டுமே மனோசஞ்சலமற்றுச் சாந்தியடையலாம். உலக வியாபாரத்திலுள்ளவரை மனம் அலைவாய்த்துரும்புபோல் சலித்துக்கொண்டே இருக்குமேயொழிய சாந்தியடையப் போவதில்லை.

"பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்"

என்ற திருவாக்குமிருப்பதால் ஏகாந்தத்திலிருந்து அவனடியே தொழுவதில் பொழுதுபோக்கினாலல்லாமல் இப்பிறவிக்கடலை நீந்தல் முடியாது.

"பெரும்புறக்கடலை, அடலேற்றினைப்
பெண்ணை, ஆணை, எண்ணில் முனிவர்க்
கருள்தரும் தவத்தை, முத்தின் திரள்கோவையைப்
பத்தர் ஆவியை, நித்திலத் தொத்தினை,
அரும்பினை, அலரை, அடியேன் மனத்தாசையை,
அமுதம் பொதி இன்சுவை
கரும்பினைக், கனியைச் சென்றுநாடிக்"
கண்டுகொண்டாலொழியகதிவேறில்லை.

இச்சோலையின் இயற்கைவளங்கள் என் மனத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. இப்பறவையினங்கள் யாதொரு நிர்ப்பந்தமின்றி ஏதோ கிடைத்ததைக்கொண்டு வயிற்றைநிரப்பி உல்லாசமாய்ப்பாடிக்கொண்டு தாமு மின்புற்றுப் பார்ப்போரும் இன்புறும் வண்ணம் செய்கின்றனவே. நாம்மட்டும் இவ்வுலகப் பெருஞ்சுழியில் அகப்பட்டு வீண்துன்பமடைவானேன். இவ்வோடைகளின் ஜலத்திவலைகளை



ப்போல் நம் வாழ்நாளின் ஒவ்வொரு விநாடியும் நில்லாமல் ஓடிக்கொண்டேயிருக்கிறது. ஆகையால் இனி ஒருகணமும்தாமதியாமல் நிலையற்ற இவ்விந்திரஜாலக்கோலத்தை நீக்கி சாசுவதப் பொருளாகியபகவானைத் தேடிக்கண்டுகொள்வதே இம்மானுடப்பிறவியின் பயன்" என்று பலவகையாய்ச் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

(இன்னும்வரும்)

எஸ். சாமிநாதையர்.

---

# ந்ரிகுராஜன் கதை.

---

"எந்தெந்தக் காலங்களில் தர்மம் மலினமடைந்து, அதர்மம் மேலிடுகிறதோ, அந்தந்தக் காலங்களில், நான் அவதாரஞ்செய்து தர்மத்தை நிலைநிறுத்துகிறேன்" என்று பகவான் பார்த்தனுக்கு கீதோபதேசஞ் செய்யுங்கால் கூறியிருக்கிறாராகையால், துவாபர யுகத்தில் அப்பேர்க்கொத்த தர்மத்திற்கு லோபம் வரவே, மலரயன் முதலாய சகல விண்ணவர்களுங்கூடி, பாற்கடலிற் பள்ளிகொண்ட பரமனிடஞ் சென்று முறையிட்டனர். அன்னோர் முறையைக்கேட்ட அப்பகவான் தன் சங்கற்பத்திற் கிணங்க, தேவர்களனைவரையும் நோக்கி நீவிர் குவலயத்தின்கண் மானிடராக அவதரியுமின். நான் வடமதுரையில் தேவகிமைந்தனா யவதரிக்கின்றனன் என்று திருவாய் மலர்ந்தருளினர். அங்ஙனமே விண்ணவர்கள் உலகில் அவதரித்தனர். பின்னர் ஸ்ரீஹரி சுக்கில சோணித சம்பந்தமில்லாமல், தூணில் ஸ்ரீநரசிம்மன் ஆவிர்ப்பித்ததுபோல், தேவகி உதரத்திலிருந்து, சங்கு சக்கர பீதாம்பர தாரியாய் (குணதிசையில் திங்கள் உதயமாகுஞ் சமயத்தில் சாகரக்கரையில் நின்று பார்க்கும் பாமரர்களுக்கு அச்சோமன் சமுத்திர ஜலத்திலிருந்து கிளம்பி வருவதாகத் தோன்றுவதுபோல்) பரந்தாமன் அவதரித்தனன். ஜனித்த ஏழாம் நாளிலேயே பூதனாவதமும், அதன் பின்னர் வரிசையாகச் சகடன், தேனுகாசுரன் முதலிய பல அரக்கர்களைக்கொன்று வேணுகானத்தினால் கோபிகளை

மயக்கச்செய்து அன்னோர்களுடன் கூடி ராசக்கிரீடை, ஜலக்கிரீடை முதலியவைகளைச்செய்து, கஞ்சனை வதைத்து ஜராசந்தனைப் பன்முறை யுத்தத்திற் றோற்கடித்து, சமுத்திரத்தில் துவாரகாபுரி என்ற ஓர் நூதன பட்டினத்தை நிர்மாணஞ் செய்துகொண்டு ருக்மணி முதலாய பல கன்னிகா ரத்தினங்களை மணந்து நரகாசுரனை வதஞ் செய்து, அன்னவனால் சிறையாக்கப்பட்டிருந்த பல்லாயிரம் கன்னிகைகளை விவாகஞ் செய்துகொண்டு, இவ்வளவு பாரியர்களுடன் கூடி பல புத்திரர்களை யடைந்து துவாரகாபுரியில் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தனன்.

இப்படியிருக்க ஓர் நாள் மாலைப்பொழுதில் கண்ணபிரானுடைய புத்திரர்களிற் சிலர், வேறு குழந்தைகளுடன் சேர்ந்து பந்து விளையாடிக்கொண்டிருக்கையில், அப்பந்து தூரத்திலிருந்த ஓர் பாழுங் கூவத்தில் விழவே பாலரனைவருஞ் சென்று அக்கூவத்தினுள் நோக்குகையில் அது நிர்ஜலமாயிருந்தது பந்தைக் கண்ணுற்றனர். கொணர்ந்தனர் ஓர் பெரிய மூங்கிற் கழியை, கூர்மையான பற்கள் நிறைந்த ஓர் இருப்பாயுதத்தைப் பிணைத்தனர், அம்மூங்கிற் கழியின் முனையை விட்டனர் கூவத்தினுள். அவ்வாயுதம் பந்திற் படுவதற்கு முன்னர் அதிற்கிடந்த ஓர் ஓணான் தலையிற்றாக்க, அவ்வேதனையைப் பொறுக்கமாட்டாமல், அவ்வோணான் மிகவும்வருத்தத்துடன் பெருமூச்சுவிட, அக்குரலைக்கேட்ட வாலிபர்கள் அஃதென்னவென்று கூவத்தினுள் நோக்க, அநேக வருஷ காலமாய் ஆகாரமின்றி தேகமெல்லாம் ஒடுங்கியிருந்த ஓர் ஓணான் என்று அறிந்தனர். உடனே இரக்கங்கொண்டு அதை மேலெடுக்கத் தங்களாலானவரையில் முயன்றும், அது வீணானது கண்டு, அனைவரும் ஒருமிக்கக்கூடி ஸ்ரீ கிருஷ்ணபகவான் அரண்மனைக்குச் சென்று நடந்த விருத்தாந்தத்தை யறிவித்தனர். அதற்கு முகுந்தன் புன்சிரிப்புடன் குழந்தைகளைப் பார்த்து குழந்தைகாள்! ஓர் அற்ப ஓணானை கூவத்திலிருந்து மேலெடுக்க நான் வரவேண்டுமா? உங்களால் முடியாதா? என்று வினவ முடியவில்லை யென்றனர் பாலர்கள். கருணாசாகரனாகிய கமல நயனன் உடனே எழுந்துசென்று அக்கூவத்தினுள் இறங்கி தன் இரு விரல்களால் அதைப்பற்றி மேலெறியவே அவ்வோணான் தரையின் மேல் வந்து விழுந்தது. விழுந்த ஒரு நிமிஷத்திற்குள் கர்கரூவென்று



சுழன்று உயிரிழந்தது. அதற்குள் கேசவன் மேல்வந்து சகல குழந்தைகளுடன், இறந்துபோன அவ்வோணானைப் பார்த்துக்கொண்டு நிற்கவே, அதன் தேகத்திலிருந்து ஓர் விசித்திரமான புருஷன் திவ்யாலங்காரத்துடன், மன்மதனையொப்ப சுந்தராங்கனாய்த் தோன்றித் தன் இரு கரங்களையும் கூப்பி நின்று பகவானை நோக்கிப் பின்வருமாறு துதித்தனன்.

தேவதேவ! ஆதிமத்யாந்தரஹிதா! அமலனே! விமலனே! பராபர வஸ்துவே! முனிவர்களுக்கும் எட்டாத முதல்வனே! தேவகிமைந்தா! அன்னைக்கு அண்டங்கள் அனைத்தையும் தன் உதரத்திற் காட்டிய அப்ரமேயா! கிரீடிக்கு தத்வரகசியத்தை யுபதேசஞ்செய்த இருடிகேசா! கருணைக்கடலே! தேனே! அமுதமே! மணியே! ஒளியே! என்னை ஆட்கொண்ட ஹரியே! ஆயிரம் நாவைப்படைத்த சேடனாலும், மறையாலும் ஸ்ரீமகா இலக்குமியாலும், நின் குணத்தைக் கொண்டாட முடியாதென்றால், என்னால் எங்ஙனம் முடியும். ஸ்ரீ கிருஷ்ணா! உன் கரஸ்பரிசத்தால் நான் தப்பினேன். பூர்வத்தில் உன் பாதஸ்பரிசத்தால் கல்லும் பெண்ணுருவாகவில்லையோ! இனி எனக்கு எந்த ஜன்மம் வந்தாலும் உன் பாதகமலத்தில் என் மனம் நிற்கும்படியாய் அருள் புரிக என்று சொல்லி முடிக்கவே விண்ணிலிருந்து விமானம் வந்து நின்றது இவரை அழைத்துக் கொண்டுபோக.

அதைக்கண்ட குழந்தைகள் மிக்க ஆச்சரியமடைந்து வாசுதேவனை நோக்கி ஹே ஜனார்த்தனா! இந்த மகா புருஷர் யார்? இவர் வரலாறு என்ன? இவருக்கு இந்த ஓணான் ஜன்மம் வந்த காரணம் யாது? என்று நீரே விசாரித்து அறியச்சொல்லும். இவர் விருத்தாந்தத்தைக் கேட்க மிக்க ஆவல்கொண்டவர்களாயிருக்கிறோம் என்றனர்.

அதைக்கேட்ட மாதவன் நின்ற மகா புருஷனைப்பார்த்து ஹே! சுந்தராங்கா நீ யார்? இந்த ஜன்மம் வந்ததின்காரணம் யாது என்று வினவ அதற்கு அப்புருஷன் கோவிந்தனை நோக்கி ஹே! மதுசூதனா! சகலமும் அறிந்திருந்தும் அறியாதவனைப்போல ஏன் கேட்கிறாய்? என்றாலும் நீ கேட்டபடியால் நான் என் விருத்தாந்தத்தைச்

சொல்லுகிறேன். சாவதானமாய் இக்குழந்தைகளுடன் கேட்பாய் என்று தன் விருத்தாந்தத்தைப் பின்வருமாறு சொல்லலுற்றனன்.

தினகரன் வம்சத்திற் பிறந்த இட்சுவாகுவின் புதல்வன் யான். என்னை ந்ரிகு ராஜன் என்பார் உலகத்தவர். என் வரலாற்றில் தற்புகழ்ச்சிபாகம் வெகுவாய் வருமாதலால் அதை நான் எங்ஙனம் என் வாய்விட்டுரைப்பது கிருஷ்ணா! என்று சொல்லி தன் வரலாற்றைச் சொல்லக் கூச்சப்பட்டுக்கொண்டிருந்தவனை நோக்கி ஸ்ரீதரன், பரவாயில்லை. நான் சொல்லு என்று கட்டளையிட்டதின்மேல் நீ சொல்லாமல் இருப்பது அழகல்ல. தற்புகழ்ச்சி இருந்தால் அதை மறைக்காமல் உரைப்பாய் என்றலும் பின்பு சொல்லலுற்றனன். எனக்குத் தகுதியான வயது வந்தவுடனே ராஜ்யபாரத்தை வகித்து நீதிதவறாது அரசாண்டு வந்தேன். வானத்திலுள்ள நட்சத்திரங்களையும், சமுத்திரமணலையும் ஒருவாறு எண்ணினாலும் எண்ணிவிடலாம், நான் செய்த தானங்களை எண்ணமுடியாது. கோதானம், பூதானம், சுவர்ணதானம், கன்னிகாதானம் முதலிய சகல தானங்களையுஞ் செய்திருக்கிறேன். நான் நாள் ஒன்றுக்கு லக்ஷம் கோதானங்கள் செய்து வருவேன். விசித்திர அழகுள்ள முதல் ஈற்றுக் கோக்களையும் ஒரு வேளைக்கு ஒரு வள்ளம் கறக்கும்படியான லக்ஷம் கறவை மாடுகளை மிக்க யோக்கியதையுள்ள விப்பிரர்களைத்தேடி, அக்கோக்களை தானஞ்செய்கையில் அவைகளைப் பெற்றுக்கொள்ளும் துவிஜர்களுக்கு வேண்டிய திரவியமும் பால் கறப்பதற்கு சுவர்ன பாத்திரங்களும், பல வருஷங்களுக்கு வேண்டிய சாமான்களும் உதவி வருவேன்.

ஓர் நாள் துவாதசி தினத்தில் (களாமாத்திர சாதனையாதலால்) விடியற்காலம் ஐந்து மணிக்கு முன்னர் கொஞ்சம் இருளாயிருக்கையில் கோதானஞ் செய்துவருகையில் எனக்குச் சொந்தமல்லாத ஓர் மாடு என் மாடுகளுடன் வந்து சேர்ந்திருந்ததை நான் அறியாததினால் அதையும் சேர்த்து தானஞ் செய்தேன்.

மாட்டை இழந்த பார்ப்பான் ஓர் நாள் மாலையில் ஆற்றோரமாய்ப் போய்க்கொண்டிருக்கையில், என்னிடம் தானம்பெற்ற மறையோன் தன் மாட்டிற்குத் தண்ணீர் காட்ட ஆற்றங்கரைக்கு ஓட்டிக்கொண்டு போனான். வழியில் ஆவையிழந்த அந்தணன் தன் மாட்



டை விழித்துப்பார்த்து ஹே! விப்பிரா! இது என் கோ! நீ இதைத் திருடினதற்குக்காரணம் என்னவென்று கேட்க, நான் திருடவில்லை; கோன் இக்கோவை எனக்கு தானங் கொடுத்தனன் என்றனன். உடனே இருவரும் பல வார்த்தைகள் அடி கடைசியாக மன்னவன் முன் வந்தனர். அப்பொழுது நான் சிங்காதனத்தில் அமர்ந்திருந்தனன். கோவைத் தானம் பெற்ற பிராமணன் ஹே ராஜா! இந்த மாட்டை நீர் எனக்கு தானங் கொடுத்திருக்க இந்த விப்பிரன் என்னை வாய்க்கு வந்த வரையில் திட்டி, ஏளனஞ்செய்து என் மடியைப் பிடித்து கைதியை இழுத்துக் கொண்டுவரும் வண்ணம் தங்கள் சமுகத்திற்குக் கொணர்ந்திருக்கின்றனன் என்றனன். அதற்கு மாட்டையிழந்த மறையோன் ராஜா! இந்தக் கோ என்னுடையதுதான் என்பதை இதோ இந்த நிமிஷத்திற் காட்டுகிறேன் பாரும் என்று சொல்லி, ஓ மீனாக்ஷி இங்கு வா என்று அழைக்கவே, அக் கோ உடனே அவன் பக்கத்தில் வந்து நின்றது. எனக்கு இன்னது செய்வது என்று தோற்றாமல் ஹே! விப்பிரர்காள்! பிறருடைய சொத்து என்று தெரியாமல் தானஞ் செய்துவிட்டபடியாலும், தானங் கொடுத்ததை மறுபடியும் வாங்கி சொந்தக்காரனுக்குக் கொடுக்கவேண்டிய படியாலும், இங்ஙனம் செய்வதில் இருவருக்கும் மனவருத்தம் உண்டாகாதபடி (தானம் பெற்றவனை நோக்கி) நீர் இந்த மாட்டைக் கொடுத்துவிடும் இக் கோவுக்கு ஆயிரமாக்கள் திருப்பிக் கொடுக்கிறேன் என்றும் அதற்குச் சம்மதியாது அவ் விப்பிரன் முனிந்து போய்விட்டான். மாட்டை இழந்த அந்தணனை நோக்கி நீர் உம்முடைய மாட்டைக் கேட்காதிருப்பீரேல் அந்த ஒரு மாட்டிற்கு பதில் ஆயிரம் மாடுகள் தருகிறேன் என்றும் அவனும் முனிந்து போய்விடவே, நான் விசாரத்தினால் கொஞ்சம் நாட்களில் தெய்வகதியடைந்தேன். தென்றிசைக்கோன் முன்னர் நான் போய் நிற்க அவர் என்னை நோக்கி, மன்னா, நீ பார்ப்பான் சொத்தை எடுத்து தானஞ் செய்த பாவத்திற்கு ஓராயிரம் ஆண்டு ஓணாக இருந்து பின்னர் ஸ்ரீ கிருஷ்ண பகவான் கரஸ்பரிசத்தால், திவ்ய ரூபமடைந்து பல கோடி காலம் சுகத்தை அநுபவிப்பாய் என்று கூறவே, நான் இந்த ஜன்மமெடுத்து இக் கூவத்தினுள் கிடந்தேன். உன் திவ்ய கரஸ்பரிசத்தால், இந்த ஜன்மம் நீங்கி இதோ விமானம் ஏறிப்போகிறேன்

என்று, ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் விடை பெற்றுக்கொண்டு விமான மேறிப்போனான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த குழந்தைகள் மிகவும் ஆச்சரியமடைந்தனர்.

இதன் பின்னர் ஸ்ரீ கிருஷ்ணபகவான் குழந்தைகளை நோக்கி விப்பிரர் சொத்துக்கு ஆசைப்படலாகாது அதை அபகரிக்கவும் கூடாது என்று குழந்தைகள் மனத்தில் நன்றாய்ப் பதியும்படி போதித்தனன்.

ஸ்ரீரங்கம்.
28-2-07

இப்படிக்கு
**M. ராகவேந்திராச்சார்,**
உபாத்தியாயர்.

உ

# சிந்தாமணி சரித்திரம்.

(13-ம் பக்கத் தொடர்ச்சி.)

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்னும் நீதியுரையானது மானிடப் பிறவிக்கு விதிக்கப்பட்டிருக்கும் அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கு புருஷார்த்தங்களின் உண்மையை நன்கறிந்த மகா புத்திசாலியினால் இயற்றப்பட்டதன்றோ. சராசரங்கள் நிறைந்த இவ்வுலகத்தின்கண் ஒவ்வொரு வஸ்துவினிடத்திலும் அந்தர்யாமியாகக் கடவுள் வாசஞ் செய்கிறானென்பதை ஆலயங்கள் அல்லவோ விளக்குகின்றன. இக்காலம் படிப்பினாலும் நமது மதக் கொள்கையின் மேம்பாட்டை யறியாத நாஸ்திகர்களுடைய சகவாசத்தினாலும் நாளுக்குநாள் குலைவுற்றிருக்கும் உங்கள் ஈன அறிவிற்கு நான் சொல்வது புலப்படப்போகின்றதா. சடமாகிய உடலின்கண் சின்மயமாகிய நான் என்னும் அறிவு ஒன்று நடைபெற்று வருகின்றதே, அஃதென்னவென்று நிதர்சனமாகக் கண்டு அனுபவிப்பதற்காக ஐம் பொறிகளையும் விஷயங்களிற் செல்லாமல் அடக்கி மனம் வெளியில் அகலாது உடலின் உள்ளாகவே சென்று உடலின் மையநிலையாகிய இருதயத்தின்மீது இடைவிடாது பிரகாசித்துக்கொண்டிருக்கும் பரஞ்சோதியைக் கண்ணுற்று அப்பரஞ்சோதியின் இயல்பாகிய ஆனந்தத்தில் அம்மனமும் மூழ்கிநிற்பதே யோகமென்றும் அகங்கிரக உபாஸனையென்றும் ஒரு மேலான முறையை எல்லாம் வல்ல பெரியோர்கள் அமைத்திருக்கிறார்கள். இதற்கு அந்தர்முக ஸமாதி யென்று பெயர். இம் முறையைக் கைக்கொள்ள எல்லாரும் தகுதியுள்ளவர்களா? பந்தப்பட்டு நிற்கும் ஆத்மா மனத்துக்கு உடன்பட்டும் அம் மனமானது ஐம்பொறிகளாலும் அங்குமிங்கும் இழுக்கப்பட்டும் அவ் வைம்பொறிகளும் விஷயங்களால் இடைவிடாது கவரப்பட்டும் இவ்வித சாமான்யமாக மனிதனுடைய நிலையானது அலைவாய்த் துரும்புபோல ஓயாது அசைவற்றுக் கேடுறுவதால் அவனுக்கு அந்தர்முக ஸமாதியானது எப்படிக் கைகூடும்? உலகத்திலுள்ள மனிடர்கள் பெரும்பாலும் அக்குணமுடையவர்களல்லவா? ஆனது

பற்றி யோகவித்தைக்கு வேண்டிய யோக்கியதையில்லாத சாமான்ய மானிடர்களும் இம்மைத் துயரினின்று தப்பி உய்யுமாறு பகிர்முகமான உபாஸனை விதித்து உடலின் ஐந்து கூறுகளாகிய பஞ்சகோசங்களுக்குப் பிரதிநிதியாகப் பிராகாரங்களையும், இருதயத்துக்குப் பிரதிநிதியாக ஆலயத்தின் கர்ப்பக்கிருகத்தையும், இருதயத்தில் பிரகாசித்து விளங்கும் பரஞ்சோதிக்குப் பிரதிநிதியாக ஈசுவர பிம்பத்தையும், இருதயத்தில் விளங்கும் பரஞ்சுடரினுடைய வலிமைபற்றிப் பஞ்சகோசங்களினுடைய அவயவங்களின் அதிஷ்டான சக்திகளாக விளங்கும் பல தெய்வங்களுக்குப் பிரதிநிதிகளாகப் பிராகாரங்களிலிருக்கும் பல தெய்வ பிம்பங்களையும் அமைத்து இவைகளுக்கு ஸமஷ்டியாக ஆலயமென்று பெயர் புனைந்து அவ்வாலயத்தில் ஆத்மகோடிகள் சென்று ஈசுவரனை வழிபாடுசெய்து உய்யும்வண்ணம் பெரியோர்கள் அமைத்திருக்கின்றார்கள். இவ்வாறு வழிபாடு செய்வதற்கு பக்தியென்றும் **பிரதீக உபாஸனை** யென்றும் நாமம் வழங்கப்படுகின்றது. வெளியில் இடைவிடாது பார்த்து மனத்துட்கொள்ளும் பொருள்களின் உருவங்கள் தாமே ஸம்ஸ்கார ரூபமாக அந்தக் கரணத்தில் பதிகின்றன. அப்பழக்கமானது மேலிடுவதால் அந்தக் கரணத்துக்கு ஒரு நல்ல குணமுமமையாமல் அந்த ஸம்ஸ்காரத்தினுடைய ஈன குணமே புனலானது ஆலங்கட்டியாகத் தடிப்பதுபோல் அந்தக் கரணத்தின் குணமாக அமைகின்றது. அதற்காகத்தான் மனத்தைப் பொருள்களின்மீது செல்லவிடாது ஐம்பொறிகளை இழுத்து மனத்தின்கட் பொருத்தி அவைகளுக்கு விருத்தியில்லாமற் செய்து மனத்துக்கும் பொருள்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமல் அம்மனமானது பொருள்களுக்கெல்லாம் வேறாயிருப்பதும் இருதயத்தில் விளங்குவதுமான பரஞ்சுடரின்கண் நிற்கும்படியாக அமைப்பதே போகமென்று கைக்கொள்ளப்பட்டிருக்கிறது. அஃது அனைவருக்கும் சுலபமான முறையாகாததுபற்றி வெளியில் ஈசுவர பிம்பங்களையும் ஈசுவரனுக்கு நடத்தப்படும் திவ்விய கைங்கரியங்களையும் பலமுறை பார்ப்பதினாலும் ஈசுவரனுடைய உயர்ந்த குணங்களையும் அவருடைய மனோகரமான செயல்களையும் அடிக்கடி உன்னுவதினாலும் அந்தக் கரணமானது புனிதமான ஸம்ஸ்காரங்களை யடைந்து அந்த ஸம்ஸ்காரங்களின் வலிமையால் நல்ல உருவத்தை அடையவேண்டும்



என்கிற உயர்ந்த கருத்துடன் ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மேலான தாற்பரியத்துடன் அல்லவா நமது வீடுகளிலும் பார்க்குமிடமெல்லாம் ஈனமான பொருள்கள் நிறைந்திருப்பனவால் அவைகளின் ஸம்ஸ்காரம் அந்தக் கரணத்தில் படிந்து கேடுவிளைக்கா வண்ணம் ஒவ்வொரு இடத்திலும் ஈசுவரனுடைய படங்களையும் புனிதம்நிறைந்த பெரியோர்களுடைய பிம்பங்களையும் அமைத்துக்கொள்வதும் நமது பக்கத்திலிருந்து நம்முடன் ஸஹவாசஞ்செய்யும் புதல்வர், புதல்விகள் முதலியோருக்கு ஈசுவரனுடைய பல திருநாமங்களை யிட்டு அந்த நாமங்களை வாயால் உரைக்கும்படி ஏற்படுத்திக்கொள்வதும் நாம் தொன்றுதொட்டு அனுஷ்டித்து வரும் முறையல்லவா?

உலகத்தின்கண் பிரவிருத்தியிலிருந்து மீளுவதற்கு முற்றிலும் முடியாமற்போனாலும் சற்று ஒழியுங் காலங்களில் இவ்விதமாக மனமானது நல்ல பழக்கத்தையடைந்து மேம்பாட்டைப் பெறுவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் ஆலய முதலிய மேலான தந்திரங்களா உங்கள் கண்ணில் உறுத்தவேண்டும்? நம் நாட்டின் மதக்கொள்கைகளை நுட்பமாக அறியும் தகைமையில்லாவிடினும் அக்கொள்கைகள் மேலான கொள்கைகள் என்றும் நமது நாடே புனிதமான நாடென்றும் மேனாட்டார்களும் ஒப்புக்கொண்டு வியந்து பேசவில்லையா? நம் நாட்டிற் பிறந்து நம்முடைய மதக்கொள்கைகளையும் அனுஷ்டானங்களையும் சுலபமாக விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய உங்களுடைய புத்தியா இப்படிக் கெடவேண்டும்?

மதக்கொள்கையென்றும் பரலோகமென்றும் தர்மமென்றும் சொல்லப்படுகின்ற அம்சங்களையெல்லாம் ஒழித்துவிட்டு இவ்வுலகத்தில் பிறந்து இறப்பதன்றி மற்றொன்றையும் கைக்கொள்ளாத மூடர்கள் தாம் பலவாறு பேசுகின்றார்கள். விதவைக்கும் கணவனால் அவமதிக்கப்படும் பெண்டிருக்கும் மறுவிவாகம் மேலானதென்று அவர்கள் பிதற்றினால் மதக்கொள்கை முதலிய அம்சங்களைக் கருதுகின்ற சாதுக்கள் அதை ஒப்புக்கொள்ளுவார்களா? உங்களுடைய கேடுகெட்ட புத்திக்கு சட்டைக்காரனை மணம்புரிந்து வாழ்கின்ற சில ஆங்கிலேய மாதர்களுடைய சான்றுதானா பிரதானமாகப்படவேண்

டும்? அந்தச் சிந்தாமணி மகா புண்ணியவதி, தர்மத்தையே மேலாகக்கருதித் தன் உடலுக்கும் மனத்துக்கும் உண்டான வருத்தங்களையும் கருதாது எம்முறை பற்றியாவது தன் கணவனைக் கண்ணுற்று அவனையும் பழுதினின்று அகற்றி அவனுடன் கூடிவாழ்வதே மேலான வாழ்வென்று கருதி ஊக்கத்துடன் முயற்சித்துச் செல்லுகிறாளே அவளுடைய உத்தம குணங்களை ஆயிரம் முறை வியந்து பேசாது ஒரு நாழிகையாகத் தாறுமாறாய்ப் பிதற்றிக்கொண்டு நிற்கின்றீர்களே. நீங்கள் படித்த வித்தையை இரக்கமின்றிக் கொளுத்திவிட்டாலென்ன? இம்மையில் பலகாலமும் மறுமையிலும் அடையவேண்டிய பெரும்பலனைக் கவனியாமல் இம்மையில் மின்னல்போலத்தோன்றிச் சடுதியில் மறைகின்ற யௌவனத்தையும் விஷயசுகத்தையும் மேலாக வியந்து பேசிக்கொண்டு திரிவதற்காகவா உங்களைப் பெற்றவர்கள் உங்களைப் படிக்கவைத்தது, என்ன அற்புதமான கல்வி! என்ன மூடத்தனம்! ஐந்தாறு கெண்டை மீன்களைப் பிடிப்பதற்காகப் புனல்நிறைந்த பெரும் ஏரியை வெட்டி விடுவதுபோலத் தர்மத்தையே தன் பிறவிக்குப் பரமசாதனமாகக்கொண்டு புனிதமான முறையில் நடந்துவரும் அப்பெண்மணிக்கு நேர்ந்திருக்கும் துன்பங்களையெல்லாம் கருதாமல் சிலகாலம் சென்றால் அவள் யௌவனமே போய்விடுமென்றும் அப்படிப் போவதற்குமுன் அவள் வேறொரு புருஷனை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்றும் கொஞ்சங்கூட வெட்கமானமில்லாமல் பேசுகிறீர்களே. தர்மத்துடன் மணம்புரிந்த நாயகனுடன் வாழ்வதற்குக் கடவுள் செயலால் இந்த இடையூறு நேர்ந்திருக்குமாயின் அதர்மமாகவே வேறொரு நாயகனை மணம்புரிந்து அவனுடன் வாழ்வதற்கு எத்தனை இடையூறுகளை அக் கடவுள் விளைவிக்கமாட்டார்? இப்பொழுதாவது நல்ல குலவதியென்றும் அறநெறி வழுவாது நடக்கின்ற உத்தமியென்றும் பெருங்கீர்த்தியைக் கைக்கொண்டு ஈசுவரனுடைய அருளையும்பெற்று ஒருவாறு இப்பிறவியில் சுகமாக வாழ்வுபெறாவிடினும் மறு ஜன்மத்தில் குன்றாத வாழ்வைப் பெறும்படியான புண்ணியத்தையும் அடைந்து வருகின்றாளே. நீங்கள் அவளை இம்மைக்கும் உதவாது மறுமையிலும் கேடுகெட்டுப் போகும்படியான முறையையல்லவோ உபதேசிக்கிறீர்கள். உங்கள்பேரில் குற்றமில்லை. இவையெல்லாம் காலத்தின்



கொடுமை. அறிவு கெட்டாலும் பேசுவதில் மட்டும் நியாயம்போல் வழுத்துகின்ற சொல்வலி மட்டும் உங்களிடத்தில் பொருந்தியிருக்கின்றது. அதர்மமாவது உங்கள் அறிவைக்கெடுத்தது மட்டுமன்று அக்கிரமமான முறையை வியந்து பேசுவதற்குள்ள நியாயங்களை ஒழுங்காக எடுத்துரைக்கும் சாமர்த்தியத்தை உங்களுக்குக் கொடுத்திருக்கின்றது. ஐயோ! அந்த சாமர்த்தியமானது நல்ல முறையில் விநியோகிக்கப்படக்கூடாதா? என்று சொல்லிக் கோபாலனையும் கனகசபையையும் வாயாரத் தூஷித்துவிட்டு இராமையரும் மற்றவர்களும் சென்றார்கள்.

(இன்னும் வரும்)

உமாதாஸ்.

---

# மிஸ்டர் ராமாராவும் ஜப்பான் விருத்தாந்தமும்.

---

கண்ணாடிச் சாமான்கள் செய்யும் முறையைக் கற்றுவருவதற்கு ஜப்பான் தேசம் சென்றிருந்த மிஸ்டர் ராமாராவ் ஜப்பானில் ஒன்பதுமாதம் தங்கியிருந்து பலவிதமான கண்ணாடிகள்செய்யும்முறையைக்கற்றுக்கொண்டதோடு, இடையிடையே ஓய்வு நேரங்கள் ஏற்பட்டபோது அதனை துர்ப்பிரயோசனப்படுத்தாமல் சுலபமாயும், சொற்பகாலத்திற் கற்றுக்கொள்ளக்கூடியதுமான நெருப்புப்பெட்டிகள் செய்யும் முறைமையும் மெழுகுவத்திகள் செய்யும் முறைமையும் கற்றுத் திரும்பியிருக்கிறார். அவர் தம் ஊர் சேருமுன்பு இந்நகரில் சில தினங்கள் தங்கினபடியால் அவர் அத்தேசம் சென்றதும், அவ்விடத்தில் அந்தத் தொழில்களைக் கற்றுக்கொள்ளப்பட்ட கஷ்டங்களும், செய்த முயற்சிகளும், அத்தேசத்தவர்கள் இவரை எவ்விதமாக நடத்தினார்களென்றதும் நம்நேயர்கள் தெரிந்துகொள்ளப் பிரியப்படுவார்களென்ற கருத்துடன் நம்மித்திரன் பிரதிநிதி அவருடன் சம்பாஷித்துவந்தார். அவரால் கொடுக்கப்பட்ட விபரங்கள் இதனடியில் காணப்பட்டிருக்கின்றன.

ஜப்பான்தேசம் செல்ல கொழும்புக்குப்போய் அத்துறைமுக மூலமாய் அடிக்கடி போகும் ஜர்மனி, பிராஞ்சு, இங்கிலீஷ் இத்தேசத்தவர்களுடைய கப்பல்களில் ஏதிலாவது ஒன்றில் ஏறிக்கொண்டால் 22 நாள் பிரயாணம்செய்து 23-வது நாள் ஜப்பான்தேசத்தில் **யோகஹாமா** வென்ற துறைமுகம் போய்ச்சேரலாம். அவ்விடத்திலிருந்து ஜப்பான் தீவுக்கு முக்கிய பட்டணமும், ராஜஸ்தானமுமான **டோக்கியோ** நகரம் 18மைல். இந்த 18 மைலும்போக ரெயில்பாதையும், சென்னையில் தெருத் தெருவாய்ப்போகும் மின்சார வண்டிகள்போன்ற மின்சார வண்டிகளுமுண்டு. இந்த நகரில் மூன்று மின்சார வண்டிகள் ஓட்டும் கம்பெனிகள் உண்டு. மூன்று கம்பெனியும் ஒன்றோடொன்று ஒற்றுமையாய் நகர் முழுமையும் 2,000 வண்டிகள் ஓடும்படி செய்திருக்கிறார்கள். அவ்விடத்தில் ஒரு மனிதன் ஓரிடம்விட்டு ஓரிடம்போகப் பிரியப்பட்டால் மின்சார வண்டிகளில் ஒன்றில் உட்கார்ந்துகொண்டு 5 ஸென் (Sen) (இது ஒரு நாணயம், 100 சென் கொண்டது ஒரு பென். ஒரு பென் யென்னும் நாணயம் நமது நாணயத்தில் ரூபா 1-10-0 க்கு சமானமாம்) கொடுத்து டிக்கட்டு பெற்றுக்கொண்டால் தான் கோரியவிடம் போகலாம். சென்னையில் இருப்பதுபோல் இடத்தினுடைய தொலைவுக்குத் தக்கபடி சார்ஜ் ஏற்படுத்தாமல் கொஞ்சம் தொலைவுபோனாலும் சரி அதிக தொலைவுபோனாலும்சரி ஒரேசார்ஜ்என்பதாய் வைத்திருக்கிறார்கள். இந்தடோக்கியோ நகரமானது 20 சதுரமைல் இருக்கலாம். இந்த நகர் முழுமையுமுள்ள வீடுகள் இரண்டு அடுக்குள்ள வீடுகளாயிருந்தாலும் அவைகள் மிகவும் தாழ்வானது. சென்னையில் ஒரு அடுக்கு வீட்டின் உயர்வைவிட அவ்விடத்தில் இரண்டு அடுக்குவீடுகள் உயரத்தில் கம்மியாயிருக்கும். மேலும், அநேக வீடுகள் மரத்தினாலேயே கட்டப்பட்டிருப்பதால் அவர்கள் நெருப்பு என்றால் திகில்படுவார்கள். வீட்டுச்சமையலுக்கும் விறகுவைத்து எரியச்செய்தால் எங்கு வீடு தீப்பற்றிக்கொள்ளுமோவென்று பயந்து நிலக்கரியைக்கொண்டே யாவத்து வீட்டுவேலைகளையும் நடத்திக்கொள்ளுகிறார்கள். ஜப்பானியர்கள் மிகவும் பெருங்குணமுடையவர்கள். அயல்நாட்டார் அவர்கள் தேசம் வந்திறங்கினால் ஜப்பானிய பாஷை தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கக்கண்டால் கூலியாள் உள்பட மிகவும் பட்சமாய் அவர்களை இத்தேசத்த



வர்களென்பதாய் தெரிந்துகொண்டு ரிக்ஷா வண்டியில் ஏற்றிவைத்துக்கொண்டு அத்தேசத்தவர்கள் எங்கு சாதாரணமாய் வசிக்கிறார்களோ அவ்விடத்துக்குக் கொண்டுபோய்விட்டு பின்பு தனக்குண்டான கூலியைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இவ்விதமே ராமாராவ் சென்ற காலத்தில் தமக்கு ஜப்பானிய பாஷை தெரியாமல் இந்தவிடம் போகவேண்டுமென்பதாய்ச் சொல்லமுடியாதவராயிருந்த காலத்தில் ஜப்பானிய ரிக்ஷா வண்டிக்காரர்கள் இவரையும், இவருடைய சாமான்களையும் வண்டியில் வைத்துக்கொண்டு அங்கு ஒரு விடத்திலுள்ள "இந்தியன்" ஹோம், [இந்தியர் வசிக்குமிடம்] அழைத்துச் சென்று பின்பு தங்களுக்குண்டான கூலியைப் பெற்றுக்கொண்டார்கள். "இந்தியன் ஹோம்" என்றவிடத்தில் இந்தியாவிலிருந்து கைத்தொழில் கற்றுக்கொள்ளவோ அல்லது வேறு அலுவலாகவோ அத்தேசம் சென்றவர்கள் மாத்திரம் வசிக்கிறார்கள். அங்கிருந்தவர்களுடன் மிஸ்டர் ராமாராவ் சில தினங்கள் தங்கியிருந்து பினபு அந்நகரில் இந்திய ஜப்பானியச் சங்கம் (Indo Japanese Association) என்றதோர் சங்கம் இருக்கிறதாகவும், அவ்விடத்தில் அச்சங்கத்தவர் சிபார்சுபெற்றால் தொழிற்சாலைகளில் சுலபமாய் தொழில் கற்றுக்கொடுப்பார்களென்றும் தெரிந்துகொண்டு அங்குள்ள காரியதரிசியையும் கண்டார். இந்தச் சங்கமானது ஒரு வர்த்தகச் சங்கமென்றும், அதில் சேர்ந்தவர்களில் அநேகர் வர்த்தகர்களென்றும் இவருக்குத் தெரியவந்தது. இந்தச் சங்கத்தின் முக்கிய கருத்தென்னவெனில், இந்தியாவுக்கு என்ன சரக்குத் தேவை, அவ்விடத்தில் எந்தச் சரக்கு சொற்ப விலைக்குக் கிடைக்கும், அவைகளை எப்படிச்செய்து இந்தியாவுக்கு அனுப்பினால் சுலபமாய் விற்கப்படுமென்னும் வர்த்தக விஷயங்களை ஆலோசிப்பதே. இந்தச் சங்கத்துக்கு இந்தியர்களுக்கு ஒரு காரியதரிசியும், ஜப்பானியர்களுக்கு ஒரு காரியதரிசியும் ஆக இருவருண்டு. இந்தியர் பக்கத்து காரியதரிசியாகிய மிஸ்டர் போத்தர் என்பவர் புனாவைச் சேர்ந்தவர். இவர் இந்தியாவிலேயே B. A. பட்டம்பெற்று ஜப்பான் சென்று டோக்கியோ நகரிலுள்ள ரசாயன கலாசாலையில் சேர்ந்து மூன்றுவருஷம் படித்து அங்கும் பட்டம்பெற்று இப்பொழுது ஸல்பூரிக்ஆஸிட் செய்யும் முறையைக் கற்றுக்கொண்டிருக்கிறார். இவருடைய படிப்பு அடுத்த செப்டெம்பர் மாத

த்தில் முடிந்து இந்தியாவுக்குத் திரும்புவார். இவர் மகா உத்தமகுணங்கள் பொருந்தினவராம். இந்தியர்கள் அங்குச்சென்று கைத்தொழில் கற்றுக்கொள்ள உதவிகேட்க யார் வந்தபோதிலும், அப்படிப்பட்டவருடன் மிக்க அன்புடன் பேசி அவர் அத்தேசத்தில் இருக்குமளவும் தேவையான உதவிகளைச்செய்யத் தயாராகவிருக்கிறாராம். மிஸ்டர் போத்தர் ஒத்தாசையைப்பெற்ற மிஸ்டர் ராமாராவ் ஐவாகி குளாஸ் பாக்டரி 41, கிகுகாவாசோ (Ki-Ku-Ga-Va-Cho.) தெரு, டோகியோ சேர்ந்து, கொஞ்சம் கொஞ்சமாய், கண்ணாடிகள் செய்யும் முறைகளைக் கற்றுக்கொள்ள ஆரம்பஞ்செய்தார். என்ன எஜமான் உத்தரவு கொடுத்தபோதிலும் அங்கு தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள் வேலையின் மர்மத்தை சுலபத்தில் சொல்லுகிறார்களா? இல்லை. அவர்களுக்கு நல்ல வார்த்தைகள் சொல்லி அவர்கள் இட்ட வேலையைச் செய்துகொண்டு அவர்களுக்கு லஞ்சம் கொடுத்துக்கொண்டு வந்தால் புதிதான ஒரு விதம் கண்ணாடி செய்யும்போது கிட்டத்தில் வைத்துக்கொண்டு மர்மத்தைச் சொல்லிக்கொடுப்பார்களாம். நூதனமாய் ஒரு விதமான வேலைகளும் தொழிற்சாலையிற் செய்யப்படாத காலத்தில், மிஸ்டர் ராமாராவ் மெழுகுவத்தி, நெருப்புப்பெட்டி இவைகள் செய்யும் சாலைகளுக்குச் சென்று அங்கும் அவ்விதமே வேலையாட்களோடு வேலையாட்களாய் வேலைசெய்து அவைகளையும் கற்றுக்கொண்டார். நெருப்புப்பெட்டி செய்வதில் சாதாரண கந்தகக்குச்சி (Sulphur Matches) ஸேப்டி குச்சி (Safety Matches) இது இரண்டை மாத்திரம் செய்யும் திறமையைப் பெற்றார். இன்னும் மத்தாப்புக்குச்சி, பூவத்தி என்று சொல்லப்படும் நெருப்புக்குச்சிகளைச்செய்யக் கற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் அவைகள் செய்யப்படும் முறையை எழுதிக்கொண்டிருக்கிறார்; இன்னும் கொஞ்சகாலத்துக்கெல்லாம் அவைகளையும் செய்துபார்ப்பார். நெருப்புக்குச்சிக்கு வேணுமான நாரில்லாத மரங்கள் சில சில விடங்களில் சென்னை ராஜதானியிலே கிடைக்கிறதென்றும், அம்மரங்களை இன்னம் பயிர் செய்தால் மிக்க லாபமுண்டென்றும் மிஸ்டர் ராமாராவ் தெரிவிக்கிறார். இவ்விதமே மெழுகுவத்தியைச செய்வதையும கற்றுக்கொண்டிருக்கிறார். மெழுகுவத்தியில் உள்ளிருக்கும் திரி அல்லது நாடா மாத்திரம் இதுவரையில் இந்தியாவிலும் செய்யப்படுகிறதில்லை. அயல் தேசங்க



ளிலிருந்தும் கொண்டுவரப்படுகிறதில்லை. ஏனெனில் அவைகளுக்கு உபயோகம் இங்கில்லாதிருந்தபடியால் கொண்டுவரப்படவில்லை. மிஸ்டர் ராமாராவே அந்த நாடா செய்யும் இயந்திரம் ஒன்று தன்னுடன் ஜப்பானிலிருந்து கொண்டுவந்திருக்கிறார். அதன் மூலமாய் தனக்கு வேண்டிய நாடாவை தற்காலம் செய்துகொண்டு தம்முடைய முயற்சி தக்க மனிதர்களால் உதவி பெறப்பெற விருத்தி செய்யப்படுமாயின் அதுமாதிரி இன்னும் அநேக இயந்திரங்கள் வரவழைத்து அதிக வத்திகளைச்செய்ய ஆரம்பிப்பார். ஆனால் முதல் முதலில் அவர் கண்ணாடி வேலையில் முயற்சி செய்யப்போகிறார் என்பது நிச்சயம். அந்தத் தொழிலுக்கு வேண்டிய முக்கிய சாமான்கள் இந்தியாவில் எல்லாபாகத்திலும் கிடைப்பதனாலும், கண்ணாடி சாமான்கள் சாதாரணமாய் யாவராலும் உபயோகிக்கப்படுகிறதாகையாலும், மேலும் இவைகள் அடிக்கடி உடைந்துபோகக்கூடியன வாகையாலும், இந்தக் கைத்தொழிலை எவ்வளவுபேர்கள் கற்றுக்கொண்டு பட்டணத்துக்குப் பட்டணம் கிராமத்துக்குக்கிராமம் சாலைகள் ஏற்படுத்தியபோதிலும் அவைகள் அவ்வளவுக்கும் பூராவேலையிருக்கும். இந்தத் தொழிலுக்கு மிஸ்டர் ராமாராவ் சொல்லுகிறபடி அதிக மூலதனமும் விஸ்தாரமான பூமியும் வேண்டியதில்லை. ஜப்பானில் ஒருவர் இதைக் கற்றுக்கொண்டால், ஒரு வீட்டில் முன்பக்கத்தில் அவர்கள் வசித்துக்கொண்டு பின்பக்கத்தில் கண்ணாடி வார்த்துக்கொண்டு வியாபாரம்செய்து ஜீவித்து வருவார்களாம். அவ்வளவு சுலபமான கைத்தொழிலை விருத்திசெய்வது அதிமுக்கியமாகும். இவர்கள் கற்றுக்கொண்ட கண்ணாடித்தொழிற்சாலையில் டம்ளர்கள், விளக்குடோம்கள், நிடார்ட்ஸ், பிரைஸ்க்ன், டியூப்ஸ், காஸ்டியூப்ஸ், பீகர்ஸ், ஜாடிகள், பொனல்கள், பூதக்கண்ணாடிகள், வயன் கிளாஸ், பெக்ஸ் ஆகிய இவைபோன்ற முதல் தரமான சாமான்கள் செய்கிறார்கள். மேலும் இந்த ஐவாகி கிளாஸ் பாக்டரி கவர்ன்மெண்டு கண்டிராக்டர்களாம். இதில் முக்கியமாய் கவனிக்கவேண்டியது யாதெனில் மிஸ்டர் ராமாராவ் கற்றுக்கொண்டதோடு நிற்காமல் அவைகளுக்கு கிரயம்போடும்விதத்தையும் தொழிற்சாலைக் கணக்குகள் வைக்கும் விதத்தையும் லாபம் நஷ்டம் கண்டுபிடிக்கும் விதத்தையும் கற்றுக்கொண்டு வந்திருக்கிறார். இவைகளை இவர் தெரிந்துகொள்ளாமலிருந்தால் இவர் தொழில்கற்றதும்

பயனில்லாமல் போயிருக்கும். ஜப்பான்தேச முழுமையும் உள்ள தொழிற்சாலைகள் காலை 6-மணி தொடங்கி, மாலை 6-மணி வரையில் வேலை செய்கின்றனவாம். மத்தியில் அரைமணி நேரம் சாப்பாட்டுக்காகக் கொடுக்கப்படுகிறதாம். இந்தத் தொழிற்சாலைகளில் இந்தியர்கள் தொழில் கற்றுக்கொள்ளப்போனால் அவர்களும் தொழிலாளிகளைப்போலவே காலையில் 6-மணிக்குச் சென்று மற்றவர்களைப்போலவே மாலையில் 6-மணிவரையில் வேலைசெய்யவேணுமாம்.

சு-மி-ன்.

---

# சமாசாரக்கொத்து.

---

சென்னைச் சர்வகலாசாலை கான்வோகேஷன் அடுத்த மார்ச்சு௴ 21௳ நடக்கும்.

* * *

திருநெல்வேலி முனிஸிபல் சேர்மென் ஆக ஹானரபின் மிஸ்டர் குருசாமி ஐயர் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்களென்று மிகவும் சந்தோஷிக்கின்றோம்.

* * *

**வெளுக்கும் இயந்திரம்:**—துணிவெளுப்பதற்கு ஒருவகை நூதனமான இவ்வியந்திரம் ஒருமணி நேரத்துக்குள் 20 குட்டைகளை வெளுத்துக் கஞ்சிபோட்டு மெருகேற்றி விடுகின்றதாம்.

* * *

**ரஞ்ஜீட்ஸிங்ஜி அரசர்:**—இவர் பம்பாய் இராஜதானியிலுள்ள ஜம்நகர் ராஜ்யத்துக்கு அதிபர் என்று கவரண்மெண்டாரால் வெளியிடப்பட்டிருக்கின்றது. சீக்கியர்களுக்கும் பொதுவாய் இந்துக்களுக்குமே இது மிகவும் சந்தோஷ சமாசாரமாகும்.

* * *

**ஒருபெருங்கொடை:**—அயோத்தி வாசியாகிய ராஜாநான்ஷாடன்கான் என்னும் கனவான் ஒரு பெண்பிள்ளை உபாத்தியாயர் கலாசாலைக் கட்டிடம்



கட்டுவதற்காக ரூ. 30,000 நன்கொடை கொடுத்திருப்பதையறிய மிகவும் சந்தோஷிக்கிறோம்.

* * *

பெர்லின் என்னும் பெயருள்ள கிரேட் ஈஸ்டர்ன் ரெயில்வே ஸ்டீமர் ஹார்விச்சிலிருந்து ஹூக் ஆப் ஆலண்டுக்குப் போகும் வழியில் தாழ்ந்துவிட்டது. கப்பலிலிருந்த சுமார் 141 பேர்கள் மரண மடைந்தார்கள். இவர்களுள் 91 பேர்கள் பிரயாணிகளாம்.

* * *

**பருத்தி:**—சென்னை மாகாணத்தில் சென்ற ஜனவரி மாதம் முடிவுவரை பருத்தி விதைக்கப்பட்ட நிலங்களின் விஸ்தீரணம் 15 லக்ஷத்து 44 ஆயிரம் ஏக்கரா வென்றும் பொதுவாய்ப் பருத்திமகசூல் முக்கால் விளைவுக்கு மேல்கண்டிருப்பதாயும் தெரிவிக்கப்படுகின்றது.

* * *

ருஷியசக்கரவர்த்தி சீட்டு ஆட்டத்தில் மிகச்சமர்த்தராம். 1100 பவுன் பெறும்படியான 1200 கட்டுச் சீட்டுகளைச் சென்ற வருத்தில் உபயோகித்தனராம். உலகத்தில் அதிகமாய்ச் சீட்டாடுகிறவர்கள் ருஷியர்களே. இதற்காக வருஷத்தில் இரண்டுலக்ஷம் பவுன் செலவழிக்கிறார்களாம்.

* * *

வருகிற டிசம்பர் மாதத்தில் எடின்பரோ நகரில் ஹிந்துதேச சம்பந்தமான ஒரு பொருட்காட்சிசாலை கூடும். இதன்நோக்கம் இந்தியாவிலிருந்து அந்நகருக்குச்சென்று கல்விகற்கும் மாணவர்களுக்கு ஓர் வாசஸ்தலம் ஏற்படுத்துவதற்கு குறைந்தது 5000 பவுன் சேகரிப்பதற்காகவே. இவ்விஷயத்தில் பிரியமுள்ளவர்கள் உதவிசெய்தல் நலமே.

* * *

மிஸ்டர் ராக்பெலர் என்ற ஓர் அமெரிக்க கோடீஸ்வரர் அமெரிக்கர்களின் கல்வியபிவிர்த்திக்காக 60 லக்ஷம் பவுன் நன்கொடையளித்திருக்கிறாராம். மொத்தத்தில் இவ்விஷயமாய் இதுவரை அவர் கொடுத்திருப்பது 85 லக்ஷம் பவுன். இத்தகைய வள்ளல் நம் இந்தியாவுக்கு இரண்டொருவர் ஏற்பட்டால் எவ்வளவோ சாதகமாக இருக்குமே.

**மைசூர் மகாராஜாவின் குருபக்தி:**—மைசூர் மகாராஜா அவர்கள் கல்கத்தா முதலான இடங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் போய்த் தம் தேசத்துக்குத் திரும்பி வந்தபிறகு தாமும், தம் தாயாரும், தம் தம்பியும் மகாராணியார் சகிதமாய் ஸ்ரிங்கேரி மடத்துக்குச் சென்று ஆசார்ய தரிசனை செய்து ஆசிர்வாதம் பெற்றுத் திரும்பினார்களாம். பூர்வீக அரசர்களைப்போல் இவ்வரசரிடத்தும் அவ் வாசாரியபக்தி விளங்குவது பெருங்குணமே.

*   *   *

**பிராஞ்சு கவர்ன்மேன்டாரின் காருண்யம்:**—மதகாஸ்கர் தீவுக்குப் பிழைக்கப்போகும் இந்திய கூலிகளுக்கு அத்தீவின் கவர்னர் அவர்களுடைய கோரிக்கைப்படி தீர்வையில்லாமல் நிலமும் அவரவர் முயற்சியை ஆரம்பத்தில் பலப்படுத்திக் கொள்ளப் போதுமான பொருளும் உதவிசெய்வதாகவும் இதுவிஷயமாய்ப் பிராஞ்சு கவர்ண்மென்டார் இந்தியா கவரண்மென்டாருக்கு எழுதி ஒழுங்கு செய்யப்போவதாகவும் தெரியவருகிறது.

*   *   *

லாகூரில் பிரசுரமாகும் **பஞ்சாபி** என்ற பத்திரிகையின் பேரில் அந்த மாகாணக் கவரண்மென்டார் ராஜத்துவேஷக் குற்றஞ்சாட்டி டிஸ்திரிக்ட் மாஜிஸ்டிரேட் முன்பாக விசாரணை நடத்திப் பத்திராசிரியருக்கு 2வருஷம் கடுங்காவலும் 1000 ரூ. அபராதமும் உதவிப்பத்திராதிபருக்கு 6 மாதக்கடுங்காவலும் 200ரூ. அபராதமும் விதிக்கப்பட்டது. உடனே ஜாமீனுக்கு மனுச்செய்து இருவரும் ஜாமீன்பேரில் விடுபட்டார்கள். ஜில்லாகோர்ட்டில் அப்பீல் நடத்தப்படும். இதைப்பற்றிப் பின் எழுதுவோம்.

*   *   *

**கல்கத்தாவில் சென்னைபார்சபை:**—கல்கத்தா நகரத்தில் வசிக்கும் சென்னை மாகாண சுதேசிகள் கூடி ஒரு சபை ஸ்தாபிக்கிறார்கள் சென்னையிலிருந்து போய் கல்கத்தாவிலும் அதற்கயல் இடங்களிலும் வசிக்கும் உத்தியோகஸ்தர்கள் வியாபாரிகள் முதலிய பலர்க்குள்ளும் ஒற்றுமையுண்டாக்கவேண்டுமென்பது இச்சபையின் நோக்கமென்று சொல்லப்படுகின்றது. இதற்கு மிஸ்டர் என். ஆர். ஐயாசாமி நாயகரெனவும் மெஸ்ஸர்ஸ் எஸ். ஏ. ராஜா வீ. ஏ. எஸ் சர்மா என்பவர்கள் காரியதரிசி எனவும் தெரிவிக்கப்படுகின்றது சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் போவோர்கள் இச்சபையாரிடமிருந்து வேண்டிய சௌகரியங்களைப் பெறலாம். அந்நிய தேசங்களில் போய்த் தனிமையாய் இருப்பவர்களுக்கு இவ்வைக்யம் மிக்க பலனை உண்டு பண்ணும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.



**பலபம் (சாக்) விளைவு:**—புதுக்கோட்டை சமஸ்தானம் ஆலங்குடிக்கு 6மைல் தூரத்திலிருக்கும் வாராப்பூருக்குப் பக்கத்தில் ஓரிடத்தில் உண்டாகிறது. அதை இப்போது வீடுகளுக்கு வெள்ளையடிப்பதற்கும் கோலம் போடவும் உபயோகிக்கிறார்கள். ஆனால் புதுக்கோட்டை சர்க்கார் அந்த மண்ணை எடுத்து உபயோகிப்பதற்கு வரி யேற்படுத்த ஆலோசிப்பதாய்த் தெரியவருகிறது. தகுந்த புத்திசாலியாய்ச் சொற்ப முதலுடையவர்களும் மேற்படி ஸ்தலத்தை வருஷக்கணக்கில் குத்தகை எடுத்துக்கொண்டு கறுப்புப்பலகைகளில் எழுதுவதற்காகும்படி அரைத்துச் சுத்தப்படுத்தி வியாபாரம் செய்தால் பயனை அளிப்பதில் ஆக்ஷேபணையில்லை. ஒரு மண்ணரைப்பு இயந்திரம் மட்டும் இருந்தால் போதும். மற்ற வசதிகள் அங்கு ஏராளமாயுண்டு. என்று ஒரு நிருபர் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு எழுதுகிறார். சுதேசக்கைத்தொழிலபிமானிகள் எவரேனும் இம்முயற்சியைக் கைக்கொள்ளல் தேசோபகாரமாகும்.

*   *   *

**திருப்பதிதேவஸ்தானம் அப்பீல்** மேற்படி பிரபல தேவஸ்தானத்திற்கு மகந்து என்பவர் தர்மகர்த்தா. அவர் தேவஸ்தானப்பணத்தை மனம்போன போக்கெல்லாம் செலவிட்டு வந்ததால் ஜனங்கள் ஒன்றுகூடி ஷை மகந்து பேரில் சித்தூர் ஜில்லாகோர்ட்டில் வழக்குக்கொண்டு வந்தார்கள். ஷை கோர்ட்டு ஜட்ஜாயிருந்த மிஸ்டர் மானவேத ராஜாவால் மகந்துவுக்கு மேல்விசாரணையாக ஐந்து பேர்சேர்ந்த கமிட்டி யொன்று யேற்பாடு செய்யப்பட்டது. அதற்கு மேல் மகந்து சென்னை ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார். ஹைகோர்ட்டார் ஷை கமிட்டி நியமனத்தை மாற்றி ஷை மகந்துவுடன் சம்பளம் பெறும் மற்றொரு டிரஸ்டியை ஏற்படுத்தினதோடு இவ்விருவரில் விவாதமுண்டானபோது சமரசப்படுத்த பெரிய ஜீயரவர்களை மத்தியஸ்தராகவும் வைத்து தேவஸ்தான வரும்படியில் செலவுபோக மீதிப்பணத்தைக் கொண்டு ஸம்ஸ்கிருத கலாசாலை ஏற்பாடு முதலிய சில பொது ஜனோபகாரங்களை நடாத்தி வரவும் தீர்மானஞ்செய்தார்கள். மகந்து அதன்மேல் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்தார். அவ் அப்பீலில் ஹைகோர்டு தீர்மானத்தை நிவிர்த்தி செய்து ஷை தேவஸ்தானப் பொக்கிஷமானது ஷை ஜில்லாகோர்ட்டார் வசத்தில் இருக்கவேண்டியதென்றும் ஷை தொகைகளுக்கு வரவுசெலவு ஜாப்தா போட்டுக்கொடுத்து மகந்து செலவு செய்து வரவேண்டியதென்றும் அக்கிரமச் செலவுகளை ஷை ஜில்லாகோர்ட்டார் ஆக்ஷேபிக்கலாம் என்றும் தீர்ப்பாகி விட்டது. நம்மவர் தருமங்களைச்சரியாக நடத்தாத குறைவால் கோர்ட்டார் விசாரணை ஏற்பட இடமாகிறது.

பத்திராதிபர்.

## சுயராஜ்யம்.

இந்தியாவின் சுயவாட்சியைப்பற்றி ஆர். ரெகுநாதராவவர்களின் அபிப்பிராயச் சுருக்கம்:—

(1) இந்தியாவின் ஒவ்வொரு மாகாணத்திற்கும் அல்லது ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொருஆங்கிலேய ராஜதந்திரி (Statesman) இந்திய சக்கரவர்த்தியால் நியமிககப்படவேண்டும்.

(2) அவருடைய உதவிக்காக ஒரு ஆலோசனைச் சபையார் நியமிக்கப்படவேண்டும். இந்திய ஜனத்தொகையின் 5-ல் ஒருபங்கு மகமதியர்களாயிருக்கிறார்கள். மற்ற சில்லறை ஜாதியார்களெல்லாரும் அவ்வளவுக்குக்கூட வரவில்லை.

(3) ஆனதினால் ஆலோசனைச் சபையில் மகமதிய பிரதிநிதி ஒருவரும், இந்துப் பிரதிநிதிகள் நால்வரும், கிறிஸ்தவபிரதிநிதியொருவரும், ஆங்கிலப் பிரதிநிதியொருவரும், இஷ்டப்படி மதத்தைத்தழுவுகிறவர்களுக்கு ஒரு பிரதிநிதியுமாக 8பேர்கள் நியமிக்கப்படவேண்டும்.

(4) இப்பிரதிநிதிகளொவ்வொருவரும் தத்தம் இனத்தார்களால் சில கொள்கைகளையனுசரித்து தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

(5) இந்துப் பிரதிநிதிகள் நால்வருள் ஒருவர் ஜமீன்தார்களையும், இன்னொருவர் குடிகளையும், மற்றொருவர் வியாபாரிகளையும், வேறொருவர் வேலையினின்றும் நீங்கி பென்ஷன் பெற்றிருக்கிறவர்களையும், தெரியப்படுத்தவேண்டும்.

(6) இந்த எண்மரும் ஒன்றுசேர்ந்தாவது அல்லதுதனித்தனியாவது கவர்ணருடன் ஆலோசனைசெய்து, அவருக்கு நியாயமாகத் தோன்றுகிற வழியில் செல்லும்படி விடவேண்டும்.

(7) யுத்த விஷயமான சமாசாரங்களும், ராஜாங்கவிஷயமான பெரிய சமாசாரங்களும் அவர்களுடைய ஆலோசனைக்குள் வரக்கூடாது.

(8) ஆலோசனைச் சபையில் பெரும்பகுதியோருடையவும் கவர்ணருடைய அபிப்பிராயமும் எவ்விஷயத்தில் ஒத்திருக்கிறதோ அதுதான் கவர்ண்மெண்டு தீர்மானம்.



(9) ஆலோசனைச் சபையாரின் பெரும்பகுதியாருடைய அபிப்பிராயத்துக்கு கவர்ணருடைய அபிப்பிராயம் வேறுபட்டு அது அவசியமென்று தோன்றினால் அவர் அபிப்பிராயத்துக்கு காரணங்களைக்காட்டி இந்திய காரியதரிசியின் பரிசீலனைக்கு அனுப்பவேண்டும்.

(10) ஏதாவது ஒருவிஷயத்தில் முடிவுக்குவர தாமதம் ஏற்பட்டால் அதைப்பற்றி மேலானஅதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

(11) இவ்விதம் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளொவ்வொருவரும் மூன்று வருடத்திற்கு ஷை ஸ்தானத்தை வகிப்பார்கள். மூன்று வருடங்கழிந்தபின் எலெக்ஷனில் அவர்களையே பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கலாம்.

(12) இப்பிரதிநிதிகள்ஒவ்வொருவருக்கும் மாதம் 1-க்கு 3000 ரூபாய் சம்பளம் கொடுக்கவேண்டும். தொன்றுதொட்டு கவர்ண்மெண்டு சாங்ஷன்கள் கவர்ண்மெண்டுக்கு ஜவாப்தாரியாயுள்ள செக்ரட்டெரிகளால் கொடுக்கப்படலாம்.

(13) யோஜித்துச் செய்யவேண்டிய ஒவ்வொரு விஷயங்களும் ஆலோசனைச் சபையாரின் அனுமதியின்பேரிலே நடத்தப்படவேண்டும்.

(14) காபினெட் சிஸ்டத்தின்படி ஆலோசனைச் சபையிலுள்ள எவராவது கவர்ண்மெண்டுக்காக பிரதிநிதியாய்ப்பேச முன்வரக்கூடாது.

(15) இந்த ஆலொசனைச்சபையாருக்கு வந்தனோபசாரம் செய்யும்பொருட்டு வீண்செலவுக்காதாரமான வெடிகள் பீரங்கிக் குண்டுகள் முதலியவைகளால் மரியாதை செய்யவேண்டியதில்லை.

(16) இவ்விதம் அனுசரிக்கப்படும் ஒவ்வொரு விஷயங்களுக்கும் கவர்ணர்தான் ஜவாப்தாரியாயிருப்பார்.

இதைத்தான் சுயராஜ்யமென்று சொல்லலாம். ஒருவருக்குமே

ற்பட்ட எவ்வித ராஜாங்கப்பிரிவிலும் குறைந்தபக்ஷம் ஒரு இந்தியராவது இருக்கவேண்டும்.

சிவில் சர்விஸின் நிர்வாகத்தினின்றும் நீதியதிகாரத்தைப் பிரிக்கவேண்டும்.

நீதியதிகாரம் யாவும் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளின் பரிசீலனைக்கடங்கினதாயும், நிர்வாகம், எக்ஸிகியூட்டிவ் கவர்ன்மெண்டுக்குட்பட்டதாயுமிருக்கவேண்டும். பாத்தியா பாத்தியதைகள் ஹைகோர்ட்டுக்கடங்கின கோர்ட்டுகளின் அதிகாரத்திற்குட்பட்டிருக்கவேண்டும்.

வரிவிஷயம் கவர்னர் ஆலோசனைச்சபையில் தீர்மானிக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு வருடத்திலும் வரக்கூடிய மனுக்களை விஜாரணைசெய்து அவ்வருடக்கடைசியில் பாக்கிவைத்துக்கொள்ளாமல் முடிவுசெய்துவிடவேண்டும்.

வருடக்கடைசியின் இரண்டு மாதங்களிலும் மனுக்களை வாங்கக்கூடாது.

மனுதார்களின் ஒவ்வொருவருடைய விஷயங்களைப்பற்றியும் முடிவுசெய்யுமுன் அவர்களை நேரிலாவது, பிரதிநிதிகள் மூலமாயாவது விசாரணைசெய்து முடிவுசொல்லவேண்டும்.

ஒவ்வொரு கிராமக் கேசுகளையும் ஆங்காங்கே விசாரிக்கவேண்டும். அப்படித்தீர்மானிக்கப்பட்ட ஒவ்வொரு தீர்மானங்களுக்கும் கட்சிக்காரர்கள் நகல்கேட்டாலும் அல்லது கேட்காமலிருந்தாலும் ஸ்டாம்பு காகிதங்களிலாவது அல்லது சாதாரண காகிதங்களிலாவது நகல் கொடுக்கவேண்டும். அப்படித் தீர்மானிக்கப்பட்ட ஒவ்வொரு ஜட்ஜ்மெண்டுகளுக்கும் சரியான காரணங்களும், எவ்வளவு காலத்தில் அப்பீல் செய்யவேணுமென்றும் யாருக்கு அப்பீல் செய்யவேணுமென்றும் கண்டிருக்கவேண்டும்.

சுதேசாபிமானி.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 19 AUG 1907 MADRAS.
OFFICE OF REGIS... 16 AUG 1907 MADURA.

உ

குமரன் துணை.

# விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 6 } 1907ஞு மார்ச்சு எப்பிரல் மே ஜூன். { பகுதி 3, 4, 5, 6,

## தென்னாட்டுக்கு ஒரு நாஷனல் காலேஜ்.

நம் சென்னை ராஜதானியில் வித்தியா விஷயமான சீர்திருத்தங்கள் ஓயாமல் நடந்துகொண்டு வருகின்றன. அவைகளால் பெற்றோர்களும் பிள்ளைகளும் திகிலடைவதுமன்றி உபாத்தியாயர்களும் மானேஜர்களும் மிக்க கவலை கொள்ளுகின்றனர். வித்தியா இலாகாதார் பிரதம கல்வியைப்பற்றியும் ஸெகண்டெரி கல்வியைப்பற்றியும் பலவிதமான சட்டதிட்டங்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். சர்வகலாசாலைச் சங்கத்தார் உயர்தரக்கல்வி விஷயமான பலசீர்திருத்தங்களைச் செய்யக் கங்கணங்கட்டிக்கொண்டு சட்டதிட்டங்கள் ஏற்படுத்திவிட்டனர். இச்சட்டங்களால் நெடுநாளாக நல்ல வேலைகள் செய்த சில கல்லூரிகள் அடைபட நேர்ந்தது. இன்னும் எத்தனை கல்லூரிகள் அடைபடப்போகின்றனவோ அறியோம். ஸ்பார்டன் தேசத்தார் செய்துவந்த வண்ணம் புஷ்டியும் திடனுமற்ற குழவிகளைக்கொன்றுவிடுவதே உத்தமம் என்று நினைத்துச் சீர்திருத்தம் செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள் போலும். இவ்விதம் செய்வது ஒருவாறு நலந்தானென்றாலும் சிசுஹத்தியென்ற கொடிய பாவத்தை உத்தேசிக்குங்கால் இது நலமாகுமோ? இனி ஆகவேண்டிய வழிவகைகளைப்பற்றிச் சிந்திப்பதே நம் கடன். தேசத்தின் நிலைமைக்குத்தக்க வண்ணம் சட்டங்கள் ஏற்படுத்தாமல் சட்டங்களுக்குத்தக்கவண்ணம் தே

பிடித்த ஒருவன் மிகவும் அபாயமானவன். பிரஜைகள் இதனால் அரசனது உயர்ந்த அந்தஸ்தை மிகக் குறைவாக நினைப்பார்கள். சக்கரவர்த்தியைச் சிம்மாசனத்தினின்று கையைப்பிடித்து இழுத்துவிட்டவனைப்பாசாங்குடன் அதன்முன் மண்டியிட்டுப் பணியும்படி விட்டிருப்பது ஆச்சரியமே." என்று வினயத்தோடு கூறினாள் ஜிஹாங்கீரோ ஜகத்சோதி முகமத்துக்குச்செய்த கொடுஞ்செயல்களை நன்கு அறிந்தவன். அக்காலத்தும் முகமத் கொடுங்கோல் செலுத்தாமல் கருணைபாராட்டி நடந்ததையும் நன்கு அறிவான். ஆகையால் ஜகத்சோதியின் மொழிகள் அவன் காதுக்கு நாராசம் காய்ச்சிவிட்டது போலிருந்தன. அதனால் அவன் அவளை சும்மாவிரு என்று கடிந்து கட்டளையிட்டனன்.

அதற்கு அவள் சிறிதும் மறுமொழி பகராவிடினும் தன் சதியோசனையை மட்டும் நீக்கவில்லை. சிறிதுநாள்களுக்கெல்லாம் முகமத்தைக் கொல்வதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவந்தனள். இவைகளையறிந்து முகமத் இரகசியமாய் அவ்விடம்விட்டு நீங்கினான். அவனைப் பிடித்துவரும்படி ஜகத்சோதி ஏவலாட்களை கட்டளையிட்டனள்.

தெய்வாதீனமாய் அவனோ தப்பித்துக்கொண்டான்! சின்னாட்களுக்குமுன் சதுரங்கசேனைகளைச் சம்பிரமத்துடன்நடத்தியவெற்றிவீரன் இச்சமயம் யாதொரு வேலைக்காரனுமின்றித் தனிமையாய்ச் செல்லலாயிற்று. பொருள் எல்லாம் வெறுத்துத் துறந்தவுடனே அவற்றை ஜகத்சோதி ஜாக்கிரதையாய்க் கைப்பற்றிக்கொண்டனள். முகமத் ஒரு இராஜாங்கத்துரோகியென்று இராஜ்யமெல்லாம் விளம்பரப்படுத்தினாள். அவனைப் பிடித்துக் கொணர்ந்தவனுக்குப் பரிசளிப்பதாகவும் கூறினாள். இக்கொடிய செய்கை சக்கரவர்த்தி, மந்திரிமுதலிய இருவர் மனத்துக்கும் சம்மதமாகவில்லை. தன் பெருஞ்சேனையை இழந்துதான் சிறைப்பட்டுத் தவிக்கும் காலத்தில் முகமத் தனக்குக்காட்டிய அன்பை அமைச்சன் அணுவளவும் மறக்கவில்லை. தன் தயாவிலாசத்தால் சிறையினின்றும் நீக்கிச் சர்வசுவாதீனத்தையும் ஜகத்சோதிக்குக்கொடுத்த தளகர்த்தன் இப்பொழுது சிறிதும் நன்றியும் இரக்கமுமின்றி ஊரூராய் வனவிலங்குபோல் அவள்



ஏவலால் துரத்தப்படுவதைக்குறித்து நினைக்கநினைக்க அமைச்சனுக்கு ஆற்றொணாத் துக்கமுண்டாயிற்று. முகமத்தின் கம்பீரகுணம் அமைச்சனுக்கு நன்றாய்த்தெரியும். அக்காலத்துத் தளகர்த்தரில் அவனுக்கு மேற்பட்டவனில்லையென்பதும் அவனைப்போன்ற சிறந்ததேசாபிமானியும் கிடையாதென்பதும் அவனுக்கு நன்றாய்த்தெரியும். ஜகத்சோதியின் அக்கிரமமான செய்கையாலேயே முகமத்துக்குக் கோபமூண்டது என்பதையும் அவன் நன்கு அறிந்தவன். அப்படிப்பட்ட உத்தம குணங்களோடு கூடிய ஒரு வீரனை இராஜாங்கத்தைவிட்டுத் துரத்துவது மகா கொடிய செய்கையென்று அவன் கருதினான். இது நிற்க ஜகத்ஜோதியின் ஆசைக்கோ அளவில்லை. அவ்வாசையை அதிகரிக்கும்படி விட்டுவிட்டால் அநர்த்தமாகவேமுடியும் என்பது திண்ணம். ஆதலால் அவன் அதனைச் சிறிது தடுக்க எண்ணங்கொண்டான். முகபத் தன்னுயிர் தப்பிப்பிழைக்க ஊரெல்லாம் ஓடித்திரிந்தாலும் அவன் சர்வாதிகாரியாயிருந்தகாலத்தில் அவனிடம் விளங்கிய கம்பீர குணங்கள் அவனைவிட்டுச் சிறிதும் நீங்கவில்லை.

ஆகையால் அவ்வமைச்சன் அவனுக்கு ஆளனுப்பி அவன்பால் தனக்குள்ள சிநேக வாஞ்சையைத் தெரிவித்து அவனைத் தன்னிடம் வரும்படி விரும்பினான். தன் புஜவலியன்றி வேறு யாதொரு துணையுமின்றி முகபத் குதிரைமீதேறி நானூறுமைல் கடந்து வந்து தன் அந்தரங்க நண்பனுடன் கலந்து பேசினான். நண்பன் நயமொழிகளையே நம்பி நாடிச்சென்றான். அமைச்சன் அச்சமயம் லாகூருக்கும் டில்லிக்கும் நடுவேயுள்ள ஓரிடத்தில் பாளையமிறங்கியிருந்தான் முகபத்தோ ஒருநாள் மாலைப்பொழுதில் அற்ப உடைதரித்து அமைச்சன் கூடாரத்துள் நுழைந்தான். அமைச்சன் அந்தப்புரத்துக்குச்செல்லும் வழியில் சென்று அங்கு நின்ற காவலாளியால் அமைச்சனைப்பார்க்கவந்த தன் விருப்பத்தை வெளியிட்டான். அக்காவலாளி நல்லவன் ஆகையால் உடனே அதனைத் தன் யஜமானனுக்குத்தெரிவிக்கவே அமைச்சனாகிய அலிப் உடனே ஓடிவந்து தன் நண்பனைக் கட்டித்தழுவிக் கரங்களால் உள்ளழைத்துச்சென்றான். முகபத் இருந்த கேவலமான நிலைமையைக்கண்ணுற்ற அலிப்பின்மனம் புழுங்கித் தன் நண்பன் கழுத்தைக் கட்டிக்கொண்டு புல்புலவெனக்

ண்ணீர் உகுத்தான். உத்தம நட்பின் பெருமையை என்னவென்று கூறுவேன். அது காசின் பெருமையைக் கனமெனக் கொள்ளாது அந்தஸ்தின் பெருமையை அணுவளவும் மதியாது சிங்காதனப்பெருமையைச் சிறிதும் பாராட்டாது அன்பே அதன்வடிவு. அன்பே அதன் முடிவு. அன்பே அதன் ஆதாரம். அன்பே அதன் ஆகாரம். அன்பே அதன் இலக்கணம். அன்பிலேயே அதன் ஐக்கியம். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ ஆகையால் தன் உத்தம நண்பனை ஏகாந்த இடத்துக்கு அழைத்துச்சென்று மனமகிழ்ந்து அளவளாவிக்கொண்டிருந்தான்.

பதியிழந்து படைத்த நிதியிழந்து பண்பான சேனையுமிழந்து பக்கிரிபோல் பரிதாபமான அந்நிலைமையிலும் முகமத் ஷாஜிஹானைப் பட்டத்தில்வைக்கவேண்டுமென்ற தன் அந்தரங்கக்கருத்தை அலிப்புக்கு வெளியிட்டனன். அலீப்பும் ஆநந்தக்கடலில் அமிழ்ந்தவனானான். ஷாஜிஹான் அலீப்புக்கு அத்தியந்த நண்பனும் உறவினனுமானவன்.

ஜிஹாங்கீரின் மூன்றாவது குமாரனாகிய அவனையே பட்டத்தில் வைக்கிறதாக மனஉறுதி செய்துகொண்டு அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யத்தொடங்கினர். இந்தப்பிரயத்தனங்களுக்கு மத்தியில் சக்கரவர்த்தி மண்ணுலகு நீத்து விண்ணுலகுக் கேகினர். இராஜ்யத்தில் எதிர்பார்த்த யுத்தத்துக்கும் குழப்பங்களுக்கும் சிறிதும் இடமின்றி எல்லாம் சமாதானமாய்விட்டன. ஷாஜிஹானே முடிசூட்டப்பட்டான். அவன் பட்டத்துக்கு வந்ததும் ஜகத்ஜோதிக்குச் சர்வநாடிகளும் ஒடுங்கிப்போயின. இனி இவ்வுலகப்பற்றை நீக்கி ஏகாந்தத்திலிருந்து இன்புறுதலே தக்கசூழ்ச்சியென்று கருதி அரசியல் விஷயமான யாதொன்றினும் தலையிட்டுக்கொள்ளாமல் ஏகாந்தவாழ்வில் அமர்ந்தனள். பெரும்புயலுக்குப்பிறகு எங்கும் சாந்தமான தோற்றமுண்டாவதுபோல் சகல போக போக்கியங்களையும் அனுபவித்துச் சர்வாதிகாரங்களையும் தட்டுத்தடையின்றிச்செலுத்திய அவள் மனம் முற்றத்துறந்த தபோநிதிகளின் மனநிலைபோல் சஞ்சலநீங்கிச் சாந்தத்தை அடைந்தது. சாட்டையில்லாப் பம்பரம்போல் சுழன்றுகொண்டிருந்த அவள் அதிகாரம் சிறிதும் அசைவின்றி அமரத்



தொடங்கியது. அவளும் ஆக்கமல நீர்போல் ஒட்டியும் ஒட்டாமலும் வாழத்தலைப்பட்டனள். எஞ்சியவாழ்நாளை வீணாக்காமல் ஞானபிவிருத்தியிலேயே தன்பொழுதைப்போக்கிவந்தனள். ஏகசக்கராதிபத்யம் நடத்திவந்த இவள்மனம் இவ்வாறு திடீரென்று சாந்தமடையக்காரணம் யாது? பழக்கம்கொடிதன்றோ? எவ்வாறு ஜகத்ஜோதியின் மனம் சகல பற்றுக்களையும் விட்டு நீங்க இசைந்தது? சந்தர்ப்பங்கள் இவள் அவைகளை விரும்பும்படியாகச் செய்தனவேயொழிய அவளாக அவைகளை விட்டு ஒழியவில்லை. சத்துரு அதிகாரத்துக்கு வந்தபிறகு எத்தவிஷயந்தான் ஒருவருக்கு நிறைவேறும். ஷாஜிஹானும் அவளிடம் கம்பீரகுணம் பாராட்டி யாதொரு இடுக்கணும் இழைக்காமல் வேண்டிய செலவுக்குக்கொடுத்து மரியாதையாகவே நடத்திவந்தான். ஆயுள் அளவும் அவள் அழகு அணுவளவும் மாறவில்லை. அவள் மனோநிலையும் என்றும் ஒரேமாதிரியாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவளது அபாரசக்தி அண்டமெல்லாம் புகழற்பாலதாயிருந்தது. இவ்வுலக சரிதத்திலேயே பெரிய இராஜ்யபாரத்தை மிக்க சாமர்த்தியமாக நிர்வகித்ததற்கு நிதர்சனமாவாள் நம் ஜகத்ஜோதி. அதுவிஷயத்திலும் அவள் ஜகத்ஜோதியாகவே விளங்கினள். என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. ஜிஹாங்கீரிடத்தில் அவளுக்கிருந்த செல்வாக்கால்மட்டும் அவளது திறமைநாம் புகழும்வண்ணம்விளங்கினதாக நினைத்தல் தவறாகும். இயற்கையாகவே விசாலபுத்தியும் அபாரசாமர்த்தியமுமுடையவள். அச்சாமர்த்தியத்தைச் சமயம் நேரிடவே தக்கவண்ணம் வெளிப்படுத்திப் புகழ்பெற்றனள். ஜிஹாங்கீரது இராஜ்யபாரம் பிரகாசித்ததற்குக் காரணம் ஜகத்ஜோதியே. அவனுடைய சாமர்த்தியத்தையும் அவளுடைய மனோசாமர்த்தியத்தையும் ஒப்பிட்டுப்பார்க்குங்கால் அஜகஜாந்தரமென்றே கூறல்வேண்டும். எந்தச் சாமர்த்தியமும் அவளுடையதற்குத் தாழ்ந்ததேயாகும். கருமங்களை எண்ணித்துணியவும் துணிவுடன் அவைகளை நிறைவேற்றவும் அவளுக்குச் சாமர்த்தியமுண்டு. உலகமெல்லாம் மயங்கும்படியான சாமர்த்தியமும் அழகும் வாய்ந்திருந்தாலும் ஸ்திரீ தர்மத்தினின்றும் அவள் சிறிதும் வழுவவில்லை. ஷியர் ஆப்கனுடன் வாழும்போதும் உத்தமநாயகியாகவே இருந்தனள். ஜாதி ஆசாரப்பிரகாரம் மறுவிவாகம் செய்த பின்னரும் பதிவிரதத்தில் சிறிதும் பங்கப்படவில்லை.

ஒருஜாதியார் மற்றொரு ஜாதியாரின் குணங்களைத் தம் ஆசார குணமாகப் பார்த்து நிதானித்தல் பொருந்தாது. அந்தந்த ஜாதியாரின் ஆசாரங்களுக்குத்தக்கவண்ணமே அவரவர் குணங்களைப் பாராட்டல் வேண்டும். அவ்விதம் நோக்குங்கால் ஜகத்ஜோதியைப் பதிவிரதா சிகாமணியென்றே கூறல்வேண்டும். புருஷபக்தியில் அவள் எக்காலத்தும் சிறிதும் வழுவினதில்லையென்றால் அவ்வாறு அவளைக்கூறுவதில் தடையென்ன? இவ்வுலகிலுள்ள ஸ்திரீ ரத்னங்களில் ஜகத்ஜோதியும் ஒருத்தியென்பதிற்றடையில்லை. அவளது அழகுக்குத் தக்க மனோதைரியமும் சாமர்த்தியமும் அபார ஞானமும் அவளிடம் குடிகொண்டிருந்தன. இருந்தாலும் ஸ்திரீகளுக்குரிய சில சாகசகுணமும் அவளைவிட்டு நீங்கவில்லை. முகமத்தினிடம் அவள் காட்டிய கொடுமை அவளது பெண்தன்மையைக் காட்டிவிட்டது. அவன் விஷயத்தில்மட்டும் அவள் மனமாண்புகாட்டி நடந்திருக்கும்பக்ஷத்தில் இந்துதேச சரித்திரமே வேறு விதமாய்ப் புரண்டிருக்கும். சந்திரனுக்கும் களங்கமுண்டன்றோ? ஜகத்ஜோதியாய் விளங்கும் சூரியனிடத்தும் கருப்புப்புள்ளிகள் தெரிவதாக வானசாஸ்திரிகள் கூறுகிறார்களே. ஆகையால் எல்லாம் குணங்களாகவே ஒருவரிடம் பொருந்தியிருக்குமா? நெல்லுக்கும் உமியுண்டு. நீருக்கும் நுரையுண்டு. ஆகையால் குற்றநீக்கிக் குணங்களைக்கைக்கொண்டு பார்ப்பின் ஜகத்ஜோதியின் சரித்திரம் உலகத்தாருக்கு ஜகத்ஜோதிபோலவே விளங்கும். பகவானுடைய அற்புதச் சிருஷ்டிகளெல்லாம் அற்புதமாய் விளங்கிய இம்மாதரசியின் சரிதம் அனைவரும் அன்புகூர்ந்து ஆய்ந்தறியத் தக்கது. இவ்வுலகத்தாருக்கு அத்தர் என்ற அற்புதமான வாசனைத் திரவியத்தை அளித்த மாதரசியின் சரித்திரம் மணங்கமழாதிருக்குமோ? சரித்திர பூர்வமாய் நோக்கினும் ஜகத்ஜோதியின் சரிதம் வியக்கற்பாலதே. வைதவ்யதிசை யடைந்தபின் பதினெட்டு வருஷகாலம் இப்பூவுலகில் ஏகாந்தமான இன்புற்ற நிலையில் வாழ்ந்து



முக்திநெறியை நித்தமும் நினைந்து அனுஷ்டித்துக் கடைசியில் கைவல்ய நிலையை அடைந்தனள்.

முகமத்கானும் சகல பூலோக வாழ்வையும் வெறுத்து முத்திநெறியில் வைராக்கியங் கொண்டவனாய் நிலைபூண்டு ஞானநிலையடைந்து வீடு பேற்றினை அடைந்தனன் "அற்றது பற்றெனின் உற்றது வீடு என்னும் திருவாக்குக் கெதிர்வாக்குண்டோ?

பிறவிப்பெருங்கடல் நீந்த இறைவனடியைத் தேடாவிடின் இவ்வுடம் பினைப்பெற்றப் பயன் கைக்கூடாமற் போகுமாதலால் மானுடஜன்ம மெடுத்த ஸ்திரீயாயினும் புருஷனாயினும் ஜன்மம் கடைத்தேறும் வழியைத் தேடியுய்வார்களாக அவ்விதம் உய்யும் வகையை அடுத்தமுறை சுருங்கக்கூறுவோம்.

(இன்னும் வரும்.)

எஸ். சாமிநாதையர்.

# லாலா லஜபதிராய் சரித்திரம்.

சுதேசமித்திரன் பத்திரிகையிலிருந்து

(மொழிபெயர்ப்பு.)

---

மேற்கே வீரபூமியாகிய பாஞ்சால நாட்டின் ஒருபுரத்தினின்று கிழக்கே பிரஹ்மபுத்திர நதத்தின் மறுபுறம் வரையிலும், வடக்கே ஹிமாசலத்தின் அடிவாரத்திலுள்ள சிம்லாவிலிருந்து தெற்கே இந்துமகாசமுத்திரத்தின் நுரையலைகுமுறும் குமரிமுனைவரையிலும் அகண்டமான பரதகண்ட முழுவதிலும் இப்பொழுது எந்தப் புருஷசிங்கத்தின் துக்ககரமானகதியை நினைந்துநினைந்து கோடிக்கணக்கான நெஞ்சங்கள் வருந்துகின்றனவோ, எவன் பாரதமாதாவின் காரிய நிர்வாகியும், தேஜஸ்வியும், ஆத்மதியாகியும், சுவாதீன மனத்தோனுமாகிய உத்தமபுத்திரனோ, எவன் பாஞ்சால தேசத்தின் பிரசித்த ஜனத்தலைவனோ, பஞ்சநதவாசிகளின் ஹிருதயத்தேவதையோ, தாய்நாட்டின் அருமைத்திருமகனோ, சுதேசியம், ஸ்வராஜ்யம் என்பவற்றின் ஏகநிஷ்டையுள்ள உபாசகனோ ஜாதீய (பொதுஜன) யஜ்ஞத்தின் நிஷ்காம (பலாபேக்ஷையற்ற) புரோகிதனோ, ஆத்மசக்திநிறைந்த அக்னிபர்வதமோ, அஞ்சா நெஞ்சமுள்ள பஞ்சாப் கேஸரியோ-அப்படிப்பட்ட ஸ்ரீயுக்த லாலா லஜபதிராயின் உருவப்படத்தை நேயர்களே! இதோபாருங்கள்!

அதிர்ஷ்ட ஹீனத்தால் இன்று லஜபதிராய் ராஜகோபத்துக்குள்ளாகித் தமது கர்மபூமியாகிய ஜன்மபூமியிலிருந்து வெகுதூரத்திலுள்ள பர்மாதேசத்துக்கு பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறார். இன்று ஆங்கிலேய சகோதர பத்திரிகைகள் அவரைச்சுட்டி என்னென்னவோ பிதற்றிக்கொக்கரிக்கின்றன. ஆனால் இது அவ்வளவும் அவற்றின் இயற்கைக்கு முழுவதும் பொருந்தியதுதானே! யானை சேற்றில் விழுந்துவிட்டால், தவளைக்கும் அதை உதைக்கும்படியான தைரியம் உண்டாகிவிடுகிறதல்லவா?

லஜபதிராய் யாவர்? அவர் பாஞ்சால நாட்டின் பெரிய ஜனநாயகர்; பேசுந்திறம்பெற்ற பிரசித்த நாவலர்; சிறந்த நூலாசிரியர்; சாமர்த்தியமாய் வாதிக்கும் சிறந்த வக்கீல்; உத்தம கர்மவீரர். அவரைப் பஞ்சநதநாட்டின் பிரதான புருஷனென்றாலும் மிகையாகமாட்டாது. லஜபதிராய் ஒருசெய்கை காட்டினால், பாஞ்சாலநாடு முழுவதும் அதன்படியாடும். லஜபதியின் பொருள், சக்தி, சாமர்த்தியம் இவையெல்லாம் கவர்ன்மெண்டார் இப்பொழுது அநுசரிக்கும் ஆளுகை யொழுங்குக்கு முற்றும் விரோதமாய் நின்றன. அவர் பாஞ்சால தேசவாசிகளுக்குள் வீரதீரபராக்கிரமமுள்ள மானிடத்தன்மையை நிலைகொள்ளச்செய்ய முயன்றார். பிறரை நம்பி ஏமாந்துபோகாமல் தங்களுக்கு வேண்டியனவற்றைத் தாமே செய்துகொள்ள வேண்டுமென்ற தன் மதியின் உயர்வை சாதாரண ஜனங்களுக்குப் போதித்தார். ஊக்கங்குன்றி முயற்சியற்றிருந்த அவர்களது நெஞ்சங்களில் மகாசக்தியின் சுறுசுறுப்பை உண்டாக்கியும், இனி முன்னுக்குவர மார்க்கமில்லையென்று தைரியத்தைவிட்டு நிராசைசெய்துகொண்டவர்களது பிராணனில் புதிய ஆசையைப் புகுத்தியும் உபகரித்தார். இப்படிப்பட்டவரை கவர்ன்மெண்டார் சத்துருவென்றெண்ணி யாதொரு விசாரணையுமின்றி தேசப்பிரஷ்டம் செய்துவிட்டனர். ஆயிரம் பறவைகள் வந்து தங்குவதற்கு ஆசிரமமாயிருந்த ஆகாயத்தையளாவிய ஆலமரத்தின்மேல் பேரிடி விழுந்துவிட்டது!



ஜாதீய வாழ்க்கையாகிய ஆற்றின் ஓட்டத்தைத் தடுப்பதற்காகவே இந்தக்காரியம் செய்யப்பட்டது. இப்படிச் செய்யப்பட்டது இதுவே முதற்செயலன்று. லோகமான்மிய ஸ்ரீ திலகமஹரிஷியை சிறைப்படுத்தியபொழுதே இச்செயலுக்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இப்பொழுது லாலா லஜபதியின் தேசபிரஷ்டம் அதற்கு ஆஹுதியாயிற்று. ஆனால் இது தான் பூர்ணாஹுதி யென்று யார் சொல்லக்கூடும்?

ராஜநீதியின் மார்க்கம் ஆபத்துக்கள் அற்ற சுகமான வழியன்று. இது லஜபதிக்குத் தெரியும். இதின் சுவரூபத்தைத் தெரிந்தே அவர் இம்முட்படுக்கையிற் படுக்கலானார். தேசோந்நதத்துக்காகத் தாம் செய்யவேண்டிய கடமையைக்காட்டிலும் தம்முயிரையே பெரிதென அவர் கருதியிருப்பாராகில், அவர் எவ்வளவோ போக போக்கியங்களை யனுபவித்துக்கொண்டு, தம் வாழ்நாளை வெகு சுகமாய்க் கழித்-

துக்கொண்டு சந்தோஷமாய் வாழ்ந்திருக்கக்கூடும். ஆனால் அவர் அந்த வழிக்கு வந்தவரல்லர். ஸ்வதேசத்தின் யோக க்ஷேமத்தை விரும்பியே அவர் தமது வாழ்க்கைச்சுகங்களனைத்தையும் துறந்துவிட்டார். இன்றைக்கோ துர்ப்பாக்கியமாகிய மேகம் அவரது சென்னியைக் கவிந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது அவர் ராஜபுருஷர்களின் முன் நிந்தனையும் அவமானமுமுற்றுத தெருவிற்கிடக்கும் பிச்சைக்காரனுடைய கதியினும் பரிதாபமான ஸ்திதியிலிருக்கிறார். ஆனால் சர்வத்தியாகியாகிய இந்தக் கர்மயோகியின் தலையில் இன்று யாதொரு புகழின் முள்முடி ஒளிர்கின்றதோ, அதன் காந்திக்கு முன் மிக்க விலையேறிய ஆயிரம் வைரக்கற்கள் இழைத்த அரசர் மணிமுடிகளும் பெருமைகுன்றி ஒளி மழுங்குவனவே! லஜபதிராயர் கைக்கொண்ட இந்தத் துறவானது தற்கால இந்தியாவில் இதற்கு முன் எப்பொழுதும் கண்டிராதது. அவரது இந்த ஆத்மதியாகத்தின்முன் சர்வத்தியாகியாய் கௌபீனதாரியாய்த் திரியும் சந்நியாசியினது துறவின் பெருமையும் குறைந்ததாகும். பாரத வருஷத்தின் புதிய வாழ்க்கையின் சரித்திரத்திலே இவரது பரிசுத்த நாமம் நீடூழி நிலவுவதாக.

லாலா லஜபதிராய் வக்கில தொழில்செய்து ஜீவித்துவந்தார். முதலில் அவர் ஹிஸ்ஸார் ஜில்லாவில் வக்கில் தொழில் ஆரம்பித்தார். அப்பொழுதே அவர் ராஜாங்க விவகாரங்களில் பிரவேசித்து சுதேசத்திற்கு நன்மை பயக்கும் துறைகளிலெல்லாம் உழைத்துவந்தார்.

பிறகு ஹிஸ்ஸாரைவிட்டு லாகோர் சீப்கோர்ட்டில் வக்கீல் வேலை பார்க்கவந்தார். அவர் தயாநந்த ஆங்கிலோ வேதகலாசாலைக்கு நிர்வாஹகராகவும், உதவிச்சபைத் தலைவராகவும் இருந்தார். அவருக்குச் சிறிதேனும் ஆடம்பரப் பிரியமென்பதே கிடையாது. தமக்காக அதிக செலவுசெய்யமாட்டார். எவ்வளவு கஷ்டம் வரினும் பேசாமல் பொறுத்துக்கொள்ளும் பெருந்தகைமை வாய்ந்தவர். இவர் ஆரிய சமாஜ மதாநுசாரியாதலால் பஞ்சாப் ஆரிய சமாஜத்தின் காரியத்தைத் தன் சொந்தக்காரியம்போற் கருதி அதற்காக உழைத்து வந்தார். ஸ்வதேசத்தின் க்ஷேமத்தைக் கருதி, அவர் தமது ஜீவனத்துக்குக்கூட அடிக்கடிநஷ்டம் உண்டாக்கிக்கொண்டதுண்டு. 'காங்க்ரா



பள்ளத்தாக்கில் பூகம்பம் உண்டாகி ஜனங்கள் தத்தளித்துக் கொண்டிருந்தபொழுது இவர் தமது உயிருக்கு அபாயம் உண்டாகுமே என்ற பயம் சிறிதுமில்லாதவராய், அங்கே வருந்தும் ஜனங்களின் கஷ்டத்தை நிவர்த்திக்கும்பொருட்டுத் தம்மாலியன்ற பாடெல்லாம் பட்டார். துன்பப்படுவோர்களின் துர்க்கதியைப் பார்த்து சகித்திரார். காங்கிரெஸில் அவருக்கு அதிக அபிமானமுண்டெனினும், 'பவதி பிக்ஷாம்தேஹி' என்று விண்ணப்பம்செய்து முறையிடும் ஒழுங்கில் அவருக்குப் பலதடவையும் விரோதம் நிகழ்ந்ததுண்டு. ஆயினும், தன் பெயரும் பிரதிஷ்டையும் அதிகமாய்க் கொண்டாடப்படவேண்டுமென்ற அற்ப விருப்பமானது அவரது வாழ்க்கையின் தூய்மையை யென்றும் களங்கப்படுத்தவில்லை. 1905-ம் வருஷத்திலே காங்க்ரெஸின் காரியமாக அவர் இங்கிலண்டுக்குப் போனார். அதன்பிறகு அமெரிகா கண்டத்தையும் போய்ப் பார்த்து வந்தார்.

லாலா லஜபதிராய் மிக்க சொல்வன்மையுடன் நூலியற்றும் ஆசிரியர். க்ஷீணகதியடைந்து நிர்ப்பாக்கிய நிலையிலுள்ள சுதேசவாசிகளின் துக்கத்தையும் கஷ்டத்தையும் கண்டு சகியாதவராய் அவர் என்னென்ன நூல்கள் இயற்றினாரோ அவற்றையெல்லாம் அவர் தமது ஹிருதயத்தின் இரத்தத்துளிகளை யெடுத்தே யெழுதினார்போலும். அவர் ஆங்கிலத்திலும், உருதுவிலும் நல்ல நூலாசிரியர். அவரது மேககர்ஜனைபோல் கம்பீரமாய்ப் பிரசங்கிக்கும் வாக்சக்தியானது கேட்போரின் மர்மஸ்தானத்தைப் போய்ப்பிடிக்குந் தன்மையது. ஹிருதயத்தில் மின்னற்கொடி போய்ப் பாய்ந்தால் எப்படியோ அத்தன்மையது. பஞ்சாப் தேசத்தின் ராஜநீதித்துறையில் அவர் முடிசூடாமன்னராய் விளங்கியவர். இலக்கியப்பயிற்சியில் அவருக்கிருந்த ஆர்வம் இவ்வளவவ்வளவென்று சொல்லொணாது. உருதுபாஷையில் அவர் இத்தாலிய (Italy) தேசபக்தர்களான மாஜினி, காரிபால்டி, ஆரியசமாஜஸ்தாபகரான மஹரிஷி தயாநந்த சரஸ்வதி ஸ்வாமிகள் இவர்களது ஜீவசரித்திரங்களை எழுதியிருக்கின்றார்.

இத்தகைய பெருமை பொருந்திய பேராசிரியரும், பிரசங்கநிபுணரும், பிரஜாநாயகரும், தாய்நாட்டின் உத்தமபுத்திரரும், அகண்ட

4. நிலபாத்தியதையைப்பராதீனப்படுத்துவதற்கான சட்டத்தின் திருத்த மசோதாவும் (Land Alienation Act Ammendment Bill.

5. 'பாரிடோ ஆப்' கால்வாயின்மேல் நீர் வரியை அதி[illegible]த்தினமையும்.

6. ராவல்பிண்டி ஜில்லாவில் நிலத்தீர்வையை அளவுக்கு[illegible] ஜாஸ்திப்படுத்தினமையும்.

7. பிளேக்கினால் சம்பவித்த பயங்கரமான மரணங்களும் அதனால் கூலியாட்களுக்குக் கொடுக்கவேண்டிய கூலி வெகு ஜாஸ்தியாய் உயர்ந்துபோய்விட்டதென்பதும்.

மேற்சொன்ன காரணங்களில் முதல் ஆறுக்கும் ஆங்கிலோ இந்தியர்களையே ஆஸ்பதமாகச் சொல்லலாம். ஏழாவதாகிய கடைசிக் [illegible]தெய்வச்செயல். அவற்றுள் முதலிரண்டு காரணங்களும் [illegible]த 4-காரணங்களில்லாவிட்டால் ஒருவேளை யாதொரு ஹானியையும் விளைத்திருக்கமாட்டா. ஆயினும், அவை அனைத்தும் ஒன்றாய்ச்சேர்ந்துவிடவே அமரிக்கையின்மையை அபரிமிதமாய்ப்பெருக்கிவிட்டன. இதில் ஆறாவது காரணத்தால் விளைந்த சம்பவங்கள்தான் அதிக முக்கியமானவை. அதனால் பொருளாதார விஷயங்களில் ஒருவருக்கும் தெரியாமல் உண்டாகிவந்த பெருத்த மாறுதலானது கவர்ன்மெண்டில் கீழ் அந்தஸ்திலுள்ள மனிதர்களின் மனத்தைப் பயங்கரமாய்த் தாக்கி அவர்களைத் தத்தம் தொழில்களை நிறுத்திவிடும்படி சகஜமாய் செய்துவிட்டது. இப்படிப்பட்ட சம்பவங்கள் சில வருஷங்களுக்குமுன் விளைந்தனவென்று சொன்னால் எவரும் நம்பியிருக்கமாட்டார்கள். ஆனால் இப்பொழுதுள்ள சந்தர்ப்பத்தில் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் சிறிதேனும் முன் யோசனையாவது ராஜதந்திர சூழ்ச்சியாவதின்றி ஜனங்களுக்குப் பிரியமில்லாத சட்டங்களைப் பிடிவாதமா யேற்படுத்தி, அவற்றிற்கு சர்வஜனங்களும் விரோதமாயிருந்தும் அவ்விரோதத்தை சிறிதும் லக்ஷியம் செய்யாமல் அச்சட்டங்களை பலாத்காரமாய் அமுலுக்குக் கொண்டுவந்தும், [illegible]சத்தில் வந்துள்ள பொருளாதார மாறுதல்களை சிறிதும் யோசிக்[illegible]மலும் கூலியாட்களின் கூலி அதிகப்பட்டுப்போனதற்குத் தக்க



சில கவர்ன்மெண்டு சிப்பந்திகளும் தங்கள் சம்பளம் உயர்த்தப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டதை உத்தியோகஸ்தர்கள் கவனிக்கவில்லை. அதைப்பற்றி கவர்ன்மெண்டார் கவனிக்காமலும் மேற்படி உத்தியோகஸ்தர்களைச் சும்மாவிட்டுவிட்டார்கள். அது கவர்ன்மெண்டின் யோக்கியதைக்காவது மனச்சாட்சிக்காவது பொருத்தமுடையதாமா? இதை சரியானகாலத்தில் தக்க யோசனையுடன் கவர்ன்மெண்டார் யோஜித்துச்செய்திருப்பாராயின், எல்லா அதிருப்தியும் அடங்கிப்போயிருக்கும்.

## கலகக்காரர்கள்—பொறுப்புள்ளவர்களும், பொறுப்பற்றவர்களும்.

கலகக்காரர்கள் கவர்ன்மெண்டின் தவறுகளை யெடுத்துக்காட்டினதற்காகவும், ஜனங்களின் கஷ்ட நிஷ்டூரங்கள் தங்கள் கஷ்ட நிஷ்டூரங்களே யென்று நினைத்து நடந்ததற்காகவும் அவர்களைக் குறைகூறலாமோ? அவர்கள் சாதாரண ஜனங்களின் கஷ்டங்களைக் கண்டு பரிதவித்து அவற்றைப் பரிகரிக்கும்பொருட்டுக் கலகம் செய்ததினால் அவர்களுடைய அநுதாபத்தை சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். படித்தவர்கள் பாமர ஜனங்களைச் சேராமல் நிற்கின்றார்களென்றும், ஆகையால் அந்தப் பாமர ஜனங்களின் பேரைச் சொல்லி இவர்கள் பேசுவது நியாயமாகாதென்றும் கவர்ன்மெண்டார் படித்தவர்களை அடிக்கடி பழித்து வரவில்லையா? அந்தப்பழியைப் போக்கிக்கொள்வதற்கு இப்பொழுது சமயம்வாய்த்தது. அவர்கள் இந்தத் தருணத்தைப் பிரயோசனப் படுத்திக்கொண்டதில் தவறிநடந்தார்களென்று யாரேனும் யோக்கியமாய்சொல்லமுடியுமா? இவர்கள் சாமான்ய ஜனங்களிடத்திலிருந்து ஒதுங்கி நின்று அவர்களது சுகதுக்கங்களை யெடுத்துச் சொல்லாமலிருக்க வேண்டுமோ? அவர்கள் அப்படிச் செய்திருந்தால் தாம் படித்த படிப்புக்கு அபக்கியாதியை யுண்டாக்கித் தங்கள் சொந்தஜனங்களுக்கே துரோகம்செய்த குற்றத்துக்குள்ளாகமாட்டார்களா? ஆகவே பொதுஜனங்களின் விஷயத்துக்காக அவர்கள் பாடுபட்டதனிமித்தம் அவர்களை யேன் பழிக்கவேண்டும்? ஒரு வருஷத்துக்கு முன் அவர்கள் சொல்வது இன்னதென்று விளங்கவில்லை. படித்தவர்கள் ஸ்வராஜ்யம் வேண்டுமென்று போட்ட கூச்சலைப் பாமர ஜனங்கள் அறிந்து அநுசரிக்கவுமில்லை; அநுசரிப்பார்க

ளென் றெதிர் பார்க்கவும் இல்லை. உயர்ந்த சர்க்கார் உத்தியோment களில் இந்துக்களை இன்னும் அதிகமாய் அமர்த்தவேண்டுமெல் விஷயத்திலோ அப்படிப்பட்ட உரிமையால் பாமர ஜனங்கள் தங்களுக்கு உடனே லாபமுண்டாகுமென்ற முழுநிச்சயங் கொண்டிருக்கவில்லை. "ராமனாண்டாலென்ன, ராவணனாண்டாலென்ன" என்ற வசனத்தின்படி தங்களை இங்கிலாண்டிலுள்ள இந்தியா மந்திரியாண்டாலென்ன, ஹிந்துக்களைச்சேர்ந்த ஒருலாலா ஆண்டாலென்ன, அல்லது ஒருமகமதிய மௌலி ஆண்டாலென்ன யாராண்டாலும் தங்கள் கதியில் யாதொரு பேதமும் உண்டாகப்போகிறதில்லையென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனாற் சமீபத்தில் உண்டான சட்டம் அவர்களை வேறுவிதமாய் நினைக்கும்படி செய்துவிட்டது.

அவர்கள் இத்தனை காலமாய் இந்த ராஜபத்துக்குச் செய்த சகாயமெல்லாம் விழலுக்கிறைத்த நீராய்ப் போய் விட்டதென்று கண்டு கொண்டார்கள். கொள்ளவே கவர்ன்மெண்டார் தம்மை மிகக் கொடுமையாய் நடத்தி வந்தார்களெனச் சந்தேகம் கொள்ளாமலிருக்க அவர்களால் முடியவில்லை. கவர்ன்மெண்டார் தமக்குத்தாம் வரம்பற்ற வலிமையிருக்கிறதென்ற இறுமாப்பான எண்ணத்துடன் ஜனங்களின் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு மாதிரி சட்டங்கள் விதிக்கத் தலைப்பட்டனர். இந்த சட்டங்கள் தேசத்திலுள்ள ஒவ்வொரு வகுப்பையும் பாதிக்கத் தொடங்கவே, கடைசியில் எந்த வகுப்பாரும் கவர்ன்மெண்டாரிடத்தில் யோக்கியமாய் உற்சாகத்தை வெளியிட முடியாமற் போய்விட்டது. சிலர் எப்பொழுதும் கவர்ன்மெண்டின் தலைப்பையே பிடித்துத்திரிந்து கொண்டிருக்கிறார்களென்பது எமக்குத் தெரியும். கவர்ன்மெண்டுக்காகக் கண்ட்ராக்டுகள் செய்வதும், அங்கங்கே நடக்கும் சங்கதிகளை அவர்களுக்குத் தெரிவிப்பதும், பட்டங்கள் பெறுவதற்காகக் காக்காய் பிடிப்பதும் ஆகிய இத்தியாதி தொழில்களே அவர்களது நித்திய கர்மம். அவர்களுக்குத் தலைவராயுள்ளோர் கவர்ன்மெண்டு விஷயத்தில் சதா உற்சாகத்துடன் கூடியே யிருப்பார்கள். ஏனெனின், அப்படியிருப்பது அவர்களுக்கு லாபகரமாயிருக்கிற தல்லவா? ஆனால் அவர்கள் கூடத் தாங்கள் இந்தக் குடியேற்றச் சட்ட மசோ



10 162412

தா விஷமமான கலக்கத்திலும், கால்வாய் நீர்வரி சம்பந்தமான தீர்மானத்திலும் தலையிடவேயில்லை என்று தங்கள் மார்புமேல் கை வைத்து யோக்கியமாய்ச் சொல்ல முடியாது. அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்யாசமென்றால், அவர்கள் வெளிக்கு ராஜபக்தியுள்ளவர்கள் போல நடித்து உள்ளுக்குள்ளேயே திரை மறைவில் காரியம் நடத்தினார்கள். மற்றவர்களோ தைரியமாயும் பகிரங்கமாயும் நடந்தார்கள். இதுதான் வித்தியாசம். இந்தப் பொதுஜன விரோதமான சட்டதிட்டங்களினால் பால்ய பிரசங்கிகள் வெளிப்பட்டுப் பேசுவதற்கு ஒரு பிரமேயம் ஏற்பட்டது. அதையவர்கள் தங்கள் மனத்திற்குத் திருப்தியுண்டாகும் வரைக்கும் உபயோகித்துத் தீர்த்தார்கள். அவர்களது நிர்ப்பயமான பிரசங்கங்களும், அவர்கள் உண்மையெனக் கொண்ட அபிப்பிராயங்களுக்காக எவ்வளவு அவஸ்தைகளாயினும் படுவதற்குத் தயாராயிருந்த தைரியத் தன்மையும் ஜனங்களின் உள்ளத்தில் நேரே சென்று பாயவே, அவர்கள் பேசும் சபைகளுக்குப் பல்லாயிரம் ஜனங்கள் ஆகர்ஷிக்கப்பட்டார்கள். ஆனால் இந்த பால்ய பிரசங்கிகளுக்குள் பொறுப்புள்ள பிரமுகர்கள் பின் நின்று தாங்கியிருப்பார்களென்று நினைப்பது சுத்த மதியீனம். ஏனெனில் இத்தேசமானது இப்பொழுது எவ்விதத்திலாவது ஒரு ராஜாங்கப் புரட்சிக்குத் தயாராயிருக்கிறதென்று சாவதான யோசனையும் பொறுப்பும் புலனும் உள்ள எந்தமனிதனும் நம்பமாட்டான். கட்டுப்பாட்டுக்கு அடங்கி வேலைசெய்ய வேண்டுமென்பதே பஞ்சாப் மாகாணம் எப்பொழுதும் போடும் கூச்சல். இந்த மாகாணம் 9 மாசங்களாக இருந்துவரும் ஸ்திதியில் எவ்வித கட்டுப்பாட்டையும், உண்டாக்கவாவது பூர்த்தி செய்யவாவது முடியாது. கட்டுப்பாடென்கிற மரமானது வேரூன்றிப் பலன் அளிக்க மேண்டுமாயின் குளிர்ந்த ஆகாயமும், கலக்கமில்லாத பூசாரமும் ஆவசியகம். ஜனங்கள் இந்த யௌவனப் பிராயமுள்ள உற்சாகப் பிரியரான பிரசங்கிகளையும் லேக்கர்களையும் கடிந்து பேசுவதற்காகப் பத்திரிகைகளிலாவது, பொது பிரசங்கங்களிலாவது பாய்ந்து வந்து சாடா விடினும் அன்னார்களை நிரந்தரமும், ஊர்ஜிதமுமான பிரயோஜனங்கள் விளைவதற்கு வேண்டியபடி நிரந்தரமும் உறுதியுமான சாதனங்களையும், மிதப்பான்மையையும் கைப்பற்றி நடக்குமாறு செய்யத் தங்களா

ன வரையிலும் முயன்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் விரும்பிய வளவுக்கு அவர்களுக்குக் காரிய சித்தியாகாமற் போனது துர்ப்பாக்கியமே. ஆனால் அவர்களின் தவறுதல்களுக்குக்கூட ஒரு தாத்பரியம் இருக்கின்றது. அதாவது, இந்த இரண்டு மூன்று மாசங்களுக்குமுன் இன்னாரென்று ஒருவருக்குந் தெரியாத பால்யப் பிரசங்கிகளும், வாசாலகர்களும் தங்களை அடக்கித்தங்களுக்கு யாதொரு ஹானியும் உண்டாகாதபடி க்ஷேமமாய் நடத்துவதற்காக முற்படும் பொறுப்புள்ள கனவான்களை திரஸ்காரம்செய்தும் அவர்கள் சொல்லும் புத்திமதிகளை கவனியாமல் மறுத்தும், அவர்களது நீதிநோத்தை ஆக்ஷேபித்தும், சிற்சில சமயங்களில் அவர்களை பயங்காளிகளெனப் பழித்தும் கடைசியில் தங்கள் கருத்திலேயே உறுதியாய் நிற்பார்களானால், அதனால் என்ன ஏற்படுகின்றது? தங்களை அடக்கி நடத்த வந்தவர்களைப் பொருட்செய்யாமல், பொதுவில் ஜனங்களின் அநுதாபமும் மதிப்பும் தங்கள் பக்கலிலே இருந்து தாங்கும் என்ற தைரியம் அவர்களுக் கிருந்ததென் றேற்படுகிறதல்லவா? ஜனங்கள் இவர்கள் பேச்சுக்கு வசப்பட்டு இவர்களை மதித்தும், தைரியப்படுத்தியும் வரும்படியான அம்சம் ஏதோ ஒன்று இவர்களிடத்திலிருந்தது.

## உண்மையான கஷ்ட நிஷ்டூரங்களையே கலகக்காரர்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றனர்.

இனி அவர்கள் பிரசங்கங்களைக் கேட்கும் கூட்டத்தார் அத்தனைபேரும் அல்லது பெரும்பான்மையோரும் இளைஞர்களே யென்பதும் மதியீனமேயாகும். சரியான பிரக்ஞையுள்ள எவனாவது லயால்பூரிலும், மூம்தானிலும், பாதாலாவிலும், அமிர்தஸரஸ்விலும் நடக்கும் மீட்டிங்குகளுக்குப் போகிறவர்கள் கேவலம் மாணவர்களே யென்று சாதிப்பனா? பிளேக்கின் கொடுமைக்காக ஸ்கூல்களும் காலேஜ்களும் மூடப்பட்ட பிறகு உள்ளூர் பாரதமாதா ஆபீசின் மீட்டிங்குகளுக்குப் போனவர்கள் யாவர்? லாஹோர், ராவில்பிண்டி, டில்லி இந்தப் பட்டணங்களில் படிக்கும் பிள்ளைகளின் மொத்தத் தொகை எவ்வளவு? சர்தார் அஜித்சிங்கு, சய்யத் ஹைதர்ரஜாக் இவர்கள் பிரசங்கித்த சபைகளுக்குப் போயிருந்த ஜனத்திரளின் எண்ணிக்கை எவ்வளவு? இவ்விரண்டையும் ஒத்திட்டுப்பாருங்கள். உண்மையென்னவெனில், இக்கனவான்களால் நடத்தப்படும் பெருமுயற்சியானது ஜனங்களின் அங்கீகாரத்தைப்பெற்றுவிட்டதென்பதையும், அது அவர்களின் மனப்போக்குக்குப் பொருந்தியிருக்கிறதென்பதையும், அவர்கள் பேசுவதை சபையில்நேரே வந்து கேட்கும் பல்லாயிர ஜனங்கள் மாத்திரமன்றி தேசபாஷையின் பத்திரிகைகளில் ரிப்போர்ட்டு செய்யப்படும் அவர்களது பிரசங்கங்களைக் கரைத்துக் குடிக்கும் இன்னும் எத்தனையோ ஆயிரம் ஜனங்களும் அவர்களின் பேச்சை மதிப்புடன் ஏற்றுக்கொள்ளுகிறார்களென்பதையும் அறிந்தும் அறியாதது போலிருப்பது யோக்கியமன்று. ஆங்கிலோ இந்திய பத்திரிகைகளில் பொறுப்பின்றி எழுதுகிறவர்கள் தங்களுக்கு இஷ்டமானபடி பேசவோ எழுதவோ செய்யலாமாயினும், பொறுப்புள்ள அதிகாரிகள் அஜித்சிங்கும், சையித் ஹைதர்ரஜாக்கும் [illegible]த்த பொதுஜனாபிப்பிராயத்தைச் சொல்லி வருகிறார்களென்பதையும், அதை அறியாமலிருப்பதாவது அலக்ஷியமாய்க் கருதுதலாவது பைத்தியகாரத்தனமாகு மென்பதையும் இனி க்ஷணகாலங்கூடத் தெரிந்துகொள்ளாமல் கண்மூடித்தனமா யிருத்தலாகாது ஆயினும் பஞ்சாபில் ஆங்கிலோ இந்திய சமூகங்களைப் பிடித்துக்கொண்டதாகத் தென்படுகிற நீதியானது விபரீதஸ்திதிக்கு அந்நாட்டின் செய்திகள் அதற்குள் வந்துவிட்டதென்று நான் நம்பவில்லை. பஞ்சாப் நாட்டிலுள்ள அமரிக்கை யின்மையானது ஜனங்களெல்லாம் பகிரங்கமான கொடுஞ்செயல்களைச் செய்யுமாறு தூண்டும்படியான அவ்வளவு பலிஷ்டநிலைக்கு வரவில்லை. இதுவரையில் செய்யப்பட்டதாகத் தெரியவரும் இரண்டொருகொடுமைகள் ரகஸ்யப் போலீசாரும், குண்டர்களும் சித்தப்பிரமை கொண்ட சிறுபிள்ளைகள் சிலரும் அல்லது இவர்கள் எல்லோரும் கலந்தும் செய்த கிருத்யங்களேயன்றி வேறல்ல.



## கவர்ன்மெண்ட் நடக்கவேண்டிய சரியான மார்க்கம்.

ஆனால், இந்தக் கொடுமைக்கெல்லாம் அடிவேராயுள்ள அதிர்ப்தியைக் களைவதற்கும், ஜனங்களின் கோபாவேசத்தையும் பரிபவமுற்ற உணர்ச்சிகளையும் சாந்தப்படுத்துவதற்கும் யாதொன்றும் செய்யாவிட்டால், இந்த அமரிக்கையின்மை பலப்பட்டு இன்னும் பெருத்

தகலகங்களை உண்டாக்கிவிடுமென்பதை மறுப்பதற்கில்லை. அதிகார பயங்காட்டி அடக்கியாளும் முறைகள் ஜனங்களை சிலகாலத்துக்குத் திகைக்கப்பண்ணுமாயினும், அதனால் ஜனசக்தியை நசுக்கவேண்டுமென்று உத்தேசங்கொள்ளும் பக்ஷத்தில், கவர்ன்மெண்டின் நயமும் தங்கள் நயமும் பொருத்தமின்றி எதிர்த்து மோதுகின்றனவென்று ஜனங்கள் நம்பியிருக்கிறவரையிலும் மேற்சொன்ன அதிகாரமுறைகள் முடிவில் பயன்படாமல் தவறிப்போகுமென்பது திண்ணம். இவ்வாறு ஜனங்களின் நன்மையும், துரைத்தனத்தின் நன்மையும் முரண்பட்டு நிற்கிறவரையிலும் ஜனங்களின் ஆக்கிரகஹம் அப்போதைக்கப்போது வெடித்து வெளிக்கிளம்புவது நிச்சயம். அதை பலாத்காரமாய் நசுக்கவோ, கொல்லவோ நீங்கள் என்ன பிரயத்தனப்பட்டாலும் அது கிளம்பாமலிராது. இந்தச் செய்தி தற்சமயத்துக்குப் புதியதே. 50-வருஷ காலத்துக்குமேலாக சமாதான துரைத்தனம் நிலைத்து, அதற்குமுன் இருந்த கலகாஸ்பத தொல்லைகளையெல்லாம் ஜனங்கள் சுத்தமாய் மறந்துபோய்ச்சுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கும்சமயத்தில் சமீபத்தில் ராவல்பிண்டியில் நடந்ததுபோன்ற அரெஸ்டுகளைக் கேட்டவுடன் அவர்களுக்கு நடுக்கமுண்டாய் விடுகிறது. அதனால் தற்சமயத்துக்கு அவர்கள் தைரியமிழந்து திக்பிரமைகொள்ளலாம். பஞ்சாபில் பொதுஜன ராஜரீகமுயற்சியும் இன்னும் சிலகாலம்வரையில் தடைபட்டு நிற்கலாம். அவ்வளவேயன்றி ஜனங்கள் திக்பிரமையினின்றும் தெளிந்து புத்திசுவாதீனமடைந்து ஜனாங்க சுவாதந்திரியப் போராட்டத்தில் தனி மனிதர்களின் சுகதுக்கங்களை வெகுசொற்பமாகக் கருதவேண்டுமென்று யோசிக்கத்தொடங்கினவுடன், அந்தப் போராட்டத்தில் முதல்பலியாக விழுந்தவர்களின் விஷயத்தில் அவர்களுக்குண்டான அநுதாபவுணர்ச்சியானது அந்தமுயற்சியினிடத்திலும், அதற்காக முதலில் பாடுபட்டுத் துன்பமநுபவித்தவர்களிடத்திலும்செலுத்தும் சிரத்தாபக்தியேயாக மாறிவிடும். பயமிருந்ததுபோய், இந்த உத்தமகாரியத்துக்காக நம்பிராணனையும் விடுவோம், என்றதைரியம் உண்டாகிவிடும். அத்துடன் பீதியும் கிலியும் பறந்தோடிப்போம். இப்போது சர்க்கார் அதிகார வர்க்கத்தாரைப் பிடித்துக்கொண்டிருக்கிற பீதியைப்பார்த்தால் ஜனத்தலைவர்களாயுள்ளவர்களை திடீரென்று பிடித்துக் கைதிசெய்வது சாதாரண



மாய்விடும்போல் தோன்றுவதால், அவை மிதமிஞ்சி அதிசாதாரணமாய்விடும்பக்ஷத்தில் ஜனங்கள் தம்தேச நன்மையின்பொருட்டு தேசாபிமானத்தைத்துறந்து உயிரை விடுவதற்கு இன்னும் வெகு சீக்கிரத்திலேயே வெகுசுலபமாய்த் தயாராய்விடுவார்கள். ஆனால் இவ்வாறு தலைவர்களைக் கைதுசெய்வதினால் ஜனாங்கமுயற்சியின் தலையெழுத்துக் கிழிந்துபோகுமென்பதை நான் நம்பமாட்டேன். கவர்ன்மெண்டானது இப்படிப்பட்ட முயற்சிகளை அமுக்கமுயல்வது சகஜமே. அப்படிப்பட்ட சட்டதிட்டங்களின் விளைவாக தேசத்தில் உண்மையான பொதுஜன ராஜரீகமுயற்சி எவ்வளவிருக்கிறதென்றும், அதனை எவ்வளவுதூரம் நம்பலாமென்றும் வெளியாகும். இந்த முயற்சிக்குத் தங்கள் வாழ்நாளை விநியோகிக்க விரும்புவோர் காரியத்தைஇனி எவ்விதமாகப் புதிதாயாரம்பித்துச் செய்யலாமென்பதற்கு இதனால் வழியேற்படும. ஜனாங்க வளர்ச்சியானது எத்தனையோ தடங்கல்களுக்கும், தோல்விகளுக்கும், மல்லுக்கட்டுகளுக்கும் ஈடுகொடுத்துக்கொண்டு தான் முன்னேறவேண்டியிருக்கிறது. அதற்காக ஒருவரும் அதைரியப்படவேண்டியதில்லை. எல்லாம் ஈசன் செயலென்ற நிச்சயத்துடன் அவனது திவ்ய சங்கற்பத்துக்கு நம்மை அர்ப்பணம்செய்துகொடுத்து, எதுவரினும் சாவதானமாயேற்று, அவற்றினின்றும் சரியானமுடிவுகளைத் தீர்மானித்து, அவற்றிற்கிசைந்தவாறு சாதனங்களையும் உபாயங்களையும் விதாயகம் செய்துகொண்டு, அதன்பிறகு ஸ்திரமாயும் நிச்சயபுத்தியோடும் முன்னோக்கிச்செல்வதே உண்மை ஞானமாகும்.

லாகோர், 9—5—0. (ஒப்பம்) லஜபதிராய்.

சுதேசமித்திரன்.

வந்தேமாதரம்.

# ஜனநிலையும் அந்நிலைக்குஇன்றியமையாதவைகளும்.

"நமது முழுக்காயபலம் மனோபலம் மனத்துணிவு இவற்றை வேண்டுவனவும், நம்மெல்லோரையும் கெடுக்கவோ அல்லது எடுக்கவோ வல்லனவுமான சில பெரும் பிரசினைகள் உண்டாயிருக்கின்றன. அவற்றை நாம் விண்டு தெளிதல் வேண்டும்"—என ஆங்கிலநாட்டு ஜனாபிமானியான பெரிய மதியூகி யொருவர், தம் தேசத்தாருக்கு வந்த ஆபத்துக்களை எடுத்துக்காட்டி அவைகளை, அன்னோர் ஊன்றிக் கவனிக்கவேண்டும் என்ற கருத்துடன் சொன்னார். அப்பொழுதேனும் எப்பொழுதேனுமுள்ள விஷயங்களின் நிலையை இரண்டுவிதமாகப் பகுத்துப் பார்க்கலாம் எனவும் கூறினர். இது முற்றிலும் சரியே. சில விஷயங்களை ஓர் புறமாகப் பிரித்துநோக்கின், 'நமக்குக் கதியில்லை: கரையேறும் வழியில்லை' என்று தோன்றும். அதையே மற்றோர்புறமாகத் திருப்பி நோக்கின், சாதிக்க முடியாதது எதுவுமேயில்லை என்பதற்குத் தக்க காரணங்கள் புலப்படும்.

ஆனால், உண்மை இவ்விருவழிக்கும் இடையேயுள்ளது. சுருங்கிய மனத்தினர்க்கு எழுச்சியுந் துணிவும் இன்மையால், அவர்களால் நிச்சயமாகவே கேடுண்டாம். பொங்கும் மனத்தினரோ, காரியசித்தியில் நம்பிக்கைகொண்டவராய், இடையூறுகளை அறியாது, வேண்டிய முற்காப்புக்களையும் மறக்குந் தன்மையுடையவர். இதனால் இவ்விருவர் வழிகட்கும் இடையே சென்று, நம்சரித்திரம், ஆள்வோர் சரித்திரம், நம்போன்ற இதரநாட்டுமக்கள் சரித்திரம்—இவைகளை உய்த்தறிந்து உள்ள நிலையை இயன்றவரை நன்றாக ஊகித்துத் தெளிவதே பயமற்றதும் மேலானதுமான வழியாகும்.

எதையும் உள்ளதற்கு மேலாக நினைத்தலையும் கீழாக நினைத்தலையும் தள்ளி நடப்பதே உண்மையறிவாகும். நமக்குள்ள இடையூறுகளைக் குறுக நினைப்பதாலும் வல்லமையைப் பெருக நினைப்பதா



லும் நன்மை விளையா. ஆனால் நம்மைக்குறித்தும் நம்மவர்களைக்குறித்தும் தாழ்ந்த எண்ணங்கொள்வோமேல் பெருங்கேடு விளையும். இந்த இரண்டும் கேடுள்ளவைகளே. ஆனால் அந்த இரண்டினில் ஒன்றைக் கைக்கொள்ள நேரிடின், பிந்தியதினும் முந்தியதேமேல் என்று கொள்வேன். நம் ஹிந்துக்களது பூர்வகால சரிதங்களை யோசிக்கும்போது அவர்கள் ஆற்றல் "இல்லோம்" என்றெண்ணுவதிலும், "உள்ளோம்" என்பதே எனது விருப்பமான கொள்கை.

(2) நம்மையும் உலகோரையும் உலகிலுள்ள நன்மை பெருமைகளையும்பற்றி இவ்வளவுகாலம் நாம் அயர்வுகொண்டிருந்ததுபோதும். இம்மறதியை உதறியெறிந்து, நம்மிடமும் நம்மவர்களிடமும் நம்பிக்கைகொண்டு, இவ்வுலகில் அநுபவிக்கக்கூடிய நன்மையும் இன்பமும் தரத்தக்ககாலம் அணுகியதென்று உள்ளம் பொங்கும் சமயம் வந்துவிட்டது. நாம் போதிய அளவு துன்பப்பட்டாகிவிட்டது. நாம் கருதுங் கருமங்களை முடிப்பதில், இதைவிட அதிகமான துன்பந்துயர்கள் படவேண்டிவரினும், வேறெதுதான் வரினும் அவற்றிற்கு அஞ்சாது எதற்குந் துணிந்து நிற்கும் காலம் சமீபித்திருக்கிறது.

நம் நாட்டினர்க்கு நான் இவ்வுபதேசஞ் செய்யும்பொழுது, ஜனங்களுக்கு அவர்களுரிமை இன்னவையென்றெடுத்துக்காட்டி, அவர்களைத் தட்டியெழுப்பக் கங்கணங் கட்டிக்கொண்டு நிற்பவர்கள், உள்ள இடையூறுகளையுந் துன்பங்களையும் தாழ்வாக நினைக்கவாவது மறக்கவாவது ஒண்ணாது என்று அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நம்மை வேண்டாதவர்களும், நமது இடையூறுகளை எதிர்த்துநிற்க மாட்டாது மடங்கி, முயலாமற் கைவிடவேண்டுமென்பதற்காக அவ்விடையூறுகளைப் பெருக்கிக் கூறுவோர்களுமான பலபேர் உண்டென்பது எனக்குத் தெரியும். இந்த மஹாநுபாவர்கள்—இந்தக் கரடகர்கள்—நமக்கு ஊர்த்துவகதியே கிடையாதென்றும், தாம் சுவாதீனம் பெறப் படும்பாடெல்லாம் வீணே யென்றும், நாம் "சுவராஜ்யம்" பெற்று அடையும் பலனைவிட அதிக சௌக்கியமுடையவர்களென்றும் நாமும் நம்மவர்களும் நம்பும்படி சொல்லத் தம்மாலியன்றவளவு சிரமப்படுகின்றார்கள்; தீக்கும் வாளுக்கும் இரையாவோமென்று ஒருசமயம் பயமுறுத்துகின்றனர். வேறொருசமயம், தா

மெண்ணியபடி முடிக்கலாமென்ற தைரியத்துடன், ஆழ்ந்தமர்ந்து புத்திமதி சொல்வதுபோல, ஒவ்வொருவராய்த் தலைப்படுகிறார்கள். ஆசியாகண்ட முழுதையுந் தம்கீழ் அடக்கியாளப் போதுமானஇடம் பொருளேவலுண்டென்று ஓயாமல் நம் காது செவிடுபட முழங்குகின்றனர். அதேசமயத்திலே, நாம் குறையுள்ளோம்: பழுதுளோம், வாயில்லோம்: ஒற்றுமையில்லோம்: ஆதரவில்லோம் என்று சொல்லாமல் விடுவதுமில்லை. வேறு சிலரைப் புகழ்ந்து கொண்டாடி நம்மிற் சிலரை பயமுறுத்துகின்றார்கள். கைக்கூலிகொடுத்துக் கைவசமாக்கிக்கொள்ளக் கூடியவர்களை அவ்வாறு கைக்கொள்ளவும் செய்கிறார்கள்.

நமது அறிவு பொறுமை முன்யோசனை ஆண்மை இவைகளை அவர்கள் புகழ்ந்து சுட்டிக்காட்டுவதுமன்றி, சிலவேளை நமது தேசாபிமானத்தையுங்கூடத் தங்களுக்குச் சார்பா யிணக்கிக்கொள்கின்றனர். ஆசியாகண்டவாசிகளுக்கு "தன்னாட்சி" தீங்குள்ளது: கெடுதியானது: பொல்லாதது—என்று வர்ணித்துக்காட்டி, நம் குறைகளையெல்லாம் கிளறிவிட்டுவிடுவார்கள். "சுவராஜ்யம்" பெற ஆசையொடு முயலாமல் சோர்வுறச்செய்ய அன்னோர் பெரும்பாடு படுகின்றார்கள். மனிதர்கள், பிறவியாலேயே நலமுடையோர், நீதியுடையோர், அந்தக்கரண சுத்தியுடையோர் என்று நம்புவோர்களுக்கு இதைக் கேட்க எப்படி அங்கங்குலைகின்றது!! ஆனால் மனிதன் தன்னயக்கருத்தால் குருடனாய் விடுகிறான். தன்னயங்கருதிக் குருடனாகி, பொருளாசையும் அதிகார ஆசையும் பிடித்தாட்ட, மனிதவுருவெடுத்த இந்த ஓநாய்கள்—தம்பிறவி நன்மையினின்று இழிந்துபோனவராதலால்—உண்மைக்கும் நேர்மைக்கும் தாழ்வுண்டாக்கமுயல்வது ஓர் ஆச்சரியமல்லவே ! அடியோடு அடிமைகளாய் அடங்கிக் கிடப்பதே நமக்கு முழு க்ஷேமமென்றும், அவ்வடிமைத்தனத்தை அகற்ற முயல்வது பாபமென்றும், அதனால் நாம் இன்னும் பெருங்கேட்டையடைவோமென்றும் நாம் நம்பும்படி செய்யத்தலைப்பட்டு, சிதையா ராஜபக்தி, பொறுமை, யடக்கம்—இவைகள் வேண்டுமென்று நமது போலி நண்பர்கள் ஒருபதேசஞ் செய்வதைப் பார்க்கும்போது, எவனுக்கும், சிலவேளை பிறவி நன்மையில் உறுதி குறைந்து மனத்திற்குச்



சோர்வுமுண்டாகிறது. நம் நண்பர்கட்கு முன்னுக்குவர ஆசையிருக்குமேல், அந்தச் சிநேகிதர் சொல்லுக்குச் செவி சாய்க்கக்கூடாது. அவர்கள் அச்சுறுத்துவதையேனும் வாக்களிப்பதையேனும் விவகாரம் பேசுவதையேனும் ஒருபொருட்டாக மதிக்கப்படாது. உள்ள நிலைமையை உய்த்தறிதல் வேண்டும். உண்மையறிதல் வேண்டும். யாதுவரினும் சத்தியமும் நீதியும் தவறாதிருத்தல்வேண்டும்—இவைகளே நான் அவர்கட்குச் சொல்லும் புத்திமதி. 22-வது நாஷனல் காங்கிரஸில் தலைமைவகித்த இந்தியாவின் "பெருந்தகைக் கிழவனார்" (Grand Old Man) அரசியல் விஷயத்தில் நம் கருத்திருத்தற்குரிய இடம் இன்னதென எடுத்துரைக்கின்றார். நாமெல்லோரும் உழைக்கவேண்டுவது எதற்காகவென்றும், நாமனைவரும் குழப்பம் செய்துவருவது எதுபற்றி என்றும், தெளிவாக, ஐயந்திரிபின்றி எடுத்து விளக்கியிருக்கின்றார். மங்கலமும் ஊக்கமும் பொங்கும் காலத்தில் "சுவராஜ்யம்" என்னுந் தன்னேரில்லாத் தனிப்பெரு மொழியைச் சுட்டிக்காட்டினார். அரசாங்கவிஷயத்தில் நமக்கிருக்கவேண்டிய ஆசைக்கருத்தெல்லாம் அச்சொல்லில் அடங்கியிருக்கின்றது. இனி எப்பொழுதும் நமக்கு "சுவராஜ்யம்" என்பதே அறைகூவற்சொல்லாம். இனிமேல், காலங்கருதுவதும், குணதோஷங்களை ஆராய்ந்து நாம் சரி என்றொப்புவதுமான இந்நோக்க சம்பந்தமாய்த் தன்னயத்தை மறத்தலே மண்ணில்வாழும்வரையில் நாம் கடைபிடிக்க வேண்டிய கடமையாம். நமது வாழ்க்கையில் நம்மைத்தூண்டி நமது கருத்தைக் கவரும் லக்ஷியம் அதுவே.

ஆங்கிலவாட்சியின்கீழ் ராஜாங்கவிஷயமான நமதுகுழப்பத்தில், நம்மெல்லோருக்கும் எதில் கண்ணுங் கருத்து மிருக்கவேண்டுமென்பது முதன்முதல் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. அதை நமக்கு எடுத்துக்காட்டியவர் நமது தசைக்குத்தசைபோலவும், என்புக்கென்புபோலவும் நின்று உறுதிபயப்பவரும் வாழையடிவாழையாய் வாழ்வளிப்பருமான ஒருவரேயன்றி வேறெவருமில்லை. இவ்வாறு அமைந்தது ஈசனருளேயாம். ராஜரீகத்தில் விடா ஆசையுடன் நாம் கைப்பற்றும் விஷயம் இதுவோ அதுவோ என ஒருபோதும் தேடித் தடவவேண்டுவதில்லை. இந்தியஜாதி என்னும்விசும்பில் "சுவராஜ்யம்"

என்ற துர்வநக்ஷத்திரம், நடான்முறையில், தெளிவாகப் புதிந்து விட்டது. அது அங்கிருந்து குன்றாப் பேரொளிவீசி நம் ஆசையுங் கருத்தும் செல்லவேண்டிய திக்குநோக்கி வழிகாட்டும். இம்மட்டும் நன்மையும் க்ஷேமமுமே. இனி அவ்விடத்திற்குப் போவதெப்படி? கருதுங் கருமம் முடிப்பதெவ்வாறு? என்பதே அடுத்தகேள்வி. கருதுங் கருமத்தில் ஆசையும் ஊக்கமுமுடைய காரியக்காரர்களைப் போல நமது வெற்றியின் இடையூறுகள் யாவற்றையும் நன்கு பரிசோதித்துப்பார்த்து, அதன்பின், நம் வலியினளவையுஞ் சீர்தூக்கி அவ்வலியால் இடையூறுகளைவெல்லும் வகையைத் தேடவேண்டும்.

"வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்."

நமக்குள்ள இடையூறுகளைப் புகுந்தாராயின், நம்மிடத்து நமக்கே உறுதியின்மை, நமக்கு இயற்கையுள்ள பிரபஞ்சவிரக்தி, கருத்துக்கும் செய்கைக்கும் மாறுபட்ட **விஷயவிசாரம்**—இவைகளே முதற்றடைகளாம்.

மேலான ஆழ்ந்தமதக்கொள்கைகள் தலையெடுத்து நிற்கும் ஒரு நாட்டிற் பிறந்துள்ளோமாயினும், உள்ள விக்கினங்களை மதித்துக் காலங்கருதியிருக்கும் கடைப்பிடியும் நம்பிக்கையும் இல்லாதவர்களாயிருக்கின்றோம். எதையுங் கூறுபடுத்திப்பார்த்துச் சங்கைகொள்ளும் நித்திய சந்தேகிகளாயிருக்கின்றோமேயன்றி, அவற்றை ஒருமுகப்படுத்தித்தெளியும் தன்மையில்லாதவர்களாய் இருக்கின்றோம். ஒன்றையாக்குவதிலும் அதனை யழிப்பதே நமது வழக்கம்போலும். அணா பைசா வரையிற்கூட லாபநஷ்டக் கணக்குப்பார்க்க அறிவோம். ஆனால் எல்லாவற்றிற்குந் துணிந்து ஓர் துறையிலிறங்கி, ஒவ்வொரு சமயம் எதையும் எதிர்த்துநிற்கும் குணம் நம்மிடங்கிடையாது. மானத்தையும் தாம்கொண்ட கொள்கையையும் காத்தற்பொருட்டுத் தமக்குள்ளவையெல்லாம் முழுமனத்துடன் உவந்தர்ப்பணஞ்செய்த ஆண்பாலரும் பெண்பாலருமான பல்லாயிரம்பேர்களை நம்நாட்டுச் சரித்திரத்திற்காணலாம். அப்படிப்பட்ட நாட்டினர் மேனாட்டாரது ஆட்சியால், மனச்சுதந்திரமும் கடைப்பிடியுமில்லாத மண்பாவைகளாக மாறித்தம் ஆண்மையை மறந்துவிட்டார்கள். இது நமது பொல்லாவினையே. ஆயினும், ஆத்மஞானமட்டும் நம்மைவிட்டு அகன்றதில்லை. இது கடவுள் அருளே. இங்கேதான் சுவர்ண நிக்ஷேபம் உள்ளது. ஓர் மந்திரவாதி அதனைத் தொட்டுக்காட்டி, எவர்களுக்கு அது பிதிரார்ஜித சொத்தாயுரிமைப்பட்டுள்ளதோ, அவர்களிடம் அதைச் சேர்க்கவேண்டியதுதான். நம் இந்தியரது பிறவிவாசனையும் உணர்ச்சியும் இப்போது அடங்கிக்கிடப்பினும், அவை எத்தன்மைய என்பது நம்நாட்டுச் சரித்திரங்களிற் பிரசித்தமாம். இப்பொழுது செய்யவேண்டுவது யாதெனின்:—அவர்கட்கு அந்த வாசனையையும் நோக்கத்தையும் சுட்டிக்காட்ட வேண்டுவதே. யாம் இக்கருத்தைக் கொண்டுமுடிப்பதில் முதலிற்செய்யவேண்டுவது யாதெனில், பகட்டான பிரபஞ்சாபிமானத்தை வேரறுத்து அவ்விடத்தில் நீதியையும் வாய்மையையும் நிலைநாட்டவேண்டும். தத்துவத்தை யடைவதற்குரிய ஒரேவழி, தற்பற்றையறுத்தலும் அதில் நெகிழா உறுதியுமே என்று இவ்வாரியவர்த்தவாசிகட்கு உணர்த்தவேண்டும். அவர்களெல்லோரையுங்கூட்டி ஒருஜாதியாக்குவது மட்டுமன்று. அவர்கள் பூர்வகாலப்பெருமைபெறுந் தகுதியுடையார், வருங்காலத்துத் தம்மாலாகப் போவதும் அறிந்தவர்—என்று கொண்டாடும்படி வலிமிக்க ஒரு பெரிய சாதியினராய் அவர்கள் ஆகுமாறு நாம் முயலவேண்டும்" என்று *மாசினி சொல்லியதை நாமும் சொல்வோம்.



இப்போது நம் இந்தியர்கள், ஆங்கிலேய மந்திரிகளும், ஆங்கில பார்லிமெண்ட் சபையாரும் கருணைக்கடல்கள் என்று நம்பி, பல்வேறுவகுப்பினரும் படுந்துன்பங்களைத் தவிர்க்கவழி தேடுகின்றார்களேயன்றி, அவர்களெல்லாரையும் ஒரு கட்டுக்கடங்கிய சுதேசியராக்குவதில் நோக்கமில்லா விஷயவாதிகளாகத் திரிகின்றார்கள். நாட்டினரும் நாட்டுத்தலைவர்களும் உயர்ந்த நோக்கங்களைக்கேட்கக் கூச்சமுற்று வீணே மன்றாடுகின்றனர். ராஜாங்கத்தாரும் குடிகளுமாகிய இருதிறத்தாரும் இணங்கிப்போக வேண்டுமென்றால் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறார்கள். எங்கேயாவது ஒருவேலை கொடுப்போமென்றால் சரி என்கின்றனர். தம் சொந்த உரிமைகட்கு 'நகாசுவேலை' கொடுக்க உடன்படுவர். ஏதாவது உதவிசெய்வோம் என்றால்

* மாசினி - ஒரு பெரியவர்.

அந்த ஒப்புவர். இவையெல்லாவற்றிற்கும் மேலாக, அன்னோர் துன்பங்களைத் துடைப்பதாகச்சொல்லி, எவனேனுமொருவனை அனுப்பினால், அவனை லோகரக்ஷகனாகவே அங்கீகரித்து விடுவர். நாம் இப்பொழுது வேண்டுவனவெல்லாம், நமது வேண்டுகோளின் நியாய தர்மங்களை ஒட்டியில்லை. வேண்டப்படுவோரது (ராஜாங்கத்தாரது) நோக்கத்தை யொட்டியிருக்கின்றன. நமக்கு அந்தந்த சமயமும் வர்த்தமானமும் நோக்கமேயன்றி தர்மமும் சத்தியமும் நோக்கமாகவில்லை. அந்நிய ராஜாங்கத்தார்களுக்குத் திருப்தியுண்டாக்குவதில் நோக்கமேயன்றி, நம்மவர்களுக்கு மனவெழுச்சியுண்டாக்குவதில் நோக்கில்லை. பொய்புலகில்,—மாயையுலகில்—வசிக்க நமக்காசையேயன்றி சத்தியம் உறுதி கடமைவாய்ந்த உலகில் வசிக்க நமக்கு இஷ்டமில்லை. நாம் நம் உட்கருத்தை வெளியிடாமல்மறைப்பது, (அவைகள் பொய் அநியாயமென்ற காரணத்தாலல்ல) அவைகளை வெளியிடின் எவர்மனம் நோவுறுமோ அவர் மனத்தை நோவச்செய்வதில் விருப்பமின்மையாலேதான். இவ்வாறு மற்றவர்களை வஞ்சிக்க முயல்வதில் நம்மை நாமே வஞ்சித்துக்கொள்கின்றோம். நம்மை மனிதராக்கி ஓர்சாதியாகக்கூட்டி நமக்கு சுயேச்சையைக் கொடுக்கக்கூடிய அந்த மனவலியில்லாமல் ஒழிவதே மேற்கூறியதின் பயனாக முடிகிறது.

யோசனையும் உபாயமும்போல் வெளிக்குத்தோன்றும் எதிலும் அளவற்ற நம்பிக்கையும், முற்போக்குக்கு ஆவசியகமான ஊக்கம், எழுச்சி, வினைத்திட்டம்—ஆகிய இவற்றில் ஓயாத அவநம்பிக்கையும் ஒன்றைப்பற்றாது ஏககாலத்தில் பலகர்மங்களைக் கைக்கொள்வதுமாகிய இம்மூன்றுமே நம்மைப்பற்றியிருக்கும் மனநோய்களாம். நாம் பொறுத்தும் சிந்தித்தும் நிலைமைக்கேற்பச் செல்கிறோமேயன்றி அவற்றை எதிர்த்து வெல்லவும், அந்நிலைமையை நமக்குச் சௌகரியமானபடி உண்டுபண்ணிக்கொள்ளவும் நமக்குச் சிறிதும் கருத்தில்லை. எந்தச்செய்கை கேவலம் மிதபுத்திக்குஒத்திருக்கிறதோ அதையே "மதியூகம்" எனப்பெரும் பெயரிட்டுக் கொண்டாடுகின்றோம்.

கையைவிட்டுத் துட்டுத்துக்காணி போய்விடுமேயென்ற அச்சமும், எவர்களை வஞ்சகர்களென்று உள்ளூற எண்ணுகிறோமோ அவர்களுக்கு நம்மிடமுள்ள மதிப்புப்போய்விடுமே என்ற அச்சமும், எவ-



ர்கள் நம்மையும் நம்நாட்டையும் இராப்பகல் ஓயாது சூறையாடி உறிஞ்சுகின்றார்களோ அவர்களது மந்தகாசக் கதிரொளி நம்மை நோக்கிவீசாது போய்விடுமே என்ற அச்சமும், நமது உடலையும் உயிரையும் சூது அல்லது வலிமையால் கொள்ளைகொண்ட அந்த துஷ்டதேவதைகளை மனநோவச் செய்வோமோ என்ற அச்சமும்,இப்பொழுது நாம் அனுபவிக்கும் இந்த சுயேச்சை வெறுக்கவும் இகழவும் கைக்கவுந் தகாததுபோலெண்ணி, இருளிடங்களிலும் சிறைச்சாலைகளிலும் அடைபடுவோம் என்ற அச்சமும், ஆகிய இவ்வச்சங்களே அடிமுதல் நுனிவரையில் நம் வாணாளைக்கலந்து பொருந்தி நிற்கின்றன. என் அபிப்பிராயத்தில், நம்முன்புள்ள பெரும் பிரசனையானது ஒரு குறிப்பான மதவிஷயமாகும். அது குருட்டுத்தனமாய் அநுஷ்டித்தற்குரிய ஒரு மதக்கோட்பாட்டைச் சேராது, அத்தியந்த பக்திசிரத்தைகளுடன் தியாகசக்தியையும் காட்டவல்ல மதசம்பந்தத்தோடு கூடியதாம். (நம் தேசாபிமானத்தை) மதாபிமானப்படிக்குயர்த்தி அதற்காக நம் உயிரைக் கொடுக்கவோ வாழவோ வேண்டுவதே நமது முதல் சங்கல்பம். சாயுச்சியம் அடையலாம் என்னு முண்மைபற்றியே மதத்தில் நாம் நம்பிக்கை வைக்கின்றோம். நம் மதிக்குறைவாற்கொண்ட "தான்"என்ற அகங்காரம் அவ்விசன் சந்நிதானத்தில் மறக்கப்பட நிரஞ்சன நிரதிசயானந்தத்தை அநுபவிக்கின்றோம். அதுபோலவே, தர்மசத்யமென்ற உறுதியான பாறைகளின் மேல் தேசாபிமானம் என்ற கட்டிடம் அமைக்கப்படவேண்டும். தர்மசத்ய ஆராதனஞ் செய்யும்பொழுது தூயர்களாயும் துணிவுள்ளவர்களாயும் இவ்வுலகவாழ்க்கையின் வரவு செலவுகளை மதியாதவர்களாயும் ஆவோமாக. ஜனங்கள் தூய்மையும் துணிவுமுள்ள எண்ணமுடையவர்களாக முதலில் கற்கக்கடவர். நாளடைவில் அவ்வெண்ணத்தால் தூய்மையுந் துணிவும் வாய்மையும் வாய்ந்த வார்த்தைகள் உண்டாகும், அவ்வார்த்தைகளால்தூய்மையுந் துணிவும் ஆவேசச்செய்கைகளுமுண்டாகும்.

இப்படி நாம் செய்வோமானால், நம் தேசத்தின் வருங்காலநிலை நம் கைக்குள்ளடங்கியதேயாம். அந்தரங்கவுறுதியுடன் பக்திசெய்வோனுக்கும் சர்வேசுவரனுக்கும் இடையே குறுக்கிடக்கூடிய அற்பதே-

ய்வமில்லாதவாறுபோல, நமக்கும் நம் நாட்டுக்குமிடையே குறுக்கிடக்கூடிய வேறதிகாரம் இம்மண்ணிற் கிடையாது. உண்மையான நாடாள்வழியில் நம்மவர்களைப்பயிற்றல் சாதிமுறை சுயேச்சை ஒற்றுமையென்ற சுதேசியக்கொள்கையுடன் தேசாபிமான மதம்புகட்டல் நம் தேசத்தவர்க்கு இயற்கையான பக்திசிரத்தைகளுடன் நம்பிப் பாடுபடுதல்ஆகிய இவைகளே நமது ராஜகீய ஏணிக்கு முதற்படிகளாம். தன்னயத்தையும் சாதிப்பற்றையும் தள்ளி, இந்திய மாதாவின் மக்களான எல்லா ஜனங்களும் ஜாதி மத நிற பேதங் கருதாது ஒன்றுகூடி முதலில் சிறந்த விரிந்த தேசாபிமானங் கொண்டாடுவோம். எவர்களை யாம் ஒன்றுகூட்ட விரும்புகின்றோமோ அவர்களது மனத்திற் படியும்படியான பொதுக்கருத்தொன்று நம்மிடமிருந்தாலல்லது "ஒற்றுமைஒற்றுமை" என்று பேசுவதெல்லாம் வெற்றுரையேயாம். விஷயாதிகளில் அபிமானங்கொண்டு ஒற்றுமையுண்டாக்க முயல்வதால், தீராப்போரும் தொலைபாவாதமும் தாங்காமனவருத்தமும் ஆறாஎரிச்சலுமே யுண்டாகும். மேன்மையும் விஷயாதீதமுமான அடிப்படையிட்டு மனப்பூர்வமாய் ஒற்றுமையுண்டாக்குவதால், நன்னிலையழியாமலே, ஆசைப்படுந்துறையை அபாயமின்றிப் போயடைவோம். அந்த ஒருகருத்து "வந்தேமாதரம்" என்னும் பரிசுத்தமான பிரார்த்தனையிலும், "ஸ்வராஜ்யம்" என்னும் அறைகூவலிலும் சூக்குமமாய்த் தொக்குநிற்கின்றது.

இனி, நாம் மேற்கொண்ட கருமத்தை எதிர்த்து நிற்கக்கூடிய இடையூறுகள் யாவை யென்று சோதித்துப் பார்ப்போம். இவ்விடத்திலே வரும் பேராபத்து உள்ளிருந்துவருமேயல்லது வெளியிருந்தல்லவென எனக்குத்தோன்றுகிறது.

அரசாங்கத்தாருக்குத் திறந்துள்ள வழிகள் இரண்டே. ஒன்று அச்சுறுத்துவது; மற்றொன்று விட்டுக்கொடுப்பது. இவ்விரண்டிலே முந்தியதினும் பிந்தியதால் வெற்றிக்கு அதிக இடம் உண்டு. அச்சுறுத்திக் கொடுமை புரியின், அக்கொடுமை, புரிவோர்கள் மீதே திரும்பிப்பாயும். இதிற் சந்தேகமில்லை.

"பழிக்குப்பழி வந்தே தீரும். எதிர்ப்பழி வாங்கக் கங்கணம்



பூண்ட ஒருவன் தேச நன்மையின் பொருட்டு உயிர்நீத்தவனது கல்லறையின்மீது வைத்துத் தனது வாளைத் தீட்டிவிடுவனேல் அதை எதிர்க்கவல்லது எதுவுமில்லை,, என ஐரோப்பிய கலகக்காரர்கள் சொல்லும் சொல்லில் அடங்கியுள்ள உண்மையை, ஆங்கிலேயர் மதிமயங்கி மறவார்கள் என்று எண்ணுகிறேன்.

ஜனவிருப்பத்திற்குச் சிறுகச்சிறுக இணங்கிவருவதால் ஜனங்களது ரோஷ வெள்ளம் அதிகமாகப் பொங்கி எழாது. ஆனால் கொடுங்கோன்மையைவிட இவ்விணக்கத்தால் அதிகக் கேடு உண்டாகும். நம் நாட்டு ஜனங்கட்கு நாமும் ஒரு ஜாதியார் என்ற எண்ணம் ஒங்கச்செய்விக்காது, ஆளுங்கருவியில்ஏதோசில அற்பமாறுதல்களுண்டாக்குதலும் அரசாங்கத்திலுள்ள மிகக் கேவலச் சீர்கேடுகளை சிறிது திருத்தலும், நாடாண்முறையிலாவது நாடாள்தர்மத்திலாவது குறிப்பாகவும் அடிப்படையாகவுமுள்ள மாறுதல்களுண்டாக்காது சில அற்பவிஷயங்களை இணக்கிக்கொடுத்தலும்ஆகிய இவைகளேபோதுமென்று ஒப்புக்கொண்டு ஜனங்கள் அடங்கிவிடுதல் கூடாது. ஜனங்களுக்குள்ள உரிமை அதிகாரம் ஆண்மை—இவற்றை ஒப்புக்கொள்ளும் சாசுவதமான சட்டதிட்டங்களும், அடிப்படைக் குறிப்பான சில நிபந்தனைகளும் அதற்கு மேல் ஏற்பட்டாலன்றி நாம் அடங்கிவிடுதல் கூடாது. நம்மையடக்கியாள்வோர் பிடிவாதமாகவும் கடுமையாகவும் நம்மை யெதிர்ப்பார்களென்பதில் தடையில்லை. ஆனால், எல்லாவற்றுக்குமேலாக நான் அஞ்சுவது யாதெனில், நமக்குள்ளேயே உண்டாகும் எதிர்ப்பும், அரசாங்கத்தாரிடம் தனியாதரவும் அணைவும் பெற்றனுபவிக்கும் சிலவகுப்பினரது எதிர்ப்பும், ஆசையபிமான எதிர்ப்பும், உரிமை யெதிர்ப்பும், இவற்றிற்கெல்லாம் மேலென்று சொல்லும்படியாக துடைநடுங்கும் பயங்கொள்ளித் தன்மையின் எதிர்ப்பும் ஆகிய இவைகளே யாகும். இந்த வியாசத்தின் ஆதியில் பிரஸ்தாபித்துள்ள பெரியவர், ஜனங்கள் திருந்தி மேலோங்கும் வழியைக் குறித்தெழுதியிருக்கும் நியாசத்தில், தம் தேசத்தவர் ஆங்கில்க் கூட்டுறவால் அடைந்துள்ள தீமையைக் குறித்துச் சொல்லும்பொழுது பின்வருமாறு கூறியிருக்கிறார்.

"சிலரது சுபாவம்" எதினும் கவலைகொள்ளா திருத்தல்; உள்ள

காலத்தை இன்பநுகர்ச்சியிலும் வேடிக்கையிலும்கழித்தல், அடிமாடுபோற்படுத்துமறந்து, கல்லுறற்போல் கடினமாயுள்ளமனங்கொண்டிருத்தல்; பொருளாசை கொண்டு சேர்க்கவும், பெருவாழ்வு கொண்டழிக்கவும் வறுமைப்பட்ட மரபு செழிக்கவும், அளவுமீறிப் பெரும்பான்மையும் தீயவழியிற் கொண்ட பொருளைக் குவித்தல்; ஆகிய இவைகளே யாகும். எவர்கள் சிற்றின்பக்கொண்டாட்டிலும் தாம் உயர்வெய்துவதிலும் பொருளை வீண்செலவு செய்கிறார்களோ அவர்கட்கு—"நீ கொண்ட பொருள் பழியுடையது! உனது உடை பூச்சியரித்திருக்கிறது; மண்ணில் நீ சுகமாய் வாழ்ந்து இன்பம் அநுபவித்தாய்; சர்வசங்கார காலத்திலே உனது வயிற்றை நிரப்பிக் கொண்டாய்;"—என்று-ஸெயிண்ட் ஜேம்ஸ் சொன்ன செய்தியைச் சொல்ல வேண்டும். இனி வேறு சிலர் இயல்போ,பாதிக்குறும்பும் பாதிஅதைரியமுங்கொண்டு இரங்குவதுபோலப் பிறரைப் பரிகசிப்பது. இன்னும் வேறு சிலரது இயல்போ,மந்தத்தன்மையாய் எதுவும் சரியெனத் தலையாட்டுவது. எதுவும் அவர்கட்கு வேண்டா விருப்பாகும். அதைக்கேட்க அவர்கட்கு அலுப்புந்தொந்தரவும் உண்டாகும். அதைக்குறித்து அவரிடம் சொல்லிப்பார். "நான்என்ன செய்யக்கூடும்?" என்று கூறி உடனே உடம்பைக் குலுக்குவார்கள். ஏதேனும் ஒருதவி வேண்டுமென அவர்களைக் கேட்டுப்பார். அப்படியே அவர்களைப்பலர் கேட்பதால் எவர்கட்கும் அவர்கள் எதுவும்செய்வதில்லை. இன்னுஞ் சிறிது அவர்களை நெருக்கிக் கேள். தங்களை அவமானப் படுத்துவது போல் உடனே எண்ணிக் கொள்வார்கள். ஏதாவதோர் உபாயஞ் சொல்லிப்பார். அதை அவர்கள் "அசாத்தியம்" என்பார்கள். மனமுருக்கும் செய்தியொன்றைச் சொல்லிப்பார். உன்னை மனவலியில்லான்" என்பார்கள். பல்லோருடன் ஒன்றில் முன்வந்து பாடுபடுபவனை தன் தலையில் தானே அட்சதை போட்டுக்கொள்ளுகிறான் என்று நகுவார்கள். அவர்களுக்கு ஒன்றே யொன்றில்தான் பிடிப்புண்டு, அதாவது "என் வயிற்றில் எல்லாவற்றையும் போட்டுவிடு" என்பதே. அவர்களுடைய பொழுது அவர்கட்கு எப்படியாவது போய்விடும். அவர்கள் வேண்டுவதும் அவ்வளவே; தமது சௌகரியமும் தமது சுகமுமே பெரிதென்று எண்ணுவதால், மற்றவைகளைக் குறித்துக் கவனியாமலே தம் வாணாளைக் கடத்துகின்றார்கள்".



இவ்விஷயங்களை இந்தியர்களுக்குள் பொருத்திப்பார்ப்போமானால், அவ்வுருவகம் மிகக் கேவலமாய்க் காட்டுமே என்றஞ்சுகிறேன். எது எப்படியிருந்தாலும், ஆங்கிலேயருள் தன்னினத் துரோகிகள் கிடையார். நம்மவர்களில் பெரும்பான்மையோர் நாம் முன்னேச்சி முயல்வதில் பயனில்லை யென்று, இடைவிடாது பிடிவாதமாய்ப் போதனை செய்வதிற்கூட நமக்கு இடையூறு இல்லை. நாம் முன்னேக்கிச்செல்லும்பாதையிற் குறுக்கேநிற்பவர்கள் குறும்பர்களும் பரிகசிப்பவர்களு மட்டுமல்லர். ஆனால், இவர்களெல்லாருக்கும் மேலாக, எவன் உன்னைச் சேர்ந்தவனும் உன்னோடிருப்பவனும் போல் நடித்து மனம் உன்பாலில்லாதவனோ, எதிரியாயிருப்பதே தனக்கு நன்மையென எவன் கருதியிருக்கின்றானோ அந்த மகாபாதகர்களே பேறிடறுகட்டைகள். ஒவ்வொரு செய்கையிலும் தாம் பட்டுக்கொள்வதற்கிடமிருப்பினும் அக்கயவர்கள், ஊக்கமுடையோரையும் உட்கரவற்றவர்களையும் கண்டு சிரித்து அவர்கள் கொண்டுள்ள கொள்கை கருத்துக்கள் என்ன என்று பதறாது ஞானிகள்போற் கேட்டும், அவர்களிடம் மற்றவர்களுக்கு மித்திரபேதமுண்டாக்கியும் தமது நாணத்தை மறைக்கின்றார்கள். சீர்திருத்த விஷயம், மத விஷயம், ஆசாரவியல், அரசியல் இவைகளில் எது சம்பந்தமாயினும் அவர்கள் இயல்பு மாறாது. முதல் விஷயம் மூளைநோய் போல அவர்களைத் தாக்கின்றது. இரண்டாவது விஷயம் ஜனங்களிடம் வெறுப்புண்டாக்குவது போல் அவர்கள் மனத்தை உறுத்துகின்றது. மூன்றாவதோ அவர்கட்குப் பூச்சாண்டி காட்டுகின்றது. இவ்வாறிருந்தும் இதில் மிக வேடிக்கையான அம்சம் எதுவெனில், அவர்களில் பெரும்பான்மையோர் எதிலும் தங்கள் தலையை நுழைத்துக்கொள்ளாமற் போவதில்லை. மதப் பிரசங்கஞ் செய்யுங் கருத்துடன் சபைகள் ஏற்பட்டால், அதில் தாமுமொரு அங்கத்தினராவார். தங்கள் விளையாட்டுக் களியாட்டுக்களுக்கு இடையூறுண்டாகாதவரை ஆசாரத்திருத்தஞ்செய்வதில் மிக ஆதுரமாய்த் திரிவார்கள். தாம் சொல்லும் இன்பவழிகளைச்சுட்டிக்காட்டிப் பலரும்தூற்றும்பொழுது அதைப்பொருட்படுத்தாமல் தம் போக்கிலே நிற்பார்கள். ஆனால், தம் மனைவியரும் உறவினரும், தமது பிள்ளை பெண்களுக்கு இளவயதிலேயே விவாகஞ்செய்துவைக்கவேண்டுமெனப் பிடிவாதப்படுத்தும்

பொழுது ஆடுகள்போல் தலை தொங்கவிட்டு நிற்பார்கள். அரசாங்கவிஷயமோ அவர்கள் ஆசைகொண்டு வேட்டையாடும் நிலம். தங்கள் சௌகரியத்துக்கு ஒத்துவருமளவும் தங்களுக்கு ஊதியங்கொள்ளவும், வெறுஜனசபைகளில் அக்கிராசனம் வகிக்கவும் தீர்மானங்கள் ஆக்கவும் காக்கவும், ஆலோசனை சபைக்கும் மஹாஜன சபைக்கும் போகவும் அவர்களுக்குச் சம்மதம்.—ஆனால், அந்த விஷயங்களில் கண்ணுங்கருத்தும் வைத்து உழைப்பவர்களைக் கண்டால் கைகொட்டிச் சிரியாதும் போகார்கள். அரசாங்கவிஷயங்கள் ஜனசமூகத்துக்குப் போதுமானவளவு விவரந்தெரியாததால் இந்தப்பிரபுக்கள், செய்யுஞ் சூதை அறியவேனும் கண்டுபிடிக்கவேனும் இவர்களால் முடியாது. இதுகாரணமாக, அவர்கள் பயந்து நடுங்கி, தங்களுரிமை தங்கட்கு வேண்டுமெனப் பிடிவாதமாய் நின்று சாதிப்பதைவிட்டு ஏற்ற கருமத்தைக் கைசோரவிடும்படி முடிகின்றது.

இதனால் இப்பொழுதுள்ள நிலைமையில் முதலில் நாம் செய்யவேண்டுவதுயாதெனின், பரிகசிப்பவர்களையேனும் குறும்பர்களையேனும் மதியாது, ஜனங்களுக்கு அரசாங்கக்கல்விபுகட்டி நேர்மையான கொள்கைகாட்டுவதில் தம் முழுப்பொழுதையும் செலவிடக்கூடியசிலர்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் முன்வரவேண்டுவதேயாம்: "கலக்கு! கலக்கு!! கலக்கு!!!" என்று தாதாபாய் நௌரோஜியவர்கள் நமக்கு வற்புறுத்துகின்றார். நானும் "ததாஸ்து" என்கிறேன். இவ்வாறு நான் கூறுவது, நாம் வேண்டுவன கிட்டும் கிட்டாது என்பதையே கவனியாமல் கலக்கஞ்செய்ய அறிவுறுத்தல் நம்கடமையென்று நன்குணரவேண்டுமென்பதுபற்றியே. கலக்குவது நமக்கேற்பட்ட கடமையென்ற கருத்துடன் கலக்குதற்கு எல்லோரும்பழகவேண்டும். அதனால், உடனே, ஏதோகைக்கு மேல்பலன் கிட்டிவிடும் என்றகருத்து உதவாது. கருதியது சிதையாது காப்பதற்கும் அரசாங்கமுயற்சியில் மேலானபயனெய்தும் வழியிற் செல்வதற்குமான வழி இதுவொன்றேதான்என என்புத்திக்குப்புலப்படுகின்றது. இப்பொழுது நடக்கும்விதமாய் அரசாங்கம்நடத்தல்முடியாதென்பதை, ஜனங்கள் புறம்வேர்த்து அகமடங்கி யெதிர்ப்பதால் காட்டித்தெரிவித்தல் வேண்டுமென நம் நாட்டுத்திலகம்போன்ற திலகர் பணித்தருளுகிறார்.



ஜனங்கள் தாம்கொண்ட கொள்கையைச் சாதிக்கும்பொருட்டு எதுவரினும் பொறுக்கப்பழகுவதினாற்றான், அதுகூடும் என்றுசொல்வேன். அதாவது வீரமும் கலங்காமையும் கொண்டு தருமத்தை நிலைநாட்டுவேன் என்றெழும்பொழுது எதற்கும் அஞ்சாது முன்னேக்கி நிற்கத் துணிவுண்டாக்குவதால் அது கூடும் என்பதாம். அவ்வழியில் தாமே நடந்துகாட்டவேண்டுமல்லாது போதித்ததினால்மட்டும் பயனிராது. "பாடில்லையேல் பயனுமில்லை" என்ற பழமொழியுமுளதன்றோ? எதிர்ப்பதுபோற்காட்டலும், கடுதாசியில் தீர்மானங்கள் எழுதிவைத்துக்கொள்ளுதலும், வெற்றுத்தீர்மானங்கள் செய்தலும், மகஜர்களும் வேடிக்கை விளையாட்டாகவின்றி உண்மையென்று சிறிதும் ஐயப்பாடின்றிக்காட்டாத விண்ணப்பங்கள் அனுப்பலும் பெண்பாலரது தொழிலேயன்றி ஆண்பாலரது தொழில்களல்ல. நம்நாட்டில் அரசாங்க விஷயங்களில் தலையிட்டுக்கொண்டு முன்னுக்குவந்த தலைவரைப்பார்த்துக் கேட்க எனக்கு இடந்தருவீரேல், இவ்விஷயமாக அரசாங்கத்தார்கள் நாம் கேட்கும் விஷயங்களில் தாம் உறுதியும் சத்தியபுத்தியு முடையோர் என்று காட்ட, மறுக்கஇடமின்றி என்னருசுக் கொடுத்திருக்கிறார்கள் என்றுகேட்டறியவிரும்புகிறேன். அவ்வித ருசுக்கொடுக்கத்தக்க காலம் வராதிருக்குமாயின் கடும்வார்த்தைகள்பேசி நெடுந்தீர்மானங்கள்செய்து வெளிவருவதற்கு முன்பு, ஜப்பானியர்கள் செய்ததுபோல் வீட்டுக்குள்ளே வேண்டிய ஆபத்தங்கள்யாவும் ஏன் செய்துவைத்துக்கொள்ளவில்லை? அரசாங்கக்கிளர்ச்சிவிஷயமாய் நாம்இருபத்திரண்டுவருஷகாலத்தைவீண்போக்காதிருப்போயேல், சுதேசியத்தையும் பஹிஷ்காரத்தையும், கூட்டங் கூட்டுவதற்கும் விளையாட்டு வாக்குச்சாதுரியங்களைக் காட்டுவதற்குமுரிய கருவியாகக்கொள்ளாது, அத்துறைகளிலும் நாம் இனி உறுதியுடன் இறங்கவேண்டும். அரசாங்க உரிமையடைய நாம் கொண்ட எண்ணம் உறுதியான எண்ணமென்பதற் கறிகுறியாக அதை நாம் கடைபிடிக்கவேண்டும்.

ஆய்ந்தறிந்த நடவடிக்கை இவைகளுக்கு தீர்க்காலோசனை லக்ஷணமான அந்த ஒழுங்கும் அந்த அழுத்தமும் நமது வேலைகளில் இதுவரையில் இல்லை. நமது அரசியன் முயற்சிகளும் நடவடிக்கைகளும்

ஏதோசில சமயங்களில் தலைதூக்கி உடனே மறைந்துவிடுகின்றன. கல்வித்திறமையோடுகூடிய தொழில்களில் அமர்ந்துள்ளவர்கள், தங்களுக்கு அவ்வேலைகளின்றி, ஒழிந்த காலவளவுக்குத் தக்கபடி அவற்றில் முயற்சியெடுத்துவந்தார்கள். அவைகளில் அவர்கள் ஆசைவைத்து உழைப்பதுண்மையே. ஆயினும் அவர்களுக்கு அத்தொழில்கள் தலைமைவேலையாய் இருந்ததில்லை. அரசாங்கக் கலக்கமும் அரசாங்கக்கல்வியுமே எவர்கட்கு முதன்மைவேலைகளாயிருக்குமோ அப்படிப்பட்ட இனத்தினரை நம் நாடு இன்னும் பெற்றிலதே! ஜனங்களுக்கிருக்கும் சுதேசிபக்கிளர்ச்சி விஷயமாகக்குறிப்பாகவும் அத்தியாவசியமாகவும் வேண்டுவதியாதெனில், உறுதிமனமும், கபடின்மையும், வன்மையும், ஆசைவைத்த உழைப்புமுடையோராய்நாடெங்கும்நிர்ப்பந்தமின்றித்திரியக்கூடியவராய், வாய்வார்த்தையால்மட்டுமன்றி செய்கையாலே காட்டி நாட்டோர்க்கு சுயேச்சை ஞானம் போதிப்பவராய், மற்றவைகளைத் துறந்து இதற்கென்று தம்மைத் தத்தஞ்செய்யும் தன்மையாலும் ஜனங்களைசத்தியவழிக்கும்தர்மவழிக்கும் இழுக்கக்கூடியவர்களாயுமுள்ள மக்களேயாம். இப்போது அவ்வகை மனிதர்கள் இல்லாததுடன் வேறு சில இடையூறுகளும் நிற்பதால், பார்ப்பதற்கு ஜனநிலை குதூகலமுடையதாயில்லை. ஆனால், இப்போதுள்ள நிலையை மாற்றும் உபாயம் நம்மிடமேயுள்ளது.

நம் நாட்டில் எங்கும் எல்லோரும் வரவர விழித்துக்கொள்ளுகின்றார்கள். மேலே சொல்லிய திறத்தினர் இந்த விழிப்பின் பயனைச் சரியானபடி அடைவாரானால்,தட்டிக்கொடுத்து ஆசையும் உற்சாகமுமுண்டாக்கும் கிரணங்கள்எழ, இப்போது அடர்ந்து மூடிநிற்கும் இருள் மறைந்து, அதன்பின் நம்மவரது புதிய அவாவும் நமது புனர்ஜனனோதயமும் உண்டாகும். அயனாட்டாளுகையால் தவறாதுண்டாகும் ஒற்றுமையின்மை முதலிய துர்க்குணங்களால், நம்மவர்களிற் பெரும்பாலோர் அயர்வுற்றிருக்கின்றனர். எக்காலத்தும் ஒற்றுமையின்மையே அயனாட்டாளுகை வருவதற்குக் காரணமாயுள்ளது. இஃது ஓர்முறை அவ்வாட்சி வந்துவிடின், அது அவ்வொற்றுமையின்மையை அடர்ந்து பரவும்படி செய்கின்றது. அதில்லாவிடின் அவ்வொற்றுமையின்மைஊன்றி நிற்பதற்கு முதன்மையான காரணமில்லாதுபோகிறது. நம்மவரிற்சிலர்கள் நம்நாட்டிற் பிரசித்தமாயுள்ள சாதிமுறைக் குறுங்கொள்கைகளைக்கண்டு கோபிக்கின்றனர். அது ஒருவாறுசரியே. அரசாங்கத்துன்பங்களை வேரறுப்பதற்கு அது ஒருபெரிய இடறுகட்டைபோலெண்ணி அத்துன்பமில்லாதிருத்தல் வேண்டின் சாதியாசாரங்களைத்தொலைக்க வேண்டுமென்னுமெண்ணத்துடன் முயலுகின்றார்கள் அவர்களதுகோட்பாடுகளுக்கும் மனோபாவத்துக்கு ந்தலைகுனிந்து மரியாதை செய்வோம். ஆனால் அவ்வித முயற்சி வீண்பாடேயாகும் என்பது பதறாமல் யோசித்தால் தெரியவரும். இந்நாட்டினர் ஜாதிக்கட்டுப்பாடுகளைவிட்டு ஒரேமதத்தினராகாத வரையில் அல்லது எந்த மதத்தையும்அவலம்பிக்காத வரையில் நம்மவர்க்கு "சுவராஜ்ய"ப்பேறனது மறுக்கப்படுமானால், நாம்கதியற்றவர்களேயாவோம். ஆதலால் நாம் செயற்பாலது யாதெனின், எது எது எப்படியிருக்கின்றதோ அது அதை அப்படியே வைத்துக்கொண்டு அதன் மேலாகவும் அதைத்தள்ளியும் ஜனநிலை என்ற கட்டிடத்தை எழுப்பிக் கட்டவேண்டும். இதனால் எவரும் என்னைக்குறித்து வித்தியாசமாய் எண்ணார்களென எண்ணுகிறேன். இந்நாட்டிலுள்ள பலமதஸ்தர்களுள்ளும் ஓர்வித ஒற்றுமைப்பற்றுண்டாக்குவதில் எனக்கு ஆக்ஷேபமில்லை. இந்தத்துறையில் எவ்வளவு ஆதுரத்துடன் வேலைசெய்யமுடியுமோ அவ்வளவு ஆதுரத்துடன் வேலை செய்யுங்கள். நீங்கள் ஏற்ற கருமம் நன்குமுடிக. ஆனால் இந்நாட்டிலிருந்தேனும் வேறு எந்நாட்டிலிருந்தேனும் சாதிமுறைக்கொள்கைகளை வேரறுத்துத் தொலைப்பது சாத்தியமென ஒருபொழுதும் எண்ணேன். இவ்வாறாயினும், ஒரு கட்டுக்கடங்கிய ஜனநிலையாராக்குவதிலேயே கண்ணுங்கருத்தும் வைத்து நாம் ஓயாது பாடுபடவேண்டும். ஒருமதமுமில்லாமற் செய்வதும் மதக்கோட்பாடுகளின்றிச் செய்வதும் சாத்தியம் என்றே வைத்துக் கொள்வோம். அப்படியானாலும் அது நன்மைதானா என்று நான் சந்தேகிக்கிறேன். பிரபஞ்சஇருப்பிற்கு இம்மதவேற்றுமையே ஆதாரமாகும். இவ்வேற்றுமையில்லாவிடின், உலகம் வெறுமையதாய் ஒரே மொந்தாகாரமாய் ஆகிவிடும் என்பது அநேகம் பெரியோர்கள் கொள்கை. அவர்கள் கொள்கைக்கு நாம் தலைகுனிந்து வணங்கவேண்டும். எல்லாவற்றையும் ஒருநிலைப்படுத்தி ஒன்றுபடுத்தவேண்டுமென்னு முயற்சித்துநின்

ற பிரஞ்சுதேசத்து ராஜாங்கப்புரட்சிக்காரர்களைநோக்கி பார்க்குதுரை சொல்லிய கட்டுரைகள் இதுபடிப்பவர்கட்கு ஒருகால் தெரிந்திருக்குமென எண்ணுகின்றேன். "பிரஞ்சிய ராஜாங்கப்புரட்சிசாரம்" என்ற நூலில், பிரஞ்சுக்காரரை நோக்கி அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டைக்குலைத்து அடியோடு மாறுதலுண்டாக்கவேண்டுமென்ற அவர்களது மதி, என்னமதி?" என்கிறார். அதுவிஷயமாய் அவர் சொல்வது யாதெனின், "உங்கள் ஜனசமூகவாழ்வில் எவ்வளவு பிரிவுகள்உண்டோ அவ்வளவு பிரிவுகளோடும் உங்கள் புராதனநாடு உள்ளது உங்களுள் கட்சிப் பிரதிகட்சிகளும் அவ்வாறே. ஒன்றுடனொன்றொவ்வாத அண்டங்கள் ஒன்றையொன்று இழுப்பதால் எப்படிப் பிரபஞ்சம் நிலைபெற்று நிற்கின்றதோ, அப்படியே நீங்களும் ஒருவரையொருவர் இழுத்துக்கொண்டு நிலைநின்றீர்கள்" என்பதாம்.

பிரான்சுதேசத்துப் புரட்சியைச்சுட்டி பார்க்குதுரை உளங்கொதித்து இட்டசாபம் எத்தன்மையது என்பதைப்பற்றி நான் பேசவரவில்லை. ஆயினும், மேலேசொல்லியுள்ளதில் மிக ஆழ்ந்தகொள்கையிருக்கிறதென்பதைச் சொல்லாமல் முடியாது. வேற்றுமைப்பட்டிருப்பதாலேயே உலகம் நன்மையும் அழகும் வாய்ந்துளது. வேற்றுமைப்பொருள்களிலே ஒற்றுமைகாண ஆவல்கொள்வதுதான் மானுஷீகஸ்வபாவமாயிருந்திருக்கின்றது. இனியும் அவ்வாறேஅமையவேண்டும். பல்வேறான ஜனங்களுள் இருக்கும் வித்யாசங்கள் நீங்கி ஒருமைப்படுவதாலேயே ஜன நிர்மாணம் அமையவேண்டும். ஐக்கியமுண்டாக்க எண்ணுவோன், அதில் சித்திபெறவேண்டுமானால், அவ்வைக்கியத்தை அடைதற்குரிய பொதுக்குறியொன்றும், எதிர்த்தற்கு ஒரு பொதுப்பகையும் வேண்டும். அக்குறியை நிறைவேற்றும்போது அப்பகைக்கு முன்னிற்கும்போது எல்லா வேற்றுமைகளும் சுருங்கி ஒடுங்கவேண்டும். அதனால், மற்ற விஷயங்களும் போகவேண்டுமென்ற ஆவசியகமில்லை. இஃதொன்றுதான் நாமொரு ஜனநிலையராவதற்கு அடித்தளமாம். நம் இந்தியாவிலுள்ள ஜாதியாசார மதாசார முறைகளில் இவ்விதப் பொதுக்கருத்துடன் நோக்கும்போது நம்மவர்கள் ஒன்றுசேர்வதற்குப் பெருத்த இடையூறுகள் உண்டென எனக்குத்தோன்றவில்லை.



நம்மைத் தடுமாறச்செய்யும் மற்றொருகேடு என்னவெனில், நம்மவர்க்குப் படிப்பின்மையும் அறிவின்மையுமேயாம். ஜனசமூகத்திற்குக் கல்விகற்பிக்கவேண்டுவது அத்யாவசியமென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், நாம் சுவராஜ்யம் வேண்டுமுன், எல்லாரையும் கல்விபயின்றவராக்குதல்வேண்டும் என்று கூறும் விவகாரம் எவ்வளவு தூரம் பொருத்தமுடையதோ தெரிந்திலேன். உய்த்துணருமிடத்து, சுவராஜ்யம் இன்றி எல்லோர்க்கும் கல்விபயிற்றவேண்டுமென்பது இயலாதகாரியமாம். ஆங்கில அரசாட்சி வந்து நூற்றிருபத்தைந்து வருஷங்கட்கு மேலாகியும், இந்தியாவில் நூற்றிற்கு ஐவர் அல்லது அறுவர்க்குமேல் கல்விபயில்வதற்கு இடமில்லாமல் இருக்கிறது. ஜப்பானிலோ நற்பது வருஷங்களுக்குள்ளேயே எல்லாரையும் கல்விபயிற்றிவிட்டார்கள். ஜனங்கட்குக் கல்விபயிற்றுவிப்பது ஜனங்களைப்பொறுத்த முதன்மைக் கடமைகளில் ஒன்று. ஆயின், சுவராஜ்யம் அடைவதற்குமுன், அது வேண்டுமெனச்சொல்வது முடியாதது. இதுவிஷயத்திற்கும் நாம் வேண்டுவது மனிதர்களும் பொருளுமேயாகும். மனிதர்கள் கிடைத்தால் பணமுங்கிடைக்கும். அவ்வக்குறிப்பான ஏற்பாடுகளை அமைத்தற்காகவே ஜனங்கள் தம்மாலானபாடு படவேண்டும். தம்மாலான சாமர்த்தியமும் காட்டவேண்டும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் சுதேசிய புனர்ஜனனமுண்டாக்குவதற்கென்றே பத்துப் பனிரண்டுபேர் வெளிவருவாராயின், உடனே நம்நிலை பிரகாசத்துடன் நற்பயனளிக்குங் குறிகள்காட்டும். நமக்கு நேர்ந்துள்ள இந்த ஆபத்துவேளையில் ஜனோபகார சந்நியாசிகளாய்ப் புறப்படக்கூடிய சிலரை உண்டாக்கும் வழிகளை, மேதாவிகளும் தேசாபிமானச்செல்வர்களும் நமக்குச் சுட்டிக்காட்டாமற் போகார்கள் என்றே எண்ணுங்கள்.

மனிதர் உள்ளத்தைச் சோதிக்குங்காலம் இது. உள்ளக்கிளர்ச்சிகொண்ட தீரனும், தேசாபிமானியும் இப்படிப்பட்ட நெருக்கடிவேளையில் நம் நாட்டிற்குச் செய்யுங் கருமத்தைச் செய்யாது பின்வாங்குகின்றார்கள். ஆனால் அதற்குப் பின்னிடாதுமுன்னிற்பவனுக்கே ஆண்பெண்ணடங்கலும் அன்புடன் நன்றிகூறுகின்றார்கள். நரகத்

தைப்போலவே கொடுங்கோன்மையையும் இலகுவில் வெல்லுமுடியாது. ஆயினும் ஒரு திருப்திமட்டும் நமக்குண்டாம். எவ்வளவுக்கெவ்வளவு நடக்கும் போர் கடுமையோ, அவ்வளவுக்கவ்வளவு அடையும் வெற்றி பெருமையுடையதாகும். எதனை நாம் இலகுவில் அடைகின்றோமோ அதனை அற்பமாயே மதிக்கின்றோம். படுங்கஷ்டத்தினளவே, அடையும்பொருளுக்கு மதிப்பும் ஏற்படுகின்றது. அந்தப் பண்டத்திற்கு இன்னவிலை ஏற்படுத்தலாம் என்பதை எல்லாம்வல்ல இறைவனே அறிவார். "சுயேச்சை" யென்றதெய்வீகப்பொருளுக்குப் பெருமதிப்பு ஏற்படாதது வியக்கத்தக்கது" என்ற விஷயம், இதுபோன்ற ஒருசமயத்திற்றான் சொல்லப்பட்டிருத்தல் வேண்டும்.

தேசாபிமானி.

குறிப்பு:— இவ்வியாசம், ஸ்ரீ லாலா லஜபதிராய் அவர்கள், அலகபாத்திற் பிரசுரமாகும் " மாடர்ன் ரெவ்யூ " என்னும் ஆங்கில பத்திரத்திற் கெழுதியதன் மொழி பெயர்ப்பு.

# Islam and Indian Nationality.

# மகமதியமதமும் இந்திய ஜனசமூகமும்.

[1907௵ மே௴ 6௳ செவ்வாய்க்கிழமைத் தினம் திருவல்லிக்கேணி பீச்சில் ஸ்ரீவிபினசந்திரபாலர் கொடுத்த பிரசங்கத்தின் சாராமிசம்]

அக்கிராஸனாதிபதியே! என்னுடனுழைக்கும் தேசஸ்தர் முன்னூரை. கனே!—இப்பெருத்த ராஜ்ய க்ஷேமாபிவிருத்திக்குகந்ததோர் விஷயத்தைக் குறித்துப் பேச எனக்குச் சமயசந்தர்ப்பானுகூலங்கள் ஒவ்வுமாறு செய்த பாலியமகமதிய சங்கத்தவர்க்கு முதன்முதல் வந்தனமளிக்கின்றேன். அடிக்கடி இந்து மகமதிய ஸமூகத்தைப்பற்றி கேள்வியுற்றிருக்கின்றோம். இன்று அதைப்பற்றி யான் அதிகமாய் ஒன்றும் பேசப்போவதில்லை யானாலும் அது சம்பந்தமாய் எனது பாலியானுபவத்தைச் சொல்லக்கூடுமென்று நினைக்கிறேன். இது மகமதியஸமூகமாகவைத்து நாம் பேசுவதன் முன்பாக மதங்களை மொத்தமாய்ப்பார்ப்போமானால், முதன்முதலாய் இருஜாதியின் மதங்களும் வேறு; ஆசாரானுஷ்டானங்களும் வேறு; ஒருவருக்கெதிராய் மற்றொருவர் உண்பதுமில்லை; குடிப்பதுமில்லை. ஆனால் இரண்டு மதஸ்தர்களும் தம்மனப் பூர்த்தியாய் எழும் செயல்களுக்கோ, அன்றி அபிப்பிராயங்களுக்கோ இணக்கங் கொண்டே இருக்கிறார்கள். மதத்திலாகட்டும், ஆசாரங்களிலாகட்டும் வித்தியாசமுண்டாயினும், அக்கம் பக்கத்துள்ள இந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் மனஸ்தாபம் உண்டாவதில்லை. முதன் முதல் வங்காளத்தைப்பற்றிப்பேசுவோம்.

பழக்கமே பேதமின்மைக்குக் காரணம்.

எனக்கிப்போது ஏறக்குறைய ஐம்பது வருஷமாகிறது. எனக்குத் தெரிந்த வரையில் எங்கள் கிராமத்திலாகட்டும் பட்டணத்திலாகட்டும், மகமதியர்களுக்கும் இந்துக்களுக்கும் மனஸ்தாபம் வந்ததென்பது கிடையாது. மனஸ்தாபமுண்டானதெல்லாம் சில தினங்களுக்கு முன்

னிருந்து தான். நானிருந்த கிராமத்திலே யென்கிருகத்திற்குப் பக்கத்தில் ஒரு மகமதிய ஜமீந்தார் வசித்துக்கொண்டிருந்தார். இன்னு மனேக மகமதிய நண்பர்கள் எமக்கிருந்தார்களானாலும் அவரைப் பற்றிமட்டும் இப்போது பேசுகிறேன். சாதாதரணமான ஊர்வழக்கப்பிரகாரம் நான் அவரை சாஷா (Chasha) அதாவது மாமா வென்றழைப்பேன். ஏனென்றால் அம்மகமதிய ஜமீந்தாரின் புதல்வன் என்தந்தையை மாமா வென்றழைப்பான். எமது கிருகத்தில் கலியாணங்கள் வந்தால் நாங்கள் அவரை அழைப்பதும், அவர் அவ்வழைப்புக் கிணங்கித் தம் குடும்பத்துடன் வந்து வதூவரர்களுக்குப் பரிசுகள் கொடுத்து ஆசீர்வதித்தும் போவார்கள். வங்காளத்தின்கண் பண்டைக்காலத்தில் நடந்த இவ்வித ஆசாரமாற்றும் முறையானது நாகரிகமிகுந்துவரு மிச்சமயத்தில் அணுவணுவாய்ப் பிரயோஜனமில்லாது க்ஷீணித்து விடலாயிற்று. பின்னும், விவாகமுதலான விசேஷ சமயங்களில் நாங்கள் கடைகளிலிருந்து மச்சங்கள் வாங்குவதில்லை—மச்சங்கள் சாதாரணமாயுபயோகிக்கப்படுவது வழக்கம்—எங்களுக்குச் சொந்தமாய்க் குளங்களிருந்தபடியினால் அவைகளினின்று மீன்கள் பிடித்துவருவோம். மகமதியர் வீட்டில் விவாஹங்கள் வந்தால் எமது குளத்தை அவர் உபயோகத்திற்கு விடுவதும், எங்கள் வீடுகளில் விசேஷங்கள்வந்தால் அச்சமயத்தில் மகமதியஜமீந்தாரது குளத்தை மீன்பிடிக்க நாங்கள் உபயோகித்துக் கொள்வதும் வழக்கம். எட்ட முதலான மகமதிய விசேஷக்கொண்டாட்டங்களில் நாம் மகமதிய ஜமீந்தாருக்கு ஏதேனும் பரிசுகள் கொண்டு போவதுண்டு. அதேமாதிரி துர்க்காபூஜை எம் வீட்டில் நடக்கும்போது நமது அழைப்புக் கிணங்கி அவரும் வந்து ஏதேனும் பரிசளித்துச் செல்வார். மதசம்பந்தமான பூஜை, பிரார்த்தனை இவைகளைவிட்டு மற்றைய விதிப்பிரகரணங்களில் எங்களுக்கு எப்போதும் மனமொத்துத் தானிருக்கும். இதல்லாமல் ஒருகுடும்பத்தில் சாவேதேனும் நேர்ந்துவிட்டால் அப்போதும் அவர்கள் வந்திருந்து உத்திரக்கிரியைகள் நடக்குஞ் சமயம் கூடவிருந்து உதவி செய்யவும் முன் வருவார்கள். அப்படி உதவி செய்வதில் இருதிறத்தவரது யோக்கியதைக்கும் அந்தஸ்துக்கும் தகுந்தபடியே 4-ரூபாயாவது, அல்லது 4 ரூபாயுடன் ஒரு துண்டு வஸ்திரமாவது அனுப்பப்படுவது வழக்கம்.



நாங்கள் அனுப்பியிருந்தது இம்மாதிரி யிருந்த போதிலும், சகஜமாய் அந்நாளில் ஏற்பட்டிருந்தது இரண்டு ரூபாயாகவும் ஒரு ரூபாயாகவும் தான் இருந்தது.

இந்து-மகமதிய வேற்றுமை

இவ்விதமாக வேகடந்த 10வருஷங்களுக்கு முந்திக்கூட கீழ்வங்காளமாகாணத்தில் இந்துக்களுக்கும் மகமதியர்க்கும் மேற்சொன்னவாறு அநுஷ்டானமிருந்தது. சென்ற வருஷம், ஏறக்குறைய இக்காலத்திலேதான் நான் கோமில்லா (Comilla)விலிருந்தேன். அவ்வூரிலுள்ள 11 மகமதியர் ஒன்று கூடினார்கள்; அக்கூட்டத்திற்கு அந்நகர மகமதிய ஜமீந்தாரொருவர் அக்கிராஸனம் வகித்திருந்தார். அச்சபைக்கு என்னைவரும்படி அழைத்தார்கள். அன்றையதினம் பிற்பகலில் நான் சிறிதுநேரம் இளைப்பாறு முத்தேசத்துடன் படுத்திருந்தேன். அச்சமயம் திடீரென்று என்னைப் பார்ப்பதற்காக ஒரு மகமதியபிரபு வந்தார். அவர் முந்தி எனது கிராமத்திலிருந்த ஜமீந்தாரின் குடும்பத்திலிருந்து கோமில்லாவில் விவாகம் செய்துகொண்டதன் காரணமாக அந்நகரத்துக்குப் பெரிய தனிக குடும்பத்தில் சேர்ந்தவராயினர். நான் மைனராயிருக்குங் காலத்திலேயே அக்கிராமத்தை விட்டு வெளியேறிவிட்டேனானாலும், இளவயதில் என் குடும்பத்தவரோடு சுமுகத்துடன் பழகிவந்த மகமதியஜமீந்தாரது குடும்பத்துதித்த அவர் என்னை மறவாமல் எனது நடவடிக்கைகளைக் கவனிக்கிறாரென்பது இதனால் செவ்வையாய் வெளியாகின்றது. என்னைப் பற்றி அவர் அறிந்துகொள்ளக் காரணமென்ன? மகமதியர்களும் இந்துக்களும் மனஸ்தாபத்துடன் கோமில்லாவில் ஒருவருக்கொருவர் தூரத்தில் நிற்கவேண்டுமென்று பிரமாதமாய்ப் பிரயத்தனங்கள் நடந்தபோது, என்னை வந்து ஒருமகமதியர் கனிவாய் அழைத்தது வியக்கத்தக்கதல்லவா? ராஜாங்க சம்பந்தமான விஷயங்களைக்குறித்து அவர்வந்தவரல்லர். என் கிராமத்தில் அவரது குடும்பத்திற்கும் எனது குடும்பத்திற்குமிருந்த நட்பினாலே தான். இது கால்நூற்றாண்டிற்கு அதாவது இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னிருந்த நிலைமையாகும். ஐந்து வருஷங்களுக்கு முந்திக்கூட வங்காளத்துப் பற்பலவிடங்களில் இப்படித் தானிருந்தது. ஆகையால் இந்துமகமதியத்தொல்லையென்ற பெயருடன் எதுவுமில்லை. ஆனால் அவ்விருவரைப் பொறுத்த மட்டில் மனத்தாங்கல்கள் நேர்ந்தது.

எக்காரணத்தை யொட்டியானாலுஞ் சரி, ஆதிகாலத்தில் அந்நியதேசத்திலிருந்து மகமதியர் வந்தவராவரென்றும் : இந்தியாவை ஜயித்து அதில் குடியேறினார்களென்றும் பெயரிருந்தாலும், ஆயிரம் வருஷங்களுக்கு அதிகமாகவே அவர்கள் இந்திய ஜனஸமூகத்தவருடன் சேர்ந்து வாசஞ்செய்துவிட்டபடியால், தலைமுறை தத்துவமாய் அவர்கள் இந்திய ஜனஸமூகத்தில் சேர்ந்தவராவரென்றே சொல்ல வேண்டும்.

**யோகம், வைராக்கியம்.**

இந்து மகமதிய வித்தியாசம் ஏதாவதிருந்தாலும் அது அவ்விரண்டு ஜாதியரின் கீழ்வகுப்பினுள் இராது; இருப்பதெல்லாம் உயர்தர வகுப்பினருள்ளேதான்; அவ்வித்தியாசத்தை அறியவும் உணரவும்மதிக்கவும் அவர்களுக் கிஷ்டமிருக்கும்பக்ஷத்தில் ஒருவகுப்பினர் மற்றொரு வகுப்பினரின் கிரந்தங்களை நன்குணர்ந்து நாகரிக வகைகளை ஊன்றிப் பார்த்தால் உண்மை வெளியாகாமற் போகாதென்பது திண்ணம். உண்மை வெளியாகாமற் போவதோடு மட்டுமா? அல்ல. ஒரு ஜாதியர்க்கு மற்றொரு ஜாதியரிடமிருக்கும் அன்பும் ஆசையும் நாளுக்குநாள் அதிகரித்து, மற்றொருவர் மட்டு மரியாதையுடன் அழைக்கவும் நடத்தவும் நடந்து கொள்ளவும் இடமுண்டாகும். ஆகையால் முதன் முதலாக இந்துக்களைப்பற்றிப் பேசுமிடத்து நமக்குத் தோன்றுவதென்ன ? இந்துக்கள் தம்மதமுறைக்கொள்கைகள் மேலானவையென்று சொல்லுகிறார்கள். அப்படிச்சொல்வதில் இரண்டேமுதன்மையாய் நிற்கின்றன. அவையாவன:—யோகம், வைராக்கியம். யோகமென்பது பொதுவாய்த் துறவியாசிரமம் எடுத்தகாலத்துத் தனியே ஓரிடத்திலிருந்து ஐம்புலன்களையுமடக்கி மனத்தை ஓர்நிலையில் நாட்டுவதேயாகும். வைராக்கிய மென்பது கிருகஸ்தாசிரமத்திலும் மற்றெந்த ஆசிரமத்திலுமிருந்தாலும் இதர வஸ்துக்களின்மீது ஆசைவையாது அதனை அறவே யொழித்துப் பிடித்த பிடிவாதத்தை நிறைவேற்றுவதேயாகும். இந்துக்களுக்குள்ளே யோகிகளென்றும் வைராக்கியஸ்தர்களென்றும் இருந்ததை யொப்ப மகமதியர் மதத்தை அவலம்பித்தோருள்ளும் யோகமும் வைராக்கியமும் உண்டென்பதை நீங்கள் அறிவீர்களா ? அரசருக்கரசராய் நின்ற மகிபதிஜனகர் தமக்கிருந்த வை



ராக்கியத்தினாலன்றோ, பூமியின் பாலுள்ள எப்பண்டத்திற்கும் ஆசை கொள்ளாராயினர். பெருந்தன்மையும் ஜன்மாதிக்கியமும் பொருந்திய மகமதிய மதத்தின் ஆதிகர்த்தரின் வைராக்கியத்தைக் காட்டிலுமா, வேறொருவரின் வைராக்கிய மிருக்கப்போகிறது ? மகமதியராஜ்ய ஸ்தாபகனாகர்த்தர் இறந்து போகையில் விட்டுப் போனது கிழிந்த பாயும் மண்சட்டியும் தவிர வேறொன்றுமில்லை. பூமியிலுதித்துப் பூபாரஞ் செய்த மகமதிய அரசரான மகம்மதுக்குப் புவிசம்பந்தமான அன்பு அவ்வளவே யிருந்தது போலும். மகமதைப்பற்றியும் அவருடைய பெண்ணைப் பற்றியும் மாப்பிள்ளையான ஆலியைப் பற்றியும் ஒரு கதையுண்டு: மாப்பிள்ளையான ஆலி ஒருநாள் போர்க்களத்தில் வெற்றியடைந்தபோது, வெற்றியடையுங்கக்ஷிக்காரர்க்கு இயற்கையாய் வருவதுபோல ஆலிக்கும் சிற்சில பொன் நாணயங்கள் கிடைத்தன. அன்றையதினம் மகமதுக்குச் சாப்பிட வொன்றுமில்லை. ஆனால் தமது மாப்பிள்ளை சண்டையில் வெற்றியடைந்து சம்பத்துடன் திரும்பியிருக்கிறாரே, அவரிடமாவது போய்த் தாமும் தம் நண்பர்களுமாய்ச் சாப்பிட்டு வரலாமென் றெண்ணங்கொண்டு மகம்மது தம் சீடர் சிலருடன் ஆலியின் வீடுபோய்ச் சேர்ந்தார். வாயிற்கதவு மூடப்பட்டிருந்தது. மகம்மது “ஆலி!” என்று கூப்பிட்டுக் கதவைத் தட்ட, ஆலி இல்லாததினால் அவரது மனைவி,அதாவது மகம்மதுவின் பெண்ணான ஹலத் என்ற மாதராள் குரல்கொடுத்துத் தன் கணவன் வீட்டிலில்லை யென்று சொன்னாள். மகம்மது தன் மகளை வெளி வரும்படி சொன்னதற்கு அவள் “என் தந்தையே! அங்கு நீர்மட்டு மிருக்கிறீரோ, வேறு யாராவது இருக்கிறார்களோ” என்றாள். மகம்மது உடனே தம் நண்பரும் தம்முட னிருப்பதாகச் சொன்னதும் குமாரத்தியானவள் தனக்குத் தரித்துக் கொள்ள நல்ல உடையில்லாதபடியால் தந்தையைத் தவிர மற்றெவரெதிரிலும் வரமுடியாதென்றாள். பிறகு மகம்மது “நாங்களெல்லோரும் சாப்பிடுவதற்காக உன்கிருகத்திற்கு வந்திருக்கிறோம்; ஆலி எங்கே” என்று சொல்லிய போது அவள் “ஆலி இன்னும் வரவில்லை” என்றாள். “ஆனால் எங்களுக்கு நீ சாப்பாடு போடு” என்று தந்தைகூறவே “தந்தையே என் சிறிய குழந்தைக்குப் போட்ட இன்று மத்தியானம் பாலுக்குக்

கூட வகையில்லாமற்போய்விட்டது" என்றனள். "என்ன, இன்றுஉன் குழந்தைக்குப் பால்கூட இல்லையா? அதெப்படி?" என, அதற்குக் குமாரத்தி "இன்றையதினம் ஆலிக்குக் கிடைத்ததனைத்தையும் அவ்விடத்திலேயே நின்றுகொண்டு வந்த பக்கிரி (சந்நியாசி) களுக்குப் பகுத்துக் கொடுத்துவிட்டார்." என்றனள். இப்படி ஆலிசெய்ததானது வைராக்கியத்தைச் சுட்டிக் காட்டுகிற தல்லவா? நீங்கள் யோகத்தைப்பற்றிப் பேசுகிறீர்கள். மகமதிய யதிகளுள்ளும் சந்நியாசிகளுள்ளும் சமாதி நிலையடைவது என்னும் பத்ததியிருப்பது உங்களுக்குத் தெரியுமா? இதுபோகட்டும்; ஆலியைக் குறித்து மற்றுமொருகதை சொல்லப் பட்டிருக்கிறது.

**ஆலியைப்பற்றிய கதை.**

மகமதிய மதத்தின் ஆதி கர்த்தரான மகம்மதுவின் மாப்பிள்ளை ஆலி போர்க்களத்தில் காயமுண்டபோது அவருக்கு, உண்டாயிருக்கக் கூடிய அவஸ்தையை யாமெடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை. முழங்காலுக்குக் கீழுள்ள தசைப்பற்றுள்ளவிடத்தில் கூர்மையான தொருகருவி(பாலா)குத்திக்கொண்டது. பிறர் அதைத் தொட்டு எடுக்கமுடியாதபடி அவ்வளவு நோவாயிருக்க, ஆலியின் சிஷர்கள் அக்கருவியைத் தாம் பிடுங்கிவிடுவதாக மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள். கொண்டாலும் என்ன? ஆலி எவரையும் தன் சமீபத்தில் வரக்கூடா தென்று பிடிவாதமாய்ச் சொல்ல, அதன்பேரில் சிஷர்கள் எல்லோரும் மகம்மதுவினிடம் போய் "எங்களுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை; ஒடிந்துபோன பாலாவொன்று ஆலியின் தொடையில் சொருகிப்பதிந்து கிடக்கிறது; அதைப் பிடுங்கி விடுவதாகச் சொன்னால் ஆலி இஷ்டப்படுவதாகக் காணப்படவில்லை," என்று முறையிட்டார்கள். அதன்பேரில் அச்சிஷர்களைப் பார்த்து மகமது சொன்னது என்னவென்றால் "இப்போது நீங்கள் ஒன்றுஞ் செய்யவேண்டாம்; ஸ்தோத்திரம் செய்யுங்காலத்தில் ஆலி பிரார்த்தனைக்கு உட்காருவான்; அத்தருணமறிந்து நீங்கள் சொருகிக்கிடக்கும் பாலாவை இழுப்பீர்களானால் அதனால் உண்டாகும் வலியை அவன் உணரமாட்டான்." என்றார். அவர் கூறியவண்ணமே ஆலி ஸ்தோத்திரஞ் செய்யவுட்கார்ந்து இகத்தினின்று பரத்தின்மீதே பாரமிட்டு மனதைச்செலுத்



திய அவ்வேளையில், தொடையில் ஆழமாய்ப் பதிந்திருந்த பாலாவைப் பலாத்காரமாய்ச் சீடர்கள் வெளியில் இழுத்து விட்டார்கள். அதனால் உண்டாகக்கூடிய வலி ஆலிக்கு அப்போதுதோன்றவேயில்லை.

**மகமதிய மதத்தின் உட்கோள்கை.**

யோகத்தையும் சமாதிநிலைமையையும் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில், அஸ்ரத்தைக் குறித்த கதையொன்று என் ஞாபகத்துக்கு வருகிறது. அது இதுவே: அஸ்ரத்தின் மனைவிக்கு அயிஷா வென்றுபெயர். மகம்மது அந்தப்புரத்தில் அயிஷாவுடன் கொஞ்சிக்குலாவி, தனது அன்பிற்கும் பிரியத்திற்கும் ஏற்றமனையாட்டி இவளேயென ஆமுஷ்மிக (பரலோகத்து) சாம்பிராஜ்யத்தை மறந்து ஐஹிக (இவ்வுலகத்து) மாயைகளின்பால் கவனம் செலுத்தி நவத்துவாரங்களோடு கூடின புழுக்கூடாம் சாசுவதமல்லாத இப்பூதவுடல் தரணியில் இருப்பது சாசுவதம்என்றேகட்டியணைத்து முத்தமிட்டுஸரசசல்லாபங்களோடு எனக்கேற்ற கணவன் நீயே யென்றும், எனக்கேற்ற மனைவி நீயே என்றும், ஒருவர்க்கொருவர் வசீகரமான முகங்கொண்டு வசனாமிருதஸாகரத்தில்ஆழ்ந்திருக்குமச்சமயத்தில்மசூதில்மணிஅடித்துவிட்டால் மகம்மதுக்குத் தன்னெதிரில் வீற்றிருப்பவள் அயிஷா அல்லவென்றே தோன்றும். ஏனென்றால், கண்டாமணி நாதம் காதிற்பட்டதும் மகம்மதுவின் மனநிலை ஏகபலத்தையடைந்து ஆதியந்தமில்லாது பராபரவஸ்துவாயிருக்கும்கடவுளிடம் வயப்படும்சந்தர்ப்பம்ஆகிறபடியால்,அச்சமயம் தன்னெதிரில் வீற்றிருப்பவள்தான் இதுபரியந்தம் கொஞ்சிக் குலாவிவந்த தன் அருமை அயிஷாவென்பதைக்கூட மறந்துவிடுவார். நீங்கள்கோரானைப் படித்தாலும் ஷாபீஸை (Shafiz)ப் படித்தாலும், மகமதிய மதத்தின் பூர்வோத்திரங்களைப் படித்தாலும்,மகமதியரிஷிகளின் ஜீவசரிதைகளைப் படித்தாலும், ஒவ்வோர் அமிசமும் அதாவதுஉண்மையானமதத்தின்உட்கொள்கைஇன்னதென்பதையும் தெய்வபக்தி இத்தன்மையதென்பதையும் மனோவாக்குக் காயங்களினால் தெய்வத்தைத்துதிப்பது இவ்விதமென்பதையும், இந்துமதத்திலாகட்டும் மற்றெந்த மதத்திலாகட்டும் இருப்பதுபோல,மகமதியமதத்திலும் நீங்கள் காண்பீர்களென்பதற்கையமில்லை. மதசம்பந்தமான

ஐக்கியம் இங்ஙனமிருக்க ராஜகீயசம்பந்தமாயும் இவ்விந்து தேசத்திற்கு மகமதியபலம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தியாவை ஒரு தேசம் என்று இதரர் கருதும்படி செய்தது மேற்றிசையாரே யென்றும், அவர்கள் இதை ஒரு பெருந்தேசமாக்கிவிட்டனர். இப்போதிருக்கும் பிரிட்டிஷ் துரைத்தனத்திலிருந்து ஜனங்களுக்குள் ஓர் ஐக்கிய மத்தியம் ஏற்பட்டிருந்தாலும் இத்துரைத்தனம் இத்தேசத்தின்கண் ஸ்தாபனமாவதற்கு முந்தியே இந்திய ஜனசமூகத்துவம் ஏற்பட்டிருக்கின்றது. அது மோஹலாயர் காலத்திலே தான்.

இந்திய ஜன சமூகத்துவம்.

ஐரோப்பியரது திறமை வாய்ந்த சூட்சுமத்தினாலும் புத்திவிசாலத்தினாலும் இந்தியஜன ஸமூகத்தவர்க்குப் பெருத்த நன்மைகள் உண்டாயினும், அது மொஹலாயர் காலத்திருந்தே கொஞ்சங் கொஞ்சமாய்ப் பெருகலாயிற்று. ஒருதேசத்தின் செழிப்பானது ஸமூகத்தவரைச் சார்ந்திருக்குமென்றும் மூலைக்கொன்றாய்ச் சிதறிக்கிடக்கும் சில்லறை ஸ்தாபனங்களில் செழிப்புண்டாவதைக் காட்டிலும், ஜனஸமூகச்சேர்க்கையில் அது வளம்பெற்று பிரகாசிக்குமென்றும் எவருக்கும் நிதரிசனமாய் விளங்கும். தேசம் செழிப்பதற்குத் தகுந்தபடி அதனுள் வசிப்போருள்ளும் ஒற்றுமை யேற்படுமென்பது எல்லாம் அறிந்தோரது துணிபு நான் ஏகாதிபத்தியத்திற் குட்பட்டவன்; அதாவது ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட ஸமூகத்தவருள் யானுமொருவன்; அப்படிப்பட்ட ஏகாதிபத்தியமானது சரியானவழியில் நடத்தப்படவேண்டும். தேசத்திலுள்ள சகல வருணத்தவருக்கும் சரிசமமான சுதந்தரமிருக்கவேண்டும். ஜனஸமூகத்தவருக்கான தேசமாயிருப்பதே நன்று; அல்லது ஜனங்களுக்குள்ளேயே ஏதோ குறிப்பிட்டதொரு வமிசத்திற் குள்ளடங்கி யிருக்குமானால் சமவுரியங்களும் சமசுதந்திரங்களும் உண்டாம்; மகமதிய நிருவாகத்தில் சிற்சில மனத்தாங்கல் இருந்த போதிலும், அவை மதசம்பந்த மானவையேயன்றி ராஜாங்க சம்பந்தமானவை யல்ல; மகமதியர் படாணியர் மொஹலாயர் இவர்களது அரசாட்சியில் இந்துக்கள் போர்க்கருவிகள் வைத்திருக்கக் கூடாதென்று சட்டஞ் செய்தனரா? இந்துக்களுக்கு அவ்வுரிமை கொடுபடவில்லையா? மொஹலாயரின் காலத்தில் இந்துக்கள் ஒரு



கோர்ட்டாரால் விசாரிக்கப்பட, மகம்மதியர் வேறொரு கோர்ட்டில் விசாரிக்கப்படட்டு மென்ற சுதந்தர மில்லையே. மகமதியக் கைதி நற்சாந்திட்டு மச்சுள்ளகட்டிடத்தில் வசிக்க இந்துக்கள்கீழே வசிக்கவில்லையே. ஏதோ சிற்சில பேதங்களிருந்தால், அவை நான் முந்திச் சொன்னபடி, மதபேதங்களே யன்றி வேறெதுவுமில்லை. மகமதியர்களுக்குமுந்தி இந்துக்களின் ஸிவில் உரிமைகளும் கிரிமினல் உரிமைகளும் வருணாச்சிரமத்துக்குத் தகுந்தபடி யிருந்தன. மகமதியர் வந்தபிற்பாடே ராஜகீயவுரிமைகள் அனைவர்க்குமொன்றே யென்றேற்பட்டன. இதற்குஅஸ்திவாரக்கல் நாட்டினவர் மகமதியரேயாவர்; இந்துலாவில் பெரும்பாகம் மகமதியச் சட்டவிதிகளிலிருந்தே எடுபட்டதாகும்; வரி விவர ஏற்பாடுகள் [illegible] காலத்திலிருந்தே ஏற்பாடாயின. நாகரிகமிகுந்த பிரிடிஷ்அரசாட்சியில், வரிவிவர ஏற்பாடு சீரடைந்ததாகச் சொன்னபோதிலும், நிலவரியைப்பொறுத்த மட்டில் அவ்வாறு காணப்படவில்லை. அவுரங்கஸீபினால் இந்துக்கள் மீது விதிக்கப்பட்ட "ஜெஸ்ஸியா" எனும் வரியைப்பற்றிப்பலர் பலவிதமாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள்; அவ்வரிக்கு மகமதியர் விடுபட்டனரென்பதும் இந்துக்களே சிக்குண்டனரென்பதும் பலரது துணிபு. ஆனால் எனக்கு ஒரு சந்தேகமுண்டு. நான்சொல்வது தவறாகாதானால், ஜெஸ்ஸியா வென்பதை யுத்தவரி யென்றுதிருத்துங்கள். மகம்திய மதத்தையவலம்பிக்காது மகமதியரது ஆதீனத்திற்குட்பட்ட ஜனங்களுக்கு விதிக்கப்பட்டதாகும் அவ்வரி; மகமதியஸமூகத்திற் சேராமல் அச்சமூகவரசாட்சிக்குட்பட்டு அவ்வக்காலங்களில் ராணுவத்தில் சேரமுடியாதோர்க்கும் ஜெஸ்ஸியா எனும்வரி விதிக்கப்பட்டது. அப்படி விதிக்கப்பட்டதும் மதசம்பந்தமான யுத்தங்களுக்கேயன்றிமற்றெதற்குமல்ல. 15, 16-ம் நூற்றாண்டுகளிலிருந்த சீர்திருத்தக்காரர்கள் பெரும்பாலும் மகமதியக் கொள்கைகளின் பலத்தை நாடித் தம் அநுஷ்டானங்களைச்செய்துவந்தனர். அதனில் நானக்கும் (Nanak) சேர்ந்தவர். ஸீக்கியரின் கிரந்தங்களை ஆராயுமிடத்து இதிகாச புராணாதி கிரந்தங்களிலிருந்தும், ஷேக்பரீத் முதலான மகமதிய ரிஷிகளது உபதேசரத்னங்களிலிருந்தும் மேற்கோள்கள் பக்கவட்டாய் நிற்பதைக் காணலாம். பின்னும் கபீர்தாஸரென்ன, ஸ்ரீ சைதன்னிய ஸ்வாமிகளென்ன, இவர்களும் மகமதிய மதத்தை யவல

ம்பித்தவர்கள். சுமார் 400 அல்லது 500 வருஷங்களுக்கு முந்தித் தென்னிந்தியாவில் வசித்திருந்ததாகச்சொல்லப்படும் பாகவதர்களைக் குறித்து எனக்கு அவ்வளவாகத் தெரியாது; ஆனால் பஞ்சாப் நானக்குக்கும், மேலிந்தியக்கபீருக்கும், வங்காளசைதன்யருக்கும் பம்பாய் துகாராமுக்கும் உடந்தையர் போல் அவர்களிருந்ததாகக் கேள்வி. இந்தியக் கீழ்த்தர ஜாதியினரை மேலுயர்த்த வெகுவாய் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இப்படி யேற்பாடுகள் செய்வதனால் கீழ்த்தர நீசனும் மகத்தான மகான் பதவியடையவும் சாமானியரிடம் ஜகமத்தியமும் உண்டாகின்றன.

சேர்ந்துவாழ்வதின் சிறந்த வலிமை.

ஜாதிச்சேர்க்கையுண்டாவதும் அதனால் தான். மகாராஷ்டிர தேசத்தையரசாண்ட சிவாஜி, பஞ்சாபிலிருந்த குருகோவிந்து, வங்காளத்திருந்த பிரதாபருத்திரன் முதலானோர் ஜாதிச் சேர்க்கைக்காக மிகுந்த சிரமமெடுத்ததைச் சரித்திரானுசாரமாய் எவரும் தெரிந்து கொள்ளக் கூடும். இவ்வளவு தூரம் இவர்களுழைத்தது எதனால்? இந்துக்களின் கொள்கைகளிலும், நடைமுதற் பழக்கங்களிலும், எண்ணத்திலும் மகமதியமத முறைப்பாடுகள் சேர்ந்ததன் காரணமாகத்தான் இவையனைத்தையும் செவ்வனேயுணர்ந்து, இந்தியர்களுக்குள்ளிருக்கும் பற்பல ஸமூகத்து வித்தியாஸங்களையொழித்துத் தேசக்கட்டைப் பலப்படுத்த முயல வேண்டும்; நாம் இத்தேசத்தில் ஸ்தாபிதமாக்க முயலும் இந்திய ஜனஸமூகத்திற்கும், உலகத்து மற்றவிடங்களிலிருக்கும் ஸமூகத்திற்கும் வித்தியாசமுண்டு. ராஜாங்க சம்பந்தத்தையொட்டி முற்காலத்தில் பற்பல ஜாதியர் ஒன்றுபட்டாராயினும் இப்போது சிதறிக் கிடக்கும் ஜாதியரை ஒன்று சேர்த்து ஒருஸமூகமாவதற்குரிய தேசம் இதுவன்று; இந்தியாவிலுள்ளோர் காட்டுமிராண்டிகளல்லர். நல்லறிவுபடைத்தவர்; புத்தி விசாலித்தவர்; தலைமுறை தத்துவமாய் வாழ்ந்து வருபவர்; சொந்த மதங்களும் பூர்வோத்திரங்களும் கொண்டவர். ஆதலின் நாம் சேர்க்கவேண்டியது சிதறிக் கிடக்கும் ஜாதிச் சேர்க்கையல்ல; படித்து நாகரிகமிகுந்து புத்தி விசாலங்கொண்டிருக்கும் ஜாதியரையே ஸமூகத்தவராக்க வேண்டும். ஒரே ராஜ்யத்தில் எல்லோர்க்கும் பொதுவான சகல வழியையும் வியாபார வழி



யையும் அவலம்பிக்கும் ஜாதியானது முற்றிப் பெருகி நன்னிலையிலிருக்குமாயின், அதற்குச் "சேர்க்கையுற்ற ஸமூகம்" (Federated Nation) என்று பெயராகும். இவ்விதமாக ஒவ்வொரு முக்கியமான ஜாதியரும் ஏகோபித்து ஒன்றிலில்லாக்குறைவை மற்றொன்றினால் தீர்மானித்து, ஒன்றுக்குபயோகமாய்க் கருதப்படுமவற்றை மற்றொன்றுக்குமெடுத்து, குற்றங் குறைவும் மாசும் மருவுமில்லாதபடி காத்து, ஜீவகாருண்யத்தையும் தேசக்ஷேமாபிவிருத்தியையும் மனத்திற்றாங்கி யுழைத்தால் அதுவே ஜாதிக்கட்டெனப்படும். இனிவரும் இந்திய ஜனஸமூகமானது ஒரே மதத்தைச் சேர்ந்ததா யிராது; அதற்கு ஒரே ஆசாரச் சீர்திருத்த விதியிராது; ஆத்மாவலோகன சாம்ராஜ்யமடைய வேண்டுமெனின், அதற்கு ஒரேவழி கிடையாது. இதற்காக இந்துமதஸ்தன் அதைவிட்டுப் பிறழ்வதும் மகமதியன் தன் மதத்தை விட்டுப் பிறழ்வதும் கூடாது. அவரவர் தத்தமக்குரிய காரியங்களைச் செய்ய வேண்டும்; இம்மாதிரியே தான் கிறிஸ்தவர், பார்ஸி, மற்றுமுள்ளோர்க்கும். இந்தியா சேர்க்கையுற்ற ஜனஸமூகமானால் அதற்குத் தனியாக இந்துஜனஸமூகமென்றாவது, மகமதிய ஜனஸமூகமென்றாவது, கிறிஸ்தவ ஜனஸமூகமென்றாவது பார்ஸி ஜனஸமூகமென்றாவது பெயரில்லை. ஈசுவர சங்கற்பத்தினால் நமது யோக்கியதை, அந்தஸ்து, சரிதை முதலியன மற்றெந்த தேசத்திலிருப்பது போலுமில்லை. ஆதலால் உலகத்திலுள்ள ஜனஸமூகத்தவருள் யாமும் ஒருவராய்ப் பிரகாசிக்க முயலவேண்டும்; அப்படிப் பிரகாசிப்பதில் மகமதியர்கள் இந்துக்களோடும் இந்துக்கள் மகமதியரோடும் சேர்ந்து பிராதாக்கள் போலுழைக்க வேண்டும்; மாச்சல்லியங்களை யொழிக்க வேண்டும்; ஒருவருக்குப் பலவீனம் வந்தால் அது மற்றவருக்குமே; ஒருவருக்கு வலிமை வந்தால் அதுவும் மற்றவருக்குமே; இப்படியாகப் பாவித்து ஒன்று சேர்ந்துழைப்பதனால் இந்தியநாகரிகத்தில் சிக்குமுக்கலிட்டுக் கிடக்கும் அம்சங்களைச் சீர்திருத்தி, நம்முடைய எதிரிகள் நம்மைச் செய்ய விரும்பும் தற்கால நிலைமைக்கு யாதொரு குந்தகமுமில்லாமல் இந்திய ராஜகீய விஷயங்களை எளிதல் போற்றிக்கொள்ளலாம். ("வந்தே மாதர கரகோஷம்")

ல. அனந்தய்யர்.

# அமெரிக்க தனவான்களும் வித்யாதானமும்

தற்காலம் குபேர சம்பத்துள்ளவர்கள் அமெரிக்காவில் தான் வசிக்கிறார்கள். அந்நாட்டாரது அரிய பெரிய முயற்சி உலகத்தாரால் புகழற்பாலது. அவர்கள் எத்துணை கருத்தாய்ப் பொருளீட்டுகிறார்களோ அத்துணை தாராளமாய்ச் செலவும் செய்கின்றனர். நம் நாட்டில் தற்காலம் பார்ஸி தனவான்களும் நாட்டுக்கோட்டையாரும் அவ்வாறு செய்துவருகின்றனராயினும் அமெரிக்கரோடு ஒப்பு நோக்குங்கால் இவர்கள் எம்மட்டு நிற்கமுடியும்? சமீபகாலத்தில் ஜே. டி. ரோக் பெல்லர் என்னும் தனவான் ஒன்பது கோடியே அறுபது லட்சம் ரூபாவை வித்தியாதானஞ் செய்திருக்கின்றனர். நாட்டுக்கோட்டையார் ஏற்படுத்திய சத்திரங்களும் பாடசாலைகளும் தேவஸ்தான தர்மங்களும் ஒருங்கு கூடினும் இந்நன்கொடைக்கு ஈடாகுமோ என்பது சந்தேகம். இருந்தாலும் உள்ளதைக்கொண்டு நாமும் திருப்தியடையவேண்டுவதே. மேற்குறித்த நன்கொடை அமெரிக்காவின் வித்தியாபிவிருத்தியின்பொருட்டு கொடுக்கப்பட்டது. அது விஷயமாய் அந்நாட்டில் ஒரு பொதுச்சபை ஏற்பட்டிருக்கின்றது. அச்சபையாரிடம் இக்கருந்தனம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் அன்றோ அமெரிக்கர் ஏனை நாட்டாரினும் சீரும் சிறப்பும் அடைந்திருக்கின்றனர். இப் புண்ணியவானுக்கு இம்மாதிரியான தர்மத்தில் மனங்கவிந்தது அந்நாட்டாரின் அதிர்ஷ்டமே. இவரைக் கர்னன் என்று அழைப்பதும் போதுமா? இப் புண்ணிய புருஷர் நீடூழிவாழ்ந்து இகபர சௌக்கியங்களைப் பரிபூரணமாகப்பெறறு வாழ்வாராக. இத்துணை பெரிய நன்கொடை ஒரே சமயத்தில் இதுவரைஏற்பட்டதில்லையென்றே கூறலாம். நிற்க.

கார்னீஜி என்ற மற்றோர் தனவான் ஒரு பெரிய தொழில் வித்தியாசாலை ஏற்படுத்தியிருக்கின்றனர். அதன் விஸ்தீரணம் நான்கு ஏகரா. அதன் தொழிற்சாலை முதலியன முப்பத்திரண்டு ஏகரா



அடங்கும். அக்கல்லூரியில் உள்ள அழகிய கட்டடங்களும் மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றன. தளங்கள் சலவைக்கற்களால் மூடப்பட்டிருக்கின்றன. புஸ்தகசாலையில் மட்டும் லக்ஷத்து ஐம்பதினாயிரம் புஸ்தகங்களிருக்கின்றனவாம். அதற்கென்று கார்னீஜி செலவுசெய்த பொருள் ஏழரைக்கோடி.

இம்மாதிரியான பெருங்கொடை நம் நாட்டில் என்றைக்கு ஏற்படுமோ அறியோம். அறிவை இம்மாதிரி செலவுசெய்து அபிவிருத்திபண்ணினாலொழிய தேசம் முன்னுக்கு வருவது அரிது. நம் நாட்டில் வித்தியாதானத்தை எல்லாத் தானங்களிலும் மேலாகமதித்து வந்தனர். அதற்கென்று ஜனங்கள் பெருங்கொடையளிக்காவிடினும் தங்களால் கூடியமட்டும் ஆங்காங்கு அதனையபிவிருத்தி செய்தனர். வரவர இவ்வித்தியாதானம் குறைவுபட்டு வருகின்றது. ஏழைகளுக்குச் சுலபமாய்க்கல்வி புகட்டிவரத்தக்க ஏற்பாடுகள் நாம் செய்யவேண்டுவன அநேகம் உண்டு. தற்காலம் உயர்தர கலாசாலைகள் ஏற்படுத்த நம் தென்னாட்டில் சில அரிய முயற்சிகள் நடந்துவருகின்றன. அவைகளுக்குக் கோடிக்கணக்காகவும் லக்ஷக்கணக்காகவும் நன்கொடை கொடுக்கப் போதுமான மனுஷர்கள் இல்லாவிடினும் ஆயிரக்கணக்காகவும் பதினாயிரக்கணக்காகவும் நன்கொடை கொடுக்க இல்லாமற்போகவில்லை. சிற்றுயிர்க்குற்ற துணை கல்வியொன்றென்றே நம் தேசத்தார் முன்போல் அறிந்து அதனை எப்பாடுபட்டாவது அபிவிருத்திசெய்ய முயலல்வேண்டும். வீண்செலவு செய்யும் நம் தனவான்கள் நாட்டின் நன்மையைச் சிறிது கவனிப்பார்களானால் நம் தேசம் முன்னுக்கு வரும். நம் தேசத்தில் வழக்கின்பொருட்டுச் செலவிடப்படுகிற சொத்தில் ஒரு சிறிதுபாகம் வித்தியா விஷயத்தில் செலவிடப்பட்டால் எத்துணையோ சீரையும் சிறப்பையும் தருமே. கரும்பு தின்னக் கூலியா. பூர்வ ஜன்மத்துப் புண்ணிய வசத்தினால் தனம்படைத்தவர்கள் கிழமைப்பட வாழ்ந்து நாட்டின் நன்மையை நாடி வித்தியாபிவிருத்தியைத்தேடி அழியாப் புகழை அடைவார்களாக. "வித்தியாதானம் தத்பரம்" என்றவண்ணம் வித்தியாதானத்துக்குமேல் தானம் கிடையாது என்பது திண்ணம்.

பத்திராதிபர்.

# விநோதங்கள்.

நாய்களின் புத்திசாதுரியத்தைப்பற்றியும் விசுவாசத்தைப்பற்றியும் எத்துணையோ கதைகள் படித்திருக்கிறோம். பிரான்சு தேசத்தில் சத்திரத்தைக்காத்துக்கொண்டிருந்த ஒரு நாய் பிச்சைக்காரர்களுக்குச் சோறுகொடுக்கும் சமயம்பார்த்து அவ்விடத்தில் ஏற்பட்ட வழக்கப்படி மேடைமீதேறி மணிநாவில் கட்டப்பட்ட கயிற்றைத்தொட்டு ஆட்டும். மணியடித்தவுடனே சாப்பாடு வைக்கப்படும். அதனைநாய் புசித்துப் பசிதீரும். வெகுநாளாய்ச் சத்திரத்திலுள்ளவர்களுக்கு நாயின் தந்திரம் வெளியாகவில்லை. ஒருநாள் தற்செயலாய் அந்தத் தந்திரத்தைக் கண்டுபிடித்தபின்னர் சத்திரத்து அதிகாரிகள் நாயின் புத்திசாதுரியத்தை வியந்து அதன் ஆயுள்பரியந்தம் அதற்குச் சோறிட்டார்கள். அதுபோலவே பூனைவிஷயமாய் ஓர் அதிசயம் நடந்தது. அஃதாவது:—பூனை வெளியிலிருந்து உட்செல்லவேண்டுமானால் வீட்டின் கதவுமணியைத்தட்டித் திறந்தவுடன் உட்செல்லும். கதவை எவ்வாறு தட்டினது என்றால் மணியழுத்தியிருக்கப்பட்ட உன்னதமான கதவின்பாகத்தை நோக்கிக் குதித்துத்தாவி உள்ளங்கையிட்டு அழுத்தவே கணார் கணார் என்று உள்ளே மணிச்சத்தம்கேட்டு ஆள் ஓடிவந்து திறப்பார்கள். இவ்வாறு பூனையும் புத்திசாதுரியத்தால் தன்காரியத்தைமுடித்துக்கொண்டது. பிராணிகளுக்குள் இம்மாதிரியான அதிசயங்கள் எத்துணையோ உண்டு.

**ஒரு அதிசயமான சட்டை:**—ஒருவர் டிராம்வண்டி டிக்கட்டுக்களைக்கொண்டு தம் தொப்பியையும் சட்டையையும் மூடிக்கொண்டனராம். பல வர்ண டிக்கட்டுக்கள் பார்வைக்கு அழகாயிருந்தன. கால்சட்டை முழுவதும் தபால் ஸ்டாம்புகள் ஒட்டியிருந்தனராம். இதுவும் ஒரு வேடிக்கைதான். டிராம் டிக்கட்டுக்கள் மட்டும் 2544 ஆயிற்றென்றும் அவைகளின் செலவு £12--15--8½ ஆயிற்று என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்வாறான வேஷம் எந்தத்தேவதையின் பிரீதிக்கோ அறிகிலோம். இம்மாதிரிவேலையற்றுப்போய் ஒருவர்பிறர் அதிசயமாகப் பார்ப்பதற்குமட்டும் இவ்வாறு செய்துகொ



ண்டு பணத்தைப் பாழாக அடிப்பதில்யாதுபயன். இம்மாதிரியான பைத்தியங்கள் நம் இந்தியாவில் இல்லாமலிருப்பது க்ஷேமமே.

**ஓர் அதிசயமான கிளி:**—தென் அமெரிக்காவிலிருந்து ஒருவர் ஒருகிளி கொணர்ந்தார். அது ஸ்பானிய பாஷையில் சிட்டையான வார்த்தைகளைச் சொல்லும். அதன் சக்தி அபாரம். அது கால்களைப் பின்னிப்பின்னி நாட்டியம் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் பலரை விநோதப்படுத்தும். எல்லோரும் அதனை ஓர்அதிசயப்பொருளாகப்பார்த்து வருவார்கள். அமெரிக்காவிலிருந்து வரும்பொழுது அதற்கு மூக்குச் சரியாயிருந்தது. பிற்காலத்தில் அதன் மூக்குநுனி ஒருபக்கமாய்ச் சாய்ந்து வளர ஆரம்பித்தது. அப்படி வளர்வது மூக்கின் அழகைக்கெடுத்துவிடுகிறதென்று அதன் சொந்தக்காரர் அப்பாகத்தை வாள்கொண்டு அறுத்துவிட்டுப் பார்த்தார்கள். அறுங்க அறுக்க அது ஆட்டுக்கடாக்கொம்பைப்போல் சுருண்டு சுருண்டு வளர ஆரம்பித்தது. இவ்வாறு இருந்தும் கிளிக்கு அதனால் யாதொரு அசௌகரியமும் உண்டாகவில்லை. அது 70 வருஷம் ஜீவித்திருந்து இறந்துபோயிற்று. அதன்இறகு பளபளப்பான பச்சைநிறமாகவும் வேறுசில இடங்களில் சிவப்பு நிறமும் மஞ்சள்நிறமும் கலந்ததாக இருந்தது. அஃது இறந்தபின்னர் அதனைப் பஞ்சுதிணித்துப் படம்பிடித்தார்கள். இம்மாதிரி 'அதிசயமான பிறவி இவ்வுலகத்தில் துர்லபமே. மனிதர்களுக்குள் இம்மாதிரியான அதிசயப்பிறவிகள் இருப்பது இயல்பு. பக்ஷிகளுக்குள்ளும் இம்மாதிரி இருப்பது அரிதினும் அரிது. கிளிகளில் இம்மாதிரியான பிறவி இருப்பதாகக் கேள்விபுற்றது இதுதான் முதன்முறை.

**மணற்பிரதிமைகள்.** நம் பிள்ளைகள் ஆற்றங்கரையில் ஈரமணலை மலைபோலும் ஆள்போலும் செய்து விளையாடும் வழக்கம் நமக்கெல்லாம் தெரியும். சிவபூஜை செய்பவர்கள் மணலைச் சிவலிங்கரூபமாகச் செய்து பூஜிப்பதையும் எவரும் அறிவர். சண்டேசநாயனார் அவ்வாறு லிங்கம் பிடித்து அவைகளைப் பசும்பால்கொண்டு அபிஷேகம் செய்து பக்திபண்ணினதை அறியாதசிவபக்தர்கள் கிடையார். அமெரிக்கா கண்டத்தில் பிலடெல்பியா என்று பிரசித்திபெற்ற நகரம் உண்டு. அதற்குச் சமீபத்திலுள்ள கடற்கரையில் ஒரு சிற்பி மண

லால் அழகான மனித பிம்பங்கள் செய்து தேர்ச்சி பெற்றிருந்தனர். அந்த வேலையின் திறமைக்காக அவர் பல பேர்போன காட்சிகளில் பதக்கங்களும் பரிசுகளும் பெற்றிருக்கின்றனர். அம்மாதிரியான தொழிலில் அவரை மிஞ்சினவர்களில்லை யென்று பேர் எடுத்தவர். பல சமயங்களில் அவர் செய்த பிம்பங்களைக் கடல் அலைகள் புரண்டு வந்து மோதி சீர்குலைத்துவிடும். பட்ட பிரயாசை யெல்லாம் வீணாகப்போகும். அப்படிச்செய்த பிரதிமைகளில் ஓர் அழகான பிரதிமையை அவர் படம்பிடித்து ஒரு பத்திரிகைக்கு அனுப்பியிருக்கிறார். அது வெகு அழகாய்ச் சித்திரப் படம்போலவே காணப்படுகின்றது. ஓர் அழகிய பெண்மணி தன் குழந்தையைத் தூக்கிவைத்துக் கொண்டு கொஞ்சும் பாவனையாக இருக்கிறது. மணலால் அம்மாதிரி பண்ணினது மிகவும் சாமர்த்தியமே. ஜீவபடம் போலவே தோற்றுகிற அவ்வுருவம் வெகு அழகாய் அமைந்திருக்கிறது. அதனைச் செய்தவரின் பெயர் ஜேம்ஸ் டேயிலர்.

**ஒரு சிலம்பியின் அதிசய வலை.** சிலம்பிகள் நம் பூந்தோட்டங்களிலும் வீடுகளிலும் அழகாக வலைபின்னிவாழ்வது யாவரும் அறிந்த விஷயம். ஒரு சிலம்பி எவரும் அதிசயிக்கும் வணக்கம் ஒரு வலை பின்னியிருந்தது. அது முத்துச்சரங்கள் கோத்தன போல் காணப்பட்டது. அவ்வலையில் பனித்துளிகள் விழுந்திருந்த படியால் அது முத்து மாலை போலவே காணப்பட்டது. வடம் வடமாய்த் தோன்றும்படி வலையமைத்தது ஓர் அற்புதக் காட்சியே. சிருஷ்டிப் பொருள்களை மட்டும் நாம் ஊகித்துப் பார்க்கும் பக்ஷத்தில் இன்னும் எத்தனையோ அதிசயங்கள் காணலாம். கண்ணிருந்தும் காணாதவர்களாய் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள். அவர்களால் இவ்வற்புதங்களைக் காண்பதரிது.

**ஓர் அதிசய இராஜமாளிகை.** நம் இராஜாக்கள் அதிசயமான பண்டங்களைச் சேர்த்து வைப்பதிலும் அதிசயமான கட்டடங்கள் கட்டுவதிலும் கண்ணுங்கருத்து முள்ளவர்களென்பது வெள்ளிடைமலைபோன்றது. அன்னவர்களில் ஒருவர் ஒரு மாளிகை கட்டியிருக்கின்றனர். அதன் சுவர்களும் மேற்றளவட்டமும் சீனா பிங்கான்களால் பொதியப்பட்டிருக்கின்றனவாம். அப்பீங்கான்கள் பலவித



உருவங்களும் நிறமுமுடையன. அம்மாளிகைக்குச் சேனகானா என்று பெயர். சிக்கந்திரபாத்திலுள்ள புகைப்படக்காரர்களில் ஒருவராகிய தீனதயாள கம்பெனியார் அம்மாளிகையின் புகைப்படம் எடுத்திருக்கிறார்களாம். நாளுக்குநாள் உலகம் புதிது புதிதாய் யுக்தி பண்ணிக் கொண்டிருக்கின்றது.

**ஒரு மூஞ்சூறு செய்த அதிசயம்.** ஒரு நாள் ஒரு பிரபு வீட்டு வேலைக்காரன் களிமண் வேலை செய்துகொண்டிருந்தான். அவசரமாய் வேறு வேலைக்குப் போகவேண்டி யிருந்தபடியால் கைவேலையாயிருந்த களிமண் உருண்டையில் கொழுப்புத் தடவிவைத்து விட்டுப் போனான். மறுநாட் காலையில் வந்து பார்க்கையில் அம்மண்ணின்மேல் அழகான வரைகள் செய்யப்பட்டிருந்தன. அவ்வேலைக் காரனுக்கு வரைகள் உண்டான விதம் வெகு நேரம் விளங்கவில்லை. பின் சுண்டெலிகள் ஓடுவதைக்கண்டு கொழுப்புக்காக அவைகள் அந்நேர்த்தியான வேலை செய்திருப்பதை அறிந்து சந்தோஷித்து அம்மண்ணுங்கட்டியைப் படம் பிடித்துத் பிரசித்தப் படுத்தினான்.

**வேறோர் அதிசயமான உடுப்பு.** ஒரு விநோதப் பிரியர் தம் உடுப்பு முழுவதிலும் பிஸ்கோத் வைத்து மூடி அதைத் தரித்தனராம். இவ்விநோதங்களெல்லாம் மேனாட்டில் தான் காணலாம்.

**ஓர் அதிசய கோழிமுட்டை.** ஒரு காலத்தில் ஒருகோழி முட்டையிட்டது. அம்முட்டையே குஞ்சு வடிவமா யிருந்ததாம். பிறகு அடைகாக்கப்பட்டுக் குஞ்சுபொரித்த பொழுது அது சாதரணமான குஞ்சைப் போலவே இருந்ததாம். முட்டையின் அதிசயத்தை எல்லோரும் அறியும்பொருட்டு அதனைப் படம் பிடித்து வைத்திருக்கிறார்கள்.

ஒரு விநோதப்பிரியன்.

# சென்னையிராஜதானியின் ஜில்லா பிரிவினை.

சென்னைப்பிராஜதானியில் புது டிவிஷன்களும், புது தாலூக்காக்களும் உண்டாக்குவதையும் பற்றிய ரிப்போர்ட்டு சென்னை கவர்ன்மெண்டாரிடமிருந்து இந்தியா கவர்ன்மெண்டுக்குப்போயிருக்கிறது. அதன் விவரணம் பின் வருமாறு:— இப்புது ஏற்பாட்டினால் தற்போதிருக்கும் ஜில்லாக்களோடு 3 புதிய ஜில்லாக்களும் 16 புது டிவிஷன்களும், 17 புதுதாலூகாக்களும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. கோதாவரி, கிருஷ்ணா, நெல்லூர் ஜில்லாக்களைப்பிரித்து 5 டிவிஷன்களுள்ள புது குண்டூர் ஜில்லாவோடு நான்கு ஜில்லாக்களாக இந்திய ஸ்டேட் செக்ரட்டெரியின் அனுமதியோடு ஏற்கனவே செய்யப்பட்டிருக்கின்றன. கஞ்சம், பல்லாரி, நீலகிரி, தென்கன்னடம், இந்த ஜில்லாக்களில் யாதொரு முக்கிய மாறுதலுமில்லை. ஆனால், கஞ்சம், விசாகபட்டணம் ஜில்லாக்களுக்கு ஓர் உதவி சப்கலெக்டருக்கும், தாலூக்காக்களின் எல்லைகள் முதலியவைகளில் சிறிது மாறுதலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இனி, நெல்லூர் ஜில்லாவானது 4 டிவிஷன் கொண்டது 5 டிவிஷனாக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு ஜில்லாவில் டிவிஷன்கள் முன்தொகையேயாயினும் தாலூகா பரிமாண மாறுதலுண்டு. கர்னூலில் 4 டிவிஷன்களாகவிருந்தது ஐந்தாயிற்று, பல்லாரியிலிருந்து மூன்றிலிருந்து நான்காயிற்று. அனந்தப்பூரிலுமப்படியே. கடப்பையில் டிவிஷன் நான்கேயாயினும் 2 தாலூகாக்கள் வேறு ஜில்லாக்களுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. வட ஆற்காடுஜில்லாவை தமிழ், தெலுங்கு நாடுகளாகப்பிரித்து சித்தூர், வேலூர் ஜில்லாக்களெனப் பெயரிட்டு, சித்தூரில் கடப்பையிலிருந்து 2 தாலூக்காக்களும், வேலூரில் சேலத்திலிருந்து திருப்பத்தூரும், தென் ஆற்காட்டிலிருந்து திருவண்ணாமலையும் சேர்க்கப்படும். சித்தூர் ஜில்லாவில் சித்தூர், மதனப்பல்லி, சந்திரகிரியென 3 டிவிஷன்களும், 5 தாலூக்காக்களும், 3 ஜமீன்தாரிகளும், வேலூரில் ராணிப்பேட்டை, வேலூர், திருவத்தியூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர் என 5 டிவிஷன்களும், 9 தாலுக்காக்களும், 2 ஜமீன்களும் சேர்வன. தென்னாற்காட்டில், திருவண்ணாமலை தாலூகா வேலூருக்கு மாற்றப்பட்டு, புது ஜிஞ்சி தாலூகா உண்டாய் தாலூகாக்களும், டிவிஷன்களும், முன் தொகையேயாகும். தஞ்சாவூரில் புதிதாக பாபநாசம், அறந்தாங்கி தாலூகாக்கள் ஏற்பட்டு, பட்டுக்கோட்டையின் தென்பாகம் புது இராமநாதபுரம் ஜில்லாவுக்கு மாற்றப்பட்டு நாகப்பட்டினம், மாயவரம், மன்னார்குடி, கும்பகோணம், தஞ்சாவூர் ஆகிய டிவிஷன்களோடு தஞ்சாவூர்ஜில்லா 10 தாலூகாக்களை உடையதாகும். மதுரை, இராமநாதபுரம் டிவிஷன் நீங்க 6 தாலூகா, 7 ஜமீன், 4 டிவிஷன்களிலிருந்து, திண்டுக்கல், மதுரை, திருமங்கலம் ஆக 3 டிவிஷன்களோடு புது நிலக்கோட்டை தாலூகாவோடு 7 தாலூக்காக்களையுடையதாகும். புது இராமநாதபுரம் ஜில்லா, இராமநாதபுரம் டிவிஷனோடு, தஞ்சாவூரிலிருந்து பட்டுக்கோட்டையின் தென்பாகமும், திருநெல்வேலியிலிருந்து சாத்தூரையும் ஸ்ரீவில்லிபுத்தூரையும் பெற்று இராமநாதபுரம், தேவகோட்டை, சிவகாசியாகிய 3 டிவிஷன்களுடைய ஓர் புதிய ஜில்லாவாகும். இதற்கு வருமானவரி விஷயத்திற்காக பிரத்தியேகமாக ஓர் தாசில்தாரும் நியமிக்கப்படுவார்.



திருநெல்வேலியில், சாத்தூரும், ஸ்ரீவில்லிபுத்தூரும், இராமநாதபுரத்திற்கு மாற்றப்பட்டு, சேரன்மாதேவி, திருநெல்வேலி, கோயில்பட்டி, தூத்துக்குடியாக 4 டிவிஷன்களோடும், புது திருச்செந்தூர் தாலூகாவோடு 8 தாலூக்காக்களாக பிரிக்கப்படும். நான்குனேரி தாலூகாவில் ஓர் உதவி தாசில்தாரும் நியமிக்கப்படுவார். சேலம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகாவை வேலூருக்கும் நாமக்கல்லில் ஏறக்குறைய எல்லா பாகத்தையும் திருச்சிராப்பள்ளிக்கும் சேர்த்து சேலத்தைப் பிரித்துண்டாகும் புது ஓமலூர் தாலூகாவோடு ஓசூர்-கிருஷ்ணகிரி, தர்மபுரி-ஊத்தங்கரை, சேலம்-ஆத்தூர், திருச்செங்கோடு-ஓவலூர் ஆக 4 டிவிஷன்களும் ஆக 8 தாலூகாக்களையுடையதாகும். திருச்செங்கோடு, ஓசூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, தாலூகாக்களில் தாலூகா சிரஸ்தாருக்குப்பதிலாக ஸ்டேஷனேரி சப்மாஜிஸ்டிரேட் நியமிக்கப்படுவார்கள். திருச்சிராப்பள்ளி ஜில்லா சேலத்திலிருந்து நாமக்கல்லையும் கோயமுத்தூரிலிருந்து கருவூரையும் பெற்று, நாமக்கல், முசிரி, திருச்சி, அரியலூர் என்னும் 4 டிவிஷன்களும், 7 தாலூக்காக்களையுமுடைய

தாகும் திருச்சி டவுனில் ஓர் உதவி தாசில்தாரும் நியமிக்கப்படுவார். கோயமுத்தூரிலிருந்து கருவூரை நீக்கி மீதித்தாலூகாக்களை, புது அவனாசி தாலூகாவோடு 10 தாலுக்காக்களாகச்செய்து, 5 டிவிஷன்களேற்படுத்தப்படும். மலையாளத்தில் 6 டிவிஷன்கள் 5 டிவிஷன்களாக குறைக்கப்படும். தென் கன்னடத்தில் புதிதாக ஓர் தாலூகா உண்டாக்கப்படும்.

புது சித்தூர், வேலூர் ஜில்லாக்கள் கோர்ட்டு விஷயங்களுக்கு ஒரே ஜில்லாவாக பாவிக்கப்பட்டு ஒரே டிஸ்டிரிக்ட் ஜட்ஜோடு சித்தூரில் கோர்ட்டுகளுடையதாகும். ஆனால், புதிதாக ஒரு சப்-ஜட்ஜ், அசிஸ்டெண்டு செஷன் ஜட்ஜின் அதிகாரங்களோடு நியமிக்கப்படுவார். அப்படியே திருச்சியிலும் ஓர் சப்-ஜட்ஜ் நியமிக்கப்படுவார். இவர் கோயமுத்தூருக்கு அசிஸ்டெண்டு செஷன்ஸ் ஜட்ஜாக விருப்பார். புது இராமநாதபுரத்தில் ஏற்படுத்தப்படும் டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்கு மதுரை கிழக்கு சப்-ஜட்ஜ் உட்பட்டிருப்பார்.

தக்ஷண தீபம்.

# தென்னாட்டுக்கு ஒரு நாஷனல் காலேஜ்.

## II

நம் தென்னாட்டுக்குச் சரியான சுதேச உயர்தரக் கலாசாலை ஒன்று ஏற்படுவது இன்றியமையாததென்றும் அஃது இன்ன இடத்தில் ஏற்படுத்தப்பட வேண்டியதென்பதைப்பற்றியும் அது நடத்தப்படவேண்டிய முறைகளைப்பற்றியும் அடுத்தமுறை எழுதுவோமென்றும் முன் சஞ்சிகையிற் கூறினோம்.

இவ்விஷயமாய் நம் மதுரைமா நகரத்திலும், கோயம்புத்தூரிலும் பெருமுயற்சிகள் நடந்துவருகின்றன. கோயம்புத்தூரார் மதுரையாரினும் மிக்க ஊக்கங்காட்டி வருகின்றனர். இவ்விரு நகரத்தாருடைய பெருமுயற்சியும் கைகூடவேண்டுமென்பது நம் மனப்பூர்வமான கருத்தேயாயினும் அவை முடிவுபெறுமோ என்பதுமட்டும் நமக்குச் சந்தேகம். மதுரைஜில்லாவுக்குத் தென்புறத்தில் திருநெல்வேலி உளது. உயர்தரக்கலாசாலை ஸ்தாபன விஷயமாய் திருநெல்வேலியில் யாதொரு முயற்சியும் நடப்பதாகத் தெரியவில்லை. திருவனந்தபுரம் அவர்களுக்குச் சமீபத்திலிருப்பதாலும் அதற்கு இருப்புப்பாதை சௌகரியமும் ஏற்பட்டுவிட்டபடியாலும் அவ்வூரார் மதுரைப்பக்கம் வந்துபடிப்பார்களென்று நாம்நினைக்கவொண்ணாது. திருவனந்தபுரத்துப் போக்குவரவு அவர்களுக்கு அதிகம். அவ்விடத்தில் தர்மசத்திரங்களும் சாலைகளும் சம்பள சௌகரியங்களும் மாணாக்கர்களைக் கவரத்தக்கனவாக இருக்கின்றன. மதுரையின்கண் அவ்வித சௌகரியங்களை எதிர்பார்த்தல் முடியாது. ஆகையால் மதுரைஜில்லா மாணாக்கர்கள் மட்டுமே மதுரையில் படிப்பார்கள். உயர்தரக் கலாசாலைக்குப்போதுமானபடி மாணாக்கர்கள் வந்துசேர்வது அரிது. கோயம்புத்தூர் இதுவிஷயத்தில் மதுரையினும் வசதியுள்ளதாயினும் ஒருபக்கத்தில் பாலக்காடும் மற்றொரு பக்கத்தில் திரிசிரபுரமும் இருப்பதால் மாணாக்கர்கள் அடுத்த ஜில்லாக்களிலிருந்து வருவதற்கு மார்க்கமில்லை. கோயம்புத்தூர் ஜில்லாவின் நாகரிகமான பாகமும் இனித் திரிசிரபுரத்துடன் சேர்வதால் அந்த ஜில்லாவிலும் உயர்தரக் கலாசாலைக்குப் போதுமான மாணவர்கள் அகப்படுவது கஷ்டம். பாலக்காட்டில் உயர்தரக்காலேஜ் ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்ப

து அவ்வூராரின் கருத்தாக இருக்கிறது. முனிஸிபாலிடியார் ஒரு கால் அவ்வாறே சமீபத்தில் செய்துமுடிக்கவுங்கூடும். ஆகையால் தமிழ் ஜில்லாக்களுக்கு மத்தியஸ்தானம் என்று சொல்லத்தக்கதான திரிசிரபுரமே அவ்வாறான கலாசாலைக்குத் தகுந்த ஸ்தானமாகும். இன்றும் அவ்வூர் கலாசாலைகளில் தஞ்சாவூர், தென்ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, மலையாளம் முதலான சுற்றுப்புற ஜில்லாக்களிலிருந்து ஏராளமான மாணாக்கர்கள் வந்து படிக்கிறார்கள். அவர்கள் அனைவரும் புறச்சமயிகளின் கலாசாலைகளிற் கல்விகற்க வேண்டியிருக்கிறது. அங்குமட்டும் சுதேச உயர்தரக்கலாசாலை ஒன்று தக்க ஏற்பாடுகளுடன் ஏற்படுமானால் அத்தனை மாணவர்களும் மிஷன் கலாசாலைகளை விட்டுச் சுதேசகலாசாலையிற் சேர்வார்கள். தற்காலம் திரிசிரபுரத்தில் நாஷனல் ஹைஸ்கூல் என்று சுதேசகலாசாலை ஒன்று இருந்துவருகின்றது. அதனையே உயர்தரக் கலாசாலையாக்கவேண்டுமென்பது அவ்வூராருடைய கருத்து. அவ்வாறு செய்யின் புதுவெள்ளம் பழைய வெள்ளத்தையும் அடித்துக் கொண்டுபோகும் என்பது நம் அந்தரங்க அபிப்பிராயம். ஆகையால் ஏற்படுத்தக்கூடிய கலாசாலை தனிமையாகவே காவிரியாற்றின் வடகரையிலிருத்தல்வேண்டும். முதலாவது காவிரியாற்றின் ஜலவசதி அவ்வூரிலதிகமாயிருப்பதுடன் அது பலஜில்லாக்களுக்கும் மத்தியிலுள்ளது (2) மதுரை, கோயம்புத்தூரினும் அவ்வூரில் குடும்பங்களுடன்போய் வசிப்பவர்களுக்குச் செலவு குறைவாகும்.

(3) மாணவர் அதிகம் கூடி வழக்கப்பட்ட இடம்.

(4) தென் இந்திய ஹிந்து மாணவர் புறச் சமயங்களின் அபாயங்களினின்றும் காப்பாற்றப்படுவர்.

(5) புண்ணிய க்ஷேத்திரங்களும் புண்ணிய நதியுங்கூடியிருப்பதால் புண்ணியம் செய்யப்பட்ட கனவான்களுக்கும் புண்ணியஞ் செய்ய நல்லஊக்கமுண்டாகும். அதனால் பொருள் வருவாய்க்கும் நல்ல இடமுண்டு.

இத்தனை சிறப்பு வாய்ந்திருந்தும் அவ்வூரார் உயர்தரக் கலாசாலை ஸ்தாபனத்தைப்பற்றி யாதொரு முயற்சியும் கையாடாம



லிருப்பது பெரு வியப்பே! அவ்வூரார் தூங்கினும் ஏனையோரும் தூங்கலாமா? திரிசிரபுரத்தாரே அவ்வரிய வேலையைச் செய்து முடிப்பார்களென்று எதிர்பார்ப்பதற்குப் பிரதியாக மேற்கூறிய ஏழு ஜில்லாக்காரர்களும் ஒன்றுசேர்ந்து ஒரே உயர்தரக் கலாசாலையைத் தக்கவண்ணம் ஏற்படுத்திப் பொதுவாய் நடத்திவந்தால் உசிதமாயிருக்கும். ஒற்றுமையால் உலகத்தை ஜயிக்கலாமன்றோ.

மேற்கூறிய ஒவ்வொரு ஜில்லாவிலும் தற்காலம் 2-வது வகுப்புக் கலாசாலை சுதேசிகள் கையிலிருந்து வருகின்றது. அந்தந்தக் காலேஜ் கமிட்டியார் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து பொதுக் கமிட்டிக்கு அனுப்புவதுடன் ஒவ்வொருவரும் ஒரு சாஸ்திரப் பயிற்சிக்கு வேண்டிய செலவுகளைத் தாமே கொடுப்பதாக ஏற்றுக்கொண்டு தக்க நிபுணர்களை ஏற்படுத்திக் கலாசாலையை நடத்திவந்தால் சுலபமாய் முடிக்கலாம். ஜில்லாவுக்கு இருவர் வீதம் ஏழு ஜில்லாக்களுக்கும் பதினான்கு மெம்பர்கள் இருந்தால் போதும். இரண்டுதரமான உபாத்தியாயர்கள் ஏற்படலாம். முதல் தரத்தார் அநுபவமுள்ளவர்களாயும் நீடித்தகாலம் ஒரே சாஸ்திரத்தைப் பயிற்சிசெய்து கலாசாலைகளில் போதித்தவர்களாயுமிருத்தல்வேண்டும். இந்த ராஜதானிக்காரருடன் வேறு ராஜதானிக்காரர்களாகவும் இருக்கலாம் அவர்கள் பெர்கூஸன் கலாசாலை ஏற்பாட்டின்படி சொற்ப சம்பளத்தில் வேலை செய்யப்பட்டவர்களாகவுமிருத்தல்வேண்டும். இரண்டாவதுதர உபாத்தியாயர்கள் நம் ராஜதானியைச் சார்ந்த நிபுணர்களாயிருத்தலே நலம்.

அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 150 முதல் ரூ. 300 வரை சம்பளம் ஏற்படவேண்டும். எல்லோரையும் சொற்ப சமபளத்துக்கு வேலைபார்க்கும் வண்ணம் செய்வது முடியாத காரியம். ஆகையால் இவ்வித ஏற்பாடுகளை அநுசரித்தலே நலம். ஏழு ஜில்லாவிலுள்ள தக்க கனவான்கள் ஒன்றுகூடினால் சென்னைப் பிரபுக்களும் தென்னாட்டுச்சிற்றரசர்களும் பொருளுதவி புரிவது சுலபம். நாட்டுக்கோட்டையாரைத்தூண்டி ஒரு பெரிய சத்திரமும் (Hostel) கட்டச்செய்யலாம். வடநாட்டு அரசர்களிடமிருந்தும் பொருளுதவி எதிர்பார்க்கலாம். வடநாட்டுக்குக்காசி ஏற்பட்டதுபோல் தென்னாட்டுக்கு மத

சம்பந்தமான ஒரேஉயர்தரக்கலாசாலை ஏற்படுவதால்எவரும் உதவிபுரிவார்கள். இவை நிற்க பெஸன்ட் அம்மையார் முதலியோர் ஆங்கில நாடு முதலிய அந்நியநாடுகளிலிருந்தும் நம்நாட்டுக்கு உழைப்பதற்கு மனிதர்களைச் சுலபமாய்க் கொணரக்கூடும். புதுக்கோட்டை சமஸ்தானம் ஒன்று திரிசிரபுரத்துக்குச் சமீபத்திலிருக்கிறது. எல்லோருங்கூடி அவ் இராஜாங்கத்தாரை வேண்டிக்கொள்ளும் பக்ஷத்தில் வருஷா வருஷம் அவர்களிடமிருந்து பெருநன்கொடை எதிர்பார்க்கலாம். முயற்சி ஒன்றே திருவினையாக்கும். மதசம்பந்தமான ஊக்கம் மேலிட்டுஎவரும் உதவிசெய்ய முன்னுக்குவருவார்கள். இவ்வாறான ஏற்பாடே சிறந்ததெனத் தோற்றுகிறது. ஏனைய ஊர்களில் தொழில் சம்பந்தயாகவும் கிருஷி சம்பந்தமாகவும் கலாசாலைகள் ஏற்பட்டு மூலைக்கு மூலைவேலை செய்யவேண்டும். தஞ்சாவூரில் கிருஷி சம்பந்தமான கலாசாலையும் மதுரைமா நகரில் நெசவு தொழில் சாயத்தொழில் சம்பந்தமான கலாசாலையும் கோயம்புத்தூரில் சிற்பசாஸ்திரப் பயிற்சி கண்ணாடி செய்தல் முதலிய வேறு கைத்தொழில் சம்பந்தமான கலாசாசாலைகளும் ஏற்பட்டு நடந்துவந்தால் நாட்டுக்கு க்ஷேமமுண்டு. இவ்வாறு செய்யவேண்டிய வேலையை ஒன்றாகப்பாவித்துச் செய்தலே சிறப்பாகும். ஒன்றாகச்கூடிச் செய்வதிலும் தொழிற்பிரிவினை இருந்தால் சீராகவும் சிறப்பாகவும் முடியும். தென்னிந்தியாவின் க்ஷேமத்தை நாடினோர்கள் அனைவரும் இவ்விஷயத்தை நீளநினைந்து காரியசித்திபெற முயல்வார்களாக. ஒன்றுகூடாமல் தனித்தனி வேலைசெய்யும்பக்ஷத்தில் காரியசித்தி பெறுவது கஷ்டம். வேலையும் சீராகவும் சிறப்பாகவும் ஆகாது. நம் தேசத்தற்கால நிலைமையில் பொதுஉழைப்பே பூரண பலத்தைத்தரும்.

பத்திராதிபர்.

# மதுரைத் தமிழ்ச்சங்க மகோற்சவம்.

நாளது௵ மே௴ 24௳ வெள்ளிக்கிழமை மதுரைத் தமிழ்ச்சங்க 6-ம் வருஷோற்சவம் மிக்க விமரிசையாக நடந்தேறியது. அக்காலம் புதுக்கோட்டை மகாராஜாவின் சகோதரரும் ஹைக்கோட்டு வைக்கில் ஸ்ரீமான் தக்ஷிணாமூர்த்தி துரை ராஜா அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். ஒரு தமிழ் மன்னர் மரபினரே இவ்வாண்டு அக்கிராசனம் வகித்தது தமிழ் செய்த பாக்கியமே. அச்சமயம் பல பண்டிதர்களும் கனவான்களும் விஜயஞ்செய்திருந்தனர். வழக்கம் போலவே சபை ஆரம்பமாகு முன்னர் எல்லோரும் சிற்றுண்டி உதவிப்பெற்று உபசரணை செய்யப்பட்டனர். 5 மணி சுமாருக்குச் சபை தொடங்கிற்று. அக்கிராசனாதிபதியவர்கள் சுருங்கவே முகவுரை கூறியபின்னர் காரியதரிசி வருஷாந்திர அறிக்கையை வாசித்தனர். சங்கப் பரீக்ஷையிற் றேறினவர்களுக்குத் தோடாவும் தங்கப் பதக்கங்களும் சர்டிபிகேட்டுகளும் அக்கிராசனாதிபதியவர்களால் மனமுவந்து அளிக்கப்பெற்றன. பின் அக்கிராசனாதிபதியவர்கள் எழுந்து தமிழ்ப்பாஷை புராதான பாஷையென்றும் அதனை நாட்டார் அனைவரும் ஏற்றிப்போற்றக் கடமைப்பட்டிருக்கின்றனரென்றும், எல்லோரும் சங்கத்தில் சேர்ந்து அதற்குத் தங்களாலியன்ற உதவிபுரியக் கடமைப்பட்டவர் என்றும் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் தற்சமயம் கொடுத்து வரும் உத்வி சொற்பமே என்றும் அஃது எத்துணையோ பங்கு விருத்தியாகவேண்டும் என்பது தம் அந்தரங்க நோக்கமென்றும் இன்னும் இவைபோன்ற அபிமான மொழிகள் கூறி மிக்க ஊக்கத்துடன் பேசினர். பின்னர் திரிசிரபுரம் வித்துவான் பிச்சை இப்ராஹீம்புலவர் அவர்களும் டிஸ்திரிக்டு முனிசீபு ஜே. எம். நல்லசாமிபிள்ளையவர்களும் வருஷோற்சவ அறிக்கைப் பத்திரத்தில்கண்ட விஷயத்தைப்பற்றி வியந்துபேசினர். ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்கள் ஸ்ரீமான் துரைராஜா அவர்களின் தமிழ் அபிமானத்தையும் அவர்கள் மிக்க ஊக்கங்காட்டித் தமிழ் விஷயமாய்ப் பேசிய விஷயங்களையும் பெரிதும் பாராட்டிப்பேசினார்கள். பின்னர் கிராமபோன் வாயிலாய் சங்கீதக்கச்சேரி நடத்தப்பட்டது. அதனாலும் எல்லோ

ரும் ஆநந்த பரிதரானுர்கள். சுமார் 7 மணிக்குச் சந்தனம், தாம்பூல புஷ்பாதிகள் வழங்கப்பெற்றுச் சபை கலைந்தது.

அடுத்த தினமாகிய 25உ காலை 8 மணிக்கு மெம்பர்கள் சங்க சம்பந்தமான விஷயங்களை யோசித்துத் தீர்மானிப்பதற்குச் சபை கூடினுர்கள். அச்சமயம்

மகா-௱-௱-ஸ்ரீ பொ. பாண்டித்துரைத்தேவர் அவர்கள் (அக்கிராசனுதிபதி)

" ப. நாராயண ஐயர் அவர்கள், பி. ஏ., பி. எல்., மதுரை
" ஜே. எம். நல்லசாமிபிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல், டிஸ்திரிக்டு முனிசிபு, சேலம்
" பி. சௌரிராஜபிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், திரிசிரபுரம்.
" பால்வண்ணமுதலியார் அவர்கள், திருநெல்வேலி.
" பின்னத்தூர் நாராயணசாமிஐயர் அவர்கள், தமிழ்ப் பண்டிதர், கும்பகோணம்.
" எம். கே. எம். அப்துல்காதர் ராவுத்தர் அவர்கள், இளையாங்குடி.
" நல்லகுற்றாலம்பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.
" அ. சண்முகம்பிள்ளையவர்கள், சோழவந்தான்.
" திருநாராயணஐயங்கார் அவர்கள், தலைமை உபாத்தியாயர், செந்தமிழ்க்கலாசாலை, மதுரை.
" அரங்கசாமிஐயங்கார் அவர்கள், இராமநாதபுரம்.
" ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர்.
" டி. வி. ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள், பி. ஏ. பி. எல்., காரியதரிசி.
" எஸ். சாமிநாதையர் அவர்கள், காரியதரிசி.

மகா-௱-௱-ஸ்ரீ ப. நாராயண ஐயர் அவர்கள் சங்கத்தை லிட்



ரெரி அண்டு சாரிடபில் சட்டப்பிரகாரம் ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்று எழுதிய கடிதம் படிக்கப்பெற்றது.

## 1-ம் தீர்மானம்.

லிட்ரெரி அண்ட் சாரிடபில் சட்டபிரகாரம் சங்கம் ரிஜிஸ்ட்டர் செய்யப்படவேண்டியது என்று ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டது.

## 2-ம் தீர்மானம்.

சென்ற வருஷம் வருஷோற்சவக்கூட்டத்தில் சங்க விதிகள் ஏற்படுத்தும்படி நியமிக்கப்பட்ட சப் கமிட்டியாரது விதிகள் படிக்கப்பெற்றுச் சபையோரால் அங்கீகாரம் பெற்றன.

## 3-ம் தீர்மானம்.

அடியிற் குறிப்பிட்ட மெம்பர்கள் ஒரு கமிட்டியாக விற்றிருந்து மேல் தீர்மானத்தின்படி சப் கமிட்டியாரின் விதிகளில் அவசியமான சீர்திருத்தங்கள் செய்து சங்கத்தை லிடரெரி அண்டு சாரிடபில் சட்டத்தை அனுசரித்து ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

மகா-௱-௱-ஸ்ரீ பொ. பாண்டித்துரைத்தேவர் அவர்கள், அக்கிராசனுதிபதி.

" ப. நாராயண ஐயர் அவர்கள்,
" பி. எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள்,
" டி. வி. ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள், } காரியதரிசிகள்.
" எஸ். சாமிநாதையர் அவர்கள், }

## 4-ம் தீர்மானம்.

தற்கால காரியதரிசிகளிருவருமே காரியதரிசிகளாயிருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

## 5-ம் தீர்மானம்.

பின் வரும் மெம்பர்கள் சங்கத்தின் காரிய நிர்வாக சபையாராக நியமிக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

1. மகா-௱-௱-ஸ்ரீ பொ. பாண்டித்துரைத்தேவர் அவர்கள்,
2 ,, பி. எஸ் சுப்பிரவணிய ஐயர் அவர்கள்,
. ,, துரைராஜா அவர்கள்,
4. ,, பழநியாண்டி முதலியார் அவர்கள்,
5. ,, பால்வண்ண முதலியார் அவர்கள்,
6. ,, ஜே. எம். நல்லசாமி பிள்ளையவர்கள்,
7. ,, மகாமகோபாத்தியாயர் உ. வே சாமிநாதையர் அவர்கள்,
8 ,, டி. வி. ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள், } காரியதரிசிகள்.
9. ,, எஸ். சாமிநாதையர் அவர்கள், }

## 6-ம் தீர்மானம்.

திருநெல்வேலி மகா-௱-௱-ஸ்ரீ பி. பொன்னுசாமி பிள்ளை அவர்களையே அடுத்த வருஷத்துக்கும் கணக்குப் பரிசோதகராக நியமனம்செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதுடன் அவர்கள் இவ்வாண்டு மிக்க சிரத்தைஎடுத்துக்கொண்டுகணக்குக்களைப் பரிசோதனை செய்ததற்காகச் சபையார் வந்தனம் அளிக்கிறார்களென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## 7-ம் தீர்மானம்.

சென்ற ஆண்டில் நியமனம் பெற்ற சப் கமிட்டியார் மிக்க சிரத்தை எடுத்துக்கொண்டு சங்கவிதிகள் ஏற்பாடு செய்ததற்காக சங்கத்தார் அவர்களுக்கு வந்தனம் அளிக்கிறார்களென்று தீர்மானிக்கப்பட்டது.

மதுரைத் தமிழ் சங்கம், } (Sd) பொ. பாண்டித்துரை,
25—5—07. } அக்கிராசனாதிபதி.

25-உ மாலை 4-மணிக்கு மறுபடியும் சங்கம் கூடிற்று. கீழக்கரை மகா-௱-௱-ஸ்ரீ ஜோஸப் டயாஸ்அவர்களும் அப்துல்காதிறு புலவர் அவர்களும் ஸ்ரீவில்லிபுத்தூர் அப்பு வையங்கார் அவர்களும் விஜயஞ் செய்தார்கள். அடியிற்கண்டவர்களால் உபந்நியாசங்கள் வாசிக்கப் பெற்றன.



மகா-௱-௱-ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் 'கோல்லாமை'
,, எம். கே. எம். அப்துல்காதர் ராவுத்தர் அவர்கள் வித்தியாதானம்.
,, ஸ்ரீவல்லிபுத்தூர் ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள் முயற்சி.
மகா-௱-௱-ஸ்ரீ காரை சிதம்பரமையர்அவர்கள் ... அறிவு.
(இது மகா-௱-௱-ஸ்ரீ மு. இராகவையங்கார் அவர்களால் படிக்கப்பெற்றது.)
கீழக்கரை ஜோஸப்ஸ்டயாஸ்அவர்கள் ஐம்புலனடக்கம்.
தஞ்சை பழநிவேற்பிள்ளை அவர்கள் திருவிளையாடல் வெண்பா.

தமிழ்ச்சொல் விளக்கம் இது பால்வண்ணமுதலியாரவர்களால் வாசிக்கப்பட்டது.

அன்று 6மணி சுமாருக்குச் சங்க மெம்பர்களுடைய புகைப்படம் பிடிக்கப்பட்டது. முதல் உபந்நியாசத்துக்கு மகா-௱-௱-ஸ்ரீ பொ. பாண்டித்துரைத்தேவரவர்களும் ஏனைய உபந்நியாசங்களுக்கு மகா-௱-௱-ஸ்ரீ பிச்சைஇப்ரகீம்புலவர் அவர்களும் அக்கிராசனம் வகித்திருந்தார்கள். திருவிளையாடல் வெண்பாவைப்புகழ்ந்து பின்னத்தூர் நாராயணசாமிஐயர் அவர்களும் சங்கம் பண்டிதபரீக்ஷையிற்றேறிய நடுக்காவேரி வேங்கடசாமி நாட்டார் அவர்களும் சாற்றுக்கவி கூறினார்கள். 8மணிசுமாருக்குச் சபைகலைந்தது.

26உ காலை 8 மணிக்கு மறுபடியும் சபை கூடிற்று. அச்சமயம் மகா-௱-௱-ஸ்ரீ பால்வண்ணமுதலியார் அவர்கள் அக்கிராசனம் வீற்றிருந்தார்கள். பின்வரும் உபந்நியாசங்கள் படிக்கப்பெற்றன.

மகா-௱-௱-ஸ்ரீ எஸ். சாமிநாதையர் அவர்கள் நச்சினார்க்கினியர்.
பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்கள் பொருளையவிளக்கம்.

ஷை உபந்நியாசங்கள் முடிந்தவுடன் ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் பல இடங்களிலுமிருந்து தங்களுடைய சிரமத்தையும் காலஹரணத்தையும் பாராட்டாது சங்க வருஷோற்சவத்துக்கு விஜயஞ்செய்த வித்வான்களுக்கு வந்தனம் அளிக்கவே 12 மணி சுமாருக்கு வருஷோற்சவமும் முடிவுபெற்றது.

பத்திராதிபர்.

# ஒரு கரடி வேட்டை.

வட அமெரிக்கா தேசத்தின் மலைப்பிரதேசங்களில் ஒருவகைக் கரடியுண்டு. அது சிறிது நரைத்து இருக்கும். அதனைப்பிடிக்க வேட்டைக்காரர் அடிக்கடிச்செல்வதுண்டு. ஒருநாள் டிம் என்ற ஒரு வேட்டையாளி அதற்கென்று வேண்டிய முயற்சிகள் செய்துகொண்டு புறப்பட்டான். அச்சமயம் அவன் சென்ற இடம் மலைப்பக்கத்திலுள்ள வெளி. அவ்விடத்தில் அங்குமிங்குமாய் இரண்டொரு விருக்ஷங்களே காணப்பட்டன. அவைகளும் அதிக உயரமாக இல்லை வேட்டையாளியைத் தாங்கமுடியுமோ முடியாதோஎன்றுஅத்துணை சிறியவைகளாகஇருந்தன. அவ்விடத்திற்கு இதனைத்தவிர்த்துவேறு குறையுமில்லை. அவ்விருக்ஷங்களினால் வேட்டையாளிக்கு அதிக ரக்ஷணம்ஏற்படவில்லை. வேட்டையாளிஅம்மரங்களிற் ஒன்றைத்தெரிந்தெடுத்துஅதில்உட்காரத்தீர்மானித்தான். அவன்மனத்துக்குஅது சிறிதும்திருப்தி கொடாதிருப்பினும் இருக்கிற மரங்களுள் அதுவே உயரமும் பெரிதுமாயிருந்தது. கரடிக்குஅதனை எட்டல்முடியாது. சிலகரடிகள் மரம்ஏறுவதிற் சாமர்த்தியமுடையன வாயிருந்தாலும் நரைக்கரடிக்கு மரமேறவே தெரியாது. அம்மரத்தின் அடிப்பக்கத்தில் ஒரு பெருங்கிளையிருந்தது. அதை மிக்க உயரமான கரடியும் எட்டிப்பிடித்தல்முடியாது வேட்டையாளி அக்கிளைமீது ஏறி உட்கார்ந்து கரடியின் வரவை எதிர் பார்த்திருந்தான். உட்கார்வதற்கு அஃதுஅவ்வளவு சௌகரியமாயுமில்லை. அஸ்தமிக்கநெடுநேரமிருந்ததால் அவன் தன்னுடன் கொணர்ந்த உணவைப் புசிக்கவில்லை.

வழக்கம்போல இந்தச்சமயம் கரடியை வலைவைத்துப் பிடிக்க அவனுக்கு இஷ்டமில்லை. ஆனால் சுருக்குக்கயிறு கொண்டு அதைப் பிடிக்க வேண்டுமென்பது அவன் கருத்து. அதற்கென்று பதனிடாத எருமைத்தோல் வார்களால் முறுக்கப்பட்ட நான்கு பலமான கயிறுகள் கொண்டுபோனான். ஒவ்வொன்றிலும் சுலபமாக நகரக்கூடிய ஒரு சுருக்கு வைக்கப்பட்டிருந்தது. இக்கயிறுகளை அறுக்க எந்தப்பலமான கரடியாலும் முடியாதென்பதை அவன் அறிந்து தன்



னுள் திருப்தி யடைந்தான். இக்கயிறுகளால் யானைகளையும் சிறு மரக்கலங்களையும் பிணிக்கலாம்.

"அதிக நேரம் காக்காமலே இன்று நல்ல வேட்டைகிடைக்கலாமெனத் தோற்றுகிறது. என்ன ஆகிறதோ பார்ப்போம்" என்று அவ்வேட்டையாளி சொல்லி வாய்மூடுமுன் அவனுக்குப் பின்புறத்திலிருந்த ஒருபுதரில் சலசலவென்ற சப்தம் கேட்டது. உடனே அவன் திரும்பிப்பார்க்கவே அதுவரை அவன் பார்த்திராத ஒரு பெருங் கரடியைக் கண்ணுற்றான். அதனைப்பார்க்கவே அவனுக்குப் பிரமை யுண்டாயிற்று. அந்தப் பிரமையில், தான் கொண்டுபோயிருந்த நான்கு தோல்வார்க் கயிறுகளையும் கைநழுவ விட்டான் ஏதேனும் ஒரு புது வஸ்துவைக் காணுங்கால் அதனை மிக்க ஆச்சரியத்துடன் உற்றுப்பார்ப்பது நரைக்கரடியின் வழக்கம். அச்சமயத்தில் அது மனிதனையாவது வேறு எந்தப் பொருளையுமாவது கண்டு பயப்படுவதே இல்லை. கயிற்றுச் சுருள்களைக் கண்டு ஆச்சரியங்கொண்டு மெதுவாய் அவற்றையணுகி மோந்து பார்த்து அவற்றை ருசிபார்க்கவும் தொடங்கிற்று. அச்சமயத்தில் அதுதற்செயலாய்க் கண்களை மேலே தூக்கவே தன் தலைக்குச் சிறிது உயரத்தில் ஒரு வேட்டையாளி உட்கார்ந் திருப்பதைக் கண்ணுற்றது. உடனே பின்னங்கால்களால் அக்கிளையை எட்டப்பார்த்தது. அது தன் பெரிய கைகளையும் நகங்களையும் நீட்டிக்கொண்டு அண்ணாந்து பார்த்து எட்டுவதற்கு ஓர் அடிமட்டுமிருக்கும்படி அவ்வளவு சமீபத்தில் வரவே வேட்டையாளிக்கு நடுக்கமுண்டாகும்படி யிருந்தது. ஆனால் தனக்கு யாதொரு அபாயமும் நேரிடாதென்பது அவனுக்குத் தெரியும். ஆகையால் அவன் தொங்கவிட்டிருந்த காலை இழுத்துக்கொண்டு மரக்கிளையின் மீது நன்றாகப் படுத்துக்கொண்டான் அதனால் அவன் தலையும் கண்களும் கரடியின் மூக்குக்கும், நீட்டின நாக்குக்கும் சமீபத்திலிருந்தன. வேட்டையாளி தன் துப்பாக்கியை அடிமரத்தில் சார்த்தியிருந்தான். அவனது அரைக்கச்சையில் கத்தியும் கைக் கோடாரியும் இருந்தன. ஆனால் அவைகள் அப்படிப்பட்ட பலத்த சத்துருவுக்குப் போதுமான ஆயுதங்களாகா. இது நிற்க. அவனுடைய கருத்தும் அப்பிராணியை உயிரோடு பிடிக்க வேண்டுமென்பதே யொழியக் கொல்லவேண்டு மென்பதன்று.

அஃது எவ்வளவு உயர்ந்து எட்டினின்றும் வேட்டையாளியை எட்டிப்பிடிக்க முடியவில்லை. உயரத்துக்காகச் சிலவேளை அவைகள் கற்களைக்கொண்டு மேடை போடுவது வழக்கம். அக்கரடிக்கோ அச்சமயம்வரை அதிற்சிறிதும் பழக்கமில்லை. ஆகையால் மறுபடியும் அது கால்களைக் கீழ்வைத்து நாலாபக்கமும் சுற்றிப்பார்த்தது. அச்சமயம் அதன் கண்களுக்கு மரத்தடியிற் சார்த்தப்பட்ட துப்பாக்கி தென்பட்டது. அது சாவகாசமாய் அதன்கட் சென்று அதனைப் பரிசோதித்தது. சொற்பநேரம் பார்த்தபோதிலும் நன்கு பரிசோதித்துப் பார்ந்தது. அது துப்பாக்கியை ஒரே முறை தொட்டுச் சோதித்துப் பார்த்தது. அதனால் அதன் பூட்டுவாய் நொறுங்கிக் குழாயும் வளைந்துவிட்டது. துப்பாக்கியும் உபயோகமற்றதாக ஆய்விட்டது. மறுபடியும் அது கயிற்றுச்சுருள் அண்டை சென்று உட்கார்ந்து அவைகளில் ஒன்றைப்பற்றிக் கடிக்க ஆரம்பித்தது. அச்சமயத்தில் அதன் கண்கள் மட்டும் மேல்நோக்கிப் பார்த்த வண்ணமாயிருந்தன. காட்டிலேயே வசிப்பவனுக்கும் அந்நிலைமை மிக்க அபாயகரமானது. வேட்டையாளி படுத்திருந்த கிளை கூடியமட்டும் சௌக்கியமாகவே இருந்தது. அதினின்றும் சிறு கிளைகள் வியாபித்திருந்தன. ஆனால் அவனிருந்த நிலையில் அவற்றைப் பலமாய்ப் பிடித்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லாமற் போயிற்று. நரைக் கரடிகள் நெடுநேரம் வரை காத்துக்கொண்டிருப்பது வழக்கம். இந்தக் கரடிக்கும் செய்வதற்கு வேறுவேலையின்மையால் அவ்வாறே அஃது உட்கார்ந்திருக்கு மென்பது அவனுக்குத் தெரியும். அவனும் இந்நிர்ப்பந்த நிலையினின்றும் தப்பிக்கொள்ளத் தன்னால் கூடிய யோசனைகளெல்லாம் எண்ணிப்பார்த்தான். துப்பாக்கியும் முறிந்துபோகவே அவனுக்குக் கவலை ஆரம்பித்துவிட்டது. இக்கரடி தன் சத்துருவைக் கூர்ந்துபார்ப்பதில் சற்றும் சலியாதிருப்பதை நினைக்க நினைக்க அவ்னுக்கு நாடிவிழுந்துவிட்டது. கீழே கிடக்கும் கயிற்றுச்சுருள்களில் ஒன்றை அதுசொற்பமாய் விழுங்க ஆரம்பிக்கவே அவனுக்குப்பின்னும் அதைரியமாயிற்று.

தன் குடிசை வெகு தொலையிலிருப்பதையும் தன் சோற்று மூட்டை மரத்தடியில் துப்பாக்கிக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருப்



பதையும் நெடுநேரம் அவ்விடமே தங்கியிருப்பதற்குக் கிளையில் போதுமான சௌகரிய மில்லாதிருப்பதையும் நோக்கவே அவன் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏக்கங்கொள்ள ஆரம்பித்தது. ஆகையால் அவன் ஓட வழிதேடினான். தன் குல்லாவை விட்டெறியும்பக்ஷத்தில் கரடி அதை நோக்கிச் செல்லும். அச்சமயம் தான் மெல்லக் கீழே இறங்கி ஓடிவிடலாமென்று நினைத்தான். தப்பித்துக்கொள்ள என்னென்ன வழிகள் நினைக்கக்கூடுமோ அவைகளெல்லாம் அவன் மனத்தின்கண் உதயமாயின. முதல் முதல் போசித்தவண்ணமே தன் குல்லாவைக் கழற்றித் தரையில் வீசியெறிந்தான். கரடி அதனைச் சிறிது நேரம் உற்றுப்பார்த்தும் இருந்த இடம்விட்டு அசையாமல் கயிற்றைச் சாவகாசமாய்க் கடித்த வண்ணமாயிருந்தது. சிறிது நேரம் சென்றபின் வேட்டையாளியை அது மெல்ல அண்ணாந்து பார்த்தது. அப்பார்வையானது "அவ்வாறு செய்ததில் உன் கருத்தென்ன" என்று வினவுவதுபோல் தோன்றிற்று. தான் நெடுநேரம் செய்த பல முயற்சிகளும் வீணானது கண்டு வேட்டையாளியும் மனமுடைந்து அக்காரியத்தில் தான் ஏற்பட்டதைக்குறித்து மிகவும் விசனப்பட்டான். அந்த விசனத்தில் அவனுக்கு வேடிக்கையான வெண்ணம் ஒன்று மனத்தில் உதித்தது. அதற்குள் அக்கரடி கயிற்றின் பெரும் பாகத்தை விழுங்கிவிட்டது. அக்கயிற்றின் மற்றொரு நுனியைப் பிடித்திழுத்து அது விழுங்கின பாகத்தையெல்லாம் வெளியேற்றினால் அக்கரடிக்கு எவ்வளவோ ஆச்சரியம் உண்டாகலாமென யோசித்தான். இருளும் மூடிக்கொள்ளத் தொடங்கிற்று. வேட்டையாளிக்கு முன்னமேயிருந்த விசனம் அதிகரித்தது. ஏனெனில் இருளிற்கும் கரடிக்கும் இனி வித்தியாசம் கண்டுபிடிப்பது கஷ்டம். தன்னைக் கரடி அதன் நகங்களால் எட்டிப் பிடிக்கக்கூடிய உயரம் வந்துவிட்டதாக நினைத்து இரண்டொரு முறை கிளையினின்றும் தாவிக் குதித்தான். இத்துன்பங்களுடன் பசிப்பிணியும் அதிகரித்தது. தூக்கமும் பலமாய் வந்துவிட்டது. தூக்கக்கலக்கத்தில் பசியும் பறந்துவிட்டது. எவ்வாறு அக்கரடியை ஜயிக்கலாம் என்ற எண்ணமே அவன் மனத்திற் குடிகொண்டது. அன்றிரவில் அவன் பலதரம் தூங்குகிறதும் விழிக்கிறதுமாயிருந்தான். விழித்த சமயங்களிலெல்லாம் அவன் திடுக்கிட்டுக்

கூச்சலிடுவான். கரடியும் அச்சத்தத்தைக்கேட்டு விழித்துக்கொண்டு அவனைப் பார்த்து உறுமி மறுபடியும் தூங்கும். காரிருள் அகன்று காலையம் பொழுதும் புலர்ந்தது. கதிரவன் குணதிசைக் குன்றம் வந்தடைந்தான். கரடியும் அவ்வேட்டையாளி மரத்தின் மேலேயே அட்டைபோல் ஒட்டிக்கொண்டு தன்னை ஆந்தைபோல் விழித்துப் பார்ப்பதைக் கண்ணுற்றது. தூக்கத்தைப் போக்க அவனால் முடியவில்லை. உயிருக்கு அபாயம் வந்தாலும் வரட்டும் என்று சிறிதுநேரம் தூங்கத் தீர்மானித்தான். அந்நோக்கத்துடன் ன் கைகளையும் கால்களையுங்கொண்டு தானிருந்த கிளையைப் பலமாய்க் கட்டிக்கொண்டான். தன் தேகத்தையும் தான் தரித்திருந்த கச்சையினால் மரத்தோடுமரமாய் இழுத்துக் கட்டினால் நலமாயிருக்குமென்று எண்ணி அவ்வாறே செய்தான். கச்சையும் இரண்டு கஜ நீளமிருந்தது. முன்னமேயே அவ் யுகதி தோன்றாமல் போனதைக் குறித்து ஆச்சரியமடைந்து கட்டிக்கொண்டதும் தன்னை யறியாமல் அவனுக்குத் தூக்கம் வந்தது. அவன் கால் மாத்திரம் தூக்கத்தில் கீழே நழுவித் தொங்காமலிருந்தால் இந்த யுக்தி மிகவும் நலமாக இருந்திருக்கும். கால் கீழே தொங்கினதைக் கரடி விழித்துக்கொண்ட வுடன் பார்த்தது. அஃது உடனே பின்னங்கால்களால் தன் முழு உயரமும் நின்று தன் நாவை நீட்டக்கூடிய அளவு நீட்டி அவன் கால் கட்டைவிரலை எட்டி நக்கியது. உடனே வேட்டையாளி திடுக்கிட்டு விழித்துக்கொண்டு காலை உயர இழுத்துக்கொண்டான். அவன் தூங்கினது சொற்ப நேரமாயிருந்தாலும் அது நல்ல தூக்கமாயிருந்தது. அதனால் அவன் சிரமம் முற்றிலும் நீங்கிற்று. நல்ல தூக்க நேரத்தில் சிறிது தூங்குவதால் சிரமமெல்லாம் நீங்கித் தேகம் சௌக்கியம் அடையுமென்பது நிச்சயமன்றோ. அவன் தன் கட்டை அவிழ்த்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான். காலடியில் கரடி இன்னமும் உட்கார்ந்திருக்கக் கண்டான். பின் சோம்பல் முறித்துக் கொட்டாவிவிட்டான். அச்சமயம் அவன் கீழே விழுந்துவிடுவான்போலிருந்தது. அவன் தன்னைச் சுற்றிப் பார்த்தான். தூக்கக்கலக்கம் நீங்கி அவனுக்குத் தன் அறிவு வந்தது. உடனே தப்பிக்க வழி பார்த்தான்.



அஃது ஒரு வெளியான மலைப்பிரதேசம். அங்குமிங்கும் பெரும் பாறைகள் நிறைந்திருந்தன. அம்மரத்திற்கு 50 கஜ தூரத்திற்கப்பால் நான்கு பாறைகளிருந்தன. அவன் அக்கரடியை நோக்கி "நண்ப! நீ காலையில் உன் நாவினால் என் காலைநக்கினாய். மறுபடியும் நக்குகிறாயா?" என்று சொல்லிக்கொண்டே தன்காலை எவ்வளவு தூரம் நீட்டமுடியுமோ அவ்வளவு நீட்டினான். கரடியும் அதற்கிணங்கினது போல் எழுந்து நின்று நாவை நீட்டிக் கட்டை விரலை எட்டி நக்கிற்று. அம் மலைநாட்டில் பழகுகிற வேடன் எப்பொழுதும் மிக்க பலவானாகவும் வஸ்தாதாகவும் இருப்பது வழக்கம். மரக்கிளைகளை ஊசலாடிப் பிடிப்பது சிறு பள்ளத்தைத் தாண்டுவது போல் அவனுக்கு மிக்க சுலபம். ஆகையால் கரடி நேராக நிற்கும் பொழுது அவன் மரக்கிளையைப் பலமாய்த் தன் இருகரங்களாலும் பற்றிக்கொண்டுத் திடீரென்று தன் தேகத்தைத்தாழ்த்தி உதைத்து ஊசலாடிய வேகத்தில் கரடியின் முகத்தைப் பார்த்து ஓர் உதை கொடுத்தான். திடீரென உதைத்தபடியால் கரடி நிலைதப்பி மல்லாந்து விழுந்து கோபத்துடன் உறுமிற்று. உடனே அவன் கீழே குதித்து 50 கஜங்களுக்கு அப்பால் இருக்கப்பட்ட பாறைகளுக்கு மிகவும் வேகமாய் ஓடினான். கரடியும் உடனே எழுந்து சுற்றிப்பார்த்து அவனைப் பிடிக்கத் தொடங்கிற்று. அவன் முதல்பாறையைத் தாண்டினதும் அதுவும் வந்துவிட்டது.

ஆனால் வேட்டையாளி அதற்குள் இரண்டாம்பாறையைச் சுற்றிப்போய் மூன்றாம்பாறையில் ஒளித்துக்கொண்டான். கரடி அடுத்த பாறைக்கு ஓடிப்போகிறவரை பார்த்திருந்து அவன் உடனே மரத்துக்குத் திரும்பிச்சென்று சரேலென்று கயிறுகளை எடுத்துக்கொண்டு கணப்பொழுதில் மரத்திலேறிவிட்டான். கரடியும் சொற்ப நிமிஷங்களுக்கெல்லாம் அவ்விடம் வந்து சேர்ந்தது. அவனும் கயிற்றை அவிழ்த்து ஒருமுனையை பலமாய் மரக்கிளையில்கட்டி மற்றொருபாகத்தின் சுருக்கைத் தயாராய் வைத்துக்கொண்டான். "குருளையே! வா மற்றோர்முறை என்பாதத்தைருசிபார் பார்ப்போம்" என்றான். கரடியும் முன்போலவே நின்று அவன் மறுபாதத்தை நக்கத்தொடங்கிற்று. மீன் ஈயைப்பிடிக்கிறவிதம் தாவி "கரடியே அப்படியே நில்லு பொறு ஒருநிமிஷம் என்று சொல்லிக்கொண்டே

சுருக்கு அதன்கழுத்தையும் கைகளையும் தாண்டிக்கொண்டு இடுப்பில் போய்விழும்படியாக அதனைச் சாமர்த்தியமாய் வீசி யெறிந்தான். நல்லவேளையாய் அவன் உபாயம் உடனேபலித்தது. அதுமறுபடியும் அவன்காலை எட்டப்பார்த்தது. சுருக்கத்தைப்பிடித்து இழுக்காமல் அவன் மற்றொரு கயிற்றின் சுருக்கை அதன் கழுத்தில் விழும்படி எறிந்து அதைப் பலமாய்ச் சுருக்கினான். அது தன் அபாயஸ்திதியை யறிந்து பின்புறம் இழுக்கத்தொடங்கிற்று. அதனால் சுருக்குகள் இரண்டும் பலமாய் நெருங்கிவிட்டன. கரடி இழுக்கவே மரம்பலமாய் அசைந்து கீழேவிழுந்துவிடும்போலிருந்தது. அதனைப்பலமாய்ப் பிடித்துக்கொண்டான்.

அது தன்னை விடுவித்துக்கொள்ள அரைமணி நேரம் வரை முயன்று பார்த்தது. வேட்டையாளியும் மரம் அசங்குவதைக்கண்டு நடுங்கினதுமன்றி கயிறும் எங்கே அறுந்துபோமோ என்று பயந்தான். ஆனால் கயிறோ பலமானவை. கடைசியில் கரடி களைத்துக் கீழே விழுந்துவிட்டது. இதுதான் வேட்டையாளி எதிர்பார்த்ததும்,

சடுதியில் அவன் கீழே இறங்கினான். கரடியும் சொற்பம் களை தெளிந்து அவனைக் கோபத்துடன் பார்த்து எழுந்திருந்து துரத்த ஆரம்பிக்கவே அவனும் பாறைக்கு ஓடினான். இரண்டாமுறையும் அது களைப்பையடையவே வேட்டையாளி தன் வலையை எடுத்து அதன்மேல் வீசினான். வலை மேலே படவே அதற்கு மறுபடியும் கோபம் பிறந்து ஓடிவர ஆரம்பித்தது. அது வலைக்குள் சிக்கியதால் முடியவில்லை. ஆனால் அது பூமி அதிரும்படி துள்ளி துள்ளி விழுந்தது. கயிறுகள் பலமோ அந்தக் கரடிதான் பலமோ என்று பார்க்கக்கூடிய காட்சி நேர்த்தியாயிருந்தது. மூன்றுங்கயிற்றை அதன் பின்னங்கால்களில் பிணைக்க முயன்றிராவிடின் இக்காட்சியை அவனும் அனுபவித்திருக்கக்கூடும். ஒரு காலால் விலுக்கு விலுக்கென்று உதையவே வலையின் ஒரு கண்ணி அறுந்துவிட்டது. உடனே அவன் வெகு சாமர்த்தியமாய் அதைச்சுற்றி மற்றொரு சுருக்கை வீசி இழுத்து மரத்தில் கட்டினான். அப்பொழுதுதான் அவனுக்குத் திருப்தியுண்டாயிற்று. நேற்றிவேர்வையை வழித்து எறிந்து களைப்பாற உட்கார்ந்தான். பிறகு அடுத்த பாறையின் மேல் உட்கார்ந்து



சாவகாசமாய் உண்டியை உட்கொள்ள முயன்றான். இவ்வாறிருக்கையில் அவன் மகனும் மற்றவர்களும் அவனைத்தேடிக்கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு அச்சமயம் உண்டான ஆனந்தத்தை யாராலும் அளவிடக்கூடாது. ஆகையால் இதனைப் படிப்பவரே அதனை ஊகித்தறிந்து கொள்வார்களாக. உடனே ஒரு சிறுவன் ஓடிக் கரடி அடைக்கும் கூட்டை இழுத்துக்கொண்டு வந்தான். வெகுபாடுபட்டுக் கடைசியாய்க் கரடியையும் கூட்டுக்குள் ஓட்டிவிட்டார்கள். அதனை இப்பொழுதும் மிருக காட்சிசாலையிற் கண்ணுறலாம். அந்தக் காட்டில் அதனைப்பிடித்த விருத்தாந்தமும் எழுதி அச்சிடப்பட்டு ஒட்டப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

எஸ். சாமிநாதையர்.

# புத்தகக் குறிப்பு.

## கம்பர் சுந்தரகாண்டம்.

தமிழ்க் காவ்யங்களுள் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரது இராமாயணம் மிகவும் சிறப்புற்றது என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போன்ற விஷயம். அம்மாண்புள்ள காவ்யம் இதுகாறும் பிழையற அச்சிடப்படாதது பெருங்குறையே. தமிழ் நாட்டாருக்கு இஃது ஒரு பெரும் அவமான மெனக்கூறினும் குற்றமுறாது. இக்குறையை நீக்கும் வண்ணம் பெரும் பொருட் செலவைச் சிறிதும் மதியாமல் இவ்வரிய தொழிலை மேற்பூண்டு ஸ்ரீ வாணிவிலாஸ அச்சுக்கூடத்தலைவர் மகா-ள-ள-ஸ்ரீ டி. கே. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் பீ. ஏ. முன்வந்திருப்பதற்காகத் தமிழ் நாட்டார் அனைவரும் அவர்களுக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டவராவார். அவர்கள் அச்சியற்றிய சுந்தரகாண்டத்தை நம் பார்வைக்கு அனுப்பியதற்காக நாம் அவர்களுக்கு மிக்கவந்தனம் செலுத்துகின்றோம்.

பேருக்கிணங்கவே எல்லாம் சுந்தரமாகவே அமைத்திருக்கின்றன. ஒரு தமிழ்ப் புத்தகம் தூய்மையான உயர்ந்த அண்டிக் கடிதத்தில் கண்டவர் மனமுங் கண்ணும் கவர்ந்திடவனப்புவாய்ந்திருக்கும் வண்ணம் அச்சியற்றப் பெற்றது இதுவே முதன் முறையெனத் தோற்றுகிறது.

இதனைப்பண்டிதர் பி. ஆர். கிருஷ்ணமாசாரியார் அவர்கள் தக்க பழைய ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு பிழையறப் பரிசோதித்துத் தமிழுலகம் மகிழும் வண்ணம் செய்த அரியஉபகாரம் தமிழ்நாட்டார் பெரிதும் பாராட்டற்பாலது. மேற் கூறிய பண்டிதர் அவர்கள் இக்காண்டத்துக்கு அழகிய நடையில் ஒரு வசனம் எழுதியிருப்பது செய்யுள் பழக்கமில்லாதவருக்குப் பேருபகாரமாக இருக்கும். அவ்வசனம் படிக்கப்படிக்க இனிமையாயிருக்கின்றது. முகவுரையிற் கூறியிருக்கும் வண்ணம் இப்பிரபந்தத்துக்கு ஓர் அரும்பதவுரையும் வெளிவந்தால் பரோபகாரமாயிருக்கும்.

சர்வகலாசாலையார் இந்தச் சுத்தமானபதிப்பையே தாங்கள் நடத்தும் பரீக்ஷைகளுக்கு உபயோகிக்கும்வண்ணம் விதி ஏற்படுத்தல் சாலப் பொருத்தமாகும். மேற்கூறிய ஐயர் அவர்களால் நீளநினைந்து எழுதப்பட்டிருக்கிற இதன் அழகிய ஆங்கில முகவுரை இப்பதிப்பின் அருமை பெருமைகளை நன்கு விளக்குகின்றமையால் பாஷாபிமானிகள் பலரும் அதனைக் கூர்ந்து படித்துப் பயனடைவார்களாக. இதுவரை தமிழுலகத்துக்கு ஒளிந்து நின்ற முப்பது செய்யுள்கள் இதிற் சேர்க்கப் பட்டிருப்பது தமிழர்களுக்குப் பெருமகிழ்ச்சியைத் தரத்தக்கது. ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறான புதையல் வெளிவந்திருக்குமானால் இதுகாறும் இப்புத்தகம் பத்துப்பதிப்பு ஆயிருக்குமன்றோ.

ஏனைக்காண்டங்களையும் ஐயர் அவர்கள் இவ்வாறே மிகவும் அழகாக வெளியிட அவர்களுக்குத் தக்க ஊக்கம் அளிக்கும் வண்ணம் குறைந்தது ஒருபிரதியாவது வாங்கல் ஒவ்வொரு தமிழபிமானியின் கடமையாம். தேசாபிமானமும் பாஷாபிமானமும் பாராட்டுகிற ஒவ்வொருவர் கையினும் இவ்வரிய பதிப்பு இருத்தல் பேரழகாகும். பதிப்பின் சிறப்பை நோக்குங்கால் இதற்கு ஏற்பட்டிருக்கிற விலை ரூ 1—8—0 மிகவும் சுலபமானதே.

## பகவத்கீதைவெண்பா

வாதி கேஸரி ஸ்ரீ அழகிய மணவாள ஜீயர் அவர்களால் 600 வருடங்களுக்கு முன் இயற்றப்பட்ட இவ்வரிய பிரபந்தத்தின் முதல் ஷட்கம் சில மாதங்களுக்குமுன் வெளிவந்தபோது இதன் மாண்பைக் குறித்தும் இதன் நூலாசிரியரது மாண்பைக்குறித்தும் நம் பாநுவில் வெளியிட்டோம். இச்சமயம் இதன் 2-வது, 3-வது ஷட்கங்கள் நம் கைக்கு எட்டி யிருக்கின்றன. முதல் ஷட்கம் போலவே இவையும் எல்லா விதத்திலும் சீரும் சிறப்புமாக விளங்குகின்றன. முதல் இவ்வரிய சிறு பிரபந்தத்தைத் தேடிக் கொடுத்த பிரம ஸ்ரீ அன்பில் வெங்கிடாசாரியார் அவர்களுக்கும் இதனைப் பண்டிதர் பி. ஆர். கிருஷ்ணமாசாரியாரைக்கொண்டு பிழையறப் பரிசோதித்தும் குறிப்புரை எழுதுவித்தும் மிகவும் நேர்த்தியாய் அச்சிட்டுத் தமிழுலகத்தாருக்கு உபகரித்த ஸ்ரீமான் டி. கே. பால சுப்பிரமணிய ஐயர் பி. ஏ. அவர்களுக்கும் தமிழ் நாட்டார் பெரிதும் கடமை பூண்டவராவர். மூலக்கிரந்தத்துக்கு முற்றிலும் ஒத்தியலுகின்ற இவ்வரிய வெண்பாவின் 3 ஷட்கங்களின் விலையும் ஒருங்குசேர்ந்து ரூ 1—2—0. ஒவ்வொரு தமிழ் அறிஞர் கையிலும் இருக்கவேண்டிய அழகான பிரபந்தம் ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணிவிலாஸ் அச்சுக் கூடத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பிரமோத்தர காண்ட வசனம்.—இவ் வழகிய சிறு பக்தி நூலை பென்ஷன்ட் டிஸ்ட்டிரிக்டு முன்சீபு மகா-௱-௱-ஸ்ரீ வ. த. சுப்பிரமணியபிள்ளையவர்கள் நம் பார்வைக்கு அனுப்பியதற்காக நாம் அவருக்கு வந்தன மளிக்கின்றோம். சற்றேறக்குறைய 350 வருஷங்களுக்கு முன்னிருந்த வரதுங்கராமபாண்டியன் செய்யுள் ரூபமாகச் செய்த பிரபந்தத்துக் கிணங்க இச்சிறு நூல் வசன நடையில் மேற்கூறிய சுப்பிரமணியபிள்ளையவர்களால் எழுதப்பெற்றது. ராயல் 16-பக்க உருவத்தில் 144-பக்கங்கொண்டது. படிக்கப்படிக்க இனிமையாக இருக்கும் இச் சிறு நூலில் சைவ சம்பந்தமான பல அரிய விஷயங்கள் தெரியவருகின்றன. நடை சுலபமாகவும் இனிமையாகவும் இருக்கின்றது. விலையும் சுலபமே. பிரதி யொன்று நான்கே அணா. சிவ நேசர்கள் அனைவரும் இதனை வாங்கிப் படித்து மகிழ்வார்களாக. பிள்ளையவர்களுடைய பக்தியும் தமிழ் அபிமானமும் திருப்புகழ்ப்பதிப் பால் தமிழுலகம் அறியுமாதலால் இங்கு அவற்றைப் பற்றிப் பேசல் மிகையாம். முக்கியமாய்ச் சிறுவர் சிறுமிகள் இவ்வாறான புத்தகங்களைப் படிப்பதால் பெரும் பயனடைவார்க ளென்பது திண்ணம்.

பத்திராதிபர்.

உ

மீனாக்ஷி சுந்தரேசுவராள் துணை.

# *நிலை மண்டில ஆசிரியப்பா.

விண்ணுற நிவந்த வியன்மாம் பொழிலின்
தண்ணறும் பூவின் தாதுகு தேனை
அண்ணாந் தளியின மார்வுறப் பருகிப்
பண்கள் பலபல பாடிக் களித்துத்
தலைவா யிடத்துத் தன்னே ரில்லாக்
குலைகாய் கமுகின் குளிர்நிழல் முரலும்
கலைமகள் வாழுங் கல்லூ ரிக்கண்
தொன்னூல் களினுயர் துறைபல தோய்ந்தே
பன்னூ லுணர்ந்த நன்னு வலர்காள் !
அன்பாற் சின்மொழி யறைகுவ னவற்றை
என்பாற் கருணைகூர்ந் தேற்றுக் கொண்மின்.
கொங்கவிழ் பொழில்சார் கொங்குநா டதனில்
எங்கும் அமர்வரை இடைக்கட் சென்று
பொங்கும் பொன்மணி பொன்னி கொழிக்கும்
கோயம் புத்தூர்க் குளிர்நகர் வாழ்வோன்
தாய்தந் தையரின் தவமா யுதித்தோன்
ஆய்தந் தனுதினம் ஆழ்ந்த அறிவால்
பலபல கலைகளை நிலவுற வுணர்ந்த
புலவரி னுயர்ந்தொளிர் நலமலி பெருமான்

* This was composed in honour of Rao Bahadur C. Nagoji Rao Avergal B. A. F. M. U. on the eve of his retirement from the Educational service.



நாட்டினுள் ளிருளை நல்லறி வூட்டி
ஓட்ட வுன்னி யோது வித்திடும்
உத்தமத் தொழிலை யோர்ந்தே யெடுத்துப்
புத்தி மான்கள் போற்றும் வண்ணம்
பன்னீ ராண்டு பாங்காய்ச் சென்னை
மன்னுயர் கல்வி மகிழ்வுற விளக்கியும்
பின்னருஞ் சின்னாட் பீடுறப் போத
நன்முறை பயிற்றிய நல்லா சிரியன்
தேனெனச் செப்புந் தெலுங்கு வழங்கும்
மாநகர் பலபல மாண்புடை நாட்டிலும்
அமிழ்தினு மினிய தமிழ்நன் னாட்டிலும்
பாட சாலைகள் பரிசோ தகனாய்
ஓடி யாடி யுழைத்த உத்தமன்
சுரும்பின முரலுஞ் சோலைகள் சூழ்ந்த
பெரும்புனற் காவிரி பெட்புறு வளமுடன்
அருங்கலை யெல்லா மணிபெற விளங்கும்
குடந்தை மாணவர் கோனாய் விளங்கி
மடமை நீக்கிய மகோபாத் தியாயன்
முப்பா னுடனே மூவிரண் டாண்டாய்
எப்பா வலரும் ஏத்திப் போற்ற
ஒப்ப நடந்தனன் ஒள்ளறி வுறுத்தியே.
பால சிக்ஷையைப் பாங்குறச் செய்த
சீலசம் பன்னன் சேய்களின் ரக்ஷகன்
போதனா முறையைப் பொற்புறச் செய்தே
ஓது முபாத்திக் குணர்த்திய வுரவோன்
ஆங்கில பாஷையை அன்புடன் சிறாஅர்
தீங்குற லெடுத்துத் தெளிவுறப் பேச

ஓங்குங் கிளர்ச்சியை யுயர்வித் தவனவன்
குரோத முதலிய குற்றம் நீங்கிய
புரோபெல் பெஸ்ட லோவி போல்வோன்
பாகொக் குஞ்சொற் பண்ணார் கீதம்
ராக மனைத்தையும் ரஞ்சித வழியில்
ஊகத் துடனே உணர்ந்தோ தினவன்
அரசர் பிரதிநிதி அகமகிழ்ந் தளித்த
வரிசைகள் பெற்ற வாலறி வுடையோன்
கற்றோர்க் கெல்லாம் நற்றாய் போல்வோன்
உணர்வோர் யார்க்கும் ஒளியுறு நேத்திரம்
இன்னன சுகுணம் ஏற்பவன் எவனோ ?
நன்னலம் பலவுறு நாகோஜி ராயன்
என்னுமாண் பானவன் இன்புற வாழ
மின்னார் மீன்விழி மெல்லியாள் பாதமும்
பொன்னார் மேனியுன் பொற்புறு பாதமும்
போற்ற நாமும் பூண்டோம் கடமை.
வாழி வாழியிம் மாசபை வாழி
வாழிநம் நண்பன் வாழி யவன்குலம்
வாழி யுலகுளோர் வளம்பெற வாழி
வாழி வாழி ஞானம் வாழியே.

---

S. H. School Madura,
24—3—07.

எஸ். சாமிநாதையர்.

# ராபர்ட் கிளைவ்.

ஆங்கிலம் கற்றவர்களுள் இவ்வீரன் பெயரறியாதார் இரார் என்பது திண்ணம். இவ்வீரனது ஞாபக அறிகுறி ஏற்படுத்தவேண்டுமென்று லார்ட் கர்ஸன் அவர்கள் பகீரப்பிரயத்தினம்செய்து வருவதை உலகத்தார் அறிவார்கள். ஆயினும் இவ்வீரனது உண்மைச் சரிதத்தைத் தமிழுலகத்தார் நன்கு அறியவில்லையென்பது நம் கருத்து. ஆகையால் இச்சமயம் அதனை ஒருவாறு வெளியிடல் சாலப் பொருத்தமாகுமென நினைந்து எழுதலானோம். இவ்வீரன் முதல் முதல் பெரும்புகழ் பெற்றது நம்நாட்டில் ஆகையால் இவனது உண்மைச்சரிதம் நம் நாட்டாருக்கு மகிழ்ச்சியைத் தருமென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

இவ்வீரன் ஆங்கிலநாட்டில் ஷ்ராப்ஷையர் என்னும் மாகாணத்தில் ஸைச் என்னுங்கிராமத்தில் ஒரு கௌரவமான குடும்பத்தில் கி. பி. 1725-ம்௵ செப்டம்பர்௴ 17௳ பிறந்தனன். இவனது தந்தை ஒரு நியாயவாதி. அவருக்கு அதிக ஆஸ்தியில்லையாயினும் அவர் மானமாய்க் காலக்ஷேபம் செய்துவந்தனர். அவருக்கிருந்த பல குழந்தைகளில் நம் வீரனே மூத்தவன். குழந்தைப்பருவத்தில் அவன் மிகவும் நோயால் வருந்தித் தந்தைக்குப் பெருங்கவலை கொடுத்துவந்தான். அவன் முறட்டுக்குணத்தால் தந்தைக்குப் பின்னும் கவலை அதிகரித்தது. இளம் பருவத்தில் அவன் தந்தைக்கு அடங்காத பேதையிற் பேதையாய்த் தான்றோன்றியாய்த்திரிந்துவந்தான். கண்ட விடங்களில் எறிக்குதித்துத் துஷ்டத்தனஞ் செய்வதிலும் தன்னைப்போன்ற துஷ்டப்பிள்ளைகளைச் சேர்த்துக்கொண்டு அவ்வூர்க்கடைவீதிகளிற் போய்க் கடைக்காரர்களிடம் வாதாடிக் காசு அல்லது பழவரி தண்டுவதிலும் அவ்வாறுகொடாவிடின் கடையிலுள்ள பண்டங்களைக் கொள்ளையடித்துச் சூறையிடுவதிலும் பலகணியின் கண்ணாடி முதலியவற்றைத் தகர்த்து நாசஞ்செய்வதிலும் தன் காலத்தைப் போக்கிவந்தான். ஒருசமயம் ஒன்றும் கொடாது மறுத்த ஒரு கடைக்காரனுக்குத் தீங்கிழைக்கும் வண்ணம் அவன் கடைக்கு அருகாமையிலிருந்த சாக்கடையின் குறுக்கேபடுத்து ஓடும் நீரைனத்

தையும் அவன் கடைக்குட் செல்லும்வண்ணம் திருப்பிவிட்டான். அவன் அஞ்சாநெஞ்சு எக்காரியத்தையும் செய்யத்துணியும். ஒருகால் ஓர் உயர்ந்த உப்பரிகையின்மீதேறிப்பார்த்தோர் பயந்து நடுநடுங்கும் வண்ணம் மிகவும் ஓரத்தில் அலட்சியமாய்உட்கார்ந்துகொண்டு பொழுது போக்கினான். கொடிறுடைத்துக் கொல்வான்போல் கடைக்காரர்களால் அவன் கைவிதிர்த்து அஞ்சப்பட்டான். பள்ளியிற் படிக்குங்கால் எவருக்கும் அடங்காப் பிடாரியாகவே இருந்து வந்தனன். ஆசிரியர் அனைவரும் அவன் ஒன்றுக்கும் உதவான் என்று கூறிக் கைவிட்டனர். விவேகியான ஓர் ஆசிரியர் மட்டும் இவன் ஒரு காலத்தில் உயர்ந்த நிலைக்கு வருவானென்று ஊகித்துக்கூறினார். அடிக்கடி பள்ளிக்கூடங்களை மாற்றிக்கொண்டேயிருப்பதும் அவன் வழக்கம். ஆகையால் அவன் படிப்பில் சரியான விருத்தி யடையவில்லை. சான்றோனென்கையன்றோ ஈன்றோர்க்கழகாகும். ஊரார் எல்லாம் தன்பிள்ளையைப் பரமதுஷ்டன் என்று கூறிப்போந்ததைக் கேள்வியுறல் தந்தைக்கு ஆற்றொணாத் துயரை விளைவித்தது.

ஆகையால் இத்துஷ்டப் பிள்ளையைக் கண்காணாச்சீமைக்கு அனுப்பியாவது ஆறுதலடையலாமென்று எண்ணினார் இவன் தந்தை. அவன் தலையெழுத்துப்படி ஆகட்டுமென்று ஈஸ்டு இந்தியா கம்பெனியில் வேலைபார்க்கும் வண்ணம் இந்தியாவிற்கு அனுப்பினார். அவனுக்கு அப்பொழுது 18 பிராயம். அவன் தன் ஊரையும் உற்றார் பெற்றாரையும் விட்டுப்புறப்பட்டு 1744-ம் ௵ சென்னைக்கரை வந்துசேர்ந்தான். தற்காலம் பதினான்கு நாட்களில் முடிக்கும்படியான பிரயாணம் அக்காலத்தில் ஐந்தாறு மாதங்கள் செல்லும். வரும் வழியில் பிரேஸில் தேசத்தில் ஆறேழுமாதங்கள் இவன் நிறுத்தப்பட்டபடியால் இந்தியா வந்து சேர ஒரு வருஷமாயிற்று. வழிச்செலவிற்குக் கொணர்ந்த சொற்ப பணமும் விரைவிற் செலவாயிற்று. பின் வேண்டிய செலவுக்குக் கப்பல் தலைவனிடமிருந்து உயர்ந்த வட்டிக்குக் கடன் வாங்கிச் செலவிட்டான். ஊரிலிருந்து வருங்கால் சென்னையிலுள்ள ஒரு ஆங்கில கனவானுக்குத் தக்க கடிதம் வாங்கி வந்திருந்தான். இவனைப் பிடித்த துர் அதிர்ஷ்டம் அக்கனவான் இவன சென்னை சேருமுன்னரே தம் ஜனன பூமிக்குப்புறப்பட்டுப்போயி



னர். கையிலொரு காசுமில்லை கடன் கொடுப்பார் யாருமில்லை என்ற நிலைமையில் கிளைவ் சென்னைக்கரை வந்து சேர்ந்தான். அறிமுகமில்லாத ஊரில் ஒருவன் போய்க் காலங்கழிப்பதென்றால் மிகவும் துன்பமே. பொருளில்லையென்றால் அதனினுந்துன்பமே. இவன் பார்க்கவந்த வேலையும் இவன் மனத்துக்கு இன்பந்தரவில்லை. காலை முதல் மாலைவரை ஓயாமலுழைக்கவேண்டியதாயிருந்தது. உஷ்ணமும் சகிக்கமுடியவில்லை. வேலைக்கு ஏற்பட்ட சம்பளமும் மிகவும் சொற்பம். பட்ட கடனிறுப்பதற்கோ வழியொன்றுங்காணோம்: துஷ்டர் கூட்டுறவிலேயே மனம்போன போக்குப்படிக் குதூகலமாய்க் காலம் கழித்து வந்த அவன் மனத்துக்கு இங்கு எல்லாம் வெறுப்பாய்த் தோற்றின. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி அவன் ஏழைநெஞ்சம் புண்ணாகத்தொடங்கிற்று. இந் நிர்ப்பந்த நிலையில் அவன் யாது செய்வான். இவ்வாறு சில நாட்கழித்து வந்தான். எல்லாவிதத்திலும் நேர்ந்த துன்பங்களைச் சகிக்க முடியாமல் தன்னுயிரைமாய்க்கத் தீர்மானித்துக் கைத் துப்பாக்கியை எடுத்து இருமுறை தன் தலைக்கு நேராகப்பிடித்துச் சுட முயன்றும் இரு முறையுஞ் சுட முடியவில்லை. அச்சமயம் தற்செயலாய் அவ்வறைக்குள் ஒரு நண்பன் நுழைந்தான். அவனிடம் இவ்வாச்சரிய சம்பவத்தைக்கூறிக் கையில் வைத்திருந்த துப்பாக்கியைக்கொடுத்துச் சுட்டுப் பார்க்கச் சொன்னான். யாதொரு தடையுமின்றி அவன் சுட்டுக்காட்டினான்' அதன்மேல் கிளைவ் "பகவான், என்னையும் ஏதோ ஒரு பெரிய காரியத்துக்கென்று கருதியிருக்கிறார்போலும்." என்று வேடிக்கையாகவும் வினயமாகவும் கூறிப் போந்தானாம். அந் நிர்ப்பந்த நிலையில் இவ்வீரன் எழுதிய பல சுகஸ்தலிகிதமான கடிதங்கள் கண்ணாடிப் பெட்டகத்தில் பொன்போற் பொதிந்து வைக்கப்பட்டிருக்கின்றதையும் அதன்மேல் ஒரு பச்சைப்பட்டு மூடப்பட்டிருக்கிறதையும் அதனுடன் பிளாஸிசண்டையின்படமொன்று வைக்கப்பட்டிருக்கிறதையும் இன்றும் நாம் நம் சென்னையிற்காணலாம். கிளைவ் லிகிதனாயிருந்து வேலை பார்த்த இடமும் அவ்வீரன் வழக்கமாய் உண்டுவந்த இடமும் அவன் தன்னுயிரை மாய்த்துக்கொள்ள யத்தனித்த இடமும் அவன் புத்தகசாலையில் படித்து வந்த இடமும் அவன் கலியாணஞ்செய்து

கொண்ட ஆலயமும் இன்றும் உற்சாகத்துடன் சுட்டிக்காட்டப்படுகின்றன.

இந்நிலையிற் சில நாட்கள் கழிந்தன. வேலை முடிந்த பிறகு மாலைக்காலத்தில் உத்தியோகஸ்தர்கள் ஒருவர் விட்டுக்கு ஒருவர் சென்று அளவளாவி இன்பமாய்ப் பொழுது போக்குவது வழக்கம். சிலர் அக்காலத்தில் இனிமையாய் அமைக்கப்பட்டிருந்த உத்தியான வனங்களிற் சென்று உலாவிப் பொழுது போக்குவது வழக்கம். அவ்வாறான உத்தியான வனம் முன்னிருந்த இடம் தற்காலம் ஜெனரல் ஆஸ்பத்திரி இருக்கப்பட்ட இடம். பிரான்ஸுக்காரர் சென்னையைக் கைக்கொண்டவுடன் அவ்வுத்தியான வனத்தை யழித்து நிலமட்டமாக்கிவிட்டனர். அவ்வாறான இன்பங்கள் ஒன்றிலும் கிளைவ் நுழைந்துகொடுக்கவில்லை. இயற்கையிலேயே சொற்பம் இறுமாப்புள்ளவன். மௌனமாயிருப்பதிலேயே அவனுக்கு விருப்பம் அதிகம். "மோன மென்பது ஞான வரம்பு" என்றும் "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்றும் கூறியபடி அவ்வுயர்ந்த நிலைமையில் அவனிருந்ததாக ஒருகாலும் கூறோம்.

அவ்வாறிருப்பது அவனது இயற்கை. எத்தனை நாள் ஓர் இளைஞன் அவ்வாறிருக்க முடியும். பொழுது போக்குக்கு என் செய்வான். ஆகையால் இதற்குமுன் புஸ்தகங்களையும் கல்விச்சாலைகளையும் வெறுத்த இவனது மனம் இச்சமயம் அவைகளை நாடிச் செல்லத் தலைப்பட்டது. அக்காலம் சென்னை கவர்னராயிருந்தவர் மார்ஸ் என்ற ஒரு கனவான். அவர் கிளைவினிடம் பக்ஷம் பாராட்டித் தம் வசத்திலிருந்த கவர்ன்மெண்ட் புத்தகசாலையில் போய்ப் படிக்கும் வண்ணம் அவனுக்கு அநுமதி கொடுத்தனர். இதுமுதல் கிளைவுக்குச் சொற்ப நற்காலம் பிறந்தது. சஞ்சலப்பட்ட அவன் மனம் சிறிது மகிழ்ச்சியடைந்தது. ஆ! ஆ! அறிவின் ஆனந்தமே ஆனந்தம். புத்தகசாலை யென்பது புத்திமான்களுக்கு இம்மையிற் சொர்க்கமன்றோ. ஓர் அறையி லுட்கார்ந்து உலகமெல்லாம் பிரயாணம்பண்ணி வரலாமே. ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு உலகத்திலுள்ள அறிவாளிகளிடத்திலெல்லாம் சம்பாஷிக்கலாமே. எத்தனையோ வருஷங்களுக்கு முன்னிருந்த கல்விக்களஞ்சியங்களுடன்



இன்பமாய் அளவளாவலாமே. சிருஷ்டியின் சிறப்புக்களெல்லாம் அவ்விடத்தில் சீராக விளங்குமன்றோ. அறுபத்து நான்கு கலைக் ஞானங்களின் ஆனந்தங்களெல்லாம் அவ்விடத்தில் நாம் சுலபமாய் அநுபவிக்கலாமன்றோ? கிளைவ் அவ்வித ஆனந்த அநுபவமுடையவனானான். அவன் மூர்க்ககுணமும் மூடத்தனமும் ஒருவாறு மாறத் தலைப்பட்டன. அறிவினிடம் அவனுக்கு ஆசை அதிகரித்தது. இளமைப்பருவத்துக் கல்லாத குற்றத்தைப் பின் ஒருவாறு நீக்க முயன்றனன். ஆங்கில பாஷையில் நல்ல தேர்ச்சியடைந்ததுமன்றி சிறிது லத்தீன்பாஷையும் பயின்றனன். பிறபாஷை கற்பதென்றால் எல்லோருக்கும் சுலபமாகுமா? சிலருக்கே அதற்கு விசேஷ ஊக்கமுண்டு. கிளைவ் இந்தியாவுக்கு வருங்காலத்தில் தென்அமெரிக்காவில் ஆறேழுமாதம் தங்கியிருந்ததாகக் கூறினோமே. அச்சமயம் பொழுதுபோக்குக்காகவும் வியாபாரமுறை உபயோகத்துக்காகவும் போர்ச்சுக்கீஸ்பாஷை சிறிது பயின்றிருந்தான். மேற்கூறிய அந்நியபாஷை இரண்டிலும் அவனுக்கிருந்த பயிற்சி மிகவும் சொற்பமே. அந்நிய பாஷைப் பயிற்சியில் அவன் புத்தி அவ்வளவாகக்கவியவில்லை யென்பது அவன் யாதொரு இந்தியபாஷையும் கல்லாமையினாலேயே நன்கு விளங்குகின்றது. சுதேச சிப்பாய்களிடத்தில் எத்தனையோ பக்ஷமாகவும் அந்தரங்கமாகவும் நெடுநாள் உறவாடிவந்தவன் அவர்களது பாஷையைச் சுலபமாய்ப் பயின்றிருக்கலாமே. பின்னர் தனக்குக் கனகாபிஷேகம் பண்ணின மியர்ஜாபரின் பாஷையைப் பயின்றாவது அவனுடன் நேருக்குநேர் அப்பாஷையிலேயே பேசித் தன் நண்பனைக் களிக்கச்செய்து பின்னும் பெரும்பயனை யடைந்திருக்கலாமே. அவ்வாறு செய்யாததால் அவனுக்கு ஒரு குறையும் ஏற்படாது. அந்நியபாஷைப்பயிற்சிக்கு அவன் ஆளில்லை என்றுமட்டும் நாம் இங்குக் கூறவந்தோம்.

இவ்வாறு கல்விப்பயிற்சியால் சிறிது மாறுதலடைந்தாலும் இயற்கைக்குணம் போவதென்றால் சுலபமா? தனக்குமேலான உத்தியோகஸ்தருடன் எப்பொழுதும் முரண்பட்டவண்ணமாகவே இருப்பான். ஒருசமயம் இவன் தன் யஜமானனைப் புன்சொற்கூறி அழைத்தான். அதற்காக அவர் கவர்னரிடம் இவன் நடத்தையைப்பற்றி

த்தெரியப்படுத்தினார். கவர்னரும் இவரைக்கண்டித்து யஜமானனிடம் மன்னிப்புக்கேட்கக் கட்டளையிட்டனர். அவ்வாறே அவனும் உடனே செய்து முடித்தான். இதற்குச் சிலநாட்களுக்குப்பிறகு அந்த யஜமான் நண்பர்களுக்கெல்லாம் ஒரு விருந்தளித்தனர். கிளைவையும் அவ்விருந்துக்கழைத்தனர். கிளைவ் அதனை மறுத்ததன்றி மன்னிப்புக்குக்கட்டளை பிறந்ததேயொழிய விருந்தளிப்புக்கு இணங்கவுமா கட்டளை பிறந்தது என்று அலக்ஷியமாய்க் கூறிக் கொடுமை பாராட்டினான். மனமாண்பில்லாத இக்குணத்தைத் தக்கோர் என்றும் வியந்து பாராட்டார். இதனாலேயே கிளைவ் மனம் கல்வியில் பக்குவப்படவில்லையென்று நன்கு விளங்குகின்றது. ஆனாலும் இளம்பருவ நடத்தையை வைத்துக்கொண்டே ஒரு வீரன் குணத்தை நாம் சீர்தூக்கிப்பார்த்து முடிவுகூறல் சரியன்று. ஆகையால் இதனை இம்மட்டில் நிறுத்தி அடுத்த விஷயங்களுக்குச் சொல்வோம்.

இவ்வாறான முரட்டுச் சுபாவத்தால் ஐரோப்பியர் அவனை வெறுத்து விலக்கினர். அச்சமயங்களில் அவன் வரைந்த கடிதங்கள் அவனது துன்புற்ற மனநிலையைத் தெளிவாய்த் தெரிவிக்கின்றது. இரண்டுவருஷகாலம் இவ்வாறே இருந்துவந்தான்.

(இன்னும் வரும்)

எஸ். சாமிநாதையர்.

# தேகப்பயிற்சி.

—:o:—

நம் இந்தியாவில் தேகப்பயிற்சி யென்று சொல்வது இங்கிலாண்டு,ஜப்பான்,ஜெர்மனி முதலிய தேசங்களில் கற்றுவரும் தேகப்பயிற்சிக்குப் போலியேயாம். பூர்வகாலத்தில் இந்தியர்கள் தங்களது உயிரை அன்னியர்களுடைய உதவியன்றி ஆபத்துக்காலங்களில் காப்பாற்றிக்கொள்ளக்கூடிய விதத்தில் குஸ்தி, கஸரத், கத்திசுழற்றல் சிலம்படித்தல் முதலிய இத்தியாதி விஷயங்களில் மிகவும் சாமர்த்தியமுள்ளவர்களாயும் பராக்கிரமசாலிகளாயு மிருந்தார்கள். இவர்களது திறமையை நன்கு கண்டறிந்த பெரிய பெரிய ராஜாக்களும் தனவந்தர்களும் வெகுமதி கொடுத்துவந்தார்கள். அக்காலங்களிலுள்ள ஜனங்கள் எல்லாம் நீடித்த ஆயுசு ஜீவித்திருந்ததுமன்றி தங்களது தேகப்பயிற்சி பலத்தால் திடமுள்ள மக்களையும் பெற்றுவந்தார்கள். மேலும் இவர்கள் நல்ல ஆரோக்கிய முள்ளவர்களாயும் தேகபுஷ்டி யுள்ளவர்களாயுமே இருந்தார்கள். நம்மை ஆங்கிலேயர் ஆட்சி புரிய வந்தது முதல் இத்தகைய விஷயங்களில் நம் இந்தியர்களுக்குப் பிரியமில்லாமலும் இதனால் அடையக்கூடிய குணங்களைக் கொஞ்சமேனும் சிந்தனைசெய்யாத ஓர் குறைவினால் அவை நசித்துப்போயின. தேகப்பயிற்சிக் குரிய விளையாடல்கள் தேகத்தை வளர்ப்பது மாத்திரமன்றி, அநேக நல்லொழுக்கங்களைக் கற்பதற்கும் காரணமாகின்றன. மனிதர்களுக்கு வரும் வியாதி சொற்பமென்றும், வரவொட்டாமல் நாம் தடுத்துக்கொள்ளக் கூடிய வியாதி அதிகமென்றும் இவற்றுள் நம் துர்க்குணத்தால் வரும்வியாதி மிகுதியென்றும் பெரிய பெரிய டாக்டர்கள் பத்திரிகை மூலமாகவும் பிரசங்கங்கள்மூலமாகவும் வெளியிட்டிருப்பதை நண்பர்கள் அறிந்திருக்கலாமல்லவா? தேகப்பயிற்சியானது கடவுள் ஆக்ஞையால் உண்டாகாத வியாதிகளை நீக்குவதற்கு ஒரு முக்கிய கருவிமாத்திரமன்று. தேகத்திற்குபளபளப்பான ஓர் அழகையும் உண்டு பண்ணுகின்றது. தேகபபயிற்சியால்தனதுதேகத்தை வளர்த்த ஒருவன் தைரியமுள்ளவனாகவும் சந்தோஷம் குடிகொண்டவனாகவுமே இருப்பான். ஒருவன்

தன் கல்விப் பயிற்சியின் பொருட்டு எவ்வளவு சிரத்தை யெடுக்கிறானோ அதுபோலவே தேகப்பயிற்சியின் பொருட்டும் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். புத்தி கூர்மையுடன் ஒருவனுக்குத் தேகசக்தியும் மனவலிமையும் இருக்குமாகில் அவனுக்கு எந்தக் காரியந்தான் பிராப்தியாகாது?

தேகவலிமை மட்டும் இருந்தால் போதுமா என்று கேட்பீர்களானால் அதனுடன் கூடிச் சொற்பம் புத்தியும் இருக்குமாகில் எவ்வளவோ பெருங் காரியங்களையெல்லாம் விடாமுயற்சியினாலும் மனவலிமையினாலும் சாதிக்கலாகும். இதற்கு உதாரணமாக நம்மை ஆளும் வெள்ளையர்கள் நம்மைவிடப் புத்தி விசேஷமுள்ளவர்களாயிராதபோதிலும் அவர்களது தேகப்பயிற்சியினாலும் புத்தியினாலும் பொறுமை முதலிய நற்குணங்களைக் கைக்கொண்டு "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பதற்கேற்ப விடாமுயற்சியினால் எத்தனையோ பெருங்காரியங்களைச் சாதித்து வருகின்றனரென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமல்லவா? நம் இந்தியர்கள் ஆங்கிலேய பாஷை கற்பதில்மட்டும் தங்கள் ஊக்கத்தைக் காட்டுகிறார்களே தவிர தேகப்பயிற்சி செய்யும்பொருட்டு சொற்பம் ஊக்கம்செலுத்துவது சற்றும் விணாகமாட்டாதென்பதை அறிகிறதில்லை. தேகப்பயிற்சி செய்யும்போது கால் கைகளை வீசி அங்குமிங்கும் ஓடுவது தங்களுடைய கண்ணியத்துக்குக் குறைவென்று நினைக்கின்றார்கள் போலும். அப்படிப்பட்ட கடின பரீக்ஷைகள் ஏற்பட்டாலும் அதில் தேர்ச்சியடைந்து கௌரவப்பட்டங்களை வைத்தாலும் மிக்க கவலை யெடுக்கிறதும் உத்தியோகங்களில் பிரவேசிக்கிறது மாத்திரம் தங்களது நிலைமைக்கு அழகாமென்று நினைக்கிறார்கள். இது நல்ல காரியமாயினும் தேகப்பயிற்சியில் மனத்தைச் செலுத்தாமல் உயர்ந்த பதவி அடைவதிலே தங்களுடைய தேகபலத்தை இழந்து அடிக்கடி நோயால் வருந்துவது நல்ல காரியமாகத் தோன்றவில்லை. சிலர் இறக்கும் வரையில் தேகத்தில் யாதொரு பலமுமில்லாமல் சரீர துன்பத்தால் வருந்துவதும் பிறர்க்கும் சுற்றத்தாருக்கும் உதவிபற்றும் மருந்தே குடிதண்ணீராகவும் இவ்விதமாகத் தங்கள் நாள்களைப் போக்குகின்றார்கள். கவர்ன்மெண்



டார்கள் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் முதலியவர்கள் தேகப்பயிற்சி அவசியம் எடுக்கவேண்டுமென்றுள்ள எண்ணத்துடன் பரிசுகள் (Prize) ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இவ்விதம் இருந்துங்கூட நம்மவர்கள் படிப்பில் மாத்திரம் சிரத்தை எடுக்கிறதும் தேகப்பயிற்சி நமக்கு சரியன்றென்று தள்ளிவிடுதலானது முற்றிலும் தவறே. கல்வியும் தேகப்பயிற்சியும் ஒரு மனிதனுடைய இரண்டு கண்களுக்குச் சமமாகவே கூறலாம்.

நமது தேகத்தைப் பலிகொடுத்துவிட்டுப் படிப்பையும் பதவியையும் அடைதல் சரியாக இருக்கின்றதோவென்று சற்றுக் கவனித்துப் பாருங்கள். தேகப்பயிற்சியுள்ள ஆங்கிலேயர் முதலானவர்களுடைய தேக பலத்தால் அவர்களுக்கு உண்டாயிருக்கும் கம்பீரமான நடையும் கூர்ம புத்தியும் கண்ணுறவில்லையோ? ஒருவனுடைய தேகப்பயிற்சியில் உண்டாயிருக்கும் தேகபுஷ்டி முதலியவற்றைக் கண்டும் அவர்கள் அதனால் நடத்தும் ஒவ்வொரு திறமையையும் கண்ணுற்றும் இதுவிஷயத்தில் மனத்தைச் செலுத்தாது இருத்தல் எவ்வளவு மதியீனமென்பது சொல்லவும் வேண்டுமா? நம்மவர்கள் கல்விப்பயிற்சியில் மாத்திரம் கொஞ்சம் சிரத்தை எடுக்கிறதும் தேகப்பயிற்சியின்பொருட்டு அதில் ஒரு பாதியேனும் முயற்சிக்காது தள்ளிவிடுதலானது அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை. நம்மவர்களுக்குக் கல்வி யில்லையென்றே கூறலாம். இவ்விதமாக தேகப்பயிற்சி ஒழுக்கப்பயிற்சி பொது நலப்பயிற்சி கல்விப்பயிற்சி முதலிய ஒவ்வொரு சற்குணத்திலும் நம்மவர்கள் மிகவும் குன்றியிருப்பதினாலேதான் நம் நாடு நாளுக்குநாள் வறுமையுற்று க்ஷீணதிசையை அடைந்துகொண்டே வருகின்றது. ஆகையினால் நம் இந்து தேசமாகிய இப்பரதகண்டம் பூர்வீக நாகரிகமும் செழிப்பும் பெறும்படி மேற்கூறிய சற்குணங்களைச் சம்பாதித்தல் பொருட்டு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இந்தியர்.

# நமது நாட்டுப் பருத்தித் தொழில்.

பருத்தி நெசவு இந்தியாவின் மிகப்பழைய தொழில்களுள் ஒன்றும். இங்கிலாந்திலோ அது சென்ற இரண்டு நூற்றாண்டளவுடைத்தேயாம். கம்பளமும் நாரும் இங்கிலாண்டின் சரித்திராஸ்பதப் பண்டங்களாம். இந்தியாவிலோ பருத்தி நெசவு மகாபாரத நாட்களுக்கு முந்தியே அனுபவத்துட்பட்டிருந்தாம். பருத்திப் பண்டங்களுக்கு கிரேக்கர் கொடுத்த பெயர் சிண்டன் என்பது இந்தியா அல்லது சிந்து என்பதின் பெயரேயாம். சமீப காலங்களில் மலையாளத்துக் கள்ளிக்கோட்டையின் பெயர்தானே இங்கிலீஷில் காலிகோ என்று விளங்குகின்றது. அநாதிகாலங்களாய் ஆண் பெண் இருதரத்தாருக்கும் பருத்தித் துணியே இந்தியர் வஸ்திரமாய் விளங்கியதெனலாம். ‘பெரிப்ளஸ்’ என்பதின் ஆசிரியன்——இந்தியாவின் வர்த்தகத்தைப் பற்றி ஆதிகாலத்துக் கிரந்தகர்த்தா—இந்தியாவின் ஏற்றுமதிகளுள் அநேகமாய்ப் பலவிதப் பருத்திப் பண்டங்களைப் பன்னியிருக்கின்றனர். முதல் முதல் இந்தியாவுக்கு வந்த வழிப்போக்கனாகிய மார்க்கோபோலோ என்பவர் காம்பே பட்டணத்துப் பருத்திப் பண்டத்தைப் பலவாறு விவரித்திருக்கின்றார். ஐரோப்பிய காதகர்கள் இந்தியாவுக்கு வரும் வழியைக் கண்டு கொண்டதுமுதல் இவ்விடத்தினின்று தங்களூருக்குக் கொண்டுபோகும் சரக்குக்களில் இந்நாட்டுப் பருத்திப் பண்டங்களும் பட்டுக்களுமே முக்கியமாயிருந்தன.

ஆங்கிலேயர் இந்நாட்டில் வர்த்தக நிமித்தம் குடியேறிய காலத்தில் சூரத், கள்ளிக்கோட்டை, மசூலிப்பட்டணம், ஹூக்ளி இவற்றின் நெசவுஜனங்களுக்குள் நட்புக் கொண்டார்களெனக் காண்கின்றது. நல்ல நெசவிலும், வர்ணங்களின் சுத்தத்திலும், மாறாத் தன்மையிலும் சித்திர விசித்திரங்களின் சொகுஸிலும் இந்தியப் பருத்திப் பண்டங்கள் உலகத்துள் எல்லாவற்றையும் விட மேம்பட்டதென இன்றைக்கும் இசைக்கலாம். ஆனால் விலை விஷயத்திலோ என்றால் மான்சஸ்டருடன் போட்டியிடச் சக்தியற்றன வாயின.



ஏன் எனில், பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தானது இந்தியத்துணிகளை ஊருள் வராது தடுக்கச் சுங்கம்விதித்ததுமாத்திரமன்று வரக்கூடாதென வெளிப்படையாய்த்தடுத்தும் உள்ளூர்த் தொழிலை அபிவிர்த்தி செய்து வந்தது. இதைப்பற்றிச் சரித்திரம் பறையறைகின்றது. லெக்கி என்பவர் பின்வருமாறு சொல்கின்றார். “பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் விலை சரசமாயும் வெகு நேர்த்தியாயுமுள்ள இந்தியத் துணிகள்—காலிகோ, மஸ்லின், சிண்ட்ஸ் முதலியவைகள்—மிகப்பெரிய அளவுகளாய் இங்கிலாந்தில் இறக்குமதியாகி அதிகப் பிரியங் கொண்டதாகவே, கம்பளம் பட்டு இவற்றின் தொழிலாளிகள் மிகத் திடுக்கிட்டவர்களானார்கள். ஆகவே குறிப்பிட்ட சில விலக்குண்டவை தவிர மற்றெல்லாவித சாயத்துணிகளையும், சீட்டித் துணிகளையும் இங்கிலாந்தில் ஆடைகளாகவே பிரயோகிக்கக்கூடாதென்றும், பருத்திகலந்துள்ள சாயப்பண்டங்களையும் சித்திரப்பண்டங்களையும் உபயோகிக்கவே கூடாதென்றும் 1700லும் 1721லும் பார்லிமெண்டில் விலக்குச் சட்டங்கள் ஏற்பட்டன.” அக்காலத்தில் ஆங்கிலர் “நிர்ப்பந்தமற்ற வரியற்ற வியாபாரம்” எனும் வணிக முறையைக் கைப்பற்றினார்களில்லை. இந்தியாவில் இங்கிலாந்தர் பிறதேச ஆஸ்திகளை அடைய ஆரம்பித்ததும், பலவித நிபந்தனைகளால் நாட்டுத் தொழில்களை பலவீனப்படுத்திவிட்டார்கள். அவர்கள் அப்படிச்செய்ததின் கருத்தென்னவெனில், நம் நாட்டு விளைபொருள்களைத் தாங்கள் வசப்படுத்திக்கொண்டு, தங்களூர்த் தொழில்கள் அபிவிர்த்தி செய்யும் எண்ணங்கொண்டே செய்தனவாம். இங்கிலாந்து கொண்ட இக்கொள்கையாலல்லவோ நமது நாட்டுத் தொழில்கள் மலினமடைந்தது. ஆங்கிலர் இவ்விஷயத்தில் அநியாயஞ்செய்தார்கள்என்பது ஒரு பெரிய சரித்திராசிரியன் பின்வருமாறு சொல்லியிருப்பதினின்று வெளிப்படையாய் நன்கு விளங்கும்: தம் நாட்டுத் தொழிலாலுண்டாகும் விலையதிகமுள்ள சரக்கை விருத்திசெய்யும்பொருட்டு, அதற்குப் போட்டியாய் வரும் பிறநாட்டுச்சுலபமான பண்டத்தின் மீது பளுவான சுங்கங்கள் போடாது, அப்பண்டத்தை நிர்ப்பந்தமேயில்லாது உள் நுழைய விடுதல் எனும் கொள்கையை மேற்கொண்

டுளதாய “நிர்ப்பந்த மற்றவியாபாரம்” என்னும் முறை எல்லாக்காலத்தும் எல்லாத்தேசங்களிலும் அனுஷ்டிக்கஒவ்வாததென்பதை இந்தியாவுடன் செய்துவந்த பருத்தித்துணியின் சரித்திரமே நிரூபிக்கும். தன்னை அடுத்த தேசமாகிய இந்தியாவுக்குக்கேடு விளைவித்ததற்கும் மிக்க விசனகரமான உதாரணமும் அதுவேயாம். அக்காலத்தில் (1813-ல்) இங்கிலாந்தில் உண்டாக்கிய பண்டங்களைவிட அரைவாசி விலைக்குக்குறைத்து பிரிடிஷ்சந்தைகளில் இந்தியதேசத்துப் பருத்திப்பட்டுப் பண்டங்களை விற்றும் இலாபமடைந்தார்களெனச் சாட்சியம் விளம்பப்பட்டிருக்கின்றது. ஆகவே பிரிட்டிஷ் பண்டங்களைக்காப்பாற்றற்காகமற்றைப் பண்டங்கள்மீது அவற்றின் விலைக்கு முக்கால் பங்களவுக்கு சுங்கம் விதிக்கவும், அல்லது முழுமையும் தடுக்கவும் அவசியம் நேரிட்டது. இவ்வகைத் தடங்கல் வரிகளும் சட்டங்களும் இல்லாதிருந்திருக்கும் பேய்ஸ்லி மான்சஸ்டர் யந்திரங்கள் ஆரம்பத்திலேயே நிறுத்தப்பட்டன வாய்விட்டிருக்குமல்லாமல், நீராவிகொண்டேனும் மறுபடியும் ஓட்டத்தக்க ஸ்திதியில் இருந்திருக்கமாட்டா. அவ்வெந்திரங்கள் இந்தியத் தொழிலாளியைப் பலிகொடுத்துண்டானவையாம். இந்தியா சார்பற்ற நாடாயிருந்தால் தானும் போட்டி முறைகளைக்கொண்டு பதிற் காட்டியிருக்கும். பிரிட்டிஷ் பண்டங்கள் மீது வரிகளைச்சுமத்தித் தனது உற்பத்தித் தொழில்கள் அழியாவண்ணம் காத்துக்கொண்டிருக்கும். இவ்வகைத் தற்காப்புச்செயல் அதற்குஇல்லாமல் விலக்கப்பட்டுப் போய், அயலானிட கிருபைக்காளாயிற்று! பிரிட்டிஷ் பண்டங்கள் யாதொரு வரியுமேயில்லாமல் இந்நாட்டுள் பலவந்தமாய் நுழைக்கப்பட்டுவந்தன. அயலானான தொழிலாளி தேசாந்திரிக அநீதியேனும் கைக்கொண்டு தன்னுடன் போட்டியிடுவோனைக் கீழேவீழ்த்தியும், கடைசியாகக் கழுத்தை முறித்தும் வெற்றிகொண்டவனானே அல்லது சமமான போட்டியில் நலங்கொண்டவனல்லன்.”

நவீனகாலங்களிலுங்கூட இங்கிலாந்து தனதுவணிகமுறை இன்னதுதான் எனத்தெளிவாய்க் காட்டியிருக்கின்றது. இருபத்தைந்து வருஷத்துக்கு முன்புதான் நமது கவர்ன்மெண்டார் பருத்திப்பண்



டங்கள் மீது இருந்த இறக்குமதித் தீர்வையை ரத்துசெய்தார்கள். தவிரக் கொஞ்சநாட்களுக்கு முன்புதான் இந்தியாவிற் செய்யும் யந்திரத் துணிகள் மீது ரெவினியூவின்பொருட்டு இறக்குமதித் தீர்வை ரத்தானதால் உண்டாகும் நஷ்ட ஈடாக எக்ஸைஸ் வரியுமிட்டிருக்கிறார்கள். இவ்வளவுதானா என்றாலோ, நமது யந்திரங்களில் உள்ள வேலையாட்களின் வயதுவந்த ஆண்மக்களுடைய உழைப்பின் தினசரிகால அளவை மட்டுப்படுத்தவும் கூக்குரலிடுகின்றார்கள். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? இவையெலாம் உத்தேசித்தால் நமது சர்க்காரால் எவ்விதமான உதவிகள் நாம் பெறுவோமோ தெரியவில்லை. மகாத்மாக்களாகிய கிருஷ்ணசாமி அய்யர் போலியர் அறிவார் போலும்! தவிர சர்க்கார் உதவி யாதாயினும், நமது வேலையாட்கள் அநேகங் கோடியர் பருத்தித் தொழிலில் உழைத்தேயாகவேண்டும். இவ்வளவு ஜனங்களைத் தொழிலிலமர்த்தவும், தொழிற்பண்டங்களுக்குக் கிராக்கியுண்டாக்குவதும் ஜனங்கள் செய்துகொள்ளவேண்டியதா, சர்க்காரார் செய்துகொடுக்கப்போகின்றார்களா? நமது நாட்டுச் சரக்கின் மீது நமக்கு விருப்பமுண்டாக்கவும், நமது சரக்கு மட்டமாயினும் அதிக விலையுடைத்தாயினும் அதை அவாக்கொண்டு நம்மவர்கள் நாடும்படிக்குச்செய்தல் கிருஷ்ணசாமி அய்யர் முதலிய தேசாபிமானிகளுக்குப் பிடித்தாடவேண்டிய பயித்தியமன்றோ? மற்றத் தேசர்பிமானிகள் செய்யத்தக்கதானகாரியத்தை அன்னவரும் செய்தாலல்லவோ ஜனத்தலைவர்களெனவும், தேசாபிமான சிரேஷ்டர்களெனவும் சரித்திரம் கூறும்.

ஆகவே பாய்காட் எனும் புறப்பொருள் தியாச்சியத்தைக்கைப்பற்றி சர்வஜனானுஷ்டானத்துக்குக் கொண்டுவரலல்லவோ தேசாபிமானச் சின்னமாகும். அதைவிட்டு நம் நாட்டுக் கைத்தொழிற் சிறப்புக்குக்கொடுங் கூற்றுவரான ஆங்கிலப் பத்திரிகைகளை அனுசரித்துப்பிதற்றுவதும், ஆங்கிலக் கிறிஸ்துவப் பாதிரிகள் முன்னிலையில் நம் நாட்டுத் தேசாபிமானிகளையும் மற்றுள ஏனையோரையும் தூஷித்தலும் பெருந்தன்மையாமோ. தேசாபிமானச் சின்னமாமோ? பாய்காட்டிற்கும், பிரிடிஷ் கவர்ன்மெண்டாருக்கும் என் மாச்சரியம் ஏற்படவேணும்? கவர்ன்மெண்டார் சட்டம் செய்து

பாய்காட்டைக் குற்றமாக்கினாலொழிய அதில் என்ன தப்பிருக்கின்றது? பாய்காட்டால் வெள்ளைக்காரர்மேல் துவேஷம் உண்டாகுமென வெள்ளையர் சொல்வாரேல், அது தன்னலம் நாடியசொல்லன்றோ? தத்தம்பொருளை விரும்பல் தகாதென வேதாந்தம்சொல்லுமா? இல்லறத்தின் பற்றற்ற துறவிகள்கூட அத்தகையகனவுகாணார்எனினும், கிருஷ்ணசாமி அய்யர் தமது தப்பை ஒப்புக்கொள்ளார். இன்னொருசமயம் எழுதுவதில் அடையாறு ஆசிரிய மகாத்மாக்களின் மேற்கோளைக்காட்டுவார் போலும்! இதனால் வெள்ளையர் இவரைப் புகழவும், நம்மவர் இவரை இகழவும் நேரிட்டிருப்பது நமது விபத்தின் சின்னமே.

சு. மி.

---

## தூக்க நோய்.

சுமார் நூறு நூற்றைம்பது வருஷங்களுக்குமுன் இந்தியர் கண்டு கேட்டறியாத அநேக நூதனமான வியாதிகள் இப்பொழுது இந்தியாவில் பரவி வருகின்றன. முதலாவது அம்மை நோய். பின்பு சுமார் 50 வருஷங்களுக்குமுன் பேதியென்னும் ஒரு புதிய நோய் உண்டாயிற்று. அதன்பின் சென்ற 10 வருஷங்களுக்குமுன் பிளேக் என்ற ஒரு பெரிய கொள்ளைநோய் தலைப்பட்டுக் கோடிக் கணக்கான ஜனங்களை வாயிற் போட்டுக்கொண்டது. இவைகளெல்லாம் ஐரோப்பா முதலிய அந்நிய தேசங்களிலிருந்து வந்தனவென்றே தோன்றுகின்றது. இந்தியாவில் வறுமையும் பசியும் அதிகப்படவே இந்நோய்கள் இங்கேயே குடியிருக்கத் தொடங்கிவிட்டன. இதனுடன் இப்பொழுது தூக்க நோய் என்று ஒரு புதிய ஐரோப்பிய வியாதி கல்கத்தாவில் வந்திறங்கி யிருக்கின்றது. அதாவது சும்மா யிருக்கும் பொழுதே தூக்கம் வந்து 10-நாள் 20-நாள் ஒருமாதம் இரண்டுமாதம் தூங்கிக்கொண்டிருந்து அப்படியே ஸ்மரணையற்று இறந்துபோவது தான் தூக்க நோய். இந்த நோயினால் சில தினங்களுக்குமுன் கல்கத்தாவில் ஒரு ஜப்பானிய மாது இறந்துவிட்டதாய் அறிவிக்கப்படுகின்றது. இஃது இன்னும் எங்கெல்லாம்பரவுமோ தெரியவில்லை. ஐரோப்பியருடைய சம்பந்தத்தால் இந்தியர் அநேக நன்மைகளையும் நாகரீகத்தையும் அடைந்துவிட்டார்களென்று சிலர் சொல்லிக் கொண்டாலும், மேற் கூறிய நோய்களெல்லாம் நமக்கு ஐரோப்பியர்கள் முதலிய அந்நியர்கள் கொடுத்த பாக்கியங்கள்தாம் என்பதை ஒளிக்க எம்மால் முடியவில்லை.

# சமாச்சாரக்கொத்து.

(:o:)

### திருக்காட்டுப்பள்ளி ஹைஸ்கூல்.

இதில் அடுத்த வருஷம் 6-வது பாரம் வைத்துக்கொள்ளும்படி உத்தரவாயிருக்கிறது. மதிராஸ் ஹைகோர்ட் வக்கீல் ஆனரெபில் மிஸ்டர் சிவசாமிஐயர் அவர்கள் இதை யபிமானித்து வருகின்றார்கள்.

* * *

### கிளைவ் ஞாபக சின்னம்.

கிளைவ் ஞாபக சின்னத்துக்கு லார்ட் கர்ஸன் சுமார் 60 ஆயிரம் ரூபா வசூல் செய்துவிட்டாராம். இங்கிலாண்டில் மாத்திரமல்லாமல் இந்தியாவிலும் ஒரு ஞாபகசின்ன மேற்படுத்துவதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்துகொண்டிருக்கின்றாராம்.

* * *

### விசாகப்பட்டணம் கான்பரன்ஸ்.

விசாகப்பட்டணம் கான்பரன்ஸ். ஜூன்௴ 5௳ புதன்கிழமையன்று தொடங்கியவுடன் ஆனரெபில் B. N. ஸர்மா வரவேற்பு உபந்நியாஸம் செய்தபின் சபாநாயகர் மிஸ்டர் N. சுப்பாராவ் தமது அக்கிராஸனாதிபத்திய உபந்நியாஸம் செய்தார். இவரது பிரசங்கத்தை யெல்லாரும் கவனமாய்க் கேட்டார்கள்.

* * *

### போடிநாயக்கனூர் சைவ சித்தாந்த சபை.

இச்சபையின் பிரதம வருடோற்சவமானது மே மாதம் 30, 31-ந்தேதிகளில் விக்டோரியா மெமோரியல் ஸ்கூலில் வெகு விமரிசையாய் நடைபெற்றது. இதற்கு மதுரைத் தமிழ்ச்சங்கம் அக்கிராசனாதிபதியவர்களும், பாலவநத்தம் ஜமீன்தாரவர்களுமாகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைசாமித் தேவரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

* * *

### ஜயிலில் 35 வருஷம்.

அலகாபாத்திலுள்ள பரங்கியாகிய J. E. வெஸ்டன் என்பவன் 25 வருஷகாலம் ஜயிலிலிருக்கிறான். அவன்பேரில் இப்பொழுது விசாரணை செய்ய

ப்பட்ட கேஸில் செஷன்ஸ் ஜட்ஜால் 10 வருஷம் கடின சிக்ஷை விதிக்கப்பட்டது. ஆக மொத்தம் 35 வருஷம் தண்டனை இவனுக்குக் கிடைத்திருக்கின்றது.

* * *

## லார்ட் மிண்டோ உத்தரவு.

பஞ்சாபிலும் கீழ் வங்காளத்திலும் ஜனங்கள் பொதுக்கூட்டம் கூடப்படாதென்று லார்ட் மிண்டோ செய்திருக்கும் புதிய விதியானது பஞ்சாப் மாகாணம், லாகூர், ஸியால்கோட், லியால்பூர், ராவில்பிண்டி, அட்டாக் ஆகிய ஐந்து ஜில்லாக்களுக்குமட்டும் தான் செல்லுமென்று விளம்பரம் செய்யப்படுகின்றது.

* * *

## திருப்பூர்க் கால்நடைக் காட்சி.

கோயமுத்தூர் ஜில்லா திருப்பூரில் சென்ற மே௴ 16-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று ஒரு கால்நடைக்காட்சி நடைபெற்றது. அப்பொழுது அநேக கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் வேறு பிரபுக்களும் வந்திருந்தார்கள். ஏராளமான கால்நடைகள் காண்பிக்கப்பட்டன. சம்மானங்களும் கொடுக்கப்பட்டன.

* * *

## விட்டில் பஞ்சம்.

பஞ்சாப் மாகாணத்தில் இப்பொழுது பிளேக் நோய் இருக்கும் மும்மரமோ சொல்லவேண்டியதில்லை. இப்போது இதுவுங் காணாமல் பயிர்களில் வெட்டுக்கிளிகள் வந்து விழுந்து பயிர்களை நாசப்படுத்துகின்றனவாம். அதிலும் ராவில் பிண்டி ஜில்லாவில் இந்த விட்டில்கள் மிலாம் பழ மாகுலை நாசமாக்கிப் பெரு நஷ்டங்களை உண்டாக்கி விட்டனவாம்.

* * *

## ஓர் தினப்பத்திரிகையும் போலீஸாரும்.

கல்கத்தாவில் வங்காளி பாஷையில் நடைபெறுகின்றதும் புதுக்கக்ஷியைச் சேர்ந்ததுமாகிய ஒரு தினப்பத்திரிகையின் ஆபீஸுக்குள் போலீஸார் நுழைந்து அங்குள்ள சில ரிக்கார்டுகளையும் அச்சிட்டு வெளியிட வைத்திருந்த சில பாரங்களை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். இதில் ராஜ நிந்தனையான சிலவிஷயங்கள் இருப்பதாயும் கவர்ன்மெண்ட் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதாயும் சொல்லிக்கொள்ளுகின்றார்கள்,



## லாலா லஜபதிராய்.

லாலா லஜபதிராயை விடுதல் செய்யவேண்டுமென்று வைசிராய் லார்ட் மிண்டோவிடம் விண்ணப்பம் செய்வதான உத்தேசத்துடன் பம்பாயில் பெருமுயற்சிகள் நடந்துவருகின்றன. ஸர் பெரோஸ்ஷா மேட்டா இது விஷயமாய்ப் பற்பல ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறார். ஆனரெபில் ஸ்ரீ கோக்கலே இதன் பொருட்டு வைசிராயிடம் போகும்படி அனுப்பப்படுவாராம்.

* * *

## வைசிராய் லார்ட் மிண்டோ.

வைசிராய் லார்ட் மிண்டோ பர்மாவுக்குப் புறப்படுமுன் ஹைதிராபாத் நவாப்பைப்போய்ப் பார்த்துப் பேட்டிசெய்துகொள்ளப்போகிறாராம். அதாவது வருகிற நவம்பர் மாதம் தொடக்கத்தில் ஹைதராபாத்துக்குப் போய்விட்டு பின்பு சென்னைக்கு வடக்கேயுள்ள ஏதாவது ஒரு துறைமுகத்துக்கு வந்து அந்த மார்க்கமாகப் பர்மாவுக்குப் புறப்பட்டுப்போவார். பர்மாவிலிருந்து டிசம்பர் மாதம் திரும்புவார்.

* * *

## ஒரு இந்து மாதின் தீரம்.

ஜமல்பூரில் கொள்ளைகள் நடக்கும்பொழுது மகமதியர்கள் ஒரு இந்து விதவை வசிக்கும் வீட்டுக்குள் பலாத்காரமாய் நுழைந்தார்கள். இப்படிப்பட்ட அக்கிரமம் நடக்குமென்று தெரிந்து இந்தவிதவை முன்னரேயே ஒரு ஈட்டி தயார் செய்து தற்காப்புக்காக வைத்திருந்தாள். மகமதியர்கள் உள்ளே நுழையவும் விதவை ஈட்டியைக் கையில் பலமாய் பிடித்துக்கொண்டு ஒரு மகமதியனுடைய அடிவயிற்றில் வலுவாய் இறுத்திக்குத்திவிட்டாள், குத்துண்டவன் கீழே விழவும் மற்றவர்கள் பின்வாங்கி விட்டார்களாம்.

* * *

## கவர்ன்மெண்டாரும் மாணாக்கரும்.

மாணாக்கர்களும் பள்ளிக்கூட உபாத்திமார்களும் இராஜாங்க விஷயங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் தலையிடப்படாதென்றும், அப்படி மீறித் தலையிடுவார்களானால் கவர்ன்மெண்டாரே நேரே தலையிட்டு இதை அடக்குவதற்கு வேண்டிய முயற்சி செய்வார்களென்று ஒரு பெரிய கவர்ன்மெண்ட் ஆர்டரொன்று இந்தியா கவர்ன்மெண்டாரால் பிறப்பிக்கப்பட்டு ஸிம்லாவி

விருந்து வெளியாயிருக்கின்றது. இது லார்ட் மிண்டோ நமக்குச்செய்த முதல் நன்மையெனக் கருதக்கூடியது.

*  *  *

## பண்டித. டி. லெக்ஷ்மணாசாரியார்.

பிரசித்திபெற்ற இக்கீதோபன்னியாஸ வித்வான் பாலக்காட்டில் ஒரு கனவான் வீட்டு விவாஹத்துக்காக அழைக்கப்பட்டு நாளது மாதம்5-ந்தேதி திருவல்லிக்கேணியை விட்டுப் பாலக்காடுக்கு விஜயம் செய்திருக்கிறார்- அவ்விடம் சுமார் 10 தினம் இருந்து சில ஹரிகதா காலக்ஷேபங்கள் நடத்திப்பிறகு நீலகிரியில் உஷ்ணகாலத்துக்காக சென்றிருக்கும் சில பக்தஜன கனவான்களின் பிரார்த்தனைக்கிணங்க அவ்விடம்விஜயம் செய்யப்போவதாகவும்வதந்தி.

*  *  *

## மைசூர் ஹைக்கோர்ட்டும் மிஸ்டர் P. S. சிவசாமி ஐயரும்.

மைசூர் ஹைக்கோர்ட்டு முதலாவது ஜட்ஜ் ஸ்தானம் இப்பொழுது காலியாயிருப்பதால் அந்த ஸ்தானத்தை ஒப்புக்கொள்ளும்படி மைசூர் கவர்ன்மெண்டார் சென்னை ஹைக்கோர்ட் வக்கீல் ஆனரபில்மிஸ்டர் P. S. சிவசாமி ஐயரைக் கேட்டதாகவும், ஆனால் மிஸ்டர் சிவசாமி ஐயர் ஒப்புக்கொள்ளவில்லையெனவும் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. மிஸ்டர் சிவசாமி ஐயர் சென்னை ஹைக்கோர்ட்டில் ஒரு ஸ்தானம்பெறலாமென்ற நம்பிக்கையுடையவராயிருக்கக் கூடுமாதலின்; இவர் இவ்வாறு நடந்துகொண்டமை பலரும் எதிர்பார்த்திருக்கக் கூடிய விஷயமேயன்றி வேறில்லை.

*  *  *

## சில பிரஸ்தாபங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் சில சீர் திருத்தங்கள் நடக்கப்போவதாய் வெகுநாளாய்ச் சொல்லப்பட்டுக்கொண்டு வருகின்றது. இப்பொழுது அடியிற்கண்ட பிரஸ்தாபங்கள் வருகின்றன. இந்தியா மந்திரி சபையில் இந்தியர்களுக்கு மெம்பர் ஸ்தானம் கொடுக்கப்போகிறார்களாம். ஸ்ரீ ரோமேச சந்திரதத், மிஸ்டர் அமீர் அலி ஆகிய இரண்டு கனவான்களும் தெரியப்படுத்துகின்றார்களாம். இந்தியாவில் வைசிராய் நிருவாக சபையில் இந்தியரை நியமிப்பதான பிரஸ்தாபம் ஒன்றையும் காணவில்லை. வைசிராய் சட்ட சபையிலும் மாகாண சட்ட சபைகளிலும் இந்திய மெம்பர்களின் தொகையைஅதிகப்படுத்துவதுடன் அதிக அதிகாரமும்கொடுக்கப்போகிறார்களாம்.



## காஷ்மீரில் மழை.

காஷ்மீரில் இவ்வருஷத்தில் அசாத்தியமான மழைபெய்ததாய்த்தெரிய வருகின்றது. இம்மாதம் 8-ஆம் தேதியன்று ஜீலம் நதியின் கீழ்க்கரை முழுதும் தண்ணீர்க்குள் மூழ்கிவிட்டதாம். இந்தப்பக்கங்களிலுள்ள கிராமவாசிகளெல்லாரும் வள்ளங்களிலேறி வெளியேறி விட்டார்களாம். சாதாரண காலங்களில் இரண்டு மூன்று நாள் விடா மழைபெய்தால் மட்டும் ஜீலம்நதியில் பிரவாகம் நிரம்பிப்போகுமாம். அப்படிப்பட்ட நதியில் ஒருநாள் மழையால் முழுப்பிரவாக முண்டானது மன்றிக் கரைகளை மீறிக்கிராமங்களையும் அழித்து விட்ட தென்றால் மழை யெவ்வளவு பலமானதென்று சொல்லவேண்டியதில்லையே. இன்னும் இதிலும் அதிகமான வெள்ளங்கள் உண்டாகுமென்று தோன்றுகிறதாம்.

*  *  *

## ஓர் கற்பரசி.

வங்காளம் குல்னா ஜில்லாவிலுள்ள மகேசுர பாஷா வென்னும் கிராமத்தினராகிய பாபு சுதாரநாதபோஸ்என்னும்ஒரு கனவான் தமக்குள்ள ஒரு நோயைக்குணப்படுத்திக் கொள்வதற்காக ஜகநாதத்தில் வந்து தாமும் தம் மனைவியுமாக வசித்தார். ஈசுரன் அவருக்கு சௌக்கியத்தைக் கொடாதபடியால் சில தினங்களுக்குள் மரணமாய்விட்டார். இவர் மனைவியார் மகா உத்தமி. தன் பர்த்தாவின் பிரிவையாற்றாது சிறிது அபினை வாங்கி உட்கொண்டு மரணமாய் விட்டார். மரணமாவதற்குமுன் தமது தமையனாருக்கு அடியிற்கண்ட ஒரு கடிதம் எழுதியனுப்பியிருக்கிறார்.— "எனது பிரிய முள்ள அண்ணா,நான் இறந்துவிட்டதற்காக மனவருத்தமடையவேண்டாம். என்னுயிர்க்குயிராயிருந்த எனது நாதன் காலஞ்சென்றபின் யான் உலகில் வாழ்தலில் இன்பமில்லையென்று நானும் இறந்துபோகின்றேன். நான் விதவையாய் தனித்திருந்து வருந்துவதைப்பார்க்கிலும் என் பிராண நாயகரது பாத நிழலையடைவதே சிலாக்கிய மென்பதையுணர்ந்து நீர் மகிழுமாறு வேண்டுகின்றேன். "ஆகா" இந்த யுகத்தையா கலியுகமென்கின்றார்கள்.

*  *  *

## புதிய சுதேசிக் கப்பல்.

தூத்துக்குடிசுதேசிக்கப்பற் கம்பெனியைச் சேர்ந்த கப்பல்களிரண்டின், ஒன்றாகிய "காலியா" இப்போது தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் ஓடிக்கொண்டிருப்பது நேயர்களறிந்த விஷயம். மற்றொன்றாகிய "லாவோ"

சென்ற செவ்வாய்க்கிழமையன்று தூத்துக்குடி வந்து சேர்ந்து நேற்று தினம் தான் கொழும்புக்குப் போயிருப்பதாக தந்தி கிடைத்திருக்கின்றது. அநேக ஜனங்கள் வந்துபார்த்து மிகுந்த திருப்தியடைந்தார்களாம். 42 முதல் வகுப்புப் பிரயாணிகளுக்கும், 24 இரண்டாம் வகுப்புப் பிரயாணிகளுக்கும் 1300 சாதாரணப் பிரயாணிகளுக்கும் போதுமான வசதிகளிருக்கின்றன. இது தவிர 4000-மூட்டை சரக்குகளுமேற்றலாம். வெகு காலமாய்ப் புத்திரப்பேறின்றி அருந்தவம் செய்துவந்த பெண்ணொருத்தி ஏககாலத்தில் இரண்டுபுத்திரர்களைப்பெற்றால் எத்தனை அளவற்ற ஆனந்தமடைவாளோ அத்தனை அளவற்ற ஆனந்தத்தை நமது பொதுமாதாவாகிய பாரததேவியும் இவ்விரண்டு கப்பல்களையும் பெற்றமைக்காக அடைவாளென்பது திண்ணமே. ஸ்ரீ V. O. சிதம்பரம்பிள்ளையும் அவருடனின்றுதவிய மற்ற நண்பர்களும் தாம் பிறந்து வளர்ந்த தாய் நாட்டிற்குச்செய்யவேண்டிய கடமைகளைச் செய்துவிட்டார்கள்.

* * *

## "அமிர்த பஜார் பத்திரிகை" எழுதுகின்றது.

கல்கத்தா அமிர்த பஜார் பத்திரிகை எழுதும் அடியிற்கண்ட விஷயத்தை எல்லாத் தேசாபிமானிகளும் கவனிக்கவேண்டும். "நமது தேசாபிமானிகள், வேறு பெருங்காரியங்களைச் செய்யமுடியாவிட்டாலும் அடியிற்கண்ட விஷயங்களையாவது செய்யமுடியாதா? (1) சுதேசியத்தை நாடெங்கும் விர்த்தி செய்து சுதேசிய வஸ்துக்களையே ஜனங்கள் வாங்கும்படி தூண்டுதல். (2) பிரசங்கங்களாலும் பொதுக் கூட்டங்களிலும் புத்தகங்களிலும், பத்திரிகைகளிலும், ராஜரீக சம்பந்தமான விஷயங்களைப் பற்றியும் ஸ்வராஜ்யப் பேற்றைப்பற்றியும் பொது ஜனங்களுக்குக் கற்பித்தல். (3) ஜனங்களுக்குள் உண்டாகும் வியாஜ்யங்களையும் பிரியாதுகளையும் எம்மட்டும் கூடுமோ அம்மட்டும் பஞ்சாயத் சபைகளைக் கொண்டு தீர்த்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்தல். (4) கைத்தொழிற் கல்வியை எல்லா ஜனங்களுக்கும் இலகுவான பொருட் செலவோடு கொடுத்தல். (5) சுகாதாரங்களைப்பாதுகாத்தல். (6) வீணை டம்பச் செலவின்றிச் செட்டாய் வாழ்வதற்கு வேண்டிய உபாயங்களை ஜனங்களுக்குச் சொல்லிவைத்தல். (7) ஜனசார விஷயங்களில் கூடிய திருத்தங்களைச் செய்தல். இப்படிப்பட்ட விஷயங்களில் அரசினருடைய உதவி சிறிதுமன்றித் தேசாபிமானிகள் தாமே முயன்று சித்திபெறலாம். இதற்கு வேண்டியதெல்லாம் மனமும் ஐக்கியமுமேயன்றி வேறொன்றும் வேண்டியதில்லை-



## ஒரு கவர்ன்மெண்டு ஆர்டர்

நத்தம் புறம் போக்கு, ரோட் புறம் போக்கு இந்த ஸ்தலங்களில் ஆக்கிரமிப்பு ஏற்பட்டு, அப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு பொது நன்மைக்குத் தேவையில்லாமலிருந்தால் ஸ்தலத்தை அயனுக்கு மாற்றி ஆக்கிரமிப்புதாருக்குப் பட்டா செய்து கொடுக்கவேணுமென்றும், அப்படிப் பொது நன்மைக்குத் தேவையிருந்து மேற்படி ஸ்தலங்களில் ஆக்கிரமித்திருந்தால் அவைகள் என்கிரோச்மெண்ட் ஆக்ட் பிரகாரம் நடவடிக்கை நடத்தப்பட வேண்டியதென்றும், டவுன் என்று வகுக்கப்பட்டிருக்கிற கிராமங்களில் ரோட்புறம் போக்கில் ஆக்கிரமணம் ஏற்பட்டால் தனிமையாகப் பட்டிகொடுத்து ஸ்டாண்டிங் ஆர்டர் 15 (20) பிரகாரம் நடவடிக்கை நடத்த சிபார்சு செய்யவேண்டியதென்றும், யூனியனைத் தவிர மற்ற கிராமங்களிலிருக்கும் ஆக்கிரமிப்புக்களை மேலான அதிகாரிகளின் நோட்டீசுக்குக் கொண்டுவரவேண்டியது ரிவினியூ இன்ஸ்பெக்டர் கிராம உத்தியோகஸ்தர் இவர்களின் கடமையென்றும், கவர்ன்மெண்டாரவர்களுடைய 2—2—07 தேதியுள்ள 1462 நெ. உத்தரவு ரிவினியூ உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறதாகவும் தெரிகிறது. இதுவரையில் நத்தம் புறம்போக்கு என்று அளக்கப்பட்ட ஸ்தலங்களை மிராசுதார்களுக்கு "எவ்வளவு பாத்தியங்களிருந்தபோதிலும்" பட்டாவுக்குக் கொடுக்கக் கூடாதென்று ரிவினியூ உத்தியோகஸ்தர்கள் ஒரே பிடிவாதமாயிருந்து வந்தார்கள்! அந்தப்பிடிவாதத்தை கவர்ன்மெண்டார் இந்த உத்தரவால் மாற்றப்பிரியப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நோக்கம் நன்னோக்கந்தான்.

* * *

## லாலா லஜபதிராய்.

லாலா லஜதிராயைப் பற்றிப் பர்மாப் பத்திரிகையொன்று அடியிற்கண்டவாறெழுதுகின்றது:— "லாலா லஜபதிராயின் நிலைமையைப்பற்றி இந்தியர்கள் சிறிதும் கவலைப்படவேண்டியதில்லை. அவர் சிறைச்சாலையிலடைக்கப்பட்டிருந்தாலும் அவர் மிகவும் கௌரவமாகவே நடத்தப்படுகின்றார். மாண்டலே கோட்டையில் அவருக்கென்று ஒரு பங்களாக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பங்களா ஒரு தெருவின் ஓரமாயிருப்பதால் தெரு வழியாய்ப் போகும் ஜனங்கள் பங்களாவின் ஜன்னல்களின் வழியாய் அவரைப்பார்க்கலாம். பர்மாவிலுள்ள அநேக இந்தியர்கள் இவ்வாறுபோய்த் தெருவில் நின்று இந்த மகானுக்கு நமஸ்காரம் செய்துவிட்டு வருகின்றார்கள். இதுவுமன்றி அவருக்கு வேலைசெய்வதற்காகச் சேவகர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர் வாசிப்பதற்கு புத்தகங்கள் கொடுக்கப்பட்டி

ருக்கின்றன. இரண்டு ஆபீஸர்கள் போய் அவரிடம் வெகுநேரம் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். இதுவுமின்றி இவருக்கு ஒரு வண்டியும் இரண்டு குதிரைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேண்டியபோது இரண்டு ஆபீஸர்கள் சகிதம் அவர் கோட்டைக்கு வெளியே செல்வதுமுண்டு." இந்தச் சமாசாரத்தைக் கேட்க நமது நேயர்கள் சிறிது சந்தோஷமும் ஆறுதலும் அடைவார்களென்று எண்ணுகின்றோம். நமது தாய் நாடாகிய பாரத மாதாவின் நன்மைக்காகப் பாடுபட்டதற்காக நமது லஜபத்திராய் சிறைச்சாலையிலடைக்கப்பட்டிருப்பது நமது மனத்தைப் பெரிதும் புண்படுத்துகின்றதென்பது உண்மையேயாயினும், அவர் ஜயிலிலடைபட்டுச் சாதாரண கைதிகளைப் போன்ற துன்பங்களை யனுபவியாமல் இவ்வளவு கௌரவமாய் நடத்தப்படுவது சிறிது ஆறுதலைத்தருகின்றது.

REGISTERED 5 - OCT 1907

உ

குமரன் துணை.

# விவேகபாநு.

—:o:—

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 6 } 1907ஆ ஜூலை, ஆகஸ்டு. { பகுதி 7. 8.

## சகாய நிதிகள்.

—:o:—

பொதுஜன சகாய பண்டுகள் என்றும் கல்யாணசகாய பண்டுகளென்றும் மரணபண்டுகளென்றும் அநேகம் நிதிகள் நம் நாட்டில் சமீபகாலத்தில் ஏற்பட்டு வேலை செய்துவந்த விஷயத்தை நண்பர்கள் அறிவார்கள். அவ்வாறான பொதுவான சகாய நிதிகள் தேசத்துக்கு இன்றியமையாதன என்பதிற் சிறிதும் ஐயமில்லை ஆனால் அவைகள் எவ்வாறு வேலைசெய்து வருகின்றன என்பதை ஆராய்வோம். அந்நிதிகள் சென்ற மூன்று வருஷகாலமாய்க் கிராமங்கள் தவறாமல் ஏற்பட்டு வேலைசெய்து வந்தன. அவைகளில் அநேகம் தக்கவர்களால் நடத்தப்படாமையால் விருத்தியாகாமல் சீர்குலைந்துவிட்டன. கிராமத்தாரோ நகரத்தாரோ தக்க நாணயமுள்ளவர்களாக ஒன்றுகூடித் தக்கஏற்பாட்டின்மேல் சுயநயம் பாராட்டாமல் பரோபகாரத்துக்கென்று ஏற்பாடு செய்திருக்கும் பக்ஷத்தில் அவை சீர்குலையக் காரணமில்லை. அவ்வாறின்றிச் சுயநயம் பாராட்டுந் தன்மையுடையவர்கள் ஏற்பட்டுப் பரோபகாரத்தின் பொருட்டு உழைப்பவர்களைப் போல் நடித்துப் பலரைத் தூண்டித் தாம் ஏற்படுத்திய நிதியில் சேரும்படி செய்து விடுகிறார்களே

ஒழிய அவ்வித நிதிகள் நீடித்தகாலம் நடக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறதில்லை. சிலர் நல்லெண்ணத்துடன் இவ்விஷயங்களில் தலையிட்டாலும் பொறாமைபிடித்த சிலர் இல்லாததும் பொல்லாததும் சொல்லி அந்நன்முயற்சியைக் குலைக்க வழிதேடுவதும் அநேக இடங்களில் உண்டு. முதலில் ஏற்பாடு பண்ணின சிலரது நன்முயற்சியை விருத்திபண்ணித் தாமும் கூடச்சேர்ந்து ஒத்துழைக்க வேண்டியிருக்க அவ்வாறு செய்யாமல் தங்களுக்கே சகல சுதந்திரங்களும் வேண்டுமென்று வாதாடிக் காரியத்தை முன்னுக்கு வரவொட்டாமல் தடுப்போர் சிலர். வேறு சிலர் வசூலான பணத்தை அந்த இடத்தில் போடக்கூடாது இந்த இடத்தில்தான் வட்டிக்குப் போடவேண்டுமென்று பிடிவாதஞ்செய்து மற்றவர்களுக்கு அவநம்பிக்கை உண்டாகும்படி செய்வது வழக்கம். இவ்வாறாகப் பல விதத்திலும் மேற்கூறிய நன்முயற்சிகளிற்பல ஒருவருஷ காலத்திற்குள் நிற்கத் தலைப்பட்டன. நம்மவர்க்குள் ஒருவரை ஒருவர்நம்பி வேலை செய்து க்ஷேமம் அடைந்த காலமெல்லாம் போயிற்று. நாகரிகம் நாகரிகம் என்று சொல்லிக்கொள்கிறோமேயொழிய வர வர சத்தியத்திலும் தர்மத்திலும் ஜனங்களுக்குள் சிரத்தையில்லாமற் போகின்றது. எவனைக் கொலை செய்தாகிலும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசை அதிகரித்து விட்டது. எப்பொழுது இந்தப் பேய்பிடித்ததோ அஃது ஒன்றையும் பார்க்கிறதில்லை. நீதிநூல்களெல்லாம் நீற்றுப்பாழாய்ப் போனதாக எண்ணும். தயை தாக்ஷிண்யம் என்பவையெல்லாம் அடியோடே தொலைபச் செய்யும். தங்களைப்போல் தீவினைகளிற் சென்று அதிக பொருள் தேடாமல் நியாய வழியில் சொற்பம் சம்பாதிப்பவர்களையும் அவர்கள் ஏளனம் செய்வார்கள். முற்காலத்தைப்போல ஜனங்களுக்குள் திருப்தியென்பது கிடையாது. வர வர சாமான்ய வாழ்க்கையை வெறுத்துச் சொகுசான வாழ்க்கையை எவரும் தேடத் தலைப்பட்டனர். புலியைப் பார்த்து நரியும் சூடுபோட்டுக்கொண்டது போல் பணக்காரர்களைப் பார்த்து ஏழைகளும் நடக்க ஆரம்பித்து விட்டனர்.

ஏழை அவ்வாறு செய்யாவிடின் பணக்காரரது பழிப்புக்குள்ளாகின்றார்கள். முப்பது நாற்பது வருஷங்களுக்குமுன் இருந்த



நம் நடையுடை பாவனைக்கும் தற்கால நடையுடை பாவனைக்கும் அஜகஜாந்தரம். சாமான்களும் விலைகுறைந்து விற்கின்றன. நாமும் நம் செலவுகளை அதிகரித்துக்கொண்டோம். அதற்காக நமக்கு வேண்டிய பொருள்களை எப்படியாவது தேட முயல்கிறோம். முற்காலத்தில் நம் நாட்டுச்சரக்குகள் அதிகம் நம் நாட்டைவிட்டு வெளியேறுவதில்லை. அயல்நாட்டுச் சரக்குகளை நாம்அதிகம் நாடிச்செல்வதுமில்லை. தற்காலத்திலோ இரண்டும் அதிகரித்துவிட்டன. அதிகச்செலவுக்கு அதிக வரவும்வேண்டியிருப்பதால் தர்மவழியைவிட்டு விலகியும் நாம் பணம்தேட ஆரம்பிக்கின்றோம். தர்மத்தைக் கைவிடவே சத்தியக்குறைவு, நம்பிக்கைக்குறைவு, அந்நியோந்நியக்குறைவு எல்லாம் ஒன்றுசேர்கின்றன. நம்பிக்கைக்குறைவால்தான் மேற்கூறிய நிதிகள் சரிவர வேலை செய்வதில்லை. அநேகம் நிதிகள் மோசக் கருத்துள்ளவையாகவே இருந்து வருகின்றன என்றும் அவைகள் தக்கபடி ரிஜிஸ்டர் செய்யப்படாவிட்டால் தேசத்துக்கு மோசம் வருமென்றும் நம் ரிஜிஸ்டிரார் ஜெனரல் அபிப்பிராயப்பட்டுச் சுற்று உத்தரவுகள் அதுவிஷயமாய் அனுப்பினபடியால் பலநிதிகள் நின்றுவிட்டன. புதுவெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் அடித்துக்கொண்டுபோயிற்றாம் என்ற வண்ணம் பழைய வழக்கப்படி போட்டுவரப்பட்ட போகச்சீட்டு முதலிய சீட்டுக்களும் நிற்கத்தலைப்பட்டு வருகின்றன. சட்டங்கள் அடிக்கடி மாறிவருவதும் இதற்கு முக்கியகாரணமாகக் கூறலாம். சீட்டுவிஷயமாய் ஸ்திரமான சட்டம் ஏற்பட்டு ஜனங்களுக்கு அநுகூலமாக இருக்குமானால் எத்தனையோ க்ஷேமம் உண்டு. ஆனால் நம் காருண்ய கவர்ன்மெண்டார் இதுவிஷயத்தில் இப்பொழுது தான் விழித்துக்கொண்டு கோஆபரேடிவ் சங்கங்கள் ஸ்தாபிக்க இடங்கொடுத்து வருகிறார்கள். அவைகளுக்கு அவர்களே திரவியசகாயமும் செய்துவருகிறார்கள். நம் நாட்டில் விவசாயிகளுக்கு மேற்கூறிய சங்கங்கள் மிகுதியாகப் பயன்படும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. அமெரிக்கா நாட்டிலும், இங்கிலாந்து ஜர்மனி முதலிய ஐரோப்பிய நாட்டிலும் இம்மாதிரியான சங்கங்கள் பல விஷயங்களுக்கும் ஏற்பட்டு வெகு உபகாரமாயிருந்து வருகின்றன. அம்மாதிரியாகவே நம் நாட்டிலும் ஏற்படும்பக்ஷ

த்தில் ஜனங்களுக்குச் சௌகரியமுண்டு. தற்காலம் ஜனங்கள் நாட்டுக்கோட்டையாரின் வசத்திலும் மார்வாடிகளின் வசத்திலும் அகப்பட்டுக்கொண்டு அதிகவட்டி கொடுத்து அநியாயமாகக் கெட்டுப்போகிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் முற்காலத்தில் குடித்தனக்காரர்களுக்குள் பணம் வழங்கும். அதைச் சௌகரியம்போல் தங்களுக்குள்ளேயே குடித்தனக்காரர்கள் மாறுதல் செய்துகொள்வார்கள். இப்பொழுது அவ்வித வழக்கம் நின்றுபோய் பணக்காரர்கள் ஏழைகள் முதலிய அனைவரும் நாட்டுக்கோட்டையாருடைய கடைக்கே சென்று சீக்கிரம் கெட்டுப்போகின்றார்கள்.

மேற்கூறிய வண்ணம் விவசாய பாங்கிகளும் கோ ஆபரேடிவ் சங்கங்களும் கிராமங்களில் ஏற்படும் பக்ஷத்தில் குடித்தனக்காரர்கள் சொற்ப வட்டிக்கு வேண்டிய அளவு பணம் வாங்கிக்கொண்டு சிறுகச்சிறுகக் கொடுத்துத் தீர்த்துவிடலாம். குடியானவர்களுக்கு இவ்வித சௌகரியங்கள் ஏற்படும்வரை கஷ்டந்தான். இந்தியக் குடியானவன் வட்டிவாசி கொடுத்தே கெட்டுப்போகிறான். தீர்வை ஜாஸ்தியும் அவன் கழுத்தை முறிக்கின்றது. அதற்கும் கன்றுகாலிகளுக்கும் தசுகூலிக்கும் வாங்கவேண்டிவந்தால் என்ன செய்வான். நிலத்தைப் பண்படுத்தவும் அதன் நீர்ப்பாய்ச்சலுக்குக் கிணறுகள் வெட்டவும் சர்க்காரில் திரவிய சகாயம் செய்துவருகிறதானது குடிகளுக்குப் பெருத்த சௌகரியமே. ஆனால் அப்படிப்பட்ட சகாயம் பெறுவதற்குள் அவன் படும் கஷ்டத்துக்கு அளவில்லை. அவன் கேட்கிற தொகையில் அவன் கைக்கு வந்துசேர்வது ஒரு சிறிது பாகமே. ஆகையால் இவ்விஷயங்களிலும் அதிக சௌகரியங்கள் ஏற்படவேண்டும். ஒவ்வொரு கிராமத்தாரும் பஞ்சாயத்து ஏற்படுத்தி கோ. ஆபரேடிவ் கிரெடிட் சங்க விதிகளை அனுசரித்து ஒரு சங்கம் ஸ்தாபித்துத் தாங்களும் தங்கள் பணத்தை முதலாகவைத்து சர்க்காரிடத்திலிருந்தும் சகாயம் பெற்றுச் செட்டுங்கட்டுமாக வாழ்வார்களானால் கிராமங்களுக்கு க்ஷேமம் உண்டாகும். கிராமங்கள் க்ஷேமமடைந்தால் மட்டுமே தேசத்துக்கு க்ஷேமமுண்டு. அவ்வாறில்லாமற்போனால் நம்குடியானவர்கள் அடியோடே கெட்டுப்போவார்கள். தேச க்ஷேமத்தைக் கருதியவர்கள் இதுவிஷயத்தில் தக்க



முயற்சி செய்து ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயத்துக் கென்றும் கைத்தொழில் அபிவிருத்திக் கென்றும் வெவ்வேறு சங்கங்கள் ஏற்படுத்தி ஜனானுகூலத்தை நாடுவார்களாக. சுதேசிய அபிவிருத்திநாடும் நண்பர்கள் இதுவிஷயத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்து கிராம க்ஷேமத்தையும் நாட்டின் நன்மையையும் நாடுவார்களாக. இதுவிஷயத்தில் பொதுவாக ஒன்றுகூடி உழைத்துவந்தாலொழிய தேசம் பின்னும் பெருங் கேட்டை அடைய இடமாகும். ஒவ்வொரு தாலூகாவிலுமுள்ளபிரபுக்கள் இதுவிஷயமாய்க் கிராமத்தின் பெரியமனுஷர்களைக்கண்டு பேசி இதனால் உண்டாகும் நன்மைகளை விளக்கிக் காட்டி தக்க ஏற்பாடுகள்செய்ய முயலல்வேண்டும். பரோபகாரத்தையே கவனிக்கும் வண்ணம் சில தக்க கனவான்கள் ஏற்பட்டால் நலமாயிருக்கும். இவ்வாறு செய்தவர்களுக்கே கௌரவமும் புண்ணியமும் ஏற்படும்.

அவ்வாறு செய்யாமல் பலர் அதிகாரிகளுடைய தயவைச் சம்பாதிப்பதற்குப் பெரும் பொருள் செலவிட்டு ஒரு காசுக்கும் பிரயோஜனமில்லாத கௌரவப்பட்டங்களை அடைய வகை தேடுகிறார்கள் உண்மையான கௌரவம் இன்னதென்பதைச் சிறிது சீர்தூக்கிப் பார்ப்பார்களானால் நன்கு தெரியவரும். ஆகையால் சுயநய நிதிகளை வேரோடே தொலைத்துப் பொதுஜன க்ஷேம நிதிகளைத் தக்க ஏற்பாடுகள் செய்து நாடெங்கும் நாட்டி நன்மையடைவார்களாக. அப்பொழுதே ஏழைகளாகிய அநேகர் க்ஷேமமடைய வழியுண்டு.

பத்திராதிபர்.

# *சிங்கமும் புலியும் பிரயாணியும்.

ஆகா ரத்திற் காக அலைந்திடும்
வரிப்புலி ஒன்று, தான் வழியினிற் கண்ட
பாட்டை சாரிமேற் பாய்ந்து வீழ்த்தியது.
குப்புற் றவனை ஓர் கோளரி கண்டு
பேராசை என்னும் பேய்பிடித் துள்ள
கொடும்புலி யின்மேற் குபீர் எனப் பாய்ந்தது.
ஏகமாய் இரண்டும் எழுப்பிய முழக்கால்
எங்கும் காடெலாம் எதிர் ஒலி ஒலித்தன.
உகிரும் பல்லும் உதிரம் உகுத்தன
முடிவில், அரியின் மூவா வலிக்குத்
தோற்றுச் செத்தது துத்தியார் எதிரி.
செறிமயிர்ச் சடையுடை இறையை அம்மனிதன்
மண்டியிட் டுயிர்தர மன்றாடினன். அதைத்
தரும வீரச் சிங்கமும் தந்தது.
இருவரும் பின்னர் இதன்குகை சென்றதும்
அரிமா தன்னுடை அதிதியை நோக்கிப்
பின்வரும் விதமாய்ப் பேசலுற்றதுவே:—
"நிகரில்என் வலியினை நிராகரித் துரைக்கும்
வீரத் தனமுள விலங்கெதே உளது?
நேரிற் கண்டனை நிகழ்ந்த போரினை நீ
ஆகலின், என்னுடை ஆற்றலும் உரிமையும்
ஓதநீ ஆகுவை ஒருதனிச் சான்று
தமதுழை நின்றும் தாம்துரத் துண்டே
அழிபசி வருத்தும் என் அடிமைகள் தொலையில்
தடுமா றித்திரிந் தலைந்திடும். தனியா

* [இது ஜான்கே என்னும் ஆங்கிலகவி இயற்றிய "கட்டுக் கதைக"ளுள் முதலாவதாகிய "The Lion, the tiger & the Traveller" என்பதன் தமிழ்மொழி பெயர்ப்பு]



இக்கா னகத்தில் இருந்தர சாள்வேன்.
எல்லைக் கடங்கா இவ்வனம் எனதே.
கரடிகள் ஓநாய் கள்முதலான
விலங்கினம் யாவும்தம் விஞ்சிய குருதியால்
அரசுழைச் செந்நிறம் ஆக்கிஆங் குள்ளன.
இருபுறம் தன்னிலும் இருக்கும் இப்பிணங்களும்
நிலமெலாம் வெளிறும்அந் நீள்எலும் பனைத்தும்என்
முந்திய செய்கையும் வீரமும் மொழியுமே
இத்தா டைக்கண் எத்தனை வீழ்ந்தன!"
என்றிவை புகலலும் இயம்புவன் மனிதன்:—"யான்
கண்டநின் னுடைவலி காட்டுத் தனமுள
விலங்கினம் வெருட்டும் மெய்மையே ஆயினும்
நின்போல் தைரிய நிருபன்இன் னதுபோல்
பொய்க்காட் சியினிற் புகழ்ச்சி கொள்வானோ?
கள்வர் தாம் அயலார் உரிமையைக் கவர்வர்
அன்பிற் குரியன் ஆகக் கடவை.
நீதி வரம்பினுட் படுக நின்வலி.
அதிகா ரப்பிரியர் ஆகிய வீரர்தாம்
பாழ்படுத் தியபல நிலங்களைப் பற்றியும்
மடிய வீழ்த்திய மன்னுயிர்த் தொகுதியைப்
பற்றியும் பெருமை பாராட்டுவதெலாம்
ஈனப் புகழ்ச்சியே ஆகும். ஏனெனிலோ
கொள்ளைக் காரரும் கொலைபுரி வதனால்,
ஆற்றல் எய்துவர். அறிவுடை அரசரோ
அன்பருள் மனங்கொண் டாளுகை புரிவர்.
என்பாற் காட்டிய இனியநற் கருணையே
அரசர்க் குரிய அறநெறி யாகும்
எல்லாம் வல்ல இறைவனே போன்று
துன்புறு வோர்க்குத் துணைநின் றுதலவே
எவரினும் இறைநினக் கிவ்வலி தந்த" தென்
றிவ்விதம் உரைப்ப இயம்பும் விலங்கிறை:—

"தெரித்தஇச் சங்கதி தெளிவாய் உள்ளது.
போலிப் பெருமையாற் பொய்நெறி புக்கதென்
இளமைப் பருவம். ஏனெனில், அடிமைத்
தனமுள என்பரி சனத்தொகை யாகிய
மாமிசம் புசிக்கும் மாக்கள்என் ஆட்சியில்
இச்சக ராகவே இருக்கின் றூர்களால்
நீமிக நன்றாய் நியாமுத் தரித்தனை
ஆயினும் நண்ப நீபரண் மனைக்கண்
என்றே யாயினும் சென்றிருந் தனையோ?
ஏனெனில் என்னுடை இச்சகக் கள்வர்கள்
மனுக்குலம் புரக்கும் மன்னிய வீரரும்
என்போல் ஆள்வர்என் றிசைந்தனர்" எனவே.

---

## *தீமை.

—:0:—

மலையினுச் சியின்மீ தூற்றமாப் பெரும்உருளைக் கல்லை
உலைவுற ஆரம்பத்தில் உந்திஓர் சேயுந் தள்ளும்
நிலைவலி அரக்கன்றானும் நேர்ந்திடை நிறுத்தொணுதிச்
சிலையினைப் போன்றதே தான்தீமையும் என்பர் மேலோர்.

ம. கோபாலகிருஷ்ணையர்
அக்கிராசனாதிபதி மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கம், மதுரை.

---

* இது போப் என்னும் ஆங்கிலகவிசெய்த "Evil like a rolling stone &c."வின் மொழிபெயர்ப்பு.

## சுதேசாபிமானம்.

சுதேசாபிமானம் இப்படிப்பட்டதென்று முன்னொரு முறை நம் பாநுவாயிலாகவே இவ்வுலகெங்கும் புகழொளி பரப்பிவிளங்கும் வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் விரித்துக்கூறியிருப்பது நேயர்கள் யாவருமறிவர்.

தற்காலத்தில் நமது ஆசியாகண்ட முழுதும் சுதேசாபிமானப் பெருவெள்ளம் புரண்டு வருகின்றது. சிறுவர்முதற் பெரியவர்வரை பெரும்பாலார் சுதேசாபிமானிகளே யாவர். இதற்குக் காரணம் நமது சகோதரர்களடையுங் கஷ்டநிஷ்டூரங்களையெல்லாம் நாம் அறிந்துகொண்டிருப்பதேயாகும். இச் சுதேசாபிமானமானது ஒருவருள்ளத்து வேரூன்றி விடுமாயின் அஃது அவர் உயிரையும் பிறர்க்குத் தத்தஞ்செய்யும்படி தீரத்துவந் தந்து வெற்றிகொடுப்பதேயாகும், பரோபகாரத்தின்பொருட்டே தம் உயிரைத் திரணமாக மதித்துப் புகழ்பூண்ட ததீசிமுனிவர், சிபிச்சக்கிரவர்த்தி, குமணன் முதலான எண்ணிறந்த பெருமக்களையீன்று களித்துவாழ்ந்த நம் பாரதமாதாவுக்கு இன்றும் அத்தகைய புத்திரசிகாமணிகளில்லாமல் போகவில்லை. இவ்வுண்மையையறிய மகிழாதாரும் உண்டோ? என்னை? ஆத்மத்தியாகியென்று உலகமெல்லாம் போற்றும் ஸ்வாமி விவேகாநந்தாவின் சகோதரரும் யுகாந்தரப்பத்திராதிபரும் ஆகிய பூபேந்திரநாததத் என்னும் உண்மைத் தேசாபிமானியானவர் தமது பத்திரிகையில் தேசநன்மையின் பொருட்டுப் பலவிஷயங்களை யெழுதிவெளியிட்டதால் அவற்றில் துரைத்தனத்தாரைக் குற்றங்கூறியிருப்பதாகக்கொண்டு அவரை அரஸ்டுசெய்து விசாரணை நடப்பது நண்பர்கட்குத் தெரியுமே. இந்த விசாரணையில் எமது தேசாபிமானச் சம்மேறுகிய பூபேந்திரநாததத் கொடுத்த வாக்குமூலத்தைப் படித்தபொழுது யாமும் எம்முடனிருந்த சில தேசாபிமான சீலரும் அடைந்த பெருமகிழ்ச்சியை நம்பாநு நேயர்கள் பலரும் அடைந்துகொள்ளவேண்டியே சுதேசமித்திரன் பத்திரிகையிலிருந்தபடி இங்கே விளக்குவாம்.

### சுதேசாபிமானச் சிங்கம்.

ஸ்வாமி விவேகாநந்தரின் சகோதரரும் "யுகாந்திர" பத்திரிகையின் அதிபருமாகிய பாபு பூபேந்திரநாததத் மீது கொண்டுவரப்பட்டராஜநிந்தனைக்கேஸ் மிஸ்டர் கிங்ஸ்போர்ட்முன் விசாரணைசெய்யப்

பட்டது. அப்பொழுது அவர் கொடுத்த வாக்குமூலமாவது:— "யுகாந்திரப்பத்திரிகையில் காணப்படுவையெல்லாம் நான் எழுதியனவேயாகும். நான் ஒன்றையும் ஒளிக்கவில்லை. நான் என் தாய்நாட்டின் க்ஷேமத்தின் பொருட்டு செய்யவேண்டிய கடமைகளைத் தான் செய்தேனென்று எண்ணுகின்றேன். பிரிட்டிஷ் சட்டப்படி குற்றமா குற்றமில்லையாவென்பதை நான் கவனிக்கவில்லை. என் கடமையென்று தோன்றியதை நான் செய்தேன். கோர்ட்டார் அபிப்பிராயப்படி நான் குற்றவாளியாயிருந்தால் இருக்கட்டும். இதற்காக வீணில் பிராஸிக்யூஷன் தரப்பு வக்கில்களுக்கும் சாக்ஷிகளுக்கும் சிரமம் கொடுத்து என் குற்றத்தை ருஜூசெய்யவேண்டியது அநாவசியம். வருவதை அனுபவிக்கத் தயாராயிருக்கின்றேன். இதற்குமேல் நான் விரித்துப் பேசவேண்டியதொன்றுமில்லை. விசாரணையை இம்மட்டோடு நிறுத்திக்கொள்ளலாம்" என்று சொன்னாராம். இதைப்பற்றி நாமும் விரித்துக் கூறவேண்டிய ஆவசியமில்லையென்றெண்ணுகிறோம். தேசாபிமானச் சிம்ம ஏறாகிய ஸ்வாமி விவேகாநந்தரின் தம்பி இவர்தானென்பதற்கு ஆக்ஷேபனையென்ன? ஆண்மையும் அஞ்சாமையும் எல்லாருக்கும் வருமா?

நேயர்களே: பார்த்தீர்களா இவரல்லவோ தேசாபிமானி. இவரல்லவோ வீரசிகாமணி பாரதமாதாவின் ஆண்குமரர் இவரன்றோ? என்ன தீரத்துவம்! என்ன தேசாபிமானம்!! இவரையொத்த சிலசில சிங்கக்குட்டிகள் நம் நாட்டில் தோன்றுமாயின் நமக்குப் பயமேது. குறையேது.

மித்திரனைப் படித்தபோது எமது ஞாபகத்தில் வந்ததொன்றையிங்குக் கூறுவோம். ஸ்ரீராமபிரான் வனஞ்சென்றபோது அவரையழைத்துவரும்பொருட்டுபரதசத்துருக்கர் தவவேடந்தாங்கி அழுதகண்ணும் தொழுதகையுமாகக் கங்கைக்கரை யடையக்கண்ட குகன் வியப்பெய்தி

"நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயல்நின்றான்
தம்பியையு மொக்கின்றான் தவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பென்றான்."

எனக்கூறிய இக்கவியின் இறுதியடி யிவ்விடத்து முற்றும் பொருந்துமென்பதே.

வந்தேமாதரம்.

மு. ரா. க.

# வியவசாய இந்தியாவில் கடுந்தீர்வை.

(பார்லிமெண்டு மெம்பர் C. J. ஓடானல் எழுதியது.

*ராஜ நிந்தனை என்னும் கூச்சல் நினைத்தபடி செய்ய வேண்டிய வேலையை செய்துவிட்டது. யோசனை யில்லாதவர்களுடைய குதூகலிப்பின் மத்தியில், மிஸ்டர் மார்லி பஞ்சாபின் கலக்க நிலையைக் குறித்துச் சுயாதீனமான விசாரணை செய்ய மறுத்துவிட்டார்.*

## அதிருப்தி ராஜத் துரோகமல்ல.

கடுமையான ஒழுங்கீனங்களும், மூர்க்காவேசமான பிரசங்க வியாசங்களும் இருந்த துண்டாயினும் உண்மையில் ராஜ நிந்தனையாவது, சக்கிரவர்த்தியின் இராஜாங்கத்தைப் பரிகரிக்க வேண்டுமென்ற நோக்கமாவது கிடையாது. இதற்கு மாறாக, இராஜனிடத்தில் அந்தரங்க பூர்த்தியான விசுவாசம் சமீபத்தில் வேல்ஸ் இளவரசர் சுற்றுப்பிரயாணம் சென்றபொழுது காட்டியபடி நிறைந்திருக்கிறது. சென்ற சில வருஷங்களுக்குள்ளாக அதிக அதிருப்தி மேலாடி யிருக்கிறதாயினும், அது இராஜாங்கத்தின் பேரிலில்லாமல் கர்ஸன் பிரபு செய்த செய்கைகளன்றி முக்கியமாக நாளுக்குநாள் விருத்தியாயிருப்பது நிலவரியின் பேரில்தான். சென்ற வருஷத்தில் ஏற்கனவே இருந்த அதிருப்தியோடு வங்காளத்திலும், பஞ்சாபிலும் "முடிந்த காரியம்" என்னும் பாதகமான செய்கையால் அதிக அதிருப்திக்கு இடமாயிற்று, ஒவ்வோர் அப்பீலும் தள்ளப்பட்டுப் பழங் கடுதாசிக் கூடைக்கு அடைவாயிற்று. இந்த வழக்கம் ஒரு நாகரிகம் பொருந்திய இராஜாங்கத்துக்கு உரித்தானதன்று. இது நேரே அகாரணமான மறுப்பாகையால், சாதாரணமாக ஜனங்களை எவ்வளவுவக்கத்திற்கு ஆளாக்குமோ அவ்வளவிற்காளாக்கிவிடுகிறது. ஆனால் முடிவில் மிண்டோ பிரபு பஞ்சாப் குடியேற்றச் சட்டத்திற்குத் தன் அனுமதியை மறுத்தது சரியான துறையிலிறங்கிய தயகும். 22-ந் தேதியில் எழுதிய டைம்ஸின் ஸ்பெஷல் நிருபர் மாகாணத்திலுள்ள சின்ன பெரிய உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் இந்தச் சட்டத்தின் அநியாயத்தைப்பற்றிக் கதறுகிறார்கள். அப்படிக்கிருந்தும் இந்த மசோதாவானது ஸர் டென்ஸில் இபெட்ஸனாலும், அவரது கவுன்சிலர்களாலும் டைம்ஸ் நிருபர் உண்மையில் தெரிவிக்கிறபடி எல்லா இந்திய மெம்பர்களாலும் ஆக்ஷேபிக்கப்பட்டும், சட்ட சபையில் வாது செய்யப்பட்டது.

## இந்தியா சம்பந்தமான பெரிய கேள்வி.

ஆர்டரை நிலை நிறுத்துவதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் செய்த ஏற்பாடுகள் மிக்க சரியே. இராஜாங்கத்துக்கு சொந்தமான எல்லா சைநியங்களைக்கொண்டும் சமாதானம் நிலைக்கும்படி செய்யவேண்டும். கெயரோ முதல் லாகூர் வரையும், கல்கத்தா முதல் லண்டன் வரையும் ஒவ்வொரு பட்டணத்திலும் ஐரோப்பாவிலுள்ள பட்டணங்களைவிட பலமற்ற பூட்டுகளைவிட தட்டிகளால் மூடப்பட்ட கடைகளும் அதிக சுலபமாகத் திருடக்கூடியபடியால் அதிக காலாடிகள் கூடியிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள பெரிய டவுன்களில் ஒன்றாகிய பாட்னாவில் நான் சீவ் மாஜிஸ்டிரேட்டாக இருந்தபொழுது பக்கத்துக் கண்டோன்மெண்டில் ஒரு காலாட்படை இருக்கிறது எவ்வளவு அநுகூலமென்பதை அறிவேன். பிரிட்டிஷ் அதிகாரத்தைநீக்கிய சிலநிமிஷங்களுக்குள்ளாகக்கலகம்இந்தியாவைச் சுற்றிக்கொள்ளுமென்பதில் தடையில்லை. கீழ் வங்காளத்தில் இந்துக்களைக் கொடுமையாக வாதனைப்படுத்தும் மகமதியர்களைப் பாருங்கள். இராஜ நிந்தனைக் குற்றவாளிகளென்று கருதப்படும் எல்லாப் படித்த மனிதரும் இதை அறிவார்களானாலும் செல்வமும், சுகமும் ஒவ்வொரு பட்டணத்திலும் துறைமுகத்திலும் கூத்தாட ஸ்காட்லாந்திலும், ஐயர்லாந்திலும் ஏழை ஜனங்கள் கஷ்டப்பட்டபடிக் கெட்ட நிலவரிச் சட்டங்களால் உள் நாட்டிலுள்ள 250 கோடி இந்திய ஜனங்கள் வறுமையையும், பஞ்சத்தையும் அடைகிறார்களென்பதும் தெரியும். படித்த இந்தியர்கள் இந்திய இராஜாங்கத்தில் வேரூன்றி யிருக்கும் கெடுதலானது நிலத்தின் பேரில் தீர்வை யென்று ஏழை நிலசுவான்தாரர்களிடமிருந்து வசூல் செய்வதென்கிறார்கள். இதனுண்மை சுயேச்சையான விசாரணையின்றித் தெரியாது. இது தான் இந்தியாவின் பெரிய கேள்வி. இதற்கு அநுசரணையாக வுண்டாகியது பஞ்சம், பிளேக், ராஜ நிந்தனை, அடிபிடி சண்டை. இந்தியக் குடியானவன் குடியேற்றத்தால் மீற முடியாது. இந்தியாவின் க்ஷேமத்தை யுண்ணும் புண்ணாகி, ஜனங்களின் ராஜ விசுவாசத்தை வதைப்பதும் இந்த நிலவரி தான்.

## பஞ்சாபு மாகாணம்.

பதினைந்து வருஷங்களுக்கு முன் பஞ்சாப் பினான்ஷியல் கமிஷனராகிய மிஸ்டர் தார்பரன் வீட்டுக்கு வீடு விசாரித்ததின் பலனாக, குடியானவர்களில் அநேகர் காப்பாற்ற முடியாதபடி அவ்வளவு துர்ப்பாக்கிய தசையையடைந்துவிட்டார்களென்றார். அதற்கு முக்கிய காரணம் நிலவரியைக் கொடுக்க லேவாதேவி செய்பவர்களிடமிருந்து கடன் வாங்குவதே



சென்ற பத்து வருஷங்களுக்குள் பஞ்சாபில் இரண்டு பஞ்சங்கள் தோன்றியிருக்கின்றன, சென்ற ஐந்து வருஷங்களில் சாப்பாட்டுக்கு இல்லாத பல ஹீன ஏழைகளைக் கொண்டு போகிறது பிளேக் வியாதி. பஞ்சாபில் இவ்வருஷம் பிளேக்கில் ஒருவாரத்திற்குள் 52000 பேர் மரணம். இப்பேர்ப்பட்ட அவதிகளோடு ரிவிஷனுக்கு பதிலாக 1891-ல் இருந்த 15,00,000 பவுனிலிருந்து 1906-ல் 19,25,000 பவுனுக்கு, அதாவது நூற்றுக்கு முப்பது விதம் கிஸ்தி ஜாஸ்தியாக விருக்கிறது. இப்பேர்ப்பட்ட சமாசாரங்கள் விசாரணைக்கு வரவேண்டியது முக்கியம். பல வருஷங்களாகப் பஞ்சாப் ஜனங்கள் வேண்டிக் கொண்டும் பிரயோசனப்படவில்லை. அவர்கள் இப்பொழுது இரக்கத்திற்கும், நியாயத்திற்கும், இங்கிலாந்திலுள்ளவர்களை எதிர்பார்க்கிறார்கள்.

## பம்பாயில் சுயேச்சையான விசாரணை.

இந்தியாவிலுள்ள விவசாயிகளின் நிலைமையைப்பற்றி ஆங்கிலேயர்களைக் கவனிக்கும்படி சொல்லி இருபத்தைந்து வருஷத்திற்கு மேலிருக்கலாம். அக்காலத்தில் நிலவரி 15,500,000 பவுனாக விருந்தது. இப்பொழுது ஏறக்குறைய 19,500,000 பவுன். அதாவது ஏறக்குறைய நூற்றுக்கு இருபத்தாறு வீதம் உயர்த்தி. அப்பொழுது "ஓர் இந்திய மாகாண அழிவு" (Ruin of an Indian Province) எனப்பெயரிட்டு ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டேன். அதன்பேரில் 1880-ம் வருஷத்தில் காமன் சபையில் பெரிய விவாதம் நடந்தது. பார்லிமெண்டும், மற்றும் அநேகரும் அதைப்பற்றி கவனிக்க முன் வந்தார்கள். பம்பாய், மதிராஸ் பஞ்சமாகிய 1877-78 பெரிய பஞ்சமும், அதிலுண்டாகிய 5 கோடி ஜன மரணமும், அதிலிருந்து உண்டாகிய பம்பாய் அடிபடிகளையும் இன்னும் ஒருவரும் மறந்திருக்கமாட்டார்கள். இந்தக் கலவரைகள் நடந்த காலத்தில் கன்ஸர்வேட்டிவ் (பழைய கக்ஷி) இராஜாங்கம் ஆட்சியிலிருந்தும் விசாரணைபுரிய மறுக்கவில்லை.

இப்பொழுதைப்போல அப்பொழுது உள்ளூர் உத்தியோகஸ்தர்கள் பெருங்காற்று என்பதைத்தவிரப் பஞ்சத்திற்குக் காரணம் சொல்லமுடியவில்லை. அடிபிடிகளுக்குக் கிராமங்களிலுள்ள மூடஜனங்கள் காரணமெனப்பட்டது. ஒரு நியாயாதிபதி, அடுத்தமாகாணத்திலுள்ள இரண்டு உத்தியோகஸ்தர்கள், அந்த மாகாண உத்தியோகஸ்தரிருவர் ஆக ஐவர் கூடிய கம்மிஷன் ஒன்று ஏற்பட்டது. பம்பாய் உத்தியோகஸ்தர்கள் அநேகத்தை யொப்புக்கொண்ட போதிலும், தங்கள் கவர்ன்மென்டைப் பற்றி சற்று ஜாடையாயிருக்க ஏற்பட்டது. மற்ற மாகாணத்திலிருந்து

வந்த மூவரும் ஆச்சரியப்படும்படியான மேஜாரிட்டி ரிப்போர்ட்டு அனுப்பினார்கள். முப்பது வருஷத்துக்குள் நூற்றுக்கு முப்பது நிலவரித்திட்டம் உயர்த்தப்பட்டிருக்கிறதென்று சொல்லப்பட்டது. இந்த அறிக்கையானது அதிக பெரிதாயினும், நான் அவைகளினின்று எடுத்துக் கூறுவது பட்சபாதமாக இருக்குமாகையால் அவற்றை யொப்புக்கொள்ள வேண்டாம். ஆங்கிலத்தில் நடத்தப்படும் பத்திரிகைகளில் திறமையுள்ளதென்று கருதப்படும் இராஜாங்கப் பயோனியர் பத்திரிகையிலிருந்து எழுதுகிறேன்.

“கம்பிஷனிலுள்ள ஐவரில் மூவர் ஜூடிஷியலும் மற்ற வடமேற்கு மாகாண மெம்பர்களும் (விவசாயியின் மனத்தை உடைத்த முக்கியாம்சமாகிய) அநியாய பளுவாயிருக்கிறதைப்பற்றி மறு நிலத்திட்டத்தின்போது கவனிக்க வேண்டுமென்கிறார்கள்” என்றது. மெஜாரட்டியின் நியாய விவாத (ஆர்கியுமெண்டு) மோபம்பாய் ரிவினியு ஸர்வேயின்பேரில் குற்றம் ஏற்படுத்துகிறது. சுருக்கமாய்ப் பிற்காட்டிய வாருகும். தெரிந்த மாதிரியை யுத்தேசித்து, சமீபத்தில் நடந்த மறுதிட்டத்தில் உயர்த்தியது அதிக ஜாஸ்தியானது. அவை யாரைக்கட்டுப்படுத்துகிறதோ அவைகளையுத்தேசிக்க, அவை அழிக்கத்தக்கனவாகும். அவைகள் முடிவாக உத்தேசத்தின்பேரிலும், கணிதத்தின் பேரிலும் தப்பிதமாய் ஏற்பட்டதாகத் தெரிகிறது. தீர்வையைப்பற்றி முதலில் ஏற்பட்டதை ஒவ்வொரு தாலூகாவிலும் நூற்றுக்கு 33 முதல் 66-வரை உயர்த்தியதாக ஸர்வே ரிக்கார்டுகளில் ஏற்படுகிறது. சில கிராமங்களில் அவை இருமடங்காக்கப்பட்டிருக்கின்றன. சில பேர்வழி வாரிகளில் இருமடங்குக் கதிகம் செய்யப்பட்டிருக்கின்றன. ஒப்புக்கொண்ட குறைவிற்கு அதிகமாக நூற்றுக்கு 38 அதாவது லோக்கல் உத்தியோகஸ்தர்கள் ஒப்புக்கொண்டதற்கு அதிகமாக நூற்றுக்கு எழுபத்தேழு அதிகம். ஒரு நாகரீகமுள்ள கவர்ன்மெண்டின்பேரில் இப்படிக் கெடுதலான அறிக்கை எழுதப்பட்டதில்லை.

பம்பாய்க் குடியானவன் இயற்கையில் ஏற்பட்ட சாந்தகுணத்துடன் பல வருஷங்களுக்கு பிரிட்டிஷ் அராஜரீக ஆளுகையை (Mis-Government) ஒப்புக்கொண்டு வந்தானென்று பின்னும் பயோனியர் எழுதிற்று. என் முகவுரையில் கூறியதில், பேர்போன பம்பாய் உத்தியோகஸ்தராகிய ஸர் ஜார்ஜ் வின்கேட்டு அநேக நாளாக வருத்தப்பட்டு வருகிற குடியானவனது கஷ்டதிசையைப் பற்றிப் பரிதாபமாய்ச் சொன்னார். பஞ்சாபைப் பற்றியும் இதுவேயுண்மை



## சென்னையில் அதிமிதமான ரிவினியூ ஜாஸ்தி.

சென்னை மாகாணத்தைத் திரும்பிப் பார்க்குமிடத்து, இரக்கமில்லாத தீர்வையால் ஜனங்களது பலத்தை நசுக்குகிறோம். அங்கே கூடப் பஞ்சத்தின்பேரில் பஞ்சம். நிலவரி எப்பொழுதும் மேலேயே போய்க்கொண்டிருப்பதுடன், இராஜாங்கத்தாரால் அநேக குடிகள் தங்கள் நிலங்களினின்றும் துரத்தப்படுகிறார்கள். இந்நூற்றுண்டு பிறந்தபின்னர் மலையாளத்தில் ஒவ்வொரு தாலூகாவில் நூற்றுக்கு 84, 85, 105 வீதம் வரி உயர்த்தப்பட்டிருக்கின்றது. மறுபடியும் ஒரு கான்ஸர் வேட்டிவ் பத்திரிகையிலிருந்து சொல்லுகிறேன். இந்தியாவிற்குத் தலைநகரமாகிய கல்கத்தாவில் நடைபெறும் “இங்கிலீஷ்மன்” பத்திரிகையே. 1880-ம் வருஷம் பிப்ரவரிமாதம் 17-ந் தேதி பின்வருமாறு எழுதிற்று:—“சென்ற சென்னைப் பஞ்சத்தில் அந்த கவர்ன்மெண்டார் வசூல் செய்யும் கிஸ்திக்குப் பதிலாகத் தென் இந்திய வியவசாயிகளைக் காப்பாற்ற என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்? ஆனால் இந்தியா கம்பெனியிலிருந்து இராணியிடம் மாறிய பிறகு கிஸ்தி ஜாஸ்தி வசூலிக்கப்படுகிறதென்று சந்தேகிக்கலாம். அந்த வருஷங்களில் (1858-59ல்) சென்னை மாகாணத்தின் நிலத்தீர்வை $3\frac{1}{4}$ கோடிபவுன் அதற்கு ஐந்துவருஷம் முந்தி சராசரி $3\frac{1}{2}$ கோடிபவுன்: 1876-ல் பஞ்சத்துக்கு முந்திய வருஷம் $4\frac{1}{2}$ கோடியாக விருந்தது. அதாவது, இருபது வருஷத்திற்குள் ஒருகோடிபவுன் சென்னை இராஜதானி நிலத்தீர்வையில் ஜாஸ்தியாயிற்று. இந்த அதிகத் தீர்வையால்தான் இந்தப் பஞ்சம் உண்டாயிற்றென்று சொல்லுபவர் அநேகர். அதிகத்தீர்வை வசூலிப்பதால் கெட்ட காலத்தில் உழவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடாதவனாயிருக்கிறான். பம்பாயில் முப்பது வருஷத்துக்குள் நூற்றுக்கு முப்பது பங்கு உயர்த்தியது பஞ்சமன்றி அடிபிடியை உண்டாக்கிற்று. சென்னையில் இருபது வருஷத்துக்குள் 33 விழுக்காடு உயர்த்தியதன்பலம் நிதரிசனம். பஞ்சாபில் பதினைந்து வருஷத்திற்குள் நூற்றுக்கு முப்பது விழுக்காடு உயர்த்தியதன் பிரயோசனம் அடிபிடியும், தீர்வை சம்பந்தப்பட்ட ராஜநிந்தனையுமாகக் கண்கூடாய்ப் பார்க்கிறோம்.

## கோடிக்கணக்கான நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தல்.

ஒரு மாகாணத்திலுள்ள கோடி குடும்பங்களில் ஆறில் ஐந்துபங்கு அதாவது 4 கோடி ஜனங்களை (Eviction) வெட்கக்கேடான காரியத்தைப் பற்றி ஆங்கிலேயராகவும், கிறிஸ்தவர்களாகவும், தயையையுடைய மானிடராகவும் நின்றும் யோசிக்கும்படி ஒவ்வொரு பார்லிமெண்டு மெம்பரையும் விநயத்துடன் வேண்டிக்கொள்ளுகிறேன். 1893-ல் பம்பாய் கவுன்

சில்மெம்பரும், இந்தியன்ஸிவில் சர்விஸ் உத்தியோகஸ்தருமான ஆனரெபில் மிஸ்டர் A. ராஜர்ஸ் இந்திய உதவிக்காரியதரிசிக்கு எழுதும் பொழுது "1830 முதல் 1890 வரையில் கிஸ்திபாக்கி ரிவினியூ வசூலுக்காக ஏலம் போடப்பட்ட 8,40,713 பேர்வழிகளுக்குச் சொந்தமாயிருந்த 91,63,364 ஏக்கர் நிலத்தை அவர்களுடைய பாத்தியதை ஒழிய 9,65,091 ரூபா சொந்த சொத்தையன்றி, ஏலம் போடப்பட்டது. 19,63,364 ஏக்கரில் 11,74,143 ஏக்கர் அதாவது, சரியாகத்தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறதென்கிற நிலத்தில் நூற்றுக்கு அறுபதுபாகம் கேட்பாரின்றி சர்க்காரால் ஏலம் எடுக்கப்பட்டது. மீதமிருந்த 7,79, 142 ஏக்கர்தான் விற்கப்பட்டது. பம்பாயிலுள்ள குடி முறைமையிலுள்ள கெடுதிகள் என்னும் எழுதப்பட்ட "பம்பாய் லாண்டு ரிவினியூ சரித்திரம்" என்னும் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதாயினும். அதில்கூட இப்படி 8,50,000 பேர்வழிகள் 11 வருஷத்துக்குள் 1,00,00000 ஏக்கர் நிலத்தை விட்டதாகக் காணப்படாது. பத்து வருஷத்துக்குள் சென்னையிலுள்ள விவசாயிகளில் எட்டிலொரு பாகத்தாரது நிலம் சொத்துக்களினின்றும் விற்றுக்கொடுக்கப்பட்டது. அவர்களுடைய நிலங்களையன்றித் தட்டுமுட்டு·சாமான்கள் பாத்திரம், படுக்கைகள் கட்டியிருக்கும் கந்தை நீங்கலாக எல்லாம் இராஜாதி பத்தியத்திற்காக விற்றுக்கொடுக்கப்பட்டன. இப்படிப் பதினொரு வருஷங்கழித்ததும் 1877--78-ம் வருஷப்பஞ்சத்தில் மூன்றுகோடி ஜனங்கள் பசியால் மடிந்ததென்ற கதை பூர்த்தியாகிவிட்டது. இப்பொழுது பஞ்சாபையும், அதன் ஒருகாலத்துப் பேர்வாய்ந்த சீயக்கியர்களையும் அழிக்கிறவர்களைப்போன்று, இரண்டுவருஷத்துக்கொருதரம் ஒரு ஜில்லாவைவிட்டு மறு ஜில்லாவுக்கு மாற்றப்பட்டு யோசியாமல் கஷ்டப்படும் பினான்ஷியல் இயந்திரத்தில் சக்கரமாக இருக்கும் உண்மையுள்ள ஆங்கிலேயரோ சாவதானமுள்ள பெரியமனிதர்கள்.

## வரும்படியில் நூற்றுக்கு அருபத்தைந்து தீர்வையை ஒப்புக்கொள்ளுதல்.

சில வாரங்களுக்கு முன் என்கேள்வியொன்றுக்கு விடையளிக்கும் போது, மிஸ்டர்மார்லி இந்தியா முழுமையும் வருமானத்தில் நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு நிலத்தீர்வைமாத்திரம் ஏற்பட்டிருக்கிறது சாதாரணமானதென்றார். வரும்படிமாத்திரம் என்றால் உழவிற்குச் செலவழிந்தது போக பாக்கியிருக்கும் வருஷவரும்படி—உண்மையில் குடியானவன் வரும்படியே ஆகையினால் சாதாரண நிலவரி அல்லது வாடகை வரும்படியில் நூற்றுக்கு ஐம்பது அதாவது ஒருபவுண்டில் பத்து ஷில்லிங் (ஒரு பவுண்டுக்கு 20 ஷில்லிங்) மாத்திரம் என்னும் வார்த்தையை விவகரிக்க வேண்டியிருக்கிறது. அதற்குக் குடியானவனுக்கு நிலத்தீர்வையைத்தவிர



ரோட்டு, போலீஸ், இரிகேஷன், பப்ளிக் ஒர்க்ஸ் இன்னும் இம்மாதிரியான அநேக தீர்வைகள் ஏற்பட்டிருக்கிறது என்று அருத்தம். மார்லிதுரையின் மறுமொழி உயர்ந்ததீர்வை நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு என்றதாகத் தோன்றிற்று. இச் சந்தேகத்தை நிவர்த்திசெய்ய மத்தியமாகாணங்களைப்பற்றித்தேதிகள் குறியிட்டு, .இந்தியாகவர்ன்மெண்டின் உத்திரவையும் குறிப்பிட்டுக் கேட்டேன். எனக்குக்கொடுத்த விடை பின்வருமாறு:— "மத்திய மாகாணங்களில் தீர்வை விதிப்பதற்கு ஏற்பட்டுள்ள ரூலானது வரும்படியில் நூற்றுக்கு ஐம்பதுக்குக் குறையாமலும், அறுபதுக்கு மேற்படாமலுமிருக்கவேண்டும். சில முக்கிய கேஸ்களில் அறுபத்தைந்துபங்கு விதிக்கப்பட்டுக் கஷ்டமின்றிக் கொடுக்கப்பட்டால் அத்தீர்வையே விதிக்கப்படும்." இதனால் கடைசித்தரம் நூற்றுக்கு ஐம்பது என்று கொடுக்கமுடியுமானால், அறுபத்தைந்துவரை உயர்த்தலாமென்றும் ஏற்படுகிறது நமக்கு எப்பொழுதும் நிலவரி அதிக சுவல்பம் என்றும்; கஷ்டமின்றிக் கொடுத்துவிடலாமென்றும் சொல்லப்படுகிறது. அதனாற்றான் மத்திய மாகாணங்களில் கோடிக்கணக்கான ஜனங்கள் காணாமற்போனார்கள்—1891-10க்குள் வறுமையால் மாண்டார்கள்.

## ஒருசீவ் ஜஸ்டிஸின் பெட்டிஷன்.

"கவர்ன்மெண்டாரின் தீர்வை மொத்த விளைவிலிருந்து நூற்றுக்கு ஐம்பதுக்கு மேற்படக்கூடா"தென்று ஒரு விண்ணப்பமெழுதி, இந்தியா மந்திரியிடம் 1900-வருஷம் டிசம்பர் மாதம் 20-ந்தேதியில் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலில் மெம்பர்களாகவோ, ராஜப்பிரதிநிதியாகவோ, கவர்னராகவோ இருந்த நால்வரோடு, கல்கத்தா ஹைகோர்ட்டு பிரதம ஜட்ஜாயிருந்த சர் ரிச்சார்டுகார்த்து என்பவரால் கொடுக்கப்பட்டதே வரும்படியில் பாதிக்குமேல் குடியானவனிடத்திலிருந்து வசூல்செய்யப்படுகிறதென்பதற்குப் போதுமான அத்தாக்ஷி. இந்தப் பெட்டிஷனானது கர்ஸன் பிரபுவிற்கு அனுப்பப்பட, அவர் அப்படி யாதொரு ரூலும் வைக்கமுடியாதென்றார். அப்படி யாதொரு லிமிட்டுமில்லை; எப்பொழுதுமிருக்கவுமில்லையென்பதை ஒரு சுயேச்சையான விசாரணை உடனே நிரூபிக்கும்; ரோடு இரிகேஷன், போலீசு முதலான வரிகளைச் சேர்த்து அறுபத்தைந்து பங்குக்குமேல் வசூலிக்கப்படுகிறது.

## பஞ்சாபில் மிக்கேல் டேவிட்.

லாலா லஜபதிராயைப்பற்றி சில வார்த்தை சொல்லத் துணிகிறேன். அவர் சாதாரணமான ஒரு குடியானவனே, ஓர் உதாரக்கட்சியினது கொள்கையிலிருந்து நோக்கும்பொழுது கொடிய வசூலிலிருந்து தம்தேசத் தவ

ரைக் காப்பாற்றியவரென் றெண்ணலாம், இரண்டு வருஷத்துக்கு முன் அவர் இவ்விடம் வந்திருந்தார். அவரை நான் பார்த்ததில்லை. ஓர் அணுக் கூட ராஜவிசுவாசம் நீங்காத முகமுடையவராயும், விற்பன்னராயும், பாரிஸ்டராயும், நிலசுவான்தாராயும், சுயநலமற்றவராயும், இனிய வார்த்தையுடையவராயும், மிக்கேல் டேவிட் (இவருடைய சரித்திரம் மித்திரனில் எற்றெனவே "தேசாபிமானியார்" என்னும் வியாசத்தில் வெளியாயிருக்கிறது) இருந்ததையொப்பக்குடியானவனது கிளைகளுயுமிருந்தாரென்று எனக்கு சொல்லப்பட்டது. பினல்கோடு எழுதப்படாத காலத்தும், பிரிட்டிஷ் ராஜ்யமே தத்தளித்துக்கொண்டிருந்தகாலத்தும், இந்தியாவிற் பாதி ஜயிக்கப்படாமலும், சீக்கிய மஹாராஷ்டிர சைநியங்கள் தோற்கடிக்கப்படாமலுமிருந்தகாலத்தும் வேண்டியிருந்த ஒருசட்டத்தின் உதவியின்பேரில் தேசபிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறார்கள். சமாதானகாலத்தில் இப்படி தேசபிரஷ்டம் செய்வதானது (பிராஞ்சுதேச மன்னனாகிய) பதினாலாம் லூயியின்லேத்தர்தேகஷே (Lettres de cacheh) என்னும் முத்திரையிட்ட (முத்திரையிட்ட கடிதமாவது:—பிரான்சிய ராஜாங்கத்தில் இக்கடிதத்தை வாங்கிப் போலீசு தலைவரிடம் கொடுக்க, அவர் உடனே அருவருப்பாயுள்ள நபரைப்பிடித்து பாஸ்டைல் (Bastile) என்னும்கோட்டையிலாவது, வேறு இடத்திலாவது வெளிவிடாது யாதொரு தகவலுமின்றி அடைத்துவிடுவது.) கடிதத்திற்கும், ருசிய உகேஸின்படிக்கோட்டையிலடைப்பதற்கும், ஸைபேரியாவிற்கனுப்புவதற்கும் யாதொரு பேதமுமில்லை. நாகரிகம் பொருந்தியகாலத்தில் இது காட்டுமுரண்டித்தனம். இந்த உபாயமானது உருஷியனைப்போல் பற்றுதலுடையவரும், அவர்களைப்போல் கட்டாயப்படுத்தும், பலத்திலும் நம்பிக்கையுடையவருமான சர்டென்ஸில் இபெட்சனால் சிபார்சு செய்யப்பட்டது. அவர் கர்ஸன்பிரபுவினது கெடுதலான ஏற்பாடுகளில் முதன்மையாக உள்நாட்டு மந்திரியாக விருந்தார்; வங்காளிகளுக்கும் இந்தியர்களுக்கும் எதிரியாக ஆரம்பித்த சண்டைக்குத் துணையாகவிருந்தவர்.

## இந்தியா ஆபீஸ் கட்டுக்கதை.

முடிவிற் இந்தியா ஆபீசார் டெம்பரெரியாக விருக்கும் பார்லிமெண்டு முக்கியஸ்தர்கள் மூலமாக ஒரு பழையகதையை சொல்லுகிறார்கள். அண்டர் செக்ரிட்டெரி மிஸ்டர் ஹாப் அவுஸ் என் கேள்வி ஒன்றிற்குப் பதினாருந்தேதி பதில் சொல்லும்போது சுதேச அரசர்களின் நாட்களில் வாங்கியதற்கு 15 முதல் 30 வரை கம்மியாக வரி வசூல் செய்யப்படுகிறதென்றார். 1871-ல் ஜெயிக்கப்பட்ட பம்மாய் மாகாணத்தை உதாரணமாக எடுத்துக்



கொள்ளுவோம். அதன் நிலத்தீர்வை கடைசியிலாண்ட இராஜாக்களின் ஆட்சியில் (8,000,000) எண்பது இலக்ஷம். இதுமுதல் பிரிட்டிஷ் கலெக்டர்கள் மதிப்புப்படி இரண்டாம் வருஷத்தில் நம்முடைய இராஜாங்கம் (11,500,000) ஒருகோடியே பதினைந்து இலக்ஷத்திற்கு உயர்த்திற்று.

1823-ல் (15,000,000) ஒருகோடியே ஐம்பது லக்ஷமும், 1855-ல் (23,000,000)இரண்டுகோடியேஎண்பதுஇலக்ஷமும், 1875-ல் (37,000,000) மூன்று கோடியே எழுபது இலக்ஷமும், 1895-ல் (48,500,000) நாலுகோடியே எண்பத்தைந்து இலக்ஷமும் ஆயின. ஆனால் அப்பொழுது சாகுபடி செய்யப்பட்ட நிலத்தையாவது, ஜனத்தொகையாவது சொல்லமுடியாது; ஆனால் சுதேச இராஜாங்கத்தில் விதித்து வசூலிக்கப்பட்டது மிக்க நியாயமானது. அது மகமதிய ஆரம்பமாகவும் கோரான்பேரில் விதிக்கப்பட்டது. நம்முடைய இராஜாங்கத்தில் பைபிளில் சொல்லியபடிக் கொஞ்சமும் நடப்பதில்லை. நமது தீர்வை இருபது முப்பதுவருஷத்திற்கொருதரம் அதிவிளைவிலோ, பஞ்சத்திலோ ஏற்படுத்தப்படுகிறது. தெய்வத்துக்கு பயந்த மகமதியனோ அந்தந்த வருஷத்து விளைவில் நாலிலொருபங்கு இருந்ததோ, இல்லையோ வசூல்செய்துகொண்டிருந்தான். ரிவினியூதீர்வையானது அப்பொழுது பஞ்சகாலத்தில் கொஞ்சமாயும், விளைவு காலமாகிய சுபிட்சத்தில் யதேஷ்டமாகவும் வசூலாகும். இந்த விசேஷமான வழக்கத்தைக் கையாள பிரிட்டிஷார் ஆரம்பிப்பார்களானால், இந்தியர்கள் ஆனந்தக் கண்ணீர் பொழிவார்கள். அதைப்பற்றி அவர்கள் மனு செய்து கொண்டார்கள். ஆனால் ஸ்டாட்டிஸ்டிகல் டிபார்ட்மெண்டார் அப்படி செய்தால் வாடகையும், ரிவினியூவும் குறைவு ஆகுமென்று சொல்லிவிட்டார்கள்.

காமன்ஸ் சபை
28—5—07.

சுதேசமித்திரன்.

# சிந்தாமணி சரித்திரம்.

(61-ம் பக்கத்தொடர்ச்சி)

6-ம் அத்தியாயம்,

எல்லாச் சமயக் கொள்கைளும் குறைவின்றித் தழைத்து வாழப் பெற்ற பாண்டிய நாட்டின்கண் சகல மதத்தினர்களாலும் தொழப் பெற்று மிக்க மாட்சிமையுடன் விளங்கிவரும் தேவாலயம் ஒன்று கங்கை நதிக்குச் சமானமான புனிதம் நிறைந்த ஒரு புண்ணிய நதியின் கரையில் அங்குவரும் மானிடர்களைப் பிறவித்துன்பத்தினின்றும் அகற்றி வருகின்றது. அவ்வாலயம் அமைந்து நிற்கும் ஊரானது முன்னொருகால் இப்பாண்டிய நாட்டிற்குச் சிரோபூஷணமாய் வரிசையாய் ஐந்து மன்னர்கள் செங்கோல் செலுத்தி வாழப்பெற்ற பிரதான நகரமாயிருந்தது. அந்நகரத்தின்கண் க்ஷமணர்களின் பொய்க்கொள்கையினின்று ஆன்மாக்களை உய்விக்கவும் அங்கு முடி தரித்து ஜீவகோடிகளை இடுக்கணின்றி ஒருகுடைக்கீழ் ஆண்டுவந்த மன்னவனுடைய துயரத்தை நீக்கவும் ஒப்பற்ற சைவ சமயத்தை உலகத்தின்கண் பரவச்செய்யக் கருணையுடன் முயன்ற சமயாசாரியருடைய சங்கற்பத்தை நிறைவேற்றிவைக்கவும் அன்று எழுந்தருளிய கருணாநிதிகளாகிய சதாசிவக்கடவுளும் உமாதேவியும் பக்தர்களுக்கு எந்நாளும் அருள்புரியுமாறு அவ்வாலயத்தின்கண் மாட்சிமையுடன் அமர்ந்து விளங்குகின்றனர். அவ்வாலயமானது பல நூற்றாண்டுகளுக்கு முன் தெய்வத்தன்மை பொருந்தியவர்களால் ஸ்தாபிக்கப்பெற்று பின்னர் வந்த மன்னர்களாலும் சிற்றரசர்களாலும் அடிமைபூண்ட செல்வர்களாலும் விருத்தி செய்யப்பட்டும் புதிப்பிக்கப்பட்டும் இக்காலத்தில் இதுவே பூலோக கைலாசமென்று வியந்து கொண்டாடும்படி ஒப்பற்ற அழகும் புனிதமும் நிறைந்து பிரகாசிக்கின்றது.

அதன் ஓர் பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும் திவ்விய புஷ்கரணியில் கங்கை, கோதாவரி, யமுனை முதலிய புண்ணிய நதி ரூபமான தேவமங்கையரும் நாடோறும் ஸ்நானம் செய்து தங்கள் தங்கள் குற்றத்தை நிவிர்த்தி செய்துகொள்கிறார்களென அவ்வாலயத்தின் பூர்வ வரலாறுகளை நன்கறிந்த பெரியோர்கள் உரைக்கின்றனர். பலபாண்டிய மன்னர்களும் அவர்களுக்குள் மந்திரித்தனம் வகித்த சிவனடியார்



களும் தங்களுடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் அவ்வாலயத்தின் வழிபாடுக்கென்றே பக்தியுடன் விநியோகித்து வந்தமையால் இந்நாள் அதற்கு இருக்கும் செல்வம் அளவற்றது. அங்கு விளங்கும் வாகனங்களும் பணிவிடைக்குரிய பொருள்களும் பொன் வெள்ளி முதலிய உயர்ந்த உலோகங்களால் அமைக்கப்பெற்று அவ்வாலயத்தின்கண் அங்கும் இங்கும் ஒளி வீசிப்பிரகாசிக்கின்றன. இவ்விடத்தில் பிரசன்னமாக விளங்கும் பற்பல தெய்வ பிம்பங்களும் சுவர்களின்மேல் விசித்திரமாக வரையப்பட்டிருக்கும் சித்திரங்களும் புராணவரலாறுகளும் எவ்விதத் தாழ்மையான நாஸ்திகர் மனத்தையும் இழுக்கறக் கழுவி ஒப்பற்ற புனிதம் பெறச்செய்யும்பான்மையுடையன. அந்த ஆலயத்துள் நடக்கவேண்டிய நித்திய பணிவிடைகளுக்காகப் பூர்வகாலத்தில் ஏற்பட்டிருக்கும் திட்டங்களும் விஸ்தாரமாயுள்ளன. இக்கலியுகம் முதிர்ந்து மானிடர்களுடைய மனோபாவங்களையும் விருத்திகளையும் அலங்கோலப்படுத்திக் காமம், வெகுளி, மயக்கம் முதலிய துர்க்குணங்கள் அன்றி வேறுஉயர்ந்த பண்புக்கு இடமில்லாமல் செய்துவரினும் இவ்வாலயத்தில் விளங்கும் கருணாநிதிகளுடைய பிரத்தியக்ஷ அருளினால் இந்நகரத்தின்கண் மட்டும் கலிபுருஷன் பிரவேசிக்க மனத்துணிவின்றி அகன்று நிற்கின்றானோ என ஐயமுறும் வண்ணம் இங்கு வழிபடும் மானிடர்களிடத்தில் பக்தியும் சீலமும் ஒருவாறு நிரம்பி நிற்கின்றன. இந்த க்ஷேத்திரத்தின் மகத்துவம் ஒப்பற்றது. இந்நகரத்தின்கண் பிறப்பதும் வசிப்பதும் பெரிய புண்ணியத்தின் பயனென ஸ்தலபுராணம் வியந்து கூறுகின்றது. விஸ்தாரமான கோயிலும் அதற்கெட்டுத்திசைகளிலும் விசும்பை அளாவி நிற்கும் உன்னதமான கோபுரங்களும் பற்பல தேவ சந்நிதிகள் விளங்கிப் பொலியும் அழகிய மண்டபங்களும் அந்தந்தச்சமயங்களில் உற்சவச் சிறப்புகளுக்காக அமைக்கப்பெற்று வெகு விநோதமான அலங்காரங்களுடன் விளங்கும் சிறிய மாளிகைகளும் பட்சபாதமின்றி ஒரே முறையாக ஆன்மகோடிகளை யாண்டுவரும் இக்கருணாநிதியின் விதி இத்தன்மையுடையதென வற்புறுத்திக்கூறும் வண்ணம் ஏராளமாக வமைந்து வரிசை தவறாது ஒரே விதமான இடைவெளிகளுடன் பொருந்தி நிற்கும் பொன்மயமான ஸ்தம்பங்களும் நிகரற்ற ஜோதியே இவ்வாலயத்தின்கண் விளங்குவதால் இரவென்

னும் இடுக்கணின்றி எக்காலமும் பகலாகச் சமைந்திருக்கின்றதோ, என வியப்பதற்கிடமாகக் குன்றாத ஒளியுடன் திவலையேனும் இருளுறாது பிரகாசித்துக்கொண்டு விளங்கும் பெரிய திருவாசிகளும், ஞானநெறிக்கன்பரெலாம் இம்முறை மெய்ப்பதத்தினுக்கு நடப்பரென்றே ஊனமறப் புகன்றிடுமோர் முறையால் மிக்க வழகுடன் அமைக்கப்பெற்ற படிக்கட்டுகளுடன் சிங்காரமாய் விளங்கும் புஷ்கரணிக்கரைகளும், நோக்குவோர்களுடையமனங்களை முற்றிலுங்கவர்ந்து அன்னவரை ஆனந்த வெள்ளத்தில் இடையற மூழ்கி நிற்கும்படி செய்கின்றன. இவ்வாலயத்தில் ஒரு நாள் காலை இரண்டு நாழிகை யளவில் நாலைந்து மங்கையர்களும் ஐந்தாறு புருஷர்களும் மடிதரித்து மிக்க புனிதத்துடன் அம்பிகையின் பிராகாரத்தில் வந்துகொண்டிருந்தார்கள். அந்தப்புருஷர்களில் ஒருவர் முப்பது வயது நிறைந்து கௌமாரமென்னும் இனிய பருவமானது கொழுந்துகளுடன் மலர்களும் நிறையப் பொலிந்து நிற்கும் இளமரம்போல் நிறைந்த விகாரத்துடன் விளங்குவதால் அவரழகு மிக்க மனோஹரமானது. விலையுயர்ந்த ஆடைகளாலும் உயர்ந்தஇரத்தினங்களால்இயற்றப்பெற்ற பொன்னணிகளாலும் அவர் மேனி பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவர்பக்கத்தில் உலாவிவரும் மங்கையரின் அழகும் இலாவண்யமும் மிகுந்த சிறப்புள்ளவனவாயிருப்பினும்அவர்புனைந்திருக்கும் ஆபரணங்களும் அன்னவர் நடையுடை பாவனைகளும் இந்நாட்டினருடைய வழக்கத்துக்கொவ்வாது விநோதமாகவும் ஒருவாறு இங்குள்ளவரால் அருவருக்கக் கூடியனவாகவும் இருந்ததால் அவரை நோக்குவதற்கு ஏராளமான ஜனங்கள் பின்தொடர்ந்து முழக்கத்துடன்சென்றனர். அவர்கள் அம்முறை சென்றுகொண்டிருக்கையில் அந்தப்பிரகாரத்தின் ஓர் மூலையில் சில போலீஸ்உத்தியோகஸ்தர்களும் சேவகர்களும்நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுதுஒரு சேவகன் ஓடிவந்து அங்கு வந்துகொண்டிருந்தவரை நோக்கி "நீங்களனைவரும் ஆலயத்தை விட்டு வெளியிற்போகவேண்டும். இன்றைக்கு ஆலயத்தில் பூஜை கிடையாது" என்று சொல்லி அனைவரையும் அடிக்க முயல்பவன் போலக் கம்பை யோங்கியும் பிடித்துத் தள்ளியும் அகற்றினான். அப்பொழுது அந்த மங்கையர்களில் ஒருத்தி அவருடைய பாஷையில் வருத்தத்தை வெளியிட்டுப்பேசினது அவள் ஒப்பாரிவைத்தழுததைப்போலிருந்தது. அவள்,



"ஐ. குஞ்ஞுக்குட்டி வளரே புதுமா. அம்பலத்தில் வந்ந ஆளுகளே பிடிச்சுத்தள்ளுந்நதே ஈ நாட்டிலல்லாதே வேறே எவிடேயும் கண்டிட்டில்லா. ஞங்ஙடே நாட்டில் தம்புராக்கள் மாரால் நடத்திவருந்ந க்ஷேத்திரங்களுண்டு. அதுகளுடே கிரமம் ஈ கொங்ஙருக்கு அறியில்லையா. ஆ, ஆ! ஊ ஊ"

இதைக்கேட்ட ஒருவன்

அப்பா! இதென்னபாஷை? சிரித்துக்கொண்டு பேசும்பொழுதும் அழுகிறதுபோலிருக்கின்றதே. சீச்சீ என்ன அபிநயம், பேசுவதாகக்காணவில்லை. ஏதோ வாந்திபண்ணுவதுபோலிருக்கின்றதே ஆடைக்கேற்ற ஜாடையும் ஜாடைக்கேற்ற யாடையும் அவரிடம் பொருந்தியிருப்பது போதாதா. வாடையுமா கூடவேண்டுமென்று விளிச்சி யெண்ணையைச் சம்பங்கித்தைலம்போல வழியவழிய தலையில் பூசிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தச் சரக்குகளுக்காகத்தான் நமது நாட்டிலுள்ள பல புத்திமான்கள் ஓடித்திரிந்து மெக்காவுக்குப் போய் ஒரு குக்காவைக் கொண்டுவந்ததுபோல உள்ளேவைத்துமூடி அழகுபார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது கிடக்கட்டும். இங்கே ஏதோ கலகம் நடக்கப்போகிறதுபோல் காணப்படுகின்றதே, மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழையென்பதுபோலப் போலீசார் வந்துவிட்டால் உடனே கலகம் நடக்கவேண்டியதுதானே. எங்கள் தெருவில் என்றிரவில் ரோந்துச்சத்தம் கேட்கப்படுகின்றதோ அன்றைக்குத்தான் களவு நடக்கிறது நிச்சயம். இங்கென்ன விசேஷம் நடக்கிறதென்று மற்றொருவனைக்கேட்டான். அவன்,

இந்த ஆலயத்தில் விசேஷங்களுக்கென்ன குறைவு, இதை விசாரணை செய்கிற கமிட்டியில் ஏழு மெம்பர்களிருக்கிறார்கள். அவர்களுக்குள் மூன்று கட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு கட்சிக்கு இரண்டு மெம்பர்களாக ஸ்திரமாக அமைந்திருப்பதில் ஒருவர் மட்டும் ஒருமாதத்துக்கு ஒவ்வொரு கட்சியில் சேரும்பொழுது அந்தக் கட்சி மெஜாரடி என்னும் சுவாதந்திரியத்தை அடைகின்றது. ஒரு கட்சி அந்தச் சுவாதந்திரியத்தை அடையும்பொழுது நடத்துகிற அமல்களையெல்லாம் அடுத்தகட்சி மெஜாரட்டி ஆகும்பொழுது அழித்துவிடுகிறது வழக்கமாயிருக்கின்றது. இவ்வாலயத்தில் பூஜைசெ

யப் பாத்தியமுள்ள ஒரு பட்டர் பிர்மசாரியாயிருக்கின்றார். முந்திய மெஜாரட்டி அடைந்திருந்த கட்சியிலுள்ள மெம்பர்கள் அந்தப் பட்டருக்கு விவாகமாகாவிடினும் அவர் இரண்டு பூணூல்களைத் தரித்துக்கொண்டால் பூஜை செய்யலாமென்று உத்திரவுகொடுத்துவிட்டார்கள். அதற்குப்பிந்தி மற்றொரு கட்சியிலுள்ள மெம்பர்களுக்கு மெஜாரட்டி அதிகாரம் வந்தவுடன் பிர்மசாரி ஆலயத்தில் பூஜை செய்யக்கூடாதென்றும் இரண்டு பூணூல்களையும் அறுத்தெறிந்துவிட்டால் அவர் பூஜைசெய்வதற்கு யோக்கியராகிறாரென்றும் அந்த மெம்பர்கள் தீர்மானித்திருப்பதுமல்லாமல் மற்றொரு பட்டர் சம்பந்தமாக ஓர் அர்ச்சகர் விவாகம் செய்துகொண்டால் ஆசார்யாபிஷேகம் அடைந்தபின்னர்தான் பூஜைசெய்ய யோக்கியதை யுடையவரென்றும் அவர் விவாகம் செய்துகொள்ளாமல் வைப்பாட்டிவைத்துக்கொண்டால் அவருக்குச் சாஸ்திரப்படி ஆசார்யாபிஷேகம் அவசியமில்லையென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். அந்தக்கமிட்டி மெம்பர்களில் ஒருவர் மிக்க அந்தரங்கமுள்ள சிவபக்தராகையால் ஓரிரவில் பரமேசுவரன் அவர் கனவில் வந்து "அப்பா நித்தம் நித்தம் குழம்புப்பால் அருந்துவதினால் நமக்கும் நமது உமையவளுக்கும் அஜீரணமுண்டாகிறது. நீயும் உன்னுடைய மனைவியும் அக்குழம்புப்பாலை அருந்திவரக் கட்டளையிடுகிறோம். உங்களுக்கு அஜீரணமுண்டாகாதபடி நாம் பாதுகாப்போம்" என்று திருவாய் மலர்ந்தருளினாராம். அது முதல் சென்ற இரண்டுவருஷமாய் சுவாமியையும் அம்மனையும் கடும்பத்தியமாக வைத்துவிட்டு ஆலயத்தில் சமைக்கப்படும் குழம்புப்பால் முழுமையையும் தினந்தவறாது அந்தக் கமிட்டி மெம்பரும் அவர் மனைவியுமே மிகுந்த பக்தியுடனருந்துவதை விரதமாகக் கைக்கொண்டிருக்கிறார்கள். இஃது ஒருவிசேஷமன்று. ஒரு மீட்டிங்கில் கமிட்டி மெம்பர்கள் சண்டையிட்டுக்கொண்டு வரவுசெலவு சிட்டாவைக் கிழித்தெறிந்துவிட்டார்களாம். மீதமிருந்த பணத்தை யாருடைய பற்றெழுதுகிறதென்று மானேஜர் தீர்க்காலோசனை செய்து கடைசியாக அதை நந்திகேசுவராருடைய பற்றென்று எழுதிவிட்டாராம். (இன்னும் வரும்)

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.



இவ்விதமாக அவனுரைத்தவுடன் அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவன்

"சிதம்பரம் நீ சொல்லுவது மிக்க அற்புதமாயிருக்கின்றதே. ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோவிலாண்டி என்பது போல இருந்திருந்து தொகையைப் பற்றெழுதுவதற்கு நந்திகேசுவரரா அகப்பட்டார். என்ன பாவம்: சிட்டாக்கிழிந்துபோய்விட்டால் மீதமிருந்த பணமுமா காணாமற்போய்விடும். தனக்குச்சொந்தமாக கோவில் பணி முதலியதில்லாமல் ஈசுவரன் உண்டு கழிக்கும் உணவைக்கொண்டு உயிர் தரித்துவரும் ஏழையாகிய நந்திகேசுவரர் பற்றெழுதிய பணத்தை இனி எவ்விதம் கைப்பற்றப்போகிறார்கள். மடப்பளி (மடைப்பள்ளி)யில் திருடியுண்ட தத்தியோதனக்கையை நம்பி யான் தலையில் துடைத்துவிடுவதாகியபெருமாள் கோயில்வழக்கம் வித்தியாசமன்றியில் இச்சிவன்கோவிலிலும்நடப்பது இவ்வூரில் சைவ வைஷ்ணவர் சண்டை யொன்றுமில்லாத வொற்றுமையை வற்புறுத்திக் காட்டுவது போலும். அதுபோகட்டும். இவ்வாலயத்திற்கு வருஷாந்திர வரும்படி என்ன கிடைத்து வருகிறது என்றுகேட்டான்".

சிதம்பரம்,

"சொக்கலிங்கம் இவ்வாலயத்திற்கு வரும்படியில் குறைச்சலில்லை. ஆனால், வரும்படியைக் காட்டிலும் போம்படியே மேலாயிருக்கிறது. இக்கோயிலுக்கு 15-கிராமங்கள் உள்ளன. வரும்படியைச் சரியாய்க்கைப்பற்றினால் வருஷம் ஒன்றுக்கு இலட்சம் ருபாவுக்குக்குறையாது. எலி பெருச்சாளிகளின் வாயைக்கட்டினாலும் மணியம் கணக்கன் நாட்டாண்மைக்காரன் இவர்களின் வாயை யார் கட்டுகிறது? தேவஸ்தானம் கிராமங்களுக்கென்றே குடிகளைப்பிரத்தியேகமாக நான்முகன் சிருஷ்டிக்கின்றார் போலிருக்கின்றது. மற்றைக்கிராமங்களில் குடிகள் கண்டுமுதலில் திருடுவதுவழக்கமாயிருந்தாலும் இவர்கள் விதையையே திருடிவிடுவார்கள். அவர்கள் வயிற்றுக்கு உரம் போடுவது ஒன்று தவிர நிலத்துக்கு உரம்போடுகிற வழக்கமில்லை. புள்ளி பாதி அறுப்பில், அறுப்பில் பாதி களத்தில், களத்துக்கு வருவதில் பாதி கண்டுமுதல், கண்டு முதலில் பாதி களஞ்சியம் என்பதாக முடிந்திருக்கிறது. இது மட்டுமா?

காலாகாலத்தில் பட்டா முச்சலிக்கா பிறக்காமல் தவறிவிடுவதினால் சுவாமிக்கு வரும் நஷ்டம் பெரும்பாகம். இஃதெல்லாம் தப்பிக்கொஞ்சநஞ்சம் ஆலயம் வந்து சேர்ந்தாலும் அதைப்பந்தோபஸ்து பண்ணிக்கொள்ள ஈசுவரனாலும் உமையவளாலும் முடியவில்லை. அதில் பாதி கோர்ட்டு விவகாரங்களுக்குச் செலவழிந்துவிடுகிறது. மீதப் பாதியில் அந்து, மானேஜர், வௌவால், மணியம், யானை, காவற்காரர்கள், கரையான், பேஷ்கார் இவர்கள் தயா தாட்சணியத்துக்கு விட்டுக்கொடுப்பதைக்கொண்டு கருணாநிதியாகிய பரமேசவரனுடைய குடும்ப காலக்ஷேபம் நடந்துவருகிறது. அதிலும் ஏதாவது மீதமாகுமா என்பதைப்பற்றிப் பரிசாரர்களையும் குருக்களையும் கேட்கவேண்டும். இந்தச் சுபிட்சத்தில் பிறர்மேல் பற்றெழுதிக் கணக்கில் செலவு போடுகிற பாபத்துகள் வெகுவாய் உள்ளன. அதற்கு நந்திகேசுவரரில்லாமல் வேறு யார் தகுதியுள்ளவர். பதினெட்டாம்படியான் பொல்லாதவன். சங்கிலிக்கருப்பன் ஒன்றுக்கும் இணங்கமாட்டான். கருப்பணசாமி வீணான கலகத்தை விளைப்பன். பத்திரகாளியின் பேச்சையே எடுக்கக்கூடாது. சண்டிகேசுவாருடன் யார் பேசுகிறது. அவர் ஒரு பாவத்துக்கும் வருகிறதில்லை. நவக்கிரகங்கள் அவக்கிரகங்களாகையால் அவர்கள் பக்கத்தில் போனால் எல்லாத் திருட்டும் வெளியாய்விடும். அறுபத்துமூன்று நாயன்மார் பேரில் முன்னமே ஏராளமாகப் பற்றெழுதப்பட்டிருப்பதால் இனி அவர்கள் பெயரைக் கணக்கில் தாக்கல் செய்வது உசிதமில்லை. கடைசியாக அகப்பட்டுக்கொண்டவர் நந்திகேசுவரர்தான் என்று சொன்னான்." இதைக்கேட்ட சொக்கலிங்கம்—

"சிதம்பரம் என்ன அநியாயம். கமிட்டிமெம்பர்கள் ஏழுபேரும் ஒற்றுமையாயிருந்து இந்த அலங்கோலங்களைச் சீர்திருத்தக்கூடாதா? சர்க்காரிலும் இதைப்பற்றி விசாரிப்பதில்லையா? என்று மிக்க வருத்தத்துடன் கேட்டான். அதற்குச் சிதம்பரம்—

"ஐயோ கமிட்டி மெம்பர்கள் ஒற்றுமையில்லாமல் இருப்பது ஒருவாறு அநுகூலம். அவர்கள் ஒரு மனமாக இணங்கிவிடுவார்க



ளானால் சுவாமி உள்பட ஆலயத்தையும் சொத்துக்களையும் ஏழு பங்கு போட்டு நல இளப்பம் சரிக்கட்டிப் பிரித்துக்கொண்டுவிடுவார்களே. வாஸ்தவத்தில் இவ்வாலயத்துக்குக் கமிட்டிமெம்பர்கள் நாலு பெயர்கள் தாமிருக்கிறார்கள். மற்ற மூவர்களில் ஒருவர் முன்கமிட்டிமெம்பராயிருந்து இறந்துபோனவருடையகுமாரர். மெம்பர் பாத்தியம் பரம்பரையாய்த் தமக்குக் கிடைத்துவிட்டதென்று சொல்லிக்கொண்டு வேலைபார்த்து வருகிறார். மற்றொருவர் கமிட்டி மெம்பர் வேலையிலிருந்து நீக்கப்பட்டவர். அவர் வாய்ச்சண்டை கைச்சண்டை செய்துகொண்டு வேலையை விடமாட்டேனென்கிறார். மூன்றாவது மனுஷர் விஷயம் மிக்க விசித்திரமுள்ளது. அவர் பெயரை வகித்த ஒருவர் கமிட்டி மெம்பராயிருந்து ஒரு கிரிமினல் வாரண்டுக்குட்படாமல் சென்ற பத்து வருஷகாலமாய் அவர் போனவிடம் தெரியாமல் மறைந்துவிட்டார். நான்தான் அவரென்று சொல்லிக்கொண்டு பலவந்தம் செய்து வேலை பார்த்து வருகிறார். இதற்கெலாம் ஒரு கேள்விமுறையுமில்லை. சர்க்காரில் நடக்கும் அமலுங் கூடத்தான் அற்புதமாகவிருக்கின்றது. பல பிசகுகளுக்காகவும் கையாடல், திருட்டு, மோசம் முதலிய குற்றங்களுக்காகவும் அந்த ஏழு மெம்பர்களையும் கமட்டி வேலையிலிருந்து நீக்கவேணுமென்று வீணாதி வீணன் கோர்ட்டில் வழக்கிட்டான். பின் சொன்ன மூவர்களும் சட்டப்படி நியமிக்கப்பட்ட கமிட்டிமெம்பர்களல்லராகையால் அவர்கள் பேரில் கொண்டுவரப்பட்ட வழக்கு செல்லாதென்று தள்ளுபடி செய்யப்பட்டது. ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாழ்ப்பாளென்பது போல முன்னிருந்த குளிரும் விட்டு அம்மூவரும் இப்பொழுது வெகு ஊர்ஜிதமாய் வேலைபார்த்து வருகிறார்கள். அம்மூவர்களையும் வேலைபார்க்கும்படி இடங்கொடுத்த குற்றத்திற்காக வாஸ்தவத்தில் கமிட்டி மெம்பர்களாயிருந்த நாலு பெயர்களையும் வேலையிலிருந்து நீக்கியும் அவர்கள் தேவஸ்தானத்துக்கு இருபதினாயிரம் ரூபா நஷ்டம் கொடுக்கவேண்டியதென்றும் மேற்படி வழக்கில் தீர்மானமாயிற்று. அந்தத் தீர்மானத்தின் பேரில் அந்த நாலு பெயர்களும் ஹைகோர்ட்டுக்கு அப்பீல்செய்து வெகு சரசமாக நியாயம் பெற்றுக்கொண்டு விட்டார்கள். அவர்களென்ன வொன்றுமறியாதவர்களா? நஷ்டமும் கொடுத்து வேலை

யும் இழப்பது மேலா? அல்லது வீணாதி வீணனைச் சரிப்படுத்துவது மேலா? அஃது அவர்களுக்குத் தெரியும். எவ்விதமாகவோ. வீணாதி வீணன் ஹைக்கோர்ட்டில் நம்பரை நிறுத்திக்கொண்டான். இவர்களுக்கு அப்பீலும் அனுகூலமாயிற்று. இப்பொழுது இவர்கள் மிக்க ஆடம்பரத்துடன் வேலைபார்த்து வருகிறார்கள். ஹைக்கோர்ட்டாரென்ன செய்வார்கள். சட்டமல்லவா அவ்விதம் இடங்கொடுத்துச் செல்லுகின்றது. ஓரிரவில் ஈசுவரன் வீணாதிவீணனுடைய கனவில் வந்து "அப்பா! விவகாரம் உனக்கு ஜயித்து எனக்கு ஜயிக்கவில்லை." என்று திருவாய் மலர்ந்தருளினாராம். என்றுரைத்தான்." அதற்குச் சொக்கலிங்கம்—

"சிதம்பரம் மற்றடிபார்ட்டுமெண்டுகளில் நடக்கும் அமல்களைப் பற்றிக் கவர்ன்மெண்டார் கவனிக்கிறது போலத் தேவஸ்தான சங்கதிகளைப்பற்றி அவர்கள் கவனிக்காதிருப்பதற்குக் காரணமென்ன? டிஸ்டிரிக்ட் போர்ட், முனிசிபாலிடி முதலிய டிபார்ட்டுமெண்டுகளில் கலெக்டருடைய சம்பந்தம் இருந்துகொண்டிருக்கிறதே. தேவஸ்தானங்களை மட்டும் கவர்ன்மெண்டார் ஏன் கையைக்கழுவி விட்டுவிட்டார்கள்" என்று வினாவினான். அதைக்கேட்டுச் சிதம்பரம்—

அதுவிஷயத்தில் கவர்ண்மெண்டார்பேரில் கொஞ்சம்கூடக்குற்றமில்லை. நாட்டையாளுகிறவர்கள் அந்நிய மதஸ்தர்களாயிருப்பதால் அவர்களுடைய மதக்கொள்கைக்குப் புறம்பான ஹிந்துமதஸ்தர்களுடைய தேவாலயங்களின் ஆளுகையில் தாங்கள் பிரவேசித்தால் ஹிந்துக்களுக்கு ஒருகால் அதிருப்தியாயிருக்கும் என்கிற கருத்துடன் ஹிந்துமத தேவாலயங்களை ஹிந்துக்களே மேல்பார்க்கஇடங்கொடுத்தது அவர்களுடைய அநுக்கிரகமே தவிர வேறன்று ஆனால் கமிட்டி மெம்பர்களும் மானேஜர்களும் இவ்விதமாக நடக்கவேண்டுமென்பதை வியவஸ்தை செய்து கவர்ண்மெண்டார் சட்டமொன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்துக்கு விரோதமாய் நடக்கிறவர்களை தெய்வந்தான் தண்டிக்கவேண்டியதே தவிர மனிதர்களுக்கு அவர்களைத்தண்டிக்க அதிகாரமில்லை. ஆடு நனைந்தால் ஓநாய்க்கு என்ன விசாரம். நீ சொன்னபடி கையைக்கழுவி விடுவதில் அதற்குத் தக்கவாறு ஒரு சட்டத்தையும் நிர்மாணஞ்செய்



துவிட்டுவிட்டார்களாம். மற்றச் சட்டங்களையெல்லாம் வருஷத்துக்கொருமுறை திருத்தம் செய்கின்ற கவர்ண்மெண்டாருக்கு இந்தச்சட்டத்தைப்பற்றி நினைப்பதே மிக்க கசப்பாக விருக்கின்றது. இப்பொழுதிருக்கிற ஸ்திதியில் இரண்டு திருத்தங்கள் செய்துவிட்டால் இந்தச்சட்டம் பூர்ணப் பிரயோஜனமுள்ளதாக ஆய்விடும். கமிட்டி மெம்பர்களும் மானேஜர்களும் தெய்வங்களுக்குப் பிரதிநிதிகளாயிருப்பதால் அபிஷேகம் நிவேதனம் முதலியன அவர்களுக்கே நடக்கவேண்டுமென்று ஒருபிரிவும் ஒருதரம் கமிட்டிமெம்பராய் நியமிக்கப்பட்டவர் எப்பொழுதும் கமிட்டி மெம்பராகவே இருக்கவேண்டுமென்கிற தாத்பரியத்தை உறுதிப்படுத்தி அவருக்கு மரணமும் கிடையாதென்று ஒரு பிரிவும் சேர்க்கப்படவேண்டும்" என்று சொல்லிக் கலகல வென்று சிரித்தான். அதற்குச் சொக்கலிங்கம்,

"சிதம்பரம் நீ சிரிக்கின்றாய். நீ சொல்வதைக்கேட்க எனக்குமிக்க துக்கமுண்டாகிறது. இந்த அநீதங்களை ஈசுவரன் எவ்வாறு பொறுத்துக்கொண்டிருக்கின்றார். அவராவது தக்கதண்டனை விதிக்கக் கூடாதா?" என்று கேட்டான். அதற்குச் சிதம்பரம்,

"சொக்கலிங்கம் ஈசுவரனென்ன லௌகிக விவகாரம் தெரியாதவரா. தானே தனக்குச் சம்பந்தமுள்ள விவகாரத்தில் ஜட்ஜியாயிருக்கக்கூடாதென்பது சட்டத்தின் முறையல்லவா? இந்த விவகாரங்களுக்கெல்லாம் சுவாமியே வாதியாய் இருக்கிறாரன்றோ? அந்த விவகாரங்களை முடிவுசெய்யவாவது அவருடைய எதிரிகளைத்தண்டிக்கவாவது அவருக்கு அதிகாரம் எப்படியிருக்கும். ? மேலும் அவருடைய சக்திகளெல்லாம் அவர்களுடைய பிரதிநிதிகளாகிய கமிட்டி மெம்பர்களுக்கும் மானேஜருக்கும் கிடைத்துவிட்டன. ஆகவே

"Functus Offices" என்று சட்டந்தெரிந்தவர்கள் பேசுகிற முறைப்படி சுவாமி அதிகாரமெல்லாம் ஒழிந்தவராக இருக்கின்றார் போலும்," என்று சொன்னவுடன் அதைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றொருவன்

"சொக்கலிங்கம் நீ எந்தச்சீமைக்குப் போயிருந்தாய்? ஒன்றும் அறியாதவன்போல் நீயும் கேட்டுக்கொண்டிருக்கின்றாய். புதிதான

கதை பேசுவதுபோல் சிதம்பரமும் பேசுகிறானே இன்றைக்குக் கோவிலில் பூஜையில்லை. சுவாமிக்கு எகாதசி விரதந்தான். எவ்வளவோ கொள்ளை போய்க்கொண்டிருக்கின்றது. ஒரு பட்டன் மூன்று பந்து புஷ்பங்களையும் ஒரு கட்டி சந்தனத்தையும் திருடிக்கொண்டுபோய்விட்டானாம். இந்தக் கொடிதான குற்றத்தை விசாரிப்பதற்காக இந்தப்பிராகாரம் முழுதும் போலீஸ் கான்ஸ்டேபில்கள் உலாவிக்கொண்டு நிற்கிறார்கள். அதுமட்டுமோ? அதோபார் துரை ஒருவர் மஹா யோசனையுடன் உலகம் முழுகிப்போவதைத் தடுப்பதற்கு வந்தவர்போல ரகசியமாய்ப் பேசிக்கொண்டிருக்கின்றார். இந்தக் கூக்குரலில் சுவாமிக்குப் பூஜையும் வேண்டுமா? அவரைச் சும்மா விட்டுவிட்டால் போதாதா? ஆலயத்திலிருக்கும் தூண்கள் இத்தனையென்று கணக்கிட்டு ஜாப்தா செய்வதற்காக அந்த அபூர்வ வித்தையைச் செவ்வையாக அறிந்த ஒரு வெள்ளைக்கார துரையை வரவழைத்து அந்த வேலையை முடித்ததற்காக அவருக்கு ரூபா நாலாயிரம் ஐயாயிரம் தேவஸ்தானத்திலிருந்து கொடுக்கப்பட்டதாம். இவ்வளவு செட்டுத்தனமுள்ள தேவஸ்தான அதிகாரிகள் மூன்று பந்து புஷ்பமும் ஒரு கட்டி சந்தனமும் நஷ்டமாகிறதாயிருந்தால் சகிப்பார்களா? சுவாமியோ பரமகருணாநிதி. அவருக்குக் கோபமே கிடையாது. ஐயோ அவர்படும் துயரத்தை நானென்னவென்று சொல்லுவேன். ஒருநாளிரவில் அர்த்தஜாமம் தர்சனத்திற்காக இந்த ஆலயத்துக்குள் வந்தேன். அப்பொழுது அலங்கார சமயமாக இருந்தது. தீபாராதனை நடக்கச் சொற்பநேரம் செல்லுமென்று அங்கிருந்தவர்கள் சொன்னபடியால் பிராகாரத்தில் ஒரு தூணின்மீது சாய்ந்துகொண்டு உட்கார்ந்தேன். கொஞ்சம் ஆபாசத்தினால் எனக்கு நித்திரைவந்து பிறகு விழித்துக்கொண்டு பார்த்ததில் தீபாராதனை முடிந்து அனைவரும் வெளிக்கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டதாக வெளியாயிற்று. அப்பால் என்னசெய்கிறதென்கிற கவலையுடன் பிராகாரம் முழுவதும் நான் சுற்றிவருகையில் பள்ளியறைக்குள் நடந்த சம்பாஷணை என் காதிற்பட்டது. பேசுகிறது யாரென்று நான் உற்றுப்பார்க்கிறபோது பேசிக்கொண்டிருந்தவர்கள் பரமேசுவரனும் உமையாளுமென்று தெரிந்தது. உடனே நான் பயபக்தியுடன் வாயைப் பொத்திக்



கொண்டு காதுகொடுத்துக் கேட்டேன்" என்று மயிர்க்குச்செறிந்து உடல் நடுங்க உரைத்தான். அதைக்கேட்டுச் சொக்கலிங்கம்

"அட அட! கந்தசாமி மிக்க மோசமான நிலைமையில் அகப்பட்டுக் கொண்டாயே அவர்கள் சம்பாஷணையை நீ உற்றுக்கேட்டது அபசாரமல்லவா? அந்தச் சம்பாஷணையின் வரலாறென்ன" வென்று சொக்கலிங்கம் கேட்க அதற்குக் கந்தசாமி.

"நான் அங்கே போகும்போது பேசிக்கொண்டிருந்தவள் உமையவள். அவள் பரமேசுவரனைநோக்கித் தேவதேவா இனிநாம் இங்கே இருப்பது உசிதமில்லை. வரவர நமது நிலைமை மிக்க கஷ்டமுள்ளதாக முடிந்திருக்கிறது என்றாள். அதைக்கேட்ட பரமேசுவரன் பார்வதி நம்முடைய இயற்கையானபதவி ஆனந்தமயமானது. நாம் அங்கமர்ந்திருக்கும் வரையில் எவ்வித துக்கத்தையும் அறிந்திலோம். தொத்து வியாதிக்குப் பரிஹாரம் செய்யமுயலும் வைத்தியன் நிலைமைபோலப் பலதுன்பங்களில் கிடந்துழலும் மானிடர்களுடைய குறைகளைத் தீர்க்கவேண்டி நாம் இங்குவர அவர்களுடைய துன்பம் நம்மையும் பாதிக்கின்றது போலும். ஒருபடி விதைத்துக் கலம் கண்டுமுதல் செய்வதுபோல ஒருவன் சிறியவினை செய்தால் அவ்வினைப் பலவாறாய்ச் சமைந்து அவனை வருத்துமென்பது மானிடர்களுக்கு நாம் வழுத்திய கட்டளை. அக்கட்டளை நம்மையே வருத்துகின்றதெனக் காண்கின்றது. ஒரு காலத்தில் நாம் நடுவனையும் அவனுடைய படர்களையும் முனிந்து சாடினோமல்லவா? அதற்குப் பிரதியாக அவர்கள் இயற்கையினும் அதிக வன்மைபூண்டு நடுவனே நட்டுவனாகவும் படர்களே பட்டர்களாகவும் அவதரித்து நம்மை இடைவிடாது கொல்லாமற் கொல்லுகின்றார்களென்று நினைக்கிறேன். ஐயோ தலைமாட்டில் இடிக்கும் அவலிடியைப் பொறுத்தாலும் பொறுக்கலாம். நமது நட்டுவனுடைய தவலடியை நம்மால் பொறுக்கமுடியவில்லை. கண்ணே பட்டர்களின் பான்மை நீயறியாததா? கஷ்டம் கஷ்டம்."

கலித்துறை.

பட்டருக்கஞ்சிப் பசியொழித்தோம் நம்பட்டாடையவர்
கட்டிக்கழிக்கக் குளிர்பொறுக்காது கல்லாயுறைந்தோம்
மட்டுக்குமேற்செலும் பேஷ்கார் கமிட்டிமணியமெனுந்
துட்டருக்கஞ்சி யிவ்வாலயம் விட்டுத்தொலைத னன்றே என்று

புகன்றனர். இதைக்கேட்டு உமையவள்

"தேவா, முப்புரத்தைச் சாம்பலாக நீற்றிய நெற்றிக்கண்ணும் திறக்கவொண்ணாது மூடிவிட்டதே. அஃது எவருடைய மாயமோ அறிகிலேன். காற்றோட்டமின்றி ஆலயத்துக்குள் புழுங்குவதற்குப் பரிகாரமாக உற்சவ சமயங்களில் வீதிகளில் பவனிவந்துகொண்டிருந்தோம். என்ன புதுமை. நம்மை அடித்து வெருட்டுவதுபோல ஒரே ஓட்டமாகக் கண்மூடித் திறப்பதற்குள் வீதிசுற்றி நம்மைக் கோயிலில் கொணர்ந்து சேர்த்துவிடுகிறார்களே. அதற்கென்ன காரணமென்று வினவினள்." அதற்குப் பரமேசுவரர்

"கருணையின் கருவாயமைந்தவளே! அதை நீ பொறுத்துக்கொள்ள வேண்டும். அதிகாரிகளின் மர்மமான அமல்கள் வெகுவாய் இருக்கின்றன. பவனி தாமதமாய் வந்தால் தீவட்டிகளுக்கு எண்ணெய் அதிகமாய்ச் செலவாகலாம். அதனால் தீவட்டிக்காரனுக்கு நஷ்டமல்லவா? அவனுக்கும் அதிகாரிகளுக்கும் என்ன ஒப்பந்தமிருக்கின்றதோ அதை நாம் அறியமுடியுமா? அது போகட்டும். நேற்றிரவில் உனக்கமைந்த அலங்காரம் மிகவும் மனோகரமாயிருந்தது. வடக்கே இருந்து தருவிக்கப்பட்டிருக்கும் நாகசுரக்காரனும் மிக்க நன்றாக இசைத்தனன். உனக்குப் பின்புறமாக அந்தணர்கள் செய்துவந்த வேதகானமும் மிக்க இனிமையாக இருந்ததே" என்றுரைத்தனர்.

அதைக்கேட்ட உமையவள்,

தேவ, நமக்கு நடக்கும் அபசாரங்கள் கணக்கற்றன. இந்த நிலைமையில் ஆடம்பரத்துடன் செய்யப்படும் உற்சவ விமரிசையெல்லாம் கசையடிபட்டவனுக்கு ஆலத்தி எடுப்பது போலிருக்கின்றன.



கலித்துறை.

1. கொட்டென்ன யானைகுடையென்ன நான்மறைக் கோஷமென்ன
பட்டுத் துகிலென்ன பொன்னணிபூணும் பவிஷுமென்ன
தட்டுப்பெருகப் பணியாரம் பூசகர் சாப்பிடயான்
திட்டப்படிக்கும் பிடிசோறு கண்ட தினமில்லையே.

2. பூவைப்பிடுங்கி வருவோர் கழுத்திற்புனைவரென்றன்
நாவிற்கினிதென்று காட்டாதுகொண்டு நடந்திடுவர்
சேவித்திறைஞ்சி மணியோசை மேளஞ் செவிடுபட
மேவிக்கொடுப்பதும் வாய்க்குதவாத வெறுங்கட்டியே.

இஃதென்ன கொடுமை. நாமெந்த ஊருக்குப்போனாலும் நமது கிரஹசாரம் நம்மை விடுகிறதில்லை. மிக்க புனிதமான க்ஷேத்திரமென்று காசியில் வசித்தோமே. அங்கு அபிஷேகம் பூஜை முதலியன வொன்றுமில்லாமற் போனாலும்போகட்டும். ஆசாரமற்ற அறிவிலிகள் கழுவாத கைகளால் என்னைக் கட்டிக்கொண்டு பாராட்டும் அலங்கோலங்களைத் தாங்கள் சகிக்காமல் வேறிடம் போகலாமென்றீர்கள். உடனே கஞ்சிக்காசைப்பட்டுக் கொண்டு நீங்கள் ஒற்றைத் துணியுடன் புறப்படப் பார்க்காததெல்லாம் பார்க்கலாமென்கிற ஆசையைக் கண்ணில் வைத்துக்கொண்டு நானும் வந்தேன்.

அவ்விடத்தில் மாமரத்தடியின்றி நாம் அமர்வதற்கு வேறு இடம் கிடைக்காவிடினும் அங்கேயாவது ஓர் இடுக்கணுமின்றிப் பொழுதுபோக்கலாமென்றெண்ணினோம். அப்பப்பா! சைவர்களை நம்பியா நாமிருக்கின்றோம். அல்லது வைணவர்களுடைய வண்மையினாலா என் அண்ணன் மதுசூதனன் வாழ்கின்றான். இரண்டு ஊர்க்காலி மாட்டுக்காரர்கள் என்னுடைய மாடு உன்னுடைய மாடு என்று சச்சரவு செய்துகொள்ள மாடுகள் கல்லெறிபட்டுச்சாவது போல் சைவ வைணவச் சண்டையில் கிஞ்சித்தேனும் பற்றில்லாத நாம் சைவர் வைணவர்களாலடைந்த துன்பம் எவ்வளவு? இரண்டு பிள்ளைகள் ஆஸ்திகளைப் பங்கிட்டுக்கொள்ளும்பொழுது தாயார் என் பங்குக்கு உன் பங்குக்கல்லவென்று சொல்லி அவளை மிக்க

அன்புகூர்ந்து இருவரும் இழுத்து அவள் கை கால்களை ஒடித்து வருத்தப்படுத்துவதுபோல என் அண்ணனுடைய பிழைப்புத் தென்கலை வடகலைச் சண்டையாக மிக்க சங்கடமுள்ளதாகத் ஆயிற்று. நமது துன்பத்தை பொறுத்தாலும் பொறுக்கலாம், அவருடைய மரணாவஸ்தையைப் பார்க்க மனம் சகியாமல் ஒடி முள்ளுக்காடாயினும் தில்லைக்காடு ஒதுக்கமாயிருக்கிறதென்று எண்ணி அவ்விடம் சென்றோம். இனி ஊரூராய்ச் செல்லும் காற்றாடிப்பிழைப்பு வேண்டாம். கூத்தாடிப்பிழைப்போடாயினும் ஓரிடத்தில் அமர்ந்திருக்கலாமென்று நினைத்தோம், ஓடிஆடிக் கால்கடுக்கத் தாசி சம்பாதிக்கும் பணத்தைக் கூடிப்பாடி நட்டுவர்கள் பெரும்பாகம் பங்கிட்டுப் பெற்றுக்கொள்வதுபோல நமது சம்பாத்தியம் நமது கைக்கு வரவில்லை. அதை வாங்குவதும் கொடுப்பதும் தீட்சிதர்கள். அவர்கள் நமது சிவகணங்களின் சந்ததியார்கள்தாம். அதில் குறைச்சலில்லை. ஓயாது கூத்தாடும் பெருமைதானே நம்முடையது. விலாப்புடைக்க உண்ணும் சோற்றுப் பெருமை அவர்களுடையதாயிற்றே. அவ்வூரை அகற்றிப் பாலை வனம்போன்று சோலையில்லாத மூலையொன்றில் போயிருந்து நோய் பிடித்தார்க்குத் தாங்களும் பேய் பிடித்தாருக்கு நானும் பரிகாரஞ் செய்துகொண்டு நாம் பிழைத்த பிழைப்பு எம்முறையாயிற்று? உண்டில் குடம் மாத்திரம் நமது பெயரால் பதிவு. அதில் விழும் பணத்துக்கெல்லாம் பண்டாரம் பாத்தியஸ்தன். அவனென்ன பாடுபடுத்தினான். நமது க்ஷேமத்தைப் பாதுகாப்பதற்கு அவன் தர்மகர்த்தாவாம். நீ காட்டைக் கரியாக்கி விடுவை. நான் வெகு சரசமாகச் சீனிப்பட்டாசு வாங்கிச் சுட்டு முதலாக்கிவிடுகிறேன். என்றுரைப்பதுபோல அவன் நமது சம்பாத்தியத்தை அசல் அப்பீல், ஸ்பெஷல் அப்பீல் முதலிய உற்சவங்களுக்குச் செலவிட்டுதீ தங்களுடைய வைத்திய தொழிலுக்கிணங்க எல்லாவற்றையும் பஸ்மமாக்கிவிட்டான். அந்த பஸ்மமும் அவ்வூரில் பேய் பிடித்த மங்கையர்கள் தங்களையும் என்னையும் நமது செல்வக்குமாரனையும் திட்டிப்பொசுக்கி ஆக்கிய பஸ்மமும் தான் நமக்கு மீதம். நமது குழந்தை குமரனுடைய தங்கவேலும் இரத்தின கவசமும் வெள்ளிக்குடமும் மாயமாக மறைந்துவிட்டன. அந்தமர்மம் தெரிந்த தம்பிரானும் வக்கீலும் ஓசைப்படாமற் பரலோக



யாத்திரை போய்விட்டார்கள். அப்பால் கமலாலயத்தின் புறம் வாழலாமென்று வந்தோமே. அங்குத்தேரோட்டத்தில் நாம் பட்ட ஆராட்டத்தை நினைக்க இன்னும் மனம் நடுங்குகின்றதே. அவ்வூர் கமிட்டியின் சண்டையாலல்லவோ நாம் உபவாசம் பழகி மண்ணாகச் சமைந்துவிட்டோம். பிறகு மற்றோர் ஊர்வந்து பட்டபாடு கணக்கற்றது. அந்த ஊரிலிருப்பவர்களெல்லாம் பரமசாதுக்கள். அவ்வூரின் பெயரைச்சொல்லிக்கொண்டாலே மனிதனுக்கு வேறு யோக்கியதா பத்திரம் வேண்டுவதில்லை. உழக்கில் கிழக்கு மேற்கு பார்ப்பதுபோல அவ்வூரார்க் கும்பத்திலும் கோணத்தைக் கற்பிக்க வல்லவர்கள். அங்கு நமது ஆலயத்துக்கு வடபுறமுள்ள புண்ணிய வீதியில் தினம் தினம் நடந்து வந்த அற்புதங்களையெல்லாம் பார்த்துப்பார்த்துப் பொறுத்தோமே. ஆலயமே எல்ல வியாபாரமும் நடக்கும் சந்தைக்கடையாயிற்று. அதன் இரைச்சல்தாங்க முடியாது. பின்னர் ஐந்து நதிக்கரையில் அமரவந்து நாம் பெற்ற வெகுமானம் அநந்தம். தங்கள் கட்டளைகொண்டு நான் அறம் வளர்க்க முயன்றேன். நதியின் கரையாகையால் அங்கு மரமொன்று தான் வளர்ந்தது. நமக்கு அன்னமே பஞ்சமானது பற்றியோ தாங்கள் பஞ்சநதர் என்ற பெயரை வகித்தீர்கள். இவ்விதம் நாம் பட்டதாபமெல்லாம்தீரத் தண்ணீரில் மூழ்கியாயினும் பிழைத்திருக்கலாமென்று ஓர் ஆனையின் காவல்பெற்று அச்சிறிய ஊரில் சிலநாள் அமர்ந்தோம். அங்கே சிலர் ஆலயத்தைப் புதுப்பிப்போமென வந்து இருந்த ஆலயத்தை இடித்துத்தள்ளி நமக்கு நிற்க நிழலின்றியும் சாயச் சுவரின்றியும் புரிந்துவிட்டார்கள். இவ்வறுமையெல்லாம் நீங்கி நெல்லே வேலியாக அமைந்த அவ்வூரில் வேளாவேளை உணவாவது கிடைக்குமென்கிற திண்ணத்துடன் அங்கேபோய்ச் சேர்ந்தோம். அந்நாட்டிலேயே மூன்று வேளையையும் ஒரேவேளையாயடக்கிச்சாப்பிடுகிற சம்பிரதாயமாம். நமக்கிடப்பட்ட விருந்தும் அப்பான்மையுடையதுதான். இந்த வைபவத்தில் நரிக்கூச்சல் கடல்முட்டுவதுபோலச்சைவஸ்மார்த்தச் சண்டை நமது பள்ளியறைக்குள்ளும் நுழைந்துவிட்டது. நாம் அங்கேபோனவேளை வேளாளர்களெல்லாம் சைவியர் ஆகிவிட்டார்கள். க்ஷத்திரியர்களை வெகுநாட்பாராமலிருந்து அங்கேதான் அவர்களைக் கண்குளிரப்பார்த்தோம்.

தங்களை ஒரு வேளாளப் பிரபுவாகவும் என்னையும் ஒளிநிறைந்த ஆச்சியாகவும் ஆக்கிவிட முயன்றார்கள். தேவாரம் திருவாசகம் குற்றமறக்கற்று வடமொழியின் வாசனையெல்லாம் முற்றிலும்மறந்தோம். ஒருகால் நமக்கு இயற்கையான பிராம்மன்யப்பழக்கம் மறந்துவிடுமோ என்கிற ஐயத்தினால் இவ்வூரில்வந்து சிலநாள் குறைவற வாழ்ந்தோம். இங்கும் நம்கலி நம்மை விடவில்லை. தேவா! சர்வாந்தரியாமியென்றால் ஊர்ஊராய் அலைந்து பாடுபடுவது என்பதுதான் பொருளோ? இங்கே மிக்க பணக்காரியென்கிற பவிஷையுமடைந்தேன். இப்பால் நடந்திருக்கும் விந்தையை இனி யாருடன் சொல்லுகின்றது. பொய்யன்றி மற்றொன்றும் அறியாதவன் நமக்கு மெய்காவல்காரனும். வருஷா வருஷம் நமது குடித்தனத்தில் அகப்பை, அரிவாள்மனை, செம்பு, தவலை, கொட்டாங்கச்சிமுதலியன களவுபோய்க்கொண்டிருந்தன. போலீஸாருக்குப் பயந்துகொண்டு அதை வெளியில் புகலாதிருந்தோம். இவ்வருஷத்தில் என் தலையணியும் தாலியும் களவுபோயினவே. என் சொத்து முழுவதும் என் பிறந்தவீட்டுச் செல்வமாகையால் அதிலிருந்து எனக்கு மறு தாலி செய்யக்கூடாதென்றும் தாலிகட்டவேண்டிய தாங்களே எங்கே பிச்சையெடுத்தாவது எனக்குத் தாலி புனைவிக்கவேண்டுமென்றும் தேவஸ்தான அதிகாரிகள் உத்தரவு செய்துவிட்டார்களாம். இனி நான் என்ன செய்கிறது? பணத்தை வாரி இறைத்துக்கொண்டிருக்கின்றார். அவர் பேசுவதெல்லாம் மிக்க வினயமாயிருந்தாலும் இந்தக்கழுதைகள் கையில் அவர் எப்படியோ அகப்பட்டுக்கொண்டிருக்கின்றார். அவர் தேகம் சவுக்கியமில்லாதிருந்ததாகவும் அவருக்கு ஒரு பெண்பிள்ளை இவ்விடத்தில் வைத்தியம்செய்து அவருக்கு மிகவும் அனுகூலமாக விருப்பதாகவும் கேள்விப்பட்டேன்" என்றுசொன்னவுடன் மிக்க நேரமாகிவிட்டதென்று சிதம்பரம் சொன்னபடியால் அம்மூவர்களும் தங்கள் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

### கலித்துறை.

கூலிக்குழைப்பவரேனுங்கழுத்திற்கொழுநனிட்ட
தாலிக்களவுகொடுத்தவர்யாரிந்தத்தாரணியைப்



பாலிக்கவந்தென்றிருமங்கலியம்பறிகொடுத்த
கேலிப்பிழைப்பினையாரிடஞ்சொல்லினுங்கேவலமே.

ஒரு சங்கமா என் கர்ப்பக்கிருகத்தில் எண்ணெய் விடாத விளக்கை எவ்வளவுகாலம் நான் எரித்துக்கொண்டிருப்பேன் நான் வாழ்ந்த வாழ்வுக்கு அங்குவரும் கைம்பெண்கள் கொணர்ந்துவிடும் நெய்யைச் சிறுகச்சிறுகச் செலவழித்து என்வீட்டின் விளக்கு எரிகிறது. அந்தக் கம்மிட்டி மெம்பர் ஒரு சமயம் என் சன்னிதிக்கு முன்வந்து இரைச்சல் போடும்பொழும் பொழுது அந்த விளக்கும் பசக்கென்று அணைந்து விடுகிறதே. என் வீட்டில் பகலிலும் அமாவாசை இருள் திரண்டதுபோல் அந்தகாரமாய் இருப்பதால் வெளியில் ஓடிப்போகலாமென்றாலும் பயமாயிருக்கின்றது. ஒரு செப்புதண்ணீரை என்மேலே விட கொட்டுக்குலவையுடன் நான் செபடுத்தனமாய் கட்டிமகிழ்வது ஊசிவாணப்புடனேவ ஸ்தானீகர்களும் அதிகாரிகளும் மகா இரசிகர்களாகையால் இங்குவரும் கூத்தாடிக் குரங்கோட்டி வேசை முதலியோருக்கு எனது பட்டுப்புடவைகளைப் பரிசுகொடுத்து கட்டத் துணியற்றவளாக என்னை ஆக்கிவிடுகின்றார்களே என்று பரிதாபமாகப் பேசிக்கொண்டிருக்கையில் வேறொருவர் அங்கு வந்துசேர்ந்தார். அவரைப்பார்த்து பரமேசுவரன்

அப்பா, கணபதி எங்கே போய்விட்டாய், அவர்கள் சோறிடும் வேளையில் நாம் இருந்து உண்ணவேண்டாமா என்று வினவினர். அது கேட்டுக் கணபதி

ஐய, நான் எங்கிருந்தாலென்ன, இவ்வாலயத்தில் நான் பசிபொறுக்காது கண்மூடி உறங்கினாலும் அவர்கள் என்னைச் சும்மாவிடுகிறதில்லை. அடிக்கடி மணியொன்றையடித்து என் எழுப்பி என்பசியையும் கிளப்பிவிடுகிறார்களே தவிர நான் உண்ணுவதற்குக் காற்றுக்கூட அகப்படாதபடி என்னை உள்ளே அடைத்துக கதவை இறுக்கிப் பூட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள்.

### கலித்துறை.

பூசைஇங்கேதுபணியாரம்பாற்குழம்போர்திவலைங்
காசைப்படுவதில்காரியமில்லைஇவ்வாலயத்தினில்

வேசையும்யானையும்மானேசரும்கொட்டுமேளமும்செய்
ஓசையைத்தாங்கமுடியாமல்ஒகுஒளிந்திட்டனே.

நான் செல்வமாக வளர்ந்தநாள் தொலைந்துவிட்டது. இவ்வாலயம் ஸ்ரீ சக்கிரத்தைக்கொண்டு அமைக்கப்பட்டதாகையால் என் அம்மை அருகிலிருந்து ஞானப்பிரதனாகவும் அவள் தலைவாயிலில் இருந்து ஸம்பத்பிரதனாகவும் அவளுடைய பொய்கைக்குக் கீழ்புரம் இருந்து மோதகப்பிரதனாகவும் அப்பொய்கைக்கு மேல்புரம் இருந்து சித்திப்பிரதனாகவும் என் அம்மையின் வலதுபக்கம் இருந்துகொண்டு ஸந்தானப்பிரதனாகவும் அவளுடைய வெளிக்கூடத்தில் தென்மேற்கு மூலையில் அமர்ந்து இரணவிமோசன பிரதனாகவும் என் அம்மைக்கும் தங்களுக்கும் இடையில் அமர்ந்துகொண்டு பிரகிருதி மண்டலத்தைவிட்டு சிவகைவல்யத்தைச்சேர வருவோருடைய முக்குணங்களின் சம்சகாரங்களின் அகற்றி அவர்களுக்கு அருள்புரயும் ஜயப்பிரதனாகவும் இம்முறை எழு வடிவாயிருந்து எழு வயிறுகளும் நிறைய உண்டுகளித்து வந்தேனே அந்தக்காலமெல்லாம் போம் ஒரு வயிற்றுக்குக்கூட அன்னம் ஜவ்வாதுபோல மிக்க அருமையாகிவிட்டது, 'பசி பாவமறியாது' என்னும் வசனப்படி இஇவூரில் சில மேளகாரர்கள் பர் ஆலயம் அமைத்து அங்கு என்னை வந்திருக்கும்படி அழைத்தார்கள், ஹூகாணுமிடம் சொர்க்கம். நாய்விற்ற காசுமா குறைக்கும், என் வயிறு உணவளித்து என்னைப் பக்தியுடன் உபசர்த்தார்கள், சிலகாலமாய் அதினலல்லவோ உங்கள் தலைப்பிள்ளையாகிய நான் உயிர்தரித்திருக்கின்றேன். 'ஆழாழுகரையின்றி நிற்கவிலையோ கொடியவால மழுதமர்கவிலையோ' என்பது முதலிய பாடல்களால் தங்கள் சௌரியத்தை வியந்து பேசுகின்றார்களே, 1863 வருஷத் 20 சட்டமல்லவோ நமது குடித்தனத்தையும் என்னை அம்பாள் இவ்வளவு குடித்தனத்தையும் அலங்கோலப்படுத்தியிருக்கின்றது. அந்தப் பாழான சட்டத் தாக்களாவது மாற்றிவிடக்கூடாதா என்று வினவினர். அதற்கு பரமசிவன்

"அப்பா நீ சொன்னது முற்றிலும் உண்மைதான். நான் கையாலாளமட்டும் பார்த்தேன். கடன் வாங்கியும் பார்த்தேன். சரிப்படவில்லையே.



விருத்தம்.

கனல்குளிரப் புனல் எரியப் புரிவோம் ஆழ்ந்த
கடலினையும் மேடாகக் கற்பிப்போம் யாம்
தினகரனைத்தென் றிசையிலுதிக் கச்செய்வோம்
சீர்மறையை மாற்றியுரை செய்வோம் அல்லை
மனமுவக்கும் பகலாகப் புரிவோம் எல்லாம்
வாய்ந்திருந்தும் பயனென்றேவஸ்தானத்திற்
கெனவமைந்த சட்ட மதை மாற்ற நம்மால்
ஏல விலை என் செயலாம் இனிய மைந்தா.

இது கேட்ட கணபதி

"ஐப! அப்படியானால் நமக்குப் பிழைப்பென்ன? இச்சட்டந் தொலைந்தாலொழியக் கமிட்டிகளும் ஒழியப்போகிறதில்லை. அவர்கள் இருக்கும் வரை நமது பாடு விடிவதுமில்லை. என்னம்மான்கள் இருவர் பாடும் மிக்க பரிதாபமுள்ளது. உள்ளூர் மாமன் ஒரு வம்புமறியாத ஏழை. அவருக்கிடுவது கூழாயினும் அமுதம்போல் உண்டு மௌனமாயிருப்பதால் அவர் பேச்சு வெளிக்கு வரவில்லை. அவரும் இருக்குமிடம் தெரியாமல் ஒரு மூலையிலிருந்து காலத்தைக் கடத்துகிறார். மற்றோர் அம்மான் கொண்டிருந்த ஆடம்பரமெல்லாம் கமிட்டிகளும் மானேஜரும் வர முற்றிலும் அடங்கிவிட்டன. அவரும் கள்ளவேஷம் புனைந்து சம்பாதித்த திரவியமெல்லாம் கொள்ளைபோய்க்கொண்டு இருக்கின்றன. கடைசியாய்ப் பதினெட்டாம்படியின் கூட்டுறவையடைந்தும் அவருடையக் கமிட்டிமெம்பர்கள் சும்மா விடுவதில்லை. வருஷத்தில் மூன்று நாள் வம்பிற் கட்டி யடிப்பதுபோல அவர்கள் அவரைக் காடுமேடு எல்லாம் இழுத்தடித்துக் கோவில் கொணர்ந்து சேர்ப்பதால் அவர் தலையெடுக்க முடியவில்லை.

இனி யாம் செய்யத்தக்கது யாது? குற்றாலத்துக்கு ஓடிப் பிழைக்கலாமா? அல்லது கொடுமுடியிற் போய் மறையலாமா? அல்லது குறையெல்லாம் தீர யாம் நம் கைலையங்கிரி போய்ச்சேர்ந்து நமது பாட்டைப் பார்த்துக்கொண்டிருக்கலாமா"? என்று சொல்

கிக்கொண்டிருக்கையில் என் மனமறியாமல் எனக்குத் தூம்மல் வந்தது. நான் சலீரென்று தும்மவும் பரமசிவனும் உமையவளும் கணபதியும் சடுதியில் திரோதானம் ஆகிவிட்டார்கள். பிறகு விடியற்காலமாய்க் கதவு திறக்கப்பட்டபடியால் நான் ஒருவருக்கும் தெரியாமல் வெளியேறி என் வீடுவந்து சேர்ந்தேன்" என்றான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த சொக்கலிங்கம்

"கந்தசாமி! நீ சொன்னது மிக்க புதுமை. இப்பெண்பிள்ளைகள் யார்? அவருடன் பேசிக்கொண்டிருக்கும் அந்த மனிதன் யார்? உனக்குத்தெரியுமா? என்று வினவினான். அதற்குக் கந்தசாமி

"சொக்கலிங்கம்! நான் விஜாரித்தேன். அப்பெண்பிள்ளைகள் மலையாளம் அச்சிகள். பார்ப்பதைக்கொண்டே விளங்கவில்லையா? அந்த மனிதன் பெரிய ஸ்ரீமான். அவர் ஏதோ உடம்பு சௌக்கியமில்லாமல் இங்கே வந்து ஒரு பெண்பிள்ளையிடத்தில் வைத்தியம் பார்த்துக்கொண்டு இருப்பதாக வெளியாயிற்று. நாழிகையாய்விட்டதே நாம் வீட்டுக்குச்செல்லலாம்." என்று சொல்லச் சிதம்பரமும் கந்தசாமியும் அவ்வாறு செய்யலாமென்று இணங்க அம்மூவரும் தங்கள் தங்கள் வீடு போய்ச்சேர்ந்தார்கள்.

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

உ

# வந்தேமாதரம்.

## பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

# தமிழ் முதுமொழியின் தளர்ச்சியும் வளர்ச்சியும்.

"மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர் தம் பெயரை நாட்டி இலக்கணம் செய்யப் பெற்றே
அறைகடல் வரப்பிற் பாடை அனைத்தும் வென் றாரியத்தோ
டுறழ்தரு தமிழ் தெய்வத்தை உள் நினைந் தேத்தல் செய்வாம்'

"நம்மை ஒருஜாதியார் என்றும்,ஒருகட்டுக்கடங்கியவரென்றும் யோக்கியர்களென்றும், தேசாபிமானிகளென்றும் காட்டக் கூடியதும், நமது முன்னோர்களின் அருமை பெருமையை நாம் அறியவும், நமது காரியங்களை நமக்குப் பின்னால் வருபவர் அறியவும் ஏதுவாயுள்ளதும், நமது சொந்த பாஷையே." இவ்வுண்மையை ஓர்ந்து மேற்றிசை யோரும், கீழைத் திசையாராகிய ஜப்பானியரும், தத்தம் பாஷைகளை எவ்வளவோ கௌரவமாகப் பொன்போற் போற்றி அபிவிருத்தி செய்துவர, நம்மவருட் பெரும்பான்மையோர், தேசாபிமானமும் பாஷாபிமானமும் இல்லாராய்த் தமது தாய்ப் பாஷையாகிய அமிழ்தினுமினிய தமிழ் முதுமொழியை அநாதரவு செய்து, "நறுவிய வாயினவேனும் உமிழ்ந்து கடுத்தின்னும் தீய விலங்கு"கள் போன்றும், "திருவினு நல்லாள் மனைக்கிழத்தியேனும் பிறர் மனைக்கே பீடழிந்து நிற்பார்" போன்றும், கேவலம் உத்தியோக பதவி, பொருளீட்டல் முதலியனவே கருதி அந்நிய பாஷைகளாகிய ஆங்கிலமாதிய கற்று வருவது காலக்கொடுமையோ? ஞாலக் கொடுமையோ? அறியேம்!

ஆ! ஆ!! தங்கள் கையெழுத்துக்களைக் கூடப் பிழையற எழுதத் தெரியாதார் எத்துணை பேர்கள் இருக்கின்றார்கள்! தமிழ்ப் பாஷை தெரியாமல் இருப்பது தங்களுக்குப் பெருங் கௌரவமென்

றும் எவ்வளவுக்கெவ்வளவு அது தெரியவில்லையோ அவ்வளவுக்கவ்வளவு தங்களுக்கு ஆங்கில பாஷாஞானம் அதிகமாக உண்டென உலகு நினைக்கும் என்றும் எண்ணும் பேதைமாக்கள் எத்தனை பேர்கள்! தமிழிற்பேசினும் முக்காற்பங்கு இங்கிலீஷும் காற்பங்குதமிழுமாக மணிப்பிரவாள நடையிற் பொழிந்து தீர்த்து,ஹாஸ்யரஸம் அனுபவிக்கச் செய்வோர் எத்தனைபேர்கள்! "சரித்திரங்களையும் சாஸ்திரங்களையும் தமிழில் மொழி பெயர்க்கலாம் என்றால் சில விஷயங்களை அறிவிக்க ஏற்ற மொழிகள் கண்டுபிடிப்பது கஷ்டமாய் இருக்கிறது" என்று சொல்வதற்கு "ஹிஸ்ட்ரீஸ்களையும் ஸயன்ஸ்களையும் டமில் லாங்குவேஜில் டிரான்ஸ்லேட் பண்ணலாம் 'நா' செல திங்ஸ்களை எக்ஸ்பரஸ் பண்ண டெக்கினிகல் டர்ம்ஸ்களை ப(f)யிண்ட் அவுட் 'பண்றது' 'ரொம்ப' டிபிகல்டாக இருக்கு" என ஒரு சாரார் சொல்வர் என்ற ஓர் புலவர் வாக்குப் பொய்யின்றே. சில வருடங்களுக்கு முன்னர், மதுரை அமெரிகன் மிஷன் உயர்தர வித்யாசாலையில் இருந்த பாலதிராவிட சங்கத்தின் வருஷோத்ஸவ தினத்தன்று மதுரை வாசியாகிய ஓர் பிரபல வக்கீல், எழுந்து "சேர்மேன் அண்ட் கனவான்களே! இங்கிலீஷ் மிக்ஸ் பண்ணாமே இந்த லிட்டில் பெ(f)லோஸ், நே, எங்மென், அதாவது சிறுவர்கள் என்ன ஸ்பீச் கொடுக்கறா! நம்ப ரெண்டு வேர்ட்ஸ் கூட கண்டினுவஸாப் பேசறது எம்பிட்டு இம்பாஸிபிளா ருக்கு! வாட் டு யூ திங்? என்னைப்போல் டிபிகல்டி எக்ஸ்பீரியன்ஸ் பண்ணியிருக்கிறவா இந்த அஸம்பிளிலே இருப்பாளே. அவாளுக்கு என் வோர்ட்ஸ் ட்ரூ என்று படும். . . ." என்று இவ்வாறு பலர் கரகோஷம்செய்ய அரைமணி நேரம் பிரசங்க மாரி பெய்தவிஷயம் யாமறிவோம். இவராவது தமது அறியாமையையும் சக்திக்குறைவையும் கௌரவமாக ஒப்புக்கொண்டு தமிழை அபிவிருத்தி செய்யத்தவறியதற்காக விசனித்தனர். இன்னுஞ் சிலரோ, தமிழைப்பெரிதும் உபேக்ஷைசெய்து வாயில்வந்தபடி கேவலமாகஇழித்துக்கூறி தமிழ்மட்டும் கற்றவர்களோடு பேசவும்நாணுவர். இப்புண்ணிய புருஷர்களை "என்ஐயா தமிழினிடத்து இவ்வளவு அருவருப்புஎன்று கேட்டால், அவர்கள் "தமிழுலே என்னருக்கு?" என்று வாய்கூசாமற் சொல்வர். "தமிழில் என்ன 'ஐயா இல்லை?', என்றால் அதற்கு உத்தரம் சொல்லார். சிறிது வற்புறுத்திக் கேட்டாலோ "என்ன இல்லையா! ஒன்னுமில்லே" என்று நீட்டிமுழக்கி அடித்தொண்டையோ டலறுவர். அதிகமாக வற்புறுத்திக்கேட்க ஆரம்பித்தாலோ "நேக்குவேண்டாம் ஒந்தமிழ் நீயே வச்சுக்கோ" என்று (விடையளிக்க விழித்தோடும் கிறிஸ்தவ உபதேசியார்களைப்போல்) இருந்த இடம்விட்டு எடுப்பார் ஓட்டம். ஆத்திச்சூடி கூடப் படித்திரா அநேகர் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் தம் ஊத்தை வாய்திறந்து பழுதுகூற முன்வருவது எவ்வளவு மௌடீகம்?



ஆ! ஆ!! தொன்று தொட்டுச் சீரும் சிறப்பும்பெற்று, அறம் பொருள், இன்பம் வீடு என்று ஆன்றோரால் மேலாகக்கூறப்பட்ட நாற்பொருள்களையும் அடைவதற்கேதுவாய் உள்ள எண்ணிறந்த நூற்பெருக்கத்தையுடையதும், கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய பாஷைகளுக்குப் பெற்றோர் நிலைமையிலிருந்து பேருதவி புரிந்துவரும் பெருமையை யுடையதும், திராவிடதேச முழுதும் ஏக சக்கிராதிபத்தியம் செலுத்திவந்ததுமான நம்தமிழ் அணங்கு, இக்காலத்தில் க்ஷீணதிசையடைந்து, பெரும்பான்மையாராற் போற்றப்படாது நிற்றற்கும் முதற்காரணம், அவளது அருமை பெருமை பழமை முதலியன, அநேகர் அறியாதிருத்தலேயாம். ஆதலின், இனி யான் என் சிற்றறிவு கொண்டு கற்றறிந்த தமிழின் வரலாறு கூறுகின்றேன்:—

## "தமிழ்" என்னும் பெயர்.

"தமிழ்" என்ற பதத்திற்கே ஒருசரித்திரம்உளதெனில் அப்பாஷையின் சிறப்பை என்னென்று எடுத்துரைப்பது? "தமிழ்" என்ற சொல்லுக்கு முடிவும் பொருளும் பலர் பலவாறு கூறுவர்:—

1. பிரயோக விவேக" த்தார் "திமளம்" என்பதன் திரிபு "தமிழ்" என்பர்.

2. சென்னை இராஜதானிக் கல்லூரியிற் பாஷாவிற்பன்னராய் இருந்த ஸ்ரீ சேஷகிரிசாஸ்திரியார் போல்வார் "பிரயோக விவேக" த்தாரது கூற்றை ஆதாரமாகக்கொண்டு, திராவிடம் என்னும் பதமே திரமளம் என்றாய், பின் அது திமளம் என்றாய்க் கடைசியில் தமிழ் என்றாயிற்று என்பர்.

3. கால்ட்வெல் பாதிரியார் தமிழ் என்பதும் திராவிடம்என்பதும் திரமளம் என்ற மொழியினின்றும் தோன்றியவை என்பர்.

[இம்மூவரது கூற்றும் ஒப்பத்தக்கனவல்ல. ஏனெனில், தமிழ் வழங்கிய இடத்தில் தமிழ்க்கோர் பெயர் இருந்ததில்லை என்று சொன்னால், யார் தாம் ஒப்புவார்? அன்றியும், தமிழில் "தமிழ்" என்னும் பதம் வருவதற்குமுன் "திராவிடம்" என்ற ஆரிய மொழி இருந்திருக்குமானால், அப்பெயர் எப்பொருளை உணர்த்திற்று? இன்னும் பார்ப்போம்; ஒன்றன் பெயர், அது வழங்கும் இடத்தில் தான் பிறந்திருக்கக் கூடுமேயன்றி, அஃதில்லாப் பிறிதொரு தேசத்தே பிறந்திருக்கக் கூடும் என்பது இம்மியும் பொருந்தாதே.]

4. ஒரு சாரார் "தமிழ்" என்னும் பதம் தான் "திராவிடம்" என்றாயிற்றேயன்றி, திராவிடம் என்பதன் சிதைவு அன்று "தமிழ்" எனச் சாதிப்பர்.

[இவர் கூறுவதும் சரியெனக் கொள்ள முடியாது. ஏனெனில் திராவிடம் என்னும் பதம் தேசத்தைக் குறிக்குமேயன்றி பாஷையைக்குறிப்பதன்று. திராவிடம் என்னும் பதம், "ஓடிவளைந்த" எனப் பொருள்படும் "த்ரா" என்னும் அடியாப் பிறந்து, மகாநதி முதல் கோடிமண்டலம் வரை ஓடி வளைந்த பூமியை உணர்த்தும்.]

5. "தமிழ்" ',தென்மொழி" யின் திரிபாக இருக்கலாம் என்று ஊகிப்பர் ஜி. யூ. போப்பையர்.

[ஒரே நாட்டில், வடக்கிலும் தெற்கிலும் வழங்கிவந்தகாரணத்தால், ஆரியமும்தமிழும் முறையே வடமொழி, தென்மொழி என்னப்பட்டன. ஆதலின், தமிழ், ஓர் தென்மொழியேயன்றி 'தென்மொழி' என்பதன் சிதைவு என்று கொள்ளுதல் பொருந்தாது.]

6. தமிழ் என்பது தமி என்னும் அடியாகப் பிறந்து ழகர மெய்யை எழுத்துப் பேறுக்கொண்டு தமிழ் என்றாயிற்றென்றும் தமி என்ற பதத்திற்கு "ஒப்பற்றது" எனப் பொருள் என்றும் அது ஆகு பெயராய் "ஒப்பற்றபாஷை" எனப் பொருள்படும் என்றும் கூறுவர் வேறுசிலர்.



7. •தமிழ் என்பதற்கு "அறியாமை நீக்குவது" எனப்பொருள் என்றும், அது ஆகு பெயராய் தமிழ்ப் பாஷையை உணர்த்திற்றென்றும் கூறுவர் பின்னும் சிலர். (இவர்க்கு, இவ்வாறு கூறற்கு ஆதாரம் யாதோ?)

8. மற்றும்சிலர், "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்ற பிங்கலந்தைச் சூத்திரத்தை ஆதரமாக்கொண்டு தமிழ் என்பதற்கு இனிமை எனப் பொருள் என்றும், அது பண்பாகு பெயராய் இனியதமிழ்ப்பாஷையை உணர்த்திற்றென்றும்கூறுவர். இதுவேஎனது கருத்தும். (தமிழ்இனிமைப்பொருளில்வருதற்குதாரணம்,சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், புறநானூறு, பெருந்திரட்டு முதலியவற்றிற்காண்க)

9. தமிழைத்தவிர இந்தியாவில் வழங்கும் வேறு எப்பாஷைக்கும் ழ என்ற எழுத்து இல்லாததால், தமிழ் என்பதை தமி+ழ் எனப் பிரித்து, தமி என்பதற்குத் தனித்த (அதாவது வேற்றுமொழிகட்கில்லாத), ழகரத்தைத் தனக்கே யுடையதெனக் கூறு நிற்பர் இன்னும் சிலர்.

10. முது நூலாசிரியர், பாஷை சம்பந்தப்பட்டமட்டில் தமிழ் என்னும் பதத்தைப்பற்றிய எவ்வரலாறும் கூறினர் அல்லராதலின் தமிழ் காரணப் பெயராகாது, அப் பாஷையை உணர்த்தும் ஓர் இடுகுறிப்பெயரே எனக் கூறுவாரும் உளர்.

[பின்னையோர் கூறுவன யாவும் உண்மையாய் இருந்திருப்பினும், அல்லது அவற்றுள் ஒன்றேனும் ஏற்றதாய் இருந்திருப்பினும் முது நூலாசிரியர் கூறாது விட்டொழிவரோ என்பது இவர்கள் கட்சி].

இனி இது சிலர் கூறும் வண்ணம் காரணப்பெயராயினுமாகுக. அல்லது வேறு சிலர் எண்ணும் வண்ணம் இடுகுறிப் பெயராயினுமாகுக. ஆனால் "தமிழ்" என்பது "திராவிட" மென்பதினின்றாவது அல்லது வேறு எவ்வடமொழியினின்றாவது பிறக்கவே இல்லை என்பது நிச்சயம். அன்றியும், இஃதொரு இனிய பாஷை என்பதற்

கும், ஒப்பற்ற பாஷை என்பதற்கும் ழகரத்தைத் தனக்கே யுடைய பாஷை என்பதற்கும், அறியாமையை நீக்கக்கூடிய பாஷை என்பதற்கும் அனுவளவும் ஐயமின்று.

## தமிழ் வழங்கும் நிலம்.

இனி இது வழங்கும் இடம் ஆராய்வோம். இத்தமிழ்செந்தமிழ், கொடுந்தமிழ் என இருவகைப்படும். இவற்றுள் செந்தமிழ் நாடாவது "கங்கை வாழ் வேணிக் கடவுளும் குமரக் கடவுளும் அகத்தியனாரும், கலைமகள் வடிவப் புலவரும், மேன்மைக் கௌரிய வேந்தரும் இருந்து, சங்கமாப் பலகை ஏறியே வளர்த்த தமிழ்க்கிடமான" பாண்டி வளநாடாகும். இந்நாட்டின் எல்லைகள் சேனாவரையர் என்பார் காலத்தில், வடக்கே மருதயாறும், கிழக்கே மருவூரும், தெற்கே வைகையாறும், மேற்கே கருவூரும் என்று சேனாவரையரே வரையறுத்துள்ளார். இச்செந்தமிழ் நிலத்தைச் சார்ந்த நிலங்கள் பன்னிரண்டும் கொடுந்தமிழ் நிலங்களாம். அவை இன்னவென,

"தென்பாண்டி குட்டம் குடம் கற்கா வேண்பூழி
பன்றி அருவா வதன்வடக்கு—நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில்பன் னிருநாட் டெண்"

என்னும் வெண்பாவால் அறிக. செந்தமிழ் நிலத் தெல்லையும் அதனைச் சூழ்ந்த பன்னிரு நிலமும் வருமாறு:—

<table>
<tr><td>சீதம்</td><td>பூழி</td><td>மலை</td><td>அருவா</td></tr>
<tr><td>கற்கா</td><td colspan="2" rowspan="2">மருதயாறு<br>கருவூர் செந்தமிழ் நிலம் மருவூர்<br>வைகையாறு</td><td>அருவா வடதலை</td></tr>
<tr><td>பன்றி</td><td>பொங்கர்</td></tr>
<tr><td>குடம்</td><td>குட்டம்</td><td>தென்பாண்டி</td><td>ஒளி</td></tr>
</table>



இதனை நச்சினார்க்கினியரும் சரியெனக்கொண்டு, சிங்களம் பழந்தீவு, கொல்லம், கூபம், கொங்கணம், துளுவம், குடகம். கருநாடம் கூடம், வடுகு, தெலுங்கு கலிங்கம் என்னும் பன்னிரு நாடுகளும் முற்கூறிய பன்னிரண்டு நிலங்களைச் சூழ்ந்திருந்தன என்றார் நிற்க.

நன்னூலார், செந்தமிழ் நிலத்தையும் கொடுந்தமிழ்நிலத்தையும் பொதுவாத்தமிழ் நிலம் எனக்கூறி அத்தமிழ் நிலத் தெல்லை "குணகடல் குமரி குடகம் வேங்கடம்" எனவரையறுத்துள்ளார். (அதாவது வடக்கே திருவேங்கடமலை, கிழக்கே வங்காளக்குடாக்கடல், தெற்கே கன்னியாகுமரி, மேற்கே குடகு.) நாம் நன்கு கவனிக்க வேண்டிய அதிமுக்கிய விஷயம் இங்கொன்றுளது. அஃதென்னவெனில், நன்னூலார் குறித்துள்ள தேசங்கள் அவர் காலத்திருந்த தமிழ் நாடுகள் என்பதே. ஏனெனில், ஒரு காலத்தில், அதாவது இன்றைக்கேறக்குறைய 2100 வருஷங்களுக்குமுன்னே, கன்னியாகுமரிக்கும் அப்பால் இந்தியா விசாலித்திருந்தது என்றும், கன்னியாகுமரிக்குத் தென்பாகத்தில் தான் முதற்சங்கமும் இடைச்சங்கமும் இருந்தனவென்றும், அப்பூமி பின்னர் பிரளயத்தால் அழிந்து போயிற்றென்றும், கூறுகின்றார்கள். இதற்காதாரம் வருமாறு:— இன்றைக்கு 2300வருடங்களுக்குமுன் சந்திரகுப்தனுக்கும் ஸெலுக்க்ஸ் என்ற கிரேக்கனுக்கும் யுத்தம் நடந்ததும், பின்னர் அவர்களுக்குள் நடந்தேறிய சமாதான நிபந்தனைகளுள் ஒன்றாக மகஸ்தினஸ் என்பவன் ஸ்தானாதிபதியாகச் சந்திரகுப்தனது இராஜ்யத்தில் இருக்க அனுமதி பெற்றதும் சரித்திரம் படித்த 5-வது வகுப்பு மாணவர்கள் கூட அறிவர். இம்மகாஸ்தனிஸ் என்ற கிரேக்கர் இலங்கா தீபத்தைப்பற்றிய தம் குறிப்பிலே "இத்தீவு இந்தியாவினின்று ஒரு நதியால் பிரிக்கப்படுகின்றது" என்று எழுதியிருக்கிறார். மெகஸ்தனீஸுக்கு நான்கு நூற்றாண்டுக்குப்பின் இந்நாடு வந்துசென்ற பிளினி (Pliney) முதலிய கிரேக்க பண்டிதர்கள் நாளிலே இந்நதி மறைந்தொழிந்தது என்பது அவர்களெழுதியுள்ள குறிப்புகளாற் புலப்படும்." அன்றியும் கன்னியாகுமரிக்குத்தெற்கில் இருந்த குமரியாற்றினழிவு, 2100 வருஷங்களுக்கு முன் நிகழ்ந்ததென்று கால

ஞ்சென்ற ஸ்ரீ வி. கனகசபைப்பிள்ளை மகாவமிசமுதலிய நூல்களைக் கொண்டு வரையறுத்துள்ளார்கள். ஆதலின் குமரி முனைக்குத் தெற்கும் தமிழகம் விசாலித்திருந்த விஷயம் தெள்ளிதினுணரப்படும். இம்மட்டோ?

(2) ஆராய்ச்சி வன்மையிற் சிறந்து சாவா உடம்பெய்திய ஷை பிள்ளையவர்கள் "கி. மு. 7-ம் நூற்றாண்டில் அரசாண்ட உதயணன் என்னும் பாண்டவ குலத்தரசன் காலத்தில், மகதநாட்டின் தலைநகராகிய இராஜக்கிரகத்தைச் சுற்றி, 100 யவனச்சேரியும் 120-எறிபடைப்பாடியும், 1000 தமிழச்சேரியும் இவற்றைத் தவிர கொல்லச்சேரியும், மிலேச்சச்சேரியும் இருந்தனவென்றும், முற்கூறிய ஆயிரம் சேரியிலும் இருந்த தமிழர் மகதத் தரசனுக்குத் தலைப்பெருஞ் சேனையாக இருந்தனரென்றும் காட்டக்கூடிய

"ஐம்பத னிரட்டியவனச் சேரியும்
எண்பத னிரட்டி எறிபடைப் பாடியும்
மன்பெருஞ் சிறப்பின் ஆயிரமாகிய
தலைப் பெருஞ் சேனைத் தமிழச்சேரியும்
கொலைப்படும் கடுந்திறற் கொல்லச்சேரியும்
மிலேச்சச்சேரியுந் தலைத்தலை சிறந்து"

என்ற உதயண காவியத்தில் உள்ள இராஜகிருகச் சிறப்புச்செய்யுளொன்றை ஆதாரமாக்கொண்டு, இற்றைக்கு 2600 வருஷங்களுக்கு முன்பிருந்த மகத நாட்டுக்குடிகளிற் பெரும்பான்மையோர் தமிழர் என்றே ஸ்தாபிக்கின்றார். இக்காலத்தும் அவர் சொல்லுகிறபடி அம்மகத நாட்டில் (அதாவது பங்காளத்திற்கு வடக்கே நேபாளத்துக்குத் தெற்கே) "திமில்" என்ற ஓர் ஜாதியார் வசிப்பதையும் இத்திமிலருடைய பாஷை தமிழ் மொழிக்குப் பலவாறு ஒத்திருப்பதையும் பார்த்தால், "திமில்" என்ற பெயரே "தமிழ்" என நாளிடைவில் மருவியதோ என்ற ஐயத்தைத் தரக்கூடியதாய் இருக்கிறது. அன்றியும், அவர்,

(3) 'நீ,' 'நான்' 'யாம்' 'எஃகு,' 'பெண்' 'மை' 'கண்' முதலிய பதங்கள் தமிழிலும் சீனத்திலும் ஒரே பொருளைக்குறிப்பதால் தமிழரும் சீனரும் ஆதியில் ஒரே குலத்தவர் என்றும், இதற்



கேற்கவே தமிழ் மூவேந்தருள் ஒருவனாகிய சேரன், இந்நாளிலும் சீனத்தார் தங்களை 'வானவர்' (Celestials) என்று பெருமையாச் சொல்லிக்கொள்வதுபோல இமையவரம்பன், வானவரம்பன் எனப் பெயர் பூண்டான் போலும் என்றும்,

(4) கங்கை நதி பாயும் பங்காளம் முதலிய இடங்களிலும், மைசூரிலும், இந்தியாவில் வடக்கேயுள்ள பிறரிற் பெரும்பான்மையோரும் "தமிழர்" எனவும் மொழியியலை (Philology) வழிகாட்டும் கருவியாக்கொண்டு அறிவிக்கின்றார். இவற்றால் இந்தியாவில்ஆரியர்க்கும் முந்தியே தமிழர்கள் இருந்தனர் என்றும் அநேகமாய் இந்தியா முழுதுமே தமிழகமாக இருந்தது என்பதும் தெரியவரும். துரானியராகிய திராவிடருக் கப்புறமே ஆரியர் இந்தியாவிற் புகுந்ததும் சரித்திரம்படித்தோர் அறிவர். ஆயினும் தற்காலத்தில்தமிழ்வழங்கும் நாடுகள் யாவெனில், ஆசியா கண்டத்தில் உள்ள "குணகடல் குமரி குடகம் வேங்கடம்" எனும் நான்கெல்லையினுட்பட்ட நாடுகளும், இலங்கைத்தீவு, சிங்கப்பூர், பினாங்கு, பர்மா, மலாக்கா, முதலிய இடங்களும், ஆபிரிகா கண்டத்தில் உள்ள கேப் காலனி, நட்டால் முதலிய இடங்களுமாகும்.

## தமிழ் பேசுவோர் தொகை.

• இப்பாஷை தற்காலத்தில் 1,45,00,000ஜனங்களால்பேசப்பட்டுவருகிறதென்றும், அதற்குச் சுமார் 58,500 சொற்கள் உண்டென்றும் தெரியவருகிறது. ஆயினும் தமிழ் பேசுவோரில் 100-க்கு 90க்கு மேல் எழுத்து வாசனையற்றவர்களாக இருப்பது விசனிக்கத்தக்கதே.

## செந்தமிழ்ச் சிறப்பு.

இனி, தற்காலம் தென்னாட்டிற்குத் திலகம்போன்றிலகும் தமிழ் மொழியின் அருமை பெருமை அறையப்புகுவாம்: தமிழின் தொன்மையும் கடவுட்டன்மையுமே அதன் அருமைக்கும் பெருமைக்கும் காரணமாக இருக்கின்றன.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிர்ஒன் றேனையது
தன்னேரிலாத தமிழ்."

(இ—ள்.) ஓங்கல் இடை வந்து-மலையினிடத்தே தோன்றி, உயர்ந்தோர் தொழ விளங்கி - அறிவு ஒழுக்கங்களில் உயர்ந்தோர் வணங்க விளங்கி, ஏங்கு ஒலி நீர் ஞாலத்து - ஓயாதொலிக்கும் கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்தின்கண் உள்ள, இருள் அகற்றும் அவற்றுள் - இருளை நீக்கும் இரண்டினுள் மின் நேர் - மின்னலைப்போன்று ஒளி வீசும், தனி ஆழி - ஒற்றைச் சக்கரத் தேர்மேல் செல்லும், வெம் கதிர் ஒன்று-வெப்பத்தைத்தரும் சூரியன் ஒன்று. ஏனையது - மற்றது யாதெனின், தன் நேர் இல்லாத - இணையற்ற, தமிழ் - தமிழ் மொழி ஆகும். இதனால்,

உதயகிரியினிடத்தே சூரியன் தோன்றுதல்போல் இமோத்கிரிபால் தமிழ் தோன்றிற்றென்றும், சூரியன் புறத்திருள் நீக்கல்போல் செந்தமிழ்,மாந்தரது அகத்திருளைநீக்குகிறதென்றும்பெறப்பட்டது. பலர் எண்ணுகிறபடி தமிழின் பிறப்பிடம் பொதியமலை என்னாது இமயமலை எனக் கொண்டதற்குக் காரணம் பிறிதோரிடத்திற் காணலாகும்.

(2) எல்லாம் வல்ல இறைவரே தம்பெயரால் ஓரிலக்கணம் இயற்றியும் சங்கப்பலகை ஏறியும் தமிழ் வளர்த்ததால் அப்பெரான்ஞர் செஞ்சடைத் தென்னவர் பிரார்க்கும்,

சைவசமய குரவர்கள் இறைவனைத் துதித்ததும் பல அற்புதங்களைக் காட்டியதும் தமிழ்ப் பனுவல்களால் ஆதலின், உண்மைச் சைவர்க்கும்,

திருமழிசை ஆழ்வார் தமிழ் மொழியிற் சொன்னவண்ணம் ஸ்ரீதரக்கடவுள் செய்தருளியதால் அவர்க்கும்,

ஆழ்வாராதிகள் பாடி, விஷ்ணுவைத் துதித்ததால் வைணவர்க்கும்,



மறையவனே செந்நாப்போதராய் அவதரித்துத் தமிழ்வேதம் இயற்றி இறுமாப்புற்ற கடைச்சங்கப் புலவரின் கர்வம் அடக்கியதால் பிரமனுக்கும்,

நக்கீரர், பொய்யாமொழிப்புலவர் முதலியோரிடமிருந்து தமிழ்க்கவிபெற முருகக்கடவுள் வலிய விரும்பியதால் அவர்க்கும், அவரது திருத்தொண்டர்க்கும், தமிழிடத்து ஆர்வம் மிகுதி என்பது புராணவாயிலாற் றெள்ளிதிற் புலப்படும்.

3. "ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்துஇதனின் இது சீரியதென் றொன்றைச் செப்பரிது" எனக் கடைச்சங்கப்புலவரும், இருமொழியும் நிகர் என்னும் இதற்கையம் உளதேயோ? என்று காஞ்சிப்புராணமுடையாரும், இன்னவைபோன்று ஏனைப்பிறரும், கூறியிருந்தபோதிலும், சிற்சிலகாரணங்களால் வடமொழியினும் தென்மொழி சிறந்ததென்போம். எங்ஙனமெனில், தென்மொழிக்குக்கடவுளார் சம்பந்தமும் திருத்தொண்டர் சம்பந்தமும் ஏற்பட்டுள்ளனபோல் வடமொழிக்கில்லை. அன்றியும், வடமொழியில் இல்லாப்புணர்ச்சி இலக்கணங்களும், சொல் இலக்கணங்களும், செய்யுள் இலக்கணங்களும், ஏனைய பிறவும் ஆதி இலக்கணமாகிய அகத்தியத்திலேயே கூறப்பட்டுள்ளன எனத்தெரிகிறது.

(4) ஸ்ரீ-வரதநஞ்சையபிள்ளை போல்வார் கூறுகிறபடி "சிந்தாமணியின் நந்தாப் பெருமையும், மணிமேகலையின் அணிகெழுபோக்கும், சிலப்பதிகாரத்திலக்கியச் செலவும், திருவள்ளுவரின் ஒருமொழி நயமும், கம்பன் கவியின் செம்பொருள் இன்பமும், பத்துப் பாட்டின் வித்தக நடையும், கல்லாடத்தின் எல்லாச்சிறப்பும், தேவாரத்தின் மூவாப்பெருமையும், திருவாசகத்தின் ஒருவா அன்பும், இன்னோரென்னப் பன்னூல் மாண்பும் பிறபாஷையில் இருக்கின்றனவென் யாரே துணிந்துகூற முற்படுவர்?

(5) நான் இவ்வளவு பெருமையாகக் கூறியது அபிமானம் பற்றி என்றெண்ணற்க. இது உண்மை என்பதற்கு அந்நியநாட்டுப் பண்டிதர்களையே சான்றாகக் குறிக்கிறேன்:

தமது ஆயுள் காலமுழுமையையும் தமிழ் கற்பதிலேயே செலவழித்துத் தற்காலம் தமிழ் அகாராதி எழுதத் தொடங்கியிருக்கும் ரெவரண்ட் டாக்டர் G. U. போப்பையும்.

தமிழைத் தம்மாலியன்றஅளவு கற்றுணர்ந்து, அகராதி எழுதித் "தமிழ் கிரேக்கபாஷையினும் நயமான செய்யுள் நடையுடையது லத்தீன் பாஷையிலும் பூரணமானது" என்ற வின்ஸ்லோ பண்டிதரையும்,

மனிதராற் பேசப்படுகின்ற மிகப்பொலிவும் திருத்தமும் சீருமுடைய பாஷைகளில் தமிழும் ஒன்று" என்று கண்டறிந்த டேய்லர் பண்டிதரையும்,

"ஸம்ஸ்கிருதத்தோடு போட்டிபோட்டு, அதனினும் மேம்பாடடைந்த இந்திய பாஷைகளில் தலை சிறந்தது தமிழ் ஒன்றே ஆகும்" என்ற கால்ட்வேல் பாதிரியாரையும் கேட்டால் அன்னோர் தமிழ்ப் பெருமை இன்னவென நன்கெடுத்துக்காட்டுவர்.

(6) தமிழ் நெடுங்கணக்கின் உருவ அமைப்பும் முறைச்சிறப்பும் போல வேறு எப்பாஷையில் காணலாம் ? உயிரெழுத்திலும் உயிர்மெய்யெழுத்திலும் குறிலுக்கப்புறம் நெடிலிருத்தலையும் அவை ஒன்றிலொன்று உருவத்தில் ஒத்திருப்பதும்,

வலியோர் மெலியோர்க்குமுன் நிற்றல் வல்லெழுத்துக்கள் யாவும் மெல்லெழுத்துக்கள் முன்நிற்பதும், தமிழ் பாஷையிலின்றி வேறெப் பாஷையிலும் இல்லையே.

(7) கற்பனைச் சிறப்பைத்தான் என்னென்பது ?

"நன்னகர் நோக்கினனை நோக்கினன்" என்பது, கம்பராமாயணச் செய்யுள் ஒன்றின் நாலாம் அடியாகும். இச்சிறுவரி, அனுமார் எரிகொளுத்தி இலங்கையைச் சுட்டகாலத்தில் இராவணன் இருந்த நிலையைப்பற்றிக்கூறியது. இதற்கு ஒன்றினொன்று பெருமையில் தாழாத எட்டர்த்தங்கள் இருக்கின்றன என்றுயார்க்குத்தெரியும். நிற்க.



## செந்தமிழ்ச் சுதந்திர மகிமை.

இனி, இத்தமிழ் மூல பாஷையா அல்லது கிளைப்பாஷையா ? என்று ஆராயத்தக்கது : கல்விகேள்விகளில் தேர்ச்சிபெற்ற மொழிநூல் வல்லோர், உலகின்கண் வழங்கும் மொழிகளை 'ஆரிய' மொழிகள் என்றும் 'துரானிய' மொழிகள் என்றும் இருவகையாகப்பிரித்து " ஆரிய மொழிகள் பலவற்றுள்ளும் ஸம்ஸ்கிருதம் தலை சிறந்ததொன்றும். அவ்வாறே துரானிய மொழிகளுள் அடங்குவன பலவற்றுள்ளும் தமிழ்மொழி தலைசிறந்ததொன்றும்" எனக்கூறியிருக்கின்றார்கள். ஆகவே, ஸம்ஸ்கிருதமும் தமிழும் வெவ்வேறு பாஷைகள் என்பது வெள்ளிடைமலைபோல் தெள்ளிதிற் புலப்படும் அன்றோ ?

அன்றியும், "தமிழ் தற்பாஷையே கிளைபாஷை அன்று" என்றற்குப் பூர்வாசிரியர் கீழ்வாய்க் கணக்குக்கும் விரவியல் செய்யுட்கும் மணிப்பிரவாளத்துக்கும் வேற்றுமை வகுத்த இலக்கணமே சாட்சி பகருமே.

இம்மட்டோ ? முன்பு நாம் கூறிய

"இரு மொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர்-இயல்வாய்ப்ப
இரு மொழியும் வழிப்படுத்தார் முனி வேந்தர்-இசை பரப்பும்
இரு மொழியுந் தழீஇயினர் ஆன்றோரே-என்றால் இவ்
இரு மொழியும் நிகர் என்னும் இதற்கையம் உளதேயோ"?

என்ற காஞ்சிபுராணச் செய்யுளும்,

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனில்
கடல்வரப்பின் இதன் பெருமை யாவரே கணித்துள்ளார் ?"

என்பதும், வடமொழியும் தென்மொழியும் ஒன்றினொன்று சற்றும் பெருமைநிற்றாழாத தனிப்பாஷைகள் என்பதற்கோர் தனிச்சான்றாகும்.

உண்மை ஈதாக, தமிழ் இலக்கணக்கடல் முழுதும் உண்டவரும், தமிழினை வளர்க்கும் திருவாவடுதுறை மடத்தவருமான ஸ்ரீமத் சுவாமி நாத தேசிகர் தமிழ் மொழியுடன் வடமொழி சம்பந்தம் மிக்கிருத்தலால் மயங்கி, வடமொழி தமிழ்க்குத் தாய்மொழி எனக் கருதி

"அன்றியும் தமிழ் நூற் களவிலை-அவற்றுள்
ஒன்றே ஆயினும் தனித்தமிழுண்டோ" என்றும்
"அன்றியும் ஐந்து எழுத்தால் ஒரு பாஷை என்று
அறையவும் நாணுவர் அறிவுடையோரே" என்றும்

கூறிவிட்டனர். அவர் காலத்துப் புலவர் பெருமக்கள் இதனை மறுத்துக் கூறாததற்குக் காரணம் விளங்கவில்லை. ஆனால், இவருடைய முதற் கேள்விக்கு உத்தரமாக காலஞ் சென்ற ஸ்ரீ-சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தற்கால முற்கால செய்யுட்களில் சில எடுத்துக் காட்டி இவற்றுள் வடசொல் எங்கே? சங்க நூல்களிலும் ஏனைப் பின்னூல்களிலும் ஆரியச் சொற்கள் எத்துணை சிறுபான்மைய?" னைச் சமாதானம் கூறியிருக்கின்றார். ஆயினும் ஸ்ரீமத் சுவாமி நாத தேசிகர் கேட்பது "ஒன்றே யாயினும் ஸம்ஸ்கிருத வார்த்தை உபயோகிக்கப்படாத தனித்தமிழ் "நூல்" உண்டா?" என்பதே யொழிய "செய்யுள் உண்டா? வார்த்தையுண்டா?" என்பதன்றே. ஆகையால் "பிள்ளை அவர்கள்சொல்வதுபுறனடையானே பொதுவிதிவிளங்கும்" என்றஉண்மையையே மெய்ப்பிக்கிறதெனத் தப்பெண்ணங் கொள்ளுகின்றனர்சிலர். இன்னோர், பிள்ளையவர்களின் இரண்டாவது கேள்வியை மறந்தேவிடுகின்றனர். நாம் பழைய நூல்களிற் காணப்படும் ஆரியமொழிகளையும் திராவிட மொழிகளையும் கணக்கிட்டுஆராய்ந்து பார்ப்போமேயானால், ஒரு நூலானது எவ்வளக்கெவ்வளவுபழமையாக இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஆரியமொழிகள்குறைவாக இருக்கக்காணலாகும். இது கொண்டு, ஒருகாலத்தில் தனித்தமிழ்நூல்கள்பலஇருந்தேஇருக்கின்றன என்றுதுணிந்து கூறற்குத் தடை என்ன இருக்கின்றது? தனித்தமிழ்நூல்கள் இருந்திருப்பின், இப்பொழுதுஅவைகள்எங்கே போயின? என்று சிலர் பரிகவித்துக்



கேட்கக்கூடும். இக்கேள்விக்கேற்ற விடையைக் கேட்போரே இவ்வியாசத்திற் பிறிதோரிடத்திற் கண்டு கொள்வர். நிற்க,

தேசிகரது இரண்டாவது கேள்விக்கு விடையாய் தேசிகர் தாமே ஓரிடத்தில் "பொது எழுத்தானும் சிறப்பெழுத்தானும் ஈரெழுத்தானும் இலங்கும்தமிழ்மொழி" எனக்கூறியிருக்கின்றாராதலின், அவர்தம் வாக்கையேமறந்து இங்ஙனம் உரைத்தது, வடமொழிப் பயிற்சியே மிக்குடையோராய் அதன்மேற்கொண்ட பேரபிமானத்தினாற் போலும். அதிமதி நுட்பமோடதிகலை கற்ற இவர், இவ்வாறு, முக்குணவசத்தராய் முறை மறந்துரைத்ததால், தமிழை ஒரு மொழியென நிறுவிய மகத்துவம் மிகுத்த அகத்தியனார்க்கும் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர்க்கும், பொன்னார் செஞ்சடைத் தென்னவர் பிரார்க்கும் அறியாமை ஏற்றிப் பழிபாவம் தேடினர் என்று பலர் நிந்திக்கலாயினர். இவ்வாறு மயங்கி இடர்ப்பட்டதன் நிமித்தம் இவ்வதி மேதாவியே தமிழைப் பற்றிய உண்மை ஓர்ந்தோரால் நாளை வரைப் பெரிதும் இழிக்கப்படுகின்றாராக, அதனைப் பற்றிய உண்மை ஓர் சிறிதும் உணராதார் யாவும் உணர்ந்தார் போன்று அதனைஇழித்துரைக்கமுற்படுவது எத்துணைஇழுக்குடைத்து! என்ன பாருங்கள்! சின்னாட்களுக்குமுன் சர்வகலாசாலைச் சங்கம் ஏற்பட்டுப் புன்மொழியாப் பைந்தமிழைப் புறம்பே தள்ளிப் பூவுலகோர் தம்மனத்தைப் புழுங்கச் செய்யப், பற்றியெரியும் தீக்குக் காற்றும் கூடியதுபோல், பண்டிதர் ச. ம. நடேச சாஸ்திரியார் போல்வார் முன்போந்து "தமிழ் மொழிகள் யாவும் நேராகவேனும் சிதைவுற்றேனும் ஸம்ஸ்கிருதத்தினின்றும் தோன்றியவைகளே" எனப் பொருள்பட "மெட்ராஸ் மெயில்" வாயிலாய் வெளியிட்டதுஎவ்வளவுபரிதபிக்கத்தக்கது! "வண்ணஞ் செய் வாள் விழியேயன்றி மறைகுருட்டுக் கண் அஞ்சுமோ இருளைக்கண்டு?" மதுரைத் தமிழ்ச் சங்க வித்வான்களில் ஒருவராகிய சாஸ்திரியார் இவ்வணம் உரைப்ப ஸ்ரீ அ.மாதவையர் அவர்கள்மட்டுமேயன்றிப்புறப்பாஷை பேசும் ரெவரண்ட் டாக்டர் மில்லர் போன்ற பாதிரிமாரும் அதனை மறுத்துப் பேசியது எவ்வளவு பாராட்டத்தக்கது! அந்நிய பாஷை பேசும் அந்நிய நாட்டார்க்குள்ள தமிழ் அபிமானமும் உண்மையறி

வும் நம் நாட்டார் பலர்க்கில்லாமற் போனது வியப்பிற்கும் நகைப்பிற்கும் இடமாகிறதன்றோ?

## தமிழ் தோன்றியது ஆரியத்திற்குப் பிந்தியா?

ஸம்ஸ்கிருதத்தினின்றும் பல நூல்களும் அவற்றோடு பல்லாயிரம் மொழிகளும் தமிழில் வந்ததைக்கொண்டு, தமிழ் ஆரியத்திற்குப் பிற்பட்டதென்று கண் மூடித்தனமாய் சிலர் சாதிக்கின்றனர். இஃதெவ்வாறு பொருந்தும்? தெற்கேற்படுவதன்முன் வடக்கு இருந்திருக்குமேல் தென்மொழியாகிய தமிழ் வடமொழியாகிய ஸம்ஸ்கிருதத்திற்குப் பிந்தியதெனக் கொள்ளல் பொருத்தமுடைத்தே. ஆதலின், தமிழும் ஆரியமும் ஏககாலத்தவை என்பது இனிது விளங்கும்.

## தமிழின் வளர்ச்சியும் தேய்வும்.

இனித் தமிழின் உற்பத்தி, வளர்ச்சி தேய்வு முதலியன ஆராய்வாம்:

சுருதி யொப்ப ஆதியில் வரி வடிவின்றி ஒலி வடிவாய் இருந்த இத்தமிழ் இன்ன காலத்திற்றான் உற்பத்தியாயிற் றென்றேனும், இன்ன மனிதரால் உண்டாக்கப்பட்டதென்றேனும் எவராலும் கூற முடியாது. ஆனால், "அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு" என்றும், "பொதியமா மலைபான் மொழி" என்றும் வில்லியாதியோர் கூறி யுள்ளதால், தமிழ், மகத்துவம் மிகுத்த அகத்தியனாரால் உண்டாக்கப்பட்டிருக்கவேண்டு மெனச் சிலர் துணியலாம். ஆனால், வில்லியாதியோர் கூற்று, உபசார வழக்கையும், சுவீகார புத்திர தர்மத்தையும் பற்றியதேயாம் என்பது, நூல் வழக்கானும் மரபானும் பண்டையாசிரியர் உரையானும் கருத்தானும் தெற்றெனப் புலப்படும். எங்ஙனமெனில்,

(1) அகத்தியர் தமிழ் மொழியை அவலோகித முனிவர்பாற் கற்றுணர்ந்தாரென்று க்ஷமண மதமும், சுப்பிரமணியக் கடவுளிடமிருந்து தமிழ் மொழியையும், பரமசிவனிடத்திருந்து அதன் இலக்கணத்தையும் ஓதியுணர்ந்தனர் எனச் சைவ மதமும் கூறுதலானும்,



தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினாறு
நளினந் தானே.— என்றார் ஒரு புலவர் பெருமான்

இத்தகைய சிறப்புவாய்ந்த படிக்காசுப் புலவர் கூட—

"அடகெடுவாய்! பலதொழிலு மிருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில்லாமல்
திடமனமோ கனமாடக் கழைக்கூத் தாடச்
செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோ மில்லை
தடமுலைவே சையராகப் பிறந்தோ மில்லை
சனியான தமிழைவிட்டுத் தையலார்த
மிடமிருந்து தூதுசென்று பிழைத்தோ மில்லை
என்ன ஜன்மம் எடுத்துலகில் இரக்கின்றோமே!"

என்று பரிதபித்து வயிறெரிவராயின் அவர் காலத்தியரது பாஷாபிமானமும் தமிழாதரவும் எத்தன்மைத்தாயிருக்கவேண்டும்!

(4) ஆதரவு செய்யாவிடினும் சீத்தலைச் சாத்தனார் போன்ற அபிமானிகளேனும் இக்காலத்திருக்கின்றனரா? என்னே?

சீத்தலைச் சாத்தனார் என்பார் கடைச்சங்கக் காலத்தில் இருந்த சிறந்த புலவரும் தமிழபிமானியும் ஆவர். இவரது இயற்பெயர் சாத்தன் என்பதே. சீ நிரம்பிய தலையை உடையோராதலின் சீத்தலைச்சாத்தனார் எனும் பெயர் இவர்க்கு வாய்த்தது. இவர் தமிழை யாரேனும் இழிவாகக்கூறினும் தமிழ்ச் சொற்களையும் பொருள்களையும் பிழைபடக்கூறினும் சிறிதும் பொறாது, "தமிழ்நிந்தனையும் பிழைச்சொற்களும் கேட்கும்படியான பாவம் முன்செய்ய என் தலையில் எழுதியிருந்ததுபோலும்!" என்று தம்தலையிற் குண்டெழுத்தாணி ஒன்றால் குத்திக்கொள்வது வழக்கம். இவ்வாறு தமிழ் முற்றக் கல்லாதாராலும் துஷ்டர்களாலும் இவர்க்குத் தலைக்குத்து மிகுதியாம். இத்தலைக்குத்துத் திருவள்ளுவரால் தீர்ந்தது என்பர்.

நடத்திப் பரிசளித்தும், பழைய ஏடுகளைப் பணங்கொடுத்துப் பெற்றும் இனிது தமிழை அபிவிருத்தி செய்துவருகிறது.

பின்னர், பாலவநத்தம் பாலித்திடுவோரும் வண்டமிழ் வளர்ப்பொன்றேயே கண்ணிய கடப்பாடாகக் கருதியோரும் பிதுர் சத்குணம் புத்ர: என்ற மகாவாக்கியத்திற்கோர் தனிச்சான்றுவோரும் “இருவேறுலகத் தியற்கை திருவேறு தெள்ளிய ராதலும் வேறு” என்ற மெய்மொழிப் பொருளை வேறு படுத்தும் பெற்றிவாய்ந்த பேரறிவாளருமான ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவரையே அக்ராஸநராகவும், இருவகைச் செல்வமும் ஒருங்கே வாய்ந்த சேதுமன்னனாகிய ஸ்ரீமாந்-பாஸ்கர சேதுபதியவர்களின் குமாரரான இராஜராஜேசுவர துரை யென்ற முத்துராமலிங்க சேதுபதி யவர்களையும், அவருடைய சகோதரரையும் “சின்னமகாராஜா” எனச்சிறப்பித்துக் கூறும் ஸ்ரீமாந் இராஜா M. தினகர் பகதூர் அவர்களாதி யோரையும் பரிபாலராகக் கொண்டும், “மாணவர் இந்துமத வித்தியாப்பியாச சங்கம்” என்ற நற்றமிழ் மாணவர்சங்கம் இராமநாதபுரத்தில் தோன்றிப் பிரசங்கங்கள் மூலமாகவும், சிறு துண்டுப் பத்திரிகைகள் மூலமாகவும் தமிழறிவைப் பரப்பி இராமநாதபுரத்திற்கே ஓர் அணிகலனாய் விளங்கிநிற்கின்றது. மதுரைஜில்லா இருபிரிவாகப் பிரிக்கப்படுங்கால் தற்காலம் மதுரை ஜில்லாவில் உள்ள தமிழ்ச்சங்கங்களில் மூன்றாவது சங்கமாக இருக்கும் இது, இனி இராமநாதபுரம் ஜில்லாவிற்கே முதற்சங்கமாகும்.

இம்முச்சங்கங்களும் ஏற்பட்ட பின்னரே சேலம், தஞ்சை முதலிய இடங்களில் சங்கங்களேற்பட்டுத் தமிழ் அபிவிருத்திக்கு முயன்று வரலாயின. தற்காலம், மதுரையிலே சமீபத்தில் “திருவருட்பிரகாசசபை” என்ற தமிழ்ச்சங்கம் ஒன்று “கானசபை” ஒன்றை அங்கமாகக்கொண்டு பிரதி ஞாயிற்றுக்கிழமையும் பிரசங்கங்கள் நடத்தி வருகின்றது. இவ்விஷயங்கள் இனி ஆங்காங்குத் தமிழ்ச் சங்கங்கள் ஏற்படுதற்குப் போதிய நற்குறி ஆகும். நிற்க.

## தமிழ் தளர் நிலை அடைந்ததேன்?

இனி முற்காலத்தில் செழித்தோங்கி வளங்கள் யாவும் குறைவற வாய்ந்து விளங்கிய நம் தமிழ்மொழி, வளர்நிலை குன்றித் தளர்நிலை எய்தியதற்குக் காரணங்கள் யாவென ஆராய்வோம் :—



(1) தமக்குப்பின் வருபவர்களுக்கென்று எவ்வளவோ வருந்திப் பாடுபட்டு ஊண் உறக்கங்களை ஒழித்துக்காடுகளிலும் மலைகளிலும் குடிசைகளிலுமிருந்து கடின ஏரைப்பிடித்துக் கற்பாறையில் உழுதல் போல் இருப்பெழுத்தாணிகளைக் கட்டை விரல் நுனியில் ஓலை ஓலையாகச்சாய்த்து எழுதித் தம் உயிரினும் மேலாக நம் முன்னோர்கள் காப்பாற்றிய எண்ணிறந்த சுவடிகள் இருமுறை கடற்கிரையானது யாவரும் அறிந்ததே. இக்காலத்துள்ளனபோல அக்காலத்தும் அச்சுக்கூடங்களேற்பட்டிருப்பின் ஒவ்வொரு நூலுக்கும் ஆயிரக் கணக்கான பிரதிகள் இருந்திருக்குமே.

(2) தமிழ் ஒழிந்த தேசத்தரசர் பலர் தமிழகத்தை அடிப்படுத்தியது இரண்டாவது காரணமாகும். அதிலும் ஏழரை நாட்டுச் சனியன்போல துலுக்கர் சேனை வந்து விழுந்தடித்து தேசத்தைச் சூறையாடி ஆங்காங்கு இறவாதெஞ்சிய பலநூல்களை அழித்தகன்றதும் அவர்கள் படையெடுப்பால்,

“ மறையவர் வேள்விகுன்றி மனுநெறி யனைத்து மாறித்
துறைகளோ ராறு மாறிச் சுருதியு முழக்க மோய்ந்தே
சாதிக ளொன்றோ டொன்றாய்த் தலைதடு மாறியாரும்
ஓதிய நெறியின் நில்லா தொழுக்கமும் மறந்துபோயே
ஒருவரை யொருவர் கைம்மிக் கும்பர்தம் கோவிற் சோம்பி
அரிவையர் கற்பிற் சோம்பி அரண்களும் அழிய ஆங்கே”

நேர்ந்ததும் யாரே அறியார் ?

(3) தமிழை ஆதரிப்போர் அருகியதும் அதனால் நேர்ந்த தமிழ்ப்புலவரின் வறுமையுமே மூன்றாவது காரணமாகும். தன் தலை கொடுத்தும் தமிழ்ப் புலவர்களது வறுமை நோய்களைவித்த குமணன் போன்றார் யாங்குளர் ?

“ மட்டாருந்தென் களந்தைப் படிக்காச னுரைத்த தமிழ்
வரைந்த வேட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைக்

162412

தமிழ் அபிவிருத்தி முற்றும் செய்யும் உரிமை பூண்ட மடாதிபதிகள் அதனைப்பற்றிய கவலையே இன்றி உண்டுறங்கிவரு மிக்காலத்தில் தமிழ்மாது செய்த தவப் பயனாக மஹா மகோபாத்தியாயர் பிரமஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள், ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள், ஸ்ரீ பாண்டித்துரைத்தேவரவர்கள், ஸ்ரீ சபாபதிநாவலர் அவர்கள் ஸ்ரீ தாமோதரம்பிள்ளையவர்கள், ஸ்ரீ கனகசபைப்பிள்ளையவர்கள், ஸ்ரீ ரா. இராகவையங்கார் அவர்கள் முதலிய உத்தமவித்துவ இரத்தினங்கள் தோன்றி இறந்துபட் டொழியா தெஞ்சிய அரும் பெரு நூல்களைப் பல் வழியானு முயன்று தேடித் தமிழ் வளர்ச்சி ஒன்றையே கருதி ஆராய்ந்து, பல குறிப்புக்களுடன் தெளிவுபட அச்சிட்டு வெளிப்படுத்தியும் தொகுத்தும் பண்டைத் தமிழ் நூல்களையும் பிற நூல்களையும் ஆராய்ச்சி செய்தும் தமிழ்ப் பெருமையை நிலை நாட்டி வருவாராயினர். நிற்க.

## “மதுரை”யும் “தமி”ழும்.

ஒருகாலத்தில் “நாவலர் வீற்றிருந்து கேட்ப ஓர் பா, நம்பரனே நின்று சொலச்செய்த சங்கம்” மேவியநற் றமிழ்நிலமாம் மதுரை என்பர். அன்றியும், மதுரை என்பது இனிமைப் பொருளை உணர்த்தும் மதுரம் என்பதனடியாகத் தோன்றிய பதமென்றும், தமிழ்க்கு இனிமைப்பொருள் உண்டென்றும் அறியும் நாம், மதுரைக்குந் தமிழ்க்கும் சம்பந்தம் மிக்கிருந்திருத்தலையும் உணரலாகும். ஆயினும் தற்காலத்தில் அவ்விருபெயர்களும் எதிர்மறை இலக்கணைபற்றி இடப்பட்ட பெயர்கள்போலும் என ஐயப்பாடுறும் அதிகேவல நிலைக்கு மதுரமணங்கமழ் மதுரைத்தமிழ்வந்துவிட்டது பரிதபிக்கத்தக்கதேயாகும். ஆயினும், 1901-ம் ௵ தமிழ் சம்பந்தப்பட்டமட்டில் மதுரைக்கோர் சிறந்தவருஷம் என்றெண்ண வேண்டியிருக்கிறது. ஏனெனில், “தேன்பிலிற்று நறுங்கொன்றைத் திருமுடியாரும் இருந்தாய் தெய்வச்சங்க, மான்மியமேவும் மதுரைமாநகரிற் சங்கமிலா வண்மை ஓர்ந்தே” இருவகைச் செல்வமும் எய்தாத ஒருவரால் “மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கம்” என்ற ஓர் சங்கம், 1901-ம் ௵ மே௴ 5உயும் ஆதிவாரமும் கூடிய சுபதினத்தில், ஸ்தாபிக்கப்பட்டது. இது



அன்றுமுதல் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மதுரையார்க்குப் பல்லாற்றானும் பயனாற்றிவருகிறது. வாரந்தோறும் இச்சங்கத்தில் பிரசங்கங்கள் நடைபெற்று வருகின்றன. மஹா மஹோபாத்தியாய பிரமஸ்ரீ வே. சமிநாதையரது விருப்பு ஒருவாறு நிறைவேற, இச்சங்கம், பண்டை உரையாசிரியரும், மதுரை வாசியுமான ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர்க்கு இரு ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்தியுள்ளது. அவற்றுள் ஒன்று “நச்சினார்க்கினியர் புத்தகசாலை” இரண்டாவது “நச்சினார்க்கினியர் பரிசு”. பின்னையது, ஆங்கிலகலாசாலை மாணவர்கட்குத் தமிழ் கற்றலில் ஊக்கம் அளித்தற்பொருட்டு, உயர்தர வகுப்புகளிலும் ‘காலேஜ்’ வகுப்புகளிலும் பயிலும் மதுரையில் உள்ள நானாகலாசாலை மாணவர்கட்கும் அன்னோரது தமிழ்ப் பாடத்திலும், தமிழ் மொழிபெயர்ப்பிலும், தமிழ்வியாஸத்திலும், தமிழ்வாக்கியங்களைப் பிழையற எழுதலிலும் தக்க பண்டிதரைக்கொண்டு பரீக்ஷை நடாத்தி அளிக்கப்படுவது. ஒவ்வொரு வகுப்பிற்கும் இவ்விரண்டு பரிசுகள் அளிக்கப்பட்டுவருகின்றன. இதைத்தவிர நமது இந்துமதத்தை மேற்றிசையிலும் பரப்பி நிலைநாட்டிய ஸ்ரீமத் விவேகாநந்தசுவாமிகளின் ஞாபகார்த்தமாக “விவேகாநந்தர் பத்திரிகாசாலை”யை இச்சங்கம் கொண்டுள்ளது அன்றியும் இதன் கௌரவ அங்கத்தினராகப் பன்னிரண்டு பிரபல பண்டிதர்கள் இருக்கின்றனர். நிற்க.

மாணவர் செந்தமிழ்ச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட நன்முகூர்த்தம் அதே வருஷத்தில் அதே மாதத்தில் 24உயன்று மதுரைத் தமிழ்சங்கம் ஸ்ரீ பாண்டித்துரைத்தேவர் அவர்களது நன்முயற்சியினால் நிறுவப்பட்டு மாட்சிமைதங்கிய புதுக்கோட்டை மகாராஜா, காலஞ்சென்ற சேதுமன்னனாகிய மாட்சிமைதங்கிய ஸ்ரீமத் பாஸ்கரசேதுபதியவர்களாதியோரது பொருளுதவியினால் நடைபெற்று வரலாயிற்று. “சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை” “தமிழ்ச்சங்க முத்திராசாலை” “பாண்டியன் புத்தகசாலை” முதலியவற்றை அங்கமாகக்கொண்டும், “செந்தமிழை” அச்சங்கப் பத்திரிகையாகக்கொண்டும், மாணவர்க்குத் தமிழறிவு வளரும்வண்ணம் 12 இடங்களில் பரீக்ஷை

வருஷம் நடைபெற்றதாம். இப் பாண்டியருள் எழுவர் கவியரங் கேறினராம். இச்சங்கத்து வீற்றிருந்த புலவர் தொகை 549. 4449 புலவர்கள் தத்தம் நூல்களை அரங்கேற்றியுள்ளார். அந்நூல் களிற் சிலவாகிய தொல்காப்பியம், காக்கை பாடினியமாதியவற்றில் இயற்றமிழும், பெரு நாரை, பெருங் குருகு முதலியவற்றில் இசைத் தமிழும் முறுவல் சயிந்தம் குண நூல் முதலியவற்றில் நாடகத் தமிழும் விரித்துரைக்கப்பட்டனவாம். இச்சங்கம் இருந்தவிடம் தக்ஷிண மதுரை. இது கடல் கொள்ளப்பட்டது.

இடைச்சங்கம் :—முன்பின் 5500 வருஷங்களுக்கு முன்பு இருந்ததாகக் கூறப்படும் இச்சங்கம், வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திரு மாறனீறாக 59 பாண்டியரைக் கொண்டு சுமார் 3500 வருஷம் நடைபெற்றதாம். இவரில் கவியரங்கேறினோர் ஐவராம் இதில் வீற்றிருந்த புலவர் தொகை 509. தமது நூல்களை அரங் கேற்றிய புலவர்கள் 3700 பேர்கள். இச்சங்கம் கூடிய இடம் கபாட புரம். இதுவும் கடல் கொள்ளப்பட்டதேயாம். இச்சங்கத் தரங் கேறியவை கலிகுருகு, வெண்டாளி முதலியன.

கடைச்சங்கம் :—இது ஏறக்குறைய 2000 வருஷங்களுக்கு முன்பு இருந்ததாகத் தெரியவருகிறது. இச்சங்கம் முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி யீறாக 49 பாண்டியர்களைக் கொண்டது. இவருள் கவியரங்கேறியோர் மூவர். இச்சங்கத்து வீற்றிருந்த புலவர் தொகை 49. (இன்னோர் பெயர்களை திருக்குறளில் உள்ள "திருவள்ளுவ மாலை" யில் காணலாம்). தத்தம் காவியங்களை அரங் கேற்றிய புலவர்கள் 449 பேர்கள். நெடுந்தொகை நானூறு, குறுந் தொகை நானூறு புறநானூறு எழுபது பரிபாடல் திருக்குறள் முத லிய நூல்கள் இதில் அரங்கேறியவை. இச்சங்கம் இருந்த விடம் தற்காலம் "மதுரை" என வழங்கும் உத்தர மதுரையே. பின்னர் இவை போன்ற சங்கம் ஏதும் கூடாததால் இதுவே கடைச் சங்க மாயிற்று.

சங்கங்கள் ஒடுங்கி யொழிந்த பின்னர் தமிழ்க்கு அநாதர காலம் ஆரம்பித்துவிட்ட தென்னலாம். ஆயினும் அதன் பின்னர் சேர



ரும் சோழரும் ஏறக்குறைய 250 வருஷங்கள் தம்மாலியன்ற வரை ஏதோ தமிழை அபிமானித்து வந்தனர் என்னத் தெரிகிறது. ஆயினும், தாயிழந்த பெண்ணுக்குச் சற்குணம் நிறைந்த மாற்றாந் தாய் வாய்த்ததுபோல பௌத்த ஜைனர்கள் பின்னர்த் தலைப்பட்டு மிக்க அருமையான இலக்கிய இலக்கண கலைஞான நூல்கள் இயற் றியும் பண்டை நூல்களுக்கு உரை யெழுதி வைத்தும் சுமார் 300 வருட காலம் தமிழ் வளர்த்தனர். தமிழ் கற்கப் புகும் மாணவர் பயிலும் நிகண்டு, நன்னூல் காரிகை யாப்பருங் கலமாதியவும், சிந்தா மணி குண்டலகேசி யாதிய பெருங் காப்பியங்களும் நாலடி முதலிய நீதி நூல்களும் சமண நூல்களே.

சமண காலஞ் சென்ற பின்னர் சோழ பாண்டி நாடுகளில் அதி வீரராமன், புகழேந்தி ஒட்டக்கூத்தர் கம்பர், அம்பிகாபதி, வில்லி, வருந்தருவாராதிய பெரும் புலவர்களும், தொண்டை நாட்டில் கச்சி யப்பர் சேக்கிழார் முதலிய புராண கவீசுரர்களும், ஈழமண்டலத்தில் அரசகேசரி, சகராசசேகரர் முதலிய தமிழ்வல்லோரும் ஆங்காங்குத் தோன்றி இலக்கிய இலக்கண கணித சோதிட நூல்களும் புராண காவியங்களும் பிரபந்தங்களும் செய்தருளினர். இவ்வாறு இன்னோ ரால் ஆதரிக்கப்பட்ட 800 வருடங்களுக்குப் பின், தமிழ்க் கல்விக்கு அரச பரிபாலனம் மென்மேலும் குறையத் தலைப்பட்டு க்ஷீண தசை யும் கிட்டியது. இச்சமயத்தில் ஆண்டாண்டு சைவாதீன மடங்கள் ஏற்பட்டு சேது வேந்தரது அன்னம் ஆவுடையப்பபிள்ளை நிழல், காவிரி நீர் முதலியவற்றி னுதவிகொண்டு பல்லாற்றானும் தமிழை வளர்த்தும் தமிழபிமானிகளை ஆதரித்தும் வந்ததும் காயற்பட்டினத் துச் சீதக்காதி என்னும் மகமதிய வள்ளல் தமிழ் அபிவிர்த்தியின் பொருட்டு இயன்ற உதவி புரிந்ததும் என்றும் பாராட்டற் பாலது.

மடாதிபதிகள் ஒரு காலத்தில் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட் டது மெய்யே எனினும் தற்காலத்தில் ஒவ்வொருவரும் தமக்கு வரு டந்தோறும் வருமானமாகக் கிடைக்கும் பல லக்ஷக்கணக்கான தொகைகளைப்பற்பல காரணங்களால் கடன் வாய்ப்பட்டும்,விவகாரச் சிக்குண்டும் வீணில் அழித்து வருவதும் தமிழபிவிருத்தியைப் பேருக்குக்கூட வைத்துக்கொண் டிராததும் விசனிக்கத் தக்கதே.

(2) இமய பர்வதத்தில் பார்வதிக்கும் பரமசிவனுக்கும் கடிமணம் நடந்த காலையில் அதனைக் கண்டு களிக்க வந்தோரது பாரம் தாங்காமல் வடபுலம் தாழ்ந்து தென்புலம் உயர அதனைக் கண்டு அனைவரும் அஞ்சி அழுங்க, இறைவன் அகத்திய முனியைத் தென்றிசை சென்று பொதிகையில் வதிந்து நிறையைச் சமப்படுத்து மாறு ஆக்ஞாபித்தன ரென்றும், அப்பொழுது அகத்தியர் "தென்தேசத்தார் செந்தமிழிற் சிறந்தோ ராதலால் அத்தமிழியல் அறியா யான் எங்ஙனம் ஆங்கு வசிப்பல்" என வருந்த, இறைவன் தமிழ் இயலுரைத்தருளி அவரைப் போக்கினன் என்றும், கந்த புராணம் கூறுதலானும், குறுமுனியார் தமது இலக்கண நூலால் ஒருவாறு தமிழைச் சீர்ப்படுத்தினர் எனக்கொள்ளக் கூடுமேயன்றி, அவரே தமிழ்க்கு முதல்வர் எனக் கொள்ளல் கூடாததாகும். ஆகவே, இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பல் விதியாதலின், அகத்தியர் காலத்துக்கு முன்புகூட தமிழ் இலக்கியங்கள் பல இருந்தனவெனத் தெரியவரும்.

அகத்தியர் செய்த இலக்கணத்துக்குப் பின், தொல்காப்பியர் அதங்கோட்டாசான் துராலிங்கன், செம்பூட்சேய் வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், அவினயன், காக்கை பாடினியன், நற்றத்தன், வாமனன் என்னும் அகத்தியரது பன்னிரு சீடரும் அவரிடத்தில் அவர் செய்த சிற்றகத்தியம் பேரகத்தியம் என்ற இரண்டினையும் முற்றக் கற்றுத் தத்தம் பெயரால் வேறு வேறு இலக்கணமும், அனைவரும் ஒருங்கு சேர்ந்துபுறப் பொருட் பன்னிரு படலமும் எழுதினராம்.

அப்பால் சங்கங்கள் ஏற்பட்டுத் தமிழ் வளர்க்கலாயின. அவை நீண்ட காலம் இடை யிட்ட ஒன்றன் பின் ஒன்றாய் நிகழ்ந்தன வாதலின், அவை தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் எனப் பெயர் பெறும். அவற்றைப்பற்றிய விஷயச் சுருக்கம் வருமாறு:—

தலைச்சங்கம்:—இற்றைக் கேறக்குறைய 10,000 வருடங்களுக்கு முன்னர் இருந்ததாகக்கொள்ளப்படும் இச்சங்கம், காய்சின வழுதி முதல் கடுங்கோன் வழுதி ஈறாக 89 பாண்டியர்களைக்கொண்டு 4500





எவ்வாறெனில், செந்நாப்போதார் தமது குறளை அரங்கேற்றுங்கால் ஒருகுறளைப்பற்றிய ஆக்ஷேபனைக்குச்சமாதானமும் அதன்பெருமையும் எடுத்துரைக்கப் பலதினங்களாகுமாம். இவ்வாறு 1330 குறளுக்கும் பசுமரத்தாணிபோல் அசைக்கமுடியாத சமாதானங்களைக்கூறி அவற்றின் பெருமையை நிலைநாட்ட எத்தனை நாள்கள் சென்றிருக்கும்! திருக்குறள் முழுதும் சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினியவாய் எப்பிழையுமின்றி இருந்தமையின் சித்தலைச்சாத்தற்குப் பரமானந்தம் அடையக்காலம் இருந்ததேயன்றிக் குத்திக்கொள்ள ஆவசியகமேஇல்லாதிருந்ததென்றும்,அவர் ஆநந்த மநுபவித்த அநேக தினங்களுக்குள் சித்தலைகாய்ந்து வற்றிப் பொருக்கு உதிர்ந்து முற்றும் குணப்பட்டதென்றும் மருத்துவன் தாமோதரனார் என்னும் கடைச்சங்கப் புலவரது குறட்சிறப்புக்கவியால் விளங்கும். அக்கவி வருமாறு:—

"சீந்திநீர்க்கண்டம் தெறிசுக்கு தேனளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்தும் மல்யானை! வள்ளுவர் முப்பாலால்
தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு.

(இதன்பொருள்:—கோபித்துக்கொண்டு மலையைப் பிளந்தெறிகின்ற மதயானை போன்ற பாண்டியனே! சாதாரணமாக உலகத்தில் யாவர்க்கும், சீந்திநீர்க்கண்டம் சுக்குத்தூள் என்ற மூலிகைகளைத் தேனொடு கலந்த மோந்தபின் தலைக்குத்து நீங்கக்கேட்டிருக்கிறோம். ஆனால் சித்தலைச் சாத்தனார்க்கு இத்தகைய மூலிகைகள் உபயோகிக்கப்படாமல் திருவள்ளுவரது திருக்குறளாலேயே தலைக்குத்துத் தீர்ந்தது".)

தன் தம்பி தன்மீதுள்ள பகையால் அறம் வைத்து "நந்திக் கலம்பகம்" என்றோர் வசைநூல் இயற்ற, அந்நூற் கேட்டலால் தனக்கு மரணமுண்டாவதெனத் தெரிந்திருந்தும், அந்நூலின்கண் உள்ள செய்யுட்களின் சொற்சுவை பொருட்சுவை முதலிய அழகுகள்பற்றி அதனிடத் தபிமானமுற்று அந்நூல் முழுவதையும் சந்தனக் கட்டைகொண்டு அடுக்கிய சிதையிலிருந்தபடியே கேட்டு அது முற்றுமளவிலே நந்திவர்மன் உயிர்துறந் தொழிந்தது முன் காலத்தரசரது தமிழ் அபிமானத்தை இனிது விளக்கும்.

(5) என்றும் இவ்வுலகில் யாரும் எள்ளிடும் கரும்பொன்றன்னைப், பன்னரும் பைம்பொனாக்கும் பரிசனவேதி போன்று, விறகு தலையனையும் வித்துவானாகச் செய்த கம்பர்போல்வார் ஈங்கியாருளர்?

(6) இராமபாணம் என்ற சின்னஞ்சிறுபூச்சி கோடானுகோடி நூல்களைத் துளைத்துத் தவிடுபொடியாக்கிப் பாழாக்கியது நாம் கண்கூடாகக்கண்ட விஷயமன்றோ? தொட்டாற்சாகும் இவ்விராமபாணமே இவ்வளவு வேலை செய்யுமாயின் மராமரங்களேழினும் ஒருகால் ஊடுருவிப் பாய்ந்த இராமபாணத்துக்கு மகிமை யென்னே?

இதுபோலவே கவலை சிறிதுமின்றிச் சிதலைக்கும் பாச்சைக்கும், இரையாக விடப்பட்டவை எண்ணிறந்தவை யன்றோ?

(7) "நெருப்பரியும், நீர் அறியும் நிலமறியும் தமிழின் இயல்" என ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமான் போன்றோரது தமிழ்ப் பாசுர மகிமைகளைப்பற்றிச் சிலாகித்துக் கூறப்பட்ட விஷயம் ஒரு விதமாய்ப் பார்க்கின்: இக்காலத்தும் முற்றும் உண்மையே யாகும். எங்ஙனமெனில், அரும்பொருள் அனைத்தினும் அரிய தமிழ்ஏடுகள்பல, அவற்றின் அருமை பெருமை அறிய ஆற்றல் இல்லார் கைவசப்பட்டு, அகஸ்மாத்தாக தீக்கிரையாயும், அறிவிலிகளாகிய அவரது மனைவிமக்களால் அடுப்பெரிக்கப்பட்டும் வருவதால் நெருப்பும், பதினெட்டாம் பெருக்கன்று பிரதி வருடமும் ஆற்றில் விடப்பட்டுவருவதால் நீரும், மட்கி மண்ணொடு மண்ணாய்ப்போம்படி விடப்பட்டு வருவதால் நிலமும், தமிழின் இயலை நன்கறியும் அன்றோ? முற்கூறிய பலவிதத்தும் பாழடைந்து இறந்துபட்டொழிந்த ஏடுகளில் தனித்தமிழ் நூல்கள் சிலவேனும் இருந்திருக்க வேண்டுமென அறிஞர்பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

(8) பூர்வஜென்ம புண்ணிய வசத்தினால் தமக்குப் பண்டை நூலாவது உரையாவது கிடைத்துவிட்டால் சில வீணர்கள் அதனைப் பலர்க்கும் பயன்படுமாறு வெளிப்படுத்துவதில்லை. தம்மிடத்திருக்கும் இவ்வருமைப் பொருள் பிறரிடமும் இருந்தால் தமக்கும் பிறர்க்கும் வித்தியாசம் ஏதுமில்லையே எனவும் அவ்வாறிருப்பின் அது



தம் பெருமைக்குக் குறைவென்றும் இவ்வுலோபிகள் மனப்பூர்வமாய் எண்ணி அதனைக் குடத்திலேற்றிய விளக்காக்கின்றனர். ஈதென்ன மௌடீகம்!

(9) வேறுசில அற்பர்களுக்கு அவர்கள் வருந்திக் கற்ற கல்வியும்பெற்ற அறிவும், சாதுரியத் திருடர்க்குக் கன்னக்கோல் உதவுவது போல் உதவுகின்றன. இன்னோர் சிலபாடல்களைப்பாடி அவற்றைப் புகையூட்டிய ஏடுகளில் தீட்டி மட்கவைத்துப்பின் வெளிப்படுத்தி பழைய ஏடுகள் கண்டுபிடித்ததாகப் பெருமை தேடிவருவோராயினர்.

(10) பின்னும் சில சைவ வைணவ வித்துவான்கள் தாம் பண்டை நூலாராய்ச்சியிற் புக்கு, தத்தம் மதத்திற்கும் கருத்திற்கும் சார்பாக பிறமத நூல்களைக்கூசாமல் மாற்றியும், தம்மதச்சிறுமையைக் காட்டக்கூடிய பாடல்களை அவற்றினின்றும் அறவே நீக்கியும், தம்மதப் பெருமையைக் காட்டக்கூடிய பாடல்கள் சில பாடி அவற்றை அதில் நுழைத்தும் தம் கொள்கைக்கு முரணானவற்றை அதினின்றும் விலக்கியும், திருத்திப் புதுக்கி நூல்களை அச்சிடுவாராயினர்.

(11) கற்பன ஊழமற்றோர் சிலர், பொருள் வருவாய் ஒன்றே கருதி, வியப்பிற்கும் நகைப்பிற்கும் இடந்தரத்தக்கதாய், இக்காலத்து அறிவிலிகள் பாடிய நூல்களை பண்டைக்காலப் புலவர் பெருமக்கள் பாடியவை எனவெளிப்படுத்திப் பாமர ஜனங்களை நம்பச் செய்வாராயினர். (புகழேந்திப் புலவர் பாடிய தேசிங்குராஜன்கதை யாதியவும், திருவள்ளுவர் பாடிய ஞானவெட்டியும் இன்ன பிறவும் இவ்வுண்மையை விளக்கும்). முற்கூறிய பல விஷயங்களும் தமிழ்ப்பெருமைக்கு நாசகாரணமாகுமே யன்றிநன்மை காரணமாகமாட்டா என்பது தெள்ளிதில் உணரத்தக்கது.

(12) அற்ப சந்தோஷிகளிற் சிலர் தமிழ் மொழிகள் யாவும் ஸம்ஸ்கிருதத்தின் திரிபென்று சாதிக்கிறார்கள். வேறுபெருமூடர் ஸம்ஸ்கிருத பதங்கள் எல்லாம் தமிழின் திரிபுகள் என்று பிரசித்தப்படுத்தி அவ்வாறு கூறற்கு, அச்சமின்றி அருவருக்கத்தக்கதும் சுத்த அபத்தமானதுமான காரணங்களைக் கற்பித்துக் கற்போன்ற

குருட்டபிமானிகளின் துதிபெற்றுக் காலங்கழிப்பாராயினர். இவ்விரு திறத்த கூப மண்டூகங்களும் நாணித் தலைகவிழ்ந்து வாயடங்கி நிற்குங்காலமே தமிழ்க்கு க்ஷேமகாலமாகும். நிற்க,

(13) பொருள் வருவாய்க்குரிய கல்வி, தமிழ்ப்பாஷையில் இல்லாமல் தற்காலம் ஆங்கிலத்திலேயே உள்ளன ஆதலின், புலவர் வழித் தோன்றியோரும் நம் நாட்டுச் சிறுரும் தமிழை அறவே மறந்து வயிற்றுக் கொடுமையைத் தணிக்கவும் புகழ் கருதியும் வேறு தொழில்களைப் புரியவும் ஆங்கிலம் கற்கவும் ஆரம்பித்தனர். இதனால் ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை ஓட்டியதுபோல், காலக் கொடுமையால் ஆங்கிலம் தங்கி வளரவும் தமிழ் மங்கித்தளரவும் நேர்ந்ததே.

(14) கொடும்போட்டியாற் கூடத் தமிழ் சிறிதுகாலம் வளர்ந்தது. பிள்ளைப் பாண்டியன் என்ற அதிவீரராமபாண்டியன்குட்டுப் பந்தயமும், வில்லிபுத்தூரார் காதறுப்புப் பந்தயமும் ஒட்டக்கூத்தன் வெட்டுப்பந்தயமும் வைத்துப் புலவரை வாதுக்கழைத்து வெற்றி கொண்டனர் என்பது,

“குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் ஈங்கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி இல்லை
இரண்டொன்று முடிந்ததலை இறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கவி ஒட்டக்கூத்தன் இல்லை
விளையாட்டாக் கவிகள் தமை விரைந்து பாடிக்
கெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகள் உண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே.”

என்ற தனிச்செய்யுளால் அறியலாகும். சாதாரணமாக, பந்தயம் என்று வந்துவிட்டால் யாரும் குட்டவும் காதறுக்கவும் வெட்டவுமே விரும்புவரேயன்றி, குட்டுப்படவும் காதறுபடவும், வெட்டுப்படவும் விரும்பார்கள். ஆதலின் எவ்விதத்திலாவது இவர்களைவென்று புகழ் அடைய முற்றக்கற்று வெளிப்போந்தார் பலர் இருந்தனர்



எனத் தெரியவருகிறது (இச்சமயம் ஓர் விஷயம் அறிவிக்கவேண்டி வருகிறது. அஃதென்னவெனில், வெட்டிய தலைகள் உடலில் ஒட்டப்பாடியதால் கூத்தற்கு ஒட்டக் கூத்தன் எனப் பெயர் கிடைத்தது என்று பலர் கருதுவது தவறு. ஒட்டுங்கூத்தன் என்றிருந்தால் அக்காரணம் பொருந்தும். ஒட்டம் என்பதற்குப் பந்தயம் எனப் பொருளாதலின் ஒட்டக்கூத்தன் என்பதற்குப் “பந்தயம் வைக்குங் கூத்தன்” என்ற பொருளே பொருந்தும்.)

(15) நம் நாட்டுப் பழைய சரித்திர ஆராய்ச்சிக்கும் மதவாராய்ச்சிக்கும் இன்றியமையாத பல கிரந்தங்கள் தமிழ்மொழியில் உள்ளதென்றும், இப்பாஷை, கல்வெட்டு சாஸனங்களையறிந்துஉண்மையை விளக்கும் பெருங்கருவியாகப் பயன்படத்தக்க மாண்புடையதென்றும், நீதி, இராஜ விசுவாசம், நாகரீக தர்மம் முதலியன புகட்டும் அரிய நூல்கள் வாய்ந்ததென்றும், இஃதொரு உயர் தனிச்செம்மொழி என்றும், சர்மானியர் மட்டுமேயன்றிச் சர்வகலாசாலைச் சங்கத்தாரும், தமிழ் மணமறியா அந்நிய துரைத்தனத்தாரும் அறிந்துகொள்ளாததே கடைசிக் காரணமாகும்.

## முடிவுரை.

சகோதரர்களே! நான் இனிச் சொல்லவேண்டியது சிறிதே. நமது நாட்டில் இன்னும் சின்னாட்கட்கெல்லாம் நாகரீக தர்மம் நன்குணர்ந்த கண்ணிய புருஷர்களாக வருபவர்கள் நீங்களே. ஆதலின் பெரியோரினும் நீங்களே சுயபாஷாபிவிருத்தியை நன்குபாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளவர்களென்பதை நன்றாய் உணருங்கள். நமது தாய்மொழியென்னுந் தமிழ்மொழியை ஓரோவழி ஒதுவித்துவந்த அரசாங்கத்தார்கூட இப்பொழுது அதனை நடத்தும் முறைகள் மிக வெறுக்கத்தக்கதாயிருக்கிறதென நான் சொல்லாமலே விளங்கும். வங்காளம்முதலியவடதேசங்களில் தேசாபிமானிகளின் பெருமுயற்சியால், ஆங்கிலந்தவிர ஏனைப் பாடங்கள் யாவும் சுதேச பாஷையிலேயே விடை எழுதலாம் என்று சர்வகலாசாலையார் விதித்திருக்கின்றனர். நாம் மட்டும் இந்தியரல்லரோ? அவர்களிடம் உள்ள சுதேச பாஷாபிமானங்கள் நமக்கேன் இல்லாமற்போகவேண்டும்? நம் தாய்

மொழி இத் தாழ்நிலை எய்தியதற்கு, நம்மைக்காட்டிலும் பெரியவர்களெனப் பேர் வைத்துக்கொண்டிருப்போரும், தாம் கற்றுணர்ந்தும் பிறர்க்கு கற்பிக்க ஆற்றலில்லாதாரும் அபிமானம் இல்லாதாருமே உத்தரவாதிகள்.

ஏனெனில், எதுஎக்கேடு கெட்டுப்போனாலும் சரியெனச் சுயநயம் ஒன்றையே கருதி, உண்டு உறங்கி இன்பம் நுகரும் விலங்குகள் போன்று இவர்கள் நாளைவரைக் காலங்கழித்துவரும் பெரும் பிழையினாலன்றோ "தேசபாஷாபிமானமின்மை" என்னும் கொடுந் தொத்து வியாதி சிறியோராகிய பின்னோரையும் பலமாய்ப் பீடித்துவிட்டது! இனி "நமக்குப் பின்வருபவர்கள், நம்மைப்பற்றியும் இத்தகைய குறைகள் கூறி நம்மை நிந்தியாவண்ணம் நாம் என்ன செய்ய வேண்டியது?" என்பதைப்பற்றிச் சிறிது யோசித்துப்பாருங்கள்! யோசிக்குந்தோறும் அயர்ந்த நிலையில் தற்காலத்திருக்கும் தமிழ் மொழியை உயர்ந்த நிலையை அடையச் செய்வதே நமது கடமை என்று உங்கள் மனதிற்படும். ஆயினும். "சாதாரணப் பேச்சில் கூட பாலைவனத்திடைக் காணப்படும் பைம்புற்றரைகள் போன்று, இங்கொன்றும் அங்கொன்றுமாக, வேற்று மொழிகட்கிடையே சிற்சில தமிழ் மொழிகளை (அவைகளும் சுத்தத் தமிழ் கூட இல்லை. பிழைமிக்கத் திரிபடைச்சொற்களை)ப் பிரயோகிக்கும் நாம், செய்யுள் மலிந்த தமிழ் மொழியிற் றேர்ச்சி பெறுவது எங்ஙனம்?" எனச் சிலர் ஐயமுறலாம். அவ்வாறு ஐயப்பாடுறுவோர்க்கு, என்னணம் தமிழை அபிவிருத்தி செய்யலாம் என்பதைப்பற்றிச் சிறிது கூறுவோம்:—

1. "கற்றிலனாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை."

என்று நாயனார் கூறியிருக்கின்றார் ஆதலின், நாம் நல்லொழுக்கத்துக்கும் தமிழ் அபிவிருத்திக்கும் ஏதுவானயாவும்குறையறவாய்ந்தசங்கங்களை ஏற்படுத்தி அதனைச்சார்ந்து தேச நன்மைக்கடுத்த நற்காரியங்களையும், மற்றும் விவேக விருத்திக்கின்றியமையாத நானா விஷயங்களையும், கல்வி கேள்விகளிற் றேர்ச்சி பெற்ற வித்துவ சிரேஷ்டர்களின் பிரசங்கங்கள் மூலமாகக் கேட்டுணர்ந்து அதன்படி ஒழுகவேண்டும். "எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்" என்பது சத்தியம்.



(2) முற்கூறிய பிரசங்கங்களில் அதி முக்கியமானவற்றைக் கற்றோரேயன்றி மற்றோரும் எளிதிற் பொருளுணர்ந்து கொள்ளும் வண்ணம் எளிய நடையில் எழுதுவித்து அச்சியற்றிச் சிறு துண்டுப் பத்திரிகைகள் ரூபமாய் பலர்க்கும் தரவேண்டும்.

(3) சுய பாஷாபிவிர்த்தியின் பொருட்டு ஏற்கனவே ஏற்பட்டுள்ள சங்கங்களின் அங்கத்தவராகியேனும், ஆங்குப் பிரசங்கம் நடக்குந்தோறும் வலியச் சென்றேனும் நமக்குத் தெரிந்ததைப் பிறர்க்குரைக்கவும், பிறர் கூற்றை நாமுணரவும் வேண்டும்.

(4) வயிற்றுப்பிழைப்பின் நிமித்தமும் அரசாட்சி முறையை ஐயமற அறியவும் ஆங்கிலம் அவசியமே எனினும் வீட்டிலும் பிற இடங்களிலும் அனாவசியமாக அப்பாஷையைப் பேசவும் எழுதவும் பழகிய துர்வாடிக்கையை அறவொழித்துக் கூடியமட்டில் சுத்தத் தமிழ் மொழியில் (அதாவது "நன்னு" "ஆத்துக்குப்போறேன்" "இங்க்ரேன்" முதலிய ஆபாசத் திரிபடைச் சொற்களையின்றிப்) பேசவும் எழுதவும் பழகவேண்டும்.

(5) உபாத்தியாயரது போதனாசக்திக் குறைவும் தமிழ் அபிமானமின்மையும், அதில், அசிரத்தையும் உண்மையிலேயே வெறுக்கத்தக்கதே எனினும், மாணவர்கள் முன்னினும் சிரமப்பட்டும் கற்றோரை அடுத்தும் விஷயங்களை அறியவேண்டுமேயன்றி, உபாத்தியாயர் குறையை ஓர் காரணமாகக்கொண்டு படிப்பில் அசிரத்தை காட்டக்கூடாது. இலக்கணம் எளிதில் கற்றற்கு இளமையே ஏற்ற பருவம் என்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கவேண்டும்,

(6) நமக்கு விதிக்கப்பட்டுள்ள பாடங்களின் அருமை பெருமைகள் மேல்வகுப்புகளுக்குப் போகப்போகத்தான் நன்றாய் விளங்கும். ஆதலின் கீழ் வகுப்புப் பாடங்களையும் சமயம் நேர்ந்துழி ஆவலொடு கற்றுணரவேண்டும். உதாரணமாக ஆத்திசூடி,

கொன்றைவேந்தன் முதலியவற்றின் பெருமைகளை நாம் அவை படிக்கும் சிறு வயதில் கண்டுகொண்டோமோ? "நப்போல்வளை" என்பதன் கருத்து அநேக பி. ஏ. மாணவர் கூட அறியார் என்று துணிந்து கூறலாம்.

(7) இலக்கிய வல்லார்க்கு இலக்கணப் பயிற்சி எளிதில் அமைவது இயல்பாதலின், ஒவ்வொருவரும் தமிழில் பிழையின்றி எழுதக் கற்றுத் தேறவும் வாசக புஸ்தகங்களிற் சிறந்தனவாய் உள்ளவற்றைப் பொருள் உணர்ந்து கற்கவும் வேண்டும்.

(8) பின்னர், நல்லாசிரியரை அடுத்து நாலடி குறளாதிய பதினெண் கீழ்க்கணக்குள் முக்கியமானவற்றையும், நளவெண்பா வில்லிபாரதம், நைடதம் கம்பராமாயணம் முதலிய காவியங்களையும் நிகண்டு, நன்னூல் முதலியனவும் கற்கவேண்டும். கற்கவே சிறிது தமிழறிவேனும் உண்டாகும். அறிவு உண்டாகவே சிறிது பாஷாபிமானமும் விரைவினிலுதிக்கும். அபிமானம் உதிக்கவே நாமே தமிழிற் சிறந்துள ஏனை அரும் பெரும் நூல்களை உபாத்தியாயர்களின் உதவிகொண்டாயினும் நாமாகவேனும் படித்து மதியூகிகளாவோம் என்பதிற் றடையின்று.

(9) கவி இயற்றப் பழகியோர் பண்டித பாமரர் பலர்க்கும் பயன்படத்தக்க எளிய இனிமை வாய்ந்த செந்தமிழ் நடையில் எழுதவேண்டும்.

(10) செய்யுள் ரூபத்தில் எண்ணிறந்த நூல்கள் தமிழ் பாஷையில் ஏற்கனவே இருக்கின்றன. ஆகலின், வசனநடையில் நாடகங் கதைகளும், நவீன கதைகளும் எழுதவும் எழுதுவிக்கவும் வேண்டும். தொல்லாசிரியரதுபோன்ற கடின நடையால் கற்றோரே களிப்பெய்துவராதலின், மற்றோரும் மகிழ்வெய்த அப்புத்தகங்கள் தண்டமிழ் மொழியிற் பெண்டிரு முணரத்தகும் விதம் எழுதப்படவேண்டும்.

(11) பிறபாஷைகளிலும் சுய பாஷையிலும் பாண்டித்தியம் வாய்ந்தவர்கள் தமிழில் அருமையாய் உள்ளனவற்றை பிறபாஷைகளி



லும் பிறபாஷையில் அருமையாய் உள்ளனவற்றைத் தமிழ் மொழியிலும் மொழி பெயர்த்து விளக்கவேண்டும். இதுகாறும் மொழி பெயர்க்கப்படாதிருந்த பௌதிக ககோள, கிருஷிக கணித இரசாயன சாஸ்திரங்களை இயன்றவரை இன்னோர் மொழி பெயர்க்க முயன்று தீரவேண்டும். இது செய்ய ஒவ்வொருவரும் பிறபாஷை கண்டுபிடித்தும் உண்டாக்கியும் வெளிப்படுத்தவேண்டும். [உதாரணமாக :—Fountain=நீர்ச்சிவிறி ; Physiology=உயிர் நூல் Biology=உடல் நூல் ; Psychology=உள நூல் ; Philology=மொழிஇயல் ; Zoology=விலங்கியல் ; Almyra=சுவர்ப்பெட்டி Bureau=நிலைப்பெட்டி × கிடைப்பெட்டி &c.]

(12) தமிழ்ப் பத்திரிகைகளைப் பல் குவித்தும் அவற்றிற்கு விஷயதானஞ் செய்தும் பொதுப் புத்தகசாலைகள் ஏற்படுத்தியும் பயனுற்றவும் பயனெய்தவும் வேண்டும்.

(13) தக்க வித்துவான்களைக் கொண்டு உரைபெறாத நூல்கட்கு உரை எழுதுவிக்கவேண்டும்.

(14) பண்டை நூலாசிரியர்க்கும் உரையாசிரியர்க்கும் அவர்கள் பிறந்த ஊரிலும் இருந்து பிரசித்திபெற்ற ஊரிலும் ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்தவேண்டும்.

(15) தொன்னூல் ஏட்டுப் பிரதிகள் யாங்குள? யாவுள எனச் சொல்லுமிடந்தோறும் விசாரித்துப்பெற்று இவற்றை மஹா வித்வான் மஹாமஹோபாத்யாய ப்ரும்மஸ்ரீ சாமிநாதையரவர்கட்கேனும் தற்காலம் மதுரையில் தமிழ்வளர்ப்பான் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கேனும் அனுப்பவேண்டும். ஐயரவர்களும் தமிழ்ச் சங்கத்தாரும் உடல் பொருள் ஆவி மூன்றுந் தந்தும் அவை பெறத்தயாராயிருக்கின்றனர். ஆதலின் அவை இருப்பிடம் அறிவிப்போரும் ஈவோரும் இன்னோரதுநன்றியும், வரும்பின் பொருளுதவியும் தவறாமற் பெறுவர்.

(16) சுயபாஷாபிமானம் மிகுதியாக எவ்வளவு இருந்தபோதிலும் பிறபாஷாத்துவேஷம் என்பது அணுவளவும் இல்லாதிருத்

த்லே மேன்மை. துவேஷ புத்தியால் விளையும் தீங்கும் விபரீதமும் மிக அதிகம் என்பதை என்றும் ஞாபகத்தில் வையுங்கள்."

எனது அன்பார்ந்த சகோதரர்களே, யான் இவ்வளவுதூரம் தமிழின் அருமை, பெருமை, தளர்ச்சி, வளர்ச்சி, பழமை, கிழமை முதலிய எடுத்துக்காட்டியது, அவற்றை அறியாதார் அறியவும், அபிமானமற்றார் அபிமானமுற்றாராகவும், ஆர்வம் உள்ளார் ஆர்வமிக்காராகவும், ஆர்வம் மிக்கார் மன எழுச்சிமேலிட்டு மீட்டும் மீட்டும் தமிழ் வளர்ச்சி செய்யவும் வேண்டியே. இவ்வாறு தமிழை மேம்படுத்துவோர் தம்மைத் தாமே மேம்படுத்திக்கொண்டோராவர். இதனை மறுத்துக்கூற எவராலும் இயலாது. ஆதலின் நாம் இனியேனும் நமது பொறுப்பை நன்குணர்ந்து நம் ஜனன தேசத்திற்கும், பின்னோர்க்கும், தாய்மொழிக்கும் கண்ணியத்தை உண்டாக்கும் புண்ணியத்தைக் கைப்பற்றுவோமாக.

இனி, தமிழ் அறிவினும் அபிமானத்தினும் அறச்சிறியேனாகிய என்னையும் ஒருபொருட்படுத்தித், தமது சபையினின்றும் வெளியாகும் முதல் விஷயமாக இவ்வியாஸத்தை எழுதும்படியான பெரும் பேற்றினை எனக் களித்த இராமநாதபுரம் மாணவர் இந்துமத வித்தியாப்பியாச சங்கத்தார்க்கு மங்கலவாழ்த்துக்கூறி நிறுத்துகின்றேன்.

" பரவுறக் கார் போல் ஈயும் பாற்கரப்பேர் கொள்வள்ளல்
அரசுறும் சேதுநாட்டுக் கணிகலமாக ஓங்கி
மருவு மாணவர்கள் இந்து மத வித்யாப் யாஸ சங்கம்
இரவியும் மதியும் உள்ள எல்லையில் காலம் வாழி"

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண் புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

இங்ஙனம்,

**ம. கோபால கிருஷ்ணையர்,**

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதி.

## சமாசாரக் கொத்து.

ஈஜிப்து தேசத்து கேடிவ் என்னுந் சுல்தான் பாரிஸ் போயிருக்கிறார்.

*　　*　　*　　*

எட்வர்ட் சக்கிரவர்த்தி கிளைவ் ஞாபக சின்னத்துக்காக 105-பவுன் கொடுத்திருக்கிறாராம்.

*　　*　　*　　*

பரோடா மகாராஜா 5-ஆயிரம் ரூபாய் முதல் வைத்து குடை செய்வதற்காக யந்திரசாலை ஸ்தாபித்திருக்கிறாராம்.

*　　*　　*　　*

லண்டன் கிங்ஸ் ஆஸ்பத்திரி பண்டுக்காக மிஸ்டர் கார்னீஜி என்னும் அமெரிக்கா கோடீஸ்வரர் லக்ஷம் பவுன் கொடுத்திருக்கிறார்.

*　　*　　*　　*

மரமேறும் யந்திரம்:—பூமியிலிருந்து மரத்தின் உச்சிக்கு ஏறுவதற்கு ருஷியாக்காரனொருவன் யந்திரம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறானாம்.

*　　*　　*　　*

சென்னை பச்சையப்பன்காலேஜ் ஆங்கிலப் போதகராயிருக்கும் மிஸ்டர் கன்னிங்ஹாம் என்பவர் வங்காள நாட்டு வித்தை இலாகாவுக்குச் செல்லுகிறார்.

*　　*　　*　　*

வங்காளத்தில் சுதேசிய முயற்சி அந்நிய சரக்கு விலக்கு ஆகிய இவைகளின் இரண்டாவது வருஷாந்தக்கூட்டம் ஆகஸ்டு மாதம் 7-ந்தேதி யன்று நடைபெற்றது.

*　　*　　*　　*

நாளது மாதம் 12-முதல் நிக்கல் ஒரு அணா நாணயம் வெளிக்கிளம்பிவிட்டது. பம்பாயில்மட்டும் மூன்று நாள்களில் சுமார் 1,600,000-நாணயங்கள் வெளி வந்திருக்கின்றனவாம்.

சுருட்டும் மதுபானமும் :— அமெரிக்கா கண்டத்து ஐக்கிய மாகாண ஜனங்கள் வருஷம் ஒன்றுக்கு 32 கோடியே 80 லெக்ஷம் பவுன் சுருட்டுக்கும் மதுபானத்துக்கும் செலவழிக்கிறார்கள்.

* * * *

சென்னை அக்கௌண்டெண்ட்ஜெனரலாயிருக்கும் மிஸ்டர் டோபி வருகிற நவம்பர் மாதம் வேலையினின்றும் விலகுகிறார். இவருக்குப் பதிலாக அநேகமாய் மிஸ்டர் ஆர். ஏ. காம்பல் என்பவர் நியமிக்கப் படுவார்.

* * * *

பெண்ணுத்தியோகம்:— ஆஸ்திரேலியாவிலுள்ள விக்டோரியா என்னும் மாகாணத்தில் இரண்டாயிரம் பெண்கள் ரெயில்வேயில் வேலையாயிருப்பதினால் அந்தக் கம்பேனிக்கு வருஷம் 1-க்கு முப்பதினாயிரம் பவுன் மிச்சமாகிறதாம்.

* * * *

இந்தியாவில் 147 பாஷைகள் பேசப்படுகின்றன. இதில் 10 லக்ஷத்துக்கு மேலானஜனங்களால் பேசப்படும் பாஷைகள் 18. ஹிந்துபாஷையை $8\frac{1}{2}$கோடி ஜனங்கள் பேசி வருகின்றனர். தேசமுழுவதிலும் 2,3000-ஜாதிகளிருக்கின்றன.

* * * *

திருவாங்கூர் வடபாகத்தில் அதிக மழையினால் எங்கே பார்த்தாலும் ஒரே வெள்ளமாயிருக்கிறதாம். நதிகளினருகாமையிலுள்ள ஊர்களெல்லாம் நீரின்கீழ் காணப்படுகிறதாம். இதனால் மேற்கே இந்த வருஷம் நல்ல மழை யென்று தெரிகிறது.

* * * *

பான்கோ நெல்.

அனேக குடிகள் பான்கொ நெல்லைப் பயிரிட்டிருக்கிறார்கள். ஆனால் அனைவருடைய அனுபோகம் ஒரே விதமாக இருக்கவில்லை. சிலருக்கு உபாயமாய்க் கண்டிருக்கிறது. ஒரு வருஷத்தில் அனுபோகத்தின் பிறகு இதைப்பற்றி சொல்லக்கூடுமானதாயிருக்கிறது.



* * * *

லார்ட் கர்ஸனுக்குத் தேகஸ்திதி சரிவரவில்லையென்றும் இவர் அதிகமாய் பொது விஷயங்களிலுழைப்பது கூடாதென்றும் தேகஸ்திதியை முன்னிட்டு பேர்சியா, மத்திய ஆசியா ஆகிய இவ்விடங்களுக்கு வருகிற ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் செல்வாரென்றும் தெரியவருகிறது.

• • • •

கிராம்பு உற்பத்தியாகிற இடம்:—ஆப்பிரிக்காக் கண்டத்துக்குக் கிழக்குத் துறைமுகப்பட்டணமாகிய சான்சிபார் பட்டணத்தில் லவங்கம் உற்பத்தியாகிறது. இந்த லவங்கத்தினால் அந்தத் தேசத்து மகம்மதிய சுல்தானுக்கு உற்பத்தியாகிற வரி 4-லெக்ஷத்து 40-ஆயிரத்து 237 ரூபாவாம்.

• • • •

நெசவு தொழிற்சாலை:—வட இந்தியாவிலுள்ள ஸ்ரீராம்பூரில் மத்தியதர நெசவு தொழிற்பாடசாலை யொன்றை ஸ்தாபித்து அதற்குத் தலைவராகவும் அவரது அஸிஸ்டெண்டாகவும் ஐரோப்பாவிலிருந்து இருவர் வரும்படிக்கும் இந்தியா மந்திரியார் சாங்கிஷன் செய்திருப்பதாய்த் தெரிகிறது.

• • • •

புகைக்கூண்டுப் பந்தயம்:—கிரேட் பிரிட்டனிலுள்ள ரானிலாக் என்னுமிடத்திலிருந்து 11 புகைக்கூண்டுகள் புறப்பட்டன. ஜூன் மாதம் 29 தேதி புறப்பட்ட அக்கூண்டுகளானவை பிரசண்ட மாருதத்தினால் மேலேறாமல், கீழிறங்கி விடாமலும் ஒன்றுமட்டும் வோர்திங் என்னுமிடத்தில் போய்த்தங்கியது.

• • • •

மோடார் வண்டி யோட்டம்:—எங்கும் மோடார் வண்டியோட்டமே வெகுவாய்ப் பலத்திருக்கிறது. நாகரீக மிகுந்த வரவர மோ

டார் வண்டிகளும் பிரபலித்து வருகின்றனவே. பிரிட்ஜு மோடார் வண்டிகள் மோகுமார்க்கமாக எட்ஜு என்பவர் 24 மணி நேரத்துள் 1572 மைல் தூரம் கடந்து சென்றுவிட்டாராம்.

• • • •

பெரிய புத்தகம்:— அமெரிக்காவில் ஒருவர் உலகத்தில் இல்லாத அவ்வளவு பெரிய புத்தகம் ஒன்றுஎழுதி அச்சிட்டுவருகின்றார். அது 120 பிரிவுகளையுடையது. பிரிவு ஒன்றுக்கு 1000 பக்கங்கள் அதற்குப் பிடிக்கும் செலவு 50-லெக்ஷம் ரூபா. எந்தக்காரியத்திலும் அமெரிக்கர் முன்னுக்குப்போகின்றனர். நம்மவர்களோ கேட்பானேன்?

* * * *

**குழந்தையோடு விளையாடும் பாம்பு:**—பாலக்காடு தாலூகாக் கொல்லங்கோட்டுக்கிராமத்தில் பிச்சுப்பட்டர் குமாரராகிய இரண்டு வயதுக் குழந்தையின் மேலேறி ஒரு சர்ப்பம் தினந்தோறும் விளையாடுகிறதாம்! விட்டார் கண்டு ஷை சர்ப்பத்தை உபத்திரவிக்க ஆரம்பித்தால் ஓடி மறைந்து பின்னும் வழக்கப்படி ஷை குழந்தையிடம் வந்து விளையாடுகிறதாம்.

* * * *

கல்கத்தாவிலுள்ள எல்லாக்காலேஜ்களிலும் பௌதிக பரீக்ஷணசாலை ஏற்படுத்துவதற்காக காலேஜ் ஒன்றுக்கு ரூபாய் 10,000 கவர்ன்மெண்டார் கொடுத்தார்கள். ரிப்பன் காலேஜ் சொந்தக்காரர் பாபு சுரேந்திரநாத் பானர்ஜி தமக்கு கவர்ன்மெண்ட் உதவி வேண்டியதில்லையென்று மறுத்துவிட்டுத் தம் காலேஜில் தாமே செலவு செய்து லெபொரெடரி ஏற்படுத்துகிறார்.

* * * *

இந்தியாவில் உள்ள ஏழைப் பொதுஜனங்களுக்கு ராகியே முக்கிய உணவுப்பொருளாய் இருப்பதோடும் கூடப் பணக்காரர்முதல் கேவலம் பிச்சைக்காரர்கள்வரையில் அநுஷ்டித்து வரலாம். காப்பி சாப்பிடுவதினால் நாளாவட்டத்தில் (Diabetes) மூத்திரவியாதி உண்



டாகிறது. (Tea) சாப்பிடுவதினால் பித்தம் அதிகரிக்கிறது. ஆகையால் கேட்டைத்தருவதான காப்பியை நீக்கல்வேண்டும்.

* * * *

## எருக்கு.

எருக்கஞ் செடிகளை பூண்டாக எண்ணப்பட்டிருக்கிறது. அவைகளை விருத்திசெய்வதில் குடிகள் பிரயாசத்தை எடுத்துக்கொள்கிறதில்லை. அவைகளைவெட்டி எருவாக நன்செய் நிலங்களுக்குப்போடுகிறார்கள். அதின் நார்கள் எடுத்துத் துணிகளை நெய்கிறார்கள். அது பட்டுபோலவே யிருக்கிறது. எருவாகவும், துணிகள் நெசவுக்கும் மிகவும் உபயோகமான செடிகளாக இவைகள் இருக்கின்றன.

• • • •

தாத்தா இரும்பு கம்பேனி அடுத்த வாரத்தில் ரிஜிஸ்டர் செய்யப்படும். இக்கம்பேனி முழுவதும் இந்தியர் சேர்ந்த கம்பேனியாகவே யிருக்கும். இந்தக்கம்பேனிக்கு இதுவரையில் 75-லக்ஷம் ரூபாய் சேர்ந்திருந்தது. பம்பாயில் நாளது மீ 13உ நடந்த நண்பர்கள் கூட்டத்தில் 50-லக்ஷம் ரூபாய் அதிகம் சேர்ந்திருக்கிறது. ஆகவே இக்கம்பேனிக்கு வேண்டிய மூலதனத்தில் 6-ல் 5-பங்கு சேர்ந்துவிட்டது.

• • • •

## திவி திவி செடிகள்.

அந்த தஞ்சாவூர்ஜில்லாவின் நீராரம்ப பாகத்தில் திவி திவி செடிகள்செம்மையாகப்பயிராகின்றன. காடாரம்பத்திலும் பயிராக்கலாம். மதிராஸ் பட்டணத்தில் ஒரு செடியில் உண்டாகிற காய்கள் வருஷம் ஒன்றுக்கு ஒரு ரூபாயாக விற்பனையாகி வந்திருக்கிறது. கோவிலடி கிராமத்தில் செம்மையாக அவை பயிராயிருக்கின்றன. அதின் காய்களை மை (Ink) செய்கிறதில் உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார்.

• • • •

**ஒரு வால் வேள்ளி:**—வங்காளம் (கல்கத்தாவுக்கடுத்த பொரக்பூரில் சில தினங்களுக்கு முன் ஓர் இரவு 8-30 மணிக்கு ஒரு பெரிதான

வால்வெள்ளி வானத்திலிருந்து தென்திசையை நோக்கி விழ்ந்ததாம். ஆனால் இந்த வெள்ளி மற்ற வழக்கமான வால் வெள்ளிகளைப்போல் விரைவாய் விழாமல் மிகவும் சாவதானமாய் விழுந்ததாகவும், பூமியின் கிட்டவந்தவுடன் பற்பல விநோதமான நிறங்களுடன் பிரகாசித்ததாகவும் சொல்லப்படுகின்றது.

• • • •

## பருத்தி சாகுபடி.

இதர தேசத்தின் பருத்தி இந்தியா தேசத்தில் செம்மையாக வளருகிறதாகத் தெரியவருகிறது. ஒபிண்ட் ஜில்லாவில் ஈஜிப்ட் பருத்தி திறமாய் வளருகிறது. கார்வாநிகா யென்கிற பருத்தி விஷயம் இன்னும் அநுபோகத்தில் வரவில்லை. சடைப் பருத்தி நம் தேசத்தில் வெகு காலமாய் சாகுபடியாகிக்கொண்டு வருகிறது. இது பயிரிட விசேஷ சிரமமாவது செலவாவது அவசியமில்லை சில ஜாதிப்பருத்திகள் குப்பகோணம் விவசாய சபையின் தோட்டத்தல் பயிரானதாக தெரியவருகிறது. அணைகரைக்குச் சமீபத்தில் கோவிலடி கிராமத்திலும் இது பயிராகி லாபகரமானதாகக் கேள்வி.

• • • •

## சர்க்கரை செய்வது.

ஆகிரா அயோத்திய கண்டத்தின் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் சக்கரை உண்டுபண்ணுகிற விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறதாகத் தெரிய வருகிறது. அத்தேசத்தில் விவசாய டைரக்டர் போலெண்டு துரையும் அவருடைய உதவி ஈ. டி. துரையவர்களும் பிரயாசம் எடுத்துக்கொண்டிருக்கிறார். கரும்பிலிருந்துபாலை எடுக்கிற யந்திரம் சுவல்ப விலையுள்ளது. அவசியமாயிருக்கிற இந்தச் சங்கதியில் இதர தேசத்தைக்காட்டிலும் மதிராஸ் பிரதேசம் பின்னிட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய டையரக்டர் அவர்கள் இந்த விஷயத்தில் சிரத்தையோடே இருக்கிறதாகத் தெரியவருகிறது. சுலபமான நல்ல யந்திரமும் வேண்டியதாயிருக்கிறது.

உ

குமரன் துணை.

# விவேகபாநு.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 6. } 1907௵ செப்டெம்பர். { பகுதி 9.

## கல்விப்பொருட்காட்சி.

சென்ற சில ஆண்டுகளாய் நம் காங்கிரெஸை யடுத்துப் பொருட்காட்சியும் நடத்தப்பட்டுவருவதை யெல்லோரும் அறிவார்கள். அதனால் நம் நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்தியடைய இடமுண்டாயிற்று, எங்கும் தொழிலாளிகளுக்குள் ஒருவித ஊக்கமும் உற்சாகமுமுண்டாயிருக்கின்றது. தேசாபிமானிகள் அனைவருமே இது விஷயத்திற் கவலை செலுத்த ஆரம்பித்திருக்கின்றனர். சுவதேசியம் ஏற்படவே இவ்வுணர்ச்சிக்குப் பேரநுகூலமாயிற்று. ஒத்துக்கு மத்தளஞ்சேர்ந்தாற்போல் இரண்டு மொன்றுகூடவே நாட்டின் க்ஷேமம் அபிவிருத்தியாகத் தொடங்கியிருக்கின்றது.

இம்மாதிரியாகவே கல்வி விஷயத்திலும் ஒரு பொருட் காட்சியேற்பட்டால் மிகவும் அநுகூலமென்று கருதிச் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சுதேச கல்விச் சங்கத்தார் சில மாதங்களுக்கு முன் ஒரு காட்சி யேற்படுத்த மிக்க சிரமமெடுத்துக்கொண்டு ஓர் ஏற்பாடு செய்தார்கள். அக்காட்சி இம்மாதத்தில் நடந்தேறியது. ஆங்கிலேய நாட்டினின்றுமே பல பொருள்கள் காட்சிக்கு அனுப்பப்பட்டன. நம்மிராஜதானியின் பலபாடசாலைகளினின்றும் பல பொருள்கள் அனுப்பப்பட்டு எல்லாம் மிகவும் சிறப்பாய் நடந்தன. தக்க நிபுணர்களால் உபந்நியாசங்கள் எழுதிப்படிக்கப்பட்டன. வித்

தியா இலாகாவிலுள்ளவர்கள் ஊக்கங்காட்டியதுமன்றி ஏனையோரும் சிறந்த ஊக்கங்காட்டி உழைத்தனர். ஹானரபில் மிஸ்டர் பி. சிவசுவாமி ஐயர் அவர்கள் அக்காட்சிசாலைத்திறப்பின் சமயத்தில் வெகு அழகான உபந்நியாசஞ் செய்தனர். பொருள்களெல்லாம் அலங்காரமாகவும் அணியணியாகவும் சர்வகலாசாலைக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்தன. அனைவரும் சௌகரியமாகவே வந்து பார்த்து ஆநந்திக்கும் வண்ணம் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எல்லாம் இனிது நடந்தன. கண்டோர் எவரும் களித்து ஆனந்த பரவசமாயினர். இதுவே நம் இராஜதானியில் நடந்த முதற் காட்சியாயினும் வெகு சிறப்பாகவே நடந்தது. வருஷா வருஷம் இம்மாதிரியான காட்சி டிஸம்பர் வாவு நாளில் வைத்துக்கொண்டால் பற்பல ஊர்களிலுமிருந்து ஏராளமான உபாத்தியாயர்கள் திரண்டுவந்து கண்டுகளித்துச் சிறந்த பயனை யடைவார்கள். சென்னை உபாத்தியாயர் சங்கத்தவர் இதுவிஷயத்தில் தக்க ஊக்கமெடுத்துக்கொண்டு கவர்ன்மெண்டாரையும் சகாயஞ்செய்யத் தூண்டித் தக்க ஏற்பாடுசெய்வார்களானால் நாட்டின் கல்வி நன்கு அபிவிருத்தியடைய ஏதுவாகும். சென்னையில்மட்டும் வைத்தாற் போதாது. தென்னிந்தியாவின் முக்கிய நகரங்களிலும் நடக்கும் வண்ணம் ஏற்பாடு செய்தால் நலம். சுதேச ராஜாங்கத்தாருடைய உதவியையும் நாடி நடத்துவார்களானால் பின்னும் சீரும் சிறப்பாயும் நடத்தலாம். கல்வி எல்லாருக்கும் பொதுவாதலாலும் எல்லோரும் ஒருங்குகூடி உழைக்கும்பக்ஷத்தில் உத்தமமான நன்மைகள் பல நம் தேசத்துக்கு உண்டாகி உபாத்தியாயர்களும் அபிவிருத்தியடைந்து நம் சிறுவர்களும் பயன் பெறுவார்கள். இவ்விதக் காட்சிகளைக் கண்ணுறும் உபாத்தியாயர்கள் உற்சாகங்கொண்டு உழைத்துக் கல்வியைச் சீர் பெறச் செய்வார்களென்பது திண்ணம். கல்வி யபிவிர்த்தியாகிறதற்கு இவ்விதக் காட்சிகள் ஒருவித சாதனமாகும். உபாத்தியாயர் சங்கங்கள் ஆங்காங்கு ஏற்பட்டு ஒன்றுகூடி உழைத்து இவ்வுத்தமத்தொழிலையபிவிர்த்தி செய்தால்மட்டுமே நாட்டுக்கு நலமுண்டு. கல்வியில் அபிமானமுள்ள நம் நாட்டார் அனைவரும் இதிலூக்கம் காட்டி உழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தனித்தனியா யுழைப்பதிற் பயனில்லை. ஒன்றுகூடி யுழைக்கும்பக்ஷத்தில் சீக்கிரத்திற் பயனடையலாம்.



கல்வி விஷயமாய் நம் நாட்டார் எத்தனையோ செய்யக்கடமைப்பட்டிருக்கிறார்கள். நம் கல்வியைப்பற்றி நாமே கவலை யெடுத்துக்கொள்ளாவிடில் க்ஷேமம் எப்படி யுண்டாகும். வரவர நம் நாட்டில் தொத்துவியாதிகள் நுழைந்து தீங்கிழைத்து வருகின்றன. சிற்சில வியாதிகள் நிலைபாய்க் குடிகொண்டுவிட்டன. அந்நியர்கள் நம் நாட்டைச் சிறுகச் சிறுகக் கைப்பற்றிய விதமே அயல் நாட்டு வியாதிகளும் நம் நாட்டில் நுழைந்து பெருந்தீங்கை விளைவித்து நிலையாய் நிற்கத் தலைப்பட்டுவிட்டன. இத்தீங்குகளினின்றும் நாம் விலகிச்சுகமாய் வாழவேண்டுமானால் கல்வியபிவிர்த்தியை ஊக்கத்துடன் நாடவேண்டும். சுகாதாரங்களைப் போற்றவேண்டும். கல்வியறிவில்லாமல் நன்மை தீமைகளை நாம் எளிதில் அறியமுடியாது. நம் தர்மங்களைத் தவறாமல் நடத்தவேண்டும். அந்நிய நாட்டுத் தர்மங்களை அனுஷ்டிப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்து நன்மையானவற்றை மட்டும் கைக்கொள்ளல்வேண்டும். அந்நிய நாட்டு அதர்மங்களையெல்லாம் நாம் நம் ஆசாரத்தில் நுழையவிட்டு அஜாக்கிரதையுடன் இருந்துவருகிறோம். அதனால் நம் மேன்மையான தர்மங்களெல்லாம் கெட்டு அடியோடே தொலையத் தலைப்பட்டன.

அது போலவே வித்தியாபிவிருத்தி விஷயத்திலும் அந்நிய நாட்டு வழிகளையே அநுசரித்துக் கெட்டுப்போகவேண்டுவதில்லை. அவைகளிலும் நன்மையானவற்றைமட்டும் அநுசரித்துக்கேடானவைகளை விலக்கிவிடவேண்டும். நம் நாட்டுப் பழைய மாதிரிகளெல்லாம் பயனற்றவையென்று நாம்முற்றிலும் ஒழித்துவிடுதல் கூடாது. அவைகளில் எத்தனையோ நல்ல விஷயங்கள் இருக்கின்றன. ஆகையால் எது நன்மை செய்யுமோ அதனைத்தேடி அநுஷ்டித்து அபிவிருத்தி செய்தல்வேண்டும். அவ்வாறின்றிப் புதுமாதிரியே நன்மை பயக்கத்தக்கது என்று மதிமயங்கி வீணில் நம் ஸ்வதர்மத்தை இழக்கவேண்டுவதில்லை. நம் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூற்றிரண்டு பேர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. இவ்வாறான அந்தகாரத்தில் நாம் மூழ்கியிருக்கிற வரை நம் தேசம் முன்னுக்கு வருவதெப்படி? பள்ளியிற் படிக்கத்தக்க சிறுவர்கள் அனைவரும் பள்ளியிற் படித்தாலன்றோ நாட்டின் கல்வி யபிவிருத்தியாகும். நூற்றுக்கு எழுபத்தெட்டுப்பிள்ளைகள் படிப்பில்லாமலிருக்கிறார்கள் என்பதைக் கேட்கப்பரிதாபமாக இருக்கிறது. ஆகையால் நம் நாட்டின் புத்திமான்கள் அனைவரும் இதுவிஷயத்தில் ஊக்கங்காட்டி ஒற்றுமையுடன் உழைத்து வருவதோடு உபாத்தியாயர்களும் தங்கள் வேலையைத் திறமையுடன் செய்து வருவார்களானால் நாடு க்ஷேமமடையு மென்பதிற் சிறிதும் ஐயமில்லை. உபாத்தியாயரைத் திறமையுடையவராகச்செய்வதற்குச் கல்விப் பொருட் காட்சி சிறந்த சாதனமே.

பத்திராதிபர்.

# ராபர்ட் கிளைவ்.

[172-ம் பக்கத்தொடர்ச்சி.]

கிளைவ் துன்பப்பட்டுக்கொண்டே இரண்டு வருஷகாலம் கழித்தானென்று கூறினோம். அவன் அவ்வாறான நிலைமையிலேயே இருக்கவில்லை. அவன் இந்தியாவுக்கு வந்துசேர்ந்த வருஷமே ஆங்கிலேயருக்கும் பிராஞ்சுக்காரர்களுக்கும் ஐரோப்பாவில் யுத்தந்தொடங்கிற்று.

இந்தச் சமயத்தில் இந்தியாவில் இவ்விரு ஜாதியாருமிருந்த நிலைமையைச் சிறிது ஆராய்வோம். ஆங்கிலேயர் சந்திரகிரி ராஜாவினிடமிருந்து 1639-ம் வருஷத்தில் சொற்பநிலம் வாங்கி அதில் ஒரு பண்டசாலை கட்டி அதற்கு ரக்ஷணையாக ஒரு சுவரெழுப்பி அதற்கு ஸெயிண்ட் ஜார்ஜ் கோட்டையென்று பெயருமிட்டார்கள். ஆனால் கர்னல் மாலிஸன் என்பவர் ஆங்கிலேயர் 1632-ம் வருஷம் பிஸ்நகர் இராஜாவினிடமிருந்து சிறிதுநிலம் வாங்கினார்களென்றும் அதற்குச் சுதேசிகள் சென்னபட்டணம் என்று பெயரிட்டார்களென்றும் ஆனால் பிறகு ஆங்கிலேயர் அதனை மதிராஸ் என்று அழைத்தார்களென்றும் கூறுகின்றனர்.

ஆனால் அவர்கள் வியாபாரம் செய்து இலாபம் சம்பாதிப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தார்களேயொழியச் சுதேச அரசர்களுடைய கலகங்களில் தலையிட வேண்டுமென்றாவது ராஜ்ஜியம் சம்பாதிக்கவேண்டுமென்றாவது சிறிதும் ஆசைகொள்ளவில்லை. தங்கள் நிலத்துக்குத் தாங்கள் செலுத்தவேண்டிய தீர்வையைக் கர்னாடக நவாப்புக்குச் செலுத்தி அவர்களது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்தார்கள். பிரான்ஸியரும் வியாபாரத்துக்கே வந்தவர்களாயினும் அவர்கள் அம்மட்டோடே நிற்கவில்லை.

சென்னைக்குத் தென்மேற்கே 68 மைல் தூரத்தில் பிரான்ஸிய வியாபாரிகளுக்குத் தலைவனான பிரான்ஸிஸ் மார்டின் என்பவன் பீஜப்பூர் அரசனிடமிருந்து 1672-ம் வருஷம் புதுச்சேரியென்ற ஒரு கிராமம் விலைக்கு வாங்கினான். பிறகு அதை விசாலமாக்கி அழகு



படுத்தினான். இதுவே பின் பிரசித்திபெறுவதாயிற்று. மார்டினது ஜீவகாலம்வரையில் பிரான்ஸியர் வியாபாரத்துறையிலேயே கண்ணாயிருந்துவந்தார்கள்.

இவன் 1706-ம் வருஷம் இறந்துபோகவே இவனுக்குப்பின் வந்த மான்ஷியர் மோஸ் என்பவன் பிரான்ஸியரின் தலைவனானான். இவன் சாமர்த்தியசாலி. சுதேச அரசர்களுடன் உறவாடுவதிலும் அவர்கள் யுத்தத்தில் தலையிடுவதிலும் அவர்களிடமிருந்து பூமியோ பொருளோ சம்பாதிப்பதிலும் கருத்தாயிருந்தான். இவன் போட்ட விதைதான் இவனுக்குப்பின்வந்த டூப்ளேகாலத்திற் பலனளித்தது.

டூப்ளே சுதேசிகளின் நடையுடை பாவனையை நன்கு அறிந்தவன். இவன் மனைவிக்குச் சுதேசபாஷைகள் தெரிந்தமையால் அவை அவனுக்கு அநுகூலமாயின. அதனால் அவன் சுதேசிகளிடத்தில்நன்கு பழகநேர்ந்தது. ஐரோப்பியர் சுதேசிகளுடன் கூடிக்குலாவி அவர்களுடைய உட்கருத்தை நன்கு அறியவேண்டுமானால் அவர்கள் பாஷையை நன்கு அறிதல் பெருஞ்சாதனமாகும். இதனைப் பாதிரிகள் நன்கு அறிந்து பயனடைந்து வருகிறார்கள். முற்காலத்தில் ஸிவில் உத்தியோகஸ்தர்கள் அவ்வாறே செய்துவந்தனர். குடிகளுக்கு அதனால் எத்தனையோ நன்மைகள் உண்டாயின. தற்காலத்திலோ அவ்வழக்கம் மிகவும் குன்றிவிட்டது. ஐரோப்பிய ராணுவ உத்தியோகஸ்தரைக்கொண்டு சுதேசிகளைப் பழக்கினால் அவர்களும் ஐரோப்பியர்களைப்போலவே நல்ல ராணுவவீரராவார்கள் என்பதை முதல் முதற் கண்டுபிடித்தவன் டூப்ளே. அதனால் அதிக செலவில்லாமற் சேனை சேர்த்து வந்தான். ஆங்கிலேயர் இம்மாதிரிவழக்கத்தை மிகவும் பிற்காலத்திலேயே அனுசரித்தனர். ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரான்ஸியருக்கும் யுத்தம் தொடங்கவே இந்தியாவிலும் யுத்தம் நடக்குமென்று அங்குள்ள ஆங்கிலேயரும் பிரான்ஸியரும் எதிர்பார்த்தனர். ஆங்கிலேயருக்கு அவர்கள் நாட்டினின்றே யுத்தஞ்செய்யும் வண்ணம் கட்டளை பிறந்ததுமன்றி அதற்கென்று சேனையும் வந்திறங்கிற்று. டியூப்ளேக்கு யுத்தஞ்செய்யச் சிறிதும் மனமில்லாமல் ஆங்கிலேய கவர்னருக்குத் தூதனுப்பி யுத்தத்தை ஒழித்துவிட வகைதேடினான். ஆங்கில கவர்னர் அதற்குச் சம்மதிக்கவில்லை.

டியூப்ளே உடனே தனக்குச் சமீபத்திலிருந்த தன்னாட்டானாகிய லாபோர்டனே என்ற போர்வீரனைச் சேனையுடன் அழைப்பித்தான். அவ்வீரனும் வந்த அன்றேஸெயிண்ட்ஜார்ஜ்கோட்டையைமுற்றுகையிட்டுப் பிடித்தான். ஆங்குள்ள ரணவீரர்கள் அனைவரும் அவன் வசமாயினர். அவனும் பொருள்கொடுக்கும் பக்ஷத்திற் கோட்டையைவிட்டுவிடுவதாகச் சொன்னான். இந்த ஏற்பாடு இவனுக்கு மேல் அந்தஸ்திலிருந்த டியூப்ளேக்குச் சம்மதமில்லை அவன் எல்லோரையும் கைதிகளாக்கிப் புதுச்சேரிக்குக் கூட்டிப்போய் அவ்வூர் தெருவழியாக அவர்களை நடத்தி அவமானப்படுத்தினான். அப்பொழுது கிளைவ் சென்னையிலிருந்தும் இத்துன்பத்துக்குள்ளாகாமல் தப்பித்துப் பக்கிரிவேஷம் போட்டுக்கொண்டு தன் நண்பன் எட்மண்ட் மாஸ்கிலேன் என்பவனோடு புதுச்சேரிக்கு 14 மைல் தெற்கேயிருந்த ஸெயிண்ட் தாவீது கோட்டைக்குக் கால்நடையாய்ச் சென்றான். அவ்விடத்திலேயே அவன் இரண்டு வருஷகாலம் கழித்துவந்தான். அங்கு அவனுக்கு அதிகவேலையில்லாமையால் சாவகாசமான காலமெல்லாம் சீட்டாடுவதிற் கழித்துவந்தான். ஒரு கால் அவன் ஒரு ரணவீரனோடு சீட்டாடுகையில் தன்னை அவ்வீரன் மோசஞ்செய்ததாகக் (கிளைவ்) கூறினான். உடனே அவன் துப்பாக்கி கைக்கொண்டு சண்டைக்கு அழைத்தான். சண்டையிடுகையில் கிளைவ் தன்சத்துருவைச் சுடவே குறிதவறிவிட்டது. உடனே சத்துரு அவனை நெருங்கி அவன் தலைக்கு நேராகத் தன்கைப்பீரங்கியைப் பிடித்துக்கொண்டு அவனை உயிர்ப்பிச்சை கேட்கும்படி சொன்னான். கிளைவும் அவ்வாறே வேண்டித் தன் உயிரைக் காப்பாற்றிக்கொண்டனன். அதன்மேல் அவன் சத்துரு தன்னைப் பழிகூறியது தப்பிதம் என்று அவனைச் சொல்லச்சொன்னான். அப்பொழுதும் சொல்லமாட்டேன் எனவே சத்துரு அவனைச் சுடுவதாகப் பயமுறுத்தினான். "சுடு. நீ வஞ்சித்தாயென்று நான் சொன்னேன். இன்னும் அதையே சொல்லுகிறேன். கொடுக்கவேண்டியதை ஒருகாலும் கொடேன்" என்று மறுமொழிகூறினான். எல்லோரும்கிளைவைத் தைரியத்திற்காகப்புகழ்ந்து பேசினார்கள். ஆனால் ஒருபொழுதும் அவன் அந்தச் சத்துருவுக்கு முன்வரச் சம்மதிக்கவில்லை. சீட்டாடுங்காலத்திலும் அந்தச் சந்தர்ப்பத்தைப்பற்றி அவன் பிரஸ்தாபிக்கவேயில்லை. "அவன் எனக்குப் பிராணனை அளித்தவன். அவனுடன் இனிச் சிநேகம் பண்ண எனக்கு விருப்பமில்லையாயினும், அவன் அநியாயமாக ஜபித்தபணத்தைக்கொடுக்கப் பிரியமில்லையாயினும், அவனுக்கு நான் ஒருநாளும் தீங்கிழையேன்" என்று சொன்னான். இதே சங்கதியைப் பிரௌனிங் கவிஞர் "கிளைவ்" என்ற தமது கவியில் அவன் தன் உயிர்ப்பிச்சை கேட்ட சங்கதியைத் தவிர்த்து மற்றவற்றைத் தெளிவாகக்கூறியுள்ளார்.



1748-ம் வருஷத்தில் ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை போட்டார்கள். கிளைவ் சொற்ப காலம் பட்டாளத்தில் ஒரு சிறு பகுதிக்கு அதிபதியானான். அச்சமயத்தில் மருந்து கொணரத் தன் இருப்பிடத்தைவிட்டுச் சிறிதுநேரம் வெளியேபோயிருந்தான். அது விஷயமாய் இவனுக்கும் வேறொரு உத்தியோகஸ்தனுக்கும் தர்க்கமுண்டாயிற்று. அந்த உத்தியோகஸ்தன் கிளைவ் அவ்விடம் விட்டுப்போனது பயத்தினாலேயொழிய ஊக்கத்தாலன்று என்றான். இதுவிஷயமான வாக்குவாதத்தில் அந்த உத்தியோகஸ்தன் கிளைவைக் கைநீட்டியடித்துவிட்டான். உடனே அவனைச் சண்டைக்கழைத்தனன். சண்டைக்கு இடம்கொடாமல் மேலதிகாரிகள்விசாரணை செய்தார்கள். அந்த உத்தியோகஸ்தன்மேல்குற்றம் ஏற்பட்டது. அதற்காக அவன் கிளைவைப் பட்டாளத்தின்முன் மன்னிப்புக்கேட்கும்படி உத்தரவு பிறந்தது. ஆனால் அடித்ததின் விஷயமாய் நியாயாதிபதி யாதொன்றும் மேல் நடத்தவில்லை. முற்றுகை முடிந்தவுடன் அதுவிஷயமாய்க்கிளைவ் தூண்டிப்பார்த்தும்மறுதலித்துவிட்டார்கள். கிளைவ் தனக்கு தீங்கிழைத்த உத்தியோகஸ்தன் தலைக்குநேரே தன் பிரம்பை அசைத்துக்காட்டி "நீ ஒரு பெரிய கோழை. என் கையில் நீ அடிபடக்கூட யோக்கியதை இல்லாதவன்" என்றான். மறுநாளே அந்த உத்தியோகஸ்தன் வேலையைவிட்டு நீங்கிப்போய்விட்டான்.

போர்ட்ஸெயிண்டுடேவிட் கோட்டையிலிருக்குங்கால் நடந்த மற்றோர் சங்கதியும் விநோதமாயிருக்கும். அஃதாவது:—

பார்டிஸ் என்ற ஒரு பாதிரியாரிருந்தார். அவர் கிளைவைக் கோழைத்தனமுள்ளவனென்றும் பரமதுஷ்டனென்றும் சிலர் முன்

சொன்னதாகக் கிளைவின் காதுக்கெட்டியது. மிஸ்டர் லெவிமோஸஸ் என்ற தகுந்த உத்தியோகஸ்தர்முன்னிலையில் அந்தப்பாதிரி தன்னைப் பார்த்து பிரம்பை அசைத்ததும் காப்டன் கோப்பினிடம் அதேமாதிரி தன்னைப்பற்றிப்பேசிக்கொண்டிருந்தபொழுது தன் எலும்பை ஒவ்வொன்றையும் முறித்துவிடுவதாகச் சொன்னதும் கிளைவுக்குக் கோபத்தைமூட்டின. கிளைவ் அவனைக் கூடலூரில் கண்டபொழுது அவன் பேரில் கடுங்கோபங்கொண்டு அவனைத் தன்பிரம்பால் இரண்டு மூன்று அடிஅடித்தான். பாதிரியும் இவனை அடிக்க இருவருக்கும்சண்டைமூண்டது. காப்டன்ஹூகாஸ்என்பவர் அதனைஉடனே விலக்கிவிட்டனர். அதைப்பற்றி நடந்த விசாரணையில் கிளைவ் செய்தது பொறுக்கமுடியாத கோபத்தாலென்றும் அந்தப்பாதிரி செய்ததே தப்பிதமென்றும் தீர்மானித்ததுந் தவிர அதை விசாரணைசெய்தவர்கள் கிளைவ் இயற்கையாய்ச் சாந்தமுள்ளவனென்றும் துஷ்டத்தனத்துக்குப் போகிறவனல்லனென்றும் எழுதியனுப்பியிருக்கிறார்கள். இது பொதுவாய்க் கிளைவைப்பற்றிச்சொல்லப்படுகிற குணங்களுக்கு மாறாக இருக்கின்றது. மேற்குறித்த சம்பவங்களிலிருந்து சரித்திரக்காரர்கள் கிளைவின்குணத்தைப்பற்றிப் பற்பலவிதமாக அபிப்பிராயப்படுகின்றனர். மில் என்பவர் கிளைவ் தன்னோடு சேர்ந்தவர்களுடன் எப்பொழுதும் கலகம் பண்ணுகிறதே வழக்கமென்கின்றனர். மிஸ்டர் கிளீக் என்பவர் கிளைவையே குற்றங்கூறுகிறார். ஆனால் ஸர்ஜான்மால்கம் மட்டும் கிளைவின் செய்கைகள் குற்றமாகாவென்றும் தைரியத்துக்கு அறிகுறிகளென்றும் கூறுகின்றனர். எவ்வாறிருப்பினும் இப்பருவத்தில் கிளைவ் பிடிவாதமுள்ளவன்என்பதும் பெருந்தகைமை வாய்ந்தவனல்லன் என்பதும் நம் கருத்து. ஆனால் அவன் தைரியத்தை எவரும் வியவாமலிரார்.

புதுச்சேரி முற்றுகை தவறிவிட்டது. அதன்பின் கிளைவ் மறுபடியும் வியாபார விஷயமாகவே வேலைபார்க்க நேர்ந்தது. புதுச்சேரி முற்றுகைச்சந்தர்ப்பத்திற்றான் கிளைவின்சாமர்த்தியம் மேஜர் லாரன்ஸுக்குத் தெரியவந்தது.

(இன்னும் வரும்.)

எஸ். சாமிநாதையர்.

உ

# ஸ்ரீ மீனாக்ஷிஸ்தோத்திரம்.

எழுசீர்க் கழிநெடில் விருத்தம்.

நிறைவுற் றகன்ற கடலைக் கரண்டி
நிறைவைத் தளக்க நினைவோர்
முறையொக்கு முன்ற னியல்பைத் தொகுக்க
முயலல் செறிந்த பொறியின்
சிறையுற்ற வென்ற னறிவுக் குகந்து
தெரிவிப்பை யுய்யு முறையை
கறையுற்ற கண்டர் மிசையிற் பொலிந்த
கயலொத்த கண்ணை யுடையாய். 1

முறைவே றிலாது நினையே நினைந்து
மொழியுந் தவத்தி லமர்வோர்
குறையொன்று காண்ப ரிலையென் றுரைத்த
குறியென்ன பொய்த்த வுரையா
மறையுந் துறந்த மனமுந் திரும்ப
வழியற்ற போத நிலையும்
நிறையுஞ் சுகத்தி னுருவே யுரைப்பை
நெறியொன்று சேற்க ணிதியே. 2

மாசற்ற நின்ற னுறவொன்றை நாடி
மகிழாது ஞால வுறவின்
பாசத் தழுந்தி நிலையொன் றிலாது
பலவாறு பொய்த்த பொறியின்
மோசத்து ளேங்கு மெளியேன் றிருந்த
முறையொன் றுரைப்பை வெகுளார்
நேசத் தமர்ந்து விலகாத போத
நிலையே கயற்க ணெழிலே. 3

மறையுட் சமைந்து பொறைபெற் றமர்ந்த
மதியர்க் கிசைந்த வமுதே
குறையுற் றகன்ற கடலொத் திடும்பு
குழுவிப் பவத்து முழுகித்
துறைபற்றி யேறு நெறிபெற் றிடாது
துயரத் தழுந்து மெளியேன்
கறையற் றிடாறு தெரிவித் துரைப்பை
கயலொத்த கட்க ணகமே. 4

காமாதி மூழ்கி யேமாறி னைந்து
கதியற்று நின்ற னடியெண்
ணுமட நெஞ்ச மோவென்னை நாளு
நலிவிக்க வான துயரம்
போமா றிசைப்பை யோமீளு மாறு
புகலா தகற்ற வுளமோ
மாமேவு சம்பு வாமாங்க மொள்ளு
மணியே கயற்கண் வடிவே. 5

விடாத பந்த மோடாசை கொண்டு
மெலிவுற் றலைந்து புவியில்
கோடானு கோடி நினைவிற் சிதைந்து
குலைவுற்ற வென்னை யினியிப்
பாடேது மின்றி நீடூழி வாய்ந்த
பழமைப் பவப்பு ணரியின்
மேடேறு மாறு தனையின் றுரைத்து
விடுவிப்பை மீன விழியாய். 6

மண்ணாசை வாழு மனையாசை மாதை
மருவாசை பொன்னை வரமென்
றெண்ணாசை மெய்யி னிடமாசை புக்கி
யிழுபட்டு நொந்து புகலற்



கொண்ணாத வாறு திரிவுற்ற பேதை
யுணர்வோடு நாளு மெளியேன்
புண்ணாதல் நீங்க வருள்வாய் நிறைந்த
பொருளே கயற்க ணருளே. 7

இல்லாத தொல்லை யினிமேலாடி யாடி
யிமையிற் குளாகி நிலையாய்
நில்லாத வாழ்வை நிலையென் றுணர்ந்து
நெறியற்ற வேழை யெனையோர்
சொல்லா விருத்தி வினையா லமைந்த
துயரத்தை நீக்கி யருள்வாய்
கல்லாத சிந்தை கருதா தொளித்த
கவடே கயற்க ணவளே. 8

ஓடாத சிந்தை யுலவாது நோக்க
லுனையோத லின்றி மறுசொற்
கூடாத நாவு வினவாத கேள்வி
குறையற்று நின்ற னருள்கை
வீடாத வாழ்வு பெறமுன்பு பூசை
வினையேன் புரிந்த திலையா
வாடாத போத மலரே யுரைப்பை
வழியொன்று மீன விழியாய். 9

மின்னாடை சுற்றி யணிபூண்டு நூறு
விதமூட்டி யன்பு மிகவிப்
பன்னாடை போன்ற வுடலைச் சுமந்து
பலகாலு நைந்து நிலையாப்
பொன்னோ டிழிந்த புவியோடு பொய்த்த
பொறியோடு கூடி நலியா
துன்னோடு தூய்மை யுளரோடு நிற்க
வுதவாய் கயற்க ணுருவே. 10

### எழுசீர்க்கழிநெடில் விருத்தம்.
### வேறு

கானலாகு நதிமூழ்கியோர்மலடிகைக்குழந்தைககனத்துமீ
தானதுன்மலரணிந்துநன்முயலளித்தகொம்பமைதனுத்தரித்
தானமின்றிவிளையாடினனெனவுரைக்குமாறுபுவியுறவெனுங்
கானழுந்துமெளியேனையன்பினொடுகாப்பதுன்கடமைசேற்கணாய். (1)

தந்தைதாய்மனைவிமைந்தர்தந்தமதுசாதகத்தைநினையாதருச்
சொந்தமோடெனையுவந்திடாதநெறிதோன்றிடாதடிமைபோன்றியான்
நிந்தையாமுறைபுகுந்தவாவொடுநினைத்தொழாதுபிறவித்துயர்ப்
பந்தமீதமருமந்தனென்னைவிழிபார்க்கிலென்கயலினோக்கினாய். (2)

கற்றிடாதமதிபற்றியேறுமுறைகாணிடாதமதிகோணுமா
றற்றிடாதமதிசுற்றமீதடிமையானபேதைமதிநானெனுங்
குற்றமுள்ளமதிசற்றுமுன்னினைவுகொண்டிடாமதிதிரண்டியான்
நிற்றபுன்கசடகற்றவோர்முறையைநீயிசைப்பைகயலேய்கணாய். (3)

இன்மைபோயினுளவன்மையோடுசிறிதீகையின்றியணைதோகையார்
புன்மைமீதுவிழுதன்மைகொண்டுமனைபொருளெனும்பெரியவிருளதிற்
சன்மமூழ்கியிழிகன்மமேயெனதுசரியெனிற்கருணைபுரிவையோ
பன்மையின்றிநிறைசின்மயத்துரியபான்மையேதிகழுமீன்கணாய். (4)

அன்னையுந்திவிழுமுன்னமிவ்வுலகினாசையோடுமதிமோசமாய்
முன்னமைந்தவினைதன்னுளாகியொருமுடிவிலாதலையுமிடிமையேன்
பொன்னவாவொடிடைமின்னர்பந்தமொடுபொய்த்தகாயமதைநித்தமென்
றுன்னுநாயனிழிபுன்னியல்புடைமையொழிவதென்றுகயல்விழியினாய். (5)

கேடமர்ந்தமதியோடலைந்துமுழுகிடுபவக்கடலினிடைபுகுந்
தோடுகானலைதநாடுசெவ்வியதையொத்துவித்தமனநத்தியான்
தேடுமுன்புபடுபாடுகோடியெனதிடநிறைந்தகொடுமிடிமைபோய்க்
கூடியன்பருறவாடிவாழுமுறைகூறுவாய்கயலைநேர்கணாய். (6)

நூல்வலார்களொருகாலியம்பிடினுநுட்பமுன்னுமுயர்கற்பிலாத்
தூலமானவறிவாலடர்ந்துநிறைதுயர்மலிந்தவுடலியல்புளேன்
காலனின்றுவருமோலையென்னையழைகணமெரிந்துபடுபிணமெனுங்
கோலமின்றுனதுபாலுவக்குநெறிகுறிகயற்பொலிவுநிறைகணாய். (7)

துஞ்சுபோதகலமிஞ்சுபோதுனதுதூயபொன்னடியினேயமாய்
வஞ்சமின்றியுனைநெஞ்சிலேகருதிவாழ்த்தியும்பிறவிபாழ்த்தயான்
அஞ்சிநொந்துபிரபஞ்சநோயதிலழுந்தவைப்பதுபொருந்துமா
விஞ்சைமெல்லியரிறைஞ்சுதேவதருவேகயற்கணிறைதோகையே. (8)



பாடுபட்டுணவுதேடியிட்டுவினைபயிலவைத்தறியமுயலுளத்
தோடுநூல்வலவுநாடியுய்யுமுறையுன்னுமுன்னரிடைதன்னிலிக்
கூடறத்தனதுநாடுபற்றவழைகூற்றினுக்குமறுமாற்றமொன்
றுடியானணுகுகேடகற்றவருள்வாய்நெடுங்கயலையேய்கணாய். (9)

தானமின்றிநிறைவானமின்றியொருசடமுமின்றியணுவிடையெழுந்
தானபூதகுணமீனுநாமவுருவைம்பொறிக்குமயலென்பதா
மோனநின்றமதிதேனெனப்பருகுமோதமேயுடலுபாதியை
நானெனக்கருதுமீனனென்றநிலைநண்ணல்சேலைநிகர்கண்ணினாய். (10)

---

## III. அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

பெற்றவிடமும்பொருளும்பேதையருமன்பரெனப்பேர்கொண்டென்னைச்
சுற்றியமரும்பலருமிவ்வுடலும்போம்வழிக்குத்துணையாமென்றே
கற்றதெலாமன்னவர்க்கேவியமாக்கிநின்னடியைக்கருதிவாழாச்
சிற்றறிவன்யான்பிழைக்கமுறையுண்டோமாமதுரைச்சேற்கண்ணாளே. (1)

சொன்னதுகேளாமனத்தின்கூட்டுறவால்யானடைந்ததுயரம்நாவால்
இன்னபடியென்றுரைக்கவேலாதுதென்மதுரையிறைவனோர்பால்
தன்னுபசும்பொற்கொடியாஞ்சேல்விழியுன்சேவடியைத்தொழுதிடாத
தென்னவினையாற்பாண்டிமன்னர்குலச்செல்வமெனவிசைந்தகண்ணே. (2)

வண்டலரும்பூங்குழலைமாமறையுங்காணாதவமுதைக்கோலங்
கொண்டமருநீல்வடிவக்கோதையையங்குவமையிலாக்குணத்தின்வெற்பை
அண்டர்குலத்தேவைமதியாமணியைச்சேல்விழியைஅரற்றிவாழக்
கண்டறியாப்புன்மனமேபண்டுவினையென்புரிந்தாய்காண்கிலேனே. (3)

ஓடித்திரிந்ததெலாமோருணவுக்கல்லால்வேறுயர்ந்தபேற்றை
நாடிப்புரிந்தசெயலொன்றுளதோவுடலெடுத்தநாளாயேங்கி
வாடித்திரிந்தலைந்துபெற்றபயனென்னேமெய்மறைகணான்குந்
தேடித்திரண்டொலிக்குங்காஞ்சனமேகயனயனத்திருவாமன்பே. (4)

உன்னடியேத்திப்புகலப்பாட்டினுக்குமுறையுண்டோஉணர்தலுண்டோ
பின்னதற்கோர்பண்ணுண்டோநெறியுண்டோவுயிரொழிந்தபிணத்துக்கா
தன்னொடுமின்பொன்னணியும்பஞ்சணையுஞ்சந்தனமுந்தானேன்மன் [டை
மன்னரெனவன்பரெலாமாகவமைக்குங்கயலாய்வாய்ந்தகண்ணே. [னர் (5)

உனையோதாநாவலரினாமையர்மேலாம்பெருமையுரைநின்காதை
உனைவினவாக்காதுடையாரிற்செவிடர்மாண்புளருன்றாள்கண்ணுற்றே

மனமகிழாரிற்குருடர்வாழ்வுற்றபோன்றேமறைகளாயுங்
கனலொளியேபுனிதமுளார்கண்மணியேமின்மணியாங்கயற்கண்பேறே. (6)

வினைமூண்டுநோயெழுமுன்விக்குளொடுநாவுலர்ந்துமெலிந்துநோமுன்
கனைகாலன்கூவிடுமுன்னேகிடுமுன்பெண்டுசுதர்கதறிநீரால்
நனையாமுன்தூக்கிடுமுன்தீயிடுமுன்சென்றதெனநவிலுமுன்னர்
உனையோதியானுவக்கமுறையுரையாய்வார்கயலாயொளிக்குங்கண்ணே. (7)

இப்புவிவேண்டேன்விசும்பும்யான்வேண்டேன்நிதிவேண்டேனிளமை வேண்டேன், கைப்புறைமின்னார்வேண்டேன்உடல்வேண்டேன்வினைவேண்டேன்கருத்தும்வேண்டேன்,-செப்புமொழியும்வேண்டேன்உன்னருள்சிந்தச்சிதறோர்திவலைவேண்டி, லப்பொழுதுமிப்படியாபோராட்டஞ்சேல்நயனத்தன்பினாளே. (8)

கல்லாமையுங்கழலைக்கருதாமைகருதிடினுங்கருத்துமூழ்கி
நில்லாமைநிலையுளதுநிலையாமைநின்பெயர்வாய்நிறையாவாற்
சொல்லாமைசூழ்வினையைத்தொலையாமைதுறவாமைசுகத்தைநாடல்
அல்லாமையென்றொழிந்தியான்வாழ்தலோகயல்தோய்ந்தமைந்தகண்ணே.

பொருளெனவேபொருளல்லாப்பொருளையெலாமுன்னிடுமிப்புலையநெஞ்சின், மருளகற்றமுறையிலையாபொறையிலையாவன்பெனவேவாழ்த்துநின்பால், அருளிலையாவென்வினையிங்கறவிலையாவுன்கழலுக்காளல்லேனா, விருள்கனியும்பூங்குழலேமாங்குயிலேசேல்விழிகொண்டிலகும்பேறே. (10)

பொன்னாசையென்றுவிடும்புகழாசையிற்றிழிந்துபோவதெந்நாள்
மின்னாசையாமொருபேயென்றழியுஞ்சாகுமுடல்மெலிந்திடாது
தின்னாசைவிட்டொழிவதில்லைகயற்கண்ணமுதேதெவிட்டாத்தேனே
உன்னாசையொன்றுகனிந்தென்றெழுமோஎன்னறிவில்லுரைசெய்வாயே. ()

நீராடியும்பிறகுசேறணிவாரோநினையானினைந்துபின்னர்
தீராதபுன்வினைவந்துற்றிடவென்னீதியுனைச்சிறிதாய்ந்தேயின்
போராடுவாஞ்சைதனில்வீழ்ந்துலைவேன்காமுறுவேன்பொருளைநாடிச்
சோராதலைந்திடுவேன்உய்முறையேதோகயலாய்த்தொகுத்தகண்ணே. (12)

பட்டதுபோதுந்துயரமிங்கினிமேலுந்துயரப்படவொண்ணாது
மட்டகலவென்பொறியால்யானடைந்ததெத்தனையிவ்வாறலைந்தே
கெட்டுலைதலெத்தனைநாள்நின்கருணையானடைதற்கிலையோநீதி
கட்டழகுவாய்ந்துலகைப்பேணவெனவந்தகயற்கண்ணினாளே. (13)



கொடுப்பதுநீகொள்வதுநீமதிமகிழவைப்பதுநீகுலைந்துநோக
விடுப்பதுநீயுய்முறைகாட்டுங்குருநீயம்முறையென்விழிக்கெட்டாது *
தடுப்பதுநீயென்பொறிநீயென்னுயிர்நீஎப்பொருளுந்தானாய்ச்சென்னி
எடுப்பவகையின்றியெனைவைத்ததுநீசேல்விழிவாய்ந்திலகுமன்னாய். (14)

எத்தனைகாலந்தொடருமென்வினைகளுந்தனையானிறைஞ்சிவேண்டல்
அத்தனையுமித்தகையாமாவுனதுதண்கருணைக்காளல்லேனா
பித்தனிவனென்றெனையுங்கைவிடவாவுன்றனுளம்பிறைசூடெங்கள்
நித்தனையிந்நாடுபுரப்பிக்கவருள்செய்தகயல்நிகர்த்தகண்ணாய். (15)

கண்டவருஞ்சொல்லவொணாக்கருணைநிதியாமுனதுகழலையேத்த
உண்டுறங்கலல்லால்வேறொன்றுமறியாதவெனக்குளதோமாண்பு
பண்டுவினைகாயவுனைப்பகலிரவாயெந்நாள்யான்பகர்தனீல
கண்டனுளங்கண்டசுவைக்கண்டெனவாய்ந்திட்டகயற்கண்ணினாளே. (16)

புல்லுடலுமெள்ளளவும்போதமிலாநெஞ்சமுமைம்பொறியும்நோகக்
கொல்லுலகவாஞ்சையுமோர்கூற்றெனவேவாய்த்தமனக்குரங்குநாடும் [ச்
மெல்லியர்கூட்டும்பொருள்செய்விந்தையுமோர்மிடிமையுநீவிதித்தின்னேனை
செல்லமுறையின்றியமைத்திட்டிடலென்னேபுகல்வைசேற்கண்மின்னாய். ()

எத்தகையோவென்பாவமிவ்வுடலுக்காவதினின்றெழும்புன்னோய்க்கா
சுத்தமிலாவென்னறிவுபோம்வழியிற்காகருதித்தொடரும்பேயாம்
வித்தமுதக்காமிடிமைக்காமயலுக்காவெளியேன்மெலிந்தாளாக
வைத்தனையிம்மூவுலகும்பெற்றவைகாணாதுமறைமறைசேல்கண்ணாய். (18)

எங்குமிலைஎன்போலுமீகையிலேன்சோகமுளேனிழிகாமாதி [தாய்
பொங்குமதியேன்துதியேன்போதமிலேன்புன்மையுளேன்புகலொன்றே
கங்குலிருளும்முகிலுங்காரரவும்சேரளியுங்கசடர்நெஞ்சும்
பங்கமுறவேபொலியும்பூங்குழலும்சேல்விழியும்படர்ந்தவன்னாய். (19)

தெள்ளறிவேயொள்ளுமுயர்தேவமணியேதிரண்டுசெறிந்தமாயைக்
குள்ளமருமோர்மருந்தேயோதுமறையின்பொருளேயுணர்விலார்க்குக்
கள்ளநெறியேவிதியேகற்பகவித்தேகருணைக்கடலேயாய்ந்தோர்
அள்ளியருந்தற்கினியதெள்ளமுதேசேல்விழியேயருள்செய்வாயே. (20)

தெள்ளமுதேயென்றனதுதிருவருளாம்புனல்முழுகிச்சிறியேன்வாடா
துள்ளமெரியுங்கனலாம்புன்கவலைஓய்ந்தவியவுலகின்மீது
கள்ளனெனவென்னைவமைக்கும்மிடிமைகாமமெனுங்கசடுநீங்கி
ஒள்ளுனதுசிற்றடியைக்கைப்பிடியாய்க்கொள்ளுவன்சேலுறைந்தகண்ணாய்.()

## IV. எழுசீர்க்கழில்நெடில்விருத்தம்.

தந்தை நீயுயர் தாயு நீபொறி
தந்த லைத்திடு விந்தைநீ
புந்தி நீமதி நாடி வேண்டு
பொருளும் பேருமு ருவுநீ
சிந்தை மீதுனை யெண்ணி டாது
திரிந்து பொய்யுடற் பேணியே
அந்த னாயுனை யான்ம றக்கினும்
நாவுன் னாமம ரற்றுமே.

உன்னி டாதுபு ரிந்த முன்வினை
யொன்றி யென்னைவ ருத்திடப்
பன்ன வோர்முறை யின்றி யான்படு
பாடு நீயறி யாததா
தென்ன வன்குடி மன்ன வென்றுயர்
சேயெ ழிற்கனி வாயெழும்
அன்னை யேயுனை யான்ம றக்கினு
நாவுன் னாமம ரற்றுமே.

இன்ப மென்றும யங்கி யேபொரு
ளிச்சை யோடலை வுற்றியான்
துன்ப மேபய னாகி நோவொடு
சோர்த னீயறி யாததா
முன்பு காஞ்சன மாலை மெய்த்தவ
மூண்டெ ழுந்திடு மாமணி
அன்பி லாதுனை யான்ம றக்கினும்
நாவுன் னாமம ரற்றுமே.

# மீன் உரம்.

நம் நாட்டில் நாம் எத்தனையோ உரங்கள் நிலத்துக்கு உபயோகித்து வருகிறோம். சென்ற சில வருஷங்களாக மாட்டெலும்புத் தூள் அவுரிச்சாணி வேப்பம்பிண்ணாக்கு முதலிய எருக்களை அதிகமாய் உபயோகப்படுத்திக் கிருஷித்தொழிலை அபிவிருத்தி பண்ணிக் கொண்டு வருகின்றோம். கிருஷி சம்பந்தமாய் முன் நம் நாடு முதன்மையாயிருந்து வந்ததென்பது உலகமறிந்த விஷயமே. ஆனால் தற்கால நிலைமையில் நாம் அதுவிஷயமாய் அந்நியநாட்டாரிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டியவை அநேகமிருக்கின்றன. நம்காலடியில் இருக்கும் பதார்த்தங்களை நாம் நன்கு பகுத்தறிந்து உபயோகிக்க முயன்றால் எத்தனைபெருத்த லாபங்களையடையலாம். அவ்வாறு செய்யாமல் பல பண்டங்களை வீணாக்குகிறோம். நாம் வீணாக்குகிறதை அந்நியர்கள்பலவிதத்தில் பயன்படுத்துகிறார்கள். நாம் குப்பையோடு குப்பையாய்ச்சேர்க்கிற ரம்பத்தூளை எத்தனையோ விதங்களாக ஜர்மன் தேசத்தார் உபயோகிப்பதாக நம் பாநுவில் நீளநினைந்து எழுதியிருக்கின்றோம். ஆகையால் எதையும் அற்பப்பொருள் என்று கருதாமல் சாஸ்திர ஆராய்ச்சிசெய்து உபயோகித்தல் நாட்டுக்கு நன்மைதரும். மீன்களை விளைநிலங்களுக்கு உரமாக ஜப்பானியர்கள் உபயோகித்துப் பெருத்த லாபமடைகிறார்களாம். ஜப்பானியர் ‘ஹெர்ரிங்கு’ ‘ஸார்டைன்’ என்ற இரண்டுவிதமீன்களை நீராவிகொண்டு காய்ச்சி அவைகளின் கொழுப்பாகிய எண்ணெய்யை யெடுத்துக்கொண்டு பாக்கியுள்ள சக்கையை உரமாய் உபயோகிக்கின்றனர். அவ்வாறு ஜப்பானியர்கள் வருஷந்தோறும் 1,10,000 டன் நிறையுள்ள மீன்உரம் சேர்க்கிறார்களாம். அது டன் ஒன்றுக்கு ரூபாய் 112 முதல் ரூபாய் 120 வரை விலையாகின்றது. அவர்கள் தங்கள் நாட்டிலுள்ள மீன் உரம் போதாதென்று அந்நியநாடாகிய மன்சூரியாவினின்றும் அவ்வுரம் தருவித்து நிலத்தைக் கொழுமை பண்ணுகிறார்களாம். இதனால் அவர்கள் மீன்உணவைத் தள்ளிவிடவில்லை. அதற்கும் அதனை ஏராளமாக உபயோகித்துவருகின்றனர். நம் தேசத்தில் மீனுக்குக் குறைவா? எங்குப்பார்த்தாலும் கடல்

வியாபித்திருக்கின்றது. அதில் கிடைக்கும் மீனுக்கோர் அளவில்லை. சிலர் நம் நாட்டுமீனைப்பிடித்து மேல்நாட்டுக்கு ஏற்றுமதிசெய்துவிடுகிறார்களென்பது வெளியாகிறது. சென்றவருஷம் அவ்வாறு ஏற்றுமதிசெய்யப்பட்ட மீன்உரத்தின் நிறை 7694 டன் என்றும் விலைமதிப்பு ரூ. 3½-லட்சமென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. நம் செம்படவர்கள் தாம்பிடித்த மீன்களிலும் வேண்டியவற்றை வைத்துக்கொண்டு மீதத்தைக் கீழேகொட்டிவிடுகிறார்கள். அது மண்ணோடுமண்ணாய் மட்கிப்போய் உபயோகமில்லாமற் போகின்றது. இத்தொழிலில் கப்பல் வியாபாரிகள் சொற்பம் கவனம் செலுத்தித் தகுந்த ஏற்பாடுகள்செய்து அந்நிய நாடுகளுக்கு அச்சரக்குப் போகாதவண்ணம் தடுத்து நம் நாட்டுக்கே உபயோகப்படுத்த முயற்சி செய்வார்களானால் நம் நாடு செழிப்புற்று நம்மிடிமை ஒருவாறு நீங்க வழியாகும். இம்மாதிரி அற்ப சொற்பத் தொழில்களையுங்கூட அந்நியருக்கு இரணமிட்டுத் தூங்குவோமானால் நம் நாடு எவ்வாறு விருத்தியடையும். பெரியகப்பலாயிருந்தாலும் சிறு துவாரமும் அதனை அமிழ்த்துவிடுமன்றோ. ஆகையால் ஒவ்வொரு விஷயத்தையும் அற்பமோ பெரிதோ கூர்ந்து கவனித்து நம் நாட்டின் க்ஷேமத்தை நாடுவோமாக அந்நியநாட்டுச்சரக்குகளை ஒழிப்பது மட்டும் போதுமா? நம்நாட்டின் கைத்தொழில்களையும் கவனித்து விருத்திபண்ணினால் மட்டுமே தேசத்துக்கு க்ஷேமம் உண்டாகும்.

பத்திராதிபர்.

# ஆயுர்வேதத்தின் வரலாறு.

பிரபஞ்ச சிருஷ்டியில் மனிதர்கள் ஜனனம்முதல் மரணம்வரையிலும் பெரும்பாலும் அனுபவிப்பது கஷ்டம், சுகம், துக்கம், சந்தோஷம் இவைகளைச் சகிக்கும்படியே இருக்கிறது. இவைகளை சகிப்பதும் அநுபவிப்பதும் பிராணனே. அதிருசியமாயிருக்கும் பிராணன் நிற்பதற்கு ஏற்பட்டிருக்கிற இடமே சரீரமென்னப்படும். சரீரத்தைத் தாங்கிக் கொண்டுவருவது அவயவயங்கள். இவை கிரமமாய் நடத்தல் சௌக்கியம். அக்கிரமமாக நடத்தல்தான் வியாதி. "மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளிமுதலா வெண்ணிய மூன்று" என்கிறபடி இவ்வியாதியைப் போக்க அநுபவத்தினால் கண்டுகொண்ட பதார்த்தங்களே ஔஷதம். ஔஷதங்களைத் தெரிவிப்பது ஆயுர்வேதமென்று பெயர். நமக்குள்ள 4-வேதம், 6-சாஸ்திரம், 64-கலைக்கியானம் என்பதில், 64-கலைக்கியானத்தில் 13-வது பிரிவாக வைத்தியமும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆதிவைத்திய கிரந்தமாகிய ஆயுர்வேதத்தில் அனேக பிரிவுகள் உண்டு. ஆயுர்வேதத்தைப் பிரம்மாவானவர் தக்ஷபிரம்மாவுக்கு உபதேசித்தாரென்று சரகம், சுச்ருதம் என்னும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவர் அதைக்கொண்டு சிகிச்சாதர்சனம் என்னும் ஒருகிரந்தம் உண்டுபண்ணினார். இந்தக் கிரந்தத்தைச் சூரியபுத்திரர்களாகிய அச்வினி தேவதைகள் உபதேசிக்கப்பெற்று, தேவ வைத்தியர்களானார்கள். இவர்களின் வைத்தியப் பெருமையைக் கண்டு, தேவேந்திரனும் இவர்களிடத்தில் வைத்தியம் கற்றுக்கொண்டான். சிலகாலங்கள்சென்ற பிறகு வைத்தியருக்குள் மதங்கள் ஏற்பட, வைத்தியமும் வெவ்வேறாகப் பிரிந்தது.

பூலோகத்தில் ரிஷிகள் மனிதர்கள்படும் கஷ்டத்தைத் தெரிந்துகொண்டு, அதை நிவர்த்திக்கு மார்க்கம்தேட ஹிமோத்கிரியில் சபைகூடினார்கள். இந்திரனுடைய சகாயம் வேண்டியிருப்பதைத் தெரிவித்து, அவர்களில் பாரத்துவாஜர் என்னும் மஹரிஷி தேவேந்திரனிடத்திற்போய் வைத்தியம் கற்றுக்கொண்டுவர அனுப்பப்பட்டு,

அவ்வாறே கற்றுணர்ந்து திரும்பவும் ரிஷிகளிடம் வந்துசேர்ந்து மற்றுள்ள இருடிகளுக்கும் மேற்படி வைத்தியம் போதித்தார். இப்படி ரிஷிகள் கற்றுக்கொண்ட வைத்தியத்தை நடத்திவரும் காலத்தில் ஆத்திரேய மகரிஷி தமது சிஷ்யர்களுக்கு வைத்தியம் கற்பித்துக்கொடுத்தார். அவர்கள் பிரபல வைத்தியர்களாகி அநேகநூல்களைச் செய்தார்கள். வேறுவிதமாய்ச் சிலகிரந்தங்களில் ஜலப்பிரளயமானபோது சகல சாஸ்திரங்களும் போக்கழிந்து போனதாகவும், பின்பு க்ஷீராப்தியைக்கடைந்தபொழுது அமிர்த கலசத்தோடு தன்வந்திரி பிறந்ததாகவும் கண்டிருக்கிறது. இவர் தேவேந்திரனிடத்தில் வைத்தியம் கற்றுக்கொண்டு, தேவலோகத்தில் மஹாவைத்தியராக இருந்தவர். மனிதர்கள் வியாதிகளாற் படும் கஷ்டத்தை நிவர்த்திக்கும்பொருட்டு பூமியில் காசிராஜாவாக அவதரித்து வைத்தியம் செய்துகொண்டு வருகையில், இருஷிகள் தங்கள் சிஷ்யர்களில் சிலரை அனுப்பி வைத்தியம் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யவே அவர்களும் புகழ்பெற்ற வைத்தியர்களானார்கள். இது ஸ்ரீ இராமச்சந்திரர் அரசுசெலுத்திய காலத்தில் நடந்ததாகப் பெரியவர்கள் நிர்ணயிக்கிறார்கள். இந்த ரிஷிகள் காலங்களுக்குத்தக்கபடி சில சில வைத்தியக்கிரந்தங்களை உண்டாக்கினார்கள். அவைகளுக்கு சரகம், சுசுருதம் என்று பெயர். இந்த இரண்டு கிரந்தங்களை அனுசரித்துப் பாடாசாரியர் பாகடம் என்னும் ஒரு நூல்செய்தார். இதுவே அஷ்டாங்க இருதயம் என்று மலையாளதேசத்தில் வழங்கிவருகிறது.

சுமார் 350 வருஷங்களுக்குமுன் பேமோ பிரகாடம் என்னும் ஒரு வைத்தியநூல் இயற்றப்பட்டது. இதுதான் தற்காலத்தில் அனுகூல வைத்திய கிரந்தம்; சிந்தாமணி என்று நமது தமிழ் நாடுகளில் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விதமாய் நாம் வாசம்செய்யும் இந்தப் பரதகண்டமாகிய இவ்விந்தியாவில் பூர்வத்தில் ஆயுர்வேதம் ஒன்றுதான் உலகெங்கும் புகழ்பெற்றிருந்தது. இந்த உயர்ந்த வித்தையை அக்காலத்தில் அராபியர், யூதேயர், எகிப்தியர், ஜெனோவியர், வேனிசியர், கிரேக்கர் முதலான பரதேசிகள் கற்றுத் தெளிந்ததாக சில சாஸ்திரக்காரர்கள் செப்பினதன்றியில், சாலோமான் அரசன் முதல் ஏசுகிறிஸ்துநாதர் முதலானவர்களும் இந்து வைத்தியத்தைக்



கற்றவர்களென்றும் ஒரு அமெரிக்கசாஸ்திரி எழுதியிருக்கிறார் என்று காலம்சென்ற மிஸ்டர் மைசூர் அரண்மனை வைத்தியர் ஸ்ரீ ஜெகந்நாதநாயுடு தான்இயற்றிய பைஷஜ கல்பம் என்னும் கிரந்தத்தில் கண்டிருக்கிறார். பிறகு மகமதிய நாட்டார் ஆளுகைக்குள் நமது தேசம் சிக்கிக்கொள்ள நமது இந்துவைத்தியம் அலக்ஷியம் செய்யப்பட்டு நாளடைவில் க்ஷீணமடைந்துவிட்டது. பாடசாலைகளை ஏற்படுத்தி வைத்தியம் கற்றுக்கொடுக்குங் கிரமமே அற்றுப்போய்விட்டது. அதன்பிறகு நமக்கு இப்போதிருக்கிற அரசாட்சியிலும் அது தலையெடுக்க ஏதுவில்லாமல் ஆழ்ந்து கிடக்கிறது. நம்மை ஆள்வோரும் இந்து வைத்தியத்தின்மேல் பிரீதிவைத்தால் சில வருஷங்களுக்குள் அதற்கு ஓர் ஏற்றம் உண்டாவதற்குத் தடையில்லை நமது முன்னோர்கள் பிணங்களை அறுத்து சகலவித பரிசோதனையும் செய்ததாகவும், தீராத கஷ்ட சாத்தியரோகங்களைத் தீர்த்ததாகவும் சாஸ்திரங்களால் தெரியவருகிறது. இப்படிச் சகலவித மனுஷஜாதிகளுக்கும் ஆதிகிரந்தமாகிய நமது ஆயுர்வேத சாஸ்திரத்தின் பெருமைக்குஆதாரமாக இருக்கும் மூலிகைகளையும், மற்றுமுள்ளவைகளையும் உண்டாக்கி நம்மைக் காப்பாற்றி வளர்க்கும் நமது மாதாவாகிய இந்தப் பூமிதேவியை நம்மவர்கள் அனைவரும் தினம் வந்தனம் செய்வதைத் தவிர வேறொருசாதனமும் எவரும் கண்டிலர் என்பது அனைவரும் தெரிந்துகொண்ட விஷயம். இருந்தாலும் சில சமயங்களில் அதனை மறப்பது நமக்குக் குறைவன்றோ.

# *இராஜபக்தி.

## (எதார்த்தமும், போலியும்.)

பகுத்தறி முறையினிற் பற்றுவைத் துத்தன்
ஆணையின் வரம்பை அறமதித் ததனுளே
திருப்திகொள் மனத்தனாய்ச் செங்கோல் செலுத்திடும்
அரச னிடமே அன்புபா ராட்டுவோம்.
எம்மைச் சுதந்தரம் எய்தும் படி விடுத்
திருப்பவ னுக்கே எம்மன தாரவும்
உவகை யுட னும் ஊழியம் செய்வோம்.
அவ்விதம் செய்யினும், அவன்கே வலம்நரன்
என்பதை யாங்கள் எம்மனத் திருத்தி,
அளவிற் கதிகமாய் அவனைநாம் நம்போம்.
அவன்ஓர் அரச னாயினும், அதிலும்
இங்கிலாந் துக்கே இறைவனாய் இருப்பினும்
மனவலி இல்லா மனிதனாய் இருக்கலாம்
அதிகா ரப்பிரிய னாகிய வினனாய்
அவன்தன் ஆணையை அல்வழிச் செலுத்தலாம்;
குடிகள் விரும்பிக் கொடுப்பதைக் காட்டினும்
அதிகம் பெறப்பே ராசையும் கொள்ளலாம்;
அவர்கள் அளிப்பதற் கதிகமா அடைய
ஆசைப் படுவது தேசத் துரோகமே.
ஆணை செலுத்தவும் அன்பொடு காக்கவும்
அரசாங் கத்தினை அலங்கரித் திடவுமே
எம்மவன் அவன்அலால் எம்அர சியலினை
மாற்றவும் புரட்டவும் மற்றெதும் செயவும்இல்.
பொதுநலத் திற்காப் புகழத் தரும்விதம்

* இது William Cowper என்ற ஆங்கிலக்கவி இயற்றிய "The Task" என்பதினின்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.



உயிரைக் கொடுத்தும் ஊழியஞ் செய்ய
அவனுடை யவர்நாம் ஆவமே அன்றி
அடிமையாய் இருத்தற் கவனுடை யவர்அலேம்.
அரச னிடத்தே அன்புடை யோம்எனப்
பெருமைபா ராட்டும் பெற்றி மாந்தரீர்!
நமதன் புக்கும் எமதன் புக்கும்
உள்ளவேற் றுமையை உற்றினே நோக்குமின்:
ஆளைநாம் விரும்புவம்; அவனுடை அற்ப
ஆடம் பரமே ஆகும்நும் விருப்பு.
பொதுஅர சாட்சியைப் புரந்திடும் அண்ணல்பால்
பற்றுநாம் கொண்டுளோம்; மற்றுநீ ரோ,அவ்
ஆட்சிக் கவலைதன் அகத்திலா அதனுடைத்
துன்பகா ரணனிடம் அன்புளோர் ஆகுவீர்.
சுவாதீ னம்பெறும் அவாவினே அரசனை
நேசிப் போம்நாம்; நீவிரோ என்னில்,
தனையும் அடிமைத் தனமும் எய்தவே
கொடியனை அரசனாக் கொண்டு நேசிப்பீர்.
எமதன் போர்வழி ஏய்வது. மற்றப்
பற்றின் மூலம் பகுத்தறி வாம்.அதே
அறிவுக் கடுத்ததும் ஆண்மைக் குரியதும்
தானா உதித்திடும் தன்மைகொண் டதும்ஆம்.
ஆனால் உங்கள் அன்பெனி லோ,தனைத்
தரையினிற் றேய்க்குந் தாள்களை நக்கிக்
கொடுங்கோற் கஞ்சி ஒடுங்கிடும் விதமாக்
குருட்டபி மானப் பொருட்டுதிப் பதுவே.

## *தீநெறி.

பார்த்த மாத்திரத் தேப கைத்திடும் பான்மை கொண்ட பயங்கரக்
காத்தி ரத்தகு ரூபி தீநெறி காணிர் ஆயினும் அதன்முகம்
பார்த்துப் பன்முறை பழகி னேஅதன் பால்மு தற்பரி தாபமே
பூத்துப் பின்பொறை கொள்வம் பின்அதைப் புல்லு வாம்இது திண்ணமே.

* இது "Vice is a monster &c" வின்மொழி பெயர்ப்பு.

## *ரோஜா.

சித்திரை வைகா சிக்கோர் சிறப்பளித் திலங்கும் ரோஜா
எத்துணை நேர்த்தி யான திம்மலர் எழில்தான் என்ன!
இத்தகைத் தெனுமு கூர்த்தத் திதழ்வளங் குறைந்துவாடி
நத்திய நிறமுங் கெட்டோர் நாட்பொழு தினிலே பொன்றும்.

ஆயினும் இப்பூ வுக்கிவ் அவனியில் உள்ள ஏனை
ஆயபன் மலர்க்கு மில்லா அருங்குணம் உண்டே தென்னில்
ஏயதன் இதழ்கள் வாடி எழில்நிற மெல்லாங் கெட்டு
மாயினும் இனிமை யான மணமது வீசா நிற்கும்.

இளமையும் மக்கள் தம்மின் எழிலும்இம் மலரைப் போன்று
வளமையும் வனப்பும் வாய்ந்தும் வரவர வாட்டங் கண்டு
தளர்வுறும். தளர்வுறாமல் தடுத்தவை ஓம்பல் வீணே [கும்.
மளமள வெனச்செல் காலன் மாத்திரைப் போதில் மாய்க்

ஆதலின் இளமை தேசென் றுபஇவ் விரண்டும் பற்றித்
தீதுறும் செருக்கே கொள்ளேல் தேய்ந்தவை வாடிச் சா
ஓதுநம் கடன்நன் றுற்றி ஒங்குநற் புகழே எய்தின் [மால்
ஈதுரோ ஜாவைப் போல இறப்பினும் மணமே வீசும்.

## ¶கோதிலர் மனம்.

கோதிலா மனத்தின் மேலதாய் வலிமை
    கொண்டமார்க் கவசம்யா துளது?
நீதியாற் சண்டை புரிபவன் எவனும்
    நிறுவுமுக் கவச மொய்ம் பினனே
தீதுலாம் அநீத நெறிஎனும் களங்கம்
    தீண்டிய மனக்கரி உளான்தன்
மீதிலே உருக்குக் கவசமே போர்த்தும்
    வெற்றுடம் புடையனு குவனே.

*"Dr. Watts" என்ற ஆங்கிலகவி இயற்றிய "Rose" என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பு.

¶இது "What Stronger breast-plate &c" வின் மொழிபெயர்ப்பு.

## *இரக்கம்.

பிறர்வற் புறுத்தப் பிறந்திடல் என்றல்
இரக்கம் என்பதன் இயல்பா காது.
விண்ணி னின்றும் மண்மீ திழியும்
இனிய மழைஎன இழிவதிவ் இரக்கம்
இரண்டு விதத்திலும் ஈயும் இதுநலம்.
இரங்கப் படுவோன் இரங்குவோன் என்னும்
இருதிறத் தார்க்கும் ஈதருள் புரிந்திடும்.
வலி மிக் காரிடம் வலிமைமிக் குள்ளதாம்.
அரியணை மீதமர் அரசனுக் கன்னவன்
புனைமுடி யினும்மிகப் பொருத்தமுடையதே.
அரசன் செங்கோல் அவனியில் அவனுடை
ஆணையின் ஆற்றலுக் கறிகுறி யாகும்.
பயமும் மாட்சியும் பயப்பதன் பண்பாம்.
அரசர்பாற் றிகிலும் அச்சமும் அதில்உறும்.
இரக்கம் இக்கோலினும் ஏற்றம் மிக்குடையதஃ
தரசர் மனச்சிங் காதனத் தமர்வதாம்.
ஈசர்க் கேஅது இயைந்த ஓர்குணம்.
நீதியோ டிரக்கமும் நிகழ்வுறுங் காலையில்
மண்இறை ஆணையும் விண்இறை ஆணையாம்.
ஆதலின், யூத! நீதியைப் பெறுவதே
நின்வழக் காயினும் நீ நினை இதனை :
கேவலம் நியாயமே தேவன் கைக்கொளின்
நம்மவர் எவருமே நற்கதி காண்கிலம்.
இரங்கிமன் னிக்கநாம் ஈசனை வேண்டுவோம்.
அதேவேண் டுகோள்நாம் அனைவரும் மற்றவர்க்
கிரக்கச் செயல்செய இனிதுகற் பிக்குமே.

ம. கோபாலகிருஷ்ணையர்,
மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதி.

*இது "ஷேக்ஸ்பியர்" கவி இயற்றிய "Merchant of Venice" என்பதினின்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.)

# *காதம்பரி.

—:o:—

[மகா சுவேதை தன்வரலாறு கூறியது.]

சீருடைசின் றிருவவதா ரத்தினுற் றெய்வகணத்
தியாருடைய திருமரபோர் வீடேற விட்டதுதான்
பேரழகு தருமிந்தப் பிராயத்தே மனமொடுங்கிச்
சாரல்வனந் தனிற்றனியே தவஞ்செய்யக் காரியமேன்.

என்றளவி லவடானு மிருந்தொன்றை நினைந்துளமேற்
சென்றதுயர் மீதூரச் செயலழிந்தொன் றென்றாக்
நின்றுவிழுந் தரளமென நீணெடுங்கண் டுளிசோர
வன்றணிகூர்ந் தறவிம்மி வாய்விடா திருந்தழுதாள்.

அப்படியே யழுமளவி லண்ணலும்பார்த் தருந்துயர்தா
னிப்படியே தெளிந்தோர்க்கு மெய்துமா றிருந்ததெனப்
பொய்ப்படியே நெடுநாளாய்ப் போனதைநா னினைப்பித்தேன்
றப்பிதுவே போதுமெனத் தன்னையே தானொந்து.

---

*இது, ஒரு வடநூல்; பாணன் என்னும் மகாகவியால் இயற்றப்பட்டது; சிறந்த வசன காவ்யம். "காதம்பரீ ரஸஜ்ஞாநா மாஹாரோபிநரோசதே" என்று பண்டையோர் இதனைப்பெரிதுஞ் சிறப்பித்துப் பாராட்டிக் கூறியிருத்தல் காண்க. காதம்பரியின் சுவையை யறிந்தவர்களுக்கு ஆகாரங்கூட இனியாது என்பது இதன் பொருள். கல்வியிற் பெரியராகிய கம்பரதுபாடல்களில் இக்காதம்பரியின் கருத்துக்களும் அழகான கற்பனைகளும் ஆங்காங்குக் காணப்படுதலானும் இந்நூற்சிறப்பு விளங்கும். இவ்வரியபெரிய நூலைத் தமிழுலகமுங் கற்றுக் களிக்கவேண்டுமென்னுங் கருணையினால் கதைத்தொடர் இனிது விளங்குமாறு அவசியமான விஷயங்களையும் கற்பனைகளையும் தழுவிச் சுருக்கமாக 1314-தமிழ்ப்பாவினங்களால் மொழிபெயர்த்துதவிய மகோபகாரி ஆதிவராககவி என்னப்படுவோர். இவர் சோழநாட்டிலே அந்தணர் மரபிலே பாரத்துவாசகோத்திரத்திலே அருளாளர் என்பவருக்குத் திருமகனாராக உதித்தவரென்றும், விஷ்ணுபத்தியிற் சிறந்தவரென்றும் பாண்டிநாட்டிலே சுந்தராபுரியிலே வாழ்ந்துவந்த தேவர் நாயகன் என்னும் ஒரு வைசியகுல பிரபு சிகாமணியால் சன்மானிக்கப்பெற்று அவனது வேண்டுகோளால் இந்நூலை இற்றைக்கு 490-வருஷங்கட்கு முன்னர் இயற்றியுபகரித்தாரென்றும் இந்நூற் பாயிரத்தால் இனிது விளங்குகின்றது.



போயருவி நீர்கொணர்ந்து போற்றிமனந் தேற்றியபின்
ஆயிழையு முகங்கழுவி யணிந்தமர வுரிக்கலையாற்
சேயநய னந்துடைத்துத் தீயெழவே நெடிதுயிர்த்துத்
தூயவனை முகநோக்கிச் சொல்லுவன்கே ளெனவுரைப்பாள்.

அறப்பாவி யாயருளொன் றற்றவளாய் முற்றியவென்
பிறப்பாலென் பயனேது பெருந்தவத்தாற் பயனேது
குறித்தாலுங் கூறரிது கூறினுங்கேட் கரிதுமனம்
பொறுத்தாலும் பொறுக்கரிது பொறுக்கரிதா யினுங்கேண்மின்.

## வேறு.

அண்ட ருலகி லரம்பையரென் றவனி புகழுஞ் சிலமாத
ருண்டு தலைநா ளவர்குலந்தா னுயர்வே தத்து மயனுளத்தும்
பண்டு கடைந்த வமுதத்தும் படிநீ ரெரிகா லெனுமிவற்றுஞ்
சண்ட கிரண மிமகிரணந் தனிலு மதவே டன்னிடத்தும்.

தரும னிடத்து மிளனிடத்துந் தக்கன் மகளிர் தங்களிலே
யிருவர் முனிவர் வருட்டையுமென் றிவர்க ளிடத்து மெனவிந்த
வரிய பதினா லிடத்துதித்த ததனோ டந்த வரிவையர்பால்
மருவி யிரண்டு காந்தருவ மரபு முதித்த வவைதம்மில்.

சிறந்த முனிபா லுயர்சித்ர சேனன் முதலா மீரெண்மர்
பிறந்து வளர்ந்தா ரவர்க்கெல்லாம் பின்னா யறிவான் முன்னாகி
நிறைந்த சித்ர ரதனென்போ னீதி நெறியால் மிகவிளங்கி
யிறைஞ்சு மகவான் றோழனுமா யிந்த மரபிற் கிறையானான்.

இவன்றா னிப்பா ரதவருடத் தெல்லை முடிந்த வத்திசையி
லவந்தா னில்லாக் கிம்புருட வருட மதனுக் கணிவரையா
நவஞ்சே ரேம கூடத்தை நகரி யாக்கி யதிலிருந்தான்
றவஞ்சேர் குணத்தோ யந்தவரை தானு மியனே சற்றிடமே.

இவன்செய் ததுவே சயித்ரரத மென்னு மிந்த மலர்க்காவு
மிவன்செய் ததுவே யச்சோத மென்னு மிந்தப் பூந்தடமு
மிவன்செய் ததுவே யிக்கோயி றானு மிருந்தோள் வலியாலே
யிவன்செய் ததுவே செயலெங்க ளொழிற்காந் தருவப் புவிக்கெல்லாம்.

இனிமற் றந்த வருட்டைதரு மெழுவோ ரிற்றம் புருமுதலா
முனிவற் றுயர்ந்தோ ரறுவர்க்கு மூத்தோ னன்னப் பெயரோனை
வனைபொற் கழலான் சித்ரரதன் மகுடஞ் சூட்டி வைத்தரசு
மனுசத் திறமும் பகுந்தளித்தா னவன்வாழ் பதியு மப்பதியே.

அந்த வமுத மதிக்கதிரி லமைந்த மரபி லவ்வமுதாற்
றந்த தெனவே யதிதவளந் தருபே ரழகு தன்னுடனே
வந்து பிறந்தாள் கௌரியெனு மடந்தை யொருத்தி யவடன்னைச்
சிந்தை களிகூர்ந் தஞ்சன்முதற் றேவி யாகச் சீகரித்தான்.

அஞ்சன் ஞனுங் கௌரியே யெனும்பூந் திருவு மெப்போது
மிஞ்சுங் காதன் மீதூர விற்போர் வேளு மிரதியும்போ
னெஞ்சந் தானு முயிருமொரு நீர்மை யாகி நெடுங்காலம்
வஞ்சந் தானென் றறியாமல் வாழ்ந்தார் வாழு மந்நாளில்.

அவ்வா றமைந்த பெரியோருக் கரிய மகவா யவதரித்தே
யிவ்வா றமையாத் துயர்க்கெல்லா மிலக்காம் பாவி யொருத்தியையே
மெய்வா சகனு மென்றந்தை மிகவே களிகூர்ந் தென்னுடைய
துய்வா னொளியா லெனக்குமகச் சுவேதை யெனவே பேரிட்டான்.

ஆண்பெற் றவர்போ லென்னையவ னறவே மகிழ்ந்து பாராட்டப்
பாண்பெற் றினிய யாழ்போலப் பயில்காந் தருவர் மடிகளிலுந்
தூண்பெற் றனைய தோள்களிலுந் தொடைமார் பிலுமே விளையாடி
நாண்பெற் றறியா மிகுபேதை நன்னாள் கடந்தேன் பின்னாக.

### வேறு.

தளிரிடையே மலர்தோன்றி மலரிடையே தேன்றோன்றித் தயங்கு தேனி
லளிதருகா ரளிதோன்றி யதனிடையே மதந்தோன்றி யதிலே யெல்லாம்
வெளியிடுமா மதன்றோன்றி யிப்படியே மெல்லவந்த வசந்த காலந் [கோலம்.
தெளிவதுபோ லென்னிடையே திகழ்ந்ததுவந் தெழிலிளமைச் செவ்விக்

மயிலாடக் குயில்கூவ வண்டினங்க ளிசைபாட மதன பூசை
செயுமாதர் துழனிமிகப் பெருகியெழப் பரிமளமென் றென்றல் வீசப்
பயில்வாச மலர்த்தூளி பரந்துமணற் குவைகாட்டப் பதுமக் காடு
வெயில்காலும் படிமலர விருள்காலும் படிமலர விரையார் நீலம்.



வரிவளைவா யமுதான மகிழ்புளகஞ் செய்ததுபோன் மலர்ந்து வாழ
வரிபொருநூ புரவொலியா லடிமலரா லசோகமெலா மசோக மாகக்
குரவமெலா முகிழ்முலையாற் குழைந்திளக மற்றுமெலாங் குளிர வார்க்குங்
கரைதெரியா வானந்த காரணமாய் வரும்வசந்த காலத் தோர்நாள்.

இந்தமலர் வாவியினீ ராடவெத்ற் கென்னனைவா யானுங் கூட
வந்துகரை யருகொளிரும் பாறைகளின் மலைமகடன் வனைக்கை யாலே
சுந்தரமாம் வகையெழுதித் தொழுதவரன் றிருவடியைத் தொழுது நின்றுஞ்
சந்தனமென் சோலைகளுந் தழைத்தகொடி மண்டபங்க டானும் பார்த்தும்.

ஆர்த்துவருந் தெய்வதைகள் விளையாடுங் கொடிபூச லணியும் பாரைப்
போர்த்தமலர்த் தூளியிலே தாளழுந்தி யோதிமங்கள் போக மாட்டா
வாய்த்ததருச் சூழல்களு மற்றுமுள்ள புதுமைகளு மகிழ்ந்து பார்த்துஞ்
சேர்த்தவுயிர்ப் பாங்கியரு மொருவேனும் விளையாடிச் செல்லும் போதில்.

அற்புதமாய் மனோகரமாய்த் திவ்வியமா யுலகோர்கண் டறியா வொன்றா
யெற்பயில்கா ரளிமுழுது மொன்றினையொன் றறமுந்தி யெதிர்கொண் டோ
பற்பலவா மவ்வனப்பூம் பரிமளங்கள் யாவையுங்கீழ்ப் படுத்தி மேலாய் [டப்
வெற்பரசா மிவ்வாளிற் காலுடன்வந் தொருவாசம் வீசிற் றன்றே.

அந்நாறும் பரிமளத்தான் முகுளிதமாம் விழியுடனீ தறிவே மென்னச்
சிந்தைமகிழ்ந் ததனெதிரே சிறிதிடஞ்சென் றளவிலான் றிருக்கண் ணாலே
வெந்தமத வேளளவில் சோகத்தான் மெய்த்தவத்தை மிகமேற் கொண்டு
வந்தவசந் தனைப்போன்ற மீசனருள் பெறத்தவஞ்செய் மாரன் போன்றும்.

தன்னொளியா லெந்நிலமுந் தவிக்கனக மயமாக்கித் தழைந்து வீழ்ந்த
செந்நிறவே ணியுமகன்ற திருநுதலும் புண்டரமுஞ் சிலையே யன்ன
மைந்நிறவார் புருவமுநீண் டகன்றனவெண் டாமரைபோன் மலர்ந்த கண்ணு
முன்னதமாய் நீண்டுவளர்ந் தொளிர்மூக்குஞ் செவ்வாயு மோங்கு தோளும்.

இருதோளில் வீழ்ந்தலைந்த குழையுமறை யுச்சரிப்பா லிலங்கித் தோன்றுந்
தரமேவு வெண்ணகையு மழகுபொழி திருமுகமுந் தரித்த மானி
னுரிமேவு மணிமார்பும் புரிநூலு மொருகையிற் பலாசத் தண்டும்
வரமேவு பவித்திரமும் படிகமணி கமண்டலமு மற்றும் யாவும்.

கட்டினமுஞ் சியுமுடுத்த வற்கலையு ஞானத்தாற் கரிய மோக
மெட்டனையு முண்ணிலா தேகுவபோ லெழுரோம ராசி தானும்

வெட்டனவே யுச்சரித்த வேதமுமாய்த் தருமத்தின் வேடம் போன்றுந்
தட்டணுகா துயர்பிரம சாரியத்தி னலங்காரந் தன்னைப் போன்றும.

தன்பருவ மனையானோர் முனிகுமரன் றிருப்பள்ளித் தாம மேந்திப்
பின்வரவு முன்பாகி நீராடல் காரணமாய்ப் பிறங்கு வாவிக்
கன்புடனே வருமவனோர் முனிகுமா ரனைக்கண்டே னளிகள் கோடி
யின்புறவே முரலுவதோர் பூங்கொத்து மவன்செவிமீ திலங்கக் கண்டேன்.

கூண்டளவே யிந்தமலர்ப் பரிமளமே யந்தநறுங் கந்த மென்று
கொண்டிவனோர் மதனையயன் கோலருன் வடிவாகிக் குறும்பு செய்யு
மண்டர்களு முனிவர்களுஞ் சங்கியா வகைவிடுத்தா னாக வேண்டு
மண்டலமா மதிபடைத்தா னிவன்வதனம் படைப்பதுகை வரவென்றாகும்.

எழின்மதியி னமுதகலை யிரவிகவர் கின்றனனென் பததான் பொய்யே
முழுதுமவை யிம்முனியே கவர்கின்றா னல்லாது முனிவெங் கானிற்
றழுவியற வுலர்ந்துலர்ந்து தவஞ்செய்வார்க் கிவ்வழகு தானுண் டாமோ
பழுதுபடா வழகிதற்குக் காரணம்வே றில்லையெனப் பார்த்தே னாக.

அடைவுமடை வல்லாது நினையாம லழகினையே யடைவாக் கொள்ளுங்
கொடியமதன் புதிதான குருமலர்த்தே னிளையதொரு கோல வண்டுப்
பெடையைவச மழிப்பதுபோ லெனையழித்தா னப்போது பேதை யேனும்
வடிவதுநங் குலமகளிர்க் கெனவறிந்து மனமடக்க வலிபொ றாமல்.

ஒருசிறிது மிமையாதே சிறிதுருவிந் தொருபுறத்தே சாய்ந்து வாய்ந்த
வரிபரவிப் புடைபெயர்ந்த கண்ணாலே யவனழகா மமுதை வாரிப்
பருகுவது போன்றுமெனைப் பரிகரித்துக் கொள்ளென்னும் பரிசே போன்று
மருளினியென் னெஞ்சுனக்கே யளித்தனனென் பதுபோன்று மவனை
[நோக்கி.

நேராக வெனைமறந்து மூச்சடங்கி யோவியம்போ னெடிது நேரம்
பேராம லசையாம னின்றேனப் பொழுதுமதன் பின்னே நின்று
சீராடி யெனைத்தள்ளிக் கொண்டுசென்று விடுத்தனனோ சிந்தை யாசை
யாராம லிழுத்துக்கொண் டெய்தியதோ வறியேனு னருகே யானேன்.

நெஞ்சிலே யவன்வாழ வீடங்கொடுக்கு மதுபோல நெடிது மூச்சு [லாம்
விஞ்சியே மேன்மேலே தொடர்ந்தெழுந்த திதயத்தின் விருப்பை யெல்
வஞ்சியா துரைப்பதுபோல் விம்மியசைந் தனகொங்கை வழியும் வேர்வா
லெஞ்சியே கழுவுண்டு போனதுபோ லேபோன தெஞ்சா நாணம்.



அனங்கசரம் படுமினியென் றஞ்சினாற் போனடுங்கிற் றாக மோக
மனங்குமர னெழில்காணப் புறப்பட்டாற் போற்புளகம் வந்த தெங்கு
நனைந்தெழுவேர் வினிலிழிந்த விருந்தாளிற் செம்பஞ்சி நலஞ்சேர் சோதி
புனைந்ததுபோ லோகைமிகுந் ததுநயனம் வினையேனப் போது நாடி.

எம்போலு நொய்யவரே பாராட்டத் தக்கதிந்த வின்ப மிந்தச்
சம்போக முனிவரைநா னெஞ்சினு னினைத்திடவுந் தக்க தன்று
வம்போதான் மதனனமை யிம்முனிபாற் றள்ளுகின்றான் வறிதே யையோ
சம்போத மில்லாமை யென்னாகு மினியென்று நாணி மீண்டும்.

என்னேயீ தொன்றிருந்த படியெனமற் றிப்படியே யறிந்திருந்து
முன்னேநின் றிங்கிதஞ்செ யைம்புலனை யடக்குதற்கு முடியா தென்ற
னன்னேய மிவனறியி னம்மைநகைத் திகழுவனே நாமென் செய்வே
மின்னேயா மறியாமுன் னேகுவதே காரியமற் றேகே மாகில்.

நங்காதல் கண்டுமுனி சபித்திடினுந் தெரியாது நாம்போம் போது
பங்கான தவத்தோரைக் கண்டிறைஞ்சா தேகுவதும் பாவ முண்டா
மிங்கான தாகவிவர் களையிறைஞ்சி யேகுவே மெனவே யெண்ணிச்
சிங்கார முனிகுமரன் றனைநோக்கி விடாநின்று செங்கை கூப்பி.

ஒருகாதின் மாணிக்கக் குண்டலமுஞ் செவித்தாரு மொருதோள் வீழ்ந்த
முருகாருஞ் சுரிகுழலுஞ் சிறிதசைய வவனுடைய முகத்தின் மீது
தருகாத லுடனடந்த விழியிணையை வாங்காமற் றலம்பா ராமற்
பருகுவபோ லாதரத்தி னுடன்பணிந்தேன் ............பணிந்த போது.

மதனுணை தனையெவர்க்குங் கடக்கரிதா கையினாலும் வசந்த கால
மதனாலு மிடமதுவா கையினாலும் யௌவனத்தி னீதி யாலு
மிதுகாலந் தீவினையே னித்துயரம் படவேண்டி யிருக்கை யாலுந்
திதமாமென் மெய்ப்பாடு கண்டளவே யவன்வலியுஞ் சிதைந்த தன்றே.

புதிதாக வருமதனை யெதிர்கொள்வ போலெழுந்த புளக மொன்றை
மதியாதென் பால்வருதன் னெஞ்சினுக்கு வழிகாட்டு மாபோன் முன்னே
விதமான பெருமூச்சு நடந்ததுகைச் செபவடந்தான் விரத மெல்லாஞ்
சிதையாது போகாதென் றஞ்சினபோ னடுங்கியது சிதைந்த துள்ளம்.

வேறுமொரு பூங்கொத்தின் செவித்தார்போற் கபோலமிசை வெயர்வு தோ
றேறியதன் னுதரத்தா லெனைப்பார்க்கப் பரந்தெழுந்த விருகட் சோதி[ன்றிற்

மாறரிய வச்சோத வாவியினிற் கமலமெலாம் வானி லேறப்
பாறிமறு கிற்பறந்து திரிவனபோ லெம்மருங்கும் பரந்த தன்றே

இவ்வகையே யறவெளியாய்த் தோன்றுமிவன் விகாரத்தா லிரட்டித் தேறி
மெய்வகையே வளர்மதன விகாரத்தி லகப்பட்டு வினையேன் பட்ட
வவ்வகையா கியவவத்தை வளவுரைக்க முடியாதப் போது நானு
முய்வகைசேர் தவமுனிவன் விகாரமெலா மடைவடைவே யுற்று நோக்கி.

இன்பதர மிதன் முன்பு புதிதுண்டு மறியாத விருடி தன்கண்
டுன்பமுடன் மிகவிளைத்துச் சோம்பினாற் போன்றநெடுந் துயிலி னாலே
வன்புடைய விழிப்புண்டா னதுபோன்று மனத்தாசை வகையை யெல்லா
மன்பிலுரைப் பதுபோன்று மிராநின்ற தறமுதிர்ந்த தனங்க ராகம்.

என்றுதுணிந் திவ்வளவோ ரிடங்கண்ட பின்பணுகி யிவன்பின் போந்த
துன்றுதவ முனிபாதந் தொழுதெழுந்தெம் பெருமானே தோழ னாகிச்
சென்றமுனி குமரனவ னார்புதல்வன் பேரென்ன செவித்தா ராகி
யொன்றியபூங் கொத்தேதிப் பரிமளங்கண் டாதரித்தே னுரையா யென்ன

அன்னவனு மென்முகம்பார்த் தாயிழையா யிவைகேட்கு மதனா லிப்போ
தென்னபய னுரையாயிங் கெனச்சிறிதே நகையாடி யிவைதான் கேட்க
மன்னியவா தரமுண்டேற் கேண்மினென வகுத்துரைப்பான் வைய மேழும்
துன்னுபெரும் புகழுடையான் சுராசுரர் முதலானோர் தொழுபொற் றாளான்.

வரமாக மொழியுநள கூபரனு மொவ்வாத வடிவி னாலே
யரமாத ரனைவருக்கு மானந்த காரியமா யகல்வா னாட்டுச்
சுரர்வாழ வுடன்வாழுந் தொல்லைமறை நெறிமுனிவன் சுவேதகேது
தரமான வாகாய கங்கையிலே திருப்பள்ளித் தாமங் கொய்வான்.

தானொருநாட் சென்றளவி லவ்விடத்தா மரைவனத்தோர் தவள மான
தேனவிழ்தா மரைமலரி லெப்பொழுதும் புலப்படவாழ் திருத்தான் கண்டங்
கானபர வசையாகி யனுராகத் தொடுபார்க்க வன்றப் போதின்
மேனயன மாம்புணர்ச்சி முடிவான பேரின்பம் விளைந்த தன்றே.

அப்போதே யப்போதி லவதரித்தா னிவனிவனை யப்பூ மாது
கைப்போதி லேந்திமுனி முகநோக்கி யெம்பெருமான் காட்சி யாலே
யிப்போது பிறந்தனனின் புதல்வனிவன் கைக்கொணீ யிவனை யென்னத்
தப்போதா முனியிவனைக் கொண்டுபோய் வேண்டுவன சதுர்கள் செய்து.



புண்டரிகத் துதித்தமையாற் புண்டரிக னெனப்பெயரும் புனைந்து நூலெண்
கொண்டகலை யனைத்தினையு மீந்தருளிக் குலப்பிரம சரிய மாகும்
அண்டர்தொழும் விரதமுந்தான் கற்பித்தா னாகையினா லவன்சே யிந்த
வெண்டிசையும் புகழ்குமர னினிச்செவித்தார் வருவாயு மியம்பக் கேண்மின்.

வேறு.

இன்று கடையிருத்தை யாகையினா லீசன்றாள்
சென்றுதொழ வான்கயிலை சேர நெடுவானி
னின்று மிறங்கி நெடுநந் தனவனத்தி
லொன்றுமிரு வேழ முடன்வந்தே னப்போது.

மன்னு மணிமாலை மணிமே கலையணிந்து
துன்னுசெவித் தாரரதச் சூதாங் குரமணிந்து
பன்னுமல ராற்செய் பலபணியும் பூண்டுமல
ரின்னறவு மாந்தி யிதயங் களிகூர்ந்து.

சேர்த்து வசந்தத் திருமடந்தை கைகொடுப்ப
வார்த்துவிளை யாடிவரு மந்தவன தேவதைதான்
பார்த்திவனைக் கண்டு பணிந்து பலகாலு
மேத்திநறும் பூங்கொத் திதுவுங் கரத்தேந்தி.

இந்த வழகுக் கிசைந்ததே யீதிதனைத்
தந்த குலப்பாரி சாதமுநா னும்பிறந்து
வந்ததனா லுள்ள பயன்பெறநீ வள்ளலே
சிந்தை மகிழ்ந்து செவித்தாராக் கொண்டருளாய்.

என்றிரந்து கொண்டிவடா னேகாது பின்றொடர
நன்றிகொண்ட தன்றகைமை போற்றுகையா னாணியிவ
ளொன்றியம்பா தேபோக வுற்றிவனை நானோக்கி
நின்றுநண்பா வித்தா னெறிகேடு தானேது.

எத்திவரு கின்றவிவளா தரந்தீரச்
சாத்தியருள் கென்றவள்கை தன்னின்று நான்வாங்கி
வாய்த்தசெவித் தாராக வைத்தேனி தாகையினாற்
கோத்த விரைப்பாரி சாதப்பூங் கொத்தென்றான்.

என்னு மளவி லெனைநோக்கிப் புண்டரிகன்
புன்முறுவல் செய்து புனையிழா யீதெல்லாம்

# கல்கத்தா கைத்தொழிலாளர் கூட்டத்தில் சுதேசியப் பிரசங்கம்.

கல்கத்தாவில் சுதேசியக் கிளர்ச்சி ஆரம்பித்த பிறகு இப்பொழுதுதான் முதல் தடவையாகப் பற்பலத் தொழிலாளரும் வங்காள ஜனத்தலைவர்களை வரவழைத்துச் சுதேசியத்தைப்பற்றித் தங்களுக்குப் பிரசங்கிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். சுமார் 4000 ஜனங்கள் அநாத பாபு பஜாரில் கூடினார்கள். பட்டணத்தின் பல பாகங்களிலிருந்தும் அநேக ஊர்கோல கோஷ்டிகள் வந்து சேர்ந்தார்கள். போலீசாரும் லத்தி(தடி)களோடு வந்திருந்தனர்.

முதலில் சில தேசபக்திக் கீர்த்தனங்கள் பாடப்பட்டபிறகு, சபாநாயகராகிய ஸ்ரீ சுரேந்தரநாத் பானர்ஜி சுதேசியத்தையும் பஹிஷ்காரத்தையும் பற்றிச் சுருக்கமாய்ப் பேசினார். இவ்விரண்டையுங் கண்டு கவர்ன்மெண்டார் பீதியடைந்து, அவற்றைப் பலாத்காரமாய் அடக்கிவிட முயன்றுவருகிறார்களென்றார். தாம் முன்னொருதரம் ஜெயிலுக்குப் போயிருப்பதால் இப்பொழுது ஜெயிலுக்குப் பயப்படவில்லையென்றும், அப்படி மீண்டும் ஒருகால் அனுப்பப்பட்டாலும் தம்முடைய பழைய பரிச்சயத்தைப்புதுக்கிக் கொள்ளும்படியாயிருக்குமேயன்றி வேறில்லையென்றும் வேடிக்கையாய்ச் சொன்னார். பிறகு அவர் சுதேசியப் பிரதிக்ஞையை எல்லோருக்கும் சொல்லிவைக்க, சபையோரெல்லாம் அதை உற்சாகத்துடன் நின்றுகொண்டு உச்சரித்தார்கள். அவர் பிறகு கடைக்காரர்களை நோக்கி, உங்களிடத்தில் இப்பொழுதிருக்கும் சரக்குகள் செலவாய்ப் போனபிறகு மறுபடியும் சீமைச் சரக்குகளை வரவழைப்பீர்களோ என்று வினவினார். அவர்களுட் சிலர் அப்படி நாங்கள் வரவழைக்க மாட்டோமென்று வாக்களித்தார்கள். பிறகு அங்கே கூடியிருந்த புரோகிதர்களைப் பார்த்து, நீங்கள் இந்தப் பிரதிக்ஞையை நிறைவேற்றுவீர்களா வென்றார். அவர்கள் எழுந்து நின்று சீமைச் சரக்குகளை உபயோகப் படுத்தும் கிருகஸ்தர்கள் வீட்டில் நாங்கள் இனிப் பூஜை முதலியவை செய்கிறதில்லையென்று மறுப்போமென்றார்கள். சபாநாயகர் அதைக்கேட்டுச் சந்தோஷித்து, அப்படியானால் அந்தவிதமாக ஒரு வியவஸ்தா பத்திரிகை எழுதிக்கொடுங்களென்று கேட்க 2. 3. தினத்தில் அப்படியே யெழுதிக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள்.

பிறகு பாரிஸ்டர் ஸ்ரீ ஜெ. சௌதுரி எழுந்து தான் பேருக்கு மாத்திரமே பாரிஸ்டரென்றும், நம் தேசத்தார் வக்கீல் வேலையை விட்டுத்தொலை



ந்து வர்த்தக வியாபாரங்கள் ஆரம்பிக்கவேண்டுமென்றும், இல்லாவிடில் தேசத்துக்குற்றிருக்கும் ஆபத்து ஒழிந்து போகாதென்றும் சொன்னார். அவர் சுதேசியத்தின் பிரயோஜனங்களைப்பற்றிப்பேசிவிட்டுப்பிறகுராஜாங்க நிர்வாகத்திற் புதிதாய் ஏற்படப் போவதாய்ப் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கும் கவுன்சில் ஆவ் நோட்டெபில்ஸ் என்னும் உயர்ந்தோர் ஆலோசனை சங்கத்தைக்கண்டித்துப் பேசினார். கடைசியாக எல்லோரும் அந்நியவஸ்து பஹிஷ்காரத்தை உறுதியாய்க் கடைப்பிடிக்குமாறு புத்தி கூறி முடித்தார்.

பிறகு 'சஞ்சீவினி' பத்திராதிபராகிய கிருஷ்ண குமார மித்ரர் எழுந்து சென்ற 2-வருஷங்களுக்குட் சுதேசியத்தாற் சாதிக்கப்பட்ட வெற்றியைப் பற்றிச் சுருக்கமாய்க் கூறினார். இந்தியர்கள் பஹிஷ்கார முறையைவிடாமற் கைப்பற்றும் பட்சத்தில் இன்னும் ஐந்துவருஷங்களுக்குட் சீமைச்சரக்குகள் ஒரு தூசாவது இங்கே தங்காதென்று சொன்னார். இப்பொழுது நம் நாட்டைவிட்டு வெளியேறும் பணம் இனி நமது கைத்தொழிலாளிகளின் பெட்டியில் விழும்; பஞ்சமும் பறந்தோடிப்போம் என்றார்.

பிறகு அப்துல் ஹுசேன் சாயப் எழுந்து சீமைச் சரக்குகளை உபயோகிப்பது ஹிந்துக்களுக்கும் முசல்மான்களுக்கும் 'ஹாராம்' அல்லது நிஷித்தம் என்று சொல்லி அதற்காதாரமாகப் பிரமாணவசனங்களை உதகரித்தார். இந்தியர்கள் இந்தவிதத்திற் பாவம் செய்தபடியால் அவர்களது செல்வக்கடவுளாகிய ஸ்ரீமகாலக்ஷ்மி அவர்களைவிட்டுவிலகிப் போய்விட்டாளென்றும், ஆனால் அவர்கள் அதற்காகப் பச்சாதாபப்படுவதைக்கண்டு மனமிரங்கி இப்பொழுது ஜப்பான் தேசத்தில் எழுந்தருளியிருக்கும் அந்தமகாதேவி தனது பழைய பிறந்தகத்துக்குத்திரும்பிவர சன்னத்தமாயிருக்கிறாளென்றும், அந்தத்திருமகள் அவ்வாறு வரும்பொழுது பாரதவர்ஷச் செல்வம் புஷ்கலமாயிருக்குமென்றும் அப்பொழுது தான் சத்திய யுகம் அதாவது கிருதயுகம் உதயமாகுமென்றும் பேசினார்.

அதன்பிறகு பாபு லலிதமோஹன கோஷ் பேசத்தொடங்கி இந்தியர்கள் சுதேசியத்தையும், பஹிஷ்காரத்தையும் உறுதியாய்க் கைப்பற்றி நடக்கும்பக்ஷத்தில் இந்தியாவில் யாதொரு கலகமும் நடவாதென்றும், அதற்குப் பதிலாக இங்கிலாந்திலேயே லங்காஷயர் முதலான விடங்களிற்றான் கலகம் நடக்குமென்றும், அதனாற்றான் இப்படிப்பட்ட முயற்சிகளை அடக்கிவிட முயற்சிகள் செய்யப்படுகின்றனவென்றும் சொன்னார்.

பிறகு டாக்டர் கபூர் பஹிஷ்காரத்தின் ஆவசியகத்தைப் பற்றிப்பேசினார். பின்பு அச்சிடுவோரின் ஐக்கிய சங்கத்தின் காரியதர்சியாகிய பாபு பி. டி. போஸ் எழுந்து ஆக்ரஹமுள்ள ஒரு பிரசங்கம் செய்தார். அதிலே

அவர் விசுவகர்ம பூஜையைப்பற்றிப் பிரஸ்தாபித்து, அதை ஹிந்துக்களில் சில ஜாதியர் மாத்திரமன்றி எல்லா ஹிந்துக்களும் அநுஷ்டிக்கவேண்டு மென்று சொன்னார். அங்கு கூடியிருந்தவர்களை யெல்லாம் தேகபலம் சம்பாதித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். இதனால் தான் போலீசாருடன் சண்டை போடும்படி அவர்களுக்குச் சொல்லவில்லை யென்று விளக்கினார். ஈக்களைக்கொல்ல பீரங்கிகள் பிரயோகிக்கப் படுகின்றனவென்றும் ஆகவே இந்த ஈக்களுக்குக்கூட ஒரு கௌரவம் உண்டாயிருக்கிறதென்றும் சொன்னார். அதாவது விளக்கிச் சொல்லுமிடத்து,பீதியடைந்துபோனவர்கள் ஆங்கிலேயரேயன்றி இந்தியர்களல்லரென்றார். கடைசியில் அங்கு சேர்ந்திருந்தவர்களை யெல்லாம் என்ன ஆபத்து வந்தாலும் பஹிஷ்காரத்தைக் கைவிடாமற் பற்றி நடக்கும்படி வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

பிறகு ஸ்ரீகீஷ்பதி பண்டிதர் பேசத்தொடங்கி இந்தியர்கள் ராஜவிசுவாச மற்றவரல்லர்; ஆனால் இப்பொழுது அவர்கள் நடத்தப்படும் மாதிரியைப் பற்றி அதிர்ப்தி யடைந்திருக்கிறார்களென்றார். உயர்ந்த ஜாதியார்கள் கூட சேவகவிருத்தியில் நுழைந்து செந்தலைச் சேவகராய் (லால்பாடி போலீஸ்) ஊழியம் செய்யும்படி நேர்ந்தது எதனால்? அன்னத்துக்கு அபாவ மேற்பட்டதினால்தானே! சுதேசியம் தழைத்தோங்குமாயின், இப்பொழுது சேவகாவிருத்தியிலிருப்பவர்களே இந்தக்குலாமி அல்லது அடிமைத்தொழிலை விட்டு வர்த்தகமுதலியவற்றிற் பிரவேசிப்பர். அப்பொழுது தலைகளை உடைப்பதற்கு ஒரு லத்தி (கம்பு தடி) யும் இராதுஎன்றார்.பிறகு உபந்நியாசகர் கடைக்காரரைப்பார்த்து, இதுவரையில் ஜனத்தலைவர்கள் சொன்னதை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு இனியும் சீமைச்சரக்குகளை வாங்கி வர்த்தகம் செய்வீர்களோவென்றார்; அவர்களுட்சிலர் தங்கள் வைராக்கியத்தைக் காரியத்திற் காட்டுவோமேயன்றி, பேச்சால் வெளியிட இஷ்டமில்லை யென்று சொன்னார்கள். அந்தச்சமயத்தில் வழக்கமாகக்கடைகளில்சாமான் வாங்கும் வாடிக்கைக்காரர்கள் சிலர் எழுந்து இந்த வர்த்தகர்கள் இப்பொழுது தங்களிடத்திலுள்ள சீமைச் சரக்குகள்செலவழிந்துபோனபிற்பாடு மறுபடியும் அந்ய சரக்குகளை இறக்குமதி செய்யும்பட்சத்தில் அவர்களை பஹிஷ்கரிப்போம் என்று பயமுறுத்தினார்கள். இந்த பயமுறுத்துதலைக்கேட்டுச் சபையோர் சாலவும் சந்தோஷித்தார்கள். பிறகு உபந்யாஸகர் கடைக்காரர்களை நோக்கி, இன்று நீங்கள் விசுவகர்மாவின் முன் செய்துகொண்ட பிரதிக்ஞையை மறவாமல் ஞாபகத்தில் வைக்கவேண்டுமென்றும், அதைப்பக்தி சிரத்தையோடு நிறைவேற்றவேண்டுமென்றும் சொன்னார். இப்பொழுது தசரா பூஜைவரப்போகிறது, இந்தச்சமயத்தில் விபின்சந்திரபாபு பிரசன்னமாயிருந்தால் பஹிஷ்கார முறை யெவ்வளவோ பிரபலமாகும். அப்படிக்கில்லாமல் அவருக்குச் சிறைச்சாலை வாசம் நேர்ந்ததைப்பற்றித் தம் விசனத்தை உணர்த்தினார் என்றாலும், விபின்சந்திரபாபு இல்லாவிட்டாலும் அவரது வேலையை ஏற்றுக்கொள்ள இதரர்கள் இருக்கிறார்களென்றும், இப்படிப்பட்ட சிறைச்சாலைத் தண்டனைகளால் சுதேசியம் அடங்கிப்போய்விடுமென்று கருதுவது பிழையென்றும் அப்படிக்கின்றி இந்தத் தண்டனைகளே சுதேசியத்தை அதிகமாகப் பரவச்செய்து வருகின்றனவென்றும், தண்டனைகள் அதிகமாக ஆக சுதேசியத்தின் வெற்றி மேன்மேலும் விர்த்தியாகுமென்றும் சொன்னார். இவ்வாறு இப்பெருங்கூட்டத்தின் நடவடிக்கைகள் நடந்தேறின. இந்த மீட்டிங்கு நடந்தபிறகு கடைத்தெருவில் ஒரு ஜாத்திரை நடந்தது.



சுதேசமித்திரன்.

# சமாசாரக்கொத்து.

லாகூரில் பஞ்சம்:— லாகூரில் திடீரென்று விலைவாசி உயர்ந்துவிட்டது. இவ்வருஷம் பலமான பஞ்சம் உண்டாய் விடுமென்று ஜனங்கள் பயப்படுகிறார்கள்.

*    *    *    *

## இந்தியாவில் குருடர்கள்.

இந்தியா முழுவதிலும் கணக்கெடுத்துப் பார்க்க மொத்தத்தில் 33-கோடி ஜனங்கள் இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. அவர்களில் ஆறு லட்சம் வரையில் பிறவியிலேயோ அன்றி வயதுகாலத்திலேயோ குருடர்களாக விருக்கிறார்களாம். இனிச்செவிடர்களுக்கும் ஊமையர்களுக்குந்தான் கணக்கெடுக்கவேண்டும் போலும்.

*    *    *    *

வங்காள சுதேச தனசாலை:— கல்கத்தாவில் ஒரு சுதேச தனசாலை ஸ்தாபிக்கவேண்டுமென்று பாபு சுரேந்திரநாத் பானர்ஜி பெருமுயற்சி செய்துகொண்டு வருதல் முன்னமே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத்தனசாலை சென்ற வியாழக்கிழமையன்று ஸ்தாபிக்கப்பட்டு ரிஜிஸ்தரும் செய்யப்பட்டு விட்டது. இதற்கு முதல் 50-லக்ஷம் ரூபாய் தர்பங்கா மகாராஜா மைமன்ஸிங் மகாராஜா, இராஜா ஸ்ரீராசராம் முதலிய எட்டுக் கனவான்கள் டைரக்டர்களாயிருக்கிறார்கள்.

*    *    *    *

## ஒருபாம்பு.

நெப்ராஸ்கா வென்னுமிடத்தில் ஒரு குளத்தின் கரையில் சென்ற 25 வருஷகாலமாக ஒரு பெரும் பாம்பு வசித்துக்கொண்டிருப்பதாய் ஒரு பிரஸ்தாபம் ஜனங்களுக்குள் இருந்து வந்தது. இப்பொழுது அந்தப் பாம்பு வெளியேறிவந்து ஒரு மனிதனைத் தூக்கி 20 அடி தூரத்திற்கப்பால் வீசி எறிந்துவிட்டதாம். இப்பாம்பின் நீளம் சுமார் 40 அடி அதாவது 13 கெஜத்துக்கு மேலிருக்குமாம். தலை ஒரு பெரிய கூடையளவிருக்குமாம். இதனால் ஜனங்களெல்லாம் திடுக்கிட்டிருக்கின்றார்கள். அதன்பின் அதைக் கொல்வதற்கென்று ஒரு சேனை தயார் செய்யப்படுகின்றதாம்.

* * * *

## "சந்தியா" வேடிக்கை.

"சந்தியா" பத்திரிகையின் பத்திராதிபர் மானேஜர். அச்சுக்கூடக்காரர் ஆகிய இவர்கள் கோர்ட்டுக்குப் போகும்பொழுது கல்யாண வேஷம் போட்டுக்கொண்டு போனார்கள். ஆனால் இந்தக் கல்யாணத்துக்குப் பெண் யார் என்று தெரிவிக்கப்படவில்லை. அஃதாவது "சந்தியா" பத்திராதிபர் முதலிய மூவர்களும் மாப்பிள்ளை வீட்டுக்காரராக இருந்ததும் காணாமல் மாஜிஸ்திரேட் கிங்ஸ்போர்டையே பெண்ணாக ஏற்படுத்திக் கொண்டார்களாம்! அது பற்றித்தான். இவர்களெல்லாரும் கோர்ட்டைப் பெண்வீடாகவும், மாஜிஸ்திரேட்டைப் பெண்ணாகவும் விசாரணையைக் கல்யாணமாகவும் பாவித்து அன்றுதினம் ஊர்வலமாகச் சென்றார்கள் என்று ஒரு பத்திரிகை வாயிலாய் வெளியாகின்றது.

* * * *

## ஒரு புல் நூல். (Botany)

புல் பூண்டு மரஞ்செடிகளினியல்பைப்பற்றிய சாஸ்திரமாகிய புல்நூல் (Botany) விஷயமாய் இதுவரையும் வெளிவராத ஒரு பெரிய புஸ்தகம் ஒன்று தென்னமெரிக்கா பிரேஸிலியன் கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. இது 130 பாகங்களடங்கிய 40 புத்தகங்களாகச் செய்யப்பட்டிருக்கின்றது. இதில் மொத்தம் 20.733 பக்கங்களிருக்கின்றன. இதில் சுமார் 40.000 பூண்டுகளைப்பற்றிய விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்நூல் 1819-ஆம் வருஷத்தில் தொடங்கப்பட்டு இப்பொழுது சமீபத்தில் தான் முடிவுபெற்றது. அஃதாவது சென்ற சுமார் 90 வருஷகாலமாய் எழுதப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதை இயற்றிய கிரந்த கருத்தாக்கள் 65 பேர்கள். இதை முதல் முதல் எழுதத்தொடங்கியவர் மார்ட்டியஸ் என்ற ஒருவராம்.



## மிஸ்டர் கேயர் ஹார்டி.

பிரிட்டிஷ் பார்லிமெண்டு மெம்பரும் இந்தியா நண்பருமாகிய மிஸ்டர் கெய்ர் ஹார்டி கல்கத்தாவுக்கு வந்திருக்கிறார். அவர் அங்கே அநேக கனவான்களுக்குப் பேட்டி கொடுத்ததுமன்றி இந்தியா சம்பந்தமான அநேக விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அந்த விவரங்களைப்பற்றிப் பத்திரிகைகளிலெல்லாம் வெகுவாய்ப் பேசப்படுகின்றது. இவர் சில தினங்களுக்கு முன் பாபு சுரேந்திரநாத் பானர்ஜியின் "வங்காளி" பத்திரிகையின் ஆபீஸுக்குச் சென்று வெகுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அதன் பின் கல்கத்தாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "இந்தியன் ஸ்டோர்ஸ்" என்னும் சுதேச பண்டசாலைக்குப்போய் அங்குள்ள பலவிதமான சாமான்களைப்பார்வையிட்டு இந்தியாவின் பற்பல கைத்தொழில்களைப் பற்றி மேற்படி பண்டசாலை மானேஜருடன் ஒருமணிநேரம் பேசிக்கொண்டிருந்தார். இவர் எல்லாரிடமும் மிகவும் மரியாதையாயும் தயவாயும் பேசுவதோடு நிஷ்கபடமான சுத்த இருதய முடையவராய் விளங்குகின்றாராம்.

* * * *

## ஸ்ரீ அம்பிகா சரணர் B. A., M. E.

இந்தியாவிலிருந்து அநேக மாணாக்கர்கள் ஜப்பானுக்குப்போய்ப் பலவித கைத்தொழில் படித்து வருகின்றார்கள். ஆயினும் ஒருவராவது ஜப்பான் (யூனிவர்சிட்டி) சர்வகலாசாலைகளிலே வித்யா பட்டங்கள் பெறவில்லை. கல்கத்தாவிலிருந்து சென்ற ஸ்ரீ அம்பிகா சரண என்னும் மாணாக்கர் ஜப்பான் கியோட்டோ சர்வகலாசாலையில் M. E. (எம். ஈ. Master of Engineering) என்னும் பட்டம் முதல் முதல் பெற்றார். இவர் கல்கத்தா சர்வகலாசாலையில் 1901-ஆம் வருஷத்தில் B. A. பரீக்ஷை தேறிவிட்டு 1904-ஆம் வருஷம் செப்டம்பரில் ஜப்பானுக்குச் சென்று கியோட்டோ இம்பீரியல் யூனிவர்சிட்டியைச்சேர்ந்து M. E. பரீக்ஷைக்கு வாசித்து அங்கே அப்பரீக்ஷையில் முதல்வராய்த் தேறினார். ஜப்பானிய கல்வியதிகாரிகள் இவருடைய புத்திக் கூர்மையை மெச்சி இவருக்கு ஒரு சம்மானப் பதக்கம் கொடுத்ததுமன்றி இவரை மிகவும் புகழ்ந்து பேசினார்கள். ஜப்பான் பத்திரிகைகளெல்லாம் இவருடைய படத்தையும் இவருடைய விவேகத்தைப்பற்றிய அபிப்பிராயங்களையும் வெளியிட்டன. இவர் சென்றமாதம் 24-ஆம் தேதியே ஜப்பான்விட்டுப் புறப்பட்டுவிட்டார். அநேகமாய் இம்மாதம் முடிவுக்குள் கல்கத்தா வந்து சேருவார்.

நகரும் கோயில் :— நடைகிணறுபோன்ற யுக்தி செய்ததாகத் தென்னாலிராமன் காலத்தில் கதாரூபமாக நம்மவர் படித்திருப்பார்கள். அதைப் போலவே அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களைச்சேர்ந்த சிகாகோ பட்டணத்தில் ஒரு சிறிய பிரார்த்தனைமந்திரமானது கட்டப்பட்டிருக்கின்றது. அதன் நீளம் 75-அடி அதனுள் குருவானவர் உட்கார்ந்து பெருத்த தனிகர்களின் வீட்டுவாசல்களிற் கொண்டுபோய் நிறுத்தித் தனிகர்களின் குடும்பத்தவரை நகரும் கோவில்களில் வந்து தொழும்படி செய்கிறார்கள். இந்த நகர்கின்ற கோயில்போல் இதர பட்டணங்களிலும் பிரார்த்தனை மந்திரங்கள் செய்ய இப்போது ஏற்பாடாய்க் கொண்டிருக்கிறதாம்.

*　　　*　　　*　　　*

ஓர் நவீன ஆலயம். பல்லாரிஜில்லா ஹோஸ்பேட்டைத் தாலூகா ஹம்பி கிராமத்தில் பழைய கட்டிடம்ஒன்று வழியால் நிலத்துக்குள் பெரிய கோவில் அகப்பட்டிருக்கிறது. அது 2 பர்லாங்கு வரையிருக்கிறது. அக்கோவிலில் பிரதிமையுண்டு த்வஜஸ்தம்பம் மிகவும் பெரிது. மேலும் அநேக மண்டபங்களும் மகாத்வாரங்களுமிருக்கின்றன. இவ்வாலயத்தைச் சீர்படுத்தச் சற்றேறக்குறைய 600 கூலியாட்கள் வேலை செய்து வருகிறார்கள். இது சர்க்காரார் கவனத்திலிருக்கிறது. இக்கோவில் பூர்வகாலத்தில் பௌத்தமதத்தவருடையதாயிருக்கலாம். இதைவிடச் சிறந்த பௌத்தராலயம் இம் மைசூர் பிராந்தியத்தில் "ஷிராவணப்பலகுலா" என்று சொல்லப்படும். இது மிக்க வேலைத்திறமையோடு சித்திர விசித்திரமா யிருப்பதைக் கண்டோர் அதிசயிப்பார்கள்.

*　　　*　　　*　　　*

பசு:—சாதாரணமாய் பசுமாடு கிராமங்களில் வெளியே கட்டப்படுகிறது. பேட்டைகளில் வீட்டுத் தாழ்வாரத்திற் கட்டுவார்கள். மாடு இருக்கும் இடம் மூத்திர நாற்றமடிக்கும். இவ்விடங்களில் பால் கறந்தால், பால் நாற்றத்தைக் கிரகிக்கிறது. அப்பால் குழந்தைகளுக்கு நல்லதன்று. மாடு குளிரிலும் மழையிலும் அடிபட்டால் அதன் பால் பாதியிலொருபாகம் குறைவதுமல்லாமல் தைலப் பசையும் குறைகிறது.

கறக்கும்போது பால் சூடாறுதமுன் சாப்பிடச்சீக்கிரம் ஜீரணமாகிறது. சுண்டக் காய்ச்சின பாலைச் சாப்பிட 100-க்கு 8-பாகம் ஜீர்ணமாகாமற் போகிறது. பால் திரவமாயிருப்பதால் அதில் உள்ள சத்து முழுவதும் ஜீர்ணமாகும் ஸ்திதியில் இருக்கவேண்டும். அதிகமாய் ஒரேதரமாய்ப் பாலைச் சாப்பிடுவதற்குப் பதில் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சாப்பிட ஜீரணம் அதிகமாகிறதென்று தெரிகிறது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV 1907
MADRAS.

உ

குமரன் துணை.

# விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 6. } 1907 ஹு அக்டோபர். { பகுதி 10.

## நாட்டின் நலத்தைத்தேடுவது எவ்விதம்?

சென்ற சில வருஷங்களாக நம் நாட்டிற் பஞ்சமென்று குடிகள் சட்டிதூக்கி நாடுவிட்டு ஓடாவிடினும் லக்ஷக்கணக்காய்ப் பட்டினிகிடந்து ரஸ்தாப்புறங்களிலும் கஞ்சித்தொட்டிகளிலும் பிணக்காடாகக் கிடவாவிடினும் பஞ்சம் குடிகொண்டு வருகின்றதென்றே கூறலாம். தாதுவருஷத்துப் பஞ்சத்திலும் அரிசி 4, $4\frac{1}{4}$ படிவிற்றது சொற்பவாரங்களே. அவ்வாறிருக்க ஒரே மாதிரியாய் நிகழும் இரண்டுவருஷகாலமாகத் தென்னிந்தியாவில் அரிசிவிலையும் தானியவிலையும் ஒரேமாதிரி குறைந்துவிற்றுக் குடிகளின் உயிரைச் சொற்பஞ் சொற்பமாக வாங்கிவருவதை அநுபவத்தில் எந்தப் புத்திமானும் அறிவான். இம்மாதிரியாகவே யிருந்து வந்தால் குடிகள் க்ஷேமமடைவது எக்காலம்? மழைமாரி குறைவின்றியிருந்தும் இந்தத்துன்பத்தை நாம் அனுபவிப்பதா யிருந்தால் என்றைக்கு முன்னுக்கு வருவது? இக்கேடு தொலைய வழிதான் என்ன? அல்லது இதற்கு ஒருநாளும் மீட்சிகிடையாதோ? வடஇந்தியாவில் வங்காளம், ஐக்கிய மாகாணம், பஞ்சாப்முதலிய இடங்களிற் பஞ்சமே உண்டாகிவிடும் போலிருக்கின்றதென்று கவரன்மெண்டாரே பயந்துகொண்டிருப்ப

தாக வெளியாகின்றது. அப்படிப்பட்ட நீர்வளம் பொருந்திய இடங்களிலேயே பஞ்சம் நேரிடுமானால் நம் தென்னிந்தியாவுக்குப் பின்னும் கேடேயொழிய நன்மையுண்டாகப்போவதில்லை. நம் நாட்டுத் தானியங்கள் அங்குப்போய்ச்சேர நாமும் கஷ்டப்படவேண்டியதே. ஏற்கனவே பிளேக்வியாதி நம்நாட்டைப்பலமாய்க் கைப்பற்றிக் கொண்டது. பேதிக்கோ சொல்லவேண்டுவதில்லை பஞ்சமும் பலமாய்ச் சேருமானால் இந்தியாவின்பாடு அதோகதிதான். எந்தக்கஷ்டம்வந்தாலும் அநுபவியாமற்போனால் விடவாபோகிறது. இருந்தாலும்நம் முயற்சியும் இருந்தாலல்லவோ ஒருகால் ஈடேறலாம். சாசுவதமாய்ப் பஞ்சம் நாட்டிற் குடிகொண்டதற்குக் காரணங்கள் யாவை? அவைகளை ஆய்ந்தறிந்து பலமான முயற்சிசெய்து சீர்திருத்தினாலல்லது நாம் க்ஷேமமடையப்போகிறதில்லை. நமக்குத்தோற்றியமட்டிற்சில காரணங்கள் கூறுவோம்.

முதலாவது குடியானவனது குறைவு:—நம் குடியானவர்கள் உழைப்பதிற்றடையில்லை. உழைக்கும் உழைப்பை வீணாக்கிக்கொள்ளாமற் புத்திசாலித்தனமாய்ப் பயன்பெறச்செய்வதில்லை. விவசாய முறைகளை நன்கு அறியாததே இதற்கு முக்கிய காரணம். குடியானவர்களுக்குள் இருக்கப்பட்ட அறியாமையென்னும்அந்தகாரம்என்று நீங்குமோ அன்றே அவன் முன்னுக்கு வருவான். எருச் சேகரிப்பதிலும் பயிர் செய்வதிலும் சாஸ்திர முறைகளை அநுஷ்டிக்கவேண்டுவது அவன் கடமை. அதற்கோ அறிவுவேண்டும். ஆகையால் முதல் முதற் குடியானவர்களுக்குள் அறிவைப்பரவச்செய்வதே நம்கடமை. அறிவு என்பது எழுதப்படிக்கக் கற்றுக்கொள்வதன்று. விஷயங்களைப் புத்தியில்வாங்கிக்கொண்டு தொழில்களை முன்பின் யோசனைகளின்பேரில் நடத்தல். தற்காலம்ஏற்பட்டிருக்கும்விவசாயசங்கத்தார் ஒவ்வொரு ஊரிலும் இது விஷயத்தில் தக்க ஊக்கங்காட்டுவார்களானாற் குடியானவர்கள் கண்கள் திறக்கப்பட்டு வெகுதூரம் நன்மையடைய இடமுண்டு. தங்களைச் சுற்றியிருக்கும் சாதனங்களைக் குடியானவர்கள் சரிவர உபயோகப்படுத்தத் தெரியாமலே கேடுறுகிறார்கள். முக்கியமாய் எருவைப்பற்றியும், பலவித லாபகரமான சாகுப



டிகளைப்பற்றியும், கன்றுகாலிகளைக் காப்பாற்றவேண்டிய விஷயங்களைப்பற்றியும் முயற்சி செய்வதுடன் அந்நியர்களுடைய அநுபவங்களையும் நன்மையானால் அநுசரிக்கவேண்டியது அவசியம்.

இரண்டாவது:—குடியானவர்களுக்குள் ஐக்கியம் போதாது. ஐக்கிய சங்கங்கள் ஏற்படுத்தி ஒருவருக்கொருவர் துணையாக நின்று ஒற்றுமையுடன் வேலைசெய்துவந்தால் நாடெங்கும் தழைத்தோங்குமென்பதிற்றடையில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் கோஆபரேடிட் சங்கங்கள் ஏற்படவேண்டும். விவசாய பாங்கி ஏற்படுத்திக்கொண்டு பொறாமையின்றி ஒற்றுமையுடன் உழைத்து வரவேண்டும். கிராமப் பொதுவில் எல்லோரும் ஒன்றுகூடி உழைத்தாற் பயனடையலாம். ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் வெளியேறிச்செல்லுகிற கூலிக்காரர்களைக் கிராமத்தார் கவனித்துக் கிராமத்துக்கே உழைக்கும்படி ஏற்பாடுசெய்தால் எத்துணையோ பயன் பெறலாமே. அவ்வாறின்றிக் கோழிக்குஞ்சைப் பருந்து அடித்துக்கொண்டு போகும் விதம் அந்நியநாட்டுக்குப்பசப்புவார்த்தைசொல்லி அழைத்துச்செல்லும் கண்காணிகளுக்குநம்கூலிக்காரர்களை ஒப்படைக்கிறோம். அக்கண்காணிகளை ஊருக்குள் நுழையவிடாதுஅடிப்பதே முதற்கடமையாகும். கூலியாட்களுக்குத் தகுந்த கூலிகொடுத்து அவர்களையும் பிழைக்கச்செய்து நாமும் பிழைக்க வழிதேடுவதே உசிதம். பலகிராமத்தார் ஒன்றுகூடி இதுவிஷயத்திற் கண்ணாயிருந்து தக்க அறிஞர்களைத் துறைமுகங்களுக்கும் பெரிய ரயில்ஸ்டேஷனுக்கும் அனுப்பி அயல்நாட்டிலுள்ள கஷ்டநிஷ்டூரங்களைக் கூலிவேலைக்காரர்களுக்குத் தக்கவண்ணம் எடுத்துக் கூறச்செய்தால் பலர் நின்றுபோய்விடுவார்களென்பதிற்றடையில்லை. அறியாமையாலேயே அவர்கள் அந்நியநாடு செல்லநேரிடுகின்றது. சரிவர அப்பேதைகளுக்குப் புத்திபுகட்டத் தக்கவர்களிருப்பாரானால் இந்த அந்நியாயம் அடியோடே தொலைந்து நாடு நன்மையடையும். நம் கூலிக்காரர்களைக்கொண்டே சகல நன்மைகளையும் அடைந்த டிரானிஸ்வால் வெள்ளையர்கள் இப்பொழுதுநம் இந்தியக்குடிகளை என்னபாடு படுத்துகிறார்கள். அவர்கள் படுத்தும்பாடு டைம்ஸ்பத்திரிகைக்குக்கூடப் பொறுக்க முடியவில்லையென்றால் அப்பாட்டைப் பகரவும்வேண்டுமோ. சுவதேசீயம் என்ற விஷயத்தைத் தக்கவண்

ணம் புகட்டி அக்கூலிகளைத் திருப்பவேண்டும். நம் சென்னை இராஜதானியில் மட்டும் 36,574,000 ஏக்ரா சாகுபடியாகின்றது. அதன் ஜனத்தொகை 37,690,000. ஏறக்குறைய ஒவ்வொருவருக்கும் ஒரு ஏக்ரா வீதமாகிறது. ஜப்பானில் ஒரே ஏக்ராவில் 7 பேர் பிழைக்கவேண்டியிருக்கிறது. நாம் ஜப்பானியரினும் எத்தனையோ பங்கு க்ஷேமமடையலாமே. அறிவென்ற ஒரு உயர்ந்த பதார்த்தம் விருத்தியாகாதபடியினாலன்றோ நாம் கஷ்டப்படவேண்டியிருக்கிறது. 1905—06 ௵த்தில் தஞ்சாவூர்ஜில்லாவிலிருந்து வெளியேறி அயல்நாடுசென்ற கூலியாட்களின் மொத்தம் 34,875. முக்கியமாய் இவர்கள் சிங்கப்பூருக்குப் போனார்கள். சென்னை இராஜதானியிலிருந்து இலங்கைக்கு மட்டும் போன கூலிகளின்தொகை 227,827. இவ்வாறுபோகும்படி பார்த்துக்கொண்டிருந்து நாம் தூங்கினால் நம் நாடு எவ்வாறு முன்னுக்குவரும். "ஓடியோடி ஒன்பதுகாசு சம்பாதிப்பதிலும் உட்கார்ந்த இடத்தில் ஒருகாசு சம்பாதிப்பதே மேல்" என்ற பழமொழியைநாம் மறக்கவாவேண்டும். அயல்வீட்டிற் பஞ்சபக்ஷிய பரமான்னத்துடன் புசிப்பதிலும் தன்வீட்டிற் காடிக்கஞ்சியை மூடிக்குடித்தல்சிறப்பன்றோ. நம்முள் ஒற்றுமையின்மையும் விஷயங்களைக்கூர்ந்து கவனியாமையுமே இக்கேட்டிற்குக் காரணமாகின்றது. அயல்நாட்டுக்கு வியாபாரத்தின்மேற் சென்று இலாபம் சம்பாதிப்பதை நாம் தடுக்கவில்லை. "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்றுகூறியது வியாபாரிகளைப் பற்றியேயொழிய கூலிக்காரர்களைப் பற்றியாகாது. நம் உழைப்பை அயல்நாட்டுக்கு இரணமிடாமலும் அயல்நாட்டுத்தனம் நம் நாட்டுக்குள் தாராளமாய் வரும்வழியைத் தேடுவதிலும் நாம் கண்ணுங் கருத்துமாயிருந்து வரல்வேண்டும்.

மூன்றாவது:—நம் நாட்டு விளைபொருள்கள் நாம் பசியால் வருந்த அயல்நாட்டுக்குக் கொண்டுபோகப்படுகின்றன. அதனைமுக்கியமாய்த் தடுத்தல் நம் கடமையாகும். நாட்டுக்கோட்டைச்செட்டிகள் தனிகர்களாகையால் ஆங்காங்கு பணத்தை முன்கொடுத்துக் குடியானவர்களிடமிருந்து விளையும் நெல்லையும் தானிய தவசங்களையும் சிங்கப்பூர், கொழும்பு, ஜப்பான், சீனா முதலிய இடங்களுக்கு ஏராளமாகக் கொண்டுபோய்விடுகிறார்கள். தங்கள் சுயநயமே பாராட்டி இக்



காரியஞ்செய்கிறார்களேயொழிய தேசக்ஷேமத்தை அவர்கள்சிறிதும் கவனிப்பதில்லை. "கள்விற்றுக் கலக்காசு சம்பாதிப்பதிலும் கற்பூரம் விற்றுக் காற்காசு சம்பாதிப்பதே மேல்" என்பதை இவர்கள் அறியாமலிருப்பது ஏனோ?

இவ்வாறு தேசத்துரோகஞ்செய்யாமல் தங்கள் தனங்களைச் செலவிட்டு விளைபொருள்களை வாங்கி நம் நாட்டிலேயே சொற்ப இலாபத்துக்கு விற்பார்களானால் நலமாயிருக்கும். இதைவிடத்திருப்பணிவேலையும் அன்னசத்திரமும் பெரிய தர்மமாகா. தீவினைவிட்டீட்டல் பொருளாகுமேயன்றி எவ்வழியானும் பேராசைப் பேய்பிடித்துப் பொருள் சம்பாதிப்பது தர்மமன்று. அயல்நாட்டார் தர்மம் அறியாதவர்கள். நம் நாட்டில் நாம் நெடுங்காலமாய்த்தரும வழிகளையே அநுசரித்துப் பொருள்தேடிவந்ததாலேயே நம்நாடு நீடித்த புகழடைந்து வந்திருக்கின்றது. தேசத்துரோகத்தை நாடிப் பொருள் சம்பாதித்துப்பின் தர்மத்தில் செலவிடுவதிற்பயனென்ன? குடியானவர்களை அடியோடே தொலைப்பவர்கள் இந்நாட்டுக்கோட்டையாரே. சொற்பப்பணங்கொடுத்து அவன் ரத்தத்தை உறிஞ்சிவிடுகிறார்கள். ஆகையால் ஐக்கிய சங்கங்கள் ஏற்படுத்தி இவர்கள் செய்யும் அநீதங்களைப் புத்திபூர்வமாய்த் தொலைத்தாலொழிய நாடு முன்னுக்கு வரமாட்டாது. அவர்கள் விழிப்புள்ளவர்களாயிருந்து தூங்குகிற குடியானவர்களுடைய சொத்தைப் பகற்கொள்ளை செய்கிறார்கள். இதனைக்குடியானவர்கள் அறிந்து எச்சரிக்கையாயிருத்தல்வேண்டும். அவர்களிடம் கடன்வாங்குகிற வழக்கத்தையும்அவர்களுக்குத்தங்கள் விளைபொருள்களை விற்கும் வழக்கத்தையும் அடியோடே நீக்கினால் பாதி க்ஷேமமுண்டு. நாலுபடி அரிசி விற்பதை அப்பொழுது மட்டுமே தொலைத்துச் சாசுவதப்பஞ்சத்தைத் தொலைக்கலாம்.

நான்காவது:—நம் இராஜதானியில் மட்டும் 1905—06௵த்தில் சிவில்கோர்ட்டில் ரூ 65,75,564, கிரிமினல்க்கோர்ட்டில் ரூ 52,82,313, பிராசெஸ் கட்டணத்தில் ரூ 12,59,735; ஸ்டாம்புகாகிதம் ரூ 197,176 செலவாகியிருக்கிறது. ஆக மொத்தம் ரூ 133,14,788 விவகாரத்தில் மட்டும் செலவாகிறது. வக்கீல்பீஸ்முதலியவைசேர்த்தால் சுமார் இரண்டுகோடி ஆகலாம். இந்த இரண்டு

கோடிதனம் கல்வி விஷயத்திலும் கைத்தொழில்விஷயத்திலும்செலவிட்டால் நாடு கடைத்தேறாதா. “இரணங்கொடுத்தாலிடுவர் இடாரே சரணங்கொடுத்தாலுந்தாம்” என்ற முதுமொழி ஞாபகத்துக்கு வருகின்றது. கிராம பஞ்சாயத்து ஏற்படுத்தி வழக்குக்களைத் தீர்த்துக்கொண்டாற் சிரப்பிரயாசையும் பணச்செலவும் அதனாற் கடனுமின்றிக் குடித்தனக்காரர்கள் முன்னுக்குவரக்கூடாதா? கோர்டுகளும் வக்கீல்களும் அதிகரிக்க அதிகரிக்க நாட்டின்க்ஷேமம் குன்றுமேயொழியச்சுகம் அதிகரிக்கஇடமில்லை. ஆகையால்சிறிது நஷ்டப்பட்டாவது வழக்குக்களை நாமே தீர்த்துக்கொள்ளுதல் நலம். வழக்கு அதிகரிப்பதாலேயே நாட்டில் அதர்மங்களும் குரோதங்களும் அதிகரிக்கின்றன. சுகவாழ்வு குன்றுகின்றது. கிராமங் கிராமமாய்க் குடித்தனம் குடித்தனமாய்க் கெடுவதற்கு இதுவே முக்கியகாரணம்.

இவற்றையெல்லாம் கூர்ந்து பார்த்து கேட்டை விலக்க வழிதேடாததே நாம் க்ஷீணமடைவதற்கு முக்கிய காரணம்.

அந்நியநாட்டுக்கு நம் சரக்கைச்சொற்பவிலைக்கு அனுப்பி அயல் நாட்டார் பெருத்த இலாபமடைய நாமும் நம்நாடும் க்ஷீணித்துப்போவதைச் சிறிதும் சிந்திப்பதில்லை. பருத்தி, சர்க்கரை, தோல், தேங்காய்முதலிய எண்ணெய் வித்துக்களை அந்நியநாட்டுக்கு அனுப்பி நம் வாயில் மண்ணைப்போட்டுக்கொள்ளுகிறோம். தேசமெங்கும் பஞ்சாலைநாட்டிப் பின்யந்திரவேலையால் நெசவுசெய்து க்ஷேமமடைவதென்றால் நம்மால் தற்காலம் அதிகம் செய்யமுடியாது. கைத்தறிகளாலேயே நம்வேலையைச் சாதித்துக்கொள்ளல் நலம். பருத்திப் பயிர்செய்யும் விதத்தை விருத்திபண்ணவேண்டியதும் நம் கடமை. மேனாட்டுக்கிழங்குச் சர்க்கரைவந்து வியாபிக்கவே அருமையான நம் கரும்புச் சர்க்கரை அடியோடே தொலைய நேரிட்டிருக்கிறது.

இதனைப்பற்றி மற்றோர்சமயம் விரிவாக எழுதுவோம்.

பத்திராதிபர்.

---

# துஷ்யந்தன் சரித்திரம்.

(வியாசபாரதமொழிபெயர்ப்பு.)

வைசம்பாயனர் ஜனமேஜயரைப்பார்த்துச் சொல்லுகின்றார். பரத வம்சோத்தமா! கேளாய். புரு வம்சத்தை ஸ்தாபித்தவன் மகா பௌருஷம் வாய்ந்த துஷ்யந்தனென்ற ஒரு வேந்தன். நாற்புறமும் கடலாற் சூழப்பெற்ற இப்பூமிக்குப்புரவலனாயிருந்த அவனது ஆணை நாற்றிசையிலும் பரவினதோடு கடல்மீதுள்ள பற்பல இடங்களின்மீதும் வியாபித்தது. அவற்றிற்கும் அதிபதியாயிருந்தனன். சத்துருநிக்கிரகனான அவ்வேந்து நீசர்களது இராஜ்யங்களையும் தன்வசப்படுத்தி அவற்றின் மீதும் செங்கோலோச்சி வந்தான். அவ்வேந்தன் அரசு புரிந்தகாலத்திற் சங்கிரம ஜாதிகளில்லை. பூமியில் விளைபொருள்களும் பற்பல உலோகங்களும் யாதொரு பிரயத்தனமுமின்றி யதேச்சையாயுண்டானபடியால் கிருஷிகராவது சுரங்கவேலைக்காரராவது பாவிகளாவது இல்லாமற் போயினர். எல்லோரும் தர்மாத்துமாக்களாக இருந்தமையால் தர்ம சிந்தையுடன் தத்தமக்குரிய கர்மாநுஷ்டானங்களைக் குறைவின்றிச் செய்து வந்தனர். அக்காலத்தில் அவ்விராஜ்யத்தில் திருடர் பயமாவது, பஞ்சமாவது, வியாதியாவது சிறிதுமின்றி அற்றுப்போயின. நான்கு வருணத்தவர்களும் யாதொரு பலாபேக்ஷையுமின்றித் தத்தம் குலாசார தருமம் வழுவாதொழுகினர். துஷ்யந்தனது பிரஜைகளெல்லாரும் சிறிதும் பயமின்றிச் சுகித்து வாழ்ந்தனர்.

பூர்ஜன்னியன் என்ற இந்திரன் காலாகாலங்களில் மழை வருஷிக்கக் கழனியிலுள்ள பயிர்கள் செழுமையுள்ளனவாயும் ரஸவத்தாயுமிருந்தன. அக்காலத்து அவனது நாடு நீர் வளம் நில வளம் முதலியன பொருந்தி எல்லாவிதத் தனங்களும் பிராணிகளும் நிறைந்திருந்தன. பிராம்மணர் தாங்கள் செய்யவேண்டிய கர்மாநுஷ்டானங்களைச் செய்து சத்தியவான்களாயிருந்தனர். யௌவனபுருஷனான துஷ்யந்தன் மிக்க புய வலிவாய்ந்தவனாகவும், வச்சிராயுதமன்ன திடசரீரத்துடன் கூடினவனாகவுமிருந்தான். தன் புயங்களிற் காடு செடிகளோடுகூடிய மந்தரகிரியைத் தாங்கக் கூடிய ஆற்றலுள்

ளவன். இந்தத் துஷ்பந்தன் கதாயுதத்தைக்கொண்டு செய்யும் நால்வகைப் போரிலும் யானை யேற்றம் குதிரை யேற்ற முதலியவற்றிலும் பற்பல ஆயுதப் பயிற்சியிலும் மிக்க சமர்த்தனாயிருந்தனன். அவன் பலத்தில் மகா விஷ்ணுபோல்வான். காந்தியிற் சூரியனை யொத்தவன். கம்பீரத்திற் சமுத்திரத்துக்கும் பொறுமையிற் பூமிதேவிக்கும் சமானமானவன். இத்தகைய வேந்தனான துஷ்யந்தன் மனத்திருப்தியுள்ள தனது பிரஜைகளால் நேசிக்கப்பெற்று அவர்களை மிக்க நீதியுடன் நடத்தி வந்தான்.

ஒரு காலத்தில் புஜபல பராக்கிரமமுள்ள துஷ்பந்தமகாராஜன் ரதகஜதுரகபதாதிகளான நால்வகைச் சேனையுடனும் கத்தி, எறிபடை, பெருந்தடி, குண்டாந்தடி, பாலா, ஈட்டி முதலியவற்றைக் கையிலேந்திய வீரர்கள் புடைசூழ வேட்டையாடும் நிமித்தம் காட்டிற்குப்புறப்பட்டான். அக்காலத்திற் சிங்கம்போன்ற யுத்த வீரர்களது கர்ச்சனையும், சங்கத்தொனியும், பேரிகை முழக்கமும், தேர்ச் சக்கரங்களின் ரீங்கார ஓசையும், யானை, குதிரை முதலிய வாகனாதிகளின் சப்தமும், தத்தம் அந்தஸ்துக்கேற்ப ஆடை தரித்து வந்த ஏவற்காரர்களேந்திய படைகள் ஒன்றோடொன்று மோதுங்காலுண்டாகிய ஓசையும் ஒன்றோடொன்று கலக்கக் காது செவிடுபடும்படியான ஒரு பேரொலி எழும்பியது. பேரழகு வாய்ந்த பெண்டிரெல்லாம் தங்கள் மாளிகைகளின் மேல்மாடியில் நின்றுகொண்டு தனது சத்துருக்களைத் துவம்ஸஞ்செய்கிற வச்சிராயுதபாணியாகிய தேவேந்திரனெனவே நினைத்து சத்துருக்களில்லாத அவன் தலையிற் பூமாரி பொழிந்து அவனைத் திருப்தி செய்வித்தனர். பிராமணோத்தமர்களெல்லாம் ஆசிவழங்கி அவனுடன் செல்ல அரசன் மனமகிழ்வுற்று மான்வேட்டையாட ஆவலுடன் அடவியை நோக்கிச்சென்றனன். நகரவாசிகளாகிய பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களும் மற்றோரும் அரசனுடன் சற்று தூரம்சென்று பிறகு அவன் அநுமதி பெற்றுத் தத்தம் வீட்டிற்குத் திரும்பினர். பிறகு அரசன் வாயுவேக மனோவேகத்துடன் கூடிய ஒரு ரதத்திலேறிச் செல்ல பூமி, அந்தரிக்ஷமெங்கும் சக்கரங்களின் ரீங்கார தொனியால் நிறைந்தது. நந்தனமென்று சொல்லப்பட்ட தேவேந்திரனது உத்தியானவனம்



போன்றிருந்த அந்த அடவி வில்வம், அர்க்கம், கதிரம், கபித்துவம், தவம் என்ற விருக்ஷ ஜாதிகளால் நிறைந்து எங்கும் மேடு பள்ளமாயிருந்தது. அண்மையிலிருந்த பாறைகளினின்றும் விழுந்த பெருங்கற்கள் அங்குமிங்கும் சிதறிக்கிடக்கின்றதையும் அக்கானகம் நிர்மானுஷ்யமாய் ஜலமில்லாமலிருப்பதையும் அரசன் கண்டான். சிங்கம், புலி, யானை, மான் முதலிய வேட்டை மிருகங்கள் ஏராளமாய் விழாநின்ற அடவி அநேக யோஜனை விஸ்தீரணமுள்ளதாயிருந்தது. புருஷவியாக்கிரனான துஷ்யந்தன் தனது ஏவலாட்களினுடையவும் வீரர்களின் உடையவும் உதவிகொண்டு காட்டைக் கலைத்துச் சேய்மையினும் அண்மையிலுமிருந்த கடும்புலி முதலிய வேட்டை மிருகங்கள்மீது பாணங்களை யெய்தும், எறிபடைகளை எறிந்தும் கத்தியால் வீசியும் அவைகளை மாய்த்துக்கீழே சாய்த்தனன். கதாயுதத்தைச் சுழற்றுவதிற் சமர்த்தனான புயவலி வாய்ந்த அம்மன்னன் இவ்வண்ணம் காட்டிலுள்ள துஷ்டஜந்துக்களைக்கொன்று அக்கானெங்கும் பயமின்றியலைந்து திரிகையில் வேந்தர்பின்வந்த வேட்டையிற்பிரியமுள்ள வீரர்கள் காட்டைக் கலக்கவே சிங்கங்கள் கூட்டங்கூட்டமாய் அதினின்றும் வெளிப்புறப்பட்டன. மற்றைப்பிராணிகளும் தங்கள் தலைவரை யிழந்து பயத்தாலும் கவலையினாலும் வீறிட்டுக்கொண்டு கூட்டங் கூட்டமாய் நாலா பக்கங்களிலும் ஓடத்தலைப்பட்டன. அவ்வண்ணம் ஓடியதாற் களைத்து நதிக்கரையை யணுகவே அந்நதிகள் தண்ணீரில்லாமல் உலர்ந்து போயிருக்கக் கண்டு தாகவிடாய் தீராது அவைகளில் அநேகம் கீழ் விழுந்து உயிர் துறந்தன. அவ்வாறு வீழ்ந்த சில விலங்குகளை மிக்க பசியோடிருந்த யுத்த வீரர்கள் பச்சையாகவே தின்று பசியாறினர். இன்னும் சிலர் அவைகளைத் துண்டித்து நெருப்பில் வாட்டிப்புசித்தனர். பாணங்களாலும் மற்ற ஆயுதங்களாலும் அடிபட்ட மிக்க வலியுள்ள காட்டு யானைகள் மதவெறி கொண்டு துதிக்கைகளை உயரக்கிளப்பிக்கொண்டு மிக்க திகிலடைந்ததால் சிறுநீர் சொரிந்தும் இரைப்பையிலுள்ளதை வாந்திசெய்தும் உதிரத்தைக்கக்கிக்கொண்டும் ஓடத்தலைப்பட்டன. அவ்வாறு ஓடுகையில் அநேக யுத்த வீரர்கள் அவைகளின் காலால் மிதிபட்டிறந்தனர். இவ்வாறு துஷ்யந்தன் தனது பரிவாரத்துடன் கடு

ம்புலி, சிங்கம் முதலியன வாழ்கின்ற அக்காட்டிலுள்ள துஷ்ட மிரு
கங்களனைத்தையுங் கொன்றும் பின்னும் வேட்டையாடக்கருதி
வேறொரு கான் புகுந்தனன். பிறகு துஷ்யந்தன் சேனைகளையும்
பரிவாரங்களையும் இராஜ்ஜியத்திற்கேகும்படி அனுப்பிவிட்டுத் தன்னு
டன் ஓர் ஏவலாளைமாத்திரம் அழைத்துக்கொண்டு அக்கானின் எல்
லையிலிருந்த ஒரு புல்பூண்டற்ற பெரிய வனாந்தரத்தைக்கடந்து அப்
பாற் செல்லவும் பார்ப்பதற்கழகாயும் குளிர்ந்த மந்தமாருதம் உலா
வப்பெற்றதாயும் மனத்திற்கு மகிழ்ச்சியைத்தரும் இருடி ஆச்சிரமங்
கள் நிரம்பப்பெற்றதாயுமுள்ள ஓர் அடவி புகுந்தனன். அவ்விடம்
பூங்கொம்புகளோடு கூடிய விருக்ஷ ஜாதிகள் நிறைந்தும் மிகவும்மிரு
துவாயும் பசுமையாயுமுள்ளபுல் செழித்து வளர்ந்துமிருந்தது. அநே
கமைல் விஸ்தீரணமுள்ள அந்தக்காடு கோகிலம், சிகாலம் முதலிய
பாடுகின்ற பக்ஷிகளின் தீங்குரலோசை ஒலிக்கப்பெற்றதாயும்,
சாகோப சாகைகளுடன் கூடி விதானம் போல் கவிந்து நிழலைத்தரும்
உன்னத விருக்ஷங்கள் நெருங்கியதாயுமிருந்தது. எங்குப்பார்த்தா
லும் லதாக்கிருகங்களும் பூங்கொடிகளுமாயிருந்தன. புஷ்பமாவது
பழமாவது இல்லாத மரங்கள் அக்கானிலில்லை. முட்செடிகளே அவ்
வடவியிற் கிடையாது. எல்லா ருதுக்களிலும் புஷ்ப ஜாதிகள் அனை
த்தும் பூத்து அக்கானை அலங்கரிக்கத் தேனீக்கள் ரீங்கார சப்தத்
துடன் அவற்றின் மேலே பறந்துகொண்டிருந்தன. அங்குள்ள
நிழல் புஷ்பித்த மரங்களாலானதால் மனத்திற்கு ரம்மியமான மணம்
வீசப்பெற்றதாயிருந்தது. மகா வில்லியாகிய துஷ்யந்தன் அக்கான்
புகவே, அதிலுள்ள மரங்களின் கொம்புகள் மிருதுவான காற்றினால்
அசைய அவை அவ்வேந்தை 'வருக வருக' என்று உபசரித்தழைத்
து அவன் தலையிற் பூமாரி பொழிந்தன போற்றோன்றின. விருக்ஷ
ங்களெல்லாம் நானாவித வர்ணத்தோடு கூடிய புஷ்பங்களாகிய ஆடை
யைத்தரித்து நல்ல கண்டத்துடன் கூடிய பாடகர்களாகிய பக்ஷிகள்
அமரப்பெற்று வானை யளாவிய தலைகளுடன் வரிசை வரிசையாய்
நின்றன. புஷ்பங்களின் பாரத்தைப்பொறுக்கவாற்றாமல் தொங்
கிக்கொண்டிருந்த பூங்கிளைகளைச் ,சுற்றித்தேனீக் கூட்டம் கீதம்பா
டின. பலவானான அவ்வேந்து பூங்கொத்துக்களுடன் கூடிய லதாக்



கிருகங்கள் எங்குமிருக்கக்கண்டு சந்தோஷமிகுதியாற் பரவசமடைந்
தான். சித்தர்களும், சாரணர்களும், கந்தர்வர்களும், அப்ஸரஸ்களும்
கபிகளும், கின்னரர்களும் வசிக்காநின்ற அவ்விடத்தில் குளிர்ந்த
சந்தோஷகரமான வாசனையோடு கூடிய இளங்காற்று நாண்மலரின்
மகரந்தங்களை யடித்துக்கொண்டு நாற்புறமும் வீசியது வாயுவான
வன் விருக்ஷங்களுடன் கிரீடை செய்கின்றது போன்றிருந்தது.

வேந்தன் இத்தகைய காட்சிகள் நிறைந்து இரண்டு உபநதிகளு
க்கு மத்தியிலிருந்த அக்கானகத்தில் உவமையற ரம்மியமான இரு
ஷி ஆச்சிரமங்களையும் அவற்றிலுள்ள யதீசுவரர்களையும், வாலகில்ய
ர்களையும், முனிகளையும் கண்டு கைகூப்பி வணங்கினான். அவ்வாச்
சிரமங்களில் யாகாக்கி விளங்கிக்கொண்டிருந்தது. விருக்ஷங்களினி
ன்றும் தரையில் புஷ்பங்கள் வீழ்ந்து கிடப்பது ரத்தினகம்பளம்
விரித்ததுபோலிருந்தது. அதற்குச் சமீபத்தில் பற்பல நீர்ப்பற
வைகள் வசிக்கப்பெற்றதும், பளிங்குபோன்ற நீருடன் கூடியது
மான மாலினி யென்ற ஒரு புண்ணிய நதி ஆங்குள்ள புண்ணியாத்
துமாக்களாகிய இருஷிகள் ஸ்நானபானமுதலியனசெய்தற்கு யோக்
கியமானதாயும் ஓடிக்கொண்டிருப்பதையும் அந்நதிக்கரைகளில் மான்
வர்க்கங்களில் அநேகம் சஞ்சரிப்பதையுங்கண்டு மனமகிழ்வுற்றனன்.
அந்நதியின் கரைகளிலும் அலைகளுள்ள பால்போன்ற நுரைகளிலும்
சக்கரவாகப்பக்ஷிகள் விளையாடிக்கொண்டிருந்தன. அதற்குச் சமீ
பத்தில் கின்னரர்கள் வசித்தனர். அவ்விடத்தில் கபிகளும், கரடிக
ளும், புலிகளும், கஜங்களும் சர்ப்பங்களும் ஏராளமாய் வசித்தன.
அத்தியயனம் செய்வதிலும், பிரமத்தியானம் செய்வதிலும் காலங்க
ழித்துவந்த பரிசுத்தவான்களாகிய அநேக ரிஷிகள் அவ்விடத்தில்
வசித்தனர். தவத்தில் மிக்கோரான ரிஷிகளுக்கிருப்பிடமாயிருக்கின்
றதையும், கங்காநதிக்கரையிலுள்ள நரநாராயணர்களுடைய பதரிகா
ச்சிரமம் மன்ன மகாத்மாவான காசிபருடைய ஆச்சிரமம் மாலினி
ஆற்றங்கரையிலிருப்பதையும், அவ்வாற்றின் மத்தியில் அநேக திட்டு
க்களிருப்பதையுங் கண்ணுற்று அப்புனிதமான தலத்தினுட்புக அர
சன் விரும்பினான். எல்லாத்தர்மங்களும் நிறைந்து மகத்தான தேஜ
ஸுடன் கூடினவராயும், காசிபகுலோற்பவராயும் தவச்செல்வம்

யிருந்தவராயும், அவித்தையென்ற இருள் நீங்கப்பெற்றவராயுமுள்ள கண்வமகரிஷியைத் தரிசிக்கவெண்ணிக் கந்தர்வர்களுக்கரசனென சித்திரரதனது உத்தியானவனம் போன்றும் மடமயில்களின் ஓசையால் எதிரொலிக் கப்பெற்றும் விளங்குகிற அவ்வனத்தையணுகித்தனது நால்வகைப்படையையும் அவ்வனத்தின் எல்லையில் நிறுத்தி அதனுட் புகுந்தனன். புகவே சந்தோஷத்தால் பரவசங்கொண்டு பசிதாக முதலியன மறந்து இராஜ சின்னங்களைந்து மந்திரி புரோகிதர்களுடனும் அழியாத் தவப்பேறுபெற்ற கண்வரிஷியைக் காண அவரது ஆக்சிரமமேகினன். வண்டுகளின் ரீங்கார சப்தமும், நாநாவிதப் பக்ஷி ஜாலங்களின் இனியவோசையும் விளங்கும் அவ்வாச்சிரமம் பிரம்மலோகந்தானோ வெனப் பிரமிக்கும்படியிருந்தது. புருஷவியாக்கிரனான துஷ்யந்தன் அவ்வாச்சிரமத்துக்கருகே சில விடங்களில் பிராமணோத்தமர்கள் உதாத்தம் அநுதாத்தம் ஸ்வரிதமென்ற ஸ்வரபூர்வமாக இருக்கு வேதாத்தியயனஞ் செய்து கொண்டு இருப்பதைச் செவியுற்றனன். இன்னும் சில விடங்களில் யாக விதிகளை நன்குணர்ந்த ருத்விக்குக்களும், வேதாந்தங்களை யறிந்த பிராமணோத்தமர்களும் யஜுர் வேதாத்யயனிகளுமிருக்கக் கண்டனன். வேறு இடங்களில் பற்பல விருதங்களை அனுஷ்டியாநின்ற இருஷிகள் மிக்க மாண்புள்ள சாமவேத கானத்தில் அமர்ந்திருப்பதையும் கண்ணுற்றான். ஓரிடத்தில் பிராமணர்கள் அதர்வண வேதத்தை அத்தியயனஞ்செய்துகொண்டிருந்தனர். வேறொரு இடத்தில் ஸாமம், அதர்வணம் இரண்டிலும் பாரங்கதரான அந்தணர்கள் ஸம்ஹிதையை அதற்குரிய ஸ்வரத்துடன் ஓதிக்கொண்டிருந்தனர். வேத லக்ஷணவித்வான்களாகிய வேதியர்கள் சிலர் வேத மந்திரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தனர். இவ்வண்ணம் வேதகோஷங்கள் நிரம்பிய அவ்வாச்சிரமம் பிரம்மலோகத்தைப் பழித்தாற்போல் சிறப்புற்றிருந்தது. யாககுண்டங்களேற்படுத்துவதிலும் யாகாதி கிரமங்களிலும் சமர்த்தர்களான வேதியர்களும் மோக்ஷ தர்மத்தை யறிந்து வேதாந்த சாஸ்திரங்களைக் கசடறக்கற்ற பிரம்ம வித்துக்களும், லக்ஷிய வித்வான்களும், கவிதாக்களும், நிருத்தர்களும், ஜோதிஷர்களும் காரண காரியத்தை யறிந்தவர்களும், புள் விலங்காதிகளுடைய



பாஷையின் அர்த்தங்களை யுணர்ந்தவர்களுமான பிராமணர்கள் அங்கிருந்தனர். விருதங்களை அநுஷ்டியாநின்ற வேதியர்களிற் சிலர் ஓமத்தீ வளர்த்து ஆகுதி செய்துகொண்டுமிருந்தனர். வேந்தன் மந்திரியுடனும் வேதியருடனும் வரக்கண்ட அப்பிராமணோத்தமர் அவ்வரசனுக்கு மரியாதை செய்து இருப்பதற்கோர் நல்ல ரத்தின கம்பள மளிக்கவும், அவ்வேந்தர் வேந்து அங்குள்ள பிராமணர்கள் தேவதைகளையும் மகாரிஷிகளையும் பூஜிக்கின்ற மாதிரியை நோக்கி ஆனந்தித்துத்தான் பிரம்மலோகத்திற்கு வந்திருப்பதாகவே நினைத்தான். தன்னுடன் வந்தமந்திரி புரோகிதர்களை ஆச்சிரமத்தின் வாசலிலிருத்திவிட்டுத் தனிமையாய் அதற்குட்புகவே தபோநிதியாகிய கண்வர் வெளியேபோயிருந்தமையால் அவரைக்காணாமல் "யாரங்கே உள்ளேயிருக்கின்றது" என்று உரக்கக்கூப்பிட அழகில் மகா இலக்குமியன்னவோர் மங்கை இருஷிபுத்திரிபோலாடையுடுத்திக்கொண்டு உண்ணின்று புறம்பேவந்தனள். துஷ்யந்தனைக்கண்ட அக்கட்டழகியாகிய கருங்கண்ணாள் வந்த வேந்தனை உபசரித்தழைத்து இன்மொழிகள் கூறி ஓர் ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து அர்க்கியபாத்திய முதலியன அளித்துத் தக்கவாறு பூஜித்து மன்னனை நோக்கிக் குசலப்பிரச்னஞ்செய்து பிறகு "வேந்தே! யான்செய்யத்தகுவனவற்றைச் சொல்லுங்கள். தங்கள் ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றக்காத்திருக்கின்றேன்" என்றனள்.

இவ்வாறு பூஜிக்கப்பெற்ற துஷ்யந்தன் "பேரழகி! மகாரிஷியாகிய கண்வரைத் தரிசிக்குமாறு இங்குவந்தனம். அம்மாமுனி எங்குப்போயினரோ" என்று வினவ சகுந்தலை "எனது பிதாவாகிய கண்வர் கந்தமூலபலாதிகளைக் கொண்டுவருநிமித்தமாக வெளியே சென்றனர். ஒரு கணப்பொழுது பொறுத்தால் ஆச்சிரமத்துக்குத் திரும்பிவந்துவிடுவார். தாங்கள் அவரைப்பார்க்கலாம்" என்றனள். இவ்வாறு சொல்லிய சகுந்தலையின் திவ்விய ரூபத்தையும் சரீரக்கட்டையும், மந்தஹாஸவதனத்தையும், அவள் தவமகிமையையும், வினயத்தையும், யௌவனத்தையுங் கண்ட துஷ்யந்தன், "கோதாய்! நீ யார்? உன் பெற்றோர் யாவர்? கட்டழகி! நீ இக்கானில் வந்துறையக் காரணம் யாது? அணங்கே! எங்கிருந்து இவண் வந்திருக்கின்றாய்?

உன்னைப்பார்த்த அக்கணத்திலேயே நீ என்மனத்தைக் கவர்ந்துவிட்டாயே. உன்னுடைய விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாகக்கேட்க விரும்புகிறேன். ஆதலின் ஒன்றையும் மறைக்காமல் சொல்வாயாக" என்று வேண்டச்சகுந்தலை "துஷ்யந்தரே! ஆசார சீலராயும், மகாஞ்ஞாதாவாயும் மகாத்மாவாயும் பிரதாபவானாயு மிருக்கின்ற கண்வ மாமுனியின் புத்திரி யான்" எனப் புன்னகையோடு மொழிந்தனள். இதைக் கேட்ட துஷ்யந்தன் "சர்வஜனங்களாலும் பூஜிக்கப்பெற்று நல்வாழ்வை யடைந்த கண்வர் இந்திரிய நிக்கிரகஞ்செய்து மாரனையும் வென்ற மகானல்லவா? தர்மதேவதை தன்னெறி முரணி நடக்கினும் தவச்சிரேட்டர்களான யதீசுவரர்கள் தமது அறநிலை வழுவார்களே! இவ்வாறிருக்கப் பேரழகி, நீ எவ்வாறு கண்வருக்கு ஜனித்தல் கூடும்? எனக்கேற்பட்ட இச்சங்கையை நீ நீக்கல் வேண்டும்" என்றனன்.

அதற்குச் சகுந்தலை "வேந்தே! கேளீர்! முன்னொரு காலத்தில் எனக்கு நேர்ந்தவற்றையும் எவ்வாறு யான் கண்வமாமுனிக்குப் புத்திரி முறையாயினே னென்பதைப்பற்றியும் சொல்லுகின்றேன். முன்னொருநாள் இவ்வாச்சிரமத்துக்கு ஓர் இருஷி வந்து என் பிறப்பைக் குறித்துக் கீர்த்திவானாகிய கண்வரைக் கேட்க அவர் அவ்விருஷிக்குச் சொல்லிய வசனங்களை நான் தங்களுக்குக் கூறுகின்றேன். கேளீர் மகாராஜனே!

முன்னொரு காலத்தில் விசுவாமித்திர மகாரிஷி கடுந்தவம் புரிய அதைக்கண்ட விண்ணவர் கோனாகிய இந்திரன் பயந்து ஜ்வலித்து விளங்கா நின்ற சக்தி வாய்ந்த இம்மாமுனி தமது தவவலியாற் றன்னை இந்திர பதவியினின்று கீழே தள்ளிவிடுவாரென நினைத்து அப்ஸரஸ்திரீகளில் முதன்மை பெற்றவளாகிய மேனகையை யழைத்து அவளை நோக்கி "மனத்துக்கினியமாதே! நீ எனக்கோர் பணிவிடை செய்தல் வேண்டும். நான் சொல்வதைக்கவனித்துக்கொள். சூரிய தேஜஸுடன் கூடிய கடுந்தவ முனியாகிய விசுவாமித்திரர் அகோர தவஞ்செய்கின்றார். என்மனம் பயத்தாற் பதைக்கின்றது. மின்னிடையாய்! ஏகாக்கிர சித்தத்துடன் தவத்திலமர்ந்திருக்கும்



அம்மாமுனியை யணுகி உனது வனப்பாலும் யௌவனத்தாலும் நாகரிகத்தாலும் கபடத்தாலும் மந்தஹாஸத்தாலும் மாதுர்யமான வசனங்களாலும் உன்பால் அவர் மையல் கொள்ளும்படி செய்து அவரது தவத்தைச் சிதைத்து எனது நலத்தைப்பெருக்கக்கடவாய்' என்று சொன்ன மொழிகளைக் கேட்ட மேனகை தேவேந்திரா! பிரதாபவானாகிய விசுவாமித்திரர் மிக்க சத்தி வாய்ந்த மகாதபசி யல்லரோ? அவர் கடுங்கோப முள்ளவரென நீயும் அறிவாய். அம் மகாத்மாவின் தவவலியும் கடுங்கோபமும் உனக்கே மிக்ககவலையை உண்டாக்கிற்றென்றால் கேட்பானேன். பிரதாபம் வாய்ந்துள்ள வசிஷ்டமாமுனியின் புத்திரர்கள் நூற்றுவரையும் அகால மரணமடையும்படி செய்து அம்முனியைப் புத்திரசோகமுற்று மனம் வருந்தச் செய்தவர் இவ்விசுவாமித்திரரல்லரோ? இவர் க்ஷத்திரிய வமிசத்திலுற்பவித்துப் பிறகு தம் தபோமகிமையால் பிரம்மரிஷியாயினரே; கடக்கமுடியாத ஆழத்துடன் கூடிய கௌசிகி யென்ற ஒரு புதியநதியைத்தம் நீராட்டத்திற்காகச் சிருஷ்டித்தவர் இவ்விசுவாமித்திரரல்லரோ? இதேவிசுவாமித்திரர் க்ஷாமகால நீங்கியபிறகு ஆச்சிரமத்துக்குத் திரும்பி வந்து அதற்குச் சமீபத்திற் சென்ற நதிக்குக் கௌசிகி என்ற பெயரைமாற்றிப் 'பாரா' என்ற பெயரிட்டாரே.

தனது தகப்பன் சாபத்தால் வேடனாய் ஜீவித்துக்கொண்டிருந்த மாதங்கன் (திரிசங்கு) என்ற ராஜரிஷியால் ஓராபத்துக் காலத்தில் காப்பாற்றப்பட்டவள் இந்த விசுவாமித்திரருடைய பத்தினியல்லளோ? இந்த விசுவாமித்திரரல்லரோ மாதங்கரிஷி செய்த உதவிக்குக் கைம்மாறாக அவர் செய்த யாகத்தில் தாமே குருவாயிருந்தனர். விண்ணவர் கோனான தேவேந்திரன் இந்த யாகத்தில் சோம பானஞ்செய்தற்கு நேரில் வந்தானே சிரவண நக்ஷத்திரமுதல் அநேக நக்ஷத்திரங்களையும் இரண்டாவதோர் உலகத்தையும் கோபத்தினால் சிருஷ்டித்துச் சாபத்தால் வருந்திய திரிசங்குவுக்குப் பயப்படாதே என்று அபயங்கொடுத்தவர் இந்த விசுவாமித்திரரல்லரோ? இப்படிப்பட்ட பராக்கிரமத்தோடு கூடிய மகரிஷியை அணுகுவதற்கு நான்மிகவும் அஞ்சுகின்றேன். இந்திரா! தமது ஜோதியால் இம்மூவுலகையுந் தகிக்கக் கூடிய இம்மகரிஷி தமது கோபத்தால் என்னை எரித்துவிடா

மலிருக்க வோருபாயஞ் சொல்லுவாயாக, இம்மகரிஷி தமது பாதத்தை யழுத்துவதால் பூதல நடுங்கச்செய்ய வல்லவர். பூமியினின்று மேருகிரியை வேருடன் பிடுங்கி மிக்க தூரத்தில் எறியக் கூடியவர். பூமியின் திசை திக்குகளை ஒரே விநாடியிற் சுற்றிக்கொண்டு திரும்பக் கூடியவர். ஜிதேந்திரியரான இம்மாமுனியை எந்த ஸ்திரீதான் ஸ்பரிசிக்கத்துணிபவள்? அவருடைய வாய் கொழுந்துவிட்டெரியும் நெருப்புப்போன்றும் அவரது நா யமனைப்போலவும் அவருடைய கண்மணிகளிரண்டும் சூரிய சந்திரரைப்போலவும் இருக்கின்றன. ஆதலின் அமரர்கோனே! என்போலிய ஸ்திரீ அவரை எவ்வாறு அணுகக் கூடும்? யமன், சோமன், மகரிஷிகள், சாத்யாள் வாலகில்லியர் முதலியோர்களும் அவர் ஸ்மரணமாத்திரத்தில் பீதியடைகின்றனர்.

இப்படிப்பட்ட விசுவாமித்திரரை என்போன்ற ஸ்திரீ அச்சமில்லாமல் எவ்வாறேறிட்டுப்பார்க்கமுடியும்? ஆயினுமுனது மகத்தாக்கினையைச் சிரமேற்கொண்டு அம்மாமுனியை யணுகத் துணிகின்றேன். அண்டர்கோனே! நான் அந்த ரிஷிக்குச் சமீபத்தில் பயமின்றிச் செல்லும்படியான தக்கவோருபாயம் நீர் செய்யத்தக்கது. அவ்ரிஷியின்முன் நான் சென்று சாகசக்கியம் செப்பும்பொழுது என்னுடைய ஆடையை அபகரித்துச்செல்லும்படி மருத் என்ற வாயுதேவனுக்குக் கட்டளையிடும். அக்காலத்திற் காதற் கடவுளாகிய மன்மதனை எனக்கு உதவிபுரியும்படி ஆக்ஞாபியும். இன்னும் அண்டையிலிருக்கும் வனங்களிலுள்ள வாசனைகளை அடித்துவந்து வாயுவும் அவ்ரிஷியின் மனத்தை யிழுக்கட்டுமென்று சொல்லிக்கொண்டு மேனகை கௌசிகமாமுனி யிருக்குமிடத்தை நோக்கிச்சென்றனள். மேனகை சொல்வதைக்கேட்டிருந்த சக்கரன் எல்லாவிடத்திலும் நுழையத்தக்க வாயுவையழைத்து "வாயு! கௌசிகரிஷிமுன் மேனகை சென்றிருக்குங்கால் நீயும் ஆங்குச்சென்று அவளுக்குஉதவிபுரிவாயாக" என்று ஆக்ஞாபித்தனன். நாணமுள்ள அழகிய மேனகை விசுவாமித்திரர் ஆச்சிரமம் புகுந்து தமது தவத்தால் தாம் செய்த எல்லாப் பாவங்களினின்றும் நீங்கப்பெற்ற அம்மகரிஷியைக் கண்டு அவர் தபோநிஷ்டையிலமர்ந்திருப்பதைப்பார்த்தனள். ரிஷியைக்கண்டு அவருக்குத் தண்டன் சமர்ப்பித்து அவர் முன்னிலையில் கிரீடைசெய்ய ஆரம்பித்தாள். அவ்வேளையில் வாயுவும் அவளணிந்த மதிபோன்ற வெண்துயிலை அபகரித்துப்போக மிக்க நாணத்தால்அஞ்சினவள்போல பறந்துபோகு மாடையைப் பிடிக்கஓடினள்.

(தொடரும்)

ஸி. நாராயணசாமி ஐயர், B. A. L. T.

# சமாசாரக்கொத்து.

## ஒரு ஆட்டிற்கு இரண்டுகோல்.

நாகபட்டணத்தின் கடைத்தெருவில்இரண்டுகால் ஆடொன்று வந்திருக்கிறதாம், ஜனங்கள் அரைஅணு கொடுத்து வேடிக்கை பார்த்து வருகிறார்களாம்.

* * * *

## பூனைக்குட்டி பேசுகிறது.

நெல்லூரில் ஒரு பூனைக்குட்டி பேசுகின்றதாம். உலகம் நாளுக்கு நாள் விபரீதவிருத்தி யடைவதற்குத் திருஷ்டாந்தமாக இப்படி நடந்தால்தானே உண்மையென்று சொல்லவேண்டிவரும்.

* * * *

**டாக்டர் கெம்புக்கு அபராதம்:**—காக்கிநாடா டாக்டர் கெம்பின்மீது அடிபட்ட பையன்கிருஷ்ணராவ் கொடுத்திருந்த கிரிமினல் கேஸில் கெம்பு குற்றவாளிதானென்றும், அதற்காக 30ரூபாய் அபராதம் கொடுக்க வேண்டுமென்றும், தவறினால் மூன்றுநாள் வெறுங்காவல் தண்டனையென்றும் தீர்ப்புச் செய்யப்பட்டது.

* * * *

**திருவிதாங்கூர் திவான்:**—திருவிதாங்கூர் ஸம்ஸ்தானம் திவானாய் நியமிக்கப்பட்டிருக்கும் திவான் பகதூர் P. இராஜகோபாலாசாரி புதன்கிழமையன்று திருவனந்தபுரம் போய்ச்சேர்ந்து மகாராஜாவையும் ராணிகளையும் பேட்டி செய்து வேலையை ஒப்புக்கொண்டார்.

* * * *

**பல்லியும் மருந்தும்:**—சீனாவில் பிக்கோ என்னுமிடத்தில் 8731 ஜோடி உலர்ந்த பல்லிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன வென்றும் இவை நானிநாம் என்ற இடத்தில் சேகரிக்கப் பட்டதென்றும், இருமல் முதலியநோய்கட்கு ஒப்பற்ற மருந்தாக உபயோகப்படுகின்றன வென்றும் ஒருவர் எழுதுகிறார்.

இந்தியாவைப்பற்றிய சில எண்கள்:—நமது அருமை இந்தியாவின் சமபரப்பு 1773108, சதுரமைல் டவுண்கள், 2148, கிராமங்கள் 728605, குடியிருக்கும் வீடு, 55841315, ஜனத்தொகை 294361056, இதில் இந்துக்கள் 207147626, பேர், கிறிஸ்தவர்கள் 2923241, முக்கியமான ஜாதிகள் 83. பாஷைகள் 185.

* * * *

மைசூரில் பிளேக்:—மைசூரில் இப்பொழுது பிளேக்நோய் மிகவும் கொடுமையாய் இருப்பதாயும், முன் வருஷங்களைப் பார்க்கிலும் இவ்வருஷத்தில் 100-க்கு 60 வீதம் அதிகப்பட்டு விட்டதாயும் தெரிகின்றது. அநேக கல்விமான்களும் தனவந்தர்களும் இதற்கிரையானார்கள். ஷிமோகா, சிம்மாகனூர், கோலாறு இம்மூவிடங்களிலுமே பிளேக் மிகவும் ஜாஸ்தியாயிருக்கின்றதாம்.

• • • •

பம்பாய் புதிய கவர்னர்:—பம்பாய் புதிய கவர்னராகிய ஸர் ஜியார்ஜ் ஸைடன் ஹாம் கிளார்க் நேற்று காலையில் பம்பாய் வந்திறங்கினார். பம்பாய் முனிசிபல் கார்ப்போரேஷன் சபையார் அவருக்கு ஒரு வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தார்கள். ஆக்டிங்கவர்னர் மிஸ்டர் மூயர் மேக்கன் ஸியிடமிருந்து வேலையை ஒப்புக்கொண்டு கவர்னர் பம்பாய் பட்டணத்தின் வீதிகளின் வழியாய் மலபார் பாயிண்டுக்குச் சென்றார்

• • • •

அதர்வவேதசத்தின் மத்தியிலேயுள்ள "பிருதவீஸூக்தம்" என்ற பகுதியை ஸ்ரீமாந் தாமோதர ஸாத்வலேகர் என்ற மஹாராஷ்டரர் ஸமஸ்கிருத பாஷ்யம் மஹாராஷ்டரப் பொழிப்புரை என்பவை ஸகிதமாக அச்சிட்டிருக்கிறார்.

* * * *

### 41-வது மந்திரத்தின் மொழிபெயர்ப்பு.

எந்த நாட்டிலே எங்களுடைய முன்னோர்கள் ஆடியும், பாடியும் மகிழ்ச்சி பெற்றிருந்தார்களோ எந்த நாட்டிலே, எங்கள் வீரர்கள் குதிரைச் சத்தங்களுக்கும், துந்துபி யொலிக்கு மிடையே நின்று போர்செய்து புகழ்பெற்றார்களோ, அந்த நாடாகிய எங்கள் மாதாவே, நீ எங்களுடைய பகைவர்களை நாசம் புரிவாயாக! எங்களைப் பகைவரில்லாது செய்வாயாக!



### 49-வது மந்திரத்தின் பொருள்.

ஜனங்களை இம்சை செய்வோர்களும், தங்களிடம் பொருளில்லாமல் தமது நலத்தின் பொருட்டாக துன்பஞ்செய்து திரிவோர்களும் இரத்த மாம்ஸங்களிலே அதிக ஆசைகொண்டவர்களும், ஆத்மஞான மற்றவர்களுமாகிய எதிரிகளை, ஹேமாத்ரு பூமியே, நீ எங்களிடமிருந்து விரைவிலே தொலைத்துவிடுவாயாக!

• • •

மிஸ்டர் கெயிர் ஹார்டி:—லண்டன், அக்டோபர் 22—மிஸ்டர் கெயிர் ஹார்டி லண்டன் டெயிலி மெயில் பத்திரிகைக்கு அனுப்பியிருக்கும் தந்தியில் இந்தியா கெவர்ன்மெண்டார் இப்பொழுது செய்திருக்கும் ராஜநிந்தனைச் சட்டம் மிகவும் கொடியதென்றும், அதனால் ஜனங்கள் வாய்ப் பூட்டிடப்பட்டவர்களாகின்றார்களென்றும், ஆகையினால் அந்தச் சட்டம் பாஸாகாதபடி செய்வதற்குப் பார்லிமெண்டார் முன் வரத்தவறினால் எட்வார்ட் அரசராவது முன் வரவேண்டுமென்றும் சொல்லுகின்றார்.

• • • •

### போஸ்டல் சீர்திருத்தம்.

1907ஞு அக்டோபர்-மீ 1-வயிலிருந்து புதிய ஏற்பாடுகள் வழக்கத்துக்கு வந்துவிட்டன. அதாவது உள்நாட்டுத் தபாலுக்கு 1 தோலா எடையுள்ள காகிதங்கள் அரைஅணாவிற்கும், 1 தோலாவிலிருந்து 10 தோலாவரையும் 1 அணாவுக்கும் அனுப்பப்படுமாம். பிரிட்டிஷ் ராஜ்ஜியத்திற்கு 1 அணாவுக்கு அரை அவுன்ஸுக்குப்பதிலாக ஒருஅவுன்ஸும், மற்றத் தேசங்களுக்கு $2\frac{1}{2}$ அணாவுக்கு அரை அவுன்ஸுக்குப் பதில் ஒரு அவுன்ஸும் அனுப்பப்படுமாம்.

* * * *

தேனாலியில் ஆச்சரியங்காட்டும் ஈச்சமரம்:—தேனாலி தாலுக்காவைச்சேர்ந்த ராகூர் என்ற கிராமமொன்றிருக்கின்றது. அங்குள்ளதோர் 14 அடி உயரமுள்ள ஈச்சுமரம் தினமும் பல மாதிரிகளான மாறுபாடுகளைச்செய்து வருகின்றது. காலையில் மற்ற மரங்களைப்போல் நிமிர்ந்திருக்கின்றது. 10 மணி சுமாருக்குத் தரைப்பக்கமாய் வளைகிறது. 3 மணி அளவில் பூமிக்குச்சமீபமாய்த் தொங்கிவிடுகிறது. அப்போது மரத்தின் இலைகளெல்லாம் பூமியிற் படிகின்றன.

இந்த ஆச்சரியக் காட்சியை ஊரெல்லாங்கண்டு உன்மத்தராயிருக்கின்றனர். இதன் சூது யாதோ?

• • • •

உப்புவிலை:—லார்ட் கர்ஸன் இராஜ்யாதிகாரம் செய்த காலத்தில் மணங்கொன்றுக்கு இரண்டு ரூபா எட்டு அணாவாய் விற்ற உப்பு ஒரு ரூபா எட்டணாவாக விலை குறைக்கப்பட்டது யாவரு மறிந்த விஷயம். ஆனால் இப்பொழுது முன்விலையானதைப் பார்க்கிலும் இரண்டுமடங்கு அதிகமான உப்பு விலையாகின்றதாய்ப் பம்பாய் கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கும் உப்பளம் ரிப்போர்ட்டில் சொல்லப்படுகின்றது. ஆகவே உப்பு விலையைக் குறைத்ததனால் பொதுஜனங்கள் மட்டுமல்ல கவர்ன்மெண்டாரும் லாபமடைந்திருக்கிறார்கள்.

* * * *

ஸ்ரீ A. L. நரசிம்மராவ்:—காக்கினாடாக் கலகக்கேஸில் கீழ்க்கோர்ட்டாரால் தண்டிக்கப்பட்டு செஷனில் விடுதலை செய்யப்பட்டவராகிய ஸ்ரீ அரிபிரால் லக்ஷ்மிநரஸிம்மராவ் சிறைக்கூடத்தினின்று திறந்து விடப்பட்டவுடன் காக்கினாடாப் பொதுஜனங்கள் அநேகர் போய் அவரை ஆனந்தத்துடன் வரவேற்றார்கள். அவரை வண்டியில் உட்கார்த்தி ஊர்கோலமாக அழைத்துக்கொண்டு ஒரு இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இதற்குள் ஆயிரக்கணக்கான ஜனங்கள்வந்து கூடிவிட்டார்கள். ஒருசந்தோஷக்கூட்டம் கூட்டப்பட்டு ஸ்ரீA.L. நரஸிம்மராவின் மீது வாழ்த்துப்பாக்கள் பாடப்பட்டன. ஸ்ரீ நரஸிம்மராவும் அதற்குவிடையளித்தார்.

• • • •

சீயம்:— இத் தேசத்தின் இராஜன் வரும்படி நூறுலக்ஷம் ரூபாய். அவர் அரண்மனையில் ஐயாயிரம் ஜனங்கள் குடியிருக்கிறார்கள். இந்த அரண்மனை சிறிய பட்டணத்திற்குச் சமமாயிருக்கிறது. அரண்மனையைச் சுற்றிலும் 12 அடி உயரமுள்ள மதில் எழுப்பி அதில் ஆச்சரியமான சித்திர வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. வெள்ளைக்காரர்கள் அவ்வரண்மனையிற் பிரவேசிக்கக்கூடாதென்று அரசனுடைய உத்தரவாம். மேலும் அதில் ஒரு சிறு தடாகம் வெட்டியிருக்கிறது. இத்தடாகத்தினடியில் கண்ணாடியினாற் செய்த கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறதாம். இக்கூடாரத்தில் அரசன் கோடை காலத்திற் போய் வசித்து வருகிறாராம்.



அமெரிக்கா:—மிஷிகான் என்கிற இடத்தில் மரணதண்டனையே கிடையாது. குற்றவாளிகள் ஆட்டபாட்டத்திலும், ஸர்க்கஸ் கூத்துகள் பார்ப்பதிலும் காலங்கழிக்கிறார்கள். குற்றவாளிகளொன்று சேர்ந்து சமாசாரப் பத்திரிகைக்காக சொந்த அச்சாபீஸ் ஸ்தாபித்து வேலைநடத்தி அதிகலாபம் சம்பாதிக்கிறார்கள். பழைய குற்றவாளிகளும் வேறு அனேகரும் ஷை பத்திரிகையை வாங்கிப்படிக்கிறார்கள். பத்திரிகைக்குச் சொந்தக்காரர்கள் 700 கைதிகள், இவர்களேலாபத்தை பங்கிட்டுக் கொள்ளுகிறார்கள். கவன்மெண்டார் இக்குற்றவாளிகள் உபயோகத்திற்காக பெரிய புஸ்தகசாலை அமைத்திருக்கிறார்கள். அதற்கு 18000 பத்திரிகைகளுக்கு அதிகமாகவே வருகின்றனவாம்.

• • •

முதலைக்கு இரையாக்கின தீர்ப்பு:—பிளாரிடாவிலுள்ள லாண்டர்டெயில் கோட்டை யென்னும் இடத்தில் ஒரு அதிகாரியுடைய மனைவியை ஒருவன் கவர்ந்து கொண்டதற்காக அந்தக்கவர்ன்மெண்டார் அவனையும் அந்த ஸ்திரீயையும் உயிரோடு முதலைக்கு இரையாய்ப்போட்டு விடும்படி தீர்ப்புச்செய்தார்கள். அன்றையத்தினம் அவர்கள் இருவரையும் காலை முதல் மாலை நேரம் வரையில் வெயிலிற் போட்டுப்பொசுக்கிச் சாயரட்சை பசியோடிருந்த இரண்டு முதலைகளின் நடுவில் ஒரு நாயை வைத்து அதன் மூலமாய் முதலைகளை உஷார்படுத்தி ஷை இருவரையும் அவைகளின் வாயண்டை தள்ளினார்களாம் அவர்களிருவரையும் அம்முதலைகள் சின்னாபின்னப்படுத்திக் கிழித்து உண்ட கோரத்தைச் சொல்ல வேண்டுமா?

* * * *

ஒருகணக்கு:—ஏதாவது ஒருபுஸ்தகத்தை யெடுத்துக்கொண்டு அதில் ஏதாவது ஒரு பக்கத்தில் முதல் பத்துவரிக்குள்ளாகவும் அந்த வரியின் கடைசியிலிருந்து பத்தாவது வார்த்தைக்குள்ளவும் ஒரு வார்த்தையைப் பொறுக்கி யெடுத்து பொறுக்கி யெடுத்த பக்கத்தின் நம்பரை யிரட்டித்து அதை ஐந்தால் பெருக்கு அதனுடன் இருபதைச்சேர். சேர்த்துப்பொறுக்கி யெடுத்தவரியின் நெம்பரைச்சேர் அதனுடன் ஐந்தைக்கூட்டி அதைப்பத்தால் பெருக்கு. பெருக்கிக் குறிப்பிட்டவரியின் குறிப்பிட்ட வார்த்தையின் இலக்கத்தைச்சேர்.

மொத்தத்திலிருந்து 250 கழித்தால் மீதியிருக்கப்பட்ட தொகையின் முதலாவது தானத்தின் தொகையானது வார்த்தையினிலக்கமாக விருக்கும். அடுத்த பத்தாவது ஸ்தானம் வரியினிலக்கமாகவும் மற்ற எண்கள் பக்கத்துத் தொகையாகவு மிருக்கும்.

•  •  •  *

## கிராமப் பள்ளிக்கூடங்கள்.

சென்னை மாகாணத்திலுள்ள கிராமப் பள்ளிக்கூடங்களுக்குக் கிராண்டு கொடுக்கவேண்டிய வகைக்காக சென்னை கவர்ன்மெண்டார் லக்ஷத்து நாற்பத்தேழாயிரத்து 555 ரூபா ஏற்படுத்துவார்களாம். இந்தத்தொகை அடியிற்கண்டபடி வீதிக்கப்படும். அநந்தப்பூர் 1098. வடஆற்காடு 9784. தென் ஆற்காடு 4978. பெல்லாரி 4013. தென் கன்னடம் 1418. செங்கல்பட்டு 5214. கோயமுத்தூர் 8292. கடப்பை 5863, கஞ்சம் 9272. கோதாவரி 5502. குண்டூர் 4880. கிருஷ்ணு 11038. கோராப்பட்டு 576. கர்னூல் 2642. மதுரை 6865. மலையாளம் 4997. நெல்லூர் 1876. நீலகிரி 1258. சேலம் 7662. தஞ்சாவூர் 15,667. திருநெல்வேலி 7309. திருச்சிராப்பள்ளி 11659. விசாகபட்டணம் 15,642. மொத்த ரூபா 1,47555.

*  *  *  *

## வந்தேமாதரம்.

வாஸ்தவத்தில் வந்தேமாதர மந்திரம் புராதனமானதென்று நிரூபிக்கக்கூடிய சம்பவமொன்று திருவள்ளூருக்கு அருகாமையில் நடந்ததாக ஒரு நிருபர் தெரிவிக்கின்றார். ஈக்காடு என்பது திருவள்ளூருக்கு வடக்கே இரண்டுமைல் தூரத்திலிருக்கும் ஓர் கிராமம். அந்தக்கிராம வாசிகளெல்லாம் சில நாட்களுக்குமுன் பெருங் கூட்டமாகச் சேர்ந்து, மத்தாப்பு தீவர்த்தி இவைகளுடன் வந்தேமாதரம் ஊர்கோலம் கொண்டு வந்தார்களாம். அப்போது அக்கூட்டத்தின் மத்தியில் ஓர்பிரதமை அலங்காரத்துடன் காணப்பட்டதாம். அதைப்பற்றி விசாரிக்குமிடத்து, அவ்விக்கிரகம் பூமியினின்று தோண்டியெடுக்கப்பட்டதென்றும், சுமார் 900-வருஷங்களுக்குமுன் செய்யப்பட்டதாகிய ஜைன விக்கிரகமென்றும் தெரியவந்தது. இவ்விக்கிரகத்தின் நெற்றியில் 'வந்தேமாதரம்'' எழுதப்பட்டிருக்கிறது !

"திராவிடதீபம்"



குரங்கு கொண்டு போன குழந்தை:—பேராரிலுள்ள காஞ்சி யென்ற கிராமத்தில் ஒரு இந்து ஸ்திரீ தன்னுடைய எழு நாட் குழந்தையைக் கட்டிலின்கீழ்கிடத்தி விட்டுப் பக்கத்து வீட்டில் நெருப்பெடுக்கப்போனாள். போய் வந்து பார்ப்பதற்குள் தன் குழந்தை ஒரு மரத்தின் மேலிருந்த ஒரு வாலில்லாக்குரங்கின் கையிலிருக்கக்கண்டாள். ஷை குரங்கு அவளுடைய பரிதாபக்கோலத்தைக்கண்டு ஷை குழந்தையைக் கெட்டியாயணைத்துக்கொண்டு வந்து முன் ஷை குழந்தை யிருந்த இடத்திலேயே கிடத்தி விட்டுப்போய்விட்டதாம்.

*  *  *  *

வீ ஐலாண்டு பஞ்சு மேற்கு இந்திய தீவுகளில் ஏகராவுக்கு 400 ராத்தல் கிடைத்தது. இராத்தல் ஒன்று இங்கிலாந்தில் 3 அணு வரையில் விற்றது. ஆக ஏக்ரா ஒன்றுக்கு ரூ. 770 கிடைத்தது. இதை அனேகர் நம்பமாட்டார்கள். ஏனெனில் நமது பருத்தி ராத்தல் நாலு அணுவுக்கு விற்கிறது. அத்தீவுகளை ஆதரிக்கும் விவசாய டிபார்டுமெண்டு 1903 வருஷத்தில் அமெரிக்காவிலிருந்து தகுந்த விதையை வாங்கி நோவணுகாதபடி மருந்து கலந்து குடித்தனக்காரர்களுக்குக் கொள் விலைக்குக்கொடுத்து 7000 ஏக்ரா பருத்தி விளைவித்தார்கள். சென்ற வருஷம் 15,000 ஏக்ரா விளைந்தது. ஒரு ராத்தல் பஞ்சு 1000 மைல் தூரமுள்ள நூல் செய்ய முடியு மென்று தெரிகிறது. நமது தேசத்தில் இவ்வகைப்பருத்தி நன்றாய் விளைந்தது. இதை விருத்தி செய்து சாஸ்திர யுக்தமாய்ப் பயிரிடுவது அவசியம். கிணற்றுப்பாய்ச்சல் நிலங்களிற்பருத்திபயிரிட்டு மாசூலடையவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் வேண்டியதுணிகளை நெசவுசெய்வது அவசியம். அதற்குச் சாதனமாகத்தரிகள் இப்போது பரவுகின்றன.

*  *  *  *

## "இந்திய அமெரிக்க சங்கம்."

அமெரிக்கா ஐக்கிய நாட்டில் "இந்திய அமெரிக்க சங்கம்" என்றபெயருடன் ஒருசபை ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாய்ச்சமீபத்தில் வந்த அமெரிக்க பத்திரிகைகள் கூறுகின்றன. அதாவது இந்தியாவின்தற்கால குழப்ப நிலையை உத்தேசித்து இந்தியர்களுக்கு உதவி செய்யவும் அவர்களுக்கு வேண்டிய யோசனைகளும் புத்திகளும் கூறவும், கல்வி விஷயமான பலவித சகாயங்கள் செய்யவும், இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் போகும் இந்தியர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து அமெரிக்க ராஜரீக விஷயமான எல்லா விவரங்களையும் போதிக்கவும், இந்தியாவின் பழமையான செல்வமும் செழிப்பும் முன்னுக்கு வருதற்பொருட்டு இந்தியர்கள் செய்

யும் எல்லா முயற்சிகளிலும் நடவடிக்கைகளிலும் உடனின்று உதவவும் இந்தச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாய்த் தெரியவருகின்றது. இந்தியர்களின் தற்கால கஷ்டங்களையும் இந்தியாவின் ராஜரீக சம்பந்தமான குழப்பங்களையும் கண்ட அமெரிக்க தருமப்பிரியர்களுடைய மனத்தில் இந்தியாமீது தோன்றியிருக்கும் அநுதாப உணர்ச்சியே இந்தச் சங்கத்தின் ஸ்தாபனத்திற்குக் காரணமாகுமென்பது தெள்ளிதின் விளங்குகின்றது. இதில் மிஸிஸ் மேரைட் ஸிவெல், மிஸிஸ் ஓல்புல் ஆகிய இரண்டு மாதர்களும் மிஸ்டர் மைரன் H பெல்ப்ஸ் என்னும் கனவானும் ஆகிய மூவர்களும் சேர்ந்திருக்கின்றார்கள்.

* * * *

## வங்காளப் பிரிவினை தினம்.

வங்காளப் பிரிவினையின் இரண்டாவது வருஷதினம் இம்மாதம் 17உயன்று கல்கத்தாவில் கொண்டாடப்பட்டது. "அமிர்த பஜார் பத்திரிகை" பத்திராதிபர் ஸ்ரீ மொத்திலால் கோஷ் அக்கிராசனம் வகித்தார். சுமார் 20 ஆயிரம் ஜனங்கள் வந்து கூடியிருந்தார்கள். ஸ்ரீ கோஷ் செய்த பிரசங்கத்தில் அடியிற்கண்ட விஷயங்கள் கவனிக்கத்தக்கன. இப்பொழுது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் செய்து வரும் செயல்களைப் பார்த்தால் அவர்களுக்கு நாம் மனுச்செய்து நம்முடைய குறைகளை நீக்கிக்கொள்ளலாமென்ற நம்பிக்கை யடியோடு போய்விட்டபடியால் நாம் அடியிற்கண்ட காரியங்களைச் செய்யவேண்டும். 1. தேசமுழுதும் சுதேசீய உணர்ச்சிபரவவேண்டும். சுதேச கைத்தொழில்கள் விர்த்தியாகவேண்டும். 2. சாதாரண பொதுஜனங்களுக்குப் பத்திரிகை மூலமாயும், துண்டுத் தாள்களின் மூலமாயும், பிரசங்க மூலமாயும், பொதுக்கூட்டங்களின் மூலமாயும் ராஜரீகக் கல்வி கொடுக்கவேண்டும். 3. பிரிட்டிஷ் லாக்கோர்ட்டுகளுக்குப் போகாமல் நம்முடைய சொந்த மனிதர்களுடைய பஞ்சாயத் மூலமாய் வழக்குகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். 4. பொது ஜனங்களுக்குக் கைத்தொழிற் கல்வி கொடுக்கப்படவேண்டும். 5. சரீர சுகாதாரத்துக்கு வேண்டிய முயற்சிகள் செய்யவேண்டும். 6. செட்டாய் வாழும் விதத்தைப் பொது ஜனங்களுக்குப் போதிக்கவேண்டும். 7. இயன்றவரையும் விதவா விவாகம், பால்ய விவாகம் நிறுத்தல், ஜாதிபேதமொழித்தல் முதலிய ஜனாசார சீர் திருத்தங்கள் செய்யவேண்டும். 8. இந்து மகம்மதியராகிய இரண்டு வகுப்பார்க்குமிடையே அந்நியோந்நிய நம்பிக்கையும் அன்பும் உண்டாதற்கு வேண்டிய உபாயங்கள் செய்யவேண்டும். முடிவில் வங்காள மாகாணப் பிரிவினை அநீதியானதென்பதைப் பற்றி ஒருதீர்மானமும், ஸர்க்கார் என்னவிதமாய் அடக்கினாலும் நம்முடைய கலக்கங்களை விடப்படாதென்று ஒரு தீர்மானமும் செய்யப்பட்டன. சுதேசமித்திரன்.

---



வன்னமுறக் கேட்டு வருந்துகின்ற தேனீது
தன்னி னினைவுண்டேற் றரலா மெனக்கூறி.

தானேவந் தென்செவிமேற் றன்செவிமே னின்றொளிருந்
தேனேரும் பூங்கொத்தைச் சேர்த்தினா னப்போதென்
மானேய நெஞ்சிவன்கை வைத்திடத்தே சென்றொடுங்கிக்
கோனேயின் புற்றதெல்லாங் கூற முடியாதே.

ஆண்ட முனிவோனு மணைந்தென் கபோலதலந்
தீண்டியவா னந்தத்தாற் செங்கை விரனடுங்கிக்
காண்டகுநா ணோடிரவி காந்தச் செபமாலை
தாண்டி விழுவதுவுந் தானறியா தேகின்றான்.

யானதனை யப்பொழுதே யேற்றுக்கொண் டென்கழுத்தின்
மான முடனணிந்து மற்றவன்றன் கைமலர்க
டானெனைவந் தன்பாற் றழீஇயதுபோற் பேரின்ப
மானதெலா மெய்தி வருகுகின்றே னப்போது.

### வேறு.

வந்தொரா யிழையாள் வணங்கிமா தேவி மஞ்சன மாடிநின் றன்னை
யிந்துவா ணுதலாய் பார்த்துநிற் கின்றா ளென்றவள் விரைந்துவந் துரைப்ப
விந்தவா சகத்தாற் புதிதகப் பட்ட விளம்பிடி யானது றதன்மேன்
முந்தவீழ் தோட்டி வசத்தினா லியங்கு முறைமைபோ லேவச மின்றி.

அவனழ கான வமுதவான் சேற்றி னழுந்தினாற் போலவுங் கபோலத்
திவர்தரு புளக மானமுட் களிலே யெழுந்துகோப் புண்டபோ லவுமத்
தவமுனி முகமேற் பற்றிய வொண்கண் டனைவருத் தத்தினால் வாங்கி
யுவமையி னன்னீ ராடுவ தாக வொன்றிரண் டடியிடு மளவில்.

மற்றைமா முனிவ னிவன்வலி யழிந்த வகையறிந் துரிமையி னுடனே
யுற்றகோ பத்தா லிவன்முக நோக்கி யுனக்கிது தக்கதொன் றன்று
சற்றறா னவர்கண் முயல்வதிக் கருமந் தபோதனர்க் கடாதது கண்டா
யிற்றைநா ளுனக்கிவ் விளந்தலை நெஞ்ச மெங்ஙனே வந்தது கெட்டேன்.

உன்னிலை மைகளு மொடுக்கமு நெறியு முயர்தவத் தளவிலா தரமுங்
கன்னிய ரின்பங் களினா தரமுங் கல்வியு மிப்பொழு தெங்கே
நின்னிக ரரவோ ரிப்படி யழிந்தா னிறைந்தநற் குணங்களுக் கெல்லா
நன்னிலை யான புகலிட மெங்கே நாணிதற் கென்கொலோ மொழிவேன்.

அங்கையி னின்றுஞ் செபவடம் வீழ்ந்த ததுவுநீ யறிந்திலை யென்னே
தொங்குத லறவே தூய்மையா னெஞ்சுந் துவக்கற வழியுமோ கெட்டேன்
றங்கிய தவத்தோ யுனக்கிது வேண்டா தையலாள் கொண்டவுன் னெஞ்சை
யிங்கினி மீளா யிப்படிச் செயுமோ வென்றவன் சொல்லமற் றிவனும்.

என்னையோ விந்த வார்த்தைசொல் வதுநீ யென்செப மாலைகொண் டிந்தக்
கன்னிதான்போகக் கடவளோவிட்டேன்காண்கண்டுகொளென் றுரைசெய்து
மன்னுவார் புருவம் வளைத்திதழ் துடிப்ப வலியவே பண்ணிவெங் கோபந்
துன்னுமா போனின் றளிதரு முகத்தாற்றொடர்ந்துவந் தென்முக நோக்கி.

என்செப மாலை தந்தலா தானை யேகலாய் பேதைநீ யென்னத்
தன்செப மாலை யாகவே கொண்டென் றனமிசை முத்தமா லையினை
மின்செறி மேனி முனிகையிற் கொடுத்துவெயர்வினின் முழுகிவிட்டிருந்தம்
பொன்செறி கமல வாவியி னுள்ளே புகுந்துநீ ராடிமீ தேறி.

திரையெறி பெருக்காறணையிலேதேங்கித்தேங்கிநின்றெதிர்செலுமாபோல்
வரைதரு தாதி மார்சிறைப் பட்டென் வசமழிந் தன்னையோ டேகிப்
பொருவற விளங்கு மென்மனைப்புகுந்தேன்புகுந்தவப்பொழுதுதான்முதலா
வொருசெய லின்றி விரகமோ கத்தா லுடல்சுழன் றுள்ளமு மறைபோய்.

இங்குவந் தனமோ வங்குநின் றனமோ விருந்தனம் போதுகின் றனமோ
தங்குநந் தமரோ டுரைத்திருந் தனமோ தனித்துரை யாதிருந் தனமோ
பொங்குள மகிழ்ந்துநகைத்திருந்தனமோ புலம்பியேதிகைத்திருந் தனமோ
வெங்கிருந் தனம்யாம் யார்கொலோ நம்பே ரேதென வொன்றறி யாதே.

இதற்குமுன் காம நோயறி யாதே னென்னநோ யீதென வறியா
திதற்கெதுசெய்வேன்யார்க்கெடுத்துரைப்பேனெங்ஙனேயேகுவேனெ
னுதித்தவே தனையா லொன்றறி யாதே யுயர்மனை மேனிலத் தேறி [ன்றென்
மதித்தபாங் கியர்கள் யாரையுந் தகைந்து மகிழ்விளை யாட்டெலா மறந்து.

சீதள மணிச்சா ளரத்திலே வதனஞ் சேர்த்தவ னின்றவத் திசையைக்
காதலி னோக்கி யத்திசைக் காற்றைக் கலந்தவன் விடுத்தது தைப்போ
லாதரித் தெதிர்கொண் டவனதி தூர மாகவு மாதப னளவின்
மேதகு கமல மென்னமற் றவன்மேல் விருப்புவைத் தங்ஙனே நின்று.

ஈதவ னமக்கு நல்கிய செவித்தா ரீதவன் செபவட மென்றென்
றோதா வுடனே யவற்றையே நோக்கி யாங்கவை பற்றுக்கோ டாக



மேதக விருந்தே னிருந்தபோ தெனக்கு வெற்றிலை மடிந்தர விகைதான்
றூதவிழ் வாவிக் கென்னுடன் போந்தா டாழ்க்கநின் றென்னிடை வந்தாள்.

வந்தெனை நோக்கி யெம்பெரு மாட்டி வாய்த்தவிண் ணப்பமொன் றுண்டு
சிந்தனை யொழிந்து கேட்டரு ளென்று செப்புவா டெய்வவா வியிலே
முந்துற நடந்த பொழுதுநாங் கண்ட முனிகுமா ரரிலுனக் கிந்தக்
கொந்தவிழ் செவித்தார் தந்தவன் முன்னங் கூடவந் தவனையு மொழித்து.

பையவந் தடியேன் வருநெறி யருகே பதுங்கிநின் றெனையழைத் தணங்கே
தையலிங் கிவளா ரார்மகள் பேரென் சாருமூ ரேதெனக் கேட்ப
வையகம் பரவும் வள்ளல்காந் தருவ மன்னர்கோ னஞ்சன்மா மகள்பே
ரெய்யும்வெஞ் சிலைவேள் புகழ்மகச் சுவேதை யேமகூ டம்பதி யென்றேன்.

என்னமற்றவனுந்திகைத்துநின்றொன்றையியம்புவான்போலவந்தென்றன்
முன்னுரைத் திடவுங் கூசியென் முகமே முறைமுறை நோக்கிநீ டுயிர்த்துப்
பின்னையுற்றிரந்துகொண்டுநின் றன்னைப்பெருகவுட்கொண்டதென்னுள்ள
முன்னிடத் தொருகா ரியமுள தணங்கே வுரைக்கவோ வொழியவோ வென்
[றான்.
யானுமப் பொழுது வணங்கிநின் றெந்தா யெங்களுக் குங்கள்கண் பார்வை
யானதுட் படவுந் தீவினை யகற்று மாகையா லருளிய கருமந்
தானினிச் செய்கை கேவல மன்றே சங்கியா தருள்செயீ ரென்ன
நானுயிர்ப் பாங்கி யாகவே நெஞ்சா னயந்தருட் பார்வையா னோக்கி.

அங்குநின் றதொரு பச்சிலை மாத்தி னரும்பிய கொழுந்தெலாம் பறித்துப்
பங்கயந் திகழுஞ் செங்கையாற் பிசைந்தோர் பாறையிற் பிழிந்ததின் சாற்றாற்
சங்கையின் றியிலே போர்த்தவற் கலையின் றலையிலே சிறிதுகீண் டெழுதி
மங்கைசெங் கையிலே யொருவரு மறியா வண்ணநீ கொடுவெனத் தந்தான்.

என்றவை கையிலே யிருந்தபட் டிகையை யெடுத்தவள் காட்டமற் றியானுந்
தொன்றுபட் டுவருங் காதலர் போலத் தொழுதிரு கைகளால் வாங்கி
நின்றறப் பதறி நெஞ்சுமுன் னோட.........திரு தனங்கள்பூ ரிப்ப
வொன்றினைப் பலகா லுவந்துவா சித்தே னுற்றவா சகமது கேண்மின்.

தனக்கிரை யான தாமரை வளையந் தாவென்னத் தரளமா லையினை
நினைத்துடன் களவி வெங்கிய வன்ன நெடுந்துய ருழந்திருந் ததுபோற்
சினைக்கயல் விழியார் முத்தமா லையினைச் செபவட மென்றுகேட் டுண்டு
மனத்திடர் பெருகா நானுறு வருந்தா மயங்குகின் றனொரு முனியே.

என்னும்வா சகத்தைக் கண்டபின் குருடர்க் கிருண்டகூ றிரவுவந் தெனவு
மன்னுகா னிடையே வழிபிழைத் தவர்க்கு வருந்துதிப் பிரமமுற் றெனவும்
பன்னுமா றறியா வூமனுக் குள்ள பழையநாக் குஞ்சிதைந் தெனவு
முன்னமே மதனன் மயங்கிய வெனக்கு மோகமே மிகவளர்ந் ததுவே.

அத்தர ளிகையை யுவந்தவந் தன்பா லணைத்தணைத் தளகமு நுதலு
மெத்தன வொடுதை வந்துதை வந்தென் மெய்யனை யெங்ஙனே கண்டா
யெத்தனை நேர மவனிடை நின்று யென்சொலு னிரந்துகொண் டுன்பி
னெத்தனை தூரம் வந்தன னெனக்கேட் டிங்ஙனே பகலெலாங் கடந்தேன்.

அப்பொழு தொருவ னிதயரா கந்தோய்ந் தறச்சிவந் தென்னவா னிரவி
மெய்ப்படு வலையஞ் சிவந்தது கமல விரைமலர்க் காடுகள் குவிந்த
வொப்பருங் குமுத வனமெலா மலர்ந்த வொன்றிய சக்ரவா கங்க
டப்புடை யவர்போ லகன்றவப் பொழுது தாளொரு சேடிமுன் வந்து.

செந்திரு வனையாய் போற்றிமுன் றந்த செபவடம் வாங்கவந் தேனென்
றந்தயில் வாவிக் கரையினுங் கண்ட வருந்தவ முனிவரி லொருவன்
வந்தனன் வாயி னின்றன னென்ன மகிழ்ச்சியான் மனத்தைமுன் விடுத்து
மூந்துறத் தவளக் கஞ்சுக மாதை முனிவனை யழையென விடுத்தேன்.

விடுத்தபி னந்தக் கஞ்சுகக் கொடிபின்
வெண்ணிலா வரவத னுடனே
யடுத்திள வெயிலுன் வருவதே போல
வவிரொளி பரப்பியென் னெஞ்சந்
தொடுத்தபுண் டரிக னிதயமே யன்ன
தோழனுங் கபிஞ்சல முனிவன்
கெடுத்ததொன் றுடையார் போன்றுமொன் றிரந்து
கேட்பவர் போன்றுமுன் வந்தான்.

வந்தமா முனிவன் மனக்கருத் தெல்லாம் வந்தகோ லத்தினு லறிந்து
முந்தெழா வணங்கி யாசனத் திருத்தி முளரியந் தாள்கழீஇ யெனது
சுந்தரா திரேகை யுத்தரி யத்தாற் றுடைத்தரு கேநிலத் திருந்தே
னந்தமா முனியுஞ் சிறிதுபோ தொன்றை யருள்செயா தங்ஙனே யிருந்து.

ஒன்றுரைப் பவர்போ லென்முகம் பார்க்கு முரைசெயான் றாளினை தன்னை
நின்றுபற் பலகா னோக்குமற் றிதனு னெறிமுனி நினைவையா னறிந்து
துன்றுமெய்த் தவனே யையுற வேண்டா தோகைதா னிவளெனக் குயிர்கா
ணின்றுரைத் தருளாய்நெஞ்சிலுள்ளதெலாமென்னமாமுனிவரனுரைப்பான்.



வரிகழ லரசர் வான்குல வித்தே வருகவென் சொல்லுகேன் வாக்கும் ,
புரிதரு கின்ற தில்லைநா னத்தரற் புகலநான் போந்தவிக் கருமம்
விரிசடை யிதனுக் கேற்றதோ விந்த மேகலைக் கேற்றதோ விந்த
விருமா வுரிக்கு மேற்றதோ வென்னே யிப்படிச் செய்ததே தெய்வம்.

எங்களுக் கிதுபோற் பரிபவ மில்லை யென்னினு முபாயமவே றில்லை
யுங்களுக் குரைத்துத் தீரவே வேண்டு முரைசெயா திருக்கிலோ விந்தக்
கங்குலிற் பெரிய தொருபிழை விளையுங் கலந்ததன் னுவியை நீத்து
மங்கடுத் தவனைக் காப்பதே முறைமை யாகையாற் சொல்லுகேன் கேண்மின்.

அப்பொழு துன்முன் னவனைநான் கோபித் தறக்கொடி யனைசில பேசித்
தப்பிது தவிர்நீ யென்றுபூ சைக்குத் தருமலர் கொடுவரப் போனேன்
மைப்படி குழலாய் நீயுநீ ராடி வந்துவிட் டனையதன் பின்னு
மெப்படிச் செய்தா னிவன்றனி நின்று னிவனைநா மறிகுவா மென்று.

ஆங்கவன் முன்பு நின்றிடத் தேசென் றருகொரு தூற்றினின் மறைந்துப்
பாங்குடன் பார்த்தேன் கண்டிலே னதனாற் பரிதபித் தனங்கதா பத்தாற்
பூங்கொடியவள்பின்போகிவிட்டனனோபொலன்கொடிபோனபின்றனிவற்
றீங்கெனைக் காண நாணியே யினனோ வென்செய்தா னென்றுநின் றழுங்கி.

சென்றிலச் சையினுன் முடிவிலே தேனுஞ் செய்யினுந் தெரிந்திரா திவனை
யின்றினித் தனியே விடுகைகற் பல்ல வென்றுகொண் டவ்விட முதலாத்
துன்றுமைப் பொழிலும் வாவியுங் கிரியுஞ் சுனைகளு மெங்கணு நாடி
நின்றறத் துயரங் கூர்ந்துகா ணுமனெஞ்சழிந் தேங்குமப் போது.

நிறைமலர்த் தடத்துக் கண்ணிதா யெங்குநெருங்குபூம்பொழிலுடைத் தாகிச்
சிறையளிச் சமுக மின்னிசை பாடச் செறிந்துகோ கிலமெலாங் கூவக்
குறையறக் குலவி மயிலின மாடக் குருமலர்த் திரளெலாங் கண்டு
மறுவறப் புதிய வசந்தன்வீற் றிருக்க வகுத்ததோர் மண்டப மெனலாய்.

அதிமனோ கரமா யிருப்பதோர் கொடிமண் டபத்திலே யறிவெலா மழிந்து
முதிரவே கருத்து முற்றியோ ரிருக்கு முறைமையே போலவு மழுங்காப்
புதியவோ வியமே போலவுஞ் சிறிதோர் புறத்திலு மலைவுறு தொருத்தன்
னிதியமா வொழுக்கந் தன்னினின் றலைந்து நெஞ்சுணீ யிருக்கவுந் தனியாய்.

மிகவனு ராக முடையனு யிருந்தும் வெளிறனு யொன்றினை வாக்காற்
புகலுதல் செய்யா திருந்துமா மதவேள் போரின்வே தனையுரைப் பவனு

யகமுறு துயரம் பொறுக்கமாட் டாம லஞ்சியோ டியதுபோ லஞ்ச
தகைதரு புலனு மொளிப்பவெற் றுடம்பு தன்னையே தரித்திருப் பவனாய்.

சற்றிமை திறவாக் கண்களி னுள்ளே தயங்குகா மக்கனற் புகைவந்
துற்றது போலக் கண்ணினீர்த் தாரை யொருசிறி தொழுக்கற தொழுகச்
செற்றியே கொடியிற் றளிர்களும் பூவின் றளிகளுந் தீந்துதீந் துதிர
முற்றிய காமக் கனன்முகந் தெழுந்து மூச்சுமேன் மேன்மிக வீச.

கன்றிய வாமக்.கபோலம்வீழ்ந் திருந்த கானக கிரணம்லா னுதன்மே
லொன்றிய வராகக் குழாம்பெலா மணிந்த தொப்பவே யொளிரமுன் செவி
றுன்றிய பாரி சாதவா சத்தாற் சூழ்ந்தவண் டுகள்செவி யருகே [மேற்
சென்றடன் மதன மோகமந் திரமே செபிப்பது போன்முரன் றுரப்ப.

மதனவே ளெய்த மலர்க்கணைத் தாது வடிவெலாம் பதிந்துநின் றதுபோல்
விதனமே செய்யும் விரகதா பந்தான் மெய்யெலாம் புளகமுற் றேற
முதிரவே காமன் மோகன நீற்றை முற்றுநின் றெறிந்தன போலப்
புதியபோ துகளிற் சுண்ணமா னதெலாம் பொழிலினங் கொம்புகள் வீச.

இளமலர்க்கொடிகளெழில்வனதெய்வமெனமொழிமகளிர்செய்தருளும்
வளமிகு கலசா பிஷேகதா ரைகள்போன் மதுவினைப் பொழியவே வார்க்கக்
களகள வென்ன வாரவா ரித்துக் காமவெம் படையெழு வதுபோற்
குளிர்பொழின் முழுதுங் குயிலினங் கூகூ கூவெனச் செவிசுடக் கூவ.

பொற்றலையம்பைப்புகையெழக்காய்ச்சிப்போர்மதன்புடைப்பதேபோலச்
செற்றிவண் டுகள்சூழ் செம்முகை களினுற் செழுமலர்க் கொம்புக ளறைய
மற்றிவ னெஞ்சிற் றவவலி யின்ன மாய்ந்ததோ வில்லையோ தானென்
றுற்றறி வதுபோற் றென்றல்சென் றுடலு முள்ளமு மெள்ளவே தடவ.

வைகறைமதிபோல்வெளுத்துவெங்கோடைவந்தடர்சங்குபோலிளைத்துச்
செய்கன லுள்ளே பற்றிய சந்தின் செழுமலர்க் கொம்புபோல் வாடி
னைகர மான குருடனே போன்று நாவிலா வூமனே போன்றும்
பெய்குர லறியாச் செவிடனே போன்றும் பேயடிப் புண்டவர் போன்றும்.

வீரவேள் வெற்றித் துவசமே போல விளங்கிய மூத்தமா லையினைச்
சேரவோர் கையான் மார்புட னணைத்துத் தீர்விலா மோகமேற் கொண்டே
யேருலா வியசீர் மதனசிங் கார விரதமே வடிவுகொண் டிறங்கிப்
பாரின்மே லிருந்த தென்னவே யிருந்தான் பாவியே னிதனையுங் கண்டேன்.



கண்டிமை யாமற் பார்த்துநின் றுள்ளங் கலங்கிநொந் துறநடு நடுங்கி
மண்டிய வாசா ரத்தினு லறிவால் வானவர் முனிவர்கண் முதலா
வெண்டிசை யோரும் வியந்துகொண் டாடு மிவனையு முட்பட வென்னே
திண்டிறன் மதவே ளிந்நிலை கண்டான் சிலைமதன் வலிமையே வலிமை.

என்றுசென் றருகேயிருந்தவன்றேண்மேலென்கைபோகட்டுயிர்த்துணைவா
நன்றுநன் றிதுதானென்கொல்கண்விழியாய்நண்ணியதுரைசெயாயென்னக்
கன்றிநின் றறவே சிவந்தெழுங் கண்ணீர்க் கடலிலே மிதந்திமை யிமையோ
டொன்றுகண் களினை மெல்லவே விழியா வுற்றெனை நோக்கிநீ டுயிரா.

செழுமணி மிடறு தழுதழுத் தறவே செப்பவாய் மொழிதடு மாற
வழுதழு திருந்து துணைவநீ யிந்த வடைவெலா மறிந்திருந் தொருவேன்
பழுதற வினனே கேட்டுவிட் டனையேபாவியே னென்றுவே றென்றில்
விழைவற விருந்தா ஞனுமற் றிதுதான் மீட்கொணு தென்றுளே கருதி.

ஆகிலு மிதனை யானது பார்ப்பே மடுத்தவன் வழியலா வழிமே
லேகிய பொழுது கடிந்துமீட் காம விருக்கைபண் பன்றென நினைந்து
மோகித னான வவன்முக நோக்கி முறைமையோ நமக்கிது கண்பா
நீகரு தியது குருவுப தேச நீதியோ தருமநூ னெறியோ.

இருநர களிக்கு மாதர்கூட் டத்தை யின்பமென் றுதரித் தொழுக
றருமமி தென்று நச்சுமென் கொடிக்குத் தண்புனல் சொரிவது கண்டாய்
பரிமள நீல மாலையென் றிருண்ட பாம்பினை யணிவது கண்டாய்
விரிசுட ரழலைச் செம்மணி யென்று மெய்யினோ டணைப்பது கண்டாய்.

ஆகையா லிந்த நெறியலா நெறிபோ யயருமைம் புலன்களை மீட்டு
மோகமா னதுவு மாறிநீ தெளியாய் முனிவனே யென்னவென் மொழியைப்
பாகையாற் றகைந்து தன்கணீர் துடைத்துப் பரிவினு லென்கரம் பற்றி
யோகைசேர்துணைவாபலபடிமொழிந்தென்றுகேளெனவவனுரைப்பான்

உருத்தெழு முரகக் கடுவிடம் போலு முருவிலி கணைகளுக் கிலக்காய்க்
கருத்தழிந் திலையே யாகையி னுலே காரியஞ் சொல்லநீ வல்லை
தரித்திட நெஞ்ச முடையவற் கன்றே சாற்றுவ திவையெலா மினிமேற்
றிருத்தவு மிந்த நெறியுப தேசஞ் செய்யவுங் காலமோ வல்ல.

என்னைநீ யிடித்துப் பேசவும் வேண்டு மியானுநீ யேதுரை செய்தா
யன்னதே செய்வே னுகிலு மினியென் னடைந்தபே ரவத்தைகண்டனையே

மன்னுமாருயிர்போமுன்னமென்னுள்ள வடவையங்கனலினுங்கொடிதாய்த்
தன்னிலே யெரியுங் காமவெந் தீக்குத் தக்ககா ரியமினி முயலாய்.

என்றுரை செய்து மீள்வுங் கண்க ளிரண்டையு மிமைப்பற மூடிப்
பொன்றினர் போலே யிருந்துவிட் டனனப் போதிலும் பலபல முகத்தாற்
கன்றியு முவந்து மிரந்துகொண் டுரைத்துங் கலைகளாற் றேற்றியும் பார்த்தே
னொன்றிலுந் தெளியக் கண்டிலே னதனா லுளமலி துயரினோ டெழுந்து.

சந்தனத் தளிரை யளவறக் கொய்து சாறுகொண் டெங்கணும் பூசிச்
சுந்தரக் கற்பூ ரத்தரு வுலர்ந்து தோலிடைத் தோலிடை நின்ற
பைந்துகட் டிரளை வாங்கிவேர் வடக்கும்படிநெரித் துடம்பெலாந்திமிர்ந்து
முந்துறப் பிழிந்த சந்தனச் சாற்றை முகந்துமார் பகத்திலே தேக்கி.

அரம்பையங் குருத்தால் வீசினேன் வீச வீசவெவ் வழல்கொளுந் தியபோற்
றரம்பயில் பாய நீந்தது பின்னுஞ் சருகெழ......மாற்றிப்
பரம்பிய பாய லிப்படிப் பலகாற் படுத்தெழு லாவது பார்த்தேன்
வரம்பறு தாப மொன்றிலுந் தணியா வாறுகண் டதிபய மெய்தி.

ஒன்றிலுந் தீரா திந்தநோ யிவடன் னுவகையா முயக்கினா லல்லா
தென்றுகொண் டொன்றும் விசாரியா துன்பா லிரந்துவந் தனனிதற்கினிமே
னன்றுறுங் கருமஞ் செய்கநீ யென்று நவின்றிவ ளேதுசொல் லப்போ
இன்றன ளென்றென் முகத்தையே நோக்கிக் கேட்குமாறுதரித்திருந்தான்.

நானுமீ தெல்லாங் கேட்டிருந் தெய்தா நல்லமு துண்டவர் போல
வானவா னந்தக் கடலிலே முழுகி யவனையு மென்வச மாக்கும்
வேனின் மாமதனுக்கென்னகைம்மாறுவினையனேன்செய்வதென்றெண்ணி
மோனமாய்நாணித்தலைகவிழ்ந் திருந்தோர்மொழிமொழிவேனெனுமளவில்.

## வேறு.

யானென் றனுங்கி யிருந்தே னெனக்கேட்டுத்
தேனென்று சொல்லன்னை சேடியருந் தோழியருந்
தானென்ற வந்து தலைப்பட்டா ளவ்வளவில்
வானென்று மாதவத்தோன் வாளா வெழுந்திருந்து.

கொம்பேநான் வந்து குவானேர முண்டினிநீ
வம்பேயென் னன்பன் மறுகாமற் காத்தருளென்
றம்பேய் விழிததும்ப வஞ்சலி.............
வெம்பேய்கொண் டார்போல் விடவொருக்கிக் கொண்டகன்றான்.



அன்னையும் வந்தெ னருகிருந்தா ளப்போ
தின்னது செய்தா ளெதுசொன்னா ளென்றறியேன்
மன்னிய நெஞ்சறைபோய் வாடி யயர்ந்திருந்தேன்
பின்னை யவளும் பெயர்ந்தாள் முகநோக்கி.

தேவன் றனபாலன் சேரலர்போல் வானிரவி
தாவும் பரித்தேருந் தானுங் கடற்புகுந்தான்
கூவுங் குயில்கள் கோலா கலத்துடன்வே
ளேவுங் கணைமாரி யேதளவென் றோதுவேன்.

கற்ற கலைதேர் கபிஞ்சலன்வந் தம்முனிசெய்க்
குற்றபிழை யெல்லா முரைத்ததுவுங் கேட்டனையே
மற்றினியென் செய்யும் வகையறியே னென்றனக்குத்
தெற்றெனவுண் டாகச் செயுங்கா ரியமுரையாய்.

மாதர்க் கணியா மடமுநா ணுந்துறந்து
கோதற்ற பெண்மை குலமொழுக்கம் பாராமன்
மேதக் கவருரைக்கும் வீணுரைக்கு மஞ்சாம
லாதிக் குரவ ரனுமதியு மில்லாமல்.

நாமேபோய் நண்ணினா னக்குரவ ரைப்பிழைத்த
தீமேவு வெம்பாவஞ் சேரு மதுபார்க்கில்
யாமேது பட்டே மெமையீர்ந்து கொண்டகன்ற
தாமேனி மாதவத்தோன் சொன்மறுத்த தீங்குவரும்.

ஈதெல்லா நிற்க வினியொன்று நம்முடைய
காதலா லந்தக் கலைமுனிக்கோர் தீங்குவரிற்
றீதிலா நங்குடியைச் சேரக் கெடுத்துவிடு
மாதலாற் செய்யுமதெ னன்னமே யென்பளவில்.

பாதலத்திற் சேடன் பணமண் டலமிந்தப்
பூதலத்தை விட்டுப் புறப்பட்ட தேபோல
வேதனைக்கு வித்தான வெய்யமதி மண்டலம்வந்
தேதமுற்ற பாவிக் கெரிதூஉ யெழுந்ததே.

காமத்தீ யுள்ளே கனலப் புறம்பெல்லாஞ்
சோமத்தீ வந்து சுடநெஞ்ச முண்டாரைச்

சேமத்தீக் காரர்வந் தீண்டினாற் போன்மயங்கி
வேமத்தீ யாற்றாமல் வீழ்ந்தேன் றரளிகைமேல்.

சோரு மளவிலவ யேநறுஞ் சாந்தமணிந்
தாருமணிக் காந்த மணிதன்மேற் சேர்த்தொற்றிச்
சேருங் கவரியினால் வீசச் சிறிதுணர்ந்து
சாருந் தரளிகையைச் சற்றே கடைக்கணித்தேன்.

வெய்யநோய் கொண்டேன் விழித்ததுகண் டாங்கவடா
னையகோ வென்றென் றடிமேல் விழுந்தழுது
செய்யபூ மாதனையாய் தேறுகநீ யஞ்சாதே
யுய்யநான் போயுன் னுயிர்க்கேள் வனைக்கொணர்கேன்.

போகவு மீண்டு வரவும் பொறாயாகி
லேகுக வென்னோ டினியென்ன நாணமிக்குச்
சோகமு மிந்தத் துயருமவன் றானலா
தாகுந் தமர்களெலா மாற்றுகைக்கு வல்லரோ.

என்ன வதனுக் கிசைந்தனங்க னேவினையா
வன்னவள்செங் கைதாங்க வாய்ந்தாய்ந் தெழுமளவிற்
றன்னிமித்த மாகத் துடித்ததுகண் ணாங்கதுகண்
டென்னபிழை தெய்வ மினிவிளைப்ப தென்றஞ்சி.

வெள்ளிலைகற் பூரம் விரைப்போது சாந்தமுத
லுள்ளவெலாங் கொண்டவள்பின் போத வொருவேனுந்
தெள்ளுநறுஞ் சந்தனச்சே றாடிச் செபவடமும்
வள்ளலணி பூங்கொத்தும் வான்றுணையா கக்கொண்டு.

செம்பத்ம ராகக் கிரணத்தாற் செய்தனைய
பைம்பட்டொன் றாலே பழுதறவே முட்டாக்கிட்
டிம்பர்க்கு ணோராக யாரு மறியாமல்
விம்பச் செழுமதிதோய் மேனிலத்தி னின்றிறங்கி.

வான்சோலைக் கேகும் வழியே புறப்பட்டேன்
றேன்செவித் தாரினறுந் தெய்வப் பரிமளத்தாற்
கான்சூ ழளிகள் கரும்பட்டாற் போர்த்ததுபோற்
றான்சூழ நான்போந் தனிக்குத் துணையாக.



காமன் சிலைவாங்கி யம்படைசிக் காலைவாய்ச்
சோமன் கரந்தாழ்த்துத் தூரநின்று தாழ்ச்சிசெய
நாமந் தருநாணைப் பின்னாக்கி நன்னெஞ்சு
மாமன்பு மாதரமு மைம்புலனு முன்னோட.

வந்து வழியின் மலரினறுந் தூளிகளாஞ்
சிந்து புழுதி புடைத்தேறுஞ் சேவடியைச்
சந்த்ரிகைதன் னாலுருகிச் சந்திரகாந் தங்களினின்
றூந்தி யரித்தோடு முதகத்தி னாற்கழுவி.

தாமத் தரளிகையைப் பார்த்துத் தரளிகாய்
யாமத் திடையே யெமையிழுத்து வந்தமத
னாமக் குரிசிலையு நம்மெதிரே தள்ளிக்கொண்
டேமத் துடன்வரிலோ வென்று சிலபேசி.

சீராடிக் கொண்டு வருமளவிற் றெள்ளுதிரை
நீராவி யின்குடபா லாகநெடுந் தூரத்தே
வாரா வொருகுரலென் வன்செவியி லேகாய்ந்த
காராசம் போனுழையா நன்னெஞ்சை வாட்டியதே.

வந்தமொழி யாலும் வலக்கண் டுடித்திடலுஞ்
சிந்தையழிந் தோடிச் சிறிதிடந்தான் சென்றளவி
லந்த நெடுங்குரலோ ராண்குரலா யக்குரறா
னைந்தை கபிஞ்சலன்ற னீடுபட்ட தோர்குரலாய்.

கெட்டேன் விதியே கெடுவாய் கெடுத்தாயே
மட்டேர் கணைமதனா வன்பாவி வாழ்ந்தாயே
பட்டே கிடந்தனையே பாவியேன் நண்பாவோ
விட்டே னினிவாழ்வு வேண்டேனான் வேண்டேனே.

திங்களு மன்மதனுந் தென்றலுமற் றெல்லீரு
மிங்கு முயன்றெண்ணு மெண்ணமெலா முற்றியதோ
வுங்கள்கண் ணிப்போ துறங்கியதோ பாவிகா
ளெங்கள் குடியை யிறங்கவிட விட்டீரே.

வெந்ததே நெஞ்சம் விழுந்ததிடி யென்றலைமே
லுய்ந்தினி நண்பா வுனைப்பிரிந்து வாழேன்காண்.

வந்ததுயர் காணாத மாச்சுவேதாய் நீயு
மிந்தமறஞ் செய்யவிவ னென்னபிழை செய்தானே.

நேய முடைச்சுவேது கேதுவே நின்புதல்வ
னுயுலைவெங் காம னடப்பறித்துக் கொண்டான்கா
ணீயிவை யொன்று மறிந்திலையே நீடுளத்துட்
டீய கொடுவினையே செய்வதினிச் சொல்லாயே.

சாற்று தவமே தருமமே சத்தியமே
யேற்றமுட னீங்களினி யெங்கே யொதுங்குவீர்
போற்ற கலைமகளே நூல்வாங்கி விட்டனையே
போற்றியபொன் னூடே பொலிவழிந்து போயினையே.

வன்னெஞ்சா யென்னை மறந்தா யுனக்கிந்தக்
கன்னெஞ்சார் தந்தார் கடைப்பிடியி னீயிறக்க
வின்னஞ்சா காதிருந்தே னென்னே யிரேன்காணுன்
பின்னஞ்சா தேவருவேன் பின்பார்த்துப் போகாயே.

ஆரோ டினிதிருப்பே னாரோ டினிமகிழ்வே
னாரோ டினிமனத்தி லற்றதெலாஞ் சொல்லுவே
னாரோ துணையாவா ரையோ தமியேனுக்
காரோ யினித்தஞ்ச மாற்றேனு னுற்றேனே.

உன்னைப் பிரிந்து முயிர்வாழ வல்லேனே
நின்னைத் தொடர வருகின்றே னிட்டோ
வென்னைப்பின் பாராம லேகினையே மாச்சவேதை
தன்னைச் சிறிது நினைத்திலையே தக்கோனே.

என்றுபல விப்படி யிப்படிக் கூட்டிக்
கன்றி யிரங்கிக் கனன்றுகனன் றேகதறு
கின்ற குரற்கேட்டேன் கேட்டுயிர்போய் வெற்றுடலா
யொன்றை யறியா துலைந்துவாய் விட்டலறி.

## வேறு.

ஓடைநெடுங் கரைக்கொடிக்காட் டுத்தரியங் கோலிவிழ வோடிக் காட்டு
மேடுபள்ள மறியாமல் விழுந்துமெழுந் தும்பதறி மிகத்தள் ளாடிக்
கூடவெனைச் சிலதுாக்கிக் கொண்டுபோய் விட்டதுபோற் குவாறா ரத்தை
நாடியொரு சொடிவரையிற் கடந்துகொடி மண்டபத்தை நானே நண்ணி.



அங்கொருசந் திரகாந்தப் பாறையிலே பலமலரா லமைக்கப் பட்டுப்
பங்குடைய் தொருகாமி பண்ணுசய னம்போலும் படுக்கை மீதே
யிங்கொருவேன் வருமோசை கேட்டசையா.......... னெனவுங் காமப்
பொங்குபெருங்கனலாறித் துயில்கின்றான்போலு மெனைப்புலந்தான் போன்
[றும்.

திருநுதலிற் சந்தனமுங் கற்பூர முழுப்பூச்சுஞ் செங்கை மீது
தருகமல வளையத்தா லணிகாப்பு மற்றதனுற் றருமுந் தூலும்
விரிதருவா ழைக்குருத்தான் மேலிடுமுத் தரியமுமாய் விளங்குங் காமற்
குரியசமா ராதனைக்கா மொருவிரதங் கொண்டங்கே யுறைவான் போன்றும்.

திகைத்தழுதே நீர்வற்றிச் சில்விரத்தம் பார்த்ததுபோற் சிவந்திட் டுள்ளே
மிகச்செருகியொருசிறிதே தோன்றியகண் ணிணையாலேவினையேன் றன்னைப்
பகைத்துமத வேள்பொரா நீ பார்த்திருந்து விட்டனையே பாவி தென்ற
றுகைத்ததுவ நினைந்திலையேவன் னெஞ்சியெனவெறுத்துச்சொல்வான்போன்
[றும்.

இருங்காம வேதனையா லிதயத்தின் மேல்வைத்த விடக்கை யாலே
யருங்காத லுயிரனையா யுயிர்போன தாகிலுநீ யகலே லென்று
தருங்காத லுடனேதன் னெஞ்சத்தி லுறைவோனைத் தகைவான்போன்றுஞ்
சருங்காத வெங்காமச் சரம்பொறுத்த தோவென்று தொடுவான்போன்றும்.

களத்தணிந்த கமலவளை யங்களினுற் கலைமதிதன் கதிர்க ளாகுங் [ளைக்கண்
கிளைத்தெழுபா சங்களினுற் பிணித்திழுப்பான் போன்றுமிந்தக் கெடுவா
டிளைப்புறவெந் துயரிட்டித் திருகையுநீட் டிக்கதறி யெழுந்து வீழ்ந்து
வளைத்திறுகத்தனைத்தழுவிக்கொண்டுகபிஞ்சலமுனிவன்வாய்விட்டார்ப்ப.

அடர்க்கின்ற திறலயிரா வதந்துயிலு மாபோல வரவிந் தத்துக்
கிடக்கின்ற பெரியோனைக் கீழான கொடும்பாவிக் கெடுவாள் கண்டேன்
படைக்கண்கண் மிகவிருண்டு மதிமயங்கி யறிவிழந்து பாதா ளத்தே
விடச்சென்று வீழ்பவர்போ லெங்கேயோ தானறியேன் விம்ம வீழ்ந்தேன்.

அப்பொழுதென்செய்தேனென்சொல்லிப்புலம்பினேனறியேனென்று
மொப்பறமுன் செய்தகொடு வினையாலோ பாவிமனத் துரத்தி னாலோ
விப்படிவெந் துயருறவா ளென்றயனென் றலையிலிட்ட வெழுத்தி னாலோ
வெப்படியோ வெனதாவி யிறந்ததிலை யிறந்ததிலை யென்கை யானும்.

அறியேனு னப்போது நெடுநேரஞ் சென்றதற்பி னயர்வு நீங்கிச்
சிறிதேயோ ருணர்வுண்டாய்த் தீயிலிட்ட புழுப்போலத் திண்பார் மீதே

வறிதேயிப் பாவியுடல் பதைக்கின்ற வாறுகண்டேன் கண்ட போதே
யிறவாதே யிருந்தேனே யெனக்கருதி யெங்கோனை யெழுந்து நோக்கி.

பாவியேன் பாவியேன் புண்டரிக முனிவேயபா தகமே செய்தாய்
மேவியே வாழவெண்ணி நான்வரவு மவமதித்து விட்டுப் போனாய்
தாவியே நீவெறுக்கத் தாழ்வேது செய்தேனுன் றாழ்வுண் டேனு
மாவியே யனையானை யறக்கொடுமை செய்வர்களோ வறஞ்செய் வாரே.

கிளர்ந்தபகற் கடல்கடந்த வருத்தமெலாந் தரளிகையைக் கேட்டுப் பாருந்
தளர்ந்தமொழிக் கபிஞ்சலனைக் கண்டதற்பிற் சிறிதக்குத் தரித்தே னில்லை
விளைந்தவிடர்க் கிடைவேனை முறிப்பித்த பாவிகளார் வீணே நானின்
றளைந்ததனித் துயர்பாரீர் முனிவரீ ரொருவார்த்தை யருளிச் செய்யீர்.

அடுத்தவளைக் கைவிடுத்த லழகோதா னென்னுடைய வாசை யாரீர்
கடுத்துமதன் பரிபவித்த படிபாரீர் நொந்தேனுன் காணும் பாவி
யிடுக்கணறி வாரில்லை யென்னென்பா ரிங்கில்லை யெனக்கு நீரே
தொடுத்ததுணை யென்றிருந்தே னிப்படியே செய்தீரே தோன்ற லீரே.

அறக்கொடிய பிழைகாரி யென்பதுநீ ரறியாம லடியேன் மீது
சிறப்புடைய பெருநேயம் வைத்தீர்நா னிப்படிக்குத் தீங்கு செய்தே
னிறப்பதுவுஞ் செய்திலே னிருக்கின்றே னிதுகண்டு மென்னே யென்னே
மறக்குடியோ நங்குடியும் வாழ்ந்ததே காந்தருவர் மரபு தானே.

அப்பொழுதே யென்னருகே யிருந்துவிடா தவமதிசெய் தகன்று போய்விட்
டிப்பொழுதோ விவைமொழிவா யென்றேனுமொன் றியம்பாம லிருக்கின் றீர்நீ
ரப்பொழுது மும்மானை யன்னைசிறைப் பட்டகன்றே னல்லா தேகே
னிப்பொழுதென் றனிபாரீ ரிடர்பாரீ ரினியிரங்கி ரிறைவ னீரே.

இனியெனக்கோர்புகலில்லையினியெனக்கோர் துணையில்லையென் னென்று
வினியெனக்கோர் தந்தைதா யென்பவரு மில்லையினி யெல்லா நீரே [ற்ற
யினியென்னக்கு முன்பளித்த கருணையினைத் தோற்றவீ ரிங்கே வாவென்
றினியணைத்தெ னிடர்களைவீ ரிருடிகளு முனிவர்களோ வெம்பி ரானே.

இந்தவனத் தெய்வதைகா ளிறைஞ்சினே னெங்கோவை யெழுப்பித் தாரீ
ரந்தமிலாய் கயிலாயா வாருமற்றேற் கருள்புரியா யவனி மாதே
வெந்துயர்கண் டிவ்வுயிரை மீட்டருளாய் வாட்டமில்லா விதியே நீதான்
சிந்தைமகிழ்ந் தினியிரங்காய் தெய்வங்கா ளுனேதான் றியங்கு வேனே.



என்றிஙனே புலம்பியசொல் லேதென்று நினைப்பேனு மில்லை யுண்டோ
கன்றியபே யேறினர்போற் கதறியே மிகச்சொரிந்த கண்ணி னீருந்
துன்றியசோ கமும்விரித்த தலையுமலர் தறத்துவண்ட துகிலு மெய்மே
லொன்றியிரா தற்றுதிர்பூ ணும்புழுதி புடைத்தேறு முடம்பு மாகி.

தாவாம லவனுடலோ டொன்றுவபோன் மெய்யிறுகத் தழுவிக் கொண்டே
யாவாவென் றரற்றியுமுத் தாரத்தை நோக்கியிவ னாவி தன்னைக்
காவாமல் விடுத்தனையே பாவிநீ யெனவெறுத்துங் கண்ணீர்த் தாரை
யோவாத தாளிணையைப் பலகாலுந் தழுவிக்கொண் டிறக்கூப் பிட்டு.

தரியாது பலகாலும் பலகாலுங் கபிஞ்சலன்றன் றாளில் வீழ்ந்தும்
பெரியோனே யிவனுயிரைப் பிழைப்பியா யெனவழுதும் பிறங்கு சோக
தெரியாலே வெந்தொழிந்தே னென்பளவி லவளந்த விறந்த காலத்
தரிதான பெருந்துயரத் தன்மையடைந் தறமோகித் தயர்ந்து வீழ்ந்தா

என்றிங்ஙனே புலம்பியசொல் லேதென்று நினைப்பேனு னில்லை யுண்டோ
கன்றியபே யேறினர்போற் கதறியே மிகச்சொரிந்த கண்ணி னீருந்
துன்றியசோ கமும்விரித்த தலையுமலைந் தறத்துவண்ட துகிலு மெய்மே
லொன்றியிரா தற்றுதிர்பூ ணும்புழுதி புடைத்தேறு முடம்பு மாகி.

தாவாம லவனுடலோ டொன்றுவபோன் மெய்யிறுகத் தழுவிக் கொண்டே
யாவாவென் றரற்றியுமுத் தாரத்தை நோக்கியிவ ளாவி தன்னைக்
காவாமல் விடுத்தனையே பாவிநீ யெனவெறுத்துங் கண்ணீர்த் தாரை
யோவாத தாளிணையைப் பலகாலுந் தழுவிக்கொண் டிரக்கூப் பிட்டு.

தரியாது பலகாலும் பலகாலுங் கபிஞ்சலன்றன் றாளில் வீழ்ந்தும்
பெரியோனே யிவனுயிரைப் பிழைப்பியா யெனவழுதும் பிறங்கு சோக,
தெரியாலே வெந்தொழிந்தே னென்பளவி லவளந்த விறந்த காலத்
தரிதான பெருந்துயரத் தன்மையடைந் தறமோகித் தயர்ந்து வீழ்ந்தா

உ

குமரன் துணை.

# விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 6. } 1907௵ நவம்பர். { பகுதி 11.

## தர்மபரிபாலனம்.

நம் நாட்டில் தொன்றுதொட்டு நாம் எல்லாவற்றினும்
மைபாய்க்கொண்டாடிவருவது சத்தியவிரதமே. உபநிடதத்
நமக்கு முதல் முதல் கூறப்பட்ட கட்டளையே 'சத்தியம்வத"
பது. அதற்குச் சார்பாகவே தெய்வப்புலமைத் திருவள்ளுவ
ரும் " பொய்யாமை பொய்யாமையாற்றின் அறம்பிற, செய்
செய்யாமை நன்று" என்று திருவாய் மலர்ந்தருளினர். அ
முக்கியமாக நாம் கைக்கொண்ட விஷயம் தர்மமே. " த
என்பது நமக்குப் பிறந்த அடுத்த கட்டளை. இதனைத்தா
மூதாட்டியும் காலத்திற்கேற்ப மாற்றி "அறஞ்செயவிரு
கூறினள். ஆகையால் ஏனைநாட்டாரினும் நாம் தருமத்
மேலாக நெடுநாளா மதித்து வந்திருக்கிறோமென்பதிற் -
மில்லை. அவ்வித உயர்வான தர்மம் பலவிதப்படும்.
டார் தருமங்களை யெல்லாம் ஒருவிதமாக வகுத்து
எனக்கூறுவர். அவை ஆதுலர்க்குச்சாலை, ஓதுவா
யன. அவைகளில் அடங்காத்தருமங்கள் கிடைய
டார் பற்பலவிதமாய் அறச்சாலை ஏற்படுத்தியிருப்ப,
திரண்டு தருமங்களில் அடங்கும். ஆனால் நம் நாட்
ன் பழையகாலங்களில் பக்தி சிரத்தையுடன் ந

தற்காலம் நடக்கவில்லை யென்பது யாவருமறிந்ததே. அவ்வித
மான்புள்ள தருமங்கள் முற்காலம் போலவே நன்கு நடந்தேறி
வரும்வண்ணம் பார்த்து வருவது நம் கடமைகளில் முதன்மையானது
என்பதை நாம்சிறிதும் மறக்கவொண்ணாது. தருமகாரியத்தில் மனம்
செல்வது அரிதினும் அரிது. மனத்தை எத்துணையோவிதம் கட்டுப்
படுத்தி அதன் குரக்குக் குணத்தை அடக்கி ஒருநிலைக்குக் கொணர்
வது மிகவும் கஷ்டமான விஷயமே. அவ்வாறு வெகு பிரயாசையின்
மேல் செய்துவந்து மேற்பட்டதர்மங்கள் சீர்குலைந்துபோகின்றனவெ
ன்றால் அதனினும் பரிதபிக்கத்தக்க விஷயம்யாதுளது. புதிதாகத்தர்
மங்கள் ஏற்படுவதினும் பழைய தர்மங்களைக் காப்பாற்றுவதே மேல்.
சிலர் இதனையறியாது பழைய தர்மங்களை அடியோடே தொலைத்து
அவ்விடத்திற் புதுத்தர்மங்களை ஏற்படுத்த முயல்கின்றார்கள். அவ்
வாறு செய்வது தேசத்துரோகமாகும். இதனால் நம் பழைய வழி
... குருட்டுத்தனமாய் அநுசரித்து நடக்கவேண்டுமென்று கூற
தமல்லேம். காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவண்ணம்
வகளை மாற்றிக்கொள்ளல் நலமே. . இருந்தாலும் பழைய தர்
சின் வழிகளை முற்றிலும் நீக்குவதற்குப் பிரதி நன்கு ஆராய்ந்
... பழையன குற்றமென்று கண்டால் மாத்திரமே அவைகளை
தகுதியாம். அவ்வாறின்றி மனம்போன போக்கெல்லாம்
சரியாகமாட்டாது.

...்களைச் செய்வதில் நம் நாட்டார் மத சம்பந்தமான தர்மங்
...லென நினைத்து வந்திருக்கிறார்கள். அநேகமாய்ப் பல
...ய கொள்கையும் இதுவே என்றாலும் நம் நாட்டிலே
...தனை முதன்மையாகக் கைக்கொண்டார்கள். இது
ஆனால் அவைகளுக்கு அநுகுணமானவற்றையும் சீர்
ச்செய்தல் நலம். இகலோக பரலோகசாதனங்களில்
... கல்வி யென்பதை எவரும் மறுக்கவொண்ணாது.
...து விஷயமாக நம் நாட்டார் கண்ணுங்கருத்துமாயி
தற்காலம் தேசக்ஷேமத்தையும் ஆத்ம லாபத்தை
...டு புகழுக்கும் பேருக்குமே பலர் டாம்பீகமாகப்
...த்தத் தலைப்படுகிறார்கள். சிலர் போட்டிக்க...



தருமத்தில் பிரவேசிக்கின்றனர். நம் முன்னோர்களில் பலரும் தரு
மஞ் செய்யுங்கால் ஈசுவரார்ப்பணமாகவே செய்வது வழக்கம். அத
னால் புகழும் பேருமுண்டாயிற்று. நாம் நினைத்துச் செய்யாவிடி
னும் தாமாகவே புகழும் பெருமையும் நம் தலைவாயிடத்து நாட்டப்
படும். இக்கலிகாலத்தில் தருமத்தை ஈசுவரார்ப்பணமாகச் செய்தா
லும், பேருக்கும் புகழுக்குமென்று செய்தாலும், போட்டிபோட்டுக்
கொண்டு அகங்காரத்தின்மேற் செய்தாலும் தர்மம் தர்மமே. ஈசுவ
ரார்ப்பணமாகச்செய்தல் உத்தம தர்மமானால் வேறுவிதமாகச் செய்
தல் மத்திமம் அதமம் ஆகும். ஆனால் அவை தர்மம் என்ற வகுப்பி
னின்று விலக்கப்படா. அவைகள் எவ்வாறாகவாவது அதிகரித்தல்
நாட்டின் க்ஷேமத்துக்கு அநுகூலமாகும். நம்நாடு வரவர ஏழைமைத்
தன்மையை அடைந்து வருகின்றதென்பது பல புத்திமான்க...
கொள்கை. அதனால்தர்மங்களை விருத்தி...யாக்கி அவ்வேளி...
தொலைத்தல் நம் முதற்கடமையாகும். அவற்றைஅபிவிரு...
வதிலும் காலதேச வர்த்தமானத்துக்கு... தக்கவண்ணம் தக்க
களை அநுசரித்தல் நலமாகும். நம் நா...டு க்ஷேமமே நமக்கு
நோக்கமாக இருத்தல்வேண்டும். ...ந்நிய தேசங்களின் ...
பெருக்கையும் செழிப்பையும் பார்...துப் பெருமூச்சு வி...
ண்டு வீண்பேச்சுக்கள் பேசுவதிற் ...பனில்லை. அவைகளை
த்திபண்ண வேண்டுமானால் புரா... ...மாக ஏற்பட்டிருக்கும்
களை ஆய்ந்தறிந்து அவைகளில் ... ...ருத்தம் செய்யவேண
...ளை...ட்டும் சீர் செய்து மற்றவ... ...ய் பழைய ஸ்திதியிலே
வண்ணம் விட்டுவிடுதல் சௌ... ...மாக இருக்கும். ...
அந்நிய நாட்டாரின் கொள்கை... அநுசரித்து ...
தன வழிகளை மாற்றல் கூடாது

அன்னதானம், வித்தியா...னம், தேவாலயம் ...
மங்களுக்கு நம் நாட்டில் ஏற்...டிருக்கும் சொத்து...
யிருந்துவருகின்றன. அவை...ள் சரிவர நடக்கும்
...பலித க்ஷேமலா...
...க்கரு...

கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல் சச்சரவு செய்து சொத்துக்களை வியாச்சியத்திலும் வம்பு வழக்குக்களிலும் வீண் விரயம் செய்துவருகிறார்கள். சிற்சில தேவஸ்தானங்களில் கமிட்டிகளென்றும், தர்மகர்த்தாக்களென்றும், பஞ்சாயத்தாரென்றும் பெயர் வைத்துக்கொண்டிருக்கிற பழம்பெருச்சாளிகள் அத்தர்ம சொத்துக்களையும் வரும்படிகளையும் விலாப்புடைக்கத்தின்று ஏப்பமிடுகின்றனர். சிலர் தாம் யாதொன்றும் வியாபிக்காவிடினும் பிறர் கொள்ளையடிப்பதைக்கண்கூடாகப்பார்த்தும் யாதொரு விஷயத்தையும் காதிற்போட்டுக்கொள்ளாமல் பற்றற்றவர்போல் நடித்து வருகிறார்கள். அவர்களும் கொள்ளைக்காரர்களில் ஒருவரேயாவர். சிலர் அதிகாரப் பிர த்தையே மேலாக திக்துத் தர்மபரிபாலனத்தை முற்றிலும்
உ த கண்மூடிகளாயிரு கின்றனர். சிலர் எல்லாவற்றையும் நன்கு
றந்தாலும் தர்மவழியிலேயே நடக்க முயற்சி செய்தாலும்
சார்ந்தவர்களுடைய தோஷங்களால் யாதொன்றும் செய்யமுடி
ர்களாயிருந்து வருகி றனர். இதுவிஷயத்தில் கவர்ன்மெண்
லைப்படுவதென்றால் ட ப்படவேண்டியிருக்கிறது. அவர்கள்
மாய்ப்போனால் என்ன செய்கிறது என்று நினைத்து தலையி
ருக்கிறார்கள் போலும் ஆகையால் இவ்வநியாயங்களை நிறு
றவராவது ஏற்படல் றியமையாதது. நம் நாட்டுப்புத்தி
இதுவிஷயமாகப் ட ந்த முயற்சி செய்து பார்த்தும்
ல் இனி நாமே செ த்தில் பரிகாரந் தேடிக்கொள்
க்தமம் எனத் தீர் த்துத்தக்க வண்ணம் “ர்ம
ப” என்ற பெயர் பூ – ஒரு மகா சபையை நம் சென்
க்கென்று ஏற்படுத்தி ருக்கிறார்கள். அதில் ஆனரெபில்
சாமி ஐயர் அவர்கள், பி. ஆர். சுந்தரமையர் அவர்கள்
ராயண ஐயர் அவர் எல். ஏ. கோவிந்த ராகவையர்
முதலிய கனவான் சேர்ந்து சில மாதங்களாக
றதை நாம் எல்லே ம் அறிவோம். அன்னவர்
பொருட்டு தர் ந்துமாக்களாகிய எந்த இங்க
சரீரத்தினை



ஊராய் அனுப்பி இது விஷயமாக முதல் முதல் சங்கதிகளையறிந்து வர ஏற்பாடு செய்தல் வேண்டும்.

எழுத்து மூலமாக எவ்வித ஏற்பாடு செய்யினும் நம் ஜனங்கள் கவனியார்கள். ஏதேனும் சிறிது கவனித்தாலும் சிரத்தை பாராட்டிக்கடமையைச் செய்யார். சிலர் இவ்வித ஏற்பாடுகளையே பெருங்கேடாக நினைத்து இதற்கு விரோதமாகவும் வேலை செய்வார்கள். ஆகையால் தக்கவர் சிலரைத் தெரிந்தெடுத்து சகலவிதமான தர்மங்களைப்பற்றியும் சவிஸ்தாரமாக அறிந்துகொள்ளவேண்டும். கவர்ன்மெண்டார் இதுவிஷயமாகத் தங்களாலியன்ற உதவி செய்வார்கள் என்பது திண்ணம். விஷயங்களை ஆராய்ந்தறிய அனுப்பப்பட்டவர்கள் சுயநயத்திலும் தேசக்ஷேமத்தை அதிகமாகக் கருதினவர்களாகவும், சத்தியவந்தர்களாகவும், தேசக்ஷேமத்தின் பொருட்டுப் பாடுபடப்பிரியமுடையவர்களாயும், நயமொழியுடையவர்களாகவும், சுலபமாகச் சிநேகிக்கத்தக்க குணமுடையவர்களாகவும், கூடியவரை பிரஞ்ஞையுள்ளவர்களாகவும், செல்வாக்குள்ளவர்களாகவும் இருத்தல்வேண்டும். அவர்கள் தற்காலம் தேசக்ஷேமத்தைக்கருதி பிரயாணச்செலவைமட்டுமே வாங்கிக்கொண்டு சிரமப்படுகிறவர்களாகவுமிருத்தல்வேண்டும். ஆங்கிலம் கற்றவர்களாயிருத்தல் நலம். எல்லாவற்றிற்கு மேலாக தெய்வபக்தி, தேசபக்தியுடையவர்களாயுமிருத்தல்மிகநலம். தற்காலம் இன்னவர்களை உபாத்தியாயர்களிலிருந்தும், வக்கீல்களிலிருந்தும், கவர்ன்மெண்டு பென்ஷனர்களிலிருந்தும் உத்தியோகஸ்தர்களிலிருந்தும் தெரிந்தெடுக்கலாம். அவர்கள் தங்கள் விடுமுறை நாட்களின் ஒரு சிறிது பாகத்தை இத்தர்ம விஷயமாகச் செலவிடப்பின் வாங்கார்கள். தக்கவண்ணம் முயற்சி செய்யும்பக்ஷத்தில் இதுவிஷயத்தில் சிறிதும்கஷ்டம் ஏற்படாது. அவைகளுக்காக முக்கியமான பட்டணங்களில் சங்கங்களும் கிளைச்சங்கங்களும் ஏற்படுத்தி அவ்வச் சங்கங்கள் செய்த வேலைகளை அப்போதைக்கப்போது பிரசுரப்படுத்தி வேலைசெய்துவந்தால் இரண்டொரு வருஷத்தில் தர்மபரிபாலன விஷயமாகப்பல விஷயங்களை அறிந்துகொள்ளலாம். நேரில் தக்கவர்கள் போய் அவ்வவ்வூரிலுள்ள தக்க மனுஷர்களைக் கொண்டு விஷயங்களை அறிய முயற்சி செய்தால் சுலபமாக முடித்து

விடலாம். பணச்செலவு அதிகமாக வேண்டுவதில்லை. பின்னர் சீர்குலைந்த தர்மங்களைக் கண்டுணர்ந்து தக்க பரிகாரங்கள் தேடிக்கொள்ளலாம். முயற்சியே திருவினையாக்கவேண்டும். பலமான ஏற்பாடுகளைச் சோம்பலின்றிச்செய்து தக்கவர்களைத் தெரிந்தெடுத்து அனுப்பும்பக்ஷத்தில் மிக்க சுலபமாகவே நினைத்த காரியம் கைகூடும். அதே வேலையாக உழைக்கும்வண்ணம் மூன்று நான்கு ஜில்லாக்களுக்காவது தக்கவர் ஒருவரைத்தகுந்தசம்பளத்தில் ஏற்படுத்தல் நலம். அவ்வாறில்லாவிடில் எடுத்த காரியம் எளிதில் முடிவது அரிது. நிலையை விட்டுக் கிளப்பமட்டும் ஏற்பாடு செய்தால் பின் பலர்கூடி ரதத்தை இழுத்துக் கொணர்வார்கள். முதலில்மட்டும் தக்கவண்ணம் முயற்சி செய்தல்வேண்டும். அதற்கென்றுஏற்படுகின்ற சொற்பச் செலவை ஒரு பொருட்டாக நினைத்தல் கூடாது. தர்மம் செய்யச்சக்தியுடையவர்கள் இவ்வித தர்மத்தைக் கட்டிக்கொள்வதே மேலான தர்மமாகும். ஆகையால் தர்ம ரக்ஷணத்துக்கென்று ஏற்பட்ட சபையார் இது விஷயத்தை நீள நினைந்து தக்க ஏற்பாடுகளைக் காலதாமதமின்றிச் செய்வார்களாக. தேவாலயங்களைப்போல் மடாலயங்களும் ஏராளமான தர்ம சொத்துக்களை வகித்து வருகின்றன ஆதலால் அவைகளும் சீர் அடையும். அவை சீரடையின் நாட்டுக்கல்வி தழைத்தோங்குவதிற்றடையில்லை. அறிவைப்பரவச்செய்து நாட்டின்அந்தகாரத்தை ஓட்டித்தர்மத்தை நிலைநாட்டிச் சர்வ ஜனங்களும் சகல சுகங்களையும் பெற்று நீடூழி வாழும் வண்ணம் எல்லாம் வல்ல கடவுள் கிருபை புரிவாராக,

பத்திராதிபர்.

உ

# சிந்தாமணிசரித்திரம்.

(280-ம் பக்கத்தொடர்ச்சி.)

## 7-ம் அத்தியாயம்.

மேலே கூறிய நகரத்தின்கண் வணிகர்களின் வீடுகள் நிறைந்த மாடவீதியில் திருவனந்தபுரமிருந்து வந்திருக்கும் மிக்க தனவானாகிய ஒரு செட்டியார் ஒரு மாளிகையைவிடுதியாகக்கொண்டு சிலநாட்களாக வசித்து வந்தனர். அவருக்கு ஏதோ உடலில் ஒரு பிணி நேரிட்டு அப்பிணியை யகற்றும் முறையறிந்த பல வைத்தியர்களைத் தருவித்து அவர்களிடமிருந்து மருந்துவாங்கி யருந்தவேண்டி இங்கு வசித்துக்கொண்டிருந்தார். ஓரிரவில் பத்துநாழிகையிருக்கும். வேளாளரொருவர் வைத்தியத்தொழிலில் கைதேர்ந்தவரெனக் கீர்த்தியடைந்தோமென்கிற செருக்குடன் அம்மாளிகைக்குட் புகுந்தனர். அவர் அங்கு வரவும் அவர் தோளின்மேல் புனைந்திருக்கும் ஒருபட்டுத்துண்டினின்றெழுந்து பரவிய துர்வாசனையானது எல்லாப்பிணிகளும் அவரிடம் நிரம்பியிருக்கின்றனவென விளம்பலாயிற்று. அவ்விடத்தில் அப்பிணியாளியின் பக்கத்தில் அமர்ந்திருந்த சில அச்சிமங்கையர்கள் அவர்களுடைய பாஷையில் அவ்வைத்தியனை உபசரித்து அந்நோயாளியின் தாதுவை ஆராய்ந்து அவர் பிணிக்குத்தக்க சிகிச்சை செய்யவேண்டுமென அவரைப் பிரார்த்தித்தனர். அங்கேயிருந்த பாலப்பிராயமுள்ள அந்தணரொருவர் அந்த வைத்தியரைப் பார்த்தவுடன் மிக்க மனவருத்தமுற்று

“ஐயோ! இதென்ன கிரகசாரம். பணமுள்ளவனுக்கு நோய்வரின் சடுதியிற் பிணமாவதன்றி அவனுக்கு வேறுகதி யமையாதென்பது போலவிருக்கின்றதே. நோய் அமர்ந்து கொல்லும். வைத்தியன் துணிந்து கொல்வன் என்பது நமது அநுபவத்தினால் நன்குவிளங்குகின்றது. அந்த டாக்டர் ரூபா ஆயிரத்தைக் கைப்பற்றிக்கொண்டு பனிக்கட்டியைத் தலையில் வைத்துக்கட்டி இவரை யமபுரத்துக்குப் பாதிவழியிற் கொண்டுபோய் பிறகு அவரைக்கரைசேர்ப்பதற்கு வேறு மருந்தில்லாமையால் இடைவழியில் கைவிட்டுச் சென்றனர்

போனும். மற்றொரு துரைமகன் மானிடர்களின் உடற்கூறு மிக நன்றாய் அறிந்தவராம். அவர் குறித்த காலத்துக்குள் நோயாளியின் வேலையை முடிப்பதில் தவறாத பான்மையுடையவராம். அவர் இந்தப் புண்யவானுடைய வயிற்றைக் கீறி முதலில் உயிரையும் பின்னர்பிணியையும் அகற்ற முயன்றனர். இங்கேயிருக்கும் குரங்குகள் சளசளவென்று அவர்கள் பாஷையில் இறைச்சலிட்டு மிக்க வியாகுலத்துடன் அந்த மகாநுபாவனை அகற்றிவிட்டார்கள். இன்னும் சிலகாலம் நோயோடாயினும் செட்டியார் உயிர்தரித்திருப்பரென ஒருவாறு திண்ணங்கொண்டிருந்தோம். இந்த நிலைமையில் இவரை யார் இங்கேகூட்டிவந்தனர். எல்லாம் சிவன் செயல்" எனவாய்க்குள் முணுங்கிப் பேசிக்கொண்டு பின்னர் அந்த வைத்தியரை நோக்கி,

"பிள்ளையவர்களே! வரவேண்டும்" எனச்சொல்லிச்செட்டியாருடைய பிணியின் வரலாறுகளை அவரிடம் புகன்றனர். உடனே அவ்வைத்தியர்தம் தோளின்மேலிருந்த பட்டை உதற விரம், பூரம் கந்தகம், பாஷாணம் முதலிய சரக்குக்களின் பரிமளம் அவ்வில்லம் முழுமையும் நிறைந்து அங்கிருப்பவர்கள் சுவாசம் விட வொண்ணாதபடி செய்தது. அவர் அப்பட்டை நோயாளியின் முன்கையில்விரித்துப் பார்த்துப் பிணியின் வரலாறு முழுமையையும் உள்ளங்கைக் கனிபோற் கண்டறிந்துவிட்டார். சற்றுநேரம் மிகவும் யோசிப்பவர்போல் மௌனமாயிருந்து பிறகு அவ்வந்தணரை நோக்கி"

"ஐயா! நன்றாய் ஆராய்ந்தேன் இவருக்கிருப்பது ஒரு வியாதி நான் சொல்வது சரிதானா? என் கைவசமிருப்பது யமகிங்கர ரசாயனம். அது கொங்கணச்சித்தர் குரங்கோட்டிச் சித்தருக்கு மொழிந்தருளிய முறைப்படி அமைக்கப்பட்டது. அம்மருந்தைஒருமுறையருந்திடில் அரையாப்பு, கிரந்தி, நாலாயிரத்து நானூற்று நாற்பத்திநான்கு மேகம், ஐயாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தைந்து வாதம், ஏழாயிரத்து எழுநூற்று எழுபத்தேழு சிலேஷ்மம், உதரசூலை, மூலரணம் முதலிய எல்லாப் பிணிகளையும் சடுதியில் அகற்றி நோயாளியைஇனி எப்பிணியும் அணுகாத நிலைமையிற் சேர்த்துவிடும்" என்றார். இதுகேட்டு அந்தணர்



"சிவ! சிவ!! வேறு வியாதி வேண்டாம். இந்த ஜாப்தாவைக் கேட்டாலே பஞ்சப்பிராணனும் அநாயாசமாய் அடங்கிவிடும். இவர் நல்ல காரியத்துக்காக இங்கு வரவில்லை." என்று மெல்லப்புகன்றுவிட்டு "வைத்தியரே! இதையெல்லாம் சொல்லவேண்டாம். கேட்கப்பயமாயிருக்கின்றது. இவருக்குத் தாங்கள் ஏதாவது ஔடதம் கொடுத்து இவர் பிணியைப் பரிகரிக்க முடியுமானால் அதைச் செய்யவேண்டு" மென்றார். அதைக்கேட்ட வைத்தியர் "தாங்கள் உரைத்தது மெய். இவருக்கு வாதத்தின்மேல் பித்தம்ஏறியபடியால் மேகக்கனல் மிகுதியாகிச் சிலேஷ்மமடங்கி நிற்கின்றது. அதையொருவாறு கிளப்பிவிட்டு வாதம் அழுந்தும்படி அவுஷதம் கொடுக்கவேண்டுமென்பது அகஸ்தியர் ஐந்நூற்றில் பல பாடல்களால் உரைத்திருக்கின்றனர். அப்பாடல்களிற் சிலவற்றை நீங்கள் கேட்கவேண்டும்" எனச்சொல்லி நோயாளியின் தலைமாட்டில் பரிகாரி அழுகிறான் என்ற வசனத்துக்கிணங்கப் பாடத்தொடங்கினான். இத்தருணத்தில் செட்டியாருக்குத் தலைவலி மிகுதியாய் மயக்கமும் மேலாயிற்று. அதைக்கவனியாமல் அவ்வைத்தியன்

கேளப்பா மூலச்சூடகற்றும் வண்ணம்
　　கிழமான வெருமையின் மூத்திரம் சேரொன்று
மாளப்பா பூனையின் மூத்திரஞ் சேரொன்று
　　வருபன்றி மூத்திரஞ்சேர் ஒன்றுசேர்த்துச்
சூளப்பா வருடமது நூறு சென்ற
　　தொல்வேம்பு வேரெடுத்துக் கஷாயஞ்செய்து
நாளப்பா ஆறதுதான் கொண்டாயாகில்
　　நலமற்ற மூலச்சூடகன்றவாறே.

என்றுபாடியவுடன் அவ்வந்தணர் சிரித்து

"ஒன்றும்குறைச்சலில்லை. அந்தப்பாட்டிலேயே "மாளப்பா" வென்று ஐயமற மொழிந்திருப்பதால் நோயாளிக்கு அப்பாட்டைத் தவிர வேறு கர்ண மந்திரம் வேண்டுவதில்லை". என்று சொன்னவுடன் வைத்தியருக்குக் கோபம் மேலாகி "நீரொன்றுமறியீர். நான் பரம்பரையாக வைத்தியன். என் முன்னோர்கள் தஞ்சாவூர் அரண்

மனையில் வைத்தியஞ் செய்து அந்த ராஜா பரம்பரையை இன்னம் வாழவைத்திருக்கிறார்களென்பது நிதர்சனமாகத்தெரியுமே. எங்கள் பெருமை உங்களுக்குத்தெரியுமா? நீர் கேட்டதில்லையா?

### விருத்தம்.

கைத்திறம் போதாதென்ற காலனை நோக்கியீசன்
சைத்தியம் முதலாம்நோய்கள் தந்திட்டோம் சிலர்கள்மாதர்
பைத்தியங்கொண்டேதானாய்ப் படுவர்பின் மிகுந்தபேரை
வைத்தியர் கொல்வர் நீபோய் வாழெனப்புகன்றிட்டாரே.

என்று பரமசிவன் கட்டளை யிட்டிருப்பதைக்கொண்டே வைத்தியர்கள் தேவர்களிலும் மேலானவர்களென்று எளிதில் அறியலாம். நாங்களில்லாவிடில் யமதேவனுக்குப் பிழைப்புண்டோ? வைத்தியம் படிப்பினால் வரக்கூடியதன்றே. அஃது அநுபவத்தால்சம்பாதிக்கக் கூடிய வித்தை. எத்தனை ஜமீன்தார்களுக்கோ வைத்தியஞ் செய்து அவர்கள் உயிர்களை என் மருந்துப் பையில் அடைத்துவைத்திருக்கிறேனென்பதை நீர் அறிவீரா?

லேகியத்தை மேலென்றார் கபிலர் சாதி
    லிங்கமதைக் கூறிட்டார் ஒட்டைச்சித்தர்
வாகுடனே கும்பமுனி பூரக்கட்டு
    வானுலகஞ்சேர்க்குமென வழுத்தினார் முன்
சோகமறக் கைலைபுக வேண்டுவோர்க்குச்
    சுண்ணமொன்றே கொங்கணரும் சொன்னார் கண்டாய்
சாகமனமில்லார்க்கு வைத்தியஞ் செய்யும்
    சண்டாளர் நரகமதிற் றான்வீழ்வாரே.

என அநாதிநாதரும், பகுளிநாதரும் சங்கையற மொழிந்திருக்கின்றார்கள். என்று சொல்லிவிட்டுக்கொஞ்சம் மிளகும் கள்ளிப்பாலும் கலந்தரைத்து முதலில் செட்டியார் கண்களுக்குக் கலிக்கம் போட்டு அவருடைய உடல் வலியை அறியவேண்டுமென்று புகன்று அவ்விரண்டு மருந்துகளையும் அரைப்பதற்காகத் தன்னுடைய மருந்துப் பையிலிருந்து கலுவம் ஒன்றை எடுத்துவைத்தார். இதைப்பார்த்



துக்கொண்டிருந்த அந்தணர் "அதைக்காட்டிலும் அக்நித்திராவகம் உங்களுக்குள் கைகண்டமருந்தாயிருக்குமே. அதையேன் சித்தர்கள் உரைக்கவில்லை" என்று வினவ வைத்தியர்

"நான் மேற்சொல்லிய கலிக்கம் பயனுறாவிடின் பின்னர் அக்நித்திராவகத்தை அடுத்த முறையாகக் கைக்கொள்ளவேண்டியது. மேலும்.

மேகநீர் குட்டங்காசம் வெட்டை நோய் மூலச்சூடு
சோகைகண்வலி மயக்கம் சூலைநோய் குன்மம்காந்தல்
நோகுமுள் மூலம் சன்னிநோயெனும் பிணிகட்கெல்லாம்
வாகுடன் கலிக்கமொன்றே வழுத்தினார் மதங்கநாதர்.

எனப்பாடும் பொழுது அப்பாட்டுக்களைக்கேட்கக்கேட்கச்செட்டியாருக்குத் தலைவலி மேலாகி அதைப் பொறுக்க முடியாமல் அவர் ஐயோ அப்பாவென்று மிக்க சங்கடப்படுகையில் அந்தணர் வைத்தியரை நோக்கி

"ஐப, பாடினது போதுமே. நோயாளி உங்கள் மருந்துக்குத் தப்பினாலும் உங்கள்பாட்டுக்குத் தப்பமுடியாதே. சிவ! சிவ!! சிவ!!! அந்தப் பாட்டொன்று போதாதா? கையைப்பிடித்து விரல்களைந்தையும் கூட்டி யிழுத்தொடித்துக் கொலைபண்ணும் பொழுது தாதுக்களெல்லாம் தன்னாலே மறைந்தழுந்திவிடாவா? இதற்கு மிஞ்சினால் உங்கள் கஷாயம் எண்ணெய், மெழுகு, சிந்தூரம், பஸ்மம் இவைகளிருக்கின்றன. வேலையை முடித்துவிட அவைகளிலொன்றேபோதும். பாவி உயிர் இத்தனைக்கும் அசையாவிட்டால் பத்தியமிருக்கிறது. வயிறு காயும்போது உயிர் எங்கே ஒளித்துக்கொண்டிருக்கும். இவைகளுக்கெல்லாம் தப்பினால் உங்கள்கையில்பிரம்மாஸ்திரம்போல் பாட்டுக்களும் இருக்கின்றன. யமதேவன் இங்குவராமலே உயிரைச் சடுதியில் அவனூர்கொண்டுபோய்ச் சேர்த்துவிடும் மகிமை அப்பாட்டுகளுக்கு இருக்கின்றது. என்று சொல்லிச் சிரித்துவிட்டு தங்கள் பேரென்னவென்று வைத்தியரைக்கேட்டார். அதற்கு வைத்தியர்

நீர் சிறுபிள்ளை ஆகையால் தாறுமாறாகப்பேசுகின்றீர். என்தாய் தகப்பனார் எனக்கு தர்ம ராஜனெனப் பேரிட்டார்கள். நான் பிறந்த என் அம்மான் வீடு கூத்தனூரிலிருப்பதாலும் அவ்வூர் கிராமதேவ

தைக்குச் சித்திரபுத்திரனெனப்பெயராகையாலும் அந்தத்தெய்வத்தின் பெயரை எனக்கு வைத்து எல்லாரும் என்னைச் சித்திரம் பிள்ளையெனச் செல்வமாக அழைப்பார்கள். ஐயா! நமது மருந்துகளின் ஸ்வபாவத்தை நீர் அறியமாட்டீர் அவைகளின் மகிமையை சாஸ்திரமல்லவோ முறையிட்டுக்கூறுகின்றது.

சுக்கொருமண்டலமுண்டே சூலபாணி
சுட்டெரித்து முப்புரத்தைத் தொலைத்தான் சிந்திச்
சர்க்கரையோர் மாதமுண்டே மார்க்கண்டேயன்
சாகாமல் வாழ்கின்றான் சதகுப்பைக்குப்
பக்குவம் செய்தே அருந்தியிடையமாதர்
பலரோடும் வாழ்ந்திருந்தான் பார் முன் கண்ணன்
மிக்கவுயர் திப்பிலியை உணவாயுண்டு
வென்றிட்டான் சூரனை அவ்வேலன் தானே.

சாஸ்திரமெல்லாம் இவ்வாறு முறையிடும்போது இக்காலத்திலுள்ளவர்கள் பாலையும் கற்கண்டையும் கோதுமையையும் உண்டு நாசமடைகிறார்கள்.

பாலுண்டே கண்ணிழந்தான் திருதராஷ்டரன்
பாண்டு வெளுத்தான் கதலிப்பழத்தையுண்டே
ஏலமதைத்தின்று குறளாகியூர்ந்தே
ஏங்கினான் கும்பமுனி இனித்ததேனை
நாலிரண்டுநாள் புசித்தோர்தலைபோய் அய்யோ
நான்முகனானயனும் நாவைக்கட்டி
சீலமுடன் வேப்பெண்ணெ யொன்றேயுண்டு
தேவரெல்லாம் மரணமுற்றுத் திகழ்கின்றாரே.

என்று சொல்லி மீசையை முறுக்கிக்கொண்டு அந்தணரைப்பார்த்தார். உடனே அந்தணர்

வைத்தியரே எங்களுக்கெல்லாம் என்னதெரியும். தெரியாமையால் ஏதோமொழிந்தேன். அதைத்தாங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும். இப்போது செட்டியார் தலைவலி மிகுதியால் வருத்தப்



படுகிறார். அதற்குத் தற்கால சாந்தியாக ஏதாவது ஓர் சிகிச்சை செய்யவேண்டும் என்று சொன்னவுடன் வைத்தியர்

நமக்கு எப்பொழுதும் சாஸ்திரந்தான் ஆதாரம். தலைவலிக்கு இடைக்காட்டார் முறையொன்று மொழிந்திருக்கின்றார். அதை அனுசரித்தால் கால்நாழிகைக்குள் தலைவலி நின்றுவிடும். அதைக் கேளுங்கள்.

அப்பனே தலைவலிக்குமுறைநான்சொல்வேன்
அரிதானமுறையாருமறியமாட்டார்
குப்புறவே விழுந்தொருவாய் மண்ணைக்கவ்விக்
கொஞ்சம் கொஞ்சமாயதனை விழுங்கிவிட்டால்
செப்பியதோர் தலைவலியும் நீங்கிப்போகும்
திறமான கும்பமுனி செப்பினார் முன்
ஒப்பில்லா முறையிதனை யுரைத்தேனப்பா
உண்மைசொன்னேன் எவர்க்கும் நீ உரைத்திடாதே.

உரைப்பையெனில் தலைவலிதான் மீளக்காணும்
உள்ளபடி பரிகாரம் சொல்வேன்கேளும்
நரைத்தலையாள் ஒருத்திமுலைப்பால் சேரொன்றில்
நாய்க்கடுகும் பேய்ப்புடலும் நகட்டி நன்றாய்
அரைத்ததனிற் கொடிவேலிச்சாறும் சேர்த்தே
அரகரா விழுதாக்கி அபானவாயில்
சுருக்கெனவே கட்டி ஒரு ஜாமம் சென்றால்
சுவாசம் அற்றுச் சுகமாகத்தூங்குவாரே.

என்று வைத்தியர் சொன்னவுடன் அந்தணர் மேலொன்றும் சொல்ல விரும்பாமல்

(இன்னும் வரும்)

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

---

# இராஜ நிந்தனைச் சட்டம்.

இம்மாதம் முதல் தேதியாகிய சுக்கிரவாரம் நம் இந்திய சரித்திரத்தில் மிக்க விசேஷ நாள். அன்றுதான் ஸிம்லாவிற் கூடிய இராஜப்பிரதிநிதிச் சட்டசபையில் இராஜநிந்தனைச்சட்டம் ஊர்ஜிதப் படுத்தப்பட்டது. அந்நாளே நாம் நமது சுயாதீனத்தை ஒருவாறு இழந்த நாளாகும் பிரிட்டிஷ் இராஜாங்கத்தில் நமக்குள்ள பெருமையெல்லாம் சுயாதீனமே. எவரும் தத்தம் மனோ அபிப்பிராயத்தைத் தைரியமாக வெளியிடும்படியாக விருந்தது. அந்தச் சுயாதீனம் போய் நாம் வாய்ப் பூட்டிடப்பட்டவர்களானோம். "வாய்ப்பூட்டிடப்படின் மற்றுவா விவரென் செய்வார்." என்ற கவிக்கூற்றுக்கிணங்கப் பரிதாபமான நிலைபுற்றோம். இம்மாதிரி மசோதா ஒன்று பிரேரேபிக்கப் பட்டிருக்கிறது என்றும் சமீபத்தில் சட்டமாக்கப் படப் போகிறதென்றும் கேள்வியுற்ற புத்திமான்கள் திடுக்கிட்டுத் திகைத்து நின்றனர். அன்னவர்களது அபிப்பிராயத்தையும் ஆக்ஷேபணைகளையும் தெரிவிக்கும் வண்ணம் போதுமான சாவகாசம் கொடுக்கப்படவில்லை. "அவசரக்கோலம் அள்ளித்தெளி" யென்று இந்தியா கவரன்மெண்டார் மசோதாவை அவசரப்பட்டுச் சட்டமாக்கினது சிறிதும் சரியாகமாட்டாது. இச்சட்டம் ஏற்பட யாதொரு நியாயமும் ஏற்படவில்லை. சிற்சிலவிடங்களில் குழப்பம் உண்டாகிவிட்டதால் கவர்ன்மெண்டார் நடுநடுங்கி இவ்விதச் சட்டத்தினாலே இக்குழப்பங்களை அடக்கவேண்டுமென்று நினைத்ததாகத் தோற்றுகிறது. நெடுநாளாக வேரூன்றியிருக்கின்ற பிரிட்டிஷ் இராஜ்யமாகிய வைர விருக்ஷத்தைச் சொற்பக்காற்றாகிய குழப்பமானது வேர் பறித்தெறிந்துவிடும் என்று பயந்தது வியப்பினும் வியப்பே. இந்திய ஜனங்களின் விசுவாசத்தைக் கவரன்மெண்டார் ஒருமுறைக்குப் பலமுறையாகச் சோதித் தறிந்திருந்தும் பின்னும் அவநம்பிக்கைப் பட்டு இம்மாதிரியான சட்டம் ஏற்படுத்தினது மிகவும் விசனிக்கத் தக்கதே. டில்லி தர்பார் நடந்த காலத்தில் ஜனங்களின் விசுவாசம் தெளிவாக உலகத்தாருக்கு வெளிக்காட்டப்பட்டது. அதைவிட வேறு எவ்விதந்தான் ஜனங்கள் இராஜாங்கத்தின் மீதுள்ள விசுவாசத்தை வெளிக்காட்டுவார்கள். வருஷா வருஷம் கூடும் காங்கிரெஸ் மகாசபையில் ஜனப்பிரதிநிதிகள் ஜனங்களின் விசுவாசத்தைக்காட்டுவதையே முதற்கடமையாகப்பூண்டு கையாண்டு வந்திருப்பதை எவர்தாம் அறியார்? ஏதோ இரண்டொருவர் அங்குமிங்கும் இராஜவிசுவாசத்துக்குக் குறைவான பேச்சுக்களைப் பேசிவிட்டதால் குடிகெட்டா போயிற்று? இவ்விஷயங்களை இராஜப்பிரதிநிதிச் சட்டசபையில் நம் ஜனப்பிரதிநிதிகளாகிய ஆனரபில் மிஸ்டர் கோக்லே ஆனரபில் டாக்டர் ராஷ்பிகாரிகோஷ் என்ற இரண்டு சிம்மங்கள் தெளிவாய் எடுத்துக்காட்டிக் கர்ச்சித்து தாம் பூண்டகடமையை எவரும் மெச்சும்படியாகச் செய்ததை நாம் ஒருநாளும் மறக்கவொண்ணாது. அவர்கள் எவ்வளவோ தைரியமாகவும் விநயமாகவும் விஷயங்களை எடுத்துக்கூறிச் சனங்களுக்கும் கவரன்மெண்டாருக்கும் தாங்கள் செலுத்தவேண்டிய கடமைகளை எல்லோரும் மூக்கில் விரல் வைக்கும்படிக்குச் செய்து முடித்தனர். இதுகாறும் சட்டநிரூபணச் சபையில் இம்மாதிரி தைரியத்துடனும் விநயத்துடனும் அமிர்த வருஷம் பொழிந்தவர்கள் கிடையாரென்றே துணிந்து கூறலாம். இம்மாதிரியாகக் கவர்ன்மெண்டார் சட்டம் செய்வதால் ஜனங்களுக்குள் அதிருப்தியுண்டாகி அந்த அதிருப்தி காலக்கிரமத்தில் பெருங்கேட்டை விளைக்கும் என்று தெளிவாகவும் சாதுரியமாகவும் எடுத்துக்காட்டினார்கள். ஆனரபில் கோக்கலே என்பவர் இவ்விஷயம் ஜனப்பிரதிநிதி மெம்பர்கள் அதிகமாகக் கூடுகிற கல்கத்தாவில் பிரஸ்தாபிக்கப்பட வேண்டியதை விட்டு ஸிம்லாவில் பிரஸ்தாபத்துக்கு வந்தது சரியில்லை யென்றும், 32 வருஷங்களுக்கு முன் லார்ட் நார்த்ப்ரூக் காலத்தில் இந்தியா மந்திரியாயிருந்த லார்ட் ஸால்ஸ்பரி இம்மாதிரி உத்தரவு செய்திருக்கிறாரென்றும் தெரிவித்தார். இவை நிற்க, இந்தியா கவரன்மெண்டாருக்கு இச்சட்ட விஷயமாக அனுப்பப்பட்ட ஆக்ஷேபணைகளும் கண்டனத் தீர்மானங்களும் விசேஷக் கமிட்டியின் யோசனைக்கே வரவில்லையென்றும் இம்மாதிரி சட்டத்தைச் சடுதியில் ஏற்படுத்துகிறதற்கு யாதொரு நியாயமுமில்லை யென்றும் ஏற்கனவே இருந்து வருகிற சட்டதிட்டங்கள் இதுவிஷயத்தில் ஏராளமாக இருக்கின்றனவென்றும் மாகாணகவரன்மெண்டார் வேண்டுமானால் சமயோஜிதமாய் அப்படிப்பட்ட சட்

டங்களை ஏற்படுத்திக் கொள்ளலாமே யொழிய இந்தியா கவரன்மெண்டார் இவ்வாறாக அவசரப்பட்டுச்சட்டம் ஏற்படுத்த யாதொரு காரணமுமில்லையென்றும் கம்பீரமாகவும் எவரும் புகழும் வண்ணமும் எடுத்துக் காட்டினர். ஆனரபில் டாக்டர் பிகாரிகோஷும் கரடியாய்க் கத்திப் பார்த்தார். இருவரும் நியாய வாயிலாக எடுத்துக்காட்டிய விஷயங்களைக் கவரன்மெண்டு மெம்பர்களும் இராஜப்பிரதிநிதியும் சரியானபடி மறுக்கமுடியவில்லை. இருந்தாலும் அவை செவிடன் காதிற் சங்கூதின விதமாயிற்று. ஜனங்களின் அதிருப்தியை இராஜநிந்தனையாகக் கவரன்மெண்டார் பாவிப்பது என்று கூறினதுமன்றி அவ்வாறு நினைப்பது பற்ப[illegible]ங்குகளை விளைக்குமென்றும் எடுத்துக்காட்டி வாதித்ததற்கா[illegible]து. நாட்டார் அனைவரும் மேற்கூறிய இருகனவான்களுக்கும் மிக்க நன்றிபாராட்டக் கடமைப்பட்டவராவார்கள். நாம் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டுவதே நம் முதற்கடமை. அவ்வாறே நம் ஜனப்பிரதிநிதிகள் எவரும் வியந்து திருப்தி யடையும் வண்ணம் காரியத்தைச் சீரும் சிறப்புமாகச் செய்து முடித்தார்கள். இனி நாம் செய்வது யாதுளது? கவரன்மெண்டாருக்கு இதுவிஷயமாகத் தகுந்த வண்ணம் கருணை பிறக்கும்படி கருணாநிதியாகிய பகவானைப் போற்றி செய்வதுடன் நாம் எல்லாரும் செய்யும் தொழில் ஊக்கமுடையவர்களாயிருந்து தீவினையையகற்றி நன்மையைக் கடைப்பிடிபபோமாக. இச்சட்டம் என்று விலக்கப்படுமோ அன்றுதான் நாம் சுயாதீனம் பெற்றவர்களாவோம். அதுவரை நாம் அடிமைகளே ஆவோம். எப்பொழுது கவரன்மெண்டாருக்குக் கிருபையுண்டாகுமோ? தர்ம மேஜயம் என்று மனஅமைதியுடன் நடப்பதே நம் கடமை.

பத்திராதிபர்.

# சர்க்கரைக் கைத்தொழில்.

சர்க்கரையானது ஆதியில் கரும்பினின்றுமே நம் தேசத்தில் எடுக்கப்பட்டு உபயோகப்பட்டுவந்தது. அது பழுப்பாக இருக்கும், ஆனால் அது நம் தேக சௌக்கியத்துக்கும் நம் ஆசாரத்துக்கும் ஒத்திருந்தது. சென்ற முப்பதுவருஷ காலங்களுக்குள்ளாக அந்நிய நாட்டுச் சர்க்கரைகள் வரத்தொடங்கின. பத்து வருஷங்களுக்கு முன்னும் நம் சர்க்கரையையே நாம் அநேகமாய் உபயோகித்துவந்தோம். ஐரோப்பிய நா[illegible] நம்முள் நுழையத் தலைப்படவே நாம் வெள்ளையர்களை அநுசரித்து வெள்ளைச்சர்க்கரையை அதிகமாக உபயோகிக்கத்தொடங்கினோம். நம் நாட்டு அஷ்டகிராமம், அவலிகா முதலிய ஊர்களிலிருந்து வந்துகொண்டிருந்த வெள்ளைச்சர்க்கரை வாயிலும் மண் விழுந்தது. ஆஸ்திரியா, பிரான்ஸ் முதலிய அந்நிய நாட்டு பீட்கிழங்குச் சர்க்கரையே ஏராளமாக வரத்தொடங்கிவிட்டது. அது கரும்புச் சர்க்கரையைப்போல் அத்தனை ருசியுள்ளதுமன்று. தேகசௌக்கியத்துக்கு அடுத்ததுமன்று. இன்னும் நம்நாட்டு வைத்தியர்கள் நம்பழுப்புச் சர்க்கரையையே மருந்துகட்குஉபயோகப்படுத்துகின்றனர். ஆகையால் சுவதேசிய உணர்ச்சிபெருகிவருகிற நம் நாட்டில் இனி எல்லோரும் நம் சுதேச சர்க்கரையையே உபயோகப்படுத்தி இன்புறுவார்களாக. அந்நியநாட்டு வெள்ளைச் சர்க்கரையிலிருக்கும் கேடுகளை அடியிற்கண்டபடி மிஸ்டர் பி. வி. கோபாலராயர் என்ற ஒரு தேசாபிமானி எடுத்துக்காட்டிச் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். அதனைத் தேசாபிமானிகள் அனைவரும் வாசித்துச் சிந்தித்து அக்கேடுகளை நீக்க முயல்வார்களாக. ஆசாரங்களுக்கும் தேகசௌக்கியத்துக்கும் இணங்கும்வண்ணம் நன்முறையாக வெள்ளைச்சர்க்கரை நாட்டுக்கு ஏற்படும்வரை நம் பழுப்புச் சர்க்கரையையே உபயோகித்துத் தேசக்ஷேமத்தைப் பாதுகாப்போமாக. தனவான்களும் வியாபாரிகளும் கூடியசீக்கிரம் இத்தீங்கை நம் நாட்டினின்றும் நீக்க வகை தேடுவார்களாக. சிறுகச்சிறுக இவ்விஷம் நம்முள் ஊர்ந்து நமக்கு அபாயத்தை விளைவிக்கின்றதை நாம் நீள நினைந்து விலக்கினாலல்லது நமக்கு நலமுண்டாகாது. நம்

*

தூக்கத்தாலேயே இவ்வித துக்கங்கள் ஏற்படுகின்றன என்பதை எந்தத்தேசாபிமானியும் மறக்கவொண்ணாது. அந்நிய நாட்டு வெள்ளைச் சர்க்கரையையே உபயோகிக்கும் உத்தியோகஸ்தர்கள் கொடிய நீரிழிவு வியாதி முதலியனவற்றிற்கு உட்படுவதும் நாட்டுச்சர்க்கரையை உபயோகிக்கும் சமான்ய ஜனங்களுக்கு அவ்வித வியாதி வராமலிருப்பதும் உண்மையன்றோ. மிஸ்டர் கோபாலராயர் அவர்கள் எழுதுவதாவது:—

சரசமானதும் அன்னியர்களுடைய ஆதரவு பெற்றதுமான அன்னிய நாட்டு வெள்ளைச் சர்க்கரையைப்பற்றி சில சமாசாரங்கள் எழுதுகிறேன். அதாவது:—பொதுவாக ஹிந்துக்களுடையவும் மகமதியர்களுடையவும் மதாசாரங்களுக்கு மிகவும் அடாததாகிய மிருகங்களின் இரத்தத்தினாலும், முட்டைக்குள்ளிருக்கும் வெள்ளைக்கருவினாலும், எல்லாவித மிருகங்களிலிருந்து கிடைக்கின்ற எலும்பைக் கரியாக்கி அதன் பொடியினாலுமே இந்தச் சர்க்கரையைச் சுத்திசெய்து வருகிறார்கள். இப்படிச் சுத்தி செய்யப்பட்ட சர்க்கரையானது நமது ஆகாரத்தில் உபயோகப்படுத்துவதினாலே தேக சௌக்கியத்துக்கு இடையூறு உண்டாகக்கூடியதாயிருக்கிறது (என்சைக்லோபேடியா பிரிட்டானிகா 9-வது பதிப்பு, 627-வது பக்கத்தைப்பார்க்கவும்.)

இதற்கு ஆதாரமாக ஐரோப்பிய டாக்டர்கள் அபிப்பிராயப்பட்டு எழுதிய இதனடியிற்கண்ட வசனங்களையும் வாசித்துப் பார்த்தால் தெரியவரும்.

இவ்விதமாய்ச்சுத்தி செய்யப்பட்ட சர்க்கரையானது கொஞ்சம் சுண்ணாம்பு ஜலமும் மாட்டின் இரத்தமும நூற்றுக்கு 5 முதல் 20 வரையில் எலும்புக் கரியின்பொடியும் ஒன்றாய்க் கலக்கிவைக்கப்பட்ட ஒரு பெரிய சதுரமான செம்புத் தொட்டியில் மறுபடியும் போட்டுச் சுத்திசெய்யப்படும். சிலர் இரத்தத்தையும், தூர்மாமிசத்யுமே சர்க்கரையைச் சுத்திசெய்ய உபயோகிக்கிறார்கள்.

தற்காலத்தில் அநேகமாக எலும்புப் பொடியையே சர்க்கரையைச் சுத்திசெய் உபயோகிக்கிறார்கள்.



பிறகு காற்று வீசும் யந்திரத்தில் சர்க்கரையும், நன்றாக அரைக்கப்பட்ட எலும்பின்பொடியும் இரத்தமும் ஒன்றாகச்சேர்க்கப்பட்ட மிசிரத்தைப் போட்டுக் காற்று வீசுவார்கள். (See Dictienary of arts, Manyfactures and Mines 3rd Edition by Dr. Vre, London 1846, pagə 12 5 etc., etc).

இரத்தமானது நார்களும், வெள்ளைக்கருவும், அநேகவிதமான உப்புக்களும் கூடிய ஒரு திரவ வஸ்து. ஆகையால் சர்க்கரையைச் சுத்திசெய்கிற விஷயத்தில் அதின் உபயோகமானது அருவருப்பைக் கொடுக்கக்கூடிய தொன்று மாத்திரமே அல்லாமல் நமது தேகசௌக்கியத்துக்கு விரோதமாகவும் நினைக்கவேண்டியிருக்கிறது.

இரத்தத்தை உபயோகிப்பதனாலடையும் விசேஷ லாபமென்னவென்றால், மலிவு ஒன்றேயாம்.

சுத்தத்தை மாத்திரமே யல்லாமல் தேக ஆரோக்கியத்தையும் ஆலோசிக்காமல் ஒரு நிமிஷமாகிலும் மலிவு என்னும் யோசனையை ஏற்கவே கூடாது.

அன்னிய நாட்டிலிருந்து வந்து சாதாரணமாக விற்கப்படும் இந்தச் சர்க்கரையில் அனேக விதமான அசுத்தங்களிருக்கின்றன. அவையாவன:—

பூதக்கண்ணாடியின் சகாயமில்லாமல் கண்களால் பார்க்கமுடியாத ஜீவராசிகளும், தூர்மாமிசத்தாலுண்டாகக்கூடிய ஜீவராசிகளும், கஞ்சிப்பசையும், நொய்களும், மரநார்களும், திராக்ஷசர்க்கரை இன்னும் அநேகமான வஸ்துக்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகையினால் இப்பேர்ப்பட்ட சர்க்கரையானது சாதாரணமாக ஜனங்கள் சாப்பிடுவதற்குக் கொஞ்சமாகிலும் உபயோகிக்கும்படியான ஸ்திதியில் இல்லையென்று சொல்லும்படியான முடிவிற்குக் கட்டாயமாய் வரவேண்டியிருக்கிறது.

மேலே சொன்ன ஆதாரங்களினால் விதேச சர்க்கரையை நாம் உபயோகம் செய்வதை நிறுத்திவிட்டு, நமது நாட்டில் வழங்கும் மதாசாரக் கொள்கைக்கு ஏற்றதான வகையில் செய்யப்பட்ட ஸ்வதேசி சர்க்கரையை உபயோகப்படுத்த வேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது. இந்தக்காரியம் கைகூடுவதற்கு நான் கற்றுக்கொண்டுவந்த வகைகள் ஏற்றவை. இந்தவகையில் சர்க்கரையைச் சுத்தி

செய்ய இரத்தமும், எலும்பின் வகைகளும், அருவருப்புள்ள வஸ்துக்களும் தேவையில்லை. ஆனால் சுத்திசெய்யத் தேவையான வஸ்துக்களெவையெனில், நமது சுவதேசத்தில் கிடைக்கக்கூடிய மூல பதார்த்தங்களேயாம்.

நீராவியந்திரத்தினா லல்லாமல், மனிதபலத்தைக்கொண்டு திருப்பக்கூடிய யந்திரங்களை வைத்துக்கொண்டு அடியில் காட்டியிருக்கிற சொற்பத் தொகையினாலேயே சிறியதாகிய ஒரு சர்க்கரைச்சாலையை ஏற்படுத்தக்கூடும்.

| | |
|---|---|
| ஹைட்ரோ எக்ஸிடிராக்டர் அல்லது சென்ட்ரிபியூகல் மெஷீன் 3-க்குக் கிரயம் ரூபா. | 1300 |
| கருப்பஞ்சாற்றைக் காய்ச்ச ஆலைக்கொப்பரைகளின் கிரயம் ரூபா. ... ... ... ... ... | 500 |
| ஆக மொத்தம் ரூபா... | 1800 |

## கரும்பாலைகள் ப்ரத்தியேகம்.

மேற்படி யந்திரங்களைக்கொண்டு (822/7 பவுன் அல்லது இராத்தல் இடைகொண்ட) 8000 மணங்கு எடையுள்ள கருப்பஞ் சாற்றை ஒரு கரும்பு காலத்தில் (in one working season) சுலபமாக சர்க்கரை ஆக்கலாம். இந்த ஆலையை வைத்து நடத்துவதற்கு ஒரு வருஷத்துக்கு வேண்டிய செலவும், இதிலிருந்து கிடைக்கக்கூடிய சர்க்கரையின் விலையும், அதின்பேரில் கிடைக்கக்கூடிய லாபமும் இதனடியில் எழுதப்பட்டிருக்கிறது :—

| | |
|---|---|
| சர்க்கரையின் உத்தேச கிரயம் ஏறக்குறைய ரூபா. | 7720 |
| கருப்பஞ்சாற்றின் விலை ரூபா ... ... ... | 4096 |
| சர்க்கரைச்சாலை வேலைக்காரர் சம்பள வகை ரூபா... | 1390 |
| ஆக செலவு ... | 5486 |
| ஒருவருஷத்திய மொத்த லாபம் ரூபா ... ... | 2234 |

முதல் வருஷத்திலிருந்தே யந்திரத்தின் விலை யல்லாமல் கொஞ்சம் லாபமும் கிடைக்கக் கூடியதாக விருக்கிறது அடுத்த வருஷங்களிலிருந்து மிகுதியான லாபம் சம்பாதிக்கக் கூடும்.

முதல் வைத்து நடத்தக் கூடிய கனவான்கள் தங்கள் தாய்நாட்டின் நன்மைக்காகவும், தங்கள் மதாசாரத்துக்காகவும் முன்வந்து இந்த ஸ்வதேசக் கைத்தொழிலை விருத்திக்குக் கொண்டுவருவார்களாக.

பத்திராதிபர்.

# இந்தியாவில் ராஜத்துரோக சரித்திரம்.

(அமிர்தபஜார் பத்திரிகை.)

இந்திய இராஜநிந்தனை (Sedition) என்பது இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாட்சி ஏற்பட்டகால முதல் தான். 1870-ம் வருஷம் வரையில் இங்கே ஸெடிஷன் என்பது ஒன்றுமில்லை. ஏன்? இராஜ்பாதிகாரிகளுக்கு ஜனங்களிடத்தில் போதிய நம்பிக்கை இருந்தது. ராஜ்பாதிகாரிகள் ஜனங்கள் அந்நியரால் ஆளப்படுகிறார்களென்றும் அறியப்படாமல், அவ்வளவு சுகமாக வாழ வேண்டுமென்று விரும்பினார்கள். ஆகையால்தான் கிரியாம்சையிற்கூடத் தங்களுக்குத் நம்பிக்கைக் குறைவு இருப்பதாகக் காண்பிப்பதில்லை. சிப்பாய்க்கலகத்திற்குப் பின்னும்கூட 1860-ல் இந்தியன் பினல் கோடு சட்டமாக்கப்பட்டும், இந்தியாவுக்கென்று ஸெடிஷன் லா ஒன்றுமில்லை. இந்த இராஜ தந்திர நிர்வாகத்தால் அவர்கள் ஏதேனும் கெடுதலை யடைந்தார்களா? இதற்கு மாறாக ஜனங்கள் பிரிட்டிஷ் இராஜங்கத்தில் பூர்ண விசுவாசம் வைத்ததன்றி, தங்கள் செய்கைகளாலும் இராஜாங்கத்திற்கு விரோதச்செய்கைகள் செய்யமாட்டார்களெனக் காட்டிக் கொண்டார்கள்.

முற்காலத்திய ஆங்கில அதிகாரிகள் இராஜாங்கத்தை இராஜநிந்தனைச் சட்டமென்றொன்றின்றி அமைதியுடன் ஆளக்கூடுமானால் இப்பொழுது அச்சட்டத்திற்கு அவசியமென்ன? அக்காலமோ ஜனங்கள் பிரிட்டிஷ் இராஜங்கத்திற்குக் கட்டுப்படாமலும், ஆயுதப்பயிற்சி யுடையவர்களாயும், சண்டையிடுவதில் அனுபோகமுடையவர்களாயுமிருந்த காலம். ஆனால் இந்த துர்க்குணமான விதை 1870-ல் நடப்பட்டது. 1898-ல் லார்டு எல்கினது கவர்ன்மெண்டின் கீழ் கப்பு, கவர், கிளைகளுடன் பரந்த விருக்ஷமாயிற்று, இப்பொழுதோ முதிர்ந்ததாகி விஷம் பொருந்திய கனிகளையுடையதாய், முன் ஆள்வோர்க்கும் ஆளப்படுவோர்க்கு மிருந்த நல்லபிப்பிராயத்தைக் கெடுத்துவருகிறது.

**

இந்தியாவிற்கு ஸெடிஷன் லா என்று ஒன்று வேண்டியதில்லையென்பது 1870-ல் 124A. செக்ஷனை உண்டாக்கியபோது, அப்பொழுது லா மெம்பராயிருந்த கனம் பிட்ஸ் ஜேம்ஸ் ஸ்டீபனால் விசிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் படிப்போர் இ. பி, கோடு 1837-ல் எழுதப்பட்டதெனத் தெரிந்திருக்கும், 124A. செக்ஷன் 1837-ல் எழுதப்பட்ட இ. பி, கோடின் 113-வது செக்ஷன். ஆனால் 1860-ம் வருஷத்து இ. பி, கோடிலிருந்து 113-வது செக்ஷன் தள்ளப்பட்டது. மிஸ்டர் ஸ்டீபன் அது ஞாபகப்பிசகாக விடுபட்டுப் போய்விட்டதென்று சொல்லியபோதிலும், அதற்குத் தகுந்த அத்தாக்ஷியில்லை. ஆனால் அக்காலத்தில் லண்டன் மாநகரத்தில் பிரசுரமாகும் ஸ்பெக்டேட்டர் (Spectator) பத்திரிகை அது வேண்டுமென்றே விடப்பட்டதென்று பின்வருமாறு 1870 ஆகஸ்டில் எழுதிற்று. 'அலகபாத்திலிருந்த ஜெனரல் வானின் பயத்தைப்பற்றி குறிக்கும்பொழுது—மிஸ்டர் ஸ்டீபன் அவசரமாக ஸெடிஷனைப் பற்றி ஒரு லா தயார் செய்கிறார். அது பினல்கோடு தயாரித்தபோது மறந்து போய்விட்டதென்று சொல்வதற்கில்லாமல், ஆதிகாலத்தில் இராஜ்பாதிகாரத்திற்காரம்பித்த ஆங்கிலோ இந்தியர்கள் கலகம் என்பது இந்தியாவில் குழப்பமே (civil war) தவிரவும், ஆயுதபாணிகளாய்க் கிளம்புங் காலத்தில்தான் அடக்கவேண்டும். இந்தப் புதிய குற்றத்தை—அவிசுவாசத்துக்குள்ள எண்ணங்களை யுண்டாக்கப் பிரயத்தனப்படுவது (பிராஞ்சிய கெட்ட வார்த்தைகளாகிய வெறுப்பு, அலக்ஷியம் என்பதுபோல்) ஆவதால் மிஸ்டர் ஸ்டீபன் கொஞ்சம் தப்பான வழியிலிறங்குகிறார்.'

நாம் ஏன் அந்த செக்ஷன் தள்ளப்பட்டதென்று சொல்லமுடியுமென நினைக்கிறோம்? பலவிதமான மத ஜாதி பேதங்களுடைய ஒரு தேசத்தை ஆளுபவர் அந்நியர்களாக விருந்தார்கள். கவர்ன்மெண்டார் தாங்கள் தவறுதல் செய்யாமலிருப்பதற்குப் போதிய ஒத்தாசை வேண்டியிருந்தது. அந்த ஒத்தாசையைக் கட்டுப்படுத்தப்படாத இந்திய பத்திரிகைகள் மூலமாக எதிர்பார்த்தார்கள். இந்திய பத்திரிகைகளை வேவுக்காரருக்கு சமானமாகப் பாவித்து வந்தார்கள் தங்கள் கோரிக்கைகளைக் கெடுத்துவிடப்போகிறதென நினைத்து,



இப்பொழுது செடிஷன் என்று சொல்லப்படுவதைப்போல ஒன்றிரண்டு எழுதப்பட்டாலும் கவனித்தார்களில்லை.

உண்மையில் மிஸ்டர் ஸ்டீபன் மசோதாபினல்கோடின் 113-வது செக்ஷனை சேர்த்தபோது பேசும் சுதந்தரத்தைப் பூட்டிட எண்ணமில்லாமல், அக்காலத்தில் நடந்த ஒரு கலகத்தையடக்க ஏற்படுத்தினார். சிப்பாய்க்கலகம் முடிந்த பிறகு, மகமதிய வகுப்பாருள் வகாபி என்போர் செடிஷன் சம்பந்தமானவற்றைக் கல்கத்தாவுக்கு அருகாமையிலும் பிரசங்கித்தார்கள். டக்கா, பாரிஸால், பரித்பூர், ஜஸ்ஸோர், ராஜஷாபி முதலான இடங்களிலுள்ள மகமதியர்கள் பிரிட்டிஷ் இராஜாங்கத்தை எதிர்க்க ஆரம்பித்தார்கள். பாடலிபுரமென்னும் பாட்னாவும் கலக இடமாயிற்று. இன்னும் ஒரு ராஜப்பிரதிநிதியும், ஒரு கல்கத்தா ஹைகோர்ட்டு ஜட்ஜூம் மகமதிய மதாவேசக்காரர்களாற் கொல்லப்பட்டார்கள். சாமர்த்தியமுள்ள மாஜிஸ்திரேட்டுகளும், ஒற்றர்களும் இந்தக்கலகம் இந்தியாவில் பாதிப்பாகம் ஏற்பட்டிருப்பதாக வெளிப்படுத்தினார்கள். இந்த அபாயத்தை நீக்க ராஜதுரோக சட்டம் ஏற்பட்டதேயொழிய, இந்திய பத்திராதிபர்களைச் சிறையிடுவதற்கல்ல. அதற்காகவே மிஸ்டர் பிட்ஸ்ஜேம்ஸ் ஸ்டீபனும் கெடுதிசெய்ய நினைப்பும், துஷ்கிருத்தியங்களுக்கு ஏவுதலும் இருந்தால்தான் இராஜதுரோகமென்றார்.

ஆனால் இதில் ஒரு வேடிக்கை இருக்கிறது. இந்தச் சட்டமானது இன்னும் ராஜஷாபி முதலான இடங்களில் இருக்கும் விசுவாசமற்ற மகமதியக் கலகக்காரர்களுக்கு ஏற்பட, இந்தியத் தலைவர்களும் பத்திராசிரியர்களும் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டும், விலங்கிடப்பட்டும் சிறையிலே அடைக்கப்படுகிறார்கள். இது காலத்தின்கொடுமை. இந்துக்கள் அவர்களது மேல்தரப்படிப்பால் சட்டநிருபணசபை மெம்பர்களாயிருக்க அந்தஸ்துடையவர்களாயிருப்பதற்காகவே அவர்களை நீக்கி, ஒன்றுமறியாத ஒரு மகமதிய வகாபி வகுப்பாரின் கொடுஞ்செயலால் ராஜத் துரோகசட்டம் உண்டானாலும் இந்துக்கள் ராஜபக்தியற்றவர்களென்றும், மகமதியர் ராஜபக்திக்காரர்களென்றும் சொல்லப்படுகிறது.

மசோதா பினல் கோடு 113-வது செக்ஷன்படி அநுசரிக்குமுன் மிஸ்டர் ஸ்டீபன் அந்த 124 A. செக்ஷனுடன் இதுதான் "ராஜ அவிசுவாசம்" எனச்சேர்த்து, அதன் மூலமாய்ப் பேச்சு உரிமையைக் காப்பாற்றினர்; அதாவது (1) எழுதியவராவது, பேசியவராவது துரோகசிந்தனையின்றி யிருந்தாலும், (2) ஜனங்களைக் கெட்டகாரியம் செய்யும்படி தூண்டாவிட்டாலும் ராஜத்துரோக மல்லவென்ற விவரண மிரண்டு.

கௌன்சிலின் முன்பேசிய பலதடவைகளிலும் மிஸ்டர் ஸ்டீபன் தன் "விவரணத்தை" வற்புறுத்தியதுமன்றித் தலைவர்களும், ஆசிரியரும் தங்கள் பேச்சிலாவது, எழுத்திலாவது ஆங்கில அரசாட்சியை நீக்கவேண்டுமென்ற எண்ணமில்லாவிட்டால் ராஜத்துரோக மல்ல வென்றார்.

1875-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 2-ந்தேதி தன்பில்லை வாசிக்கும்போது சொன்னதாவது:—

"எழுதுபவராவது, பேசுபவராவது நேரிலோ அல்லது பிறர் மூலமோ பலத்தை உபயோகிக்கும்படி (எதிர்க்கும்படி) சொல்லாதவரையில் இந்த செக்ஷனுக்குட்பட மாட்டார்."

இங்கிலாந்திற் கூட பர்ன்சு வகையார் கேசில் ஜட்ஜு கேவ் என்பவர் "ராஜத்துரோகக் குற்றத்தில் பேசியவராவது எழுதியவராவது துஷ்கிருத்தியங்களைச் செய்யும்படி தூண்டினதாகவிருக்கவேண்டு" மென்கிறார். சலிவன் கேசில் ஜட்ஜு பிட்ஸ்ஜிரால்டும் இதேமாதிரிதான் பேசுகிறார். ஜஸ்டிஸ் ஸ்டீபன் இங்கிலாந்து கிரிமினல் லா இரண்டாவது பாகத்தில் பின்வருமாறு சொல்லுகிறார்:—"ஒரேவார்த்தையாக ஒழுங்கீனத்தையும் துஷ்கிருத்தியத்தையும் செய்யத் தூண்டினலொழிய ராஜத்துரோகமல்ல."

இதனல் இங்கிலீஷ்லா பிரகாரமும், இந்திய ராஜத்துரோக விவகாரஸ்தரான மிஸ்டர் ஸ்டீபனது எண்ணப்படியும் ஒருவரை ராஜத்துரோகத்துக்குத் தண்டிக்குமுன், பப்ளிக்கில் ஒழுங்குத்தப்பான செய்கைகளைச் செய்யத் தூண்டியதாக ஏற்படவேண்டும், இதுவரையில் இங்கிலாந்தில் அப்படி செடிஷனுக்குச் சார்ஜு செய்யப்பட்ட



தாகத் தெரியவில்லை. மிஸ்டர் பர்ன்சின் பேச்சினல் கலகமுண்டாயும், ஜூரிகள் குற்றமில்லை யென்று விட்டுவிட்டார்கள்.

1898-ல் லார்டு எல்கின் கவர்ன்மெண்டார் மன நிலை தடுமாறி ஸெடிஷன் லா இப்பொழுது உள்ளதை ஏற்படுத்தினர்கள். பம்பாயில் பிளேக் பரவிற்று. அதை வேரறுக்க உத்தரவு வந்தது. அதற்கு மருந்து ஒருவரினின்றும் ஒருவரைப் பிரித்தலே என்றார்கள் அப்படிச் செய்யும்படி உத்தரவாயிற்று. மனைவியைக் கணவனினின்றும், பிள்ளையைப் பெற்றோரிடத்தினின்றும் பிரித்து வைத்தார்கள். இதை ஜனங்கள் எதிர்க்கவே, மேற்படி லாவை அமுலுக்குக் கொண்டுவர பிரிட்டிஷ் சைநியங்கள் கிளம்பின. இதைச்சகிக்கமுடியாது ராண்டு, ஜர்ஸ்டு என்னு மிரண்டு ஐரோப்பியர் கொலையுண்டார்கள். இதற்குப் பதில் ஏதாவது செய்யவேண்டுமே யென்று நாட்டுச் சகோதரர்களைத் தேசப்பிரஷ்டம் செய்தார்கள். மராத்திய பத்திராசிரியர்கள் சிறையிடப்பட்டார்கள். முடிவாக எதைவேண்டுமென்றாலும் ராஜத்துரோகம் என்று சொல்லும்படி அவ்வளவு சுருக்கமாகச் சட்டம் செய்யப்பட்டது. இரண்டுவழிகளும் அடைக்கப்பட்டு ஒவ்வொருபத்திராதிபனும்மாஜிஸ்திரேட்டின் தயவில்வைக்கப்பட்டான்.

சுதேசமித்திரன்.

# சமாசாரக்கொத்து.

இப்பொழுது இந்தியாவில் பிரயாணஞ் செய்துவரும் ஸம்ஸ்கிருத பண்டிதராகிய மிஸ்டர் மெக்டானல் என்னும் ஐரோப்பியர் பூனாவிற்கு வந்த பொழுது ஸ்ரீ பாலகங்காதரதிலகர், ஸ்ரீ ரெகுநாத புருஷோத்தமன் பிராஞ்சிபே, ஸ்ரீ ராஜவாதே, திராவிட முதலிய குணவான்களுடன் சம்பாஷணை செய்தாராம். எல்லோரும் சிறிது நேரம் வேதாந்த விஷயமான தருக்க சம்பாஷணை செய்தார்களாம்.

* * * *

மத்திய ஆசியாவில் பொக்காரான் என்னும் இடத்தில் பலமான பூமியதிர்ச்சி யுண்டாயிற்றெனவும் அந்த அதிர்ச்சியினால் ஒரு மலையிலிருந்து பெருங்கற்கள் புரண்டுவந்து பொக்காரான் பட்டணத்தில் விழுந்து உருண்டதில் அப்பட்டணத்திலுள்ள 15 ஆயிரம் ஜனங்களும் இறந்துபோனதாகவும் டாஷ்கெண்டு என்னுமிடத்திலிருந்து சமாசாரம் வந்திருப்பதாய்ச் செண்ட் பீட்டர்ஸ்பர்க் நிருபர் ஒருவர் தெரிவிக்கிறார்.

* * * *

சென்னைச் சித்திரக் கலாசாலையில் வருகிற பிப்பிரவரி மாசத்தில் ஒரு நெசவுப்போட்டி நடக்கப்போகிறது. இதற்குச் சென்னைக் கவரன்மெண்டார் ரூ 2500 உதவுகிறார்கள். இது முற்றும் நமது "நாஷனல் பண்டு இண்டஸ்டிரியல் அஸோஸியேஷனி"ன் மேற்பார்வையிலேயே நடக்கப்போகிறது. இந்தியாவிலுள்ள எல்லாத் தறிகளையும் தருவித்துப் போட்டி நடக்கப்போகிறது. ஆகையால் இதற்கு எல்லோரும் உதவி செய்வார்களாக.

• • • •

**தொழிற்சாலை வேலைக் கமீஷன்:**—தொழிற்சாலை வேலைக்கமிஷன் சபையார் பம்பாயில் இரண்டுதினம் விசாரணை நடத்தினார்கள். நாளொன்றுக்கு 12 மணி நேரம் வேலைதான் நியாயமென்று கொள்ளக்கூடிய பல சாக்ஷியங்கள் கிடைத்தன. வேலை செய்பவர்கள் இத்தனை பிராயத்துக்கு மேற்பட்டவர்களாய் இருக்கவேண்டுமென்ற



நிபந்தனை யேற்படுத்த வேண்டுமென்றும் அறியப்பட்டது. பத்துக் கமிஷனர்கள் திடீரென்று சில தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்வையிட்டதில் காரியங்கள் ஒழுங்காகவே நடந்து வந்தனவாம்.

• • • •

மைசூரில் கூடிய சீக்கிரம் ஒரு தீக்குச்சித் தொழிற்சாலை ஸ்தாபிக்கப்படுமென்று தோன்றுகின்றது. தீக்குச்சித் தொழில் கற்றுக்கொண்டு வந்திருக்கும் பூனா நகர்வாசியாகிய ஸ்ரீ விநாயக கணேச ஜோதி யென்பவர் இத்தொழிற்சாலை தொடங்கப்போகின்றார். இவருக்கு மைசூர் கவரன்மெண்டார் முதலில் இனாமாக விரகும், ஒரு தீக்குச்சிமரமும், வேலை செய்வதற்கு இடமும் தந்திருக்கிறார்கள். இந்தத்தொழிற்சாலை தொடங்குவதற்குக் குறைந்தபக்ஷம் 40 ஆயிர ரூபா முதல் வேண்டுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

* * * *

**மிஸ்டர் கயர் ஹோர்டி:**—இம்மாதம் 14உ இந்தியாவின் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு தூத்துக்குடி வந்துசேர்ந்து இந்தியா க்ஷேமவிஷயமான சில உறுதிமொழிகள் கூறிப் பின் கொழும்பு மார்க்கமாய் ஆஸ்திரேலியாவுக்குக் கப்பலேறிச் சென்றனர். இவர் தம் பூரண அநுதாபத்தை நம்மிடம் வைத்ததற்காக நாம் இவருக்குப் பன்முறை கடமைப்பட்டவர்களாவோம். இங்கிலாந்து சென்றதும் நம்தேச சீர்திருத்த விஷயமாய்ப் பல முயற்சிகள் செய்து நம் நாட்டுக்கு நன்மை விளைவிப்பார்களென்று நம்புகிறோம்.

* * * *

லாகூரில் மகாபண்டிதை யெனவும் தருமவதி யெனவும் கீர்த்தி பெற்றவரும் சீக்கிய ஜாதியைச் சேர்ந்தவருமாகிய ஸர் தாராணிஉடம் ராஸ்ஸிங் என்னும் ஒரு மாது சில தினங்களுக்குமுன் காலஞ்சென்றார். சென்ற 1905-ம் ஆண்டில் லாகூர்ப் பக்கத்தில் உண்டாயிருந்த கொடிய பஞ்ச காலங்களில் இம்மாது சிரோமணி தம்முடைய வரும்படிகளையெல்லாம் ஏழைகளுக்குக்கொடுத்ததுமன்றி அவ்வேழைகள் உண்ட கேவலமான கூழையே தாமும் சாப்பிட்டுக்கொண்டிருந்தனராம். பிழைப்புக்கு வழியின்றி ஏழையென்று சொல்லித் தம்மிடம் வந்தவர்களுக்கு இவர் கொடுத்திருக்கும் பொருள் ஆயிரக்கணக்காக மதிப்பிடப்படுகின்றது.

தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருந்த நம் லாலாலஜிபதிராயும், சர்தார் அஜித்சிங்கும் விடுதலைசெய்யப்பட்டுத்தம் சுவதேசத்துக்குக் கொணர்ந்துவிடப்பட்டனர். கவரன்மெண்டாருக்கு இப்பொழுதாவது காருண்யம் உண்டாயிற்றே என்பதைப்பற்றிச் சந்தோஷிக்கிறோம். ஜனங்கள் கூக்குரல்போட்ட காலத்திலேயே இதனைச் செய்திருப்பார்களானால் நாடெல்லாம் புகழும் நம்பிக்கையு முண்டாகி ஜனங்கள் அதிக விசுவாசம் பாராட்டுவார்கள். சர்வஜன சம்மதமான காரியங்களைக் கவரன்மெண்டார் அப்போதைக்கப்போது கவனித்து ஜன திருப்திக்கேற்பச் செய்து வருவார்களானால் பிரிட்டிஷ் இராஜாங்கம் நீடூழிகாலம் நிலை பெற்றிருக்க யாதொரு தடையும் இராது. ஜனங்கள் பலமே பெரும்பலமாக நினைக்கவேண்டுமே யொழிய போலீஸ்காரருடைய பலத்தையும் பட்டாளத்தாருடைய பலத்தையும் மட்டிலும் நம்பினால் மோசமே. ஜனப்பிரதிநிதிகள் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் ஜனங்களின் மனோதருமத்தை அறிந்து பாரபக்ஷமின்றி அவர்களுக்குத் திருப்திகரமாக நடப்பதே நல்ல அரசாட்சியின் இலக்ஷணமாகும்.

சுதேசீயம்:—பின் வருகிறபடி ஒவ்வொரு ஜில்லாவும் நடக்கமுயலவேண்டுமென்று ஒருவர் எழுதுகிறார்;—

(1) சுதேசியப்பற்று, நஷ்டப்பட்டும் இந்திய வஸ்துக்களை வாங்குதல், இந்தியத் தொழில்கள் முதலிய கைதூக்குதல்.

(2) பிரசங்கம், துண்டு விளம்பரம் முதலானவைகள் மூலமாய் ஜனங்களுக்கு அறிவை யூட்டுதல்.

(3) ஒருவருக்கொருவர் உண்டாகும் சண்டைகளை மத்தியஸ்தர்கள் மூலமாகத் தீர்த்துக்கொள்ளுதல்.

(4) கூடியவரைப் பொதுப்படிப்பு, தொழிற் படிப்பு இவைகளைச் சொல்லிவைத்தல்.

(5) சுகாதாரம்.

(6) செட்டுமுறைக்குற்றது.

(7) கூடியவரை ஆசார சீர்திருத்தம்.

(8) இந்து மகம்மதியர்களுக்குள் நேசப்பான்மை அதிகரித்தல்.

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

குறுக்குத்துறை யென்னும்

# திரு உருமாமலைச் சிலேடைவெண்பா.

## காப்பு.

தூயவுரு மாமலையிற் றோன்றுஞ் சுடர்வடிவேற்
சேயருள்பெற் றுய்யச் சிலேடைவெண்பா—வாயமலர்த்
தாரொன்று தந்திறைஞ்சச் சத்திசிவந் தாமுதவுங்
காரொன்று தந்திமுகன் காப்பு.

நன்றுமுத்தி சேர்துறைக்கு நாடுங்கா னம்விரைவிற்
றுன்று குறுக்குத் துறையெனவே—யென்றுந்
திகழும் பதிக்காஞ் சிலேடைவெண்பாக் காப்பு
புகழும்பன் மாமுகன்றாட் பூ.

## நூல்.

பூவிளையுங் காவின் புறமும்பொற் காளையரும்
வாவியை வாயுமுரு மாமலையே—தேவியொரு
பாதியா கத்தன் பணியவோம் பண்டருளு
மாதியா கத்தன் மனை. (க)

குறிப்புரை:—மலர்கள் பொருந்தும் சோலையின் பக்கம் தடாகத்தைப் பொருந்தும். அழகியஆடவர்விவாகசம்பந்தத்தை ஆராயும்(வாவு—விவாகம்)

ஆதரங்கூ ரும்பொருநை யாற்றினிலு மன்பரினு
மாதரங்கள் கூடுமுரு மாமலையே—பூதரமா
மங்கைக் குடையா ரருள வருகுறமான்
மங்கைக் குடையார் மனை. (உ)

ஆசைமிகும் தாம்பிரபருணி நதியில் பெரிய அலைகள் சேரும். அன்பர்களிடத்தில் பெண்களந்தந்த இடந்தோறும் ஊடலைச்செய்யும்.

கானத்தின் சொல்லார் கருங்குழலுங் கற்றோரு
மானத்தந் தள்ளுமுரு மாமலையே—வானத்
திருப்பரங்குன் றாமரு வெஞ்சுதையை யென்றுந்
திருப்பரங்குன் றாமருஞ் சேர்வு (ங)

இசைபோலும் இனிய சொல்லையுடைய மாதர் கரிய கூந்தல் பெரிய இருளைப்போக்கும். படித்தவர் பெருமைதங்கிய நூல்களை வாரிக்கொள்ளும்.

எந்த விடரிடத்தும் யாருமடி யாரிடத்தும்
வந்தனஞ் செய்யுமுரு மாமலையே—சந்தனமாஞ்
சாரலைவாய்த் தங்கினார் தாமாஞ்சூ ரர்த்தடிந்து
சீரலைவாய்த் தங்கினார் சேர்வு. (௪)

எந்தக்காமுகரிடத்திலும் மன்மதன் ஐந்து புட்பபாணத்தையேவும். (வந்தன் - மன்மதன்.) தொண்டர்களிடத்தில் எல்லாரும்நமஸ்காரஞ்செய்யும்.

ஓங்குசெல்வர் மந்துரையு மொள்வளையூ ரோடைகளும்
வாங்குதிரை யாக்குமுரு மாமலையே—தாங்கு
கழனித் தலத்தார்க் கடம்பணிவார்க் கீயும்
பழனித் தலத்தார் பதி. (௫)

உயர்ந்தசெல்வரது குதிரைக்கூடத்தில் தாவுகின்ற குதிரை கட்டப்படும். ஒளிதங்கிய சங்கங்களூர்ந்து செல்லுந் தடாகங்கள் வளைவாகிய அலைகளை உண்டாக்கும்.

காதலர்வேட் டற்குமவர் காசினியி லோங்குகைக்கு
மாதருமஞ் சாருமுரு மாமலையே—போத
மருவேர கத்தினார் மன்னுவார் வாழ்த்துந்
திருவேர கத்தினார் சேர்வு. (௬)

நாயகர் விவாகஞ்செய்வதற்குப் பெண்களு மழகு நிறையப் பெற்றிருக்கும். (அழகு உத்தமநாயகிக்குள்ள ஆறுகுணங்களுளொன்று.) அந்த நாயகர் உலகத்திலுயர்வடையும் பொருட்டு அவரிடத்துப் பெரிய தருமஞ் சேரும்.

நன்றந்த நாடகமின் னாரால னார்நடுவான்
மன்றந் திளைக்குமுரு மாமலையே—குன்றந்
தொறுநாட கத்தரார் தோத்திரஞ்செய் தாலு
மிறுநா டகத்தரா ரில். (௭)

நன்மையுடைய அழகிய நடனப்பெண்களால் நடனசபையனுபவிக்கப்படும். அப்பெண்கள் இடையால் மிகுதியும் நூல் இளைத்துவிடும்.



பண்டோர் மறையொலியைப் பாவலர்க்குப் பன்மயலை
மீண்டேக மாற்றுமுரு மாமலையே—கண்டு
பழமுதிர் சோலையத்தர்ப் பாற்றினார் மைந்தர்
பழமுதிர் சோலையத்தர் பற்று. (௮)

தொன்றுதொட்டுள்ள வேதவோசையைத் தவளைகள்வயலிற்செய்யும். வித்துவான்களுக்குப் பலவித மயக்கத்தை(அவாது)நெருங்கியஅறிவு மாற்றும்.

ஓதலிற்றேர் வாதிகள்கூ டுங்கான் மருந்துணுங்கால்
வாதங் கலங்குமுரு மாமலையே—சீதமிகு
மங்கதிர்கா மஞ்சார்வா ரந்தடஞ்சூ ழப்பொலியு
மங்கதிர்கா மஞ்சார்வா ரார்வு. (௯)

படித்தலாற்றெளிந்த வாதஞ்செய்பவர் கூடும்போது விவாதம் அவ்விடத்துப் பிரகாசிக்கும். (வியாதியாளர்) மருந்துண்ணுமிடத்து வாதநோய் உருவழியும். எனவே இனம்பற்றிப் பித்தசிலேட்டும நோயுமங்ஙனமாமென்பது போதரும்.

வேகமுறு நீர்த்திரையு மேல்வளரு மென்காவு
மாகம் பொதுக்குமுரு மாமலையே—பாக
மொருத்திக் களித்தார்க் குபதேசித் துள்ளந்
திருத்திக் களித்தார்தஞ் சேர்வு. (௧௰)

விரைவுபொருந்திய தண்ணீரின் அலைகள் பெரியசங்கங்களை(க்கரையிலே) ஒதுங்கச்செய்யும். மேலோங்கிவளரு மெல்லிய சோலைகள் ஆகாயத்தை யூடுருவிச்செல்லும்.

ஈடகலில் வாழ்வா ரிருத்தற்கு மேற்போர்க்கு
மாடங் களிக்குமுரு மாமலையே—வேடமினார்
தாமுருக வேடனுருத் தாங்கிமணந் தான்செய்த
மாமுருக வேடன் மலை. (௧௧)

ஒப்புநீங்கிய இல்லறத்தா ரிருத்தலின்பொருட்டு வீடுகளைச்சந்தோஷிக்கும். யாசகர்க்குச் செல்வத்தை அவ்விடத்து அருளும்.

அஞ்சநடை யாரெவரு மாலவா லம்பலவு
மஞ்சளக மண்ணுமுரு மாமலையே—நெஞ்சதனுண்
மாறிரண்டு கண்ணார் மனத்துவரார் மன்னுமரு
ளாறிரண்டு கண்ணா ரகம். (௧௨)

அன்னப்பறவைபோலும் நடையுடைய பெண்களெல்லோரும் மேகம் போலுங் கூந்தலையழகு பெறமுடிக்கும். பாத்திகள்பலவும் மஞ்சளைத் (தம்) இடத்துப்பொருந்தியிருக்கும்.

சீரணங் கொக்குமின்னார் செம்முலையு மும்மதமும்
வாரணங் கொட்டுமுரு மாமலையே—யாரணங்க
ணிடுபுக லப்பார்ப்பார் நெஞ்சினில் வேலுடனே
கூடுபுக லப்பார் குடி. (௧௩)

சிறப்புற்ற தெய்வப்பெண்கள் போலும் பெண்களுடைய சிவந்த கொங்கைகள் கச்சினழகைப் பொருந்தும். மூன்று மதங்களையும் யானைகள் சிந்தும்.

காலூர் மதன்விடரிற் கண்மலர்ப்பூங் காவனத்தின்
மாலூரம் பூக்குமுரு மாமலையே—வேலூர்
தருந்துதிக்கை யன்பினோர்த் தாங்கு மதநீர்
தருந்துதிக்கை யன்பினோர் சார்பு. (௧௪)

தென்றற்றேர் செலுத்துமன்மதன் காமுக ரிடத்திலே மயக்கத்தைச் செய்யும் (புட்ப) பாணங்களைச்செலுத்தும். தேனொழுகாநின்ற பூஞ்சோலைகளிலே வில்வமரங்கள் மலரும்.

கானந் துறுமளிசூழ் காவுங் கழனிகளும்
வானந் தடுக்குமுரு மாமலையே—யானந்த
வெள்ளத் துறைகுவார் மேவச்செய் வேலவரென்
னுள்ளத் துறைகுவா ரூர். (௧௫)

இசை நெருங்கிய வண்டுகள் சுற்றுஞ்சோலைகள் மேகத்தை(ப்புறம்போகவொட்டாது) தடைசெய்யும். வயல்கள் வெள்ளிய சங்கங்களைப்பொருந்தியிருக்கும்.

மீதங் கரசமகார் வீதிதொறும் வீடுதொறு
மாதங்க மேவுமுரு மாமலையே—போதமிலேற்
காயிரவெள் ளத்தான் கடைக்கணிப்பான் பூதமிரண்
டாயிரவெள் ளத்தா னகம். (௧௬)

மேன்மை பொருந்திய இராசபுத்திரர் தெருக்கடோறும் யானையை நடாத்தும். இருகங்கடோறும் பெருமை தங்கியசுவணம்பொருந்தும்.



ஆசைக் கடுக்குமின்னா ரங்கமுநா லாய்ந்தவரு
மாசைக் கடுக்குமுரு மாமலையே—பூசைமடந்
தங்குமாற் றுள்ளார் தமதுருவந் தங்கநிறம்
பொங்குமாற் றுள்ளார் புரி. (௧௭)

அன்புக்கு ஒத்திருக்கும் பெண்கள்சரீரம்பொன்னை நிகர்க்கும். சாஸ்திர ஆராய்ச்சியுடையார் குற்றத்தைக் கோபிக்கும்.

காவிக்குண் முண்டகமுங் காவுக்குள் வாளைகளும்
வாவிக் குதிக்குமுரு மாமலையே—சேவிக்குந்
தொண்டரளக் கத்திகையார் தோளிரா றிற்சூட்டுந்
தண்டரளக் கத்திகையார் சார்பு. (௧௮)

நீலோற்பல மலர்நடுவிலே தாமரைமலர்கள் தடாகத்தினிடத்துத்தோன்றும். சோலைகளினிடத்து வாளை மீன்கள் பாய்ந்து குதிகொள்ளும். வாவிக்கு. உருபுமயக்கம்.

தண்டா வயற்கயலைத் தாருவன்னார் தங்கரத்தை
வண்டான மேயுமுரு மாமலையே—தொண்டாரு
மன்ப ருளத்துதிப்பா ரக்குறவ ரங்கனையை
யின்ப ருளத்துதிப்பா ரில். (௧௯)

நீங்காத வயலிலுள்ள கயல்மீன்களை நாரைப்பறவை யுண்ணும். கற்பக விருக்ஷம்போன்றவர் கையை வளந்தங்கிய கொடை மேவும்.

வெய்யகர நீட்டுமலை மேற்கரியும் வித்தகரு
மையலைத் தீர்க்குமுரு மாமலையே—யுய்ய
மையில்வாக னத்தண் மலரோன்மால் போற்று
மையில்வா கனத்தன் மனை. (௨௦)

வெப்பத்தையுடைய துதிக்கையை மலைமேனின்று நீட்டுகின்ற யானைகள் மேகத்தை யலைத்து இழுக்கும். அறிவிலுயர்ந்தவர் மயக்கத்தைத்தப்போக்கும்.

ஒண்மையமை வள்ளியோ ரும்மடவா ருண்கண்ணும்
வண்மைய வாவுமுரு மாமலையே—பெண்மையொரு
பங்குடையச் செய்தார்ப் பரமகுரு வாயென்றே
மிங்குடையச் செய்தா ரிடம். (௨௧)

புகழமைந்த வள்ளற்றன்மை யுடையார் கொடுத்தலை விரும்பும். பெண்கள் மையுண்டகண்கள் வாள் கெடும்படி (அதன்மேலே) தாவும்.

சோராமின் னார்முலையுந் துன்பத்தை ஞானிகளும்
வாரா தரிக்குமுரு மாமலையே—பேராது
பண்டைக்கா லம்புயத்தார் பைங்கடம்பா கக்கொண்டார்
தண்டைக்கா லம்புயத்தார் சார்பு. (௨௨)

பெண்கள் சாயாத கொங்கைகள் கச்சை விரும்பும். ஞானிகள் துக்கத்தை வரவொட்டாமற் கெடுக்கும்.

தண்டருதே னைக்காவுந் தம்மோடு தக்கவரும்
வண்டருக் கூட்டுமுரு மாமலையே—பண்டமர
ரஞ்சமர ணங்கழித்தா ரன்புறசே யவ்வானோ
ரெஞ்சமர ணங்கழித்தா ரில். (௨௩)

சோலைகள் குளிர்ச்சியைத்தருகின்றபூந்தேனை வண்டுகளுக்கு ஊட்டும் கொடுக்கின்ற மேலோர் வளந்தங்கிய கற்பகத்தைத்தம்முடனே சேர்த்துக்கொள்ளும்.

ஆய பயன்வழிப்போ வார்க்குமின்னா ராடவர்க்கும்
வாயசந்தேற் றுமுரு மாமலையே—சேயைத்
தருவையத்தை யாக்கொண்டார் தண்மலரோன் றயாந்
திருவையத்தை யாக்கொண்டார் சேர்வு. (௨௪)

வழிச்செல்வார்க்கு உண்டாயபிரயோசனத்தைக்காகங்கள் (சகுனத்தால்) தெளிவிக்கும். பெண்கள் (பிரிந்த) ஆடவர்களுக்குப் பொருந்திய தூது மேலு மேலும் விடுக்கும்.

சாரூர் மலர்க்காவுந் தந்நிழலைத் தந்திகளு
மாறா மதிக்குமுரு மாமலையே—யாறூறுந்
தத்துவத்து வாயினர் தங்கச்சார் வார்வடிவேற்
சித்துவத்து வாயினர் சேர்வு. (௨௫)

தேனிறைந்த பூக்களையுடைய சோலைகளிடத்து மேகங்கள் (வந்து) தாமதித்திருக்கும். யானைகள் தமது நிழலைத் தம் பகையாக மதிக்கும்.

சொற்கடங்கா யானைதெருத் தோறும்பூஞ் சோலைதொறு
மற்கடங்க டாவுமுரு மாமலையே—பற்க
ளொருங்கற் றவருணர்வா னோருடன்போற் றோர்சேய்
வருங்கற் றவருணர்வான் வாழ்வு. (௨௬)



(பாகன்) சொல்லுக்கடங்காத யானைகள் வீதிதோறும் வளர்தங்கியமதங்களைச் செலுத்தும். பூக்கள் நிறைந்த சோலைதோறும் குரங்குகள் தாவித் திரியும்.

வில்லியையு நன்னுதலார் மென்முலையு மெல்லிடையும்
வல்லியை வேயுமுரு மாமலையே—நல்லியல்சே
ரஞ்சத்தி யங்கையனார்க் கன்றுசிறை மீட்டருளு
மஞ்சத்தி யுங்கையனா ரார்வு. (௨௭)

வில்லை நிகர்க்கும் நல்லநெற்றியையுடையார் மெல்லிய கொங்கைகள் சூதாடுகருவியின் சமானத்தைப் பொருந்தும். (அப்பெண்களின்) இலேசான இடை வல்லிக்கொடியை யலங்கரிக்கும்.

கையம் புயமின்னார் கண்ணுமன்னர் கற்புயமும்
வையம் பரிக்குமுரு மாமலையே—வெய்யபன்றிக்
கோடலங்கா ரத்தரிப்பார் கொண்டாடுங் கோமகரென்
பாடலங்கா ரத்தரிப்பார் பற்று. (௨௮)

தாமரை மலர்போலுங் கைகளையுடைய பெண்கள் நேத்திரம் கூரிய பாணங்களைக் கெடுக்கும். அரசர் மலைபோன்ற புயங்கள் உலகத்தைத்தாங்கும்.

காதலிற்கற் றோகையினைக் காதலருங் காரகழு
மாதுருக்கங் காக்குமுரு மாமலையே—தீதறுக்கு
மாறக் கரத்தா ரகப்பொருளார் சூரரைவென்
றூறக் கரத்தா ரகம். (௨௯)

மைந்தர்கள் ஆசையுடன் படித்து மகிழ்ச்சியைத் தாய்க்கு அங்கு உண்டாக்கும். கரிய அகழ்க்கிடங்கு பெரிய கோட்டைகளைக்காவல்செய்யும்.

கன்னலொடு வானோங்கு காவுங் கமழினரு
மன்னலைய டுக்குமுரு மாமலையே—முன்னமே
தந்தைதா யாண்டாண் டதுபோற் றமிழ்மதுரை
வந்தைதா யாண்டான் மனை. (௩0)

கரும்புகளுடன் ஆகாயத்தில் வளருஞ்சோலைகள் உத்திரட்டாதி நக்ஷத்திரத்தைச் சமீபிக்கும். மணக்கின்ற பூங்கொத்துகள் நிலைபெற்ற அரும்புகளை வரிசைப்படுத்தும்.

ஓதுமவா வற்றோ ருளமுமதற் றோருளமு
மாதுறவி யக்குமுரு மாமலையே—காதுகின்ற
சூர்த்தடுத்துத் தந்தாராய்ச் சூழ்சுரர்க்குத் தொல்பதிகண்
பார்த்தடுத்துத் தந்தார் பதி. (௩௧)

சொல்லும் ஆசையற்ற ஞானிகள் (தங்கள்) இருதயத்தைப் பெருமைதங்கிய துறவிலே செலுத்தும். அவ்வாசைபொருந்திய ஏனையவர் இருதயம் பெண்கள் (வந்து) பொருந்த மகிழ்ச்சியடையும்.

ஒவ்வாமின் னார்கண்ணு மூசல்போ லொண்பொழிலும்
வெளவாலங் காட்டுமுரு மாமலையே—நவ்வாதி
யஞ்செழுத்தோ டாங்குவா னார்துதிக்கு மாறிரண்டு
மஞ்செழுத்தோ டாங்குவான் வாழ்வு. (௩௨)

சமானமில்லாத பெண்களுடைய கண்கள் வசப்படுத்துகின்ற விடத்தைக் காண்பிக்கும். ஒளிபொருந்திய சோலைகள் ஊசலைப்போல வெளவாற்பறவைகளை யவ்விடத்து அசைக்கும்.

ஈகையுளா ரீயுங்கா லீவார் புகழ்சொலுங்கான்
மாகதரு மெய்க்குமுரு மாமலையே—யேகனை
யாறுதலை யுற்றோர்க் கருளா னசுரர்பொருட்
டாறுதலை யுற்றா ரகம். (௩௩)

கொடையாளிகள் கொடுக்கும்போது ஆகாயத்திலுள்ள (பஞ்ச) தருக்களும் (அவரைப்) புகழும். அக்கொடையாளிகளுடைய புகழை யெடுத்துச் சொல்லும்போது புகழ்ந்து பாடுகின்ற வல்லவரும் (சொல்லமுடியாமல்) இளைக்கும்.

சங்க மொடுவரம்பிற் றக்கோர் தமதிலிற்கூர்
மங்கலந் தேறுமுரு மாமலையே—கொங்கைக்
குடத்துவசத் தார்வள்ளி கூடுபுயங் கொள்குக்
குடத்து வசத்தார் குடி. (௩௪)

(வயல்) வரப்புகளிற் சங்கங்களுடனே ஆமைகள் ஒன்றுசேர்ந்து ஏறித்திரியும். தக்கவர் தங்களுடைய கிருகத்திலே மிக்க சுபகாரியங்களை ஆராயும்.

குமரன் துணை.

# விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 6. } 1907வரு டிசம்பர்மீ { பகுதி 12.

## காங்கிரெஸ் மகாசபை.

சென்ற 22-வருஷங்களாகக் கட்சிப் பிரதிகட்சிகளின்றிக் கூடிவந்த மகாசபை இவ்வருஷம் நடவாமல் நின்றுபோன விஷயம் சுதேசாபிமானிகள் எவரும் அறிவர். எவ்வளவோ லட்சக்கணக்கான பணம் செலவழிக்கப்பட்டு வருஷக்கணக்காய் நடந்துவந்த இக்காங்கிரெஸ் இவ்வருஷம் பிளவுபட்டதற்குக் காரணம் பலர் பலவாறு கூறுவர். பழைய கட்சியாரிடம் சென்று இதற்குக் காரணம் கேட்பின், அவர்கள், புதுக்கட்சியார் அறிவுகெட்டு மெய்மறந்து மதியிழந்து பிடிவாதமும் வைராக்கியமும் மேலிட்டோராய் நடந்துகொண்டதாலேயே காங்கிரெஸ் நாசமுற்றதென்பர். புதிய கட்சிக்காரர்களைக் கேட்டாலோ, அவர்கள், பழைய கட்சிக்காரர்கள் பணக்கொழுப்பினாலும் அடிமைக்குணத்தினாலும் தாய் நாட்டு விரோதிகளுடன் அந்தரங்கம் வைத்துக்கொண்டு அவர்களுடைய துர்ப்போதனையைக்கேட்டுத் தமது ஆலோசனையைக் கலவாமல் அலட்சியம் செய்தும் தம்மீது கவர்ன்மெண்டாரிடம் கோட்சொல்லியும் "கெடுவான் கேடுநினைப்பான்" என்ற பழமொழிக்கேற்பத் தாமே தம்தலையில் மண்ணைவாரிப்போட்டுக்கொண்டு காங்கிரஸையும் கொலைசெய்

துவிட்டனர் எனக் கூறுகின்றார்கள். ஆயினும் "காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்ணது" ஆதலின், இதுகாறும் நமக்கெட்டியுள்ள விஷயங்களைக்கொண்டு உண்மையை நடுநிலைமையில் நின்று நன்காராய்வாம்:

காங்கிரெஸ் கூடுவதற்குச் சிலதினங்களுக்கு முன்னே இந்திய ராஜாங்கக் காரியதரிசியாகிய மிஸ்டர் மார்லி "நாம் இந்திய இராஜாங்கவிவகாரங்களில் பழையகட்சியாரை நமதுசார்பில் இழுத்துக்கொள்ளாமல் இருக்கக்கூடாது" என்று குறிப்பிட்டதைப் பத்திரிகை வாயிலாகப் படித்தறிந்த பழைய கட்சிக்காரர்களுக்கு உச்சிகுளிர்ந்துவிட்டது. அவர்கள் மிஸ்டர் மார்லியின் வார்த்தை "இடுக்கண் மேன்மேல் அடுக்கும் பொருட்டுச் சிமிட்டிச் சிமிட்டிச் சிற்றொளி காட்டி இட்டுச்செல்லும் துட்டத்திப்பேய்" எனக்கொள்ளாது அப்பேச்சிலேயே சிக்கி, ஜனப்பிரதிநிதிகள் அடங்கிய காங்கிரஸ் சபை கூடும் கடைசி நிமிஷம் வரை காங்கிரெஸில் நிறைவேற்றப்படவேண்டிய விஷயங்களை புதுக்கட்சியார்க்குத் தெரியாமலே மறைத்துவிட்டுப் பிற்பாடு அவற்றைத் தமக்குத் தோன்றியவாறு "பாஸ்" பண்ணிவிடலாம் என்ற முழு நம்பிக்கையுடனும் இருந்தார்கள். ஆயினும் "கழிமுடைப் புன்புலால் நாற்றம் புறம்பொதிந்து மூடினும் சேயார் முகத்துச் சென்றுதைப்பதுபோல் தெய்வம் பறையறைந்தாங்குப் பழைய பழைய கட்சியாரின் தீயநோக்கங்கள் ஓடிப்பரக்கலாயின. ஆதலின் புதுக் கட்சியார்கள் அடாத முறைகேடான இச்செய்கைக்கு இடங்கொடுக்கவில்லை. புதுக்கட்சியார்கள் பழைய கட்சியார்களை நல்வழிப்படுத்தப் பலவிதத்திலும் முயன்றும் பயன்படாமற்போயிற்று. பிடிவாதம் சாதித்த பழையகட்சியார்கள், காங்கிரெஸ் சபையில் புதுக்கட்சியார்கள் கலகஞ்செய்வார்கள் என்றஞ்சி மீன்பிடிக்கும் வலையர்களையும் வேறு சில தெருப்போக்கிரிகளையும் குண்டர்களையும் தடிகள் கொடுத்து காங்கிரஸ் பந்தலுக்குள் மூலைக்கு மூலை உட்கார்த்தி வைத்திருந்தார்கள். அன்றியும் புதுக்கட்சியைச் சேர்ந்தோரும் திலகரிடம் முற்றிலும் விரோதம் கொண்டோருமாகிய சிலரால் ஜனங்களுக்குள்ளே ஆவேசத்தைக் கிளப்பும் பொருட்டுப் பின்வரும் கருத்தைக்கொண்ட துண்டுப் பத்திரிகை குஜ



ராத்தி பாஷையில் பிரசுரிக்கப்பட்டு வந்திருந்த டெலிகேட்டுகளுக்கும் மற்றுமுள்ளோர்களுக்கும் கொடுபட்டது. அதிற் கண்ட விஷயமாவது:—

"கிளம்புங்கள்! கிளம்புங்கள்! சூரத்தார்களே! காலம் வந்துவிட்டது. நீங்கள் செய்து தீரவேண்டிய தொன்றைக் கவனியுங்கள். உங்களையெல்லாம் இழிவுக்குட்படுத்தக்கூடிய சில முயற்சிகளிலிருந்து விடுவித்துக்கொள்ளுங்கள். "திலகர் கேஸரிப் பத்திரிகையிலே குஜராத்திகள் மீது சுமத்தியிருக்கும் அவதூறுகளையெல்லாம் நம்முடைய "குஜராத்தி" பத்திரிகையிலே வெளிப்படையாய் எடுத்து எழுதியிருக்கிறது. ஆனால் ராவாஜி என்ற இடத்திலே செய்த பிரசங்கத்திலே, திலகர், தான் அவ்வாறு ஒன்றுமே செய்யவில்லையென்று சொல்லிவிட்டு, ஸூரத் ஜனங்களை ஒத்துழைக்கவேண்டுமென்று வணக்கத்துடன் கேட்டுக்கொண்டார். இந்தப்பகட்டுக்கெல்லாம் ஏமாறிப்போய்விடாதேயுங்கள்! அதே பிரசங்கத்திலே காங்கிரஸை உடைப்பதற்காகத் தாமும் தமது கக்ஷியாரும் அங்கேவரவில்லை என்று சொல்லிவிட்டு, நேற்றுக்காங்கிரஸிலே அந்தக்கக்ஷியார் போட்ட கூப்பாட்டையும் படித்தனப்பாட்டையும் பார்த்தீர்களா? இனிமேல் நடக்கப்போகிற காங்கிரஸிலேயாவது, ஓ சூரத்தார்களே! உங்களுடைய வல்லமையைக் காட்டவேண்டும். அந்தக்கக்ஷியார் சச்சரவுசெய்யவொட்டாமல் தடுத்துவிடவேண்டும். ஸூரத்தார் ஸாதுக்களென்று திலகர் தமது பத்திரிகையில் கூறியதன் உண்மையான பொருள் தெரியுமா? நாம் ஆண்மையற்றவர்கள் என்று குறிப்பிடுவதாகும். ஆகையால் உங்களுடைய வல்லமை எங்கேபோய்விட்டது. சிவாஜி ஸூரத்தின்மேல் இருமுறை படையெடுத்து வந்து கொள்ளையடித்து விட்டுப்போனான். போகும்போது இன்னுமொருமுறை கொள்ளையடிக்கத் திரும்புவேன் என்று சொல்லிப்போனதை யறிவீர்களல்லவா? ஆனால் அப்படி அவன்வரவில்லை. அதற்குப் பதிலாக இப்போது திலகன் வந்திருக்கிறான். உங்களுடைய மூக்கையும் காதையும்சீவியெறிய வந்துவிட்டான்! இனிமேலாவது கிளம்புங்கள்!

இவ்வளவு ஏற்பாடுகளுடனும் 26-உ யன்று மகாசபை கூடிற்று.

சூரத்துஉபசரணைக் கமிட்டியார்கள் பிரதிநிதிகளுக்கு நல்வரவு கூறிவரவேற்புப்பத்திரத்தைவாசித்ததும் டாக்டர்ராஸ்விகாரிகோஷ் காங்கிரஸ்சபை அக்கிராசனராகபிரேரேபிக்கப்பட்டார். இப்பிரேரேபணையை ஸ்ரீ பாபு சுரேந்திரநாதபானர்ஜி ஆமோதித்துப்பேச ஆரம்பிக்கவே புதிய கட்சியைச்சேர்ந்த வாலிபர் சிலர் "உட்காரும், உட்காரும்" என்று இரைச்சலிட்டு, "நீர் மிதுனபுரி கான்பரென்ஸில் போலீசு சேவகரைக்கொண்டுவந்த மகான் அல்லவா என்றும் கூவி ஆட்சேபிக்க நிதானக் கட்சியார்களும் இவர்களுக்குமேல் இரைந்து எதிர்க்கூச்சலிட்டனர். உடனே எல்லாரும் இரையவே இரைச்சல் பொறுக்கமாட்டாமல் காங்கிரெஸ் முதல்நாள் கலையவேண்டிவந்தது. அன்று மாலையே ஸ்ரீ திலகர் தமது புதுக்கட்சியாரை ஒருங்கு கூட்டி தாம் காங்கிரெஸ்சபையைப் பலப்படுத்தி மேன்மேலும் விருத்திக்குக் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கமுடையவர்களாதலின் வீண் இரைச்சல் கூடாதென்றும் ஏனெனில் அவ்விரைச்சலால் காங்கிரஸ் நின்றுபோய்விட்டால் தமது நோக்கத்துக்கே விரோதமாகுமென்றும் ஆதலால் ஸ்ரீ பானர்ஜி பேசவந்தாலும் சரி மேடாவே பேசவந்தாலும் சரி வாய்திறவாமல் இருந்து கவனிக்கவேண்டுமென்றும் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

27-உ பகல் 1-மணிக்குக் கூடிய காங்கிரஸில் மீண்டும் சுரேந்திரநாதர் எழுந்து சுமார் ஒருமணிநேரம் டாக்டர் கோஷின் அக்கிராசனப் பிரேரேபணையை ஆமோதித்துப் பேசினார். புதுக்கட்சியார்களும் மௌனமாகவே இருந்து ஸ்ரீதிலகர் வாக்கைப் பரிபாலித்தனர். ஸ்ரீ பானர்ஜி பேசிமுடிந்ததும் ஸ்ரீ திலகர் பிரசங்கமேடைக்குச் சென்று பிரஸிடெண்டு நியமனத்தை ஆக்ஷேபித்து ஒரு அமெண்டுமெண்டு செய்யப்போவதாயும் அதற்கு அனுமதி தரவேண்டுமென்றும் உபசரணைக் கமிட்டித்தலைவராகிய மிஸ்டர் மால்வியைக் கேட்டுக்கொண்டனர். தாம் இவ்வாறு அமெண்டுமெண்டு பிரேரேபணை செய்யப்போவதாய் ஸ்ரீ திலகர் திடீரென எழுந்து தெரிவித்து விடவில்லை. அவர் ஏற்கனவே அன்று காலையிலேயே இதனைப்பற்றிப் பழைய கட்சித்தலைவர்கட்குத் தகவல்கொடுத்து இருக்கிறார். தகவல் கொடுக்காமலே பிரேரேபிப்பதிற்கூடத் தவறேதுமில்லை. ஆயினும்



அவர் முன்பேயே அறிவித்துவிட்டது அவர் நேர்நெறிச் செல்பவர் என்பதை நன்கு விளக்குகின்றது. அப்படியிருக்கவும் பழைய கட்சியார் அவரைப் பேசவிடாது தடுத்துவிட்டதுடன் மேட்டா எழுந்து ராஸ்விகாரிகோஷை அக்ராஸநத்தில் எழுந்தருளச்செய்தனர். செய்ததும் டாக்டர் கோஷ் ஸ்ரீதிலகரைத்தடுத்து "நீர் பிரேரேபணை கொண்டுவந்திருப்பது ஒழுங்குக்குவிரோதம்" என்றார். அதற்கு ஸ்ரீ திலகர் "ஐயா தாங்கள் இன்னும் அக்கிராசனராக ஒழுங்குப்படி நியமனமாகவில்லை" என்று சொல்ல கோஷ் "நான்தான் பிரெஸிடெண்ட். நீர் இனிப்பேசக்கூடாது. உமது இடத்தில் போய் உட்காரவேண்டும்" என்று கூறினர். அதன்பேரில் திலகர் "நான் பிரதிநிதிகளிடம் கேட்கிறேன் அவர்கள் நியாயம் சொல்லட்டும். இதற்கிடையே என்னைப் பிடித்துத் தள்ளினாலொழிய நான் இங்கிருந்து நகரமாட்டேன் என்றார். அப்போது திடீரென்று ஒரு நாற்காலி நிதானக் கட்சியார் இருந்த இடத்திலிருந்து திலகருடைய தலையை நோக்கி விழுந்தது. அதனை அவ்வாறு விழவொட்டாமல் சிலர் தடுத்துவிட்டார்கள். உடனே புதுக்கட்சியார்கள் திலகரின் சரீரத்துக்கே அபாயம் வருமென்றஞ்சி ஸ்ரீ திலகரின் சம்ரக்ஷணையின் பொருட்டு மேடைக்கோடிவந்து அவரைச் சுற்றி வட்டமிட்டு நின்றார்கள். பிறகு தான் கலகம். பழையகட்சியார்கள் கொண்டுவைத்திருந்த போலீசுக்காரர்களும் தெருப்போக்கிலிகளும் புதுக்கட்சியார்களைத் தோன்றியபடி அடிக்கத்தலைப்பட்டார்கள். உடனே இருகட்சியாராலும் தடிகள் நாற்காலிகள் கைகள் தாராளமாய் உபயோகிக்கப்பட்டன. ஜோடுகள் சப்பாத்துக்கள் பறந்தன. மண்டைகள் அடிபட்டன. சிலர்க்குக் காயம் உண்டு உடனேபோலீசுக்காரர்கள் இருகட்சியாரையும் வெளிப்படுத்தினர். ஆதலின் இரண்டாநாளும் காங்கிரெஸ் நடைபெறாமற்போயிற்று. இவ்வாறு காங்கிரெஸ் கலையவே பழையகட்சியார்கள் பழைய காங்கிரெஸ் தீர்மானங்களைமாற்றிச்சர்க்கார் அதிகாரிகளை மெச்சக் கோட்பாடொன்றேற்படுத்தி அன்று மறுதினம் ஒரு கன்வென்ஷன் கூட்டினர். இக்கன்வென்ஷன் கூடுங்காலை அதனைச்சுற்றி ஆயுதபாணிகளாய் சிப்பாய்கள் நான்குபுறமும் பாராக்கொடுத்து நின்றனர். இப்க,

அதே தினத்தில் புதுக்கட்சியார்கள் "வந்தேமாதரம்" பத்திராதிபராகிய ஸ்ரீ அரவிந்த கோஷின் அக்கிராசனத்தின்கீழ் ஓர் மீட்டிங்கு கூடினார். அக்கூட்டத்தில்,

## காங்கிரஸ் நிலைமையைப்பற்றி ஸ்ரீமான் திலகர் செய்த உபந்நியாஸம்.

"பிளவு நேர்ந்துவிட்டது. நாம் எத்தனையோ கஷ்டப்பணஞ்செலவிட்டு, எவ்வளவோ காலம் பாடுபட்டுநடத்திவந்த காங்கிரஸ் சபை தகர்ந்துபோய்விட்டது. இரண்டுகட்சியாரும் சேர்ந்து கல்கத்தாவிலே சமாதானம் செய்துகொண்டதுபோல் இவ்வருஷம் செய்து கொள்ள முடியவில்லை. காங்கிரஸ்சபையைப் பின்புறமாகத் தள்ளிவிடவேண்டுமென்று சிலர் எண்ணங்கொண்டு விட்டார்கள். இதுவரையும் அடைந்திருக்கும் அபிவிருத்திக்கு மேலே நாம் செல்லாவிட்டாலும் பின்னுக்கு வாங்காமலேனும் இருக்க வேண்டுமென்று மற்றொரு கட்சியார் அபிப்பிராயப் பட்டார்கள். கவர்ன்மெண்டார் பலமான இம்சைமுறை தொடங்கியிருக்கும் இக்காலத்தில் இருதிறத்தாரும் ஒன்றுசேர்ந்திருக்க வேண்டியது அவசியமென்பதைச் சிலர் மறந்துவிட்டபடியினால் இந்தக்கேடு நேரிட்டது. காங்கிரஸ் சபையின் அபீஷ்டங்களையும், வழிகளையும் கவர்ன்மெண்டாரின் தற்கால விருப்பத்தின் நிலைமைக்குக் கொண்டுவந்து விடவேண்டுமென்று சிலர் எண்ணமடைந்துவிட்டார்கள். பம்பாய் நிதானஸ்தர்கள் காங்கிரஸ் சபையைத் தங்கள் இஷ்டப்படியெல்லாம் ஆட்டிவைக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டபடியால் இக்கேடு விளைந்தது.

பம்பாய் முக்கியஸ்தர்கள் கவர்ன்மெண்டாரின் தற்கால விருப்பத்தின்படி காங்கிரஸ் அபீஷ்டங்களைக் குறுக்கவேண்டுமென்று நிச்சயித்து விட்டார்களென்பது எனக்கு இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னாகவே விளங்கிவிட்டது. கவர்ன்மெண்டாரின் கோபத்துக்குப்பாத்திரப்பட்டாரென்ற காரணத்தின்பொருட்டாக, எப்போது லஜபத்ராயைக் காங்கிரஸ் தலைமைக்கு உதவமாட்டாரென்று தடுக்க ஆரம்பித்தார்களோ அப்போதே இன்ன மாதிரியான எண்ணங்கொண்டு இவர்கள் வேலை தொடங்கியிருக்கிறார்களென்பது தெளிவாகிவிட்டது. பாரதஜாதியின் மஹாசபை யென்ற பொதுக்குணத்தை



நீக்கி அதை நிதானக் கட்சிக்கு மட்டிலும் சொந்தமான ஓர் கட்சிக் கூட்டமாக மாற்றிவிட உறுதிசெய்துவிட்டார்களென்பது தோன்றிற்று.

இப்போது காங்கிரஸிலே இரண்டு கட்சிகள் இருக்கின்றன. ஒரு கட்சியார் (அதாவது நிதானஸ்தர்) கவர்ன்மெண்டாரை எதிர்த்துப் பேசிக்கொண்டேயிருந்து கவர்ன்மெண்டாரின் சஹாயத்தின் பேரிலேயே நமது தேசம் ஸ்வராஜ்யமடைந்து விடுமென்று நம்புகிறார்கள். மற்றொரு கட்சியாருக்கு மேற்படி வழி பொருளற்றதென்றும், தப்பானதென்றும் தோன்றுகிறது. கல்கத்தா காங்கிரஸில் இருகட்சியாரும் சேர்ந்து, இருவரும் தத்தம் கோட்பாடுகளைச் சிறிது அடக்கிக்கொண்டேனும் மற்றக் கட்சியுடன் சரிப்படுத்திக் கொண்டு போகவேண்டுமென்ற எண்ணத்துடன் வேலைசெய்த படியினாலும், மஹா புருஷராகிய ஸ்ரீ தாதாபாய் நவுரோஜியின் முயற்சிகளினாலும், சமாதானம் ஏற்பட்டது. ஜாதீய மஹாசபை ஒரு கட்சிக் கூட்டமாகாமல், எல்லாருக்கும் பொதுவாகவே திகழ்ந்து நின்றது. இந்த வருஷம் ஸூரத் காங்கிரஸிலேயும் அவ்வாறே இருக்குமென்றெண்ணினேன்.

ஆனால் பம்பாய் நிதானஸ்தர்களோ கவர்ன்மெண்டாரின் விருப்பமே பிரதானமென்று எண்ணி, ஜாதீய அபிவிருத்தியை ஓர்பொருட்டாக்காமல் திரஸ்கரித்துவிட்டார்கள். பஹிஷ்காரம், ஜாதீயக்கல்வி முதலிய தீர்மானங்கள் கல்கத்தாவிலே பொதுவாக எல்லோரும்சேர்ந்து செய்துகொண்டார்கள். அந்தத் தீர்மானங்கள் காங்கிரஸ்சபையினால் அங்கீகாரம் செய்துகொள்ளப்பட்டன. ஆகவே, மேற்படி தீர்மானங்களைக் காரியத்துக்குக் கொண்டுவரவேண்டியது நமதுதேசத்தாரனைவருக்கும் தவறவொண்ணாத கடமையாயிற்று. ஆனால் கவர்ன்மெண்டாருக்கு நமது பஹிஷ்கார முயற்சியிலும், ஜாதீயக் கல்வி முயற்சியிலும் வெறுப்பு உண்டாயிற்று. அவர்கள் தமதுவெறுப்பைப் பகிரங்கமாகவே தெரிவித்தார்கள். இதைக்கண்டவுடனே, பம்பாய் நிதானஸ்தர்கள், மேற்படி இரண்டுதீர்மானங்களிலேயும், ஸ்வராஜ்யம், சுதேசியம்என்பவற்றைப்பற்றிய தீர்மானங்களிலேயும் சிலமாறுபாடுகள்செய்து, காங்கிரஸின் கொள்கையைப்பின்புறமாகத்தள்ளி

கவர்ன்மெண்டாரைத் திருப்தி செய்விக்க வேண்டுமென்ற நோக்கங் கொண்டார்கள். பம்பாய் நிதானஸ்தர்கள் இந்தநோக்கம் நிறைவேறுவதற்கு ஸூரத் தகுதியான இடமென்று நினைத்தார்கள். நிதானக் கட்சியாரின் மேற்படி நோக்கத்தைப் புதிய கட்சியார் எதிர்க்க முயன்றார்கள். காங்கிரஸ் சபையின் கொள்கை இப்போதிருக்கும் நிலைமையிலிருந்து மேல் நோக்கிச்செல்லாவிட்டாலும், கீழேபோய்விடாமல் பாதுகாக்கவேண்டுமென்பது புதிய கட்சியாரின் கருத்து. “நீங்கள் புதிதாக அபிவிருத்திக்கு முயற்சிகள் செய்யாவிட்டாலும், கல்கத்தா காங்கிரஸில் நிறைவேறிய நன்மைகளைக் கூடக்கெடுத்துவிடாமல் முன்னிருந்த மாதிரியிலேயே வைத்துக்கொண்டிருங்கள். அது செய்வது போதும்” என்று புதிய கட்சியைச்சேர்ந்த நாங்கள் அவர்களிடம் (பம்பாய் நிதானஸ்தர்களிடம்) முறையிட்டோம். அவர்கள் கேட்கவில்லை. எங்களை அவமதிப்புடன் நடத்தினார்கள்.

நிதானக் கட்சியாரைத் தமது பக்கத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கவர்ன்மெண்டார் தெரிவித்த இச்சைக்கு நிதானஸ்தர்களும் உடன்பட்டுவிட்டார்கள். நம்மிலே எல்லாக்கட்சியாரும் ஏக சிந்தையுடன் வேலை செய்து கவர்ன்மெண்டார் தேசமுழுதும் செய்யப்போகிற பயங்கரமான இம்சையை எதிர்க்கவேண்டுமென்பதை நிதானஸ்தர்கள் மறந்துவிட்டார்கள். நிதான காங்கிரஸ் என்று பிரத்தியேகமான காங்கிரஸ் என்று தனியாக ஒன்று ஏற்படுத்தத் துணிந்துவிட்டார்கள். அதாவது நமது காங்கிரஸ் சபையைத் தப்தி நதியிலே அமுக்கிக் கொன்றுவிட்டதுபோலாகும்.

இனி நாம் செய்யவேண்டியது யாது? காங்கிரஸ் சபை மிகவும் உபயோககரமானது. எவ்வளவோ வருஷத்து முயற்சிகளின்பேரில் வளர்ச்சி பெற்ற வஸ்து. இத்தனை பயனுற்ற சபையை உடைத்துவிட்டார்கள். ஒரு குடும்பத்தின் செல்வத்தைப்பங்கிட்டால், அதனால் பங்காளிகள் இருவரும் முன்னைக்காட்டிலும் துர்ப்பல மடைவார்களேயொழிய, பலமிகுதிபடையமாட்டார்களென்பது அனைவருக்கும் தெரியும். இதை நிதானக்கட்சியாரும் கூடிய சீக்கிரத்தில் தெரிந்துகொள்வார்கள். இப்போது அவர்கள் காங்கிரஸைப் பிரிவு படுத்தியதிலிருந்து, இரண்டு கட்சியாருக்கும் பலக்குறைவு



உண்டாய்விட்டது. கவர்ன்மெண்டாரின் இஷ்டப்படக் காங்கிரஸ் சபையைச் சிதைப்பதினால், எவ்விதமான லாபமும் கிடையாது. சிற்சில மனிதர்களுக்குச் சுயலாபங்கள் ஒருவேளை கிடைக்கக்கூடும். ஆனால் தேசப் பொதுமைக்கு யாதொரு லாபமும் ஏற்படாது. இதைச் சிறிது காலத்திற்கப்பால் நிதானஸ்தர்கள் தெரிந்துகொண்டு தாமாகவே நம்முடன் ஒற்றுமைகொள்ள விரும்புவார்கள். ஆனால் அவர்களுக்குச் சுயபுத்தி திரும்பி மறுபடியும் ஒற்றுமைக்கு உடன்படும்வரை நாம் சும்மா இருக்கலாமா?

நாம் காங்கிரஸ் வேலையைத் தலைமேல் எடுத்துக்கொள்ளவேண்டும். நிதானஸ்தர்களால் கொலையுண்ட காங்கிரஸ் சபையை மறுபடியும் உயிர்நிலைக்குக் கொண்டுவரவேண்டும். மாகாணத்துக்கு மாகாணம் கமிட்டிகள் ஏற்பாடு செய்து, அங்கங்கே காரியதரிசிகள் வைத்து அவர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் காரியங்களைப் பற்றி அடிக்கடி தகவல் கொடுத்துக்கொண்டு வரவேண்டும். நாம் காங்கிரஸ் சபையைப் புதுப்பித்து, அதன், சென்ற வருஷத் தீர்மானங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு மேன்மேலும் படிப்படியாக விருத்தி செய்துகொண்டு வரவேண்டும்.

காங்கிரஸ் சபையைப் பின்னுக்கிழுக்க வேண்டுமென்ற நோக்கமுடையவர்கள் எல்லோரும் ஒன்றாகச்சேர்ந்து ஒரு “கன்வென்ஷன்” ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நம்மை அதனின்றும் பிரிக்கும்படியான நிபந்தனைகள் செய்துவிட்டனர். காங்கிரஸ் நிலையைப் பின்னே தள்ளி மிகவும் வற்றிப்போன ஓர் அபீஷ்டத்தை நிறுத்தி, அதை ஒப்புக்கொண்டு கையெழுத்துப்போடுவோர் மட்டுமே அந்தக் கன்வென்ஷனில் சேரலாமென்று விதித்திருக்கிறார்கள். போகட்டும். இதனால் நமக்குப்பாதகமில்லை. நாம் காங்கிரஸ் சபைக்கும் சுதேசத்திற்கும் நமது கடமையைச்செலுத்தும் பொருட்டாக நமது கமிட்டியை வைத்துக்கொண்டு காங்கிரஸ் காரியங்களை நடத்திவருவோம். அடுத்த வருஷம் நமது பிரயத்தனங்களால் காங்கிரஸ் கூட்டுவோம். நாம் செய்யும் முயற்சிகளெல்லாம் அடுத்த கட்சியின் முயற்சிகளுக்கு உதவியாகவும் பலமாகவும் இருக்குமேயல்லாது அவர்களை எதிர்த்து வேலை செய்யமாட்டோம். ஈசனுடைய கருணை

யால் இன்னும் சிறிது காலத்துக்குள் நம்முடன் வந்துசேர்ந்துகொள்வார்களென்பது எனக்கு நிச்சயமே. அப்பால், இருதிறத்தாரும் சேர்ந்து ஸ்வராஜ்ய ஸ்தாபனத்திற்குப் பாடுபடுவோமாகவும்."

நிற்க, இம்மீட்டிங்குக்குப்போலீசு பந்தோபஸ்தேதுமில்லை. என் வேண்டும்? கரைகாப்புளது நீர்கட்டுகுளமன்றிக் கரைகாப்புளதோ கடல்?

இனி நாம்சொல்ல வேண்டியதொன்றே. அஃதென்னவெனில் போனதுபோகட்டும் என்று விடுத்து இருகட்சியாரும் தாய்நாட்டுவிரோதிகளுடைய துர்ப்போதனைக் கிடங்கொடாமல் "வயிறும் அவயவங்களும்" என்ற கதையின் படிப்பினையை அறிந்து ஒத்துவாழ்ந்து தேசநன்மையைப் பலப்படுத்தவேண்டியதே. நிற்க, சூரத்துக்காங்கிரஸில் நடந்த சம்பவங்களை வைத்துக்கொண்டு புதுக்கட்சியார்களை வைவதேபெரும்வேலையாய் மிதவாதிகள் திரிகின்றனர். இவர்களது பேச்சைக்கேட்டு அநேகர்மயங்கித்தாமும் புதுக்கட்சியாரைத் திட்டுவாராயினர். அன்னோர் இனியேனும் தமதுபிழையை உணர்ந்து வாயடங்கித்தமது அறியாமைக்குவிசனிப்பார்களென்றே எண்ணுகிறோம். அனைவரும் கவனிக்கவேண்டிய அதிமுக்கிய விஷயம் ஒன்றுளது. அஃதியாதெனில், "வந்தேமாதரம்" சொல்லுகிறபடி

"தேசத்தின் நிலைமையானது திடீரென்றுபழையதுறையைவிட்டுப் புதிய துறையிலிறங்கும்பொழுது இப்படிப்பட்ட சங்கடங்கள் நேரிடவே செய்யும். ஐரோப்பிய நாடுகளில் நமது காங்கிரஸினும் பெரிய சபைகளிலேயே அபிப்பிராய பேதங்களுண்டாகும்பொழுது இப்படிப்பட்ட குழப்பங்கள் மட்டுமல்ல, பலமான அடிபிடிகலகம் காயங்களே உண்டாகின்றன. இதுவரையும் மிதவாதிகள் இந்தியாவின் க்ஷேமத்திற் கென்றுஉழைத்து வந்த மார்க்கத்தைப் பொதுஜனங்கள் நம்பவில்லை இப்பொழுது பொதுஜன அபிப்பிராயமே மிதவாத முறைகளுக்கு எதிராய் நிற்பதால இப்படிப்பட்ட குழப்பங்கள் வராமலிருக்கமுடியாது. ஆகலால், சும்மா அவன் கெடுத்தான் இவன் கெடுத்தான் என்று கூச்சலிடுவதைவிட இனிமேல்நடக்கவேண்டிய தென்னவென்பதைப் பற்றி ஆலோசனை செய்பவர்களே தேசாபிமானிகள் ஆவர். பொதுஜனங்கள் இப்பொழுதிருக்கும் உண்மைநிலைமையை உற்றுணர்ந்து, அவர்களுடைய அநுதாபத்தையும் ஆதரவையும் அநுசரித்துக்கொண்டுசெல்பவர்கள் தாம் ஜனத்தலைவர்களேயன்றிப் பொதுஜன அபிப்பிராயத்தைக் காலின் கீழ்த் தள்ளிவிட்டுத் தங்கள் மனோபீஷ்டப்படி காரியங்களைச்செய்ய விரும்புகின்றவர்கள் ஜனத்தலைமை பெறமாட்டார்கள்" என்பதே.

**M. கோபாலகிருஷ்ணஐயர்.**

அக்கிராசனாதிபதி மாணவர் செந்தமிழ்ச்சங்கம் மதுரை.

# தலைமகுடன் சரித்திரத்தின் ஒருபகுதி.

அவர்கள் யாத்திரை போய்க்கொண்டிருக்கும்பொழுது, இராஜதந்திர விஷயமாகவும், அதிலும், நல்லோர்களைத் தெரிந்து பழகுமாறும் தீயோர்களது வஞ்சத்துக்குள்ளாகாது அவர்களை விலக்குமாறும் மானிட இயல்பைப் பகுத்தறியும் விஷயமாகவுமுள்ள அநேக கடினமான பாகங்களைக்குறித்துத் தனக்குத்தெளிவிக்குமாறு மந்திரத்தைத் தலைமகுடன் வேண்டிக்கொள்ளுகின்றான். இப்படியவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, காற்று ஓய்ந்துநிற்க அவர்கள் அடுத்திருந்த தீவொன்றி லிறங்கித் தங்கும்படி நேருகின்றது. அவர்களுக்குச் சற்றுநேரத்திற்குமுன் அதே தீவில் உல்லாசனுமிறங்கியிருந்தான். அவனின்னானென அறியாமலே தலைமகுடன் அவனைக் காண்கின்றான். அவனுடன் பேசுகின்றான். ஆனால், அவன் கப்பலேறிப்போன பிறகு இன்ன காரணமெனத்தெரியாது தலைமகுடனது மனஞ் சஞ்சலப்படுகின்றது. மந்திரர் அதன் காரண மின்னதென விடுத்துச்சொல்லிச் சீக்கிரத்தில் தன் தந்தையைத் திரும்பவும் காண்பானென அவனுக்கு உறுதிசொல்லி யவனை யாற்றுகின்றார். மீன்விழியாளுக்குப் பலி பூசனை செய்யவேண்டுமெனச் சொல்லி யவனை யிருத்தி யவனது பொதுமையையும் பத்தியையு மின்னும் சோதிக்கின்றார். மந்திரரென்னு முருவேற்று மறைந்து நின்ற அந்தத்தேவி தனது இபற்கையுரு வேற்றுநிற்கத் தலைமகுடன் அவளின்னாளென அறிந்து போற்றுகின்றான். அப்பொழுது அந்தத் தேவி யவனுக்குக் கடைசிமுறையாய் ஞானோபதேசஞ்செய்துமறைகின்றாள். தலைமகுடன் இருக்கைக்குச்சென்று அங்கு தனது அகலா அன்புடை யூழியனான யூமணனது வீட்டில் தன் தகப்பனைக் காண்கின்றான்.

குளிர்ந்தகாற்றுமோதப் பாய்கள் விம்மிஉயர்ந்தெழுந்தன. வரவரத் தரை பின்னிடுவதுபோற்றோன்றியது. கடுஞ்சீதச்சுழல்காற்று வெள்ளியபனிக்கட்டியை நான்குபுறமுந்தூவ அதனால் மறைந்த முகடுள்ள உலூகதா மலையின் முனையையும், இந்திரனது வச்சிராயுதத்

தால் பலமுறை தாக்கித் தகர்க்கப்பெற்றும், இன்னு மிறுமாப்புடன் வானமுட்டத் தலைதூக்கி நிமிர்ந்து நிற்கும் அகர சிகர மலையையும், கப்பலோட்டிகள் நெடுந்தூரத்திற் கண்டார்கள்.

“நீரெனக்குப் போதித்துள்ள இராஜ தருமங்களை நான் நன்று அறிந்துகொண்டேனென எனக்குத் தோன்றுகிறது. ஆதியில் அவைகளெனக்குக் கனவிற்கண்ட தோற்றங்கள் போலிருந்தன. ஆனால், வரவர அவைகள் தெளிந்து அங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றன. இதுபோலவே பொழுதுவிடியு நேரத்தில் எல்லாப்பொருள்களும் தெளிவற்று மேகஞ்சூழ்ந்தனபோற்றோன்றும். பிரளயத்துக்குப்பின் நவசிருஷ்டியுண்டாவதுபோல் அவைகள் சிறுகச்சிறுகத் தலையெடுக்கின்றன. வரவரமிகுந்து, உலகைச்சூழ்ந்துள்ள இருளையகற்றி, எதுவுந் தன்னுருக்கொண்டு விளங்கித் தன்னிறங்கொள்ளும்படிசெய்யும்சோதிபோலவும் அவைகள்வரவரத் தெளிகின்றன. பல்லோரிடத்துள்ள பல்லியல்களைப் பகுத்தறிவதும், பஃறொழில்களுக்காக அவர்களைத் தெளிந்தெடுப்பதும், அவ்வவர்களது திறமை வல்லமைக்குத்தக்கபடி வினையிடுவதும் இராஜதந்திரங்களென நீரெனக்குப் புகட்டினீர். ஆனால், பல்லியல்களையும் பகுத்தறியும் வகை யெப்படியென நானின்னும் அறிந்திலேன்” என்று, யாத்திரை செல்லும்பொழுதே தலைமகுடன் மந்திரரை நோக்கிக்கேட்டான்.

“மக்களியல்பு அறியவேண்டின் அவர்களை யூன்றிக் கற்கவேண்டும். அவர்களை யூன்றிக் கற்கவேண்டின், அவர்களை யடிக்கடி கண்டு பேசவேண்டும். அரசர்கள் தமது குடிகளுடன் கலந்து வார்த்தையாடவேண்டும். அவர்களது அபிப்பிராயங்களைக் கலந்து கேட்கவேண்டும். அவர்களுக்குச் சிறுதொழில்களிட்டு, அதற்கு மேலான தொழில்களேற்க வல்லவர்களா வென்றறியுமாறு, அவர்களிட்ட தொழில் செய்யும் விதத்தைக் கவனிக்கவேண்டும். என்னருமைத் தலைமகுட! நீ அசுவ வித்தை கற்றவாறெப்படி? அவைகளைப்பன்முறை பரீட்சித்துப்பார்த்ததாலும் அவைகளது உயர்வு தாழ்வுகளறிந்து அனுபோகமுடையவர்களுடன் கலந்து பேசியதாலுமல்லவா? அதுபோலவே, மனிதர்களது உயர்வு தாழ்வுகளை யுய்த்தறிவதைத்



தமது கல்வியாகக்கொண்டு அறிவிலும் வயதிலும் முதிர்ந்த நல்லோர்களைக்கண்டு பேசுவாயாக. இவ்விதமாக, மானிட இயல்பறியு நுண்ணறிவு, நீயறியாமலே சிறுகச்சிறுகவுனக்குண்டாகும். உன்கண்ணிற்படும் ஒவ்வொருவராலும் எதெது எவ்வெவ்வளவு ஆகுமெனக்கண்டுகொள்வாய். நற்கவிகளை யடிக்கடி படிப்பதாலும் கவிரசமறிந்தோரிடத்துக் கலந்து பேசுவதாலுமல்லவோ, ஓர் நற்கவிக்கும் வெறும் பாட்டுக்கட்டுவோனுக்குமுள்ள பேதத்தை யறியக்கற்றாய்? சங்கீதத்திலுனக்கு ஞானமுண்டானதெப்படி? அது விஷயத்திலும் அதே விதமாகப்பழகியதாலன்றோ? இப்படியிருக்க, மனிதர்களை நன்கறியாது அவர்களை நன்றாள்வதெப்படி? மனிதர்களுடன் கூடி வாழ்வதாலன்றி, யவர்களைக்குறித்தறிவதெப்படி? பகிரங்க இடங்களில் ஜனங்கள் இலக்கின்றிப் பலபட்டடையாய்ப் பேசும்பொழுதும் மனத்தில் முன் சங்கற்பமின்றி அப்போதப்போதும் மனத்திற்றோன்றும் விஷயங்களை யப்பொழுதப்பொழுது மனத்திற்குத்தோன்றியபடி பேசும்பொழுதும் அவர்களைக்காணுதல் அவர்களுடன் கூடிவாழ்தலாகாது, அவர்களைந்தனியிடங்களிற் காணவேண்டும். அவர்களது நெஞ்சினுளாழ்ந்து புதைந்து கிடக்கும் கொள்கைகளையும் அபிப்பிராயங்களையும் புகுந்தறியவேண்டும். அவர்களைப் பன்முகத்தாலும் நோக்கவேண்டும். அவர்களது நீச்சுநிலைகளைச் சோதிக்கவேண்டும். அவர்கள் செய்யுங் கர்மங்களின் உட்கருத்தறியவேண்டும். மானிட இயல்பைச் சரியானவாறு அறிய அவர்களிருக்கவேண்டிய முறையின்னதென முதலிலறியவேண்டுவதவசியமாகும். தக்காரின்னார், தகவிலரின்னார் எனப்பகுத்தறியுமாறு, தகைமை யென்றாலென்னவென்ற தெளிவுந் திட்டமுமான அறிவு அவசியமாக வேண்டும். அறத்தைக்குறித்தும், தகைமையைக்குறித்தும் ஜனங்கள் ஓயாது பேசுகின்றார்கள். ஆனால், அவை யென்னவென்று திட்டமாயறிந்தவர்கள் சிலர் கூட இல்லை. சொற்களாக நோக்கின், அவைகள் உயர்ந்த சொற்களென்பதிலையமில்லை. ஆனால் அப்பதங்களை வாயாற்சொல்லி யுருவேற்றி யிறுமாப்போர் பலர். விஷயத்தில் அவைகள் பொருளற்ற வெற்றுச்சொற்களாகின்றன. நீதிவான் யார், விவேகி யார், அறவோன் யார் எனத்தீர்மானஞ் செய்வதன்முன், நீதி, விவேகம், அறம் இவைகளினது இலட்சணங்கள் என்னவென நன்கறியப்படவேண்டும்.

விவேகமும் செங்கோன்மையு நிறைந்த அரச தருமங்களை நிலைநாட்டுவோரின்னாரென்றும் அவைகளை விட்டுப் போலிச் சீர்திருத்தமும் அரசாங்கக் கிருத்திரமமும் செய்வோரின்னாரென்றும் பகுத்தறியுமுன், விவேகமும் செங்கோன்மையு நிறைந்த இராஜதருமங்களவையென அறியவேண்டும். பற்பலபொருள்களின் அளவுகளைக் கண்டறிவதற்கு அடியாதாரப் பொதுஅளவொன்றுவேண்டும். குணங்களையும் நடக்கைகளையுங் கண்டறியச் சிறுகா பெருகா முறை பிறழ்ந்துவாராச் சில ஆதாரங்கள் வேண்டும். அவ்வாதாரங்களை யொட்டி நாம் அவைகளை நிதானிக்கவேண்டும். மானிடப்பிறவிப் பெரும்பய னென்னவெனவும் மனிதர்களை யென்னநோக்கத்துடனாளவேண்டுமெனவும் நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ளவேண்டும். குடிகளை நல்லொழுக்கினர்களாகவும், சுகிகளாகவுஞ் செய்வதே யாட்சியின் முழுக்கருத்துங் கொள்கையுமாம். இந்தக் கொள்கைக்கும், ஓர் மன்னன் தனக்கென்று மட்டும், ஆட்சியும் அதிகாரமுங் கைக்கொண்டிருக்கின்றானென்றகொள்கைக்கும் சிறிதும் ஒவ்வாது. இத்தகைய கொள்கை யகங்காரங்கொண்ட ஓர் கொடுங்கோன் மன்னனுக்குமட்டுந்திருப்தியுண்டாக்கும். ஓர்செங்கோன்மன்னனது வாழ்வு குடிகளின் பொருட்டே. அவன் தனது ஆத்துமசுகத்தையும் இன்பத்தையும் அவர்களது நன்மையின் பொருட்டிழக்கின்றான். குடிகளது க்ஷேமமாகிய இவ்வரும்பெருங்கருத்தைத்தன் கண்முன்னோயாது வையாது விட்டகலும் மன்னனால், ஏதாவதொன்றிலிக்கருத்து வாய்க்கப் பெறுமாயின், அது தற்செயலாய்மட்டும் வாய்த்ததாகும். மீகாமனின்றி, நட்சத்திரக் குறிப்பின்றி, கரைத்தோற்றமின்றி, நடுக்கடலிடைப்பட்ட ஓர் மரக்கலம்போல் அவனும் காலநீரோட்டத்தில் பட்டு மிதப்பான். இந்நிலையில் அந்தக்கப்பல் மோதுண்ணாது தப்ப முடியுமோ?

“அரசர்களுக்குத் தருமத்தின் இலட்சணமின்னதென்று தெரியாததால், மனிதர்களிடம் தேடிக்கண்டுகொள்ளவேண்டுவ தின்னதெனவும் பலசமயங்களில் அவர்களுக்குத் தெரியாது போகின்றது. நல்லொழுக்கினரைக்கண்டு தாட்சிணிய மில்லோரென எண்ணுகின்றார்கள். அவர்கள் மரியாதை யில்லாதவர்கள் போலும் பிறரை



மதியாதவர்கள்போலவுந் தோன்றுவதால், அம்மன்னர்களுக்கு அவர்களைக்கண்டவுன் அச்சமும் அருவருப்புமுண்டாக, அவர்களைப் பராமுகஞ் செய்து, முகத்துதிசெய்வோர்களை ஆசையுடன் நாடிச் செல்லுகின்றார்கள். அந்த நிமிஷமுதல் மனநேர்மையும் ஒழுக்கமும் போனவிடந்தெரியாது போகின்றன. மன்னர்கள் பொய்ப்புகழ்ப் பேயிழுக்க வழிவிலகிச்சென்று உண்மையுடையோரையறிந்துபற்றத் தகுதியற்றவர்க ளாகின்றார்கள். நல்லொழுக் கென்பதே பூமியிற் கிடையாதென முடிவுகொண்டு விடுகின்றார்கள். தீயோர்களை நல்லோர்களறிய முடியுமன்றி நல்லோர்களைத் தீயோர்கள் அறிதல் முடியாது. எது தம்மால் அறியமுடியாதோ அது இல்லையென்றே எண்ணிவிடுகின்றார்கள். எதிலும் ஐயங்கொள்ளமட்டுந்தெரியும். அதற்குமேலொன்றுந் தெரியாததால், எதையுமொன்றுபோலவே சங்கிக்கின்றார்கள். பலர்கண்ணிற்படாது மாளிகையினுட்போய் மறைந்துகொள்ளுகின்றார்கள். மகா அற்பவிஷயங்களைக் கூடச் சூதென்றும் மோசமென்றும் வகையாக்குகின்றார்கள் அவர்களைக் கண்டு ஜனங்கள் நடுங்க ஜனங்களைக்கண்டு அவர்கள்நடுங்குகின்றார்கள். அவர்களிருளை விரும்புகின்றார்கள் அவர்கள் தம்பிறவிக் குணத்தை யென்ன மறைத்தும் அது வெட்டவெளிச்சமாய்த்தெரிந்து விடுகின்றது.

குடிகள் கெட்ட எண்ணக் குறுகுறுப்புக்கொண்டு, திரை வழியே யுற்றுநோக்கி யெல்லா மறைகளையும் புகுந்து சோதிக்கின்றார்கள். இவ்விதமாய்ப் பலர் கண்ணிற்படும் அவன் கண்ணிலெவரும் படார். அவனைச் சூழ்ந்து நிற்குந் தன்னயங் கருதுங் கயவர்கள் அவன் காட்சிக்கரியனா யிருத்தல்கண்டு மனமுவக்கின்றார்கள். எந்த மன்னன் காட்சிக்கரியனோ அவனுக்கு சத்தியம் காட்சிக் கரிதாய் விடும். அவனது குருட்டுத்தனத்தால் தங்கருமங்கொள்ளக் கருதுபவர்கள் அவன்கண்களைத் திறக்க விரும்புவோரை யெல்லாம் தூற்றவோ, அல்லது நாடுவிட்டுத் துரத்தவோ வழிதேடித் திரிவார்கள். இனஞ்சேரா ஓர்விதக்குறும்பப் பெருமைகொண்டு வஞ்சவலையிற் பட்டுழல்கின்றான். தானுழல்வதுகண்டு நடுங்குகின்றான். ஆனால் அவன்பட்டுழல வேண்டுவதும் தகுதேயாம். சிலர்களை மட்டுங்கண்டு பேசுவோனுக்கு, அவர்களது மனோபாவங்களும் துரபிமானங்களும் அநேகமாய்ப்படிந்துவிடுகின்றன. சான்றோரிடத்தும் கோபதாபங்க

ளும் துரபிமானங்களுமின்மை யரிது. பிறர்மூலமாகவும் விஷயங்களை அறிய நேருமாதலால், கோட்சொல்லிகள் வலையிற் படவுமிடமுண்டு. கோட்சொல்லிகள், பிறரைக்கொல்லும் நஞ்சுண்டுவளரும் அருவருக்கத்தக்க இழிய ஓர் வகுப்பினராவார். அவர்கள் அணுவை மலை பண்ணுவார்கள். குற்றமற்றதைக் குற்றஞ் சுமத்துவார்கள். உள்ள பழி சுமத்துவதோடன்றிப் பழியும் உண்டுபண்ணுவார்கள். தங் கருமமாகவேண்டி வல்லமையற்று அழுக்காறுற்று ஓர் மன்னனுக்கு அடியற்ற சங்கையும் தகாக் குறுகுறுப்பு முண்டாக்குவார்கள்.

அதனால், என்னருமைத் தலைமகுட! முதன்மையாக நீ யறிந்து கொள்ள வேண்டுவது மனிதனையேயாம். அவனை நன்று ஆராய் ஒருவன் மற்றொருவனைக் கொண்டுள்ள அபிப்பிராயத்தைக் கேள். அவர்களைச் சிறுகச் சிறுகப் பரிசோதி. எவரையும் முற்றும் நம்பி விடாதே. கொள்ளும் அபிப்பிராயத்தில் சிலவேளைமோசமும் போவாயாதலின் அந்த அனுபவங்கொண்டும் நீயறிவுடையோனாகுக. தீயர்கள் மிகத் தந்திரமாய் கரந்துறைதலால், அவர்களை யெப்பொழுதுங் கண்டுபிடித்தல் முடியாது. அதனால் பிறரைக்குறித்து அபிப்பிராயங்கொள்வதில் சாவதானம் வேண்டும். அவர்கள் நல்லோரென்றேனும் தீயோரென்றேனும் பதறி முடிவுகொள்ளாதே. கொள்ளவையேல், தவறு எவ்விதமானாலும் ஆபத்துக்கிடமாகும். இவ்விதமாகத் தவறாலும் உனக்கறிவுண்டாகும். அறமும் ஆற்றலுமுள்ள ஒருவன் கிடைத்தால், அவனுக்கு வினையிடல் மட்டும் போதாது. அவனை நம்பவும் வேண்டும். ஏனெனில், அவ்வித மனிதர்கள் தமது தகுதியுடைமை பிறர் தெரிந்துணர வேண்டுமென்ற ஆசையுடையவர்கள். பொருட்பரிசிலும் பிறர்நம்பப் பிறர்மதிக்க நடப்பதே மேலானதென்னுங் கொள்கையுள்ளவர்கள். அற்பவிஷயங்களில் எப்பொழுதும் ஆசைகொள்ளா மனவுறுதியுடையோர் பலர் வரையற்ற அதிகாரமும் மட்டற்ற செல்வமும் அவர்களாசையைக் கவர்ந்திழுக்கும்பொழுது எதிர்த்து நிற்கமாட்டாது சாய்ந்துமுறிந்தாராதலின், அவர்களுக்கு வரம்பிலா அதிகாரங் கொடுத்து அவரது நல்லொழுக்கத்திற்குக் கேடுவரச் செய்யாதே. அரசநட்பிற்குத் தகுதியான அறிவும் அறமும் வாய்ந்த இருவர் மூவர்கள் கிடைக்கும்படியான



தேவரருள் ஓர் மன்னனுக்கிருமாயின் அதேகுணத்தினராய் அரசாங்கத்தில் தாழ்ந்த வேலைகள் மேற்கொள்ளத் தகுதியுடைய ஏனையர்களை யவர்கள் மூலம் கண்டுகொள்வான். இப்படியாகத் தான் தேர்ந்த சிலர் மூலமாய்த் தன் கண்களாலென்று மெட்டமுடியாத மற்றவர்களைத் தெரிந்துகொள்ள நேரும்" எனத்தலைமகுடனுக்கு மந்திரர் சொன்னார்.

"சீலமில்லாவிடினும் வல்லமையுள்ளோர்களை நியமிக்கவேண்டுமென நான் பலவாறு கேட்டிருக்கின்றேனே" என்றான் தலைமகுடன். அவ்வித மனிதர்களை நியமிக்கவேண்டுவதும் சிலவேளை யவசியமாக நேரும். ஓர் நாட்டார் கலகம் விளைத்து ஒழுங்கற்றிருக்கும்பொழுது கெட்டவர்களும் சூழ்ச்சியுள்ளவர்களும் அதிகாரங் கைக்கொண்டிருக்க நேரும். அவர்கள் அரசாங்கத்தில் உடனே நீக்கமுடியாத் குறிப்பான வேலையிலிருப்பார்கள். திடீரென எதிர்க்கமுடியாத அதிகாரமும் செல்வாக்கும் பெற்றவர்களும் அவர்களிடம் நம்பிக்கை வைத்திருப்பார்கள். அவர்களையே நேரே யெதிர்த்தால் எல்லாவற்றையும் தீராவண்ணம் கலக்கிக் குழப்பி விடுவார்களாதலின், அவர்களையும் எதிர்க்கக்கூடாது. அவர்களைச் சிறிதுகாலம் வேலையில் வைத்திருக்கவேண்டும். ஆனால் அவர்களது பெருக்கத்தைச சிறுகச் சிறுகக் குறைப்பதில் மாறு நோக்கம்வேண்டும். அவர்கள் வேலையிலிருக்கும்பொழுதும் அவர்களை நம்பிவிட வொண்ணாது. எவன் தன்னுண் மறையை யவர்களிடம் வெளியிடுகின்றானோ அவன், அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தவனாகின்றான். அவ்வதிகாரத்தை யவர்கள் முறை தப்பிச் செலுத்துவது திண்ணம். வெளியிடுபவன் வெளியிட்ட நிமிஷமுதல் அவ்வதிகாரத்திற்குத்தானே யடிமையாவான்.

சங்கிலியாற் பிணிபட்டதுபோல், தனது மறையாற் பிணிபட்டு அவர்களிஷ்டப்படி யிழுபடுவான். தனது பந்தத்தை நினைத்து எவ்வளவு துக்கப்படினும் அதைவிட்டு விலகவுமுடியாது. இரகசியமிலா வெளிவிஷயங்களை யவர்கள் நடத்தட்டும். அவர்கள் அன்புடனும் மரியாதையுடனும் நடத்தப்படட்டும். தமது நோக்கப்படி விட்டால் மட்டும் அவர்கள் பற்றி நிற்பார்களாதலின், அவர் நோக்கப்படி யவர்களுக்கு வினையிடல் வேண்டும். ஆனால் முக்கியமான இரகசிய

மான போசனைகளில் அவர்களைக் கலக்கவொண்ணாது. அவர்களைச் சுழற்றிக்கொண்டிருக்கவேண்டுவது தகுதியென எண்ணப்பட்டால் சுழற்றிவிடப் பொறியொன்று எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டும். ஆனால், அரசன் தனதுள்ளத் திறவுகோலையேனும், நாட்டுத்திறவுகோலையேனும் அவர்களை நம்பிக்கொடுக்கக்கூடாது. பெருங்குழப்பமடங்கி தெளிந்த அறிவும் மனநேர்மையும் நிறைந்தோரால் அரசாட்சி யொழுங்காய் நடந்துவரும்பொழுது எவரது தொண்டு மன்னனுக்குச் சிறிதுகாலம் தவிர்க்கமுடியாது வேண்டியிருந்ததோ அந்தத் தீயர்கள் நாளளவில் வேண்டாதவர்களாகி யிருக்குமிடந் தெரியாது மறைந்துபோவார்கள். தீயோரிடத்தாயினும் செய்ந்நன்றி மறப்பின், அத்தீயர்போலவேயாகும். அவ்விதக் குணமுடையோரிடம் அன்புபாராட்டும் பொழுதுகூட அவரது குணத்தை மாற்றும் நோக்கமிருக்கவேண்டும் தவறு மானிட இயலாதலின். அவர்களது பிழைகளிலும் சிலவற்றைக் கவனியாது விடல்வேண்டும். ஆனால் அரசனது அதிகாரம் மெல்ல மெல்ல மேலோங்கி யவர்களது தீச்செயல்களையடக்காது விட்டால் தங்குதடையின்றிச் செய்வார்களாதலால், அவைகளை வேர்களைய வேண்டும். நன்மை புரியவேண்டித் தீயர்களைக் கருவிபாகக் கொள்ளவேண்டி நேருவது எப்படியானாலும் முடிவில் கஷ்டகாலமென்றே நாமொப்புக்கொள்ள வேண்டும். சிலவேளைகளில் அதைத்தள்ள முடியாது கொள்ளவேண்டிவரினும், கூடிய சீக்கிரத்தில் அதை விலக்கவேண்டும். ஒழுங்குபடுத்தவும் நீதிசெலுத்தவுமன்றி நிவேறுசைமட்டும் ஓர் மன்னனுக்கில்லாதிருப்பின் அவனது கருத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வல்லமையும் தூய்மையும் வாய்ந்தவர்கள் அவனுக்குக்கிடைப்பார்கள். மோசகாரர்களும் வஞ்சகர்களும் தாங்கள் செய்யும் தொண்டு எவ்வளவு திறமானவையாயினும், அவர்கள் குணத்தால் இழுக்குண்டாமாதலின் அம்மன்னன் அவர்களை விட்டொழிப்பான்.

(இன்னும் வரும்)

ம. சுப்பிரமணிய அய்யர்.

# ஸ்ரீ மீனாக்ஷி ஸ்தோத்திரம்.

(336-ம் பக்கத்தொடர்ச்சி.)

திண்ணமென்று நினைந்த பொய்யுடற்
றேய்ந்து வெம்பிணி வாய்ந்துபின்
கண்ணு லைந்தென் மனங்க லங்கிடக்
கால னென்னை யழைக்குநாள்
நண்ணி டாதெனை மைந்தர் சுற்ற
மகற்றி நாடுவர் தஞ்செயல்
எண்ணி டாதுனை யான்ம றக்கினு
நாவுன் னாம மிசைக்குமே. (4)

நஞ்சு போன்ற பிரபஞ்ச வாழ்க்கையை
நாடு புல்லறி வோடுறும்
மிஞ்சு பாடொடு துஞ்சு மென்னை
விலக்கு மாவுன் றிருவுளம்
விஞ்சை மாத ரிறைஞ்ச மாமது
ரைக்கண் வீற்றிடு சேற்கணாய்
வஞ்ச மாயுனை யான்ம றக்கினும்
நாவுன் னாமம் வழுத்துமே. (5)

குற்ற மென்னியல் பின்றி யேதுங்
குணமி லாத பிறப்புளேன்
கற்ற சிந்தைய ரோதி னுநெறி
கண்டி டாமதிப் புன்மையேன்
வற்றி டாக்கட லேழை யன்னை
மருங்க மைத்த மனோன்மணி
யுற்ற வுன்றனை யான்ம றக்கினு
நாவுன் னாம முரைக்குமே. (6)

வேத மீதொளிர் சோதி யாகி
விளங்கு முன்னியல் பீதெனப்
பேதை யாளொரு போது ணர்ந்து
பிழைக்கு நீதி வழுத்துவை
வாத வூரடி யார்த மிழ்ச்சுவை
வாச மோர்ந்து மகிழ்ந்திடும்
கோதை யேயுனை யான்ம றக்கினு
நாவுன் னாமங்கள் கூறுமே. (7)

உன்னை யன்றி யெனக்கு நல்லுற
வொன்றி லாத துணர்ந்தியான்
துன்னு முன்கழ லென்ம னத்திடை
சூட்டி னேனருள் காட்டுவை
மின்னு மெண்டிசை யும்பர் சாய்ந்திட
வெற்றி பூண்ட கரத்தினாய்
உன்னி டாதுனை யான்ம றக்கினு
நாவுன் னாம முரைக்குமே. (8)

ஆதி யந்த மகன்ற சோதிமெய்
யன்பு ளாருணா ரின்பமே
கோதொ ழிந்த மனத்த ரோடு
குலாவு நல்லிளங் கோதையே
பாத மாறி நடித்த சம்பு
மருங்கொ ளிர்ந்த பசுங்கொடி
பேத மோடுனை யான்ம றக்கினு
நாவுன் னாமம் பிதற்றுமே. (9)

வீடு வேண்டிலன் மாதர் சுற்றமும்
வேண்டி லேனுடற் பாண்டமாம்
பாடு வேண்டிலன் சிந்தை யுன்னடி
பற்று நீதி யியற்றுவை
கூட லார்தவ மொன்றி யோருருக்
கொண்டெ ழுந்திடு மீன்விழி
வாடி யேயுனை யான்ம றக்கினு
நாவுன் னாமம் வழுத்துமே. (10)

---



## அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

காற்றினுட் புகுந்த பஞ்சின் கதியெனச் சலித்து நெஞ்சிற்
றேற்றமொன் றுணர்வ தின்றிச் சிதைத்திடு மடமை பொல்லாக்
கூற்றினுங் கொடிதா யென்னைக் குலைபவே புரியு மன்போ
டேற்றெனக் கருள்வாய் சேலொத் திலகுகண் ணெழிமீ னாளே. (1)

நினைப்பதொன் றுவ தொன்றாய் நெறியக லுலகின் வாழ்வைத்
தினைப்படி கருதி நோகுந் தீயனுக் கிலையோ பாதை
வனப்பெலாந் திரண்டு வாய்ந்த மரகதக் கொடியே நாயேன்
உனைப்பக லிரவா யேத்தி யுறைவதெந் நாள்சேற் கண்ணாய். (2)

மடமையாற் றோன்றி நீங்கும் வாழ்வதை நிலையென் றுன்னி
விடமெனும் பொருளை நாடி மெலிவுறு மெனையேன் பாராய்
கடனுளார் மதிபோ னைந்து கரைந்தவா னிடையோ டேபொய்
யுடைமனத் திருளெ லாம்வாய்ந் தொளிர்குழற் றிகழ்சேற் கண்ணாய்.

ஊன்மிசை யெழுந்த கோதை யுணவுகொண் டமர்ந்த சேற்றை
ஈனமா மறுவர் வாழு மில்லினைப் புழுமண் புன்னாய்
கானரி பருந்து செந்தீ கழுகெமக் கெனுமிந் நோயை
நானெனச் சுமந்த லென்னா ணவில்கயற் பொலியுங் கண்ணாய். (4)

பெற்றவர் மணந்த பேதை பேசிடு மன்பர் சுற்றம்
உற்றிடும் புதல்வ ரோயா தோடியான் கவருஞ் செல்வம்
கற்றன மறலி தோன்றிக் கடுகநா ளென்னுங் கூடல்
நற்றவப் பயனாய் வந்த நங்கையே கயலாங் கண்ணாய். (5)

மறையினுட் கலந்த மெய்யே மருளிலார் மதியிற் றோய்ந்து
நிறையுநல் லுணர்வே ஞால நினைவெலாந் துறந்து நீங்காப்
பொறையுளா ரருந்தி யுள்ளிற் புகட்டிடு மமுதே யென்றன்
குறையகற் றிடுமோ ராறு குறிப்பைசேல் விரித்த கண்ணாய். (6)

எப்பிணி செறிந்து மூண்ட ன்றெனை வருத் திடுமோ சுற்றம்
கைப்பமர் மருந்து னூட்டக் கழலுமென் னறிவு வேளை
தப்பிலா மறலி காய்ந்து தமியனைக் கொளவே நாடு
மப்பொழு திசைந்தென் முன்ன ராவையோ கயற்கண் கோவே (7)

வாடுமெய் யிளமை புன்னோய் வாலிபம் மமதை காமக்
கேடுபெண் காதல் மைந்தர் கிளையெழுந் துயரங் கைத்து
வீடெனா மயக்கம் வாய்ந்தும் மிடிமையின் முதுமை சாவென்
பாடொழிந் தெளியேன் மீளப் பகர்வைசேல் நிகர்கண் ணாளே. (8)

தண்ணருட் பொலிவே நின்றாள் தனைத்துணை கொளுமிந் நாயேன்
புண்ணுறற் குளதோ நீதி புன்வினை யலைத்தும் நின்றன்
கண்ணுறிற் படுமென் றோதிக் கபடமா புரியும் வேதம்
விண்மரக் கனியே மீன விழியினாய் மொழியொன் றோதாய். (9)

பட்டிடு மெளியேன் பாடு பகரவிங் கெளிதா னோவால்
அட்டுபால் நிகரென் னுள்ளத் தமருநீ யறியா தென்ன
பிட்டிடு மெளியாள் நெஞ்சப் பிணியகற் றிறைவ னோர்பால்
விட்டிடா தமரு மன்பே மீன்விழி திகழு மின்னே. (10)

---

அருளிலாள் போலென் சிந்தை அனலுற விசைப்பை தீங்கு
வருமெனப் பயந்து நோங்கால் மகிழ்வுற வமைப்பை பெண்ணாப்
பொருளெலாம் நயப்பை வேண்டும் பொருள்கரந் திடுவை புந்தி
மருளிலா ரன்றி யாருன் வழக்கறிந் திடவல் லாரே. (11)

தொல்வினை வலிய தென்றே சொல்வரோர் மாற்ற மென்கில்
அல்லொடு பகலுன் னாம மரற்றியே யமரு முள்ளம்
புல்லுமார் வினைய னைத்தும் பொறியுமென் றுரைக்கு மேலோர்
சொல்லுமா பொய்யாம் வேதச் சுடரெனத் துலங்கு மன்பே. (12)

இக்கணம் மகிழ்வு பின்னா மிமைப்பொழு தரிய துன்பங்
கைக்குளொன் றாகு மென்றே கருதியோர் பொழுது வத்தல்
பக்குவ மகன்று புந்தி பதறுமோர் கால மென்கில்
எக்கணஞ் சுகமாய் வாழ்வுற் றிருப்பனோ இயம்பி டாயே. (13)

சுத்தநிர்க் குணமென் றுன்னைத் தூற்றுவார் சிலர தற்குச்
சத்தியென் றுனைவே றாகச் சாற்றுவ ரிரண்டு மொன்றாம்
தத்துவ மெனவுஞ் சொல்வர் சத்தையென் பார சத்தின்
வித்துநீ யென்ப ராருன் மெய்மைகண் டிடவல் லாரே. (14)



வேண்டிலார்க் குனது வண்மை விருப்பிலார்க் கன்பு நேயம்
பூண்டிலார் மருங்கு நேயம் பொருந்திட லுனது பண்பு
காண்டிலார் விழிக்க கன்று கரந்திடு குணத்தோய் விட்டு
மீண்டிலே னுனது பொற்றாள் விரிகயற் பொலிகண் ணாளே. (15)

கற்பதிற் பயனென் சாலக் காசினி முழுதுந் தாங்கி
நிற்பதிற் பயனென் மண்மேல் நீடுயிர் பொருந்தி யென்னோ
முற்பவப் பிணிகள் போக்கும் கயல்விழி முதிரன் போடுன்
பொற்பதம் பணியார் துஞ்சிப் பிறந்துதேய் புலையர் தாமே. (16)

வாய்க்குமெவ் வலியும் பூண்டு வரமரு ளுவர்மு னிந்தே
மாய்க்கினு மாய்ப்ப ரீசன் மாலயன் முதலோ ரீன்ற
சேய்க்குண மறிந்தே வேண்டா தேங்கினு மூட்டி யோம்பும்
தாய்க்குணம் நின்பா லன்றிப் பிறர்மிசை யுளதோ சாற்றாய். (17)

பிறக்கினு மிறப்புத் தேற்றம் பீடழிந் துலகிற் பின்னர்
இறக்கினும் பிறப்பு மீளு மிக்குணந் தெரிந்து காயம்
துறக்கவும் அறியே னாங்கிச் சுமக்கவும் விரும்பேன் நாயேன்
சிறக்கவாழ் முறையுண் டோசொல் சேலெழிற் கண்ணி னாளே. (18)

இலையெனப் புகலுங் கன்ம மிருப்பினு மதுசா லாதென்
றலையுமென் கொடிய சிந்தை அன்புளா ருளம் நிறைந்தே
நிலைபெறும் மணியே பொன்னே நெடியபொக் கிஷமே யென்றன்
புலைநெஞ் சலம்வாய்ந் தாறப் புரிவைசேல் பொலிகண் ணாளே. ()

நயப்பறும் பிறவி நோயால் நைந்துழப் பணுகிப் பின்னர்
பயப்படக் குருகுங் கூற்றிப் பாடுநீங் காம லேபுன்
மயப்பவப் புணரி புக்கி மாயுநோய்க் கரும ருந்தாங்
கயப்பக லமுதே உன்னைக் காணுநா ளெதுசேற் கண்ணாய். (20)

ஆசையில் லார்க்கு நல்கு மன்புளாய் எளியேன் சற்றும்
மாசிலா திறைஞ்சி நின்றன் மலரடி யினையன் போடு
பேசியிங் கமர வொண்ணாப் பிழைசெய்யென் மடமைக் கஞ்சி
யாசனை யுன்பாற் செய்யின் அதுவமா ஆசையன்னாய். (21)

விஞ்சையர் துயர நீக்க மேதினி முழுதும் பொல்லா
வஞ்சனேர் நிருதர் துன்பத் திடைவருந் தாதன் றன்பு
மிஞ்சியே பேண லுற்ற மீன்விழி நினது பொற்றாள்
தஞ்சமென் றடைந்த நாயேன் தளர்ந்திடன் முறையோ சொல்லாய்.

விண்டலந் தகர்த்து நோக விறல்வலி வாய்ந்து காயும்
பண்டனைப் புதல்வ ரோடு பழுதறத் துடைத்த நேயக்
கொண்டலே கருணை யெல்லாங் கூடுமீன் விழியே நின்றன் [ய்.
தொண்டருட் கடைய னேனும் சோர்ந்திடல் முறையோ சொல்லா

மெய்யெனப் புகல்வர் சான்றோர் விரியுமா மறை விளக்கும்
துய்யதென் றுரைப்பர் ஞானச் சோதியென் றிடுவர் காயம்
கையவாய் மூடி யோகத் திறந்திகாண் நடுமை யென்பர்
வையக முனைவெவ் வேறாய் வழுத்திடுஞ் சேற்க ணாளே. (24)

---

எழுசீர்க்கழி நெடில் விருத்தம்.

மாமறைச் சுடரே மதியினுட் டிகழும்
மர்மமே மருளிலா ரிதுவே
யாமெனக் குறிகண் டேத்துமெய்ப் பொருளே
அன்புளார் முன்வருங் குருவே
காமருஞ் சீராம் நின்பதக் கழலைக்
கருதியே போற்றுமிப் புலைய
பாமரன் றனைநீ கைவிடன் முறையா
பைங்கயல் பொலிவிழி யெழிலாய். (1)

ஆரிடம் புகல்வே னென்குறை யொருகால்
அறிவிலாப் பேதையா னெனினும்
நேருறத் தாயென் னைவிடிற் பிறிதார்
நினைவரோ யெனையுமா ளாக்கப்
பாரிலெங் குளரென் போலுமெய் யறியாப்
பான்மையோர் கூடலம் பதியில்
சீரமர் பாண்டிப் புரவலன் புனிதச்
செல்வமாய் எழுந்தமீன் விழியாய். (2)



கற்பகத் தருவே கருணையங் கடலே
கருதுதற் கினியவா னமுதே
நற்பெருந் தவமே தவத்தெழுந் திருவே
நவிலவொண் ணாவிரத் தினமே
சொற்பெறும் பொருளே துரியபொற் சுடரே
சுகமெலாந் திரண்டசெங் கனியே
அற்பனென் றெனைநீ தள்ளிடா தருள்வாய்
அழகிய சேல்விழி யன்னாய். (3)

மாமறைப் பயனே மறையுமங் குரையா
மர்மமே மறைவலார் கருதுஞ்
சேமமே பெருகுந் திரவியக் கனியாய்த்
திரண்டுவாய்ந் திட்டபொக் கிசமே
பாமரற் கிசையாப் பான்மையே யுணரும்
பண்டிதற் கினியகற் கண்டே
காமருஞ் சேற்கண் பொலியிளங் கொடியே
கருணையோ டெனையுநீ காவாய். (4)

சுத்தமாங் குணமே துணையிலார் துணையே
தூயவர்க் கினியநல் லுறவே
நித்தமே நினைவே நினைவினுக் குயிரே
நினைவொழிந் தார்கணன் னிலையே
அத்தனோர் பாகத் தமருமின் னொளியே
யரியமா தவர்தலைக் கணியும்
முத்தமே மணியே சேல்விழிப் பொலிவே
மூடனு னைமுறை மொழியாய். (5)

நூலெலாம் புகலும் நாலுறை பொருளின்
நுண்மை கண்டாரு மோதிடுவர்
பாலெலா முறைநெய் யெனவுல கிடைநீ
பரவிடுங் குணமெனப் புவியின்

மேலெலா மகற்றி நின்கழற் றுணையே
வேண்டியுன் பெயரினை யோதி
ஞாலெலா முறுமென் மாற்றமேன் பிழையா
நடிகயற் றிகழ்விழி நவிலாய். (6)

கோதுளே னெனினு மென்றுநின் பெயரே
கூறிமற் றோர்துணை மருவாப்
பேதையே னுளமிங் கோய்விலா தடையும்
பிணியுற வீதியா மொழிவை
மாதவத் தமர்வோர் மாமறைப் பொருளாய்
மாண்புளார் மிசையுற வாகும்
போதமே பாண்டிக் குலத்தொளி விளக்கே
புகல்வைசேல் விழிவனப் புடையாய். (7)

---

தனித்தமிழ்வேத்தின் றலைநகராய புதுவை
பண்டித சிகாமணி இராதாகிருஷ்ணசாஸ்திரிகள்
சிவபதமடைந்தபோது அவர்கள் நண்பருளொருவர்
பிரிவாற்றாது கூறிய

## சரமகவிகள்.

——:)(:——

ஆறாத் துயர்க்கடலி லாழ்த்தி யடியோமை
வேறாய்ப் பிரிந்த விதமென்னே—கூறாய்
கரும்பு முவர்ப்பக் கனிவாய் மறைநா
லரும்புமிரா தாகிருட்டி ணா. 1.

வேதகவி யாதனென மேலவர்கண் மன்புகழப்
பூதல மீதோர் புதுவையுறீஇக்—கோதகற்றி
யென்றன்னைத் தேற்று மிணையிலிரா தாகிருஷ்ணா
வன்றன்னைக் காணா னுரை. 2.

யானின் னிடத்துவைத்த விச்சையெண்ணி ராயிரமாந்
தேனிகர்சொற் கோபியரைத் தேங்கவைத்தே—வானகத்துச்
சென்றாய் சிறியேனென் செய்வே னிதுநினக்கு
நன்றாரா தாகிருஷ்ணா. 3.

இந்த முகமு மிணையிலி ருளகற்றும்
மந்த நகையும்யான் பாபாவி—யெந்தநாட்
காண்பேன்ரா தாகிருஷ்ணா கற்றோர் கவின்முடிமேற்
பூண்பாத வாரிசப் போதா. 4.

பஞ்சவரை நீத்துப் பரமண் டலம்படைக
ளஞ்சுடையான் சென்றநா ளாயிற்றே—விஞ்சுபுகழ்
ராதாகிருஷ் ணாவெளியே ஞாலத் தயர்ந்திடநீ
பீதா விரைந்தேகி னாள். 5.

தங்குமுட லொழீஇச் சச்சிதா நந்தமா
யெங்குநிறைந் தாய்ராதா கிருஷ்ணாவிப்—பொங்குதுயர்
என்னுளத்துக் கண்டிலையோ வேனென்று கேளாது
துன்னுவது புண்ணியமோ சொல். 6.

நற்பிரம சூத்திரமு நன்றா முபநிடமும்
கற்பதற்கி யார்பாற் கடையேமை—நிற்பதென்று
வைத்தாய்ரா தாகிருஷ்ணா மாமறைகள் சொல்லும்வாய்
மைத்தாரா வாய்திறந்த சொல். 7.

புன்கண் சிறிதும் புகாமே யெனைக்காத்தே காய்
என்கண் ணிழிதுன்பக் கண்ணீரை—முன்காணின்
ஆற்றுவையோ வையா வழகாவஞ் ஞானமிறச்
சாற்றுமிரா தாகிருட்டி ணை. 8.

கற்பாருங் காரிகையார் காதலரா லாற்பிறரைப்
பொற்பால் விரும்புவரோ புண்ணியனே—நிற்பிரிந்திங்
கின்னுமிரா தாகிருஷ்ணா வேகுவரோ நின்னடியார்
பன்னும் பிறர்பாற் பகர் 9.

கல்விக் கடல்கடக்கக் கப்பலாய் நின்றானைப்
புல்வினையேன் போக்கிப் புலம்புகின்றேன்—நல்விருந்தாய்
நாகருக்குச் சென்றாய்நீ ராதாக்ருஷ் ணாவுமையோர்
பாகருக்குப் பற்றான வா. 10.

ஓர் அன்பன்.

---



முந்தவரு மும்மதமு மூவிசையி னோரிசையு
மந்தமா வார்க்குமுரு மாமலையே—சந்தமார்
வெற்புருவ மாமடிய வேல்விடுத்தார் மெய்த்தொண்ட
ரற்புருவ மாமடிய ரார்வு. (௧௫)

முற்படவரு மூன்று மதங்களை யானைகள் (வீதியிலே) ஒழுக்கும். மூன்று இராகங்களில் ஒரு இராகம் மந்த கதியாக முழக்கும்.

கண்டமைசொல் லார்விழிக்குங் காண்மங் கலஞ்சொலற்கும்
வண்ட ரமையுமுரு மாமலையே—தொண்ட
ரகமொன்று கந்தன் பருள்புரியீ ராறம்
பகமொன்று கந்தன் பதி. (௧௬)

கற்கண்டின்சுவை பொருந்திய சொல்லையுடைய பெண்கள் கண்களுக்கு வண்டும் அரமும் (ஒவ்வாமல்) கெடும். காணப்பட்ட சுபச்செய்கைகளைக் கூறுதற்கு மங்கலப்பாடகர் பொருந்தும்.

முட்டுதொழின் முற்றா முலையு முகிழ்முலையும்
வட்டுடையச் சீர்க்குமுரு மாமலையே—யெட்டு
வடிவேற் குமரன் மகனாக வந்த
வடிவேற் குமரன் மனை. (௧௭)

(ஆடவர் மார்பில்) மோதுகின்ற செய்கை முதிராத (மாதாது) இளங் கொங்கைகள் சூதாடுகருவியுடையச் சிறப்புற்றிருக்கும். (அத்தொழில் வல்ல) தாமரையரும்புபோலுங் கொங்கைகள் கச்சினது உருவத்தைப் பிளந்து வெளிச்செல்லும்.

பாலைக்கொள் சொல்லாரும் பங்கயத்தைப் பான்மதியு
மாலைக் கொடுக்குமுரு மாமலையே—வேலைக்
கெடுத்தகரக் கொன்றா ரிலங்குவே லிற்கூர்
வடுத்தகரக் கொன்றார் மனை. (௧௮)

பாலினினிமையைத் தன்வசமாக்குஞ் சொல்லையுடைய மாதர் (தம்மை விரும்பும் ஆடவர்க்கு) மயக்கத்தைத்தரும். பால் போலும் வெள்ளிய பெரிய சந்திரன் தாமரை மலரை மாலைக்காலத்தில் குவியச்செய்யும்.

கூட்டங்கொள் வேதியர்பாற் கொண்கரைச்சேர் கோதையர்பால்
வாட்டந் தவிருமுரு மாமலையே—நாட்டமொரு
மூன்றாரெட் டார்க்குருவாய் முன்னிருந்தா ரெவ்வுயிர்க்குஞ்
சான்றாரெட் டார்தந் தலம். (௧௯)

கூட்டமாகிய அந்தணரிடத்தில் ஒளிபொருந்திய நூல் (சாத்திரம்) பிரகாசிக்கும். கணவரைச் சேர்கின்ற மாதரிடத்து வாட்டம் நீங்கும்.

ஓதுசிவா சாரியரு மொண்டிறலோர் தூணிகளும்
வாதுளம் பார்க்குமுரு மாமலையே—தீதுதவிர்
செங்கையா ரோணத்தார் சிந்திக்குஞ் செய்யவே
லங்கையா ரோணத்தா ரார்வு. (௪0)

சொல்லுகின்ற ஆதிசைவர் வாதுளாகமத்தை யாராயும். ஒள்ளிய வலியுடைய வீரரது அம்பறாத் தூணிகளில் கலகத்தை நினைக்கின்ற பாணம் முழங்கும்.

கானந் திகழ்செஞ்சொற் கற்பினர்நெஞ் சுங்களமு
மானந் திகழுமுரு மாமலையே—தானந்த
மாதியற்ற னெங்கு மரகரவென் பார்க்கனுவுந்
தீதியற்ற னெங்குமரன் சேர்வு. (௪௧)

இசைவிளங்குகின்ற செவ்விய சொல்லையுடைய கற்புடைப் பெண்கள் மனத்தினிடத்து மானம் பிரகாசிக்கும். (அப்பெண்கள்) கண்டம் பெரிய சங்கத்தை யிகழ்ச்சி செய்யும்.

ஆடகயாழ் வாசிப் பவருமுழ வாற்றுநரு
மாடகமு றுக்குமுரு மாமலையே தோடலர்பூங்
கைய மருமாறர் காதலர்வான் காவலன்மால்
செய்ய மருமாறர் சேர்வு. (௪௨)

பொன்னாற் செய்தவீணை வாசிப்பவர் முறுக்காணியை முறுக்கும். உழவுதொழில் செய்பவர் மாடுகளை வீட்டினிடத்துப் பொருந்தும்படி சேர்க்கும்

அந்திக்குங் காமுகரை யாண்மகப்பே றுமறத்தை
வந்திக்கு மோதுமுரு மாமலையே—சிந்திப்பார்க்
கன்பா லருளொருவ ரைம்முகத்தெ மையனரு
ணன்பா லருளொருவர் நாடு. (௪௩)

அடுக்கின்ற விரகியரைக் கருப்புவில் வந்து தாக்கும். புத்திரப்பேறுண்டாந்தருமத்தை மலடிக்கும்போதிக்கும்.

செய்க்கோல மள்ளரும்போர் செய்களத்தூன் றேர்பருந்தும்
வைக்கோ லுணக்குமுரு மாமலையே—பொய்க்கோல
மாயனு ராயுமுள்ளார் மாமருகர் மன்னுயிர்க்குத்
தாயனு ராயுமுள்ளார் சார்பு. (௪௪)



வயல்களிடத்து அழகிய உழவர் வைக்கோல் காய வைக்கும். யுத்தக்களத்தில் மாமிசத்தை விரும்புகின்ற பருந்து (அவ்விச்சையால்) கூரிய பாணத்தினித்டதுச் சுவைக்கும்.

தேசமையுங் கொண்மூவுஞ் செந்தா மரைத்தடமும்
வாசவனங் கூருமுரு மாமலையே—காசறையுண்
மட்டிப்போ தித்தார்ப்பா மாதுகேள் வன்றன்னைக்
குட்டிப்போ தித்தார் குடி. (௪௫)

அழகமைந்த மேகத்தை யிந்திரனங்குச் செலுத்தும். செவ்விய தாமரைப்பொய்கையில் மணக்கின்ற சலம் மிகும்.

உன்னருமின் னார்முலைக்கு மோர்வகைக்கி ளிக்குமஞ்சு
வன்னஞ் சிறக்குமுரு மாமலையே—முன்னம்
புனக்குறவ ரானார்கொள் பூவைமணஞ் செய்தா
ரெனக்குறவ ரானா ரிடம். (௪௬)

நினைத்தற்கரிய பெண்கள் கொங்கைக்கு (ஒப்பாகாமல்) சூதாடுகருவி நைந்து இறந்துபடும். ஒருவிதமான கிளிக்கு அஞ்சு நிறம் சிறந்திருக்கும்.

போரமையும் வீரரும் பொன்மலரும் பூங்கணியும்
வாரம் புணருமுரு மாமலையே—நாரதனார்
மன்மகத்து வந்தங்கு வாய்த்தவச வாகனத்தார்
மன்மகத்து வந்தங்கு வாழ்வு. (௪௭)

யுத்தம்பொருந்திய வீரர் நீண்டபாணங்களை யாராயும். பொன்போல் மலரும்பொலி வினையுடைய வேங்கைமரங்கள் மலைப்பக்கத்தைச் சேர்ந்திருக்கும்.

கற்சுனையின் பூம்புனலுங் கற்புடைமின் னார்களமு
மற்சங் கொழிக்குமுரு மாமலையே—நற்சங்கத்
தார்கலக முற்ற தகற்றினா ரென்னெஞ்சா
மோர்கலக முற்ற ருழை. (௪௮)

கல்லிடத்துள்ள சுனையின்பூக்களையுடைய நீர் மீன்களைக்கொழிக்கும். கற்புடைய பெண்கள் கண்டம் வலிய சங்கினைக்கெடுக்கும்.

* மேனகைநேர் மின்னார்கண் வேலில் விழாத்தெருவின்
மானஞ் சுழலுமுரு மாமலையே—பானல்வே
லம்மைமண வாளரநே ரம்பகங்க ளார்வள்ளி
யம்மைமண வாள ரகம். (சகூ)

மேனகைபோன்ற பெண்கள் கண்ணாகிய வேலில் மயக்கத்தைச் செய்யு நஞ்சு சஞ்சரிக்கும். திருவிழா நடக்கும் வீதிகளிலே தெய்வ விமானங்கள் சுற்றி வரும்.

தேசமைபொன் சேரிடமுஞ் சிட்டருஞ் செஃறினமு
மாசஞ் சரிக்குமுரு மாமலையே—நேச
மிலங்கவரு வானோ ரெதிரசுர ரெய்தும்
பலங்கவரு வானோர் பதி. (ருo)

அழகமையுந்திரவியஞ் சேருமிடத்தில் இலக்குமிசஞ்சரிக்கும். ஞானிகள் ஐவகைக்குற்றங்களைக் கெடுக்கும். செல்லுகின்ற தினங்கள் மாதத்தைக் குறைக்கும்.

ஒண்டளிப்பூங் காமதுவு மொத்தவிதை வித்துநரு
மண்டலச்சால் பாயுமுரு மாமலையே—தண்டமிழ்க்கு
மூலப் பொதிகையினார் முந்து முனிக்கருள்வேல்
சாலப் பொதிகையினார் சார்பு. (ருக)

ஒள்ளிய தளிர்களையுடைய பூஞ்சோலையிலுள்ளதேன் நெருங்கிய கலப்பையுழுஞ் சாலிலே பாய்ந்தோடும். பொருத்தமாகிய விதைகளை விதைக்கின்ற உழுநர் நிலத்தின் குணத்தையாராயும்.

சூளமர்மின் னார்கட்கு முன்னு முலைக்குமுன்னும்
வாளஞ் சலிக்குமுரு மாமலையே—காளமன்று
நல்லவிசா கத்தா னயந்துநுகர் நம்பனருள்
வல்லவிசா கத்தான் மனை. (ருஉ)

மாதர்கள் சூளுகின்றபோரையுடைய கண்களுக்கு நேரில் வாளாயுதங் கும்பிடும். (அவரது) தனத்துக்குநேரில் சக்கரவாகப்பறவை சோர்வடையும்.

---

* ஐவகைக்குற்றம் பஞ்சேந்திரியம்.



ஓதுமின்னா ரின்சொல்லு மோர்வகை யோகியரு
மாதுரிய மண்டுமுரு மாமலையே—யோதுகையிற்
றத்தரிணைக் கத்தர் தரும்பாலர் சாதுவாம்
பத்தரிணைக் கத்தர் பதி. (ருங)

(யாவருமெடுத்து)ச்சொல்லும் பெண்களின் வார்த்தைமதுரஞ் செறிந்திருக்கும். ஒருவிதமானயோகஞ்செய்பவர் பெரியதுரியநிலையடுத்திருக்கும்.

வெள்ளம் படர்நதியில் வீரர்போர் வெல்வில்லில்
வள்ளம் படருமுரு மாமலையே—புள்ளவல
மாறுவத னத்தா ரகலவன்று குட்டியரு
ளாறுவத னத்தா ரகம். (ருச)

வெள்ள நீர் செல்லுகின்ற ஆற்றில் வளளம் செல்லாநிற்கும்.( வள்ளம் நாவாய் வகையுளொன்று)வீரர்கள் யுத்தத்தில் வெல்லுகின்ற வில்லிற்கூரிய பாணங்கள் நெருங்கும்.

ஒண்சஞ் சிதத்தைமுனி வோரு முழுநரும
வண்சங் கரிக்குமுரு மாமலையே—பெண்சங்க
வாணரொடுங்காதலுற்று வந்திருந்தார் வைவேற்கை
யாணரொடுங் காதவ ரில். (ருரு)

இருடிகள் [தம்மிடத்துப்) பொருந்திய சஞ்சிதகன்மத்தை யவ்விடத்துக்கெடுக்கும். உழவர்கள் அந்தவளந்தங்கிய சங்குகளை (நீரில்)அரித்தெடுக்கும்.

சாரம் புயனின்று தண்பயிர்க்குஞ் சற்சனர்க்கும்
வாரம் பிறங்கு முரு மாமலையே—யேரம்ப
னந்தமைய னென்பா ரரவோ டணியுமர
னந்தமைய னென்பார் நகர். (ருசா)

குளிர்ந்த பயிர்களுக்குச் சார்ந்த அழகிய மேகத்தினின்று நீண்டநீர் (வளர்ப்பதற்குக்கீழே) வரும். சாதுக்களுக்கு அன்புவிளங்கும்.

ஞாயமுணர்ந் தோர்களுமின் னார்மயலை ஞானிகளு
மாய மறுக்குமுரு மாமலையே—யாயுயிர்பா
லோடுகுடி யேற்றினா ரொண்சுதர்வா னோரையும்பர்
நாடுகுடி யேற்றினார் நாடு. (ருஎ)

நியாயத்தையுணர்ந்தவர்கள் பொய்யையறுத்தெறியும். பெண்கள் மயக்கத்தை மாயும்படி ஞானிகள் தடுக்கும்.

கல்விலங்கு தோள்வயவர் கையுங் கவுண்மதமும்
வல்விலங்கு கக்குமுரு மாமலையே—நல்விலங்கைக்
கொண்டருச்சி யாரடியார் கூட்டறச்செய் கோமகனு
ரண்டருச்சி யாரடியா ரார்வு. (ருஅ)

மலைவிலகிச்செல்லும் புயங்களையுடைய வீரர்கள் கரம் வலிய வில்லை யவ்விடத்துமகிழும். கன்னமதத்தை யானைகள் கொட்டும்.

பானலஞ்சொல் லார்விழியும் பல்வினைவார்ப் பாரேவரும்
வானம்ப ராவுமுரு மாமலையே—கானந்
திகழ்குரவ னானன் றிருவுளஞ்சிந் தித்துப்
புகழ்குரவ னானன் புரி. (ருகூ)

பால்போலு நல்ல அழகிய சொல்லையுடைய பெண்கள் கண்கள் பெரிய பாணங்களை யறுக்கும். பல வினைவுப் பதார்த்தங்களை நிறைப்பவர்கள் மழையைத் துதிக்கும்.

மேலமரர் நெஞ்சில் விரிமலர்ப்பூ மென்காவின்
மாலதிகந் துன்னுமுரு மாமலையே—காலங்
கடந்திருந்த வையார்வேற் கந்தரொன் றுங் கல்லார்
மடந்திருந்த வையார் மனை. (சுo)

ஆகாயத்திலுள்ள தேவர்கள் இருதயத்தில் மயக்கத்தை நீங்கி நினைக்கும். விரிந்த மலர்களையுடைய மிருதுவாகிய சோலையிலுள்ள சிறு சண்பக மரங்கள் மேகத்தில் நெருங்கும்.

பூசித்து நூலைப் புலவரும் பொய்கையுளும்
வாசித்துப் பாடுமுரு மாமலையே—பூசநாண்
மாவிரத ரத்தினமே வாழ்வுபெற வந்தருளுந்
தீவிரத ரத்தினர் சேர்வு. (சுக)

வித்துவான்கள் இலக்கண இலக்கியங்களைப் போற்றிப் படித்துப்பாடும். தடாகங்களின் மத்தியிலே மிகுதியாகிய பவளக்கொடிகளசையும்.

உய்கையாற் றுமதனை யொண்டொடியா ருந்நீரும்
வைகையாற் றாறுமுரு மாமலையே—பொய்கையினி
லுத்தமாங் கந்தானு றற்றவும்ப லாயென்றன்
சித்தமாங் கந்தானன் சேர்வு. (சுஉ)



பிழைத்தலைச் செய்யாத மன்மதனை மாதர்கள் வைகினாலே நிந்திக்கும். தண்ணீர் தங்கிய அழகையுடைய நதிகளினூறிப் பெருகும்.

ஆய்பவர்மேம் பாடுறற்கு மங்கையா ரங்கட்கும்
வாய்மையறத் தீட்டுமுரு மாமலையே—பாய்மையினு
மேறிவரு வானவன்சி ரேத்து மெனக்கருளு
மேறிவரு வானவன்சே யில். (சுங)

(நூல்) ஆராய்ச்சி யுடையார் (தாம்) மேன்மை யடையும் பொருட்டு மெய்யாகிய தரும வழியிலே (பொருள்) சம்பாதிக்கும். பெண்கள் அழகிய கண்களுக்குப் பொருந்திய மையை மிக எழுதும்.

ஆசறுமின் னாரிடையு மன்பரகன் றூர்தனமு
மாசுணங் கொல்லுமுரு மாமலையே—வாசமிகு
மங்கடம்பந் தாராருள் ளன்பிலார்க் கல்லுளார்
தங்கடம்பந் தாரார் தலம். (சுச)

குற்றமற்ற பெண்கள் இடை பாம்பை (உவமை யாகாமற்) கெடுக்கும் கணவரைப்பிரிந்த மாதர் தனம் பெரியதேமலைப்பொருந்தும்.

அத்தந்தேர் வார்களிட மங்கையார் கொங்கைபெரு
மைத்தந் திமைக்குமுரு மாமலையே—நித்தல்
புகழா ரியனவார் போற்றுசிவ னுக்குந்
திகழா ரியனவார் சேர்வு. (சுரு)

பொருளாராய்ச்சியுடையாரிடத்தில் பெருமை பொருந்திய சாஸ்திரம் பிரகாசிக்கும். பெண்கள் தனம் பெரிய கரிய யானையைக்கெடுக்கும்.

தானமிசை யாழிசையுந் தண்டலையிற் றண்கனியும்
வானரம் புய்க்குமுரு மாமலையே—தானவரைச்
சங்கரிக்கு மைந்தன் றமையவே றுங்கிதின்றேன்
சங்கரிக்கு மைந்தன் றலம். (சுசு)

(பாடுகின்ற) இடங்களிசைந்த வீணையினாலாகிய இசைப்பாட்டை வெள்ளிய நரம்பு செலுத்தும். சோலையிலுள்ள குளிர்ந்த பழங்களைக் குரங்குகள் பிடுங்கும்.

மின்மலிபொற் றுதலர்பூ மென்காவில் வீரரில்
வன்மஞ் சொலிக்குமுரு மாமலையே—முன்முனிக்கு
மாசித்த வாசிரிய மன்னு கலைகளுப
தேசித்த வாசிரியன் சேர்வு. (சுஎ)

பிரகாசம் மிகுந்த பொன்போலு மகரந்த நிறைந்த பூக்களையுடைய மெல்லிய சோலையில் வலிய மேகங்கள் முழங்கும். சுத்த வீரர்களிடத்து வாது பிரகாசிக்கும்.

ஊணுப்பன் னூற்சுவையை யோதுவித்தோர்க் குள்ளன்பை
மாணுக்க ருந்துமுரு மாமலையே—நீணு
ளொழியா மலங்கடுத்தா ரும்பரு ரென்று
மொழியாம லங்கடுத்தா ரூர். (௬௮)

பல நூல்களிலுள்ள (சொற்பொருட்) சுவைகளை (அந்நூலாய்வார்) மாட்சிமைப்மட்ட நாக்குகள் உண்ணும். நூல் கற்பித்த ஆசிரியர்கட்கு உள்ளன்பை மாணுக்கர்கள் செலுத்தும்.

மேனடக்குந் தெவ்வருக்கு வீரருங் கம்மியரு
மானவர்க்கம் பாற்றுமுரு மாமலையே—வானவர்க்கு
முன்பொருதா ரஞ்சமைத்தார் மோகமிகு வள்ளியெனு
மன்பொருதா ரஞ்சமைத்தா ரார்வு. (௬௯)

வீரர்கள் (தம்மேல் போருக்கு) நடந்து வரும் பகைவர்க்கு மானத்தின் வகையைக்கெடுக்கும். கம்மாளர்கள் வீரருக்காகப் பாணங்கள் செய்யும்.

இன்னிசையின் ஞர்மொழியி னின்பா ரிணைமுலையில்
வன்னிகரந் தோயுமுரு மாமலையே—நன்னிலையா
மொற்றுமையி லார்பதியா ரோவவர்க்கெட் டாரன்பிற்
பற்று மையிலார் பதி. (௭0)

பெண்கள் இனிய இசைபோன்ற வார்த்தையினுல் கிளிகள் மறைந்து அயரும். (அவரது) சுகநிறைந்த கொங்கைகளில் சூதாடு கருவியின் அழகு படியும்.

தொண்டர் சிவனுரைத் தூமலரிற் சூழ்பெடையை
வண்டளியி னுடுமுரு—மாமலையே—தண்டரள
மாலை முலைமலைவார் வாய்வள்ளி வண்குழற்கு
மாலை முலை மலைவார் வாழ்வு. (௭௧)

அடியார்கள் சிவபிரானை வளந்தங்கிய கோயிலிலராயும். பரிசுத்தமாகிய பூக்களில் சூழப்பட்ட பெட்டை வண்டுகளை (ஆண்) வண்டுகள் அன்புடன் புணரும். (ஆடல் புணர்ச்சி செய்தல்.)



விறடியா ருங்கா மிகட்குவில்வேண் மெய்ம்முரசு
மறவ முழக்குமுரு மாமலையே—கூறுமுக
மாங்க மலங்களைந்தார்க் கங்குருவா ஞரடியே
ஞேங்க மலங்களைந்தா ரூர். (௭௨)

பெருமை தங்கிய தொண்டர்கள் விரோதமாகிய பொல்லாங்குகளைக் கெடுக்கும். விரகிகட்காக (கருப்பு) வில்லையுடைய மன்மதன் உண்மையாகிய (கடல்) முரசத்தை மயக்கமிகும்படி முழக்கும்.

பூணியலாய் வார்நாவிற் பூவைசிய ராவணத்தில்
வாணிகந் தெட்டுமுரு மாமலையே—யேணி
யமரங்கை யார்தந்த·வாறுன னத்தர்
சமரங்கை யார்தந் தலம். (௭௩)

பொருந்திய தமிழையாராய்வார் நாவில் சரஸ்வதி பற்றுக்கோடாக அகப்படும். அழகிய வைசியர் கடை வீதியில் இலாபத்தைத் தெளியும்.

திண்டடத்தோண் மள்ளராற் சேராருஞ் சீரனமும்
வண்டடத்தி யங்குமுரு மாமலையே—தொண்டர்
மதித்தா யுமைதனையன் வாமத்தார் காந்தி
மதித்தா யுமைதனையன் வாழ்வு. (௭௪)

வலியமலைபோன்ற புயங்களையுடைய வீரராலே பாணங்கள் கொல்லப் பகைவர் வருந்தும். சிறப்புத்தங்கிய அன்னப்பறவைகள் வளந்தங்கிய தடாகத்திலே சஞ்சரிக்கும்.

ஆமருக னுண்மகிழ வண்டரகங் காரமற
மாம னடக்குமுரு மாமலையே—காமம்
பொருமுருகாற் றுப்படையார் புந்திக்கெட் டாதார்
திருமுருகாற் றுப்படையார் சேர்வு. (௭௫)

ஆகிய மருமகன் மனமகிழ மாதுலன் நடந்துகொள்ளும். பகைவரது கெருவங்கெட்டுப்போக அரசன் ஒடுக்கும்.

உட்கா வயவ ருரத்தில்வேண் டுந்நாளில்
வட்காரம் பெய்யுமுரு மாமலையே—புட்காதல்
செய்யு முடம்பிடியார் சிந்தித்துச் சேவிப்பா
ருய்யு முடம்பிடியா ரூர். (௭௬)

அஞ்சாதவீரர் மார்பிலே பகைவர் பாணத்தையெய்யும். வேண்டுங்காலத்தில் வளந்தங்கிய மேகமழைபெய்யும்.

பூசலிலா யோகியரிற் போகமின்னார் வாயிலஞ்சு
வாச மடங்குமுரு மாமலையே—நேசமுட
னெண்ணம் பகருவர்வா யிற்றுயில்வ ரேத்திலுய்யும்
வண்ணம் பகருவர் வாழ்வு. (எஎ)

(இந்தியச்)சண்டையில்லாத ஞானிகளிடத்தில் அழகிய மூச்சுத்தம்பித்து நிற்கும். போகத்துக்குரிய பெண்கள் வாயில் பஞ்சவாசந்தங்கும்.

தண்ணந் திகழ்வயலுஞ் சங்கப் புலவரும்
வண்ணந் திருத்துமுரு மாமலையே—நண்ணு
முடம்பமலர் மாலையா ருள்ளத் துறுதார்
கடம்பமலர் மாலையார் காப்பு. (எஅ)

குளிர்ச்சியுமழகும் விளங்கும் வயல்கள் (தமிடத்து)வளந்தங்கிய சங்குகளைத் தங்கச்செய்யும். சங்கவித்வான்கள் வண்ணப்பிரபந்தநூலைத்திருத்தஞ்செய்யும்.

கன்மா டமுமரற்குக் கம்மியன்செ யாப்பணியும்
வன்மீக முந்துமுரு மாமலையே—பன்மீனு
ளாறுமீன் றுயானு ரத்துவளர்ந் தாரெறும்பு
காறுமீன் றுயானுர் காப்பு. (எகூ)

கல்லாலாகிய மாளிகையில் வலிய மேலிடத்துள்ள மேகங்கள் முற்பட்டுவரும். சிவபிரானுக்குக் கம்மாளராற் செய்யப்படாத ஆபரணங்களைப்புற்றுக்கள் செலுத்தாநிற்கும்.

பூரிக்கு மாலையினிற் பூந்தாதைப் புள்பூவில்
வாரிக் குடையுமுரு மாமலையே—சூரர்த்
திருத்த வுருத்தரித்தார் செய்யதினைக் காட்டுள்
விருத்த வுருத்தரித்தார் வீடு. (அ0)

நிறைக்கின்ற யந்திரங்களில் நீண்டகரும்புகள் உடைபடும். பொலிவையுடைய மகரந்தத்தைப் பூக்களில் வண்டுகள் அள்ளிக் கிண்டும்.

ஒன்னலரைச் செய்யதவ முண்மையி னுஞற்றுவரை
மன்னவன் றுக்குமுரு மாமலையே—யின்னமுஞ்
சிந்தைக் கருளினன் சிக்கச்செ யான்ஞானந்
தந்தைக் கருளினன் சார்பு. (அக)



பகைவர்களை அரசர்கள் மோதும். செவ்வையாகியதவத்தை மெய்யாகச் செய்பவரை நிலைபெறுற வன்றைக்கேயுயர்த்தும்.

சாலுமியற் றோணிவிடு தற்குஞ்சீர்த் தங்கோர்க்கு
மாலுமியப் பண்ணுமுரு மாமலையே—நாவியல்சன்
மார்க்கரகத் தன்புருவாய் வந்தருள்வான் வார்வடிவேற்
போர்க்கர கத்தன் புரம். (அஉ)

மிக்க அழகுடைய தோணிவிடுதற்குக் கப்பலோட்டுகிறவன் நீரையடுத்துவரும். சிறந்த வுயர்ந்தோர்க்கு மயக்கத்தைக் கெடச்செய்யும்.

தேவிளையர்ச் சிக்கச் செழுந்தழையைச் செல்வரை
மாவிளங்கு விக்குமுரு மாமலையே—பூவினுயர்
வாவெண்பாக் கொண்டாரா மங்கடம்பா கச்சிறிய
ஞவெண்பாக் கொண்டார் நகர். (அங)

சிவபிரானைப் பூசிக்கச் செழிக்கு மிலைகளை வில்வமரங்கள் பெருக்கும். ஐசுவரியவான்களை யிலக்குமி பிரகாசிக்கச்செய்யும்.

தொக்க பலகலையுந் தூயசிவ ஞானிகளு
மக்களங் காயுமுரு மாமலையே—மிக்ககா
மத்தருக் குத்தமர்பால் வாரா வடிவேலர்
பத்தருக் குத்தமர் பற்று. (அச)

கூடிய அநேகநூல்களைப்பிள்ளைகள் அவ்விடத்து ஆராயும். பரிசுத்தமாகிய சிவஞானிகள் (மும்) மலத்தின் கள்ளத்தைக்கோபிக்கும்.

நல்குவா ரேழைகட்கு நாரியர்க ணன்முலைக்கும்
வல்சி தருமுரு மாமலையே—புல்குமின்னார்
காமவிச்சை யுந்தருவார் காமனைக் காய்ந்தாற்குச்
சேமவிச்சை யுந்தருவார் சேர்வு. (அரு)

ஈகையாளர் வறியவர்க்கு அன்னங்கொடுக்கும். பெண்களது நல்லகொங்கைக்கு (ஒப்பாகாமல்) சூதாடுகருவி பொடிபடும், (உருவழியும்.)

ஆசிலன்பர் நெஞ்சதினு மங்காவி னுச்சியினு
மாசிவந் தீண்டுமுரு மாமலையே—பாசியனு
மாமாலை யன்பார்மேல் வாழ்த்தவந்தார் வள்ளிமணப்
பூமாலை யன்பார் புரி. (அசு)

குற்றமில்லாத அன்பரிருதயத்தில் மகத்தாகிய சிவம் பரிசிக்கும். அழகிய சோலையினுச்சியிலே மகநக்ஷத்திரம் வந்து நெருங்கும்.

எய்விருந்தை யெல்லாரு மின்பயிர்க்கீ யும்மழையும்
வாய்விண் டழைக்குமுரு மாமலையே—நோய்தந்து
கொன்மயனுங் கந்தமலர்க் கோதையர்பாற் கொள்ளாதாள்
சின்மயனுங் கந்தன் றிசை. (௮௭)

பொருந்திய விருந்தை யாவரும் வாய்திறந்தழைக்கும். இனிய பயிர்க்குப் பெய்யுமழையும் பொருந்திய மேகத்திலே தழைத்திருக்கும்.

போதமுணர் யோகியரும் புட்களுக்குப் பூமலரு
மாதவமி குக்குமுரு மாமலையே—வேத
முடிவா யிருந்தவர் மோனத்தின் ஞான
வடிவா யிருந்தவர் வாழ்வு. (௮௮)

ஞானத்தையறிந்த (சிவ) யோகிகள் பெரியதவத்தை மிகச்செய்யும். வண்டுகளுக்குப் பூவாகிய மலர்கள் கள்ளைச்சொரியும். மாதவம் - கள். இகுத்தல் - சொரிதல்)

நன்றகன்றெபாய் கைக்கரையை நற்றிரைபு ஞானிகளு
மன்றவந் தெற்றுமுரு மாமலையே—யென்றமிழை
வள்ளி யுரையா மகிழவர் வழுவென்ன
வெள்ளி யுரையா ரிடம். (௮௯)

நன்மைதங்கிய விசாலமாகிய தடாகத்தின் கரைகளை நல்ல அலைகள் மிகவந்துமோதும். ஞானிகள் மிகுதியாகிய தவத்தைத்தெளியும்.

நாரியர் மாமுலையி நன்னதியி லுடோறும்
வாரி வருமுரு மாமலையே—சீரியமுன்
றந்தவளத் தந்தொடுவா ரார்மார்ப ரம்மான்பால்
வந்தவளத் தந்தொடுவார் வாழ்வு. (௯௦)

பெண்களுடைய பெரியதனங்களில் தினந்தோறும் கச்சு ஏறியிருக்கும். நல்லஆற்றில் தினந்தோறும் வெள்ளம்வரும்.

அத்தனார் வேணியிலு மாயர்தயிர்த் தாழியிலு
மத்தங் கடங்குமுரு மாமலையே—சித்தங்
கரவணப் பொய்கையார் காணாற் கறியாச்
சரவணப் பொய்கையார் சார்பு. (௯௧)



சிவபிரானுடைய சடையில் ஊமத்தம் பூக்கள் தங்கும். இடையர்களுடைய தயிர்ப்பாத்திரத்தில் (தயிர்கடையும்) மத்து அவ்விடத்து உள்ளொடுங்கும்.

சீர்த்தை யலர்முலைபுஞ் செங்காவுஞ் செய்யநய
வார்த்தை வருமுரு மாமலையே—பார்த்தியற்றுஞ்
சீர்த்திகைக்கு வந்தசித்தர் செய்பூ சனைவிரதங்
கார்த்திகைக்கு வந்தசித்தர் காப்பு. (௯௨)

சிறப்புத்தங்கிய பெண்களுடைய தனங்கள் சிவந்த அழகிய கச்சைப் பரிசிக்கும். செவ்விய நாவினிடத்து ஒழுங்காகிய நல்ல சொற்கள் வராநிற்கும்

கொஞ்சுதாய் மார்மகிழக் கோற்றொடியார் கூந்தல்கொள
மஞ்சரி சிக்குமுரு மாமலையே—விஞ்சிவரு
மைவேலை யேவினன் மாய்ப்பதரி தென்றே
கைவேலை யேவினன் காப்பு. (௯௩)

கொஞ்சுகின்ற தாய்மார்கள் சந்தோஷிக்க மைந்தர்கள் புன்சிரிப்புச் செய்யும். (இசித்தல் - சிரித்தல்.) பெண்கள் கூந்தல் கொள்ளும்படி பூ மாலைகள் (வேண்டியமட்டும்)கிடைக்கும். (கூந்தல்கொள - கப்பல்வெற்றென்றது போலும்)

வீரம்பாற் றெவ்வருக்கு மிக்கவெழின் மேவினர்க்கு
மாரன் றுணையுமுரு மாமலையே—பார
மழுவாளி யங்கணனார் மைந்தர் மானிய
வெழுவாளி யங்கணனா ரில். (௯௪)

வீரருடைய பாணங்களாற் பகைவருக்கு மார்பு அப்பொழுது உள்ளே துன்பப்படும். அதிக அழகு பொருந்தின ஆடவர்க்கு மன்மதன் சமானமாகும்.

பானலஞ்சொல் லார்விழியும் பலபோர் பயிலுவரு
மானம் பொறுக்குமுரு மாமலையே—யானுந்
தெருமந்தா னிற்குமருள் செய்வலென்றுள் செவ்வே
டருமந்தா னிற்குந் தலம். (௯௫)

பால்போலும் நல்ல அழகிய சொல்லார் கண்கள் மானையும் பாணத்தையுந் தண்டிக்கும். பலவகை யுத்தப்பயிற்சி செய்வோர் வீரத்தைத் தாங்கும்.

வேய்ப்பசுந்தோண் மின்னார்க்கு மெல்லமுது மென்பொழிலும்
வாய்ப்பவள மல்குமுரு மாமலையே—தூய்ப்பரிய
வெள்வார ணத்தருவான் மென்மகளை வேட்டோன்சீ
ருள்வார ணத்தருவா னூர். (௯௬)

மூங்கில் போலும்பசிய தோளையுடைய பெண்கட்கு மிருதுவாகிய அமுதம் இதழாகிய பவளத்திலே நிறையும் - (வாய் ஆகுபெயர்) இளஞ்சோலைகள் பொருத்தமாக வளர்ந்தங்கி யிருக்கும்.

சீரியபோர் செய்வார்கண் செய்சூழ் செழும்பொழிற்கண்
மாரி கறங்குமுரு மாமலையே—பாரி
விருமனைவி தந்தா ரெனுமாலை யீவான்
றருமனைவி தந்தார் தலம். (௯௭)

சிறந்தயுத்தஞ் செய்வா ரிடத்துப் புயவலிதங்கும். வயல்கள் சூழ்ந்த செழித்த சோலையினிடத்து மேகமுழங்கும்.

பூந்தருவாங் கற்பகத்தைப் புன்மையைப் போதமையு
மாந்தரு மானுமுரு மாமலையே—சாந்தனையுந்
தீயவையாக் கந்தரினுஞ் செய்வதற்கென் சித்தமவை
யேயவையாக் கந்த ரிடம். (௯௮)

பொலிவுதங்கிய தருவாகிய கற்பக விருக்ஷத்தை மாமர நிகராகும். அறிவுகெடு மனிதர்களும் அற்பத்தனத்தை நீங்கும். (ஆனுதல் - நீங்குதல்)

நெஞ்சிலநற் கன்பரன்பா நீரான்மின் னார்நடையான்
மஞ்சன மாட் டுமுரு மாமலையே—வஞ்ச
மனத்தவுணர் வயார்வேல் வாங்கிவிட்டார் வாழ்த்தார்
கனத்த வுணர்வாயார் காப்பு. (௯௯)

சிவபிரானுக்கு அடியார்கள் அன்பாகிய நீரால் மனத்தில் திருமஞ்சனஞ் செய்யும். பெண்கள் நடையால் அழகிய அன்னப்பக்ஷிகளைக் கோபிக்கும்

கானதியு ஞானிகளுங் காமனைக் காமிகளு
மானந் துகைக்குமுரு மாமலையே—யானதிரு
நெல்வேலி யங்கத்தர் நேய மதலையாம்
வெல்வேலி யங்கத்தர் வீடு. (௧௦௦)

காட்டாறுகள் பெரிய சங்குகளைச் செலுத்தும். ஞானிகள் மானத்தைக்கெடுக்கும். மன்மதனை காமமிக்கவர்கள் மயக்கமிருந்து வெறுக்கும்.

---

முற்றுப்பெற்றன.

மு. ரா. அருணசலக்கவிராயர்.

உ

குமரன் றுணை.

# குமண சரித்திரம்.

162412

பொருத்தமுடன் புயங்கமுனி புலிக்காலன் போற்றிசெய
நிருத்தமிடும் பொழுதருளா னிகழைந்து தெரிசனடத்துங்
கருத்தனிடைத் தோன்றியவற் கண்டொருகால் வணக்கங்கொள்
ளொருத்தன்மல ரடிபேணி யொருவன்மல ரடிபணிவாம். (1)

வேறு.

மிக்ககொடை யாளியென மெய்யறிவு சானுந்
தக்கவர் மதித்துவகை சாரவொரு வாணன்
றுக்கமற நற்றலை துமித்திட றுணிந்த
வக்குமண னற்சரித மற்பினொடு சொல்வாம். (2)

வேறு.

உலகெலாம் போற்றும் பரமனார் முன்ன ரொருபக லாலவாய்ப் பதியி, னிலவுமா மரபு வேந்தனுள் ளயிர்ப்பு நீங்குமா றருடிருக் கவியி லிலகிய முன்னைப் பதமெனப் பொலிய வியற்றுநற் றவத்ததா மென்று, குலவிய வான்றோர் பலபல புகழக் கொண்டது நாட்டினுட் கொங்கு. (3)

ஆதியா மிரிமுக் குலத்தினு மனலே யமைபெருஞ் சிறப்பதேன் றறைவான், மோதுநீர்ச் சடையெம் முழுமுத னடுவண் முளரிநேத் திரமுறு முறையா, லோதுமக் குலத்தி னுதித்துநல் லொழுக்க முற்றதோர் கொங்கனென் றுரைக்குங், கோதைதன் காவல் பெறுதலாற் சிறப்புக் கொண்டது நாட்டினுட் கொங்கு. (4)

வேறு.

சேர்ந்த தோழனுய் நிதியனு கிபுநமைத் தேடா
ஞோர்ந்து பாணர்க்கு நிதிதர வுதியனுக் குபர்பா
வார்ந்த சோதிய னருளின னெனவட திசையோன்
ந்த சிந்தையி னுணுறு மரசது கொங்கு. (5)

க்குலாவிய மிடற்றினர் சடைப்பொலி கங்கை
க்கு ழாமொடு மாநதிப் பெருக்கினன் மதியோ
க்கு ழாம்வரை யோங்கிய காக்களொண் டிசையுங்
ாடுக்கு மாபண, மலிதலிற் பேர்பெறுங் கொங்கு. (6)

சீல் மாயமுங் கட்டினுட் பாண்டியுஞ் சென்னி
தால நாடுமே கீழ்மரு வித்தனைச் சார
மேல தாகியே விளங்கிவிற் றுறலினவ் விரண்டு
கோல நாடரும் புகழ்தரத் திகழ்தருங் கொங்கு. (7)

ஆறு மாகட லங்கிவல் லிடங்கரு மறிய
மாறி லாவருட் டமிழ்மறை வாய்மலர்ந் தருளு
நீறு சேர்தரு நெற்றியர் மூவரு நெடிது
கூறு மேழ்பெருந் தலங்களைக் கொண்டது கொங்கு. (8)

நன்கி யம்புமிக் கொங்குநன் னாட்டிடை நலஞ்சேர்
தென்கி ழக்கினூற் றியோசனைச் சதுரமத் தியமு
முன்க வின்பெறு குமணமா ராஜனின் முறையாற்
பொன்கி ளர்ந்துறை குமணநன் னாடெனப் பொலியும். (9)

நிலமெ லாமதி தொறும்பல மழைபொழி நீராற்
பலமெ லாமிகப் பெருகிமுப் போகமும் பரவக்
குலமெ லாம்பயி லொழுக்கமுஞ் செல்வமுங் குலவ
நலமெ லாங்குழீஇ யிருப்பது குமணனன் னாடு. (10)

நாம்பி றப்பதற் கிடந்தரு பெரும்புகழ் நண்ணு
மாம்பி ரத்தினுக் கிணைகொலோ விவையென வடுத்த
காம்பி ருக்குமா மலர்தருக் களையெலாங் கடிந்து
வாம்பெ ருக்கொடு மலிதரு மாம்பிரா வதியே. (11)

வேறு.

துளிபுன லுட் கொண்டாலுந் துவக்கெங்கு மயிர்சிலிர்ப்பக்
குளிர்வதனா லலமென்றுங் கொண்டவர்க்குச் சுவைகொடுத்து
விளிதலுறாச் சித்தமகிழ் மிகக்கொடுக்குந் தன்மையினாற்
றெளிதருநல் லமுதமென்றுஞ் செப்புவது தேற்றுநதி. (12)

ஊனுரிய பலபொருளு முளவாக்கி யளித்தெவருங்
காணும்வகை தானுமுண வாயிருந்து களிப்பித்து
நீணிலத்தில் வாழ்பவரை நித்தமொரு தாய்போலப்
பேணுதலா னிதியினிலும் பெருமையதிப் பெரியாறே. (13



இன்னநதிக் கரையின்மயி லிறையவற்கு மவற்கன்பு
மன்னுமிரு மாதுலர்க்கும் வருணனுக்கு மகிழ்வெய்தத்
துன்னியகா னிலவளமுஞ் சொல்வரவ ரிவுளிநதி
தன்னையுறும் பெரியாற்றுத் தக்கணபாற் பலநகருள். (14)

வேறு.

குமரன் முன்னவன் முதலினர்க் கொளுமதஞ்சைவ
சமய மென்றல்போற் கொழுமமே லைதரா ஜபுரம்
மமையும் ருத்திர பாளைய மெனப்பல வடுத்துக்
குமண னன்னக ரெனுமொரு பெயரினுங் குலவும். (15)

வேறு.

இரண்டுசகத் திரவருடத் தினுக்குமுன மரசியற்றுந்
திரண்டபுகழ்க் குமணனுறு சிறப்பின்று நினைப்பெய்த
வரண்பொலியும் பழங்கோட்டை யகமென்னு மறிகுறிகண்
முரண்குலைந்தும் போழது முற்றுமுற்று விளங்குவன. (16)

மேயபுக ழிந்நகர மெல்லியலாட் கருநாகப்
பாயலிரு நதியுமொளி பரப்புமணி வடமாகு
நாயகமா மணிபோலு நளிர்மதிய மொளிர் பரிதி
தேயுவிழி கொளும்பரம தேவனுறை திருக்கோயில். (17)

வேறு.

வழுத்து மித்தகைக் குமணனன் னாடெனு மங்கை
கழுத்து மன்னுமா மங்கல மெனச்சொலக் கனிதேன்
பழுத்த சூழலார் தருகும ணாபுரிப் பதியில்
விழுத்த கும்படி யரசியற் றினனொரு வேந்தன். (18)

சரளக்கோவுறை தாரகை நாப்பணிற் றவளத்
திரளக் கோதொழிந் தெழுமொரு முழுநிலாச் சீர்போற்
றரளக் கோவையின் மணிவடஞ் சுலவின தயங்கிப்
புரளக் கோமுறைக் குரியவெண் குடைநிழற் பொலிவோன். ()

முடியெ னும்பெயர் காரண மேனைய முடிகட்
கொடியில் காரண விடுகுறி யிதற்கென வுரைக்கும்
படிவி ளங்குபல் கோள்களும் வேற்றுருப் பரித்திங்
குடனு றைந்தென வொண்ணவ மணிமுடி யுடையோன். (20)

பொங்கு மாதலற் குடைதரா தரவினாற் பொன்று
தெங்கும் வாளொடு தேய்வுறா தழ்கினுக் கிடமாத்
துங்க மேவிய புகழ்ப்பெரும் புணரியிற் றோன்றுந்
திங்க ளாமெனப் பொலிதரு திருமுகச் செம்மல். (21)

மிஞ்சி மேவிய வன்பெனும் வெள்ளமு மிகுத்துச்
செஞ்ச வேமலி கருணையா கியபெருந் திரையுங்
கொஞ்சி யன்பொடு குலவின வாகிமீக் கொண்டு
விஞ்சி வீற்றிருந் திடுமிரு தடங்கர் விழியான். (22)

தரும மேமலி நீதியுஞ் சகலநற் கலையும்
பொருவி லாததன் னுயிர்க்கிடர் பொருந்திய போதும்
பெருகு வாய்மைய மமுதுமே ஞனுறு பேச்சு
மருவும் வாயென விலங்கிய நலங்கொள்செவ் வாயான். (23)

நெருப்புக் கண்ணினன் கரங்களால் வளைந்தன நீண்ட
மருப்புத் தும்பிகண் முதலிய துணைகொடிம் மண்ணை
விருப்பிற் றாங்கின மிளிர்புக ழென்னென மேருப்
பொருப்புக் காணிய நானூறும் பூணூறும் புயத்தான். (24)

வேறு

தேவதரு வஞ்சுதரு வெனச்சொலவா வரவென்னச் சுரபி செல்லப், பூவுலகிற் கடனண்ணிப் பயங்கொண்டு கருகிமுகில் போகச் செவ்வி, பாவுமலர் பற்பமுறச் சங்கமுமித் தவத்திணையாம் பணில மென்ன, வாவலுட னிதிவாரி யளித்தளித்துச் சிவப்பேறு மணிசேர்க்கையான். (25)

பொன்னவிர்தா மரையுமொரு தாளூன்றிப் புனலினடுப் பொருந்தி யாண்டு, மின்னிவரு மிரவிதனை நோக்கியருந் தவமியற்றி மேவா நிற்ப, வொன்னலராப் பலசேனை யுடன்சுலவி யமருடற்றி யோயும் வேற்று, மன்னர்முடி மாலைமணங் கமகமெனப் பரிமளிக்கு மலர்ப்பூந் தாளான். (26)

வேறு.

எண்ணத்து மாநிதி யாயினு மீபவ னென்னினுந்
தன்னைக் ஞெக்கிய மயினடைக் கன்னியர் தங்கண்



மனத்தை யும்புனை துகிலையு மணியையு மற்று
மனைத்தை யுங்கவர் வதுவென வுறுவடி வழகன். (27)

பின்ன லார்குழற் பேதையர் படையிடைப் பிறங்கிக்
கன்ன லார்கரம் பிடித்துறு காமவேள் காணின்
மின்ன லாரெழிற் றன்னுரு வளத்திடை வெறுத்தே
யன்ன லாருரு வேட்புறச் செயுமிவ னழகு. (28)

பேய்க்கி னிப்புற மருவல ருடலிடும் பெரியான்
றாய்க்கு மிப்புக ழிலையெனப் புகல்தரத் தரணிச்
சேய்க்கி னித்தன பலசெய்வான் றமிழ்வலார் சிறந்த
வாய்க்கி னித்திடும் பெயரினன் குமணனும் வள்ளல். (29)

சில மல்லன கனவினுஞ் சிந்தனை செய்யான்
சால நண்ணினர் தமையவர் குலந்தொடு தாக்கு
மால யன்னவே யாமழுக்கா றுமுன்னான
நாலு நீங்கிய நல்லற மோங்கிய நடையான். (30)

வைய மெய்தினும் வானக மெய்தினும் வழுவார்
பொய்யி லுவினர் நீதிநூற் புணரிக்குப் பொதியச்
சைய மாதவன் கரமெனு மனத்தினர் தழுவுஞ்
செய்ய மந்திரக் கிழவர்சொன் முறைமுறை செய்வோன். (31)

கள்ள மேவிய மருவலர் தமைப் புறங்காணும்
வெள்ள மாகிய மிடற்புறப் படையுடன் விளங்கும்
பள்ள வார்கலி யுலகிடை நீதியாப் பகருந்
தெள்ளு சிரகப் படையையு முடையவன் றிறலோன். (32)

உரிய நல்லற மதன்வழி யுறுபொரு ளுரிமை
மருவு பேரின்ப மிம்மையில் வருபயன் மறுமை
பெரிய நோர்புக ழுலகெலா மதித்தலிப் பெற்றி
யரிய வாகிய வெழுவகை நிலையையு மடைந்தோன். (33)

கூறு மோதலு மோதலுங் காத்தலுங் குறிப்பால்
வீறு பல்பொரு ளீதலும் வேட்டலும் வேற்றோர்க்
கோற லார்படை பயிறலு மெனமுன்னோர் கூறு
மாறு செய்கையுந் தனவெனக் கொண்டு வாழுதிபன். (34)

அலக்க ணற்றுறு தன்னினு லேவலுற் றவரால்
விலக்கு மாற்றலர் குழுவினுற் கள்வரால் விலங்காற்
சொலக்க ணிப்பிலாக் குடிகடம் மனத்திடைத் தோயுங்
கலக்க மைந்தையு நீக்கிய பாக்கிய கனவான். (35)

எந்த வேளையு நொந்தவர் துயரறிந் தின்ன
றந்த பேர்தன மைந்தனே யாயினுந் தக்க
பந்த மாதிய விதிப்படி தண்டனை பணிக்குஞ்
சிந்தை யாதிப னிந்தையி னீங்கிய செம்மல். (36)

வழுக்கி லாதமா மறையவ ரரசரில் வந்தோ
ரழுக்கு றுதநல் வணிகர்சூத் திரமர பாள
ரிழுக்கு மேவிய தாழ்குலத் தினரெனு மிவரு
ளொழுக்க மேவின ருயர்ந்தவ ரெனக்கொளு முரவோன். (37)

புவியனைத்துமோ ரொழுங்கொடு வயங்கின பொலியப்
பவமகற்றிய மனுவெனும் பார்த்திவன் பகுத்த
தவமறைக்குலத் தவரொடு நாற்குலத் தவரை
யவரவர்க் குறாஉந் தொழிற்றலை நிறுத்திய வண்ணல். (38)

பூமிவாழ்பவர் தேவர்கள் நாகர்கிம் புருடர்
தோமிலாமுனி வரரிவர் மதன்கனை தோய்ந்து
நாமநீங்கினர் பலரெனக் கண்டன னலியுங்
காமமாகிய மறுவிலா மதிநிகர் கருத்தன். (39)

முதிரமாகிய கோலமால் வரையினு முடுகிக்
கதுமெனுவரு மாம்பிரா வதியொடு கமழுங்
குதிரை யாறுசேர் குமணமா நகரியிற் குலவிப்
பொதுவி லாதுநீர் சூழ்பெரும் புவிநனி புரப்போன். (40)

தன்னை மேவிய வாணர்க ளிச்சையாற் றுமே
யென்ன வாம்பொரு ளாயினுங் கொள்கென வினிதாப்
பன்னி நாடொறு மீதலாற் பாண்பசிப் பகைஞ
னென்னு மோருயர் காரணநாமமு மிசைந்தோன். (41)

கோணல் கண்டிடாக் கோன்முறை குயிற்றிய குறிப்பால்
வாணிலாப்பெருங் கவிகையி னிழற்கிடை வயங்கு



நீணிலத்தினர் நேயமே யாயினு நிகழ்த்தும்
பாணர் தம்பசி யொன்றினுக் கென்றுமே பகைஞன். (42)

பார்த்து வாழ்த்தவு மெழுதவும் பணிந்துலப் பதியுங்
கார்த்த வீரிய வேந்தனுஞ் சலிப்புறக் கவினிப்
போர்த்த போர்வைபோற் புவியெலாம் பொதிதரப் பொலியுஞ்
சீர்த்தி மேவிய பூபதி குமணனுஞ் செல்வன். (43)

மருவி நோக்கினர் வதனமாம் பங்கய மலர்க்கும்
பரவி யேபுவி நடுக்குறும பாவமாம் பனிக்குஞ்
சரளமாகிய கவிவலோர் கலியிரு டனக்கு
மிரவியாமென விளங்கிய வளங்கொளு மேந்தல். (44)

ஏற்றநற்குணம் பலவும்பல் லுறுப்புக ளிணையச்
சாற்றுமீகையே யவற்றின்மேற் சிரமெனத் தயங்கப்
போற்று மெம்பிரா னருளணி மகுடமாப் பொலியத்
தோற்றுமோருருக் கொண்டெனத் துலங்கிய தூயோன். (45)

இனையதன்மைய னாகியகுமணனு மிறைவன்
தனைநிகர்த்தசிர்ப் பரம்பரன் றிருவடிச் சலச
நினைவினுட்பெறீஇ நீணிலம் புயத்திடை நிறுவி
வனையும் வேந்தரிற் றிலகமா வயங்கினன் மாதோ. (46)

இரவலர்க் கீயுங் கொடையெனும் புணரி யிடைமறுத் தேய்விலா துதித்து, மருவியெந் நாளும் வளர்பெரு மதிபோல் வயங்கிய பெரும்புகழ் வள்ளல், புரவலர் மதிக்கும் புகழ்மணம் புவியைப் போர்த்தலாற் குமணனாம் பூமான், றரையெலாந் தனது குடைநிழற் பொலியத் தனியர சியற்றுமந் நாளில். (47)

மாமரக் கிளையார் மணிச்சிறைக் கிளையாம் வல்லிரைந் தெழுந்துல கனைத்துந், தாமொரு கிளையான் முரசெனுங் கிளையான் றடநெடும் படைவிழிப் பசுந்தோள், வாமமார் கிளையார் மருவுகைக் கிளையான் வாடிடப் புரியெழிற் குமண, பூமனுக் கிளையான் போரினுக் கிளையான் பொலியிளங் குமணனைப் புகல்வோன். (48)

கமழ்பசுந் தேனைக் காய்ச்சிய பாகைக் கன்னலைக் கனியினைக் கண்டை, யிமிழ்திரை யமுதை வென்றதீஞ் சுவைத்தா யிலகிய செ

ழுந்தமிழ்க் கவிஞர், தமைவியந் தீகை யளித்துநன் மனத்தைச் சார்ந்திலாத் தன்மையா லிவனை, யமணனென் றுலகோ ரறைந்தன ரமரி லடலரிக் குருளையே றனையான். (49)

ஒருபணத் தணையிற் றுயில்பவன் பதமு முவந்திடா னுலப்பிலா தெழுகா, மருபணக் களிவண் டினம்பயி றொடையான் மதியெனு மதியினை மதியா, வருபணத தாசை யென்றகா ரரவு வாய்க்கொள வழுங்கின னதனாற், கிருபணத் துவத்திற் றலைவனா நின்றான் கேடிதன் மேலும்வே றுளதோ. (50)

பொருளலா தவையும் பொருளெனப் புரியும் பொருளலா லெவையுமோர் பொருளோ, வருளினாற் பொறையா லன்பினு னலத்தா லாற்றலால் வருசுக மனைத்து, மிருளினும் பொருளால் வருசுக மிரவிக் கிணையுமா மிப்பொரு ளிலையேற், றெருளிலா மனமுஞ் சஞ்சலப் பகையாற் சிறைசெயப் படுவது திண்ணம். (51)

குருளையே றனைய யாற்றலர் துணுக்கங் கொள்ளவுங் கொற்றவர் குழாத்தின், மருவினா யகமா யிருக்கவு மேனை வளனெலா மெளிதினிற் பெறவும், விரிகடற் புவியிற் பொருளால்வேறு வேண்டுவ துளதுகொ லதனாற், பொருடனைப் போற்றி வாழெனப் பண்டே புகன்றன ரறிந்திலா ரெவரே. (52)

பொன்னின தருமை நோக்கியே யதனைப் புரிவொடு காத்திருப் போரை, யின்னவ ருலுத்த ரெனவிலம் பாட்டி னெய்ப்புறு கவிஞரே யிசைப்பா, ரன்னதாற் குறைவென் னவருளங் களிப்ப தப்பொருளடைந்துழி யன்றோ, வென்னவிவ் வாறு தன்மதிக் குறைவா லெண்ணின னறிவினு மிளைஞன். (53)

இனையன பலவு மெண்ணின னாகி யேற்பவந் தடைந்தவர் தமது, நினைவினு மிகவெப் பொருளையு மளிக்கு நிருபனை நிருபனு நிற்பிற், புனையுநம் மரசு விரைவினில் வறுமை பூணுமென் றுளங்கவல் பூண்டு, முனைநெடும் படைக்கைத் தராபதி யான முன்னவன் முன்னவன் மொழிவான். (54)

---



கந்தரத் தேறிக் கற்பக நிழலிற் கவின்மணி முடிதரித் திருக்குஞ் சுந்தரக் கரிய னிடத்துநற் றருக்கள் சுரபிசிந் தாமணி யுறலான் மந்தரப் புயத்து வானவர் பலரும் வணங்குவ ரவனையிம் மாண்பா லந்தரத் தவர்க்கும் பொருளலாற் சிறத்தற் காதர வில்லையீ தறிவாய்.

சங்கமே பதும மேமுத லாகச் சாற்றுபன் னிதிபடைத் ததனு, லெங்குமே புகழப் பட்டன னியக்கர்க் கிறையவ னின்னதா லன்றோ, வங்கமேய் வாரி வருவிட மாந்து மணிகண்ட வரதனு மகிழ்ந்து, துங்கமே வியநற் றோழமை பூண்டான் சொல்லுவா ரெவர்நிதிப் பெருமை. (௫௬)

துதிபெறு கயிலை யங்கிரி வாழ்முச் சுடர்விழிப் படர்சடைத் தூய, நதிபொதி பெருமா னெவர்க்குமே லான நாதனை விருந்துமிக் குபர்ந்த, நிதிமலை யதனைக் கரத்திடைக் கொண்டு நின்றன னென்னினிந் நிலத்தின், மதியினு லளத்தற் கரியது பொருளான் மருவிய மாட்சியே யன்றோ. (௫௭)

புணரிசூ ழுலகத் தெவ்வகை யுயிரும் பொலிவினை யிழந்தன பொன்றக், குணவிலாக் கொடிய தீவிடங் காலுந் தாழ்வினை யுறும்பணிப், படந்தான், பணமெனு நாமம் படைத்தலா லதன்மேற் படுத்துளங் களித்தனன் பாரின், மணமக லாது மலிதரு வனச மலரெனும் வாயனு மாயன். (௫௮)

அலகிலாச் செல்வ மாயினு நிலைவிட் டகலுமென் றறிவிலா தவரிற், சிலரெடுத் துரைப்பா ரன்னவர் நீதிச் செம்மையை யறிந்திடார் தம்மை, யிலகுநன் மதிப்போ டேத்திடார் மனைவிட் டேகுதல் பெரியவ ரியற்கை, யலவென மறுப்பா ரெவர்கொலாம் பொருளுக் கனையது மாட்சியே யாகும். (௫௯)

தரித்திரத் துழன்று சோற்றினுக் கலைந்து தாட்டுணைத் தசையற நடந்து, பெருத்த வெம் பசியின் வருத்தமிக் கடைந்து பேதுறு புலவரோ பிழை, யுரைத்தனர் நிதியை யவர்மொழி நரியொன் றுண்ணுதற் ககப்படாக் கொம்பர், பொருந்துதேங் கனியை நோக்கியே யிதுசீ புளிக்குமென் றுரைத்தலை போலும். (௬௰)

பற்றொன்று தெனினு நேயமுண் டாயிற் பாங்கெலா மெறும் பொரு கோடி, சுற்றுநற் பலங்க டுன்னிய தருவைத் துருவிவந் தடையும்பல் பறவை, யற்றுழி யாவு மகலுமாங் கரும்பொன் னடைந்தவர்ச் சார்வரியா வருமென், றுற்றமூ தறிஞர் சொற்றவா றின்று முலகிடைக் காணுத லுறுவாய். (௬௧)

நினைத்ததை முடிக்கு மேதக வாக்கு நேரலார் தமதுயிர் கவரு, மினைத்திணை யுயர்த்தும் புகழ்ச்சியை யளிக்கு மின்பெலா முதவுமெஞ் சியசீ, ரனைத்தையு நல்கு மிப்பொரு ளல்லா லாருயிர்க் கொருதுணை யுளதோ, மனத்திடை யிதன்சீர் மறந்திடி னுடனே வந்தது வன்றுயர் வறுமை. (௬௨)

குணத்தொடு குலமு மொழுக்கமும் படிப்புங் கொண்டில னாயினு மிகுந்த, பணத்தொடு மிருப்பி னுலகின ரவனைப் பண்பொடு முயர்த்தியே தெடுப்பார், மணத்தொடு வந்த மங்கையு மிழித்து வைகுவாண் மற்றதில் லானைப், பிணத்தொடு சரியாய் நினைப்பரோ னையரிப் பெற்றியை யறிந்திலா ரெவரோ. (௬௩)

### வேறு.

மதியு ளார்நல் வலியுள ராயினு
நிதியி லாதவர் நீணகர் வாழ்தலிற்
கதியி னார்மிரு கங்களி லங்குகான்
வதித லேமிகு மாண்புடைத் தாகுமால். (௬௪)

அடுத்த செல்வத் தருமை யறிந்திலார்
தடுத்து ரைப்பவர் தம்மொழி யேற்கிலா
தெடுத்தி யாவையு மேற்பவர் கைக்கொளக்
கொடுத்த ழிந்தவர் கோடாநு கோடியே. (௬௫)

மூன்று லோகமு முந்தி யரசு செய்
சான்ற மாவலி தன்றலை பட்டது
மேன்ற வீகையி னாலெனி லீகையைப்
போன்ற தீது புவியினுண் டாங்கொலோ. (௬௬)



வண்ட லங்கல்கொண் மார்பரிச் சந்திர
னண்டு மோர்முனிக் காத்தரும் வண்மையாற்
பெண்டு பிள்ளை பெருந்திருப் போய்விடக்
கொண்ட துன்பங் குறிக்கவுங் கூடுமோ. (௬௭)

தவசன் மார்க்கத் தருப்பதி தன்கையிற்
றிவச னீந்திடு சேய்செய் யறத்தொடு
கவச குண்டலங் கண்ணி யளித்தலா
லவச மெய்தி யழிந்ததும் பொய்கொலோ. (௬௮)

தவமி லங்குந் ததீசி முனிவரன்
கவள வெண்கரிக் காவலன் வேண்டலி
னுவமை யின்றி யுயிர்க்கொடை நேர்ந்தாற்
சவமெ னும்படி தான்வீழ்ந் தானரோ. (௬௯)

ஆத லாலி தறிவிற்கொ ளாதுநீ
யீத லேமிக வின்னலைத் தந்திடு
மோது செல்வ மொழிந்திடும் பின்னர்வே
றேது கொண்டர சிப்புவி யிற்செய்வாய். (௭௰)

நிறைத ரும்பெரு நீணிதி யாவுநீ
பொறியி லாது புரிந்த புகழெனும்
வெறிய னாகி விழலுக் கிறைத்தபின்
வறிய னென்றசொல் வாளெனப் போழுமால். (௭௧)

நீசெ யுங்குறை நின்னொடு நிற்கிலா
மாசி லாநம் மரபினுள் ளாரெலாம்
பேசு செல்வப் பெருக்கிழந் தாரென
வேசன் மேவ வியற்றுவ தென்னையே. (௭௨)

இந்த நல்லர சிவ்வகை நீசெயின்
முந்தை யோர்தம் முறைமுறை யாகவே
யெந்த நாளு மிலாத பெருங்குறை
வந்த தாகு மனத்திடைக் கோடியால். (௭௩)

இன்று தொட்டர செவ்வயிற் றந்துநீ
சென்று கானிற் றிரிதி மறுத்தியேற்
பொன்று மாறு பொருவ விரண்டினி
லொன்று சொல்கென வோதின னம்மவோ. (௭௪)

வேறு

உடன்பிறந்து முயிர்வாங்கு நோயன்ன வுணர்வகன்ற
மடன்பிறந்த கொடுமனத்து வஞ்சகன்சொ லுரையனைத்துந்
திடன்பிறந்த பலகேள்வி சேர்ந்ததிருச் செவியேற்றான்
றடன்பிறந்த நெடுங்கருணை சலதிநிகர் தனிவள்ளல். (௭௫)

இவன்மதியிவ் வாறாயிற் றென்செயலா மெனலாலுந்
தவமெனுமோர் பெருஞ்செல்வந் தனக்குவருந் தகவாலுங்
கவலல்களிப் பென்னுமிரு கடல்கலந்த கருத்தினனா
யுவகையது மேற்கிளம்பி யொழுகலென வுரைசெய்வான். (௭௬)

நின்கருத்தின் படிபுரிந்தே னிசமீது நிற்கவினி
யென்கருத்துக் கேற்றபடி யியம்புமொழி சிலகேட்டி
பொன்கறுக்கும் பூம்பதத்துப் புரவலனே பொருட்செல்வ
மின்கறுத்த மேகநடு மிளிர்பொழுதும் விளங்காவால். (௭௭)

மறிதிரையொத் துலகினிடை வருஞ்செல்லு மிதிற்றுயரஞ்
சிறியதல்ல செல்வமெனச் செப்புமொழிப் பொருடேறாய்
வெறிகமழு நறுந்தொடையன் மிளிர்மார்பா மெய்யுணர்ந்த
வறிவுடையோர் வெறுக்கையினு லதற்குறும்பேர் வெறுக்கையன்றே.

இந்திரனுக் கேதுசிறப் பீகையினு லெஞ்ஞான்று
மைந்தருவுஞ் சுரபியுநல் லருண்மணியு மவனியெங்குஞ்
சந்ததமும் புகழ்மிகுத்துத் தழைத்துவள ரப்பெறுமா
லந்தரத்து வேந்தனிலை யழிந்தாலு மழியாமே. (௭௯)

உடையானே சிறப்புடைய னுடைமைகளோ சிறப்புடைய
வுடையானிற் கழிபெருமை யுடைமைகட்கெவ் வாற்றுளதேற்
கொடையாலே யென்பரந்தக் கோபதிக்கு மெல்கியசிற்
றிடையார்தம் போகமலா லெய்துபெரும் புகழுளதோ. (௮௰)



மந்திரிமா நிதிபடைத்த மாண்பதனு லேயாகி
யந்தமிலான் றேழ்மையுற் றானென்ன லறிவன்று
முந்தவவன் செயுந்தவத்தான் முடியாத பெருஞ்செல்வந்
தந்தனன்றன் றேழமையுந் தந்தனனம் பரம்பரனே. (௮௧)

அத்தகுமா நிதிபடைத்து மந்தகனு யுழல்கின்றான்
சித்தமர னிடைச்செலுத்தித் திறம்பாத நெறிநிற்கு
முத்தமர்க ளருவருப்பா யொழித்தொதுக்கப் படுகின்ற
செத்தையெனத் தகுமிந்தச் செல்வமொரு செல்வமதோ. (௮௨)

மன்னவகே ளம்பெருமான் மகிழ்நம்பி யாரூரன்
றன்னருமைத் தோழனுமாய்த் தனவாம னம்போல்வா
ருன்னவுந்த காத்தொழில்க ளுஞற்றியதெப் பொருள்குறித்தோ
வின்னமிதை நீயறியா திருத்தியென நினைத்திலனே. (௮௩)

கடுக்கையணி சடைப்பெருமான் கனகவரை தனைக்கையி
லெடுத்ததுபொன் வேட்கையென்றா யிதுகிடக்க வெரிமழுவு
முடுக்கையும்வெண் டலையோடு முருமொலிக்கு மானுமங்கைப்
பிடித்தெலும்பு பாம்பணிந்த பெற்றியெதைப் பெறும்பொருட்டோ.

ஒருகரத்து நீராட்டி யொருமலரைச் சாத்தினருக்
கிருநிதியுங் கற்பகமு மெவ்வாழ்வுங் கொடுத்தருளும்
பரமபதி பொருள்வேட்ட பண்புநன்று நன்றுசொற்றா
யிருநிலத்தின் முழுமனித ரெவருனைப்போ லுளரையா. (௮௫)

மாதவனும் பணம்விரும்பி மற்றதன்மேற் றூங்குவனென்
றோதினையோ ராவிலைமே லுறங்குவதற் கென்புகல்வா
யீதகல விந்திரனுக் கிவன்கொடுத்த செல்வமன்றோ
மாதருவுஞ் சுரபியுமம் மாமணியும் பிறபொருளும். (௮௬)

வேறு.

அறிவிலா தவரிற் சிலர்நிதி நிலையில் லாததென் றறைவரென் றறைந்தாய், சிறிதுமோர் குறையின் றுண்மையே புகன்றாய் செப்புமத் தகையசீ ரியர்தாம், பொறியிடைப் பொதிந்த ஞானமாங் கரத்

தாற் போக்குமஞ் ஞானிய ரதனு, லறிவிலா தவரோ யாவரிவ் வுண்மை யறிதியேற் பெருநல மரசே. (௮௭)

பலபல துயரப் பாடுறும் புலவர் பழித்தனர் நிதியையென் றுரைத்தாய், புலவரென் பதற்குப் பெருளறிந் தனையேற் புகன்றிடா யிவர்பெயர் பூண்டே, யிலகினர் தேவ ரெனிலிவர் பெருமை யிசைப்பதென் யாண்டுசென் றாலு, நலமிகப் பெறுவார் மன்னரிற் சிறந் தார் நாவுரை நாட்டுவார் நாளும். (௮௮)

இரப்பரென் றிவரை யிகழ்ந்திடேல் கருணை யெய்திமேற் பதவியீந் தெம்மைப், புரப்பது கருதிப் போந்தநல் லறத்தின் புனிதரென் றெண்ணுதி புலத்தி, லிரப்பதாற் குறையன் னவர்க்கிலை நமக்கே யேற்றதா முயர்மணி விலையைத், தெரிப்பது தெரியார் மதித்திடாரெனினுஞ் சிறப்பதற் கன்றிமற் றுளதோ. (௮௯)

பணமுளான் யாவ ரானுமே மதிக்கப் படுவனென் றிசைத்தனை பலகாற், றணவிலா தொருமூன் றுலகுக்கு மரசு தாங்கிய தசத்தலை யானைப், புணரியைத் தாவி வானர மிழித்துப் புகன்றதும் பின்பவன் றனைக், கணமெலா மடியத் தொலைந்ததுஞ் செல்வக் கணிப்பினைக் கணித்திடுங் காண்டி. (௯௰)

நான்மருப் பியானை மிசைவரு சுரேச நாயகன் மரவுரி தரித்துக், கான்மருப் பொலியும் வனத்துறை முனிவன் கையெனுங் கமலமீப் பூத்த, தேன்மருப் பிலிற்று மலரவ, மதித்துத் தேம்பிய துலகிலா ரறியார், கூன்மருப் பெறும்பி யடைந்ததுங் காணாய் குறித்தமா நிதியவற் கிலையோ. (௯௧)

சகத்திரத் தெட்டா மண்டமாண் டிருந்த தாருகன் முன்னவன் முன்னோன், மகத்துவ மெனநீ கூறிய செல்வம் வரம்பிலா வகையடைந் திருந்து, மகத்தினு லழிந்தான் கனகனோர் வஸியா ராருள ரெண்ணுதி யவன்வின், புகச்சிறு புதல்வன் புகழ்மிகப் படைத்தான் பொன்கொலோ சிறந்தது புகல்வாய். (௯௨)

கோடிபொன் னடைந்தா ரில்லவர்க் கீந்து குறிப்பொடு நல்லறம் புரிந்து, நாடிய சுற்றத் தவருட னுண்டு நன்மதிப் படைந்து



வாழ் பவன்மேல், வீடுமுற் றிடுவா னிவையியற் றுதோன் மேதகு வாள்கரம் பிடித்த, பேடியை நிகர்ப்பா னல்லது மணிந்த பிணத்தினை நிகர்சொலப் பெறுவான். (௯௩)

அனுபவம் புரிந்து பிறர்க்குமீ யாதா னருநிதி யவனதன் றப்பொன், றனையெடுத் தவைசெய் பவர்க்குரித் தனையான் றானுமந் நிதியினைக் காக்கும், வினைசெய்சே வகனும் பேழையும் போல்வான் மிகுவலிப் பூதமு மொப்பா, னினையனைத் தனிக னென்றறி விலோ யிசைப்பரீ தெண்ணுதி யின்னும். (௯௪)

கல்விகல் லாரிற் கற்றறி வில்லார் கடையரென் றுரைப்பது கடுப்பச், செல்வமில் லாரிற் செல்வமுற் றிருந்துஞ் செய்வினை செய்வகை செய்யார், பல்விதத் தினிலுங் கடையரோ யுலகிற் பார்த்தவர் பழிக்கவும் பின்னர்ப், புல்லிய, நரகிற் புகுதவும் போந்த பூரிய ரிவரலலெவரே. (௯௫)

தங்குபல் கிளைக்கும் பாத்திடா னடுத்தோர் தம்மையுங் காத்திடான் றானும், பொங்குமின் பாகப் புசித்திடா னாளும் பொன்னையே காத்துமா நிலத்தி, லெங்கணு மிழிவு கொண்டுவாழ் பவற்கு மேற்றிய தொருபெரும் பொதிகொள், குங்குமஞ் சுமந்த கார்த்தபந் தனக்கும் குறிப்பிடில் வேற்றுமை யுளதோ. (௯௬)

அடுத்தபொன் னிரந்தோர்க் கீந்திடிற் பின்ன ரடுத்திடும் பிறப்பினிற் பலவா, மடுத்துமேம் படுத்து மின்னதை யுலக மாட்டுநன் னிதிபடைத் தவரைக், கொடுத்துவைத் திருந்த புண்ணிய ரென்னுக் கூறுமோர் மொழிநிலை நிறுத்து, மெடுத்தளித் தறியா ரெவரவர் பிச்சை யெடுத்தழிந் தினைபவ ரிங்ஙன். (௯௭)

கொல்லராக் கொடியன் கொடுந்தொழிற் கூட்டங் கூடியே குலவினுங் கொடையா, னல்லிசை யடைந்தா னங்கர்கோ னதனு னல்லுயிர் பிரிந்துவிண் செல்லு, மெல்லையி லடைந்த மாதவ னடியையிறைஞ்சியே யேழு பிறப்பு, மில்லையென் றிரப்போர்க் கில்லையென் றியம்பா விதையமே யீந்தரு ளென்றான். (௯௮)

பாக்களைப் புகன்று தோத்திரம் புரிவார் பாத்திர மறிந்துமற் றவர்தந், நோக்கமு மறிந்து கொடுக்கநோ ருரை நொய்தினிற் புடைத்துவேற் றோர்தம், பாக்கிய மாகக் கொள்ளுவ ரிதனைப் பனிமர மேக்குயர் கிளையி, னீக்களைத் துரத்திக் கொள்ளுவார் மதுவை யென்ப தாற் றேர்குதி யிளையோய். (௯௯)

அடைதுயர் கூறி யிரப்பவ ரெவர்க்கு மன்புட னீதலே நன்மை, விடையல தொன்றுங் கொடுத்திடா தின்மை விளம்புதல் கொடுமைமே லவர்க்குக், கொடைபுரி பவரைத் தடைபுரி வதுவோ கொடுமையிற் கொடுமைநீர்க் கெண்டி, யிடைதடை புரிந்த வெள்ளிகண் ணிழந்த தெவரறி யாதவ ரின்னும். (௩)

முன்னைய பிறப்பி லறம்பல புரிந்த முறைமையா லுயர்பெருஞ் சிறப்பின், மன்னிய மனித்த ரிங்குமவ் வாறே மனத்தொடு நல்லறம் புரிந்தாற்,பின்னரு மிவ்வா றுயர்நலம் பெறுவார் பேதமை யான்மறந் தனரே, லென்னபாழ்ஞ் சனன மெடுப்பரோ விதனை யெண்ணலு நடுங்குமென் னிதையம். (௩௧)

மாவலி மாண்பின் வகையினை மறந்து வழுப்பட வழுத்தினை யழைக்கோ, ளாவலி னறைந்து மவனுரை யகற்றி யடுத்தவர்க் களித்திட லாவி, போவதிற் பொலிந்த புகழெனப் புகன்று புட்கரம் புவி தந்து புயனோர், தேவனற் றிருத்தாட் செழுமலர் சென்னி சேர்த்தினன் செயுந்தவச் சிறப்பால். (௩௨)

மதிதயன் மருகன் மாமுனி வரற்கீ வண்மையான் மனைமகன் மாழ்க, வதிருப ரடைந்தா ருமென வறைந்தா யத்துய ரனைத்தையு மகற்றி, நதிபுனை நாத னளினமா ருத ருமக ருதன்விண் ருதன், கதிதரு காட்சி கண்டனன் களித்தான் காத்தனன் காசினி ககனம்.()

அங்கநாட் டதிப னரவுயர்த் தவனு ளவனியிற் சிறிதுபெற் றவனிற், பொங்கிய சிறப்பும் பொலிபெரும் புகழும் பொருந்தின னிறுதிநாட் போது, சங்கமார் கரத்து மாயவன் வலியத் தானடைந் துளக்குவேண் டுவகே, ளிங்குநா னருள்வே னெனச்சொலப் பெற்றூ னிவ வனிகர் புகழ்பெற்று ரெவரே. (௩௪)

உ

சிவமயம்.

# குமண சரித்திரம்.

## முகவுரை.

---

முற்காலத்தே நம் தமிழ்நாட்டில் விளங்கிய தமிழ் வள்ளல்களிலே, பேரரசர்களாகிய சேர சோழ பாண்டியரே யன்றி, சிற்றரசரும் பிரபுக்களும் எண்ணிறந்தவர்கள் இருந்தனரென்பது பலரும் அறிவர். இவ்விஷயம், புறநானூறு பத்துப்பாட்டு முதலிய சங்கவிலக்கியங்களிற் பழக்கமுடையோர்க்கு எளிதில் விளங்கத்தக்கது. கடைச்சங்கநாளில், வள்ளல்களாய் விளங்கிய பெருமக்களிலே, தலைசிறந்தவராகக் கூறப்படுவோர்:—பாரி, ஓரி, மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி என்னும் இவ்வெழுவருமேயாவர். இனி இவ்வெழுவரையடுத்து, இவரைப்போலவே சீருஞ் சிறப்பு முடையாராகப் புகழப்படுவோர்—குமணன் நல்லியக்கோடன் என்னும் பெருமக்களென்று தெரிகிறது. இதனை,

"எழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
இரந்தோர் அற்றந் தீர்க்கென விரைந்திவண்
உள்ளி வந்தனென் யானே" (புறம்—158)

எனக் குமணனை நோக்கியும்;

"எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் றாங்கிய உரனுடை நோன்றாள்
ஓவியர் பெருமகன்" (சிறுபாண்).

என நல்லியனை நோக்கியும்—பழைய புலவர்கள் கூறுவதனால் உணரலாம். இவருள், குமணன் என்னும் கோமானது குணவழுக்கங்களை யாராய்ந்துகளித்தலே இக்குமணசரித்திரநூலுக்கு வற்பு

டைத்தாதலால், பழைய நூல்களிற்கண்ட இவனது அருமை பெருமைகளைமட்டும் சிறிது ஆராய்வோம். ஒப்புயர்வற்ற திப்பிய மக்களின் குணஞ்செயலாதி வைபவங்களை யாராய்தல், உலகம் நல்வழியிற் செல்லற்கு முக்கிய ஏதுவன்றோ.

பழைய நூல்களைத் திறந்துபார்ப்போரெவ்வொருவரும், அக்காலத்திருந்த வள்ளற்றலைவர்களின் மனநிலையையும், புலவர்பெருமக்களின் அருமைபெருமைகளையுங்கண்டு பெரிதும் அதிசயமுறுதிரார். “உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன், றீவார் மேனிற்கும் புகழ்” என்னும் திருவாக்குக்கு இலக்கியங்கள் அங்கேதான் மிகுதியாகக் காணப்படும். அத்தகைய நூல்களிலே, தலைசிறந்ததாய புறநானூற்றில், பண்டைப்பெருமக்களின் வரிசைகளிலே, குமணவள்ளலும் புகழப்பட்டுள்ளான். அந்நாலில் இவ்வள்ளலைப்பற்றி வரும் பாடல்கள் எட்டாகும்.* இவற்றில், இவ்வள்ளல் “முதிரம்” என்னும் மலைக்குரியவனாகக் கூறப்படுகின்றான். முதிரம் என்னும் பெயருடன் ஒருமலையிருப்பதாகத் தெரிந்திலதாயினும், கோயம்புத்தூர்ஜில்லா உடுமலைப்பேட்டைத் தாலூகாவில் “குதிரைமலை” என்பதொன்று உண்டென்றும், இம்மலைப் பக்கத்தூர் “கொழுமம்” என்பதென்றும், இக்கொழுமமே குமணபுரி என்றும் பெருவழக்குள்ளன. இவற்றைநோக்கும்போது, குமணனாண்டவிடம்மேற்காட்டியகுதிரைமலையும் அதைச்சார்ந்த ஊருமாகவே கொள்ளலாம். ஏனெனில், முதிரமலைஎன்பது குதிரைமலை எனவும், குமணம் என்பது கொழுமம் எனவும் பிற்காலத்தே திரிதல் கூடுமன்றோ? இவற்றோடு அப்பக்கத்தே-குமணனாட்சியைப்பற்றிய பெருவழக்கும் உண்மையால், இவ்வூகம் தவறாகாது. அதிகமானஞ்சியினுடையதாகக் குதிரைமலையென்பதொன்றிருந்தது என்பது புறப்பாட்டால் தெரியவரினும், அவனாடு மைசூர்ப்பிரதேசத்ததாகலின் †அம்மலை வேறேயாம். இக்குதிரைமலையில் பழைய கோட்டை அகழிகள் உண்டென்று தெரிகிறது. இம்மலைப்பக்கத்து ஆறும் “குதிரையாறு” எனப் பெயர் கொண்டுளது.

---

* இப்பாடல்கள் எட்டும், தனியே, இந்நூலிற் சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

† ஸ்ரீ வெங்கய்யவர்களது (புறநானூற்றுப் பதிப்பிறுதிக்)குறிப்பு.



இனி, இவ்வள்ளல் விஷயமாயமைந்த பாடல்களால் இவனதுசரிதம் விசேடமாகத் தெரியவில்லையாயினும், அவை, இவனது உயர்ந்த உதாரகுணத்தை விளக்கற்குப் போதியவை என்னும்படி உள்ளன. இவனைப்பாடிய புலவர்கள் பெருஞ்சித்திரனார், பெருந்தலைச் சாத்தனார் என்போர். இவருள் பெருஞ்சித்திரனார், கடையேழு வள்ளல்களில் ஒருவனாகிய அதிகமான் நெடுமானஞ்சியையும், பெருந்தலைச் சாத்தனார், அக்கடை வள்ளலார்காலத்து இளவிச்சிக்கோ இளங்கண்டீரக்கோ என்பவரையுந் தனித்தனியே பாடியிருக்கின்றனர். இதனால், அவ்விருபுலவராலும் பாடப்பட்ட குமணன், கடைவள்ளலார் காலத்தும் அவர்க்குப் பின்பும் இருந்தவனென்பதும், மிகுதியும்பிற்காலத்தவ னல்லனென்பதும் நன்கு விளங்கும். இவனைப்பற்றிய பாடல்கள், இவ்வள்ளல் இரவலர்க்கும் புலவர்க்கும் வேண்டியவேண்டியாங்களித்து அவர் வறுமை களைந்து வாழ்வித்த மாட்சியை நன்கு விளக்கிநிற்கின்றன. பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் வெளிமான் என்பவனிடம் பரிசிற்குச்சென்றபோது, அவ்வெளிமான் தன் தம்பி மூலம் சிறிது கொடுத்தனுப்ப, அதைப் புலவர் பெற்றுக்கொள்ளாமல் கோபித்துப் புறப்பட்டுக் குமணனிடம் பரிசிற்கு வந்தனரெனவும். குமணன் அவருக்கு யானைகளும், வேண்டியசெல்வங்களும் கொடுத்து மரியாதை செய்து விடுத்தனனெனவும், அம்மரியாதையுடன் புலவர் தம்மை அவமதித்த வெளிமானிடஞ்சென்று,

“இரவலர் புரவலை நீயும் அல்லை;
புரவலர் இரவலர்க்கு இல்லையு மல்லர்;
இரவலர் உண்மையுங் காண்;இனி இரவலர்க்கு
ஈவோர் உண்மையுங்காண்; இனி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்து யாம் பிணித்த
நெடுநல் யானை எம்பரிசில்”
கடுமான் தோன்றல் செல்வல் யானே.”

என்னும் பாடலைக்கூறி, அவன்முன் குமணன் வரிசையைப் புகழ்ந்து கூறினரெனவும் 162-ம் புறப்பாட்டால் விளக்கமாம். இதனால், அக்காலத்தே “புலவர்பாடும் புகழுடையோனாய்”* விளங்கிய

வன் குமணனேயாதல்காண்க. இக்குமணவள்ளல் வழங்கிய பெரும் பரிசிலோடு, பெருஞ்சித்திரனார், (தாம் கூறியவாறு)

"பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்து தினவாடிய முலையள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு உப்பின்று
நீருலையாக ஏற்றி மோரின்று
அவிழ்ப்பத மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள்"

என்றபடியிருந்த தன் மனைவிபாற்சென்று, அவன்முன், குமணனால் தாம்பெற்ற பெருஞ்செல்வத்தைக்காட்டி,

"நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லார்க்குங் கொடுமதி மனைகிழ வோயே!
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே"

என்று, எல்லார்க்கும் வேண்டிய வேண்டியபடி அளித்து நல் வாழ்க்கை செலுத்தும்படி கூறினரெனவும் புறப்பாடல்களால் தெரியவருகின்றன. இவற்றால், "இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல், குலனுடையான் கண்ணே யுள" என்னும் தெய்வப்புலவர் வாக்குக்கு இலக்கியமானவன் குமணவள்ளல் என்பது மலையிலக்காம்.

இனி, குமணவள்ளலைப்பற்றி மற்றொரு புலவராகிய பெருந்தலைச்சாத்தனார் பாடிய பாடல் இரண்டேயாம். இவ்விரண்டு பாடலையும், இக்குமண சரிதம் புனைந்ததற்கு "அடிப்படை" என்



னலாம். நம் குமணவள்ளலுக்குத், தம்பியொருவன் "இளங்குமணன்" என்றிருந்தான். இவன், தன் தமையன் தனியே சீருஞ்சிறப்புங்கொண்டு தமிழகம்புகழ வாழ்ந்துவருதலிற் பொறாமையுடையனாய், அதுகாரணமாகப் பலசூழ்ச்சிகளுஞ்செய்து, முடிவில் தன் தமையனை நாட்டைவிட்டோட்டிக் காட்டிற் றுரத்திவிட்டான். அதுமட்டோ! குமணன் ஓடியொளித்துள்ள காட்டிற் சென்று, அவன் தலையைக்கொணர்வோர்க்குப் பெரும்பரிசு தருவதாகவும் பறையிடுவித்தான். அந்தோ! முற்காலத்தே அருங்குணமும் பெருங்கருணையும் வாய்ந்து விளங்கிய தமிழ்வள்ளலார் பெரும்பாலாரின் நிலையும் இவ்வாறே முடிவில் அமைந்தன. மாரியனைய வரையாவீகைப் பாரி முதலிய பெருமக்களின் அந்திய நிலையைப் பாருங்கள். ஆனால் அவர்கள் அப்போதுபட்ட பெருந்துன்பங்களெல்லாம் இப்போதோ அழியாப்புகழாகப் பரிணமித்துள்ளன. இனி, இங்ஙனம் காடுபற்றியிருந்த குமணனிலையறியாது, அவன்பாற் பரிசு பெறும்பொருட்டுப் பெருந்தலைச் சாத்தனார், அவனிருந்த காட்டிற்சென்று அவனைத் தேடிக்கண்டு அவனைப் புகழ்ந்தார். அப்பாடல் "ஆடுநனிமறந்த க எனவரும் புறப்பாட்டு 164-வதாம்*. இப்பாடற்கவன் இரங்கினனாயினும், அவர்க்கவன் என்செய்யக் கூடும்? அங்ஙனமன்று. குமணவள்ளல் உடனேதன் கையிலிருந்த வாளைக்காட்டி, "தன்றலை கொணர்வோர்க்குப் பெரும்பரிசுதருவதாகத் தம்பி வெளியிட்டிருத்தலின், இதனால் தன் தலையைவெட்டிக்கொண்டு தம்பிபாற் சென்று வேண்டியன பெறுதிர்" என்று வாளைப் புலவர் கையிற் கொடுத்தனன். இந்நிலையில் என் செய்வர் புலவர்! "உயிர் நீப்பர் மானம் வரின்" என்றபடி, புலவரைக் காக்கலாகாத் தன் எளிமைநிலையை நோக்கி உயிரையுமளிக்கத் துணிந்த நம்குமணவள்ளலின் அரும் பெருங் கருணையை நினைக்குந்தோறும் உள்ளம் நெக்குநெக்குருகி, பெற்ற வாளைவாங்கிக் குமணனிடம்விடைபெற்றுக்கொண்டு, அவன் றம்பி இளங்குமணன்பால் வந்து,

"கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றெனனாகக் கொன்னே

* இப்பாடல், இக்காலத்துச் சிதைந்து வழங்குகிறது.

பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
னாடிழந் ததனினும் நனியின் னாதென
வாள் தந்தனனே, தலையெனக் கீய:
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்.
நாடுமலி உவகையோடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே"

என நிகழ்ந்த விஷயத்தை யெல்லாம் கூறி நின்றனர். இவ்வளவு வரையே புறநானூற்றிலுள்ளது. இதற்குமேலுள்ள கதைத்தொடர்ச்சி அந்நூலிற் காணப்பட்டிலது. ஆயினும், அத்தொடர்பு, கர்ணபரம்பரையில் ஒருபடியாக வழங்கிவருகின்றது. அஃதாவது:—குமணன்பாற் புலவர் * பரிசிற்குச் சென்றபோது, அவ்வள்ளல், தன் எளிமை நிலைக்குப் பெரிதும் இரங்கி, 'வந்த புலவர்க்கு என் செய்வது' என்பதறியாது திகைத்து நின்றான். அப்போது, புலவர் குமணவள்ளலை நோக்கி,

"ஆறு பெருக்கற் றருந்திடர்தான் பட்டாலும்
ஊறலமை யாதோ வுலகாற்றத்—தேறின்
வறியையே யானாலும் என்கலியை மாற்றச்
சிறியையோ சீர்க்குமணா செப்பு"

என அவனைப் புகழ்ந்து கூறினர். அப்போது அவ்வள்ளல், "தன் தலை கொணர்வோர்க்குப் பெரும் பரிசு தருவதாகத் தன்தம்பி கூறியிருத்தலின், புலவர்க்குத் தன்றலையையே கொடுத்து அவர் மிடிமையைக் கெடுப்போம்" எனத் துணிந்து, தன் கையிலிருந்தவாளை நீட்டிப் புலவரை நோக்கி,

"அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்
இந்தநாள் வந்துநீ நொந்தெனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுன் வெறுமைநோய் களையே"

* இப்புலவர், பெருஞ்சித்திரனா ராயினும், "ஒப்பிலாமணிப்புலவர்" என்னும் பெயருடன், தனிப்பாடற்றிரட்டிற் காணப்படுகிறார்.



"வெம்புங் காலை வெதும்பி விழுஞ்சிரம்
செம்பொன் கோடி விலையெனச் சிந்தித்தான்
உம்பர் நாடு முலகினுந் தேடினும்
எம்பி போலெனக் கியாவ ருரியரே"

என்று கூறி, தன் தலையைக் கொய்துகொண்டு தம்பிபாற் செல்லுமாறு பணிக்க, புலவர் குமணனது அரும்பெருங் கருணைச் செயலைக்கண்டு வியப்புமுவப்புமுடையராய் அவனைப்புகழ்ந்து, கொடுத்த வாளை மட்டும் பெற்றுக்கொண்டு விடைபெற்றுச் சென்றனர். சென்று மாந்தை என்னும் ஊரிலிருந்த, வினைத் திட்ப மிக்க சிற்பி யொருவனைக் கண்டு, அவனை,

"மாந்தையிலே வாழு மகுடத் தியாகியுனக்
கேந்து தழும்போ விரண்டுண்டு—வேந்தர்
முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்க் கீயும்
படித்தழும்புன் கையிலே பார்"

என்று புகழ்ந்து, அவனை, குமணவள்ளல் தலைபோன்றதொரு பொய்த்தலை பண்ணித்தரும்படி வேண்ட, அவ்வாறே, கண்டோர் அதிசயிக்கும்படி பொய்த்தலை செய்து தந்தனன். அதனைப்பெற்றுக்கொண்டு, இளங்குமணன்பாற் சென்று அவற்கு அத்தலையைக் காட்டி விஷயங்களை அறிவித்து நின்றார். அப்பொய்த் தலையை அவன் கண்டதும், அவனறியாதே, "சகோதர வாஞ்சை" என்னும் தன்னேரில்லாப் பாசம் கொடியோனான அவனையும் பிணிக்க, "என் செய்தேன் பாவி! அந்தோ" என்று அரற்றி வீழ்ந்தான். இவ்வாறு, இளங்குமணன் தன் தமையன்பால் பேரபிமானமுற்று அழுதரற்றுவதுகண்ட புலவர், உண்மகிழ்ந்து, அவ்விளையோனைச் சிறிது தேற்றி, பற்பல சூழ்ச்சிகளால், அவன் தமையனுயிர் பெற்றெழச் செய்விப்பது போல நடித்து, இளங்குமணற்குக் குமணவள்ளலை உயிருடன் காட்டிக் கொடுத்ததோடு, அவ்வள்ளலை முன்போல அரசுவீற்றிருந்து உலகத்தை வாழ்விக்கும்படியும் செய்தனர்—என்பதே அக்கதைத் தொடர்ச்சி.

இக்கர்ண பரம்பரைகளில் சிற்சில மாறுபாடுகள் உண்டேனும், பொதுவில், அவை குமணவள்ளலது உயர்ந்த பெருங்குணங்களையே விளக்கி நிற்பனவாம். இத்தகைய கருணை வள்ளல் விளங்கிக் கீர்த்தி பெற்றது நம் தமிழகம் எனின், அதற்கு வேறொரு பெருமையும் அதிகமாக வேண்டுமோ! அவ்வள்ளலது மனநிலையின் மாட்சியாலன்றோ, அவன் புகழ் எல்லாவுள்ளத்தையும் கொள்ளை கொண்டு நிற்கின்றது. ஏனைய வள்ளலாரின் வரலாற்றினும் இக்குமண வள்ளல் வரலாற்றை நம்மவர் நன்கு தெரிந்திருப்பதற்குக் காரணம், அவனது உண்மைப் புகழேயன்றோ! இனி உலகமுள்ளவரையும் அவன்புகழ் நிலைத்து நிற்கவும் ஐயம் இல்லை.

இத்தகைய உத்தமமக்களது சரித்திரங்களை நன்கு பரிசீலனை செய்து வெளியிடுவது, ஜனசமூகவாழ்வை ஒழுங்கும் உயர்வும் பெறச்செய்தற்கு முக்கிய ஏதுவாம். இதுவிஷயத்தில் மேனாட்டாரது அருஞ்செயல்கள் கவனிக்கத்தக்கன. உயர்ந்த வழிகாட்டிகளாகிய பழைய பெரியோர்களது குணாநுபவஞ் செய்வதால் உண்டாகும் நற்பயன்களை, நம்மினும், மேனாட்டார் மிகுதியும் அறிந்தவரென்பதில் ஐயமில்லை. பழைய நூல்களிற் காணும் தமிழ்ப்பெரியோர் சரிதங்கள் எத்தனையோ அருமை பெருமை வாய்ந்துள்ளன! அவற்றை எல்லாருமறிய வெளியிடத் தொடங்கின், உத்தம புருஷர்க்காக, பிறநாட்டு இலக்கியங்களினின்று மேற்கோள்காட்டவும் நேருமா? ஆதலால், ஆண்மைக்கும் வாய்மைக்கும் ஒழுக்கத்திற்கும் கொடைக்கும் பிற உயர்குணங்கட்கும் ஆன்மத்தியாகமும் செய்த புருஷ சிம்மங்களது திவ்ய சரித்திரங்களில், பழைய நூல்களில் உள்ளனவற்றை ஆராய்ந்து வெளியிடுவது இன்றியமையாததாகும்.

மதுரை "விவேகபாநு"ப் பத்திராதிபரும், சேற்றூர் சம்ஸ்தான பரம்பரைக் கல்வியாளர் வழித்தோன்றலும், நாவலிமையும் பாவலிமையு நன்கு படைத்தவரும், தேசாபிமானியும், என் ஆப்தருமாகிய **ஸ்ரீமத். மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள்**, தாம் சில்லாண்டுகட்கு முன்பு இயற்றி வைத்திருந்த, அருமைக்குமணவள்ளலது சரித்திரத்தை, இப்போது வெளியிட்டிருப்பது எம்போலி



யர்க்குப் பெரிதும் மகிழ்ச்சிதருவதோடு, இஃது, பலரும் பின்பற்றுதற்குச் சிறந்த வழிகாட்டியாகவும் இருக்கின்றது. கவிராயரவர்கள் சொற்செறிவு பொருட்பொலிவுபெற ஆசுகவி பாடும் வன்மையுடையாரென்பதும், அவர்களது கல்வித்திறனும் கூரியஅறிவும் தமிழ்நாடு நன்கறிந்ததாகலின், அவற்றை இங்கே விரித்தல் மிகையாம். அவர்கள், தம் பா வலிமையைக்காட்டுதற்கு இலக்காக, குமணவள்ளல் சரிதத்தைக்கொண்டமையால், அவ்விரண்டும்சேர்ந்து, சர்க்கரைப்பந்தரிற் றேன்மழை பெய்ததுபோல் விளங்குகிறது. இவர்கள், குமண சரித்திரத்தை 350.- இனிய பாக்களால் முடித்துள்ளார்கள். இக்காப்பியப் போக்கில், குமணவள்ளல் சரிதம், புறநானூற்றுப் பாடல்களையும் வழக்கிலுள்ள கர்ணபரம்பரைச் செய்திகளையும் ஆதாரமாகக்கொண்டுளதாயினும், சரிதம் ஒருகோவையாக இனிதுசெல்லற்கு, இடையிடையே பற்றுசான கதைக்கூறுகளும் பெய்யப்பெற்றுப் படிப்போர்க்குப் பேரானந்தம் உண்டாம்படி இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இவை, இந்நூலைப் படித்து வருவோர்க்கு, ஆங்காங்கே புலப்படுமாதலால் விரித்திலேன். இக்காவியத்தில் ஆளப்பட்டுள்ள செய்யுணடையின் பொலிவும், இக்காலத்தறிஞர் மகிழ்தற்கேற்ற கற்பனைகளும் கருத்துக்களும்—உண்மையாகவே, நம்மவரது புகழ்ச்சிக்குரிய நிலைக்களங்களாகு மென்பதிற் சிறிதும் ஐயமில்லை. இந்நூலுள் மேனாட்டுக் கல்வி வல்லார்க்கேற்காத சொற்களேனும் பொருள்களேனும் காணவும் கிடையா. இத்தகைய நூல்களே, இலக்கியவுணர்ச்சிக்குப் பெரிதும் ஏற்றனவாதலால், சிறுவர்முதற் பலரும் இதுபோன்ற நூல்களிலே பழகுதல், நாகரிகக் கல்விநிலை பெருகுதற்கு முக்கிய ஏதுவாம் என்பது திண்ணம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாம் வருஷோற்சவ காலத்தே செந்தமிழ் வளர்க்குஞ் சீரிய வள்ளலும், அருங்கலை விநோதருமாகிய ஸ்ரீமாந்- பாண்டித்துரைசாமித் தேவரவர்களுடைய அக்கிராசனத்தின் கீழ், மஹாமஹோபாத்தியாயர் பிரமஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் முதலிய வித்துவசிரோமணிகள் கூடிய பேரவையிலே இந்நூல் கவிராயரவர்களால் அரங்கேற்றப்பெற்று, அப்போது எல்லாரும் பெரிதும் புகழ்ந்து கொண்டாடப்பெற்றது.

இந்நூல் முறையூர் நகராதிபரும், வைசியகுல மணியும், செந்தமிழ்ச்செல்வரும், உலகறிந்த பெருங்கொடைவள்ளலும், தமிழ்ப் புலவர்களையும் தமிழ்நூல்களையும் பெரிதும் அருமைபாராட்டி ஆதரிப்பவருமாகிய ஸ்ரீமாந். பழ. சி. சண்முகம் செட்டியார் அவர்கட்கு, அவர்களது வள்ளன்மையின் அறிகுறியாக, சமர்ப்பிக்கப் பெற்றிருக்கிறது. இவ்வரிய நூலை, செட்டியாரவர்கட்கு இவ்வாறு சமர்ப்பணம் செய்தது, மிகவும் பொருத்தமுடையதொன்று எனத் தமிழகம் கொண்டாடத் தடையில்லை.

இங்ஙனம், செந்தமிழ்நாட்டு உத்தம சிகாமணி சரிதத்தை உலகுவப்பப் பாடி வெளியிட்ட கவிராயரவர்களும், இந்நூல் அரங்கேறப் பெற்ற மதுரைத்தமிழ்ச்சங்கமும், இந்நூற் குரிமைபெற்ற செட்டியாரவர்களும் நீண்டஆயுளுடன் உலகம்புகழ வாழுமாறு எம்பிரான் திருவடித்தாமரைகளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

இங்ஙனம்,

மே. சொ. சுப்பிரமணியக் கவிராயர்,

ஹிந்துகாலேஜ் தமிழ்ப்பண்டிதர்,

திருநெல்வேலி.

---

உ

# குமணவள்ளலைப்பற்றிப் புறநானூற்றிலுந் தனிப்பாடற்றிரட்டிலுமுள்ள

# பாடல்கள்.

[புறநானூறு. கடு௮—கசுரு.]

(1.) முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவு
மரசுடன் பொருத வண்ண னெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும் பிறங்குமிசைக்
கொல்லி யாண்ட வல்வி லோரியுங்
காரி யூர்ந்து பேரமர்க் கடந்த
மாரி யீகை மறப்போர் மலையனு
மூரா தேந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியு
மீர்ந்தண் சிலம்பி னிருடேங்கு நளிமுழை
யருந்திறற் கடவுள் காக்கு முயர்சிமையப்
பெருங்க னுடன் பேகனுந் திருந்துமொழி
மோசி பாடிய வாயு மார்வமுற்
றுள்ளி வருந ருலைவுநனி தீரத்
தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்
கொள்ளா ரோட்டிய நள்ளியு மெனவாங்
கெழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
யிரந்தோ ரற்றந் தீர்க்கென விரைந்தில்
னுள்ளி வந்தனென் யானே விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
யாசினிக் கவினிய பலவினார் வுற்று
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
றுய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்

அதிரா யாணர் முதிரத்துக் கிழவ
இவண்விளங்கு சிறப்பி னியறேர்க் குமண
இசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுகநீ யேந்திய வேலே.

குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது.

(2.) வாழு நாளோ டியாண்டுபல வுண்மையிற்
றீர்தல்செல் லாதென் னுயிரெனப் பலப்புலந்து
கோல்கா லாகக் குறும்பல வொதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்டுயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்
பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா விளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
நீருலை யாக வேற்றி மோரின்
றவிழ்ப்பத மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த வுடுக்கைய ளறம்பழியாத்
துவ்வா ளாகிய வென்வெய் யோளும்
என்றாங், கிருவர் நெஞ்சமு முவப்பக் கானவர்
கரிபுன மயக்கிய வகன்கட் கொல்லை
யைவனம் வித்தி மையுறக் கவினி
யீனல் செல்லா வேனற் கிழுமெனக்
கருவி வானந் தலைஇ யாங்கு
மீத்த நின்புக ழேத்தித் தொக்கவென்
பசிதினத் திரங்கிய வொக்கலு முவப்ப
வுயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினுந்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலெ னுவந்துநீ
யின்புற விடுதி யாயிற் சிறிது
குன்றியுங் கொள்வல் கூர்வேற் குமண
வதற்பட வருளல் வேண்டுவல் விறற்புகழ்



வசையில் விழுத்திணைப் பிறந்த
இசைமேந் தோன்றனிற் பாடிய யானே.

அவனை அவர்பாடியது.

(3) உருகெழு ஞாயிற் றொண்கதிர் மிசைந்த
முளிபுற் கானங் குழைப்பக் கல்லென
வதிர்குர லேறொடு துளிசொரிந் தாங்குப்
பசிதினத் திரங்கிய கசிவுடை யாக்கை
யவிழ்புகு வறியா தாகலின் வாடிய
நெறிகொள் வரிக்குடர் குளிப்பத் தண்ணெனக்
குய்க்கொள் கொழுந்துவை நெய்யுடை யடிசின்
மதிசேர் நாண்மீன் போல நவின்ற
சிறுபொ னன்கலஞ் சுற்ற விரீஇக்
கேடின் றாக பாடுநர் கடும்பென
வரிதுபெறு பொலன்கல மெளிதினின் வீசி
நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே
செல்குவை யாயி னல்குவன் பெரிதெனப்
பல்புகழ் நுவலுநர் கூற வல்விரைந்
துள்ளந் துரப்ப வந்தனெ னெள்ளுற்
றில்லுணாத் துறத்தலி னின்மறந் துறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழுஞ் சோறுங் கடைஇ யூழி
னுள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்து மதியங் காட்டியு
நொந்தன ளாகி நுந்தையை யுள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்டெனப் பலவும்
வினவ லானா ளாகி நனவி
னல்ல லுழப்போண் மல்லல் சிறப்பச்
செல்லாச் செல்வ மிகுத்தனை வல்லே
விடுத்தல் வேண்டுவ லத்தை படுதிரை

நீர்சூழ் நிலவரை யுயரநின்
சீர்கெழு விழுப்புக ழேத்துகம் பலவே.

அவனை அவர் பாடியது.

(4.) நீண்டொலி யழுவங் குறைபட முகந்துகொண்
டீண்டுசெலற் கொண்மூ வேண்டுவயிற் குழீஇப்
பெருமலை யன்ன தோன்றல சூன்முதிர்
புருமுரறு கருவியொடு பெயல்கட னிறுத்து
வளமழை மாறிய வென்றூழ்க் காலை
மன்பதை யெல்லாஞ் சென்றுணக் கங்கைக்
கரைபொரு மலிநீர் நிறைந்து தோன்றியாங்
கெமக்கும் பிறர்க்குஞ் செம்மலை யாகலி
னன்பிலா டவர்கொன் றாறு கவரச்
சென்றுதலை வருஉ வல்ல வன்பின்று
வன்கலை தெவிட்டு மருஞ்சுர மிறந்தோர்க்
கிற்றைநா ளொடும் யாண்டுதலைப் பெயரவெனக்
கண்பொறி போகிய கசிவொ டுரனழிந்
தருந்துய ருழக்குமென் பெருந்துன் புறுவிநின்
றோன்படு செல்வங் காண்டொறு மருளப்
பனைமரு டடக்கையொடு முத்துப்பட முற்றிய
வுயர்மருப் பேந்திய வரைமரு ளேன்பக
டொளிதிக ழோடை பொலிய மருங்கிற்
படுமணி யிரட்ட வேறிச் செம்மாந்து
செலனசைஇ யுற்றனென் விறன்மிகு குரிசி
லின்மை துரப்ப விசைதர வந்துநின்
வண்மையிற் றொடுத்தவென் னயந்தனை கேண்மதி
வல்லினும் வல்லே னாயினும் வல்லே
யென்னளந் தறிந்தனை நோக்காது சிறந்த
நின்னளந் தறிமதி பெரும வென்றும்
வேந்தர் நாணப் பெயர்வென் சாந்தருந்து
பல்பொறிக் கொண்ட வேந்தெழி லகல



மாணிழை மகளிர் புல்லுதொறும் புகல
நாண்முர சிரங்கு மிடனுடை வரைப்பினின்
றாணிழல் வாழ்நர் நன்கல மிகுப்ப
வாளம ருழந்தநின் றானையுஞ்
சீர்மிகு செல்வமு மேத்துகம் பலவே.

அவனை அவர்பாடிப் பகடு பெற்றது.

(5.) இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்லை
ரிரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே.

அவர் வெளிமானுழைச் சென்றார்க்கு வெளிமான்துஞ்சுவான் தம்பியைப் பரிசில்கொடுவென அவன் சிறிதுகொடுப்பக் கொள்ளாதுபோய்க் குமணனைப் பாடிக் குமணன் பகடுகொடுப்பக் கொணர்ந்துநின்று வெளிமானூர்க் கடிமரத்துயாத்துச்சென்று அவர் சொல்லியது.

(6.) நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்குங்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
னெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கு
மின்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயு
மெல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
றிருந்துவேற் குமண னல்கிய வளனே.

பெருஞ்சித்திரனார் குமணனைப்பாடிப் பரிசில் கொணர்ந்து மனையோட்குச் சொல்லியது.

(7.) ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பி
ஞம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
யில்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த விரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
வென்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரிய
ரின்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே.

**தம்பியால் நாடுகோள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த குமணனைப் பெருந் தலைச்சாத்தனார் பாடியது.**

(8.) மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வ
ரின்மையி னிரப்போர்க் கீஇ யாமையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே
தாடாழ் படுமணி யிரட்டும் பூநுத
லாடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றனெ னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
னாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையி
னாடுமலி யுவகையொடு வருவ
லோடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே.



**தம்பியால் நாடுகோள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த குமணனைக் கண்டு அவன் தன்வாள் கொடுப்பக் கொண்டுவந்து இளங்குமணற்குக் காட்டிப் பெருந்தலைச்சாத்தனார் பாடியது.**

## [தனிப்பாடற்றிரட்டு.]

1. ஆடெரி படர்ந்த கோடிய ரடுப்பில்
ஆம்பி பூப்பத் தீம்பசி யுழல
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைதொறுஞ் சுவைதொறும் பால்காணமல்
குழவி தாய்முக நோக்க
மனைவி யென்முக நோக்க யானும்
நின்முக நோக்கி வந்தனங் குமணா.

2. அந்தநாள் வந்திலை யருந்தமிழ்ப் புலவோய்
இந்தநாள் வந்துநீ நொந்தெனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்துதன்
விலைதனைப் பெற்றுன் வெறுமைநோய் களையே.

3. மாங்கையிலே வாழு மகுடத் தியாகியுனக்
கேந்து தழும்போ விரண்டுண்டு—வேந்தர்
முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்க் கீயும்
படித்தழும்புன் கையிலே பார்.

4. வெம்புங் காலை வெதும்பி விழுஞ்சிரம்
செம்பொன் கோடி விலையெனச் சிந்தித்தான்
உம்பர் நாடு முலகினுந் தேடினும்
எம்பிபோ லெமக் கியாவ ருரியரே.

5. ஆறு பெருக்கற் றருந்திடர்தான் பட்டாலும்
ஊறலமை யாதோ வுலகாற்றுத்—தேற
வறியையே யானாலு மென்கலியை யாற்றச்
சிறியையோ சீர்க்குமணா செப்பு.

—:0:—

எத்தனை கால மிருப்பினுங் கடையி லிறப்பதே சரதமெந் நாளு
ம், நித்தனை யல்லா னிறப்பவ ரில்லா நீர்மையா லிதையுணர் ததீசி, யு
த்தமன் வீணி லலப்புறு மென்னை யும்பர்கோ னுயிர்பெற வுவந்
து, தத்தமே செய்தா னீதுசெயா திருப்பிற் சாவிலா திருப்பனோ
சாற்றாய். (௱௫)

வேறு.

ஈதலெனு நற்குணமொன் றிசைந்தவர்பா லெவ்வகைய
தீதுபெறுங் குணமுறினுஞ் செஞ்சுடர்முற் பனிபோலா
மாதலினான் மானிடர்க்கு மமரருக்கு மியாவருக்கும்
மேதினியிற் கொடைநிகரா விளங்குதுணை வேறிலையால். (௱௬)

பூதவுட லாயவிது பொன்றுமொரு கணப்பொழுதி
லாதுலருக் கெப்பொருளு மவரதெனத் தருங்கொடையான்
மேதகுநன் னுவலர்வாய் மேவுமுடம் பொன்றதுதான்
சாதலின்றி நித்தியமாத் தழைத்துவரும் புகழுடம்பு. (௱௭)

இல்லறஞ்செ யில்லவளு மேனையரு மிருநிதியும்
நல்லரசும் வளநாடு நமனார்கைப் படும்பொழுது
புல்லுமொரு துணையாகப் பொருந்துவவோ வறமொன்றே
வல்லதுணை யாயிருந்து வாட்டமுறன் மாற்றிடுமால். (௱௮)

சிறைக்காவ ருனுமெவன் செய்புமிளஞ் சேயிழையார்
நிறைக்காவ லொன்றேநன் னிலைக்காவ லதுபோலப்
புறக்காவற் படைநான்கும் பொருந்துகினும் பயனிலைநல்
லறக்காவ லரசுரிமைக் கழியாத பெருங்காவல். (௱௯)

அகழ்தருமண் புழுநரிநா யனைத்துமெதிர் பார்த்திருக்கும்
இகழுடம்பை யடைந்தவர்க ளிருக்கையிலு மிறந்தவரே
திகழிரவி சவிநாணத் தேயமெலா மிகவிளங்கும்
புகழுடம்பைப் பொருந்தினவர் பொன்றுகினும் பொன்றாரே. (௧௧௦)

அன்பிலரே யெப்பொருளு மழிந்துபடுந் தமக்குரியா
ரன்புடையா ரென்பினுட னாவியுமே பிறர்க்குரியா
ரென்பதைமுன் சிபிவேந்த னிளம்புறவுக் கின்பமுற
என்பதையு மளித்தழியா விசையடைந்த திசையாதோ. (௧௧௧)

அகனிலத்திற் றனியாழி யதுசெலுத்தி யகங்களித்த
தகவுபெறு பெருவேந்தர் சங்கமள விடற்கரிதே
மிகுமவரிற் கொடைபொறுமை வீரமுத லியவற்றாற்
புகழடைந்தார் பெயரன்றிப் பொன்றினர்பேர் பொலிவனவோ. ()

ஆதலினா லரசேநீ யன்புகொடை யருளறிவு
மேதகவுற் றிவ்வரசின் விளங்குதிபன் னெடுங்காலம்
ஓதுமதி மந்திரிமா ருரைசிறிதுந் தள்ளற்க
ஈதுறுதி யெனக்கோடி யென்னினுனக் கழிவிலையால். (௧௧௩)

மனித்தர்பய மணுத்துணையு மனக்கொள்ளே னினைப்பவருள்
இனித்தமுழு முதலாகி யிரணியமா மன்றகத்துக்
குனித்தபரன் சான்றாகக் கொள்ளுதியேல் வினையனைத்துந்
தனித்தனியே விடைவாங்குஞ் சத்தியஞ்சத் தியமிதுவே. (௧௧௪)

வேட்டவர்கள் வேட்டவெலாம் விலக்காமற் கொடுப்பலெனும்
நாட்டமுளே னயலொருவ னண்ணியிரக் கினுமகிழ்ச்சி
காட்டியளித் திடுமரசைக் காப்பதனுக் குரிமையைநீ
கேட்டபொழு தில்லையெனக் கிளத்துவனோ கெழுவலியாய். (௧௧௫)

அழிவுபடு மிகச்செல்வ மாயவிதை நீபொருந்தி
வழியுமது மலர்க்கடவுள் வாழ்க்கைநிலை மாய்ந்தாலும்
அழிவுபடாப் பரச்செல்வ மாந்தவத்தை யெனக்களிக்குந் [யால்.
தொழிலுடையாய் துணைவனெனுஞ் சொற்பொருளைத் துலக்கினை

இன்றுமுத லெனக்குநீ யிளவலெனக் கருதுகிலேன்
கன்றுதல்செய் மலமாயைக் காரிருளைப் புறத்தொதுக்கத்
துன்றியநல் லறிவென்னுஞ் சுடர்கொளுத்தும் படிபோந்து
நன்றுபுரி யருட்குரவ நாதனீ வாழியவே. (௧௧௭)

நன்றாய தொழிலினைப்பின் னாட்புரிவா மெனக்கருதா
தன்றேசெய் வதுவேண்டு மாதலினா லருந்தவத்திற்
கின்றேயா னேகுவனீ யிருத்தியெனத் தனித்தெழுந்து
சென்றானல் லறத்தினுக்குச் செவிலியெனத் திகழ்பெரியோன். ()



தருமமுருத் தரித்தேகுந் தன்மையெனத் தார்வேந்தன்
தெருவிடைமெல் லடிசிவப்பச் செல்கின்றா னதுபொழுது
புரிவுபெறுந் தாயகலப் பொறாதழுஞ் சிறாரென்ன
மருவியநற் றிருநகர மாந்தரடுத் திதுபகர்வார். (௧௧௯)

சக்கரங்கொண் டுயிரனைத்துந் தனிபுரந்த தராபதியே
இக்கணத்தி னெம்மையெலா மிடர்க்கடலி னிடைப்படுத்தித்
தொக்கவனம் புகுவதற்குத் துணிந்தனையே தொல்லுலகின்
மக்களழுங் குரற்கிரங்கா மாதாவு முளள்கொல்லோ. (௧௨௰)

பால்கொடுத்து வளர்த்தெடுத்த பசியசிறைக் கிள்ளைகளை
வேல்கொடுத்த வடிமுறுவல் வெருகினிடை விடுப்பாரோ
நூல்கொடுத்த வியனடையாய் நோய்புரியு நம்பியிடங்
கோல்கொடுத்து நீயகலக் குறிக்கொண்ட குணநன்றே. (௧௨௧)

மேதகுதாய் முலைப்பாலில் விடங்கலந்து கொடுத்தென்னக்
காதகனா நம்பிகொடுங் கரங்கொள்ளக் கவிகைதந்து
பூதலமெல் லாநடுங்கப் புரிந்தனையே புகழுடையாய்
ஈதுநினக் கழகாமோ விதுவோநின் னருட்கியல்பே. (௧௨௨)

உன்னைவிடுத் தனமாயி னுயிர்விடுத்தோ மென்பர்சிலர்
என்னையிவன் மனமிரக்க மிலதாயிற் றென்பர்சிலர்
பின்னவனைக் கோறலுக்குப் பெயர்குதுநா மென்பர்சிலர்
அன்னவனா ணைக்கடங்கி யமைகிலோ மென்பர் சிலர். (௧௨௩)

சிங்கமிருந் தரசாட்சி செய்யுமொரு வரைமுகட்டே
தங்கியொரு நரியிருத்தல் தகுந்தகுமென் றுரைப்பர்சிலர்
வெங்கொடுங்கோ லவனோடு மேவகிலே மென்பர் சிலர்
எங்களைநின் னொடுகொடுசென் றெய்துகநா னென்பர்சிலர். (௧௨௪)

எல்லவரு நல்லவனென் றேத்து மிந்த மகிபதியைப்
பல்லவரு முகம்புலர்ந்து பதைபதைத்துக் கதறியழப்
புல்லறிவா னாட்டைவிட்டுப் போக்கியவ னாட்சியினும்
வல்லியங்க ளொடுவாழும் வாழ்க்கையினி தென்பர்சிலர் (௧௨௫)

சிரியனைத் தன்னுரிமைத் தேசம்விட்டுத் துரத்துதலாற்
பாரினுளோ ரழுதழுது படும்பாடு பழுதாமோ
ஆருமகிழ் தரக்கெடுவா னயர்ந்தேழை யழுதகண்ணீர்
கூரியவா ளொக்குமெனக் கூறுமறை யென்பர்சிலர். (௧௨௬)

அரசுரிமை யெவர்க்குமகிழ் வாற்றுவதென் பதுதொலைந்து
விரவுதுயர்க் கடலுலக மேற்கொள்ளப் புரிவதுவோ
புரவலனே கொடும்புல்லர் புரியுமொழுக் கினனானான்
சரதமினி யறக்கடவு டாக்குமெனப் பகர்வர்சிலர். (௧௨௭)

இலகுபதி யைப்பிரித்தா னென்னுமுறை வருமுன்னே
குலவியநந் நாட்டினையும் கொடுங்கோலாற் பிரித்தானே
இலகுமனத் திரக்கமின்றோ விவன்கொடியன் முதுபுலவர்
திலகருளத் திடிவிழுந்த செயலிதுவே யென்பர்சிலர். (௧௨௮)

வலிபடைத்த மாரிலிகண் மனமயங்கிப் பயப்படல்போற்
புலிநிகர்த்தேம் புலம்புவதென் பொருவதற்குப் புறப்படுமின்
ஒலிகெழுநீர்த் திரையுலக ரொருவழிப்பட் டாலிளங்கோன்
எலிநிகர்ப்ப னெழுமின்க ளெழுமின்க ளென்பர்சிலர். (௧௨௯)

இப்பட்ச பாதகனு மிலகுபதி நாடகலக்
குப்புற்று வாழ்வதினுங் கொலைக்களமுற் றமராற்றி
ஒப்பற்ற வயமுறுவே முயிர்தருவேம் பயம்விடுவேம்
செப்பத்தின் செப்பமனச் செப்பிநிறை குவர்சில்லோர். (௧௩௰)

முறைபுரிந்து புவிபுரக்கு முடிகெழுவேந் தருக்குரிய
மறைவழியா மயின்முறைமை மறைவழியா வதுதகுமோ
பறவையினம் பலபயின்று பலங்கொளுங்கற் பகதருவில்
இறையளவி னிடிவிழுந்த தெனவாயிற் றென்பர்சிலர். (௧௩௧)

குலங்குலையக் குடிகளழக் கொடுங்கோல்கொண் டவனுலகங்
கலங்கும்வெடிக் கர்ச்சனைநங் கருத்திடிபட் டிடமேவிப்
பலங்குலைய மானமறப் பரிபவமுற் றுயிர்தரிப்ப
தலங்கலணி புயவீரர்க் கடுக்குமோ வென்பர்சிலர். (௧௩௨)



இங்காருந் தம்முளத்தி னிலகுபதி யிவனென்னும்
மங்காத சீர்த்தியனை மட்டும்விட்டுத் தன்னுரிமைப்
பங்காளப் பிரிவுசெய்து பாராளச் சண்டாளன்
பொங்கால மெனவரினும் போதுமெனப் புகல்வர்சிலர். (௧௩௩)

தீராத கொடுந்துயரஞ் செகத்தவரெல் லாமடைய
ஓராத சிறியவனு மொருகொடியின் மக்கண்மனை
நீராரும் வளநாடு நீப்பினுநந் நிருபன்முகம்
பாராளு மன்றிருந்த படியிருந்த தென்பர்சிலர். (௧௩௪)

மன்னவன்செய் வதைபிழித்து வகுப்பதுவு மமராற்ற
உன்னுவதும் பிழைபணிவா யுரைத்துமெழு தியுமிரப்பாம்
அன்னவனே யருளினல மன்றெனில்வா ளாதுறுவேம்
இன்னதுவே நமக்கடுப்ப தென்பர்சில பேதையர்கள். (௧௩௫)

மன்பதைவேந் தாவியுடல் வாழ்வதுபோல் வாழ்வின்றித்
துன்பதையே யனுபவித்துச் சொன்னவெலாந் தலையேற்றுப்
பின்பதையே செயுமடிமைப் பிழைப்பினிலும் வீரசொர்க்கம்
என்பதையே வேட்டுறுவா மெல்லவரு மென்பர்சிலர். (௧௩௬)

தண்டினாற் புவிபுரப்பார் தருமநெறி கைவிடுவார்
அண்டினாற் பிடித்தடைப்பா ராய்ந்தறிந்து முறைபுரியார்
வண்டினாற் றான்கெடல்போல் வரிகளாற் குடிகெடவும்
கண்டினாப் பலபுரிவார் காவலரோ காதகரே. (௧௩௭)

இம்பர்மா னுடரெவர்க்கு மின்னுயிர்நே ரிலகுபதி
யும்பர்மா நிலமுழுதற் குரியவழி மருவுதுயர்
கம்பர்மா கவியிருவர் கவிக்கடங்கு மல்லாது
கும்பர்மா சுணத்தலைவர் கூறுதற்குங் கூடாதே. (௧௩௮)

மானிடர்தந் துயர்கருதான் வழக்குரைத்தா லெதிர்பகரான்
தானிடரே நிதம்புரிவான் றனக்கென்றோர் விதிவகுப்பான்
தேனென்னவே மொழிபகர்வான் சிந்தைசெயல் விடமனையான்
ஈனனர சாட்சியினு மெழுநரக மினிதாமே. (௧௩௯)

முற்றுநிறைந் திருக்குழயிர் முடிகிவிடுத் தேகுமெனில்
வெற்றுடம்பு தனித்துறுமோ வேல்வேந்தே யென்பர்சிலர்
அற்றதுவாழ் வென்பர்சிலர் அந்தோவென் றழுவர்சிலர்
பற்றிமுழு வதுமெவரே பகர்வரவர் படும்பாடே. (௧௪௰)

அண்ணான்முக முழுமதிய மணிமறுகிற் காணுதலும்
கண்ணினிடைப் புனலொழுகக் கமலநிகர் முகத்தினராய்ப்
புண்ணுடைய மனத்தினராய்ப் புடைத்திடுகை வயிற்றினராய்த்
தண்ணளியங் குழல்குலைபத் தனித்தனியேங் கினர்மடவார். (௧௪௧)

அதிதுயரத் தவராகி யழுதடுத்துத் தனைச்சூழ்ந்த
மதியமைச்சர் முதலாய மாநகரத் தாரையெலாந்
துதிபெறுநற் குணக்கடலாஞ் சொல்லிலடங் காப்புகழான்
கதுமெனவே கையமைத்துக் கட்டுரைசிற் சிலபகர்வான். (௧௪௨)

விதிமுறையிற் பிறழாதீர் மெய்நடுங்கிக் குலைவதெவன்
இதுநமது பேரறிவுக் கியல்பன்றே யானியற்று
முதுதவத்துக் கிடையூறு மொழிவிடுமின் றுயரொழிமின்
பொதியவிழ்தா ரெம்பியுமைப் புரப்பனென மனக்கொண்மின். ()

இன்றுவரை நுமக்குநல மியற்றினன்யா னெனவிரங்கிக்
கன்றியனை வருங்குழமிக் கழறுமொழி சரதமெனில்
நன்றியறிந் தவராகி நானவிலும்படி நடத்தல்
என்றுமுமக் கறமாகு மெனக்குமகிழ் விதுவேயாம்.. (௧௪௪)

நவம்புரியு மெழின்மடவார் நாடுநக ரரசனைத்தும்
பவம்புரிதற் கேதுவலாற் பார்ப்பினொரு பயனுளதோ
அவம்புரியு மியாக்கையிஃ தழியுமுன மன்பெய்தித்
தவம்புரியப் பெற்றவரே தமதுபிறப் பற்றவரே. (௧௪௫)

வெம்பியெடுத் துரைத்தவெலாம் வீணுரையே விரும்பியவென்
தம்பியெனக் கியற்றுதவி தாரணியி லெவர்புரிவார்
பம்பியவென் னுயிரனையீர் பரிந்துண்மை பார்க்குமிடத்
தெம்பிமனக் கினியவரே யெனக்கினிய ரெனத்தெளிமின். (௧௪௬)



ஒன்றேனுமிதுவரையா னுரைத்தமொழி தவறடைவ
தென்றேனும் பார்த்தனிரோ வினித்தவறன் முறையாமோ
இன்றேயா னெம்பிகொளற் கிந்தனனிவ் வரசுவனம்
சென்றேநற் றவமியற்றுஞ் சிந்தனையிற் றிடமடைந்தேன். (௧௪௭)

ஒருதரத்திடைத்தோன்றி யொருவரமு தூட்டவுண்டும்
ஓரகத்தி னுடனுறைந்து மோரரசுக் குரியமியாம்
ஆரரசு புரியினுநீ ரடங்குவதல் லாதெமக்குள்
தாரதம்மி யம்பகுத்துச் சாற்றுவது தகவாமோ. (௧௪௮)

இரவிகுடக் கெழுந்தாலு மெழுகடலுங் கிளர்ந்தாலும்
புரவிமுகத் தெழுந்துகனல் பொங்கியெதிர் போந்தாலும்
திரமருவித் தவமியற்றித் திருவடையா மற்றிரும்பி
வருவனென நினைப்பையின்னே மறந்திடுமின் மறந்திடுமின். (௧௪௯)

எல்லீரு மிவனுரைத்த வெனதுரையை மறுத்தனுவுஞ்
சொலலீரா யெம்பிபுகல் சொல்வழியி னடக்குதிரேல்
கல்லீரும் புயவலியீர் கடவுளர்க்கு மியாவருக்கும்
நல்லீரென் றுரைத்துவிடை நல்கிநகர்ப் புறநடந்தான். (௧௫௰)

மொழியெலாம் வெடிகாட்ட முகமெலாஞ் சுழிகாட்ட
விழியெலாம் புனல்காட்ட வியர்வெலா முடல்காட்ட
வழியெலாந் தாழ்காட்ட வாழ்வெலாந் துயர்காட்டப்
பழியெலாந் தலைகாட்டப் பரிபவமுற் றவரிருந்தார். (௧௫௧)

அந்தோவென் றரற்றொலியு மார்த்தெழுநெட் டுயிர்ப்பொலியும்
கொந்தாருங் குழல்குலையக் குலைகின்ற குலக்கொடியார்
சந்தாபத் தழுமொலியுந் தம்மார்பிற் புடைப்பொலியும்
எந்தாலத் துரைப்பதெவ னெழுகடலி னொலிபோலாம். (௧௫௨)

நிதியிழந்தோ மென்பர்சிலர் நெடியசிர மசைத்திசைக்குந்
துதியிழந்தோ மென்பர்சிலர் சொற்கடலிற் றுளைந்தறியும்
மதியிழந்தோ மென்பர்சிலர் மனமறுகி வாணரெலாம்
பதியிழந்து வனநோக்கிப் பார்வேந்தன் படர்பொழுதே. (௧௫௩)

மடனீந்த கொடியமன வலித்துணைவற் கரசுபுரி
யிடனீந்த பேரறிவா னிரங்குமொலி யுடன்மாந்தர்
தடனீந்த விழிவழியே தனித்தனிகொட் டியகண்ணீர்க்
கடனீந்தி யெழுபிறவிக் கடனீந்தக் கடக்கின்றான். (௧௫௪)

வனமடுத்து நிரைபுரந்த வடிமனடுத்த திருமார்பன்
தனைநிகர்த்துப் புவிபுரந்த தண்ணளியான் றவமியற்று
நினைவிழுத்து முன்போக நெடியபவப் பிறவிதரு
வினைவிடுத்துப் பின்போக மிகமகிழ்ந்து தான்போனான். (௧௫௫)

முரண்டமைய யாங்குறினு முடிகிவளை தரும்பாச
அரண்டனைவிட் டாங்குபரு மரண்கடந்து சலசரம்போல்
திடண்டமகார் மனைகுழுமிச் செறிகுடும்பக் கடல்கடந்தாங்
கிருண்டகுழற் கணிகையர்நெஞ் செனுமகழி கடந்தனனால். (௧௫௬)

வேறு.

நால்வகைப் படைகளு நணுக வூனுகர்
வேல்வகைப் படையொடு மேவும் வேந்தர்கோன்
கால்வகை நடைகொடு கதுவ லால்விதி
போல்வகைப் படுவது புகலி னியாதரோ. (௧௫௭)

அண்ணலி னுயர்குணத் தமைவு காண்டலின்
விண்ணவர் மலர்மழை வியந்து பெய்தெனக்
கண்ணகன் மாகமீக் கமழுங் காவெலாம்
உண்ணிறை மதுமல ருகுப்பச் சென்றனன். (௧௫௮)

தடத்தலை மோதன்மத் தளத்தி னேதையா
மடத்தலை மாதர்போன் மஞ்ஞை யாலுவ
படத்தலைத் துயில்பரம் பரனை யொப்புற
நடைத்தலை யுடையகோ னணுகு மங்கணே. (௧௫௯)

தனிமையா லிராகவற் சயித்த கோமகன்
வனமுற நோக்கல வருந்திப் பண்ணையின்
நனியுறை ஞண்டரு நந்து மாதிய
பனிதரு மனைபுகப் பார்த்துச் சென்றனன். (௧௬௰)



முற்றிய கல்வியான் முதிஞர் யாவரும்
தெற்றெனத் தலைதுனிந் திருக்குஞ் செய்கைபோல்
சுற்றிய வயற்றொறுஞ் சூனி ரம்புநெற்
கற்றைகட லைநிலை கவிழ்ந்து காட்டிற்றே. (௧௬௧)

ஆழியாற் பகைவரை யடக்கு மண்ணன் மான்
சூழிருங் கானகஞ் சூழ்வ னென்றுகான்
கோழிகூ கூவெனக் கூவிச் செல்வன
பாழியந் தோளினான் பார்த்துப் போயினான். (௧௬௨)

ஆவியொன் றய்ப்புவி யனைத்து நாட்டிய
காவலன் பிரிவினாற் கலுழ்வ வாமெனப்
பூவையின் மலர்மதுப் பொழிந்து தோன்றுறத்
தேவர்பூ பதிநிகர் செம்ம லேகினான். (௧௬௩)

தேனள விடுவயல் கானம் பிற்செல
நானள விடவொணு நலத்தென் றலெனர்
தானள விடவருந் தகைய ரென்னலாம்
வானள விடுமுயர் வரையை நண்ணினான். (௧௬௪)

எங்கணுஞ் செடிகொடி யெங்கும் பாசடை
எங்கணும் பன்மல ரெங்குங் காய்வகை
எங்கணும் பல்கனி யெங்கும் பில்குதேன்
எங்கணுங் கிழங்கின மெங்குந் தண்புனல். (௧௬௫)

ஆண்டுபெற் பலவறந் தாலு நல்வளம்
ஈண்டுபல் வேயின மெங்குந் தொக்கதால்
தூண்டுநல் லறிவினர் சொற்ற நாமத்துள்
காண்டகு வரைவிண்டு கணிக்கப் பெற்றன. (௧௬௬)

மல்லுடை மாண்பொடு வந்து நோக்கினர்
ஒல்லென மலைத்திட வுற்ற பண்பினால்
சொல்வலர் மலையெனச் சொற்ற பேர்ப்பொருள்
புல்லுவ திதுவெனப் புகறற் கேற்றது. (௧௬௭)

அளப்பதற் கரிதுபல் பொருளு மன்னது
துளக்கிலா நிலையது துயர நீப்பது
விளக்குமெய்த் தவத்தினர் விரும்பிநன்றெனக்
கொளத்தகுஞ் சீரது குறவ ரூரது. (க௬௮)

திருமலர் மணிநிதி சேர்த்த ணிந்துலாம்
பெருநதிப் பெண்மகப் பெற்றுத் தண்புனல்
விரிதிரைப் புணரியை மேவச் செய்தலால்
மருகென வருணனை வழுத்தக் கொள்வது. (க௬௯)

நீலமா மாகமீ நிரைத்த தாரகை
போலமுண் டகத்தடை பொலிய நீர்த்துளி
சாலவுற் றொளிர்சுனைத் தலமரீஇயது
வேலென மிளிர்கணார் வேட்ட மீவது. (க௭௰)

கடகட வெனுமொலி காட்டி வெவ்விய
வடவையுங் குளிர்குளிர் மருவித் தத்திய
நடைகொடு வெள்ளணி நாற்றி யாங்குறும்
தடமலி யருவிநீர் தயங்க மேயது. (க௭௧)

திருமணப் பந்தரிற் செறித்து நாற்றிய
பெருமணி மலரணி பிறங்கி யாங்குதேன்
தருகனி விரிமலர் ததைந்து மேவிய
மருமலி தண்டலை வாழ்வு சூழ்வது. (க௭௨)

கருநிறத் தண்டலை ககன மீதெலாம்
விரவியுற் றடர்ந்தன மேவ லாலிவண்
இரவியுற் றனன்கொன்மற் றின்று கொல்லென
வருமைய நண்பகன் மாட்டு மீவது. (க௭௩)

வேறு.

காமலி யருணத் தழைகளுந் தகமாக் காட்டிவா ரணம்புடை பெருக்கித், தேமலி கூட்டுப் பரிசனை யேந்திச் சீகரப் பனித்துணை சேர்த்து, நாமுறக் கோடைப் பகைவனை வாட்டி நாடொறு மகிழ்வொடு



நளிராங், கோமகன் கொண்மூ மகுடமும் புனைந்து கொற்றமுற் றிருப்பதக் குன்றம். (க௭௪)

உறவினர் பாச பந்தமே வாழு முளத்தவ ராயினு மங்கண், குறுகுவா ராயிற் பந்தமுங் குறுகுங் குறைவிலா ஞானமுற் றெய்தும், தறைமிசை வேட்கை யகலுமா மென்னிற் றவஞ்செயக் கருதிவந் தவர்கள், பெறுவதித் தகைய நலமென வெவரே பேசுவர் பிறங்கலிற் பெரிதே. (க௭௫)

நற்றவம் புரிந்து வராகமா முனியு நளிர்மதிக் கடவுளு நளினப், பொற்றவி சிருக்கும் புங்கவே தியனும் பூசுரர் முனிவர்பற் பலரும், கற்றவர் பிடித்த கடவுண்மா மணியின் கருணையுங் காகுத்த னருளும் பெற்றதிக் கிரியி னிதனையே வராகப் பிறங்கலென் றுரைப்பர்முற் பெரியோர். (க௭௬)

இந்திர னுலகஞ் சிறந்ததென் றினியா மியம்பிடோந் தவவனப் பெருமைக், கந்தில்சற் றேனு மிணையுறா திவண்வா ழருந்தவ மருவுதூர் வாசன், புந்திநொந் தியம்பப் புலவர்கோன் றுயரம் பூண்டதே போதுமாம் பொதிய, வந்துவந் துவந்து மலர்மணம் பரப்பி மகிழ்வெலாம் பரப்புமவ் வனத்தில். (க௭௭)

வேறு.

தண்ணளி முரலவாசத் தழைக்கர மசையச் செய்ய
கண்ணனை யவிழ்ந்து காட்டக் கனலிய பொதும்ப ரீட்டம்
உண்ணனி யுவகை பொங்கி யொளிர்முகக் கமலச் செவ்வி
அண்ணலை வாவா வென்றே யழைப்பது போன்ற தன்றே. (க௭௮)

பூங்குயில் காள மாவம் போருகங் களாஞ்சி தாங்க
மாங்கிச லையம்வா ளேந்த வண்டினம் பாண ராகத்
தேங்கமு கீன்ற பாளை செவ்விய கவரி யாக
ஆங்கொரு தனியா னாங்க ரரசுவீற் றிருந்தா னையன். (க௭௯)

கனிசில நாள ருந்திக் காய்சில நாள ருந்தி
நனிதழை சின்னா ளுண்டு நன்னிலக் கிழங்குட் கொண்டு
இனியதேன் கலந்து போது மீர்ம்புனல் வாயு மாந்தித்
தனியர சான பூமான் றவத்தர சாகி நின்றான். (க௮௰)

போதுலாந் தருவி னீழற் புலவர்கள் பூமா னன்பு
மேதக வெழுந்து பொங்க வீற்றினி திருந்தா னாக
தாதுலா மதுபத் தண்டார்த் தராபதி தன்பின் வந்த
சோதர னாகிக் கோல்கொள் காதகன் றொழிலுஞ் சொல்வாம். (௧௮௧)

பூதலத் துயிர்க ளெல்லாம் பொன்றிடப் புரிந்து மேன்மேற்
போதரு மகிழ்ச்சி யோடு பொலிவுறு கூற்றம் போல
மாதவத் தரசை யேவி மாந்தருண் மகிழ்வும் போக்கி
மீதெழு களிப்பி னோடு வீற்றிருந் தனனவ் வெய்யோன். (௧௮௨)

அழுமொலி சங்க மாக வணைத்துமா ரடிக்கு மோதை
முழவொலி யாகக் கண்ணீர் மொய்மணப் பன்னீ ராகப்
புழுதிவீ தியிற்சு கந்தப் பொடியெனப் புரியி னெங்கும்
இழவர சிருப்ப வேந்தா யிளவர செய்த லுற்றான். (௧௮௩)

கணியணி நாலோர்க் கூவிக் கடிகைவைத் தடுத்த காலைப்
பணியணி சூடப் பாரப் பாரணி புயத்த னாகி
யணியணி பெறமேற் றுங்கி யங்கத முடைவா ளேந்தி
மணியணி மகுடம் பொங்க வந்தா சணையிற் சேர்ந்தான். (௧௮௪)

அரசணை யிருந்த வேலை யமைச்சரும் பிறரு மீண்டித்
தருவகை யுறைக ளேற்றுத் தருக்கெலா முருக்கொண் டாற்போற்
பெருமித மடைந்து மேருப் பிறங்கலிற் பிறங்கு திண்டோள்
மருவிய வலியால் வாரி மாநிலம் புரப்பா னானான். (௧௮௫)

அறத்தையு நோக்கான் செவ்வி யருளையு நோக்கா னன்புத்
திறத்தையு நோக்கான் கொண்ட சிறப்பையு நோக்கா னெய்து
மறத்தையு நோக்கான் பண்டை வழக்கையு நோக்கா னாகிப்
புறத்தொடு மகத்துஞ் செல்வப் பொருளையே நோக்கி வாழ்வான். ()

தன்னினல் லறிவுள் ளோரிற் றருமத்திற் கொடையிற் பண்பில்
முன்னவ னாகி யாண்ட முன்னவ னரசை வௌவி
இன்னணங் கோன டாத்து மின்னவ னுள்ளத் தோர்நாள்
உன்னுதற் கரிய தொன்றை யுன்னுத லுற்றா னந்தோ (௧௮௭)



மல்லன்மா நிலமெ லாந்தன் மலரடிப் படுக்க வாழும்
நல்லர சுரிமை தன்னை நம்மிடங் கொடுத்து நீகான்
செல்லுதி யென்றே னுன்னைச் செகுப்பலென் றுருத்து நாம்போய்ச்
சொல்லலுங் கொடுத்துக் கானஞ் சூழ்ந்தனன் சூழ்ச்சி யாதோ. ()

பணமெனிற் பிணமு மாசைப் படுமெனப் பகர்வா ரந்தப்
பணமுமேம் பாடுஞ் சேரிப் பாக்கிய வரசு தன்னைக்
குணமொடு கொடுத்தா னென்று குறிக்கொளா குணத்தி னாலே
தணவிலாப் பொருளின் வேட்கை தனைவெலுந் தகைய ரியாரே. ()

ஆதலா னம்மைக் கோறற் காம்புய வலியில் லாது
மோதுபோர் புரிதற் கஞ்சி முன்னுயிற் காத்தற் குன்னிப்
பூதலத் தரசை யீந்து போயினன் கானம் போலும்
ஈதலாற் றுணிவொன் றில்லை யின்னதே யண்ண னெண்ணம். (௧௯௰)

பல்வகை நிதியி னாற்பொற் பளிங்கினான் மணியாற் செய்த
நல்வகை மாடத் தும்பர் நண்ணிவீற் றிருந்த செம்மல்
கல்லொடு புல்லு முள்ளுங் கலுலிய கான மெய்தி
யெல்லொடு பனியும் வாட்ட வெவ்வித மிருப்ப னம்மா. (௧௯௧)

நல்லியல் வாணர் செய்யு ளாரத னனையார் பாடல்
எல்லியு மெல்லுங் கொண்ட விருசெவித் துளையி னூடு
வல்லியங் கரடி பன்றி மதமலை யறுகு செய்யுஞ்
செல்லியல் குமுறல் கேட்கிற் சிந்தனை மெலிவு றாதோ. (௧௯௨)

அமுதினு மினியவாக வடுதொழி லாளர் செய்யக்
கமகம வெனக்கந் திக்குங் கறியமு துண்ட வாயான்
அமர்தழை சருகு கந்த மரியகாய் கனியு ணாக்கள்
தமையிரு கரத்தாற் கொண்டு தான்புசித் திருப்பன் கொல்லோ. ()

நூலெலாந் தெரிந்த நெஞ்ச னுவல்வயப் பரிமா கைமா
மேலெலா மாடை யாற்றும் விமானமேன் மேவிச் சென்றான்
பாலெலாம் பருக்கையாதி பரிவுமேற் பரிவு செய்யக்
காலினாற் றிரியி னெஞ்சங் கவலுறல் கணிப்பிற் றாமோ. (௧௯௪)

என்றுமில் லாதோர் நெஞ்சி லின்பமே யினைத்தென் றெண்ணார்
துன்றிய பெருஞ்செல் வத்திற் றோன்றினர் வறிஞ ராயில்
சென்றன மகிழ்ச்சி யெல்லாஞ் சிந்தையை வாள்போற் றுக்கக்
கன்றுத லன்றி யுள்ளங் களிப்பது காணற் பாற்றே. (௧௯௫)

ஆகையாற் கானத் தண்ணி யாயுணா ளளவு மங்ஙன்
சாகமா திகளை யுண்டு தண்பனி வெயிலுந் தாங்கி
ஓகையாற் றவஞ்செய் வானென் றுன்னுதன் மடமைத் தாகும்
வினையே வேண்டு மன்றேல் வேறொரு சூழ்ச்சி வேண்டும். (௧௯௬)

இனியவ னென்செய் வானே யினியவ னெவர்க்குந் தன்பால்
நனியுள மகிழ்ச்சி பொங்க நட்டவர் பலர்பா னண்ணிக்
கனியொடு விளைந்த கூறிக் கறுவுபல் படையும் பெற்றுத்
துனிதவிர் மனத்த னாகித் தும்பைபூண் டிங்கு சேர்வான். (௧௯௭)

மணமலி கடுக்கை மாலை வரதனா ரணியும் பாந்தள்
புணரியிற் றுயில்வோ னேறும் புள்ளினுக் கஞ்ச லுண்டோ
துணைவலி மருவிற் போரிற் றோற்கலா னன்றி நம்பால்
தணவின ராகி யாங்கே சார்வர்நம் வயவர் தாமும். (௧௯௮)

பின்னரியாந் தனிமை யாகிப் பித்துளம் பிடிக்கச் சேர்வேம்
அன்னது வருமுன் காத்த லறிவினுக் கழகே யாகும்
முன்னவற் பொருவே மென்னின் முடுகிநம் படைகளெய்தா
இன்னதொன் றியற்றே மாயி னிங்கிலை நிலைத்த தின்றால். (௧௯௯)

மாயமா யனையான் சென்னி வெளவிவந் தவர்க்குக் கோடி
யாயசெம் பொன்னை யள்ளி யளித்துமென் றறைந்தே மாயிற்
போயெவ ரேனும் வஞ்சப் புணர்ப்பினாற் றலையைக் கொண்டு
தாயிவண் வருவ ரியாமுஞ் சஞ்சலந் தவிர்த்து வாழ்வேம். (௨௦௦)

நமதுநாட் டவர்க ளீது நாடிலா ரெனினும் வேறாய்
அமருநாட் டவரில்வஞ்சத் தருங்கல மாகி வாழுந்
தமைநிகர் வறிஞ ரானோர் தாழ்க்கல ரேகி யன்னான்
குமைதர விட்டிச் சென்னி கொண்டிவண் வருவ ரன்றே. (௨௦௧)



ஈதலாற் றனிபொன் றில்லை யிவ்வகைச் சூழ்ச்சி நம்பாற்
போதுவ தன்றி மற்றோர் புந்தியிற் பொருந்துங் கொல்லோ
மேதகு மறிவே மென்று விம்மித முடைய னாகித்
தாதவிழ் புயம்பூ ரித்தான் றனைநிகர் தானும் பேதை. (௨௦௨)

மற்றைநாட் சபையின் வந்து வள்ளுவர்க் கூவி னான்வந்
துற்றன ரந்தோ தான்முன் னுன்னிய படியே சொன்னான்
சற்றுமுள் ளிரக்கம் பண்பு தயவறி விலாது முற்றுங்
குற்றமே புரிந்து வாழுங் கோடரிக் காம்பு போல்வான். (௨௦௩)

தனக்கொரு செயலு மின்றித் தாங்குநற் றுணையு மின்றிக்
கனத்தெழும் பெரிய சூறைக் காற்றிடைச் சருகே போன்ற
மனத்தின ராகி நின்ற வள்ளுவ ருயிருக் கஞ்சிப்
புனற்கணி னொழுகத் தீயோன் புகன்றவா புரிந்து போனார். (௨௦௪)

மடியுறுக் கொடிய காலன் வாய்முழக் கென்கோ தீய
விடமெழு முழக்க மென்கோ மேதினி முதல யாவும்
முடிவுறக் கிளம்பு மூழி முளரியின் முழக்க மென்கோ
இடிமுழக் கென்கோ வன்றி யென்னென்கோ வினைய வோதை. ()

துவைத்தெழு வெடியி னார்ப்பாற் றுணுக்குறு விலங்கு மாய
நவிக்குரல் கேட்ட பெண்க ளனைய சனகி மாதுஞ்
செவிச்சுடு மோதை கேட்ட சிஞ்சுகப் புள்ளும் போன்று
தவித்தனர் நகர மாக்க டனித்தனி யிரங்கிச் சாய்ந்தார். (௨௦௬)

செவிகரம் புதைப்பர் சில்லோர் செய்யவாய் புதைப்பர் சில்லோர்
புவியுறல் வெறுப்பர் சில்லோர் புரண்டுநொந் தழுவர் சில்லோர்
குவிகரத் தொடுபெம் மானைக் கூய்முறை யிடுவர் சில்லோர்
இவைசெய லென்று காணா தேங்கிநெட் டுயிர்ப்பர் சில்லோர். (௨௦௭)

பழுதுசெய் வினைமேற் கொண்ட பாதகன் பறையி னார்ப்பால்
அழுதுநொந் தரற்று மாந்த ரனைநறச் செவியில் லாரைத்
தொழுதனர் புகழ்த லுற்றார் சுவர்த்தலந் தொறுங்கு லாவ
எழுதுசித் திரங்க ளல்லா லிரங்கிலா ரெவரு மின்றே. (௨௦௮)

இனையதை யொருவன் றொல்லை யிறைவனுக் குரைப்பான் வேண்டி
நினைவுட னெழுந்து காலி னெடிதுவல் விரைவிற் போகிப்
புனைபெரும் புரவுப் பூமான் பூங்கழல் போற்றி நின்று
பினையவன் செய்கை யாவும் பேசின னகன்று போனான். (௨0௯)

அம்மொழி யறிந்த போதி லரசிழந் தன்னு டன்னின்
மும்மடங் கூங்கு பொங்கி முடுகுமேக் கழுத்த னாகித்
தெம்முனை யடுபோர் சாய்க்குஞ் சிங்கவே றனைய செம்மல்
தம்முணர்ந் தவரி னெஞ்சஞ் சலிப்பிலா துறைத லுற்றான். (௨௧0)

ஆபுவோ யுற்ற காலை யடிப்பவ ரருவு ருக்கச்
சீயொடு புழுவு மண்ணுஞ் சேருமிச் சென்னி தன்னை
மீயுயர் செம்பொன் கோடி விலையென விளங்கச் செய்தான்
தாயினு மினிய னெம்பி தானெனக் கருத லுற்றான். (௨௧௧)

சுடச்சுடக் கரமீக் காலுஞ் சுவணமுஞ் சுவறத் தீயில்
அடச்சுவை பெருகுங் கன்ன லமுதமும் பாலும் போலும்
திடத்தமூ தறிஞர்க் கின்னுச் செறிதொறும் புகழே யல்லால்
கடற்புவி யிடத்துத் தீது கடுகெனுந் துணையு முண்டோ. (௨௧௨)

வேறு.

நலத்தகு குமணனின் னணமி ருப்புழி
இலக்கிய மெனும்புணை யேறி யாவரும்
சொலத்தகு தன்மதித் துடுப்பி னாற்றுளைந்
திலக்கணப் புணரியி னெல்லை கண்டவன். (௨௧௩)

புத்தமு தொழுகுறு புதுமொ ழிக்குழா
மொய்த்தன செறிதர மொழியும் பல்கவிக்
குத்தகை யுடையவன் கூரக் கேளினர்
சித்தமுங் களிகொளச் செப்புஞ் செவ்வியான். (௨௧௪)

பூப்பிற ழாவகைப் பொறைய னுயிர
காப்பிழப் புறும்படி நவிலு முந்தையோர்
கோப்பிழ வாவகை குறித்த நூலெலாங்
காப்பினின் றெளிதருங் கருத்த னாயினான். (௨௧௫)



பஞ்சலக் கணத்தொடு பஞ்ச காவியம்
பஞ்ச மொன்றின் றியே பயின்ற நாவினன்
விஞ்சுபல் காவியம் விளம்பு மேதகன்
செஞ்சொலிற் பிரசங்கஞ் செய்யுஞ் சீரியன். (௨௧௬)

சைவசித் தாந்தமெய்ச் சாத்தி ரங்களைக்
கைவரு நெல்லிபங் கனியிற் கண்டனன்
பைவரு பாம்பணைப் பரம னாதியர்
தெய்விக நிலைக்கலை தெளிந்த சிந்தையான். (௨௧௭)

நால்வகைக் கவியினு நாளும் வல்லவன்
நால்வகைக் கவிஞரு நன்கு மெச்சுவோன்
நால்வகை யருத்தமு நயந்து தேர்ந்தவன்
நால்வகைத் தானையர் நண்பு பெற்றுளோன். (௨௧௮)

மணத்துறு நிம்பமென் மாலை மன்னருக்
கிணக்கமுற் றோங்குமே ழெழுவர் துன்னியே
தணப்பிலா துறுதமிழ்ச் சங்க வாணர்கள்
கணத்திடை மதிப்பொடு கணிக்கப் பெற்றவன். (௨௧௯)

முருந்தலைத் திடுநகை முகிழ்த்துப் பாரதி
பொருந்தலைப் புதுக்கிய புலமைப் புண்ணியன்
வருந்தலைக் கண்டிடா மதுரை யூரினன்
பெருந்தலைச் சாத்தனா ரென்னும் பேரினன். (௨௨0)

மாமியு மருகியு மருவி வாழ்வது
பூமியி லரிதெனப் புகறற் கேற்புறத்
தோமிலாக் கலைமக டொக்க பான்மையாற்
காமர்பொன் மகளருள் கதுவக் கண்டிலான். (௨௨௧)

ஈட்டுபொன் முயற்சியெண் ணிறந்த வேனுமூழ்
கூட்டுறி னல்லது கூடு றாவெனு
நாட்டிய படிகலை நலத்தி னோங்கியும்
வாட்டுறு வறுமையே மலிந்த தன்மையான். (௨௨௨)

இன்னவ னொருபக லினைய வெண்ணுவான்
மன்னிய கல்விபொன் மலரை மானுமால்
பொன்னதன் மணத்தினைப் பொருவு மாதலாற்
பன்னுபொன் பெறுவிடிற் பயனென் றின்றரோ. (௨௨௩)

மோனமேற் கொடுதவ முயன்ற போதலால்
ஈனமின் றில்லற மியற்று வாரெலாம்
ஞானமுற் றெய்தினு நவில்பொன் னில்லெனில்
கானமர் விலங்கினுங் கடைய ராவரே. (௨௨௪)

சொல்லறம் புரியவுஞ் சுற்றந் தாங்கவும்
புல்லற வோர்தமைப் புரிந்து போற்றவும்
நல்லற நிதிதுணை நண்ணு மின்றெனில்
இல்லறம் இல்லறம் என்னல் ஏற்குமால். (௨௨௫)

இல்லற மியற்றுவார்க் கியன்ற தாரமே
புல்லிய துணையெனப் புகல்வர் செம்பொனே
பல்விதத் தினுந்துணை படுமின் றேலவள்
புல்லிய துணையெனல் பொருந்தும் வேறரோ. (௨௨௬)

பல்வகைப் பண்டமும் பகுத்துச் சேர்த்திடில்
நல்வகை யட்டுணு நல்கு வாண்மனை
இல்வகை செவ்விதா மிசைத்த பண்டங்கள்
புல்வகை பொன்னிலார் பொருந்த லெங்ஙனே. (௨௨௭)

வறுமையாற் கல்வியு மாயு மாநிதி
பெறுபொழு தல்லது பெயர்த ராதுயர்
மறுமையிற் பெறுநலம் வழங்கும் ஞானமீண்
டுறுசுகம் பொருளிலார்க் குரிய தாவதோ. (௨௨௮)

ஆதலா லதுபெறற் காற்ற லியாதென
மேதகு சிந்தனை மேவு வேலையில்
தீதுற வழுக்குறுஞ் செவ்வி யூன்றுகோல்
போதுவ தெனவொரு புலவன் போந்தனன். (௨௨௯)



இத்தக னவனெனி லிவற்கு முன்மனம்
ஒத்துறு நட்பின னுலப்பில் கல்வியன்
புத்தமு தெனக்கவி புகலு வோன்பெருஞ்
சித்திர னெனும்பெயர் செப்புஞ் சீரியன். (௨௩0)

காண்டலு மிருவருங் கலந்த சிந்தனை
மூண்டெழு களிரவி முன்ன ரெய்திய
மாண்டகு செய்யதா மரைமு கத்தராய்த்
தீண்டுறு கரங்களிற் சேர்ந்து வைகினர். (௨௩௧)

இன்னணஞ் சுகம்வின வினரி ருப்புழி
அன்னவன் முன்னையற் கடுத்த நாவலர்
இன்னலை விலக்கிய வீகை மேவிய
மன்னவன் குமணமால் வண்மை கூறுவான். (௨௩௨)

முதிரமால் வரையினன் முதிர்ந்த கல்வியன்
துதிபெறு வாணர்கள் துயர நீப்பவன்
கதிபெறு வள்ளல்கள் கலந்தோர் நல்லுருப்
புதிதுகொண் டுற்றெனப் பொருந்து மீகையான். (௨௩௩)

கொடுத்தறி யாதவன் குறித்த தவ்வவர்
எடுத்துறத் திறந்துவைத் திருக்கும் பேழையன்
அடுத்தபல் வாணர்பா லமர்மி டிப்பகை
படுத்தலிற் பாண்பசிப் பகைவ னென்பவன். (௨௩௪)

தன்னிடத் தடைந்தபொன் றுங்கோ டேகுறத்
துன்னிய பல்கரித் தொகுதி யீபவன்
மன்னவன் குமணமான் மாட்ட டைந்தவை
இன்னவை நீயுஞ்சென் றெய்து கென்றனன். (௨௩௫)

தனதிடத் தகன்றனன் றகைகொள் பண்பினால்
தனைநிகர் தமிழுணர் சாத்தன் றன்மிடி
யினைவிடுத் தனனென வெண்ணி யண்ணுநற்
பனைநிறை பாச்சொலிப் படர்தன் மேயினான். (௨௩௬)

படர்தரு வேலையிற் பறவை வேந்தனே
டடர்கய வாயிட மாகப் போதரக்
கொடியினம் வலத்தினைக் குறித்துச் செல்லுற
நெடிதக மகிழ்வொடு நினைப்பி னேகினன். (௨௩௭)

அடைந்தனன் குமணனு டரசன் கானிடை
மிடைந்தமை யறிந்தனன் விரைவி னவ்வழித்
தொடர்ந்துபோய்க் காண்பதே துணிவென் றுன்னினன்
மடந்தவிர் பலகலை வழங்கும் வண்மையான். (௨௩௮)

நின்றில னவ்விடை நிருப ரேறனன்
சென்றுறை கானகந் தேடிச் சென்றனன்
அன்றல ருரும்பெவ னடுத்த வாயினும்
துன்றிய மதுமணந் துய்க்கும் வண்டரோ. (௨௩௯)

ஆசையா தியபகை யடக்கி வாட்டியும்
தேசுமெய் யுணர்வெனுஞ் செய்ய கோலுடன்
மூசுமைம் புலக்குடி முற்று மாட்கொடு
மாசிலா நற்றவ மன்ன னாகியே. (௨௪௦)

அகத்திடை யெழுமகிழ் வனைத்து மாமலர்
முகத்திடைக் காட்டிநீர் முடித்த தேவன்மேன்
மிகத்துதி பாடியோர் விருக்கப் பாங்குறை
தகப்பெறு குமணனைத் தான்கண் டானரோ. (௨௪௧)

ஆழிநே ரன்பினே டவண டுத்துநீஇ
யேழ்கட லெண்டிசை யெட்டுஞ் சீர்த்தியாய்
சூழ்புல வோர்பசி தொலைக்கு முன்னவா
வாழிய வாழிய வள்ள லேயென்றான். (௨௪௨)

கதுமெனப் புகன்மொழி காதி னூடுற
மதுமலி தாரணி மன்னர் மன்னவன்
முதுமொழிப் புலவரீர் முன்னி யீண்டுற
எதுதவ மியற்றினே னென்னிக் கண்டிலேன். (௨௪௩)



என்னது முன்னைபோ ரியற்று நலவினை
துன்னிய பான்மையாற் றேன்றி னீரிவண்
அன்னது நல்வர வாக வென்றனன்
மன்னவர் புகழ்தகை வாணன் கூறுவான். (௨௪௪)

ஈகையிற் பண்பினி லிசையிற் கல்வியில்
வாகையி லறத்தினன் மனத்தி லாண்மையில்
ஓகையிற் றவத்தினி லுவமை யற்றவா
பாகையும் தேனையும் பழிக்கு மின்சொலாய். (௨௪௫)

எட்டியொன் றகம்பழுத் திருந்த தாயினுங்
கிட்டுவ ரெவர்சுவை கெழுமுஞ் செய்யதேன்
புட்டியங் குறுகினைப் பொதும்பர் மேவினும்
பெட்டவ ணடைந்ததைப் பெறுவ ரியாவரும். (௨௪௬)

ஆதலாலிவணினை யடுத்துக் கண்டனன்
ஈதலால் வேறிலை யிறைவ வீண்டியான்
போதலா லென்னது புலமைக் கேற்புறக்
காதலாய்ப் புகறருங் கவியைக் கேளென. (௨௪௭)

பாக்கியப் புதையலைப் பார்த்த வேழைபோல்
நோக்கிய விழிகளு நனுகு மெண்ணமும்
தேக்கிய மகிழ்ச்சியுட் டிளைப்பச் செய்யதேன்
வாக்குவ தெனக்கவி வழுத்த லுற்றனன். (௨௪௮)

வேறு.

இருங்கன லடுப்பி லாம்பி யெழும்பவூ ணின்றித் தூர்ந்து
சுருங்கிய கொங்கைத் தோலைச் சுவைத்தழு மகத்தாய் நோக்க
மருங்கெனை யவளு நோக்க வருந்திநின் றேக்கிப் புக்கேன்
பெருங்கலி தவிர்த்து வாழப் பேணுதி குமண வென்ன. (௨௪௯)

ஆடெனு மொழிமுந் கொண்டோ ரருங்கவி யுரைத்தா னந்தப்
பீடுசால் வள்ளல் கேட்டுப் பெருந்தமிழ்க் கரசே யான்முன்
நாடுறை யமைய மென்பா னணுகினை யல்லை நீத்துக்
காடுறை வேலை யெய்திக் கவியமு தருத்தா நின்றாய். (௨௫௦)

நின்குறு மிடியை நீக்க நெடுங்கர நிறைய வாரித்
தனத்தினைக் கொடுக்கு மேலாந் தவமில னேனே னேனும்
மனத்துறு துயர மெல்லா மாற்றுதி நின்னை யண்ணிச்
சினத்துறு கலியை விட்டச் செப்புவ னென்று கேட்டி. (௨௫௧)

இலையெனப் புகறல் சால வேழமைப் பால தாகும்
சொலை மறுத் துரையே னீயுஞ் சொற்றவா நிற்றி யாலென்
தலைதனைக் கொடுபோ யென்னற் றம்பிகைக் கொடுப்பா யாயின்
விலையெனச் செம்பொன் கோடி மிகமகிழ்ந் தீவான் கோடி. (௨௫௨)

ஈதுநீ புரியி னின்னை யின்னல்செய் கலியும் வீயும்
ஓதிய வெம்பி யுள்ளத் தோங்கிய கவலு நீங்கும்
மேதகு புகழு மேலாம் வீடுமெற் கெய்துங் கண்டாய்
ஆதலா லிதனின் மேலா மறமுமொன் றில்லை யைய்யா. (௨௫௩)

இன்னதை மறுத்தி யாயி னிவை யெலாஞ் சிதைத்தா யாதி
அன்னது பயனின் றாகு மழியுமிவ் வுடம்பை நீத்துத்
தன்னைநேர் புகழு டம்பைச் சாருவே னாபி னெற்குப்
பின்னையோ ருறுதி யுண்டோ பேசுதி பெருநூல் வல்லோய். (௨௫௪)

எனவிவை புகன்றே கைவா ளீந்தனன் சென்னி தாழ்ந்தான்
நினைவினு மரிய செய்கை நிகழ்த்தினன் செய்வா னொன்
புனைபெரும் புகழ்வேட் டுள்ளோர் பூதமெய் வேட்பார் கொல்லோ
அனையவர்க் கியல்பே யாகு மழுதுண்பார் கடுவுண் பாரோ. (௨௫௫)

அடுத்திவை யுரைப்பக் கேட்ட வருந்தமிழ்ப் புலவனெஞ்சந்
துடித்தனன் செய்வ தொன்றுந் தோன்றிலன் றுண்ணென் றஞ்சி
எடுத்தகை வாளாற் றானே யிரினென் செய்வா மென்று
வடிப்பொலி வள்ளல் கைவாள் வாங்கினன் வழுத்த லுற்றான். (௨௫௬)

தலைக்கொடை யளித்த மேன்மைத் தரணிபா நினது சென்னி
விலைக்கொடை யடைவா னெற்கு வேண்டுனான் றீதல் வேண்டும்
உலப்புறு தந்நாள் காறு மோம்பவும் வேண்டு மென்னா
நிலைப்புகழ் வள்ள லொப்ப நிகழ்த்துத லுற்றான் பின்னர். (௨௫௭)



உயிர்க்கொடை யளித்த மேன்மை யொருதனி வள்ளா லுன்முன்
வெயிற்குமுன் விளக்கே போல மேவுறு வண்ண மேற்போர்
கையிற்பொரு ளளித்த மூவேழ் கணக்குறு வள்ள லானோர்
அயிர்ப்பிலா திறத்த லாலே யடுத்தது புகழுன் னார்க்கே. (௨௫௮)

கற்பகஞ் சுரபி சிந்தா மணிநிதி காரென் றெல்லாம்
பொற்பவோ ருருவம்பூண்டு போந்தகா லையுநின் வண்மைக்
கற்பமு மொவ்வா வாகு மமரர் கோற் குடல மீந்த
அற்புத முனிவ னீயோ வலதுநீ யவனோ வண்ணல். (௨௫௯)

நலவெனப் புகலு மியாவு நண்ணினை யெனினு நாளும்
உலைவுறப் புலவ ரெண்ணி யுரைத்திடற் குயர்வு மொப்பும்
இலையெனு மிதுவும் பெற்றா யிசைதிசை யிசையப் பெற்றாய்
புலனுற நின்னை வாழ்த்தப் பொருந்துசொல் லறியேன் மன்னே. ()

சேடனுப் பிளவு பட்ட திறமிது காறுந் தேறேன்
ஆடவர் திலக நின்னா லறிந்தன னதுவுஞ் சொல்கேன்
நீடுமுன் புகழை முற்று நிகழ்த்துவா னமையாப் பண்பால்
கூடிய முன்னோர் வாளாற் குமைத்தனர் போலு மன்றே. (௨௬௧)

கையிலுறை யிவ்வா ளொன்றோ களிப்புட னளித்தா யென்றுஞ்
செயிரல தறியா தேனுட் டிகழ்பெரு மகிழ்வுஞ் சீரும்
நயமிகு திருவு மன்பு நம்மவர் பலர்க்கு முற்ற
உயிருமே யளித்தா யின்ன முன்னிநீ யளிப்பதுண்டோ. (௨௬௨)

புகழ்விரும் பினைநீ யீது புரிந்தனை யெனினு மிம்மை
இகழ்வுபின் னரக மென்னு மிருவகைக் கேடு மியான்கொள்
வகைபுரிந் திடுத னன்றோ மாசிலா மணியே போலத்
திகழ்தரு மதியா யீது சிந்தனை செய்தல் வேண்டும். (௨௬௩)

ஈண்டுநீ விளியிற் பின்னா னிருப்பனோ விறப்பே னாகிற்
பூண்டவென் மனைவி மக்கள் பொன்றுவ ரன்றோ விந்தச்
சேண்டரு பாவநிற்கே சேருமா றறிதி யொன்றும்
வேண்டல னியானுன் னன்பின் மிக்கதோ விளியுஞ் செல்வம் ()

தரித்திரஞ் செல்வ மோர்பாற் றங்குவ தில்லை யென்னு
விரித்துநூ லுரைக்கு மீது மெய்ம்மையே யதனு ளானும்
பெருத்துறு செல்வத் தோடு பிறங்குதல் காண்டி யிங்கே
இருத்திபின் வருவன் வாளோ டென விரைந் தேகலுற்றான். (௨௬௫)

ஏகுவா னினைய வள்ள லிளையவ னுளத்தோர் சற்றும்
நோகுமா றியற்றி டாது நுவலருங் களிப்பே செய்துஞ்
சாகுமா றுன்னி னுன்றன் றகையுறத் தெளிவா னங்கட்
போகுவா னிடையொன் றுள்ளிப் புகுந்தனன் மாந்தையூரில். (௨௬௬)

சாந்தமும் புழுகுஞ் செய்ய தண்பனி நீரு மாதர்
வேய்ந்தபூந் தாருஞ் செம்பொன் வினைசெய்வோ ரராவுந் தூளும்
போந்தவர் பாத மெல்லாம் புதைபடச் சேறு செய்யும்
மாந்தையம் பதியின் வீதி வளனெலா நோக்கிப் புக்கான். (௨௬௭)

சிற்பநூல் விதிக ளெல்லாந் தேர்ந்தவோர் கம்மி யன்பால்
அற்புறை முகத்திற் புக்கா னவனிவன் வரவை யேற்றுச்
சொற்பெறு முகமன் கூறித் துதித்தரு கிருத்த லுற்றான்
சற்பனைக் கடலே யான கவிவலோன் மகிழ்விற் கூறும். (௨௬௮)

மாந்தையம் பதியில் வாழு மகுடநற் றியாகி கேளாய்
ஏந்திரு வடுநின் பாலீண் டிசைந்தன வென்னக் கேட்டுத்
தீந்தமிழ் வல்லோய் நன்கு தெளிவியா தொழியி னீபின்
போந்திட வொட்டே னென்னாப் பொங்கிய சினத்திற் சொன்னான்.

வினைபுரி கம்மி யர்க்குள் வேந்தநீ மகிழ்வோ டொப்ப
அனையவை காட்டி லீண்டெற் காம்பொரு ளெதுவா னாலும்
இனைவுறா தாற்றி யின்னே யீதியோ வென்ன வன்னான்
நினைவினோ டோமென் றேற்ப நிகழ்த்துவன் கவிஞர் கோமான். ()

போற்றுசீ ராளுமன்னர் புனைமுடி பட்டுப் பட்ட
காற்றழும் பொன்றும் வாணர் கருதிய பொருள்க ளெல்லாம்
மாற்றிலா தளித்துக் கையில் வருந்தழும் பொன்றா மென்று
சாற்றினன் றுவட்டர் கோமான் றனதுடல் பூரித்தானே. (௨௭௧)



பெருமகிழ் வடைந்து நுங்கள் பேச்சினை மறுக்க வல்லார்
இருநிலத் தெவரே யாமென் னெளிமையா லிசைத்தே னம்மா
வருபுக ழிகழ்மற் றெல்லாம் வாணர்வாய் வயத்த வென்னாத்
தருபொரு ளினைய வென்று சாற்றுக விரைவி னென்றான். (௨௭௨)

ஆவியொன் றிமைக்கு மாட்சி யன்றிமற் றெவற்றி னாலும்
பூவியல் வாழ்க்கை யாற்கும் புந்தியுள் வியப்புப் பொங்கி
மேவுற வினைசெ லாஞ்செய் விறலுளா னெனது நெஞ்சின்
ஆவலீ தென்று முன்ன மடுத்தவை யனைத்துங் கூறி. (௨௭௩)

வாரணங் கோடி கோடி வானருக் களித்து வேதன்
நாரணன் பெறுத நாடு நாடுசீர்க் குமண வள்ளல்
சேரணங் குறும லீந்த சென்னிபோ லொன்று செய்து
தாரணங் குலவு வைவேற் றம்பிகைத் தருதற் கென்றான். (௨௭௪)

என்றலு மகிழ்ச்சி பொங்கி யியல்வினை முழுதும் வல்லோன்
றுன்றிருள் சிலிர்த்த தென்னத் தொக்கபல் லுரோமப் பாங்கும்
ஒன்றிய மறுவை நீத்த வொண்பிறை நுதலும் வில்லுட்
கன்றிய வளைந்த காட்சி கவினிரு புருவச் சீரும். (௨௭௫)

கருணையு மன்பும் பொங்கிக் கலந்தெழு கமலம் போல
மருவிய விழியும் வள்ளை வார்செவிச் செவியு மெட்பூப்
பொருவிலா நாசிப் பண்பும் புத்தமு தொழுக வன்று
விரிசெழுங் குமுதம் போல விளங்கிய நலங்கொள் வாயும். (௨௭௬)

முழுமதிக் குவமை சாலு முகமதி யிடத்து முந்தி
எழுநிலாத் தோற்றந் தோற்ற மெனச்சொல்புன் னகையுஞ் சேரப்
பழுதில்செம் மணிகால் கந்திப் பான்மட லுண்டேற் கூற
வழுவிலா வுவமை யென்ன வழுத்துபாற் கழுத்தின் மாண்பும். (௨௭௭)

பொருந்தநோக் கினர்கை வாயிற் புடைத்தழு திரங்க வள்ளல்
திருந்திய சென்னி யேபோற் சென்னியொன் றியற்றி யீந்தான்
தெரிந்துநூல் பலவுந் தேர்ந்தோன் சிந்தைநோய் முழுது மாங்கே
இரிந்தழிந் தொதுங்கி யேக வேற்றனன் வியந்து சாற்றும். (௨௭௮)

பெருமைசேர் மயனே வன்றிப் பிரமனே பிரமன் றானும்
ஒருபொருள் போல வேறுன் றுஞற்றுத லில்லா மாண்பால்
அரியவ னீயே யென்று வவனிவிட் டகன்றான் கொல்லோ
உரைசெயற் கரியே னென்று வுவந்துரைத் தெடுத்துச் செல்வான்.

அப்பொழு தந்தி யெல்லா மடைந்தொரு வடிவு கொண்டே
இப்படி புரக்க வந்த தென்னலா மிளங்கோ வென்றும்
முப்பொழு துணர மைச்சர் முதுபுரோ கிதர்தற் சூழச்
செப்பரு மரிய ணைக்கட் சேர்ந்திரு மாந்தி ருந்தான். (உஅ0)

இற்றைநாட் டிருந்து வானெஞ் சினிவரு கின்ற தாய
பிற்றைநாட் டிருந்து வானென் றெண்ணியே பிறியா துற்ற
முற்றுண ரமைச்ச ரேனோர் முகத்தினைக் குறித்து நோக்கிச்
செற்றமே பெற்ற வுள்ளத் தியன்மற் றிதனைச் சொல்வான். (உஅக)

முன்னவன் றன்னைப் பன்னுண் முன்னரே கானிற் சேர்த்தேன்
அன்னவன் தலையை விட்டி யங்கையிற் கொடுவந் தார்க்குப்
பொன்னொரு கோடி நல்கப் புந்திகொண் டிசைத்தேன் யாரும்
இன்னமுங் கொணரக் காணேன் எவ்வுழி வதிகின் றானோ. (உஅஉ)

வினைபகை யென்றி ரண்டு மெலிந்தன வென்றி கழ்ந்து
நினைவுறிற் றீயெச் சம்போ னின்றொரு பொழுது நேர்ந்தால்
இனைவுற வருத்து மென்றே யிசைத்தனர் நீதி நூலோர்
அனையனை யழித்தா லன்றி யென்மன மாறா தென்றான். (உஅங)

ஆங்கவ னுரைத்த மாற்ற மவையுளார்க் கழல்வே லென்னத்
தீங்குறச் செவியிற் சென்று சிந்தையைத் தீக்க நொந்து
பாங்கிலான் கொடிய னிந்தப் பாதக னவையை விட்டு
நீங்குத னெறியென் றுள்ளே நினைந்தன ரிருந்த காலை. (உஅச)

வேவர்க ளணியும் பூவுஞ் சித்திர நூலோர் தீட்டும்
பூவுநேர் தலைகைக் கொண்ட புலவர்கோ னகரம் புக்கு
மாவலி யமணன் கோயில் வாயிலார்க் குரைப்ப வன்னோர்
காவலன் றிருமுன் சென்று கழறுவான் கடுகிச் சென்றார். (உஅரு)



அரசபூ பதியே நம்முன னவன்சிர முறுகை யுற்றோன்
ஒருவனின் கோயில் வாயி லுற்றன னென்ன லோடும்
பெரிதக மகிழ்வுற் றின்னே பெயர்ந்தவற் றருதி ரென்று
வரவெதிர் நோக்கி நின்றான் மறலியை யனைய நீரான். (உஅசா)

பாருளோ ரெவருங் கண்டு பதைபதைத் தழுது விம்மிக்
காரினீ ரென்னக் கண்ணீர் களகள வுகுத்து நையச்
சோரிநீர் சொட்டுஞ் சென்னி தூக்கிய கரத்தி னோடும்
போரினே ரில்லான் முன்னர்ப் புகுந்தனன் புலமை மிக்கான் (உஅஎ)

கண்ணுறக் கண்ட பின்னோன் கல்லினுங் கடிய நெஞ்சம்
புண்ணுறப் புலர்ந்து நொந்து புழுக்கமுற் றயர்ந்து சாய்ந்து
மண்ணுறப் புரண்டு கண்ணீர் வாரியுட் குளித்து வாய்விட்
டண்ணலே யரசே யென்று வழுதுளங் குழைய லுற்றான். (உஅஅ)

ஐயகோ வினியென் செய்வே னுருயிர்த் துணைவா வென்பான்
பொய்யினின் றலையிவ் வாறு போவதே யென்பான் பூவின்
மெய்யொழிந் ததுவோ நின்றன் மெய்யொழிந் ததனை லென்பான்
வையகத் தவர்காள் யானு மாய்குவன் காண்டி ரென்பான். (உஅகூ)

தலையெலாங் கைக ளாரத் தடவுவான் முகத்திற் சேர்ப்பான்
நிலமிசைத் தூணின் மீத்தன் னெடுஞ்சிரந் தாக்கி மீள்வான்
உலகிலியான் பிறந்த திப்பே றுறுவதற் கேகொ லென்பான்
பலபல புலம்பித் தேம்பிப் படர்துய ரளப்பர் யாரே. (உகூ0)

அவ்வழி னகரு ளாரு மமைச்சரும் பிறருங் கண்டு
கவ்வையிட் டழுது கண்ணீர் கலுழ்தரு முகத்த ராகி
வெவ்வுயிர்த் தயர்த்து விம்மி மெய்ந்நடுக் கெய்தி மாழ்கி
இவ்வகை செயவென் றெண்ணு திரங்கினர் புலம்பி நின்றார். (உகூக)

ஈசனிங் கிலையோ வென்பா ரிவன்கொலோ துணைவ னென்பார்
பேசவ தினி யென்னென்பார் பெய்யுமோ மழைதா னென்பார்
ஆசையை யாசைக் கீந்தோர்க் கருள்பொறை யன்பு பண்பு
நாசமா மன்றிச் சற்று நண்ணுமோ வென்பார் நைவார். (உகூஉ)

கரிபெற விரும்பித் தேவர் காவெட்டி யெரிப்பார் போல
இரணியம் விரும்பிக் கோமா னிருந்தலை கொண்ட பேதை
விரவுமுட் பகைபோன் மென்பார் மிளிர்தவ மிதுவோ வென்பார்
அரகர வென்று கையா லானனத் தறைந்து விழ்வார். (௨௯௩)

இத்தனை தீங்குஞ் செய்திட் டேங்குவன் காண்மி னென்பார்
அத்தனே அரசே யெங்க ளாருயிர்த் துணையே யென்பார்
இத்தரை விடுத்து நின்பா லெய்துவோ மென்பா ரந்தோ
எத்தனை துயருண் டெல்லா மெய்திப திவர்பா லம்மா. (௨௯௪)

முழுமுர சொலியுஞ் சங்க முழங்குபே ரொலியு மாதர்
குழுநட வொலியும் வீணை கூரிசை யொலியும் வேதம்
மொழிகுந ரொலியு மாக முகில்கட லொலியும் பின்னு
அழுமொலி யொன்றே யுற்ற தங்கக ரிடையவ் வேலை. (௨௯௫)

முன்னவன் றலையைக் கொய்த முனைக்கடு வாளினாலே
என்னபுன் றலையை யுங்கொய் திடுவனென் றெழுந்தான் பின்னோன்
அன்னையி னுதர மொன்றி லவதரித் தவர்வே றாகித்
துன்னினுங் கடையி லன்பு தோய்வுறா தொழிவர் கொல்லோ. ()

கொய்யவாள் புவிக்கு வேந்தன் கொண்டதும் பிறவு நோக்கி
ஒய்யெனக் கவிக்கு வேந்த னுற்றுவாள் பற்றி நீக்கி
ஐயகே ளுனது முன்னோ னணிச்சிரம் போயிற் றென்று
கையற வெய்தே னஞ்சீர் கணித்திலாய் கரைதுங் கேட்டி. (௨௯௭)

நின்னர சிருக்கு நாட்டை நிகழ்த்துபோர் முதற்கொள் பாட்டை
முன்னொரு பனவற் கீந்து முதல்வனோர் புலவ னாகி
மன்னிய மதுரைச் சங்க வாணரான் மதிக்கப் பெற்றேம்
சொன்னவில் தமிழ்நூன் முற்றுந் துகளறக் கற்று வல்லேம் (௨௯௮)

செந்தமிழ்த் தெய்வத்தன்மை தெளிந்திலாய் முன்னக் கீரர்
பைந்தழைப் பொழிற்றென் கூடற் பட்டிமண் டபத்தார்க் காக
முந்தவே யொருவன் வாணாள் முடியமற் றொருவன் வாழச்
சிந்தைசெய் துரைத்த பாடற் றிறமுல கறிந்த தன்றே. (௨௯௯)



பற்பல பிடை மாட்டும் பரவுபன் னீதிநூல் சொல்
விற்பனப் பெருமை தாட்டி வியன்றமிழ்க் கவிதை கூறிப்
புற்படு துண்டஞ் செந்தேம் பொதிகனி யீயச் செய்த
அற்புத மறியா ருண்டோ வடுக்கலைக் கடுக்குந் தோளாய். (௩௱)

கடல்கரை கடப்புற்றாலுங் கதிரவன் வடக்குற் றாலும்
புடவிகீழ் மேலுற் றாலும் பொருப்பெலா நடைபெற் றாலும்
வடவைதான் பனியா னாலு மற்றது தீயா னாலும்
திடமொடு நமது வாயாற் செப்புதன் மாறா தன்றே. (௩௦௧)

பட்டமா மரந்த ழைக்கப் பாடுவே மிதுவென் முன்னே
நட்டதோர் கல்வே ரூன்றி நளிர்தளிர் கிளைமீக் கொண்டு
சொட்டுதேங் கனிக ளியச் சொல்லுவே மரிதென் றொன்றும்
விட்டிலே மெதுவும் செய்வே மேலவர் நம்மின் யாரே. (௩௦௨)

நாமிருக் கவுநீ யஞ்சி நடுங்குவ தென்னை கையில்
தேமிருக் கவுமி னிப்புத் தேடுவா ருளரோ வாதி
யாமிருக் கறைந்த வாற்றா லரசுசெய் யண்ணன் சென்னி
காமுறப் பொருந்தும் யாமோர் கவிசொலுங் கணத்தி னென்றான்.

என்றவன் றாளில் வீழ்ந்த விளையவ னிருகை கூப்பி
முன்றவப் பயன்போற் போந்த முதுமொழிப் புலவ ரேறே
யின்றெனக் குரிய யாவு மீகுவ னாவி யேனும்
நன்றுமக் களிப்ப னண்ண னல்லுயி ரருண்மி னென்றான். (௩௦௪)

என்னுமவ் வேலை சொல்வேந் திளையவ னம்முன் னாவி
துன்னுமே லவற்கு மோலி சூட்டிமுன் போலன் பாக
மன்னுதி கொல்லோ வென்ன வள்ளலீ ரெதுசொற் றாலும்.
அன்னதென் பணியா மென்றா னன்பினுக் கரிதொன் றுண்டோ. ()

பின்னவ னனையகூறப் பெருந்தமிழ்ப் புலவ ரோது
கன்னல்கல் லானை யுண்ணக் கடைக்கணித் தருளுஞ் சித்தர்
பொன்னடி மலரைப் போற்றிப் புகழ்ந்துகை தலைமேற் கூப்பி
என்னையாள் பனுவ லாட்டி யிணையடி யிறைஞ்சி யேத்தி. (௩௦௬)

மெய்த்தலை வள்ள லாக விளங்கிய குமணை நாம
உத்தமன் றிடச ரீர முறுசிரஞ் சீவி யாக
வைத்தருள் புரிமி னென்ன வனேந்தபல் கவிதை பாடி
இத்தலை பொருத்தி மீள்வ லெனவிரைந் தகன்று சென்றான். (௱௭)

சென்றுகா லைத்துச் செங்கைச் சென்னியை மறைத்து வைத்து
நன்றென விளவல் மாட்டு நணுகிநம் முன்னோன் றன்னை
மன்றலந் தெரியற் றோளாய் வனத்திடைப் புகுந்து காண்டி
என்றசொற் செவியிற் பெய்தா னின்னமு துகுத்தா லென்ன. ()

அடம்பயி லரச ரோரு மமணன்றன் னகத்தின் மேன்மேற்
படர்ந்தெழு களிப்பின் மூழ்கிப் பருப்பத மெவையு நாணத்
தடம்புயம் பூரிப் பெய்தித் தனிமுக மலர்ச்சி மேவிக்
குடம்பையி னடைந்த தாயைக் கூடிய பார்ப்பை யொத்தான். ()

ஆடுவன் பாடு வன்னென் னாவியைப் பெற்றே னென்பன்
கூடுவன் பிரிவன் போவன் குதிப்பன்பின் வருவன் றன்னைத்
தேடுவன் சிரிப்ப னுள்ளஞ் செருக்குவ னெவர்க்குஞ் செங்கை.
சூடுவன் றுதிப்பன் நிற்பன் றோத்திரம் பலவுஞ் சொல்வன். (௱௰)

இன்னதான் செய்தா னென்ன விசைக்கொணா மகிழ்ச்சி யாங்கள்
தன்னது விருப்பின் மிக்குத் தான்குடித் தவனே யாகி
முன்னுறு புலவன்பாத முளரியம் போதின் வீழ்ந்து
பின்னெழுந் தன்பி னோக்கிப் பெருந்தமிழ்ப் புலவ ரேறே. (௱௰௧)

எனதுட லுயிர்பொன் சுற்ற மெய்திய வாழ்வோ டெல்லாம்
உனதெனப் புரிந்தா யானிற் குளற்றமோர் கைம்மா றுண்டோ
அனதுற் வெண்ணி லென்போ லறிவிலா ரில்லை யீசன்
தினமருள் புரிதற் கியாரே செய்குவர் கைம்மா றையா. (௱௰௨)

யாவுநீ கொடுத்தா யேனு மென்னுட னிணையி லாத
கோவுறை கானத் தெய்திக் கொற்றவற் கூட்டி வந்து
மேவியிவ் வரசு கொள்ளும் விதமின்னே புரிதி யென்றான்
எவரு மினைய வாறே யிறைஞ்சின ரவனு நேர்ந்தான். (௱௰௩)



வேறு

எழுந்தனபல் துரிய மெழுந்தனபல் காளம்
எழுந்தனபல் சங்கின மெழுந்தன பதாதி
எழுந்தனபல் வாசிக ளெழுந்தனப னாகம்
எழுந்தனபல் தேரின மெழுந்தனபல் குடைகள். (௱௰௪)

கவரிக ளெழுந்தனபல் காவல ரெழுந்தார்
துவரிதழ் செறிந்தபல தோகைய ரெழுந்தார்
இவரிவ ரெழுந்தனர்க ளென்பதெவ னாரே
அவரவர் கொளும்பயனி லாசைமரு வாரே. (௱௰௫)

முன்னுறுவர் பின்னுறுவ ராகவவர் மொய்ப்பார்
அன்னவர்கள் பின்வருவ ராய்விட நடப்பார்
என்னவிசை மானுமிவ ரேகும்விசை யென்றால்
மின்னலுறு வேகமதின் மேலும்விசை யாயால். (௱௰௬)

வந்துதிக முக்கிரியின் வள்ளலுறை கானம்
அந்திலணு குற்றன ரருட்கடவுள் பாதம்
சிந்தையி னிருத்திவளர் தெய்வதரு வேயாம்
எந்தைகும ணப்பெரும னென்பவன்மு னுற்றார். (௱௰௭)

தம்பிவினை யாளரொடு சார்ந்தவர்கள் யாரும்
அம்புவியின் வீழ்ந்தவர்க ளாகியவ னின்றான்
செம்பத முடித்தலை சிறப்புற வணிந்தார்
கும்பையெதிர் கண்டுபுகழ் கொண்டதிற லோனும். (௱௰௮)

ஒவ்வொருவ ருக்குமியை வுற்றவுப சாரஞ்
செவ்விதி னுரைத்தருகு சேர்த்தியொரு மித்தே
இவ்வயி னடுத்தவகை யென்னென விசைத்தான்
அவ்வியமொ ழித்ததிற லண்ணல்பின் வழுத்தும். (௱௰௯)

வேறு

தெளியாது சிறியேன்செய் தீமையெலாம் பொறுத்தருளி
ஒளியாரு மணிமுடிகொண் டுலகமெல்லாந் தனிபுரந்து
வெளிபாம்பொள் ளறிவேனு மிக்கபல முதியோருங்
களியாக வுயிர்வாழக் கடைக்கணித்துக் காத்திடுவாய். (௱௨௰)

தெரியாமற் சிறியோர்கள் செய்தபிழை யத்தனையும்
பெரியார்கள் பொறுப்பதுவே பெருந்தகையாம் பெருந்தகையோய்
அரியாளும் பேரணையி லண்மியொரு புன்றலைய
நரியாளும் பான்மையவே நானிருந்து கோனடத்தல். (௩௨௧)

நினைக்கொல்லற் கியன்றவித நினைக்குந்தோ றென்மனமே
எனைக்கொல்லு மெனிற்பின்னை யென்னெடுத்துப் புகன்றிடுவேன்
மனத்துன்னி மறுப்பினுயிர் மாய்ப்பேனென் றழுதிரங்கிப்
பொனைப்பன்னும் பூம்பாதப் போதுபற்றி வீழ்ந்தனனால். (௩௨௨)

கவிவேந்து முதியாருங் கசிந்துருகி யவைபுகன்றார்
தவவேந்த னவர்செய்கை தனைநினைந்து தம்பியையுங்
குவிவேய்ந்த கரத்தரையுங் குறித்தருளோக் கஞ்செலுத்திப்
புவிவேந்த னாவிருந்த பொறைநீக்கிக் களிக்கின்றேன். (௩௨௩)

விலங்கொடித்து விடுத்துவந்தேன் மீட்டுமது வேட்பனோ
நலங்கொடுக்கு மமுதுண்போ னஞ்சருந்தப் புகுவானோ
புலங்கொடுக்கும் பேரறிவீர் புகல்வதுதா னழகாமோ
இலங்கொடுக்குஞ் சுகந்தவத்துக் கெட்டுணையு மிணையாமோ. (௩௨௪)

எம்பிமுன மெய்ப்பிழைபு மியற்றினனென் றெண்ணுகிலேன்
பம்பியிவண் புரிவதுதான் பாரித்த கொடுந்துயராம்
கம்பமத கரியனையான் காத்தலையுற் றிடயானும்
இம்பருறு காத்தலைபுற் றிருக்கவரந் தருதிரென்றான். (௩௨௫)

கேட்டுமன நடுநடுங்கிக் கெழுமுவகை யோடுவந்த
நாட்டவர்க ளனைவருந்த நாட்டவழி நீரொழுக
மீட்டுவரா யெனின்யாமு மீளேமிங் குடனிருந்து
வாட்டியுயிர் விடுப்பமென்றார் வாணர்பிரா னிதுபுகல்வான். (௩௨௬)

விளியாது தினந்தினமு மீதோங்கப் புகழ்வளர்க்கும்
அளியாரும் பெருங்கருணை யரசேநீ யெவ்வெவர்க்கும்
ஒளியாது கேட்டவெலா முவப்பினொடு கொடுத்தியன்றோ
களியாரு மலரலங்கற் கற்பொருவுந் திணிதோளாய். (௩௨௭)



நின்றலையென் றலையாக நினக்கென்னை சுதந்திரமென்
நன்றலையின் முடிபுனைய நான்கருதிற் றடையுளதோ
பொன்றலையில் புகழ்மௌலிப் பொன்றலையாய் மறுத்துரைத்தல்
என்றலைநீ கற்றதிவ ணெவரிடத்தி லெனவிசைத்தான். (௩௨௮)

காவலனு முதுபுலவன் கட்டுரையு மமரர்தொழுந்
தேவனருள் விளையாடற் செய்கையுந்தன் மனத்துன்னி
ஆவதிது வேயாயின் ஆதுகவென் றருள்புரிந்தான்
ஓவியந்தா னவிபெற்று லொத்தெழுந்தா ரனைவோரும். (௩௨௯)

ஆடுவா ரகக்களிப்பி னளவையறி யாராகிப்
பாடுவார் நெடுந்தடந்தோட் பார்வேந்தன் பாதமுடி
சூடுவார் தொழுதெழுவார் தோத்திரங்கள் சொலியொருங்கு
கூடுவார் கொண்டமகிழ் குறித்துரைக்கக் கூடுவதோ. (௩௩௦)

ஏழிரண்டு மீரிரண்டு மென்றபல வாச்சியமுஞ்
சூழிநெடுங் கரவரையுந் துனைபரியும் வீரர்களும்
பாழியொலி யிடுதலொடு பாவலரும் வேதியரும்
வாழியென வேத்தொலியு மாலொலிக்கு மேலொலிக்கும். (௩௩௧)

வேறு

இவ்வகைபல் லியங்கலிப்ப வேழுபருங் குஞ்சரமீ திறையை யேற்றிச், செவ்விபெறு தமிழோனை முன்னிருத்திப் பின்னவன்பின் சேர்ந்து மேவி, அவ்வவருக் கேற்றவிதத் தவரவர்க ளருகாக வணுகிப் போதக், கௌவைநெடுங் கடற்புவிமான் களிப்புறத்தன் னுமநகர்க் கண்ணுற் றானால். (௩௩௨)

மதகரியொன் றணித்தாக வருவதன்முன் மணியோசை வந்தாங் கோத, உததியுடைப் புடவிவள ருயிர்களுக்கோ ருடலாகி யுய்யத் தாங்குஞ், சதமகனேர் பாணர்பசித் தரியலறுங் குமணனகர் சார்வா னுற்ற, அதையறிந்த திருநகரத் தவர்கணக ரலங்கரிப்பா னமைந்தார் மன்னோ. (௩௩௩)

வேறு

பித்திகைத் தலங்க டோறும் பெருஞ்சுதை தீற்றி யாண்டுஞ்
சித்திர முமழுது வார்கள் செழுந்தரை யெங்குஞ் சாந்தால்

ஒத்தற மெழுகித் தெற்றி யுழைச்செழுங் குங்கு மத்தான்
மொய்த்தநற் கோல மப்பேர் மொழிவதற் கேற்பச் செய்வார். ()

பாலிகை பரப்பி வைப்பார் பசுந்தழை விரிந்த வுச்சிச்
சாலநீர் நிறைந்த பொன்னங் தசும்புவே திகையிற் சேர்ப்பார்
மேலுலாம் பூகந் தோகை விரிதலை யரம்பை யெல்லாங்
கோலமா ரெழுக்க டோறுங் கூட்டுவார் நாட்டுவார்கள். (௩௩௫)

வேறு.

வாயினெடுந் தோரணங்கண் மாட்டுவார் தொங்கல்பல வகையிற் சேர்ப்பார், பாயமணி மறுகின்டைக் காவணமு மதிற்கமுகம் பாளை தென்னை, மேயபழக் குலையினமும் பெண்ணைநெடுஞ் சரமுமணி விதத்திற் கோப்பார், மீயுயர்வி தானமும்பொன் மணியினமு மமைத்தழகு விளங்கச் செய்வார். (௩௩௬)

மாமலரும் பனிநீரு மிகத்தெளித்துப் புழுதியெலா மாற்று வார்கள், காமர்மலி பதுமைநிரை விளக்கமைப்பார் கமழ்தேந்தார் கட்டிக் கோப்பார், நாமநவக் கோள்களையுஞ் சிறைபுரிந்த விதமிதென நவிலு மாறு, தோமில்பல மணிச்சரங்க டேக்குவார் மனமகிழ்ச்சி தேக்கு வாரால். (௩௩௭)

ஒவ்வொருவ ராய்த்தமது வேந்தன்வருங் களிப்பையெடுத் துசாவு வார்பின், அவ்வவர்கண் மாதரொடு புனறோய்ந்து புதியவுடையணிகள் வேய்ந்து, செவ்விபெறு சந்தவகை தீற்றியெதிர் நோக்கினராய்த் திகழுங் காட்சி, இவ்விதமென் றிசைப்பதெவன் மாடமெலா மணக்கூட மென்ன லாமால். (௩௩௮)

ஐந்தருவு மிருநிதியு மாமணியுஞ் சுரபியுந்தெள் ளமுதும் யாண்டும், நந்தலிலாப் பலதேவர் குழுவுமெலா மொருங்கெய்தி நண்ணி யாங்கே, வந்தனனெம் பெருந்தவிகை மகராஜ னெனச்சின்ன வகைகளார்ப்பச், சந்தமலி கோக்குமணன் வந்தடைந்தான் றன்பேரூர் தன்னை மாதோ. (௩௩௯)

வேதியரு முதியவரும் விரும்பியடுத் தாசிமொழி விளம்ப வன்னோர், பாதமலர் தமைவணங்கிப் பணியணிந்த நீலகண்ட பரம வேத,



நாதருறை சினகரத்துக் கோபுரத்தை யெதிர்வணங்கி நல்லோர் சுற்றிப், போர்தநடந் தைங்கரனை யறுமுகனை யெழுமகிழ்ச்சி பொலியப் போற்றி. (௩௪0)

போதுறையும் வேதியற்கு மீதுறையு முடுபதிக்கும் புனித ராகிக், கோதகல்பன் முனிவருக்குங் கொடுத்தவருண் மடுத்துறமெண் குணத்தி னானை, ஆதிநட ராஜர்திரு வடிமலரை முடிமலரா வணிந்து போற்றிப், பூதிதரும் பானிறத்துப் பூதிதரப் பாலமுறப் பூசிப் போந்து. (௩௪௧)

தாதிவருங் குழலுமையாள் பதம்பணிந்து தண்டியுடன் சயிலாதிக்கோன், பாதமுறைப் படிவணங்கி யடம்புரியு மிடங்கருயிர் படுக்கப் போந்த, தீதகன்ற கரிவரத ராஜருறை திருக்கோயில் சேர்ந்து மாயன், சீதமலி செழுங்கமலத் திருவடியைச் சேவித்துத் தெரிசித்தேத்தி. (௩௪௨)

பெருந்தவினை யனைத்தினையுந் தீர்த்தமெனத் தீர்த்தமெனும் பிரசா தத்தை, வருந்தமற வாங்கியுண்டு சிரந்தெளித்துப் பெருமகிழ்ச்சி வயத்த னாகிக், கருந்துளவ மாலகற்றாங் திருத்துளவ மாலையிரு கரத்துங் கொண்டு, தரித்தமுடி யினும்விளங்க விரித்ததிரு வடிசாத்துந் தகவும் பெற்று. (௩௪௩)

திருக்கோயில் வலம்புரிந்து புறம்போந்து திருமதிலைச் சேவித்தேத்தி, உருக்கார்வ முடன்சூழுஞ் சுற்றமுட னரமனைப்பா லுற்றுத் தெய்வ, மருக்காலு மலராதி மங்கலங்கள் பலபுனைந்து மணியும் பொன்னும், பெருக்காகு மரியணைமேல் வலாரியென வீற்றிருந்தான் பெரியோர் வாழ்த்த. (௩௪௪)

மங்கலவாத் தியமுழங்க வானவர்பூ மழைபொழிய மகதர் பாட, எங்குமுளார் ஜபஜயவென் றேத்தெடுப்ப விளங்குமணனீய வாங்கித், துங்கமுறு தமிழ்வேந்தன் றிருக்கரத்தான் மணிமுடியைச் சூட்டத் தாங்கி, அங்கணிருந் தரசுசெய்தா னவரவர்க்குத் தகுவரிசை யனைத்து மீந்தான். (௩௪௫)

கற்றவர்தம் பெருமானைக் கரம்பிடித்துப் பொருளனைத்துங் காட்டி யிங்ஙன், உற்றபொரு ளனைத்தையுநீ ருடையீரா லிச்சைவழி யுய்ப்பீ ரென்ன, மற்றவனீ கொடுப்பதுவே சாலுமெனக் குமணனுங் கை மலரான் வாரித், துற்றவொளி மணிக்குவையு நிதிக்குவையும் பொன்னுடைத் தொகையு மற்றும். (௱௪௬)

கல்விவலோன் போதுமிதே போதுமெனப் பலபலகாற் கழறக் தந்து, வல்வலிசேர் மதமாவும் பாய்மாவு மேவலரும் வரிசைக் கேற்ற, நல்விருதும் பலகொடுத்துச் செலவொழிக்க முடியானாய் நாவல் லோன்பின், சொல்வரவே முடிநடந்து விடைவாங்கித் திரும்பிலந்து சூழல் சேர்ந்தான். (௱௪௭)

முடிவேந்த ரடிதாழ்ந்து முறைமுறையே திறைபளக்க முன்னீ ராடைப், படிதாங்கி மன்பதைகளின்பமுறப் பல்வளமும் பல்கப் பாணர், குடிதாங்கி யருள்குமணக் கோமானும் பின்னவனுங் குறிக்குந் தன்மக், கொடிதாங்கி வாண்முகத்துக் கிருவிழிபோற் குமணபுரி குலவ வாழ்ந்தார். (௱௪௮)

உடலுயிர்போன் மணியொளிபோன் மலர்மணம்போ லிருவர் மன மொன்றே யாகக், கடலினிடை யணைவகுத்த ராகவனும் பரத னுமுன் கருத்தொன்றாகிப், புடவிபுரந் திருப்பரிவர் போலவென வுலகமெலாம் புகன்று போற்ற, நெடியவனு மிளையானு முளமகிழ்ந்து புவிபுரந்தார் நெடுநாண் மனனே. (௱௪௯)

வேறு.

மன்னவர்செங் கோல்வாழ்க மழைபொழிக வளம்பல்க
நன்னரற மீதோங்க நற்றமிழெங் கணுஞ்செழிக்க
இன்னசரித் திரமுணர்ந்தோ ரெல்லவரு மின்பமுற
பன்னுதிரு நீற்றுநெறி பார்முழுதும் பரவுகவே. (௱௫௰)

அக்குமண னேயிவனென் றவனியெலாஞ் சொலற்கேற்ப
இக்கவிநூல் தனக்குரிமை யெய்துபெரும் புகழாழன்
முக்கனியின் சாறுகமழ் முறைசைநகர் வாழ்மகிபன்
தக்கபெருந் தகையெங்கள் சண்முகமால் வாழியவே. (௱௫௧)

குமணசரித்திரம் முற்றிற்று.

குமரக்கடவுள் திருவடிகளே சரணம்.

---

27 FEB MADRAS.

உ

குமரன் துணை.

# விவேகபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

ஏழாவது வால்யூம்.

பத்திராதிபர். { எஸ். சாமிநாதையர்.
மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

சொந்தக்காரர்—மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

வருஷசந்தா ரூபா இரண்டுதான்.

12 சஞ்சிகை சேர்த்து பயிண்டுசெய்த இந்த

வால்யூம் விலை ரூபா 2—4—0.

1908.

விவேகபாநு அச்சியந்திரசாலை, வடக்காவணிமூலவீதி, மதுரை.

உ

குமரன் துணை.

# விவேகபாநு 7-வது வால்யத்தின்

# பொருளடக்கம்.

---


| விஷயங்கள். | விஷயதானம்செய்தோர். | பக்கம். |
|---|---|---|
| இந்துதேச சரித்திரம். | பத்திராதிபர். | 217. |
| எலிகளின்வழக்கபழக்கங்கள் | ஏ. ஸ்ரீநிவாசன் அவர்கள்.. | 49. |
| எலுமிச்சம்பழம் | பத்திராதிபர் | 149. |
| ஓர் இந்துமாதின் தீரம் | சுதேசமித்திரன் | 25. |
| கடினகவசிகள் | ம.கோபாலகிருஷ்ணையரவர்கள் | 94. |
| கப்பல்தொழிற்சாலையும் கடல் வாணிபமும் | எஸ். என். ஸ்ரீநிவாசன் அவர்கள் | 99. |
| கல்கட்டா மாதர்களின் சங்கத்தில் பரோடா மஹாராணியார் செய்த உபந்நியாசம் | சுதேசமித்திரன் | 316. |
| காலஞ்சென்றடாக்டர் ஜி.யூ. போப் | பத்திராதிபர் | 38. |
| காலஞ்சென்றமாதாஜிமஹாராணி தபஸ்வினி | சுதேசமித்திரன் | 157. |
| சமாசாரக்கொத்து | பத்திராதிபர் | 144, 210. |
| சர்வகலாசாலையும்தமிழ்வியாசமும் | பத்திராதிபர் | 221. |
| சிந்தாமணிசரித்திரம் | உமாதாஸ் அவர்கள் | 139, 225. |
| சுதேச ஏலக்கிருஷிக்கம்பெனி | மு. ரா. கந்தசாமிக்கவிராயர் | 64. |
| செந்துருக்கை | பத்திராதிபர் | 69. |
| சைவசித்தாந்தமரபட்டவணை | சுப்பிரமணியபிள்ளை அவர்கள் | 115 |
| டையாக்ஸ்ஜாதியார் | பத்திராதிபர் | 151. |
| தலைமகுடன்சரித்திரம் | ம. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் | 56, 159, 169. |





| | | |
|---|---|---|
| தாதுவர்க்கவிளைவுகள் | இந்தியா. | 17. |
| திருப்பரங்குன்றம் கல் கண்டிராக்ட் | பத்திராதிபர் | 14. |
| துஷ்யந்தன்சரித்திரம் | வி நாராயணசாமிஐயர் அவர்கள் B. A., L. T. | 16, 42. |
| தேச க்ஷேமம் | பத்திராதிபர் | 145 |
| நாம் முன்னுக்குவருவது எப்படி | ஷை | 3. |
| நிலக்கடலை | எஸ். சாமிநாதையர்அவர்கள் | 28. |
| நூதனமான ஓர் ஸர்ப்பரக்ஷணசாலை | வி. சுப்பிரமணியஅய்யர் அவர்கள் | 307. |
| நெல்லின்வகைகள் | சுதேசமித்திரன் | 173. |
| பாணாசுரன்கதை | வி. நாராயணசாமிஐயர் அவர்கள் B. A., L. T. | 198, 239, 257 |
| மதுரை ராஜகோபுரம் | மு. ரா. கந்தசாமிக்கவிராயர் | 254. |
| மழை ஒரு சீனதேசக்கதை | A. M துரைசாமிஐயர் அவர்கள் | 73. |
| முத்து | ம. கோபாலகிருஷ்ணையர்அவர்கள் | 81 |
| லார்டுமார்லியின்திருத்தங்கள் | ஷை | 249. |
| வங்காளத்தில் வெளியேற்றங்கள் | சுதேசமித்திரன் | 313. |
| வயிற்றுப்பாடு | பத்திராதிபர் | 65 |
| விவசாயச்சங்கங்கள் | ஷை | 1, 33. |
| ஜப்பான்விவசாயம் | சுதேசமித்திரன் | 187. |
| ஜோசப்மாசினி | வாணுதுரையோன் | 153. |
| ஸ்ரீதிலகர்பத்துவருஷத்துக்குமுன்சொன்னது | கேசரி | 168. |


பத்திராதிபர்.

உ

குமரன் துணை.

# விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 7 } 1908௵ ஜனவரி௴ { பகுதி 1

## விவசாயச்சங்கங்கள்.

இதுகாறும் நம் நாட்டு விவசாய விருத்தியைப்பற்றி நாம் எவ்வளவு கவனித்தோமோ அதனினும் பலமடங்கு கவனித்தல் இன்றியமையாததாகிவிட்டது. வரவரத் தேசம் ஜனத்தொகையில் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. கொள்ளைநோய், வாந்திபேதி முதலிய கொடிய வியாதிகள் நம் நாட்டிற் குடிகொண்டு அவற்றால் ஜனச்சேதம் அதிகம் ஏற்பட்டாலும் ஜனாபிவிருத்தியாகிறது என்பதிற் சிறிதுமையமில்லை. ஜனங்கள் விருத்தியாவதற்குத்தக்கபடி ஆகாராதிகளும் விருத்தியாகவேண்டுமன்றோ. முன்னினும் நம் நாட்டில் அநேக புதுப்பாசனங்கள் ஏற்பட்டுச்சாகுபடியும் நாளுக்குநாள் அதிகரித்தே வருகின்றது. இவ்வாறெல்லாம் இருந்தும் முன்னினும் அகவிலை குறைந்திருப்பானேன். ஜனங்களின் துர் அதிர்ஷ்டத்தாலா அல்லது அவர்களது முயற்சிக் குறைவாலா அல்லது நம்மையாள்வோரது கவலைக் குறைவாலா எக்காரணத்தால் இம்மாதிரியிருக்க நேரிட்டிருக்கின்றது என்ற விஷயத்தைச் சிறிது ஆராய்வோம். 100-க்கு 70 பேர்வரை விவசாயத்திற் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது பிரசித்தம். அப்படிப்பட்ட நாட்டின் விவசாய நிலைமை எவ்வாறு இருந்து வருகின்றது என்று சீர்தூக்கிப் பார்ப்போமாகில் சற்றுக் குறைவான ஸ்திதியில் இருப்பதாகவே தோற்றுகின்றது. இதனை விருத்திபண்ணும்பொருட்டு நம்இராஜதானியின் ஒவ்வொரு ஜில்லாவிலும் விவசாய அபிவிருத்திசங்கம் ஒன்று ஏற்பட்டு அதற்குக்கிளைச் சபைகளும் ஏற்பட்டுவருகின்றன. சென்னையில் பிரதான சங்கமிருந்துகொண்டு ஏனைச் சங்கங்களைத் தொழிற்படுத்திவருகின்றது. ஆயினும் இச்சங்கங்கள் செய்யும் வேலை மிகவும் சொற்பமென்றே கூறல்வேண்டும்.

சென்ற இரண்டுவருஷகாலமாய் ஆங்காங்குக் காட்சிசாலைகள் ஏற்பட்டுச் சிறிது நன்மை பயக்கின்றன. இச்சங்கங்களின் முயற்சி தேசத்தின் பரிமாணத்தைப்பற்றிச் சிந்திக்குங்கால்சிறிதும்போதாதென்றே சொல்லவேண்டும். நாம் எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் சர்க்கார் உதவி ஒன்றையே தேடக்கூடாது. அவர்கள் உதவிமிகவும் சொற்பம் ஆகையால் அதனைப் பெறுவதுடன் நாமும் பெருமுயற்சி செய்தல்வேண்டும். அமெரிக்கர் ஜப்பானியர் செய்துவரும் தொழில்களை நன்கு கவனித்தால் நாம் செய்யும் முயற்சி மிகச்சொற்பமே. ஆகையால் இதுவிஷயத்தில் மிக்க ஊக்கங்காட்டி உழைக்கவேண்டும். நம் நாடு கிருஷித்தொழிலில் ஆதிகாலத்தில் மிகச் சிரேஷ்டமாயிருந்ததாயினும் தற்காலம் வேறு நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் க்ஷீணதசையடைந்திருக்கின்றது என்பதிற் சிறிதும் ஐயமில்லை. எகிப்த், அமெரிக்கா, ஜப்பான் முதலிய இடங்களில் கிருஷித்தொழில் மிகவும் விருத்தியாயிருப்பதால் அம்முறைகளை நாம் நன்கு கவனித்து அவைகளில் நம் நாட்டுக்கு ஏற்றவைகளைத் தழுவிக்கொண்டு கையாளல் வேண்டும். அத்தேசங்களில் கிருஷிசாஸ்திரம் நாளுக்குநாள் விருத்தியாகிக்கொண்டு வருகின்றது. நாம் பூர்வீக நிலைமையிலே இருந்தால் எவ்வாறு சீருஞ் சிறப்பும் அடையலாம். "பூமிதிருத்தியுண்" "சீரைத்தேடின் ஏரைத்தேடு" "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது", "மேழிச்செல்வம் கோழைபடாது", "நெற்பயிர் விளை", "உழுதுண்டுவாழ்வார்க் கொப்பில்லை கண்டீர் பழுதுண்டு வேறோர்பணிக்கு" முதலிய நீதிவாக்கியங்கள் இரண்டாயிர வருஷங்களுக்குமுன் எழுதப்பட்டவை. அக்காலம் முதலே நாம் இம்முக்கியவிஷயத்தில் கண்ணுங்கருத்துமாயிருந்தும்போதுமான கவலையெடுத்துச் சீர்திருத்தம் செய்யவில்லை. முன் உபயோகித்த கலப்பையே உபயோகிக்கிறோம். முன் உபயோகித்த விவசாயக்கருவிகளையே உபயோகிக்கிறோம். இப்பொழுதுதான்சிலர் அந்நியநாட்டாரைப் பார்த்துப் புதுக்கருவிகளில் சிலவற்றை உபயோகிக்கிறார்கள். இவ்விஷயங்களை நாம் நன்கு கவனியாவிடில் கிருஷிவிஷயம் விருத்தியடைய இடமில்லை. எருச்சேர்க்கும் விஷயத்திலும், கன்றுகாலிகளைப் போஷிக்கும் விஷயத்திலும், கிணறுகள் முதலியன வெட்டிப் பாசனம் விருத்திபண்ணும் விஷயத்திலும், நம் ஆகாரத்துக்கு வேண்டிய தானியங்களை விருத்திபண்ணும் விஷயத்திலும், நம் தேசத்துக்கு க்ஷேமகரமான, பருத்தி, கரும்பு, கடலை முதலிய சாகுபடி விஷயங்களிலும் நாம் மிக்ககவனம் செலுத்துதல் இன்றியமையாதது, இவ்விஷயத்தில் விவசாயசங்கத்தார்களின் கடமைகள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றைப்பற்றி மற்றோர் சமயம் நீளநினைந்து எழுதுவோம்.

பத்திராதிபர்.

# நாம் முன்னுக்கு வருவது எப்படி.

கல்வியிலும் செல்வத்திலும் நாகரிகத்திலும் சிறப்புற்றோங்கியிருந்த நம் பரதக்கண்டம் தற்காலம் மிகவும் சீர்குலைந்து கிடக்கும் நிலைமையைக் குறித்துச் சிந்திக்கும் ஒவ்வொரு தேசாபிமானியும் துக்கமடையாமலிரான். நம் நாட்டின் செல்வத்தைக் கவர ஆசைப்படாதவர்களும், அதன் கல்வியறிவைக்கண்டு பிரமையடையாதவர்களும் கிடையா. இவ்வாறு உலகத்தார் அனைவராலும் போற்றப்பட்ட நாம் தற்காலம் அயல் நாடுகளைப் பார்த்துப் பெருமூச்சு விடும்படியான துர்ப்பாக்கியத்தை அடைந்திருப்பது அந்தோ! மிகவும் விசனிக்கத்தக்கதே.

சென்ற ஜனகணிதக் கணக்கின்படி நம் பரதகண்டத்தின் ஜனத்தொகை 29 கோடியே 4 இலக்ஷம். அதில் 100-க்கு 93 பேர் எழுத்து வாசனையே அறியாதவர்கள். ஆண்மக்களில் 10 பேர்களுக்கு ஒருவருக்கும், ஸ்திரீகளில் 144 பேர்களுக்கு ஒருவருக்கும் மட்டுமே எழுதப்படிக்கத் தெரியும். மற்றவர்கள் நிரக்ஷரகுக்ஷிகள் என்றால் இதனினும் பரிதபிக்கத்தக்கது யாது? ஏறக்குறைய நம் சென்னை இராஜதானிக்குச் சமானமான பரப்புடைய ஜப்பான் தேசத்தில் 100-க்கு 91 ஆண்களுக்கும் 100-க்கு 79 பெண்களுக்கும் எழுதப்படிக்கத் தெரியும். நம் துர்ப்பாக்கிய நிலைக்கு நம் சிரத்தைக் குறைவே முக்கிய காரணம். நாம் மட்டும் விழிப்புள்ளவர்களானால் இந்தக் கேவலமான நிலைமையிலிருந்து நீங்கிக்கொள்ளலாமென்பதிற் றடையில்லை. நாம் ஏழைகளாயிருக்கிறோமே. நமக்குப் பணமில்லையே. பணமில்லாமல் எந்தக்காரியம் முடியும். ஆகையால் நாம் கவலைப்பட்டுப் பயனென்ன. அந்நியநாட்டார் பணத்தாலன்றோ காரியங்களைச் சாதித்து வருகின்றனர் என்று சொல்லலாம். அவை பயனற்ற வார்த்தைகளேயாம். "வேண்டுமென்றால் வெண்ணெயும் மோத்தைபோல் நூற்கலா"மன்றோ. ஏழைத்தனத்திலிருக்கிற நம் இராஜதானியார் 1905—06-ம் வருஷத்தில்

| | | |
|---|---|---|
| ஸிவில் கோட்டில் ரூ... | ... ... | 65,75,564 |
| கிரிமினல் கோர்ட்டில் ரூ | ... ... | 52,82,313 |
| பிராஸெஸ் கட்டணத்தில் ரூ | ... ... | 12,59,735 |
| காபிஸ்டாம்பு காகிதம் ரூ | ... ... | 1.97,176 |
| ஆகமொத்தம்ரூ... | | 133,147,88 |

விவாதத்தில் மட்டும் செலவிட்டிருக்கிறார்களே. இதனுடன் வண்டிச்செலவையும், சாப்பாட்டுச் செலவையும், வக்கீல் பீஸையும் மற்றைச் செலவுகளையும் சேர்த்தால் 1½ கோடி ரூபாவுக்குக் குறைவில்லை. வருஷா வருஷம் இவ்வாறு செலவிடுவோமானால் நாம் ஏன் ஏழையாக மாட்டோம்? இத்தனை பணத்தையும் கல்வியில் செலவிட்டால் சீக்கிரத்தில் முன்னுக்கு வரக்கூடாதா? இக்கேடானது நம்பிக்கைக்குறைவாலும் சத்தியக்குறைவாலு மல்லவோ உண்டாகின்றது. ஆகையால் இதுவிஷயத்தைக் குறித்து நீளநினைந்து நாம் முதலில் சீர்திருந்த வேண்டும்.

கவர்ன்மெண்டார் கல்வி விஷயத்தில் பெருமுயற்சிசெய்து வருகிறார்கள் என்பது உண்மையே. அவர்கள் இதுகாறும் தூங்கி இப்பொழுதுதான் விழித்துக்கொண்டிருக்கிறார்கள். கல்வியபிவிருத்திக்கென்று செலவிடுகிற பணம் மிகவும் சொற்பமே. மற்றைத்தேசங்கள் கல்வி விஷயத்தில் செலவிடுகிற தொகையை ஒப்பு நோக்கும்போது இது சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயத்திற்கு ஒப்பாயிருக்கின்றது.

| தேசத்தின் பெயர் | ஒவ்வோருவருக்கும் செலவாகும் தொகை. ரூ. அ. பை. |
|---|---|
| ஜர்மனி | ... 5— 7— 2 |
| பிரான்ஸ் | ... 3—13— 2 |
| இங்கிலாந்து | ... 3— 0— 0 |
| ஜப்பான் | ... 1—12— 4 |
| ஸ்பேயின் | ... 1— 7— 2 |
| இத்தாலி | ... 1— 1—11 |



| | |
|---|---|
| பரோடா | ... 0— 7— 0 |
| நம் இராஜாங்கத்தார் | ... 0— 1 —9 |

இவ்வாறு இராஜாங்கத்தார் $1\frac{3}{4}$ அணா செலவிட்டா நாம் சமீபத்தில்முன்னுக்கு வரப்போகிறோம்?

நம் சென்னை ராஜதானியின் கல்வி நிலைமையைச் சிறிது சீர்தூக்கிப்பார்ப்போம். நம் இராஜதானியின் ஜனத்தொகை 3-கோடியே 82 லட்சம். இதில் கல்வி கற்கத் தகுந்தவர்களில் 100-க்கு கி9· 8 பையன்களும் 100-க்கு 5· 7 பெண்களுமே கல்விகற்று வருகிறார்கள். ஏனையோர் அறியாமையென்னும் அந்தகாரத்தில் மூழ்கியிருக்கிறார்கள்.

1907-ம் வருஷம் மார்ச்சுமீ 31உ கணக்குப்படி 848,111 பையன்களும், 165, 706 பெண்களும் மாத்திரமே கல்விகற்று வருகிறார்களெனத் தெரியவருகிறது. கல்விக்காகச்சென்னை கவர்ன்மெண்டார் செலவிடும் தொகை 36·47 லக்ஷமே. அவர்கள் அடையும் வரும்படி 11-கோடி ரூபா. அஃதாவது வரும்படியில் 100-க்கு 3·23 ரூபாவே கல்வி விஷயத்தில் செலவிடுகிறார்கள். இதனினும் 18-பங்கு செலவிட்டால்மட்டும் நாம் ஜப்பானியர் நிலைமையை எட்டிப்பார்க்கமுயலலாம். ஜர்மானியரை எட்டிப்பார்க்கவேண்டுமானால் இதனினும்எத்துணையோ பங்குஅதிகம்செலவிட்டாலொழியமுடியாது.

நம் இராஜதானியில் 20,485 பிரதம பாடசாலைகளிருக்கின்றன அவைகளுக்கெல்லாம் 30,000 உபாத்தியாயர்களே யிருக்கிறார்கள். இவர்கள் சம்பளமோ சேவகன் சம்பளத்தினும் குறைவாகவிருக்கின்றது என்று நம் டைரக்டராகிய டாக்டர் போர்ன் துரையவர்களே கூறியிருக்கின்றனர். இப்பொழுதுதான் இந்தத் துர்அதிர்ஷ்ட உபாத்தியாயர்களின் நிலைமை கவர்ன்மெண்டாரின் கவனத்துக்கு வந்திருக்கின்றது போலும். இது நிற்க, நம் இராஜதானியில் 54-ஆயிரம் கிராமங்களுக்கு மேல் இருக்கின்றன. அவைகளில் 5 கிராமங்களுள் 4 கிராமங்களில் பள்ளிக்கூடமே யில்லையென்று ஜன கணிதக் கணக்கால் வெளியாகின்றது. இது இந்தியாவின்

ஸ்திதி. நம் இராஜதானி சொற்பம் மேலான நிலைமையிலிருக்கிறதாகவே வைத்துக்கொண்டாலும் சுமார் 30 ஆயிரம் கிராமங்களில் பள்ளிக்கூடங்களே இல்லை. இந்த நிலைமையில் நாம் எவ்வாறு முன்னுக்கு வருவோம். அறியாமையென்னும் அந்தகாரத்தை யோட்டுவதற்கு நாம் மிகவும் முயற்சி எடுத்துக்கொண்டாலல்லது முன்னுக்கு வரமுடியாது. அறிவைப்பரவச்செய்தலே சகல சீர்திருத்தங்களுக்கும் முதன்மையாயிருக்கவேண்டும். அதற்கென்றே கங்கணங்கட்டிக்கொண்டு சிலர் நாடெங்கும் அலைந்து திரிந்து ஜனங்களுக்குள் ஊக்கத்தை உண்டுபண்ணி அவர்கள் கண்களைத் திறந்துவிடவேண்டும். அப்பொழுதுதான் நம் நாட்டில் விஷம்போல் பரவிவருகின்ற கொடிய வியாதிகளும் சீர் கேடுகளும் தொலைய இடமுண்டு. சுகாதாரங்களைக் கவனிக்க அறிவன்றோ பிரதானம். ஜனங்கள் தங்கள் கடமையை அறிந்து சௌக்கியமாய் வாழவேண்டுமென்றால் அறிவைப் பரவச்செய்வதே ஒவ்வொருவரும் செய்யவேண்டிய யாகம். இதனினும் அரிய பெரிய யக்ஞமுண்டோ? கல்வி கற்றவர்கள் தம்மினும் தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்களிடம் அநுதாபப்பட்டு அறிவைப்பரவச்செய்யாவிடினும் தம் சுகத்தை முன் நோக்கியாவது இது விஷயத்தில் பாடுபடக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நம்ஜனசங்கம் பல உறுப்புக்கள் சேர்ந்த நம் தேகத்துக்குச்சமானம். அதில் ஒருபாகமாகிய மூளையை மட்டும் நல்லஸ்திதியில் வைத்துக்கொண்டால் ஏனையுறுப்புக்கள் சுகமடையுமா? எந்தப்பாகத்தில் விஷமிருந்தாலும் அது தேகம்முழுவதும் பரவிச்சீக்கிரத்தில் நமக்கே அழிவையுண்டாக்கும் என்பது உண்மையன்றோ. ஆகையால் நாம் உண்மையில் சுகத்துடன் வாழவேண்டுமானால் அயலார் சுகத்தையும் நாடவேண்டியது நம் கடமையாம். அறிவொன்றே தேகசுகத்தையும் மற்றெவ்வித சௌகரியங்களையும் தரும். ஆகையால்எப்பாடுபட்டாகிலும் அறிவை அபிவிருத்தி பண்ணவேண்டியது.

“அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்.”



ஆகையால் ஒருவனுக்கு 32 குணங்களிலும் 2 குணமில்லாவிடின் பயனில்லை என்று சொல்லும் லோகத்தார் வசனத்தைப்போல அறிவும் செய்தொழிலூக்கமு மில்லாவிடின் நமக்கு எத்துணை சௌகரியங்களிருந்தும் பயனில்லை. நாம் நம் தேசத்தில் சகல பாக்கியங்களைப் பெற்றிருந்தும் தாமரைத் தடாகத்தின் கண்ணுள்ள தவளை போல் அந்நியர் பலர் நம் நாட்டுச் செல்வத்தைக் கொள்ளையிட்டுக் கொண்டுபோகப் பார்த்துப் பசக்கப் பசக்க விழித்துக்கொண்டு நிற்கிறோம். பேச்சுப்பேசுவதில் காரியமில்லை. காரியத்தை ஆரம்பிக்கவேண்டும். அறிவைப்பரவச் செய்வதில் நம் தேசத்துக்கும் நம் நாட்டுக்கும் நம் மதத்துக்கும் நம் தருமநெறிகளுக்கும் நடையுடை பாவனைகளுக்கும் ஒத்ததாயிருக்கும்படி செய்ய வேண்டுமேயொழிய அந்நியர்களைப் பார்த்து அவர்கள் வழியிலேயே கண்மூடித்தனமாய்ச் செல்லல் ஒண்ணாது. கிராமங்கள் தோறும் பாடசாலைகள் ஏற்படவேண்டும். ஒவ்வொரு கிராமத்தாரும் தத்தம் கல்விச்செலவை ஏற்றுக் கொள்ளும்படி செய்தல் வேண்டும். கவர்ன்மெண்டார் படிப்பை இனாமாகச் சொல்லிக்கொடுக்கஆரம்பித்தாலும் அவர்கள்கையை மட்டும் எதிர்பார்த்தல் போதாது. நம் வியாதியைத் தீர்க்க நாம் முயற்சிசெய்தால் பிழைக்கலாமே யொழிய தர்ம வைத்தியசாலையில் நுழைந்துவிட்டாலே வியாதி தீரும் என்று இருத்தல் கூடாது.

அறிவைப்பரவச்செய்வதில் ஆண்மக்களின் கல்வியைப் பற்றி மட்டும் சிரத்தையெடுத்துக்கொள்ளுதல் போதாது. நம் தேசம் க்ஷேமப்படவேண்டியதற்கு ஸ்திரீகளே முக்கிய காரணமாவார்கள். ஒரு சிறு குடும்பக்ஷேமத்துக்கே புத்தியுள்ள ஸ்திரீ காரணமாயிருக்கும் போழ்து உலகமாகிய பெரும் குடும்பத்துக்கு ஸ்திரீகளின் கல்வியறிவு முக்கியமன்றோ? ஒரு பெண்ணுக்குக் கல்வி கற்பித்தால் அவள் தாயாகும் போது தன் ஆண்மக்கள் பெண்மக்கள் அனைவருக்கும் கல்விபோதித்து அறிவை விருத்தி பண்ணுவாள். அப்படிப்பட்ட தாய்மார்கள் அறிவீனர்களாயிருந்தால் நாட்டார் முன்னுக்கு வருவது எவ்விதம்? பூர்வகாலத்தில்நம்தேசம் சிறப்படைந்ததற்கெல்லாம் முக்கியகாரணம் நம் ஸ்திரீகளே. பரதகண்டத்தின் பெரும்

பாகத்தார் அநுசரிக்கும் நம் மிதாக்ஷர தர்மசாஸ்திரமானது ஒரு ஸ்திருப்பெருமாட்டியால் இயற்றப்பட்டதென்பதைக் கேட்கப்பலருக்கும் வியப்பாயிருக்கும். ஆனால் இவ்விஷயம் ஒரு சபையில் ஸர். குருதாஸ்பனர்ஜி என்றநிபுணரால் கூறப்பட்டது. ருக்வேதத்தின் 5-வது மண்டலம் 23-வது ஸூக்தம் விஸ்வாவரா என்ற மாதுசிரோமணியாலும் 19-வது ஸூக்தம் அகஸ்தியர் பத்நியாகிய லோபாமுத்திரை என்னும் உத்தமியாலும் 10-வது மண்டலம் 125-வது ஸூக்தம் அம்பிரிணர் என்பவருடையபுத்திரியாகிய பாக் என்னும் ஸ்திரீரத்நத்தாலும் இயற்றப்பட்டிருப்பதை ருக்வேதம் தெரிவிக்கும். மைத்திரேயி, கார்கி என்பவர்களுடைய வேதசாஸ்திர ஞானமும், தர்க்கசம்வாத சாமர்த்தியமும் உலகம் அறிந்த விஷயம்.

மனுவின் புத்திரியாகிய தேவாஹூதி என்னும் மாது ஒரு ரிஷிபுங்கவரை மணஞ் செய்து சர்வசம்பத்துக்களையும் துறந்து தன்பர்த்தாவுடன் வனஞ் சென்று அவரிடமே சர்வஞானத்தையும் பெற்றுச் சாங்கிய சாஸ்திர கர்த்தாவாகிய கபிலரைப்பெற்ற புண்யவதி. தாமே தம் மகனுக்குக் கல்விகற்பித்த மகா உபாத்தியாயினி. அசோக இராஜன் செல்வப் புதல்வியாகிய ஸங்கானஸ்தா என்னும் மாதரசி தன் பிதாவின் கட்டளைப்படி பௌத்தமதத்தைப் பரவச் செய்து அறிவைப் புகட்டும் வண்ணம் இலங்கைக்கு விஜயஞ்செய்தனள். மண்டன மிசிருடைய தர்மபத்நியாகிய உபயபாரதி என்னும் கற்புக்கரசி ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாளுக்கும் மண்டன மிசிரர்க்கும் நடந்த சம்வாதத்தில் மத்தியஸ்தராக வீற்றிருந்து தம் பர்த்தா வாதத்தில் தளர்ச்சியடையத் தாமே ஆசாரியருடன் நேரில்வாதம் பண்ணி அம்மகானால் கொண்டாடப்பட்ட அபூர்வகல்விக் களஞ்சியம்! பாஸ்கராசாரியாருடைய செல்வப் புதல்வியாகியலீலாவதி கணிதசாஸ்திர சாமர்த்தியமுடைய வளாயிருந்தனள். பாநுமதி என்னும் மாது கலைக்ஞானங்களில் ஒன்றிலும், கானா என்னும் மாது வானசாஸ்திரத்திலும் நிபுணர்களாயிருந்தார்கள்.

நம் அருந்ததி, அநஸூயை, சாவித்திரி, மதயந்தி, தமயந்தி, சுகன்யை, முதலியபதிவிரதா சிரோமணிகள் ஸீதா தேவிபோலேயே



கற்புக்கு நிதர்சனமாகப் போற்றப்பட்டவர்கள். நளாயினி, திரௌபதை, ருக்மிணி முதலியோர்களின் புத்திசாதுர்யம் பாரத பாகவதங்களால் விளங்கும்.

நம் தமிழ் நாட்டிலும் ஔவையார், காரைக்கால் அம்மையார், ஆண்டாள், மங்கையர்க்கரசி முதலிய பல வித்யா ரத்நங்களிருந்து உலகத்தாருக்கு நீதியையும் பக்தியையும் புகட்டியிருக்கின்றனர். அந்தோ இப்படிப்பட்ட ஸ்திரீ ரத்நங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த தேசம் பெண்கல்வி விஷயத்தில் இச்சீர்கேட்டை யுமைந்திருப்பது எவ்வளவு பரிதபிக்கத் தக்க விஷயம்.

உயர்தரக் கல்வி விஷயத்தைப்பற்றியும் கைத்தொழிற்கல்வியைப்பற்றியும் சிறிது ஆராய்வோம்.

வித்தியாவிஷயமாய்ச் செலவாகிற பணத்தில் நம்கவர்ன்மெண்டார் பிரதமகல்வி விஷயத்தில் 100க்கு 49·5 ரூபாவும் ஹைஸ்கூல் விஷயத்தில் 100க்கு 27·75ரூபாவும் உயர்தரப்படிப்புவிஷயத்தில் 100-க்கு 13·2 ரூபாவும் விவசாயம், வைத்தியம், சிற்பம், சட்டம் முதலிய எல்லாச்சாஸ்திரக்கல்வியிலும் 100க்கு 9·6 ரூபாவும் செலவுசெய்திருக்கிறார்கள்.

அயல்நாட்டார் உயர்தரப்படிப்புக்கும் சாஸ்திரப்படிப்புக்குச் செலவிடுகிறதொகைகளை ஒருவாறு எடுத்துக்காட்டுவோம்.

| காலேஜின்பெயர் | | ஒவ்வொருவருமாணாக்கனுக்கும் செலவாகுந்தொகை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| லிவர்பூல் | ... | 1050 | 0 | 0 |
| மான்செஸ்டர் | ... | 1070 | 0 | 0 |
| ஜப்பான். சாஸ்திரப்படிப்புக்கு | ... | 1485 | 0 | 0 |
| ஷை வைத்தியத்திற்கு | ... | 1050 | 0 | 0 |
| ஷை கிருஷிபாடசாலை | ... | 540 | 0 | 0 |
| ஷை இலக்கியப்படிப்புக்கு | ... | 408 | 0 | 0 |

நம் இந்தியாவின் பிரதானகலாசாலை யாகிய கல்கத்தா காலேஜூக்கு மாணாக்கன்கொடுக்கும் சம்பளம் ரூ. 144 போக கவர்ன்மெண்டார் செலவிடும் தொகை ரூ. 63.

தேசத்துக்குப் பிரதமபாடசாலைகள்மட்டும் அபிவிருத்தியடைவது போதாது. புத்திமான்கள் பலர் நிரம்பியிருந்தாலன்றி தேசம் க்ஷேமமடையாது. புத்திமான்கள் உயர்தரப் படிப்பின்றி எவ்வாறு தேசத்துக்கு க்ஷேமம் உண்டாகமுடியும். ஜர்மனி, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகள் உயர்தரக் கல்வியடைந்தவர்களாலேயே விருத்தியாகின்றன. உயர்தர சாஸ்திரக் கல்வியாலேயே அந்நிய நாட்டார் வியாபாரத்தில் பல அரிய விஷயங்களைக் கண்டுபிடித்துப் பெருத்த இலாபம் அடைந்து க்ஷேமமடைகின்றனர். ஆகையால் உயர்தரக் கல்வியும் அவசியம் என்று ஏற்படுகின்றது. ஏழைகளில் புத்திமான்கள் பலரிருப்பதால் அவர்களின் அரிய புத்தி சாமர்த்தியத்தைத்தேசம் இழக்க வொண்ணாது. ஜப்பான் தேசத்தில் உயர்தரக்கல்விக்கு ஒரு மாணாக்கன் கொடுக்கும் தொகை 3½ரூபா. நம் தேசம் இதனினும் பலபங்கு பொருள் கொடுக்கவேண்டி யிருப்பதால் ஏழைகள் உயர்தரக்கல்வியின் பயனையடைய வழியில்லை. இது விஷயத்தில் கவரன்மெண்டார் சிரத்தை பாராட்டுவதாகக் காண்பித்தாலும் வர வர நிர்ப்பந்தங்கள் அதிகமாய்ஏற்படுத்திவிட்டனர். உலகிலுள்ள சர்வகலாசாலைகளில் உயர்தரக்கல்வி நம் சென்னையில்போல் அவ்வளவு கஷ்டமாயிருக்கவில்லையென்று பல நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆகையால் இவ்வின்றியமையாக்கல்வியிலும் நாமே சிரத்தை பாராட்டநேரிட்டுவிட்டது.

ஹைஸ்கூல்களுக்குக் கொடுத்துவந்த உதவியையே முற்றிலும் நிறுத்திவிடுவதாகக் கவர்ன்மெண்டார் நமக்கு எச்சரிக்கை கொடுத்திருக்கிறார்கள். எல்லாப்பணத்தையும் பிரதம பாடசாலைகளில் செலவிடப்போகிறதாகக் கூறுகிறார்கள். சென்ற இரண்டு வருஷகாலமாய் இந்தியா கவர்ன்மெண்டார் பிரதமபாடசாலைக்கென்று நம் சென்னைக் கவர்ன்மெண்டாருக்கு வருஷாவருஷம் 6லக்ஷ ரூபாவீதம் கொடுத்துதவுகிறார்கள். அத்தொகையில் ஒரு பைசாவேனும் சுதேசிகளாலும் பாதிரிமார்களாலும் நடத்தப்படுகிற பாடசாலைகளுக்குக்கொடுத்துதவவில்லை. ஆகையால் நாம் இவைகளையெல்லாம் சீர்தூக்கிப்பார்த்துக்கல்வியபிவிருத்தி விஷயத்தில் கவர்ன்மெண்டாரை மட்டும் எதிர் பாராமல் நாமே முயற்சி செய்வது இன்றியமையாதது நமக்கு வருவாய்க்கு என்ன வழி என்ற கேள்வி பிறக்கலாம்.



முதலில் நமக்குப் பெருத்த வரும்படியுள்ள தேவாலயங்களிருக்கின்றன. அவைகளில் பூஜை நைவேத்தியங்களுக்கு வேண்டிய செலவுகளைச் செய்வதோடு வேதாகம சாஸ்திரப்படிப்புக்கும் ஒரு பகுதியைச்செலவிடும்படி செய்யலாம். தற்காலம் தேவஸ்தானப்பணத்தைக் கொள்ளைகொள்கிற பழம்பெருச்சாளிகள் பலரிருக்கின்றனர். பாணவேடிக்கைக்கென்றும் மாராமத்துக்கென்றும் வியாச்சியச் செலவுக்கென்றும் கணக்கெழுதிப்பகற் கொள்ளைகள் நடந்துவருகின்றன. டாம்பீகமான விஷயங்களுக்கெல்லாம் ஏராளமான செலவுகள் நடந்துவருகின்றன. அசாஸ்திரீயமும் அநாவசியமுமான பலசெலவுகளை நிறுத்திக் கல்வியபிவிருத்தி விஷயத்திலும் சாஸ்திர ஆராய்ச்சியிலும் செலவு செய்யும்படி செய்யலாம். ஜனங்களின் பெருந்தூக்கமே இவ்விதத் துக்கங்களுக்கெல்லாம் காரணமாகின்றது. அவற்றைக் கவனித்துப் பெருந்தொகை மீதம் பிடித்துக் கல்வி விஷயத்திற் செலவிட வேண்டியது இன்றியமையாதது.

வரவர ஜமீன்தார்களும் பிரபுக்களும் க்ஷீணித்துப்போய்விட்டார்கள். அவர்கள் ஸ்தானத்தில் செட்டி வர்த்தகர்கள் ஏற்பட்டு இருக்கிறார்கள். முக்கியமாய் நம் நாட்டில் ஏராளமான தர்மம் செய்துவருகிற நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களிருக்கின்றார்கள். அவர்கள் கோவில் கட்டுவதிலும், குளம் வெட்டுவதிலும், அன்னசத்திரம் போடுவதிலும், பாடசாலைகள் ஸ்தாபிப்பதிலும் ஏராளமான பொருள் செலவிடுவதற்காக நம் நாட்டார் அவர்களுக்கு மிக்க நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் முயற்சியின்றித் தென்னிந்தியாவின் தேவஸ்தானங்கள் சிறப்படைந்திருக்க மாட்டா. சில வருஷங்களுக்குமுன்வரை அவர்களிற் பலர் தர்மத்தையே பெரிதாய் நினைத்துப் பெரியோர்கள் உதவியால் பக்திக்கும் ஞானத்துக்கும் ஏற்றபடி தர்மங்களைச் செய்துவந்தனர். தற்காலத்திலோ அநேகர் அவைகளைப் பிரதிஷ்டைக்கு மட்டும்செய்ய ஏற்பட்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் உண்மையான தர்மத்தை மறந்து பேரும் புகழுமே பெரிதாகக்கருதி நல்ல ஸ்திதியிலிருக்கப்பட்ட கட்டடங்களை உருத்தெரியாமல் இடித்துத்தள்ளிப் புதுக்கட்டடங்களும் கோபுரங்களும் கட்ட ஆரம்பிக்கின்றனர். இவ்வாறு அநாவசிய

மாய்ச்செலவிடும் ஏராளமான திரவியத்தைக் கல்வியபிவிர்த்திக்கென்றுதிருப்பக்கூடாதா? இதனால் நாம் சில சீலர்கள் பக்திபூர்வமாய்ச் செய்து வருவதைக்குறை கூற வரவில்லை. கோவில் திருப்பணி செய்யவேண்டுவது அவசியமே ஆனாலும்அவை ஸ்தலத்தின் மகிமைக்கும் ஜனசமுகத்தின் சௌகரியத்துக்கும் ஞான அபிவிருத்திக்கும் தக்கவண்ணமாயிருத்தலே தகுதி. நம் புராதனவழிகளைக் கைவிட்டுப்புதுமார்க்கங்களில் அநாவசியமாய்ப் பிரவேசிக்கவேண்டுமென்பது நம் கோரிக்கையன்று. இருந்தாலும் பொருள் எவருக்கும் பயனின்றி வீண்விரயம் ஆகக்கூடாதென்பதே நம் கருத்து. ஜன சமூகமேஇல்லாத சிறு கிராமங்களில் லக்ஷக்கணக்காகப் பெரும்பொருள் செலவு செய்து வீணாகக்கட்டிடம் கட்டுவதில் யாதுபயன்? பிரதிஷ்டைக்காகப் புதுக்கோவில் நிர்மாணிப்பதைக் காட்டிலும் அப்பொருளை ஏழைகளின் அபிவிருத்தியின்பொருட்டு கைத்தொழிற் சாலைகளில் செலவிடக்கூடாதா? அவ்வாறு செலவு செய்தல் தர்மத்துக்குத் தர்மம். வருவாய்க்கும் வருவாய்.

இதுநிற்க. ஏராளமானசொத்துக்களுள்ள மடங்களிருக்கின்றன. மடாதிபதிகள் இந்த சொத்துக்களுக்குத் தர்மகர்த்தாக்களே ஒழிய சொந்தக்காரர் ஆகமாட்டார்கள். மடங்கள் ஏற்பட்டதே ஞானத்தையும் கல்வியறிவையும் பரவச்செய்வதற்கு. சிறிதுமுன்காலம்வரையிலும் அந்தஸ்தானங்கள் வித்வான்களுக்கும் வித்தியார்த்திகளுக்கும் அடைக்கலஸ்தானமாயிருந்துவந்தன. தற்காலத்திலேயோ அநேக மடங்களின் பணமெல்லாம் நம்பனடியவர்களுக்குப் பயன்படாமல் "பம்பைக்காம், பேய்க்காம், பரத்தையர்க்காம் வம்புக்காம்" என்ற வண்ணம் கேள்விமுறையில்லாமல் அழிக்கப்படுகின்றது. இவ்விழிவான செலவுகள் தடுக்கப்பட்டால் நமக்கு ஏராளமாகக் கல்வியபிவிருத்திக்குப் பொருள் கிடைக்கும்.

நம் நாட்டில் பல ஜமீன்களிருக்கின்றன. அநேகம் ஜமீன்களில் தர்மத்துக்கென்று ஏற்பட்ட சொத்துக்கள் ஏராளமாயிருக்கின்றன. அவைகளைக் கண்ணுங்கருத்துமாயிருந்து செலவிட்டால் வித்தியா தருமத்துக்கும் ஏராளமான தனம் கிடைக்கும்.



ஆகையால் மேற்கூறிய விதங்களாலும் களப்பிச்சை, கல்யாணப்பிச்சை முதலிய வரும்படிகளாலும் பொதுஜனக் கல்வியையும், விவசாயத்தையும், கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்து தேசக்ஷேமத்தை நாடுவோமாக. இவ்வளவுக்கும் ஒற்றுமையும், உழைப்பும், செய்தொழில் ஊக்கமும் இன்றியமையாதன.

இவைநிற்க. கோ ஆப்ரேடிவ் சங்கங்கள் நாடெங்கும் ஸ்தாபித்து அமெரிக்கர் பயனடைந்து வரும் வண்ணம் நாமும் பயனடைந்து நம் கஷ்டத்தைத் தொலைத்துச் சுகமாய் வாழ்வோமாக.

அறிவின் ஆனந்தமே ஆனந்தம். அதனாலன்றி நாம் சுகம்பெற இயலாது. நம் நாடு முன்னுக்கு வரவேண்டுமானால் மேற்கூறிய எல்லா விஷயங்களிலும் ஊக்கத்துடன் உழைத்து விருத்திபண்ண வேண்டும். பஞ்சாயத்தில் வழக்குக்களைத்தீர்க்கவேண்டும். இல்லாவிடில் நாம் க்ஷீணதசையிலிருக்கவேண்டுவதுதான். ஆகையால்அன்பர்களே! எல்லாப்படியாலும் நாட்டின் க்ஷேமத்தைத் தேடுங்கள். நம் எளிமையைத் தொலையுங்கள். நாடு தழைக்கச்செய்யுங்கள். நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை. சுபம். சுபம்.

"அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்இசையும் நாட்டும்—உறுங்கவல்ஒன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை."

பத்திராதிபர்.

# திருப்பரங்குன்றம் கல் கண்டிராக்டு.

நம் மதுரையம்பதியைச் சார்ந்த திருப்பரங்குன்றம் என்பது ஸ்ரீ முருகக்கடவுளுக்குரிய ஆறுபடை வீடுகளிலொன்றாகி மிகச்சிறப்புற்றதென்பது யாவரும் அறிந்த விஷயமே.

சில வருஷங்களாக இம்மலையிலுள்ள கற்களை உடைத்து எடுத்துக்கொள்ளும்படி கவர்ன்மெண்டார் கண்ட்ராக்டு விட்டுவருவதைப் பற்றி ஆக்ஷேபித்து மதுரை காக்காத்தோப்புத்தெருவாசியும், சில காலம் மதுரை மெயில் பத்திராதிபராகவும், சிலகாலம் மதுரைத் தமிழ்ச்சங்கம் மானேஜராகவும் இருந்தவருமான ஸ்ரீமத் எம். வி. சுப்பிரமணிய ஐயரவர்கள் ஒரு மெமோராண்டம் ஆங்கிலத்தில் தயார் செய்து கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன் நகல் அச்சுப்பிரதியொன்றை யெமது பார்வைக்கனுப்பினார்கள்.

அந்த மெமோராண்டத்தில் ஐயரவர்கள் கூறும் காரணங்கள் யாவரும் ஒப்பத்தக்கனவே. அவற்றுட் சில கூறுவாம். "இத்திருப்பரங்குன்றம் ஆறுபடை வீடுகளிலொன்றாவதன்றியும் அழகிய சிவபிரானே மலைவடிவாயிருப்பதென்று பொருள் தொனிக்கின்றது. அம்மலையே சுயம்புலிங்கமென்பர். பிரமன் சரஸ்வதியை மணஞ்செய்யும்போது ஸ்நானம் செய்த பிரமகூவ தீர்த்தமுடையது. மகிடாசுரனைச் சம்மரிக்கவேண்டி துர்க்காதேவி தவஞ்செய்து சித்தி பெற்று வீற்றிருப்பது. சிபிச்சக்கரவர்த்தியின் கொடையை ஏற்றுக்கொள்ளச் சிவபெருமான் மானிடவேடமெடுத்து வரப்பெற்றது சிறை நீங்கும்படி திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர்பொருட்டுக் காசி கங்கை, யமுனை முதலிய திவ்ய தீர்த்தங்களை வரவழைத்தமைக்கப்பெற்றது. தேவநாயகி திருக்கல்யாண மகோத்ஸவம் நிறைவேற்றப்பெற்றது. ஆதியில் பராக்கிரம பாண்டியனால் திருப்பரங்குன்றம் கிராமம் கோவில் பூஜைக்கு மானியமாக விடப்பட்டது. 1245-ம் பஸலியில் ஆங்கில கவர்ன்மெண்டார் கோவிலுக்கு தஸ்து ஏற்படுத்திக் கிராமத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். மலையும் அதைச்சுற்றியுள்ள மண்டபங்கள் தீர்த்தங்கள் யாவும் தேவஸ்தானத்தார் ஆட்சியில் இருந்து வந்தன. பின்னர் யாது காரணத்தாலோ மலையை மட்டும் சர்க்கார் புறம்போக்காகத் தாக்கல் செய்துகொண்டார்கள்.



தேவஸ்தான அதிகாரிகளிதைக் கவனிக்கவில்லை. 1879-ம் ௵ மலைக் கல்கண்டிராக்டு கேட்டபோது கூடாதென்று நிறுத்தப்பட்டது. 1889 ௵த்திய மதுரை ஜில்லா கெஜட்டில் திருப்பரங்குன்றம் மலையை நீக்கி மற்ற மலைகளில் கல் கண்டிராக்டு விடப்படுமென்று விளம்பரம் செய்திருக்கிறார்கள்.

பிற்பாடு கவர்ன்மெண்டார் ஷை மலையில் கல் எடுக்க உத்தரவு கொடுத்து வந்ததோடு இந்த ௵ கவர்ன்மெண்டு கட்டிடத்துக்கு வேண்டிய கற்கள் தீர்வையில்லாமல் எடுத்துக் கொள்ளலாமென்று பிரசுரஞ் செய்திருக்கிறார்கள். ஷை மலையிலிருக்கிற பட்டுப்போன மரங்களை விற்றுமுதல்செய்து தேவஸ்தானத்துக் குபயோகப்படுத்திவருகையில் கல்கண்டிராக்டு மட்டும் சர்க்காருக்கு எவ்விதம் சொந்தமாயிற்றென்று புலப்படவில்லை. 1773ம் ௵த்தில் மதானுசாரம் தேசானுசாரம் இவற்றில் கவர்ன்மெண்டார் தலையிடுவதில்லையென்று வாக்குத்தத்தஞ் செய்திருப்பதற்கு விரோதமாக சுயம்பு லிங்க வடிவமாகச் சைவர்கள் பூசித்துவணங்கும் இந்தமலையில் கற்கள் உடைக்கும்படி கண்டிராக்டு விடுவது பெருத்த அநியாயமாயிருக்கிறது. ஆனதால் இந்தப்புது வழக்கத்தை நிறுத்தி ஷை மலையைத்தேவஸ்தானத்தார் ஆட்சியில் விட்டுவிடவேண்டியதென்று போதுமான நியாயங்காட்டி நமது சுப்பிரமணியஐயரவர்கள் மெமோராண்ட மனுப்பினார்கள். ஐயரவர்கள் தமது பெயருக்குப் பொருத்தமாக இவ்விஷயத்தில் முன் வந்தமைக்கு நாம் மிகவும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். தேவஸ்தானக் கமிட்டியார்களிற் பலர் கோவிலுக்குள்வரும்போது தலைக்குட்டை சொக்காய் கைத்தடி தாம்பூல தாரணம் இவற்றுடன் சேவகர்சூழ வந்து தொங்கிய கைகளுடன் சுற்றி வேடிக்கை பார்த்து விட்டு வீட்டிற் போய் உண்டைக்கட்டியையுண்டு ஏப்பமிட்டிருக்க நாமும் சும்மாயிருந்தால் சிலகாலத்தில் கோவிலையும் சுவாமியையுமே அந்நியர் கைப்பற்றி ஏலம்போடத் தடையென்ன? சிறிதும் மதாபிமான மின்றி நிரீசுரவாதிகளாய் நாஸ்திக மௌட்டிகவிரதம் பூண்ட பிரமுகர்கள் கமிட்டிவேலையினின்று நீங்கவும் மதாபிமானமும் நல்லொழுக்கமு முடையவர்கள் முன்வந்து பரிபாலிக்கவும் கடவுள் கருணைபுரிவாராக.

பத்திராதிபர்.

# துஷ்யந்தன் சரித்திரம்.

(முன்தொடர்ச்சி)

இவையெல்லாம் அம்மகரிஷியின் ஸந்நிதானத்தில் நிகழ்ந்தன. மேனகை வஸ்திரமில்லாதிருக்கக் கண்ட விசுவாமித்திரர் அவளது மாசிலா வடிவையும், வனப்பையும் பார்த்து அதிகபிராயத்தினால் உண்டாகும் குறிப்புக்களொன்றுமில்லாமலிருக்கக் காணவும், காமனால் தீண்டப்பட்டு அவன் கூட்டுறவை விரும்புகின்றதாக அவளுக்கு ஜாடைகாட்ட மேனகையும் அவர்சொற்கிணைந்து அவருடன் கூடி சரஸசல்லாபத்துடனிருக்க இருவரும் தங்களிஷ்டப்படி வெகு லீலைகளைச் செய்துகொண்டு அநேகநாள் காலங்கழித்து வந்தனர். இம்மகரிஷியிடத்து மேனகை சகுந்தலை யென்றவோர் பெண்ணைப் பெற்றாள். மேனகை கர்ப்பிணியாயிருக்கும்போது அழகிய ஹிமோத்பர்வதத்தின் பள்ளத்தாக்கு நடுவே செல்லாநின்ற மாலினிநதிக்கரையை யடைந்து அவ்விடத்தில் இக்கன்னிகையைப் பிரஸவிக்க இவ்வாறு பிறந்த குழந்தையைநதிக்கரையிலெறிந்துவிட்டுச் சுவர்க்க லோகம் போய்ச் சேர்ந்தனள். சிங்கம் புலி நிறைந்த நிர்மானுஷ்யமான விக்கானில் தனியே கிடந்த இக்குழந்தையைக் கண்ட சில கழுகுகள், ராக்ஷசர்களாலும், மாம்சபக்ஷிணிகளாகிய சில பக்ஷிகளாலும் பிடிக்கப்படாமல் அக்குழந்தையைக் காப்பாற்றும் பொருட்டு அதைச் சுற்றி உட்கார்ந்துகொண்டிருந்தன. நான் மாலினி நதிக்கு பிராதஸ்நானஞ் செய்வதற்காகப் போனபொழுது அநேக கிருத்திரங்களாற் சூழப்பட்டுத் தனிமையாய்க் காட்டிலே குழந்தை கிடப்பதைக்கண்டு அதனையெனது ஆச்சிரமத்துக்கெடுத்துவந்து எனதுசொந்தப் புதல்விபோல் வளர்த்து வருகின்றேன். சரீரத்தைச் சிருஷ்டிப்பவனும், ஜீவனை ரக்ஷிக்கிறவனும், ஆகாரமளிப்பவனுமாகிய இம்மூவரும் முறையே பிதாக்களென்று வேதங்கள் முறையிடுகின்றன. கானகத்தின் மத்தியில் சகுந்தமென்ற பக்ஷிகள்சூழத் தனிமையாய்க் குழந்தை யிருந்தமையின் இப்பெண்ணுக்குச் சகுந்தலையென நாமகரணம் செய்யப்பட்டது. இந்த முறைமையாற்றான் ஓ! பிராமணோத்தமரே! சகுந்தலையை எனது புதல்வி யென்றழைத்தேன். அந்த



மாசற்றசகுந்தலையும் அவ்வாறே என்னைத் தகப்பனெனக் கருதியிருக்கின்றனள்." இதுதான் எனது தகப்பனாகிய கண்வர்பிராமணோத்தமராகிய ரிஷிக்குச் சொல்லியது. எனது சொந்தத் தகப்பனை அறியேனாதலின் கண்வரைப் பிதாவென்று கருதுகின்றேனென்றனள். துஷ்யந்த மகராஜன் அவள் சொல்வதை யெல்லாங்கேட்டு ஓ! ராஜகுமாரீ! நீ மகா பாக்கியவதி. உனது விருத்தாந்தத்தை வெகு அழகாய் எடுத்துச் சொன்னாய் ஓ! பேரழகி! நீ யெனக்குப் பத்தினியாகக்கடவாய். உனக்கு என்னவேண்டுமோ அதைச்செய்கின்றேன். காஞ்சன மாலைகளும், பட்டாடைகளும், தங்கக் காதணிகளும், நானாதேசங்களிலிருந்து வந்திருக்கும் தாவள்யமும் அழகாயுமுள்ள முத்துக்களும், தங்கநாணயங்களும், சேர்த்தியான ஜமக்காளங்களும், இன்றே நானுனக்களிக்கின்றேன். ஓ! கட்டழகி! என் ராஜ்ய முழுதும் இன்றைக்கே உனதாகிவிட்டது. ஆதலால் மாதே! என்னைக் காந்தர்வ முறைப்படி விவாகஞ் செய்துகொள். காந்தர்வ விவாகந்தான் எல்லாவித மணத்திற்கு மேலானது" என்றனன். இதைக்கேட்ட சகுந்தலை "வேந்தே! பலாதிகளைக்கொண்டு வரும்பொருட்டு என் தகப்பனார் வெளியே சென்றிருக்கின்றனர். ஒரு கணம் பொறுத்தால் அவர் திரும்பிவந்து என்னை உனக்குக் கலியாணஞ் செய்துகொடுப்பார்" என்றனள். இதைக்கேட்டு துஷ்யந்தன் "மிக வனப்பு வாய்ந்த மாதே, நீ எனக்குயிர்த்துணைவியாக வேண்டுமெனப் பேராவாக்கொண்டிருக்கின்றேன். நீ என் இருதயத்தைக் கொள்ளைகொண்டாய். உன் நிமித்தமாகவே என்னுயிர் உடலிற்றங்கி நிற்கின்றது. ஒருவனுக்குத்தன்னைக்காட்டிலு மிக்க சிநேகிதன் வேறிலன். ஆதலின் ஒருவன் தன்னைத்தான் எவ்வளவேனும் நம்பலாம். உனக்கிஷ்டமாயின் நீ என்னை மணத்தல் வேதநூன் முறையேயாகும். திருமணத்தில் எட்டு விதங்களுள அவையாவன :— பிராம்ய, தைவ, ஆர்ஷ, பிராஜாபத்ய, ஆசுர, காந்தர்வ, ராக்ஷஸ, பைசாச என்ற அஷ்டவிதமான விவாகங்களாம். ஸ்வயம்பு மனு தமது மனுதர்மசாஸ்திரத்தில்இவைகளுள் இன்ன விவாகங்கள் இன்னஇன்னவருணத்தாருக்குரியனவெனச்சொல்லி யிருக்கின்றனர். முதற்சொல்லிய நான்கும் பிராமணர்களுக்கடுத்தவையென்றும், முதலாறும் க்ஷத்திரி

யர்களுக்கடுத்தவை யென்றும், தர்ம சாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அரசர்களுக்கு ராக்ஷஸ விவாகமும் செய்யலாமென அனுமதி கொடுக்கின்றது. ஆசுரவிவாகம் வைசிய சூத்திரர்களுக்குரியது. பிராம்யம் முதலிய ஐந்து விவாகங்களிலும் முதன் மூன்றுமே உத்தமமானதென்றும், மற்றைய விரண்டும் மத்திமமானதென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. பைசாச ஆசுர விவாகங்கள் ஒருகாலும் அனுட்டிக்கத்தக்கவையல்ல. இதுதான் மனுமுறை கண்ட வாசகம். காந்தர்வ ராக்ஷஸ விவாகங்கள் க்ஷத்திரிய தர்மத்துக்கு ஏற்றவையாதலின் நீ சிறிதேனும் அஞ்சவேண்டாம். காந்தர்வமுறையிலேனும் ராக்ஷஸ முறையிலேனும் அல்லது இருமுறையின் சேர்க்கையாலேனும் யான் உன்னை விவாகம் செய்துகொள்வதற்குச் சிறிதேனும் ஐயமில்லை. நான் உன்னிடத்து மிகுந்த காதல்கொண்டிருக்குமாறு நீயும் என்னிடத்து இருப்பாயாகின் நாம் காந்தர்வமுறைப்படி மணம்புரிவோமென்றுரைத்தான். இதையெல்லாம் கவனித்துக் கேட்ட சகுந்தலை நீ சொல்லியது தர்மசாஸ்திர முறையாயும், நானும் என் பிதா அனுமதியின்றி உன்னை என்னிஷ்டப்படி மணம் புரிவது நீதிநூல் முறையாகவு மிருக்குமாயின் ஓ புருவின் வம்சோத்பவா! யான் கேட்கும் வரத்தை நீ யெனக்கு அளிக்க வேண்டும். என்னிடத்துப்பிறக்கும் உன் புத்திரனே உனக்குப்பின் பட்டத்திற்குரியவனாகவேண்டும். இவ்வரமளிப்பது உனக்குச் சம்மதமாயின் நாம் மணம்புரிவோமென்றனள். அரசன் சிறிது யோசிப்பதற்கும் காலமில்லாமையால் "நல்லது அப்படியே யாகட்டும் உன்னை நான் எனதரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போகிறேன். இது சத்தியம் ஓ மந்தகாசவதனீ! நீ எனது பட்டமகிஷியாயிருப்பதற்கு யோக்கியமானவளே" என்று சொல்லி அழகிய அன்ன நடையுடன் கூடிய சகுந்தலையைமணம் புரிந்து அவளுக்குக்காதலனாயினன். பிறகு துஷ்யந்தன் "ஓ! அன்னமே! உன்னை எனது தலைநகருக்கழைத்துவரும்படி உனக்கு மெய்காவலாகச் சதுரங்க சேனையை யனுப்புவிக்கின்றேன்" எனப்பலமுறை உறுதி மொழிகள் கூறித் தனது ராஜதானி போய்ச்சேர்ந்தனன். துஷ்யந்தன் தன் தலைநகருக்குச் செல்லும்பொழுது கண்வரிஷி நிகழ்ந்தவையெல்லாம் அறிந்தபின்



என் செய்வாரோ? என்ன நினைப்பாரோ? என்று நினைத்துக்கொண்டுபோயினன்.

இது நிற்க, அரசன் அவ்வாச்சிரமத்தை விட்டு நீங்கின தக்ஷணமே கண்வர் அங்குவந்து சேர்ந்தனர். வந்தவரை எதிர்கொண்டழைக்கச் சகுந்தலையும் நாணத்தால் வெளியே வராமலிருக்கக்கண்ட அம்மகரிஷி தனது ஞான நோக்கால் நிகழ்ந்தன யாவையுமறிந்து மனமகிழ்ச்சி எய்திச் சகுந்தலையை நோக்கி, "ஓ மடந்தாய், இன்று நீ நான் வரும் வரை தாமதிக்காமல் இரகசியமாய்ச் செய்த காரியம் நினது கற்பழித்திலது. இம்மணத்திற்கு காந்தர்வ விவாகம் எனப்பெயர். மிக்க காதல்கொண்ட ஸ்திரீ புமான் இருவரும் வேதோக்தமான யாதொரு மந்திரமின்றி மணந்தால் க்ஷத்திரியர்களுக்கு ஏற்பட்டுள்ள விவாகங்களில் மேலானதென்று நீதி நூலிற் கூறியிருக்கின்றது. மகாத்மாவாயும் தர்மிஷ்டனாயுமிருக்கின்ற புருஷ சிரேஷ்டனான துஷ்யந்தனை உனது கொழுநனாகக்கொண்டாய். அவனுக்கு உன்னிடத்தில் பிறக்கும் புத்திரன் இப்புவியில் பல பராக்கிரமத்தோடு கூடினவனாக இருப்பான். நாற்புறமும் கடலாற் சூழப்பெற்ற இப்பூலோகமனைத்தையும் தன் குடைக்கீழ்ப்படுத்துவான். அரசற்கரசனான அவனது சைனியங்கள் அவன் சத்துருக்களைக்கொன்று ஒருவராலும் எதிர்த்து வெல்லமுடியாததாயிருக்கும்" என்றனர். பின்னர்ச் சகுந்தலை அலுப்போடு கூடிய தன் பிதாவை அணுகி அவரது திருவடித்தாமரைகளைக்கழுவி அவர் முதுகில் வைத்திருந்த மூட்டையைக் கீழேயிறக்கி அதிலுள்ள பழங்களை ஒழுங்காய் எடுத்துவைத்தபிறகு, கண்வரைப் பார்த்து "ஓ! பிதாவே எனது கணவனாக நான்வரித்த துஷ்யந்தனையும் அவனது மந்திரிமார்களையும் நீவிர் ஆசீர்வதிப்பீர்களாக," என்று சொல்ல அது கேட்ட கண்வரும், "மின்போன்ற மேனியாய், உன் நிமித்தமாக நான் துஷ்யந்தனை வாழ்த்துகின்றேன். ஓ! சௌபாக்கியவதி! பின்னும் உனக்கு வேண்டிய வரத்தை என்னிடங்கேள்," என்றனர். பிறகு சகுந்தலை துஷ்யந்தனுக்கு நன்மை செய்யக் கருதி "பௌரவ மன்னர்கள் நீதிநெறி முறணாமல் எக்காலத்தும் தங்கள் ராஜ்யத்தில் அரசுபுரிந்துவர வேண்டு"மென்ற வரத்தைக்கேட்டனள்.

இது நிற்க, துஷ்யந்தன், ரிஷி ஆச்சிரமத்தைவிட்டு நீங்கியபின்னர் சகுந்தலை மகாவீரனாகிய ஒரு புதல்வனைப் பெற்றாள். அக்குழந்தை மூன்றுவது பிராயத்திலேயே எரிதழற்போன்ற தேஜஸுடையவனாயினன். அக்குழந்தை அழகிலும் பெருந்தன்மையிலும் சாமர்த்தியத்திலும் மிக்க சிறந்தவனாக இருந்தான். நாளொருவண்ணம் பொழுதொருமேனியுமாக வளர்ந்த அக்குழந்தைக்குத் தர்மாத்மாவாகிய கண்வர் செய்யவேண்டிய அன்னப்பிராசனம், சௌளமுதலிய சடங்குகளை நிறைவேற்றுவித்தனர். முத்துப்போல்வெள்ளிய தந்தங்களும், பிரகாசிக்கின்ற கேசமும், சிங்கத்தையும் சங்கரிக்கக்கூடிய பலமும் வாய்ந்த இச்சிறுவன் அகன்று பரந்த நெற்றியும் சுபசூசகமான சாமுத்திரிகாலக்ஷணங்களும் அமைந்து அழகிலும்பலத்திலும் நாளுக்குநாள் அதிகரித்து வளர்ந்து வந்தனன். ஜோதியில் தேவகுமாரன்போன்று அதிசீக்கிரத்தில் வளர ஆரம்பித்தான். ஆறும்பிராயத்திலேயே அவ்வாச்சிரமத்தைச் சுற்றிலுமுள்ள சிங்கம், புலி, யானை, காட்டெருமை, கரடிமுதலிய துஷ்டஜந்துக்களைத்தொடர்ந்து பிடித்துவந்து மரத்தோடு சேர்த்துக்கட்டும்படியான மிக்க புயவலிவாய்ந்தவனாகவிருந்தனன். அவ்வாறுபிடித்த துஷ்டமிருகங்களில் சிலவற்றின்மேல் ஏறிச் சவாரிசெய்வான். சிலவற்றைத்துரத்தி வேட்டையாடுவான். கண்வரது ஆச்சிரமவாசிகள் எல்லோரும் பலம்மிகுந்த எல்லாப்பிராணிகளையும் அடித்து அடக்க வல்லவனாக இருந்த பராக்கிரமும் வல்லமையும் வாய்ந்த இக்குழந்தைக்குச் சர்வத்தமனன் என்ற பெயரையிட்டழைத்தனர். கண்வரிஷி அவனது பராக்கிரமத்தையும் அரிய செயல்களையும் கண்டு சகுந்தலையை நோக்கி அக்குழந்தைக்கு யுவராஜ பட்டாபிஷேகத்துக்குக் காலங்கிட்டியதெனச் சொல்லித் தமது சீஷர்களிற் சிலரையழைத்து இந்தச்சகுந்தலையைஇவ்வரசிளங்குமாரனுடன்எல்லா லக்ஷணங்களும்வாய்ந்த துஷ்யந்தனது மாளிகைக்குத் தாமதமின்றிக் கொண்டுபோய்விடுங்கள். ஸ்திரீகள் தங்கள் தந்தை அல்லது தாய்வழி உறவினர்களின் வீட்டில் வெகுகாலம் உறைதல் கூடாது. அவ்வாறிருப்பது அவர்கள் பெயரைக்கெடுத்து நல்லொழுக்கத்தையும் தர்மத்தையும் சிதைக்கும். ஆதலின் சீஷர்காள்! இவனை அதிசீக்கிரத்திற் கொண்டு



போய்விடுங்கள்" என்று சொன்னார். சீஷர்களும் "அப்படியே ஆகட்டும்" எனக்கூறிச் சகுந்தலையும் அவள் செல்வப் புதல்வனும் முன் செல்லஅஸ்தினபுரியை நோக்கிச்சென்றனர். விற்போல்வளைந்த உருவத்துடன் கூடிய அம்மாது திவ்ய ரூபம் வாய்ந்த தனது தனயனுடன் ஆச்சிரமத்தை விட்டு அஸ்தினபுரிவந்து சேரவும் சகுந்தலையையும்உதயகாலத்துச் சூரியன் போன்ற அவளது புத்திரனையும் இன்னாரென்று சீஷர்கள் அரசனுக்குத் தெரிவித்துவிட்டுத் தம் ஆச்சிரமத்துக்குத் திரும்பிப்போயினர். பிறகு சகுந்தலை துஷ்யந்தனைத் தக்கவாறு பணிந்து "ஓ மன்னவரே!இவன் உம்புத்திரன் இளவரசாக அவனுக்குநீர்முடிசூட்டுக. விண்ணவமன்னனைத்தக்க இக்குழந்தையை நீர்என்பாற் பெற்றீர். ஆதலின், மானுடசிரேஷ்டரே! மாமுனியாகிய கண்வர் ஆச்சிரமத்தில் நாமிருவருங்கூடியிருந்தகாலத்தில் நீர் எனக்களித்த வாக்குறுதியை ஞாபகப்படுத்திப்பாரும். அதனை இப்பொழுது நிறைவேற்றுவீராக" என்றனள். இவ்வசனங்களைக்கேட்ட அவ்வரசன் எல்லாம் ஞாபகத்திலிருந்தும் ஒன்றுந்தெரியாதவன்போல் "அடீ! மதியிலீ! நீ யார்? தவவேடம்பூண்டுஇங்கு வந்திருக்கின்றனையே தர்மார்த்தகாமமென்ற புருஷார்த்தங்களில் யாதானுமொன்றை யுத்தேசித்து உன்னுடன் கூடிக் குலாவியதாக எனக்குச் சிறிதேனும் ஞாபகம் இல்லையே. ஆதலால் நீ போகலாம். அல்லது இவண் இருக்கவேண்டினால் இருக்கலாம். உனக்கு எது இஷ்டமோ அதைச் செய்" யென்றுசொல்ல, அழகிய நிறத்தோடுகூடிய கபடமில்லாத அம்மாது வெட்கிப்போய்ச் சோகத்தால் தன்னறிவிழந்து சிறிதுகாலம் ஸ்தம்பித்து நின்றாள். ஆயினும் சீக்கிரத்தில் தன்னறிவுவந்தவுடன் அவளது கண்கள் தாமிரம்போற்சிவந்து உதடுகள் படபடவென்று துடிக்க அவள் இடைக்கிடை அரசனைப்பார்த்த பார்வையால் அவன் எரிந்து பஸ்மமாய்விடுவான்போல் தோற்றியது. ஆயினும் அவள் தன்னுள்மூண்டு அடக்க முடியாத கோபத்தீயையும் தவத்தீயையும் அடக்கிக்கொண்டு துக்கமேலிட்டவளாய் அரசனைநோக்கிக்கனன்று "ஓ! மன்னவரே! எல்லாவற்றையும் நீர் அறிந்திருந்தும் ஓர் அதமனைப்போல்உமக்குயாதொன்றுந் தெரியாதென்றுசொல்லுதல்தகுமா? இந்த விஷயம்பொய்யோ? மெய்யோ?

என்பதை உம்மனச்சாக்ஷி அறியும். ஆயினும் உம் கவரவத்தைக் குறைத்துக்கொள்ளாமல் மெய்ம்மையே பேசுவீராக. ஒருவன் தான் ஒருவிதமானவனாக இருக்கத் தன்னை மற்றொருவனாகத் தெரிவிப்பவனே தன்னிடத்தே திருடுகின்றவனாகவும் வழிப்பறி செய்வோனாகவும் ஆவான். இத்தகைமையோன் மகாபாதகங்களையும் செய்யத் துணிவான். நீர் செய்த காரியத்தை உம்மைத் தவிர வேறுயாரும் அறியார்கள் என்று நீர் நினைத்திருக்கின்றீர், ஆதியாயும் ஸர்வவியாபகராயும் இருக்கின்ற ஸ்ரீமந் நாராயணன் உமது ஹிருதய கமலத்தில் வசிக்கின்றான் என்பதை நீர் அறியீரோ? அப்பகவான் நீர் செய்த பாவங்களையெல்லாம் அறிவார். அவர் சந்நிதியில் நீர் பாவங்களைச் செய்கின்றீர் என்று அறியும். பாவஞ் செய்கின்றவன் தான் செய்கின்றதை யாவருக்கும் தெரியாமற் செய்கிறதாக நினைக்கிறான். ஒவ்வொருவனுடைய ஹிருதயகமலத்திலும் வசிக்கா நின்ற ஸ்ரீமந் நாராயணன் மாத்திரமன்றித் தேவர்களும், சந்திர சூரியர்களும், வாயுவும், அக்கினியும், பிருதிவியும், ஆகாசமும், அப்புவும், ஹிருதயமும், யமனும், பகலும், இரவும், பிராதஸ்ஸந்தியும், ஸாயம்ஸந்தியும், தர்மமும் ஆகிய எல்லாரும் அவன் நடத்தைக்குச் சாக்ஷியாயிருக்கின்றார்கள். ஹிருதயகமலவாசியாகிய ஸ்ரீமந் நாராயணன் யாருடைய செய்கைகளைக்கண்டு திருப்தியடைகின்றானோ அவனுடைய பாவங்களையெல்லாம் சூரியபுத்திரனாகிய யமன் கவனியான். எவனுடைய செய்கைகளால் ஸ்ரீமந் நாராயணனுக்குத் திருப்தியுண்டாகவில்லையோ அவன் செய்த பாவங்களுக்காக யமன் அவனைச் சித்திரவதை செய்வான். எவனொருவன் தன் மனச்சாக்ஷிக்கு விரோதமாகப் பொய் சொல்லுகின்றானோ அவனைத் தேவர்கள் சபிக்கின்றார்கள். அவன் மனச்சாக்ஷியே அவனை வாழ்த்தாது. நானோ என் பர்த்தாவாகிய உம்மிடத்தில் மிக்க அன்புடன் கூடிய பத்தினி. நான் உம்மால் அழைக்கப்படாமல் சுயேச்சையாய் இங்கு வந்ததின் நிமித்தமாக நீர் என்னை உதாசினமாக நடத்துதல் சரியன்று. நான் உமது தர்மபத்தினியாதலின் மரியாதையாக நடத்துவதற்கு அருகளாயிருக்கின்றேன். அழைக்கப்படாது நான் வந்ததின் நிமித்தம் என்னை நீர் இப்படி நடத்துவது தகுமோ? அநேக ஜனங்கள் கூடியிருக்கின்ற இந்தச் சபையில் என்னைச் சாதாரண



மான ஒரு ஸ்திரீயைப்போல் மதித்து நடத்துகின்றீரே. நான் சொல்வதெல்லாம் வனத்திற்போட்ட கூச்சலாய்விடுமோ? அவை உம் செவியிற் புகவில்லையோ? நான் உம்பால் நயந்து கேட்கின்றதை நீர் எனக்குக் கொடேனென்று மறுத்தால், ஓ! துஷ்யந்தரே! உமது சிரசு இக்கணமே நூறு சில்லாக வெடித்துப்போகும். கணவனே பத்தினியின் கருப்பத்திற் புகுந்து புத்திரனாக ஜனிக்கின்றான். அதனாற்றான் வேதப்பிராமணர்களால் பத்தினியானவள் 'ஜாயா' வென்று அழைக்கப்படுகின்றாள். புதல்வனானவன் பிதுர்க்களைப் புத் என்னும் நரகத்தினின்றுங் காப்பாற்றுகிறான். ஆதலின் அவனுக்குப் புத்திரனெனப்பெயர் கிடைத்தது. ஒருவன் புத்திரபாக்கியம் பெறுவதாற்றான் மூவுலகையும் ஜயிக்கிறான். புத்திரனுக்குப் புத்திரனாகிய பௌத்திரனைப் பெறுவதாற்றான் ஒருவன் நித்தியத்துவத்தை அடைகின்றான் ஒருவன் புத்திரனுக்குப் பௌத்திரனுண்டானால் அவன் நித்தியானந்தத்தை யநுபவிக்கிறான். தர்மபத்தினியென்பவள் கிருஹ கிருத்திய விஷயங்களில் விசேஷ சாமர்த்தியமுள்ளவளாக இருப்பாள். தர்ம பத்தினியென்பவள் புத்திரபாக்கியத்தை யடைந்திருப்பாள் தருமபத்தினியென்பவள் தனது நாதனுடைய நன்மையையே நாடித் தனது நாதனைத் தவிர வேறொரு புருஷன் முகத்தையு மறியாதவளாயிருப்பாள். தர்மபத்தினி தான் தன் நாதனிற் பாதியாவாள் பத்தினியே சிநேகிதர்களுள் மகா ஆப்தமாயுள்ளவள். பத்தினியே ஒருவன் அடைவதற்கான தர்மார்த்த காம மோக்ஷமென்ற சதுர்வித புருஷார்த்தங்களுக்கும் ஆதாரமாயிருப்பவள். பத்தினியுள்ளவனே தர்மங்களைச் செய்வதற்கு யோக்கியதையுள்ளவனாவான் பத்தினியுள்ளவர்களே கிருஹஸ்தாச்சிரம தர்மத்துக்கு யோக்கியதையுள்ளவர்கள். பத்தினியுள்ளவர்களுக்கே சந்தோஷமென்பதுண்டு. அவர்களே அதிர்ஷ்டமுள்ளவர்கள். இனிய மொழிகளோடு கூடிய பத்தினிகள் சந்தோஷகாலத்திற் கூடச்சேர்ந்தனுபவித்தால் அவர்களே தனக்கு நண்பர்களாவார்கள். சாஸ்திரோக்தமான தர்மங்களைச் செய்யுங்கால் அவர்கள் நமது பிதாவைப்போல்வார். நமக்கு நோவும் துன்பமும் வந்தக்கால் நமது அன்னைபோல் ஆவார்கள். விருக்ஷங்கள் அடர்ந்த வனங்களிற் செல்லுங்காலையிலும் நாயகனு

க்கு அவன் பத்தினியே களைப்பாற்றி ஆறுதலைச் செய்கின்றாள் பத்தினியுள்ளவனையே எல்லாரும் நம்புவார்கள். மேற்கூறிய காரணங்களால் பத்தினியை எல்லாவித ஐசுவரியத்திற்கும் மேலானதாகச் சொல்லல்வேண்டும். பர்த்தா உடல்துறந்து யமலோகஞ் செல்லுங்காலையிலும் அவன் பத்தினியே அவனுடன் செல்லத்துணிகின்றாள். பத்தினியானவள் தன்கொழுநனை முந்துவாளாகில் முன்சென்று அவள் தன் பதிபின்வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றாள். இதற்காகவே உலகத்தில் விவாகமென்பது ஏற்பட்டிருக்கின்றது. கணவன் தன்காதலியுடன் கூடி இம்மை மறுமையிரண்டிலும் சுகம் அனுபவிக்கின்றான். ஒருவன் தானே தனது புத்திரனாக ஜனிக்கின்றானென்று ஆன்றோரால் கூறப்பட்டுள்ளதாதலால் தன் பத்தினியிடத்தின் புத்திரன் ஜனித்தமாத்திரத்தில் அவளைக் கணவன் தன் தாயெனப்பாவிக்கவேண்டும். ஒருவன் தன் பத்தினியிடத்துப் பிறந்த குழந்தை முகத்தைக் கண்ணாடியிற்கண்ட தன் முகம்போலிருக்கக் காணுவானாயின் சுவர்க்கத்தையடைந்தவோர் தர்மாத்துமாவுக்கு உண்டான ஆநந்தத்தையடைகின்றான்.

ஷி. நாராயணசாமி ஐயர்.

# ஓர் இந்துமாதின் தீரம்.

(சென்னை இந்துமாதர் சபையில் ஒரு பெண்மணி செய்த பிரசங்கம்)

இஃது ஒருகட்டுக்கதையன்று—சுமார்500 வருஷங்களுக்குமுன் நடந்த சங்கதி; இது சிறியதாயிருந்தாலும் முற்காலத்தில் நம்முடைய சகோதரிகளுடைய குணாதிசயங்களைச் சொல்லுவதால் அத்தியாவசியமாய் நாம் படிக்கவேண்டியது.

சுமார் 600-வருஷங்களுக்குமுன் இராஜஸ்தானம் என்னும் பிராந்தியத்தின் வடக்கேயுள்ள சித்தூர்என்னும்நாட்டில் ராஜபுத்ரவம்சத்தைச்சேர்ந்த ராஜ லக்ஷ்மஸி என்னும் பெயரையுடைய ஒரு ராணா (Rana) அரசாண்டு வந்தார்.

இந்த ராஜபுத்ர ஜாதியார் க்ஷத்திரியர் ஆனபடியினால் அவர்களுக்கு வேண்டிய தைரியம், சண்டையில் பின்வாங்காமை, ரோஷம் முதலிய குணங்களை உடையவர்களாயும், மானம் என்பதில் அதிக அபிமானம் உடையவர்களாயுமிருந்தார்கள். அவர்களுக்கு அவமானம் வந்தால் உயிர் பிழைத்திருக்கமாட்டார்கள்.

இந்த மாதிரியான குணங்களையுடைய ராஜபுத்திரர்க்குத் தலைவனாகிய ராணாலக்ஷ்மஸி என்பவர் சித்தூர் என்னும் தமது நாட்டை அதிகசிறப்போடு ஆண்டுவந்தார். அவருக்கு உர்ஸி, என்னும்புத்திரன் ஒருவன் இருந்தான்.

உர்ஸி என்னும் இராஜகுமாரன் வேட்டையாட ஒண்டவா என்னும் காட்டிற் போய் அங்கே ஒரு கரடியைப்பார்த்துத்துரத்தி ஓடினான். அந்தக் கரடி ஒரு சோளக்காட்டில் வந்து புகுந்தது. புகுந்த உடனே அந்தக்கரடியை அங்கிருந்து துரத்திவிட ஆள் இல்லாமல் சுற்றிப்பார்க்கையில், அந்தச் சோளக்காட்டில் சோளக்கதிரின் பேரில் காக்கை குருவி முதலான பக்ஷிகள் வாராமல் ஒரு பரண் (மேடை)போட்டுக்கையிற் கவண்கல்லை வைத்துக்காத்துக்கொண்டும் இடையில் கந்தையைக்கட்டிக்கொண்டுமிருந்த ஒரு பெண்ணைக் கண்டான். இவள் உயரமாயும் பருமனாயும் இருப்பதுடன் நல்ல லட்சணங்களோடுங் கூடினவளாயிருந்தாள்.

அவள் இராஜகுமாரன் வந்ததைப்பார்த்து
டிறங்கிவந்து "தங்களுக்கு ஏதாவது ஒத்தாசை (?) மேடையை விட்
என்று கேட்க, உர்வஸி அந்தக்கரடியை ஓட்டவேண் செய்யவேண்டுமா"
ன்ஞன். உடனே அந்தப்பெண் சிலசோளத்தட் டும் என்று சொ
அவைகளைக் கூராய்ச்சீவிக்கொண்டுபோனுள். போய்க் டகளை வெட்டி
துக்கெல்லாம் கரடியைத்துரத்திவிடுவதற்குப்பதிலாக அ கொஞ்ச நேரத்
று இழுத்துக்கொண்டு வந்தாள். தைக்கொன்

உர்வஸிக்குத் தான் கரடியைக் கொல்லவில்லையே என்னுட
பிருந்தாலும், இந்தப்பெண் சோளத்தட்டையினுல் அதைக்கொ் துக்க
விட்டு நிர்ப்பயமாக இழுத்துக்கொண்டு வருவதைக்கண்டு அதிசன்று
தான். ஒருவருக்கொருவர் உபசார வார்த்தை சொன்ன பிற்பாடி
சந்தனுவதி என்கிற அந்தப்பெண் தன்னுடையகுருவியோட்டும்தொ டு,
லுக்குப்போய்விட்டாள். உர்வஸியும் தன்னுடையபரிவாரத்தோடுபக்
கத்திலிருந்த ஆற்றங்கரை சென்று குதிரை முதலியன இளைட்
பாறிப் போகலா மென்று எண்ணி அவ்விடம் தங்கினுன்.

தான் மரத்து நிழலில் தன் சிநேகிதரோடு வேடிக்கையாய்ப்
பேசிக்கொண்டிருக்கையில், ஒரு கல் வேகமாய் வந்து ஒரு குதிரை
யின் காலில் பட்டுக் கால் ஒடிந்து போய்விட்டது. என்னவென்று
ஓடிப்போய்ப் பார்க்கையில் ஒரு களிமண் கட்டி யென்று கண்டார்
கள். அஃது எங்கிருந்து வந்தது என்று பார்க்கையில் பக்கத்தில்
சோளக்காட்டில் சந்தனுவதி குருவியோட்டஎறிந்த கல்லென்று கண்
டார்கள். சந்தனுவதியும் தான் செய்த தப்பிதத்தைக்கண்டு கீழே
இறங்கிவந்து தான் செய்த தப்பிதத்தை மன்னிக்க வேண்டுமென்று
அரசகுமாரனைக் கேட்டுக் கொண்டாள். அரசகுமாரன் கோபமில்
லாமல் புன்சிரிப்போடு அவளை அனுப்பிவிட்டான்.

பிறகு எல்லாரும் புறப்பட்டுச்சாயங்காலம் அரண்மனைக்குத்
திரும்புகையில், சந்தனுவதி தலையில் பால்குடமும் ஒவ்வொரு கை
யில் ஓர் ஆட்டுக்குட்டியும் பிடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி
வருவதைக் கண்டார்கள். இவள் பாற்குடத்தை எப்படியாவது
கீழே போடச் செய்யவேண்டுமென்று குதிரையின் மேலேறிய சில
சிறுவர்கள் குதிரையை இவள் பக்கத்தில் விட்டு மிரளும்படி செய்



தார்கள். உடனே சந்தனுவதி தன் கையில் பிடித்திருந்த ஆட்டுக்
குட்டியைக் குதிரையின் கால் மத்தியில் போக விடக்குதிரையும்
பையனும்கீழே விழுந்தார்கள். இவள் பாற் குடம் கொஞ்சமும்
அசையவேயில்லை. என்ன ஆச்சரியம்! காலையில் கொஞ்சம் கூடப்
பயமில்லாமலும் வேறொருவர் சகாயமில்லாமலும் சோளத்தட்டையி
னுல்கரடியைக்கொன்றுள். களிமண்உருண்டையால் குதிரையின்காலை
ஒடித்தாள். பிறகு கொஞ்சம் கூட மனோதைரியம் விடாமல் குதி
ரையையும் கீழேதள்ளினுள். என்னமனோதைரியம்! என்று அரசகுமா
ரன்மகிழ்ந்து அவளண்டைபோய் "அம்மா நீ எங்கே யிருப்பவள்"
என்று கேட்க, அவள் "அதோ தெரிகிற குடிசையில் என் தகப்பனு
ரோடு வசிக்கிறேன்" என்று மரியாதையாய்ப் பதிற் சொன்னுள்.
"உன் தகப்பனுரை நாளைக்காலையில் என்னிடத்தில் வரச்சொல்".
என்று சொல்லிவிட்டு அரசகுமாரன் அரண்மனைக்கு வந்து அந்தப்
பெண்ணின் குணுதிசயங்களைப் பற்றி அடிக்கடி சிந்தித்து
மகிழ்ந்தார். மறுநாட் காலையில் சந்தனுவதியின் தகப்பன் அரண்
மனைக்குள் வந்து அரசனுக்குச் சமானமான ஓர் ஆஸனத்தில் உட்
கார்ந்து "என்னை வரவழைத்த காரணம் என்ன" என்று தனக்குச்
சமமானவர்களோடு பேசும்மாதிரி கேட்டான்.

அதற்கு அரசன் உன் பெண்ணை என் பிள்ளைக்கு விவாகம்
செய்ய வேண்டுமென்ற கருத்திருக்கிறது என்று சொல்ல, இந்தக்
கிழவன் "முடியாது; ஏழையாகிய நான் அரசனுக்குப் பெண்கொ
டேன்" என்று திரும்பிவிட்டான்.

அரசனுக்கு அந்தப் பெண்ணைப் பலாத்காரமாய்க் கலியாணம்
செய்துகொள்ளச் சக்தியிருந்தாலும், தான் அதிக நல்ல குணமுடை
யவன் ஆனதினுல் அப்படிச் செய்யவில்லை.

கிழவன் வீட்டுக்கு வந்து மனைவியிடம் நடந்ததைச் சொல்ல
அவள் கோபித்து "உடனே போய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு
பெண்ணைக் கலியாணம் செய்து கொடுக்கிறேன்." என்று சொல்லி
வாரும் என்று சொல்ல, கிழவனும் அப்படியே வந்து சொன்னுன்
அப்படியே உர்வஸிக்கும் சந்தனுவதிக்கும்விவாகம் நடந்தது. இவ்விரு
வர்க்கும் ஓர் ஆண்குழந்தைபிறந்தது. இவனுக்கு ஹமீர் ராணு (Ranu
Hamir) என்று பெயரிட்டார்கள்.

சுதேசமித்திரன்.

# நிலக்கடலை.

நிலக்கடலை என்பது பூமியின் அடியில் உண்டாக்கப்படும் ஒருவிதப் பருப்புத் தரும் செடி. இது முதல்முதல் தென் அமெரிக்காவினின்றும் கொணரப்பட்டதெனக் கூறுவார்கள். சிலர் இஃது ஆப்பிரிக்காவினின்று கொணரப்பட்டதாகக் கூறுவார்கள். நம் பரதக்கண்டத்துக்கு சீன தேசத்திலிருந்து 60 அல்லது 70 வருஷங்களுக்கு முன் கொணரப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

**சாகுபடியாகுமிடம்:**—அநேகமாய்ச்சாகுபடியில்லாமல் தரிசாகக் கிடக்கும் நிலங்களில் இதனைச் சாகுபடி செய்யலாம். இதற்கு அதிக கவலையும் தேவையில்லை. மிக்க கொழுமை யில்லாமலும் மணற்பாங்காகவுமிருக்கப்பட்ட தரை இதன் சாகுபடிக்கு ஏற்றதாகும். வேறொன்றும் சாகுபடிசெய்யத் தகுதியில்லாத மணற்பாங்கான பூமியில் இதைச் சாகுபடி செய்து தகுந்த பலனை அடைந்திருக்கிறதற்கு அநேக திருஷ்டாந்தங்களுண்டு. இம்மாதிரியான பூமி மதுரை ஜில்லாவில் திண்டிக்கல், பழநி, மேலூர் முதலிய அயன் தாலூக்காக்களிலும் சிவகங்கை, இராமநாதபுரம் முதலிய ஜமீன் நிலங்களிலுமுண்டு. திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை முதலிய இடங்களிலும் ஏராளமான பூமிகள் இச்சாகுபடிக்குத்தகுதியுள்ளனவா யிருக்கின்றன. பாலூர் என்னுமிடத்திலுள்ள மாதிரிக் கிருஷித் தோட்டத்தில் இக்கடலை சாகுபடி நேர்த்தியாகச் செய்யப்பட்டு வருவதால் அதன் விஷயங்களை யறிய விரும்புகிறவர்கள் அவ்விடம் போய்த் தெரிந்துகொள்ளுதல் நலம்.

**இதனுடன் சாகுபடி செய்யக்கூடிய பயிர்:**—இந்தச் சாகுபடியை மட்டும வருஷாவருஷம் பண்ணிக்கொண்டு வரும் பக்ஷத்தில் நிலம் கொழுமையிற் குன்றிச் சிலவருஷங்களுக் கெல்லாம் பிரயோஜனமற்றதாகிவிடுகிறதாகத் தெரியவருகிறது. ஆகையால் இக்கேட்டை நீக்கும் பொருட்டு இதனுடன் ஜுவார் என்பதைப் பயிரிடுதல் நலமெனக் கிருஷி சாஸ்திர நிபுணர்கள் கூறுகின்றனர். இவ்வாறு செய்யாவிடின் கடலைக்கு நோவு உண்டாகிப் பல தீங்குகளிழைக்கும்.



**பண்படுத்தல்:**—நிலத்தைக்குறுக்கிலும் நீட்டத்திலும் 5 அங்குல ஆழத்துக்குஉழுதுபுழுதி யுண்டாகும்படி செய்யவேண்டும். சிற்சிலசமயங்களில் நான்கு உழவுக்கு மேற்பட்டு உழவேண்டி வரும். உழுதபிற்பாடு நாம் உபயோகிக்கும் ஏணியைக் கொண்டு நன்கு பரவச் செய்யவேண்டும்.

**விதைத்தல்:**—நாட்டுக் கலப்பையைக் கொண்டு 18 அங்குலம் இடைவிட்டு நிலம் சால் சால் ஆக உழப்படவேண்டும். நல்ல கொழுமையுள்ளதும் ஒரே பருமனுமுள்ளதுமான விதைகளைப்பொறுக்கியெடுத்துஒவ்வொருசாலிலும் 18அங்குலதூரத்துக் கொருமுறை இவ்விரண்டு விதைகளாக இடவேண்டும். இட்டபின் சொற்பம் மண்ணிட்டுக் காலால் மெதுவாக மிதிக்க வேண்டும். ஒரு ஏகராவுக்கு 20 சேர் விதைபோதுமானது. விதைத்தபின் ஏணியைக் கொண்டுஒருமுறை நிலம்முழுமையும் சமப்படுத்தபடவேண்டும். பருவக்காலக் காற்று அடிக்கப் புறப்பட்டவுடன், அஃதாவது ஜூன் மாசத்தில், விதை விதைக்க வேண்டும். அமெரிக்கர் செய்யும் விதம் விதைத்தால் பல தொந்திரவுகளுக்கு இடமில்லாமற் போய்விடும் என்று கிருஷி சாஸ்திர நிபுணர்கள் கூறுவார்கள்.

**எருவிடுதல்:**—இப்பயிருக்கு அதிக எரு தேவையில்லையாயினும் எருவை முற்றிலும் ஒழித்து விடுதல் முடியாது. இதற்கு முதலில் லைம், பாஸ் பொரிக் ஆஸிட், பொடாஷ் இவை இன்றியமையாதன. பின் நைட்ரோஜின் வேண்டும். மிஸ்டர் பார்பெர் என்ற நிபுணரும் இதே அபிப்பிராயங் கொண்டவர். உழவுக்குமுன் நிலத்திற் பரப்ப வேண்டும்.—

| | |
|---|---|
| நன்றாய்ப் பொடியாக்கப்பட்ட லைம் | 20 மணங்கு |
| ஸூபர் பாஸ்பேட் ... ... | 2 மணங்கு |
| சாம்பல்... ... ... ... | 10 மணங்கு. |

இதன் பின்னர் நைட்ரோஜென் போடவேண்டும். ஜுவார் பயிருக்கு100 மணங்கு பசுவின்சாணமிடவேண்டும்.

**பின் செய்யவேண்டியவை:**—பின்னால் இதற்கு அதிக கவலை எடுத்துக்கொள்ள வேண்டியது அநாவசியமானாலும் களை பிடுங்கல்

அவசியம். மேலும் நிலம் பாறைபாறையாக வெடித்துப் போகாமலிருக்கும்படியும் செய்தல் வேண்டும். விதைத்த 30, 45, 60-ம் நாட்களில் களைகட்டல் நலம். சாதாரண களைக்கோட்டையே உபயோகித்தல் போதுமானது.

**மாசூல்சேர்த்தல்:**—இப்பயிர் பனி பொறுக்கமாட்டாது. ஆகையால் பக்குவமறிந்து செடிபிடுங்கவேண்டும். பக்குவகாலத்திற்பிடுங்கினால் செடி மாடுகளுக்கு நல்ல தீவனமாகும். அதிகக் கடலைக்கு ஆசைப்பட்டு இதை நன்றாய் முற்றவிட்டால் தீவனம் இழக்கநேரிடும். அதிகக் கடலையைக்காட்டிலும் இத்தீவனம் மிகவும் சிறந்தது. ஜூன்மாதம் விதைத்தால் டிசம்பர் மாதம் செடிபிடுங்கலாம். களைக்கோட்டினால் செடியின் பக்கங்களிற் கொத்திச் செடியைப் பிடுங்கினால் அதுசுலபமாய்வந்துவிடும். பின்னர் செடியைச் சொற்பம் வதங்கும்படி விடவேண்டும். பின் ஸ்திரீகளும் சிறுவர்களும் சிறுமிகளும் கடலையெடுக்க ஆரம்பிப்பார்கள். பின்னர் அக்கடலையைப்பாய்களிற் பரப்பி நாலைந்துநாள் காயவைப்பார்கள். பாயில்லாமல் நன்றாய்ச் சுத்தம்பண்ணப்பட்ட தரையிலும் உலர்த்துவதுண்டு. பின்னர் அதனை யெடுத்துச் சாக்குக்களிற் கட்டி வியாபாரத்துக்கு அனுப்பிவிடலாம்.

**கண்டுமுதல்:**—ஓர் ஏகராவிற்குச் சராசரி 20 மணங்கு கிடைக்கும். சிற்சில சமயங்களில் 40 மணங்கும் கிடைக்கும். பம்பாயில், ஏகருக்கு 3000 பவுன் கடலை எடுப்பார்கள். சாகுபடிச்செலவு ஓர் ஏகருக்கு ரூ 29 என்று கணக்கிட்டிருக்கிறார்கள். மாசூல் 100 ரூ கிடைக்கும். ஆகையால் செலவுபோக ரூ 71 குடியானவனுக்குமீதமாகும்.

**நிலக்கடலையின்உபயோகம்:**—இது பலவிதங்களில் உபயோகப்படுகின்றது:—

(1) வறுத்த கடலையைத் தெருத்தெருவாய் விற்கிறார்கள். அதனை சிறுவர்முதல் பெரியோரீறாக வாங்கித் தின்பார்கள்.

(2) பக்ஷணக்கடைக்காரன் இதனை வாதாங்கொட்டையைப்போல் பக்குவமாய் வறுத்து விற்கிறான்.



(3) இதிலிருந்து தெளிவான எண்ணெய் எடுக்கப்படுகிறது. சிலவருஷங்களுக்கு முன் இதனை அந்நிய தேசங்களுக்குக் கொட்டைகளாகவே அனுப்பிவந்தார்கள். இப்பொழுதோ சீமையந்திரங்களிலிட்டு ஆட்டி நல்ல தெளிவான எண்ணெய் எடுத்து அனுப்புகிறார்கள். இது பார்வைக்கு ஒலிவை எண்ணெய்போலிருக்கும். அதன் ருசியும் இதற்கு உண்டு. இதனைச் சமையலுக்கு உபயோகிக்கின்றனர். பணியாரம் செய்பவர்கள் இதனை யதிகமாய் உபயோகிக்கின்றனர். இது தேகத்துக்கு அவ்வளவு சௌக்கியமானதன்று. இதிற் பக்குவம்பண்ணின பண்டங்களைச் சாப்பிடின் பித்தம் அதிகரித்து வாந்தியெடுக்க நேரிடும். ஆகையால் நம் நாட்டார் இதனை அதிகமாக உட்கொள்ளல் கூடாது. சுகத்துக்குக் கேடாகும்.

(4) விளக் கெரிப்பதற்கும் மருந்து விஷயத்துக்கும் ஐரோப்பியர் உபயோகிக்கின்றனர். பருப்பாக நாம் இதனைத் தின்னுங்காலத்திலும் அதிகமாய்த் தின்றால் பித்தமுண்டாகும். ஆகையால் நாம் இதனை வெல்லம், சர்க்கரையோடு சாப்பிடுவது வழக்கம்.

(5) பாகுகாய்ச்சி அதிலிட்டு உருண்டையாகச்செய்தும் சாப்பிடுகிறோம். இது மிகவும் ருசியாயிருக்கும். தேகத்துக்குஅதிக கெடுதலைச் செய்யாது.

(6) கல்யாண காலங்களில் கடலைக்காயென்று இதைப்பாகிலிட்டுப் பிடித்துச் சீர்வரிசையில் வைப்பதுண்டு. கடைகளிலும் பாகுஉருண்டைகள் சிறியவையாக விற்கப்படும்.

(7) சோப்பு செய்வதில் ஐரோப்பியர் இதனை உபயோகிக்கின்றனர். $1\frac{1}{2}$ லக்ஷம் டன் எண்ணெய் நம் நாட்டிலிருந்து இதற்காக ஏற்றுமதியாகின்றது.

நாமே இதனைச் சோப் செய்வதில் உபயோகித்துச் சோப்பாக இதரதேசங்களுக்கு அனுப்பினால் அதிகலாபம் அடையலாம்.

நல்ல விதை தென்ஆற்காட்டு ஜில்லாவிற் கிடைக்கும். பார்பாடோஸ், மோர்சு, பிரேஸில் முதலிய இடங்களிலும் இதுபயிராகின்றது. அவ்விடத்திலுள்ள விதைகள் சிறந்தன என்றும் அவற்றை நாம் நம் நாட்டில் உபயோகித்துப் பரீக்ஷை பார்க்கவேண்டுமென்றும் கிருஷி நிபுணர்கள் கூறுகிறார்கள். மோர்சுவிதைதான் அதிகமாய்ப் புதுச்சேரிப் பிரதேசங்களில் சாகுபடியாகிவருகின்றது. கறையானாலும் மற்றும்சிறுபூச்சிகளாலும் இதற்குக்கேடு நேரிடுவதுண்டு. அவை வராமற் காக்கவேண்டும். இல்லாவிடின்மிகவும் சேதத்தை உண்டாக்கும். அதிக வளமையில்லாத மணற்பாங்கான புன்செய் நிலத்தில் அதிகச்செலவும் கஷ்டமுமின்றிச் சாகுபடிசெய்து பெருத்த இலாபம் அடையக்கூடிய இப்பயிரைப்பற்றி நாம் அதிக கருத்து எடுத்துக்கொள்ளவேண்டியது இன்றியமையாதது. "ஒன்றிரண்டாம் வாணிகமில்" என்று சாதாரணமாகக்கூறுவதுண்டு. இஃது ஒன்று மூன்றாகும்படியாயிருப்பதால் இவ் லாபகரமான விஷயத்தில் நாம் கண்ணுங்கருத்துமாயிருந்து விருத்திபண்ணவேண்டியது நம் கடமை.

எஸ். சாமிநாதையர்.

13 MAY 1908 MADRAS

உ
குமரன் துணை.

# விவேகபாநு.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 7 } 1908௵ பிப்பிரவரி௴ { பகுதி 2

## விவசாயச்சங்கங்கள் II.

சென்னை ராஜதானிக்காகச் சென்னையில் ஒரு தலைச்சங்கமும் பல ஜில்லாக்களில் கிளைச்சங்கங்களும் ஏற்பட்டு வேலைசெய்துவருவதாகக்கூறினோம். ஒவ்வொரு ஜில்லாசங்கத்துக்கும் சிலகிளைச்சங்கங்களிருக்கின்றன. இவையெல்லாம் சர்க்கார் உத்தியோகஸ்தர் ஆதரவிலிருந்துவருகிறதும் சந்தோஷிக்கத்தக்கதே. கிருஷித் தொழில் நன்றாய் விருத்தியாகவேண்டுமென்பது சர்வஜன சம்மதமான விஷயம். இதுவிஷயத்தில் ராஜாங்கத்தாரும் குடிகளும் மனமொத்து இருக்கிறார்கள். அபிப்பிராயபேதமுங்கிடையாது. ஆனால் இதுவிஷயத்தில் குடிகள் தங்களுக்குத்தெரிந்தமட்டில் பற்பல சீர்திருத்தங்களைச் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர் இருந்தாலும் அவர்கள்செய்யவேண்டியகடமைகள் ஏராளமாயிருக்கின்றன. ராஜாங்கத்தாருக்கும் இதுவிஷயத்தில் செய்யவேண்டிய கடமைகள் பலவுள. ஆகையால் இருவரும் ஒத்துழைத்துத் தேசம் முன்னுக்குவரவேண்டியது அவசியம். பணச்செலவை ராஜாங்கத்தாரே ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏனெனில் 100-க்கு 70 பேர்வரை நம்நாட்டில் குடித்தனம் செய்யப்பட்டவர்களே. ராஜாங்கத்தாருக்கு வருகிற வரும்படியும் முக்கியமாய் நிலத்தினின்றே கிடைக்கிறது. ஆகையால் குடிகளின் பணத்தைக் குடிகளுக்கே செலவிடவேண்டியதுமன்றி விவசாயத்துக்கும் முக்கியமாய்ச் செலவுசெய்யவேண்டும். குடிகளுக்கும்முக்கிய

மாய் வேண்டுவன கிருஷித்தொழில், கல்வி, சுகாதாரங்கள் ஆகையால் இராஜாங்கத்தார் எல்லாவற்றினும் இவைகளையே முதன்மையாகக் கவனித்தல் தகுதி. கிருஷி சங்கத்தார்கள் செய்யவேண்டிய கடமைகளாவன:—

(1) ஒவ்வொரு ஜில்லாவுக்கும் விவசாயம் தெரிந்தஒருவரைத் தக்கசம்பளத்தில் ஏற்படுத்தி அவரைக்கொண்டு கிருஷிசம்பந்தமான விஷயங்களில் குடிகளுக்கு அறிவைப் புகட்டச்செய்யவேண்டும்.

(2) முக்கிய கிராமங்களில் விவசாயக் கல்வி புகட்டிவர ஏற்பாடுசெய்தல்வேண்டும்.

(3) சர்க்கார்செலவில் முக்கிய விவசாயக்கருவிகள் வாங்கப்பட்டு ஊரூராய் அவைகளை உபயோகப்படுத்தி அவைகளின் பயன்களைஜனங்களுக்குத் தகுந்தபடி தெரிவிக்கவேண்டும்.

(4) ஒவ்வொரு தாலூகாவின் முக்கியமான பாகங்களில் சங்கத்தாரே தழை குழைகள் முதலிய எருச்சாமான்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு சுலபமான விலைக்குக் குடிகளுக்குக் கொடுக்கவேண்டும்.

(5) மேற்கூறிய இடங்களில் குடிகளுக்கு உபயோகமான முக்கிய விவசாயக் கருவிகளை போதுமானமட்டும் செய்துவைத்துக்கொண்டு சுலபமான விலைக்கு விற்க ஏற்பாடு செய்யவேண்டும். விவசாயசங்கத்தாருக்கு இதனால் நஷ்டமாகாது. குடிகளுக்கும் சௌகரியமுண்டு. தற்காலம் குடியானவர்கள் இது விஷயமாய்ப்படும் அவஸ்தை மிகப்பெரிது. கிராமக் கொல்லர்களிடமும் தச்சர்களிடமும் கொழு அரிவாள் மண்வெட்டி முதலிய சாதாரண கருவிகள் செய்வதற்கும் கலப்பை முதலியன செய்வதற்கும் குடியானவர்கள் வெகுபாடு படுகிறார்கள். சமயங்களில் இக்கருவிகளில்லாத குறைவால் விவசாயம் தடைப்படுகின்றது.

(6) விவசாய சம்பந்தமான விஷயங்களைப்பற்றித் துண்டுப்பத்திரிகைகள் எழுதி அச்சிட்டுப் பரவச்செய்யவேண்டும்.



(7) கிராம பஞ்சாயத்து ஏற்படுத்திக் குடிகள் பாசனவிஷயமாகவும் கிராம வழக்குக்கள் விஷயமாகவும் தங்களுக்குத் தாங்களே பேசி முடிவுசெய்யவேண்டும். குடித்தனக்காரர்கள் இவ்வாறுசெய்யாமல் கோர்டுக்குச்சென்று மிகவும் நஷ்டமடைகிறார்கள். என்றைக்குக் குடித்தனக்காரர்கள் கோர்டுக்குப்போகிறதை விடுகிறார்களோ அன்றைக்குத்தான் க்ஷேமமடைவார்கள் என்பது திண்ணம். இது விஷயத்தை விவசாய சங்கத்தார்கள் நன்கு கவனிக்கவேண்டும்.

(8) கிராமங்கள்தோறும் விவசாய பாங்கிகள் ஏற்படுத்திக் குடித்தனக்காரர்களுக்குச் சௌகரியம் செய்யவேண்டும். கொடுக்கல்வாங்கல் செய்துவருகிற நாட்டுக்கோட்டையாரிடஞ் சென்றே பல குடித்தனக்காரர்கள் கெடுகிறார்கள். அவர்கள் வலையிற் சிக்காதபடி குடித்தனக்காரர்களைக் காப்பாற்ற வழிதேடவேண்டும். கோஆபரேடிவ் சங்கத்தாருக்குக் கவர்ன்மெண்டார் பணங்கொடுத்தும் உதவி செய்கிறார்கள். அந்த உதவியைத்தேடிக் குடிகளுக்குச் சௌகரியத்தை யுண்டுபண்ணவேண்டும்.

(9) விவசாய சங்கத்தார் தக்க வித்துக்களைத் தேடி வைத்துக்கொண்டு குடித்தனக்காரர்களுக்கு உதவவேண்டும். சிற்சில சமயங்களில் நாற்று முதலியவைகளைக் கூடச் சேகரித்துக் கொடுத்தல் நலம்.

(10) ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள சமுதாய நிலங்களைக் குத்தகைக்கு வாங்கி அவைகளில் மாதிரி சாகுபடி செய்து அதன் நன்மையைக் குடிகளுக்குப் பிரத்தியக்ஷப் பிரமாண மாகக்காட்டவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு விசேஷ சாகுபடி செய்தால் போதுமானது. தாலூகா ஜனங்கள் முழுவதும் அவ்விசேஷ சாகுபடிகளைக் கண்டு விவேகம் பெறுவார்கள்.

(11) விவசாயத்துக்கு இன்றியமையாத ஆடு மாடுகளை அபிவிருத்தி பண்ணுவதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுவதும் இச்சங்கத்தாரின் கடமையாம். மாட்டுக்காட்சி வைத்துப் பரிசளித்தல் மட்டும் போதாது. அவைகள் அபிவிருத்தியடைய வேண்டிய விஷயங்களுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

(12) ஆடு மாடுகளுக்கு நேரிடும் நோவுகளைத் தீர்க்க மருந்துகளும் வைத்தியர்களும் ஏற்பாடு செய்யவேண்டும். இரண்டு மூன்று மைல்களுக்குட்பட்ட கிராமங்கள் அனைவற்றுக்கும் ஒரு வைத்தியர் இருந்தால் போதும். கோமாரி, காணை முதலிய வியாதிகள் நேர்ந்து சிலசமயங்களில் ஆடு மாடுகள் பட்டிபட்டியாய்ச் சாய்த்து விடுகின்றன. மனிதர்களுக்குப் பெருவாரி நோய் வரும்பட்சத்தில் எத்துணையோ கண்ணுங் கருத்துமாய் இருந்து தடுக்க வகை தேடவில்லையா? குதிரைக்கென்று உயர்ந்த சம்பளத்தில் ஜில்லா ஜில்லாவாய் வைத்தியர்களை நியமனம் செய்யவில்லையா? அம்மாதிரி மாடுகளுக்கும் வைத்தியர்களை நியமிக்கும்படிக்கும், அப்படிப்பட்டவர்கள் வியவசாய சங்கத்தார்களுக்குத் தக்க உதவிபுரியும் படிக்கும் கவரன்மெண்டாரிடம் மனுப்பண்ணி அவர்கள் உதவியைப் பெறல் வேண்டும்.

(13) வியவசாய சங்கத்தார் கூடியமட்டும் முயற்சி செய்து கிராமக் கூலிவேலைக்காரர்கள் அயல்நாடு சென்று படும் அவஸ்தைகளை அக்கூலிக்காரர்களுக்கு எடுத்துச் சொல்லி அது விஷயமான அறிவைப்புகட்டச்செய்ய வேண்டும். துறைமுகங்களிலும் பெரிய பெரிய ரயில்வே ஸ்டேஷன்களிலும் தகுந்த மனுஷர்களை வைத்து அக்கூலிக்காரர்களுக்குத் தகுந்த புத்தியைப் புகட்டும்படி ஏற்பாடு செய்ய வேண்டியது.

(14) குடியானவர்களுடையமாசூல்களை அயலூர்வியாபாரிகள் வந்து சூறையிட்டுக்கொண்டு போகாதபடி பாதுகாத்து விற்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் அதிக நஷ்டம் வராதபடி தகுந்த விலை ஏற்படுத்தி ஏழைகளுக்கு அநுகூலம் செய்ய வேண்டும்.

(15) ஏரி குளம் மராமத்து, கிணறுவெட்டுதல் முதலியவைகளுக்குத் தகுந்த சாதனங்கள் தேடிக்கொடுக்கவேண்டும்.

(16) சர்க்காரில் குடிகள் வியவசாய விஷயமாய் வாங்கும் கடன்கள் தொந்திரவின்றியும் காலதாமதமன்றியும், அவர்களுக்குக்கிடைக்கும்படி ஏற்பாடுசெய்யவேண்டும். இவைநிற்க. வியவசாய சங்கத்தார் தாங்களே கண்ணுங் கருத்துமாயிருந்து கணக்கன் புரட்டுப்பண்ணித்தெண்டந்தீர்வை வாங்காதபடி தடுக்கவேண்டும். மழைக்



கணக்கு எடுக்கும்படி முக்கியமான இடங்களில் ஏற்பாடு செய்து கலெக்டர்களுக்கும் போர்டாருக்கும் அனுப்பவேண்டும். சாவி முதலியன நேரிடுங் காலத்தில் ரிவினியூ அதிகாரிகளை நேரில் பார்த்துப் பேசி அவர்கள் சாவி பரிசோதனைக்கு வருங்காலத்தில் தங்களிற் சிலர் கூடவே இருந்து வரி வஜா செய்யவேண்டிய விஷயங்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுவதும் ஷை சங்கத்தாரின் கடமையே.

ஆகையால் இத்துணை விஷயங்களையும் கவனிக்கத் தகுந்த சம்பளக்காரர் ஒருவரை ஏற்படுத்திக் கிளைச்சங்கங்களை அபிவிருத்தி செய்து ஊக்கத்துடன் உழைத்துவந்தாலொழிய வியவசாயச் சங்கங்கள் என்று பேர்வைத்துக்கொண்டு ரிவினியூ இலாகா அதிகாரிகள் மனோரதப்படி மட்டும் நடந்து கொள்வதில் குடிகளுக்கு க்ஷேமம் உண்டாகாது. ரிவினியூ உத்தியோகஸ்தர்களுக்கு நாமே தூண்டுதலாயிருந்து அவர்களும் நமக்கு மனப்பூர்வமாய் உதவிசெய்யும்படியான முயற்சியைத் தேடவேண்டும்.

ஷை சங்க மெம்பர்கள் ஜனசௌகரியத்தையே முக்கியமாய் நாடி ஒத்துழைத்து ஜனங்களுக்கு நன்மை புரிவார்களாக. அப்பொழுது மட்டுமே குடித்தனக்காரர்கள் முன்னுக்கு வருவார்கள். அப்பொழுதே "மேழிச்செல்வங் கோழைபடாம" லிருக்கும்

பத்திராதிபர்.

# காலஞ்சென்ற டாக்டர் ஜி. யூ. போப்.

தென்னிந்தியாவில் இவர் பெயரை அறியாத தமிழர் இரார். ஆகையால் இவரது மரணம் தமிழர்களுக்கு மிக்க விசனத்தை யுண்டுபண்ணக்கூடியதே. தமிழுக்காகத் தம் ஆயுளைச் செலவிட்ட அந்நியர் ஆனபடியால் அவருக்கு நன்றிகூறவேண்டியது நம் தமிழ் நாட்டாரின் கடமை.

இவர் ஜான்போப் என்ற ஒரு வியாபாரியின் புத்திரர். இவரது தந்தைக்கு ப்ளிமௌத் என்னும்துறைமுகத்தில் ஒருசொந்தக்கப்பல் இருந்தது. நம் ஜி. யூ. போப் பிறந்தக்கால் இவரது தந்தை நோவா ஸ்கோஷியாவிலிருந்தனர். 1820௵ ஏப்பிரல்மீ 24௳ இவர்பிறந்த நாள். இவர் கல்வி கற்றது ஹாக்ஸ்டன் கலாசாலை. வெஸ்லியன் பாதிரியாராகும் வண்ணம் கருதப்பட்டுக் கல்விகற்பிக்கப்பட்டபடியால் முதலில் வெஸ்லியன் சங்கத்தில் சொற்பகாலம் வேலைசெய்து வந்தனர். தம் 19-ம் பிராயத்தில் இவர் நம் இந்தியாவுக்கு வந்தனர். திருநெல்வேலி எஸ். பி. ஜி. மிஷனில் ஒரு பாதிரியாக வேலைசெய்ய ஆரம்பித்தனர். அந்த ஜில்லாவில் பத்துவருஷகாலம் உழைத்துவந்னர். அப்பொழுதுதான் அவர் தமிழ்பயின்றது. தற்காலப்பாதிரிகள் போலின்றித் தமிழை அழுத்தந் திருத்தமாகப்படித்தவர். தமிழின் சுவையை நன்கு அறிந்தவராகையால் தாம் சாகும்வரை அப்பயிற்சியை வியந்து விருத்திபண்ணிக்கொண்டேயிருந்தனர். சாகுந்தருணத்திலும் தமிழ்விஷயமாகவே ஒரு அரியவேலை செய்து கொண்டிருந்தனர். ஆங்கிலத்தில் இவர் எழுதும் விஷயங்கள் தெளிவாகவும் அழகாகவும் எவரும் இன்பத்துடன் படிக்கத் தக்கனவாகவுமிருக்கும்.

1849-ம்௵ இவர் தேக சௌக்கியத்தின்பொருட்டு இரண்டு வருஷகாலத்துக்கு இங்கிலாந்து சென்றார். அக்காலத்தை அவர் ஆக்ஸ்போர்டிலேயே செலவிட்டனர். 1851-ம் ஆண்டு அவர் இந்தியாவுக்குத் திரும்பிவந்தபொழுது தஞ்சாவூரில் வேலைசெய்ய ஆரம்பித்தனர் அவ்வூர் ஸெயின்ட் பீடர்ஸ் கலாசாலைஸ்தாபிப்பதற்குஇவர்



மூலபுருஷராயிருந்தனர். சென்ற ஐம்பது வருஷகாலம் இக்கலாசாலைதஞ்சைமாநகரில் நல்ல வேலைசெய்துவந்ததை எவரும் அறிவார்கள். மார்ஷ் பண்டிதரும், பிளேக் (Blake) பண்டிதரும்இதனைப்பின் காலத்தில்விருத்திக்குக்கொண்டுவந்து இதற்குப்பேரும் புகழும் உண்டாக்கினவர்கள்

பின்னர் நம் போப் துரையவர்கள் உதகமண்டலத்தில் பத்து வருஷகாலம் ஓர் ஐரோப்பிய பாடசாலைக்குத் தலைவராயிருந்துவந்தனர். பின்னர் இவர் பங்களூருக்குச் சென்றனர். இவ்விரண்டு இடங்களிலும் இவரிடத்திற் கல்விகற்ற அநேகம் ஆங்கிலோ இந்தியர்கள் நல்ல ஸ்திதிக்கு வந்திருக்கிறார்கள். 1880-ம்௵த்தில் இவர் இங்கிலாந்துக்குத் திரும்பிச்சென்றனர். தென்னிந்தியாவின் கல்வியபிவிருத்தி விஷயத்தில் 41வருஷகாலம் உழைத்த புத்திமான். திருநெல்வேலியிலுள்ள சாயபுரம் என்ற கிறுஸ்துவக்கிராமம் இவராலேயே ஸ்தாபிக்கப்பட்டது. இவர் இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டிலேயே வசித்துவந்தனர். அச்சர்வகலாசாலையார் இவருக்கு எம். ஏ. பட்டம் அளித்து கவுரவப்படுத்தினர். ஆர்ச்பிஷப் ஆப்காண்டர்பரி என்னும்கிறுஸ்துவ குருவானவர் இவரதுமதஞானத்வைவியந்து இவருக்கு டி. டி. பட்டம் அளித்தனர். 20வருஷகாலம் பாலியல்காலேஜ் சாப்ளைநாக இருந்தனர். ஆனால் அக்காலம் முழுவதும் அவர் இந்தியா ஸிவில்ஸெர்விஸ் பரீக்ஷைக்கு வாசிக்கும் மாணாக்கர்களுக்குத் தமிழும் தெலுங்கும் போதிப்பதே இவரது முக்கியதொழிலாகஇருந்தது.

தமிழ்விஷயமாய் இவர் அச்சிட்ட பிரபந்தங்கள் இருசிறுஇலக்கண வினாவிடைகளும் ஒருபெரிய இலக்கணமும் தவிர்த்துத் திருக்குறள், நாலடியார், திருவாசகம் முதலிய அரியஇலக்கியங்களே. இம்மூன்றையும் வெகு நேர்த்தியாய் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கின்றனர். திருவாசகப்பதிப்பில் இவரது தெய்வபக்தி நன்குவிளங்கும். குறள், நாலடியார் பதிப்புக்களில் இவரது அரிய பெரிய ஆராய்ச்சி நுட்பம் நன்கு புலப்படும்.

இவைநிற்க ஆங்கிலத்தில் ஒரு பெரிய இந்துதேச சரித்திரமும் இளம் இராஜகுமாரர்களுக்கென்று ஒரு சிறு இந்துதேசசரித்திரமும்

செய்திருக்கின்றனர். அவைகள் மிகவும் ஆவலோடு படிக்கப்பட்டு வருகின்றன. பெரிய இந்துதேச சரித்திரத்தில் மோகலாயரைப்பற்றி இவர் எழுதியிருப்பது மிகவும் அழகாக இருக்கும். மைசூரைப்பற்றிய விருத்தாந்தமும் அவ்வாறே.

எல்லாவற்றிற்கும் சிறப்பாக நாம் கொண்டாடவேண்டியது இவரது தமிழ் அகராதி உழைப்பே. இத்தமிழ் அகராதிக்கு நம் சென்னை கவர்ன்மெண்டார் பெரும்பொருள் உதவிபுரிவதாக வாக்குத்தத்தம் பண்ணி அதில் ஒரு சிறிதுபாகமும் கொடுத்துதவினர். தமிழ் விஷயத்தில் இவர் செய்துவந்த அரிய முயற்சியை உத்தேசித்து நம் விக்டோரியா ராணியார் ஜூபிலிகாலத்தில் இவருக்குஒரு தங்கப்பதக்கம் அளிக்கப்பட்டது. இதனை நம்நாட்டு மந்திரியாகிய மிஸ்டர் மார்லி இவருக்கு அளிக்குங்கால் இவரைமிகவும் பாராட்டிப் பேசியிருக்கின்றனர்.

இவர் தயார்செய்திருக்கிற தமிழ் அகராதியைச் சென்னை கவரன்மெண்டார் தாமே வாங்கித் தக்கபண்டிதர்களைக்கொண்டு ஆராய்ச்சிசெய்து பிரசுரப்படுத்துவதாக ஒரு வதந்தி யுலாவியது. அவ்வதந்தி சரியானதன்றென்று ரெவரண்ட் கல்லிபோர்டு என்பவர் கூறுகிறார். கிறிஸ்துவ கல்வி சங்கத்தார் அவைகளை வாங்கிக்கொண்டு தாமே பிரசுரம்செய்ய ஏற்பாடுபண்ணியிருப்பதாக ஷை பாதிரியார் எழுதுகிறார். குறள் விஷயமாகவும் ஒருபாகம் அரியவேலை செய்துவைத்திருந்ததாகவும் அதனையும் அச்சங்கத்தாரே பிரசுரஞ்செய்ய ஏற்பாடுசெய்து வருகிறார்களென்றும் அறிய மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

நம் போப் பெரிய குடும்பஸ்தர். இவரது புதல்வர்களில் நால்வர் பெரிய பெரிய உத்தியோகத்தில் அமர்ந்து சுகமாய்க்காலக்ஷேபம் செய்து வருகிறார்கள். ஒருவர் சென்னையில் பெரிய வைத்தியராகவும், ஒருவர் பர்மாவில் வித்தியா இலாகா டைரக்டராகவும், மற்றொருவர் இந்திய இருப்புப்பாதையில் ஒரு பெரிய உத்தியோகஸ்தராகவுமிருந்து புகழ்பெற்றிருக்கின்றனர்.

இம்மாதிரியான பேரும் புகழும் பெற்ற இவ்வரிய லோகோபகாரி நாளிது மாதம் 12உ ஆக்ஸ்போர்டில் பரமண்டலப் பிராப்தமா



ஞர். இத்தமிழ் உபகாரியை நம் தமிழ்நாட்டார் என்றும் மறவார்கள். இவர் பாதிரியாயினும் சிறிதும் மதத்துவேஷம்பாராட்டாமல் அந்நிய மதஸ்தரை அன்புடன் நடத்திவந்தனர். இவரது சரிதத்திலிருந்து தற்கால பாதிரிமார்களும் ஏனையோரும் அறியவேண்டியபல அருமை நீதிகளுண்டு.

(1) சொந்த மதத்தில் எத்தனை அழுத்தமான பக்தியிருப்பினும் பிறமதங்களைத் தூஷியாமலிருப்பதுமன்றி அவைகளின் அருமைகளைப் பாராட்டல்.

(2) செய்தொழில் ஊக்கம்.

(3) எந்த ஜாதியாருக்குள் வேலைசெய்கிறார்களோ அவர்களுடைய பாஷையையும் அவருடைய மதத்தையும் மேலாகமதித்து அன்புடன் கற்று அவற்றை உபயோகித்துக் கொள்வதுமன்றி அவர்களை மனப்பூர்வமாய் நேசித்தல்.

(4) அந்த ஜாதியாருடைய வழக்கப் பழக்கங்களை நன்குஅறிந்[illegible]ளைக் கௌரவப்படுத்தி அவர்களிடம் நன்றிபாராட்டல்.

(5) தமக்காகப் பாடுபடுவதுமன்றி பிறருக்காகவும் பாடுபடுதல் தம்கடமை என்று உணர்தல்.

(6) கல்வியறிவு, பக்தி, அன்பு, செய்தொழில் ஊக்கம் முதலி அருமைக்குணங்கள் ஒருவரை எவ்விதத்திலும் மேம்படுத்துமென்றுஅறிதல் முதலியவைகளே.

"பாஷை யேறினும் ஏடதுகைவிடேல்" என்ற பழமொழியின் உண்மையை நிதர்சனமாய்க் காட்டியவர்களுள் நம் டாக்டர் போப் துரையவர்களும் ஒருவரே.

பத்திராதிபர்.

# துஷ்யந்தன் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

மனநோயாலும், தேகவுபாதியாலும் பீடிக்கப்பட்டமனிதர்கள், தம் மனைவிகளோடு கூடி வஸிக்கின்றவராயின் வேர்க்கின்ற மனிதன் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நாநஞ்செய்வதாலாய சுகத்தை யடைகின்றார்கள். ஆதலினாற்றான் ஒருவன் கோபமாயிருக்கும்போதும் தனது இல்லாளுக்கு வெறுப்பாயுள்ளனவற்றைச் செய்தல் கூடாது. ஒருவன் மகிழ்ச்சியும், சந்தோஷமும், தர்மமும், மற்றெவ்வித நன்மையும்தனது பத்தினியைச் சார்ந்துள்ளவைகளாயிருக்கின்றன. பத்தினியே, புருஷனானவன் தானே ஜனிப்பதற்காயுள்ள ஓர் புனிதபூமியாயிருக்கின்றாள். ஸ்திரீகளன்றி ஜந்துக்களைச் சிருஷ்டிப்பது ரிஷிகளாலும் முடியாது. உடம்பிற் புழுதியைப் பூசிக்கொண்டு முழங்காலைக்கட்ட ஓடிவரும் புத்திரனைப்பார்த்து பிதாவானவன் அனுபவிக்கின்ற சந்தோஷத்திலும் இனியது வேறொன்றுளதோ? இப்படியெல்லாமிருக்க உம் முழங்காலைக்கட்டுவதற்காகத் தன் கடைக்கண்களை உம்பாற் செலுத்துகின்ற உமது புத்திரனிடத்து உபேக்ஷையாயிருக்கக் காரணம் யாதோ? நானறியேன். பிபீலிகாதி ஜந்துக்கள் அனைத்தும் தம் முட்டைகளை நாசமடையாமற் காப்பாற்றுகின்றன. இவ்வாறிருக்கத் தர்மாத்மாவாகிய நீர் உமக்குப் பிறந்த குழந்தையை ஏன் கைவிடுகின்றீர்? சந்தனம், ஸ்திரீகள், குளிர்ந்த ஜலம், இவைகளின் ஸ்பரிசமாத்திரத்தினால் சுகமுண்டாகின்றது. இவ்வாறுண்டாய சுகத்தைக்காட்டிலும் தன்னை மார்புறக் கட்டித்தழுவும் புத்திரனது ஸ்பரிசசுகம் மேலானது. நரர்களுக்கெல்லாம் சிரேஷ்டன் பிராமணன்போலவும், விலங்குகளுக்கெல்லாம் சிரேஷ்டம் பசுப்போலவும், மேலானவர்களுக்கெல்லாம் சிரேஷ்டன் திக்ஷகன்போலவும், ஸ்பரிச சுகத்தையளிக்கின்ற வஸ்துக்களுக்கெல்லாம் சிரேஷ்டம் புத்திரனேயாம். ஆதலின் இவ்வரும் புதல்வனை ஆலிங்கனம் செய்வாயாக! ஓ பூருவம்சோத்பவரே! உமது துக்கங்களை யெல்லாம் போக்கத்தகுந்த இச் செல்வப்புதல்வனை மூன்று வருடம் என் கருவிற் சுமந்து பெற்றேன். நான் இப்புத்திரனை கருவுயிர்க்குங்காலையில் இவனுயிர மச்



சுவமேதங்கள் செய்வானென ஆகாயவாக்கு ஒன்று பிறந்தது. தமதாரைவிட்டுத்தூரந் தொலைச்குச் செல்கின்றவர்கள் மற்றோர் குழந்தைகளைத்.தங்கள்மடியி லெடுத்துவைத்துக்கொண்டு அவற்றினுச்சிமோந்து பேரானந்தமடைகின்றனர். பிராமணோத்தமர் சிசுக்களுக்குசம்புரோக்ஷணை செய்யுங்காலையில் பின்வரும் வேதமந்திரங்களையோதுகின்றனர். 'ஏ' புத்ரா! என் தேகத்தினின்றும நீ ஜனித்துளாய்! நீ என் ஹிருதயத்தினின்றும் ஜனித்தவன். நானே புத்திரரூபமான நீயாகி வந்திருக்கின்றேன். சதவருடம் நீவாழ்வாயாக! என் ஜீவ னுன்னைச் சார்ந்திருக்கின்றது. எனது வம்ச விருத்தியும் உன்னைச் சார்ந்துளது. ஆதலின் புத்ரா! நீ நூறுபிராயம் சுகித்து வாழ்வாயாக! இப்புதல்வன் உனது தேகத்தினின்றும் உற்பவித்தவன். களங்கமற்ற கண்ணாடியிற் பிரகாசிக்கின்ற உன்பிரதி பிம்பத்தைப் பார்த்ததுபோல் புத்திரனிடத்து உன்னை நீ பார்த்துக்கொள்ளலாம். நீ யொருவனே இருவராய்த் தோற்றுகின்றாய்!" மான்வேட்டையாடிவருங்காலையில் எனது பிதாவின்ஆச்சிரமத்திலிருந்த என்னை விவாகம்செய்துகொண்டாய். ஊர்வசி, பூர்வசித்தி, சஹஜன்யா, மேனகை, விஸ்வாசி, கிருடாசி யென்ற சிரேஷ்டரான ஆறு அப்ஸரஸ்திரீகளுக்குள் பிர்மாவிடத்திற் பக்தியான மேனகையே முதன்மையானவள். எனதன்னையாகிய மேனகை பூலோகத்திற்கு வந்து விசுவாமித்திரருடன் கூடி ஹிமவத்கிரியின் பள்ளத்தாக்கில் என்னைப்பெற்று என்பாற் சற்றேனும் பிரியம்வையாமல் யார்குழந்தையோ எனநினைத்து என்னை யெறிந்துவிட்டுச் சுவர்க்கம்போயினள். நான் சிசுவாயிருக்கும்பொழுது எனது பெற்றோர்கள் என்னைக் கைவிட்டுப்போயினதும், தற்காலத்தில் நீர் என்னைக் கைவிடுகிறதும் எனது ஊழ்வினைப்பயனோ? நீர் என்னைக் கைவிடுவீரானால் நான் எனது பிதாவின் ஆச்சிரமத்திற்குத்திரும்பிச்செல்லச் சித்தமாயிருக்கின்றேன். ஆனால் உமக்குப்பிறந்த இப்பாலனைக் கைவிடநினைத்தல் தர்மமன்று" என்றனள். இவையெல்லாங்கேட்ட துஷ்யந்தன் "சகுந்தளா! உன்பால் இப்புதல்வனைப்பெற்றது எனக்கு ஞாபகமில்லை சாதாரணமாய் ஸ்திரீகள் பொய்சொல்லுவார்கள். உன்னுடையவார்த்தைகளையார்தான் நம்புவார்? காமவெறிகொண்ட மேனகையாகிய உனதுதாய் உன்பாற்

சிறிதேனும் அன்புவையாமல் சுவாமிக்கு அர்ச்சித்த நிர்மாலியத்தைத் தூரஎறிவதுபோல் உன்னை இமயமலைமேல் எறிந்துவிட்டுப்போயினள். க்ஷத்திரியவம்சத்திலுதித்த உனது தகப்பனாகிய விசுவாமித்திரன் ஒருதூர்த்தன். பிரமரிஷியாகவேண்டுமென்ற பேரவாக்கொண்ட இவ்விசுவாமித்திரனுக்கும்உன்பாற் பிரியமில்லாமற்போயிற்று. இருந்தாலும் மேனகையை அப்ஸரஸ்திரீகளுள் முதலென்றும் உனதுபிதாவாகிய விசுவாமித்திரனை ரிஷிசிரேஷ்டனென்றும் சொல்லுகின்றபடியே நாம் வைத்துக்கொள்ளலாம். அன்னவர்களின் புத்திரியாகிய நீ காமவெறிகொண்ட சாதாரண ஸ்திரீயைப்போற் பேசுவதென்னை? ஆதலின் உன்வார்த்தையில் எனக்கு நம்பிக்கையில்லை. என் முன்னரே இம்மொழிகளை வசனிப்பதுனக்கு வெட்கமாயிருக்கவில்லையா? ஓ! தவவேடம்பூண்ட துஷ்ட ஸ்திரீயே! என்முன் நில்லாமற்செல். மகரிஷிகளுக்கெல்லாம் முதல்வராகிய உன் பிதா எங்கே போயினரோ?உனதுதாயாகியமேனகைதான்எங்குச்சென்றனளோ. நீ தவவேடம்பூண்டு இங்கு வரக்காரணம் யாது? உனது புதல்வன் வயதில் முதிர்ந்தவனாயிருக்கிறான். நீ அவனைச் சிறுபையனெனச் சொல்லுகின்றாய். அவன் சாலவிருக்ஷம்போல்வளர்ந்து பலமுள்ளவனாகத் தோற்றுகிறான். நீ இழிகுலத்திற் பிறந்தவள். நீ ஒரு விலைமாதைப்போற் பேசுகின்றாய். மேனகையு முன்னைக் காமத்தாற் பெற்றாள். நீ சொல்வதெல்லாம் பொய்யாயிருக்கின்றது. உன்னை யானறிந்திலேன். நீ வேண்டியவிடத்திற்கேகலாம்" என்றுசொல்ல, அதற்குச் சகுந்தலை "ஓ! வேந்தே!பிறர் குற்றங்கள் கடுகுபோற் சிறுத்ததேனும் அவை உமக்கு மலைபோல் துலங்குகின்றன. ஆனால் வில்வப்பழம்போற் பருத்த உமதுகுற்றங்கள் உம்கண்ணுக்குப் புலப்படவில்லை. மேனகை ஒருதேவஸ்திரீ என்ற விஷயம் யாவரும்அறிந்ததே. மேனகையே தேவஸ்திரீகளுள் முதன்மையானவளாதலின் என் குடிப்பிறப்பு உம்முடையதினும் மேலானதேயாகும். நீர் பூதலத்தில்நடக்கின்றீர். யானோ வானில் சஞ்சரிக்கின்றவள். நம்மிருவருக்குமுள்ள தாரதம்மியம் மேருமலைக்குக் கடுகுக்குமுள்ள வித்தியாசமேயாம். மன்னரேகேளீர்! எனது சக்தியை நீர்அறியீரோ!இந்திரன், குபேரன், யமன், வருணன் முதலியவர்களின் லோகங்களிற் சஞ்சரிக்கத்தக்கவள்யான்.முக்கியமான சாஸ்திரவசனமொன்றுளது.



உதாரணநிமித்தமாய் யான் அதையெடுத்துரைக்கின்றேன். ஆதலால் உம்மை இகழ்ந்துபேசுகின்றேனென நினையாதீர். அதனையான் சொல்வதற்காக என்னை மன்னிக்கவேண்டும். குரூபியாகிய வொருவன் தன்னுடைய முகத்தைக் கண்ணாடியிற் காணுமளவும் மற்றையோரிலும் தானே அழகிற்சிறந்தவனென நினைக்கின்றனன். தனது அரூபத்தைக் கண்ணாடியிற் கண்டவளவில் தனக்கும் பிறர்க்குமுள்ள வித்தியாசத்தை அறிகின்றான்."

உண்மையாக அழகுள்ள ஒருவன் பிறரை ஒருகாலும் நிந்தியான். எப்பொழுதும் பிறர் சிறுமைகளாகிய கெடுதலையே பேசுகின்றவன் தூஷணைக்காரனாகின்றான். ஒரு பன்றிக்குட்டி அழகிய உத்தியான வனத்தின் மத்தியிலிருந்தபோதிலும் சேற்றிலும் அழுக்கிலும் கிடக்கப் பிரியப்படுகின்றதைப்போல் துஷ்டர்கள் மற்றவர்களிடத்துள்ள நன்மை தீமை இரண்டனுள் எப்பொழுதும் தீமையையே கிரகிக்கின்றனர். ஆயினும் புத்திமான்களோ நீரொடுகலந்தபாலில் நீரைப்பிரித்துப் பாலைக்கொள்ளும் அன்னப்புள்போன்று மற்றையோர்சொல்லும் நன்மைதீமைகள் கலந்தமொழிகளிலிருக்கின்ற சாரத்தைக்கிரகித்துப் பதரை நீக்குவார்கள். யோக்கியர்கள் பிறர் சிறுமையைப்பற்றிப் பேசுவதில் வருத்தமடைகின்றவாறே துஷ்டர்கள் பிறர் கெடுதலை எடுத்துரைப்பதிலேயே சந்தோஷமடைகின்றனர். நல்லவர்களாயும் யோக்கியர்களாயுமுள்ளவர்கள் வயதில் முதியோரிடத்து எவ்வாறு மரியாதையாயிருக்க நினைக்கின்றார்களோ, அவ்வாறே துஷ்டர்கள் சாதுக்களைத் தூற்றுவதில் சந்தோஷமடைகின்றனர். சாதுக்கள் பிறர்குற்றத்தைக் கவனியாமலிருக்கத் துஷ்டர்கள் அவற்றையே நாடி அதனால் மனக்களிப்படைகின்றனர். துஷ்டர்கள் சாதுக்களைப்பற்றி எப்பொழுதும் கெடுதலாகவே பேசவிரும்புகின்றனர்.ஆனால்நல்லவர்கள் தங்களுக்குத் துஷ்டாகளால் தீங்கு நேரிடினும் அதற்கீடாக அவர்கட்குத் தீங்குசெய்ய நினையார். இவ்வுலகத்தில் துஷ்டர்கள், சாதுக்களைக் கொடியவர்களென்று அவதூறு சொல்வதிலும்இழிவானது ஒன்றுமில்லை. நாஸ்திகர்களும் வாய்மை தர்மம் இவ்விரண்டினையும் விட்டவர்களை நிந்திக்கிறார்கள். எவனொருவன் தனது ஆத்மாவென்று சொல்லும்படியான புத்திரனைப் பெற்றும்

பிறகு அவனை அவமதிக்கின்றானோ அவன் நல்ல லோகங்களையும் நற்கதியையும் ஒருகாலும் அடையமாட்டான். அப்படிப்பட்டவனது அதிர்ஷ்டத்தையும் தனத்தையும் தேவதைகளழித்துவிடுவார்கள். வம்சத்தை உத்தாரணஞ்செய்து நிலைநிறுத்துவது புத்திரர்களாதலின் புத்திரோற்பத்தியே எல்லாத்தர்மங்களிலும் சிறந்ததர்மமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆதலின் தன் புத்திரனை ஒருவரும் கைவிடல் கூடாது. மனு தாமெழுதிய தர்மசாஸ்திரத்தில் ஐந்துவிதமான புத்திரர்கள் இருக்கின்றார்களெனச் சொல்லியிருக்கின்றார். அவர்களாவார் 1. தன்னால் தன்பத்தினிபால் ஜனித்த புத்திரன். 2. ஸ்வீகாரபுத்திரன் 3. விலைகொடுத்து வாங்கிய புத்திரன். 4. அபிமான புத்திரன். 5. தான்மணந்த பத்தினியிடமல்லால் மற்றையஸ்திரீயிடத்துப் பிறந்தபுத்திரன் (தாஸிபுத்திரன்.) புத்திரர்கள் தம் பிதாக்களின் தர்மத்தையும் வீரச்செயல்களையும் அழியாமற்காத்து அவர்கள் சந்தோஷத்தையதிகரித்துப் பிதிருக்களை 'புந்' நாமநரகத்தினின்றும் நீக்குகின்றனர். அத்தகைய புதல்வரை நீ தள்ளுவது சரியன்று. ஆதலின் ஓ புரவலரே, உம் புத்திரனைக்காப்பாற்றி உம்மையும், உமது வாய்மையையும், தர்மத்தையும் பரிபாலிப்பீராக.

அரசரேறே! இந்த மோசமும், பொய்யும் உமது அந்தஸ்துக்குத் தக்கதன்று. நூறு கூபங்கள் வெட்டுவதிலும் ஒருகுளம் வெட்டுவது சிறந்த தர்மம். குளம் வெட்டுவதினும் மிக்கது வேள்விபுரிதல். வேள்வியிலுமிக்கது புத்திரப்பேறு. நூறு புதல்வரை யடைவதினும் சிறந்தது சத்தியம். ஒரு காலத்தில், நூறுஅசுவமேதபலனை யோர்தட்டிலும், சத்தியமென்பதை மற்றோர் தட்டிலும்வைத்து நிறுக்கச், சத்தியமே கனத்ததாயிற்று. வாய்மையே, வேதாத்தியயனம், புண்ணிய தீர்த்தஸ்நாநம் இவ்விரண்டிலுண்டாய பலனுக்குச் சமானமான பலனுடன் கூடியதாகும். எல்லாவற்றிற்கும் பரமதர்மம் சத்தியம். அதற்குச் சமானமான தர்மம் கிடையாது. ஆதலின், வேந்தரே! அசத்தியத்தை அகற்றி நீர்அளித்த வாக்குறுதிப்படி நடப்பீராக. சத்தியமும் நீரும் இணைபிரியாது இருப்பீர்களாக. என் வார்த்தைகளில் உமக்கு நம்பிக்கையில்லாவிடில் யான் இதோ எனது பிதாவினாச்சிரமம் செல்கின்றேன்.



உம்போலியர் கூட்டுறவை யகற்றல் நன்றாகும். வேந்தரே! நீர் காலஞ்சென்ற பின்னர் எனது புதல்வனான இவன், நாற்கடலால் சூழப்பெற்ற இப்பூமண்டல முழுதும் தனது குடைக்கீழ்ப்படுத்தி அரசுபுரிவானென நீர் அறிவீராக" என்று சொல்லிச் சகுந்தலை அரசனது சந்நிதியை விட்டகன்றனள். அவ்வாறு நீங்கவே "தாயின் சரீரம் மாம்சத்தாலாகிய வாளுறைபோன்றதேயாம். புத்திரன் பிதாவின் அம்சத்தினின்று ஜனிக்கின்றானாதலின் புத்திரனே பிதாவன்றி வேறிலன். ஓ துஷ்யந்தா! உனது புத்திரனைக்காப்பாற்றுவாயாக. சகுந்தலையை அவமானப்படுத்தவேண்டாம். ஓ நரசிரேஷ்டா! உன் வித்திலிருந்து உண்டாய இப்புத்திரன் உனது பித்ருக்களை யமலோகஞ் செல்லாமல் காப்பாற்ற வல்லவன். நீதான் இக்குழந்தைக்குழற்பிதா. சகுந்தலை மொழிந்தனவெல்லாம் மெய்யே. பர்த்தாவே தனது தேகத்தை இரண்டாகச்செய்து தனது பத்தினியிடமிருந்து புதல்வனாகத் தோன்றுகின்றான். ஆதலின் சகுந்தலையிடம் உனக்குப்பிறந்த மகாத்மாவாகிய இக்குழந்தையைக் காப்பாற்றுவாயாக. புத்திரனைக் கைவிட்டுப் பிறகுதான் ஜீவிப்பது பெருந்துக்கங்களிலொன்று. நீ வாக்களித்த பிரகாரம் இப்புத்திரனைப் பரிபாலிக்கப் போகின்றாயாதலின் அவனுக்குப் பரதன் (பரிபாலிக்கப்பட்டவன்) என்று பெயர் வழங்கட்டும் என்று ஓர் அசரீர வாக்குப் பிறந்தது. அதைக்கேட்டு துஷ்யந்தன் தன்னைச்சூழ்ந்திருக்கும் பிராமணர், புரோகிதர், ஆசாரியர், மந்திரி முதலியோரை நோக்கிக் "கேட்டீர்களா உத்தமர்களே! ஆகாயவாணி சொல்லியவெல்லாம் நும்செவிப்புகுந்தனவா? சகுந்தலை சொல்வதைமாத்திரங்கேட்டு இவ்வரசிளங்குமரனை எனது புத்திரனாகக் கொள்ளத்துணிவேனாயின் இப்பாலனை எனது பிரஜைகள் சந்தேகத்தால் நல்லகுலத்தில் ஜனித்த சுத்தவானாக நினைக்கமாட்டார்கள். ஆதலான் இவனை எனது அரும்புதல்வனென யான் முன்னமே யறிந்தும் அறியாதவனைப்போல் கபடமாய்ப் பேசினேன்" என்று சொல்லிக்கொண்டு தன் குழந்தையை வாரியெடுத்து மடிமேல் வைத்து ஆலிங்கனஞ்செய்து உச்சிமோந்து ஆனந்த பரவசனாகி அளவிலாச் சந்தோஷத்துடன் குழந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளனைத்தையும் பிராமணோத்தமர்கள் ஆசிவழங்க, கவிவாணர்கள் புகழ்ப்பாக்கள்பாட, கோலாகலமாய்ச் செய்து முடித்தனர். பின்னர்

சகுந்தலையையும் மரியாதையுடன் வரவழைத்து அவளை நோக்கி “ஓ அண்ணங்கே! நீயும், நானும் ரகசியமாய்ப் பாணிக்கிரகணம் செய்துகொண்டோம். ஆதலின் உனது பாதிவிருத்தியத்தை எவ்வாற்றான் பகிரங்கம் செய்வதென ஆலோசித்துக்கொண்டிருந்தேன். எனது பிரஜைகள், நாமிருவரும் காமாதுரர்களாய்க் கூடினோமேயன்றி பர்த்தா, பத்னி யென்ற முறையுடன் சேர்ந்திலேம் என எண்ணி நம் புதல்வனை இப்பரதன் இளவரசுப்பட்டம் சூடுதற்கு அருகனல்லனென நினைக்கலாகும். இதையெல்லாம் வெளியாக்குவதற்குத்தான் யானிவ்வாறு செய்தேன். என் ஆருயிர்க்காதலியே! விசாலாக்ஷி! நீ கோபத்திற்சொல்லிய வார்த்தைகளனைத்தையும் நான் மறந்துவிடுவேன்” என்று சொல்லிச் சுகந்தங்களுடனும், ஆகாரம் பானம், முதலியவைகளுடனும், அவளை வரவேற்று அந்தப்புரத்திலிருக்கச்செய்து தன் குழந்தைக்குப் பரதனென நாமகரணஞ்செய்து அவனுக்கு யுவராஜபட்டாபிஷேகமும் செய்வித்தனன். பிறகு பரதன் தேவர்கள் ரதம்போல் ஜ்வலிக்கின்ற தன் ரதத்திலேறிக்கொண்டு பூமியின் நாற்றிசையுஞ் சென்று அங்குள்ள அரசர்களைக் கீழ்ப்படுத்தி யாவரும் செய்யவொண்ணா வீரச்செயல்களைச் செய்து மகா பிரக்கியாதியுடன் நீதி நூன்முறை வழாமல் அரசுபுரிந்து சக்கிரவர்த்தியென்றும், சார்வபௌமனென்றும், பட்டப்பெயர் பெற்று அநேக அசுவமேதயாகங்களைச்செய்துகொண்டு விளங்கினான். இவன் செய்த யாகங்களுக்குக்கண்வரே நேரில்வந்து நடத்திவைக்கப்பிராமணோத்தமர்கள் யதேஷ்டமான தனத்தைப்பெற்றுக்கொண்டு சென்றனர். கண்வமுனிவர் ஆயிரம் பொன்நாணயங்களை தமக்குச்சம்பாவனையாக அளிக்கப்பெற்றார். இப்பரதன்தான் பரதவம்சஸ்தாபகன். இவ்வம்சத்திலுற்பவித்த அநேகமன்னர்கள் மிக்கவலியும் பராக்கிரமும் வாய்ந்து தேவர்களைப்போலிருந்தனர். அவ்வம்சத்திலுதித்த மன்னர்கள் அளவிறந்தனர் ஆயினும், அவர்களில் முக்கியமான சிலரையெடுத்துரைக்கின்றேனென்று வைசம்பாயன இருஷி ஜனமேஜய மகாராஜனைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

ஸி. நாராயணசாமி ஐயர், பி. ஏ.,

---

# எலிகளின் வழக்கபழக்கங்கள்.

எலிகளை நாம் அடிக்கடி பார்த்திருந்தும் அவைகளின் வழக்கபழக்கங்களைப் பற்றி நன்கறியோம் என்பது உண்மையே. ஆகையால் அவைகளைப்பற்றிச்சிறிது எழுதலானேன். எலிகள் கோடைகாலத்தில் ஆற்றின் கரைகளிலும் குளத்தருகிலுமுள்ள வளைகளிலும் சாக்கடைகளிலும் வாசஞ்செய்கின்றன. மாரிக்காலத்தில், குடிசைகள், தான்யம் சேர்த்துவைத்திருக்கும் களஞ்சியங்கள், பண்டகசாலைகள் முதலிய இடங்களிலிருந்து தாம் தின்னக்கூடிய அளவுக்குமேல்பட்ட சாமான்களை நாசஞ் செய்கின்றன.

எலிகள் பன்றிகளிருக்கும் இடங்களில் கூட்டமாய் சஞ்சாரம் செய்துகொண்டும் அப்பன்றிகள் சிந்தும் தான்யங்களைப் பொறுக்கித் தின்றுகொண்டுமிருக்கும். இவ்விம்சை பொறுக்கமாட்டாமல் இங்கிலாந்தில் துப்பாக்கிகொண்டு எலிகளைச் சுடுவார்களாம். அப்பொழுது குறிதப்பிப் பன்றிமேல் அக்குண்டு பாயினும் பாயலாம்.

ரீஜன்ட்ஸ் பார்க்(Regents Park)என்னும்இடத்திலுள்ள மிருகக்காட்சித்தோட்டத்துட்சென்றுபார்க்கின், காண்டாமிருகம் இருக்கும் கூட்டில் எலிகள் மிகுதியாக அலைந்துதிரிவது தெரியுமென ஒருவர் சொல்லியிருக்கிறார். மேலும் “அக்காண்டாமிருகம் படுத்துக்கொண்டிருக்கும் பொழுது கெட்டியான தோலையுடைய அதின் உடம்பின்மேல் இவ்வெலிகள் குதித்து ஓடிக்கொண்டிருக்கும். அக்காண்டாமிருகம் இதைப்பற்றிச் சிறிதும் கவனிப்பதாகத்தெரியவில்லை. ஏனெனில் இவைகளைத் துரத்த அது ஒருவித முயற்சியும் செய்யக்காணோம். ஆனால் மிருதுவான பாகங்களின்மீது அவ்வெலிகள் ஓடும்பொழுது அக்காண்டாமிருகம் தன் பெரிய காதுகளை ஆட்டும். இம்மிருகம் தின்று மிகுந்து சிதறிக்கிடக்கும் தானியங்களைத்தின்னலாமென்ற எண்ணங்கொண்டே அவ்வெலிகள் அங்கு வருவது வழக்கம்.

அக்காண்டாமிருகம் படுக்கும்பொழுதும் படுத்துப் புறளும் பொழுதும் அநேக எலிகள் அடியில் அகப்பட்டு நசுக்குண்டு இறந்து போவதை மிருககாட்சி சாலையிலிருப்பவர்கள் அறிவார்கள். இம்மாதிரி யானையின் இருப்பிடங்களிலும் நடப்பதுண்டு.

எலிகள் கூரை, ஒடுமுதலிய இடங்களிலும் வாசஞ் செய்கின்றன.

மான்கள் கட்டியிருக்கும் இடங்களில் சிந்திக்கிடக்கும் தானியங்களைத் தின்னவும் எலிகள் வருவதுண்டு.

ஒருகூட்டில் எலியை அதிகநாள் உயிரோடுவைத்திருக்கவேண்டுமானால், ஏராளமான தான்யமும் தண்ணீரும் அவ்வெலிக்குக் கொடுப்பதவசியம். இல்லாவிடின் சீக்கிரம் அவை இறந்துவிடும்.

“நன்றாய் வளர்ந்த எலியொன்று ஒரு கூட்டிலிருந்தது. கிட்டப்போனவுடன் கத்திக்கொண்டு அங்குமிங்குமோடி ஒரு மூலையில் போய்ப்பதுங்கிக்கொண்டது. உடனே நான் ஒருசிறுகரண்டியில் தண்ணீரெடுத்து அக்கரண்டியை அக்கூட்டினுள் விட்டேன். உடனே அந்த எலி முன்னிருந்த மூர்க்கத்தன்மையை நீக்கி மெல்லவந்து அக்கரண்டியை நக்கிப்பார்த்தது. அதன்மேல் அவ்வெலி முன்னினும் அதிக தைரியங்கொண்டு தனது முன்னங்கைகளால் அந்தக்கரண்டியைச் சாயாவண்ணம் பிடித்துக்கொண்டு அதிலிருந்த எல்லாத்தண்ணீரையும் குடித்தது. இன்னம் 2 3 கரண்டிகள் தண்ணீர் கொடுத்தேன். அதன்பின் சிறிது ரொட்டித்துண்டை நனைத்துக்கொடுத்தேன். மறுநாள் நனைத்த ரொட்டித்துண்டு மட்டுங்கொடுத்தேன். ஆனால் தண்ணீர் கொடுக்கவில்லை. மறுநாள் அவ்வெலி மரணாவஸ்தையிலிருக்கக்கண்டு, உடனே அவ்வெலியைக் கூட்டினின்றும் எடுத்து அதின் வாயைத்திறந்து பிராண்டியை விட்டதுமன்றி அதேகாலத்தில் அதின்பின்கால்களை வெந்நீரில் வைத்திருந்தேன். இச்சிகிச்சைகளெல்லாம் பிரயோஜனமில்லாமற் போய்விட்டது. இறந்தகாரணம் எனக்கு நன்றாகப்புலப்படவில்லை. எலிபிடிக்கிறவனைக் கேட்டதில் தண்ணீருக்குத்தவித்து அஃது இறந்திருப்பதில் சிறிதும் சந்தேகமில்லையென்று சொன்னான்.” என்று கூறியிருக்கின்றனர்.



“ஒரு மிருககாட்சி சாலையிற் சென்று பார்த்தபொழுது யானைகளின் கால் நகக்கண்கள் அரம்போட்டராவினாற்போல் ராவப்பட்டு தோல் வெளுத்திருப்பதைக்கண்டேன். எலிதான் இவ்வண்ணம் இப்பெரிய ஜெந்துக்கள் தூங்கும்பொழுது கறுவியிருக்கவேண்டுமென்றெண்ணினேன். ஏனெனில் அநேக தேசங்களைப்பார்த்துவிட்டு இந்தியாவுக்குச்சென்று அங்கும் அநேகவிஷயங்களைக் கண்ணுற்றுத் திரும்பின வொருவர் அங்கேதான், கரப்பான்களால் மிகவும் தொந்தரவடைந்ததாகச் சொன்னார். தூங்கும்பொழுது நகத்தருகேயுள்ள விரல் நுனிச்சதையை அவைகள்சாப்பிட்டு விடுகிறதென்றும்சொன்னார். மேலும் எண்ணெய்ப் பசைமட்டும் மயிரில் இருக்குமேயாகில் மயிரைக்கூடச்சாப்பிடுவதாகவும்சொன்னார். (இவ்விஷயங்களை நாமே கண்ணுற்றிருக்கலாம். நகச்சதைப்போயிருப்பதை அடிக்கடி நானே பார்த்திருக்கிறேன். குழந்தைகளைக் கீழேபோட்டிருந்தால் கரப்புக்கள் வந்து மயிரைசாப்பிட்டு மொட்டையாக்கிவிடுவதையும் நாம் அடிக்கடி பார்த்திருக்கிறோம்.)

எலிகள் நாயின் கால்சதையைப் பிராண்டுமென்பது பின்வரும் விஷயத்தால் தெளிவாகிறது.

“சென்றவாரம் எலிகளைக்கொன்று தும்சம்செய்யும்பொருட்டு என் நாயொன்றை அனுப்பினேன். இந்த நாய் எலிகளைக்கொல்லாவிடினும், அவ்வெலிக்கூட்டத்திலிருந்து தன்னையாவது தப்பித்துக்கொள்ளுமென்பதாக எண்ணியிருந்தேன். ஏனெனில் இது கரடிவேட்டையில் மிகவும் பேர்போன நாய். இரும்புக்கம்பிகள் உயர உள்ள ஒரு படுக்கையின்மீது படுத்துக்கொண்டு இரண்டுமணி நேரம் இந்த நாய் நன்றாய் தூங்கினது. எலிகளெல்லாம் அதின் கால்களையும் நகங்களையும் நன்றாகக் கறுவ ஆரம்பித்துவிட்டன. அவ்வெலிகளிடமிருந்து படுமவஸ்தையைப் பொறுக்கமாட்டாமல் அது குரைத்துக்கொண்டிருந்தது. அந்த நாயை அவ்வெலிகளிடமிருந்து தப்பித்துவிடுவது மிகுந்த கஷ்டமாய்விட்டது.” என்று ஒருசாஸ்திரப் பண்டிதர் எழுதியுள்ளார்.

ஒரு பசியுள்ள எலி சிலவேளைகளில் ஒரு சிறு குழந்தையையுங் கடித்துக்கொன்றுவிடும். இம்மாதிரி சமாசாரமொன்று 1853-ம்வரு

ஷம் பிரிஸ்டலில் (Bristol) நடந்தது. "தாயார் குழந்தையின் அழுகுரலைக்கேட்டு எழுந்திருந்து பார்க்கும்பொழுது குழந்தையின் வலது கண்ணருகே எலிகடித்து இரத்தம் கொட்டுவதைக் கண்டாள்." மிகவும் இரத்தம் வெளியேறி விட்டதால் அக்குழந்தை இறந்தும்போய் விட்டது." ஐயோ பாவம்!

சிலவேளைகளில் எலிகள் பசியினாலில்லாவிட்டாலும், பயத்தினாலாவது மனிதர்களைக்கூட எதிர்க்க ஆரம்பிக்கின்றன. மிஸ்டர் மேஹியூ என்பவர் எழுதுகிறார். "ஒரு சமயத்தில் வேலை செய்துகொண்டிருந்த என் வேலைக்காரனொருவனது (லந்தனில் சாக்கடையில் வேலை செய்பவன்) காலை எலிக்கூட்டமொன்றுவந்து தொந்தரவு செய்ய ஆரம்பித்தது. என்கால்களிலுள்ள சப்பாத்து அவ்வண்ணம் செய்யவொட்டாது தடுத்தது."

சாக்கடைகளெல்லாம் எலிகள் நிரம்பியிருக்கின்றன. ஆனால் நம்மைக் கண்டவுடன் அவைகள் ஓடிப்போகின்றன. தப்பித்துக்கொள்ளச் சௌகரியமில்லாத இடத்தில் நாம் அகப்பட்டுக்கொண்டால் அவைகளெல்லாம்கூடி நம்மீதுபாய ஆரம்பிக்கின்றன. சில எலிகள் பூனைக்குட்டி அவ்வளவு பெரிதிருக்கும்.

"என் வேலைக்காரரிலொருவன் ஒரு நாள் ஓர் எலியைப்பிடிக்கும்பொருட்டு அதன் வாலைப்பிடித்திழுத்தான். அவ்வால் வழுக்கி அவ்வெலி தப்பித்துக்கொண்டது. உடனே அதனைத் தடுக்கும் பொருட்டுத் தனது இடக்கையை அதற்குமுன்னே நீட்டவும் அவ்வெலி அவன் விரல்களை நன்றாகக் கடித்துவிட்டது. அவன் கை இப்பொழுது அவன் தொடை அவ்வளவு பெரிதிருக்கின்றது." என்று ஒருவர் எழுதியுள்ளார்.

"மூன்றுஎலிகளை ஒருகூட்டில் அடைத்து என்னிடம் கொண்டு வந்தார்கள். அதிலிருந்து வேறு கூட்டில் வைக்கும்பொழுது அவ்வெலிகளுள் ஒன்றுக்குக் காயம்பட்டு விட்டது. அவைகள் எல்லாவற்றையும் ஒரே கூட்டில் வைத்துப்போஷித்து வந்தேன். மறுநாள் காலையில் பார்க்கும் பொழுது அந்தக் கூட்டில் இரண்டு எலிகளே இருந்தன. காயம்பட்ட எலியைக் காணோம். மற்றை இரண்டு



எலிகளும் அக்காயம்பட்ட எலியைக் கொன்றது மன்றித் தின்றும் விட்டன. தலையிலிருந்து சாப்பிட ஆரம்பித்தன. என்ன ஆகாரங்களிருந்தும் அவை எல்லாம் கவனியாது இந்த எலியைச் சாப்பிட்டுவிட்டன"

பார்வைக்கு மிகவும் கடூரமாகத் தோற்றிய போதிலும் இது நல்ல உபாயமெனத் தோற்றுகிறது. காயம்பட்ட எலியானது தன் பொந்துக்குள் போனால், அங்கே சாக வேண்டிய நிலைமையில் அநேக நாள் இருக்க வேண்டியிருப்பினு மிருக்கலாம். ஆகையால் இவ்வவஸ்தையினின்றும் சீக்கிரம் அதின் கூட்டாளிகள் இதை நீக்கி விட்டனபோலும். மேலும் இஃது அவைகள் விருத்தியாவதைத்தடுக்கக்கூடிய ஒரு சௌக்கியமான உபாயமாயு மிருக்கின்றது. எல்லா எலிகளும் ஜீவித்திருப்பதென்றால். அவைகளுக்கு வேண்டுமான அளவு ஆகாரம் அகப்படுவது கஷ்டமாக இருப்பினும் இருக்கலாம். ஆகையால் சில எலிகள் சாகவேண்டியது அவசியமாகும். தமக்குத்தானே இரைதேடிக் கொள்ள அசக்தமாயுள்ள எலிகள் கொல்லப்படுகின்றன விஷமுள்ள எலியொன்று இவ்விதம் அநேகம் எலிகளைக் கொல்லுகின்றது. விஷம் என்பது என்ன வென்று எலிகளுக்குத் தோற்றுமெனத் தோற்றுகிறது. "எவ்விடத்தில் எலி விஷம் வைத்திருக்கிறதென்று அறிந்து அவ்விடத்திலிருந்து கிழட்டு எலிகள் இரண்டு சிறு எலிகளைத் துரத்தி அவை அவ்விடத்துக்குப் போகா வண்ணம் அவ்வளவை நன்றாக ஓடினதைத்தாம் நேரில் பார்த்ததாக ஒருவர் சொல்லியிருக்கின்றார்.

எலிகள் மரங்கள் மீதும் ஏறும் "கோகீர்த்த புரியில்" தம் வீட்டுக்கு எதிரிலுள்ள தோட்டத்தில் முந்திரிச் செடிகளில் எலி ஏறிப்பழம் சாப்பிட்டதைப்பார்த்ததாக ஒருவர் சொல்லியிருக்கிறார். ஆனால் இது வெகுநாள்வரை தெரியாதிருந்து மனிதர்களே திருடிக் கொண்டு போய் விடுவதாக நினைத்திருந்தார்கள்.

எலிகள் மிகவும் கடினமான சாமான்களையும் சேதப்படுத்தக்கூடியவை. தந்த வேலைசெய்ய லந்தன்மா நகருக்கு அனுப்பப்படும் யானைக் கொம்புகளில் அநேகம் கூர்மையான ஆயுதங்களால் குடை

யப்பட்டதுபோல் குடையப்பட்டுப் போகின்றன இப்பிரயோஜனமற்ற வேலையை மனிதன் உட்கார்ந்து செய்யமாட்டான். எலிகளை கப்பலில் செய்திருக்கும். ஏனெனில் தந்தத்தில் எலிசாப்பிடக் கூடிய ருசியுள்ள பதார்த்தமொன்றிருக்கிறது. தனக்கு வேண்டுமான அளவு அக்கொம்புகளினின்றும் குடைந்து தின்றுவிட்டு மீதத்தை விட்டுவிடுகிறது. இது தந்த வேலைக்காரர்களுக்கு நஷ்டமே. ஏனெனில் அவ்வெலி தின்னும் அப்பாகு போன்ற வஸ்துவுடன் கூடிய தந்தந் தான் அநேக காரியங்களுக்குப் பிரயோஜனப்படும்.

எலிகளும் மனிதர்கள்மாதிரி அன்புகொண்டு நல்ல சமாசாரங்களைத் தங்கள் உற்றார் உறவினர்களுக்குத் தெரிவிக்கும். அந்தோ! இவ்விஷயம் கடைசியில் எல்லா எலிகளுக்கும் கெடுதலாகவே முடிந்ததற்கு ஓர் உதாரணம் கூறுவேன்.

ஒரு கிராமத்துக்குடியானவன் வீட்டில் எலிகள் மிகவும் தொந்தரவுபண்ணிக்கொண்டிருந்தன. கூட்டைவைத்து அநேக எலிகளைப் பிடித்தும் இம்சை தீரவில்லை. எல்லா எலிகளையும் தன் வீட்டினின்றும் துரத்திவிடவேண்டுமென்று எண்ணினான். கடைசியாக இந்தப் பிராணிகளின் நடவடிக்கைகளை நன்கு கற்றுக்கொண்டான். இதற்காகப் பெட்டி ஒன்று சம்பாதித்து அப்பெட்டியைப் பாதி ஆகாரங்களால் நிரப்பி ஓர் இடத்தில் வைத்துவிட்டு என்ன நடக்கிறது பார்க்கலாமென்ற உத்தேசங்கொண்டு சாக்குக்கள் அடுக்கியுள்ளஇடத்திற்குப் பின் ஒருமூலையில் தான் ஒளிந்திருந்தான் முதலில் எலிகள் தம் முகங்களை நீட்டி நன்றாய்ப்பார்த்துவிட்டு ஒருவருமில்லையென்று அறிந்துகொண்டு சாக்குக்கள் இருக்கும் மூலையையும் ஒரு கண்ணால் பார்த்துக்கொண்டு அங்கு சிதறுண்டுகிடக்கும் தான்யங்களைத் தின்றுவிட்டுச்சென்றன. மறுநாளும் இதே தந்திரத்தை அந்த வீட்டுக்காரன் செய்தான். எலிகள் இந்த முறை சிறிது தைரியங்கொண்டு அந்தப்பெட்டிக்குள் அதனுள்ளிருக்கும் ஏணிமூலமாய் இறங்கின. முதலில் சென்ற எலி வயிறு நிறைய நன்றாய்ச் சாப்பிட்டது. உடனே அநேக எலிகள் வந்தன. இப்படி 3நாள் இரவுகள்கழிந்தன.



நான்காம்நாள் இவ்வெலிகளெல்லாவற்றையும் ஒருங்கேதொலைத்துவிடுவதென வீட்டுக்காரன் தீர்மானித்தான் ஆகாரம் நிறைந்த இடமொன்று இருக்கிறதென எல்லா எலிகளுக்கும் சமாசாரம் அனுப்பப்பட்டது. இப்பொழுது எலிகளுக்கு முந்தியிருந்தபயமும்போய்ச் சாக்குக்கள் இருக்கும் மூலையைக்கூடக் கவனியாமல் தங்கள் சுற்றத்தார்சகிதம் ஆகாரம் பண்ணிக்கொண்டிருந்தன.

உடனே வீட்டுக்காரன் வெளிப்பட்டான். கூட்டின் மூடியும் மூடப்பட்டது. எல்லா எலிகளும் கூட்டினுள் அகப்பட்டன. அவைகளெல்லாம் தண்ணீரில் அமிழ்த்தப்பெற்று ஒருங்கே இறந்தன. அதுமுதல் அவ்வீட்டில் எலியே இல்லாமற்போயிற்று. பிளேக் வியாதிக்கு எலிகளே முக்கிய காரணம் என்று அவைகளைக் கொல்லுகிறார்கள். அவ்வாறு கொல்வதற்குப் பரிசும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதனைப்பற்றிப் பின் விவரிப்பேன்.

எ. ஸ்ரீநிவாசன்.

# தலைமகுடன் சரித்திரம்.

(456-வது பக்கத்தொடர்ச்சி.)

ஆனால், ஓர் மன்னன் நல்ல குடிகளிருப்பது தேடிக்கண்டுகொள்ளல்மட்டும் போதாது. அவர்களையுண்டுபண்ணவும் வேண்டும்." என்று மந்திரர் சொல்லி வருகையில் தலைமகுடன் குறுக்கிட்டு "ஆ! ஆ! அது ஓர் நாளும் முடியாத காரியம்" என்றான். இல்லையில்லை அறிவோரையும் வல்லமையுளோரையும் தேடிநாடுவதேயவர்களையுண்டுபண்ணுவதாகும். பாத்திரமறிந்து பரிசளித்தால், யாவர்க்கும் மேம்பாடடைய ஊக்கமுண்டாகும். பாடுபட்டால்பணங்கேடாமென்னும் ஆசைக்கிடமிருந்தால் முன்னுக்கு வரக்கூடிய எத்தனை பெயர்கள் அதில்லாததால் சோம்புற்று இருக்குமிடந் தெரியாது பொழுது போக்குகின்றார்கள்! நன்னெறி நடந்தால் முன்னுக்குவரலாமென்ற ஆசையற்றுப்போய்த் தீவழி சென்று இன்மையின் இன்னலைக்கடக்க எத்தனை பெயர்கள் முயல்கின்றார்கள்! நுண்ணறிவுளோர்க்கும் சீலமுளோர்க்கும் நீ பரிசும் பட்டங்களுங் கொடுத்துதவுவையேல், உனது குடிகள் தாமாகவே கடுமுயற்சி செய்து இத்துறைகளில் உயர்வெய்துவார்கள். இப்படித் தகைமை யெய்தினோர்களைச் சிறுகச் சிறுக முன்னுக்குக்கொண்டு வருவதாலும், அரசாங்கத்தில் பொறுப்பானதொழில்கள் ஏற்கத்தகுதியுடையோரென எவர்கள் தோன்றுகின்றார்களோ, அவர்களை தாழ்ந்தபடிகளிலிருந்தும் உயர்படிகளுக்கு உயர்த்திவிடுவதாலும், இத்தப்பெருமையையின்னும் எவ்வளவு தூரம் கொண்டு செலுத்த உனக்கிடமிருக்கின்றது அவர்களுக்குப் பலதுறைகளிலுமுள்ள வல்லமையை நீ தெளிந்தறியலாம். அவர்கள் எவ்வளவு ஊக்கமுடையோர் தமது, அறநெறிப்பற்றில் எவ்வளவு கரவின்மையுடையோர் என நீ தேர்ந்தறியலாம். இவ்வாறு அரசாங்கத்தில் மேல் வேலைகளிலுள்ளோர்கள், அடிமுதல் உனது கண் பார்வையிலேயே பழகிவந்தவர்களாவார்கள். அவர்களை நீ நெடுநாளாக அடிமையடியாய்ப்பின்பற்றி வந்ததாகும். அவர்களது தொழில் முறைபற்றியேனும், அவர்களைக்குறித்து நீ யபிப்பிராயங்கொள்ளாது, அவர்களது முழு நடத்தையின் கருத்தைக்கொண்டு அபிப்பிராயங்கொள்வாய்." என்றார் மந்திரர்.



இப்படி மந்திரரும் தலைமகுடனும் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்பொழுது, முற்றும்பாழானதும், மிக உயர்ந்த கரடுமுரடான செங்குத்துப்பாறைகளால் சூழப்பட்டதுமான ஓர் சிறு தீவண்டை பீஷியக்கப்பலொன்று தங்கி நிற்கக்கண்டார்கள். அப்பொழுது எல்லாம் ஒரேநிசப்தமாயிருந்தது. இளங்காற்றுந் தனது மூச்சையடக்கியதுபோல் தோன்றியது. கடலின் மேற்பரப்பு கண்ணாடிபோல் பளபளப்பாகவும் ஒரே சமமாகவுமிருந்தது. மரங்களிற்றொங்கியகப்பற்பாய்கள் விரிந்தெழுந்து கப்பலையியக்கச் செலுத்தவில்லை. துடுப்புத்தள்ளுவோர்களும் உழைத்துக் களைத்துக் காற்றிலாக்குறையைத்தமது வலிகொண்டு சரிப்படுத்த முயன்றும் வீண் பாடாய் முடிந்தது.

கடனடுப்பாறையன்றி, மனிவசிப்பிடமெனச் சொல்லமுடியா அந்தத் தரையிடத்திற்கு அவர்கள் போய்த் தங்கும்படி நிர்ப்பந்தமாய் நேர்ந்தது. மற்ற வேளைகளில் பேராபத்திற்கிடமின்றி யதையணுகிச் செல்லமுடியாது. மந்திரரும் தலைமகுடனு மேறிச்சென்ற கப்பலோட்டிகளைப்போலவே, பீஷியர்களும் காற்றின் வரவையெதிர்நோக்கி. வீண் தாமதமாகிறதே யெனத் துடித்துக் கொண்டிருந்தார்கள். தரை யிறங்கியதும்; தலைமகுடன் தனக்குமுன் அங்கு தங்கியிருந்தவர்களை நோக்கிப் பாறைகளின் மீதேறிச் சென்று, இதக்கு நாடாள் மன்னன் உல்லாசனை யாலாகிய நகர் அரசமாளிகையிற் கண்டதுண்டாவென தன்முன்னெதிர்த்த முதல்மனிதனைக் கேட்டனன்.

தலைமகுடன் கண்டு கேட்டமனிதன் பீஷியனல்லன். அவனெவனோ ஓரன்னியன். அவனின்ன நாட்டானெனத்தெரியாது. பெருந்தோற்றமுளோனாயினும், அவனைப் பார்த்ததும் அவன் துக்கங்கொண்டு மனநொந்தவன்போற்றோன்றினன். தலைமகுடன் அவனைக்கண்டு விளித்தபொழுது, அவன் தன்னைமறந்து ஏதோ யோசனையில் மூழ்கியவனைத் தான் கேட்டதைக் கேளாதவன் போலுந் தோற்றினன். ஆனால் உடனே தன் னினைவுவர, "பீஷியத்தீவில் உல்லாசன் காணப்பட்டானென நீ நினைக்கின்றாய்போலும். நீ நினைப்பதுந்தவறன்று. தேவர்களை யெப்படி வந்தனைவழிபாடுடன் ஏற்

பார்களோ, அப்படியேயவனையும் ஆலாசியநகரம் அரசர்மாளிகையில் ஏற்று, விருந்தோம்பு முறையுடன் உபசரித்தார்கள். ஆனால், அந்நாடுவிட்டு உடனேயவன் போய் விட்டபடியால், நீயவனை யங்குப்போய்த் தேடுவதிற் பயனில்லை. பேரினத்தெய்வங்கள் அவனிடஞ் சீற்றமறந்து, அருளும்புரிவர்களேல், இதக்கில் தனது குலதெய்வங்களை இன்னும் கும்பிடலாமென்றெண்ணியங்குப்போகப் புறப்பட்டுவிட்டான்" என அவன் மறுமொழிசொன்னான். அவ்வன்னியன் இவ்வார்த்தைகளை விசனத்தோடு சொல்லிவிட்டுப் பாறை யுச்சியிலுள்ளஒரு காட்டினுள்விரைந்தோடி நுழைந்துசென்று அங்கிருந்து கடற்புறமே நோக்கிக்கொண்டிருந்தான். அவனைப்பார்த்தால் பிறருடன் கலக்க விரும்பாதவன்போலும் புறப்பட்டுச்செல்லத் துடிப்பவன்போலுமிருந்தது. தலைமகுடன் அவனைமிக ஆழ்ந்தூன்றிக்கவனித்தான். அவனைப்பார்க்கப்பார்க்க மேன்மேலும் அவன்மனம் அலைப்புற ஆச்சரியங்கொண்டான். "இவ்வயலான் கொடுத்தவிடை மிக்க துயரிடைப்பட்டு மூழ்கிவெளி வியாபாரங்களெதையுங்கவனியாத ஒருவனது விடைபோலுமுளது; நானே துன்புறுவதால், துன்புறுவோரைக் கண்டிரங்குகிறேன். இம்மனிதனிடம் தனி வாஞ்சையொன்றெனக் குண்டாகின்றது. அதற்குக் காரணமுந் தெரியவில்லை. எனக்கு அவன் மரியாதைசெய்யவில்லை. நான் சொல்லியதைக் கவனிக்கவில்லை. என்னைமதித்துச் சரியான விடையும் பகர்ந்திலன். இப்படியெல்லாமிருந்தும், அவனது துன்பந்துயர்கள் நீங்கவேண்டுமென என்னை யறியாது நான் வேண்டுகின்றேன்." என அவன் மந்திரரை நோக்கிச்சொன்னான்.

"துன்பப் படவரும் நன்மையேதென இதனால் நீ யறிந்துகொள். அது எம்போல்வாரில்லென்ற இறுமாப்பையிறக்குகின்றது. இளகாமனத்தை யிளக்குகின்றது. தாழா வாழ்வுடையோரென்றுமுகத்துதிசெய்வதைக்கேட்டு, மன்னர்கள் தாம் தேவர்களென எண்ணிக்கொள்ளுகின்றார்கள். ஓரற்பவிஷயத்தில் அவர்களாசைகொண்டால் அசலங்கள் அமிழவேண்டுமெனவும் அலைகடல் அகோசரமாகவேண்டுமெனவும் எண்ணுகிறார்கள். மனிதர்களை யவர்களொருபொருட்டாயெண்ணுவதில்லை. படைப்புப்பொருளனைத்தும் தம்மனத்திற்



கிணையப் படியவேண்டும். துன்பமென்றுகாதில் விழுந்தால், அந்தப்பதத்திற்கே யவர்கள்பொருள் அறியார். கஷ்டமென்பது அவர்களுக்குக் கனவேயாகும். நன்மை தீமைப் பேதமறியார். இடுக்கணொன்றே இரக்கமுண்டாக்கி நெஞ்சக்கனகல்லைபிளக்கி, யங்குமானிட இதயத்தை யிருத்தும். தாம் துன்புறும்பொழுதுமட்டும், தமக்கும் மற்றவர்களுக்கும் பிரகிருதி யொன்றென்ற விவேகமும், எந்த ஆறுதலின்றித் தாம் வருந்துகின்றார்களோ, அந்த ஆறுதல் தாம் மற்றவர்களுக்கு அளிக்கவேண்டுமென்ற விவேகமும் எழும். உன்னைப்போல் ஓர் நாடோடியாயிருத்தலைக்கொண்டு மட்டும், அன்னியனொருவனிடம் உனக்கு உன்னை யறியாது இரக்கமுண்டாகுமாயின், இதக்கு நாட்டுக்குடிகள்வருந்த இனி நீகாண்பையேல், அவர்களைக்கண்டு இன்னும் எவ்வளவு அதிகமாக உன்னெஞ்சு கரைந்துருகவேண்டும்!! ஆட்டுத்திரள் ஆயனிடம் ஒப்புவிக்கப்படுவதுபோல் இதக்கு நாட்டுக்குடிகள் உன்னிடமொப்புவிக்கப்படும்பொழுது,உனதுபேரவா, உளவரை யோம்பாமை, மதியின்மையிவைகளால் அவர்கள்கெட்டுவருந்தவுமிடமுண்டு. பரிபாலக தேவர்கள்போலிருந்து குடிகளது நன்மையே நோக்கிக்காக்கவேண்டுவ தவசியமாதலின்,அரசர்களது தவறலன்றிக் குடிகள்வருந்துவதற்கிடமில்லை" எனமந்திரர் புன்சிரிப்புடன் சொன்னார்.

மந்திரர் சொல்லிவந்த இந்த வசனத்தைத் தலைமகுடன் மனவாட்டத்துடனும் மனச்சஞ்சலத்துடனுங்கேட்டு அவரை நோக்கி "நீர்சொல்வதுண்மையாயின், அரசபதவியினும் கேடுகெட்ட பதவி வேறில்லை. எவர்களை ஆள்வதுபோல் வெளிக்கு நடிக்கின்றானோ அவர்களுக்கு அவன் அடிமையாயிருக்கின்றான். குடிகளுக்கு அவன் கீழடங்கியவனன்றிக் குடிகள் அவனுக்குக் கீழடங்கியவர்களல்லர். அவனது அதிகாரமும் வல்லமையும் அவர்களின் பொருட்டென்று சுட்டிச்சொல்லப்படுகின்றது. ஜனசமூகத்திற்கேயன்றி யொவ்வொரு மனிதனுக்கும் அவனடிமையாயிருக்கின்றான். அவன் அவர்களுக்கு வேண்டுவனவெல்லா முதவவேண்டும். அவர்களது குற்றங்குறைகளுக்கிணங்கத்தான் நடக்கவேண்டும். அவர்களது தீக்குணங்கள் தீச்செயல்களைத் திருத்தவேண்டும். அவர்களுக்கு அறிவு புக

ட்டவேண்டும். அவர்களுக்கு க்ஷேமமுண்டாக்கவேண்டும். அவன் மீதுபோர்த்தியதுபோற் காணும் அதிகாரம் அவனதல்ல. தனது சொந்தப்புகழ் கருதியேனும் இன்பங்கருதியேனும் அவன் அதைச் செலுத்தக்கூடாது. உய்த்துணரின், சட்டங்களுடைய அதிகாரமது. தன்னைக்கண்டு ஏனையர் நடக்குமாறு அதற்குத்தானே முதலிற் கீழ்ப்படியவேண்டும். ஆளவேண்டுவன சட்டங்களே. அவைகளது ஆட்சியைக் காக்கவேண்டுவதுமட்டும் அவனது கடமை. அவைகளைக் காக்க அவன் இரவெலாம்விழித்திருந்து பகலெலாமுழைக்கவேண்டும். நாட்டிலுள்ள வேறெவரினும் அவனுக்குச் சுயாதீனம் குறைவு; ஓய்வு குறைவு; அவன் தனது சொந்தச் சுயாதீனத்தையும் ஓய்வையும் பலரது சுயாதீனத்தின்பொருட்டும் க்ஷேமத்தின் பொருட்டும் இழக்கவேண்டும்", என மனம்பதைத்து மறுமொழி சொன்னான்.

“ஆயன் ஆட்டுத்திரளுக்கெப்படியோ, பெற்றோன் குடும்பத்திற்கெப்படியோ, அப்படியே மன்னன் குடிகளுக்கிருக்கவேண்டி, அவனுக்கு அம்முறையேற்பட்டிருக்கின்றது. என் குழந்தாய், பல்லாயிரம் ஜனங்களுக்கு க்ஷேமமுண்டாக்க ஓயாது உழைக்கும் ஓரரசன் தானே சுகமற்றிருப்பானென நீ யெண்ணுவது தகுதியோ? அரசன் பிரத்தியட்ச தெய்வமாய், ஈசனது பிரதிநிதியாய் நின்று தீயர்களைத் தண்டித்துத் திருத்துகின்றான். நல்லோர்க்குத் தக்க பரிசு கொடுத்து ஊக்குகின்றான். உலகோரை நல்லவர்களாக்குகின்றான். சட்டவிதிகளை வரை மீறிப்பிறழாது காத்தல் மட்டும் அவனது புகழுக்குப் போதாது. அவைகளிட்ட ஆணைக்குத் தானுயர்ந்தோனென நடிப்பதால், வெறுப்பும் இகழ்ச்சியு மடைவானல்லது புகழுடையான். அரசன் துஷ்டனாயின், துக்கியாவான். எப்படியெனில், காமக்குரோதாதிகளும் வீண்பெருமையுங்கொண்டு, ஓயாக் கவலையுங் கொதிப்புங் கொண்டிருப்பான். அப்படியின்றிச் செங்கோலனாயின், அறஞ்செய்து ஆதரித்து அழியாக் கைம்மாறு அமரர்கள் அளிப்பார்களென்னும் ஆசைகொண்டு அழுக்கிலாப் பேரானந்தத்தை யனுபவிப்பான்.” என அவனுக்காறுதல் சொன்னார் மந்திரர்.

இந்த நியாயங்களை நெடுநாளாக அவனோதி யுணர்ந்தும், பலகாலும் பிறர்க்குரைத்தும், அந்த வேளையில் அவன் மனம் பதைத்



துக் கொதித்து நின்றதால், அவைகளை யென்றும் அறியாதான் போலிருந்தான். வியாகுலம் உட்புகுந்து குடைவோர்க்கு வெடுவெடுத்த குணம் இயற்கையாதலின், தலைமகுடனும் மந்திரர் விடுத்துரைத்த தத்துவங்களைத் தந்திரமான குதர்க்கங்களும், பிடிவாதமான எதிர்வாதங்களுஞ் சொல்லித் தனது கொள்கைகளுக்கு விரோதமாய்க் கொள்ளாது தள்ளினான். பலவித ஆக்ஷேபங்கள் சொல்லியதுடன், மனிதன் நன்றிகெட்டவனென்பதையுஞ் சொன்னான். “என்ன!! அவர்களுடைய உள்ளன்பு வேண்டுமென நீர் பாடுபடுவதற்காக உம்மை வெறுத்து, அவர்களுக்கு நீர் நன்மை புரிய அதைக்கொண்டே யும்மைக் கெடுக்கக் கூடியவர்களுமான கயவர்களின் பொருட்டு நீருமது வாணாளைப் போக்கவோ?” என்றான்.

“மனிதர்கள் நன்றி கெட்டவர்களென்று நாமெண்ண வேண்டும். மனிதர்கள் நன்றி கெட்டவர்களாயினும், நாம் உபகாரஞ் செய்வதிற் சோரக்கூடாது; உபகாரஞ் செய்யவேண்டுவது தேவராணையாதலின், அவ்வாணைக்குக் கீழ்ப்பட்டு நாம் செய்யவேண்டுமல்லது அம்மனிதர்களின் பொருட்டன்று. செய்யுமுபகாரம் வீண்போகாது. செய்யுமுபகாரத்தை மனிதர்கள் மறப்பினும், தேவர்கள் மறவாது, கைம்மாறளிப்பார்கள். இதுவுமன்றிச்செய்ந்நன்றியைச் சமூகம் மறந்தாலும், அதையந்தரங்க விசுவாசத்துடனும் ஆசையுடனும் கருதும் நல்லோர் பெரியோர்களெப்பொழுதுமுண்டு. ஜனசமூகமும் எவ்வளவு மாறு மனத்தினதும் உறுதியற்றது மாயினும், அதுவும் ஒரு சமயமில்லாதுபோனால் ஒரு சமயமாவது, தகுதியறியுந் தன்மை யுடையதே. மனிதரிடமுள்ள செய்ந்நன்றி மறத்தலை மாற்றக் கருதுவையேல், எது பேருதவி யெனப்பலரா லெண்ணப்படுமோ அதையவர்களுக்கு அதிகமாகச் செய்யாதே. அவர்களாக்கமும் செல்வமுங்கொள்ளச் செய்யாதே. அவர்களது பராக்கிரமத்தைக்கண்டேனும், அவர்கள் கொண்டாடு மின்பத்தைக்கண்டேனும், அவர்களைப் பிறர்கண்டஞ்சும்படி யேனும் ஆசை கொள்ளும்படியேனும் செய்யாதே. இந்தச் செருக்கால், இந்தப் பெருக்கால், இந்தக் களிப்பால் அவர்கள் கெட்டுப்போவார்கள். அவர்களிடம் பொல்லாங்குமிகச், செய்ந்நன்றி மறப்பார்கள். ஓர் கெடுகொடையை

ஜப்பான்தேசம் செல்ல கொழும்புக்குப்போய் அத்துறைமுக மூலமாய் அடிக்கடி போகும் ஜர்மனி, பிராஞ்சு, இங்கிலீஷ் இத்தேசத்தவர்களுடைய கப்பல்களில் ஏதிலாவது ஒன்றில் ஏறிக்கொண்டால் 22 நாள் பிரயாணம்செய்து 23-வது நாள் ஜப்பான்தேசத்தில் யோகஹாமா வென்ற துறைமுகம் போய்ச்சேரலாம். அவ்விடத்திலிருந்து ஜப்பான் தீவுக்கு முக்கிய பட்டணமும், ராஜஸ்தானமுமான டோக்கியோ நகரம் 18மைல். இந்த 18 மைலும்போக ரெயில்பாதையும், சென்னையில் தெருத் தெருவாய்ப்போகும் மின்சார வண்டிகள்போன்ற மின்சார வண்டிகளுமுண்டு. இந்த நகரில் மூன்று மின்சார வண்டிகள் ஓட்டும் கம்பெனிகள் உண்டு. மூன்று கம்பெனியும் ஒன்றோடு ஒன்று ஒற்றுமையாய் நகர் முழுமையும் 2,000 வண்டிகள் ஓடும்படி செய்திருக்கிறார்கள். அவ்விடத்தில் ஒரு மனிதன் ஓரிடம்விட்டு ஓரிடம்போகப் பிரியப்பட்டால் மின்சார வண்டிகளில் ஒன்றில் உட்கார்ந்துகொண்டு 5 ஸென் (Sen) (இது ஒரு நாணயம், 100 சென் கொண்டது ஒரு பென். ஒரு பென் யென்னும் நாணயம் நமது நாணயத்தில் ரூபா 1-10-0 க்கு சமானமாம்) கொடுத்து டிக்கட்டு பெற்றுக்கொண்டால் தான் கோரியவிடம் போகலாம். சென்னையில் இருப்பதுபோல் இ[illegible]த்தினுடைய தொலைவுக்குத் தக்கபடி சார்ஜ் ஏற்படுத்தாமல் கொஞ்சம் தொலைவுபோனாலும் சரி அதிக தொலைவுபோனாலும்சரி ஒரேசார்ஜ்என்பதாய் வைத்திருக்கிறார்கள். இந்தடோக்கியோ நகரமானது 20 சதுரமைல் இருக்கலாம். இந்த நகர் முழுமையுமுள்ள வீடுகள் இரண்டு அடுக்குள்ள வீடுகளாயிருந்தாலும் அவைகள் மிகவும் தாழ்வானது. சென்னையில் ஒரு அடுக்கு வீட்டின் உயரைவிட அவ்விடத்தில் இரண்டு அடுக்குவீடுகள் உயரத்தில் கம்மியாயிருக்கும். மேலும், அநேக வீடுகள் மரத்தினாலேயே கட்டப்பட்டிருப்பதால் அவர்கள் நெருப்பு என்றால் திகில்படுவார்கள். வீட்டுச்சமையலுக்கும் விறகுவைத்து எரியச்செய்தால் எங்கு வீடு தீப்பற்றிக்கொள்ளுமோவென்று பயந்து நிலக்கரியைக்கொண்டே யாவத்து வீட்டுவேலைகளையும் நடத்திக்கொள்ளுகிறார்கள். ஜப்பானியர்கள் மிகவும் பெருங்குணமுடையவர்கள். அயல்நாட்டார் அவர்கள் தேசம் வந்திறங்கினால் ஜப்பானிய பாஷை தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கக்கண்டால் கூலியாள் உள்பட மிகவும் பட்சமாய் அவர்களை இத்தேசத்த



வர்களென்பதாய் தெரிந்துகொண்டு ரிக்ஷா வண்டியில் ஏற்றிவைத்துக்கொண்டு அத்தேசத்தவர்கள் எங்கு சாதாரணமாய் வசிக்கிறார்களோ அவ்விடத்துக்குக் கொண்டுபோய்விட்டு பின்பு தனக்குண்டான கூலியைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இவ்விதமே ராமாராவ் சென்ற காலத்தில் தமக்கு ஜப்பானிய பாஷை தெரியாமல் இந்தவிடம் போகவேண்டுமென்பதாய்ச் சொல்லமுடியாதவராயிருந்த காலத்தில் ஜப்பானிய ரிக்ஷா வண்டிக்காரர்கள் இவரையும், இவருடைய சாமான்களையும் வண்டியில் வைத்துக்கொண்டு அங்கு ஒரு விடத்திலுள்ள "இந்தியன்" ஹோம், [இந்தியர் வசிக்குமிடம்] அழைத்துச் சென்று பின்பு தங்களுக்குண்டான கூலியைப் பெற்றுக்கொண்டார்கள். "இந்தியன் ஹோம்" என்றவிடத்தில் இந்தியாவிலிருந்து கைத்தொழில் கற்றுக்கொள்ளவோ அல்லது வேறு அலுவலாகவோ அத்தேசம் சென்றவர்கள் மாத்திரம் வசிக்கிறார்கள். அங்கிருந்தவர்களுடன் மிஸ்டர் ராமாராவ் சில தினங்கள் தங்கியிருந்து பினபு அந்நகரில் இந்திய ஜப்பானியச் சங்கம் (Indo Japanese Association) என்றதோர் சங்கம் இருக்கிறதாகவும், அவ்விடத்தில் அச்சங்கத்தவர் சிபார்சுபெற்றால் தொழிற்சாலைகளில் சுலபமாய் தொழில் கற்றுக்கொடுப்பார்களென்றும் தெரிந்துகொண்டு அங்குள்ள காரியதரிசியையும் கண்டார். இந்தச் சங்கமானது ஒரு வர்த்தகச் சங்கமென்றும், அதில் சேர்ந்தவர்களில் அநேகர் வர்த்தகர்களென்றும் இவருக்குத் தெரியவந்தது. இந்தச் சங்கத்தின் முக்கிய கருத்தென்னவெனில், இந்தியாவுக்கு என்ன சரக்குத் தேவை, அவ்விடத்தில் எந்தச் சரக்கு சொற்ப விலைக்குக் கிடைக்கும், அவைகளை எப்படிச்செய்து இந்தியாவுக்கு அனுப்பினால் சுலபமாய் விற்கப்படுமென்னும் வர்த்தக விஷயங்களை ஆலோசிப்பதே. இந்தச் சங்கத்துக்கு இந்தியர்களுக்கு ஒரு காரியதரிசியும், ஜப்பானியர்களுக்கு ஒரு காரியதரிசியும் ஆக இருவருண்டு. இந்தியர் பக்கத்து காரியதரிசியாகிய மிஸ்டர் போத்தர் என்பவர் புனைவைச் சேர்ந்தவர். இவர் இந்தியாவிலேயே B. A. பட்டம்பெற்று ஜப்பான் சென்று டோக்கியோ நகரிலுள்ள ரசாயன கலாசாலையில் சேர்ந்து மூன்றுவருஷம் படித்து அங்கும் பட்டம்பெற்று இப்பொழுது ஸல்பூரிக்ஆஸிட் செய்யும் முறையைக் கற்றுக்கொண்டிருக்கிறார். இவருடைய படிப்பு அடுத்த செப்டெம்பர் மாத

சுதேச ஏலக்கிருஷிக்கம்பெனி லிமிட்டெட் கோம்பை:— இத்தலைப் பெயர்கொண்ட கம்பெனியைப்பற்றி நாம் முன்னமொரு முறை எழுதியிருந்தோம். தற்போது இக்கம்பெனியானது மிகவும் நன்னிலையிலிருக்கின்றது. வேண்டிய அளவு நிலம் வாங்கிப்பண்படுத்துகிறார்கள். கம்பெனியும் ரிஜிஸ்தர் ஆயின. பங்குகளும் ஏராளமாகச் சேர்கின்றன. இக்கம்பெனி மெம்பர்களில் முக்கியமானவர்களெல்லாரும் வர்த்தகத்துறையில் நன்கு பழகியவர்களும் சொல்லுறுதியுடையவர்களும் செய்தொழிலூக்க முடையவர்களுமாயிருப்பதால் இக்கம்பெனியானது நாளுக்குநாள் அபிவிர்த்தியடையும் என்பதிற் சந்தேகமில்லை. இதன் நோக்கம் விவசாய முறையைப் பின்பற்றிச் செல்வதால் "மேழிச்செல்வங் கோழைபடாது" என்ற ஔவை பிராட்டியார் திருவாக்கின்படி தக்க லாபந்தந்து நம் சகோதரர்கட்குமகிழ்ச்சியையும் கௌரவத்தையும் கொடுக்குமென்பது திண்ணம். ஆகலின் நம்மவர்களே! ஒவ்வொருவரும் பங்கு பெற்றும் வேறு வகையிற் செயற்பால உதவிகளுண்டேல் அவைகளைச் செய்தும் நமது குழந்தையைப் பாதுகாப்பதுபோல் இதைப் பாதுகாக்கவேண்டும். இத்தகைய கம்பெனிகளின் அபிவிர்த்திதான் நமது தேசத்தின் செல்வத்துக்கும் பெருமைக்கும் அடிப்படையாகும். இந்த எண்ணத்தை நாம் ஒவ்வொருவரும் மறவாமல் சிந்திக்கவேண்டும். இக்கம்பெனியைப்பற்றிய பிறவிஷயங்களையறிய விரும்புவோர் கம்பெனித் துணைக்காரியதரிசியாகிய ஸ்ரீமத் உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கட்குத் தெரிந்துகொள்ளலாம். கம்பெனி விதிகளடங்கிய புஸ்தக விலை அணா 8.

மு. ரா கந்தசாமிக்கவிராயர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
17 AUG 1908
MADRAS

உ

குமரன் துணை.

# விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 7 } 1908ஞு மார்ச்சு ஏப்ரில் மேமீ { பகுதி 3, 4, 5.

## வயிற்றுப்பாடு.

தற்கால நிலைமையில் வயிற்றுப்பாடே பெரும்பாடாய்ப்போயிற்று. சாசுவதப்பஞ்சம் நம்முள் ஊன்றிவிட்டது. நாம் பஞ்சம்பஞ்சம் என்று பறைபறைந்துகொண்டு ஊர்விட்டு ஊர்செல்லவில்லையேயொழிய பஞ்சகாலத்துக்கொடுமையினும் கொடுமையாகவே இருக்கிறது. அரிசி 3½படி அல்லது 4படி. மற்றைத்தானியங்களும்இந்த நிலைமைக்குச் சிறிதும் தாழவில்லை. இந்தநிலைமையில் நாம்எவ்வாறு முன்னுக்கு வருவோம். இவ்வருஷம் பருவமழையும் பாழாய்ப்போகும்போல் தோற்றுகிறது. சென்றவருஷம் மழைபெய்து ஒன்றுக்குப்பாதியாக விளைந்தும் விளைந்த தானியங்கள் நம் நாட்டைவிட்டு அயல்நாடுகளுக்குப்பறந்துவிட்டன. சொற்பலாபத்தை உத்தேசித்து அயல்நாட்டுக்கு நம் ஆகாராதிகளை யனுப்பும்கேட்டை நாம்இன்னும் உணரவில்லை. அவனவன் தன்தன்பாட்டைப் பார்த்துக்கொண்டு தான் வாழ்ந்தாற்போதும்என்றிருக்கிறானேயொழிய தேசப்பொதுக்ஷேமத்தைச்சிறிதும் கவனிப்பதில்லை. புத்திமான்கள் இதுவிஷயத்தை எத்துணை கண்ணுங்கருத்துமாய்ப் பார்க்கவேண்டுமோ அத்துணை கருத்தாகப் பார்ப்பதாகத் தோற்றவில்லை. நம்தேசத்து ஜனங்களில் பெரும்பாகத்தார் ஏழைகள். பணக்காரர் சொற்பமே. நம் தேசத்து ஏழைகளுக்கோ கூலிவேலையைத்தவிர்த்து வேறுவேலை தெரியாது. நம் கைத்தொழில்களெல்லாம் க்ஷீணதசையடைந்தமையால் தக்கமுயற்சிசெய்து தகுந்த கூலி சம்பாதிக்க ஜனங்களுக்குத் திறமையில்லை.

அவர்களோ வாயில்லாப்பூச்சிகள். இன்னது வரப்போகிறது இன்னது செய்யவேண்டுமென்பது சிறிதும் அறியாதவர்கள். சென்றமூன்று நான்கு வருஷங்களாய் நாம் பஞ்சத்தின் நடுவே வாழ்ந்து வருகின்றோம். அஃதாவது பஞ்சகாலத்தில்தானியம்வாங்கினபடியே தானியத்தை விலைக்குறைவாக வாங்கிக்கொண்டு ஏப்பேசாது வயிறு வளர்த்து வருகிறோம். புஷ்டியாய்ஆகாரம்சாப்பிடுவது வரவரஏழை ஜனங்களுக்குள் அரிதாகிவருகிறது. ஜனங்கள் என்னசெய்வார்கள். மழைமாரியில்லாவிடின் பஞ்சம் பஞ்சமென்று எங்கும் சப்தம்பறையறைந்தாங்கோடிப்பறக்கும். அவ்வாறின்றிச் சிலபாகத்தில் மழைபெய்து அரைவிளைச்சலும் விளைகிறபடியால் அந்தச் சப்தத்துக்கிடமில்லாமல் உண்மையில்மட்டும் பஞ்சத்தை அநுபவித்துவருகிறோம். இம்மாதிரியாகவே இருந்தால் நம்நாடு என்றுமுன்னுக்குவருவது. புத்திமான்கள் இதைச்சற்றுச் சீர்தூக்கிப்பார்த்து ஜனக்ஷேமத்தையபிவிருத்திபண்ண வழிதேடவேண்டும். அயல் நாடுகளுக்கு நம் உணவுப்பொருள்களை யனுப்பும் வழக்கத்தை நிறுத்தி நம்முணவு நமக்குதவும்படி செய்யவேண்டும். இதனைஊர்கூடிச்செக்குத்தள்ளுதலுக்குச் சமம் என்னலாம். என்றாலும் செக்குத்தள்ளாவிடில் அதன் பயனை நாமே அனுபவித்துத் தீரவேண்டியது. அதிக வரும்படியில்லாதஜனங்கள் எவ்வாறு பிழைப்பார்கள். தனிகர்கள் ஒன்றுகூடித்தங்கள் முதல்பணத்தை ஆகாராதிகளை அயல்நாட்டுக்குச் செல்லவொட்டாமல் தாங்களே வாங்கிக் கட்டிவைத்துக்கொண்டு ஏழைகளுக்குச் சொற்ப லாபத்துக்கு விற்றால் அவர்களுக்கும் லாபம். தேசத்துக்கும் க்ஷேமம். நம் வியாபாரிகளும் இதுவிஷயத்தில் கூட்டங்கூடி தீர்க்காலோசனைபண்ணவேண்டும். ஒவ்வொரு ஊரிலும் புத்திமான்கள் இதுவிஷயத்தைக்குறித்து நீள நினைந்து அபாயத்தை நீக்கமுயலவேண்டும். நாம் ஏதாவது ஒரு கட்டுப்பாடு பண்ணிக்கொள்ளாவிடின் பின் சங்கடப்படவேண்டியதுதான். "சர்வோஜனாச்சுகினோபவந்து" என்று சொல்லுவது நம்தேசமே. அப்படிப்பட்ட தேசத்தில் சகலஜனங்களும் கஷ்டப்படப் பார்த்துக்கொண்டிருந்தால் ஏனைய முயற்சிகள் எவ்வாறு அபிவிருத்தியடையும். ஆகாரப்பாடே பெரும்பாடாகப்போயிற்றே. விளைவிலும் மோசமில்லை. கோழிக்குஞ்சைப்பருந்து காலில் இடுக்கித் தூக்கிக்கொண்டுபோகும்விதம் நம் விளைபொ



ருள்களெல்லாம் அந்நியநாடுசென்றால் நாம் பட்டினிகிடந்து உழலவேண்டியதுதானே. எல்லாவற்றினும் இதனையே பெரிதாகக் கருதி நாம் சீர்தூக்கிப்பார்த்து செய்யவேண்டியதைச் சீக்கிரம் செய்துமுடிக்கவேண்டும். யாதொரு ஏற்பாடுந் தகுந்தபடி செய்யாமல் விட்டுக்கொண்டிருப்போமானால் எல்லோரும் ஒருங்கே மடியவேண்டியதுதான். தேகபலமில்லாமல் எதுதான் முடியும். கைத்தொழில் அபிவிருத்தியெங்கே. சாஸ்திரப் பயிற்சி எங்கே. எல்லாம் தவிடுபிடியாய்ப்போகவேண்டியதுதானே. "பசிவந்திடப்பறந்துபோம்" என்றகிழவியின் பேச்சு உண்மையாகவே முடியுமன்றோ. ஆகையால் மற்றெந்தக் காரியத்தையும் ஒதுக்கிவைத்துவிட்டு இந்தக் காரியத்தையே முதற்காரியமாக நினைத்து ஒன்றுகூடி ஒத்துழைப்பதே நம் கடமை. கோஆபரேடிவ் சங்கங்கள் ஆங்காங்கு ஏற்பட்டு இதுவிஷயத்தையே முக்கியக் கருத்தாகக்கொண்டு தேசக்ஷேமத்தைத்தேடவேண்டியது இன்றியமையாதது. நமக்குள் இப்பொழுதுதான் இந்தவியாதிநுழைந்திருக்கிறது. இதனை மேற்போகவொட்டாமல் தடுத்தாலொழிய அது நம்மைமேற்கொண்டு அழுக்கி நம் உயிரையும் வாங்கிவிடும். இக்கேட்டை நீக்கிக்கொள்ள நாமே முயற்சிசெய்தாலொழிய அந்நியர்கள் நமக்காக உழைக்கப்போகிறதில்லை. பசிக்கிறவன் எங்கேயாவது தேடித்திரிந்து ஆகாரம் சம்பாதித்துப் புசித்தால் பசி தீருமேயொழிய அயலாரை நம்பிக்கொண்டு இருந்தால் பட்டினிகிடந்து சாகவேண்டுவது நிச்சயம். ஆகையால் படாதபாடெல்லாம் பட்டு இக்கேட்டை நம்மினின்றும் களைந்தெறிதல் நம் புத்திமான்களுடையகடமை. தனவான்களுக்கும் இவ்விதக்கேட்டை யெடுத்துக்காட்டி ஏதாவது தக்க ஏற்பாட்டைச் செய்தல்வேண்டும். நாம்இதனைஅவ்வளவு அபாயமாகக் கருதவில்லை. வருமுன் காப்போனாக இருந்துஇக்கேட்டை நீக்கல்வேண்டும். வந்தபின் காப்போனாக இருந்தால் நம் கதி அதோகதிதான். நம் தேசத்திலும் சிலவருஷங்களுக்கு முன்னிருந்தபடி தானியாதிகள் மலிவாக விற்று நம் ஜனங்களும் வயிறாரப் புசித்து க்ஷேமமடையப் போகிறோமா என்றுதோற்றுகிறது. பழையகாலத்தை எப்பொழுது காணப்போகிறோம். முன்னிலும் கிருஷிவிருத்தியாகி ஆகாராதிகளும் அதிகமாய் உண்டாவதிற் றடையில்லை. ஆனால் நமக்குக் கிடைப்பது முன்கிடைத்ததில் பாதியே. இவ்வாறு

அயல்நாட்டுக்கு நம் தானியங்களை வாரியனுப்பிவிட்டால் நாம் பட்டினிகிடந்து சாகிறதா. நம்நிலைமை இன்னும் இரண்டொரு வருஷம் இதேமாதிரி யிருக்குமானால் நம் கதி அதோகதிதான். போதுமான ஆகாராதிகள் நம் நாட்டில் விளையாவிடினும் அயல்நாட்டிலிருந்து வரவழைக்கலாம். விளைந்த தானியங்களையே மூட்டைகட்டி அனுப்பிவிட்டு நாம் பசக்கப் பசக்கவிழித்துக்கொண்டிருக்கிறோம். ஆகையால் இதுவிஷயத்தில் நாம் சிறிதும் அஜாக்கிரதையாயிராமல் தக்க ஊக்கம்பாராட்டி விஷயத்தையும் எல்லாவற்றினும் பெரிதாகக் கருதிப் பொதுஜனக்ஷேமத்தை நாடவேண்டுவது நம் கடமை. நாடெங்கும் வாழ்ந்தால்மட்டுமே கேடொன்றுமில்லை. நாடு கேடு அடைந்தால் அக்கேடு எல்லோர்க்குந்தானே. இதுவிஷயத்தில் நாம் செய்யவேண்டியமுயற்சிகளைச் செய்துகொண்டு கவர்ன்மெண்டாரையும் ஜனக்ஷேமார்த்தமாக எதைச் செய்யச்சொல்லவேண்டுமோ அதனை வற்புறுத்திச் செய்யச்சொல்லி நாட்டின் நன்மையைத் தேடவேண்டும். நமக்குள் நாம் சில கட்டுப்பாடுகள் பண்ணிக்கொண்டு வியாபாரிகளையும் சில கட்டுப்பாடுகளுக்குட்படுத்திக் கவர்ன்மெண்டாரையும் சிலவற்பாடுகளைச் செய்யச்சொல்லி காரியங்களைச்சாதித்துக்கொண்டாலொழிய நாம் க்ஷீணகதியடையவேண்டியது திண்ணம். அபாயம்பெரிது என்பதை நாம் நன்குணர்ந்து செய்யவேண்டிய ஏற்பாடுகளை முன்னதாகவே செய்யவேண்டும். கரணம்தப்பினால் மரணமாகவேமுடியும். ஆகையால் நாம் அதிக சுறுசுறுப்புடன் இப்பெருவிஷயத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்து ஜனங்கள் வயிறாரஉண்டு பிழைத்துப் பலமடைந்து நம்தேச அபிவிருத்தியை நாடும்படிசெய்தல் நம் ஒவ்வொருவருடைய கடமையாம். பசியென்னும் கொடிய இராக்ஷதனை நுழையும்படி விட்டுவிட்டால் எல்லா விதத்திலும் நாம் துன்பப்பட்டுக்ஷீணமடையவேண்டிவரும். ஆகையால் விழிப்பாயிருந்து இக்கேட்டை வேரோடே களையவேண்டும்.

பத்திராதிபர்.

# செந்துருக்கை.

முன் செந்துருக்கையைப்பற்றி நம் பத்திரிகையில் ஒரு முறை எழுதப்பட்டிருந்தது நம்நேயர்களுக்கு ஞாபகத்துக்குவரலாம். அதனைப்பற்றிப் பின்னும் சில குறிப்புக்கள் எழுதுவோம். இச்செடியானது சோளக்கொல்லை, பருத்திக்காடு முதலிய புஞ்சைநிலங்களுக்குவேலியாகப் பயிர்செய்யப்படும். ஆடுமாடுகள் இப்புலங்களுக்குள் நுழைந்து பயிர்களைக் கெடுக்காத வண்ணம். கடப்பை கர்நூல் பல்லாரி முதலிய தெலுங்கு ஜில்லாக்களிலும் மதுரை திருநெல்வேலி முதலிய தமிழ் ஜில்லாக்களிலும் பயிர் செய்கிறார்கள். தெலுங்கு தேசத்தில் இதற்குக் கசுமாலு என்றும் நம் நாட்டில் குசும்பாச் செடியென்றும் பெயர். தெலுங்கு நாட்டார் இதன் முத்தையெடுத்து உமியை நீக்கிப் பருப்பை யந்திரத்திலிட்டு ஆட்டி ஆகாரத்துக்கு உபயோகமாகும்படி நேர்த்தியான எண்ணெய் எடுத்துப் பலகாரவகை தயார்செய்ய நல்லெண்ணெயைப்போல் பயன்படுத்துகின்றனர். தமிழர்களோ அவ்வாறு செய்யாமல் முத்தை இயற்கை நிலைமையிலேயே ஆமணக்கு முத்தை அவிக்கும் விதம் அவித்து எண்ணெய் எடுத்து விளக்கெரிக்கிறார்கள். சில மாதங்களுக்குமுன் கவர்ன்மெண்டு பாடனிஸ்டு மகா-ள-ள-ஸ்ரீ வி. கே. சுப்பராயரவர்கள் திருநெல்வேலி ஜில்லா ஓட்டப்பிடாரந்தாலூகா பொதியமுத்தூர் கிராமத்தில் அந்தாலூகா தாசில்தாரவர்கள் முன்னிலையிலும் குடிகளுடைய முன்னிலையிலும் செந்துருக்கை முத்தை இயந்திரத்திலிட்டு ஆட்டிக்காட்டி வாசனையான் எண்ணெயை எடுக்கவே, அருகில் நின்றவர்களனைவரும் மூக்கின்மேல்விரல்வைத்து மனமகிழ்ந்தனர். இம்மாதிரி யந்திரத்திலாட்டியெடுத்த சுத்த எண்ணெயை விட்டுப் பலகாரம் செய்யும் பட்சத்தில் நெய்யில் செய்ததுபோலவே வாசனையா யிருப்பதுமன்றி வாய்க்கும் ருசிகரமாயிருக்கும். எண்ணெய் எடுத்தபிறபாடு பிண்ணாக்கைத் தெலுங்குதேசத்தார் மாட்டுக்குத்தீவனமாக உபயோகிக்கிறார்கள். அம்மாதிரியாகவேமேற்குறித்த பொதியமுத்தூரில் மாடுகளுக்குவைக்கவே அவைகள் அதனை ஆவலாகத்தின்றன. அது கரும்புக்கு நேர்த்தியான எரு என்று இந்தியா கவர்ன்மெண்டு விவசாய ரசாயனசாஸ்திரியாகிய டாக்டர் லெதர் கூறுகின்றனர். செந்துருக்கைப்பிண்ணாக்குப் பாசனப் பயிர்களுக்கெல்லாம் பொதுவாகவே உரமாக உபயோ

கிக்களாம். இப்பிண்ணாக்குப் பல்லாரிஜில்லாவில் ஒருரூபாவுக்குமூன்று முதல் மூன்றரைமணங்குவரை விற்பனையாகின்றது. அவித்துஊற்றுகிற வழக்கத்தையனுசரித்து ஒருபடி எண்ணெயெடுக்க எட்டுப்படி கொட்டைவேண்டும். ஆனால் உமியோடுகூடிய 40 படி முத்தினின்று நாலரையே அரைக்கால்படி(4⅝)வாசனையான எண்ணெயும் 40 பவுன் பிண்ணாக்கும் யந்திரத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன. எண்ணெய் ஆட்டும்பொழுது பந்தத்தைக் கொண்டு உரல்குழியில் பொசுக்கினால் சொற்பம் கூடவே எண்ணெயெடுக்கலாம் ஆனால் எண்ணெய் புகை நாற்றம் எடுத்துவிடும். தெலுங்கு தேசங்களினின்றும் நல்ல முத்தாக வரவழைக்கும் பட்சத்தில் அதிகமாகவே எண்ணெய்காணும். கோயம்புத்தூர் திருச்சிராப்பள்ளி முதலிய ஜில்லாக்களில் கரிசல் மண்ணுள்ள புலங்களில் இச்செடியைக் குடியானவர்கள் பயிர்செய்யாமலிருப்பது மிகவும் ஆச்சரியமே. மதுரை ஜில்லாவிலும் இதனை ஏராளமாகக் காணோம். தெலுங்கு தேசத்தில் ஒற்றை மாட்டைக் கொண்டே எண்ணெய்இயந்திரத்தை வேலைசெய்கிறார்கள். மாட்டைக் கண்ணைக்கட்டிவிடுகிறார்கள். ஏனெனில் செக்குஓட்டுகிற ஆளிருப்பதும் இல்லாததும் அதற்குத் தெரியக் கூடாதென்பது அவர்கள் நோக்கம். ஓடாமல் நிற்கும்பட்சத்தில உடனே முதுகில் அடிவிழுமாகையால் அம்மாடு எப்பொழுதும் ஆளிருப்பதாகவே நினைத்து ஓடிக்கொண்டேயிருக்கும். ஆகையால் செக்கு ஓட்டுகிறவன் ஒருவனுடைய சம்பளம் லாபம். செக்கான் எண்ணெய் எடுப்பதிற் கருத்தாயிருப்பான். மாடு நிற்கும் பக்ஷத்தில் அதட்டி ஓட்டுவான். ஆகையால் இது விஷயத்தில் நம் தமிழ்நாட்டுக் குடியானவர்களும் கண்ணுங் கருத்துமாயிருந்து செடிகளை ஏராளமாகப் பயிர்செய்து நல்லஎண்ணெய் எடுத்து உபயோகித்துப் பயன் பெறுவார்களாக. எள் சாகுபடி விஷயத்தில் எடுத்துக்கொள்ளும் சிரமத்தினும் மிகவும் குறைவான சிரமமே போதுமானது. நம் ஜில்லாக்களில் ஏற்பட்டிருக்கும் பொது ஜனசங்கங்கள் இதனை நன்கு கவனித்துக் குடிகளுக்கு இதன் நன்மைகளை எடுத்துக் கூறுவதுடன்யந்திர மூலமாகவே எண்ணெயாட்டிக் காட்டி இதன் நன்மையைக் குடிகளடையச் செய்ய வேண்டும்.

பத்திராதிபர்.

# தாதுவர்க்க விளைவுகள்.

லோஹவர்க்கங்கள் விளைவதற்கு தாரணங்கள் இந்தியாவில் நிரம்ப இருக்கின்றனவென்பதுகொள்கை. பாடுபட்டு உழைக்காத குற்றத்தினால் அவை இருக்குமிடம் தெரியாமல் மறைந்துகிடக்கின்றன. அநாதிகால இந்தியர்கள் லோஹங்களில் வேலை செய்து சாமான்கள் முதலியன செய்வதில் கைதேர்ந்தவர்கள். பண்டைநாளில் இவர்கள் உபயோகியாதது நிலக்கரி ஒன்றேயாம்; இவர்கள் எடுத்துக் கையாளாத லோஹம் வேறெதுவுங் காணோம். விசேஷமாய்ச் சுரங்கங்கள்வெட்டி வேலை செய்யாததினால் இந்தியாவிலுள்ள லோஹச் செழிப்பு இத்தன்மையதென்று கண்டறியக்கூடவில்லை. இப்பொழுது நவீனமாய் ஆங்கிலேய துரைத்தனத்தாரால் வழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்பது 'அலூமினியம்' என்னும் படிக்காரஸத்து ஒன்றேயாகும்.

இரும்பு:—மலைகளுள்ள இடங்களிலெல்லாம் இரும்பு அகப்படுகிறது அனுகூலத்திற்குத் தக்கபடி கொஞ்சமாகவாவது அதிகமாகவாவது வேலைகளும் செய்யப்படுகின்றன. இரும்புவேலை செய்யும் பட்டறைகள் சரியானவை ஏற்படுவதற்கு அனுகூலங்களில்லாதிருக்கிறது. முக்கியமான கஷ்டமாவது இரும்புச் சன்னங்கள் அகப்படும் இடங்களில் அவற்றை யுருக்கி இரும்பாக்குவதற்கு வேண்டிய நிலக்கரி யகப்படுவதில்லை; சமீபத்திலுங்கிடைப்பதில்லை, ஆயினும் ரெயில்வேக்கள் அதிகரித் திருக்கின்றமையின் நிலக்கரியை தேவையான இடங்களுக்குச் சொற்ப செலவில் கொண்டுபோகக் கூடுமாதலின் இரும்புப்பட்டறைகள் ஆங்காங்கு ஏற்பட்டுச் செழிக்குமென்று நம்புகிறோம்.

தங்கம்:—மைசூர் ஸம்ஸ்தானத்திலும் நீலகிரிமலைகளிலும் வைநாட்டுமலைகளிலும் பொற் சுரங்கங்கள் வேலை செய்யப்படுகின்றன. இந்தவேலை உத்தரோத்தரா அபிவிருத்தியாகி இந்தியாவுக்கு லாபந்தருமென்று நம்புகிறோம் தற்போது சுரங்கவேலை செய்பவர்களெல்லாரும் ஐரோப்பிய முதலாளிகளேயாவர்.

ரத்தினங்கள்:—வஜ்ரகரூர் முதலான இடங்களில் சொற்பமாய்க் கிடைக்கினும் வியாபாரத்திற்கேற்ற வகையில்லை.

நிலக்கரி:— ஏறக்குறைய நூற்றிருபது வருஷங்களாக இந்தியாவில் நிலக்கரி வெட்டி எடுக்கப்படுகிறது; 1881-இ-ல் 58 நிலக்கரிக் கனிகளிருக்கின்றன; இவற்றிலிருந்து வருஷத்திற்கு ஒரு கோடிடன் நிறையுள்ள கரி எடுக்கப்பட்டு வந்தது; இந்த வேலை ரெயில்வே கம்பெனிகளைப்பொருத்திருக்கிறது; அவைகளுக்கு நிலக்கரி விசேஷச் செலவிருப்பதன்றி அவையில்லாவிடின் கனிகளினின்று தூரமான இடங்களுக்கு நிலக்கரியைச் சுலபமாய்க்கொண்டுபோக முடியாது. பெரிய நிலக்கரிச் சுரங்கம் பர்ட்வானிலுள்ள ராணிகஞ்ஜ் என்னும் பட்டணத்திலிருக்கின்றது; அங்கு ஈஸ்ட் இண்டியன் ரெயில்வே ஓடுகின்றது. மத்தியமாகாணங்களில் இரண்டு நிலக்கரிக் கனிகளிருக்கின்றன; இவற்றிலிருந்து எடுக்கப்படும் கரி கிரேட் இண்டியன்பெனின்ஸுலா ரெயில்வேக்கு உபயோகப்படுகின்றது; வாரோரா என்னுமிடத்திலும் மோஹ்பேன் என்னுமிடத்திலுமாக இரண்டு கனிகளிருக்கின்றன. கல்கத்தாவில் உபயோகிக்கப்படும் நிலக்கரியில் முக்காலே வீசம்வாசி இந்தியாவில் விளையும் கரியே. தெலுங்கு ஜில்லாவிலுள்ள சிங்கரேணி யென்னும் ஊரில் நல்ல நிலக்கரிச் சுரங்கங்களிருக்கின்றன; இங்கிருந்து பெஜவாடாவழியாய்ச் சென்னைக்கு நிலக்கரிவரும். மதராஸிலும் பம்பாயிலும் ஆங்கிலத்திலிருந்து நிலக்கரி வரவழைத்து உபயோகிப்பதே வழக்கமா யிருக்கின்றது. இனியாவது இது மட்டுப்படுமென்று நம்புகிறோம். இந்தியா நிலக்கரியில் சாம்பல் அதிகமாய் விழுகிறதாம். 135பவுன் வாரோரா நிலக்கரியுபயோகிக்குமிடத்து 100பவுன் ஆங்கிலக்கரி யுபயோகித்தாற் போதுமாம்.

தகரம் :— பர்மாவில் மேற்கியூபிடாவாய் என்னுமிடங்களில் விசேஷமாக அகப்படுகின்றது. இந்தச்சுரங்கங்கள் சீனக்காரருடைய ஸ்வாதீனத்திலிருக்கின்றன. பெருத்த வியாபாரம் செய்வதற்குப் போதுமான அளவுகனமான சன்னங்கள் அகப்படுவதில்லை.

இந்தியா.

---

# மழை.

## (ஒரு சீனதேசக் கதை.)

ஜய விஜயீபவ! பிரளயத்திற்குப் பின்னும் அவர் பெருமை செழிக்க! ராஜாதிராஜ, ராஜமார்த்தாண்ட, ராஜகோலாகல, ராஜபரமேச்வர, மன்னர்மன்னன், மண்டலாதிபதி, அமரகுமாரன், சக்ரவர்த்தி லீ ஐ ஓ பெருமானவர்கள் ஒருநாள் தமது பீங்கான் அரண்மனையின் அழகிய ஒரு பலகணிக்கருகில் நிற்கத் திருமனதுகொண்டார்.

[ சீனதேசத்தில் சக்ரவர்த்திக்கு விசேஷமாகப் பாலினும் வெளுத்து ஒளி வீசும் வெண்பீங்கானலாகிய மாளிகை பலவுள.]

அவருக்கு வாலிபப்பருவம். மனம் கல்லாய் உறைய நாள் ஏறவில்லையாதலால் இக்காலத்தில் மனம் கொஞ்சம் இரக்கமுள்ளதுதான். அந்தப்புரத்திலும் ஆடம்பரத்திலும் மூழ்கியிருப்பினும் அடிக்கடி அநாதைபரையும் அதிர்ஷ்டயீனரையும் குறித்து இரங்குவார்.

அவர் நின்ற அக்கருணத்தில் மழைபெய்தது. தாரைதாரையாக் கொட்டிற்று. கல்பனி பருக்கட்டியாய் விழ ஆரம்பித்தது அப்பொழுது தமது ஏழைப்பிரஜைகளைப்பற்றி அவருக்கு ஞாபகம் வந்தது. உடனே திரும்பினர். பெருமூச்செறிந்தார். வானம் பொழிவதற்குப் போட்டியாய் தாமும் கண்ணீர் உகுத்தார் எதிர் நின்ற அமாத்தியனை தமது திவ்ய ராஜநேத்திரங்களால் ஏறெடுத்துப்பார்த்தார். தக்ஷணம் அமாத்தியனான "ஸங் ஹி ஸாங்' சாஷ்டாங்கமாக கீழேவிழுந்து தண்டம் ஸமர்ப்பித்து, அவ்வாறு கிடக்கையிலேயே "ஆண்டே! திருவுளங்கொண்டதென்னென்று கடையேனுக்குக் கருணைபுரிக" என்று நாக்குழற நவின்றான்.

"இக்கொடிய மாரியில் தாங்கிப்பிடிக்கக் குடையிலான்கதி உள்ளினேன். அதினும் தலைமேல் கவிழ்க்கக்கூடைபோன்ற தொப்பியுமிலான் தன்மை எண்ணி ஏங்குகிறது என்மனம். நம்முடைய நகரத்

யாவிடில் நீ, நான், எல்லாரும் அந்தத் தோட்டக்காரனுக்கு முன்னதாக்வே சுணங்கன் வயிற்றில் துயில்வோம். ஈது அறிவாயாக" என்றார்.

அப்பொழுதுதான் பீ ஹீ வோவுக்கு ஸ்மரணை வந்தது. விஷயம் என்னென்று கேட்கப்புத்திவந்தது.

லங் பிங் டிங்: "தலையிற்கவிழ்க்கத்தொப்பிகூட இல்லாது மழையிற் செல்லும் மடையர்களை நினைத்து சக்ரவர்த்தியார் சகிக்கமுடியாத் துயரடைந்தனர். மேலும் அத்தகையர் தொகை கதிரவன் குடதிசை படியுமுன் அறிவிக்க ஆணை. அன்றேல் அடையும்கதியும் அறிவோம் இதற்கென்செயல் தகுமோ செய். சடுதி."

உத்திரவு. உத்திரவு என்று சொல்லிக்கொண்டும் இரண்டடிக் கொருதடவை திரும்பிப்பார்த்து மந்திரியாருக்கு தரைவரைகுனிந்து கும்பிட்டுக்கொண்டும் வெளியே சென்றான் பீ ஹீ வோ.

தன்னிருப்பிடம் சேர்ந்ததும் "அடே! அங்கே யார்? நாய்ப் பன்றி! பேய்! கழுதை! என்ன ஒன்றையும் காணோம்: என்று உறுமினான். சிறிது நேரங்கழித்து ஒருவன் பேன்தெறிக்க ஓடிவருவது கண்டு அவனை நோக்கி "அடே எருமைப் பன்னிந் நாய்க் கழுதைப் பெருச்சாளி! (இது ஒரேமிருகம் ஆகலின் ஒற்று இரட்டியது. இவ்வளவு அற்புதமான ஜெந்து இதைப்படிப்பவர் கண்டிருந்தால் எமக்குத் தெரியப்படுத்தவேண்டுகிறேன்.) நீ ஓடி துணைகாவலன் ஜூ-ஹர் ஸீங்மாவைக்கொண்டுவா. கொண்டுவா அந்தக்கிழட்டு நாயை ஒரு கவித்தாவில்" என்று பல்லைக்கடித்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் பயத்தினால் முகம் சல்லாவைப்போல் வெளுக்க, என்புகள் "நற நற" என்று சப்திக்க ஒடுங்கிய உடலினையும், நடுக்குற்ற தலையையும் உடையோனாய் ஒரு கிழவன் வந்துநின்றான். அவனை நோக்கி பீஹீ வோ, வந்தாய் படவா வா உன்னோடுகூட நாங்களும் சாவதற்கு வழி தேடுகிறாயா, பாதகா! நல்லது நல்லது துரோகி! கிழம்தானே, சாவு சீக்கிரம் வரும் என்கிற தைரியமா? இரு இரு. நீ சாக நான் பார்க்கமாட்டேன். உன்னைப்பதினாயிரம் துண்டமாய் வெட்டி பத்துப் பெருச்சாளிக்கு விருந்துசெய்கிறேன். என்ன சொல்லுகிறாய்? ஹைந்!



என்னடா குடியா! வெறியா! புலையா! வாயைத்திறவேனடா, தூடியா! அடா ஸர்வஹத்தீ சொல்லேன்." என சோனை மாரியாகப் பொழிந்தான். ஜூ-ஹர்ஸீங்மா (நாக்குலர்ந்து தடுமாற) "யஜ-யஜமான் என்னத்-த்தைச் சுட்டிக்கோபம் சொல்லுங்க செ செய்யற ஆக்கினைக்கி உ உள்பட்றேன். இல்லாட்டி ய யஜமான் சீ இத்தம் என்றான்"

பீஹீவோ "என்ன என்ன எருமே! நான் சொல்லவும் வேணுமோ நாயே. பிக்கின் நகரைக்காவல் செய்ய உனக்கா யோக்கியதை! பன்னிமேய்க்கத்தான் நீ லாயக். சீன தேசத்துச் சக்ரவர்த்தி தன் ராஜகண்களாலேயே பிரதானநகரமாகிய பீகினில் பிழையிருப்பதைக் கண்டுவிட்டார். இக்குறைக்கு யென்ன செய்வது? மழையில் தொப்பிவாங்கி அணியக்கூட ஐவேஜ் இல்லாத அயோக்கிய படவாக்கள் இங்கு இருப்பதைப்பார்த்து சக்ரவர்த்தி வருத்தப் பட்டாராம்; அம்மடையரின் தொகை வேண்டும். இன்னம் ஒரு மணி நேரத்தில் கணக்கு வரவேண்டும். இல்லாவிடில்"....இதற்குள்ளாகவே வெளியே ஓடிவிட்டான் ஜூ-ஹர்ஸீங் மா:

அப்பொழுதுண்டான இடியோசையும் மழுங்க உரத்த குரலாய் தெருக்காவலரை விளித்தான். அவ்வோசை அடங்குமுன்னரே புற்றிலிருந்து ஈசல் புறப்படுவதுபோல் தெருக்காவலர் திரண்டு வந்தனர்.

ஜூன் விஸ்தரித்த மிருதுவான குரலுடனேயே "ஏ! சாரைப் பாம்புக்குட்டிகளா! வாங்க. உங்களை பாதியைத்தூக்கிலே போட்டு அப்பளம் (புறம்) பாதியை சட்டியிலே போட்டு வறுக்கிறேன். பொ(பி)ணந்தின்னிப் பூச்சிகளா! பேஷ்! சவ்வாசு! தெருக்களை நல்லாப் பாக்கிரீங்க. மழையிலேயும் மனுசா (ள்) தொப்பி மாட்டிக்காமே ரோட் (டி) லே போராக. பார்த்துக்கிட்டா இருக்கீக. ராசாவரைக்கும் போயிருச்சு. தொப்பியில்லாமே ரோட்(டு)லேயோ வீட்(டு)லேயோ இன்னம் எங்கனேயோ யார்போனாலும் சரி. பிடிச்சுக்கட்டி அரைமணி நேரத்திலே கொண்டுவராட்டி (விடில்) பாத்துக்கிருங்க" என்று அடிவயிற்றை யெக்கி மூச்சுவிடாது உறுமினான். தெருக்காவலர்களும் பீக்கின்மாநகர் தெருக்கள்தோறும் சென்று மனைகளெல்லாம்புகுந்து மனிதவேட்டையாடத் தொடங்கினார்கள்.

மறி, பிடி, கட்டு, தள்ளு கொண்டுபோ என்னும் சத்தங்களை தெருக்களெல்லாம் நிரம்பின. சில ஜனங்கள் புதர்களில்பதுங்கினார்கள். சிலர் கிணறுகளில் இறங்கி ஒளிந்தார்கள். சிலர் மரமேறி மறைந்தார்கள். மற்றும் சிலர் கதவுமூலைகளை கதியென்றிருந்தார்கள். ஆயினும், இவர்கள் ஒருவராவது தப்பவில்லை. ஊர்க்காவலன் ஆக்ஞை சுக்ரீவ ஆக்ஞையென்று நாம்கேள்விப்பட்டிருப்பதினும் மேம்பட்டது.

எல்லோரையும் பிடித்து இடையன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு போவதுபோல மறித்துக்கொண்டுபோய் காவற்கூடத்தில் அடைத்தார்கள்.

ஜூர் ஸூங் மாவும் அவர்களுக்கு முன்பே அங்கு வருந்திருந்தான். துணைக்காவலன் தொகையென்ன? என்றான். 23456 என்றான் தெருக்காவலாள் ஒருவன். ஜூர் ஸூங் மா "அரசனுக்குமனக்கவலை உண்டாக்கிய இவ்வளவு பேரையும் அரைநொடியில் இருபுறத்தும் குறையுங்கள்" என்றான்.

சிறைக்கூடம்சிறிதுநேரத்திற்குள்23456 தலையுங்கால்களுமற்ற சீனர்களின் பிணக்குவியலால்நிரம்பியது (இப்பொழுதும் "இருபுறம் குறை" என்பதின் அருத்தம் இதைப் படிப்போர் அறியாவிடில் அதுவும் என் பாக்கியந்தான்.)

ஜூர் ஸூங் மா, பீ ஹீ வோ விடம் சென்றான். விஷயம் யாவும் விளம்பினான். பீ ஹீ வோ, லங் பீடிங்கிற்கு அறிவித்தான். அவன் மூலமாய் ஸங் ஹி ஸாங்கும் ஸமஸ்தமும் அறிந்தான்.

கதிரவன் குடகடற்படிய வாரம்பித்தான். மழையும் நின்றது தென்றல் காற்று கிளம்பி மரங்களை மிருதுவாய் அசைக்க நீர்த்துளிகள் வைரக்கற்களையும் பழித்து வீழ்ந்தன. பனிமலர் நறுங்கமழ் பரப்ப ஆரம்பித்தது. விருக்ஷங்களின் சிகரங்கள் அத்தமிக்கச் செல்லும் அருக்கனால் பொன்மயமாக் காட்டப்பட்டன. உத்தியானவனம் முழுவதும் பொன்னிறம்பொலிந்து நறுங்கமழ் நிறைந்து விளங்கிற்று.



அமரகுமார மண்டலேசுவர மகிபதி சக்ரவர்த்தி 'லீ ஐ ஓ'வும் மீண்டும் பலகணிக்கெதிரே நின்று இவ்வினிய காட்சியைக் கண்களால் அருந்துவான் என நின்றார். இத்தருணத்தும் அப்பெருமான் அநாதையரை மறந்தாரில்லை.

ஸங் ஹீ ஸாங் கை நோக்கி "நல்லது கதிரவன்குடகடற்படுமுன் கணக்கிட்டுக் கூறக்கடவனல்லனோ நீ" என்று திருவாய் மலர்ந்தனர்.

"ஸர்வபுவன ஈசுவரனாகிய தங்களது அபீஷ்டப்படி அடியேங்கள் காரியத்தை முடித்துவிட்டேம்" என்றனன் ஸங்ஹிஸாங். (இதைப்படிப்பவர்களே! அவன் எவ்வண்ணம் இருந்து பதில் மொழிந்தான் என்று மீளவும் எழுதி இடம்அடைக்க எனக்குப்பிரியமில்லை. நீங்களும் மறந்திருக்கமாட்டீர்கள். மறந்தீர்களானால் இவ்வளவோடு நிறுத்திவிடுங்கள்.)

லீ ஐ ஓ சக்கரவர்த்தி: "அன்னவர் தொகை என்? உண்மையே உரைக்க. சிறுபிழை யிருப்பினும் சிரம் நினதன்று."

ஸங் ஹீ ஸாங்: "இப்பீக்கிங் மாநகர் முழுதும் இப்பொழுது தலைக்கணியத் தொப்பியும் இல்லா தௌர்பாக்கியர் ஒருவரேனும் இல்லை. இது திருவுளத்தின்பொற்கமலபாதங்கள்சாட்சியாகசத்தியம்" என்று வெகுவிநயமாய்க்கூறி சக்ரவர்த்தி பாதங்களைக்கைகளால் தடவிக் கண்ணில் ஒற்றிக்கொண்டான்.

இத்துணைநேரம் வாடியிருந்த முகமானது (சந்திரன் உதயமானதும் அவனுக்குப்போட்டியாக, பற்கள் வெண்ணிலாவென்னப் புன்சிரிப்புக்கொண்டதால் பிரகாசித்தது. அவர் அப்போதடைந்த சந்தோஷத்திற்கு அளவும் உண்டோ! புண்ணிய நகரே! புனிதபூமி! இவ்வாறு இன்பம் இனைப்பெற்ற மகிதலசீன மாக்கட்கிறைவனாய் யானடைபாக்கியம் யார்க்கேஉளது! எனஉள்ளங்குளிர்ந்தனர். சக்கரவர்த்தி இச்சந்தோஷ சமாசாரத்தைச் சபைகூட்டி யறிவிக்க சபையோரும் களித்தார்கள்.

இவ்வாறு சிறிதுநேரம்செல்லலும் அமாத்திய ஸங் ஹி ஸாங்கை சக்கரவர்த்தி வரவழைத்து "நந்தேசத்தையும் நம்மவரையும் நம்மை

யும், அநாகரீகத்திலிருந்து இன்னம் வெளிக்கிளம்பவில்லை யெனப் பிதற்றும் ஐரோப்பியபேரரசுகளுக்கு நம்துராஜ்யம் எப்படி ஆளப் பட்டுவருகிறதென்பதையும் நம் பிரஜைகளின் சுகவாழ்வையும் பற்றி யறிந்து கொள்ளும்படியாக இவ்விஷயத்தை நமது ராஜாங்கப் பத்திரிகையில் பிரசுரித்து அநுப்பிவிடு. முக்கியமாய் மூன்று சக்ரவர்த்திகளுக்கும் (ஜர்மன், ரஷியன், பிரிடிஷ்) அநுப்பத்தவறுதே" என ஆக்ஞாபித்தார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு தர்பார் கூடிற்று. அத் தர்பாரில் இவ்வளவு செழிப்பாகும்படி ஆட்சிபுரிய தமக்குத் துணை புரிந்த உத்தியோகத் தலைவர்களுக்கெல்லாம், கௌரதாப்பட்டங்களும், சின்னங்களும், மெடல்களும் அந்தஸ்துக்குத் தக்கவாறுசக்கரவர்த்தி அளித்தார்.

இதில் ஸங் ஹி ஸாங், லங் பி டிங் இருவரும் மா. சீ. த டி. சி. (மாட்சிமைதங்கிய சீன, தங்க,டிராகன், சிநேகர்) என்றபட்டமும், பீ ஹீ வோ, சீ.வெ. டி.சி. (சீன. வெள்ளி,டிராகன் சிநேகர்) பட்டமும் ஜுர் ஸீங்கா ஒரு வெண்கல டிராகன் பதக்கமும் பரிசுபெற்றார்கள்.

(டிராகன்-யாளிபோன்ற முகங்கொண்டு ஊர்வன வகுப்பின்பாற்படும் ஓர் கொடிய ஜந்து. இது சீனர்களால் ராஜதேவதையாகவும் கருதப்படுவதால் அங்கிலேயர் "ஸெண்ட்ஜார்ஜ், மிக்கேல் என்பதைச்சேர்ப்பது போல எல்லாப்பட்டத்திலும் பரிசிலும் இதைச் சேர்ப்பார்கள்.

**A. M. துரைசாமி ஐயர் B. A.**

# முத்து.

"மரகதம் பவளமே நீலம் வச்சிரம் பதுமராகம்
விரவிய தரள மேகோ மேதகம் புருடராகம்
உரவிய காந்திவிட்டே உமிழும்வை டூரியந்தான்
பெருகிய நவ மணிக்குப் பெயரிவை ஆகும்என்ப."

இவற்றுள் "தரளம்" என்பதே முத்து. தரளம், மௌத்திகம், நாவி, திரட்சி, மணி, முத்தாபலம், ஆரம், நித்திலம், முத்தம்—இவை முத்தின் மறு பெயர்களாம். முத்து நவரத்நங்களில் சேர்ந்ததாயினும் பவளம் ஒழிந்த மேற்கண்ட ஏனைய ஏழு இரத்தினங்களைப்போல் சுரங்கங்களினின்றும் வெட்டியெடுக்கப்படும் கல்லன்று. இஃதொரு கடற்படு திரவியம் என்பது, "திரைக்கடற் படுவ உப்பு, செய்யவெண் பவளம் வெண்முத் திரைத்தெழும் சங்கக் கோலைஇவ் வைந்தும் என்னலாமே" என்பதாலுணரலாகும்.

## முத்துப் பிறக்கும் இடம்.

ஆயினும், பரஞ்சோதி முனிவர் "முத்து தலசம் (நிலத்திற் பிறப்பது) என்றும் சலசம் (நீரிற்பிறப்பது) என்றும் இருவகையாகி சங்கு, மேகம், மூங்கில், பாம்பின்தலை, பன்றிக்கொம்பு, யாளியின் (அல்லது சிங்கத்தின்) புயம், பதிவிரதைகளின் கழுத்து, கொக்கின் கழுத்து ஆகிய பதின்மூன்றிடங்களினின்றும் பிறக்கின்றதென்றும் இவற்றுள் கடைசியில் கூறிய மூன்றிடங்களிலும் பிறக்கிற முத்துக்கள் கிடைப்பது அருமை என்றும் கூறுகிறார்.

"தக்கமுத் திரண்டு வேறு: தலசமே சலசமென்ன.
இக்கதிர் முத்தம் தோன்றும் இடம் பதின்மூன்று:சங்கம்,
மைக்கரு முகில், வேய், பாம்பின் மத்தகம், பன்றிக்கோடு,
மிக்கவெண் சாலி, இப்பி, மீன்தலை, வேழக் கன்னல்,
கரிமருப், பைவாய்மான்கை, கற்புடை மடவார் கண்டம்
இருசிறைக் கொக்கின் கண்டம், என.கடைகிடந்த மூன்றும்
அரியன."....................(திருவிளையாடற்புராணம்.)

இவற்றுள் சிப்பி, சங்கு, முகில், மீன் இவற்றினின்றும் உண்டாவன நீரின் சம்பந்தமுடையன. மற்றவை தலசமாகும்.

பரஞ்சோதி முனிவர்க்குப் பலநூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த "திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்" இயற்றிய செல்விநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பியாரும்,

"தண்தரளத் தியல்வகுப்பிற் பிறப்புப் பாம்பில்,
சங்கினில், மீனின்தலையில் தழைநெற் றாளில்,
ஒண்டொடிமங் கையர்களத்தில், யானைக்கோட்டில்,
உயர்கழையில், காகவா கனர்திண் தோளில்,
கொண்டலில், இப் பியில், ஏனக் கொம்பில் இக்கில்,
கொக்கில், எனப் பகர்வர்வியப் பிப்பி முத்தால்."

என்கின்றார். இதில் "ஐவாய் மான்கை" என்ற இடத்தில் "காகவாகனர் (சனீசுவரன்) திண்டோள்" எனக் கூறப்பட்டது. ஆகவே முத்தின் பிறப்பிடம் இதுகாறும் கூறியவற்றால் பதினான்காகும்.

இவற்றுள் மேகத்தின் முத்து இளஞ்சூரியன் நிறமும், மூங்கில் முத்து மழைத்துளி நிறமும், பாம்பின் முத்து நீலநிறமும், பன்றிக் கொம்பின்முத்து இரத்த நிறமும், நெல்லின்முத்து பச்சைநிறமும் மீனின்முத்து பாதிரிப்பூ நிறமும், சிப்பி முத்து பளபளப்புடன் கூடிய வெண்மை நிறமுங் கொண்டதாம். நிற்க.

முற்கூறிய பதினான் கிடங்களைத்தவிர மற்றும் கமுகு, வாழை பசுவின்பல், சந்திரன், உடும்பு, நத்தை, தாமரை, முதலை என்னும் எட்டு இடங்களினின்றும் முத்து உண்டாகும் என்பது பின்வரும் தனிப்பாடலால் தெரிகிறது:—

"தந்தி, வராக மருப், பிப்பி, பூகம், தழை கதலி,
நந்து சலஞ்சலம், மீன்தலை, கொக்கு, நளினம், மின்னார்
கந்தரம், சாலி, கழை, கன்னல், ஆவின்பல், கட்செவி, கார்,
இந்து, உடும்பு, கரா, முத்தம்ஈனும் இருபதுமே."

ஆகவே இருபத்திரண்டு இடங்களிலும் முத்து உற்பத்தியாகும் எனத் தமிழ்நூலாசிரியர்கள் கூறியிருக்கின்றனர். அன்றியும், தற்காலம் வியவசாய இலாகாப் பரிசோதகராகிய ஸ்ரீ இராஜகோபாலநாயுடு அவர்கள் தென்னையிலும் முத்துஇருக்கும் விஷயத்தைத் தெரிவிக்கின்றார். ஆயினும், இப்பியினின்றும் முத்து எடுக்கப்படுவதே பண்டிதர் பாமரர் பலரும் கேள்விமூலமாகவும் நேரிலும் அறிந்த விஷயமாதலின், இப்பி முத்தைப்பற்றியே இப்பொழுது சில கூறுவாம்.



## முத்து உண்டாகும் விதம்.

"இப்பி" என்பது முத்துச்சிப்பி என்று சொல்லப்படும் ஒருவகை ஜலசரம். இவ்விப்பிகளின் சரீரத்தினிடையில் மிருதுவான தோல் இருக்கும். இத்தோலைச்சுற்றி இருமருங்கிலும் கடினமான ஓடுகள் கவிந்திருக்கும். சிப்பிகளின் மிருதுவான மெல்லிய தோலுக்கும் கடினமான ஓட்டுக்கும் இடையே ஒருவகைப் பொடிமணல் புகுந்து அவற்றை உபத்திரவப் படுத்தும். படுத்தவே அவை எரிச்சல் பொறாமல் அப்படியும் இப்படியும் புரளும். அவ்வாறு புரளுகையில் சுண்ணாம்புத் தன்மையுள்ள ஓர்வகை நீர்வெளிப்பட்டு முற்கூறிய நுண்மணலைக் கவிந்துகொள்ள அதுவே முத்தாகுமென்பர். இம்மர்மத்தை சீனர்களே முதல் முதல் அறிந்தவர்களென்றும், முத்து அகப்படாக் காலங்களில் கூட அவர்கள் இப்பிகளைப் பிடித்து மணலை அவற்றின் மெல்லிய தோலுக்கும் ஓட்டுக்கும் இடையே புகுத்தி அவற்றிற்குஎரிச்சல்உண்டாக்கி முத்தினைச்செய்து பெருத்த லாபம் அடைந்து வருகிறார்களென்றும் தெரியவருகிறது.

சிப்பிகளின் சரீரத்தினின்றும் அவற்றின் முட்டைகள் வெளிப்படாக் காலத்து அம்முட்டைகளும் மேலே சொன்ன பொசிநீரால் மூடப்பட்டு முத்தாகமாறுவதுண்டு.

ஆனால், பர்த்ருஹரிபோன்ற வடநூற்புலவர்கள் "மழைத்துளி பெற எதிர்பார்த்த வண்ணமாக சிப்பி நீர்மட்டத்திற்கு மேலே வந்து தன் அகட்டைத் திறந்து கொண்டிருக்கும் என்றும், மழைத்துளி ஒன்று அதனுள் விழுந்தவுடன் அது ஓட்டை மூடிக்கொண்டு உள்ளேசென்றுவிடும்என்றும் அவ்வானத்துளியேபிறகு வண்முத்தாகின்றதென்றும் கூறுகிறார். சுவாதி நக்ஷத்திரம் உச்சத்திலிருக்குங் காலைச் சிப்பியகட்டில்விழும் விசும்பிற்றுளியே மிக விலையேறப்பெற்ற முத்தாம்.

## சிப்பிகள் அகப்படக்கூடிய இடங்கள்.

வெண்முத்தினும் சிப்பிகள் விசேஷமாய் இலங்கையில் மன்னார் குடாவிலும், இந்தியாவில் தூற்றுக்குடிக்கருகிலும், அராபியாவில்

பாரஸீகக் கடலிலும், போர்னியூவுக்கடுத்த ஸுலு தீவுகளிலும், கருமுத்தீன்பன காலிபோர்னியாவிலும், மஞ்சள்முத்தீன்பன பனமாக் கால்வாயிலும் கபிலநிறமுத்தீனும் இப்பிகள் மெக்ஸிகோவிலும் காணப்படுகின்றன.

## முத்துக்குளித்தல்.

கடலில் மிக்கஆழத்தில் முத்துச்சிப்பிகள் கூட்டம்கூட்டமாகப் பாறைகளில் தொத்திக்கொண்டிருக்கும். இவற்றைப்பெற்று முத்துக்கள் எடுக்கும் விதம் இன்னதென இலங்கை முத்துச்சலாப விஷயங்களைக்கொண்டு ஒருவாறு அறியலாகும். அவ்விஷயம்வருமாறு:—

இலங்கையில் முத்துச் சலாபம் பிப்ரவரி மாதம் தொடங்கி ஏப்பிரல் மாதாரம்பத்திற்குட் முடிவுறும். முத்துக்குளிப்போர் பெரும்பாலும் சிங்களவர்களும் இந்தியர்களுமே. இவர்கள் இளம்பிராயம் முதல் நீர்க்குள்ளேயே நெடுநேரம் நிற்கவும் நன்றாய் நீந்தவும் பயின்றவர்கள். ஆயினும் இவர்கள் பிழைப்பு என்றும் அபாயகரமானதே. ஏனெனில், கொம்பன் சுறுவினாலும் ஏனை நீர்வாழும் பிராணிகளாலும், கடற்பூண்டுகள் சிக்கிக்கொள்வதனாலும் இவர்களுக்கு மரணம் நேர்வதுண்டு. ஆதலின் இன்னோர் தாம் முழுகுவதற்குமுன், சுறுவாயைக் கட்டுவதில் கைதேர்ந்தவர்களெனத் தாம் கருதிய மலையாளத்து மந்திரவாதிகளை வரவழைத்து அவர்களிடம் ஆரூடம் கேட்டபின்பே முழுகத்தொடங்குவார்கள். மந்திரவாதியின் வார்த்தையில் குளிகாரர்களுக்குத் தேவதா விசுவாசம். இம்மாந்திரீகர்கள் அந்தந்த ஜாதியார்க்குத்தக்கபடி சடங்காசாரங்கள் ஏற்படுத்தித் தாமும் சுறுக்களை அப்புறப்படுத்த ஓர்வகை விரதம் அனுஷ்டிப்பார்கள். விரதத்தை மாந்திரீகனும் அனுஷ்டித்த விஷய மறிந்தாலொழிய அவர்கள் முழுக முன்வரார்களாம். முத்தெடுக்கச்சென்ற படகுகள் திரும்பும்வரை மாந்திரீகன் மந்திரம் ஜபித்துக்கொண்டு உபவாசத்துடன் இருப்பன். சில வேளைகளில் மந்திரவாதியும் படகேறிச் செல்வதுண்டு. இவன்மட்டும் தம்முடன் வருவானாயின் தம் காரியம் லாபகரமாயும் இடையூறின்றியும் இனிது நிறைவேறுமென்பது குளிகாரர்களின் கொள்கை. மாந்திரிகர் குளிகாரரிடத்துமட்டுமேயன்றி வியாபாரிகளிடத்திருந்தும் மிக லாபம் பெறுகின்றனர். நிற்க.



“சாஸ்திராயசா ஸஹாயச்சா” என்றபடி குளிகாரர்களுக்கு மந்திரவாதிகள் அனுஷ்டிக்குமாறு கூறுவனயாவும் ஒருவிதமாய்ப் பார்க்கில், நன்மைக்கு ஹேதுவான காரியங்களாகவே இருக்கின்றன. எங்ஙனமெனில், குளிகாரன், முழுகுமுன்னே உபவாசத்துடனிருந்து முழுகும்போது மந்தரித்துத்தந்த விளக்கெண்ணெயைப் பூசிக்கொண்டு கடலில்இறங்கவேண்டுமென விதிக்கப்படுகின்றான். வயிறு ஆகாரத்தால் நிரம்பியிருப்பின் வாந்தி முதலிய உபத்திரவமுண்டாவதுடன் சுலபமாகக் குளித்தெழும்பவும் கூடாமற் போகுமன்றோ? அன்றியும், பசபசவென்று உவர்நீர்ப்பட்ட மாத்திரத்தில் தேகம் அரிப்பெடாதிருத்தற்கு விளக்கெண்ணெய்ப் பூச்சும் வேண்டியதுதானே. நிற்க.

குளிகாரர்கள் கரைக்கு எட்டுமைல்தூரம்வரை படகுகளில் கூட்டம் கூட்டமாகச்செல்வார்கள். ஒவ்வொரு படகிலும் மாலுமியைத்தவிர இருபதுபேர்கள் இருப்பார்கள். இவ்விருபது பேர்களில் பத்து மனிதர்கள் படகு ஓட்டவும் முழுகுவோரைக்குறித்த காலத்தில் தூக்கியெடுக்கவும் நியமிக்கப்பட்டவர்கள். எஞ்சிய பதின்மரும் குளிகாரர்களே. இவர்கள் ஐவர் ஐவராக மாறிமாறி வேலைசெய்வார்கள். முழுகுவோர் முன்கூறியபடி எண்ணெய்ப்பூச்சினராயும் கோவணம்தரித்தவராயும் இறங்குவார்கள். இவர்கள் தாம் எளிதில் இறங்கிச்செல்வதற்குதவியாய் 40 இராத்தலுக்குக்குறையாத பெருங்கற்களை உபயோகிக்கின்றனர். ஒவ்வொருபடகிலும் கனமுடைய ஐந்தாறு கற்களேனும் இருக்கும். இக்கற்கள் அடிபரந்தும் நுனிகுவிந்தும் கயிறுகள் கோக்கத் துவாரங்கள்கொண்டும் இருக்கும். பிறைச்சந்திரன்போற் செதுக்கப்பட்ட கற்களும் உபயோகிக்கப்படுவதுண்டு. முழுகும்பொழுது முழுகுவோன் கல்லிற் கட்டப்பட்டிருக்கும் கயிற்றை வலதுகால் விரலினால் பிடித்துக்கொண்டு, இடதுகால் விரலால்தான் எடுக்கப்புகும் இப்பிகளைப் போட்டுக்கொள்ள ஒருவகை வலைப்பையை இறுகப்பிடித்துக்கொள்வான். பின்பு அவன் கல்லில் கட்டப்படாத மற்றொரு கயிற்றையும், கற்கயிற்றையும் தனது வலதுகையாற் பற்றிக்கொண்டும் காதில்மெழுகு திணித்துக்கொண்டும் நாசித்துவாரங்களை இடதுகைவிரல்களால் இறுக அடைத்துக்கொண்டும் தண்ணீர்க்குள் சில சமயங்களில் 100 அடி ஆழம்வரை

கூடமுழுகுவான். முழுகி அடியிற்சென்றதும் காலில்மாட்டிய வலையை எடுத்துக் கழுத்தில்மாட்டிக்கொண்டு விரைவாகவும் சாதுரியமாகவும் எவ்வளவு சிப்பிகள் அள்ளக்கூடுமோ அவ்வளவையும் அதனுள் அள்ளிப்போடுவான். தடவைக்கு 100 சிப்பிகளுக்குக்குறையாமல் அள்ளுவனும். அவன் நீரில் அமிழ்ந்தி நிற்பதெல்லாம் 120 விநாடியிருக்கும். மூன்று அல்லது நான்கு நிமிஷத்திற்கதிகம் எவனும் நீரில் அழுந்தியிருக்கமுடியாது. மூச்சுத்திணரும் சமயத்தில் அவன் தான் இறங்கிய கல்லின் பேரில் மீண்டு ஏறிக்கொள்ளாமல் கிழே நின்றபடியே வலதுகைக்கயிறுகளைமட்டும் இழுத்து அசைத்து ஆட்டுவான். இதுவே அவன் தன்னை வெளியில் தூக்குமாறு அறிவிக்கும் அடையாளமாகும். இக்குறிப்பைப் படகோட்டிகள் அறிந்து படகில் அமைக்கப்பட்டிருக்கும் இராட்டினத்தின் வழியாய் கல்லில் கட்டப்படாதிருக்கும் கயிற்றை இழுத்து அவனைமேலே தூக்கிக் கொண்டு வந்து விடுவார்கள். பிறகு அவன் விட்டு வந்த கல்லை அதன் கயிற்றால் மேலே இழுத்துக்கொள்வார்கள்.

முத்துக் குளிக்கச்செல்லுவோர் சூரியன் உதிக்கும்முன் முத்திருக்கும் பாறைபோய்ச் சேர்ந்து கடல்நீர் வெது வெதுப்புடன் இருக்கும் நேரமாகிய சுமார் 7 மணிக்கு முழுகத் தொடங்கிச் சுமார் 12 மணிக்குக் கரைசேரப் படகேறுவார்கள். 12 மணிக்குப் பிறகு அவர்கள் குளிப்பதில்லை. நாள் ஒன்றுக்கு அவர்கள் நாற்பது அல்லது ஐம்பது தடவை முழுகுவார்கள். திரும்புகாலில் படகு கரையில் உள்ளோர் கண்ணுக்குத்தென்படும் தூரத்திலிருந்து குண்டு போடப்படும். இது படகு சாவதானமாத் திரும்பிவந்த சுபசமாசாரத்தைப் அதன் சொந்தக்காரர்கள் அறிவதற்கான அடையாளமாம். படகுகள் கரை சேர்ந்ததும் அதில் உள்ளன யாவும் சூரியன் அஸ்தமிக்கு முன் கீழ் இறக்கப்பட்டுவிடும். குளிகாரர்கள் தம் கூலியாக முத்துச்சிப்பிகளில் நான்கில் ஒரு பங்கேனும் தக்க பொருளேனும் பெறுவர். பிறகு எஞ்சிய சிப்பிகள் ஆயிரம் ஆயிரமாக ஏலத்தில் மிகுந்த தொகைக்குக் கேட்போர்க்கு விற்கப்படும்.

சிப்பிகளைப்படகினின்றும்இறக்கியவுடன் அவைசொந்தக்காரர்களால் இரண்டு அடி ஆழமுள்ள குழியிலாயினும், வேலிசூழ்ந்தசதுக்க



நிலத்திலாயினும் மணல் சிறிதும் படாதபடி பாய்களின்மேலில் கொட்டிவைக்கப்படும். அங்கிருந்தபடியே அவை நன்றாய் அழுகி உலர்ந்து சாகும். உலர்ந்த பின்னரே அவற்றினின்றும் முத்துக்களைச் சேதமின்றி எடுக்கக்கூடும். அவை உயிருடனிருக்கும்பொழுதேனும் அழுகி உலருமுன்பேனும் திறக்கப்பட்டால் முத்துக்குச் சேதம் மிகுதியும் உண்டாகும். ஏனெனில் உயிருடன் இருக்குங்கால் சிப்பிகளை எளிதில் உடைக்கமுடியாது. கத்தியல்கொண்டு உடைத்தாலோ முத்துத் தெறித்துப்போம். நிற்க.

சிப்பிகள் நன்றாக அழுகுங்கால் எழும் துர்நாற்றம் சகிக்கத்தரமன்று. ஆபினும் அவற்றினின்றும் எதிர்பார்க்கும் இலாபமே இந்நாற்றத்தை ஒரு சிறிதும் பாராட்டாமல் சந்தோஷமாகவேசகிக்கச்செய்து கருமத்திற் கண்ணுயிருக்கச்செய்து விடுகின்றது. நீரில் சிப்பிகளை வேகவைத்தும் முத்துக்கள் பெறுவதுண்டு. இதற்குக்காரணம் யாதெனில், முத்துக்கள் சில சமயங்களில் சிப்பிகளின் ஓடுகளில்இராமல்அவற்றின் சரீரத்திலேயே தங்கி நின்றுவிடுவதே. நிற்க.

சிலோன்வாசிகள் முத்துக்களைத் துளையிடுவதிலும் மாலையாகக் கோத்துக் கட்டுவதிலும் கைதேர்ந்தவர்கள். அவர்கள் முத்துத் தூளாலாகிய பொடியைக்கொண்டு முத்துக்களைத் துலக்கி மெருகிடுவார்கள்

இதுகாறும் கீழைத் திசையோராகிய இந்தியரும் சிங்களவரும் முத்தெடுக்கும் விதம் கூறினோம். இனி, மேலைத்திசையராகிய வெள்ளையர்கள் அது பெறும் விதம் அறிவிப்போம்:—

இவ்விஷயத்தைப்பற்றிச் சொல்லப்புகுமுன் இதனை வாசிப்போர் அறியவேண்டிய முதலாவது சங்கதி ஒன்றுளது. அஃதியாதெனில்,— உள்ளே ஒரு சொட்டு நீர்கூட இல்லாமல், நன்றாய் உலர்ந்திருக்கும் அரிக்கும்சட்டி ஒன்றையெடுத்து ஓர் தொட்டி ஜலத்தில் தலைகீழாக வைத்து அமிழ்த்தினால், ஜலம் அச்சட்டிக்குள் சிறிதேதூரம் மேற்கிளம்புமன்றி முழுதும் உட்புகுந்து அதனை நிரப்புவதில்லை. அச்சட்டியை அசைக்காமல் அஃதிருந்தபடியே மேலே தூக்கி ஜலத்தினின்றும் எடுத்துப்பார்த்தால் இவ்வுண்மை இனிது

விளங்கும். அச்சட்டியினுட்புறத்தில் வாயு நிறைந்திருத்தலே அதனுள் ஜலம் ஏறாததற்குக் காரணமாகும்—என்பதே.

இம்மர்மத்தை அநுசரித்து ஹால்லி என்ற ஆங்கிலேயன் ஒருவன் குளிமணி (Diving bell) ஒன்று முதன்முதல் இயற்றினான். அஃதொரு பிரமாண்ட கோவில் மணிபோன்றது. மரத்தினாலாகியது. அம்மணியின் உட்புறத்தில் முழுகுவோர்கள் உட்காரப் பீடம் கொண்டது. அப்பீடங்களில் குளிகாரர்கள் பாதாதிகேச பரியந்தம் ஜலத்தை உள்ளே புகவிடாத ஓர்வகைக் கவசம்பூண்டு உட்கார்ந்து கொள்வார்கள். பின்னர், அம்மணியின்வாய், கீழ்நோக்கும்படி வைத்து அதனை ஜலத்துக்குள் மெதுவாகப்படகில் உள்ளோர் இறக்குவர். மணிக்குள் வாயு நிரம்பியிருக்குங் காரணத்தால் நீர் உள்ளே சென்று நிரம்பாது. மணிக்குள் இருப்பவர் விடும் மூச்சு சீக்கிரத்தில் விஷக்காற்றாக மாறாதிருக்கவும் சுவாசம் தாராளமாய் விடவும், போதுமான சுத்தவாயு பீப்பாய்களின்மூலமாய் முன்னுக்கு முன்னாலேயே இறக்கிவிடப்பட்டிருக்கும் அப்பீப்பாய்களிலிருந்து அவற்றுள் பொருத்தப்பட்டிருக்கும் தோற்குழாய்கள் மூலமாய் மணிக்குள்ளிருப்போர்க்குச் சுத்தவாயு கிடைத்துக்கொண்டிருக்கும். இம்மணியிலும் சிற்சில குறைகள் இருந்தன. ஆனால், காலஞ்செல்லச்செல்லக் குளிமணிகள் சதுரவடிவாயும் முழுகுவதற்கான வசதிகள் யாவும் குறைபற வாய்ந்தவைகளாயும் ஸ்மீட்டின் முதலிய சாஸ்திர பண்டிதர்களின் ஆராய்ச்சி வன்மைக்கும் மதிநுட்பத்திற்கும் தக்கவாறு இரும்பினால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. ஆதலால் மேலைத்திசையோர்கள், கோவணத்துடன் மூழ்கிக் கஷ்டநிஷ்டூரங்களுக்குள்ளாகக் கூடிய நிலைமையில் உள்ள இந்திய குளிகாரர்கள் போல சிரமப்படாமல் மிகுந்த ஸௌகரியத்துடன் உடைதரித்தே முழுகக்கூடும். ஆயினும் இந்திய சிங்களவர்கள், சாமர்த்தியத்திலும் சாதுரியத்திலும் மேற்றிசையோரினும் மிகமேல் போனவர்களென்றே சொல்லவேண்டும். எங்ஙனமெனில் இன்னோர், தம் கால் விரல்களைக் கொண்டே வெள்ளையர்கள் தம் கைவிரல்களால் பிடுங்கி எடுக்கும் பொருள்களை அவர்களினும் அதிதீவிரமாயும் எளிதாயும் எடுப்பார்கள். நிற்க,

(இக்குளி மணிகளின் உதவியால் முத்துமட்டுமேயன்றிப் பவளம், கடற்பஞ்சு, கடலில் மூழ்கிப் போனபொருள் முதலிய வற்றை



எடுக்கிறார்கள். அன்றியும் ஆறுகளிற்செல்லும்மரக்கலங்களைத் தடைசெய்யும் கற்களை எடுக்கவும் பாறையை இடிக்கவும், ஜலத்துக்கடியில் கட்டிடம்கட்டவும் இவைபெரும்பாலும்உபயோகிக்கப்படுகின்றன.)

பாலினீஷியாவில் உள்ள குளிகாரர்கள் கல்லினுதவியன்றியே கடலில் முழுகுவார்கள். இவர்களுள் ஆடவரினும் பெண்டிரே முழுகுவதில் சாமர்த்திய சாலிகளாம்.

## முத்தின் குணவிசேஷங்கள்.

முத்தின் பரிமாணம் அது பக்குவமாகச் செல்லும் காலத்திற்கேற்ப வேறுபடும். சாதாரணமாகச் சிப்பிகள் பருவமடைய நான்கு வருடங்களும் பூரண பக்குவமுற ஏழுவருடங்களுமாகும். உஷ்ணதேசங்களிலேயே உயிர்ப் பிராணிகளுள் பருமனுள்ளவை காணப்படுகின்றன. இவ்விஷயம் முத்துசம்பந்தப்பட்டமட்டிலும் ஒன்றேயாகும். ஏனெனில், உஷ்ணப்பிர தேசங்களில் காணப்படும் முத்துக்களே சேர்த்தியாயும் பருமனும் விலை மிகுந்தனவாயும் இருக்கின்றன. குளிர்ச்சியான தேசங்களிற் காணப்படுவன சிறு முத்துக்களே.

நட்சத்திரங்கள் போல ஒளியும் உருட்சியும் (காற்றேறு, மண்ணேறு, கல்லேறு, நீர்நிலை என்னும்) குற்றமில்லாமையும், கையினால் எடுத்தால் கெட்டியாயும் கண்ணுக்கு நன்றாய் இருத்தலும் ஸ்படிகம்போல்,இருத்தலும் உயர்ந்த நன்முத்தின் குணங்களாகும். இவ்வாறு குணங்களும் ஒருங்கமைந்த முத்துக்களை அணிந்தால் மூதேவியும் தரித்திரமும் அணிபவரை விட்டு நீங்குமென்றும், லட்சுமியும் செல்வமும் ஆயுளும் பிரபலிக்கும் என்றும் பெரியோர் கூறுவர்.

“ உடுத்திரள் அனைய காட்சி, உருட்சி, மாசின்மை, கையால்
எடுத்திடில் திண்மை, பார்வைக் கின்புறல், படிகம் என்ன
அடுத்திடு குணம்ஆறின்ன அணியின்மூ தணங்கோ டின்மை
விடுத்திடும் திருவந்தெய்தும் விளைத்திடும் செல்வம் வாழ்க்கை
—திருவிளையாடற்புராணம்

எவ்வெளவுக்கெவ்வெளவு வெண்மை,பளபளப்பு, திரட்சி, களங்கமின்மை நல்லநீர் பருமன் முதலிய வற்றுடன் கூடி ஓர்முத்து இரு

க்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது விலையுயர்ந்ததாகும். ஏறக்குறைய ஓர் அங்குலகனமும், இரண்டங்குலத்திற்கு அதிகமான நீளமும் உள்ள முத்தொன்று அராபியாவில் பதினைந்து லட்சரூபாய்க்குச் சமீபத்தில் வாங்கப்பட்டது. சர்வலட்சணங்களும் பூராயமைந்தது இந்தியமுத்தே எனத்தெரிகிறது. இம்முத்தில் ஒன்று தற்காலம் மாஸ்கோ பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இதன் இடை 28 காரெட்டுகள்.

## முத்தின்குற்றங்கள்.

"தங்கியமுள் ஏறுமுகம் கறுத்தல், செந்நீர்
    சார்வனமண் ஏறிடப்புத் திருகல் கோணை
மங்குறுசிப் பிப்பற்றுக் காக வன்னி
    மருண்டிருத்தல் குறைபத்தே"—திருவா—திருவி—புராணம்.

## உபயோகங்கள்.

(1) ஆடவர், பெண்டிர்—இளையோர், முதியோர்—ஏழைகள், செல்வவான்கள்—என்ற ஏற்றத்தாழ்வேதுமின்றி இதனை இந்தியர்களும் ஏனைச்சிலரும்மாலையாகக்கோத்தும், நகைகளிற் பதித்தும் அணிந்துகொள்ளுகின்றனர்.

(2) இஃதொரு அரிய வியாபாரச்சரக்காயிருப்பதுடன், மருந்துச்சரக்காயும் இருக்கிறது.

(3) எகிப்தியரும் பிரான்சியரும் பவளத்தை உபயோகித்தது போலவே முத்தையும் தங்கள் சிரோகவசத்திற்கும் யுத்தாயுதங்களுக்கும் சிறந்த அணிகலனைக் கொண்டனர் என்று தெரியவருகிறது.

4. மேற்றிசையோரிற் பலர் முத்துமாலையை மலடு நீக்கவும் திருஷ்டிகழியச்செய்யவுங் கூடிய ஓர் ரக்ஷையாகக் கருதி உபயோகிக்கின்றனர்.

5. பயனற்ற முத்துகளும் சிப்பிகளும் நீற்றப்பட்டு சுண்ணாம்பாக உபயோகிக்கப்பட்டு வருகின்றன.



6. பிரான்சிய ஸ்திரீகள் முத்துடன் சிலபொருள்கள்சேர்த்து ஓர் வகைத் தைலம் எடுத்து அதனை முகத்தில் பூசிக்கொள்வார்கள். இவ்வாறு செய்வதால் அவர்கள் நரைத்தலைப ராங்காலத்தும் முகத்திரை காணாதாம்.

7. முத்துச்சிப்பிகள் பொத்தான் செய்யவும் அநேக விதமான அலங்கார வேலைகள் செய்யவும் உபயோகமாகும்.

## நீத்திலம் உணர்த்தும் நீதிகள்.

8. இனி, முத்து சம்பந்தமாய் தாமாக விளங்கக்கூடியவையும், அன்றி உய்த்துணரத்தக்கவையுமான நீதிகள் சிலசங்குரைத்தல் மிகையாகாதென்றெண்ணுகிறோம்.

1. * "அளவிடவும் முடியாத ஆழ்கருங் கடலினுக்
        கடியினுட் குகையினுள்ளே
    அதிசுத்தமானபிர காசஒளி உமிழ்கின்ற
        அரியமணி பல உறுதல் போல்,
    ஒளிய புகழோங்கித் தும்தமது பெருமையும்
        உறைவிடமும் ஒருவராலும்
    உணரமுடி யாதபடி மறைநிலையில் உத்தமர்கள்
        உறைவர் பலர்" என அறியலாம்.

2. † பொங்கு திரைக்கடல்மேற் புன் துரும்பே தோன்றுதல்போல்
    இங்கெவர்க்கும் தோன்றும் இழிகுணமே—அங்குயர்ந்த
    முத்தெடுக்க வேண்டுபவர் மூழ்குவதுபோல் முயலின்
    உத்தமகு ணம்வெளியா கும்.

இதன்கருத்து என்னவெனில்,—சமுத்திரத்தில், பார்ப்போர் கண்ணுக்கு எளிதில் தென்படுவன அதில் மிதக்கும் இழி துரும்பு

---

* Full many a gem of the purest ray serene
The dark unfathomed caves of ocean bear—Gay.

† Errors like straws on the surface flow
He Who would search for pearls must dive below.

களை. அதுபோல ஒருவனுடைய தவறுகளை மேலெழுந்த பார்வையுடன் நோக்குவோர் கண்ணுக்குப் புலப்படும். ஆனால், அதில் முத்தை நாடுவோன் அப்புன் துரும்புகளைப் புறம்பே தள்ளி, அடியில் ஆழ்ந்து நோக்கல்போல் நோக்கினால் தான் அவனுடைய நற்குணங்கள் நன்கு விளங்கும்—என்பதே.

3. விலையேறப்பெற்ற நன் முத்து உவர்நீரும் புலால்நாற்றமுங்கொண்ட கடலில் சிப்பிவயிற்றில் தோன்றுவதுபோலவே நற்குண நற்செய்கையுடைய பெரியோர் இழி தலத்திலும் தோன்றல் இயல்பு. இதுபற்றியன்றோ "கள்ளி வயிற்றின் அகில் பிறக்கும் ஆன் வயிற்றின் ஒள் அரிதாரம் பிறக்கும்"— பெருங்கடலுள் பல் விலையமுத்தம் பிறக்கும் அறிவார் யார் நல்லாள் பிறக்கும் குடி" என்னப்பட்டது?

4. "நத்தையின் வயிற்றிலும் முத்துப் பிறக்கும் என்ற பழமொழியும் இவ்வுண்மையையே வலியுறுத்துகின்றதென்னலாம்.

5. ஆக்கும் அறிவான் அலது, பிறப்பினால் மீக்கொள் உயர்வு இழிவு வேண்டற்க" என்ற நீதியையும் முத்து கற்பிக்கின்றது. எவ்வாறெனில், முன்புரைத்தபடி, சேயார் முகத்துச் சென்றுதைக்கும் கழிமுடைப் புன்புலால் நாற்றம் புறம் பொதிந்தும் அகம்வதிந்தும் உள்ள, சிப்பியில் தோன்றிய காரணத்தால் முத்தை இழிவுபடுத்துவார் எவருமிலர், அதன் உயர்ந்த தன்மையையே பெரிதும் பாராட்டுவர். அதுபோல அறிவொழுக்கங்களிற் சிறந்த பெரியோர்கள் இழிகுலத்திற்றோன்றினாலும் அவர்களது குணஞ்செயல்களைப்பற்றிப் பாராட்டவேண்டுமேயன்றி அவர் தோன்றிய குலத்தின் இழிவு கருதி இகழலாகாது. நீதி வெண்பாவிலும்,

தாமரை பொன்முத்துச் சாமரைகோ ரோசனை பால்
பூமரு தேன் பட்டுப் புனுகு செவ்வா—தாமழல்மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என் ?"—என்று கூறியிருத்தல் காண்க.



6. மழைத்துளி ஒன்று பழுக்கக்காய்ச்சிய இரும்பினிற் படுமாயின் தன் உருவமே தெரியாமல் மறைந்து சுவருகின்றது. அதே மழைத்துளி ஓர் தாமரைஇலைமேல் தங்குமாயின் நீர் உருநீங்கி முத்து உருக்கொண்டுவிடுகிறது. அம்மழைத்துளியே சுவாதி நக்ஷத்திரம் உச்சத்தில் இருக்கும் சமயத்தில் சிப்பியின் அகட்டில் விழுமாயின், அத்துளி மிக்க வனப்பும் விலையும் வாய்ந்தமுத்தேயாகிறது. இதனால் அறிவும் பெருமையும் கொடையும் நட்பும் அதமர் சேர்க்கையால் அயர்ச்சியும் அழிவும், மத்திமர் சேர்க்கையால் பகிமைத்தோற்றமும், உத்தமர்சேர்க்கையால் ஓங்கு நல்லுயர்வும் உறலாகும் என்பது புலப்படும். சிநேகபாத்திரத் தியல்பைப்பற்றிச் சொல்லுங்காலையில் பர்த்ருஹரியார்

"காய்ந்தகரும் பொன்,வாவிக் கமலவிலை, கடற்சிப்பி
தோய்ந்தநீர் பெயர்கெடல், மேற் றோன்றல் முத்துதோன்றிடல்போல்
வாய்ந்ததமன் மத்திமனுத் தமர்தம்பால் மருவினர்கள்
ஆய்ந்துமேற் சொன்னபடி யனுபவிக்கப் பெறுவாரே"

எனக்கூறியிருக்கின்றனர்.

7. "இவ்விதம்சிருட்டியில் ஒவ்வொரு பொருளும் சிந்திப்பதற்காய் சிலகுறிப்புடையது. சற்குணமுடையோர் சற்றும் பயனிலா அற்பப் பொருளினும் அறநெறி காண்பார்."

ம. கோபாலகிருஷ்ணையர்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதி.

# கடினகவசிகள்.

(தொடர்ச்சி.)

## 3. காண்டாமிருகம்.

இவ்வசமந்தமும் அவலட்சணமுமான கறுப்பு மிருகம் கனத்ததோலும் நீள மூக்கும் நீண்டு வளைந்த பற்களும் கொண்டிருக்கும்காரணத்தால் பன்றியினத்தைச்சேர்ந்ததாகும். இம்மிருகத்திற்கு கிரேக்கபாஷையில் றைனொஸிரஸ் என்று பெயர். அப்பதத்திற்கு "மூக்கு கொம்பு" என்று அர்த்தம், மூக்கில் முளைத்த கொம்பு கொண்டதாதலின் அதற்கப்பெயரிடலாயிற்று. கண்டகம், கல்யானை—என்பன காண்டாமிருகத்தின் மறுபெயர்களாம்.

### இடம்.

உஷ்ணப் பிரதேசங்களிலேயே சஞ்சரிக்கும் இந்நாற்காற்பிராணி ஆசியாவில் வங்காளம், ஸயாம், கொச்சின் சைனா முதலிய இடங்களிலும் ஸுமித்திரா, ஜாவா முதலிய தீவுகளிலும் சஞ்சரிக்கும்; ஆபிரிகாவில் அபிஸீனியா, கேப்காலனியாதிய இடங்களில் அதைக்காணலாகும்.

### தோற்றம்.

உருவத்திலும் காத்திரத்திலும் வலிமையிலும்காண்டாமிருகம் யானைக்கடுத்ததென்னலாம். அதன் நீளம் முகத்தின் நுனிமுதல் வாலின் அடிவரை 12 அடி. உயரம் 5 அடி முதல் 7 அடி. உடலின் சுற்றளவு சுமார் 9 அடி இருக்கும். அதற்குத் தலைபருத்தும் கண்கள் சிறுத்தும் இருக்கும். இக்கண்கள் பாதி முரட்டுத்தோலினால் மூடப்பட்டனவாயும் மூக்கிற்கு அதிசமீபத்திலுள்ளனவாயும் இருக்கும். கல்யானையைப்போன்று மூக்கிற்குருகில் கண்படைத்த மிருகம் வேறு எதுவுமின்று. அதன் மேலுதடு ஒருவகைச் சிறுத்த தும்பிக்கையைப்போன்று நீண்டு கூராயும் இருக்கும். அதன் காதுகள் நிமிர்ந்து கூர்மையாயிருக்கும். அதன் உடம்பில் செவி நீங்கலாக மற்ற இடங்களில் மயிர் முளைத்திராது. அதன்தோல் கபிலநிறத்ததாய் தடித்து விறைத்துக் கட்டிகள் நிறைந்திருக்கும். அது தோளண்டையும் காலண்டையும் மடிந்து படிந்து தொங்கும். அதன் மூக்கில் உறுதியானதும் சிறிது வளைந்ததுமான கூரியகொம்பொன்றிருக்கும். அதன் நீளமும் சுற்றளவும் ஏறத்தாழ முறையே இரண்டரையடியும் பதினெட்டங்குலமும்



இருக்கும். இக்கொம்பு, மாடு, மான் முதலியவற்றின் கொம்புகள் பொருத்தப்பட்டிருப்பதுபோல கபாலத்துடன் பொருத்தப்படாமல் மூக்கினின்றே தோன்றிவளர்வதாகும். எதனைக் "கொம்பு" என்று கூறினேமோ அது வாஸ்தவத்தில் கொம்பன்று. தோலினின்றும் வளர்ந்து கொம்பு அல்லது எலும்புபோல் உரத்துத்தடித்த முரட்டுமயிர்த்திரளேயாம். அம்மயிர்க் கற்றையின் அடிப்பாகம் அதன் நுனிப்பாகம் போல் அடர்த்தியாயிராது. அதனை நார்நாராகக் கிழித்தெடுத்தல் இயலும். அவ்வாறெடுத்துப்பார்க்கின் அதற்குள்ள மயிர்த்தன்மை புலப்படும். அதன் கால்கள் குட்டையாயும் உரத்தும் பெருத்தும் இருக்கும். ஒவ்வொருகாலிலும் மூன்று விரல்களும் அவை ஒவ்வொன்றின் அடியிலும் ஒவ்வொரு குளம்பும் உண்டு. இக்குளம்புகள் முன்னோக்கியே இருக்கும். ஆபிரிகாவில் உள்ள காண்டாமிருகத்தின் தோலில் பெருமடிப்புகள் இரா. கழுத்தருகிலும் காலிலும் சிறுதிரைவுகளே உண்டு. அதற்கு இரண்டு கொம்புகள் இருக்கும். இவற்றுள் முன்னங்கொம்பே பெரிது. இக்கொம்புகள் சாதாரணமாய் தசைபோற் றளர்ந்தும் கோபமுறுங்காலத்தில் இறுகி விறைத்தும் இருக்கும். இருவகையான வெள்ளைக்காண்டாமிருகங்களும் ஆபிரிகாவில் உள.

### குணவிசேஷங்கள்.

இஃதொரு சாகபக்ஷணியாதலின் பிறர்க்குத் தீங்கிழைக்கும் சுபாவகுணமுடையதன்று. ஆயினும் கோபம் மூட்டப்பட்ட பொழுதும் ஏதேனும் ஒன்றை எதிர்க்கும் பொழுதும் அதனினும் தைரியமும் மூர்க்கமும் அபாயகரமுமான பிராணி வேறெதுவுமில்லையெனலாம். பார்வைக்கு மந்தமானதாக இருப்பினும் அதற்குச் செவிப்புலன் கூர்மை. நாசிப்புலனும் அதிகம். அஃதியற்கையில் அதிசாந்தமுள்ளதேயெனினும், அறிவும் படிவும் அதற்கில்லாக் காரணத்தால், அதனைச்சாதுவாக்குவது அசாத்தியமான காரியமாகும்.

### வழக்கங்கள்.

காண்டாமிருகம் மற்ற விலங்குகளுடன் சேர்ந்து வாழாமல் தனித்தே தன்பிறவிக்குணத்துடன் சஞ்சரிக்கும். அஃதாற்றங்கரைகளிலும் மரங்களடர்ந்து நிழலாயுள்ள காடுகளிலும் வசிக்கும். கனத்த தேகத்துடன் கூடியிருப்பினும் அது நன்றாய் நீந்தும். அது தூங்கவும் நடமாடவும் சதுப்பு நிலங்களே சரியான இடமாகும். அங்கு அது குட்டிகளோடு சஞ்சரிக்கும். கத்திவெட்டுக்கும் ஈட்டிக்குத்துக்கும் இடம்தராத அதன் *தோல் "கெட்டிரூப்

புப் பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசு மரத்தின் வேருக்கு நெக்குவிடு’தல்போல் சிற்சில பூச்சிகளின் கொட்டினால் உபத்திரவமுறுவதுண்டு. ஆதலின் அது தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுமாறு சேற்றிலிருந்து உழலும்.’

## இரை.

இலை தழை முதலியவைகளே கல்யானையின் இரையாகும். அதன் வலிமிகுத்த வளைகூர்கொம்பு தன் எதிரிகளை எதிர்க்கவும் தற்காத்துக்கொள்ளவும் தக்க ஓர் ஆயுதமாவதுடன் செடிகள் வேர் கிழக்கு முதலியவைகளைக் கிண்டுவதற்கும் உபயோகமாகும். காண்டாமிருகம் வேறெப்பிராணியும் புசிக்கமாட்டாத முட்செடிகளையும் முள்தழைகளையுமே முக்கியமாகப் புசிக்கும்.

## உபயோகங்கள்.

(1) கத்தியும் ஈட்டியும் ஊடுருவிச் செல்லமாட்டாத அதன் கனத்த சருமம் கேடகங்கள் செய்யவும் வார்களும் சவுக்குகளும் கிழித்தெடுத்துச் செய்யவும் உபயோர்கமாகும்.

(2) அதன் தோல் பதனிடப்பட்டுப் பல்வகைப் பொருள்கள்செய்யப்படும். பதனிடப்படும் மற்ற எந்த மிருகத்தின் தோலைக்காட்டிலும் கடினமானதும் உசிதமானதும் காண்டாமிருகத்தின் தோலே.

(3) இருப்புத்தகடுபோல் அதன் மேற்றோல் கடினமானதெனினும் அத்தோலுக்கடியிலுள்ள தசை அதிமிருதுவாயும் ருசிகரமாயும் இருப்பதால் அது காப்பிரிகளுக்கும் இந்தியரிற் சிலர்க்கும் சிறந்த உணவாகின்றது.

(4) மயிர்த்திரளாலாகியதெனினும் அதன் கொம்பு சிறந்த தந்தத்திற்குச் சிறிதும் உறுதியில் தாழாததாயும், நானாவிதமான பொருள்கள் செய்யவும் உபயோகப்படுகிறது.

(5) கல்யானையின் கொம்பு, குளம்பு, பல் முதலியனவும் வேறு சில உறுப்புகளும், அதன் இரத்தமும் ஔஷதமாகும்.

## வேட்டை.

காண்டாமிருகத்தை அதன் தோலுக்காகவும் இறைச்சிக்காகவும் அதன் குட்டிபெறவும் வேட்டையாடுவார்கள். அது இருக்கும் இடத்தை வேட்டைக்காரர்கள் எளிதில் கண்டுபிடித்துவிடுவார்கள். எவ்வாறெனில், அது



செல்லும்போது காட்டு மரங்கள் அதன் பாரத்தையும் பலத்தையும், மோதுதலையும் தாங்கமுடியாதனவைகளாய் நசுங்கி முறியும். அவ்வாறு முறிந்த மரங்களும் நசுக்குண்ட புதர்களுமே அது சென்ற மார்க்கத்தைக்காட்டும். ஆயினும் அதன் வேட்டை அதிக அபாயகரமானது. மிருகேந்திரனாகிய சிங்கத்தையும் புலியையும் தன் கொம்பின் ஒருகுத்தினால் ஆகாயத்தில் வீசியெறிந்து அவை நிலத்தில் விழும்சமயம் பார்த்துத் துவைத்துக்கொல்லும் இப்பிராணி, வேட்டைக்காரர்களை விட்டுவிடுமா? குதிரைமேலேறி இருந்தபடியே வேட்டைக்காரர்கள் கல்யானையைக் குண்டுபோட்டுச் சுடுவார்கள். குண்டு தேகத்திற் பதிந்த மாத்திரத்தில் அது பயங்கொண்டு உயிர்தப்ப ஓடாது அதிமூர்க்கத்துடன் அது எதிர்த்தவர்களைத்தாக்கும். அவலட்சணமான கால்களும் அறக்கனத்த தேகமும் உடைத்ததெனினும் ஓட்டத்தில் அதிவிரைவுள்ள குதிரையும் அதற்கீடாகாது. அதன் கொம்பிற்குத் தப்பி உயிர்பிழைப்பதருமை. காண்டாமிருக வேட்டைகளில், முதலில் குதிரைகளே அதன் கோபத்திற்குள்ளாகி கொல்லப்படும். ஏனெனில் மேலிருக்கும் மனிதனைக்கீழே வீழ்த்துமாறு குதிரைகளையே முதலிற் குத்தித்தள்ளிக்கொல்லும். இதற்குள்ளாகப்பிற குதிரைகளில் ஏறிவந்திருக்கும் அவனது நண்பர்களும் குண்டுமாரிபொழிந்து அதனைக்கொல்வார்கள். இவ்வாறு செய்யாவிடில் குதிரை இழந்தவனும் பிறரிற் சிலரும் குதிரையடைந்த கதியேனும் பெருங்காயமேனும் பெறுவது திண்ணம். இவ்வண்ணம் அதனைக் கொன்று அதன் தோல் மாமிசம் கொம்பு முதலியன பெற்றும் அதன் சிறு குட்டியைக் கூட்டிக்கொண்டும் ஊர் திரும்புவார்கள். அதன் குட்டி பெருநாயைப்பார்க்கிலும் பெரிதாயிராது. அது ஐந்தாறு வயசுவரை வளரும் கொல்லப்படாமலும் வியாதி முதலியவற்றால் பீடிக்கப்படாமலும் இருந்தால் காண்டாமிருகம் எண்பது வருஷத்திற்குக் குறையாமல் உயிரோடிருக்கும். காண்டாமிருகத்தைப் போதுபோக்கிற்காகவும் மிருகாசயங்களில் வைப்பதற்காகவும் வேட்டையாடுவது உண்டு.

(இன்னும் வரும்)

ம. கோபாலகிருஷ்ணையர்,
மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதி.

# கப்பல் தொழிற்சாலையும் கடல்வாணிபமும்.

"திரைகடலோடியுந் திரவியந்தேடு"

நமது நாட்டில் பண்டைக்காலத்தில் கடல்வாணிப மிருந்ததெனத்தெரிவிக்க மேற்சொன்ன வாக்கியமொன்றேபோதும். எப்பொழுது கடல்வாணிப மிருந்ததெனத் தெரியலாயிற்றோ அதற்கேற்றசாதனமான கப்பல்களு மிருந்திருத்தலே வேண்டும். மேலும் பத்துப் பாட்டிலொன்றாகிய பட்டினப்பாலையில்

"தீம்புகார்த்திரைமுன் றுறைத்
தூங்குநாவாய்துவன் றிருக்கை
மிசைக்கூம்பினசைக்கொடியு"

மென்று சொல்லியுளது. அதையுந்தவிர்த்து

"செல்கதிர்நுழையாச்செழுநகர்வரைப்பிற்
செல்லாநல்லிசையமரர்காப்பி
னீரின்வந்தநிமிர்பரிப்புரவியுங்
காலின்வந்தகருங்கறிமூடையும்
தென்கடன்முத்துங்குணகடற்றுகிருங்
கங்கைவாரியுங்காவிரிப்பயனு
மீழத்துணவுங்காழகத்தாக்கமு
மரியவும்பெரியவு"

இம்மாதிரியாகவும் கடியலூருருத்திரங்கண்ணார் சிறக்கப் பாடியுள்ளார். கடல்முகமாகக் குதிரைகள்வந்திறங்கின. மிளகுப்பொதிகள் வந்திறங்கின. தென்றிசைக்கடலிலுள்ளவும், கீழ்த்திசைக் கடலிலுள்ளவுமான முத்துப் பவளங்களெல்லாம் இத்தேசத்தையடைந்திருக்கின்றன. "அரியவும்" என்பதற்கு சீனம்முதலிய இடங்களினின்றும் வந்த கற்பூரம், பனிநீர், குங்கும முதலியனவும் என உரை எழுதியுள்ளார் ஆசிரியர் நச்சினார்க்கினியர். ஆகையால் பிறதேச



வர்த்தமானங்கள், வியாபாரங்கள் முன்னாளில் நமது நாட்டிலிருந்ததெனவே தெரியவருகிறது. கப்பல்களு மிருந்ததென விளங்குகிறது. இம்மாதிரியாகப் புராதனமாயிருக்கும் சரித்திரங்களை உற்றுநோக்குங்கால், வியாபாரவிஷயத்தில் இந்தியா மிக்க மேம்பாடடைந்திருந்ததென விளங்கலாகும். அதினிருப்பிடமும், அதைச்சுற்றியுமிருக்கும் எல்லைகளுமே அதின் மேம்பாட்டை நன்கு விளக்குகிறது. இந்தியா நடுவிலமைக்கப்பெற்று அதைச்சுற்றி நாடுகளுள. மேற்கே ஆப்பிரிக்கா, கிழக்கே ஆஸ்திரேலியா, ஈஸ்டர்ன் ஆர்கிபிலாகோ, இம்மட்டோ! மிகவும் விஸ்தீரணமான ஆசியாகண்டத்தின் வடபாகத்துடன் இவ்விந்தியா சேர்ந்திருக்கிறது. இவ்விந்தியாவைச் சுற்றியுமுள்ள கடற்கரையோ 4000 மைல்களுக் கதிகமென மதித்திருக்கிறார்கள். அதிலுண்டாகும் விளைபொருள்களும் ஏராளமானவை. இவற்றுடன் புத்திநுட்பமும், சுறுசுறுப்பும், கப்பலநடத்தும் தொழிலில் சாமர்த்தியமுமுடைய நமது முன்னோர்களும் வியாபாரங்களில் அபிவிருத்தியடைந்து நம் இந்தியா ஓர்காலத்தில் நிகரற்றதெனவிளங்கிற்று. அக்காலத்தில் ஆயிரக்கணக்கான துறைமுகங்களு மிருந்ததென வெளியாகிறது. அநேகமாய் ஒவ்வொரு துறைமுகத்திலும் கப்பல்தொழிற்சாலையு மிருந்தது. ஆனால் முற்காலத்தில் படவுகள் மரக்கலங்கள் இவைகளெல்லாம் மரங்களினாலேயே முக்கியமாய் தேக்குமரங்களால் செய்யப்பட்டுவந்தன. இரும்பு உருக்குத்தகடுகளால் கப்பல்கள் செய்கிறது அக்காலத்தில் இல்லையெனவே தோற்றுகிறது.

இந்தியா பிறநாட்டார்களுடனும் வாணிபஞ் செய்திருப்பதாக முன்னமே கூறியுள்ளோம். இவ்விந்தியாவின் வியாபாரம் ஆசியா கண்டத்துள்மட்டும் பரவினதன்று. சேர, சோழ, பாண்டியநாட்டார் ரோமாபுரியுடன் வியாபாரஞ் செய்திருப்பதாகத் தெரிகிறது. இம்மட்டோ! அமெரிக்கர், மலேயர், போர்னியோ முதலிய அநேகம் நாட்டார்களுக்கும இவ்விந்தியாவுக்கும் வர்த்தகப்போக்கு மிருந்ததாகத் தெரிகிறது.

கி. மு. 200-ம் ஆண்டில் அரேபியா, இலங்கை இவற்றிலுள்ள துறைமுகங்கள் குஜராத்தியர்வச மிருந்ததெனப் பழைய சரித்திரங்களால் அறியலாகும்.

கி. பி. 247-ம் ஆண்டில் பெரியஇந்தியக்கப்பல்கள், கீழ்ஆப்பிரிக்கா, அரேபியா, பெர்சியா, இவைகளின் துறைமுகங்களில், சகோத்ராவின் வடபார்சுவத்திலுள்ள இந்தியர்கள் கைவசநாடுகள், இருந்தனவென்ன ஒருவர் எழுதியுள்ளார்.

கி. பி. 399-ம் ஆண்டில், பெயர்போன சீன யாத்திரிகரான பாஹியன் தான் கங்கைநதிமுகத்துவாரத்திலிருந்து இலங்கைக்கும் இலங்கையிலிருந்து ஜாவாவுக்கும், ஜாவாவிலிருந்து சைனாவுக்கும், இந்தியர்களாலேயே செலுத்தப்பட்ட கப்பலில் ஏறிச்சென்றதாகச் சொல்லியுள்ளார்.

நமது நாட்டில் கடல்வாணிபம், கப்பற்றொழிற்சாலையுடனும் கப்பலோட்டும் மாலுமிகளுடனும் விசேஷித்திருந்தது என்பதைத் தெரிவிக்க மேற்கூறப்பெற்ற விஷயங்களெல்லாம் சான்றாகலாம். இதைப்பற்றி இனி விளக்குவதும் வீணே.

இம்மாதிரி சீரும் சிறப்பும் மகமதியர்கள் அரசாட்சிவரையிருந்தன. பின் க்ஷீணதசையை யடைய ஆரம்பிக்கலாயிற்று. பலவிதமான சண்டைகளும், மனவேறுபாடுகளும், மதக் கோட்பாடுகளும் இவ்விஷயங்களில் பிரவர்த்திக்க வொட்டாமல் தடுத்துவிட்டன. இச்சமயத்தில் அரபியர்களும், போர்த்துக்கல்தேசத்தாரும் இவ்வியாபாரவிஷயத்தில் தலையிட்டுக்கொண்டார்கள். அப்பொழுது துறைமுகங்களிலநேகம் தங்கள் பெருமையை இழந்தன. நாசம் அடைந்தனசில. அப்பொழுதடைந்த க்ஷீணதசையிலிருந்து இன்னமும் நாம் தலையெடுக்கவில்லை. முந்தி அடைந்திருந்த பெருமையைத் திருப்பிக் கொண்டுவர அநேக காரணங்களால் முடியாமற்போயிற்று. ஆனால் முழுவதும் நசித்துப்போகாது சொற்பம் சொற்பமாகவாவது வியாபாரம் நடந்துவந்தது.

ஜாட்ஸ் என்போர்களும் வேறு சில இந்தியர்களும் பெர்சியாவின் கரையிலே வேறு சில வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தினார்கள். அத்தேசத்துடன் திரும்பவும் வியாபாரஞ்செய்யத் தொடங்கினார்கள். மறுபடியும் நமது வாணிபக்கப்பல்கள் அரபிக்கடல் சீனக்கடல் இவைகளில் நடமாடின. 1398 கி. பி. யில் காம்பேயிலிருந்



16241

தும் மற்ற இந்தியத் துறைமுகங்களிலிருந்தும் திசையறியுங் கருவி, இன்னும் இவைபோன்ற சாமான்களை வைத்துக்கொண்டு கப்பல்களை நடத்திச் சென்ற இந்திய மாலுமிகளைப் பார்த்ததாக வாஸ்கோடகாமா என்பவர் எழுதியுள்ளார். கி. பி. 1510-ம் ஆண்டில் [illegible] ஜாவாவிலும் மலாக்காவிலும் கப்பற் கூட்டமிருந்ததைப் பார்த்துளாராம். ஆங்கிலேயரது ஆட்சிக்கு இந்நாடு வந்தபின்னுங்கூட நமது சொந்த வியாபாரமும் சொந்தக்கப்பல்களுமிருந்தனவெனவே வெளியாகிறது. குஜராத்தியர்கள், வியாபாரத்திலும், கப்பலோட்டுந்தொழிலிலும் தங்கள் திறமையைக் காண்பித்திருப்பதாய்க் காணலாகும். 17-ம் நூற்றாண்டில் சுமத்திராவின் வடக்கேயுள்ள அக்கீன் என்ற ஸ்தலம் குஜராத்துடன் வியாபாரஞ்செய்யும் பெரிய ஸ்தலமாகவிருந்ததென மாண்டிசிலோ என்ற ஒரு பிராஞ்சு யாத்திரிகர் சொல்லியுள்ளார். 18-ம் நூற்றாண்டின் பின்பாகத்தில், ராவ் கோர் ஆப்கச், என்பவரால் நிர்மாணிக்கப்பட்ட கப்பலொன்று அந்நிய தேசத்தவர்களது உதவியன்றி இங்கிலாந்து சென்று, திரும்பவும் மலையாளக்கரை வந்தடைந்ததாகவும் தெரிகிறது. டாட் என்பவர் சொல்லியிருக்கிறதாவது "19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்த பாவநகரின் பீஜசிங்குக்குத் துறைமுகங்களின் சிறப்பும் கப்பல்கள் நிர்மாணஞ்செய்வதுமே மிகுந்த சந்தோஷத்தையும், மன உற்சாகத்தையும் விளைவிக்கக்கூடியதாயிருந்தது."

இப்படிச்சீரும், சிறப்பும் பொருந்தி ஓங்கி வளர்ந்த நமது கப்பல் வாணிபமும், கப்பற்றொழிற்சாலைகளும் எந்நிலைமையை இப்பொழுது அடைந்திருக்கிறதென அறியாதோர் ஒருவருமே இலர். நமது கப்பல்கள் எங்குப்பார்த்தாலும் இருந்ததுபோய், நமது நாட்டின் அருகெல்லாம் அந்நியர்கள் கப்பல்கள் வந்து பெருகும்படியான காலம் இப்பொழுது வந்துவிட்டது. ஐயோ! ஒரு துறைமுகத்திலாவது, அல்லது சமுத்திரத்தின் ஓரிடத்திலாவது நமதென்று சொல்லக்கூடிய பெருமை வாய்ந்த கப்பலொன்றுமில்லையே! கடற்கரையோரங்களில் முன் ஓங்கி வளர்ந்த கப்பல் தொழிற்சாலைகளெல்லாம் எங்குச்சென்று மறைந்துவிட்டனவோ! தங்களைக்கவனிப்பவர் ஒருவருமில்லையே யென்று எவ்வண்ணம் வருந்தியதோ! அச்சாலைகளில்

வேலைசெய்து ஜீவனம் செய்தவர்களிலனேகர் கலப்பையை யெடுத்து வேலை செய்பவர்களானார்கள். அநேகர் வேலை யகப்படாது வருந்திப் பசியால் உழல்பவர்களானார்கள். வீரத்துடன் கூடிய சிலர் ஈஸ்ட் இந்தியன் புகைக்கப்பல்களில் சொற்ப சம்பளத்துக்கு வேலைக்கமர்ந்தார்கள். இவைகளுக்கெல்லாம் காரணமென்ன? நாம் பிறர் உதவியையே தேடுபவர்களானோம். பிறர் செய்யும் வேலைகளில் பிழைப்பவர்களானோம். மேனாட்டாரின் அநேக விதமான புதிய ஏற்பாடுகள் நமது நாட்டில் பரவலாயிற்று. நாகரிகத்திலும், சாஸ்திர உணர்ச்சியிலும் அவர்கள் மேன்மையை யடைந்து, தங்கள் வியாபாரத்தை விருத்தி செய்யப் புதுமாதிரியான ஏற்பாடுகள் செய்யலானார்கள். அவர்கள் ஏற்பாடுகளுக்குமுன் நமது பழைய ஏற்பாடுகளெல்லாம் நிற்க முடியாமற்போயிற்று. நமக்கும் சிரத்தைக்குறைவு உண்டாயிற்று. இல்லாவிடில் ஜப்பானியர்களைப்போல் விருத்தியடைந்திருக்கக்கூடாதா? காலத்துக்கேற்ற கோலங்கொண்டு, இப்பொழுது வந்திருக்கும் நூதன ஏற்பாடுகளையுமநுசரித்துக்கொண்டால் நமது வியாபாரக் கப்பல்களும், கப்பற்றொழிற்சாலைகளும் சிறப்படைந்திருக்காதா? அந்தோ! நமது கப்பல் தொழிற்சாலைகளில் பெரிய கப்பல்கள் செய்வதுபோய் மீன் பிடிக்கும் சிறு படகுகளும் கட்டுமரங்களும் செய்யுங்காலம் வந்துவிட்டதே. துறைமுகங்களெல்லாம் மீன் பிடிக்கும் சிறு கிராமங்களாய்விட்டனவே. நாம் முன்னிருந்த நிலைமையைப் பற்றி வாசிப்பவர்களும், கேட்பவர்களும் இஃதென்ன கதையாவென்று சந்தேகங்கொள்ளும்படியாய்விட்டதே!

ஆனால் இப்படி, நமக்கு இக்காலத்தில் சொந்தமான கப்பலும், கப்பல் தொழிற்சாலையுமில்லையே. அவைகளால் பிரயோஜனம் நமக்கு இருக்குமோ என்று யோஜித்தால் இருக்கிறதெனவே தெளிவாகும். முன்னிருந்ததைக்காட்டிலும் இப்பொழுது நமக்குக் கப்பலின் உபயோகம் அதிகமாகவேயிருக்கிறது. வரவர விருத்தியடைந்தும் வருகிறது. அந்நியதேச வர்த்தமானங்களும் யாத்திரைகளும் அதிகரித்துவருகின்றன. அவைகளுக்கேற்ற சாதகங்கள் மட்டுங் கிடையா. அந்நியர்களின் கப்பல்களின் உதவிகளையே இதற்குத் தேடவேண்டியிருக்கிறது. இதற்கு நாம் செலவழிக்கும் பணமோ



அதிகம். ஒரு வருஷத்தில் 25 கோடி ரூ. ஆகிறதென ஒருவிதமாய்க் கணக்கிட்டிருக்கிறார்கள். நமது நாட்டுப்பணம் நம்மவர்களுக்கு நன்கு பயன்படச் செட்டாய்ச் செலவழிக்கப் பலவிதமார்க்கங்களை அநேகர் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி 25 கோடி ரூ. நமது பணம் அந்நியர்கள் அநுபவிப்பது நாம் அறியாததா?

1. முதலில் கடல்வாணிபத்தைப்பற்றி யோசிக்கலாம். இது மிகவும் பெருத்த வியாபாரங்களுளொன்று. இது நாளுக்குநாள் விருத்தியாகிக்கொண்டேவருகிறது. எல்லாச் சீமையாருடன் இவ்விந்துதேசம் வியாபாரஞ்செய்கிறது. ஆசியாவுடன் மட்டிலுமன்று, இங்கிலாந்து, அமெரிக்கா, ஆபிரிக்கா முதலிய எல்லா நாடுகளுடனும் நம்நாடு வாணிபம் புரிகின்றது. பங்காளச் சரக்குகள் இங்கிலாந்துக்கு மட்டுமன்று. அமெரிக்கா, ஜெர்மனி, எகிப்து முதலியஎல்லாத் தேசங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. கத்திகள் இயந்திர மூலமாய்ச் செய்த சாமான்கள் இங்கிலாந்திலிருந்து மட்டுமல்ல, ஜெர்மெனி, யுனைடெட்ஸ்டேட்ஸ் முதலிய எல்லா இடங்களிலிருந்தும் வருகின்றன. இம்மாதிரியாகவே கண்ணாடி சாமான்கள் ஆஸ்டிரியாவிலிருந்து வருகின்றன. நாம் உடுக்கும் வஸ்திரங்கள், புடவைகள் பாவாடை மேலாக்குக்கள் இங்கிலாந்து, ஜெர்மெனி முதலிய இடங்களிலிருந்து வருகின்றன. இவைகளை யெல்லாம் நமது தேசத்துக்கு வரவழைத்துக்கொள்ள அந்நியர்களின் கப்பலையே உபயோகிக்கிறோமென்பது யாருமறிந்த விஷயமே. அவ்வண்ணமே நாம் பிறதேசங்களுக்கு அனுப்பும் பருத்தி, தோல், தானியங்கள் முதலியவைகளைப் பிறதேசத்தவர்களது கப்பலிலேயே அனுப்புகிறோம். அந்நியர்களிடம் வியாபாரஞ் செய்வதில் அந்நியக்கப்பல்களினுதவியைத்தேடுவதில் நிபந்தனைசெய்யக்கூடியவும், இந்தியாவின் கடல்வாணிபத்தை விருத்திசெய்துகொள்ள முக்கிய சாதனமாய் ஏற்படுகிற கப்பல்கள் சொந்தத்தில் இருப்பதற்கு உதவியாகவுமிருக்கக்கூடிய நாவிகேஷன் ஆக்டும் நமது நாட்டில் இல்லை. இங்கிலாந்தில், இம்மாதிரி சட்டம ஏறக்குறைய 200 வருடங்கள் இருந்தது நமக்குச் சொந்தக்கப்பல்கள் இல்லாததினால் அந்நியர்கள் கேட்கும் கூலியைப் பேசாதுகொடுத்து நமது சாமான்களை ஏற்றுமதி செய்யவேண்டியதாயிற்று.

2. இறக்குமதியான சாமான்கள் ஒரு துறைமுகத்து வந்திறங்கினகாலத்தில் நாட்டிலுள்ள எல்லாரும் அநுபவிக்க அவரவர்களிருக்கும் இடங்களின் சமீபத்துள்ள கடற்கரை யூர்களுக்குச்சாமான்களை அனுப்புவதே இரண்டாவது கவனிக்கத் தகுந்த விஷயமாகும். இம்மாதிரி செய்வது வியாபாரிகளுக்குத் தங்கள் சாமான்களைச் சீக்கிரம் விற்றுமுதல்செய்வதற்கும் தகுந்த சாதகமாகும். உதாரணமாகப் பட்டினத்திலிருந்து தூத்துக்குடிக்கனுப்புவது கொச்சி, திருவனந்தபுரம் இவ்விடங்களிலிருந்து தூத்துக்குடிபோவது இவைபோன்றன. இவ்வண்ணம் நாம் செய்துகொள்வதற்குக்கூட வேறு நாட்டாரின் கப்பலைத்தான் தேடுகிறோம். உலகத்திலுள்ள தேசங்களில் அநேகம் இம்மாதிரியான விஷயத்துக்காவது தங்கள் சொந்தக்கப்பலை யுபயோகப்படுத்திக்கொள்கின்றன.

3. அடுத்தவிஷயம் மனிதர்கள் கடல்மார்க்கம் வேற்று நாடு செல்வது:—ஆயிரக்கணக்கான மகமதியர்கள் மெக்காவுக்கும், அரேபியாவிலுள்ள மற்றப்புண்யஸ்தலங்களுக்கும் யாத்திரைசெய்கிறார்கள். நமது நாட்டிலிருந்து வேற்றுநாட்டில் போய் வேலைசெய்யவோ குடியிருக்கவோ 16000 ஜனங்கள்வரை ஒவ்வொரு வருஷமும் நமது நாட்டைவிட்டு அகல்கிறார்கள். அவ்வண்ணம் வேறு நாட்டில் உழைத்து ஒப்பந்தச்சீட்டு முடிந்த 7000 அந்நியதேசவாசிகள் நமது இந்தியாவை அடைகிறார்கள். காப்பித்தோட்டங்களில் வேலைசெய்யவும் அரிசியந்திரங்களில் வேலைசெய்யவும் கண்டி, பர்மா, ரங்கூன் முதலிய இடங்களுக்கு நமது இந்தியாவிலிருந்து வருஷா வருஷம் செல்லும் ஜனங்களோ அநேகர். இந்தியாவிலுள்ள ஐரோப்பிய சேனைசம்பந்தமாக 14000 முதல் 15000 இங்கிலீஷ் சிப்பாய்கள் இந்தியாவுக்கு வருகிறார்கள். இவ்வளவுதொகை இந்தியாவை விட்டு இங்கிலாந்துக்கும் போகிறது. இவ்வளவு ஜனங்கள் செய்யும் யாத்திரைகளையும் அந்நியர்களது கப்பல்களிலேயே செய்கிறார்கள். அவைகளில் நேரிடும் செலவுகளைக் கணக்கிட்டுப்பார்க்க 55½ இலட்சம் ரூவெனத்தெரியவருகிறது. சில இந்தியக்கப்பல் கம்பெனிகள் இப்பொழுது ஏற்பட்டு வருகின்றன. அக்கம்பெனிக்கப்பல்கள் செய்யும் வேலை சொல்பதூரப் பிரயாணஞ் செல்வதாய், இந்தியாவினுள்ளேயே



யிருக்கிற ஒரு துறைமுகத்திலிருந்து மற்றொரு துறைமுகம் செல்வதுமாகவே யிருக்கிறது. கப்பல்கள்கூட அந்நியர்களிடமிருந்து விலைக்காவது, கூலிக்காவது வாங்கப்பட்டவைகள்.

(4) கடைசியாகத் தபால்கள் அனுப்பும் விஷயம்:— பி. அண்டு ஓ ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார் இப்பொழுது இவ்வேலையை நடத்தி வருகிறார்கள். சுமார் 8 லட்சம் ரூபாய் ஒரு வருஷத்துக்கு அக்கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டுவருகின்றது. 1903-1904ல் கொடுக்கப்பட்ட ரூபாய் 7·லட்சத்துச்சொச்சம். இவ்வேலையை நடத்திவர இந்தியப் புகைக்கப்பல்கள் கிடையா.

இப்படி அந்நியர்களதுகப்பல் சார்பில் பிழைக்கும் நாடு இவ்விந்தியா ஒன்றே. உலகிலுள்ள ஒவ்வொரு நாடும், எவ்வளவு சிறிதாக விருந்தபோதிலும் சரியே, தங்கள் தங்கள் சொந்தக்கப்பல் இல்லாதிருக்கவில்லை. இவ்வண்ணம் எவ்வளவு நாட்கள்தான் வியாபாரத்துக்கு நாம் பிறர்உதவியைத் தேடிக்கொண்டிருப்போமோ! நமதுநாட்டைக் காட்டிலும் விஸ்தீரணத்தில் குறைந்த நாடுகளெல்லாம் சொந்தக்கப்பல்கள் இல்லாது இருக்கவில்லையே.

| தேசம் | விஸ்தீரணம் | கப்பல்களின்தொகை. |
|---|---|---|
| | சதுரமைல்கள் | 1019 புகைக்கப்பல்கள். |
| ஸ்விடன் | 172,876 | 1950 பாய்க்கப்பல்கள். |
| போர்ச்சுகல் | 35,490 | 77 புகைக்கப்பல்கள். |
| | | 497 பாய்க்கப்பல்கள். |
| கிரீஸ் | 25014 | 198 புகைக்கப்பல்கள். |
| | | 880 பாய்க்கப்பல்கள். |

இவ்வண்ணம் ஒவ்வொரு தேசத்தையும் கவனித்தால் அநேக தேசங்களில் சொந்தக்கப்பல்கள் உளவென்றே துணியலாகும். 1,766,642 சதுரமைல்கள் விஸ்தீரணமுள்ளவும், துறைமுகப்பட்டணங்கள் அநேகங்களுக்கு இருப்பிடமும், சமுத்திரசமீபம் வசிக்கும் ஏராளமான ஜனங்களுள்ளவுமான இவ்விந்தியாமட்டுமே அப்பெருமை வாயாதிருக்கும் நாடு. ஒரு புகைக்கப்பலாவது ஒரு

புனையப்பட்டாவது நமது சொந்தம், நம்முடைய நாட்டில் செய்யப்பட்டதென்று சொல்வதற்கிடமில்லாமற் போய்விட்டதே! அம்மாதிரி அமைக்கவல்ல ஒரு இஞ்சினீயராவது இந்நாட்டில் உளரோவென்பதும் ஐயமே. இவ்விஷயங்களிலெல்லாம் நன்கு தேர்ந்தவும் அவர்களது பெருமையும் கீர்த்தியும் எங்கணும் பரவியிருக்கின்றவும் உலகத்தில் நடமாடுகிற கப்பல்கள் பாதிக்குமேல் தங்களது என்று சொல்லிக்கொள்ளக்கூடிய ஆங்கிலேயரின் அரசாட்சிக்குள்ளிருந்தும் நாம் இக்கோலத்துடனிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதே. யோசிக்குங்கால் நமது நிலைமை பரிகசிக்கத் தகுந்ததேயல்லது வேறன்று.

ஏற்றுமதி, இறக்குமதி, தபால் கொண்டுபோவது, வருவது, மனிதர்கள் வேற்றுநாடு செல்வது, தம் நாடடைவது முதலியவிஷயங்களுக்கெல்லாம் பிறர் உதவியை நாடுகிறோம். அதற்காக அவர்களுக்கு, வருஷம் 25-கோடி ரூபாய் கொடுக்கிறோம். இவ்விஷயங்களைக்கொண்டு செலுத்தத்தக்க இந்தியக் கப்பல்களிருக்குமேயாகில் இவ்வளவு பணமும் நமக்கு லாபந்தானே. இப்பொழுது இப்பணம் அந்நியர்கள் கப்பல் தொழிலையும், கடல்வாணிபத்தையும் விருத்தி செய்கிறது.

மேலும் இந்தியாவில் கப்பல்தொழிற்சாலைகள் ஏற்படுத்துவது கடற்கரையோரமுள்ள கூலியாட்களுக்கு எவ்வளவோ பிரயோஜனத்தை அளிக்கக்கூடியது. வேலையில்லாது வருந்தும் அநேகம் கூலியாட்களுக்கு வேலைகொடுத்ததாகும். அதனுடன் நமது கைத்தொழிலும் வியாபாரமும் விருத்தியடைந்ததாகும். கைத்தொழில்களின் வேறுபாட்டை, இக்கப்பற்தொழிற்சாலை ஸ்தாபனம், உண்டுபண்ணி நன்மையை விளைவிக்கும். எப்படியெனில் எல்லோரும் ஒரே வேலையில்போய் மொய்த்துக்கொண்டால் எல்லாருக்கும் வேலையும் அகப்படாது. வேலை அகப்படுகிறவர்களுக்குக் கூலியும் அதிகம் கிடைக்காது. இப்படிப்பலவிதக் கைத்தொழிற்சாலைகள் நமது நாட்டிலிருக்குமேயாகில் எல்லோரும் பசியாமல் உண்ணலாம்.

ஆகையால் இவ்விஷயம் எல்லோராலும் கவனிக்கத்தக்கது. இவ்வண்ணம் பாழடைந்திருப்பதை எப்படி முன்னுக்குக்கொண்டுவரமுடியுமெனப் பலர் சந்தேகிக்கலாம். நமது கவலையீனத்தினாலேயும், அசட்டையினாலேயும் இம்மாதிரி நிலைமையை நமது வாணிபம் அடைந்திருப்பதேயல்லாமல் வேறொன்றில்லை. கவலையுடன் ஊக்கந்தோன்ற உழைப்போமாகில் நல்ல நிலைமைக்குக்கொண்டு வந்துவிடலாமென்பதில் கொஞ்சமும் சந்தேகமேயில்லை.



நமது முன்னோர்கள் இவ்வண்ணமா இருந்தார்கள்? அவர்கள் வியாபாரங்களிலும், கைத்தொழில்களிலும் சிறந்து விளங்கவில்லையா? அவர்கள் பின்னாலிருப்பவராகிய நாம் ஏன் இப்படிச்சீர்கெட்டு வாழவேண்டும்? தாங்கள்தாமே உழைத்துப் பாடுபட்டு ஜீவிப்பது மேன்மை பொருந்தியதென அறியாத இந்தியருமுளரோ? பிறர் உதவியைத் தேடுவதெனறால் அவர்கள் சொற்படி நடத்தல்வேண்டும், அவர்கள் சௌகரியம்போலச் செய்தல்வேண்டும். தானே தேடிய தாழம்பாயில் படுப்பவனுக்கிருக்குமானந்தம், பிறர்கொடுத்த தந்தக்கட்டிலில் படுப்பவனுக்கிருக்குமானந்தத்திலும் பதின்மடங்கு என்று நமது நாட்டில் பண்டைதொட்டு வழங்கிவரும் முதுமொழி மறந்துபோயிற்றோ? "போனகமென்பது தானுழந்துண்டல்" என்ற வாக்கியத்தை மறந்தோமே. ஆகையால் நமது முன்னோர்களின் கால்சுவடுகளைப்பற்றிச் செல்வோமாக. அவர்கள் செய்த செய்கைகளைக்கடைபிடிப்போமாக. நமது நாடு சிறப்படைய நாமும் உழைப்போமாக. நாம் எல்லாரும் வயிறார உண்ண வழி தேடலாம். அந்நிய தேசத்தார்கப்பல்களையே சார்ந்துகொண்டு நாம் விருத்தியடையவேண்டுமென்றெண்ணினால் சாத்தியமாகுமா? சொந்தத்தில் சில கப்பல்களாவது இல்லாத நாம் கடல் வாணிபத்தில் பெருமையடையமுடியுமா? அந்நிய தேசத்தவர்களின் உதவியைவேண்டுமளவு தேடிக்கொள்வது குற்றமாகாது அவர்கள் விருத்தியாக்கியிருக்கிற நூதன வழிகளையும் நாம் கைப்பற்றிக்கொள்ளுதலால், பாதகமாகாது. புதிதாய் ஏற்படுத்தும் கப்பற்றொழிற்சாலை, கப்பல் கட்டுதல் முதலியவைகளுக்கு ஆரம்பத்தில் அவர்கள் உதவியே வேண்டியிருக்கும்.

இப்பொழுது நமது இந்தியாவில் விருத்தியாயிருக்கும் கடல் வாணிபம் நமதென்று சொல்வதற்கிடமில்லை. அவ்வாணிபமும் நம்மால் நடத்தப்படுகிறதெனச் சொல்லவுங்கூடாது. அவ்வாணிபம்

பழைய முறைகளை அநுசரித்து நடப்பதுமன்று. அந்நியர்களது ஊக்கத்தினால் நடக்கும் வர்த்தகமேயாகும். நம்மவர்களிற்சிலர், எகிப்து, அரேபியா, பெர்சியா, இலங்கை, இன்னும்சில இடங்களுடன் நேராகவர்த்தகம் பண்ணுகிறார்கள். ஆனால் இவைகளெல்லாம் மிகச்சொற்பமே.

மேலும் இப்பொழுது நடக்கும் வாணிபமோ மற்றநாடுகளின் வியாபாரசாலைக் குரித்தான பதார்த்தங்களும், அந்நிய நாடுகளின் கைத்தொழிற்சாலைக்கு வேண்டிய பதார்த்தங்களுமேயாகும். நாம் உணவுக்கேற்ற சாமான்களையும், வேலைசெய்யப்படாத சாமான்களையும் வேற்றுநாட்டுக்கனுப்புகிறோம். அவர்கள் இந்தச் சாமான்களை வாங்கி அவர்கள் கைத்தொழிற் சாலைகளில் நன்கு வேலைசெய்து, நமக்கு உபயோகமாகக்கூடிய நிலைமையில் அனுப்புகிறார்கள். இதனால் அவர்கள் கைத்தொழிற்சாலைகளே விருத்தியாகின்றன.

மேலும் ஆராயுங்கால் நமது துறைமுகங்களில் அநேகம் அழிந்துவிட்டனவெனத் தெரியவருகிறது. மிகவும் சாமர்த்தியம் பொருந்திய வலின் இஞ்சினீரொருவரை, இந்தியாவில் கப்பற்றங்குமிடம், துறைமுகங்கள் இவைகளைப்பற்றி ரிப்போர்ட்செய்ய, கவர்ன்மெண்டார் 1870௵த்தில் நியமித்தார்கள். அவர் இந்தியா தீபகற்பத்தைச்சுற்றிலுமுள்ள இடங்களையெல்லாம் நன்குபார்த்து ரிப்போர்ட் செய்துளார். அவற்றையெல்லாம் நோக்கி நிச்சயிக்குங்கால், இவ்விந்தியாவினுள் 1000-க்கு மேலான கடற்றுறைப்பட்டணங்கள் இருந்ததெனத் துணியலாகும். 1889-ம் ௵த்து இந்தியன் துறைமுகச் சட்டப்படி 236 துறைமுகங்களிருந்ததாகத் தெரிகிறது.

| | |
|---|---|
| பெங்காளத்தில் ... ... | ...11 |
| பர்மாவில் ... ... ... | ... 7 |
| பாம்பே (உடன்சிந்தம்) ... | ...72 |
| சென்னை ... ... | ...146 |

இதைத்தவிர்த்து கொச்சி திருவாங்கூர் சமஸ்தானத்தைச்சேர்ந்த 19 துறைமுகங்கள். பிராஞ்சுக்காரருக்குச் சொந்தமானது 4.



ஆனால் இவைகள் மிகவும் சொற்பமான துறைமுகங்கள்தாம். தூரதேசத்து வர்த்தமானங்களிலும், பிறநாட்டு வாணிபங்களிலும் சம்பந்தப்பட்டவை. அநேகம் இறக்குமதியாகும் சாமான்களை இந்தியாமுழுவதும் எளிதில் பரவச்செய்து எல்லாரு மனுபவிக்கச்செய்வதற்கு உபயோகமானவையே. 1905—06 வருடத்து வியாபாரக்கணக்கை நோக்கினால் 17 துறைமுகங்களில் மட்டிலுமே அதிகத்தொகை வந்திருப்பதென்றும், மற்ற எல்லாத் துறைமுகங்களிலும் சேர்ந்து சொற்பத்தொகை வந்திருப்பதெனவும் அறியலாகும் அஃதாவது,

| | |
|---|---|
| அவ்வருடத்து வியாபார மதிப்பு | ரூ $264\frac{3}{4}$ கோடி. |
| 17 துறைமுகங்களின் வருமானம் | ரூ $262\frac{3}{4}$ கோடி. |
| மற்ற 219 துறைமுகங்களின் வருமானம் சுமார் | ரூ 2 கோடி. |

இப்பதினேழு துறைமுகங்களுள்ளும் மிகவும் அதிகவருமானங்களையுடையன கல்கத்தா, பம்பாய், ரெங்கூன், கராச்சி, சென்னை இவ்வைந்து துறைமுகங்களே. இவ்வைந்தும் அந்நியர்களினது ஊக்கத்தினாலேயே ஏற்பட்ட புதிதான துறைமுகங்களெனச்சொல்லலாகும். ஆயிரக்கணக்கான துறைமுகங்களைக்கொண்டிருந்த நமது நாடு இவ்வைந்து துறைமுகங்களுக்குள் வந்தடங்கினது கவனிக்கத்தகுந்ததே.

இவ்வண்ணமிருப்பது நலமென்றே தோன்றலாம். ஆனால்சிற்சில விஷயங்களைக் கவனிக்குங்கால் இவ்வண்ணமிருப்பது அத்துணைப் பயனை விளைவிக்குமெனத் தோற்றவில்லை. முன்னிருந்த அநேக துறைமுகங்கள் பாழாய்விட்டன. நமது கப்பற் தொழிற்சாலை இருந்தவிடமே தெரியாதுபோய்விட்டது. அவைகளில் வேலைசெய்து கொண்டிருந்த நமதாட்கள் வேலைகிடையாது அலைபவர்களானார்கள். இப்பொழுது அவர்களுக்கு அவ்வேலை எப்படிச் செய்வதென்பதுங் கூடத்தெரியாது. எப்படிச் செய்துவந்தோமென்றுங்கூட மலைக்கும் வண்ணமாய்விட்டது. சாமான்களை ஏற்றுமதி, இறக்குமதிசெய்யுந் தொழிலிலிருந்தவர்கள் மீன்பிடித்துவிற்று ஜீவனம்செய்ய யத்தனித்துவிட்டார்கள். இவ்வைந்து பெருந் துறைமுகங்களும் அந்நியர்களது முயற்சியினாலேயே ஏற்பட்டிருக்கின்றனவென்று முன்னமேயே தெரிவித்துளோம் கட்டடங்கள் நன்கு கட்டப்பெற்றுச் சீரும் சிறப்பும் வாய்ந்துள்ளன. ஏன் இம்மாதிரியாக இன்னுஞ்சில கப்பற்

றினறைகள் ஏற்படக்கூடாது சொற்பத்தொகைச்செலவுடன் மேம்பாடடையக்கூடிய இடங்கள் சமுத்திரக்கரையோரம்அநேகம்உள. இந்தியாவின்மேற்குப்பாகத்தில்அநேகம்துறைமுகங்கள்இருக்கின்றன. அவைகளைமுதல்தரமான இடங்களாகும்படி செய்யலாம். கொச்சியை மிகவும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவரக் கூடுமென்பதாகப் பெரிய இஞ்சினீர் ஒருவர் (Mr. Robertson) சொல்லியிருக்கிறார். மேலும் அவர் சொல்லியிருக்கிறதாவது “700டன் நிறையுள்ள 50 கப்பல்கள் நிற்கத்தாராளமாய் இடம் இருக்கிறது. இன்னும் எவ்வளவு இடம் வேண்டுமோ அவ்வளவு இடம் கொஞ்சம் தோண்டுவதினால், கிடைக்கலாகும். ஏற்ற மிறக்கம் மிகவும் சொல்பமாயிருக்கிறதினால் கிரேட் பிரிட்டினுள்ள கப்பல் நிற்கும் இடங்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தால் எவ்வளவு விஸ்தீர்ணமுள்ளவோ, அதைக்காட்டிலும் அதிக விஸ்தீரணம் இங்கே கிடைப்பதற்கு ஆட்சேபணையில்லை கொச்சியினது துறைமுகத்துக்கு வடக்கும், தெற்குமிருக்கிற நாரக்கால், அலப்பை என்று சொல்லப்பட்ட இரண்டு இடங்களும் கொச்சித்துறைமுகத்துக்கு அந்தாகச் சொல்லும் உலகத்தில் ஒரு துறைமுகத்துக்கும் இப்படிப்பட்ட துணைத் துறைமுகங்கள் கிடையா. இவ்விதம் கொச்சி, தென்னிந்தியா வியாபாரத்துக்கு மிகுந்த சாதகமான இடமாகிறது.” இம்மாதிரி சாதகத்துடன்கூடிய துறைமுகம் சென்னைத் துறைமுகத்திலும் சிலாக்கியமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். இரண்டாம் பட்சமான துறைமுகமாகததானிருக்கிறது.

இவ்வண்ணமகப்பற்றுறைகளை விருத்திக்குக்கொண்டுவருவதுடன், ஒவ்வொரு துறைமுகத்திலேயும் கப்பல் தொழிற்சாலையும் ஏற்படமுயலவேண்டும். இவ்விஷயங்களைப்பற்றிய முயற்சி நமது நாட்டில்லாது நமது துர்ப்பாக்யமென்றே எண்ணல் வேண்டும். அவ்வண்ணம் தொழிற்சாலைகள் ஏற்பட்டு, மரக்கலங்கள், புகைக்கப்பல்கள், தோணிகள் முதலியவைகள் செய்யப்படல் வேண்டும். இவ்வண்ணம் செய்து நம்மவர்கள் அநேகருக்கு வேலைகொடுத்ததாகும். இந்தியாவின் மேற்குக் கரையோரமுள்ள கொச்சி, விஜய துர்க்கம் இவ்விரண்டிடங்களும், கப்பல் தொழிற்சாலைக்கு ஏற்ற இடமாகும். கனரா, மலையாளம் முதலிய இடங்களிலிருந்து இவ்விடங்களில்



ஏராளமாயும், சுலபமாயும் அதிக செலவில்லாமலும் தேக்குமரங்கள் அடையலாகும். இப்பொழுதும் கல்கத்தாவிலும், பாம்பேயிலும் கப்பல் தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆனால் அங்குச் செய்யப்படும் வேலைகளெல்லாம் பழைய கப்பல்களைப் புதிப்பிப்பதும், செப்பனிடுவதுமே.

சென்ற முப்பது வருடங்களாகத்தான் ஜப்பான் இத்தொழில்களில் விருத்தியடைந்திருக்கின்றன. கப்பற்றொழில்கள் ஏராளமாய் இப்பொழுது அங்கே இருக்கின்றன. நவீனமாதிரிகளை அநுசரித்து அநேகம் கப்பல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் இத்தொழில் அங்கே விருத்தியாகிக்கொண்டே வருகின்றது. 34 ஏகர் விஸ்தீர்ணமுள்ள “ஒஸாகா” கப்பல் தொழிற்சாலையில் 4000 பேர்கள் வேலை செய்கிறார்கள். 50 ஏகர் விஸ்தீரணமுள்ள “கோபி” தொழிற்சாலையில் 8000 பேர்கள் வேலை செய்கிறார்கள். 80 ஏகர் விஸ்தீரணமுள்ள “நாகசாகி” தொழிற்சாலையில் 10,000 பேர்கள் வரை வேலைசெய்கிறார்கள் இவைகளைத் தவிர்த்து இன்னம் எவ்வளவோ தொழிற் சாலைகளும் கப்பல்கள் செப்பனிடுமிடங்களுமிருக்கின்றன. 700 டன் நிறையுள்ள இரும்பு, அல்லது உருக்குக் கப்பல்கள் செய்வதற்கு உதவி கிடைக்கிறது 10,000 டன் நிறையுள்ள வியாபாரக் கப்பல்கள் செய்வது அங்கு அதிசயமில்லை. ஒவ்வொரு வருஷமும் 200, 300டன்நிறையுள்ளகப்பல்கள், 800 டன்நிறையுள்ள இரும்புக் கப்பல்கள் அநேகமும் செய்யப்படுகின்றன. “நாகசாகியில்” 13,000 டன் நிறையுள்ள கப்பலொன்று செய்யப்படுகிறது.

இம்மாதிரி இந்தியாவில் கப்பல் தொழிற்சாலைகள் ஏற்படுவது, ஜனங்களுக்குப் பெரும் பேறேயாகும். 2, 3 கோடி ரூ. முதல் போடுவோமாகில் போதும். 4000 மைல்கள் விஸ்தீர்ணத்துக்கு மேற்பட்ட சமுத்திரக் கரையுடன் கூடியவும், ஒரு காலத்தில் மிகவும் முக்கியமான தெனப்பேரெடுத்த ஆயிரம் துறைமுகங்களுடன் கூடியவும், ஏற்றுமதி, இறக்குமதி செய்து வந்தவும் ஒரு துறைமுகத்துக்கொரு கப்பல்தொழிற்சாலையிருந்து ஏராளமான ஜனங்களால் கணக்கில்லாக் கப்பல்கள் செய்யப்பட்டுவந்தவுமான இவ்விந்தியாவின்

நிலைமை இப்பொழுதென்னமா யிருக்கிறதென்று முன் சொன்னவற்றை இப்பொழுது சுருக்கமாய் மறுபடி பார்க்கலாம்.

நமது கடல்வாணிபம் அநேகமாய் அந்நியநாட்டாரிடமே இருக்கிறதெனக் கூறலாகும். அவ்வாணிபத்துச் சம்பந்தப்பட்ட கப்பல்களிலநேகம் வேற்றுநாட்டார் கப்பல்களே. பழைய துறைமுகங்களிலனேகம் அழிந்தும் கெட்டுப்விட்டன. இப்பொழுது இந்நாடு ஐந்து பெரிய துறைமுகங்களுக்குள் வந்தடங்கிவிட்டன. பெரிய கப்பல்கள் செய்யக்கூடிய கப்பல்தொழிற்சாலை ஒன்றுமே, 1000 கணக்கான தொழிற்சாலையிருந்த இந்நாட்டில், இப்பொழுது இல்லையெனக் கூறலால். முன் கப்பல்தொழிற்சாலைகளில் பெரிய கப்பல்கள் செய்துவந்தவர்களில் அநேகருடைய பின்னோர்கள், இப்பொழுது மீன்பிடிப்பதற்குத் தகுந்த படகுகளும் கட்டுமரங்களும் செய்கிறார்கள். பிறநாட்டாரால் செய்யப்படும் வியாபாரம் அவர்கள் அபிவிருத்தியடைய ஏதுவாகவிருக்குமெனச் சொல்லவும்வேண்டுமா? அவர்கள் கைத்தொழிற்சாலைகள் நன்கு நடக்கச்சாதகமாகுமென்றும கூறவும்வேண்டுமோ? இதுமட்டுமா? முன் பெரியவர்த்தகர்களாயிருந்தோர்களும் சொந்தத்தில் கப்பல்கள் வைத்திருந்தோர்களும் வேற்றுநாட்டார்களுடைய கைபார்த்து அவர்கள் சார்பில் பிழைக்கவும் வேண்டியதாயிற்று.

1842-ம் வருஷத்துக்குமுன் மேல்நாட்டுவியாபாரம்மட்டும் அந்நியர்கள் வசமிருந்தது. கீழ்ச்சமுத்திரங்களிலெல்லாம் நமது கப்பல்களே மிகுதியாகக் காணப்பட்டுவந்தன. ஆபிரிக்கா, பெர்சியா, அரேபியா, சைனா, மலயன் தீபகல்பம், ஈஸ்டர்ன் ஆர்க்கிபிலாகோ இவைகளுடனெல்லாம், நமது கப்பல்கள்கொண்டே வாணிபம் செய்யப்பட்டுவந்தன. இறக்குமதியாகும் சாமான்களை, நாட்டிலுள்ளோரெல்லோரும் அநுபவிக்கும்வண்ணம் அயல்நாட்டுப் பலதுறைமுகங்களுக்கு நமது கப்பல்களிலேயே சாமான்கள் அனுப்பப்பட்டுவந்தன. 1869-ம் வருடம் சுவெஸ் கால்வாய் வெட்டப்பட்டது. கீழ்நாட்டாரையும், மேல்நாட்டாரையும் சமீபிக்கச்செய்ய அஃது ஏதுவானபின்பு மேல்நாட்டாரின் புகைக்கப்பல்கள் கிடைப்பது மிகவும் சுலபவாயின. அவைகள் கீழ்நாட்டாரின் வியாபாரத்தை எங்கும் பரவச்செய்யச்



சுலபமான மார்க்கமாயின. கீழ்ச்சமுத்திரம் நிறையப் புகைக்கப்பல்கள் வரத்தலைப்படவும் மாறுதல்களும் ஏற்படக்காரணமாயிற்று. ஏறக்குறைய 80 வருஷங்களுக்கு முன்னர்தான் இந்தியாவுக்கு முதல் முதல் ஸ்டீமர் வரத்தலைப்பட்டது. பின்னர் (1842) P. & O. கம்பெனியார் தபால்கொண்டுபோய்வருவதற்கு ஒப்பந்தம்செய்துகொண்டார்கள். அவைகளுக்கும் புகைக்கப்பல்கள்தாம் உபயோகப்படுத்தப்பட்டன. அதற்கப்புறம் கொஞ்சகாலம் வரைக்கும் (ஏறக்குறையப் பதினைந்து வருடங்கள்) இந்தஸ்டீமர்களும், இன்னும் சில ஸ்டீமர்களுமே இந்திய சமுத்திரங்களில் நடமாடின. இச்சமுத்திரங்களில் இந்தஸ்டீமர்களைத் தவிர்த்து வேறு புகைக்கப்பல்கள்கிடையா. நமது நாட்டுவியாபாரம் நமது சொந்தக்கப்பல்கள் மூலமாகவே நடந்துவந்தது. மேன்மேல் ஸ்டீமர்களின் வரவு அதிகமானது. வியாபாரங்கள், அவைகள் மூலமாய்ச்செய்வது எளிதாகவிருந்ததால் அக்கப்பல்கள் மூலமாகவே தொடங்கலாயிற்று.

அந்தோ! பரதக்கண்டமே! நீ இப்பொழுதுகொண்டிருக்கும் கோலமென்ன, நீ யடைந்திருக்கும் நிலைமையென்ன! வாணிபத்தில் முதலென்று வழங்கின உன் கீர்த்தியெல்லாம் எங்குச்சென்றுவிட்டதோ? நீ ஒருகாலத்து அடைந்திருந்த அருமை பெருமைகளெல்லாம் பொய்யென்று மனிதர்கள் நினைக்கலாயிற்றே; முற்காலத்திருந்தமுயற்சிஎங்கே? ஊக்கமெங்கே? உழைப்பெங்கே? ஐயோ! கப்பற்காரர்களே! நீங்களெல்லாம் எங்குச்சென்றீர்கள். உங்களை ஆதரிப்பவர்கள் ஒருவருமில்லையென அறிந்து வேறு நாடுசென்றீர்களோ? ஐயோ! நமது முன்னோர்களிருந்த நிலைமையென்ன! நாமிருக்குநிலைமையென்ன! அவர்கள் செய்துவந்த வாணிபத்தின் பெருமையென்ன! நாம்செய்யும் வர்த்தகத்தின் மகிமைதான் என்ன! கேவலம். ஐயோ! அவர்கள் கப்பலோட்டும் திறமென்ன! கப்பல்கள்வைத்து ஆதரித்துவந்த வன்மையென்ன! இவ்வாறான நிலைமை நாம் அடையவேண்டுமோ? பெரியோர்களிருந்துவந்த இந்நாட்டில் நாம் இக்கோலத்துடனிருப்பதும் தகுதியோ? அவர்கள்சென்ற மார்க்கங்களைக் கைப்பற்றி நாமும் அவ்வண்ணம் உழைத்துப பெருமையடையவேண்டாமோ? நாமும் விருத்தியடையும் சமயசந்தர்ப்பங்களை நோக்கி விருத்தியடைவதே மேன்

மையாகும். இல்லாவிடில் என்ன பிரயோஜனம். "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்னும்மொழிபொய்யா மொழியன்றோ? நாட்டுக்குழைப்பதே நமக்குழைப்பதாகும். நவீன விஷயங்களையும், மாதிரிகளையும் நம்மை ஆள்பவரிடமிருந்தே சுலபமாய்க் கற்றுக்கொள்ளலாம். அவர்களோ இவ்விஷயங்களில் மிகவும் கைதேர்ந்தவர்களென நாமறிந்ததே. அவர்களது அநுபோகமோ அசாத்தியம். அவர்கள் மாதிரிகளைப் பின்பற்றினாலுங்கூடக் கொஞ்சகாலத்துள் முன்னிருந்த நிலைமையை நாம் அடையலாகுமென்பதிற் சந்தேகமேயில்லை. நமது நாடும் பெருமை பொருந்திய நாடாய்விடும். நாமும் பெருமைபொருந்திய மனிதர்களாய்விடுவோம். ஆகையால் நண்பர்களே! நாட்டின் நன்மையை நாடுங்கள். விருத்தியடைய வழிதேடுங்கள். அப்பொழுதே நாமுய்ய வழியுண்டு.

ஓம் சுபம்.

எஸ். என். ஸ்ரீநிவாசன்.

உ

கணபதிதுணை.

சிவமயம்.

# சைவசித்தாந்த மரபட்டவணை.

இது திருவாவடுதுறை யாதீனத்து முன்னோரால் இயற்றப்பட்டுள்ளது.

ஏக னனேக னிருள்கரும மாயையிரண்
டாகவிவை யாறநாதி யில்—என்பது

ஏகன்—கருத்தா. அனேகன்—ஆன்மா. இருள்—ஆணவமலம். கருமம்—புண்ணியபாவங்களாகிய கருமமலம். மாயையிரண்டு—சுத்தமாயை அசுத்தமாயை. ஆக ஆறு பொருளுக்குங்காரணமில்லை, அநாதியேயுள்ளன. இவை நித்தியமாய் அழியாதனவாயிருக்கும். இவ்வாறு பொருள்களுள் ஏகனாகிய கருத்தாவுக்குத் தன்னியல்புக்குண மெண்ணிறந்த னவுண்டு; அவற்றுள் இரண்டு குணஞ்சொல்லுகிறோம். அவையாவன, ஒருவருமறிவியாமல்தானே அறியும் குணம்ஒன்று, ஆன்மாக்களுக்கு அறிவிக்கிறகுணம்ஒன்று, ஆக இரண்டு. இதற்கு உதாரணம் சிவஞான சித்தியார்-ஐந்தாஞ்சூத்திரம்.

பொறிபுலன் கரணமெல்லாம் புருடனா லறிந்தான் மாயை
யறிதரா வவையேபோல வான்மாக்க ளனைத்துமெங்குஞ்
செறிதருஞ் சிவன்றனாலே யறிந்திடுஞ் சிவனைக்காணா
வறிதருஞ் சிவனே யெல்லா மறிந்தறி வித்துநிற்பன்.

திருவாசகம்-வாழாப்பத்து.

பாடிமால் புகழும் பாதமே யல்லாற்
பற்றுநான் மற்றிலேன்கண்டாய்
தேடிநீ யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறைசிவனே
யூடுவ துன்னோ டுவப்பது முன்னை
யுணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரியாயே.

இனி அநேகனுகிய ஆன்மாவுக்குத் தன்னியல்புக்குண மென்னிறந்தனவுண்டு. அவற்றில் இரண்டுகுணஞ்சொல்லுகிறோம். அவை யெவையெனில்! அறிவித்தா லறியுங்குணம் ஒன்று, பிறருக்கு அறிவிக்கமாட்டாத குணம் ஒன்று. ஆகஇரண்டு. இதற்கு உதாரணம் சிவஞானபோதம்-எட்டாஞ்சூத்திரம்-இரண்டாமதிகாரம்.

அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்
செறியுமா முன்பின் குறைக ணிறையிற் [ன்
குறைவுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீட
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு.

சிவஞானசித்தியார் ஐந்தாஞ்சூத்திரம்.

அறிந்திடுமான்மா வொன்றை யொன்றினா லறிதலானு
மறிந்தவை மறந்தலானு மறிவிக்க வறிதலானு
மறிந்திடுந் தன்னையுந்தா னறியாமை யானுந்தானே
யறிந்திடு மறிவனன்று மறிவிக்க வறிவனன்றே

இனி இருளாகிய ஆணவமலத்துக்குத் தன்னியல்புக்குண மெண்ணிறந்தனவுண்டு. அவற்றில் இரண்டு குணஞ் சொல்லுகிறோம். அவையெவையெனில்? ஆன்மாவுக்கு வேண்டுங்காரியங்களை மறைக்கிற குணமொன்று, வேண்டாதகாரியங்களில் விருப்பத்தைக்கொடுக்கிற குணமொன்று. ஆக இரண்டு. இதற்கு உதாரணம் சிவப்பிரகாசம்-பொது.

அந்நியமா னவையுணர்த்தி யந்நியமாய் நிறைந்த
வறிவறியா மையினுமருளிலவுங் காலந்
தன்னிலவை யேயாவு மாய்கின்ற தொன்மை
தானுணர்த லானுயிர் தானெனவொன் றிலதாய்
மன்னியிடு மலமாயை கன்மங்கண் மாறி
வந்திடினுந் தோன்றாதாகவின் மனத்தா
லுன்னரிய திருவருளை யொழியமல மூலந்தன்
புணர்வரிதா மதனுண்மை தெரிவரிதா முன்னங்கே.



இனிப் புண்ணியபாவங்களாகிய கன்மமலத்துக்குத் தன்னியல்புக்குணமெண்ணிறந்தனவுண்டு. அவற்றில் இரண்டு குணஞ்சொல்லுகிறோம், எவையெனில்? ஆன்மா ஆணவமலத்துடனே கூடினாலாணவமலமாயேயிருக்கும். சிவத்துடனே கூடினால் சிவமாயேயிருக்கும். இதற்கு உதாரணம் பின்னே எழுதப்பெற்றிருக்கிறது. இனிமாயையிரண்டுக்குந் தன்னியல்புக்குணமெண்ணிறந்தனவுண்டு. அவற்றில் இரண்டு குணஞ் சொல்லுகிறோம்- எவையெனில், ஆன்மா ஆணவமலத்துடனே கூடினாலாணவமலமாயேயிருக்கும். சிவத்துடனே கூடினால் சிவமாயேயிருக்கும். இவ்விரண்டுக்கும் உதாரணம்-சிவப்பிரகாசம் உண்மை.

மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை
யாயவ ருயிரின் மேவு மருளினி லிருளாய் நிற்கு
மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை
யாயவா ருயிரின் மேவு மருளினி லொளியாய் நிற்கும்.

இந்தவாறு பொருளும் பதி பசு பாசம் எனமூன்று பொருளாக வடங்கும். எப்படியெனில்: ஏகன், பதி, அநேகன் - பசு, ஆணவமலம், கன்மமலம், சுத்தமாயை, அசுத்தமாயை ஆக இந்நான்கும் பாசம். அநாதிக்கு அளவில்லை காலமில்லை அளவிடப்படாது. (க)

அநாதியிலே ஆன்மாக்கள் ஆணவமலத்தைப் பிடித்தார்கள். ஆணவமலம் ஆன்மாவுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது இந்தச் செய்தியைக் கர்த்தாவானவர் அறிந்து இரக்கத்தினலே ஆன்மாக்களுக்குக் கன்மத்துக்கேற்ற தனுவைக் கொடுத்து அந்தத் தனுவினிடமாகக் கன்மத்தைக் கூட்டிப் புசிப்பிப்பார். இந்தச்செய்தியநாதியிலே பிரவஞ்சமுண்டாகிய முறைமை—இதற்கு உதாரணம் சிவப்பிரகாசம்-பொது.

என்னரிதாய் நித்தமா யிருண்மலத்தி லழுந்தி, யிருவினையின் றன்மைகளுக் கீடான யாக்கை; யன்னைதரு ளானவனி யவையவரா யதனு, லைகினிகழ் போகங்க ளருந்தா மாற்றாற்; புண்ணியபா வம்புரிந்து போக்குவரவுடைத்தாய், புனருமிருண் மலபாகம் பொருந்தி

யக்கா லருளாசு லுண்ணிலவு மொளிபதனை விருளகற்றிப் பாத, முற்றிடுநற் பசுவர்க்க மெனவுரைப்ப ருணர்ந்தே. (௨)

இனி, ஆன்மாக்களுக்கு ஆணவமலம் இயற்கையோ செயற்கையோ இயற்கையானாற் பாலுக்கு வெளுப்புங் கரிக்குக் கறுப்பும் ஒரு காலத்திலும் விட்டு நீங்காததுபோல ஆன்மாவுக்கு ஆணவமலம் ஒருகாலத்திலும்விட்டு நீங்காது. ஆகையினாலேஇயற்கைக்குணமன்று. செயற்கையானால் வெள்ளைப் புடவையிலே அழுக்கேறுகிற தன்மைபோல மோட்சத்திலேயும் வந்து பொருந்தும். ஆகையினாலே செயற்கையன்று. இனிச்சித்தாந்தம் எப்படியென்னில், நெல்லுக்கு உமியும் செம்புக்குக் களிம்பும் கடல்நீருக்கு உப்பும்போல ஆன்மாவுக்கு ஆணவமலம் அநாதி செயற்கை அநாதி சையோக மென்றுமாம். இதற்கு உதாரணம், சிவஞானபோதம்.

நெல்லிற் குமியு நிகழ்செம் பினிற்களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுள வாம்வள்ளாற் பொய்வா
னலர்சோகஞ் செய்கமலத் தாம். (௩)

ஆன்மாக்களுக்கு ஆணவமலத்தைக் கர்த்தா கூட்டிவைத்தாரோ ஆணவமலந்தானே வந்து பொருந்திற்றோ, என்னில் கர்த்தா நின்மலராய்ச் சர்வாநுக்கிரகராகையாலே யவர்கூட்டி வைத்ததன்று; ஆணவமலஞ் சடமாகையினாலே தானேவந்து பொருந்தமாட்டாது, இனிச் சித்தாந்தமெப்படியெனில் வேதாகமங்களிலே ஆன்மாவே ஆணவமலத்தைப் பிடித்தானென்று சொல்லியிருக்கிறபடியினாலே ஆன்மாவே ஆணவமலத்தைப் பிடித்தான். (௪)

ஆன்மாக்களுக்குச் செய்தியுண்டோ இல்லையோ சிவபிரானுக்கே செய்தியல்லாமல் ஆன்மாக்களுக்குச் செய்தியில்லையானால், வேதாகமங்களிலே விதிவிலக்குச் சொல்லவேண்டுவதுமில்லை நரக தண்டனையுண்டாக வேண்டுவதுமில்லை. வேதாகமங்களிலே விதிவிலக்குச்சொல்லியிருக்கிறபடியினாலேயும் நரகதண்டனை யுண்டாயிருக்கிறபடியினாலேயும் ஆன்மாக்களுக்குச் செய்தியுண்டு. இதற்கு உதாரணம் சித்தியார் இரண்டாஞ் சூத்திரம்.



அருளினா லுரைத்த நூலின் வழிவாரா ததன்மஞ் செய்வி
னிருளுளா நிரயத் துன்பத் திட்டிரும் பாவந் தீர்ப்பன்
பொருளுலாஞ் சுவர்க்கமாதி போகத்தாற் புணியந் தீர்ப்பன்
மருளுலாமலங்க ளர்க்குமருந்திவை வயித்ய னாதன். (௫)

ஆன்மாக்களுக்குக் கன்மத்திலே யுண்டாகிய விருப்பம், கர்த்தா கொடுத்த விருப்பமோ ஆன்மாக்களுக்குண்டாகிய விருப்பமோ, கர்த்தா கொடுத்த விருப்பமானாற் பாவத்தை ஏன் செய்தாயென்று நரகத்திலே போட்டுத் தண்டிக்கவேண்டுவதில்லை. அப்படித் தண்டிக்கையினாலே கர்த்தா கொடுத்தவிருப்பமன்று. ஆன்மாவுக்குண்டாகிய விருப்பமானால் ஆன்மா நல்வழியிருக்கத், தீவழி நடவான். தீவழி நடந்து நரக தெண்டனைப் படுகையினாலே ஆன்மாவுக்குண்டாகிய விருப்பமன்று; இனிச் சித்தாந்தமெப்படியெனில்: ஆணவமலமே ஆன்மாவுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது. ஆணவமலமாகிய சடத்துக்குச் செய்தியுண்டோவென்னில் விஷம், கள்ளு, பாஷாணம், தீ, காற்று, நீர் முதலாகிய சடங்களுக்குஞ் செய்தியுண்டானாற் போல ஆணவமலமாகிய சடத்துக்குஞ் செய்தியுண்டு. ஆகையினாலே ஆணவமலமே ஆன்மாவுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது. விருப்பத்தைக்கொடுத்தஆணவமலமும் ஆன்மாவுக்குக் கன்மத்தை யறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது. விரும்பிய ஆன்மாவுங் கன்மத்தை யறிந்தெடுத்துக்கொண்டு புசிக்கமாட்டான். விரும்பப்பட்ட கன்மமும் ஆன்மாவை வந்துபொருந்தமாட்டாது. ஆகையினாலே இந்தச்செய்தியைக் கர்த்தாவானவரறிந்து இரக்கத்தினாலே ஆன்மாவுக்குக் கன்மத்துக்கேற்ற தனுவைக் கொடுத்து அந்தத் தனுவினிடமாகக் கன்மத்தைக்கூட்டிப் புசிப்பிப்பார். (௬)

ஆணவமலமே ஆன்மாவுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக்கொடுத்ததென்கிறதற்குக் குழந்தை பிணியாளன் முதலிய வுவமைகள் வருமாறு, குழந்தைக்குப்பாலிலே யுண்டாகிய விருப்பந், தாய் கொடுத்த விருப்பமோ, குழந்தைக்குண்டாகிய விருப்பமோ, தாய் கொடுத்த விருப்பமானால் அவள் கொடுத்த நேரமெல்லாம் பாலைக்குடிக்க வேண்டும், அப்படிக் குடியாதபடியினாலே தாய் கொடுத்த விருப்பமன்று. குழந்தைகளுக்குண்டாகிய விருப்பமானால் மாந்தம் பிடிக்க

வேளையிலும் பாலைக்குடிக்கவேண்டும். அப்படிக்குடியாதபடியினாலே, குழந்தைக் குண்டாகிய விருப்பமன்று. இனிச் சித்தாந்தமெய்ப்படியென்னில் பசியே குழந்தைக்குப் பாலிலே விருப்பத்தைக் கொடுத்தது; விருப்பத்தைக் கொடுத்த பசியுங் குழந்தைக்குப் பாலையறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது. விரும்பின குழந்தையும் பாலை அறிந்தெடுத்துக் குடிக்கமாட்டாது. விரும்பப்பட்டபாலுங் குழந்தை வாயிலே வந்து புகுதமாட்டாது. இந்தச் செய்தியைத் தாயானவளறிந்து இரக்கத்தினாலே பாலை யெடுத்துப் பாலடையிலே விட்டுக் குழந்தைவாயிலே வைத்துப்புகட்டுவள்; குழந்தை-க, பசி-க, பால்-க, தாய்-க, பாலடை-க. ஆக ரு. (௭)

பிணியாளனுக்கு மருந்திலே யுண்டாகிய விருப்பம் பரிகாரி கொடுத்த விருப்பமோ பிணியாளனுக்குண்டாகிய விருப்பமோவென்னில் பரிகாரிகொடுத்த விருப்பமானால் அவன்கொடுத்த நேரமெல்லா மருந்தைக் குடிக்கவேண்டும் அப்படிக்குடியாதபடியினாலே பரிகாரி கொடுத்த விருப்பமன்று. பிணியாளனுக்குண்டாகிய விருப்பமானால் எந்நேரமுமருந்தைக் குடித்துக் கொண்டேயிருக்கவேண்டும் அப்படிக்குடியாதபடியினாலே பிணியாளனுக்குண்டாகிய விருப்பமன்று. இனிச் சித்தாந்த மெய்ப்படியென்னில் பிணியே பிணியாளனுக்கு மருந்திலே விருப்பத்தைக் கொடுத்தது; விருப்பத்தைக்கொடுத்த பிணியும் பிணியாளனுக்கு மருந்தை யறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது; விரும்பின பிணியாளனுமருந்தை யறிந்தெடுத்துக் குடிக்கமாட்டான்; விரும்பப்பட்ட மருந்தும் பிணியாளன் வாயிலே வந்து பொருந்தமாட்டாது. இந்தச் செய்தியைப் பரிகாரியானவனறிந்து இரக்கத்தினாலே பிணியாளனுக்கு மருந்தை யெடுத்து ஒரு பாத்திரத்திலே விட்டுக்கொடுப்பன்; இனிப்பிணியாளன்-க, பிணி-க, மருந்து-க, பரிகாரி-க, பாத்திரம்-க ஆக ரு. பிணியாளனைப்போலுமான்மா; பிணியைப்போலும் ஆணவமலம்; மருந்தைப்போலுங் கன்மம்; பரிகாரியைப்போலுங் கர்த்தா; பாத்திரத்தைப்போலுந்தநு. ஆக-ரு.()

குருடனுக்குக் கோலிலே யுண்டாகிய இச்சை, கோல் கொடுத்திழுக்கிறவன் கொடுத்த இச்சையோ. குருடனுக்குண்டாகிய விச்சையோ. கோல்கொடுத்திழுக்கிறவனிச்சையானால் அவன் கொடுத்த



நேரமெல்லாங் கோலைப் பிடிக்கவேண்டும். அப்படிப் பிடியாதபடியினாலே கோல் கொடுத்திழுக்கிறவனிச்சையன்று; குருடனுக்குண்டாகிய இச்சையானால் எந்நேரமுங் கோலைப்பிடித்துக்கொண்டேயிருக்கவேண்டும். அப்படிப்பிடியாதபடியினாலே குருடனுக்குண்டாகிய இச்சையன்று; இனிச்சித்தாந்தமெய்ப்படியென்னில், அக்குருடே குருடனுக்குக் கோலிலே யிச்சையைக்கொடுத்தது. இச்சையைக் கொடுத்த குருடுங் குருடனுக்குக் கோலை யறிந்தெடுத்துக்கொடுக்கமாட்டாது; இச்சைப்பட்ட குருடனுங் கோலை யறிந்தெடுத்துக் கொள்ளமாட்டான்; இச்சிக்கப்பட்ட கோலுங் குருடன் கையிலே யறிந்துவந்து பொருந்தமாட்டாது. இந்தச்செய்தியை யவனுக்கு உரிமையுள்ளவர்களறிந்து இரக்கத்தினாலே குருடனுக்கு அவனிச்சிக்கப்பட்ட கோலைக்கொடுத்து அவனினைத்த இடத்திலே கொண்டுபோய் விடுவார்கள். குருடன் க, குருடு க, கோல் க, கொடுத்திழுக்கிறவன் க, அவனிச்சித்தவிடம் க, ஆக ரு. குருடனைப்போலு மான்மா, குருட்டைப்போலும் ஆணவமலம், கோலைப்போலுஞ் சரீரம், கோல்கொடுத்திழுக்கிறவனைப் போலுங்கர்த்தா, இடத்தைப் போலும் புவனம்; ஆக ரு. (௯)

ஆன்மாவுக்குச் சரீரத்திலே யுண்டாகிய இச்சை; கர்த்தா கொடுத்த விச்சையோ ஆன்மாவுக் குண்டாகிய விச்சையோ? கர்த்தா கொடுத்த விச்சையானால் அவர்கொடுத்த நேரமெல்லாஞ் சரீரத்தைப் பற்றவேணும்; அப்படிப் பற்றாதபடியினாலே கர்த்தா கொடுத்த விச்சையன்று; ஆன்மாவுக்குண்டாகிய விச்சையானால் எந்நேரமுஞ் சரீரத்தைப் பற்றிக்கொண்டே யிருக்கவேண்டும்; அப்படிப் பற்றியிர்தபடியினாலே ஆன்மாவுக் குண்டாகிய விச்சையன்று; இனிச் சித்தாந்த மெய்ப்படி யென்னில் ஆணவமலமே ஆன்மாவுக்குச் சரீரத்திலே யிச்சையைக் கொடுத்தது; இச்சையைக்கொடுத்த ஆணவமலமு மான்மாவுக்குச் சரீரத்தை யறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது; இச்சித்த ஆன்மாவுஞ் சரீரத்தை யறிந்தெடுத்துக் கொள்ளமாட்டான்; இச்சிக்கப்பட்ட சரீரமு மான்மாவை யறிந்து வந்து பொருந்தமாட்டாது; இந்தச்செய்தியைக் கர்த்தாவானவ ரறிந்து இரக்கத்தினாலே ஆன்மாவுக்கு இச்சித்த தனுவைக் கொடுத்து அவனிச்சித்த புவனத்திலே கொண்டுபோய் விடுவர். (௰)

" . குருடன் முதல்வனோ, கோல்கொடுத் திழுக்கிறவன் முதல்வனோ; கோல்கொடுத் திழுக்கிறவன் முதல்வனானால் குருடனுக்குக் குளக்கரையிலே போக விருப்பமிருக்கக் கோவிலிலே வாவென்றழைத்தால் வாரான். ஆகையினாலே கோல்கொடுத் திழுக்கிறவன் முதல்வனன்று; கோல்கொடுத்திழுக்கிறவன் குருடனுக்குக் கோலைக் கொடுத்து அவன் இச்சித்த இடத்திலே கொண்டுபோய் விடுகையினாலே குருடன் முதல்வன். (கக)

ஆன்மா முதல்வனோ? கர்த்தா முதல்வனோ? கர்த்தா முதல்வனானால் ஆன்மாவுக்குக் கன்மத்திலே விருப்பமிருக்க மோட்சத்திலே வாவென்றழைத்தால் வாரான். ஆகையினாலே கர்த்தா முதல்வனன்று. இனி கர்த்தா ஆன்மாவுக்கு அவனிச்சித்த தனுவைக்கொடுத்து இச்சித்த புவனத்திலே போய்விடுக்கையினாலே ஆன்மாவே முதல்வன்; பெத்தத்திலே ஆன்மா முதல்வன், முத்தியிலே கர்த்தா முதல்வன். (கஉ)

குயவனானவன் பல பாண்டங்களை வனையுமிடத்துத் தன்னுடைய நினைவின்படி வனைவானோ, பிறருடைய நினைவின்படி வனைவானோ, தன்னுடைய நினைவின்படி வனைவானானாற் சாலாகவே வனைய வேண்டும். அப்படியன்றிப் பலவடிவாக வனைகிறபடியினாலே தன்னுடைய நினைவின்படி வனைவானல்லன்; பிறருடைய நினைவின்படியே வனைவான். குயவன் - க, மண் - க, பாண்டம் - க, பிறர் - க, ஆக - ச. குயவனைப்போலுஞ் சிவன், மண்ணைப்போலும் மாயை, பாண்டத்தைப் போலுஞ் சரீரம், பிறரைப்போலு மான்மா. (கங)

கர்த்தா ஆன்மாக்களுக்குத் தனுக்களைப் படைக்கு மிடத்துத் தம்முடைய நினைவின்படி படைப்பாரோ? ஆன்மாக்களுடைய நினைவின்படி படைப்பாரோ? தம்முடைய நினைவின்படி படைப்பாரானால் நாயாகவே படைக்கவேண்டு மில்லாவிட்டால் நரியாகவே படைக்க வேண்டு மப்படியன்றிப் பலவடிவாகப் படைக்கையினாலே, சிவன் தம்முடைய நினைவின்படி படைப்பாரல்லர்; ஆகையினாலே ஆன்மாக்களுடைய நினைவின்படி படைப்பார். (கச)



வண்ணானவன் புடவையிலேயுள்ள அழுக்கைப் போக்குகிறதற்கு உவர்சாணியைக் கூட்டிப் போக்குகிறதுபோலச் சிவன் ஆன்மாக்களுக்கு ஆணவமலத்தை மாயாகருவிகளைக் கூட்டிப் போக்குவர்.

மலபரிபாகமாவது, பக்குவம்வந்த வான்மாவை மலசத்தியானது ஆன்மஞானத்தை மறையாதிருத்தல். (கசு)

சத்திநிபாதமாவது சத்தி=திருவருள், நி=உபசர்க்கம், பாதம்=பதிதல், பதிதலாவது மலநீங்கின ஆன்மாவிலே திருவருள் விளங்கித் தோன்றுதல். (கஎ)

இருவினையொப்பாவது, ஒரு தபசியானவன் விரும்பப்பட்ட பதார்த்தங்களையுங் கண்டால் விருப்பு வெறுப்புமல்லாத பதார்த்தங்களைக் கண்டாற்போலப் பக்குவான்மாவானவன் நல்வினைப்பயனுந் தீவினைப்பயனும் வந்தாலிந்த இரண்டினிடத்திலும் விருப்பும் வெறுப்பு மில்லாமல் நிற்றல், உலகத்திலே விரும்பப்பட்ட பதார்த்தங்களாவன, பொன், வெள்ளி, பால், தயிர், நெய் சீனி, பழம், பட்டு, பெண், செல்வ முதலாயின. வெறுக்கப்பட்ட பதார்த்தங்களாவன, புலி, கரடி, பாம்பு, யானை, தரித்திரம், சயவியாதி முதலாயின. விருப்பு வெறுப்பு மில்லாத பதார்த்தங்களாவன, திரணம், பதர் முதலாயின. (கஅ)

இதற்கு வசனம் ஒருவன் ஒரு கூத்தியார்க்கு விடும்பொசிப்பும் வேண்டிய ஆடையாபரணங்களுங்கொடுத்து அவள்வீட்டிலே பதினைந்து நாளுங் குடியிலுள்ளவளுக்கு விடும்பொசிப்பும் வேண்டியஆடையாபரணங்களுங் கொடுத்து அவள் வீட்டிலே பதினைந்து நாளுமாகப் பொசித்து வாழ்ந்திருக்குமிடத்து இல்லற நூல் கேட்ட விடத்திலே கற்புடைய மனைவியுடனே கூடியில்லறஞ் செய்கிறதே முக்கியமென்றறிந்து கூத்தியாரைவிட்டு நீங்கி யில்லாளோடுங் கூடி இல்லறஞ் செய்து கொண்டிருக்கையிலே துறவு நூல் கேட்டு துறவறமே முக்கியமென்றறிந்து குடியிலுள்ள இல்லாளையுந் தீங்கென்று கூத்தியாரைப்போலக் கண்டு நீங்கின பின்பு, இரண்டு பேரிடத்திலும் விருப்பும் வெறுப்புமில்லாததுபோல, ஒருவன் பாவமும் புண்ணியமுஞ் செய்துகொண்டு வருகையிலே அறநூல்கேட்டுப்பாவந்தீங்கென்றும், புண்ணியமே முக்கியமென்றுமறிந்து பாவத்தைவிட்டுநீங்கி நெடுங்

காலம் புண்ணியஞ் செய்து கொண்டு வருகையிலே ஞானசாத்திரத்தைக் கேட்டுப் புண்ணியமுஞ் ஜெனனமரணத்தைக் கொடுக்கையினாலே புண்ணியத்தையும் பாவத்தைப்போலத்தீங்கென்று விட்டுநீங்கினபின்பு இரண்டினிடத்திலும் விருப்பு வெறுப்பின்றி நிற்றலே இருவினையொப்பு. (க௯)

சிவன் தானே ஆசாரிய முகூர்த்தமாய்த் திருமேனிகொண்டு வருவாரென்பதற்குப் பலகுற்றங்களுண்டு. அவையாவன, ஒரு ஆசாரியரான ஆத்மாவானது பிதாவினுடைய உதரத்திலே இரண்டுமாதங் கட்டுப்பட்டுக்கிடந்து பிதாவானவன் தன்னுடைய ஸ்திரியுடனே சையோகஞ்செய்கிற காலத்திலே, குய்யவழியே புகுந்து மாதாவினுடைய வயிற்றிலே கருப்பாசயக் குழியிலே பத்து மாதங் கட்டுப்பட்டுக்கிடந்து பின்பு பூமியிலே பிறந்து மலமூத்திராதிகளை யளைந்துகிடந்து வளர்ந்து ஒரு உபாத்தியாயரை யடைந்து தண்டனைப்பட்டு அட்சர அப்பியாசம் பண்ணிப் பின்பு ஒரு வித்துவானிடத்திலே போய் அவனுக்கேவல்செய்து வித்தியாப்பியாசம் பண்ணிப்பின்பொரு ஆசாரியரையடைந்து சமய விசேட நிர்வாணம் ஆசாரியாபிஷேகம் பண்ணிக்கொண்டு இன்னொன் மகனின்றென்றறிந்து சயங்குட்டஞ் சலக்கழிச்சல் முதலான வியாதிகளையடைந்து மரணமாதல் முதலானதன்றியும் "மாயாவொருவன் மாயாவுருவினையே யானெய்ந்தவரெம்மனோரே" யென்றிருக்கிறபடியினாலே "பிறவா முதலவன்பிறந்தானென்னும் உணர்வாய்நின்ற ஞானக்கூத்தன் ஒரு மூர்த்தி கொடுகுறங்" யென்று "மருட்குருவாகி வந்தென்னும்" ருக்கிற வசனங்களுக்கெல்லாம் விரோதமுண்டெனில், கர்த்தா ஆசாரிய மூர்த்தமாய்த்திருமேனி கொண்டு வருதலாவது, மல நீங்கின உயிரிலே சிவஞானம் விளங்கித்தோன்றுகையினாலே குற்றமில்லை யெனவறிக. (உ0)

சீடனுக்கு ஆசாரியர் சன்னிதானத்தில் வந்தபின் மல நீக்கமோ வருமுன் மலநீக்கமோ, வந்த பின் மலநீங்கினால் ஆசாரியர் சந்நிதியில் வந்தபேருக்கெல்லாம் மலநீங்கவேண்டும். அப்படிநீங்காதபடியினாலே வந்த பின் மல நீங்கினதன்று. வருமுன் மல நீக்கமானால் ஆசாரியர் வேண்டுவதில்லை யென்னில் அது கூடாது, படலநீங்கின கண்ணுக்கே ஆதித்தன் காட்டுகிறது போல ஆணவமல நீங்கின பக்குவான்மாவுக்கே சிவனறிவிப்பர். ஆகையாலே வருமுன்னே மல நீங்கினதாம். (உக)



சுருதிகுருவாக்குச் சுவானுபவமூன்றினுள், முதன்மை யாதெனில் சுருதியுங் குருவாக்குஞ் சுவானுபவத்துக்குக் காரண மாகையினாலே சுவானுபவம் முதன்மை. (உஉ)

ஆன்மா நித்தனாயிருக்கப் பிறந்தானிறந்தானென்று வேதாகமங்களிலே சொல்லுவது ஏதென்னில் ஆன்மா, மாயா கருவியைப் பற்றி ஆன்ம போதஞ் சீவித்தலே பிறப்பு. ஆன்மபோதமானது மாயா கருவியைப்பற்றி யறியாதிருத்தலே இறப்பு. (உ௩)

பஞ்சகிருத்தியம் நித்தியமோ அநித்தியமோ சித்தியாரில் "விரிந்திடு மறிவுங் காட்டி வீட்டையு மளிப்பன் மேலோன்" என்று திருவுளம்பற்றி யிருக்கிறபடியினாலே பஞ்ச கிருத்திய நித்தியஞ் சித்தியாரில் "என்றுந்தனாவாத கருமமொன்றுந் தருவதுமில்லை" என்று பஞ்சகிருத்திய நித்தியமென்று திருவுளம் பற்றினது, நித்தியம் பலவாகையா லைற்றுளடங்கும். (உ௪)

பஞ்சகிருத்தியம் பண்ணுகிறது, ஆன்மாவுக்கோ, சரீரத்துக்கோ, ஆன்மாவுக்கென்று லான்மா நித்தியமானபடியினாலே சிருட்டியுந் திதியுஞ் சங்காரமுங் கூடாது. ஆகையினாலே ஆன்மாவுக்கு அன்று, சரீரத்துக்கென்றால் சரீரஞ்சடமாகையினாலே திரோபவமும் அனுக்கிரகமுங்கூடாது, இனிச்சித்தாந்தமெப்படியென்னில் "அழிப்பிளைப்பாற்றலாக்க" மென்கின்ற திருவிருத்தத்திலுஞ் சிருட்டி திதி சங்கார மூன்றுஞ் சரீரத்துக்குண்டாயிருந்தாலு மூன்றினாலுண்டாகிய சுகதுக்கங்களுந்திரோபவமனுக்கிரகங்களுமான்மாவுக்கே உண்டாகையினாலும் ஆன்மாவைக் குறித்தே பஞ்சகிருத்தியமென்றறிக. ()

ஆன்மா ஞானசொரூபியாய் நித்தியனாயிருக்கிற படியினாலே அவனுக்குச் சிருட்டி யேதென்னில், அறிவுந்தொழிலுண்டாதலே சிருட்டி. உயிர்க்குத்திதி யேதென்னில், அறிவுந்தொழில் நிலைபெறுத்தலேதிதி. உயிர்க்குச்சங்காரமேதென்னில், அறிவுந்தொழில் நீங்கலே சங்காரம். ஆன்மா அறிவுமிடத்து ஒவ்வொன்றை மறைத்தலே திரோபவம். ஆன்மா மோட்ச வுபாயஞ் சிந்தித்தலே அநுக்கிரகம்.

ஒளியுமிருளுமோரிடத்திலே கூடியிராது; அதுபோலச்சிவனும் ஆணவமலமுமோரிடத்திலே கூடியிருக்கத்தக்கதில்லையே, நீர்கூடியிருக்குமென்றதெப்படியென்னில் ஒருமரம் ஈரத்தோடே கூடியிருக்க அதிலே அடிதொடுத்து நுனி பரியந்தம் அக்கினி பச்சை வியாபித்திருத்தல் போலும். (௨௭)

ஆன்மா நரகத்திலே துன்பத்தை யனுபவிக்குமிடத்து அந்த ஆன்மாவைவிட்டு நீங்காத சிவனுக்கு அந்தத் துன்பமுண்டென்னில் அது கூடாது. அது எப்படிப்போல ஆதித்தப் பிரகாசம் படிகவொளியிலே கலந்து நின்று வர்ணங்களைப்பற்றுவித்துந் தான் பற்றாதவாறு போலவும் ஆதித்தப் பிரகாசங் கண்ணொளியிலே கலந்துநின்று விடயங்களைக் காட்டுவித்துந் தான் காணாதவாறு போலவும் ஒருவன் அனுபவிக்குந் துன்பம் அவன் வயிற்றிலே கிடக்கிற புழுவுக்கில்லாதது போலவு மென்றறிக. (௨௮)

ஆன்மாக்கிஞ்சிக்ஞனே, சுதந்தர வினனே, கேவலங் கிஞ்சிக்ஞனால் மின்மினிப் பூச்சிக்குள்ள பிரகாசம்போலக் கொஞ்சமானாலுஞ் சுயமாக வறிவுவிளங்கவேண்டும். கேவலஞ் சுதந்தர வினனால் சிவன் அறிவித்த தெல்லாமறியவேண்டும் அப்படியில்லாத படியினாலே கேவலஞ் சுதந்தரவினனுமன்று. இனிச் சித்தாந்தமெப்படியெனில், ஆன்மாக்கிஞ்சிக்ஞனாகிய சுதந்தர வினனெனவறிக. (௨௯)

ஆன்மா மோட்சத்தை யடையுமிடத்துக் கெட்டுக்கூடுமோ, கெடாது கூடுமோ, கெட்டாற்கூடத்தக்கதேயில்லை கெடாதிருந்தாற் கூடமாட்டாது, இனிச்சித்தாந்தமெப்படியென்னில் ஆன்மாக் கெடாமல் விடயத்திலே செல்லுமான்மபோத நிகழ்ச்சி கெட்டுக்கூடுமெனவறிக. கெடுதல் போதல் சீவியாதிருத்தல். (௩0)

வியாபகம் வியாத்தி, வியாப்பியம். ஆக ௩. வியாபகமாவது, நிறைந்திருத்தல், வியாத்தி, ஒன்றிலே ஒன்று கலந்திருக்கல். வியாப்பியமாவது ஒன்றிலே ஒன்று அடங்கியிருத்தல். அதெப்படியென்னில் சமுத்திரம் வியாபகம். தண்ணீரும் உப்புங்கலந்திருத்தல் வியாத்தி. சமுத்திரத்திலே தண்ணீருமுப்பும் அடங்கியிருத்தல் வியாப்பியம். சிவனுடைய வியாபகம் சமுத்திர வியாபகம் போலும். ஆன்மாவும் மலமும் வியாத்தி தண்ணீரும் உப்புங் கலந்திருத்தல் போலும். சிவனுடைய வியாபகத்திலே யான்மாவுமலமும் வியாப்பியமாயிருத்தல் சமுத்திர வியாபகத்திலே தண்ணீரும் உப்பும் அடங்கியிருத்தல் போலும். சிவனுடைய வியாபகத்திலே சிவசத்தி வியாப்பியம். சிவசத்தியிலே ஆன்மாவுமலமும் வியாப்பியம். ஆன்மாவிலே ஆன்மசத்தி வியாப்பியம்; மலத்திலேமலசத்தி வியாப்பியம். ஆன்மபோதத்திலே மாயை வியாப்பியம். மாயையிலே மாயா காரியம் வியாப்பியம். மாயா காரியத்திலே கன்மம் வியாப்பியம். கன்மத்திலே கன்ம காரியம் வியாப்பிய மென்றறிக. (௩௧)



ஆன்ம வியாபகத்துக்குக் கண் முதலிய வுவமைகள் வருமாறு; கண்ணொன்று, கண்ணொளி ஒன்று, கண்ணொளிக்குக் காணுங் குணமொன்று, கண்ணொளிக்குக் காணுந்தொழிலொன்று, இருளொன்று பதார்த்தங்கள் ஒன்று, விளக்கொன்று, விளக்கை யுண்டாக்குகிறவனென்று ஆக ௮. கண்ணைப்போலுமான்மா, கண்ணொளியைப்போலுமான்மஞானம், கண்ணொளிக்குக் காணுங் குணத்தைப்போலும் ஆன்மஞானத்துக்கறியுங் குணம், கண்ணொளிக்குத் தொழிலைப்போலுமான்மஞானத்துக்கறியுந்தொழில், இருளைப்போலும் ஆணவமலம், பதார்த்தங்களைப்போலுஞ் சுகதுக்கம், விளக்கைப்போலுமாயாகருவி, விளக்கை உண்டாக்குகிறவனைப் போலுங் கர்த்தா. விளக்கு நீங்கினவிடத்து எத்தனை பதார்த்தம் போச்சுது எத்தனை பதார்த்தங்களிருக்கின்றன என்றால் கண்ணொளிக்குக் காணுந் தொழிலும் விளக்கும் போய்விட்டன ஆறுபதார்த்தமிருக்கின்றன. (௩௨.)

ஆன்மாச் சரீரத்தைப் பற்றுதற்குப் படிகமலை அக்கினிமலை உவமைகள் வருமாறு; படிகமலையொன்று, படிகமலைக்கொளி யொன்று, படிகமலைக்குப் பற்றுங்குணமொன்று, படிக வொளிக்குப் பற்றுந்தொழிலொன்று, வன்னமொன்று, வன்னத்தைப்பற்றுவிக்கிறவனென்று, ஆக ௬. படிகமலைபோலுமான்மா, படிகமலைக்கொளியைப்போலும் ஆன்மபோதம், படிகவொளிக்குப் பற்றுங் குணம் போலுமான்மபோதத்துக்கு அறியுங் குணம், படிகவொளிக்குப் பற்றுந் தொழிலைப் போலுமான்ம போதத்துக்கு அறியுந்தொழில், வன்னத்தைப்போலுஞ் சிவன்; படிகமலையானது எந்தப்புறத்திலே வன்

னத்தைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்ளுவதுபோல எல்லாப்புவனத்திலேயும் வியாபகமாயிருக்கிற ஆன்மாவுங் கர்த்தா எந்தப் புவனத்திலே தனுவைக்கொடுத்தாலும் பற்றிக்கொண்டறியும். (௯௩)

அக்கினிமலையொன்று, அக்கினிமலைக்குச்சூடொன்று, சூட்டுக்குச் சுடுங் குணமொன்று, அக்கினிமலை சூட்டுக்குச் சுடுந் தொழிலொன்று, பஞ்சொன்று பஞ்சைப் பற்றுவிக்கிறவனொன்று ஆக சு அக்கினிமலை போலுமான்மா, அக்கினிச் சூடுபோல ஆன்மஞானம், சூட்டுக்கு சுடுங் குணம்போலும் ஆன்மபோதத்துக்கறியுங் குணம், அச்சூட்டுக்கு சுடுந் தொழிலைப் போலுமான்மபோதத்துக் கறியுந் தொழில், பஞ்சைப்போலு மாயா கருவி, பஞ்சைப்பற்று விக்கிறவனைப்போலும் சிவன், அக்கினிமலையானது எந்தப்பக்கத்திலே பஞ்சைக்கொடுத்தாலு மந்தப்பக்கத்திலே பற்றும், அதுபோல எல்லாப் புவனங்களிலும் வியாபகமாயிருக்கிற ஆன்மாவானவன் எந்தப்புவனத்திலே சிவன் மாயா சரீரத்தைக் கொடுத்தாலும் அந்தப்புவனத்திற் பற்றியறிவான். (௯௪)

ஆன்மாச் சார்ந்ததின் வண்ணமாயிருக்கும், அதற்கு ஆகாச. முவமை. ஆகாசமானது இருளோடே கூடினால் இருளாயிருக்கும், ஒளியோடே கூடினலொளியாயிருக்குமதுபோல ஆன்மா மலத்தோடு கூடினால் மலமாயிருப்பன், சிவத்தோடுங் கூடினலச்சிவமாயிருப்பன், இதற்குக் கண் படிக வுவமைகளுமாம். (௯௫)

எண்ணிறந்த கோடி புவனங்களிலே யிருக்கிற எண்ணிறந்த கோடியான்மாக்களுக்கு மறிவுந் தொழிலு நடக்கையினாலே சிவன் வியாபகமென்றறிக. எண்ணிறந்த கோடியான்மாக்களுக்கு மறியாமையிருக்கையினாலே ஆணவமலம் வியாபகமென்றறிக; எண்ணிறந்த கோடி ஆன்மாக்களுக்கும் எண்ணிறந்த புவனங்களிலே தனுகரணாதியிருக்கையினாலே மாயை வியாபகமெனவறிக. எண்ணிறந்தகோடி ஆன்மாக்களுக்கும் எண்ணிறந்தகோடி புவனங்களிலேயும் புசிப்பிருக்கையினாலே கன்மம் வியாபகமெனவறிக. (௯௬)



சிவனொருத்தராயிருந்து எண்ணிறந்த கோடி ஆன்மாக்களுக்கு அறிவித்தலெப்படியென்னில் எண்ணிறந்த கண்களுக்குமோராதித்தனொன்றாயிருந்துங் காட்டுகிறதுபோல வெனவறிக. (௯௭)

எண்ணிறந்த கோடி ஆன்மாக்களையும் ஆணவமலமு மொன்றாயிருந்து மறைத்தலெப்படியென்னில், எண்ணிறந்த கண்களையும் இருளொன்றாயிருந்து மறைத்தல் போலும். (௯௮)

எண்ணிறந்த கோடி ஆன்மாக்களுடைய எண்ணிறந்த கன்மங்களையுஞ் சிவனொருத்தராயிருந்து அறிந்து கூட்டிமுடித்தலெப்படியென்னில், ஒரு ஊரிலே யிருக்கிற பலபேருடைய எண்ணிறந்த பல புடவைகளையுமொரு வண்ணானைவனிது இன்னாருடைய திது இன்னாருடையதென்றறிந்து அவரவர்க்கெடுத்துக்கொடுத்தல் போலும், ஒரு ஊரிலே யிருக்கிற பல பேருடைய ஆட்டையும் மாட்டையும் ஒரு இடையனானவன் இவை இன்னாருடைய ஆடு, இது இன்னாருடைய மாடு என்றறிந்து அவரவர் வீடுகளிலே கொண்டுபோய் விடுகிறது போலும். (௯௯)

வினைவேறு, கன்மம்வேறு, அவற்றுள் கன்மமானது புண்ணிய பாவமென இரண்டு விதமாயிருக்கும், வினையாவது ஆன்மாக்களுக்கு அநாதி கேவலத்திலே யுண்டாகிய விருப்பம் - க. இந்த மூன்றுக்கு வாசனை. (௱)

திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம்.

அல்லலென்செயுமருவினையென்செயுந்
தொல்லைவல்வினைத்தொந்தந்தானென்செயுந்
தில்லைமாநகர்ச்சிற்றம்பலவனார்க்
கெல்லையில்லதோரடிமைபூண்டேனுக்கே.

கன்மமலமாவது ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம் என்று மூன்று விதமாயிருக்கும். இதற்கு முறையே தூலகன்மம், சூக்குமகன்மம், அதிசூக்குமகன்மமென்றும் பெயர். அவற்றுள் ஆகாமியமாவது, பிராரத்துவம் புசிக்கையிலே யுண்டாகிய இதமு மகிதமும். இதமகிதமாவது, மன வாக்குக் காயங்களினாலே செய்யப்பட்ட நல்ல

தொழிலுந் தீயதொழிலும். சஞ்சிதமாவது, மாயையிலே கட்டுக்கிடையாகிய புண்ணிய பாவங்கள். பிராரத்துவமாவது, எடுத்த தேகத்திலே புசித்துத் தொலைவதாகிய சுகதுக்கங்கள். சுகதுக்கங்களுக் கிருப்பிடமாவது, சத்த, பரிச, ரூப, ரச, கந்தமாகிய விடயங்கள். இந்த ஐந்து விடயங்களும் பத்து விதமாயிருக்கும். எப்படியென்னில், விருப்புச்சத்தம், வெறுப்புச்சத்தம், விருப்புப்பரிசம், வெறுப்புப்பரிசம், விருப்புரூபம், வெறுப்புரூபம், விருப்புரசம், வெறுப்புரசம், விருப்புக்கந்தம், வெருப்புக்கந்தம் ஆக ௧௦. இந்தப்பத்துஞ் சுகதுக்கங்களுக் கேறுவாகவே யிருக்குமெனவறிக. ()

ஆன்மாவினுடைய கன்மத்தைச் சிவனுமறிவார். ஆன்மாவுமறிவான். ஆக இரண்டுஞ் சரியோ வென்றால், சிவனறிகிறது மாத்திரம். ஆன்மா வறிந்து அழுந்துவான். (௪௨)

சிவனானவர் ஆன்மா பிராரத்துவம் புசித்தற்கு நல்வினை தீவினை இரண்டையுங் கருவியாகக் கூட்டினார். அந்தச் செய்தியை ஆன்மா தன்னுடைய செய்தி யென்று நினைத்துக் கொண்டான். ஆகையினாலே இந்த இரண்டுதொழிலு மான்மாவுக்கு ஆகாமியமாயிற்று. ()

ஆணவமலமானது இராக்காலம்போலும், கேவலமானது இருள்போலும், கேவலத்திற் றுப் பொருள் மறைப்பு. (௪௪)

ஆன்மாக்களுக்கு அர்ச்சிப்பு கேவல அவத்தையிலே அல்லாமற் சகல அவத்தையிலே கூடாது. சகல வவத்தையிலே ஆன்மாக்களுக்கு அர்ச்சிப்பென்றால் சிவனுக்குத் தோஷம் வரும். ஆகையினாலே சகல வவத்தையிலே ஆன்மாக்களுக்கு அர்ச்சிப்பு இல்லையெனவறிக. (௪௫)

ஆன்மாவுக்குக் கேவல சகல சுத்தமென்று மூன்றவத்தையுண்டு. அவற்றுட் கேவலமாவது காரணகேவல மென்றுங் காரிய கேவலமென்று மிரண்டு விதமாயிருக்கும். அவற்றுட் காரணகேவலமானது அனாதியிலே ஆன்மா வறிவுகெடாமல் ஆணவமலத்தில் அழுந்திக் கிடத்தல். அதெப்படிப்போல? கண்ணானது இராக்காலத்திருளிலே ஒளிகெடாமல் விழித்திருத்தல் போலும். காரியகேவலமானது நித்தியங் கருவிகள் நீங்கி நித்திரைகொள்ளுதல் காரணசகலமானது



அனாதிகேவலத்திலே அழுந்திக் கிடந்த வான்மா மாயா கருவிகளினாலே கேவல நீங்கிச் சுகதுக்கங்களை யறிதல். அதெப்படிப்போல? இராக்காலத் திருளிலே அழுந்திக்கிடந்த கண்ணானது விளக்கினாலே இருள் நீங்கிப் பதார்த்தங்களைக் காண்டல் போலும். காரியசகலமாவது நித்தியங் கேவலப்பட்ட வான்மா மாயா கருவிகளினாலே மறைப்புநீங்கிச் சத்தாதி விடயங்களையறிதல். காரணசுத்தமாவது ஆன்மா பஞ்சமலங்களுநீங்கி அருளைப்பொருந்திச் சிவானந்தத்தை அநுபவித்தல். அதெப்படிப்போல? இராக்காலத்திருளிலே இருந்த கண்ணானது சூரிய கிரணத்தினாலே இருள்நீங்கிச் சூரியனைக் கண்டு கொண்டிருத்தல் போலும். காரியசுத்தமாவது சுத்தாவத்தையாகிய சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாகிய பஞ்சாவத்தையுமாம். (௪௬)

மலநிவிர்த்திக்குக் காரணங்களாவன, அனாதிசிருட்டி தொடுத்து மோட்சபரியந்தம் ஆன்மாவாலுண்டான சிவபுண்ணியங்களாம். சிவபுண்ணியங்களாவன, அமுத்தி பூருவ சிவபுண்ணியம், முத்தி பூருவ சிவபுண்ணியம் ஆக ௨. உபாயச்சரியை, உபாயக்கிரியை, உபாயயோகம், உபாயஞானம் ஆக உபாயத்தால் வருஞ்சிவபுண்ணியம் ௪. உண்மைச்சரியை, உண்மைக்கிரியை, உண்மையோகம் ஆக உண்மையாற் செய்யுஞ் சிவபுண்ணியமூன்று. உண்மை ஞானமென்னுஞ் சிவபுண்ணிய மொன்றும் பத்துவிதமாயிருக்கும். அதேதென்னில் தத்துவரூபம், தத்துவதெரிசனம், தத்துவசுத்தி ஆக ௩. ஆன்மரூபம் ஆன்மதெரிசனம், ஆன்மசுத்தி ஆக ௩. சிவரூபம், சிவதெரிசனம், சிவயோகம், சிவபோகம் ஆக ௪. ஆக ௧௦. இந்தப்பத்தையும், சுத்தாவத்தையின் காரியமாகிய நின்மல சாக்கிரம், நின்மலசொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மலதுரியம், நின்மலதுரியாதீதம் என்னுமைந்தவத்தையிலேயும் அடக்கி ஆசாரியர் நிருவாண தீட்சைபண்ணி சீஷனுக்கு அறிவிப்பார். இந்தப்பத்தும் ஐந்தவத்தையிலே யடங்குகிற தெப்படியென்னில் தத்துவரூபம், தத்துவதெரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம் இந்தநாலும் நின்மலசாக்கிரத்தி லடங்கும். ஆன்மதெரிசனம், சிவரூபம் நின்மல சொப்பனத்திலே யடங்கும்; நின்மல சுழுத்தியிலே யடங்குவ தொன்றுமில்லை. ஆன்மா அருள்செய்யும்

பஞ்சகிருத்தியத்தை நான் செய்வேனென்று ஆன்மபோதஞ் சீவித்தல் மாத்திரம் நின்மல துரியத்திலே ஆன்மசுத்தியுஞ் சிவதெரிசனமுஞ் சிவயோகமும் ஆக மூன்றும் அடங்கும். நின்மலதுரியாதீதத்திலே சிவபோக மொன்று அடங்குமெனக் கொள்க. (௪௭)

ஞானவான்களுக்குப் பிராரத்தமில்லையென்பதற்குப் பழைய மணியகாரன் முதலிய உவமைகள் வருமாறு, ஒருவன் ஒரு ஊரிலே வெகுநாள் மணியம் பண்ணிக்கொண்டிருந்து தானிய தவசங்களும் வாழை கரும்பு முதலானது முண்டாக்கிக் கொண்டிருக்கையிலே மணியமாறிப் புதுமணியம் வந்தவிடத்துப் பழைய மணியகாரன் உமக்கு நெல்லும் எடுக்கப்படாது ஒரு இலையு மறுக்கப்படாது. பழைய மணியம் க. ஊர் க. பதார்த்தம் க. புதுமணியம் க. ஆக ௪. பழைய மணியகாரனைப் போலு மான்மா. ஊரைப்போலுஞ் சரீரம். பதார்த்தத்தைப் போலும் பிராரத்துவம். புதுமணியகாரனைப் போலுஞ் சிவன். (௪௮)

ஞானவான்களுக்குப் புசிப்பாவது சிவானந்தத்தை யனுபவித்தல். சிவனுக்குப் புசிப்பாவது ஞானவான்களுடைய பிராரத்துவம்.

கன்ம பரிபாக நடையாவது, வேதாகமங்களையோதி யறிதிபிட்டறிந்து சரீரப்பற்று விடாமல் நித்திய கன்ம அனுட்டானங்களை வழுவாமற் செய்து முடித்தல். (௫௰)

மலபரிபாக நடையாவது, சரீரத்திலே பற்றில்லாமல் ஞானசாத்திரங்களை யோதிக் கேட்டல், சிந்தித்தல், தெளிதலைப் பொருந்தி நிட்டையைக் கூடுதல். (௫௧)

ஞானவான்களுக்குத் தேகம் விழுதலாவது, தத்துவ சுத்திப்படுதல். ஞானவானுக்கு அந்திரிட்டியாவது, சிவஞானத்திலே சுத்தாவத்தையைப் பொருந்தி நின்மலசாக்கிரமுதல் துரிய மீறாகவுள்ள நாலவத்தையு மருளையு நீங்கிச் சிவானந்தத்திலே யழுந்துதல். (௫௨)

பரமசிவன் அநாதிகேவலத்திலே கிடந்த ஆன்மாவை அநாதி சிருட்டிசெய்யுங்காலத்திலே தாம், தலமாகவுந் தீர்த்தமாகவு மூர்த்தியாகவுந் திருமேனிகொண்டு சிவதலங்களிலே புழுமுதலான சரீரங்



கள் செனித்தாலும் வசித்தாலும் நசித்தாலுஞ் சிவபுண்ணியங்களைக் கொடுப்பர். தீர்த்தத்திலே மீன்முதலானவை செனித்தாலும் வசித்தாலும் நசித்தாலுஞ் சிவபுண்ணியங்களைக்கொடுப்பர். நாற்கால் மிருகங்கள் மனுஷர் முதலானவர்கள் தீர்த்தத்தைக் குடித்தாலும் முழுகினாலும் திவலைகள்தெறித்தாலும் நெற்பயிர்முதலானவைகள் தீர்த்தம் பாய்ந்து விளைந்தாலும் தீர்த்தம்பாய்ந்து விளைந்தநெல்லைப் பறவைமுதலானவைகள் புசித்தாலுஞ் சிவபுண்ணிய முண்டாம். சிவாலயமிருக்கிற ஊரிலே செனித்தாலு மிருந்தாலும் நசித்தாலும் சிவபுண்ணியமுண்டாம். சிவலிங்கத்திலே செய்யு மர்ச்சனை அபிஷேக நெய்வேத்திய முதலானவைகளுக்கு உரித்தான வில்வமுதலான விருட்சங்களாகவும் நெல் முதலான பயிர்களாகவும் பசுமுதலான மிருகங்களாகவும் செனிப்பித்துச் சிவபுண்ணியங்களை யுண்டாக்குவர். (௫௩)

சிவன் சத்தியுடனே கூடினாற் பிரவஞ்சமுண்டாம். சத்தி சிவத்துடன் கூடினாற் பிரவஞ்சமுண்டாகாது. ஆன்மா ஆன்மபோதத்துடனே கூடினாற் பிரவஞ்சமுண்டாம். ஆன்மபோதம் ஆன்மாவுடனே கூடினாற் பிரவஞ்சமுண்டாகாது. ஆன்மா இன்பதுன்பத்திலே பிறந்திறந்துவரும். இதற்கு வசனம். (௫௪)

இருவினையின்பத்துன்பத்திவ்வுயிர்பிறந்திறந்து
வருவதுபோவதாகுமன்னியவினைப்பலன்க
உருமரன்றரணியோடுதராபதிபோலத்தாமே
மருவிடாவடிவுங்கன்மபலன்களுமறுமைக்கண்ணே.

முப்பத்தாறு கருவித் தத்துவங்கள். புறநிலைக் கருவிகளாறுபறுந் தாத்துவிகங்கள். தத்துவமென்றதற்குப்பொருள் அழியாதிருத்தலாம். சிவனுக்குந் தத்துவமென்று சொல்லலாம், ஆன்மாவுக்குந் தத்துவமென்று சொல்லலாம், ஆணவமலத்துக்குந் தத்துவமென்று சொல்லலாம். மாயைக்குந் தத்துவமென்றுசொல்லலாம். தாத்துவிகங்களெல்லா மழிந்துபோம். தத்துவங்களுக்குந் தொகையில்லையென்றறிக. (௫௫)

ஆன்மாவுக்கு மலப்பிணியினாலே சரீரமுண்டானது. சிவனுக்கு ஆன்மாவினுடைய மலப்பிணியைத் தீர்க்கு மாசையாகி வியாதியினா

லே திருமேனியுண்டானது. ஆன்மாவினுடைய மலப்பிணியைத் தீர்க்க மருந்தாவது பிராரத்துவம். ஆன்மா பிராரத்துவத்தைத் தானே புசித்தால் மலப்பிணி நீங்காது. சிவனுக்குக் கொடுத்தால் மலப்பிணி நீங்கும். (௫௬)

எண்ணிறந்தகோடி ஆன்மாக்கள் மோட்சத்தையடையவும் பின்னுமான்மாக்கள் குறையா திருத்தல் உலவாக்கிழியிலே திரவியம் எடுக்க எடுக்கக் குறையா திருத்தல்போலும்.

இதற்குதாரணம்:—பிறந்தநாள்மேலும் பிறக்குநாள்போலுந் துறந்தோர் துறப்போர் தொகை. (௫௭)

சரீரத் திரிவாவது பாம்பு சட்டை கழற்றினாற்போல ஆன்மா தூலதேகத்தைவிட்டு நீங்கிச் சூக்குமதேகத்தோடு நரகத்திலே சென்று துன்பத்தை யனுபவிக்கிற நிமித்தம் பூதசரீரத்தைப் பொருந்தலும், சுவர்க்கத்திலே சென்று சுகத்தை யனுபவிக்கிற நிமித்தம் பூதசார சரீரத்தைப் பொருந்தலும், பூமியிலேசென்று சுகதுக்கங்களை யனுபவிக்கிறநிமித்தம் பூதபரிணாமசரீரத்தைப் பொருந்தலுமாம். இடத்திரிவாவது புள்ளானது முட்டையை விட்டுக்கொம்பிலேயிருத்தல்போல ஆன்மா தூலதேகத்தைவிட்டு நீங்கிச் சூக்குமதேகத்தைப் பொருந்தி நரக சுவர்க்கங்களாகிய சரீடத்திலேயுஞ் செல்லுதல். சித்தர் பரகாயப்பிரவேசம்பண்ணுதலுமாம். அறிவுத்திரிவாவது ஆன்மா கனவிலே கண்டசெய்தியெல்லாங் கனவிலே மறந்தாற்போல தூலதேகத்தை விட்டு நீங்கிச் சூக்குமதேகத்தோடு பூதசரீரத்தையும் பூதசார சரீரத்தையும் பொருந்தி நரக சுவர்க்கங்களாகிய சரீடத்திலும் அடைந்தபோது மயங்குதல். (௫௮)

கன்மம் ஆன்மா ஆர்ச்சித்தமுறைமையிலே வாராது. அதெப்படியெனில்? முதனாட்பனங் கொட்டையைப்போட்டான், மறுநாள் தென்னம்பிள்ளையை வைத்தான், மூன்றாநாட் கத்திரிநட்டான், நாலாநாட் கீரைவிதைத்தான். கீரைபதினைந்து நாளையிலும் கத்திரி ஒரு மாதத்திலுந் தென்னம்பிள்ளை அஞ்சுவருஷத்திலும் பனைமுப்பதுவருஷத்திலும் பலன் வருகிறதேயன்றி வைத்த முறையிலே வாராதுபோல வென்றறிக. (௫௯)



ஞானவான்களுக்குக் குருலிங்கசங்கம முண்டானாற்போலப் பெத்தான்மாவுக்குங் குருலிங்க சங்கம முண்டு. அதெப்படியென்றால் பெண்டிர், குரு, பிள்ளை, இலிங்கம், சுற்றத்தார், சங்கமம். (௬௰)

நிருவாணதீட்சை இரண்டு விதமாயிருக்கும். அதேதென்னில் அசத்திய நிருவாணமென்றுஞ் சத்திய நிருவாணமென்றுமாம். அவற்றுள் அசத்திய நிருவாணமாவது அதிதீவர சத்திநிபாதமில்லாத சீஷனுக்கு அறிவித்தா லறியுந்தன்மையில்லாதபடியினாலே ஆறத்துவாவையு மறிவியாமல் தீட்சையினாலே யவற்றை நீக்குதல். சத்திய நிருவாணமாவது அறிவிக்க வறியுந்தன்மையையுடைய சீஷனுக்கு ஆறத்துவாவையு மறிவித்து அவற்றை நீக்குதல். ஆறத்துவாவாவது மந்திரங்கள், பதங்கள், வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள்.

சிவனுக்கு அழியாத திருமேனி ஆன்மாவேயாம். சிவலிங்கம் விக்கிரக முதலான திருமேனிகள் சருவசங்காரகாலத்திலே நீங்கிப்போம். ஆன்மாவாகிய திருமேனி சருவசங்கார காலத்திலு நீங்காது. (௬௨)
உதாரணம்

உண்மை விளக்கம்.

எட்டுமிரண்டுமுருவானலிங்கத்தே,
நட்டம்புதல்வாநவிலக்கேள்—சிட்டன்
சிவாயநமவென்னுந்திருவெழுத்தஞ்சாலே
யவாயமறநின்றாடுவான்.

பரமேசுரன் திருமேனிகொள்ளாவிட்டால் பஞ்சகிருத்திய முண்டாகமாட்டாது. பிரமா விட்டுணு முதலான தேவர்களுக்கும் நாதர்க்கும் நரர்க்கும் வேதாகமங்களை யறிவிப்பாருமில்லை. யிம்மூவர்களுக்குங் குருசந்தானத் தொடர்ச்சியுமுண்டாகமாட்டாது. ஆன்மாக்களுக்குப் போகபோக்கியங்களுமுண்டாகமாட்டாது. குருவானவர் குண்டமண்டலாதிகளாற் பாசத்தை நீக்குந்தீட்சைகளுமுண்டாகமாட்டாது. ஆகையினாலே கர்த்தா திருமேனிகொண்டு வருவாரென்பதற்கு வசனம் (௬௩)

சித்தியார்.

ஆரணமாகமங்களருளினாலருவுகொண்டு
காரணனருளாவதிற்கதிப்பவரில்லையாரு

நாரணன்முதலாயுள்ளசுரர்நரர்நாகர்க்கெல்லாம்
சீரணிதருசந்தானச்செய்தியுஞ்சென்றிடாவே.

பரமேசுவரன் அருளே திருமேனிகொண்டு வருவாரென்பதற்கு வசனம் (௬௪)

உருவருள்குணங்களோடுமுணர்வருளுருவிற்றோன்றுங்
கருமமுமருளரன்றன்கரசரணாதிசாங்கந்
தருமருளுபாங்கமெல்லாந்தானருடனக்கொன்றின்றி
யருளுருவுயிருக்கென்றேயாக்கினனசிந்தனன்றே.

பரமேசுவரனானவர் பிரமா விட்டுணு ருத்திரன் மகேசுவரனாகிய நான்கு ரூபமுமாகான். பரவிந்து, பரநாதம், அபரவிந்து, அபரநாதமென்னும் நான்கு அரூபங்களுமாகான். சதாசிவமென்னுமுருவாரூபமுமாகான். இந்த ஒன்பது ரூபத்திலும் வியாபகத்தினாலே பொருந்தியிருந்தாலும் அவற்றைப் பொருந்தாதவனே யாவனென வறிக. இதற்கு உதாரணம் (௬௫)

"சிவனருவுருவுமல்லன்சித்தனோடசித்துமல்லன்
பவமுதற்றொழில்களொன்றும்பண்ணிடுவானுமல்லன்
றவமுதலியோகபோகந்தரிப்பவனல்லன்றானே
யிவைபெறவியைந்துமொன்றுமியைந்திடாவியல்பினானே."

உண்மைச் சரியைக்குச் சித்தியாரில்

தாதமார்க்கஞ்சாற்றிற்சங்கரன்றன்கோயிற்
றலமலகிட்டிலகுதிருமெழுக்குஞ்சாத்திப்
போதுகளுங்கொய்துபூந்தார்மாலைக்கண்ணி
புனிதற்குப்பலசமைத்துப்புகழ்ந்துபாடித்
தீதிறிருவிளக்கிட்டுத்திருநந்தவனமுஞ்
செய்துதிருவேடங்கண்டாலடியேன்செய்வ
தியாதுபணியீரென்றுபணிந்தவர்தம்பணியு
மியற்றுவதிச்சரியைசெய்வோரீசனுலகிருப்பர்.



உண்மைக் கிரியைக்கு,

புத்திரமார்க்கம்புகலிற்புதியவிரைப்போது
புகையொளிமஞ்சனமமுதுமுதல்கொண்டைந்து
சுத்திசெய்தாசனமூர்த்திமூர்த்திமானாஞ்
சோதியையும்பாவித்தாவாகித்துச்சுத்த
பத்தியினாலருச்சித்துப்பரவிப்போற்றிப்
பரிவினொடுமெரியில்வருகாரியமும்பண்ணி
நித்தலுமிக்கிரியையினையியற்றுவோர்க
ளின்மலன்றனருகிருப்பர்நினையுங்காலே.

உண்மையோகத்திற்கு,

சகமார்க்கம்புலனொடுக்கித்தடுத்துவளியிரண்டுஞ்
சலிப்பற்றுமுச்சதுரமுதலாதாரங்க
ளகமார்க்கமறிந்தவற்றினரும்பொருள்களுணர்ந்தங்
கணைந்துபோய்மேலேறியலர்மதிமண்டலத்தின்
முகமார்க்கவமுதுடலமுட்டத்தேக்கி
முழுச்சோதிநினைந்திருத்தன்முதலாகவினைக
ளகமார்க்கவட்டாங்கயோகமுற்று
முழந்தலுழந்தவர்சிவன்றனுருவத்தைப்பெறுவர்.

உண்மைஞானத்திற்கு,

சன்மார்க்கஞ்சகலகலைபுராணவேத
சாத்திரங்கள்சமயங்கடாம்பலவுமுணர்ந்து
பன்மார்க்கப்பொருள்பலவுங்கீழாகமேலாம்
பதிபசுபாசந்தெரித்துப்பரசிவனைக்காட்டும்
நன்மார்க்கஞானத்தைநாடிஞான
ஞேயமொடுஞாதிருவுநாடாவண்ணம்
பின்மார்க்கச்சிவனுடனாம்பெற்றிஞானப்
பெருமையுடையோர்சிவனைப்பெறுவர்காணே.

சிவஞான மொன்றிலே சிவனை யறிகிறதே யல்லாமல் மற்ற ஞானங்களொன்றினாலேயுஞ் சிவனை ஒருக்காலுமறியக்கூடாது. (௬௬)

பக்குவான்மாவுக்கு ஞானசாத்திரத்தைத் தானே படித்தால் ஞானம் விளங்காது; ஞானாசாரியர் சீஷனுடைய பக்குவமறிந்து ஞானசாத்திரத்தைப் போதித்தால் ஞானம் விளங்கும். அது எப்படிப் போல? தண்ணீர்த்தாகமுடையவன் சமுத்திரத்துத் தண்ணீரைத் தானே குடித்தாற் றாகந்தீராது; மேகமானது சமுத்திரத்துத் தண்ணீரைப்பருகி உவரையெல்லாமகற்றித் தண்ணீரைக் கொடுத்தாற் றாகந்தீரும். தண்ணீர்த்தாகமுடையவனைப்போலுமான்மா, சமுத்திரத்தைப் போலும் ஞானசாத்திரம், மேகத்தைப்போலும் ஞானாசாரியர். இதற்கு உதாரணம்,

திருக்களிற்றுப்படியார் ௯-ம் பா.

சாத்திரத்தையோதினர்க்குச்சற்குருவின் றன்வசன
மாத்திரத்தேவாய்ந்தவளம்வந்துறுமே—பார்த்தகடற்
றண்ணீர்குடித்தவர்க்குத்தாகந்தணிந்திடுமோ
தெண்ணீர்மையாயிதனைச்செப்பு.

மோட்சகாமியானவன் ஆன்மாவுக்குள் இருக்கிற சிவனைச் சிவபக்தியினாலும் ஞானத்தினாலும் வெளிப்படுத்தல், காட்டத்திலேயிருக்கிற அக்கினியை அரணியினாலுங் கயிற்றாலுங்கடைந்து வெளிப்படுத்தல்போலும், தயிரிலே இருக்கிற நெய்யை மத்தைநாட்டிக் கயிற்றைச்சுற்றிக் கடைந்து வெளிப்படுத்தல்போலும். உதாரணம்,

தேவாரம்.

விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போல்
மறையநின்றுளன்மாமணிச்சோதியான்
உறவுகோல்நட்டுணர்வுகயிற்றினால்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே.

கர்த்தாவுடைய பாதத்திலே ஆன்மா மோட்சத்தை யடையுமென்றதற்குப் பொருள் அருளிடமாகச் சிவத்தைத் தரிசிக்கிறது என்று பொருள். அதெப்படிப்போலெனில் கண் ஆதித்த கிரணங்கொண்டு ஆதித்தனைக்காண்கிறதுபோல. திலவுகால்விசியது என்றதும். (௧௧)



ஆன்மாவுக்கெல்லாவற்றிற்கு முந்தினது பக்குவம், அதற்குப் பிந்தினது சிவபுண்ணியம், அதற்குப்பிந்தினது மலபரிபாகம், அதற்குப் பிந்தினது சத்திநிபாதம், அதற்குப் பிந்தினது இருவினையொப்பு, அதற்குப்பிந்தினது ஞானாசாரியர் திருமேனிகொண்டுவந்து திருவுளம் பற்றுகின்ற ஞானசாத்திரம். இதுமோட்சமடையு முறைமையென்றறிக. (௭௦)

மாபட்டவனை முற்றியது.

சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞானசம்பந்தசுவாமிகள் மடம்.

---

# சிந்தாமணி சரித்திரம்.

[ (1907) 413-ம் பக்கத்தொடர்ச்சி. ]

எழுந்திருந்து பெண்பிள்ளைகளிருக்கும் இடத்தை நாடிச்சென்றதில் அங்கே ஒருவர் தீபத்தின் முன்னர் படித்துக்கொண்டு இருந்தபடியால் அவரை நோக்கி “ இந்த வைத்தியரை யார் கூட்டிக்கொண்டு வந்தது. அவர் எத்தனை பேரைக் கொன்றாரோ தெரியவில்லை. எல்லாப்பழியும் சேர்ந்து அவருடைய மூளையை உறிஞ்சிவிட்டதுபோலும். இன்னும்அரைநாழிகை அவர் இங்கு இருப்பாராகில் செட்டியார் காரியம் முடிவாய்விடும். இவரைப்போன்ற வைத்தியர்களும், சோதிடர்களும், மந்திரவாதிகளும், இரசவாதிகளும், குறிசொல்வோர்களும் நமது நாட்டில் எங்கேபோனாலும் நாலுபேர் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நம்பி ஏமாந்து போவதற்கும் அநேகம் அறிவாளிகளிருக்கின்றார்களே. முப்பது வருஷம் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து ரூபா அறநூற்றைம்பது சம்பளம்வாங்கிக்கொண்டு தனக்குச்சமானமான புத்திமான் உலகத்தில் எவருமில்லையென்று விவகரித்துவரும் நமது சிநேகிதர் பொய்யன்றி மற்றொன்றும் புகலாத அந்த ஜோஸியன் வீட்டுக்குப் பலமுறை நடந்து சோழிந்தாரல்லவா? அப்புரட்டன் உமக்கு ஜில்லா ஜட்ஜிவேலை பத்துத்தினங்களுக்குள் ஆகப்போகிறதென்று ஆரூடம் பார்த்து உரைத்தானும். அதை நம்பிக்கொண்டு தன் வண்டி குதிரை முதலியவற்றையெல்லாம் ஒன்றுக்குப் பாதியாக விற்று முதலாக்கினார். அம்முதலுக்கு மேற்பட்டு அந்தச்சோதிடனும் அவரிடமிருந்து பிடுங்கிக்கொண்டுவிட்டானும். கெடுச்சென்றும் அந்தச்சோதிடனுடைய பொய்மைவெளியாகாதா?

அக்கெடுக்கடந்து இரண்டு வருஷங்கள் ஆகின்றன. திரும்பத்திரும்ப அந்தப்புத்திமான் அந்தப்புளுகன் வீட்டுக்குப்போய்க் காத்துக்கொண்டிருக்கிறதும் ஒரு நாள் அம்சமும், மற்றொருநாள் அஷ்டவர்க்கமும், பின்னொருநாள் காலசக்கிரமும் பார்த்துக்கொண்டு அந்தச்சோதிடன் புகலும் பொய்களையெல்லாம் வேதவசனம்போல் கேட்டு மகிழ்வடைகிறதுமாயிருக்கின்றதே. இம்மட்டோ? நமது —— ஐயர் அவர்கள் வயிற்றுக்கு உண்ணாமல் பெண்டு பிள்ளைகளை உபவாசத்தில் வைத்துச்சேர்த்து வைத்தபொருளையெல்லாம் அவர் பிள்ளை தலையெடுத்து அரை நாழிகைக்குள் ரஸவாதத்தில் சாம்பலாக்கிவிட்டான். அவன் எவ்வளவோ படித்திருந்தும் அப்படிப்பு இரசவாதமயக்கத்தை மேற்கொள்ளமுடியவில்லை. மந்திரவாதிக்கும் குறிசொல்வோனுக்கும் உட்படாதவர்களைக்காணோமே. ஐயையோ! நம் நாட்டுக்கு இந்தப்பொய்யர்கள் போதாதோ. சூட்சமதேகங்களைப் பார்க்கிறோமென்கிறவர்களும் ஸ்தூலதேகத்தை எறிந்துவிட்டு இந்திரலோகம் சந்திரலோகம் முதலிய புவனங்களுக்குச் சென்று திரும்பினோமென்கிறவர்களும் ஒரு நாழிகைக்குள் இமயமலையிலிருந்து பொதியமலைக்குச்சென்று வந்தோமெனப்புகல்வோர்களும் அநேகமாய் உண்டாகியிருக்கின்றார்களே. நமது நாட்டுக்கு வறுமைவிருத்தியடைவதுபோல இந்த விநோதமானகாட்சிகளும் மேன்மேலும் விருத்தியடைகின்றன. ஆனால் முன்னிருந்தவர்கள் படிப்பில்லாத புளுகர்கள் என் வீட்டுக்கு எதிர் வீட்டிலிருக்கும் ஒரு கிழவர் அடிக்கடி ஓர் பாட்டுப்பாடுவார். அஃது இப்பொழுது என் ஞாபகத்துக்கு வருகின்றது. அப்பாட்டாவது.

மெய்புரையாய்ப்பொய்யனுக்குநான்குபிள்ளை
    மேதினியில்ரசவாதிமூத்தபிள்ளை
ஐயமிலைச்சோதிடன்றானிரண்டாம்பிள்ளை
    ஆகிவர்வைத்தியனும்மூன்றாம்பிள்ளை
பொய்யுரைக்குமந்திரத்தான்நான்காம்பிள்ளை
    பூதலத்திற்கருமிகள்தம்பொருளையெல்லாம்
பையவர்கையினின்றுதான்பறிக்கப்
    படைத்திட்டானன்னவரைப்பதுமன்தானே.

அது போகட்டும். ஒரு தட்டில் தாம்பூலம் கொண்டுவரவேண்டும். காலில் விழுந்தாவது அந்த வைத்தியனை அனுப்பிவிடுகிறேன்." என்று சொல்லி அவரிடமிருந்து தாம்பூலத்தை வாங்கி காலணாவை அதனுடன் வைத்து அதை வைத்தியரிடம் கொண்டுபோய் "பிள்ளையவாள்! செட்டியாருடைய அதிர்ஷ்டந்தான் தங்களை இங்கு வரவழைத்தது. தங்களுடைய ஹஸ்த



விசேஷத்தினால் அவருக்கு மிகவும் அநுகூலமாயிருக்கிறதென்று நினைக்கிறேன். இம்மட்டே போதும். அவசியமானால் தங்களை மறுபடியும் வரவழைப்பதாக இருக்கும்" என்றுசொல்லித் தாம்பூலத்தையும் கால்ரூபாவையும் அவர் கையில் அந்தணர் கொடுத்தார். அவ்வைத்தியர் அந்தக்கால்ரூபாவை உயர்ந்த சம்மானமாகக்கொண்டு மனமகிழ்ச்சியுடன் அவ்வீட்டைவிட்டுவெளியிற் சென்றனர்.

அவர் போனபிறகு அந்தணர் சற்று நேரம் அங்கிருந்து செட்டியாருடைய தலைவலிக்குத் தற்கால சாந்தியாகச் சில பரிகாரம் செய்து அவர் கொஞ்சம் நித்திரையானது கண்டு தானும் தன் வீட்டிற்குச்சென்றார். அவர் வீதியிற் செல்லுகையில் அவரைத்தொடர்ந்து வயது முதிர்ந்த பெண்பிள்ளை ஒருத்தி வந்துகொண்டிருந்தாள். அவளை நோக்கி அந்தணர்:—

"நீ வருவதற்குக் காரணமென்ன? நீ செட்டியாருடைய விடுதியிலிருக்கும் வேலைக்காரியல்லவா? என்று வினவினவுடன் அப்பெண்பிள்ளை மிக வணக்கமாக

"ஐய! ஆம் என்வரலாறும் செட்டியாருடைய பிணியின் வரலாறும் தங்களுக்குத் தெரியாதே? நடந்திருக்கும் அநியாயங்களை வெளிப்படையாய்ச் சொல்லுவதற்குப்பயமாயிருக்கிறது." என்று சொன்னாள். அதைக்கேட்ட அந்தணர் கொஞ்சம் யோசனைசெய்து

"என்ன நடந்திருக்கிறதோ அதை நீ பயப்படாமல் சொல்லலாம். நீ யார்? நீ செட்டியார் விடுதியில் வேலைக்கு வந்து சொற்ப காலந்தானே ஆயிருப்பதாகக்காண்கின்றது. ஏதாவது விசேஷமிருந்தால் சொல்லலாம் என்று அந்தணர் சொன்னார். அதைக்கேட்டு அந்தப் பெண்பிள்ளை

"சுவாமி! நானிருப்பது கொல்லம். என்பெயர் அழகி. செட்டியாருடைய மனைவியின் பெயர் சிந்தாமணியம்மாள். அவளும் நானும் என்னுடைய யஜமானன் கிருஷ்ணையரும் இவ்வூருக்கு வந்து பதினைந்து நாளாயின" என்று சொல்லிச் செட்டியார் அச்சிமங்கையர்களுடைய வலையில் அகப்பட்டுக்கொண்டிருப்பதையும் அவருடைய மற்ற வரலாறுகளையும் சிந்தாமணி அவரைத்தேடி அடைந்த பல துன்பங்களையும் கடைசியாக அவர் இவ்விடம் வந்திருப்பதாகத்தெரிந்துகொண்டு அவளும் இவ்வூருக்கு வந்திருப்பதையும் விவரமாக மொழிந்துவிட்டுப் பின்பு

"ஐயா! இவ்வூரில் இரண்டு மாதங்களுக்கு முன் நடந்த உற்சவ விமரிசையைப் பார்ப்பதற்காகச் செட்டியார் அந்தப் பெண்பிள்ளைகளுடன் இவ்விடம் வந்தார். அவர் இவ்விடம் வந்து சில நாளைக்குப்பிறகு அந்தப்பெண்

பிள்ளைகள் இவ்வூரிலிருக்கும் ஒரு வேசியை ஸ்நேகம் செய்துகொண்டு அவளிடமிருந்து ஒரு மருந்தை வாங்கி அதைப்பாலுடன் கலந்து செட்டியாருக்குக் கொடுத்திருக்கிறார்கள். அப்பால் அந்தமருந்தின் துர்க்குணத்தினால் அவருக்கு வயிற்று வலியும் தலைமயக்கமும் உண்டானபிறகு அவருக்கு அந்த வேசையைக் கொண்டே வைத்தியம் செய்யும்படி செய்திருக்கிறார்கள். அவள் வைத்தியம் செய்வது போலப்பாவனை பண்ணி அவள் முன் கொடுத்த மருந்து அவருடைய உடலில் ஊறும்படி செய்துவிட்டாள். இவ்விடத்தில் செட்டியாருடைய நிலைமையெல்லாம் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற கருத்துடன், என் யஜமானுடைய உத்தரவுப்படி என் பெயரையும் ஊரையும் சொல்லாமல் என் பெயர் செல்லம்மாளென மொழிந்துகொண்டு செட்டியார் விடுதியில் அந்தப் பெண்பிள்ளைகளுக்குள் வேலைக்காரியாயமர்ந்தேன். அதுமுதல் மூன்று நாளைக்குள் மேற்சொல்லிய மோசங்களெல்லாம் எனக்கு வெளியாயின. அவைகளை என் யஜமானிடத்திலும் சிந்தாமணியிடத்திலும் நான் தெரிவித்தேன். அவர்கள் மிக்க வருத்தமுற்று அடுத்த தெருவிலிருக்கும் ஒரு பண்டாரத்தினிடத்தில் யோசனை செய்தார்கள். அவர் காஷாயம் புனைந்திருந்தாலும் மருந்து வைப்பதும் பிறர் வைத்த மருந்தை யெடுப்பதுந்தான் அவருடைய தொழிலாம். அவர் மூன்று மாத்திரைகள் கொடுத்து ஆறுவேளைக்கு ஒரு மாத்திரை பாலில் தேய்த்துக்கலந்து கொடுக்கும்படி சொன்னார். பண்டாரம் கொடுத்த மருந்தும் வேசை கொடுத்த மருந்துபோலத்தான் இருக்குமோவென்று சஞ்சலப்பட்டுக்கொண்டு இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் எல்லாம் வல்லசித்தருடைய பாதகமலத்தைத் துதித்து அந்தப்பண்டாரம் சொன்னபடி அம்மருந்தைப் பாலில் கரைத்துக்கொடுத்து வந்தேன். ஒவ்வொரு நாளும் அந்த வேசையும் இவ்விடுதிக்கு வருவதுண்டு. ஆனால் அவள் கொடுக்கும் மருந்தை நான் வாங்கி அதைச்செட்டியாருக்குக் கொடாமல் தெருவில் எறிந்துவிட்டுப் பண்டாரத்தினுடைய மருந்தையே பத்துவேளை கொடுத்திருக்கிறேன். செட்டியாருக்கு முக்கால் வாசி சௌக்கியமாய் நேற்றையதினம் சொற்ப ஆகாரமும் பிரியத்துடன் உண்டார். ஐயோ! இன்று மாலையில் அந்தப்பழிகாரிக் குஞ்ஞுக்குட்டி மல்லிகைப்பூ வாங்கி வரும்படி என்னை நிர்ப்பந்தப்படுத்தியதால் நான் கடைக்குப் போயிருந்த சமயத்தில் அந்த வேசை வந்து அவளுடைய மருந்தைக்கொடுத்துவிட்டாள். அதனால்தான் இப்பொழுது செட்டியாருக்குத் தலைவலியும் மயக்கமும் அதிகமாகித் துயரப்படுகிறார். செட்டியாருக்குத்திருவனந்தபுரத்தில் விஸ்தாரணமானபூங்காவனமும்பங்களாவும் கடற்கரையில் விலையுயர்ந்த மாளிகையும் தோட்டமும் இருக்கின்றனவாம். அவர் வேசையின் மருந்து தலைக்கேறி மதிமயங்கி இருந்தகாலத்தில் மேற்கண்ட சொத்துக்களை அவர் குஞ்ஞுக்குட்டிக்குத் தானமாகக் கொடுத்துவிட்டது போல ஒரு சாஸனத்தை யெழுதி அவருடைய கையெழுத்தையும் வாங்கி வைத்திருக்கிறார்கள். இதல்லாமலும் அவருடைய நகைகள் ரொக்கங்கள் அடங்கிய பெட்டகத்தையும் குஞ்ஞுக்குட்டி எடுத்துக்கொண்டுவிட்டாள். அவர்கள் பேசிக்கொண்டது மலையாள பாஷையிலென்றாலும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது அவர்கள் வேசையினுதவியால் செட்டியாருக்கு முற்றிலும் மதிமயக்கத்தை விளைவித்து அவரை இவ்வூர் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு ஓசைப்படாமல் திருவனந்தபுரத்திற்குப் போய்விட எண்ணியிருக்கிறார்களென்று வெளியாகிறது. இவ்வூரில் ஒரு மராட்டியனும் பட்டுநூற்காரனும் அவர்களுடைய மோசங்களுக்கெல்லாம் வேண்டிய உதவி புரிந்து வருகின்றார்கள். தங்களுடைய விடுதியை எனக்குக்காண்பித்தால் அவ்விடத்திற்கு என் யஜமானனையும் சிந்தாமணியையும் கூட்டிக்கொண்டு வருகிறேன். அந்த அம்மாளைத் தாங்கள் பார்த்தாலே அவளுடைய உத்தம குணமும் அவள்படும் துயரமும் தங்களுக்குத்தெரியும்" என்று சொல்லி அந்தணருடைய காலில் விழுந்தாள். உடனே அவர் திடுக்கிட்டு ஒரு மறுமொழியும் புகலத்தோன்றாமல் அவளைப்பார்த்து



"நீ சொல்வது மிக்க பரிதாபமாகவும் ஆச்சரியமாகவும் இருக்கிறது. உன் யஜமானனுடைய ஜாகை எங்கேஇருக்கிறது? நானே அவரைப்போய்ப் பார்க்கிறேன். உரைத்ததெல்லாம் வாஸ்தவமானால் தகுந்த ஏற்பாடு செய்வோம். நீ செட்டியாருடைய பக்கம் விட்டு அகலவேண்டாம்." என்று சொல்ல அப்பெண்பிள்ளை

"ஐய! என் யஜமான் ஆற்றங்கரை யோரத்திலிருக்கும் மனோன்மணி சத்திரத்தில் இருக்கிறார். உடனே தாங்கள் அவரைக்கண்டு வேண்டியவாறு யோசித்துச்செட்டியாரைக் காப்பாற்றி அந்த அம்மாளுடைய மனக்கவலையைத் தீர்க்கவேண்டு"மென்று சொல்லிவிட்டு அவள் செட்டியாருடைய விடுதி வந்து அவருடைய பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தாள்.

உமாதாஸ்.

# சமாசாரக்கொத்து.

சென்னை மாகாணக் கூட்டம்:—சென்ற சனி மாலை ஆனரெபில் மிஸ்டர் கிருஷ்ணசாமியய்யர் அக்கிராசனத்தின் முன்பாகக் கூடிய மகாஜனசபை மீட்டிங்கில் (1) இந்தியன் நேஷனல் காங்கிரஸுக்கு இம்மாகாணக் கூட்டம் உதவியாயிருக்கவேண்டுமென்றும், (2) இம்மாகாணக் கூட்டத்தின் நோக்கமாவது மற்ற பிரிட்டிஷ் ராஜ்ய பாரத் தன்னாட்சி நாடுகளைப்போன்ற துரைத்தன முறையை இந்திய மஹாஜனங்கள் தேடிக்கொள்வதன்றி அவற்றிற்கு சமதையான உரிமைகளிலும் கடமைகளிலும் பிரவேசிப்பதாலும், கிரமமான வழியில் தற்கால துரைத்தன முறையை வெகுவாய் சீர்திருத்தத்துக்குக் கொண்டுவருவதினாலும், பொது ஜனாபிப்பிராயப்படி இந்நாட்டின் திறமையையும், நீதியையும், செல்வத்தையும், தொழிலேற்றத்தையும் ஒழுங்காய் விருத்திகரப்படுத்துவதினாலுமே நிறைவேற்றிக்கொள்ளவேண்டியதென்றும், (3) இக்கூட்ட நடவடிக்கைக் கிடையூறாய் நிற்பதா யேற்படும் பிரதிநிதி அல்லது வேறெவரையும் துரத்தி விட்டு இக்கூட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளும்படியாக இக்கூட்டத் தலைவருக்குப் பூர்ணாதிகாரம் இருக்கவேண்டியதென்றும், (4) மேற்கூறிய 3 நிபந்தனைகளுக்கு உட்படாதவரும், 21 வயதாகாதவருமாகிய எவரும் பிரதிநிதியாக வரக்கூடாமையென்றும், (5) பிரதிநிதிகள் மேற்கூறிய முதல் மூன்று நிபந்தனைகளுக்குட்பட்டு சங்கத்தவராலாவது, பொதுக்கூட்டங்களாலாவது ஏற்படவேண்டியதென்றும், (6) விசிட்டர்கள் டிக்கெட்டு பெற்றுக்கொண்டே வரவேண்டுமென்றும், (7) போல் வோட்டெடுக்க வேண்டுமாயின், வந்துள்ள பிரதிநிதிகளில் கால்வாசியாவது கூடிக் கேட்டுக்கொள்ளவேண்டியதென்றும், (8) மஹாஜன சபையாரால் பிரெஸிடெண்டு நியமிக்கப்படவேண்டியதுமன்றி, பிரதிநிதிகளுக்கு வந்தனோபசாரங்கூறி வரவழைக்க மஹாஜன சபையாரால் நியமிக்கப்பெற்ற மேற்படி சபிகரொருவர் வேண்டுகோளின்படி அவர் அக்கிராசனத்தமரவேண்டியதென்றும், (9 ஒவ்வொரு பிரதிநிதியும் ரூபா 3-ம், ஒவ்வொரு விசிட்டரும் ரூபா 2-ம் செலுத்தினாலும் யாருக்கும் போஜனம் படுக்கை வசதி செய்துவைக்கப்படமாட்டாதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

குமரன் துணை.

விவேகபா நு.
த்திரிகை.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்

தொகுதி 7 } 1908௵ ஜூன், ஜூலை, ஆக ஸ்டு { பகுதி 6, 7, 8.

# தேசக்ஷேமம்.

நம் நாடு நெடுநாளாய்க் கிருஷித்தொழிலில்
விளங்கிவந்திருக்கிறதை உலகத்தார் எவரும் அறி
தக்கவண்ணம் கிருஷிசாஸ்திரத்தை அபிவிருத்தி
றோம். சிலகாலமாகத்தான் நாம் இதுவிஷயத்தில்
துகிறோம். இன்னும் எத்தனையோ விதமாக அ
வேண்டும். இராஜாங்கத்தாரும் இதுவிஷயமாய் மிக
த்திவருகிறார்கள். இனி நம்தேசம் இதுவிஷயத்தி
யடையலாமென்ற நம்பிக்கையுண்டு. ஆனால் அது
ஒத்துழைத்தாலொழிய இம்முக்கியமானகாரியம் நிறைவேறாது.
யானவனும், வியாபாரியும், தொழிலாளிகளும் ஒத்து
ம். குடியானவன் விளைவிக்கும் பொருள்களைத் தொழி
யோகப்படுத்தித் தக்க சாமான்களாக்கி வியாபாரிக
கத்தியாராக இருக்கவேண்டும். வியாபாரிகள் தங்கள்
டும் கருதாமல் தேசக்ஷேமத்தையே பெரும்பயனாகக்க
ணம் நம்நாட்டுள் பரவச்செய்து நமக்குக்கண்டு மீதமான
டுகளுக்கு அனுப்பி இலாபம் சம்பாதிக்கவேண்டும். இ
லே முக்கியமாய் நம்தேசம் க்ஷேமமடையவேண்டும்.
த்தக்க புத்திபுகட்டி யுக்திகளைக் கற்றுக்கொடுத்து அடிக்
ளை மேற்பார்த்துவரவேண்டியது சாஸ்திரப்பயிற்சி செய்
ர்களின் கடமையாம். ஆகையால் ஒருதேசத்துக்கு மு
நன்மை செய்பவர்கள் அத்தேசத்தைச்சார்ந்த அறிஞர்க

மைபெற்று
ஆனால்நாம்
மேன்
மலிருக்கி
வார்.
செலுத்
செய்யா
செய்ய
கவனம்
செலு
பிவிருத்
ருத்தி
க கவனம்
பலர்
ல் அபிவி
குடி
ஷயத்தில்
டு
ப
ழைக்கவேண்ட
லாளிகள் உ
க்குக் கொடுப்
நலங்களைமட்
தி தக்கவண்
தை அயல்நா
மூவர்களா
வர்களுக்கு
டி இவர்க
புத்திமா
தல் முதல்
ர. அறிஞ

ர்கள் கிருஷிசம்பந்தம ாகவும், கைத்தொழில்விஷயமாகவும், வியாபா
ரவிஷயமாகவும், அடி க்கடி அன்னவர்களுக்கு யுக்தி புத்திசொல்லிவந்
து தேசக்ஷேமத்தை ண அவர்களைக்கொண்டு அபிவிருத்திபண்ணவேண்
டும். நம் நாட்டுப்ப ருத்திமுதலிய பலசாமான்களை அந்நியர்கள் விலை
க்குவாங்கும்படி ப த்துக்கொண்டு நாம் ஒன்றுக்குப் பத்தாக விலை
கொடுத்து அயல் த்து வியாபாரிகளைத் தனிகர்களாக்குகிறோம்.
குடியானவர்களுக் ய பருத்தி விளைவை முற்றிலும் நம்நாட்டு விய
ாபாரிகளே வாங் கட்டிவைத்துக்கொண்டு கைத்தொழிலாளிகளைக்
கொண்டு நெச து நம் தேசத்தாருக்கே விற்பனைசெய்யும்பக்ஷ
த்தில் நம் நாட்டுச் அனைவருக்கும் தக்க பிழைப்பு ஏற்படுகிறது
மன்றி நம் ந முண்டு. செல்வமும் கொள்ளைபோகாமல் அபிவிருத்திய
டைய இட ண்ணிக் கைத்தொழிலாளிகளும் தக்கபடி அறிவை அபி
விருத்திப அழ காண்டு அயல்நாட்டாரோடு போட்டிபோட்டுச்
சாமான்க ன்களுக் ாகவும் நன்றாகவும் செய்யும்பக்ஷத்தில் அயல்நாட்
டுச்சாமா ழுது தா நம் ஜனங்கள் பேயாய்ப் பறக்கமாட்டார்கள்.
இப்பெ றது. ே இவ்வித ஊக்கம் நம் நாட்டாருக்குள் உண்டாகி
இருக் ார்கள். மற்கூறிய நால்வரும் தேசக்ஷேமத்துக்குப் பொறுப்
பானக்ஷேமம் குறை வரவர் தத்தம் கடமைகளைச்செய்து வராவிடில் தே
சக்ஷேமத்துக்கு றவடையும். நம் குடியானவர்கள் நம் நாட்டாரின்
சேர்ந்தைப் பெரி வேண்டிய பொருள்களை விளைவிக்காமல் தங்கள் இலா
ப குத் தடைய தாகநினைத்துப் பாடுபடுவார்களானால் தேசக்ஷேமத்து
ச் நாட்டார் ண்டாகும். உதாரணமாகச்சென்ற சிலவருஷகாலமாய்
நமக்கு நிலக்கடலையை ஏராளமாய்ப்பயிர்செய்து வருகிறார்
ம் குடி வேண்டிய உணவுப்பொருள்களைச் சாகுபடி செய்வ
ய்த தா னவர்களின் முதற்கடமையாம். அவ்வாறு சாகுபடி
துக்கொண் யங்களில் தங்கள் உணவுக்கு வேண்டியவைகளை வைத்
தவேண்டும் மீதமானவற்றை நம் நாட்டுக் குடிகளுக்கே விற்கநினைக்
போது நம் வியாபாரிகளும் இத்தானியத்தை விலைக்குவாங்கும்
மேயொழி நாட்டுக்குள்ளேயே விற்பதற்கு வாங்க முயலவேண்டு
பாழ்படுத் ய அந்நிய தேசங்களுக்கு அனுப்பித் தேசக்ஷேமத்தைப்
பாதிக்க ந தல் கூடாது. பேராசைக்குணத்தால் அதிக இலாபம் சம
ம் ஜனங்களுக்கு விளைந்த உணவை அயல்நாட்டுக்கு ஏற்று



மதிசெய்து நம் நாட்டுக் குடிகளைத் தவிக்கவிடுவார்களானால் அன்னவர் தேசத்துரோகிகளே யாவார்கள். உள்நாட்டில்விற்றாலே போதுமான இலாபம் கிடைக்குமே. ஏன் சொற்பம் அதிக இலாபத்துக்கு விரும்பித் தேசத் துரோகிகளாகவேண்டும். நம் குடியானவர்கள் நம் நாட்டு உணவுக்கு அதிகப் பயன்படா நிலக்கடலையைச் சென்றசில வருஷகாலமாய் ஏராளமாய்ச் சாகுபடிசெய்து வருகிறார்கள். அந்தச்சாகுபடியால் சிலர் தனிகராகலாமேயொழிய தேசக்ஷேமம் அதிகமாய் விருத்தியடையமாட்டாது. முதலாவது அதனை அந்நியநாட்டுக்கே யனுப்புகிறோம். அந்நியநாட்டார் அதனை ஆவலாய் வாங்குகின்றனர். ஆதலால் முன் உணவுத் தானியங்களைப் பயிர்செய்துவந்தவர்களும் சொற்பகாலத்து இலாபத்தை உத்தேசித்து நெடுங்காலக் கேட்டை விலைக்கு வாங்குகிறார்கள்.

நிலக்கடலைபயிர் செய்வதால் உண்டாகும் கேடுகளை ஒருவாறு கூறுவோம்.

முதலாவது நிலத்தின்சத்தை அது வெகு சீக்கிரத்தில் வாங்கிவிடுகிறது. ஒருவருஷம் நிலக்கடலை போட்டநிலத்தில் மறுபடியும் எருப்போடாமல் சாகுபடிசெய்தால் விளைவின் குறைவு நன்குதெரியவரும்.

(2) உணவுப்பொருள்களின் சாகுபடி அதனால் தடைபடுகின்றது.

(3) அதனால் குடித்தனக்காரர்கள் தங்கள் மாடுகளுக்குத்தீவனத்துக்கும் பின்னர் திண்டாடவேண்டிவருகிறது. பலருக்கு உபகாரிகள் என்ற வேளாளர் அபகாரிகளாகிறார்கள்.

(4) கடலையை வெட்டி எடுக்குங்காலத்தில் அதில்வேலைசெய்யப்பட்டவர்கள் பச்சைக்கடலையைத்தின்று பேதிமுதலியகொடியவியாதிகளைத் தாம்பூலம்வைத்து அழைக்கிறவர்களாகிறார்கள்.

(5) வயிற்றுக்கடுப்பு முதலிய சங்கடமான வியாதிகள் ஏற்படுவதுமன்றி அஜீரணம், பித்தாதிக்கம், வாந்திமுதலிய கேட்டைத்தாத்தக்க வியாதிகள் நாட்டிற் குடிகொள்ளத்தலைப்படுகின்றன. பச்சையாய்த்தின்னாமல் வறுத்தும் சுட்டும் தின்னும்பக்ஷத்தில் வாசனையுடன்ருசிகரமாயுமிருப்பதால் நாவையடக்காமல் பலர் மிதத்துக்குமிஞ்சி அதனைச் சாப்பிட்டுவிட்டுப் பின் துன்பமடைகிறார்கள்.

(6) அதன் தைலத்தை ஆட்டியெடுத்து அயல்நாட்டுக்குஅதிகமாய் அனுப்புகிறோம். அதனைக்கொண்டு சோப் முதலியவை செய்து நம் நாட்டுக்கே க்ஷேபத்தைத்தேடலாம். அவ்வாறுசெய்யாமல் சொற்பவிலைக்கு அயல்நாட்டாருக்கு விறறு ஒன்றுக்குப்பத்து கொடுத்து அயல்நாட்டாரிடமிருந்து அதேசரக்கை வேறு ரூபமாக அடைகிறோம். இதனால் தேசத்துக்கு நேரிடும் நஷ்டம்பெரிதே.

(7) அதன்தைலத்தைப் பலகாரங்களுக்கு உபயோகப்படுத்தி விற்பனைசெய்வதால்பலர் அதனையுண்டுபெருந்தீங்கையடைகிறார்கள்.

(8) நாளுக்குநாள் இதனால் உண்டாகும்கேடு அதிகரித்துவருகின்றது. சிலர் இதன் பிண்ணாக்கை எருவாக இடுகிறார்கள். இது நல்ல எருவென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் இதனை உபயோகிக்கும் பக்ஷத்தில் நிலம் அடுத்தமுறை அதிக ஊட்டத்தைவிரும்புகின்றது. நிலம் சிற்சிலசமயங்களில் விளைவு குன்றிப்போவதாகச்சில குடியானவர்கள் சொல்லக் கேள்வியுற்றிருக்கிறோம்.

(9) கல்யாணகாலத்தில் இதனைச் சீர்வரிசைக்காகப் பெருங்காய்களாக உருட்டித்திரட்டிச் சபைக்குக் கொணர்ந்து வைக்கிறார்கள். அவ்வளவும் ஜனங்கள் வயிற்றில்தானே போகும். நம்மையறியாமல் நாம் பல தீங்குகளுக்கு உட்படுகிறோம். வரவர ஜன அபிவிருத்தியடைந்து வருவதால் அதற்குத்தக்கபடி சாகுபடியை விருத்திபண்ணி உணவுப்பொருள்களை விளைவித்தல் நம் கடனாம். அப்பெரும்பயனையும் தர்மத்தையும் ஒருங்கே யொழித்துத் தன்வயிறே பெரியதுஎன்று எண்ணி அதிக இலாப ஆசையால் நம் சரக்கை அயல்நாட்டுக்கு அனுப்பி நம்நாட்டைப் பெருந்துன்பத்துக்கு உள்ளாக்குகிறோம். காணியாசையால் கோடி கேடு விளைவிக்கிறோம். ஆகையால் இனியாவது இயன்றவரை இக்கேட்டை நீக்கி தேசக்ஷேமத்துக்கடுத்த உணவுப்பொருள்களை விளைவித்துத் தாங்களும் புண்ணியமடைவதுமன்றி நாட்டாருக்கும் ஆரோக்கியத்தை உண்டாக்குவார்களாக.

இதனைச்சிறிதும் பயிர்செய்யக்கூடாதென்று நாம் கூறவரவில்லை. புன்செய்நிலங்களில் மற்றைப்பயிர்களைச் சாகுபடிசெய்யவியலாவிடின் இதனைச் சாகுபடிசெய்யலாம். சாகுபடி செய்ததிலிருந்து எடுத்த சரக்கைக் கைத்தொழிலபிவிருத்தியில் உபயோகித்துப்பலவிதப்பொருள்களாக்கித் தேசக்ஷேமத்தை விருத்திபண்ணுவோமாக.

பத்திராதிபர்.

# எலுமிச்சம்பழம்.

எலுமிச்சம்பழத்தை நம்நாட்டார் தாராளமாய் உபயோகப்படுத்திவருகின்றனர். அது பார்வைக்குமனோகரமாயும் அழகாயுமிருப்பதுமன்றி வாசனையாகவுமிருக்கின்றது. பெரியோர்களையும் அரசர்களையும் காண நாம் அதனையே பெரும்பொருளாக உபயோகிக்கின்றோம். நோய்களுக்குத்தக்க மருந்தாக அதனைப் பலமருந்துகளில் உபயோகிக்கின்றோம். அன்னத்துவேஷம், அரோசிகம் முதலியவற்றால் வருந்துகிறவர்கள் இதனைத் தாராளமாய் உபயோகித்து நோயைத்தீர்த்துக்கொள்ளுகிறார்கள். நாம் சாப்பாட்டில் தாராளமாய் அதனை உபயோகிக்கிறோம். பானத்துக்கும் அதை உபயோகப்படுத்தல் நலம். இருபங்கு ஜலத்தில் நன்றாய்ப் பிழிந்தெடுக்கப்பட்ட ஒருபங்கு எலுமிச்சம்பழத்தின் ரசத்தைச் சிறிது சோடாஉப்பைச் சேர்த்துச் சாப்பிடின் வயிற்று உப்புஸம் அஜீரணம் முதலியவை நீங்குகிறதைப்பலர் அநுபவத்தில் பார்த்திருக்கலாம். இரண்டுபங்கு ஜலத்துடன் ஒருபங்கு எலுமிச்சம்பழ ரசத்தைச்சேர்த்துச் சாப்பிடுதல் தேகத்துக்கு மிகவும் சௌக்கியமென்று மேனாட்டுவைத்தியர்கள் பலமுறை பரிசோதித்துக் கண்டுபிடித்திருக்கின்றனர். அதனை உபயோகிப்பதால் ஜீரணசக்தி யதிகரிக்கிறதென்றும், ரத்தம் சுத்தியாகிறதென்றும், குடல்களை ஒழுங்குபடுத்துகிறதென்றும், தேகத்திற்குள் உள்ள விஷப்பூச்சிகளை நீக்குகிறதென்றும், மலைக்காய்ச்சல், திமிர்வாதம், தொண்டைப்புண் முதலியவியாதிகளுக்குத்தக்க ஔஷதமாகிறதென்றும் கூறியிருக்கிறார்கள். காச் என்ற பிரசித்தவைத்தியரும் மற்றும்சில பிரசித்திபெற்ற மேனாட்டு வைத்தியர்களும் பலமுறை பரிசோதனைசெய்ததில் எலுமிச்சை, கிச்சிலி, அப்பில் என்ற சீமை இலந்தை இப்பழங்களின் ரசம் வாந்திபேதிக் கிருமியையும்மற்றுமுள்ள கேட்டைத்தரும் கிருமிகளையும் ஒருங்கே ஒழித்துவிடும்படியான சக்தியுடையது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அக்கிருமிகளை இந்த ரசத்தில் 15 நிமிஷநேரம் வைத்திருந்தால் அவை சாகும்என்று கூறுகிறார்கள். காய்ச்சலை உண்டாக்கும் கிருமிகள் தண்ணீருடன் கலந்த ரசத்திலேயே மடியுமாம். இதன் பானம் கோடைக்குமிகவும் குளிர்ச்சியாயிருக்கும். மாரிக்காலத்தில்சூடவைத்துக்குடித்தால் ஆரோக்கியமான பானமாமென்றும் கூறுகிறார்கள். ஸ்நான

ம்பண்ணும்ஜலத்தில் மூன்று நான்கு பழங்களைப்பிழிந்து ஸ்நானம் செய்தால் நம்சருமத்தின் துவாரங்களை அடைத்திருக்கும் அழுக்கை நீக்கித் தோலைச் சுத்தமாயும் ஆரோக்கியமாயும் பண்ணுவதுமன்றி தோலையும் மிருதுவாகச்செய்யுமாம். வாய்நாற்றமுள்ளவர்கள் இதை உபயோகித்துப் பல்தேய்த்து வாய்கொப்பளித்தால் துர்க்கந்தம் நீங்கிச் சுகந்தமுண்டாகும். பித்த எரிச்சலுக்கு நாம் எலுமிச்சம்பழச் சாற்றைத்தேய்த்துக்கொள்ளுகிறோம். எரிச்சல் அடங்கச்செய்கிறது. பூச்சிக்கடிகளால் தொந்தரவுபடுங் காலத்தில் இதன் சாற்றைக்கொண்டு தேய்த்தால் வலிநீங்குமென்றும் கூறப்படுகின்றது. ரசத்தைப் பிழிந்தெடுத்துக்கொண்டு இப்பழங்களின்தோலை நாம் எறிந்துவிடுகிறோம். அத்தோலைக் காயவைத்து எரிதுரும்புடன் சேர்த்துஎரிப்போமானால் சீக்கிரம் அதனைப் பற்றச்செய்யும். நம் நாட்டில் இதன்பயன் தெரியாமல் அநியாயமாய் ஜனங்கள் இதனை வீணே எறிந்து விடுகிறார்கள். இனியாவது அதனை வீணாக்காமல் உபயோகிப்பார்களென்று நம்புகிறோம். தற்காலம் நம் கடைகளிலெல்லாம் லெமனேட் என்றபானம் விற்பதைப் பலர் வாங்கிக்குடித்துவருகிறார்கள். அஃது இப்பழங்களின் ரசத்திலிருந்து செய்யப்படாமல் ஒருவித ரசாயனப்பொருளினின்றும் செய்யப்படுவதால் தேகத்துக்கு ஆரோக்கியமாகாது. அதில் உபயோகப்படுத்தப்படும் ரசாயனப்பொருள்கள் தேகசௌக்கியதனுக்குக் கேட்டை விளைவிக்கக்கூடிய பொருள்களென்றும்விஷத்தன்மையுள்ளவைகளென்றும் மேற்கூறிய வைத்தியசாஸ்திர நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆகையால் நம் ஜனங்கள் அத்தீங்கான பானத்தை ஒழித்துத் தாங்களே மேற்படி பழங்களின் ரசத்தைப் பானமாகச்செய்து உபயோகப்படுத்தி உய்வார்களாக.

பத்திராதிபர்.

# டையாக்ஸ் ஜாதியார்.

டையாக்ஸ் ஜாதியார் இந்தியாவுக்குத் தென்கிழக்கிலுள்ள பெரியதீவாகிய போர்னியோவில் வாசஞ்செய்கிறார்கள். அத்தீவுஇலங்கையினும் பன்னிருபங்கு விசாலமுள்ளது. அது நிக்ஷரேகையில் இருக்கின்றது. அதன் உள்நாடு மலைப்பாங்கானது. அதன்வனங்களில் ஓராங்ஒட்டாங் என்ற ஒருவகை வானரங்கள் சஞ்சரிக்கின்றன. அந்த மிருகங்கள் மரங்களில் தங்கள்வீடுகளைக்கட்டும். டையாக்ஸ் என்ற உள்நாட்டார் துஷ்டரான மலை ஜாதியாரைச்சார்ந்தவர். அவர்கள் குள்ளர், நல்ல வடிவமுள்ளவர்கள். தீவிரகதியுள்ளவர்கள். பெருங்கஷ்டங்களைச் சகிக்கத்தக்கவர்கள். எல்லோரும் இளமையில் விவாகம் செய்வார்கள். பிள்ளைகளில் அநேகர்குழந்தைகளாயிருக்கையில் இறந்துபோவார்கள்.

அவர்கள் வீடுகளெல்லாம் ஸ்தம்பங்களின்மேல் கட்டப்பட்டிருக்கும். அநேகம்வீடுகள் பெரியனவாயுமிருக்கும். மூங்கில்துண்டுகளால் தளம் பரப்பப்பட்டிருக்கும். அதன்மேல்நடப்பது இன்பமாயிருக்கும். அதன்மேல் பாய்விரித்தால் படுக்கையாகும். இந்நூதனவீடுகளுக்குள் பிரவேசிக்கவேண்டுமானால் ஏணிவழியாய்ப் போகவேண்டும். வீடுகளுக்குமுன் மேடையிருக்கும். சுகமான காலங்களில் ஜனங்கள் அம்மேடையில் பொழுதுபோக்குவார்கள். வீடுகளுக்குக்கீழ் பன்றிகள் கோழிகளைவைத்து வளர்ப்பார்கள். அரையில் சாயவஸ்திரங்களையும் தலையில் இலேஞ்சு என்ற உருமாலையும் கட்டுவார்கள். பித்தளையாற்செய்யப்பட்ட பெரிய கடுக்கன் அணிவதில் அவர்களுக்குப் பிரியம் அதிகம். கழுத்தில் வெள்ளையும் கறுப்புமான பவளததாற் செய்யப்பட்ட சரப்பளியை அணிவார்கள். கையில்பல கடகங்களையும் காலில் வெண்சங்காலாகிய ஆபரணங்களையும் அணிவார்கள். இச்சாதியாரின் ஆண்மக்களில் ஒவ்வொருவரும் வெற்றிலைப்பையையும் நீண்ட நுண்ணிய ஈட்டியையும் எங்குபோனாலும் கையுடன் கொண்டுபோவார்கள். ஸ்திரீகள் பொதுவாய்க் குட்டைப்பாவாடையைத் தரிப்பார்கள். அவர்களுக்குப் பித்தளை மோதிரங்கள், கறுப்புப் பவளத்தாற் செய்யப்பட்ட கோர்வைகள், கொம்பாலும் சங்காலும் உண்டாக்கப்பட்ட ஹஸ்த கடகங்கள் முதலிய

வைகளில் பிரீதி அதிகம். அவர்களது தலைரோமம் நீண்டது. அதை முதுகில் தொங்கவிட்டிருப்பார்கள். இச்சாதியாருக்குப் பற்பல கருவிகள் உண்டு. அவைகளில் ஒன்றுக்கு ஊதுவெடியென்றுபெயர். அஃது எட்டடிநீளமிருக்கும். அதன் விட்டம் ஓர் அங்குலம். அதன் மூலமாய் நஞ்சூட்டப்பட்ட நுண்ணிய அம்பை ஊதிவிடுவார்கள். அந்த அம்பு பட்டஇடமும் தெரிவது அபூர்வமாயிருப்பினும் அது மரணகாயத்தை உண்டுபண்ணும்.

டையாக்ஸ் ஜாதியார் இந்தியாவிலுள்ள ஹூசா ஜாதியாரைப் போல் சிரசுவேட்டையாடுவதில் பேர்பெற்றவர்கள். மனிதத்தலைகளைவெட்டிக் காயவைத்துப் பத்திரம் பண்ணிக்கொள்வதே அவர்களுடைய பெரிய ஆசை. அவர்கள் தங்களுக்குள்ளே எப்பொழுதும் சண்டையிட்டுக்கொள்வது வழக்கம். தலையை யடையவேண்டுமென்ற பயித்தியமே இச்சண்டைக்குக் காரணம். நடு இராத்திரியில் கிராமங்களுக்குள் பிரவேசித்து இஷ்டமானவர்களை வெட்டிப்போடுவார்கள், ஸ்திரீகளையும் கொன்றுவிடுவார்கள். பாலர்களைமாத்திரம் அடிமையாகும்படி கொல்லாமல் விடுவார்கள். ஒருவன் விவாகம் பண்ணுமுன் ஒருவனைக்கொன்று தான்விவாகம் செய்யப்போகிற மணமகள் பாதத்தில் வைப்பது அந்த ஜாதியார் வழக்கம். இக்கொடியவழக்கங்கள் வரவர நிறுத்தப்பட்டு வருகின்றது.

பத்திராதிபர்.

# ஜோஸப் மாசினி.

———*———

## கியாதிபெற்ற இட்டாலி தேசாபிமானி.

## (1805—1872).

இம்மகான் ஜினோவா என்ற நகரத்தில் 1805-ம் வருஷத்தில் பிறந்தார். இவர் தகப்பனார் ஒரு வைத்தியர். தாயோ புத்திசாதுர்யத்திலும், பெருங்குணத்திலும், நல்லொழுக்கத்திலும் சிறந்தவள். தன் தாயிடமிருந்தே மாசினி தமது நற்குண நற்செய்கைகளைக் கற்றுத்தேர்ந்து, தமது புகழை உலகில் நாட்டினார். தாயானவள் பிள்ளையை எவ்வளவு புத்திசாலித்தனமாக வளர்க்கிறாளோ, அவ்வளவுக்கவ்வளவு பிள்ளை பிற்காலத்தில் மேன்மையடைகிறான் என்பதற்கு இவர் சரித்திரம் சான்றுபகர்கின்றது. "விளையும்பயிர் முளையிலே தெரியு"மென்பது போல இவர் சிறுவராயிருக்கும்போதே ஏழைகளின் கஷ்டநிஷ்டூரங்களைக்கண்டால் சகியார். இவர் ஆறுவயதுள்ள பிள்ளையாயிருக்கும்போது, தன்தாயுடன் வெளியில் உலாவச்சென்றிருந்த ஒருநாள் ஓர் ஏழை மனிதன் கோவில் வாசற்படியில் உட்கார்ந்துகொண்டு பசியால் வருந்துவதைக் கண்டார். அவ்வேழையைப் பார்த்துக்கொண்டே இவர் சற்றுநேரம் அவ்விடத்தில்நிற்க, இதைப் பார்த்த தாய் தன்பிள்ளை ஏழையைக் கண்டு பயப்படுகிறானென்று நினைத்துப் பிள்ளையைத் தூரத்தில் இழுத்துக்கொண்டு போனாள். கொஞ்சதூரம் போகவே, குழந்தை தாயிடமிருந்து திமிறிக்கொண்டு ஓடிப்போய் அந்தஏழையின்மடியில் உட்கார்ந்துகொண்டு தன்தாயைப் பார்த்து அவ்வேழைக்குக் காசுகொடுக்கும்படி சொல்ல, அப்படியே தாயும் கொடுக்க பிள்ளை தன் தாயுடன் நின்றது. இதைக்கண்டு தாயும் ஏழையும் ஆச்சரியமடைந்து, பிள்ளை பிடத்தில் மிக்க அன்பு கொண்டார்கள்.

அக்காலத்திய கிரமப்படி அப்போதுள்ள பள்ளிக்கூடத்திற்குத் தாய் தந்தையர் இவரை அனுப்பிப்பயிற்சி செய்விக்க கல்வி கேள்விகளில் கற்றுத்தேர்ந்து வக்கீல் பரீக்ஷையும் கொடுத்தார். வக்கீல் யிலமர்ந்து அதிக செல்வத்தைச் சம்பாதிக்க பெண்டுபிள்ளைக

ளுடன் குதூகலமாகத் தங்கள்பிள்ளை ஜீவித்துக்கொண்டிருக்கத்தாங்கள்பார்ப்பதே சாயுஜ்ஜியமென்று தாய்தந்தையரெண்ணினர். நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறதென்ற பழமொழிக்கு ஓர் உதாரணமாக, இவர்கள் நினைத்த காரியம் கைகூடவில்லை. ஏனெனில், மாசினி தன் பதினாறாம் வயதில் ஒரு நாள் வழக்கம்போல் வெளியில் காற்றுடச் சென்றிருந்தபோது, மிகவும் துக்ககரமான ஒரு காட்சியைக் கண்டார். அக்காலத்தில் கொடுங்கோன்மை அரசாட்சிகளுக்கெல்லாம் கொடுங்கோன்மை கற்பிக்கக்கூடிய அரசாட்சி இட்டாலி தேசத்தின் வடபாகத்தில் நிலைபெற்றிருந்தது. இக்கொடுங்கோன்மையைத் தொலைப்பதற்கு, அந்நாட்டார் படையெடுத்து சண்டையில் அபஜயமடைய, தங்கள் தேசத்தைவிட்டு அயல்தேசத்திற்கு ஓடிப் பிழைக்கும் உத்தேசத்துடன் சிலர் கடற்கரையிற் கூடியிருந்தனர். இவர்களைக் கண்டவுடன் மாசினிக்குத் தன் தேசத்தின்மீது என்றுமுண்டாகாத ஓர் அவாவுண்டாயிற்று. அன்று அதே க்ஷணத்தில் தன் ஆயுள்நாளைத் தேசத்தின் மேம்பாட்டிற்காகவே கழிக்கவேணுமென்று, ஆகாயவாணி பூமாதேவியறிய ஒரு பிரதிக்கினை செய்து கொண்டார். தான் வக்கீலாய்த் தன் சுற்றத்தைச் சந்தோஷப்படுத்துவதைவிட தேசநன்மையை நாடுவதே முக்கிய காரியமென்று, அதுவிஷயத்தில் முழுமனத்துடன் உழைக்க ஆரம்பித்தார்.

அப்போது கார்போனேரிஸ் என்றவர்கள்கொடுங்கோன்மையை வேரறுக்க ஓர் இரகசிய சங்கம் கூட்டினர். அச்சங்கத்தில் தானும் ஓர் அங்கத்தினராகச் சேர்ந்துழைத்தார். 1830-ம் வருஷத்தில் அயலாருடைய உதவியை வேண்டக் கார்போனேரிஸரால் தூதனுப்பப்பட்டு, போன இடத்தில் நம்பிக்கை துரோகத்தினால் எதிரிகையிலகப்பட்டுச் சவோனா என்ற கோட்டையிலடைக்கப்பட்டார். சிறையிலிருந்தும் தன் தேசத்தை மறவாமல், பிற்காலத்தில் தான் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி யோசித்துயோசித்து, தனக்குள் ஒருவித தீர்மானஞ் செய்தார். அஃதாவது, அயலாருடைய உதவியைத் தேடுவது பிரயோசனமற்றது; தன் தேசமேம்பாடு தன் தேசத்தாராலேயே உண்டாக்கப்படவேண்டுமென்பதே.



இப்படி இவர் சிறையிலிருக்கும்போதே, இவரைத்துரைத்தனத்தார் தேசப்பிரஷ்டஞ் செய்துவிட்டார்கள். இவர் எதற்கும் அஞ்சாதவராகையால் சற்றும் மனங்கலங்காமல், சிறையினின்று விடுபட்டவுடன் பிரான்சு தேசத்திலுள்ள மார்சேல்ஸ் என்ற நகரத்தில் வந்து தங்கி, அந்த நகரத்திலே "இளைய இட்டாலி" என்றதோர் இரகசிய சங்கத்தைக்கூட்டினார். அதன் முக்கியநோக்கங்களாவன:— இட்டாலி கொடுங்கோன்மையினின்று நீங்கி, பல அரசாட்சிகளாயிருப்பன ஒரே ஐக்கியப்பட்ட தேசமாகி, தேசமுழுதும் குடியரசு நிலையுற்றிருக்க வேண்டுமென்பதே. இச்சங்கத்தின் நோக்கங்களைத் தன் தேசத்தாருக்குப் பரவச் செய்வதற்கு மாசினி ஒரு பத்திரிகை பிரசுரித்தார். ஆனால், இப்பத்திரிகையி லடங்கிய விஷயங்கள் கொடுங்கோன்மை யரசாட்சிகளுக்கு விரோதமா யிருந்தமையால், இராஜாங்கத்தார் பல நிபந்தனைகளின்பேரில் பத்திரிகை இட்டாலிக்குள் பரவச்செய்வதைத் தடுத்தார்கள். ஆனால், ஜனங்கள் ஒரு விஷயத்தில் ஒற்றுமையுடன் ஒரே மனத்தினரா யிருக்கும்போது, கொடுங்கோலரசர்கள் யாதுசெய்யக்கூடும்? இப்பத்திரிகையை ஜனங்களே வாங்கி வாசிக்க ஆரம்பித்தார்கள். இதையறிந்து, இராஜாங்கத்தார் பிரான்சு அரசிற்குத் தெரிவித்து, தங்களெல்லையில் இப்பத்திரிகை போவதை நிறுத்தவேணுமென்று கேட்டுக்கொள்ள, இனம் இனத்தோடு என்றாற்போல அக்காலத்தில் கொடுங்கோன்மைகளி லொன்றாகிய பிரான்சும் மாசினி பத்திரிகையைப் பதிப்பிக்காமல் நிபந்தனைசெய்து, அவரையும் ஊரைவிட்டுப் போகும்படி செய்தது. அங்கிருந்து சுவிட்ஸர்லாண்டு தேசத்தை 1834-ம் வருஷத்தில் சேர்ந்து, அவ்விடத்தில் ஐரோப்பா முழுதும் குடியரசு ஏற்படுத்தவேணுமென்ற நோக்கத்துடன் "இளைய ஐரோப்பா" வென்ற ஒரு சபையைக் கூட்டினார். அத்தேசத்திலிருந்து டியூக் ஆப் சாவாயின் மேல் முதன்முதல் தானே படையெடுத்துச் சென்றார்; ஆனால் அதில் அபஜெயமடைந்து போகவே, இவர் அத்தேசத்திலிருந்து துரத்தப்பட்டார். கடைசியாக சுய அரசாட்சிக்குத் தாயகமென்று எண்ணப்படும் இங்கிலாந்திற்கு 1837-ம் வருஷத்தில் வந்தார். வந்தபோது தன்னாயுளில் தோன்றாத மன அதைரியங்கொண்டார். ஏனெனில், இவர் இதுவரையில் ஏற்பட்ட ஒரு காரிய

மாவது முடிவு பெறவில்லை; தன் வாழ்நாளை வீணிற் கழித்ததோடு தன்னை நம்பி அநேக ஜனங்கள் கொடுங்கோன்மைக்கு எதிரிகளாய்க் கிளம்பி, அதனால் அளவிறந்த சங்கடங்களுற்றும் தண்டனைகளுமடைந்துமிருக்கிறார்கள். இவையெல்லாம் யோசிக்குமளவில் மனக்கலக்கமுண்டாகி ஒரு சமயம் தன்னுயிரை மாய்த்துக்கொள்ள உத்தேசித்தார். ஆனால் இவருக்குத்தன் தேசத்தின் மீதுள்ள ஆர்வமும் கடவுளிடத்திலுள்ள முழுநம்பிக்கையும் மறு உயிருண்டாக்கின. இப்படி இங்கிலாந்தில் வசித்துக்கொண்டிருக்கும்நாளில் இவருக்குத் தரித்திரதிசைவந்துற்றது. ஏனெனில், இதற்கு முந்தித் தன் தகப்பனுக்குத் தெரியாமல், தன் தாய் அனுப்பிவந்த பணத்தைக்கொண்டு தான் ஜீவனஞ்செய்துவந்தார். இப்போது அப்பணத்தைக்கொண்டே தானும் தன் சிநேகிதர் மூன்று பேர்களும் ஜீவனஞ்செய்யவேண்டி ஏற்பட்டது. ஒரு தடவை தன் சட்டைகளையும் ஜோடுகளையும் அடகுவைத்துத் தானும் தன் நேசர்களும் பசியாறவேண்டியிருந்தது. இச்சங்கடத்தோடுகூட, இவருக்கு வரும் கடிதங்களெல்லாம் சரிவர வந்து சேருகிறதில்லை. இதைப்பற்றிக்கவனிக்க ஆரம்பித்து, ஒரு நாள் தன் சிநேகிதர்களை வைத்துக்கொண்டு தன் பேருக்கு ஒரு கடிதமெழுதி உள்ளே மணற்றாள்களை வைத்து கடிதத்தை மூடித் தபாலிற் போட்டார். அக்கடிதம் சரியான நேரத்தில் கிடைக்காமல் நேரஞ்சென்று வந்ததோடுகூட, அதின் உள்ளே வைத்திருந்த மணற்றாள்கள் காணப்படவில்லை. இது விஷயத்தைப்பற்றிக் காமன்ஸ் சபையாருக்கு முறையிட்டுக் கொள்ள, அவர்கள் ஒருகமிட்டி ஏற்படுத்தி விசாரித்ததில் அவருடைய கடிதங்களை இராஜாங்க மந்திரிகளே பிரித்துப் பார்த்து அனுப்பினதாக ஒப்புக்கொண்டார்கள்.

இவ்வளவு இடருற்றகாலத்திலும், தன் தேசத்தை மேன்மைப்படுத்தும் விஷயத்தில் இவர் பின் வாங்கவில்லை. 1848-ல் லம்பார்டி தேசம் கொடுங்கோன்மைக்கு விரோதமாகக்கிளம்ப, மற்ற மாகாணங்களும் கலகமாரம்பித்தன. இக்கலகத்தில் மாசினி சம்பந்தப்பட்டுழைத்தார். 1859-ல் நேப்பில்ஸ், காரிபால்டி என்ற ஒரு தேசாபிமானியின் வசப்பட, அதை அவர் பீட்மாண்டு ராஜ்ஜியத்தோடு சேர்த்தார். 1886-ல் ஆஸ்திரியாவும், பிரஷியாவும் சண்டையிட்



டுக்கொள்ள, இட்டாலி பிரான்சின் சிநேகமென்று ஆஸ்திரியாவோடு சண்டைபோட்டு, வடக்கேயுள்ள மாகாணங்களைத் தன் ஆளுகைக்குட்படுத்தியது. இவ்விதமாக அக்காலத்தில் இட்டாலியில் ரோமாபுரி போப்பும், பீட்மாண்டு அரசனும் அரசுபுரிந்து வந்தனர். கடைசியாக 1870-ல் பிரான்சிற்கும் ஜெர்மனிக்கும் போர் நடக்க, ரோமாபுரியில் போப்பின் உதவிக்கு வைத்திருந்த தங்கள் சேனையைப் பிரான்சியர் தருவித்துக்கொள்ள, இட்டாலி தேசத்துச் சேனைகள் ரோமைப் பிடித்துக்கொண்டு போப்பை ராஜ்ஜியத்தினின்று நீக்கி 'விக்டர் எமானுவலை' தங்கள் ஏகாதிபத்தியத்தின் ராஜனாக ஏற்படுத்தினார்கள். இக்கலகங்களிலெல்லாம் மாசினி ஒரு தலைவராகி முழுமனத்துடன் உழைத்தாரென்றும் சொல்லவும் வேண்டுமா?

இவ்விதமாகக் கொடுங்கோன்மை யரசாட்சிகள் வேரறுக்கப்பட்டு, இட்டாலி ஒரே ஐக்கியப்பட்ட நாடாகச் செய்யப்பட்டது. ஜோஸப் மாசினியின் கோரிக்கைகளிரண்டு நிறைவேறின; இன்னும் ஒன்று முடியவில்லை. இட்டாலியில் குடியரசு ஏற்படுத்தவேணுமென்று இதுவரையில் இவர் பாடுபட்டார். ஆனால், இப்போது ஏக அரசாட்சி நிலையுற்றிருக்கிறது. ஆகிலும் குடியரசு விஷயமாய் ஒரு பத்திரிகை பதிப்பிக்க ஆரம்பித்தார். ஆனால், இவரெண்ணம் முடிவு பெறவில்லை. காரணம் யாதெனில்:—இவ்வுத்தம தேசாபிமானி காலகதியால் 1872-ம் வருஷம் மார்ச்சு மாதம் 10ந் தேதி தமது 67-வது வயதில் கடவுளின் திருவடி யடைந்தார். இவ்வுலகமுள்ளளவும் இவர் ஞாபகம் மானிடர் மனத்தில் நிலைபெற்றிருக்குமென்பதற்குச் சற்றும் ஐயமின்று.

வாஞைதுரையோன்.

---

## காலஞ்சென்ற மாதாஜி மஹாராணி தபஸ்வினி.

சென்ற சனிக்கிழமை ஸ்ரீ காசியில் மாதாஜி தபஸ்வினிதேவியென்னும் உத்தமி நிரியாணமடைந்த சங்கதியைக் குறிப்பிட மிகவும் விசனமுறுகின்றோம். இந்த அம்மை ராஜவம்சத்திற் பிறந்தும் அதைத்துறந்து, வெகுகாலம் பரோபகாரஞ் செய்வதிலேயே தம் வாழ்நாளைக்கழித்தவர். அதனால் இவ்வம்மைக்குத் தபஸ்வினி 'அதாவது தபோமகிமையுள்ளவளென்றுபெயருண்டாயிற்று. இந்தத்தேவி

யின் பிரேரேபணையால்கல்கத்தாவில்சிலவருஷங்களுக்குமுன் இந்துப் பெண்களுக்கு நம்தேசசம்பிரதாயானுசாரமாய் "மகாகாளிபாடசாலை" என்ற பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டு செவ்வனே நடைபெற்றுவருகிறது. இவ்வம்மை அற்புதமான சக்தியும் செல்வாக்குமுள்ளவராய், ஹிந்து ஸ்திரீகளுக்குள் அசாதாரண குணாதிசயமுள்ளவரென்று பெயரெடுத்தவர். இவ்வம்மையின் நிரியாணத்தைப் பற்றி ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை இவ்வாறு கூறுகின்றது:—"ஸ்ரீலஸ்ரீமாதாஜி மஹாராணி தபஸ்வினி தேவியைப்போன்ற பரிசுத்த வாழ்க்கையுடையவர்கள் இந்தியாவிலன்றி மற்றத்தேசங்களில் தோன்றுவது அசாத்தியம். அத்தேவியின் திவ்யசாந்நியத்தையும், கைங்கரியத்தையும் பிரத்தியட்சமாய் அறியாதவர்களுக்கு அவருக்கிருந்த செல்வாக்கின் தன்மையையும், அளவையும் அறிந்துகொள்வது கஷ்டம். அவரது திருமாளிகை யாத்திரை ஸ்தலமாய் விளங்கியது. இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்து பக்திபரர்களான யாத்திரிகர் அவரைத் தரிசனம் செய்ய வந்துகொண்டிருந்தார்கள். வைதிகப் பற்றுள்ள ஹிந்துக்களின்மேல் அவர் செலுத்திய சக்தியும் செல்வாக்கும் அபாரம். அந்தச் சக்தியை அவ்வம்மை தேசத்தின் அப்யோந்நதிக்குச் சாதனமென்று தாம் கருதியபடி உண்மை எண்ணத்துடன் விநியோகித்தார் என்பது அவ்வளவும் வாஸ்தவமே"

காலஞ்சென்ற மாதாஜி மஹாராணியின் சிநேகிதர்கள் அவ்வம்மையின் பிறப்பையும், பூர்வ வரலாற்றையும்பற்றி எவ்விதமான சங்கதியும் வெளிப்படுத்த எப்பொழுதும் மனமற்றவராயிருந்தனர். ஆனால் அவரது வம்சவரலாற்றைப் பற்றிய முக்கியமான அம்சம் மாத்திரம் எப்படியாவது பஹிரங்கமாகாமலிருக்க முடியாதல்லவா? அவ்வம்மை ஆற்காடு ஹிந்து ராஜ வம்சத்தைச் சேர்ந்தவரென்றும், ஆரணிஜாகிர்தார்களுடன்கூட அவருக்குப் பந்துத்துவம் உண்டென்றும் தெரியவருகிறது. அவரைப் பார்த்தவர்களெவருக்கும் அவர் ராஜவம்சத்தைச் சேர்ந்தவரென்பதற்குச் சிறிதும் சந்தேகமுண்டாயிருக்கமுடியாது. அவ்வம்மையின் தோற்றமும் நடக்கையும் ஒரு மஹாராணியினுடையவை போன்றேயிருந்தன. ஐரோப்பியர் நிறைந்த சபைகளிலும் அவ்வம்மை அலங்காரமற்ற உடைதரித்தும் அலங்கோலமாய்க் கூந்தலை முடித்துக்கொண்டுமிருந்தும் அதில் செல்வாக்குப்பெற்று விளங்கிய அற்புதமான ஆத்மஜயத்தைக் காட்டுகின்றது.

க—மி

# தலைமகுடன் சரித்திரம்.

(63-ம் பக்கத்தொடர்ச்சி)

புஷ்டியும் எய்தியது. எந்தப் பயிற்சிகளால் சரீரத்துக்குச் சுறுசுறுப்பும் திடனுமுண்டாகுமோ, அந்தப் பயிற்சிகளில் மேம்பாடடைந்தான். சாஸ்திரங்களையும், சித்திரக்கலைகளையும் மிக்க ஊக்கத்துடனும் ஆசையுடனுங் கற்றான். இப்படியெலாமிருந்தும் தம்முடன் கூட இருந்து வசிக்க எவரும் அவனுக்கிடங் கொடுக்கவில்லை. அவனைக்குறித்து ஆகாயவாணி சொல்லிய சோதிடம் எங்கும் பரவியது. அவன் எங்கு சென்றாலும், அவனை இன்னானென்று ஜனங்கள் நொடிப்பொழுதில் கண்டுகொண்டார்கள். எந்த அரசரும் எங்கு தங்களையவன் அரசுரிமை விட்டு விலக்குவானோவென்றஞ்சியவனிடம் பொறாமை கொண்டார்கள். இவ்விதமாய்க் கவலைபற்றி நிற்கக் கூடிய இடமெங்குமின்றி யிளமைப் பருவமுதல் நாடு நாடாய்த் திரியும் நாடோடியாயினான். தன்னாட்டினின்றும் நெடுந்தூரமுள்ள ஜனங்களையெல்லாம் கண்டிருக்கின்றான். ஆனால், அவனது பிறப்பையொட்டிய இரகசியமும், அவனைக்குறித்து ஆகாயவாணி சொல்லிய வாக்கும், அவன் தலை நீட்டியதும் வெளிபாய்விடுகின்றன. அவனெங்கு போனாலும், கீழினமாக்களுடன் கலந்துகொண்டு தன்னை வெளிப்படுத்திக்கொள்ளாதிருக்கப் பார்க்கின்றான். ஆனால் அவனது கல்வித்திறமை, போர்த்திறமை, அரசாங்கத்திறமை யிவைகளை மறைக்கக்கருதி அவன் எப்பாடு படினும், அவைகள் அடங்காப் பெருமையுடன் பொத்துக்கிளம்புவதால், அவனின்னானென வெளியாய்விடுகின்றது. அவன் செல்லு நாடெல்லாம் முற்கருதா ஏதேனும் ஓர் விஷயத்தால் தானறியாது தனதுவல்லமையை வெளியிடும்படி யவனுக்கு நேருகின்றது. அதனால் அவனைப்பல்லோரும் உடனே அறிந்துகொள்ளுகின்றார்கள். அவனது தகைமையே அவனுக்குச்சனியனாயிருக்கின்றது. அதனால் அவனைத் தெரிந்த விடத்தெல்லாம் அவனைக் கண்டஞ்சுகின்றார்கள், இருக்கவேண்டுமென்றவனாசைப்படுகின்ற நாட்டைவிட்டவனை வெருட்டுகின்றார்கள். அவன் தலைவிதி, எங்கும் புகழப்படுவதும், ஆசைப்படப்படுவதும், போற்றப்படுவதும், மண்ணில் எந்தச் சங்கத்தாருடனும் சேரவொட்டாது நீக்கப்படுவதுமாயிருக்கின்றது.

அவனுக்கிப்பொழுது முதிர்வயதாய்விட்டது. ஆயினும் பலர் கண்ணிற் படாது எவராலும் துன்பமுறாது அவன் வசிக்கக் கூடிய இடம் ஆசியாவிலேனும் கிரீக்கு தேசத்திலேனும் ஓரிடமும் அவனுக்ககப்படவில்லை. அவனுக்குக் கொஞ்சமேனும் ஆசையிலாதது போற்றோன்றுகின்றது. புகழிலேனும் பொருளிலேனும் அவனுக்காசையில்லை. அவனரசனாவானென்று அந்த அசரீரி வாக்குச்சொல்லியிராதவரையில், தனனிலும் கொடுந்துயரடைந்த புண்ணியன் வேறெவருமில்லையென்பதவனதெண்ணம். அவன் சொந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்வனேல், அங்குளோரெவர்க்கும் அழுகையுங் கண்ணீருமல்லது வேறிலாததால், அங்கு போகவேண்டுமென்ற ஆசையுமவனுக்கில்லை. எந்த அரசியல் காரணமாக அவன் இப்பொழுது துன்புறுகின்றானோ, அந்த அரச பதவியும் வேண்டாப் பதவியென அவனது கொள்கை. அது தனக்கு வேண்டாதிருந்தும், தான் எது செயின், அது தனக்குக்கிட்டுமோ அதை யிப்பொழுது செய்துகொண்டிருக்கின்றான். இவ்விதமாகக் கொடுவினையவனையீர்த்திழுக்க, அதை நாடு நாடாய்த்தேடித் திரிகின்றான். ஆனால் அது அவனது துன்பத்தைக்கண்டு நகுவதுபோலும் பயனற்ற வேட்டையாடுவதுபோலும், உயிரும் அதன் பயனும் அற்றுப்போம் வரையில் அவன் முன்னில்லாது மாயமாய்ப் பறந்துபோகின்றது. விண்ணவர்களவனுக்கு விதித்த விதியென்ன கொடும்விதி! எந்தக்காளைப் பருவம் ஆடிக்களிக்கக் கழியுமோ, அந்தப்பருவமவனுக்கு வேம்பாயிற்று. எந்த முதுமைப்பருவத்து அடங்கி யொடுங்கி ஓய்வுகொள்வதே ஆனந்தமாகுமோ, அந்தப்பருவத்துத் துன்பத்தை எவ்வாறு அது பெருக்குகின்றது.

அவனிப்பொழுது திராசு நாட்டுக்குச்சென்று அங்குள்ள நயமற்ற சட்டவிதிகளற்ற சில குறும்பர்களை யொன்றுகூட்டி, அவர்களுக்குள் சங்கமுண்டாக்கி, அவர்களை நாகரிகப்படுத்திச் சிலகாலமாள்லாமென்ற வெண்ணத்துடனும், அந்த அசரீரிவாக்குச் சொல்லியதை இவ்வாறு நிறைவேற்றிவிட்டால், வளமிகப் பொருந்திய எந்த நாட்டினுள்ளும் அச்சமின்றித் தான்போகலாமென்ற எண்ணத்துடனும், அங்கு இப்பொழுது போய்க்கொண்டிருக்கிறான். தனது



இந்த சங்கற்பம் நிறைவேறுமாயின் சுரிய நாட்டில் ஏதேனுமொரு கிராமத்துக்குச்சென்று அங்கு தனக்கு மனமுவந்த தொழிலாகிய பயிர்த்தொழிலிலேயே தனது முழுக்காலத்தையுங் கடத்துவான். அவனொரு ஞானி; அடங்கிய ஆசையுளோன். தெய்வ அச்சமுள்ளவன்; உலகமறிந்தவன், மனிதர்கள் கொண்டாடத் தகுதியரல்லரென்ற கொள்கையுடையோனாயினும், அவர்களுடன் ஒத்துவாழ அவனால் முடியும். எந்த அன்னியனைக் குறித்து நீ என்னிடம் விசாரிக்கின்றாயோ அவனைக்குறித்து நான் கேள்வியுற்றவராலறிந்து" என்று அக்கிழவன் சொல்லி முடித்தான்.

தலைமகுடன் இந்தக்கதையைக் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுதே யடிக்கடி கடற்புறம் திரும்பி நோக்கினான். அந்த வேளையில் கடனீர்ப் பரப்பும் அசையத்துவக்கியது. நீர்ப்பரப்பைக் காற்று அலைகளாகச் சுருட்ட, அலைகள் பாறைகள் மீது மோத, அவ்விடமெலாம் நுரைத்து வெளிர்த்தது. அதை அக்கிழவன் கண்டு, தலைமகுடனை நோக்கி "நான் போகவேண்டும். இல்லையேல், எனது சகசரிகள் என்னைவிட்டுப்போய் விடுவார்கள்." என்று பரபரப்புடன் சொல்லிவிட்டுக், கடற்புறநோக்கி யோடினான். கப்பலோட்டிகளும் பரபரக்கக் கடற்கரையெல்லாம் உறுவிலா ஓர் பேரிரைச்சல் கேட்டது. கிளிமனெனப்பெயர் புனைத்துக்கொண்டிருந்த அவ்வன்னியன், அத்தீவின் நடுவிடமெலாந்திரிந்து, பல பாறை நுனியிலேறித் ஏக்கத்துடன் வைத்த கண் வாங்காது, சுற்றியிருந்த விரிநீர்ப்பரப்பைப் பார்த்துக்கொண்டிருந்தான். தலைமகுடனும் அவனெங்கு சென்றாலும் அவனை விடாது பார்த்து அவனது ஒவ்வொரு செய்கையையும் கவனித்தான். அவன் அப்படிக் கவனித்தது கேவலம் வேடிக்கை வீண் போக்காகவன்று. சீலமுளோனாயினும், அல்லலுற்று நாடோடியாய்த்திரிந்து, அரும்பெருஞ்செயல்கள்செய்யப்பிறந்தோனாயினும், தீயூழாட்டும்விளையாட்டுக்கருவியாய்த், தனதுநாட்டிற்கு அன்னியனைப்போன ஒருவனைக்காண அவன் மனங்கரைந்துருகியது. "இனியொரு முறையிதக்கை நான் கண்டாலுங் காண்பேன். ஆனால், இக்கக்கிளிமனோனே பிரிசிய நாட்டை யினியென்றுங்காணப்போவதில்லை." என்று தன்னுட் சொல்லிக்கொண்டு, தன்

னினுங்கேடு கெட்ட ஒருவனது துக்கத்தை நினைத்துத்தலைமகுடன் சிறிது ஆறுதல்கொண்டான்.

அப்பலோ, தனது வெண்மயிர் பின்புறம் கத்தையாகத்தொங்க, இலிசிய வனத்திலுள்ள மான்களும் பன்றிகளும் அவரது அம்படிக்குத் தப்பவகையிலாது அஞ்சி ஓட, அவைகளைப்பின்தொடர்ந்து பாறைவிட்டுப் பாறை தாண்டி மலைச்சரிவுகளில் எவ்வளவு துரிதமாகவும் வேகமாகவும் ஓடுவாரோ, அவ்வளவு துரிதமாகவும் வேகமாகவும், அந்த அன்னியனும், அந்த மரக்கலம் புறப்பட ஆயத்தமாயிருப்பது கண்டு தாண்டியோடினன். அவன் கப்பல் மீதேறியதும், கப்பல் கடலலைகளைப் பிளந்துகொண்டு, கரையை விட்டு எட்டச்செல்லச்செல்லத் தலைமகுடன் தன்னைமறந்துபோனான். அவனுக்குஅடங்காத்துக்கமுண்டாயிற்று. அதற்குக் காரணமு மவனுக்குத் தெரியவில்லை. கருதாமலே அவனுக்குக் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று. கண்ணீர் விட்டழுவதே யப்பொழுது அவனுக்குப் பேராறுதலாய்த் தோன்றியது.

இஃதிவ்வாறிருக்கச், சாலுண்டத்துக் கப்பலோட்டிகள்களைப்புமிகுதியால், கடற்கரையண்டை புற்றரையில் நீளப்படுத்து அயர்ந்து தூங்கிவிட்டார்கள். அவர்கள் அங்கமெல்லாம் இன்புறச்சோர்வெய்தியது. இராக்காலத் தூக்கமயக்கம் நடுப்பகலிலேயே யவர்களுக்குண்டாகும்படி, தனது இரகசியமும் அபாரமுமான சத்தியால் மீன்விழியாள் செய்துவிட்டாள். பிஷியர்கள் எப்பொழுதும் விழிப்பும் பரபரப்புமுள்ளவர்களாதலின், காற்றடிக்கும்பொழுது 'தூறிநிற்கச், சாலுண்டமாலுமிகள்மட்டும் கவலையற்றுத் தூங்குவதைக் காணத் தலைமகுடனுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. ஆனாலும், தொடுவானத்தில் சிறுகச் சிறுக மறைந்துகொண்டிருந்த அந்தக்கப்பலைக் கண்ணிமையாது பார்ப்பதில் அவன்கவனஞ்சென்றதே யன்றித்தூங்கிக்கிடந்த தனது கப்பலோட்டிகளையெழுப்பி வினையிடுவதில் அவன் கவனஞ்செல்லவில்லை. அவனுக்கு உள்ளூறித்தவிர்க்கமுடியா ஓர் ஆச்சரியமும் ஆவலும் எழ, அந்தத்தீவுவிட்டகன்ற அந்தமரக்கலத்தைக் கண்கொட்டாது பார்த்துநின்றான். கடல் நீனிறமும், கப்பற்கொடிமரம் வெண்ணிறமுமாதலின், அந்தவேற்றுமையால் கப்பல் அவனுக்



குத்தெரிந்தது. மந்திரர் அவனைக்கூப்பிட்டும், அவன் காதில்விழவில்லை. சுழுத்தி நிலையிலுள்ளோன்போல், அவனது புலன்களின் செயல்கள் அற்றுப்போயின. பேகனதடியார்கள் கஞ்சாத்தழைகளைக் கையிலேந்தி, ஈபரநதிக்கரையெலாம் ஈசுபார், ரோடோப்பு மலையடிவாரங்களெல்லாம் எதிரொலியிட வெறிகொண்டு பிதற்றிக்கொண்டு திரியும்பொழுது அவர்களுக்கு எவ்வளவு பிரக்ஞையிருக்குமோ அவ்வளவு பிரக்ஞைகூட அப்பொழுது தலைமகுடனுக்கில்லை.

கடைசியில் அவனுக்கு அந்தப்பிராந்தி தெளிந்து தன்னினைவு தனக்கு வரத், திரும்பவுங்கண்ணீருகுத்தான். அப்பொழுதுமந்திரர் அவனைப்பார்த்து "ஓ எனது கண்ணே, தலைமகுட, நீ கண்ணீர் விட்டழுவதைக்காண எனக்காச்சரியமாயில்லை. அதற்குக் காரணம் நீயறியாயாயினும் நானறிவேன். உண்ணின்றுன்னையியக்குவதுஉடம்பெடுத்தோர்க்கு உடன்பிறந்த தருமமது. அந்த வாசனையின் பலமன்றோ உன்னையாட்டுகின்றது? அது உன்னைத் தீண்டியதும் உன்னுள்ளமுருகியது. ஓரன்னியனைக்கண்டுஉனதுள்ளம் பதைக்கின்றது. அவ்வன்னியனே மகானான உல்லாசன். அந்தப்பிஷியன் கிளிமணனென்று பெயர்வைத்து அவனைக்குறித்துச்சொல்லியவையெல்லாம், அவனிப்பொழுது இதக்குக்குத் திரும்பப்போய்க்கொண்டிருப்பதையெவரும் சிறிதும் அறியாவண்ணம் மறைக்கக்கருதி உண்டுபண்ணிய வெறுங்கட்டுக்கதை. அவனிந்நேரந் துறைமுகம்போயடைந்துவிட்டான். காணவேண்டுமென நெடுநாளாய் அவன் ஆசைகொண்டிருந்த அந்தக்காட்சிகளையெல்லாம் கண்ணாரக்கண்டு விட்டான். அவனை நீ காண்பாயென முன்னமேயே யுனக்குச்சொல்லப்பட்டிருந்தது. அந்தப்படி கண்டுவிட்டாயாயினும், அவனை யின்னானென நீயறிந்துகொள்ளவில்லை. அவனை நீ மறுபடி காணவும், அறியவும், உன்னையவனறியுமான நல்லவேளை கிட்டிற்று. ஆனால் இவையெலாம் இதக்கிலேயே நடக்கவேண்டுமென்பது தேவர்களது திருவுளம். உன்மனமெவ்வளவுபாடுபட்டதோ அதற்குக் குறைவாக அவன் மனம் படவில்லை. அவன் மிக்க அறிவுளோனாதலின் பெண்டிலகத்தை மணநாடுவோர்களது மோசத்துக்கும் அவமானத்துக்கும் உள்ளாக இடமிருக்கும்பொழுது, தனதுள்ளத்தை யெவரிடமும் நம்பி வெளியிடான். உன்

பிதாவான உல்லாசன் மனிதர்களுள் மகாஞானி. அவனகத்தினாழத்தை அளவிடமுடியாது. எவ்வளவு தந்திரியானாலும், வஞ்சனாலும்,எவனாலும் அவனுள்ளத்தை யறியமுடியாது. உண்மைக்குஉவந்த நண்பன். பொய்யுடை யெதையும் பொருந்தியுரையான். அறிவென்பது அவனுகட்டிவிட்ட முத்திரை: மேலான விஷயம் நேர்ந்தாலன்றி அம்முத்திரையையுடையான். உன்னைக்கண்டான் உன்னுடன் பேசினான். அப்படியிருந்தும், தன்னை உன்னிடம் வெளியிட்டுக்கொள்ளவில்லை. அவனுள்ளம் எவ்வாறு கொதித்திருக்கும்! அவன் மனம் என்னவேதனை யுற்றிருக்கும்! அவனது மனவருத்தத்தையும் மனவியாகுலத்தையுங் கண்டு எவரே யுருகார்!!" என்று சொன்னார்.

மந்திரர் இவ்வாறு சொல்லிவரும்பொழுது, தலைமகுடன் ஒன்றுந்தோன்றாது அசையாது நின்றான். பிறகு பொங்கிக்கண்ணீர் பெருக்கினான். உருகினான். ஆழ்ந்த துக்கத்தால் வாடினான். நெஞ்சடைத்து மூச்சுவிடமாட்டாது தவித்தான். கடைசியில் பெருமூச்சுவிட்டுக்கதறினான். "ஓ, என்னருமைமந்திரரே, உண்மையில் எனதுள்ளத்தையடக்கியாண்ட ஏதோ ஒரு சக்தியவ்வன்னியனிடமிருந்தது. அது என்னுள்ளங்கவர்ந்துருக்கியது. அது இன்னதென்று பெயர் வகுத்துரைக்க முடியவில்லை. இஃதிருக்கட்டும். நீர் அவரையறிந்திருந்தால், அவர் புறப்பட்டுச் செல்லுமுன் அவருல்லாசனென்று நீரேன் என்னிடஞ் சொல்லவில்லை? நீரேன அவரிடம் பேசவில்லை? அவர் நீரறியாதவரல்லரென்று நீரேன் அவருக்குத்தெரிவிக்கவில்லை? இந்த இரகசியமெல்லாம் எதை மறைக்கக்கருதி? நானென்றும் அல்லற்பட வேண்டுமென்றோ? தாகத்தால் வறண்ட தங்கலைபனது உதடு நீரண்டை வருந்தோறும் அதை எட்ட ஓடச்செய்து எந்ததண்டனை தேவர்கள் அவனுக்கு விதித்திருக்கின்றார்களோ, அந்தத்தண்டனை யென்மீது சீற்றங்கொண்டு எனக்கும் விதித்திருக்கின்றார்களோ? ஓ என்னப்ப, நீரென்னைவிட்டுத் தப்பியோடி விட்டீரோ? அந்தோ, இனி யும்மை நான் கண்பேனோ இல்லையோ? பெண்டிலகத்தை மணநாடியோர்கள் எனக்கென்று விரித்திருந்த வலையில் ஒருவேளை நீர் பட்டுக்கொண்டீரோ என்னவோ? ஐயோ, நானும் உம்முடன் கூடவரக் கொடுத்துவைக்கவில்லையே! நாம் சாகவேண்டுமென்றிருந்தால், இருவருஞ்சேர்ந்து செத்தோமென்றாவதிருக்குமே! இன்னுந் தீயூழ்வலிய நிற்பதால், இப்பொழுதும் நீர்கப்பற்சேதமில்லாது தப்புவீரென னக்குத்தோன்றவில்லை. ஒருவேளை தப்பினாலும், அகமம்மனை'யெந்தக்கொடுவினைப்பற்றியதோ, அந்தக்கொடுவினை உம்மையும் இதக்கிற் பற்றுமென்றஞ்சுகிறேன். மந்திரரே, இதுபோகட்டும். எனது நல்வினையைக்கண்டு நீரேன் பொறாமை கொண்டீர்? என்னப்பனை யென் தான் மார்புறத்தழுவவில்லை? இந்நேரத்தில் ஏன் அவருடன் கூட இதக்குக் கரையில் நானில்லை? அவர் பக்கத்து நின்று சண்டைசெய்து அவரது பகைவர்கள் பட்டு மாள்வதைக்கண்டு யான் களிக்கவில்லை?" என்று கதறினான்.



அதற்கு மந்திரர் அவனை நோக்கி "ஓ, என்கண்ணே தலைமகுட, உள்ளவாறு உன்னை நீயேயறியும்படி செய்கின்றேன். இவ்விதமாக மாந்தர்க்குள்ள குறையை யுனக்கு அறிவிக்கின்றேன். உன் தகப்பனைப் பார்த்தும இன்னானென்று நீயறியாததால், ஆறாத்துயரடைகின்றாய். அவன் சாகவில்லையென்று நேற்றுனக்குத் தெரிந்திருந்தால் என்னகொடுத்திருப்பாய்!! அவனுயிரோடிருக்கிறானென்று உன் கண்களே யின்றுனக்கு உறுதி சொல்லுகின்றன. இந்த உறுதியால், நீ யானந்த பரவசனாகவேண்டியிருக்க, ஆற்றொணாத் துயர்ப்படுகிறாய். மாந்தர்கள் முரனும்; இழிகுணமுமுடையோராதலின், எதைமிக்க ஆசையுடன் வேண்டினார்களோ, அது கிட்டிய நிமிஷமே, யதுபயற்றதென எண்ணித் தமக்குக் கிட்டாத ஒன்றில் வீணாசை வைத்துத் துன்பமுழல்கின்றார்கள். இதுவே மாந்தர்களது இயல். உனது பொறுமையைச் சோதிக்கவேண்டுமென்றே விண்ணவர்கள் உனக்கு ஒன்றும் நிலையிலாது செய்திருக்கிறார்கள். இந்நாள் வீணானதென எண்ணுகின்றாய். ஆனால் இதுவே யெந்நாளினும் மேனாளெனத் திண்ணமா யெண்ணு. இப்பொழுது நீ படுந்துன்பம் ஆளப்பிறந்தோர்க்கு மற்றக்குணங்களினும் அதிகமாகவிருக்கவேண்டிய பொறுமையென்னுங் குணத்தி லுன்னைப் பழக்கும். பொறுமையில்லையாயின், நீ யுன்னையடக்கவுமுடியாது; பிறரை யடக்கவுமுடியாது. பொறுமையின்மை உள்ளெழுச்சிபோலும், உள்வேகம்போலுந்தோன்றினும், உண்மையில், உள்வலியின்மையும், வருந்துன்பம் பொறுக்கமுடியாத் திடனழிவுமாகும். எவன்

உறுபொழுது வருமளவும் காக்க அறியாதவனோ, வருந்துன்பம் பொறுக்க அறியாதவனோ, அவன் மறைகாக்க முடியாதவன் எந்த மனோபாதிப்படுகின்றானோ அந்த மனோபாதிப்படுகின்றான். அவ்விருவர்க்கும் மனம் படபடவென்று துடித்தெழும்பொழுது, அதனையடக்கும் வல்லமையில்லை. படபடவென்று துடித்துக்கடுவேகமுமுள்ள குதிரைகளையடக்கிச் செலுத்தக் கைவலியற்ற ஓர் சாரதிக்கு நேராக அவர்களைச் சொல்லலாம். அவைகள் கடிவாளத்தை மதியா. அடங்கா வேகத்துடன் பாய்ந்தாவும். இரதம் தலை கவிழ்ந்துபோம். வலியற்ற அந்தச் சூதன் சக்கரங்களின் கீழ்ப்பட்டு நசுங்கிப்போவான் இப்படியே பொறுமையிலாதவனும் கடுவேகமும் அடங்காததுமான ஆசையால் வெகு சீக்கிரமாய்க்கேடடைகிறான். பதவியுயர உயரப் பொறுமையின்மையால் வருங்கேடுமதிகம். அவன் எதற்கும் பொறுத்துக்காவான். ஆழ்ந்த யோசனையை யவமதிப்பான். எதையும் சண்டமாருதம்போல், வாரியடித்துக் கொண்டு போவான். அவனது எந்த அநுபவமும் முரட்டுத்தனமாகவும் கேடுளதாகவுமிருக்கும். பழங்கள் பழுக்குமுன் கிளைகளை முறித்துப்போடுவான். கதவைத்திறக்கும் அளவும்காத்திராது அதைவலியத்தள்ளுவான். மதியூகமுடைய உழவினன் விதைக்கும்பொழுது அவன் அறுக்கப் பார்ப்பான். அவனது செயல்களியாவும், முன்னியோசனையில்லாதனவாய், காலமல்லாக் காலத்தனவாய், முறைதவறியவையாய், அவனது ஆசைகள் போலவே, பயனற்றவையாய், அற்ப வாழ்வுடையனவாயிருக்கும். தான் எல்லாம் செய்ய வல்லவனென வீணே நினைத்துத் தனது அதிகாரத்தை முறைகோடிச்செலுத்தும்படி தூண்டும் படபடத்த ஆசைகளுக்கிடங்கொடுப்பவனது செய்கைகளும் யோசனைகளுமிவையேயாகும். நீ பொறுமையாயிருக்கக் கற்கவேண்டுமென்றேயுனது பொறுமை யிவ்வாறு சோதிக்கப்படுகின்றது. இதற்காகவே தேவர்களுன்னை யூழின் கையிற் காட்டிக்கொடுத்து, எதுவு நிலைபற்ற நாடோடியாகவுஞ் செய்திருக்கின்றார்கள். எந்த நன்மை நமக்குக் கிட்டியதென நாம் நினைக்கின்றோமோ, அது நம்மை விட்டு வழுவி ஒரு நொடிப்பொழுதில் மறைந்துவிடுமென நீயறிந்துகொள்ளவேண்டுமென்றே, நீ ஆசைவைத்திருந்தபொருள், இராக்காலத் தூக்கமயக்கந்தெளியக் கனவுத்தோற்றங்களெல்லாம் பறப்பனபோல், தோன்



றியுடனே மறைந்துவிட்டது. உல்லாசனில்லாததாலும், அவனைத் தேடிச்செல்லுகையில். நீ பட்ட துன்பந்துயர்களாலும் உனக்கு எவ்வளவு அறிவுண்டாகுமோ, அவ்வளவறிவு அவனது உபதேசித்தாலுண்டாகாது." என்று புன் சிரிப்புடன் சொன்னார்.

அதன் பின்னர் மந்திரர் இதுவரையில் பரிசோதித்ததைவிட வேறொரு உபாயத்தால் இன்னுங்கடுமையாக அவனது பொறுமையைப்பரிசோதிக்க எண்ணங்கொண்டார். தாமதமின்றிப்புறப்பட வேண்டுமென்று அவன் கப்பலோட்டிகளைத் தூண்டிக்கொண்டிருக்கும்பொழுது, அவனை யவர் திடீரென நிறுத்தி, அந்தக்கடற்கரையில் மீன்விழியாளின் பொருட்டு, ஓர் பலி பூசனை செய்யவேண்டுமென்றார். தலைமகுடனும் முணுமுணுப்பின்றி எதிர்ப்பேச்சின்றி யதற்கு உடன்பட்டான். உடனே யிரண்டு புற்பற்றைப் பீடங்கள் அமைக்கப்பட்டன. நறும்புகை யெழுந்தது. பலிமிருகங்களின் இரத்தமோடியது. அவ்விளைஞனும் நெக்குருகிய பத்தியுடன் மேனோக்கியெல்லாம் அந்தத்தேவியினது கருணையுங் காப்புமென்றுமனதாறப் போற்றினான்.

பலி பூசனை முடிந்ததும், அடுத்து நின்ற அடர்ந்த காட்டினுள் மந்திரர் செல்ல அவர் பின் தலைமகுடனுஞ் சென்றான். அங்கு போனதும் தனது தோழரது முகக்குறிகள் திடீரென மாறக்கண்டான்.

ம. சுப்பிரமணியன்.

## ஸ்ரீ திலகர் பத்து வருஷத்திற்கு முன் சொன்னது.

ஸ்ரீ திலகர் 1897-ஆம் வருஷத்தில் ராஜ நிந்தனைக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டபொழுது அவர் தாம்செய்தது பிழையென்று ஒப்பி கவர்ன்மெண்டாரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் அவரை விட்டுவிடுவதாக அதிகாரிகள் புத்திமதி கூறினார்கள். அவ்வாறே அவருக்குற்ற நண்பர்கள் அநேகர் அவரைத் தூண்டினார்கள். ஆனால் அவற்றிற்கெல்லாம் ஸ்ரீதிலகர் அசையவேயில்லை. அப்பொழுது ஸ்ரீதிலகர் தமது நண்பரொருவர்க்கு அடியிற்கண்டபடி ஒரு கடிதமெழுதியிருந்தாராம். அதாவது "எதிர்க்கக்ஷியார் நான் மன்னிப்புக் கேட்டால் விட்டுவிடலாமென்றெண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு நான் ஒருபொழுதும் உடன்படேன். நான் எப்பொழுது மன்னிப்புக் கேட்டுவிட்டேனோ அப்பொழுதே நான் குற்றவாளியென்று ஒப்புக்கொண்டவனாகின்றேன். இது தகுமா? பொது ஜனங்கள் ஒருவனை எதற்காக மதிக்கிறார்கள்? ஒருவனுடைய நல்லொழுக்கத்திற்காகவும், சத்தியத்திற்காகவும், தைரியத்திற்காகவும் ஜனங்கள் அவனை மதிக்கின்றார்கள். அப்படியிருக்க, நான் சிறைத் தண்டனையைக் கண்டு பயந்து குற்றவாளிதானெனவும், மன்னிக்கவேண்டுமெனவும் எதிர்க்கக்ஷியாரைக் கேட்டுத்தலைகுனிவேனாகில் என்னை ஒரு நாயும் மதியாது. மதிப்பையும் மானத்தையுமிழந்த பின் நான் இந்த மஹாராஷ்டிர தேசத்திலிருப்பதும், அண்டமான் தீவிலிருப்பதும் ஒன்றுதானே! தேசப் பொது நன்மையின்பொருட்டு உழைப்பவர்களுக்கு இப்படிப்பட்ட சங்கடங்கள் நேர்வது சகஜம். அவற்றை அமைதியுடன் சகிப்பதே நமது கடமை. சிறிது பின்னிட்டுப் பயந்தோமானால் நாம் நம்மைமட்டுமல்ல நம்போன்ற மற்றவர்களையும் அடியோடு கெடுத்தவர்களாவோம். தேசநன்மைக்கு உழைப்பவனெவ்வொருவனும் பொது ஜனங்களுக்கு வேலைக்காரனாகின்றான். தக்கசமயத்தில் நாம் தைரியத்தைக்கைவிட்டால் பொது ஜனங்களனைவர்க்கும் பெரிய தீங்கு செய்தவராவோம். சரீர சௌக்கியத்தைக் கருதி இப்பொழுது எதிர்க்கக்ஷியார்காலைப்பிடித்து மன்னிப்புக் கேட்டுவிட்டேனானால் என்னுடைய கோழைத்தனத்திற்காகவும் சுய நன்மைக்காகவும் என்னுடைய மனச்சாக்ஷியே என்னை ஆயுள் பரியந்தம் புண்படுத்திக்கொண்டிருக்கும். பொது ஜனங்களின் முகத்தில் விழிக்கவும் மனம் நாணும். என் வாழ்க்கை அத்தோடு சிறைச்சாலை வாழ்க்கைபோலாய் விடுகின்றது. ஆனால் நான் இச்சமயத்தில் தேசாபிமானத்தைக் கைவிடாமல் கிடைத்த தண்டனையைப் பொறுமையோடு ஏற்றுச் சகிப்பேனானால், எல்லாப்பொது ஜனங்களும் எனக்குக் காட்டும் அநுதாபமும், அன்புந்தான் சிறையிலிருந்து வருந்தும்பொழுது கூட என்னைத் தேற்றும். என் மனச்சாக்ஷியும் மகிழும்" என்று எழுதினார்.

கேசரி.

## தலைமகுடன்சரித்திரம்.

(167-வது பக்கத்தொடர்ச்சி.)

முகத்தோற்றங்களும் திடீரென மாறக்கண்டான். அருணன் தனது செந்தாமரைக்கைகளால் கீழ்த்திசைக்கதவைத் திறந்துவிட்டு வானத்தில் செங்கிரணங்களைத்தூவி யிறைக்கும்பொழுது, இராக்கால இருள் ஓடிமறைவதுபோல் முகச்சுருக்கங்களெல்லாம் மறைந்தோடின. கூர்ந்தாழ்ந்த கண்கள் மாறி நீணிறம்பூண்டு தெய்வீக ஒளி வீசின. முளைத்தபடி சிலிர்த்துக்கிடந்த தாடிமயிர் அடியோடு மறைந்துபோயிற்று. தண்மையும், கடுமையும், இனிமையும், பெருமையுமொழுகிய புதுமுகத்தைக்காணத் தலைமகுடனுக்குக் கண்கூசியது. செவ்வல்லி செந்தாமரை இவ்விருமலர்களினது நிறம்பூண்டு மிளிர்ந்து உதயநேரத்தில் மலர்ந்ததும் மலராததுமாயுள்ள ஓர் மென்மலரிதழ்கள்போல் நயமாகவும் மெதுவாகவுமுள்ள ஓர் மெல்லியலின் வதனத்தைக்கண்டான். வகுத்துரைக்கமுடியா மங்கைப்பருவவடிவும் இயற்கைப்பெருமையும் மேன்மையுங்கொண்டு அதுவிளங்கியது. அவளது ஒழுகுகூந்தலினின்றெழுந்த நறுமணம் ஆகாயமெல்லாம் பரவிவீசியது. காலைவெயிற்படப் பற்பல நிறங்களேற்றுப் பிரகாசிக்கும் மேகங்கள்போல், அவளது மேகலையும் பற்பல நிறங்கள் கொண்டு பளபளவென்றுமின்னியது. அதன்பிறகு அந்தத்தேவி தரையில் நிற்பதுவிட்டுப் பறவைகள் பறக்கும்பொழுது ஆகாயத்தில் மிதப்பனபோல் அந்தரத்திற் சார்ந்துநின்றாள். உலகெலாம் நடுக்கச் சமர்க்கடவுளும் உட்க ஒளிவீசுவேலென்று கையிலேந்தி நின்றாள். அவளது குரல் குளிர்ந்து இனிமையதாயினும், தெளிந்தும் உரத்துமிருந்தது. அவளது சொற்கள் தீயம்புபோல் அவன் மனதைத் தைத்துருவ அவனுக்கின்பமுந் துன்பமுமுண்டாக உடம்புகுலுங்கியது. அவளது தலைக்கிரீடத்தில் அதீன நகர்க்குரிய அந்தத் தனி வாழ்பறவை உட்கார்ந்திருந்தது. பயங்கரமான அவளது கேடகம் மார்பிற்சொலித்தது. இக்குணக்குறிகளால் தன் முன்னிற்பது மீன்விழிபாளெனத் தலைமகுடன் அறிந்துகொண்டான்.

"ஆ, தேவி!! உல்லாசனிடம் நீ கொண்ட அன்பால், அவனது மகனுக்கும், துணையாய்க்காப்பாய் நிற்கத் திருவுளங்கொண்டது நீதானோ?" என்றான். அதற்குமேலுஞ்சொல்ல வாயெடுத்தான். ஆனால், தொனியெழவில்லை. மடமடவென்று அதிவேகமாய்ப் பொங்கியெழுந்த நினைவுகளை நாவெளியிடமாட்டாது தழுதழுத்தது. கனவுநிலையில் மூச்சுவிடமுடியாது வருந்திப்பேசமுயன்றும் முடியாது நெஞ்சடைத்துச் சங்கடப்படும் ஒருவனைப்போல் தலைமகுடனும் அந்தத்தேவியின் சந்நிதியில் நெஞ்சடைத்துப் பேசமுடியாது சங்கடப்பட்டான்.

அதன்பின் அந்தத்தேவி அவனைநோக்கிப் பின்வருமாறு திருவாக்களித்தாள். "உல்லாசன்மைந்த, நானிப்பொழுதுனக்குக் கடைசியாகச் சொல்லப்போவதைக்கேள். நான் உனக்கு உபதேசஞ் செய்திருப்பதுபோல், நான் எந்தமனிதனுக்கும் உபதேசஞ் செய்ததில்லை. முகமறியா நாடுகளிலும், கப்பற்சேத நேரங்களிலும், போர்க்களத்திலும் மனிதனது மனவலிமையைச் சோதிக்கக்கூடிய பலவிதமான துன்ப நிலைகள் ஆபத்து நிலைகளிலும், உன்னையான் காத்தேன். உள்ளனவும் இல்லனவுமான பலவித இராஜதருமங்களை யுனக்குநிதரிசனமாய் எடுத்து விளக்கினேன். நீயுற்ற துன்பங்களால் மட்டுமன்றி, நீ செய்த தவறுகள் பிழைகளாலும் உனக்கறிவுமிகும்படிசெய்தேன். துன்பப்படாதவனுக்கு ஆளுந்திறமை யெப்படியுண்டாகும்? தவறுகளால் வரும் கேட்டையனுபவித்தறியாதவன் அவைகளுக்குள்ளாகாது எப்படி விலகமுடியும்? உன் தகப்பனைப்போலவே நீயும் நிலத்திலும் நீரிலும், பேராபத்துகளுக்குள்ளானாய். அவனுடன் கூட இருக்கப்போக இப்பொழுதுதான் நீ தகுதியுள்ளவனானாய். அவனிந்நேரத்தில் அங்குபோய்ச் சேர்ந்துவிட்டான். இங்கிருந்து அங்கு நீ செல்லும்பாதை சமீபமாகவும் இலகுவாகவுமுளது. போர்க்களத்தில் அவன் பக்கத்திலிரு. அத்தியந்தபயபத்தி விசுவாசத்துடன் அவனுக்குக் கீழ்ப்படிந்துநட. மகா அற்பக்குடியும் உன்னைக்கண்டு செய்முறையறிந்துகொள்ளட்டும். அந்தண்பாவையாளை யுனது விருப்பப்படி யுனக்கு அவன் மணஞ்செய்துவைப்பான். அவளை நீ விரும்பியதற்குப் புறவடிவினும் அகவடிவே காரணமாதலின், உங்கள் வாழ்க்



கை சுகமாகவேயிருக்கும். நீயரசுரிமை யேற்கவரும்பொழுது கிருதயுகதருமந்தழைத்தோங்கச்செய்வதில்மட்டும் உனதுஆசையுங் கருத்துமிருக்கவேண்டும். எவர்சொல்வதையுஞ் செவிசாய்த்துக்கேள், ஆனால், உன்னுள்ளம் சிலரிடத்துமட்டுமிருக்கட்டும். உன்னை நீயே வஞ்சிக்க அஞ்சு. நீ மோசம்போனது பிறரறிவார்களோவென்றஞ்சாதே. குடிகளைநேசி. உன்னிடங் குடிகளுக்கு நேசமுண்டாக்குமதையுஞ்செய்ய மறவாதே. நயத்தால் ஆளமுடியாதவர்களைப் பயத்தாலாளவேண்டும். ஆனால், காரமும் கடுமையுமுள்ள மருந்தைப்போல் இவ்வுபாயத்தைப் பயந்து தயங்கியுபயோகித்தல்வேண்டும். நெடுந்தூரப்படுபயனையும் ஆய்ந்தறியாது எவ்வினையையுமேற்கொள்ளாதே. தவிர்க்கமுடியா இடையூறுகளையு முன்னறிந்து கடந்து செல்வதே யுண்மையான வீரமாதலால் எவ்வித இடையூறு நிற்பினும் முன்கண்ணோட்டமாயிரு. இடையூறுகளை யெதிர்சென்று காவாதவன் அவைகள் வந்தபின் கண்டஞ்சிச் சுருங்குவான். எவன் காணக்கூடியவைகளையெல்லாம் மனதொப்பிக்காண்கின்றானோ, விலக்கக்கூடியவைகளை விலக்குகின்றானோ பொருந்துவனவற்றை மனநிறைவுடன் பொருந்துகின்றானோ, அவனே ஞானி. அவனே வீரன். பெருவாழ்வையும், உளவரையோம் பாமையையும், வீண்கோலத்தையும் விட்டொழி. அடக்கமொன்றே பெருமையெனவெண்ணு. அறநெறிகளை, உனதங்கத்திற்கும் அரண்மனைக்கும் அணியெனக்கொள். அவைகளே உன்னைச்சூழுமெய் காவலர்களாகட்டும். பெருமையென்றாலென்ன மானமென்றாலென்னவென உலகோர் உன்னைக்கண்டு கற்கட்டும். அரசர்களாள்வது குடிகளது நன்மையின் பொருட்டன்றித் தமதுபெருமையின் பொருட்டல்லவென்றும், அவர்களது நற்செயல்களும் தீச்செயல்களும் பலதலைமுறையளவும் ஜனங்களது சுகதுக்கங்களுக்குக் காரணமாகுமென்றும், ஓரரசன் புரியுங் கொடுமை சிலவேளை நெடுநாட் கேடுவிளைக்குமென்றும், ஒருநொடிப்பொழுதேனும் உன்னெஞ்சுவிட்டகலாது நினை. எல்லாவற்றிற்குமேல் உனது காரணமின்றி யெழும்மனப்போக்குகளைக் கண்டிப்பாயாக. ஆசையையும் அறிவையு மனுசரியாத எந்த குணவிசேஷத்தால் மன்னுயிர்களுள் பேதமுண்டாகின்றதோ, ஒன்றனது நன்மை தீமை காரணமாகவன்றிக் கேவலம் மனநோக்கங் காரண

யாக அதை யேற்கவும் தள்ளவும் விரும்பவும் வெறுக்கவும், புகழவும் இகழவும் செய்ய எந்த உறுதியற்ற கொள்கையாலாகின்றதோ, அந்த மனப்போக்கைத் தள்ளி நடப்பாயாக. அந்த மனப்பற்று ஒவ்வொருவனையும் சுடுகாடளவும் பிரியாது பற்றிச்செல்லும் உவந்தபகை. எந்தப்புத்தி யுத்திகளிலும் அது வந்து குறுக்கிடும். அதற்கிடங்கொடுத்தால், அவைகளை மேல்கீழாய்ப் புரட்டிவிடும். பண்பும் பயனுமெய்தக்கூடிய வேலைகளில் எய்தவொட்டாது செய்துவிடும். அதுபொருளைவிட்டு நிழலைக்கொண்டாடும். அற்ப ஆதாரங்கொண்டு மேலானவிஷயங்களில் சித்தாந் தங்கொள்ளச்செய்யும். வல்லமையைமறைக்கும் ஆண்மையைக்குறைக்கும். ஒருவனை வலியிலனாய், நிலையிலனாய் அருளருக்கத்தக்கவனாய் இழிஞனாகச்செய்யும். இப்பகைஞன் வசப்படாது நீயெப்பொழுதும் விழிப்புள்ளவனாதல்வேண்டும். தலைமகுட, தேவர்களிடத்தச்சம் உன்னிடம் தலைமைச் சற்குணமாயிருத்தல்வேண்டும். அக்குணத்தைப் பெறுதற்கரிய பெருநிதியா யெண்ணிப்போற்றி யுன்னுள்ளிருத்து. அதிருந்தால், உனக்கு ஞானமுண்டாகும். நீதியுண்டாகும். சாந்தமுண்டாகும். சந்தோஷமுண்டாகும் மாசற்ற. ஆனந்தமுண்டாகும். உண்மையான பந்தமின்மையுண்டாகும். அடங்கிய ஆக்கமுண்டாகும் அழுக்கிலாப் புகழுண்டாகும்.

உல்லாசன்மைந்த, உன்னையான்விட்டுப் பிரிகின்றேன். எனது ஞானத்தின் துணை நினக்குவேண்டியபொழுதெல்லாம் அது வந்து உனக்குத்துணைநிற்கும். உன்னுள்ளறிவினொளிகொண்டு இனிநீ செல்லவேண்டும். ஓர் குழந்தைபாலுணர்பருவங்கடந்து சிறிது கடினமான உணவுகொள்ளக்கூடிய பருவம்வந்ததும் அதன்தாய் அதை முலைமறக்கச்செய்வதுபோல், உனக்கு நான் நாளளவிற் செய்துவந்த உதவியும் ஆறுதலுமின்றி நீ பொறுத்துப்பழகுமாறு உன்னைவிட்டு நான் எகிப்திலும் சாலுண்டத்திலும் பிரிந்திருந்தேன்" என்று அந்தத்தேவி திருவாய்மலர்ந்தருளினாள்.

மீன்விழியாள் தலைமகுடனுக்குச்செய்த முடிவுபதேசங்களிவையாம். அவளது தீஞ்சொற்கள் அவன்காதில் தொனித்துக்



கொண்டிருக்கும்பொழுதே அவள்மெல்லத் தரைவிட்டுமேலெழுவதைக்கண்டான். நீனிறப்பொன்னிற மேகங்கள் சூழ, அவையிடை அந்தத்தேவி மறைந்தாள். சற்றுநேரமட்டும் தலைமகுடன் பிரமித்துப் பரவசனாய் நின்றான். அதன்பின் நெட்டுயிர்த்துத் தரையில் விழுந்து சாஷ்டாங்கமாய் வணங்கி வானைநோக்கிக் கைகூப்பினான். இவ்வாறு அத்தேவியைப்போற்றிப் பணிந்தபின் எழுந்து, தன்தோழர்களை யெழுப்பி, விரைந்து புறப்பட்டு இதற்குச் சென்றடைந்து அங்கு அசலா உள்ளன்புடையூமணனது இல்லத்தில் தனது பெற்றோர்களைக்கண்டுகளித்தான்.

ம. சுப்பிரமணியன்.

# நெல்லின் வகைகள்.

("நெல்" என்னும் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

நமது நாட்டில் நெல் அதிகமாய் விளைவிக்கப்பட்டாலும், அங்கங்கே சுமார் 12 வகைகளுக்கு மேல் இருப்பதில்லை. அவரவர்களின் நில வித்தியாசத்தையும், ஜல அனுகூலத்தையும் அனுசரித்து அங்கங்கே சில வகை இருக்கின்றன. இந்தியா நாட்டு நெல் வகைகளைக் கணக்குப்பார்த்ததில் சுமார் 1,400 வகை இருப்பதாகத் தெரியவருகிறது. இலங்கைத் தீவில் 161 வகையும், ஜப்பான் நாட்டில் 578 வகையும் இருக்கின்றனவாம். இந்தியாவின் இத்தனை வகை நெல்லை ஒருமிக்கப்பார்ப்பதற்கு இதுவரையிலும் நமது ராஜதானியில் யாரும் முயற்சிக்கவில்லை. தஞ்சை ஜில்லா விவசாயச்சங்கம் சென்னை இராஜதானியில் கிடைத்த சுமார் 163 வகைநெல்லைச் சேர்த்திருக்கிறது. மலையாளத்தில் இருக்கும் வகைகளையும் மற்றவைகளையும் சேர்த்தால் நலம். ரோமபுரி பட்டணத்துப் பொருட் காட்சிச்சாலை (Museum) யில் 347 வகை நெல் பல தேசங்களிலிருந்து சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றனவாம். இவ்வாறு ஒன்று சேர்த்து வைப்பது சிரேஷ்டமும் உபயோகமானதுமாயிருக்கும். பின்னும் ஒவ்வொரு வகையின் தாரதம்மியங்களும், மேன்மை குறைவுகளும்,

இக்காலத்தில் இவ்விடத்தில் விளைகின்றதென்பதும், காய்ச்சல் நாள்களில் தருந்தவை இவை என்றும், நீர்ப்பிடிப்பு நிலங்களுக்கு இன்னின்னவை யென்றும் ஒவ்வொரு வகைகளும் விஷயங்களைக் குறித்துத் தெரிவிப்பதுடன் ரசாயன ராஸ்திர உதவியால் ஒவ்வொன்றையும் பரீக்ஷித்து, அதிற் சேர்ந்த பொருள்களின் விவரங்களும், மற்றும்பிரயோஜனப்படக்கூடியவிஷயங்களும்ஓர் அட்டவணையாகஇருப்பது உத்தமம். இவ்வாறே ஒவ்வோர் இராஜதானியிலும் ஓர் இடத்திலாவது நெல்வகை சேகரிக்கப்பட்டால் தேச க்ஷேமத்திற்கும், நெல் விவசாய வித்தியா விருத்திக்கும் அநுகூலம்.

இவைகளைக் கார் என்றும், சம்பா என்றும், அல்லது கார் பிசானம் என்றும் இரண்டு பிரிவுகளாக அறுப்பை அனுசரித்துப் பெயரிட்டு வழங்குகிறார்கள். தெலுங்கு ஜில்லாக்கள் கார்த்திகை மாதத்தில் அறுவிடையாவதைக் கார்த்தீகமென்றும், வைகாசியில் அறுவிடையாவதை வைகாசம் என்றும் இருபோகத்துக்குப் பெயரிட்டு வழங்குகிறார்கள். கார் வகைகள் சாதாரணமாய் விலை அதிகமாக மதிக்கப்படுவதில்லை. இது பள்ளத்தாக்குகளில் விளைவிக்கப்படும். அரிசி பருத்தும் சிவப்பாயு மிருக்கும். சம்பாக்கதிரில் மணிசேர்ந்து பிடித்திருக்கும். கார்க்கதிரில் மணிவிலாசமாய்ப்பிடித்திருக்கும். கூலியாட்கள் இதையே விரும்புவார்கள். இது நின்று ஜீரணமாவதுடன், இதன் பழைபது வாசனையுமுள்ளதாயிருக்கிறது. இது அதிக ஜலத்தில்வளர்ந்தாலும் தான் அழுகிவிதை அநேகமாய் உதிர்வதில்லை. பல காரணங்களால் இது வெள்ளை அரிசி நெல்லுடன் கலந்து விலையைக் குறைக்கிறது. சாதாரணமாகக் கடலடுத்த தாலூகாக்களிலும் பள்ளங்களிலும் இது விளைகிறது. முதல்முதல் இந்த நெல்லை தஞ்சாவூர் ஜில்லாவில் அதிகமாய் இருந்திருக்கவேண்டும். இதுஔவையார் சொல்லிவைத்த "நீர் உயர நெல் உயரும்" என்றும் வாக்கியத்தால் தெரிகிறது. சம்பா நெல்லுக்கு அதிக ஜலம் வேண்டாமாதலால், இவ்வாக்கியம் சம்பா பயிர் குடியேறுதற்கு முன்பாகவே வந்திருக்க வேண்டும். இரண்டாவது நூற்றாண்டில் காவேரியணை கட்டியும் 1850ம் வருஷத்தில் மராமத்துசெய்வதற்கு முன் தகுந்தபடி ஜலம் காலங்களில் பாயாததினாலும், அங்கங்கே உடைப்பு எடுத்து மராமத்து உடனுக்குடனே செய்யாததினாலும், ஜலம் கொள்ளிடத்தில் அதிகமாய்ப்போனதினாலும் காவேரியிற் கிடைக்கும் ஜலத்தை நிலைநிறுத்தவேணுமென்று வயல் வரப்புகளை உயர்த்தி, அதிக ஜலத்தில் விளையக்கூடிய கார் வகை நெல்லையே பயிர் செய்திருக்கவேண்டுமென்று விசதமாகிறது. பின்னும் சுமார் 70, 80 வயதுள்ள முதியவர்களை விசாரித்தாலும், அவர்களின் பாலியத்தில் கார் வகை நெல்லுகளே இருந்ததாகச் சொல்லுகிறார்கள். ரெயில்; கப்பல்யாத்திரை பிரபலப்பட்டது முதல் சுமார் 30 வருஷமாய் சம்பா வகைகள் தஞ்சை ஜில்லாவில் அதிகப்பட்டு வருவதாகத் தெரிகிறது. சம்பா நெல்லுக்கு மேட்டு நிலங்களும், நீர் வடியச் சாதனமும், அதிக உரமும் வேண்டும் "காயாது கெட்டது சம்பா, காய்ந்து கெட்டது கார்" என்று சம்பாவுக்கு ஜலம் குறைந்தும் நிலம் அடிக்கடி காய்ந்தும் இருக்கவேண்டும். அதிக ஜலத்தில் இது தான் அழுகிப்போம். இது தேகசிரமமில்லாமல் ஜீரணமாகும். கார்அரிசியைவிட இதிற் சத்து அதிகம்; வேலைசெய்வதற்கு உபயோகப்படும் மாவு கார்வகையில் அதிகமிருக்க, மாமிசமுண்டாகக்கூடிய சிகணம் சம்பாவில் அதிகமுண்டு. ஆகையால் கார்அரிசியைச் சாப்பிடும் கூலியாட்கள் தேககாத்திரமில்லாதிருந்தும் அதிகவேலை செய்கிறார்கள். வேலை செய்தால்தான் மாவு அதிகமுள்ள கார் அரிசி ஜீரணமாகும். வேலையில்லாமலே சம்பா ஜீரணமாவதுடன் மாமிசவிருத்தியையும், புத்திவிருத்தியையும் உண்டாக்குகிறது. ஜலம் குறைவாகவும், காய்ச்சல் பொறுக்கக்கூடியதுமாகவும் இருக்கும் நெல்வகைகள் இந்தியா நாட்டு பைங்கூர் ஜில்லாவில் ஐட்காசர்லியென்னும் வகைகளும், சையாம் தேசத்தில் (Bankok) பான்காக் பட்டணத்தில் நாமூங்கு என்ற வகையும் ஆசாம் மாகாணத்து மலைகளில் விளையும் ஓர்வகைக் கார்நெல்லும் மடகாஸ்கர் தீவில் ராஜா பாட்கி என்ற வகையும் இருக்கின்றன பாங்கோ நெல் என்று புதிதாய் இம்மாகாணத்தில் விருத்தியாகும் நெல் பாங்கூர் ஜில்லாவில் சேர்ந்திருக்கலாம். ராஜா பாட்கிநெல்லை விருத்திபண்ணியே அமெரிக்கா காரோலினா நெல் உண்டாயிற்று.



புழுதி நெல் என்று சில வகைகளுண்டு. இவை புழுதிநிலத்தில் ஆடிமாதத்தில் விதைக்கப்படும். சாதாரணமாய் மட்டவகைகளும் சிவப்பு அரிசியுமாக இருக்கும். தகுந்த எருவும் உழவும் கலந்தில

த்தில் நாணய அரிசியும் நன்றாய் விளைந்து மாசூலுண்டாகிறது. தஞ்சாவூர் ஆபிரகாம்பண்டிதர் தோட்டத்திலும், மற்றும் சில இடங்களிலும் இவ்வாறு விளைவிக்கப்படுகிறது. நன்செய் நெல்வகை புழுதியில்வளர்ந்தாலும், புழுதிநெல் நன்செயில் அதிகஜலத்தில்விளையாது.

மேற்சொன்ன வகைகளிற் சேராத பிட்டரிசிநெல் பர்மா, ஜப்பான் தேசங்களில் விளைகிறது. இது அதிக இனிப்பும் மிக்கசத்துமுள்ளது. பாகாகும் பதார்த்தம் இதில் அதிகமிருப்பதால், சமைத்துக் கஞ்சி வடிப்பதற்கு இது உதவாது. இட்லி வேகவைப்பது போல் இதைநீராவியால் வேகவைப்பார்கள்.

இது அதிக பலத்தைக் கொடுக்கிறது என்று புதிதாய்த்திரண்டு பலஹீனப்பட்டிருக்கும் பெண்களுக்கு முக்கிய உணவாகச் சென்னையில் சிலர் இதை உபயோகிக்கிறார்கள். இவ்வகைகளிற் சேராமல் வேறு ஜாதியில் ஓஷதி சாஸ்திரிகளாற் சேர்க்கப்பட்ட அரிசியொன்று இருக்கிறது. இது நம் மாகாணத்தில் கோதாவிரி, கிருஷ்ணா, கஞ்சம்முதலிய ஜில்லாக்களில் சதசதப்பான வாய்க்கால் ஓரங்களிலும்மடுக்களிலும் தானாய் விளைகிறது. இதன் விதையில் 2-3 அங்குலம் வாலுண்டு; அரிசி மிகச்சிவப்பு; இனிப்போ அதிகம்; முதிர்ந்தவுடனே கொட்டுண்டுபோகும். உதிர்ந்து விழுந்த நெல் மறுவருஷம்பக்குவம் வரும்வரையில் முளைக்காமலிருக்கும். பறையர் வலைஞர் இதைச் சேகரித்து மாவுசெய்து சாப்பிடுவார்கள். இதன் சாப்பாடு வெகுசூடாம். இதைப் பரிக்ஷித்துப் பார்த்ததில் கூடியவரையில் சத்துள்ளதென்று தெரிந்தது. இவ்விதைகளைப் பயிர்பண்ணினால் பட்சிகளுக்கும் பசுமாடுகளுக்கும் நல்ல தீவனமென்று தெரிகிறது. ஆனால் விதையைச்சேகரித்து விளைவித்ததில் முளைக்காமற் போய்விட்டது. இயற்கையில் இது இருப்பதுபோலவே ஜலத்திலேயே வைத்திருந்து சகதியிற்போட்டால் விளையுமென்று ஊகித்து இப்போது விளைவிக்கப்படுகிறது.

இவ்வகைகளில் சாதாரணமாய் சம்பா அதிகமாய்ப் பயிரிடப்படுகிறது. அரிசி வெள்ளையாயிருப்பதால் இதற்கு விலைஅதிகம். இதில்மட்டை அதாவது சிவப்பு அரிசி கலந்திருப்பது சாதாரணம். இத



னால் பார்வையும் விலையும் தானாகவே குறைகிறது. சிவப்பு அரிசி சேராதிருக்கும்படி அங்கங்கே அப்போதைக்கப்போது மட்டைநெல் வகைகளை வயலிலேயே விளையும்காலத்தில் மறுபொறுக்கல் என்று களைந்துவிடுவதுண்டு. பின்னும்சிலர் களத்தில் மற்றஜாதிநெல்வகைகளைச் சேர்க்காமல் பிரயத்தனப்படுகிறார்கள்; இருந்தாலும், மட்டைகலந்துகொண்டேவருகிறது. இதற்குத் தகுந்த காரணம் கண்டறியாமல் பூமிவளப்ப வித்தியாசத்தினால் அவ்வாறு மட்டை நெல் உண்டாகிறதென்று சமாதானம்சொல்லிக்கொண்டுபொறுமையுடன் 4, 5 வருஷத்திற்கொருதரம் மட்டையைப் பொறுக்குவதுண்டு. நெல் விளைந்த காலத்தில் இவ்வகைகளை வயலில் சுலபமாய்ப்பொறுக்கலாம். சம்பார்க்கதிரும் கார்க்கதிரும் பார்க்கும்போதே தெரியும். கார் உதிர்வது குறைவு; மணியின் பருமனுக்குத்தக்க பளுவில்லை; அநேகமாய் மணி கதிரில் தூரம்தூரமாய்ப் பிடித்திருக்கும். பள்ளத்தாக்குகள் சிவப்பு நெல் வளர்ந்து விதை விருத்தியாவதற்குத் தகுந்தவையாயிருக்கின்றன. இதற்கு நாளதிகம். $3\frac{1}{2}$-மாதம் வகையுடன் இது கலக்கமுடியாது; 4-மாதம் 5-மாதம் வகைகளுடன்இதுசேரும்.

வெண்மையான நெல்வகையைக் கொழுத்த பூமியில் விளைவித்தால் சிவப்பு அரிசி என்னவாகவோ உற்பத்தியாவதாக எங்கும் அபிப்பிராயம். இவ்வாறான கொள்கை அமெரிக்கா நாட்டிலும் சகஜம். சிவப்புவகை முரட்டுத்தனமானதால்; அது வெள்ளைநெல்லைவிட மண்ணிலிருந்து ஆகாரத்தைக் விரைவாய்க் கிரகித்துவிடுகிறது. அவ்விடத்து நிலம் எளிமைப்படுவதினால் வெள்ளை அரிசி தக்கபடி விளைவதில்லை. இது எவ்வாறு விருத்தியாவதென்று பரீட்சிக்க சாஸ்திரிகள் பிரயத்தனப்பட்டார்கள். பலவகைகளைக் களத்தில் வெவ்வேறு இடங்களில் ஒப்படிசெய்வதாலும், வேலையாட்கள் கூடை முறங்கள் முதலியவைகள் தகுந்தவாறு பரிக்ஷிக்கப்படாமல் உபயோகப்படுத்துவதாலும் இவ்வாறு உண்டாகவேண்டுமென்று ஸ்திரமாய்த் தெரிகிறது.

பின்னும் அக்கம்பக்கங்களில் கார், சம்பா இவைகளை அடுத்தடுத்துப் பயிர்செய்வது முதற் காரணமென்று தெரிகிறது. சிவப்பு நெல் செடியிலுண்டாகும் மகரந்தம் சம்பா ஜாதி பெண்மலரில் சுலபமாய்ச் சேர்ந்து விதையைச் சிவப்பாக்குகிறது.

நிலத்தில் சிவப்புநெல் உதிர்ந்தால், அது கெடாமல் மறுபயிர் விளைவிக்கும்வரையில் மண்ணிலிருக்கும். இப்படிக் கலப்பினால்உண்டாகும் வகைகளுக்குத்தவிடு அநேகமாய்ச்சிவந்திருந்தாலும், அரிசி வெண்மையாகவாவது அல்லது கொஞ்சம் மங்கலடைந்தாவது இருக்கவேண்டும்.

சிவப்புச்சம்பா, செம்புலிப்பிரியன் முதலியவைகளை நன்றாய்த் தீட்ட இந்தக்கெடுதி நீங்குவதுண்டு. இவ்வாறு சில ஜாதிகளிருக்கின்றன. ஒருவகை நெல்லையே குடிகள் விளைவித்தால் இக்கெடுதி வராதென்றுநினைக்கலாம்; ஆனால் வருஷம் முந்நூற்றைம்பதுநாளும் பண்ணையாட்களுக்கு வேலைகொடுக்கவேண்டியதால், பலமாதங்களில்விளைவிக்கக்கூடிய பலவகை நெற்கள் குடிகளிடத்தில் இருப்பது அவசியம். பின்னும் நிலம்மட்டத்திற்குப் பொருந்தும்படி பலவகைநெல் இருப்பதும் இன்றியமையாதது. இவ்வித காரணங்களால் மண் வளப்பத்தினால் வெள்ளையரிசி சிவப்பரிசியாவதில்லையென்றும், அவையிரண்டும் வெவ்வேறு ஜாதியிற் சேர்ந்தனவென்றும் தெரியவருகிறது. பின்னும் வெள்ளையரிசி நெல்லையே தனியாய்ப் பொறுக்கி மற்றவகைநெல் கலப்பதற்கும் யாதொரு மார்க்கமில்லாதபடி செய்து விளைவித்தும் பார்த்ததில், வெள்ளை அரிசி சிவப்பு அரிசிஆகவேயில்லை.

தஞ்சாவூர் ஜில்லாவில் விளைவிக்கும் நெல் வகைகளில் குறுவை, கடப்பு, கார், சம்பா, பிசானம் என்று வகுக்கப்பட்டிருக்கின்றன. பின்னும் மழை ஆதாரத்தில் விளைவிக்கப்படும் வகைகள் புழுதிநெல் என்று பிரிக்கப்பட்டிருக்கின்றது. இப்பிரிவுகள் எந்த முறையைக் கொண்டு ஏற்பட்டிருக்கின்றனவோ தெரியவில்லை. குறுவையென்பது வயது குறைந்தவகை என்றால், கார் என்பது அறுவிடையாகும் காலத்தைக் குறிக்கிறது. பிசானமோ ஒருவகை நெல்லின் பெயரைக்குறிக்கிறது. கடப்பு என்றாலும், சம்பா என்றாலும் அர்த்தம் விளங்கவில்லை. அறுவிடையாகும் காலத்தை யனுசரித்துப் பெயர் ஏற்பட்டதோவென்றால் கடப்பு முந்தியும், சம்பா பிந்தியும் நடவாகிறது. பசலிமாசத்திய கடைசியில் கடப்பு நடப்படுகிறபடியால் இதற்குக் கடப்பு என்று பெயர் வழங்குகிறதென்றுசிலர்யுக்தியாய்ச்



சொல்லுகிறார்கள். இது தகுந்தவாறு பொருந்தவில்லை. இந்த ஜில்லாவில் விளைவிக்கப்படும் நெல் வகைகள் முன் கண்ட வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

அறுபதாங்குறுவை, கருங்குறுவை, வாற்குறுவை, செங்குறுவை, கோணக்குறுவை, அன்னதானக்குறுவை, மொட்டைக்குறுவை யிவை ஆனி 10 ல் விதைப்பு ஆரம்பித்து 30, 35 நாள்வயதில் நாற்று நடப்படும், ஐப்பசியில் அறுப்பு.

## கடப்பு.

சிலுவைக்கடப்பு, அதாவது கார், கறுத்த கடப்பு, அல்லது பூங்கார், [பூங்கார் மாத்திரம் புரட்டாசியில் அறுவடையாகும்.]

செங்கார், மணல்கார், கறுத்தகார், சண்டிக்கார், வாடஞ்சம்பா, பூம்பாளை, காடைக்கழுத்தான் அல்லது அனந்தன் சம்பா, அல்லது ராமன் சம்பா, நாற்று நாற்பது நாள்; மார்கழியில் அறுவடையாகத் தக்கவை.

சம்பா, ஆடி, ஆவணியில் நாற்றுவிட்டு 35 முதல் 45 நாள்வரையில் நடப்படும். தை மாதத்தில் அறுவடையாகும்.

வெற்றிலைச் சம்பா, பக்கிரிச்சம்பா, சிவப்புச்சம்பா, கம்பம் சம்பா, வாசனைச் சம்பா, மல்லிகைச்சம்பா, சின்னச்சம்பா, கிச்சிலிச் சம்பா, ஈர்க்கஞ்சம்பா, சீரகச்சம்பா, கட்டைச்சம்பா; முத்துச்சம்பா பனிக்காட்டுச்சம்பா, கொத்தமல்லிச்சம்பா, பொன்கம்பிச்சம்பா, மிளகுச்சம்பா, கருடன்சம்பா, சடைச்சம்பா, நைவிரிச்சம்பா, தங்கச்சம்பா, (மார்கழியில் அறுவடை) செம்புலிப்பிரியன், பிசாசனம், (மாசி மாதத்தில் அறுவடை.) செம்பாளை, தில்லைநாயகம், வெள்ளை, சிவப்பு, ஒட்டடம், பொடிதில்லை, காட்டழிவாணம், வெளுத்தகல்லுண்டை, சிவப்புச் சிறுமணியன், வெள்ளைச்சிறுமணியன் இதற்கு மன்னார்குடியில் சம்பா என்று வழங்குகிறது.

## புன்செயில்சாதாரணமாய் விளைவிக்கும் வகைகள்.

குத்தாளை, காட்டுக்குத்தாளை, வெள்ளைக்கூம்பாளை, புழுதிக்கார், கறுத்த கல்லுண்டை, நைவிரிச்சம்பா, கொடைவாளை, சூரைக்குறுவை, கல்லுண்டை.

முன் தெரிவித்ததுபோலவே தஞ்சாவூர் ஜில்லாவில் நெல்வகைகளைக் குருவை, கடப்பு, கார், பிசானம் என்று நான்கு பெரியவகுப்புகளாகப் பிரித்திருக்கிறார்கள். இவை முறையே மேட்டு நன்செயிலிருந்து பள்ளங்களில் சாகுபடியாகும் வகைகள். இவைகள் நன்செயில் விளைவிக்கும் வகைகள். இவைகளெல்லாம் ஒரு போக நிலத்தில் ஆனிமாதத்தில் நாற்று விடப்பட்டு ஆடி ஆவணி மாதங்களில் நடப்படும். ஆவணி விதைப்புப் பூசனிப்பூவென்று அம்மாதம் வருவதற்கு முன்னமே நாற்றுவேலை முடித்து விடுவார்கள். இந்த ஜில்லாவில் இரண்டாவதுபோகம் நடுவது வெகு குறைவு. குருவையும் காரும் இருபோக நிலத்திலேயே நடப்படும். இவற்றிற்கு மேட்டுப்பாங்கே உத்தமம். நிலம் எவ்வளவு காய்ந்து வெடிக்கிறதோ அவ்வளவுக்கும் ராசி அதிகம். ஆனியில் விதைத்து 18, 25 நாளைக்குள் ஆடியில் நட்டுப் புரட்டாசியில் 25, 30 நாளில் அறுக்கப்படும். குருவை, கருங்குருவை, வால்குருவை, கல்குருவை, கோணக்குருவை, பொன்கம்பி முதலியன இதில் அடங்கும்.

கடப்பு என்பது மங்கின சிவப்பு அரிசி. ஆனி 10-ல் விதைத்து 30-35 நாளில் பிடுங்கப்படும். ஐப்பசியில் அறுப்பார்கள். மணக்கத்தை, அல்லது சிறுவைகடப்பு அல்லது கார், கறுத்தகடப்பு, பூங்கார் என்பனவைகள் இவ்வகுப்பிற் சேர்ந்திருக்கின்றன. பூங்கார் புரட்டாசியில் அறுவடை.

கார் அரிசி சிவப்பு. இது ஆனி 10-ல் விதைத்து நாற்று 40நாளிற் பிடுங்கப்படும். கார்த்திகை மார்களி இவ்விரண்டு மாதங்களில் இவ்வகை அறுவடையாகும். செங்கார், கருங்கார், மணல்கார், கறுத்தகார். சண்டிக்கார் கார்த்திகையில் அறுவடையாகும் வகைகள். காடைக்கழுத்தான் அல்லது அநந்தன்சம்பா அல்லது ராமன்சம்பா, வாடம்சம்பா, பூம்பாளை இவைகள் மார்கழியில் அறுவடையாகும்.

சம்பா ஆடியில் விதைத்து 35-45 நாளில் நாற்றும் பிடுங்கப்படும். இது தை, மாசி மாதங்களில் அறுவடையாகும். வெற்றிலைச் சம்பா, பக்கிரிச்சம்பா, கம்பஞ்சம்பா, சிவப்புச்சம்பா, வாசனைச்சம்பா, மல்லிகைச்சம்பா, சின்னச்சம்பா, கிச்சிலிச்சம்பா, ஈர்க்குச்சம்பா, கட்டைச்சம்பா, முத்துச்சம்பா, பனிக்காட்டுச்சம்பா, வெள்ளைச்சம்பா, மிளகுசம்பா, தங்கச்சம்பா, கருடன்சம்பா, சடைச்சம்பா கைவிரிச்சம்பா, செம்பிலிப்பிரியன், வெள்ளைச் சிவப்புச் சிறுமணியன், சீதன் சம்பாமுதலியன தை மாதத்திலும், செம்பாளை, தில்லை, நாயகம், வெள்ளை ஒட்டடம், சிவப்பு ஒட்டடம், பொடிதில்லை, வெளுத்த கல்லுண்டை மாசி மாதத்திலும் அறுவடையாகின்றன. இதில் தங்கச்சம்பா மார்கழியில் அறுவடை யாகிறது. மன்னார்குடியில் சிவப்புச் சிறுமணியனைச் சம்பா வென்று சொல்லுகிறார்கள். குத்தாளை, காட்டுக்குத்தாளை, கூம்பாளை, குழிபிடிச்சான், வெள்ளைக்கடப்பு, கறுத்த கல்லுண்டை, புழுதிக்கார்முதலியன புன்செய்நிலத்தில் விளையக்கூடிய நெல்வகைகள். வேதாரணியம் பக்கத்தில் சீங்கணி, கல்லுண்டை, சூரைக்குருவை, கொடைவாளை முதலியன முன்குறித்த வகைகளுடன் சேர்கின்றன. அறுபதாங்குருவை யென்பது வயது குறைந்ததே தவிர அறுபதுநாளிலேயே விளையக்கூடியதல்ல. இது காலத்தில் 85-முதல் 90 நாளில் அறுவடையாகிறது. ஜலம் குறைவாகக் கிடைக்கக்கூடிய எல்லா நிலத்திலும் குருவை நடலாம். மற்றக்குருவை வகை அறுக்கச் சாதாரணமாய் நாலு மாதம் செல்லுகிறது. கருங்குருவையைவிடச் செங்குருவைக்கு வயது குறைந்திருக்கும்.

கோணக்குருவை நாற்றுக்குப் புழுதி அவசியம். இதுசேற்றில் நன்றாய் வருவதில்லை. குருவைக்கு மழையும் ஜலமும் கொஞ்சமாயிருந்தாலும் எரு அதிகம் வேண்டும். நிலத்தின் சத்தைக்குறைக்கும் குணம் இவ்வகைக்கு உண்டு. சொர்ணவாரிக்குருவை இதிற் சேர்கிறது. கடப்பு வகைகளில் வெள்ளைக்கடப்பு நிலத்தை இளைக்கச்செய்யும். வெள்ளம், காய்ச்சல் இவைகளைப் பொறுக்கும். அறுவடையாகும்போது வெள்ளத்தில் கதிர்முளைப்பதில்லை. பூங்கார்என்னும்வகை குருவைகாலத்திலும் குருவை அறுத்தநிலத்தில் இரண்டாம்போகமாகவும் நடப்படும். கொழுமைநிலத்தில் நன்றாய் விளைகிறது. நிலத்துச் சத்து வாங்கும். எருஅவசியம். வைக்கோல் மேன்மையல்ல. குருவை நடும் நிலத்தில் நட்டால் உமி சன்னமாகிறது. வாடஞ்சம்பா பள்ளந்தாங்கும். இது செங்கற்பட்டில் புன்செய்ப்பயிராக விதைக்கப்படும். மழையில்லாதபோது வாடிவாடியே சாகாமலிருக்கும். ஜலம் வந்தபிறகு தளிர்த்துப் பக்குவமாகும். ஆகை

யால்தான் இதற்கு வாடம்சம்பா என்று பெயர். அருப்புக்காலத்தில் மழையில் விதை முளைப்பதில்லை. சண்டிக்கார் மட்டமானாலும் அறுவடைக்கு மார்கழியில் வருகிறதினால் பிரயோஜனமாயிருக்கிறது. வைக்கோல் தாழ்வு, காய்ச்சல் பொறுக்கும். வெள்ளம் தாங்கும். உமி மந்தம், 12 படி நெல்லுக்கு 5 படி அரிசி காணுகிறதாயிருக்கிறது.

சம்பா வகைகளுக்கு வடிகால் அவசியம். சிவப்புச்சம்பா அதாவது சிறுமணியன் எல்லா நிலத்திற்கும் ஒத்திருக்கிறது. இதை எப்படிப் பாதுகாத்தாலும் மாருலைத்தரும். வெள்ளம் தாங்கும். காய்ச்சல் பொறுக்கும் கதிர் ஒன்றுபோல் விடும். வயலில் விதை கொட்டுண்டுபோம். வெயில் வராததற்கு முன்னமே அறுப்புவேலை நடக்கவேண்டும். இதில் நல்லகுணங்கள் அநேகம் அமைந்திருக்கின்றன. சடைச்சம்பாவைத் திருவாரூர்ப்பக்கங்களில் அனந்தகுடி சம்பா, அல்லது அந்தக்குடி சம்பா என்கிறார்கள். இதற்கு ஜலம் குறைவாக வேண்டும். தாளடி இரண்டாவது போகத்திற்கு உதவுகிறது. இது சாதாரணமாய் மற்றப்பயிர்களைப்போல் உதிர்வதில்லை. இதற்கு அதிகக் காய்ச்சல் இருந்தால் நன்றாய் உதிரும். செம்பிலிப்பிரியன், இதற்கு உரமும் உழவும் அதிகம் வேண்டும். நடுத்தரமான நிலத்திலும் நன்றாய்க் கதிர் வாங்குகிறது. விலையும் தக்கபடி விற்கும். உமி குறைவு, 12 படி நெல்லுக்கு 7 படிவரையில் அரிசி காணும். பச்சரிசிக்குப் பக்குவமாகும். பொங்கற் சம்பா, இது இரங்கூனிலிருந்து சில வருஷங்களுக்கு முன் வந்தது. இதை அறுத்துப் பொங்கற் பண்டிகை பண்ணலாம். சிவப்புஉமி, வெள்ளை அரிசி; நன்றாய்க் கிளைக்கிறது. காய்ச்சல் பொறுக்கும். மேனியும் குறைவில்லை. அதுவும் செம்பிலிப் பிரியனைப்போல் அதிக அரிசி காண்கிறது. தோகைச் சிறுமணியன், இலை அகலமாயும் கதிருக்கு உயர்ந்துமிருக்கும். இது பள்ளங்களில் சிறுமணியைவிட 10 நாள் முந்தி அறுவடையாகும். வெள்ளைச்சம்பாவில் கதிர் மிகக்குறைவு. மணி உமியால் நன்றாய் மூடியிருக்கும். சிவப்புச்சிறுமணியனுக்கும், தோகைச் சிறுமலியனுக்கும் இக்குணம் ஒருவாறு படிந்திருக்கும். தடிச் சம்பாவகை பள்ளங்களில் விளைவிக்கப்படுகிறது. தாள் ஜலமட்டத்திற்கு வேர்விட்டுக்கொண்டேயிருக்கும். இவ்வேர் மண்ணில் நிலைக்



காமல் ஜலத்தில் அலைசிக் கொண்டிருப்பதுண்டு. பொன்கம்பிச் சம்பா வயலில் உதிர்வதில்லை. களத்தில் கஷ்டமின்றி உதிர்ந்துவிடும். கிச்சிலிச்சம்பா, வெகு நாணயமுள்ளது. தாள் உறுதி, வித்து உதிர்வதில்லை.

பிசானம், இதில் வித்து பெரியது, கொட்டுண்டு போகும். சாம்பல் உரமே தகுந்தது. சாணம் பொருக்காது. மழைக்குப் பிந்திப் பூக்கும். குருவையுடன் ஒட்டடம் கலக்கப்படும். அறுவடை தடைப்பட்டால் கதிர் உடைந்து விழும். மழை அதிகமுள்ள மடகாஸ்கர் தீவில் புன்செய்யாக விளைவிக்கப்படும். ராஜாபாட்லி என்னும் வகையிலிருந்து காரோலினா உண்டானதாகத் தெரிகிறது. இரண்டாவது ஸ்தானத்தில் ஜப்பான் நெல் இருக்கிறது. இதைக் கின்ஷூ என்றுசொல்லுகிறார்கள். அமெரிக்காவில் ஹாண்டுராஸ் (Honduras) வகை நெல் அதிகம் ஒருவிதையில் முளைத்த செடி 26 கதிர்கள் கண்டிருக்கின்றன. ஆனால் மணி சிறுத்திருக்கும்.

ஸையாம் தேசத்திற்கு இந்தியாவிலிருந்து நல்லவகை அரிசி ஏற்றுமதியாயின. இவைகளையெல்லாம் விலையில் தோற்கடிக்கும்படியான நாஜூன் என்னும் வகை பாங்காக் (Bankok) என்னும் பட்டணத்திலிருநது சாப்பாட்டுக்கு விற்கிறது. ஸையாம் அரிசி மற்றக் கண்டங்களுக்கு அதிகமாய் ஏற்றுமதியாகிறது. மழை ஆதாரத்தில் மலைகளில் விளையும். மலைகளில் விளையும் வகைகளுக்கு ஜலம் அதிகமாய் வேண்டியதில்லை. இந்தியாவிலுள்ள பாங்கோரா என்னும் ஜில்லாவில் ஜட்காசாலி யென்னும் பேர்த்தியான வகைகள் வெவ்வேறு விளைகின்றன. இவைகளுக்கு ஜலம் மிகக்குறைவாக வேண்டும்.

இப்போது பாங்கு என்று விருத்தியாகும் நெல் அந்த ஜில்லாவிலிருந்து வந்ததாகத் தெரியவருகிறது. இதுநாணயமானது. இதற்கு ஜலம் அதிகம் வேண்டாததுடன் மேற்பார்வையும்குறைவாக வேண்டுமாம். சீனாவில் விளையும் ஒரு வகைநெல் மிகச் சிரேஷ்டமாக மதிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் முதல் முதல் இந்தியாவின் பாட்னா அரிசியையே சாப்பிட்டு வந்தார்கள். பின்பு ஜாவா அரிசியை வாங்கினார்கள். இப்போது ஜப்பான் அரிசியே அங்கு அதிகமாகச் செலவாகி

றது. ஆனதுபற்றி இந்தியாவின் மிகச்சிரேஷ்டமாய் மதிக்கப்படும் பாட்னா அரிசி அங்கு தள்ளுபடியாய் விட்டது. பின்னும் எகிப்து நாட்டிற் சேர்ந்த செளடான் அரிசி இந்தியாவிலும் கண்டியிலும் கிடைக்கும் வகைகளைவிட மேன்மைப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படிக்கொத்த விதைகளை வரவழைத்துப் பயிர் செய்து பார்க்க வேண்டும். சில நெல்வகைகள் ஏழ்மை நிலங்களிலும் நன்றாய் விளைந்து சிகணத்தைக் கிரகிக்கிறது. அவ்வாறான நெல் ஜப்பானில் ஒன்று இருக்கிறது. நாகப்பூரிலிருந்து வரவழைத்து சைதாப்பேட்டையில் விளைவித்த சுமார் 20 நெல் வகைகளில் சினியா என்னும் வகை இப்படிக்கொத்ததாயிருக்கிறதாம்.

அதிகமாயுள்ள ஒட்டடமும் சூரைக்குறுவையும் பொரிக்குப் பேர் எடுத்தவை, பொரியில் சிவப்பு நிறம் உதவாதென்று பெங்களூரிலிருந்து அவசாசி வியாபாரிகள் பொரிக்காக வெள்ளை அரிசி வகையை அதிகமாய் வரவழைக்கிறார்கள். ஜப்பானியர் ஷீர்தாமா என்னும் வகையில் மாவு நிறைந்திருக்கிறது.

வெள்ளை ஒட்டடம், கெருடன் சம்பா, தில்லை, பிசானம், சிறுமணியன் முதலியவை ஐந்து மாதத்திற்கு அதிகப்பட்டவகைள். நாற்று நடவுக்குப் பக்குவமானவை குளத்து உள்வாய் நீர்ப்பிடிப்பு நிலங்களில் குளவாளை, குத்தாளை, அரியான், சித்திரைக்கார், குழியடிச்சான், குழிதகர்த்தான்; வெள்ளைச்சித்திரைக்கார் முதலியன. மதுரை ஜில்லா இராமநாதபுரம் இலாகாவில் பயிராக்கப்படுகின்றன. அரியான் ஆறு மாதத்து வித்து. பெரிய அரிசி மட்டை சிவப்பு நிறம். போஜனம் சுகம். குத்தாலை ஐந்து மாதம். சொற்பச்சிறியது. "குத்தாலைச் சமைத்து உற்றாருக்குப்போடு" என்னும் பழமொழியிருப்பதால் போஜனம் கெட்டதல்ல.

சித்திரைக்கார் உருண்டைநெல், வெள்ளை அரிசி. குழியடிச்சான் அல்லது குழிதகர்த்தான் என்பது சித்திரைக்கார் போன்ற சொற்பம் பெருத்த நெல். இவ்விரண்டும் அரிசி சமத்துவம். இவ்விரண்டையும் கலந்து விதைப்பதுமுண்டு. மிளகுக்கு இரண்டாவதாகச் சாதம் மதிக்கப்படும். குழியடிச்சான் அல்லது குழிதகர்த்தான், சித்திரைக்கார் போன்ற சொற்பம் கருமை நிறமுள்ள நெல்,



அரிசியிரண்டும் சமத்துவம். இவையிரண்டும் கலந்து விதைக்கலாம். அப்படிக்கலப்பதால் எவ்வித பாதகமுமில்லை. நான்குமாதவித்து சாப்பாட்டுக்கு இந்தப்பக்கத்தில் மிளகு சம்பா இல்லாதவர்கள் அதிகமாக உபயோகிப்பார்கள். மட்டுச்சிவப்பு நிறமுள்ள அரிசி. வெள்ளைச் சித்திரைக்கார், சித்திரைக்கார், குழியடிச்சான் இவற்றிற்கு ஒரு தண்ணீர்ப்பாய்ச்சல் குறைச்சல். வெண்மையரிசி.

ஆனிமாதம் ஆடிமாதம் முதல்தரமான பட்டங்கள், ஆவணி மாதம் இரண்டாந்தரம். இந்தத்தினுசுகள் ஒரு ஏகருக்குப்பதினைந்து கலம் விளையும். ஒருகலம் என்பது பட்டணம்படிக்கு 90. ஒரு ஏகருக்கு 24 படி அதாவது இங்கு வழங்குகின்ற 4 மரக்கால் விதை விதைக்கவேண்டும். விதை யகப்படாவிடில் சுமாராய் 3 மரக்காலும் விதைக்கலாம். மழைபெய்யாமற் புழுதியாயிருக்கும்போதே விதைத்துவிடலாம். ஒருமாதம் வரை மழை பெய்யாதிருந்தாலும் புழுதிக்குள்ளிருந்து மழைபெய்தவுடன் முளைக்கும். அற்பமழை பெய்தால் பயிர் வேர்கொள்ளாமற் போனாலும்போகும். அடுத்தடுத்து சிறுமழையாய்ப் பெய்துவிட்டால் வேரூன்றிக்கொள்ளும். பலமில்லாத உழவு மாட்டை யுடையவரும், அதிகமான உழவு வேலையுள்ள பலமான மாட்டையுடையவர்களும், மேற்கண்டவிதமான ஈரமற்ற புழுதியிலேயே விதைத்து விடுவதுண்டு. இப்படி விதைப்பதினால் சில வருஷங்களில் கோடைமழை யில்லாவிடில் களை யதிகப்படும். மழை பெய்த நல்ல ஈரத்தில் விதைப்பது மிகவும் நல்லது. முளைத்த பயிர் முக்காலடி உயரம் வளர்ந்து களை கொத்திக் காய்ந்து மழைபெய்து கிளை வெடித்துப் பயிரின் கழுத்தளவு நீர் பிடிக்குமேயானாலும் ஒரு கஜ உயரம் தண்ணீரில் சித்திரைக்கார், குழியடிச்சான், நல்ல பலனைக்கொடுக்கும். குத்தாலம், அரியான் இவைகளுக்கு இன்னும் கொஞ்சம் ஜலமதிகப்பட்டாலும் குற்றமில்லை. தண்ணீர் அதிகப்படாமலும் பூமி தெரியாமலும் சுமார் $\frac{3}{4}$-அடித் தண்ணீரிலே யிருக்குமானால் மஹா உத்தமம். இந்தத் தினுசுகள், நன்செயிற் பயிரிடலாம். புழுதியில் விதைக்கலாம். புழுதியில் ஈரவிதைப்பாயும் விதைக்கலாம் தொளி உழுதுநாற்று விதைக்கிற மாதிரி விதைக்கலாம். நாற்றுப் பாவிப் பிடுங்கி நடலாம். அறுபதாங்கோடை, வெள்ளைச்சித்திரைக்

கார்,புன்செயில் அதிக மழையில் விளைந்துபோம். ஆவணி,புரட்டாசி மாதங்கள்தான் இவற்றிற்குப் பட்டம். சித்திரைக்கார், குழியிடிச்சான், தை, பங்குனியன்றி மற்ற எல்லா மாதங்களிலும் நன்செயிற் பயிரிடலாம்.

கலிகம் சம்பா சிவப்புத்தவிடு இதுவும் செம்பாளையும், அருஞ்சோதியும் மேனிகாணும். பட்டரைச் சம்பா உதிர்வதில்லை. இறக்கமாட்டாள் கதிர் விளைவதில்லை.

தஞ்சாவூர் ஜில்லாவில் நீர்பிடிப்பு நிலங்களில் காட்டழிவாணன், மடுமுழுங்கி, ஒட்டடம் முதலியவை விளைவிக்கப்படுகின்றன. உடுமலைப்பேட்டையில் அழகிய மணவாளனென்றும், செங்கற்பட்டில் நீலஞ்சம்பா, ரங்காநாயகன் என்றும், கள்ளக்குறிச்சியில் ராமபாணமென்றும், திருநெல்வேலியில் வல்லரங்கன் என்றும் அநேக வகைகள் உண்டு. மசளை, குளவாளை இவைகளும் உதவுகின்றன. திருவாங்கூர் நாட்டில் வடிபாஜலம் பிடிப்பு இடங்களிலுள்ள நீரை செவுட்டல் என்னும் சக்கிரத்தால் வெளியேற்றி முண்டகம் என்னும் நெல்லைச் சேற்றில் உழட்டி முழுந்துக்கொன்று விழும்படி விதைப்பார்கள். உடனே நீர் பெருக்கவரும் விதையிலுள்ள காற்றினாலும் களிமண்ணிற் சேர்ந்திருக்கும் காற்றினாலும் முளைத்து ஜலத்தைப் பிளந்துகொண்டு 5, 6 அடி வரையிலும் வளர்ந்து உயர்ந்து காய்கிறது. தோணி போட்டு அறுவடையாகும்.

களர் நிலத்தில் பின்கண்ட வகைகள் அங்கங்கே விளைவிக்கப்படுகின்றன. குருவை, சண்டிக்கார், சடைச்சம்பா, வெள்ளைச்சிறுமணியன், முத்துப்பேட்டை வகையரு இடங்களில் விளைவிக்கப்படுகின்றன. செங்கற்பட்டு, சித்தூர் ஜில்லாக்களில் களர்பாளையும், மோசனமும், திருநெல்வேலியில் வெள்ளை அரிக்கிராவியும் காடைக்கழுத்தானும், பனைமுகரியும், வாலசிசி முண்டானும், மதுரையில் வெள்ளைக்கட்டையும், நெல்தகரும், உவர் உண்டானும், கோயமுத்தூரில் தியாகராய சம்பாவும், கர்நூலில் பிச்சவாரியும் சென்னங்கியும், நெல்லூரில் ஈஸ்வர கோரையும், மசூலிபட்டணத்தில் பின் ஆட்ரக்கட்டாவும், கள்ளிக்கோட்டையில் ஒரிப்பாண்டியனும் விளைவிக்கப்படுகின்றன.



சாதாரணமாய் நெல்லுக்கு உவர் சலம் நல்லது. நட்டு வேரூன்றிப்பயிரான பின்பும் விதைமுளைத்த பின்பும் உப்புஜலம் பாய்ந்தால் கெடுதியில்லாமல் விளைவு அதிகப்படுகிறது. ஆபிரிக்காவின் சௌடான் நாட்டில் அடி மண்ணில் வடிகால் அமைக்கப்பட்ட இடங்களில் கேவலமான உப்பு ஜலத்தையும் நெல் விளைவுக்கு உபயோகப்படுத்துகிறார்களாம்.

சித்திரைக்கார், சிராளிச்சம்பா கோடையில் மதுரையில் விளைவிக்கப்படுகின்றன.

திருநெல்வேலியில் ஆனைக்கொம்பனும், திண்டுக்கல்லில் சித்தயன்கோட்டைச் சம்பாவும், கோயமுத்தூரில் கோபிசெட்டிபாளயச் சம்பாவும், கடப்பையில் வல்லூர் பிசானமும், பல்லாரியில் கௌரிசன்னக்கியும், நெல்லூரில் பிசானமும், கிருஷ்ணா, கோதாவரியில் சிட்டி முத்தியாலும், ராஜனாலும் சிரேஷ்டமானவை.

சுதேசமித்திரன்.

# ஜப்பான் விவசாயம்.

## மண்ணும் எருவும்.

———*———

(இந்த "வியாசம் தென்னிந்திய விவசாயம்" என்ற பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.

ஜப்பான் தேசம் பாஸிபிக் சமுத்திரத்தின் வடபாகத்தில் 30-45 டிக்ரி லாடிட்யூ (Latitude) டில் நிலைத்திருக்கிறது. இத்தேசம் மலைகளால் நிறையப்பட்டிருக்கிறது. மலைகளின் உயரத்தில் பைன் (Pine) மரம் விசேஷம். பள்ளத்தாக்குகளே விவசாயத்துக்குத் தகுந்த இடங்கள். இங்கே பருத்தி, நெல், வள்ளிக்கிழங்கு முதலியன விளைவிக்கப் படுகின்றன. மலைச்சார்பில் பலவிதமான அழகிய புஷ்பங்கள் வளர்ந்தாயிருக்கும்.

எரிமலையால் மண் உண்டானதாக சாஸ்திரிகள் தெரிவிக்கிறார்கள். மலைமேல் மண் மிருதுவான மங்கலடைந்த களிமண்ணாயிருக்கிறது; மிக்கசத்துள்ளதல்ல. பள்ளத்தாக்குகளோவெனில் 12-15 அடி ஆழமுள்ள கருமையடைந்த தளர்ந்த வண்டல். இதனடியில் நீர் இறங்காத தன்மையுடைய வரிசை இருக்கவேண்டுமென்று மதிக்கப்படுகிறது; ஏனெனில் ஊற்றுக்கண்கள் விசேஷமாயிருக்கின்றன. அதிகமாயும் அடிக்கடியும்பெய்யும் மழையாலும் இவ்வூற்றுகள் இடைவிடாமல் போஷிக்கப்படுகின்றன.

இவ்வாறு மேன்மையான சாதனங்கள் இயற்கையில் அவ்வூரில் அமைந்திருந்தாலும், தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ளவர்கள் போலக் கிடைத்தது போதுமென்று கவலை செலுத்தாமல் இருப்பது போலில்லாமல் ஜப்பானியர் தங்கள் புத்தி யுக்தி உபாயத்தால் இயற்கையிற் பொருந்தியிருக்கும் சாதனங்களிலிருந்து எவ்வளவு பலனை யடையக்கூடுமோ அவ்வளவும் அடைகிறார்கள். இவர்கள் அடையும் பலனைப்பார்த்து வித்யாவல்லபத்திலும், சாஸ்திர அனுபவத்திலும் மேன்மைப்பட்ட ஐரோப்பியர் வெட்கிப்போம்படியிருக்கிறது. ஆங்கிலேயர் "அதிக புல் இருந்தால் அதிக மாடு" என்றும், "அதிக மாடு இருந்தால் அதிக எரு" வென்றும், "அதிக எருவானால் அதிக மாசூல்" என்றும் கோவையாய்ச்சொல்ல, ஜப்பானியர் கொள்கை என்னவெனில்—எரு போடாதபடி எந்தப்பயிரும் விளைவிக்கப்படாது. மண்ணில் விளைவித்த பதார்த்தத்தில் நீரும் ஆகாய தத்துவமும் இயற்கையிற் கிடைக்கிறது. மற்றதைக்குடியானவன் நிலத்துக்கு எருவாற் கொடுக்கவேண்டும். புல் விளைவித்து, மாட்டை வளர்த்து, சாணத்தின் மூலமாய் தானியத்தை விளைவிப்பதற்குப் பதில் தானியத்தை மனிதனே தின்று கிடைக்கும் மலத்தை எருவாக்கினால் விளைவு விஷயம் சுலபமாகுமல்லவா" என்கிறார்கள்.

பௌத்தமதக் கொள்கையாலும், குடிகளுக்கு நிலம் சொற்பமாக இருத்தலாலும் மாடுகளை இங்கு வளர்க்கச் சரிப்படுவதில்லை; ஆகையால் ஜப்பான் தேசத்தில் எருவுக்கு மனிதனே முக்கிய ஆதாரம். இவர்கள் முக்கியசுத்தமுள்ளவர்களானபடியால் இவ்வெருவை மிக்க சாக்கிரதையாய்க் கையாடுகிறார்கள். ஜப்பானியர் வீட்டில்



கக்கூஸ் இருப்பது அவசியம். இது தகுந்தபடி சுண்ணாம்பு சாந்து பிசைந்து வர்ணமடித்து மெருகுதைலம் மிகப்பூசி சுத்தியாயிருக்கிறது. இதன் தரையில் ஒரு துவாரம் செய்து அதனடியில் ஓர் பாத்திரத்தை வைத்து அதில் மலம் விழும்படி கொல்லைக்குப்போவார்கள். எவ்விதமான அசங்கியமும் இங்கு கிடையாது. அடியில் வைத்த தொட்டி அல்லது பாத்திரத்துக்கு இரண்டு பிடியிருந்து மூங்கிலிற் கோத்து எடுத்துப்போகப் பக்குவப்பட்டிருக்கும். சில வேளைகளில் தொட்டியில் கூளம்போட்டு இருக்கும். வயலில் ஓர் மூலையிற் புதைக்கப்பட்டிருக்கிற ஒரு பெரிய ஜாடியில் மலம் கொட்டப்படும். சாடி 10 கன அடி அளவுண்டு. வாய் தரைமட்டம் புதைக்கப்பட்டிருக்கும். இந்தச்சாடியிற் சலம்விட்டு, துடுப்பாற் கலக்கப்படும். மழைக்காலத்தில் இதை மூடிவைப்பதுண்டு. அது சுண்டி குறையக் குறைய புதிய மலமும் சலமும் சேர்க்கப்படும். இவ்வாறு 2, 3 வாரம் வைத்து எருவுக்கு உபயோகிப்பார்கள். புதிய மலத்தை நேராகப்பயிருக்கு உபயோகிப்பதேயில்லை. மூத்திரத்தைப்பற்றி இவர்கள் கவனிப்பதில்லை. நீர் பாய்ச்சும் நீரில் கிடைக்கும் வண்டலும், வழியோரங்களில் பிரயாணிகள் உபயோகத்துக்குப் புதைத்துவைத்த ஜாடிகளிற் கிடைக்கும் எருவுமே உபயோகமாகின்றன—ஆக ஜப்பான் தேசமுழுவதும் கண்ட இடத்தில் மலம் சிதறி நாற்றமடிக்கும் வழக்கம் நம்மூரில் இருப்பதுபோலக் கிடையாது.

ஜப்பானியர் மீன் சாப்பிடுவது மதக்கோட்பாட்டுக்கு விரோதமில்லையாதலால் நண்டு, நத்தை, இறால், மீன் இவைகளை அதிகம் சாப்பிட அவர்களின் எருவும் சத்துள்ளதாக இருந்து விளைவை அதிகப்படுத்துகிறது. விளைவுப் பொருளில் சேதமாகும் செத்தை, பதர், கூளம், ரஸ்தா ஓரங்களிற் கிடைக்கும் குதிரைச்சாணம், சிவி பகுளம்புத்தூள், மயிர், இலை, வீட்டுக்குப்பை முதலியவைகளைக் குவியல் குவியலாகச்சேர்த்து சலத்தால் நனைத்து அடிக்கடி திருப்பிக் கொடுக்க, சீக்கிரத்தில் மட்கி எருவாகிறது. இதனுடன் கிளிஞ்சல் முதலியனவும் சேர்க்கப்படும். வைக்கோல் அதிகப்படும் சமயத்தில் அதைத் தீயெரித்து அதன் சாம்பலை வயல் முழுதும் பர

வும்படி செய்வார்கள். இதுவரையிலுமே புழுங்கிய மலத்தை ஜலத்தோடு கலந்து சால்சாலாய் விதைத்து, மேல் மண்ணால் கொஞ்சமாய் மூடிய விதைப்பு நிலத்தில் தகுந்தபடி ஊற்றுவார்கள். ஜப்பான் பட்டணங்களில் அநேக படவுகளும், வண்டிகளும், குதிரைகளும் எருவை எடுத்துக்கொண்டு கிராமத்துக்குப்போகும்; திரும்பி வரும்போது காய்கறிகள் சுமந்துவரும். நம்மூரில் தானியம் பேட்டைகளுக்குப்போனால், எரு கிராமங்களுக்கு வருவதில்லை. பின்னும் காடுகளிற் கிடைக்கும் முக்கிய எருவாகிய எலும்பு பிண்ணாக்கு இவைகள் அயல் நாட்டுக்கு ஏற்றுமதியாகின்றனவே! இது தேசக்ஷேமமா என்று ஜப்பானியரைக் கேட்கவேண்டும்? ஜப்பானியர் சாகுபடி செய்வது, முதலை நிறுத்தி வட்டியை உபயோகிப்பதுபோலும் நாம் சாகுபடிசெய்வது வட்டியை எதிர்பார்க்காமல் முதலையே கொஞ்சம் கொஞ்சமாய் உபயோகிப்பது போலிருக்கிறது. இவர்கள் விவசாயத்தில் பயிர் போதையாகித்தழைத்துப் போகிறதென்பது கிடையாது. தக்கபடி விளைந்து ஜனங்களைப் போஷிக்கிறது. இத்தேசம் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐர்லாந்துக்குச் சமமாயிருந்த போதிலும், அவ்வூரிலிருப்பதைவிட அதிகமான ஜனம் ஜப்பானி போஷிக்கப்படுவது மல்லாமல், தானியத்தைஏற்றுமதியும் செய்கிறார்கள். அவர்கள் உண்வு இறக்குமதி செய்வதேயில்லை.

ஆழ உழவு ஜப்பானில் திருப்திப்படும்படி நடந்தேறி வருகிறது. ஒரு தையற்காரன் துணியை வைத்துக்கொண்டு எந்த மாதிரி உடை வேண்டுமோ அதைச்செய்வதுபோல், ஜப்பானில் நிலம் இஷ்டப்பிரகாரம் மாறி வருகிறது. ஒரு நிலத்திற் கோதுமை விளைந்திருக்கும். 8 நாள் பிறகு கோதுமை அறுவடையாகிப் பாதி பாக நிலம் நன்செய்க்குப் பக்குவப்பட்டிருக்கும். மண் எரு சேற்றில் முழங்கால் ஆழம் பதிந்து நெல் நாற்று நடப்படும். மற்றப்பாதி புன்செய்யாக நன்செயைவிட 2-$2\frac{1}{2}$-அடி உயர்ந்திருக்கும். இது பருத்தி வள்ளிக்கிழங்கு முதலியன நடப்பக்குவமாயிருக்கும். சாதாரணமாய் நன்செய் நாலுபுறமும், புன்செய் மத்தியிலும் இருக்கும். நன்செயில் நீர்மட்டம் வெகு திருத்தமாயிருக்கும். இவ்வேலை முழுவதும் குடியானவனும், அவன் சமுசாரமுமே நடத்துவார்கள். இவ்வாறு இவர்கள் இஷ்டப்பிரகாரம் நன்செயைப் புன்செய்யாக்கவும், புன்செயை நன்செய்யாக்கவும் மண் வெண்ணெய்போல், நயத்து இந்திரவஸ்து எருவுடனும் தாதுவர்க்கங்களுடனும் கலந்து இருந்திருக்கவேண்டும்.



இவ்வாறு எருவும் ஆழ உழவும் இருப்பதுடன் ஒவ்வொரு பயிரும் சால்சாலாக விதைக்கப்படும். இதனால் ஒரே நிலத்தில் ஒரே பட்டத்தில் பல பயிர்களை விளைவித்து, ஒவ்வொன்றும் வேறு வேறாக மாசூல் சேர்க்கப்படும். பயிர்மாற்றலும் இதனால் பக்குவப்படுகிறது. கோதுமை 24-26 அங்குல தூரத்திலிருப்பதாக எண்ணுவோம். இதன் மத்தியில் ஏதாவது முள்ளங்கி இருந்து பிடுங்கியிருக்கவேண்டும். மத்திய நிலம் ஆழமாய் உழப்பட்டு, மண் கொத்தவும்படுகிறது. கோதுமை முற்றும்போது, அதன் மத்தியில் கடுகு அல்லது பட்டாணி விதைக்கப்படும். கோதுமை முற்றி அறுவடையான உடனே அதன் வேர்களைக் கொத்திக் கிளறி கிழங்குப் பயிர் வருகிறது.—ஆக வருஷமுழுவதும் ஏதாவது ஒருபயிர் வந்துகொண்டேயிருக்கும். இவ்வாறு ஒரு நிலத்தில் பாதிப் பாகமே ஒவ்வொரு தரமும் பயிரிடப்படும். இதனால் எருவை எப்போதும் உபயோகித்துக்கொண்டே யிருக்கலாம். வேலை வருஷ முழுவதும் இருக்கும் ஆகையால், அவர்களுக்கு சோம்பித்திரிவதற்கு ஒழிவில்லை. இம்மாதிரி யிருந்ததினால், அவர்கள் முன்னுக்கு வந்து பெரும் மரியாதையை பூலோகத்து எல்லா நாட்டிலும் பெற்றார்கள். நாமும் அவ்வாறு மரியாதையடைய வேண்டுமானால், அற்பமான எந்த விஷயத்தையும் வேலையையும் அவமதிக்காமல் ஊக்கத்துடன் முயற்சிப்பது இன்றியமையாதது.

---

## எலும்பு.

(இதுவும் "தென்னிந்தியா விவசாயம்" என்ற பத்திரிகையிலிருந்தே எடுக்கப்பட்டிருக்கிறது).

எலும்பு தொடப்படாத வஸ்துவென்று இந்து நாகரீகத்தில் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. எலும்பைத் தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டுமென்ற கொள்கை நமதுதேசத்தில் குடிகொண்டிருக்

கிறது. ஆனதுபற்றி கேவலம் பறையர் சக்கிலியர் இதைக் கையாடவிட்டிருக்கிறோம். இதன் விஷயமான ஞானம் பொதுப்படையாய் தேசத்திலேயே குறைந்திருக்குமானால் பறையருக்கும், சக்கிலியருக்கும் எவ்வளவு ஞானமிருக்கும்? இவ்வாறிருக்கும் பறையர் சக்கிலிகள் கேவலம் ஏழ்மையடைந்திருப்பதால், அயல்நாட்டு வியாபாரம் செழித்தோங்கி நடந்தேறுகிறது. நம்முடைய எலும்பு நமது தேசத்துக்கு உபயோகப்படாமலிருக்க இலங்கைத்தீவு, நெட்டால், ஆஸ்திரேலியா முதலிய தூரதேசத்துக்குச்சென்று உபயோகப்படுகிறது. நமக்கு மூடத்தனம் இருக்குமளவும் அயல்நாட்டு இவ்வியாபாரம் பிரயலப்படுவதற்கு யாது தடை? வருஷத்தில் சுமார் 10 லக்ஷமணங்கு எலும்பு வியாபாரம் நடக்கிறது. இவை என்னத்துக்குப் போகிறதென்றுசில கிராமவாசிகள் கேட்க, வேறுசில அஞ்ஞானிகள் சர்க்கரைசெய்வதற்கென்று தெரிவிக்கிறார்கள். எலும்பு சர்க்கரையாகவேமாட்டாது. ஆனால் எலும்புக்கரி சர்க்கரை சுத்தி செய்வதற்கு சொற்பம் உபயோகப்படுகிறது. பெரும்பான்மையாய் இது எருவுக்கென்றே கொண்டுபோகப்படுகிறது. இவ்வளவு ஆயிரம் மைல் போவதில் உண்டாகும் கப்பற் செலவு, ஏஜெண்டு கமிஷன், வியாபாரிலாபம் இவைகள் உண்டாகியும், அவ்வூரார் தக்க விலைகொடுத்துவாங்கி லாபமடைய நாம் கையிலிருப்பதை நழுவவிட்டுக், கதைகளும், காலக்ஷேபங்களும் நடத்துவது தேசத்துக்குத் தகாததாயிருக்கிறது. நாம் நமது கிராமங்களில் உண்டாகும் எலும்பைச்சேகரித்து எருவாக உபயோகிப்பது அவசியம்.

இவ்வாறு கொள்கைகொண்டு எலும்பைச் சேகரிக்கலாமென்று பிரயத்தனப்பட்டாலும், எலும்பு கிடைக்கவில்லையென்று முறையிடுகிறார்கள். அயல்நாட்டில் இதன்வியாபாரம் அவ்வளவுவேரூன்றியிருக்கிறது. விலையையும் அவர்கள் ஏற்றியிருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கும் விலையைவிட நாம் அதிகம் கொடுத்தாலும் சக்கிலியர் வியாபாரிகளுக்கு ஒப்பந்தம் செய்திருப்பதால் அவர்கள் நமக்கு எலும்பு கொடுக்கமாட்டோமென்கிறார்கள். இதற்கு விமோசனமென்ன—சற்று யோசிக்கவேண்டும்.

தேசத்தில் இருக்கும் ஆடுமாடுகள் அநேகமாய்க குடியானவர்களுடையதே யல்லாமல் சக்கிலியருடையதல்ல. ஆக குடித்தனக்



காரர் தங்கள் பொருளைத் தாங்களே சாக்கிரதை செய்யவேண்டும். குடியிற் சாகும் மாட்டைப்பறையனுக்கும் சக்கிலியனுக்கும் கொடுக்கிறோம். அவன் தோலைஉரித்துப் பதம்செய்து குடிக்குத் திருப்பிக், கொடுக்கின்றான். மாமிசத்தைத்தான் சாப்பிடுகின்றான்; எலும்பைச் சேகரித்து வியாபாரிகளுக்கு விற்கிறான். நமக்குக்கிடைக்கும் தோலுக்காக நாம் எருவாகவேண்டிய மாமிசத்தையும் எலும்பையும்கொடுத்துவிடுவது யுக்தமாயிருக்கவில்லை. மற்ற வேலைகள் கூலிக்கு நடந்துவருவதுபோல் தோலுரிப்பதும் பதம் செய்வதும் கூலிக்கு நடக்கவேண்டும். எலும்பும் சதையுமாய் சுண்ணாம்புடன் கலந்து புதைக்கப்பட்டால் மாகூலை அதிகப்படுத்தும் நல்ல விலையுயர்ந்த எரு குடித்தனத்திலேயே கிடைக்கும். இதுவிஷயமாய் விவசாய விளக்கம் என்னும் புஸ்தகத்தில் விசதமாய்த் தெரிவித்திருக்கிறது.

எலும்பைப்பற்றி இவ்வளவு விஸ்தாரமாய் எழுதுவதினால் அதன் குணகுணம் என்னவென்று கேள்விபிறக்கும்.

பூமியில் விளைந்த மாகூலை மிருகங்கள் புசிக்கின்றன. உணவு இரத்தமாகி சதை, கொழுப்பு, நரம்பு எலும்பு முதலியவைகளாக மாறுகின்றன. ஆகையால் இப்பதார்த்தங்கள் மண்ணிலிருந்து கிடைத்த மாகூலின் சத்து. இச்சத்து ஆகாயத்திலிருந்தும் மண்ணிலிருந்தும் செடிகளுக்குக் கிடைத்திருக்கின்றன. ஆகாயத்திலிருந்து கிடைத்த சத்தினால் உண்டானவஸ்துக்கள் மண்ணுக்குத் திரும்பாவிட்டால் அவ்வளவு கேடுஇல்லை. மண்ணிற்கிரகித்த உலோகசம்பந்த வஸ்துக்கள் மண்ணுக்குத்திரும்புவது அவசியம். அவ்வாறுதிரும்பாவிட்டால் மண்கண்டிதமாய் இளைக்கும். எலும்பு என்பது மண்ணிற்கிரகித்த உலோகங்களின் சேர்க்கை; ஆகையால் இதை மண்ணுக்குத் திருப்புவது நியாயம். அவ்வாறு திருப்பாமல் அஞ்ஞானத்தால்அதை வெளிப்போகவிட்டால், நமது மண் சாரத்தை வெளியேபோக விடுகிறோம். அதனால் மண் எலும்பு உண்டாகும் பதார்த்தங்களில் குறையும். அந்த மண்ணில் உண்டாகும் ஜனங்களும் மிருகங்களும் எலும்பு குறைந்து க்ஷீணமடைவார்கள். நாம் இப்போது க்ஷீணமடைந்திருப்பது முக்கியமாய் இக்காரணத்தினாலேயே என்று யூகிக்க

வேண்டியிருக்கிறது. ஆகையால் இன்னமும் க்ஷீணமாகாதபடி எலும்பு வியாபாரம் அயல்நாட்டுக்குச் செல்லாதபடி நிறுத்துவதே தேசத்தைக் காப்பாற்றும் வழி.

எலும்பை எவ்வாறு உபயோகிக்கலாம் என்று சற்று யோசிப்போம். மண்ணில் இருக்கும் எலும்புபட்டு விளையும் காய்கறிகள் கசக்கும் என்று சிலர் சொல்லும் வார்த்தை பொய்யே.

எலும்பு முக்கியமாய்ப் பிரகாசத்தாலும் சிகண வாயுவாலும் சேர்க்கப்பட்ட வஸ்து. 23 பாகம் பிரகாசமும் 46 பாகம் சிகணவாயுவும் இதில் உண்டு. பச்சை எலும்பை மண்ணிற் புதைத்தால் சிகண சம்பந்த வஸ்துக்களுக்கு எலும்பு சேர்ந்து வேரைத் தோண்டுவதுண்டு. பழைய எலும்பைப் புதைத்தால், அது மட்காமல் நெடுநாள் இருக்கும். எலும்பில் தைலம் அதிகமுண்டு. இதனால் செடியின் வேர் எலும்பைத் துளைப்பதில்லை.

சாதாரணமாய் எலும்பை பஸ்மம் ஆக்கி எருவிடுவதுண்டு அப்போது எலும்பு சீக்கிரம் மட்கி, அதன் சிகண வஸ்துவும் பிரகாசமும் செடிக்கு உதவுகின்றன. ஒரு அங்குலத்தில் 50-ல் 1 பாகம் கண்ணுள்ள சல்லடையில் சலித்த எலும்பு மாவு சராசரி ராத்தல் ஆறு அணாவிற்றால், அங்குலத்தில் பனிரெண்டில் ஒருபாகமுதல் பதினைந்துபாகம்வரையிலும் கண்ணுள்ள சல்லடையில் சலித்த எலும்புமாவு $4\frac{1}{4}$ அணாவும், அங்குலத்தில் ஆறிலொருபங்கு சந்துள்ள சல்லடையிற் கிடைத்த பொடி $3\frac{1}{2}$ அணாவும் விற்பதாக ஸ்டோரெர் (Storer) என்னும் ரசாயன சாஸ்திரியார் தெரிவிக்கிறார். பெரும் பொடியாயும் துண்டுகளாயும் உடைத்த எலும்பு 1, 2-டன் உபயோகப்பட்டாலும் அவ்வளவாகப் பயன்படுவதில்லை. எலும்பை அவித்துப் பொடியாக்குவது சிரேஷ்டம். அப்போது தைலப்பசை வெளிவருகிறது.

கிராமாந்தரங்களிற் செய்யத்தகுந்த பழக்கமோவெனில்—நீர் இறங்காத ஓர் பள்ளம்செய்து எலும்பு, சாம்பல் இவைகளைப் புரை புரையாய் அடுக்கி அடிக்கடி சலம்விட்டு நமிர்ந்திருக்கும்படி சில்மாதம்செய்தால் எலும்பு மிருதுபட்டுப்போகும். எருக்குப்பை அடியிலும் இவ்வாறே சேர்த்துவைக்க எலும்பு மிருதுபடும். ஆனால்இது மட்க நெடுநாள் செல்லும்.



வியாபாரிகள் எலும்பைக் கந்தக திராவகத்தால் பஸ்மமாக்கி ஸூப்பர் பாஸ்பேட் (Super Phosphate) என்று விற்பதுண்டு. பிரகாச எரு செடியைத் தகுந்தபடி போஷிக்கிறதென்றும், சிகண எருவால் உண்டாகும் மதர்ப்பை அடக்குகிறதென்றும், இதனால்மண்ணில் உபயோகமில்லாமல் இருக்கும் இதரலோகங்கள் உதவுகிறதென்றும், தானியம், பழம் சீக்கிரம் நிரம்பிப் பக்குவப்படுகிறதென்றும், செடிகள் சீக்கிரம் காய்க்கிறதென்றும், பிரகாசத எரு அதிகமாய் உபயோகப் படுகிறது. இந்தச்சூப்பர்பிரகாச எருவைக் குடித்தனத்தார் பின்வருமாறு செய்யலாமென்று ஸ்டோரெர் (Storer) ரசாயன சாஸ்திரியார் தெரிவிக்கிறார்:— 50 ராத்தல் கந்தக திராவகத்தை அதன் அளவு சலத்தில் குச்சியால் கலக்கிக்கொண்டே சேர்க்கவேண்டும். இந்தச் சலம்கலந்த திராவகத்தை 100 ராத்தல் எலும்புவைத்த ஒரு தொட்டியில் விட்டு ஒரு துடுப்பால் கலக்கவேண்டும். எலும்பு பஸ்மமானபிறகு மண்கலந்து கலக்க சூப்பர் உலர்ந்துவிடும். திராவகம் அதிகப்பட்டால் சூப்பர் களிபோலாகும். குறைவுபட்டால் எலும்பு பஸ்மமாகாமல் நின்றுவிடும். ஆகையால் அளவு தகுந்தவண்ணம் இருக்கவேண்டும். திராவகத்தில் தவறி ஒருவேளை சலம் விட்டோமானால் திராவகம் பொங்கிச்சிதறிவேலைசெய்கிறவனைக் காயப்படுத்தும்.

சர்க்கரையாலைகளில் பிரயோசனப்படாமல் விழும் எலும்புக் கரியில் 100-க்கு 58 பாகம் பிரகாசதம் இருக்கிறது. இதையும் கந்தக திராவகத்தால் பஸ்மமாக்கி எருவாக்க வேண்டும்.

தேசம் க்ஷேமப்பட வேண்டுமானால் எலும்பு வியாபாரம் நிற்க வேண்டும். அதாவது குடித்தனக்காரர்கள் தங்கள் சொத்தாகிய எலும்பைத்தங்கள் நிலத்திற்கு எருவாகுமபடி செய்யவேண்டும்.

சுதேசமித்திரன்.

# பாணாசுரன்கதை,

## (ஹரிவம்சத்தின் மொழிபெயர்ப்பு)

ஜனமேஜயமகாராஜன் வைசம்பாயனரை நோக்கி "ஹே! முனிஜோத்தமரே கேளும். யதுகுலதிலகரான ஸ்ரீகண்ணபிரானது அரிய பெரிய செயல்களை அடிக்கடி கேட்டு மகிழ்வுற்றேன். ஹே! தயாநிதே! ஸ்ரீ வாசுதேவன் பாணாசுரனோடு புரிந்த யுத்தத்தைப்பற்றிக் கேட்க விரும்புகிறேன். அந்தப்பாணாசுரன் தேவதேவராகிய சங்கரருக்கு எவ்வாறு புதல்வனாயும் தேவகணங்களுக்கு முதல்வனாயுமானான். ஸ்ரீ வாசுதேவனுடன் துவந்துவயுத்தம் செய்யவேண்டுமென்றுபேரவாக்கொண்ட அவ்வசுரன் எவ்வாறு தோல்வியடைந்தான். அபஜயமடைந்த அவனுக்கு ஸ்ரீ கேசவன் உயிர்ப்பிச்சைகொடுத்து அவனைக்கொல்லாதொழிந்த காரணம் யாது?" என்றுகேட்க

வைசம்பாயனர் சொல்லலானார். "ஒருகாலத்தில் மகாபலியென்ற ஒரு சக்கிரவர்த்தியிருந்தான். அவனுக்கு நூறுபுதல்வர்களிருந்தார்கள். அப்புதல்வர்களில் மூத்தவனான பாணாசுரன் மகா பராக்கிரமசாலி. அவன் ஆயிரங் கரங்களையுடையவன். மகாமாயாவி. பருத்த சரீரத்துடன் கூடிய எண்ணற்கரிய அசுரகணங்களால் சூழப்பெற்றவனாயும் தேவாஸ்திரப்பயிற்சியிற் றேர்ந்தவனாயுமிருந்தான். ஒருகாலத்தில் மகாத்மாவாகிய கார்த்திகேயரென்ற குமாரக்கடவுள் கிரீடித்துக்கொண்டிருக்கையில் மகாபலி புத்திரனாகிய பாணனை அவன் பராக்கிரமத்தையும் வலிமையையுங்கண்டு மிக்க ஆச்சரியமடைந்து தானும் ருத்திரமூர்த்தியின் புத்திரனாகவேண்டுமென்று பரமசிவனைக்குறித்துக் கடுந்தவஞ்செய்ய உமாபதியாகிய சிவபிரானும் அத்தவத்தால் மிக்க திருப்தியடைந்தார். நீலகண்டனாகிய எம்பிரான் பாணனுக்குப் பிரஸன்னமாகி அவனை நோக்கி "ஹே! பாணா" உனக்கு மங்களமுண்டாகக்கடவது, உனக்குவேண்டிய வரத்தைக்கேள்" என்றார். அது கேட்ட பாணன் தேவதேவனாகிய மகேசுவரனை நோக்கி "ஹே! திரியம்பகா! நான் உமாதேவிக்குப் புத்திரனாகும்படி அநுக்கிரகித்தருளவேண்டும்;" என்று பிரார்த்திக்கச் சங்கரனும்



நல்லது அப்படியே ஆகக்கடவது" என்று வரமளித்து உமாதேவியைநோக்கிப் பாணாசுரனை உனது குமாரனாகக் கொள்ளக்கடவாயாக. அவன் கார்த்திகேயனுக்கு அநுஜனாகக்கடவன். முன்னொருகால் எந்த இடத்தில் அக்கினியிடத்துண்டான இரத்தத்திலிருந்து கார்த்திகேயன் ஆவிர்ப்பவித்தானோ அந்தஇடத்தில் பாணனது ராஜதானியாக ஒரு நகரம் ஏற்படும். அந்தச் சிறந்த நகரமானது சோணிதபுரமென்று பெயர்பெற்று விளங்கட்டும். என்னுடைய கிருபாகடாக்ஷத்தைப் பூரணமாக அடைந்த பாணாசுரனை எதிர்க்கவல்லவனொருவனும் மூவுலகினும் இலனாவான்" என்றார்.

பிறகு பாணாசுரன் சோணிதபுரத்தைத் தனது இராஜதானியாக்கிக்கொண்டு தேவர்களையெல்லாம் தன் குடைக்கீழ்ப்படுத்தி அவர்களை மிகவும் வருத்தி அரசுபுரிந்து வருநாளில் தனது வலிச்செருக்குத்தலைக்கொண்டமையால் தேவர்களை எல்லாம் அலக்ஷியஞ்செய்து அவர்களைப் போருக்கழைத்தான். குமரக்கடவுள் அக்னிமேல்ஜ்வாலிக்கின்ற தனது துவஜத்தையும் மகாதேஜஸ் விளங்காநின்ற மயில் வாகனத்தையும் பாணனுக்குக் கொடுத்தான். பிறகு தேவதேவனாகிய மகேசுவரனுடைய அருளால் தேவர்களாவது, யக்ஷர்களாவது, கந்தர்வர்களாவது, ராக்ஷதர்களாவது பாணனை எதிர்த்து நின்று போர்புரியத் திறலற்றவர்களாயினர். 'திரியம்பகனது பிரஸாதத்தால்பூரணமாய் இரக்ஷிக்கப்பட்டவன் தானென்ற கர்வத்தையடைந்து போர்செய்ய அவாக்கொண்டவனானான்.' தன்னுடன் போர்புரியவல்லவன் ஒருவனுமில்லாமையால் சிவபிரானிடம்சென்று அவரைநமஸ்கரித்து உமது அருட்பிரஸாதத்தாலும் எனது சேனாபலத்தாலும் தேவர், சாத்தியர், மருத்துக்கள் முதலியோர் அடிக்கடி போரில் அபஜயமடைந்ததால் பயத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு உம்மைச் சரணாகதியாக அடைந்து சந்தோஷமாய்ச் சுவர்க்கத்தில் வசிக்கின்றனர். ஆகையால் இனி யான் யாருடன் யுத்தஞ்செய்வேன். யுத்தம்செய்யாமல் இவ்வுலகத்தில் ஜீவிக்க எனக்குப்பிரியமில்லை. யுத்தஞ் செய்யாவிடில் இவ்வாயிரம் கைகளிருந்தும் பயனென்ன? யுத்தத்தைத்தவிர வேறொன்றிலும் என்மனம் பற்றவில்லை. ஆதலால் சுவாமீ! கிருபைசெய்தருளவேண்டும். எனக்கு எப்பொழுது போர்புரியும் நல்ல

காலம் நேரும்" என்று பலவாறாக இறைஞ்சினான். அதுகேட்ட விருஷமத்வஜனாகிய பரமசிவன் மந்தஹாஸத்துடன் பாணனைநோக்கி "ஹே! தானவ! கேள் சோணிதபுரத்தில்ஸ்தாபித்திராநின்ற உனது துவஜமானது முறிந்து என்றைக்குக்கீழே விழுமோ அன்று நீ ஒரு பெரும்போர் புரியலாகும். உன் குலத்திற்கேற்றவும் உன்யோக்கியதைக்குத் தக்கவுமான ஒருபோர் சீக்கிரம் உனக்கு நேரும் என்றார். ஸாக்ஷாத் சங்கரர் சொல்லிய இவ்வசனங்களைக்கேட்ட பாணன் அவரை ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து "ஹே! ஸ்வாமீ! அவ்வாறாய் இந்த ஆயிரங் கரங்களைப்பெற்ற பேற்றை யான் அடைந்தவனாவேன். ஸஹஸ்ராக்ஷனை தேவராஜனை வெற்றிகொள்ளும்பாக்கியம் எனக்குச்சீக்கிரம் மீளவுமுண்டாகும் என்று ஆனந்தபாஷ்பம் பெருகவிட்டுக்கொண்டு சிவபிரானைப் பலவாறாகத் தோத்திரம்செய்து அவர் அநுமதிபெற்றுத் தன்னரண்மனை வந்துசேர்ந்து துவஜங்களிருந்த அறைக்குட்சென்றான். அங்கே உட்கார்ந்து புன்சிரிப்புடன் தன் மந்திரியாகிய கும்பாந்தனைநோக்கி "ஹே! அமாத்தியா! உனக்குச் சந்தோஷசமாசாரம் ஒன்று கொண்டுவந்திருக்கிறேன். கேள் என்றுசொல்ல, அதுகேட்ட கும்பாந்தன் "ஓ தயித்தியேந்திரா நீர் சொல்வதைக்கேட்டு சந்தோஷத்தாலும் ஆச்சரியத்தாலும் என் கண்கள் மலர்ந்தன. மகானாகிய நீலகண்டரது கிருபையினாலும் அருளினாலும் என்ன அநுக்கிரகம் பெற்றுவந்தீர்; சூலாயுதபாணியாகிய பரமசிவன் உமக்குத் திரைலோக்கியாதிபத்தியத்தை அளித்தனரோ? அல்லது இந்திரன் உமக்குப்பயந்து பாதாளத்தில் ஓடி ஒளிந்தானோ! யாருடைய சக்கராயுதத்திற்குப்பயந்து திதிபுத்திரர்களாகிய தயித்தியர்கள் சமுத்திரத்திலோடி ஒளிந்தார்களோ, அந்தவிஷ்ணுவின்பயத்தினின்றும் அவர்கள் இப்பொழுது நீங்கினரோ? சாரங்கமென்ற தனுஸுடன் கதாபாணியாய் யுத்தத்தில் அசையாமல் நிற்கும் விஷ்ணுவைக்கண்டு இனி திதிபுத்திரர்கள் பயப்படவேண்டுவதில்லையோ? இனி அசுரர்கள் பாதாளலோகத்தைவிட்டுச் சொர்க்கலோகஞ்சென்று அங்கு வசிக்கும்படியான பாக்கியமும் பெற்றார்களோ? ஹே! ராஜந், மகாவிஷ்ணுவின் பராக்கிரமத்தால் அபஜயமடைந்து விலங்குகளாற் பந்தப்படுத்தப்பட்டுப் பாதலத்திற் வசிக்கின்ற உன் பிதாவாகிய மாவலிச்சக்கரவர்த்தியும் பாதலம்விட்டுநீங்கித் தனது ராஜ்ஜியத்தை மீளவும் கைப்பற்றிக்கொள்ளுங் காலமும் வந்துவிட்டதோ? விரோசனன் புத்திரனும் உன் பிதாவுமாகிய மாபலிச்சக்கரவர்த்தி திவ்விய மாலைகளாலும் சந்தனத்தாலும் அலங்கரித்துக்கொண்டு விளங்குவதை நாங்கள் கண்டு எங்கள் கண்களிக்கலாகுமோ? ஹே! பிரபோ! ஸ்ரீகேசவன் வாமனாவதாரமெடுத்துத் தன் மூன்று அடிகளால் வஞ்சனையாய் அபகரித்துக்கொண்ட திரிலோகத்தையும், இப்பொழுது தேவர்களைப் போரில் வென்று நமது குடைக்கீழ்ப்படுத்துவோமோ? ஜயசீலனாகிய ஸ்ரீமந்நாராயணனைப்போரில் வெல்லுவோமோ? உனது ஆனந்தபாஷ்பங்களாலும் சந்தோஷ நர்த்தனத்தாலும், விருபத்துவஜனாகிய உமாபதியின் பிரஸாதம் பெற்றுவந்திருக்கிறதாக நீ தோற்றுகின்றாய். மகேசுவரனது அருட்பிரசாதத்தாலும் ஸ்கந்ததேவனின் கிருபையினாலும், நாம் பூலோகத்தில் மகிமையுடன் அரசுபுரிவதற்கான வரத்தைப்பெற்று வந்திருக்கின்றீரோ? என்றான். அதுகேட்ட பாணாசுரன், "ஹே! மந்திரி கேள் தேவர்களெல்லோரும் என்னால் தோற்கடிக்கப்பட்டுச் சொர்க்கலோகத்திற் போய் ஒளிந்துகொண்டனர். என்னுடன் போர்புரிய ஒருவருமில்லாமையால் நான் விசனமுற்று மகேசுவரன்பாற்சென்று யுத்தம்செய்யவேண்டுமென்ற எனது பேரவாவை அவருக்குத் தெரிவித்து என் மனத்திற்குத் திருப்தியான சண்டை எப்பொழுது நேருமென்று கேட்டேன். அதற்குத் தேவதேவனாகிய ஸ்ரீஹரன் புன்சிரிப்புடன் என்னை நோக்கி, "ஓ பாணா சீக்கிரத்தில் ஓர் பெரும்போர் உண்டாகப்போகின்றது. உன்னுடைய குக்குடத்துவஜமானது என்றைக்கு முறிந்து கீழே விழுமோ, அன்றைக்கு அப்போர் நேரும்" என்றார். அதுகேட்டு நான் சங்கரருக்கு வந்தனம் சொல்லிவிட்டு உன்னிடத்திற்குவந்தேன்" என்றான். இவ்விதமாக இவ்விருவர்களும் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், உன்னதமான திவ்விய குக்குடத்துவஜமானது இந்திரனது வச்சிரத்தால் அடிபட்டு முறிந்து கீழே விழுந்தது. அதைக்கண்ட பாணன் போர் நேரப்போகின்றதை நினைத்து மிக மனமகிழ்ந்தான். அக்காலத்தில் பூமியும் இந்திரனது வச்சிராயுதத்தாலடிபட்டு நடுக்குறப்பூமியினடியில் ஒளிந்துகொண்டிருந்த ஒரு பூனையானது கத்தவாரம்பித்தது. தேவராஜனாகிய பர்ஜன்னியன் சோணிதபுரியில் அவன் மனையைச்சுற்றி இரத்தமாரிபொழிந்தான்.

சூரியமண்டலத்தினின்று விண்வீழுங் கொள்ளிகள் பூதலத்தில் வீழ்ந்தன. சூரியனானவன் கிருத்திகாநட்சத்திரத்துடன்கூட ரோகிணியைப் பார்த்தான். நூறுயிரக் கணக்கான இரத்தப்பிரவாகங்கள் சைத்தியமரங்களினின்றும் கீழே விழ ஆகாயத்தினின்று நக்ஷத்திரங்கள் இடைவிடாமல் விழுந்துகொண்டிருந்தன. அக்கொடியகாலமானது பர்வகாலமில்லாவிடினும் ராஹுவானவன் சூரியனைவிழுங்கவாரம்பித்தான். ஒரு தூமகேது தெற்குத்திக்கில் தோன்ற, பயங்கரமான காற்று இடைவிடாதடித்தது. மின்போலும் விளங்காநின்ற சூரியனானவன் வெளுப்பும் சிவப்புமான மூலைகளோடும் கறுத்தகண்டத்தோடும் சாயங்காலவேளையிற்பிரகாசித்தான். பாணனின் பிறந்த நக்ஷத்திரம் ரோகிணியைக் கோபிப்பதுபோற் பயங்கரமான அங்காரஹன்(ராகுவைப்போல்)கிருத்திகாநக்ஷத்திரத்திற்புகுந்தான். தானவஸ்திரீகளாற் பூஜிக்கப்படாநின்ற சைத்திய மகாவிருக்ஷமானது பூமியிற் கீழேசாய்ந்தது. இந்தத் துர்நிமித்தங்களை யெல்லாம்கண்ட பாணன், அவைகள் தன் புயவலிச்செருக்கால் தான் அபஜயமடைவதற்கான உற்பாதங்களென்று அவைகளை நினைத்தானல்லன். ஆனால் பாணனுடைய அமைச்சனாகிய கும்பாந்தனென்ற நீதிமான்மாத்திரம் இந்த அபசகுனங்களை அறிந்து துக்காக்கிராந்தனாய் அரசனைநோக்கி ஹே! ராஜனே இந்த அபசகுனங்களெல்லாம் இனிநமக்குச் சம்பவிக்கும் கேட்டையும் உனது ராஜ்யத்தினுடைய நாசத்தையும்உணர்த்துகின்ற உற்பாத பிண்டங்களாம். உன்னைப்போன்ற அரசனுடையதுர்நடத்தையால் என்போலிய மந்திரிகளும் உனது வேலைக்காரர்களுடன் நாசத்தையடைவார்கள். ஐயோ, சதா அறியாமையுந்தற்புகழ்ச்சியும் புயவலிச் செருக்குமுள்ள பாணன் இந்திரத்துவஜம் கீழே சாய்வதுபோல் வீழ்வான். தேவதேவனாகிய மகேசுவரனது அருட்பிரஸாதத்தால் திரைலோக்கியாதிபத்தியத்தை யடைய விரும்பி இந்தப்பாணன் 'சண்டை' 'சண்டை' என அலறிக்கொண்டிருக்கின்றான். ஆனால் அச்சண்டையாலேயே அவனுக்கு விநாசகாலங்கிட்டியது போலும் என்றான்.

இது நிற்க பராக்கிரமசாலியாகிய பாணன் தைத்தியதானவஸ்திரீகளுடன் மதுபானஞ்செய்துமதித்துப்போய், சந்தோஷமாய்க் காலக்



கழிவுசெய்துவருகின்ற ஒருதினத்தில் மேற்சொல்லிய துர்நிமித்தங்களைக்கண்ட கும்பாந்தன் மிகுந்தமனக்கவலையுடன் வேந்தனது அரண்மனைக்குட்புகுந்து " துர்ப்புத்தியான பாணன், தன் பாஹுபல மதத்தால் தன்னை மறந்து போருக்கலைகின்றான்; அவன் மூடத்தனத்தால் அவன் குறைவு அவனுக்குப்புலப்படவில்லை. இப்பொழுது தோன்றுகின்ற துர்நிமித்தங்கள் பயப்படத்தக்கவையென்று தற்காலத்தில் தோன்றாவிடினும்,அவைகளால் நிச்சயமாய் ராஜ்ஜியத்திற்குக் கேடுவிளையப்போகின்றது. புண்டரீகாக்ஷனாகிய பரமசிவனும், புயவலிவாய்ந்த கார்த்திகேயனும் இப்பட்டணத்தில் வசித்துக்கொண்டிருப்பதால் இந்தத்துர்நிமித்தங்கள் ஒருவாறு பயனற்றுப்போகலாம். ஆயினும் நாம் செய்யும் பாவங்கள் நம்மைவிட்டுநீங்கா. நமது தோள்வலிச்செருக்கின் காரணத்தால் ஒருபெரிய கேடுவிளையப்போகின்றது. பாணனின் கொடுங்கோன்மையால் எல்லாத் தானவர்களும் மகாபாவிகளாய் விட்டாராதலின் இவை அவர்களின் நாசத்திற்குக் காரணமாகும்.

திருலோகாதிபதியாகிய ஹரனும்,கார்த்திகேயனும் நமது பட்டணத்தில் வசிக்கின்றனர். மகேசுவரனாகிய ஹரன் தனதுபுத்திரனாகிய கார்த்திகேயனைத தன்னுயிர்போற் பாவிக்கின்றாராயினும், குஹனிடத்திலிருக்கின்ற பிரீதியிலும் பாணாசுரனிடத்தும் மிக்க பிரீதியுடையவராயிருக்கின்றார். அப்படியிருக்கின்றமையால், பாணாசுரன் வலிச்செருக்குடையவனாகித் தனதுநாசத்துக்குக் காரணமானவோர் யுத்தத்தை வேண்ட, பரமசிவனும் அப்படியே அவனுக்கு அனுக்கிரகித்தார். ஒருவேளை யுத்தந்தான் நேருமோ? அன்றோ? சந்தேகமாயிருக்கிறது. அப்படியே விஷ்ணுவைத் தங்களுக்குத் தலைமையாகக் கொண்ட இந்திராதி தேவர்களுடன் ஒருவாறு போர் நேர்ந்தால், அதற்குக் காரணம் பரமசிவனேயன்றி வேறல்லர். குமரக்கடவுளும், சிவபிரானும், பாணனுக்குச் சகாயமாயிருந்து போர்புரிந்தால் அவர்களுடன் போர்புரிய வல்லவர் ஒருவருமிலராவார். முக்கண்ணனாகிய பரமசிவன்வார்த்தைவீண்போகாது. தானவர் நாசத்திற்குக்காரணமான யுத்தம் ஒன்று நிச்சயமாய் நேரும் என்றுபலவாறாக மனதிற் சிந்தித்துக்கொண்டு, சுசீலனான கும்பாந்தன் தன் குலக்ஷேமத்தை

நாடி தயித்தியர்களைநோக்கி "தர்மாதிகளாகிய தேவர்களுடன் போர் புரிகின்றவர் எவரோ அவர் பலிச்சக்கிரவர்த்தியைப்போல் நாசத்தையடைவார்" என்றான்.

## Chapter 254

### பரமசிவனது லீலைகளும், உஷாதேவி வரம்பெறுதலும்.

ஒருகாலத்தில் பரமசிவன் விசித்திரமான ஒருநதிக்கரையில் கிரீடித்துக் கொண்டிருந்தார். அப்போது எல்லாப் பருவகாலங்களும் செழித்தோங்கி விளங்கிய அந்தஅழகியகாட்டில் கந்தர்வர்களும் அப்ஸரஸ்களும் விளையாடிக்கொண்டிருந்தனர். பாரிஜாதப் பூக்களும்,சந்தாநகமலர்களும் நிறைந்து நறுமணங்கமழப்பெற்ற அந்நதிக்கரையில் அப்ஸரஸ்கள் வேணு, புல்லாங்குழல்,வீணை,மிருதங்கம்,பணவ முதலிய வாத்தியங்களுடன் கானஞ்செய்துகொண்டிருப்பதைச்சாக்ஷாத் சங்கரர் கேட்டார். ரூபலாவண்ணியத்துடன்கூடிய அப்ஸரஸ்கள் கவிவாணர்களைப் போலும் கட்டியங்கூறுகின்றவர்களைப் போலும் சிவப்புப் பட்டாடைதரித்து மலர்மாலை அணிந்து உமாதேவி சமேதராயிருந்த சுந்தர காத்திரனாகிய மகேசுவரனைத் தோத்திரஞ்செய்து பல பாடல்களைப் பாடினர். அக்காலத்தில் அப்ஸரஸ்களுள் முக்கியமானவளான சித்திரலேகையும் மற்றஅப்ஸரஸ்களும்உமாதேவிபோல் வேஷம்பூண்டு பரமசிவனுக்குத் திருப்தி உண்டாக்க அதைநோக்கிய உமாதேவியும் மற்ற அப்ஸரஸ்களும் நகைத்தார்கள். உமாதேவியின் அனுமதிபெற்றுக்கொண்டு, பரமசிவபக்த சிகாமணியான பாணன் அநேக மாயரூபங்களையெடுத்துக் கிரீடைசெய்ய ஆரம்பித்தான். வேடிக்கை விநோதங்களுடன் கூடிய சிவகணங்களும் பரமசிவனது அடையாளங்களைத் தரித்துக்கொண்டு கிரீடைசெய்தனர். எல்லாப்பக்கங்களினின்றும் குதூஹலமும் சிரிப்பும் கலகலவென்று கேட்க அதையெல்லாம் நோக்கிய பரமசிவன் ஆனந்தவாரியில் மூழ்கலானார். அக்காலத்தில் பார்வதியுடன் முக்கண்ணனாகிய பரமசிவன் நதியில் ஜலக்கிரீடைசெய்துகொண்டிருப்பதையும் துவாதசாதித்தியர்களைப்போல் ஜாஜ்வலித்துக்கொண்டு அநேக ரூபங்களுடன்உமையுடன் கிரீடித்து அவளை நானுவிதத்தாலும் திருப்திசெய்வதையும் பாணாசுரன் புத்திரியாகிய அழகிற்சிறந்த உஷாதேவி கண்டாள்.



உடனே தன்னயலிலிருந்த தோழிமார்களிடத்து இவ்வண்ணம் தன் பர்த்தாவுடன் கிரீடைசெய்து காலங்கழிக்கின்ற ஸ்திரீயின்பாக்கியமே பாக்கியம்" என்று சொல்லலானாள். உஷாதேவியின் கருத்தையறிந்த பார்வதி "ஹே உஷா! மகேசுவரராகிய சங்கரர் என்னுடன்கிரீடைசெய்வதுபோல்,நீயும் சீக்கிரத்தில் உனதுநாதனுடன் அநுபவிப்பாய்"என்று மந்தஹாஸத்துடன் மிருதுவான வசனங்களாற் சொல்லலானாள். உடனே உஷை அப்பேர்ப்பட்ட பாக்கியம்தனக்கு எப்பொழுது நேருமோவென்று நினைக்க அதையுமறிந்த உமை "ஹே உஷா! உன் கணவனுடன் எப்பொழுதுகூடிச்சுகிப்பாயென்று சொல்லுகிறேன் கேள்! வைசாகமீ சுக்கிலபட்சம் துவாதசி யன்று இரவில் உனது அரண்மனையின் மாடியில் நீ நித்திரை செய்துகொண்டிருக்குங்காலையில் திவ்விய சுந்திரகாத்திரனை ஒருவனைச்சொப்பனத்தில் காணப்போகின்றாய். அவனே உனக்குப் பதியாவான் என்று அநுக்கிரகித்தாள் பிறகு சந்தோஷத்தால் மலர்ந்த கண்களுடன் உஷாதேவி தன் பாங்கிமார்கள் புடைசூழ விளையாடிக்கொண்டுதன்னரண்மனைநோக்கிவர யக்ஷகன்னிகைநாககன்னிகைமுதலியசகிகளெல்லாரும் கைகொட்டி உஷையைப் பரிகாசஞ்செய்ய வாரம்பித்தனர் "ஹே சுந்தரி உமாதேவிசொல்லிய பிரகாரம் நீ சுந்தரகாத்திரத்துடன்கூடிய குலீனனான கணவனை அதிசீக்கிரத்தில் அடையப்போகின்றாய். பார்வதியின் வார்த்தை வீண்போகாது என்றார்கள். தன்தோழிமார்கள் சொல்லிய வார்த்தைகளை நன்றென்றுஅங்கீகரித்து உமாதேவியின் வாக்குப்பிரகாரம் சீக்கிரம் நடக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டு உஷை சந்தோஷமாய்க் காலக்கழிவு செய்துவந்தனள். அங்கு வந்திருந்த அற்புத அழகுடன்கூடிய ஸ்திரீகளனைவரும் உமாதேவியுடன் விளையாடிக்கொண்டிருந்து சிலநாட்சென்றபின் தத்தமிருப்பிடஞ்சென்றனர். உமாதேவியும் அந்தர்த்தானமானாள் மேற்சொல்லிய சீமாட்டிகள் சிலர் குதிரைமேலும், சிலர் பல்லக்கிலும், சிலர் யானையின்மேலும், சிலர் நாநாவித வாஹனங்களிலு மேறிக்கொண்டு தங்கள் வாஸஸ்தலத்திற்குச்செல்ல, இன்னும் சிலர் ஆகாயமார்க்கமாய்க் கிளம்பிச்சென்றனர்.

# Chapter. 255

## உஷாதேவி கனவுகாணல்.

வைசாகஸ்ரீ சுக்கிலபட்சத்தில் துவாதசிதினம் இரவில் சகிகளெல்லோரும் தன்னைச் சூழ்ந்திருக்க உஷை நித்திரைசெய்துகொண்டிருந்தாள். அப்பொழுது ஒரு திவ்யபுருஷன் அவ்வழகிய கன்னிகையிடம் வந்து அவள் கற்பழித்ததாக வோர் கனவு கண்டாள். பொழுது விடிந்து உஷை சயனத்தைவிட்டு எழுந்திருந்த உடனே தன் தேகமெல்லாம் இரத்தப்பிரவாகமா யிருக்கக்கண்டு பயத்தால் அழுதுகொண்டிருந்தாள். அவ்வாறு அழுதுகொண்டிருந்த உஷையை கும்பாந்தன்புத்திரி கண்டு "ஹே உஷா, ஏன் இப்படி அழுதுகொண்டிருக்கிறாய்? அஞ்சாதே மாவலிச் சக்கரவர்த்தியின் புத்திரியாகிய நீ பயப்படலாமா? விற்போல் வளைந்த புருவத்தையுடைய மாதே! தேவர்களைச் சங்கரிக்கிறவனான உன் பிதாவிருக்க உனக்குப் பயமென்பது திரிலோகத்திலுமுண்டோ? அநேக காவலாளிகளாற் காக்கப்பட்ட உனது அந்தப்புரத்தில் பயமென்பது ஏது? எழுந்திருஎழுந்திரு. துக்கத்தைஅகற்று. தேவர்களை நடுங்கச்செய்யும் உன் பிதா மாவலிச்சக்கரவர்த்தியின் புத்திரனன்றோ? அவர் சசிபதியாகிய தேவேந்திரனையும் பலமுறை யுத்தத்தில் தோற்கடித்தாரென்று நீ கேட்டதில்லையோ? தேவேந்திரனும் இந்நகரில் காலடிஎடுத்துவைக்க அஞ்சுவான் என்று பலவிதமான மிருது வசனங்களைச் சொல்லித் தேற்றினள். இதைக்கேட்ட உஷை நேற்றிரவு தான் கனவிற்கண்டனவற்றைச் சொல்லி மீளவும் அவளைநோக்கி "ஹே ஸகீ, பதிவிரதையாகிய யான் இவ்வாறு கற்பழிந்தபின் உயிர்தரிக்கலாகுமா? தேவஸம்ஹாரகனாகிய என் பிதாவிற்கு நான் என்னசொல்வேன்? என் கற்பழிந்தால் நான் பிறந்த மேலான குலத்திற்கு அவமானம் நேரிடுவதிலும் நான் உயிர்துறத்தலே நன்று. இவ்வுலகில் உயிர்வாழ்வது இனி எனக்குச்சந்தோஷத்தைத் தருவதன்று. சொப்பனத்திற கண்ட இந்த விஷயமானது விழித்திருக்கையில் நேர்ந்தவாறே தோற்றுகின்றது. பதிவிரதா சிரோமணியாகிய ஒரு ஸ்திரீ இவ்வுலகத்தில் நீடியகாலம் வசிக்க விரும்பலாம். தான் பிறந்தமேலான குலத்திற்குக் கேட்டைவிளைத்த ஒருஸ்திரீ உலகவாழ்க்கையை விரும்பமாட்டாள். என்று பிரலாபித்துக்கொண்டு கண்ணீர்விட்டுக்



கதறி அழுதாள். அகதியான ஒரு ஸ்திரீயைப்போல் இவ்வாறு வாய்விட்டலறின உஷையைச்சுற்றி இருந்த தோழிமார்கள் அந்த ராஜகன்னிகையைநோக்கி அவளுடைய துக்கத்தைக்கண்டு சகிக்கவாற்றாதவர்களாய் தாங்களும் அழுதுகொண்டு கண்ணுங் கண்ணீருமாக விருக்க மந்திரி குமாரி உஷையைப்பார்த்து "ஓ! பாக்கியவதீ கெட்டகருத்துடன் ஒரு தீச்செயல் நீ செய்வாயாகில் அதனால் உன் மனமும் கெடும். உன்கனவில் உன்னை ஒருவன் பலவந்தமாய்க்கூடிக் கற்பழித்த காரணத்தால் உனதுபாதிவிரத்தியங் கெடாது. இம்மானிடஉலகத்தில் சொற்பனத்திற்செய்த காரியம் ஒன்றும் பாவமாகாது. ஆதலால் உனதுகனவில் நீ தர்மாசாரந்தவறிநடந்தவளாகமாட்டாய். மனத்தினாலாவது வாக்கினாலாவது முக்கியமாய் கர்மத்தினால் எவளொருத்தி பாவஞ்செய்கின்றாளோ அவளே அறத்தின்வழிநில்லாத பதிதையென்று வேதவித்துக்கள் சொல்லுவார்கள். நீ உன்கன்னியாவிருதத்தைச்சிறிதேனும் தவறாது அனுசரித்தவள். உன்மனத்தாலேனும் ஒரு புருஷனை நினைத்தவளல்லள். அவ்வாறிருக்க உன்னை எப்படி கன்னியாவிருத மழிந்தவளென்று சொல்லலாகும்? நீயோ மகா பரிசுத்தை. மேன்மையான குணம்பொருந்தியவள். கற்புடைய ஸ்திரீ நீ நித்திரை செய்யுங்காலையில் உனக்கு கனவில் பரபுருஷ ஸம்போகம் நேர்ந்தால் அதனால் உனது கன்னியாவிருத மழிந்ததென்று சொல்வது தகுமோ? பாவஹேதுவான மனத்தையும் செய்கையையும் உடையவளையே கற்பழிந்தவளென்று சொல்லவேண்டும். நீ மகாபதிவிரதை; நல்லகுலத்திற் பிறந்தவள்; ஸர்வலக்ஷண ஸம்பன்னை; கன்னியாவிருதத்தை வழுவாது அனுஷ்டிப்பவள். உனக்கு இத்துயர் வந்துற்றது விதிப்பயனேயாம். விதியை யாரால் வெல்லலாகும்? என்றுசொல்லி, பின்னும் " ஓ விசாலாட்சி! கேளாய், உமாதேவியார் சொல்லிய வார்த்தைகள் உனக்கு ஞாபகத்திலிருக்கின்றனவா? வைகாசி ஸ்ரீ சுக்கிலபட்சம் துவாதசி தினத்தில் உனது அரண்மனையில் நீ நித்திரைசெய்யும்போது எவனொருவன் உன்னை பலவந்தமாக அனுபவிக்கின்றானோ அந்த மகாவீரனே உனது கொழுநனாவான்' என்று சொல்லியதை நீ மறந்தனையோ? பார்வதிதேவியின் அந்த வார்த்தைகள் பொய்யாகுமோ? இதை மறந்துவிட்டு நீயேன் அழுகிறாய்? என்று சொல்ல உஷையும் இவ்வார்த்தைகளைக்கேட்டுத் தனது

துக்கத்தை அகற்றி மந்திரி குமாரியை நோக்கி "அடி ஸகீ, பார்வதி தேவியின் வார்த்தைகள் இப்பொழுதுதான் என் ஞாபகத்திற்கு வந்தன. அவள் சொன்னவாறே நேர்ந்திருக்கின்றது. என் கனவில் என்னிடம்வந்த மகாபுருஷனே, உமாதேவியின் விருப்பப்படி எனக்குப்பர்த்தாவாகுவானெனில் அவனை நான் எங்கே காணுவேன்? அவனைக்காணுவதற்கான ஏற்பாட்டைச் செய்வாயாக என்றாள். அது கேட்ட மந்திரி குமாரி "ஹே! கோதாய்! யாவர் கண்களுக்கும் செவிகளுக்கும் புலப்படாமல் உன் கனவில்தோன்றி உன்னந்தப்புரத்துட்புகுந்து பலவந்தமாக உன்னுடன்கூடிய அக்கள்வனது குலத்தின் பெருமையையும் அவன் பௌருஷத்தையும் அறியவல்லார் யார்? துவாதச ஆதித்தியர்களும் ஏகாதச ருத்திரர்களும் தோள்வலிபொருந்திய வசுக்களும் தேஜஸ்விகளான அச்சுவினிதேவர்களுங்கூட அணுகக்கூடாததான பிரசித்திபெற்ற நகரமாகியசோணிதபுரத்துட் பிரவேசித்துப் பாணாசுரனது தலையில் தன் இடதுகாலைவைத்த அந்த மகாபுருஷன் சாமானியனல்லன். அவன் மேற்கூறிய தேவர்களிலும் நூறுபங்கு பராக்கிரமம் வாய்ந்தவனாக விருத்தல்வேண்டும். ஆதலால் ஹே உஷே விசாலாக்ஷி! அப்பேர்ப்பட்டவீரனைத் தனதுகணவனாக அடையாதவள் வாழ்க்கையும், அவள் போகபோக்கியங்களும் பயனற்றனவாம். உமாதேவியின் பிரசாதத்தால் என்றைக்கு உனக்கு மன்மதனுக்குச் சமானமான அந்த நாயகன் கிடைப்பானோ அன்று உன்னை மகா பாக்கியவதியென்று நினை. இனி நீ செய்யவேண்டியதென்னவெனில் அம்மகாபுருஷன் யார்? அவன் எக்குலத்தவன்? அவன் பிதாயார்? என்ற விஷயங்களைத் தெரிந்துகொள்வதுதான் என்றாள். மந்திரி குமாரியின் வசனங்களைக்கேட்ட உஷை மன்மதபாணத்தால் தொளைக்கப்பட்டவளாய் தன் ஸகியாகிய மந்திரி குமாரியைநோக்கி "இவையெல்லாவற்றையும் நீ எப்படியறியக்கூடுமோ அவற்றைச் செய்வாயாக. ஒருவன் தனக்குஆபத்துநேர்ந்தால் ஒன்றும் தோன்றாமல் திகைத்து நிற்பான். நீ சொல்லியதற்குத் தக்க விடைசொல்லக்கூட எனக்குத் தோற்றவில்லை. நான் உயிர்தரித்திருக்கும் வழியை நீயே தேடுவாயாக" என்று சொல்ல அதற்குமந்திரிகுமாரி "ஹே தேவி, நமது ஸகியாகிய சித்திரலேகை என்றஅப்ஸரஸ்திரீ ஸாமபேதோபாயங்களில் மகா சாமர்த்தியமுள்ளவள். அவ



ளிடத்தில் இந்தக் காரியத்தைச் சொல்வாயாகில் இது சீக்கிரத்தில் நிறைவுபெறும்" என்றாள். அது கேட்ட உஷை தன்சகியாகியசித்திரலேகையிடஞ்சென்று கூப்பிய கரங்களுடன் நின்றுகொண்டு அவளை நோக்கி "ஹே! ஸகீ, உன்னிடத்து மகா முக்கியமான வோர் விஷயஞ்சொல்லுகிறேன் கேள், மதகஜத்தின் கதியுடன்கூடிய புண்டரீகாக்ஷனான எனது அருமைநாயகனை நீ என்னிடத்துக் கொண்டுவராவிடின், நான் என்பிராணனை விட்டுவிடுவேன்" என்றாள் இவ்வாறு உஷை சொல்லியதைக்கேட்ட சித்திரலேகை அசுர குமாரியை பல மிருதுவசனங்களால் தைரியப்படுத்தி அவளை நோக்கி "ஹே! கன்னியா விரதங்களைத்தவறாது அனுஷ்டிக்கின்றவளே, கேள், நீ சொல்லுகிறவன் இன்னானென்று நான் அறிந்திலன். உன்மனத்தைக் கொள்ளைகொண்ட அந்தக்கள்வனது குலத்தையும், குணத்தையும் வர்ணத்தையும் யோக்கியதையையும் அவன் வசிக்குமிடத்தையும் யான் அறியேன். ஆயினும் உனது அபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொடுப்பதற்காக என் புத்திசாலித்தனத்தால் யான் ஒன்று செய்யக்கருதுகின்றேன். சகியே கேள். தேவர், தானவர், கின்னரர், யக்ஷர், உரகர், ராக்ஷஸர், கந்தர்வர், அஸுரர், மனிதர் ஆகிய இவர்களில் அழகிற் சிறந்துள குலீனர்களாயிருக்கிறவர்களைச் சித்திரத்திலெழுதி ஒருவாரத்திற்குள் அவர்களுடைய படங்களை உன்னிடங்கொண்டுவருகிறேன். அப்பொழுது என்பிராணநாயகனது படமிதுதான் என்று நீ எனக்குக் காட்டுவாயானால், அன்னவனை நான் உன்னிடம் கொண்டுவந்து சேர்க்கிறேன் என்று சொல்லிவிட்டுச் சித்திரமெழுதுவதில் அதிக சாமர்த்தியமுள்ளவளான சித்திரலேகை தன் மனோசங்கல்பத்தாலும், கைத்தேர்ச்சியாலும் முக்கியமான திருலோகங்களிலும் அழகிற் சிறந்த புருஷர்களின் படத்தை எழுதி எழுதினத்திற்குள் தன் பாங்கிமார்களுடன் உட்கார்ந்திருந்த உஷாதேவிமுன் அவைகளைக்கொணர்ந்து "ஹே உஷே, நீ கனவிற்கண்ட புருஷனுடைய படம் இவைகளுள் இருக்கிறதாபார்" என்று சொல்லினள். அப்பால் உஷாதேவி படங்களை ஒவ்வொன்றாகப்பார்த்துக் கொண்டு வந்து பிறகு யாதவகுலதிலகனான ஸ்ரீ கண்ணபிரானது படத்தைக்கண்ணுற்றாள். பிறகு அவர்க்கு அண்மையில் அவர் பௌத்திரனாகிய அநிருத்தனிருக்க அவனழகைப்பார்த்து ஆச்சரியமுற்றுக் கண்கள்மலர்ந்

தாள். அப்பால் சித்திரலேகையைப்பார்த்து "ஹே சகீ, அரண்மனையுட்பிரவேசித்து நான் தூங்கும்பொழுது கனவில் பலவந்தமாய் என் கற்பழித்துச் சென்ற சோரன் இதோ அகப்பட்டுக்கொண்டான். அவனது திவ்விய சுந்தரகாத்திரத்தால் அவனைக்கண்டு பிடித்தேன். இந்தத்திருடன் தான் அந்த அடாதகாரியஞ் செய்தவன். இவன் யாவன்? இவன் குலமென்ன? குணமென்ன? யோக்கியதையென்ன? எல்லாவற்றையும் விரிவாய் எனக்கு எடுத்துரைப்பாயாக. இவைகளைத் தெரிந்துகொண்ட பின்னர் செய்யத் தகுவன எவையோ அவற்றைச் செய்யல்வேண்டும் என்றாள்.

சித்திரலேகை ஹே, உஷா:—உனது கணவராகிய இவர் மகா பராக்கிரமசாலி; திரைலோக்கியாதிபதியான ஸ்ரீ கண்ணபிரானுக்குப் பௌத்திரன்; பிரத்யும்மனுக்குப் புத்திரன் பராக்கிரமத்தில் அவனுக்குச் சமானமானவன் மூவுலகினுமிலன். பர்வதங்களை வேருடன் பிடுங்கி நசுக்கிப் பொடியாக்கத்தக்க வலிவாய்ந்தவன். இப்பேர்ப்பட்ட யாதவராஜகுமாரனை உமாதேவி உனக்கு நாயகனாகக்கருதி இருக்கின்றமையால் உன்னைப்போன்ற பாக்கியவதி வேறு ஒருவருமில்லை என்று சொல்ல உஷாதேவி "ஹே சித்திரலேகா, எங்களிருவரையும் வதூவரனாகச்சேர்த்துவைக்குந் திறனுடையாள் நீயே அகதியாயிராகின்ற எனக்கு அபயங்கொடுத்தருளுவாயாக. நீ நானாவிதரூபங்களை எடுத்துக்கொண்டு ஆகாயத்தில் ஸஞ்சரிக்கவல்லவள். ஹிதாஹிதங்களைத் தெரிந்து காரியங்களை முடிக்கும் சக்தியுடையவள். என் பிராணநாதனை இங்குக் கொண்டுவருவதற்கான வுபாயத்தைத் தேடுவாயாக. ஆபத்திலுதவும் நண்பனே நிஜமான நேசனெனப்படுவான். நான் மன்மத விகாரத்தால் தவிக்கின்றேன். என்னுயிர் நீங்காது என்னை ரக்ஷிப்பாயாக இன்றைக்கே என் நாயகனைக் கொணர்ந்து நீ என்னிடஞ்சேர்ப்பிக்காவிடில் நான் உயிர்துறப்பேன் என்றாள். அதுகேட்ட சித்திரலேகை ஹே மடந்தாய்! ஹே! சோபனம்பொருந்தியவளே! பாணாசுரனது இந்தப்பட்டணமானது எவ்வாறு இரும்பு மதில்களால் சூழப்பெற்று தைத்திய தானவ சைந்நியத்தால் இராப்பகலாக ரக்ஷிக்கப்படுகின்றதே; அவ்வாறே விசுவகர்மனென்ற தேவதச்சனால் நிர்மிக்கப்பட்ட துவாரகாபுரி என்ற திவ்விய நகரம் ஆழமாகிய அகழால் சூழப்பெற்று மகாவீரர்களது கடுங்காவலால் காக்கப்பட்டுவருகிறது. நாலாபக்கங்களிலும் பர்வதங்களாகிய மதில்கள் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. இவ்வாறு ஏழுமலைகளாலும் ஏழு அகழ்களாலும் சூழப்பெற்ற துவாரகாபுரிக்குள் செல்லவேண்டியவர்கள் ஓரே கோட்டைவாயிலின் வழியாகப் பிரவேசிக்கவேண்டும். ஆதலின் இந்தக்காரியத்தில் என்னை ஏவாதொழித்து என்னையும், உன்னையும் முக்கியமாக உன் பிதாவையும் காப்பாற்றுவாயாக என்றான்.



உஷை—ஹே சித்திரலேகா! உனது யோகமாயையின் பலத்தால் நீ அந்நகரில் பிரவேசிக்கலாம். ஹே பிரிய சகீ, இதைக்காட்டிலும் அதிகமாக நான் என்னசொல்லப்போகிறேன். திவ்விய புருஷனான அநிருத்தனனுடைய முகாரவிந்தத்தைக் காணாவிடில், நிச்சயமாய் என்பிராணன்போய்விடும். இதைப்போன்ற நல்லகர்மங்களில் ஒருவன் ஏற்படுவானாகில், அந்தகார்யமானது இடையூறின்றி நிச்சயமாய்க்கைகூடும். உன் தோழியாகிய உஷை உயிர்தரித்திருக்கவேண்டுவாயாயின் இந்தக்காரியத்தைச் சீக்கிரம் முடிப்பாயாக. உன்னை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். என் நாயகனை என்னிடமிட்டுக் கொண்டுவருவாயாக என்று திரும்பத் திரும்பச் சொல்லலானாள். காமனது பாணத்தாலடியுண்டவோர் ஸ்திரீ அதனால் தன் குலத்திற்கு நேரிடுங்கேட்டை நினைக்காமல் தன் போகசுகத்திற் கனுகுணமாயுள்ள விஷயங்களையே நாடுவாளாதலின், அவ்வாறு சொல்லிய உஷையின் வசனங்களைக் கேட்ட சித்திரலேகை அவளை நோக்கி, "உனது அமிர்தவசனங்களால் என்னை மிகவும் திருப்தி செய்தாயாதலின் இதோ துவாரகை சென்று உனது நாயகனான அநிருத்தனைக்கொணர்ந்தேன் என்று சொல்லி உடனே ஆகாயமார்க்கத்தில் கிளம்பி வாயுவேக மனோவேகத்துடன் அன்றிரவு மூன்றாவது ஜாமத்தில் கிருஷ்ணபரமாத்வாவின் ராஜதானியாகிய துவாரகை வந்தடைந்தாள். கைலாயபர்வதத்தின் சிகரங்கள் போன்ற மாடமாளிகைகளாலும் கூடகோபுரங்களாலும் அலங்கரிக்கப்பெற்ற அந்தத் துவாரகாபுரியானது ஆகாயத்திலுள்ளவோர் நட்சத்திரமண்டலம்போல விளங்கியது.

ஸி. நாராயணசாமி ஐயர், பி. ஏ. எல். டி.

## சமாச்சாரக்கொத்து.

ஸ்ரீதிலகர்தாம் வீட்டில்சும்மா இருப்பதனுல் விளையும்நன்மையிலும், ஜெயிலுக்குப் போகும் நேரம் செல்வதனுல் அதிக நன்மையே தேசத்துக்குண்டாகுமென்று ஹைகோர்ட்டிலே ஜட்ஜ் தேவாரிடம் சொன்னுர். பின்பு பம்பாயிலிருந்துஇரவேஆமதபாத்சபர்மதி ஜயிலுக்குக்கொண்டுவரப்பட்டார். மறுநாள் அதிகாலையில் சுபர்மதி ஜெயிலர் ஸ்ரீ திலகரிடம் சென்று வழக்கப்பிரகாரமான ஜயில் உடுப்பைக்கொடுத்து அதைத் தரித்துக் கொள்ளும்படி சொன்னதுமன்றி சிறிது சாப்பிடும்படியும் வேண்டினுர். அப்பொழுது ஸ்ரீ திலகர் ஜயிலரைப்பார்த்து "ஐயா, நான் நேற்றிரவு தண்டிக்கப்பட்ட சமாசாரம் இன்றுதான் எனது பொது ஜன சகோதரர்களுக்குத் தெரியவரும். எனதுதண்டனையைப்பற்றிக் கேள்விபட்டவுடன் அநேக ஜனங்கள் இன்று முழுதும் போஜனம் செய்யாமல் பட்டினியிருப்பார்களென்று நம்புகின்றேன். ஆகலால் எனக்காக அநேக ஜனங்கள் ஜெயிலுக்கு வெளியில் பட்டினியாயிருக்கும்பொழுது நான் மட்டும் இங்கே போஜனம் செய்ய என் மனம் இசையவில்லை. ஆகலால் இன்று முழுதும் ஒரு உணவையும் கையால் தொடமாட்டேன். அதற்காக என்னை மன்னிக்கவேண்டும்"என்றுர். இந்தத் தெய்வீகமான திருவசனத்தைச் சொல்லிக்கொண்டே ஸ்ரீதிலகர் ஜயிலுடையையும் தரித்தார். உடனே அவரைச் சுற்றி நின்று அவரைப் பார்த்துக்கொண்டிருந்த மற்றக் கைதிகளனைவரும் புலபுலவென்று கண்ணீர் வடித்துவிட்டார்களாம்! ஸ்ரீதிலகர் ஒரு மனிதரோ அல்லது மகரிஷியோ அல்லது ஒரு தெய்வந்தானோ தெரியவில்லை!

* * * 2

நம்நாட்டுப் பிரசித்த சித்திரக்காரரான ரவிவர்மாவைப்போல் தற்காலம் வங்காளத்தில் அவனீந்திரநாத் தாகோர் என்ற ஒருவர் கிளம்பியிருக்கிறுர். அவர் வரையும் படங்கள் எவராலும் போற்றப்பட்டு வருகின்றன. அவர் ஓர் அழகான படம் வரைந்திருக்கிறுர். அதாவது ஔரங்கசீப் என்ற மொகலாயச் சக்கிரவர்த்தி தன் தமையன் டாராவைக் கொலைசெய்யச்சொல்லி அவன் தலையைத்தான் பார்க்கவேண்டுமென்றுன். அவ்வாறே டேராவின் தலைகொணரப்



பட்டது. அந்தச்சமயத்தில் ஔரங்கசீப் வெள்ளைச்சலவைக்கல்லால் அமைந்த ஒரு ஸோபாவில் வீற்றிருந்தான். மகம்மதிய வேதமாகிய கோரானைப்படித்துவிட்டுக் கையில் ஜபமாலையைவைத்து ஜபம்செய்து கொண்டிருக்கிறுன். அப்போது கோரானையும் ஜபமாலையையும் போட்டுவிட்டுத் தன்முன் கொண்டுவரப்பட்டு உதிரம் உலராமலிருந்த டேராவின் தலையிலிருந்த துணியைத்தன் கத்தியின் நுனியால் நீக்கி வெகுகவலையுடன் பரிசோதிக்கிறுன். ஒருகால் தன்வேலைக்காரர்கள் தன்னை மோசம்செய்து விட்டார்களோ. டேராவின் தலைதானே வேறு யாருடையதோ என்று சந்தேகித்துப் பரிசோதிக்கிற அவசரத்தை மிஸ்டர் தாகோர் மிக்க திறமையுடன் படத்தில் காட்டியிருக்கிறுர். "தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடும்" என்ற பழமொழியும் பொய்த்துப்போகும்படியான கல்நெஞ்சு பூண்ட சகோதரன் செயலைபாது கூறுவது. உலகத்தில் இவ்வன்னெஞ்சனைப் போன்ற நெஞ்சுபடைத்த சகோதரன் இருப்பதினும்இறப்பதுமேல்.

* * * *

நெல்வகை :—இந்தியாநாட்டு நெல்வகைகளைக் கணக்குப்பார்த்ததில் சுமார் 1400 வகைகள் இருப்பதாகத் தெரியவருகிறது. இலங்கைத்தீவில் 161 வகையும் ஜப்பான்நாட்டில் 578 வகையும் இருக்கின்றனவாம். தஞ்சைஜில்லா விவசாயச்சங்கம் 163 வகை நெல்லைச் சேர்த்திருக்கிறது. ரோமாபுரி பொருட்காட்சிசாலையில் 347 வகை நெல் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது.

* * * *

விசாகபட்டணம் துறைமுகத்தை விருத்திசெய்வதைப்பற்றி மாகாண கவரன்மெண்டாருக்கும் இந்தியா கவரன்மெண்டாருக்கும் கடிதம் போக்குவரத்து நடந்துகொண்டிருக்கிறது.

* * * *

இந்திய சேனுதிபதி லார்ட் கிச்சினர் வேலையைவிட்டு நீங்கியபின் அவருடைய ஸ்தானத்தில் ஜெனரல் ஸர் ஓமோர் கிரீக் என்பவர்

நியமிக்கப்படுவாரென நியூஸ் ஆப் இந்தியா " என்னும் பத்திரிகை எழுதுகின்றதாம். ஆனால் இதைப்பற்றிக் கவர்ன்மெண்டாபீஸ் மூலமான சமாசாரம் யாதொன்றும் தெரிவிக்கப்படவில்லை.

* * * *

நரம்புச் சிலந்திக்கு மருந்து:—இந்தப் பரிதாபமான வியாதிக்கு நீலகிரிஜில்லா ஸ்பிரிங்பீல்டு (Spring Field) தபால் மிஸ்டர் டி. கி.வி. ரமணையர் எனபவரிடம் ஒரு திவ்வியமான மருந்திருக்கிறது. நான்கு தடவைகட்டினால் தூர் நரம்பு விழுந்து புண் ஆறிவிடுகிறது. கைகண்ட மருந்து. பலரைச்சௌக்கியப்படுத்தியிருக்கிறது. நான்கு தினம் கட்டப்பட்ட மருந்துக்கு ரூபாய் இரண்டு வேண்டியவர்கள் எழுதி வரவழைத்துக்கொள்ளலாம். சாதாரண கார்பாலிக் ஆயில் (Carbolic oil) நோயிருக்குமிடத்தில் தடவிக்கொண்டு வந்தால் கூடிய சீக்கிரத்தில் புண் வோற்றுப்போகும்.

* * * *

இதன் சிகிச்சையில் ஒரு சுலபமான முறையாவது :—நாட்டு மூலிகைகளில் ஒன்றாகிய வேலிப்பருத்தி (உத்தாமணி) இலையைக் கொண்டுவந்து இடித்துச் சாறுபிழிந்து அரை அவுன்ஸ் எடையளவாக நிறுத்து மேற்படி சாற்றை முட்டையின் வெள்ளைக்கருவுடன் சேர்த்து வறுத்துப் பதமானதும் எடுத்துவைத்துக்கொண்டு மூன்று நாளைக்கு சாப்பிடுவதுடன், மேற்படி இடித்த இலையைப் புண்ணாகியிருக்குமிடத்திற்கட்டி வரவேண்டும்.

இதற்குப்பத்தியம் கிரந்தி பதார்த்தங்கள் ஆகா. மேற்படி முறையை மாதத்தில் அமாவாசியை தினத்துக்குப் பின் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் சாப்பிட ஆரம்பம் செய்து மூன்று நாள் சாப்பிட்டு வரவேண்டும். மூன்றுதினமும் மேற்படிப் பச்சை இலையைக் கொண்டுவந்து செய்து சாப்பிடுவது நலம். எளிய ஜனங்களுக்கு இது ஒரு சுலபமான முறையாக இருக்கும்.



ஸ்ரீ தனிராம் திரும்பிவிட்டார் ;—பஞ்ஜாப் ஆபட்டபாத் என்னுமிடத்திலுள்ள ஆரிய ஸமாஜ சபையின் பிரஸிடெண்டாகிய ஸ்ரீ தனிராம் என்பவர் சென்ற வருஷத்தில் ஒரு பால்காரனோடு சண்டைபிடிக்கப்போனதாயும் அவனுக்காக அவனைச் சேர்ந்த மகமதியர்கள் பெருங்கலகம்செய்ய யத்தனித்ததாகவும், அதுபற்றி கவர்ன்மெண்டார் ஸ்ரீ தனிராமை அந்த ஜில்லாவைவிட்டுத் தேசப்பிரஷ்டம் செய்துவிட்டதாகவும், அதுமுதல் ஸ்ரீ தனிராம் வேறிடங்களில் வசித்துக்கொண்டு வந்ததாகவும் சென்ற வருஷத்தில் வெளியிட்ட சமாசாரம் நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். இப்பொழுது மேற்படி ஸ்ரீ தனிராம் தம்முடைய சொந்த ஊருக்குப் போகும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறார்.

* * * *

டாஜிலிங் ரெயில் கேஸ் :—சில மாதங்களுக்குமுன்னே கல்கத்தாவுக்கும் டார்ஜிலிங் நகரத்துக்குமிடையில் சென்றுகொண்டிருந்த ஒரு வண்டியில் ஸ்ரீ தூர்க்காசரணலின்யால் என்னும் ஒரு வக்கீல் இரண்டு வெள்ளைக்காரர்களை அடித்து விட்டதாய் கொண்டுவரப்பட்ட கேஸ் இவ்வளவு காலமாய் எத்தனையோ இடங்களில் விசாரணை செய்யப்பட்டு இப்பொழுது கல்கத்தா ஐக்கோர்ட்டில் முடிவாய் விசாரணை செய்யப்பட்டதில் வக்கீலுக்கு 4 வருஷம் கடினசிக்ஷை விதிக்கப்பட்டது.

* * * *

ஒரு பீரங்கி கண்டுபிடிக்கப்பட்டது :—கல்கத்தா படேபஜாரில் ஒரு கட்டிடம் கட்டுவதற்காக சில கொத்தர்கள் வாணம் தோண்டிக்கொண்டிருக்கும்பொழுது வாணத்தின் அடிவாரத்திலே ஒரு பிரமாண்டமான இரும்புச் சாமான் இருப்பதாய்க் காணப்பட்டது. அதைச் சுற்றிலும் தோண்டிச் சாமானை யெடுத்துப்பார்த்தபொழுது அது பெரிய பீரங்கி யென்று தெரியவந்தது. அது யாரால் எப்பொழுது எதற்காக புதைக்கபபட்டதென்ற விவரம் தெரியவில்லை. இந்தப் பீரங்கியின் நீளம் சுமார் மூன்று அடி இருக்குமெனவும், 400 ராத்தல் நிறையிருப்பதாயும் தெரிவிக்கப்படுகின்றது.

சென்ற மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் இரண்டு மாணாக்கர்கள் பரீக்ஷை தவறிவிட்டார்களென்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிழை சில தினங்களுக்குமுன் கண்டு பிடிக்கப்பட்டு, அந்த இருவரும் பரீக்ஷை தேறிவிட்டதாய் இப்பொழுது யூனிவர்சிட்டி ரிஜிஸ்தரரால் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு மாணாக்கர்களும் பெங்களூர் செனட்ரல் காலேஜில் வாசிக்கும் மாணாக்கர்களாம். ஒருவர் பெயர் கோவிந்தராவ், மற்றொருவர் பெயர் பொன்னையா சாமுவெல்.

*   *   *   *

அபூர்வ முருங்கைமரம் :—ஒருவர் எழுதுகின்றார் :—ஓர் முருங்கைமரம் தன் கிளைகளில் பிஞ்சுக்காய் காய்க்கிற புதினத்தைக் கண்ணுற்று இது எங்ஙனமானதென சங்கற்பிக்க, முருங்கை நெற்றில் விதைகளுக்கூடே பிஞ்சம் விதையைத் திணித்து நட்டுக்குத்தாக முளைக்கவைத்தால் பலவிதைகள் திரண்டு ஒரே மொத்தமாய் முளைத்து பின்பு ஒன்றாய்ச் சேர்ந்து ஒரே விருட்சமாகிறதென்றும் அப்படி உண்டாகும் விருட்சத்தில் இருவகைக்காயும் உண்டாகிறதென்றும் இப்படி கேட்டனன் இது ஓர் நூதன பதியம்.

*   *   *   *

பத்திராதிபர் கான்பரன்ஸ் :—இந்தியாவில் இப்பொழுது பத்திரிகை நடத்தும் பத்திராதிபர்களுக்கும் அச்சுக்கூடக்காரர்களுக்கும் மிகவும் அபாயகரமான காலங்களும் சட்டங்களும் தோன்றியிருப்பதால் பொதுவாய்ப் பத்திரிகை நடத்தவேண்டிய முறை இப்படியென்றும் சமாசாரங்களை அறிவிக்கும் விதம் இப்படி என்பதைப்பற்றியும் ஆலோசனை செய்து இந்தியப் பத்திரிகைகளின் க்ஷேமத்தை பாதுகாப்பதற்காக இந்தியாவிலுள்ள பத்திராதிபர்களெல்லாரும் சேர்ந்து ஒரு கான்பரன்ஸ் நடத்தவேண்டுமென்று லாகூர் "இந்துஸ்தான்" என்னும் பத்திரிகை பிரேரேபிக்கின்றது. இந்தப் பிரேரேபணையில் நாமும் மிகுந்த அநுதாபம் காட்டுகின்றோம்.



சென்னை மகாணத்தில் தொழிற்சாலைகள் :—இச்சென்னை மாகாணத்தில் சென்ற 1907ம் வருஷத்தில் வேலைசெய்துகொண்டிருந்த தொழிற்சாலைகளின் மொத்தத் தொகை 123. 1906ல் 100 தொழிற்சாலைகள் தான் வேலை செய்து கொண்டிருந்தன. இச்சென்னையில் ஒரு தொழிற்சாலையும் வெளி ஜில்லாக்களில் 22 தொழிற்சாலைகளுமாக 23 சாலைகள் தொழிற்சாலை சட்ட விதிகளை அனுசரித்து சென்ற வருஷத்தில் புதிதாய் வேலைசெய்ய ஆரம்பித்தன. கிருஷ்ணா ஜில்லாவில் 15 தொழிற்சாலைகள் புதிதாய்ப் பதிவு செய்யப்பட்டன. 14 பெஜவாடாவில் பதிவு செய்யப்பட்டன. 1 ஏலூரில் பதிவு செய்யப்பட்டது. குண்டூர் ஜில்லாவிலும் 3 தொழிற்சாலைகள் தொழிற்சாலை சட்ட விதிகளின் கீழ் வேலை செய்ய ஆரம்பித்தன. எல்லாத்தொழிற்சாலைகளின் சுகாகார நிலையும் திருப்திகரமாயிருந்ததோடு அவைகளில் வேலை செய்யும் கூலியாட்களின் தேகஸ்திதியும் திருப்திகரமாயிருந்தது.

*   *   *   *

இந்தியாவில் குடைகளின் இறக்குமதி :—அன்னிய தேசங்களிலிருந்து குடைகள் வருவது வருஷாவருஷம் குறைந்து கொண்டே வருகிறது. ஆயினும், குடை செய்யும் சாமான்களாகிய கம்பிகள், பிடிகள் துணிகள் இவைகள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. 1905 ம் வருஷத்தில் 2,095,592 குடைகள் இறக்குமதியாயின. 1906 ல் 1,881,322. முந்தின வருஷத்தில் இறக்குமதியான குடை சாமான்களின் மதிப்பு 8,56,575 ரூபாய். ஆகவே அன்னிய சாமான்களைக்கொண்டு குடைகள்செய்யுந்தொழில் புதிதாய் ஸ்திரப்பட்டு வருகின்றது. அஃதாவது, இதுவரையில் குடைகள் செய்யும் கூலிகளையும் நாம் அந்நியர்க்குக் கொடுத்து வந்தோம். இப்போது அந்தக்கூலி நம் தேசத்தாருக்கு உதவுகிறது. சாமான்களும் நம் தேசத்திலேயே செய்யப்பட்டால் நம் தொழிலாளிகள் இன்னும் அதிக லாபம்அடைவார்கள். கம்பிகள் அந்நிய தேசங்களிலிருந்து வரவேண்டியது சில காலத்துக்கு அவசியமானாலும், பிடிகளும் துணிகளும் நம் தேசத்திலேயே செய்யப்படக்கூடும்.

**ஒரு பொல்லாத சிவிங்கிப்புலி** :—ஸிம்லாவுக்கடுத்த லூரியென்னும் ஒரு ஊரிலிருந்து பிடித்துக்கொண்டு வரப்பட்டது. சிறிது காளாய்க் காணாமற்போன ஒரு ஆளைத்தேடிக்கொண்டு சென்ற சிலர் ஒரு குகையில் இந்தச் சிவிங்கிப்புலி கிடப்பதைக்கண்டு சுட்டார்கள். புலி அகப்பட்டுக்கொண்டது. இந்தப்புலி இதுவரையும் அக்கம் பக்கத்திலுள்ள சுமார் இருபது மனிதரைப் பிடித்துத் தின்றிருக்கின்றது. சுமார் 12 பேர்களுக்குமேல் இந்தப் புலியினாற் காயமடைந்து தப்பியிருக்கின்றார்கள். தெய்வச்செயலாய் இப்பொழுது பிடிக்கப்பட்டது. இந்தப்புலி ஸிம்லாவுக்குக் கொண்டுவரப்பட்டு, அதன் வயிற்றைக் கீறிப் பார்த்தபொழுது வயிற்றுக்குள் ஒரு மனிதனுடைய எலும்புகளும் ஏராளமான கூந்தல் உரோமமும் காணப்பட்டது. கூந்தல் உரோமமும் காணப்பட்டபடியால் சமீபத்தில் ஒரு பெண் இந்த மிருகத்துக்கு இரையானாளென்று விளங்குகின்றது.

* * * *

**நவாப் சாலிமுல்லா** :—இவ்வருஷம் அமிர்தஸரஸில் கூடும் எல்லா இந்திய மகமதியக் கல்விச்சங்கத்துக்கு டெக்கா நவாப் சாலிமுல்லா பகதூர் சபாநாயகராயிருக்கும்படி கேட்கப்பட்டிருக்கின்றார்.

* * * *

**காசிப்பட்டு** :—சென்ற ஐந்தாறு வருஷங்களாக காசிப்பட்டணத்தில் " காசிப்பட்டு " என்று சொல்லப்படும் ஒருவித இளப்பமான பட்டு கைத்தறிகளில் நெய்யப்பட்டுவருகின்றது. இது ஐக்கிய மாகாணங்களின் மற்ற இடங்களிலும் செய்யப்பட ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இஃது என்னவிதமான பட்டினால்செய்யப்படுகின்றதுஎன்று தெரியாமலிருந்து, இப்போது பம்பாயிலுள்ள ஒரு கம்பெனி செய்யும் பட்டுநூல்களைக் கொண்டு செய்யப்படுவதாகத்தெரிகிறது. இந்தக் கம்பெனி இட்டலிதேசத்தில் பட்டுப் பயிர் செய்யும் ஒரு வர்த்தகக் கூட்டத்தாருக்கு ஏஜெண்டாயிருந்து, அத்தேசத்தில் வீணாய்ப்போகும் பட்டை வரவழைத்து நூலாகச்செய்து காசிக்கு அனுப்புகின்றது. பட்டுப்பூச்சிகளை வளர்த்து அவைகளால் கிடைக்கும் ப

உ

குமரன் துணை.


# விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 7. } 1908-ஞு செப்டம்பர்-மீ. { பகுதி 9.


## இந்துதேச சரித்திரம்.

நம் தேச சரித்திரம் பலபேர்களால் பலகாலங்களில் பற்பலவிதமாக எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் ஒருங்குதிரட்டத்தொடங்கினால் ஒருபுத்தகசாலையை முழுவதும் அலங்கரிக்குமென்பதிற் சிறிதும் ஐயமில்லை. எழுதினவர்களிற்பலர் இராஜாங்க ஆங்கில உத்தியோகஸ்தர்களாகவும் பலர் ஆங்கில வித்தியாகுருக்களாகவும் சிலர் பாதிரிகளாகவும் மற்றும்சிலர் சுதேசிகளாகவும் இருக்கின்றனர். சுதேசிகளிற் பலர் கலாசாலை மாணாக்கர்களுக்கென்றே எழுதியுள்ளார்கள். அப்புத்தகங்களும் ஆங்கிலேயர் எழுதிய புத்தகங்களை யனுசரித்து எழுதப்பட்டிருக்கின்றன. தேசாபிமானத்தையும் நம் நாட்டு உண்மைச் சரித்திரங்களையும் விளக்கி ஜனங்களுக்குஉண்மையான அறிவைப் புகட்டப்பட்டதேசசரித்திரம் இன்னும் எழுதப்படவில்லையென்றே சொல்லலாம். தற்காலத்தில் எழுதப்பட்ட நம் நாட்டுச்சரித்திரங்களில் சில மிகவும் அழகாயும் கம்பீரதொனியோடும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனாலும் அவை ஒவ்வொரு பகுதியையே நன்கு விளக்குகின்றன. முழு சரித்திரமும் அவ்வாறு எழுதப்படவில்லை. இனிமேல் எழுதப்படவேண்டியதாக விருக்கிறது. தற்காலத்தில் ஸாசன ஆராய்ச்சி பற்பலவிடங்களில் நடந்துவருகிறபடியாலும் பழைய பாஷா நூல்கள் பல தற்காலம் ஏராளமாய்வெளியாகிறபடியாலும் அவையெல்லாம் தேசசரித்திரத்தின் பல உண்மைகளை நன்கு வெளிப்படுத்துகின்றன. அவைகளால் புதைந்துகிடக்கின்றபல அரிய சரித்திர உண்மைகள் வெளிவரத்தொடங்

குகின்றன. அவற்றையெல்லாம் உபயோகித்து இந்துதேச சரித்திரத்தைப் பலபகுதிகளாகப் பிரித்துப் பல வித்துவான்கள் அவ்வேலையில் தலையிட்டுக்கொண்டாலொழிய தேசாபிமானத்தோடு கூடிய உண்மைச்சரிதம் வெளிப்படுதல் அரிதாகும். ஆகையால் நம்நாட்டார் இது விஷயத்தில் கவலைசெலுத்தி இவ்வரிய தொழிலை முடிக்க ஏற்பட்டாலொழிய நாம் உண்மைத் தேசாபிமானிகளாகோம். இவ்விஷயம் ஒருவரால் ஆகக்கூடியதாயினும் அப்படிப்பட்டவர் அபாரசக்தி யுடையவராக இருத்தல்வேண்டும். கிப்பன் என்பவர் ரோமன் சரித்திரத்தை உலகம் வியக்க எழுதினர். ஒரே மனுஷன் தன்புத்தியையும் காலத்தையும் பொருளையும் செலவிட்டு சிரமத்தைச்சிறிதும் பாராட்டாமல் தன் ஆயுள் முழுதையும் அவ்வொருவிஷயத்திலேயேபோக்கி முயற்சித்தபடியால் அவ்வேலைஇனிதுமுடிவுபெற்றது. அம்மாதிரி மகான் ஒருவர் நமக்கு ஏற்பட்டாலொழிய ஒருவரால் செய்து முடித்தல் கூடாதவிஷயம். ஆகையால் பலர்கூடியே இவ்வரிய தொழிலை முடிக்க முயலவேண்டும். சுதேசிகளுக்குள் தற்காலம் அற்புதமாய் இவ்வாறான சரித்திரங்கள் எழுதக்கூடிய பலபுத்திமான்களிருக்கிறார்கள். அவர்கள் ஆங்காங்கு இலைமறைகாய்கள்போல் மறைந்துகிடக்கின்றனர். அவர்களை ஒன்றுசேர்த்து அவரவர்க்கு இன்னவேலை என்றுபகிர்ந்துகொடுத்து மேற்பார்ப்பவர் ஒருவரிருந்தால் இவ்விஷயம் கூடியசீக்கிரம் கைகூடலாம். அவ்வாறான சரித்திரம் நம் ஜனோபகாரத்தின்பொருட்டு எழுதப்படவேண்டியது என்பது மட்டும் மிகவும் இன்றியமையாதது. அப்புத்தகத்தை முதலில் ஆங்கிலத்திலேயெழுதிப் பிறகு அந்தந்தத் தேசபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டால் மிகவும் உபகாரமாகவிருக்கும். தற்காலம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அத்தேச சரித்திரங்கள் பறபல ரூபமாக வெளியாகின்றன. அவைகளைப்புதிதுபுதிதாக தினம்தினம் வாங்கிப்படிக்கிறோம். அத்தேசங்களைப்பார்த்தாவது நாம் முயற்சிக்கக்கூடாதா? சமீபத்தில் வெளியான பல தேசசரித்திரங்களில் நம் இந்தியாவைப்பற்றி எழுதியிருப்பது மிகவும் சொற்பமே. நம்நாடு பரப்பிலும் புத்தியிலும் ஜனத்தொகையிலும் மற்ற அநேக தேசங்களினும் எத்தனையோபங்கு மேலானதானாலும் அவ்வளவு பெருமையாக அந்நியநாட்டுச் சரித்திரக்காரர்கள்



கருதுவதில்லையெனத் தெளிவாகிறது. இதற்கு நம்தூக்கமே முக்கியகாரணம். நாம் நம் தேசாபிமானத்தைக்காட்டி அம்மாதிரி வேலை செய்ய முயன்றாலன்றோ அந்நியர் நம்மை லக்ஷியம் செய்வார்கள். நாமோ இதனைச்சிறிதும் உணராமல் அந்நியருடைய வேலையிலேயே ஜீவனம் செய்கிறோம். நம் தேசசரித்திரம் மிகவும் சொற்பம் எழுதப்பட்ட புஸ்தகங்களைச்சிறிதும்வெட்கமின்றி ஏராளமான பொருள்கொடுத்துவாங்கி நம் புஸ்தகசாலையை அலங்கரிக்கத் தயாராயிருக்கிறோம். இஃதென்ன பரிதாபம்? இந்த வெட்கக்கேட்டை யாருடன் சொல்லியழுகிறது. நமக்குச்சிறிதும் உண்மைத் தேசாபிமான உணர்ச்சியில்லையே? இது நிற்க. நம் கலாசாலைகளில் உபயோகப்பட்டுவரும் சரித்திரங்களை வாசித்தாலோ மிகவும் வேடிக்கையாகஇருக்கும். பலபுஸ்தகங்கள் உண்மையை மறைத்தே உரைக்கும். பாதிரிமார்கள் எழுதியிருக்கிற புஸ்தகங்களை மாணாக்கர்கையிற்கொடுத்து இளமையிலேயே நம் தேசசரித்திரத்தை வெறுக்கும்படியாகச் செய்துவிடுகிறோம். அவைகளில் தேசாபிமானம் என்பது சிறிதும்காணப்படமாட்டாது. நம்தேச அரிய நடையுடை பாவனைகள்பழித்து எழுதப்பட்டிருக்கும். நம் பெரியோர்களை இழிந்தே கூறியிருக்கும். அந்நியர் குறைகளை ஒளித்தே சொல்லப்பட்டிருக்கும். "தொட்டிலிற்பழக்கம் சுடுகாடுமட்டும்" என்றவண்ணம் சிறுபோதே கற்ற விஷயங்கள் நம்மனத்தைவிட்டு எளிதில் அகலாமல் தடித்துப்போய்விடுகின்றன. அவைகளைச்சீர்திருத்த நாம் முயல்வதுமில்லை. நாமேன் நல்லமாதிரியாய் அழகான நடையில் தேசாபிமானத்துடன் நம் சரித்திரத்தை எழுதமுயலவில்லை. எல்லாவற்றிற்கும் நம் தூக்கமேகாரணம். உபாத்தியாயர்கள் இக்குறையை நிவர்த்திசெய்யச் சக்தியுள்ளவர்களே. ஆனால் அவர்களுடைய எளிமைத்தனம் அவர்களை அதனைச்செய்யவொட்டாமல் தடுக்கின்றன. இவ்விஷயங்களில்தலையிட்டு தேசாபிமானத்தோடு உழைக்க அச்சாபீஸ்காரர்கள் முன்னேக்கிவருவது அரிதாக விருக்கிறது. அவ்வாறு இரண்டொருவர்முயற்சித்து வெளியிட்டாலும் அவைகளைப் பள்ளிக்கூடங்களில் நுழைக்கப் பகீரதப்பிரயத்தனம் செய்யவேண்டியிருக்கின்றது. முயற்சியும் பலசமயங்களிற் பயன்படுகிறதில்லை.

முதலில் சிறுவர்களுக்குத் தங்கள் ஜில்லா சரித்திரங்கள் நன்கு தெரியும்படியான புஸ்தகங்கள் எழுதப்பட்டுப் படங்களாக ஏற்பட

வேண்டும். பின்னர் இராஜதானிசரித்திரம் நன்கு தெரியவேண்டும். பின்னர் நம் பரதகண்டத்தின் முழுச்சரிதம் தெரியவேண்டும். பூகோளவிஷயத்தில் இம்முறை ஒருவாறு அநுசரிக்கப்பட்டிருக்கிறது. சரித்திர விஷயத்தில் இதனை முற்றிலும் மறந்திருப்பதுஏனோ தெரியவில்லை. மதுரையில் வசிப்பவனுக்குத் திருமலைநாயக்கர் சரித்திரமும் மங்கம்மாள் சரித்திரமும் தெரியாமல் ஆக்பர்சரித்திரமும் நார்ஜஹான் சரித்திரமும் முதலில் தெரிந்தால் உண்மைச்சரித்திர உணர்ச்சியும் தேசாபிமானமு முண்டாகுமா? ஆகையால் வித்தியாசாலைகளில் படிப்படியாகத் தேச சரித்திரங்களைக் கற்பிக்க முயலவேண்டும். சிறுவர்களுக்குப் பூகோளமும் சரித்திரமும் சிலவருஷங்கள்வரை ஒன்றாகவே கற்பிக்கப்படவேண்டும். பிரித்துக் கற்பிப்பதிற் பயனில்லை. இதுவிஷயத்தில் வித்தியாஇலாகாதார் ஏனோதானோ வென்றுஇருப்பது சரியாகமாட்டாது. பெற்றோர்களும் இதுவிஷயத்தில் கவலையெடுத்துக்கொள்ளல் வேண்டும்.

ஆகையால் தேசசரித்திர விஷயமாய் நாம் பாடுபட்டாலொழிய உண்மைத் தேசாபிமானிகளாகமாட்டோம். இதுவிஷயத்தில் ஜப்பான்தேசத்தாரே நமக்கு நிதர்சனமானவர்கள். தங்கள் நாட்டின் சரித்திரத்தைத் தங்கள் சுயபாஷையிற் கற்பித்ததனாற்றான் அத்தேசத்தில் தேசாபிமானம் காட்டுத்தீயைப்போற்பரவத்தொடங்கிற்று. நாம் தகுந்தவண்ணம் முயற்சித்தாலொழிய இக்காரியம் கைகூடுவது அரிது. ஆகையால் நம்மக்களுக்கு நம்தேசத்தின் உண்மைச் சரித்திரத்தைத் தேசாபிமானம் உண்டாகும் வண்ணம் கற்பிப்பதே நம்கடமை. அந்நியர் எழுதிய புஸ்தகங்களை நம்பிவிட்டுச் சும்மாயிருப்பது தேசாபிவிருத்திக்குப் பெருந்தடையாகும்.

பத்திராதிபர்.

## சர்வகலாசாலையும் தமிழ் வியாசமும்.

சர்வகலாசாலையார் தாங்கள் நடத்தும் பரீக்ஷை விஷயமாய் பல சீர்திருத்தங்கள் செய்திருப்பதை அனைவரும் அறிவார்கள். அவை அடுத்த ஜனவரி மாதமுதல் அநுஷ்டானத்துக்கு வரும். எப். ஏ. பீ. ஏ-க்குத் தமிழ் முதலிய தேசபாஷைகளைக் கட்டாய பாடங்களினின்றும் நீக்கிவிட்டனர். சர்வகலாசாலையார் செய்த இவ்வேற்பாட்டுக்குச் சென்னை கவர்ன்மெண்டார் சம்மதிக்க இஷ்டமில்லாதவர்களாயிருந்தும் போதுமான சாவகாசமில்லாதபடியால் இவ்விஷயத்தைக்கவனிக்க முடியவில்லை யென்றும், ஆகையால் தமிழ் வியாசத்தை மட்டுமாவது கட்டாயமாய் எப்.ஏ. பரீக்ஷைக்காவது ஏற்படுத்தவேண்டுமென்றும் அதில் நூற்றுக்கு ஐம்பது வீதம் மார்க்கர் வாங்காவிடில் பரீக்ஷையில் தேறினவர்களாகக் கருதப்படமாட்டார்களென்றும் நிபந்தனை ஏற்படுத்தினார்கள். அநேக புத்திமான்களுடைய அபிப்பிராயத்தில் அது மிகவும் கடுமையான ஏற்பாடு என்பதே. சர்வகலாசாலையார் அதனைக்குறித்து மறுபடியும் ஆலோசனை செய்து கவர்ன்மெண்டாருக்கு அது விஷயமான கஷ்டத்தை எடுத்துக்காட்ட ஒரு சப்கமிட்டி நியமனஞ் செய்தார்கள். அவர்கள் கூடி அது விஷயமாய்த் தாங்கள் செய்த தீர்மானத்தை சர்வகலாசாலைச் சபையாருக்கு அனுப்பியிருக்கிறார்களென்று தெரியவருகின்றது.

வியாசத்தில் மட்டும நூற்றுக்கு ஐம்பது வாங்குவது கஷ்டமென்று அவர்கள் மனத்திலும் பட்டு அதனையே எடுத்துவிடும்படிக்கும் அவ்வாறு எடுக்கமுடியாதென்றால் நூற்றுக்கு ஐம்பதை மிகவும் குறைக்க வேண்டுமென்றும் சிபார்சு செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அவர்கள் எவ்வாறு கூறியிருப்பினு மிருக்க. அதன் விஷயமாய் நாம் சீர்தூக்கிப் பார்ப்போம்.

முதலாவது வியாசம் எழுதுவதாகவிருந்தால் அந்தந்தப் பாஷையின் நூல்களை நன்கு கற்றாலொழிய சரியானபடி எழுதவியலாது. அழகான நடையெழுதுவதற்குச் செய்யுள்நடைப் பழக்கமிருந்தா

லொழிய இயலாது என்பது எப்பாஷைக்கும் ஏற்றதாகும். அவ்வாறிருக்க மாணவர்யாதொன்றும் படியாமல் நல்ல நடையில் வாசகம் எவ்வாறு எழுதமுடியும். வசனநடைக் கிரந்தங்கள் வாசித்தாலே போதுமென்றாலும் ஒரு மாதிரியாக ஒப்புக்கொள்ளலாம். அவ்வாறு ஒன்றுங் கூறாமல் விபாசத்தில் மட்டும் சுயபாஷையில் நூற்றுக்கு ஐம்பது வாங்கவேண்டுமென்றால் எவ்வாறுமுடியும் இது நிற்க,

வியாசத்தைப் பரீக்ஷகர்கள் மதிப்பதில் ஒவ்வொருவரும் எந்த ஒழுங்கை யனுசரிக்க முடியும். ஒவ்வொருவரும் தத்தம் மனம் போன போக்கெல்லாம் போவார்கள். வல்லான் வகுத்ததே வாய்க்காலாக முடியும். அதற்கு ஒரு கட்டுப்பாடு செய்தாலும் சாத்தியமன்று.

இரண்டாவது நடை விஷயத்தில் ஒருவர் பிரியப்படுவர். விஷயங்களை ஒருவர் மேலாகக்கொள்வர். விஷயங்களிலும் ஒருவர் எதிர்பார்க்குமாப்போல் மற்றொருவர் எதிர்பார்த்தல் முடியாததே. ஒருவரே ஒருமுறைக்கு மும்முறையாகப் பார்த்தால் ஒவ்வொரு முறையும் ஒவ்வொருமாதிரியாகப்படும். ஆகையால் மாணாக்கர்கள் நூற்றுக்குப் பாதிமார்க்கு வாங்கவேண்டுமென்று எதிர்பார்ப்பது அநீதம்.

மூன்றாவது கீழ் வகுப்புக்களிலிருந்தே ஸமஸ்கிருதம் படித்து வந்தவர்கள் யாது செய்வார்கள். ஆங்கில கலாசாலைகளில் தமிழ் எடுத்துப் படிக்கும் மாணவர்களே தமிழைப் பிழைபற எழுதமுடியாதவர்களாயிருக்கத் தமிழ்நூல்களையே சிறிதும் பார்த்துப் பழகாத ஸமஸ்கிருதம் கற்ற மாணவர்களைத் தமிழ்நடையெழுத எதிர்பார்ப்பது குருடனை ராஜவிழி விழி யென்பதுபோலும். ஸமஸ்கிருதம் படித்தவர்கள் விஷயங்களை அழகாய் எடுத்துரைக்க முடியும். தமிழ் நடை எவ்வாறு அறியமுடியும். ஒரு பாஷையைப் பேசினதால் மட்டுமே எழுதவும் அறிய முடியுமா. அதற்கென்றே அடிப்படை முதல் பழக்கமிருந்தாலொழிய திடீரென்று எவ்வாறு எழுதமுடியும். ஆகையால் ஸமஸ்கிருதம் எடுத்துப் படித்து மெட்ரிகுலேஷன் பரீக்ஷை தேறின மாணவர்கள் பாடு திண்டாட்டமாகவே முடியும். அவர்களிற்பலர் புத்திசாலிகள். இஃதொன்றிற் றவறிப்போனால்



எல்லாவற்றிலும் தவறிப்போனதாகப் பாவித்தால் எவ்வளவு அநீதி. ஆகையால் வியாசத்தைத் தனிப்பரீக்ஷையாக ஏற்படுத்தியிருத்தல் மாணவர்களுக்குச் சங்கடமாகவே முடியும். அதனை உடனே நீக்க வழிதேடவேண்டுவது எல்லோருடைய கடமையுமாம்.

ஒருகால் கவர்ன்மெண்டார் அதனைக் கட்டாயபாடமாகவே வைக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படும் பக்ஷத்தில் ஆங்கிலத்தில் வியாசத்துக்கு வைத்திருப்பதுபோல் சில புஸ்தகங்களைக் குறிப்பிட்டுப் பாடமாக வைத்து அதிலும் கேள்விப்பத்திரம் ஏற்படுத்தி அதற்கு மார்க்கும் திட்டஞ்செய்து அதனுடன் பாஷாசரித்திர புஸ்தகத்தையும் பாடம் வைத்து அதிலும் பரீக்ஷை ஏற்படுத்தி மூன்றிலும் சேர்த்து நூற்றுக்கு இத்தனை என்று ஏற்படுத்தினால்நன்றாயிருக்கும். பாஷா சரித்திரத்தை நீக்கினாலும் வசன கிரந்தங்கள் ஏற்படுத்தி அதன் மார்க்கையாவது வியாசத்துடன் சேர்க்கவேண்டும். அப்படியும் முடியாதென்றால் வியாசத்துக்கு நூற்றுக்கு முப்பது வாங்குதல் போதுமென்று ஏற்படுத்தவேண்டும். அதற்கு அதிகமாக ஏற்படுத்தினால் மிகவும் அநீதமாகும். எல்லோரும் தேச பாஷையில் நல்ல வியாசம் எழுதக் கற்றுக்கொள்ளுதல் நன்மையே யாயினும் அதனை ஒரு கட்டாயபாடமாக ஏற்படுத்துதல் கஷ்டமாகும். மாணவர்களுடன் பழக்கப்பட்டவர்களுக்கே அவர்களின் சக்தி நன்கு விளங்குமே ஒழிய ஏனையோர் அறிவது அசாத்தியம். பிரசவித்தவளுக்கன்றோ பிள்ளையருமை தெரியும். மாணவர்களுக்கு வியாசம் அவசியமென்றால் அடிப்படைமுதலே அவர்களைப்பயிற்ற ஏற்பாடுசெய்ய வேண்டும். ஆகையால் அதுவிஷயத்தில் சர்வகலாசாலையாரும் கவர்ன்மெண்டாரும் புனராலோசனை செய்து மாணவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்திக்க முயல்வார்களென்று நம்புகிறோம்.

சிலர் தமிழில் தக்க வசனநூல்கள் கிடையா என்று கூறுகிறார்கள். ஆங்கிலத்தைப்போல் வசனநூல்கள் ஏராளமாயிராவிடினும் ஆங்கில கலாசாலை மாணவர்களுக்கும் தமிழ் நடை எழுத விரும்புவோர்களுக்கும் வசனநூல்களில்லாமற் போகவில்லை. நல்ல நூல்களாக அநேகமிருக்கின்றன. இராமலிங்க சுவாமிகளுடைய மனுமுறைகண்ட வாசகம்,ஆறுமுக நாவலரவர்கள் திருவிளையாடற்புராண

பெரியபுராணவசனங்கள்,மகாமகோபாத்தியாயர் வே. சாமிநாதையர் அவர்கள் புத்த சரித்திரம். மணிமேகலைச் சுருக்க முதலியன.தொழுவூர் வேலாயுதமுதலியார் பட்டினத்தடிகள் சரித்திரம், பெரியபுராணச் சுருக்கம்,ஸ்ரீநிவாசராகவாசாரியார் அவர்களது விஷ்ணுபுராணம் விநோதரசமஞ்சரி, பஞ்சதந்திரமுதலிய அநேகநூல்களில்லாமற்போகவில்லை.

முற்காலத்து உரையாசிரியர்களுடைய நடையினும் சிறந்த நடை இனி ஒருவராலும் எழுதமுடியாதென்பது மறுக்கத்தகாத விஷயமன்றோ.

பரிமேலழகர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலியோருடைய நடையும் சுவாமிநாத தேசிகர், சிவஞானமுனிவர் முதலியோருடைய நடையையும் ஒருமுறையாவது வாசித்தவர்கள் இவ்வாறு கூறுவார்களா. புறநானூற்றுரை நடைக்குத்தான் ஈடுண்டா. எவ்வித நடைப்போக்கும் சுட்டிக்காட்டலாமே. தற்காலங்களிலும் சில நன்னடைப் பிரபந்தங்கள் எழுதப்படவில்லையா நன்னடைப்பத்திரிகைகள் தமிழிலில்லாமற்போயிற்று. ஆகையால் இக்காரணம் சரியான காரணமாகாது.

ஆங்கிலம் போல பலவிஷயங்களையும் சாஸ்திரக்கருத்துக்களையும் அமைத்து எழுதப்பட்ட நூல்கள் அதிகமில்லை. இனியே ஏற்படவேண்டும் என்று கூறலாமே ஒழிய நன்னடை வசன நூல்களில்லையென்று கூறுதல் பொருந்தாது. அதனால் தமிழ் வியாசத்தையே ஒழித்துவிட வேண்டுமென்பதும் பொருந்தாது. வியாசத்தைத் தனிமையான கட்டாயபாடமாக ஏற்படுத்துதல் நலமாகாது என்று மட்டும் கூறுவோம். இதுவிஷயத்தில் மாணவர்களுடைய நன்மையை முதலிலும் தேசக்ஷேமத்தை அதற்கடுத்தும் யோசிக்கவேண்டுவது புத்திமான்களின் கடமை.

பத்திராதிபர்.

# சிந்தாமணி சரித்திரம்.

## 8-வது அத்தியாயம்.

[143-ம் பக்கத்தொடர்ச்சி]

பிறகு அவ்வந்தணர் அவருடைய கிருகம் சென்றவுடன் உணவுண்டு பின்னர் மனோன்மணி சத்திரத்துக்குச் செல்லலாம் என்னும் ஆவலுடன் இருக்கையில் அவருடைய சொந்தக்காரிய நிமித்தமாய் அன்றிரவே புறப்பட்டுத் திருநெல்வேலிக்கு வரும்படி அவர் முதலாளியினுடைய சமாசாரம் தந்தி மூலமாய்க்கிடைத்தது. அந்தச் சமாசாரம் வந்தவுடன் மிக்க கிலேசத்துடன்

" அட! அட! நல்ல காரியத்திற்கு இடையூறு காத்துக்கொண்டிருக்கின்றதே. நடராஜசெட்டியாருடைய நிர்ப்பந்தமான நிலைமையையும் அவருடைய மனைவி படுந்துயரத்தையும் ஒருவாறு நிவர்த்தி செய்ய முயற்சி செய்யவேண்டுமென்று எவ்வளவோ ஆதுரத்துடன் இங்குவந்தேன். அம்முயற்சிக்கு இடமன்றி உடனே திருநெல்வேலிக்கு வரும்படி சமாசாரம்வந்திருக்கின்றதே! இதற்கென்செய்யலாம்? " என்று மனத்துள் கவலையுடன் சிந்தனைசெய்தபிறகு " நல்லோர்க்குப் பரமசிவனே நற்றுணையாவான். அவன் கருணையாலன்றி நானகச்செய்துமுடிக்கக் கூடிய செயல் யாது? திருநெல்வேலிக்குப் போகவேண்டியதும் மிக்க அவசியமாயிருக்கின்றது. அவ்விடமிருந்து திரும்பி வரும்வரை ஈசன் கருணையால் செட்டியார்க்கு ஒரு தீங்கும் நேரிடாதிருந்தால் பிறகு நம்மாலியன்றமட்டும் முயற்சி செய்வோம். " என்று ஒருவாறு மனத்துட் சமாதானஞ்செய்துகொண்டு அன்றிரவில் உணவுகொண்டு பின்னர் தாமதியாமல் திருநெல்வேலிக்குப் புறப்பட்டுப் போயினர்.

இவ்வந்தணருக்குவயது இருபத்தைந்து இருக்கும். அவர் மிக்க அழகுநிறைந்த ஆகிருதியுடையவர். புன்னகை நிறைந்து பொலியும் அவர் முகக்காட்சியானது பரோபகாரமும் நீதிகுன்றாத வொழுக்கமும் நிறைந்து சாதிவர்ணாச்சிரம விதிகளை யனுசரித்து நடப்பதே மேலானதென்று திண்ணமாகக்கருதி விளங்கும் அவருடைய உள்

ளச்சிறப்பை நன்கு விளக்குகின்றது. அவர் கீர்வாணமும் தமிழும் பிழையறக்கற்றவர். சொற்பம் ஆங்கிலேயமும் பழக்கத்தினால் பயிற்சி செய்திருக்கின்றார். செல்வம் நிறைந்த சில வியாபாரிகளுக்குள் தரகராயிருந்து மாதந்தோறும் மிகுதியான திரவியத்தைச் சம்பாதிக்கின்ற பான்மையுடையவர். கல்விப்பயிற்சியும் செல்வமிகுதியும் அவரிடமமைந்திருப்பினும் இக்காலத்தினுடைய இயற்கைப்படி 'யான் எல்லாமறியவல்லேன்' என்னும் செருக்கு அவருக்குண்டாகவில்லை. தெய்வத்தையும் பெரியோரையும் இகழ்ந்தறியார். இம்மானிடப்பிறவிக்குப் பொருளுமின்பமும் ஊக்கத்துடன் தேடிக்கொள்ளவேண்டிய பேறுகளாக வமைந்திருப்பினும் அவ்விரண்டும் நிலையற்றவுடலின் வாழ்க்கைக்கே யுரியனவென்றும் உடலுக்கு வேறான ஆன்மாவிற்கு நித்தியமான பிரயோஜனத்தையும் கடைப்பேறாகிய முத்தியையும் அறமொன்றே பயக்குமென்றும் நினைந்து அக்கோட்பாட்டை முக்கரணங்களினாலும் அநுசரித்து நடக்கின்றவர். 'அத்வைத' மென்னும் சொல்லைமட்டும் கைப்பிடியாகக்கொண்டு அச்சொல்லின் பொருளறியாமல் எல்லாம் பொய் யென்று பிதற்றிக்கொண்டு நடிக்கும் அந்தணரவர் அல்லர். குடி விபசாரம் முதலிய துன்மார்க்கங்களில் பிரவேசித்து நடப்பினும் வாயால்மட்டும் 'சிவோஹம்' 'நானேபிர்மம்' என்று சொல்லிக்கொண்டும் 'உலகம் பொய்' 'என்னுடலும் பொய்' 'என்வினையும் பொய்' என்று வழுத்திக்கொண்டும் ஜாதிவர்ணாசிரமத்துக்குரிய நித்யநைமித்ய கருமங்களை வெகு சௌகரியமாகக்கைவிட்டு அலங்கோலப்படும் அந்தணரும் அவரல்லர். பரமதங்களில் வெறுப்பை வெளியிட்டு அவைகளைத் தூஷித்துப்பேசுவதே தன்னுடையமதத்துக்குப் பெருமை யென்றுட்கொண்டு தன் மதத்தையும் நன்கறியாமலும் பிறர் மதங்களையும் கிஞ்சித்தேனுமாராயாமலும் பிரதிஷ்டைக்காகமட்டும் உபந்யாஸம் செய்துகொண்டு காலத்தைக் கழிக்கின்ற அந்தணரும் அவரல்லர். தன்னைப்பெற்றுத் தனக்கு இகத்திலும் பரத்திலும் எல்லா நன்மைகளுமுண்டாகவேண்டுமெனக்கருதிச் சாஸ்திர முறைப்படிக்கும் குலாசாரப்படிக்கும் உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்வித்துப் பிர்மோபதேசத்தை அருளிய தந்தையை யாசாரியனென்றுகொள்ளாமலும் அவரையும் அவர்உபதேசித்த முறையையும் இகழ்ந்தும் கடைத்தெருவில் சரக்கைக்கொள்முதல் செய்பவர் 'அந்தக்கடையில் சரக்கு நயம் இந்தக்கடையில் விலை 'சரசம்' என்று அலைந்து வாங்குவதுபோலத் தன்மனத்துக்கிசைந்தபடி ஒருவன் நீசனாயிருந்தாலும் அவனைத் தன்னுடைய பரமாசாரியனாகக்கைக்கொண்டு அவன் பிதற்றும் மொழிகளை எல்லாச் சாஸ்திரங்களின் கருத்தை விளக்குகின்றனவென்று திண்ணங்கொண்டு 'அதோபிருஷ்டன்' 'இதோ பிருஷ்டன்' என்கிற அவ்விதியை நாடியழிகின்ற அந்தணருமவரலலர். ஆலயந்தொழுதல், பிதிர்பூஜை, அதிதிகளை யுபசரித்தல் உறவினரைப்பேணல் முதலிய ஆசரணைகளெல்லாம் நமது நாட்டினையே பாழாக்க ஏற்பட்டனவைகளென்று கருதி ஆலயத்திலிருப்பது கல்லென்றும், இறந்து சாம்பலாய்ப்போன பிதுர்க்களுக்குச் செய்யும் கருமமனைத்தும் வைதிகப்பிராமணர்களால் தங்கள் லாபத்திற்காகக்கற்பிக்கப்பட்ட சூதான முறைகேடென்றும் நாடிவரும் அதிதிகளைக் கடிந்து "ஏன் நீங்கள் மில்லாபீசில் வேலைசெய்தாவது அல்லது கடைத்தெருவில் மூட்டை தூக்கியாவது சம்பாதிக்கக்கூடாது" என்று அன்புடனுபதேசித்து அனுப்பியும் உறவினர் அணுகினும் முகங்கொடுத்துப்பேசாமல் அவமதிப்புச்செய்தும் தன்னுடலழியினும் தன் பொருள் நிலையாயிருக்கவேண்டுமென்கிற சங்கல்பத்துடன் நடக்கின்ற அந்தணருமவரல்லர். அக்நிஹோத்தரம், ஸந்யாஸம், யாகம் முதலிய புநிதமான ஏற்பாடுகளை யெல்லாம் நிந்தித்து அவைகளையநுசரிக்கும் புண்ணிய சீலர்களை அவமதித்துப் பேசியுமறியார். நாம் செய்யுமுபசாரம் அக்நிஹோத்திரத்துக்கும், ஸந்யாஸத்திற்கும், யாகத்திற்குமேயல்லாது அவைகளை யநுஸரிப்பவர்களில் சிலருடைய அக்கிரமங்களினால் அந்த ஆச்சிரமத்தினுடையவும் கருமத்தினுடையவும் பெருமைக்கு ஒரு குறையும் நேர்ந்திடாதென்று நினைத்து அவரவருடைய நடத்தை யெவ்விதமாயிருந்தாலும் எல்லா அக்நிஹோத்ரிகளையும் துறவிகளையும் யாகசீலர்களையும் உபசரித்து அவர்களுக்கு மரியாதை செய்துவரும் அரிய தன்மை அவரிடத்திற் பொருந்தியிருக்கின்றது. மெத்தப்படித்ததற்கடையாளமாக ருக்வேதம் கி. பி. இன்ன வருஷத்தில் எழுதப்பட்ட சுவடி யென்றும், ஆகமம் புராணமுதலியனவெல்லாம் அந்தந்தக்காலங்களிற் புதியன புதியனவாகச் சேர்த்துக்கோக்கப்பட்ட கட்டுக்கதைகளென்றும், இக்காலத்திற் பெரும்பான்மையோர் வசனிக்கு முறைப்படி

அவருக்கு வசனிக்கத்தெரியவில்லை. பெரியோர்களால் வேதம் ஸ்மிருதி ஆகமம் முதலியனவால் உரைக்கப்படுமாறு விதித்திருப்பதைக் காலம், பாத்திரம், இடம், மந்திரம், திரவியம் இவைகளின் பரிசுத்தியைக் கவனித்து அநுசரிப்பதே தருமமென்றும் அதின் பயன் வியஷ்டியாக அநுசரிப்போர்க்கும் ஸமஷ்டியாக அவருடைய நாட்டிலுள்ள சகல ஜந்துக்களுக்கும் கைகூடுமென்றும், அப்படி யியற்றுவதே ஸாதன முறையென்றும் கருதி நடப்பவரே தவிர ஐந்துபடி அரிசியைப்பொங்கி நூறு காலாடிகளுக்குப்பகிர்ந்து உருட்டிக்கொடுத்துவிட்டு ஊரிலுள்ள எல்லா ஆன்மகோடிகளுக்கும் பசிதீர அன்னமளித்தார் என்று பத்திரிகை வாயிலாகப் புகழப்பெறுவது தருமமாகாதென்று அவர் நன்றாக வறிந்தவர். காலையில் முழுகுவது உடலின் உஷ்ணசாந்திக்காகமட்டும் ஏற்பட்டதென்பது அவர் கொள்கையன்று. அதுவும் நித்யநைமித்ய கருமங்களும் காலக்கிரமமாக உள்ளத்தைப்பரிசுத்தபபடுத்தி ஈசுவரனுடைய கருணைக்குப் பாத்திரமாகச் செய்யும் பான்மையுடையனவென்று பக்தி சிரத்தையுடன் அவைகளைக் காலம் தவறாது அநுஷ்டித்துவருகின்றவர். பூர்வீகர்களான ஸ்ரீகண்டசிவாசாரியார், சங்கரர், இராமாநுஜர், மத்வர், ஞானசம்பந்தர் முதலியவர்கள் ஈசுவரசக்தியைப் புனைந்து அவ்யக்தமான பரம்பொருளை அந்தந்தக் காலத்திலுள்ள மானிடர்களின் மனோபக்குவத்திற்குத் தக்கவாறு பலமுறையாக வெளியிட்டு அம்முறைகளுக்கிணங்க வேதம் முதலிய தொன்னூல்களுக்கு உரையருளியிருப்பதைத் தூரத்தள்ளியிட்டு, ஹக்ஸ்லி, ஸ்பென்ஸர், மாகஸ்மில்லர், டியூஸன், முதலிய வர்ணபாஹ்யர்களைப் பரமாசாரியர்களாகத்தொழுது அவர்களுடைய வசனமே வேதமொழி யென்று வியந்துகொண்டாடும் அறிவின்மை யவரைப் பற்றவில்லை. அவருடைய நிலைமைக்குத்தக்கவாறு சொற்பம் வேதத்தையத்தியயனம் செய்து பெரியோர்களின் வாயிலாகச் சாஸ்திரமுறைகளையியன்றமட்டும் கேட்டு ஆராய்ந்துதெரிந்துகொண்டவர். மானிடர்களின் அறிவும் மற்றப்புலன்களுங் பரிமாணமுள்ளனவாகிய பொருள்களையே விஷயமாகப்பற்றும் பான்மையுமுடையனவாகையால் ஒரு விதப்பரிமாணமுமின்றி எல்லா வுலகின் கண்ணும் இடையின்றி நிரம்பியிருக்கும் பரம்பொருளை முற்றிலும் அறிவது அவ்வறிவிற்காவது புலன்களுக்காவது சாத்தியமில்லையெ



ன்றும் அப்பரம்பொருளின் சுவரூபத்தின் ஒவ்வொரு பகுதி அந்தந்த ஆசாரியரால் வெளியிடப்பட்டிருப்பதால் அவர்கள் உரைத்திருக்கும் மொழிகள் ஒன்றுக்கொன்று விரோதமுள்ளனவாகக் காணப்பட்டபோதிலும் வாஸ்துவத்தில் ஒரு ஸ்வரூபத்தைப்பற்றியே அவர்கள் மொழிந்திருக்கிறார்களென்றும் பல குருடர்களுக்கு யானையிது தானென்று தொட்டுக்காட்டும்பொழுது ஒவ்வொரு அவயவத்தைத்தீண்டிய ஒவ்வொரு குருடனும் யானையின் ஓர் அவயவத்தைத்தொட்டேனென்ற அறிவின்றி தான் தொட்ட அவயவமே யானையென்றுட்கொண்டு காலைத்தொட்டவன் யானை உருண்டைவடிவென்றும், துதிக்கையைத்தொட்டவன் யானை பெரிய பாம்புபோல் நெடியதென்றும், பின்னும் அந்தந்தவவயங்களின் உருவத்தையே யானையின் உருவமென்றுட்கொண்டு ஒருவருக்கொருவர்சண்டையிட்டுக்கொள்வதுபோலப் பலசமயவாதிகளின் சண்டையென்றுதீர்மானித்துப்பற்பல சமயங்களும் பலவாறுகூறுவனவாயினும் அவைகளெல்லாம் ஒரே பொருளையே வற்புறுத்திக் கூறுகிறதென்றும் ஆராய்ந்து ஸமரஸமான நிலையில் அவருடைய வறிவு திண்ணமாய் நிற்கின்றது. ரிஷபத்துக்குக்கொம்புகள் குட்டையாயிருந்தாலென்ன நெடியனவாயிருந்தாலென்ன; நிமிர்ந்திருந்தாலென்ன; அநுமானுடைய வாலில் எத்தனை கண்டாமணிகள் கட்டியிருந்தாலென்ன; உருத்திராக்ஷம் மேலாயிருந்தாலென்ன, துளசிமணி மேலாயிருந்தாலென்ன; நாராயணனுக்கு எந்த நாமம் போட்டாலென்ன. ஒரு பெரிய கடலில் எழும் அலைகள் பலவாறாகவிருப்பினும் எல்லா அலைகளும் ஒரே கடலின் விகாரங்களென்று நினையாமல் ஒவ்வொரு கடலென்று நினைத்து வாதாடுவதுபோலப் பிரதானமில்லாத அங்கங்களுக்காகச்சண்டையிட்டுக்கொண்டு எல்லா அங்கங்களுக்கும் ஒரே அங்கியாகிய பரம்பொருளையறியாத மடமை அவரிடத்திற் பொருந்தவில்லை. உண்மையைப்புகல்வதும், வறியார்க்கிரங்குவதும். அவருடைய முக்கியப் பண்பு. இவரைக்கோவிந்தையரென்னும் பெயர் கொண்டழைப்பார்கள். இவர் திருநெல்வேலிக்குப்போய் உடனே திரும்பமுடியாமல் காரியத்தின் மிகுதியால் மூன்றுநாளங்கு தாமதிக்கும்படி நேர்ந்தது. பிறகு அவர் இவ்வூருக்குவந்து மிக்க பரபரப்புடன் போஜனம் செய்துவிட்டு மனோன்மணிசத்திரத்துக்குப் போகலாயினர். அப்பொ

ழுது இரவுதொடங்கி ஜாமமிருக்கலாம். அங்குப் போனவுடன் தலைவாயிலில் நின்றுகொண்டு வெளிக்கதவைத் தட்டியதில் ஒருவர் வந்து அதைத்திறந்தார். அவரைநோக்கிக் கோவிந்தையர்,

“ஐயா! இவ்வீட்டில் கிருஷ்ணையர் என்று பெயருள்ள கனவானிருக்கிறாரா? அவரைக்கண்டு அவருடன் சொற்பம் வசனிக்கவேண்டியிருக்கிறது” என்றார். அதைக்கேட்டுக்கதவைத்திறந்தவர்,

“நீங்களாரையா? வசனிக்கவேண்டியவிஷயமென்ன? என்னைத்தான் கிருஷ்ணையர் என்று சொல்லுவார்” என்று மொழிந்தனர். பின்னர் கோவிந்தையர்

“ஐயா! நான் நடராஜசெட்டியாரின் நண்பன். அவர் காலகதியினால் பிறருடைய வஞ்சனைக்குட்பட்டு வருந்துகிறார். அவருடனமர்ந்திருக்கும் அச்சிமங்கையரின் வேலைக்காரியும், செல்லம்மாள் என்று பேர்வைத்துக்கொண்டிருப்பவளுமான அழகியென்பவள் கேட்டுக்கொண்டபடி உங்களுடனும் அச்செட்டியாருடைய மனைவியுடனும் முக்கியமான சிலவிஷயங்களைப்பற்றிப் பேசுவதற்குவந்தேன். நான் இங்கு மூன்றுநாளைக்கு முன் வரவேண்டியவன். தள்ளமுடியாதகாரியத்திற்காக வேற்றூருக்குப்போய்வரும்படிநேர்ந்தமையால் மூன்றுநாள் தாமதித்து நான் இங்கு வரும்படியாயிற்று.” என்றுசொல்லி அழகி தன்னிடம் புகன்ற வரலாறுகளையெல்லாம் அதற்குள் அவ்விடம்வந்த சிந்தாமணியின் காதில்விழ கிருஷ்ணையரிடம் புகன்றனர். உடனே கிருஷ்ணையர் கோவிந்தையரை மிக்க அன்புடனுபசரித்து வீட்டுக்குள் அழைத்துக்கொண்டுபோய் “ஐயா! இந்த அம்மாள்தான் நடராஜ செட்டியாரின் மனைவி. அவளை அருந்ததியென்றும் சாவித்திரியென்றும் சொன்னால் மிகப்பொருந்தும். காலத்தின்கொடுமை யாரைத்தான் வருத்தவில்லை! அதுபோகட்டும். நாங்கள் அயலூராகிய இவ்விடத்துக்கு வந்து ஒரு கவியுமில்லாமல் பரிதபித்துக்கொண்டிருக்கையில் இந்நகரத்தின்கண்ணமர்ந்திருக்கும் கருணாநிதியே உங்கள் வடிவமாக இங்குத்தோன்றியிருக்கிறாரோ என்று சந்தேகப்படுகிறேன். இச்சமயத்தில் என்ன செய்யவேண்டியதோ அதைத்தாங்களே நன்கு கருதியுரைக்கவேண்டும்” என்றார். அதைக்கேட்டுக் கோவிந்தையர்



“நான் இவ்விஷயத்தைப்பற்றிப் பலவாறு யோசித்தேன். துஷ்டசுபாவம் உள்ளவர்களுடைய பகையிலவர் வீழ்ந்திருப்பதொன்று, அது பெரிதன்று. அவருக்கு நேர்ந்திருக்கும் வியாதியினால் அவருடையவுயிர்க்கபாயமின்றி அவரைக் காப்பாற்றவேண்டியதொன்று. யாதொரு கல்லலுமின்றி இரகசியமாக நம்முடைய காரியத்தை முடித்துக்கொள்ளவேண்டும். இவ்வூரில் சொந்தக்காரியமொன்றுமில்லாமல் பிறர் காரியத்தில் தலையிட்டு வம்பு செய்கிறவர்களும் எந்தக் குடும்பத்திலாவது கொஞ்சம் ஒற்றுமைக்குறைவு சம்பவித்தால் மனஸ்தாபத்தை வளர்த்துவிட்டு அந்தக்குடும்பஸ்தர்கள் சமாதானமாக இணங்கவொட்டாமற்செய்து ஒருகட்சியில் சேர்ந்துகொண்டு பல இடையூறுகளைச்செய்பவர்களுமான வீணர்கள் வெகுபேர்களிருக்கின்றார்கள். நாம் வேறொரு முயற்சியும் செய்யவேண்டுவதில்லை. செட்டியார்பக்கத்திலேயே யிருந்து அவரைக்கவலையுடன் பாதுகாத்துவரும்படி அழகிக்குக் கட்டளையிட்டிருக்கின்றேன். இப்பொழுது அர்த்த ராத்திரி சமீபிக்கிறபடியால் இனி நாம் செய்யத்தக்கதொன்றுமில்லை. செட்டியாருக்கு நித்திரை சமயமாகவிருக்கலாம். அவருடைய மதிமயக்கம் எவ்வளவு மிகுதியாயிருந்தாலும் ஸாக்ஷாத் இலக்ஷ்மியைப்போன்ற இந்த அம்மாளுடைய திருமுகவிலாசத்தைப் பார்ப்பாரானால் அவர் புத்திக்குத் தெளிவுண்டாகி அவர் விளைத்துக்கொண்டிருக்கும் சங்கடங்களையெல்லாம் உடனே நிவிர்த்திசெய்துகொண்டு சரியான நிலைமைக்கு வந்துவிடுவாரென்பதிற் கிஞ்சித்தேனுமையமில்லை. சொற்பம் இடங்கிடைத்தால் அவரிடம் வெகுவாகச் சண்டையிட்டுப்பேச எனக்கும் சுவாதந்தரியம் உண்டு. என்னிடத்தில் மிக்க அன்புள்ளவராகையால் என்னுடைய சொல்லையுமவமதிக்கமாட்டார். நான் இவ்விரவு முற்றிலுங்கழியுமுன் ஐந்து மணிக்கு ஒரு வண்டியுடன் இவ்விடம்வருகின்றேன். தாங்களும் நானும் இந்தவம்மாளுமாக அவர் விடுதிக்குப்போவோம். அப்பால் அவரைக்கண்டு பேசிச் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி வினயமாகக் காரியத்தை முடித்துக்கொள்ளுவோம்” என்று சொல்லிவிட்டுக் கோவிந்தையர் அவருடைய மனைக்குப்போய்விட்டார்.

சிந்தாமணி கோவிந்தையருடன் மிகவும்வசனித்துத்தன் குறைகளையெல்லாம் வெளியிடவேண்டுமென்கிற ஆவலுள்ளவளாயிருந்தாலும், அவர் முன்னர் பழக்கமில்லாத புருஷனாகையால், அச்சம், நாணம் மேலாகி,

"சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்"

என்னும் நீதிவசனத்துக்கிணங்கி, ஒன்றும்பேசாமல் இருகண்களிலும் ஜலம் பெருகியோட மௌனமாக ஒருபக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள். கோவிந்தையர் போனபிறகு, கிருஷ்ணையர் சொற்பம் சயனித்துறங்கினார். சிந்தாமணியோ வியாகூலத்தின்மிகுதியால்கிஞ்சித்தேனும் நித்திரையில்லாமல் மறுநாட்காலையில் என்னநேரிடுமோவென்கிற கவலையுடன் பரமசிவனையுங் கருணையங்கடலாகிய மீனலோசனியையும் தியானித்துக்கொண்டே இரவைக்கழித்தனள். கோவிந்தையர், அவர் புகன்றமுறையே காலையில் ஐந்துமணிக்கு ஒரு வண்டியுடன் வந்து சேர்ந்தனர். அவர் வந்தவுடன், அவர் கிருஷ்ணையரை நோக்கித்தனித்து,

"ஐயா! என்ன சங்கடம்! நேற்றிரவு முழுவதும் எனக்குக் கிஞ்சித்தேனும் நித்திரைவரவில்லை. இப்பொழுது நான் என்கிருகத்தைவிட்டுப்புறப்படும்போது சகுனத்தடையும் நேர்ந்திருக்கின்றது. நாம் செய்யும்முயற்சி யெப்படி முடிக்கின்றதோ தெரியவில்லை. அப்படியிருந்தாலும்,

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில."—என்றுரைக்கும் வண்ணம், சர்வாந்தர்யாமியாகிய பரமசிவனுடைய கருணையை முன்னிட்டுக்கொண்டு மிகவும் தர்மம்நிறைந்த காரியத்தில் முயற்சிக்கின்றோம். நம் முயற்சியின்பயன் அவர் திருவுள்ளப்படி நடக்கும்" என்று புகன்றுவிட்டுச் சிந்தாமணியை வண்டியில் ஏற்றி யழைத்துக்கொண்டு கிருஷ்ணையருடன் செட்டியாருடைய விடுதிக்கு வந்து சேர்ந்தார். வெளிக்கதவு திறந்திருந்தபடியால் அம்மூவரும் அவ்வீட்டுக்குட் சென்று பார்த்தபின் அவர்களுக்குண்டான மனவருத்தம் அளவில்லாத



து. அவ்வீட்டில் ஒருவருமில்லை. திறந்துகிடந்த ஒவ்வொருஅறையிலும் நுழைந்துபார்த்தார்கள். நடராஜசெட்டியாராவது அச்சிமங்கையராவது அங்கு இல்லை. பரபரப்புடன் கோவிந்தையர் அங்குமிங்கு மோடிப்பார்க்கையில், அவ்வீட்டின் பின்பக்கத்திலுள்ள ஒரு கொட்டத்தில் உயிரொழிந்த பிணம்போல் ஒருவர்படுத்திருப்பதைக் கண்டு அவர் யாரென்று கவனித்துப்பார்த்தார். ஐயோ! அப்படிப் படுத்திருந்தவர் பேதையாகிய அழகி. அவள் மயக்கம் மிகுதியால் தன் நினைவுமுற்றிலுமடங்கி ஒரு மரம்போற்சாய்ந்துகிடந்தாள். அவளைப்பலமுறை கூப்பிட்டும் அவள் உத்தரம் சொல்லவில்லை. உடனே கொஞ்சம் ஜலம்கொணர்ந்து அவள் தலையையும் முகத்தையுங்கழுவி உபசரித்தவுடன் அவளுக்கு நினைவுவந்து கிருஷ்ணையரைப்பார்த்து ஐயா வென்று கூப்பிட்டுவிட்டு வாய்விட்டோங்கியழுதாள். கிருஷ்ணையரும் கோவிந்தையரும் அவளுக்கு ஆறுதல்சொல்லி நடந்தவரலாறுகளை மொழியும்படி கேட்டார்கள். உடனே அழகியெழுந்திருந்து உட்கார்ந்து கொண்டு,

"ஐயா! இந்த யசமான் எல்லாஞ் சொல்லியிருப்பாங்களே. வருவாக வருவாக இண்டு பாத்துக்கொண்டே யிருந்தேன். அவக வராமையால் அவக வீட்டுக்கு நான் இரண்டு மூணுதடவை போய் வந்தேன். அதனாலேயே அந்தப் பாவிகளுக்கு என்மேலே சந்தேகமுண்டாச்சு அந்த வேசை கொடுத்த மருந்தைச் செட்டியாருக்கு நான் கொடாமல் தெருவிலெறிந்துவிட்டதை அந்தக் குஞ்சுக்குட்டி பாத்துவிட்டாள். அதுமுதல் அப்பொம்புளைகள் என்னைக் கருவுரு என்று பாத்திக்கிட்டும் என்னோடு பேசாமலும் இருந்தாங்க. நேத்தைக்கி மூட்டை கீட்டை கட்டிக்கிண்டு இருந்தாக. நேத்துராத்திரி செட்டியார் உறங்கினபிறகு நானும் இங்கே வந்து படுத்தேன். கொஞ்சநேரம் கழித்து அந்தக்கொடும்பாவி குஞ்சுக்குட்டி ஏதோ ஒரு பொடி கொண்ணாந்து என் மூக்கிலேத்தினாள். என் தலை கிறுக்கிக்கிட்டு எனக்கு ஒண்ணும் தெரியலே. நினைவு மட்டும் இருந்திச்சே தவிர எழுந்திருக்கவும் பேசவும் முடியவில்லை. இரண்டு மணிக்கெல்லாம் அவக செட்டியாரையும் கூட்டிக்கிட்டு சாமான்களை ரெண்டு மூணு வண்டியிலேத்திக் கொண்டு போயிட்டாக. எங்கே

போனாங்களோ தெரியவில்லை. எழுந்திருந்து பார்க்கக்கூட முடியவில்லை. இருக்க இருக்க மயக்கம் மேலாகிப் பிணமாகக் கிடக்கிறேன்." என்றாள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த சிந்தாமணி நிரம்ப மனவருத்தமுற்று,

"அட! அட! என்னுடைய துர்ப்பாக்கியத்தினால் எத்தனை பேர் துன்பப் படுகிறார்கள். என் நிலைமைக்கிரங்கித்தன் வீட்டையும் உற்றார்களையும் விட்டுவிட்டு எனக்கு உதவிபுரிய வேண்டுமென்கிற தர்ம சிந்தையுடன் வந்த இவ்வேழை என்னபாடு பட்டிருக்கிறாள். கொல்லமிருந்து படகிற் செல்லும்போது அவள் பட்ட துயரம் அளவற்றதே. அதுபோதாதா! இங்கு வந்ததும் அவளுயிர்க்கே அபாயம் வந்ததுபோலத் துயரம் சம்பவித்திருக்கின்றது. எளியார்க்குப் பரமேசுவரன் துணையில்லையா! தீயோர்களின் காரியமெல்லாம் அவர்கள் நினைத்தபடி முடிகின்றதே. இஃதென்ன கலியின் கொடுமையா! நான் செய்த கொடும்பாவமா! இவ்வளவு தீங்கை விளைக்கும் பொடியைக் கையில் வைத்திருப்பவள் இன்னும் எவ்வித மருந்துகளைக் கையில் வைத்திருக்கின்றாளோ! ஈசா! நான் என்ன செய்வேன்! எனக்கு உதவிபுரிய வருவோர்களை நீ இவ்விதம் சோதிப்பாயாயின் இவ்வடியாளுக்கு எக்கதியை அமைக்க உன் திருவுளமோ தெரியவில்லையே!" என்று பலவிதமாய்ப் புலம்பினாள். கோவிந்தையர்;

"அம்ம! சங்கடத்துக்குள் அகப்பட்டுக்கொண்டீர்கள். தைரியத்தைக் கைவிடக்கூடாது. வந்தது வரட்டும். என் நண்பர் செட்டியார் உயிருடன் மட்டும் இருப்பாராயின் அவரை எவ்விதமாவது அக்கழுதைகளின் வலையினின்றும் நீக்கி, உங்கள்பக்கத்திற் கொண்டுவந்து சேர்ப்பதே நான் காயமெடுத்ததற்குப் பயனாயிருக்கவேண்டுமென்று கடவுளறிய நான் சங்கற்பஞ் செய்கிறேன். இந்தக் கிருஷ்ணையரவர்களும் அந்த விரதத்தையே கைக்கொண்டிருக்கின்றார். காலத்தின் விபரீதத்தினால் நான் திருநெல்வேலிக்குப் போகவும் அங்கு இரண்டு மூன்றுநாள் தாமதிக்கவும் நேர்ந்ததல்லவோ இக்கொடிய விபத்துக்குக் காரணமாயிற்று. நீங்கள் இனிமேல் சஞ்சலப்



படாமல் எங்களுக்கு வேண்டியபோது தகுந்த யோசனையுடன் அநுசரிக்கவேண்டிய முறையை யெடுத்துச் சொல்லக்கூடிய நிலைமையில், உங்கள் மனத்தைத் திடமாக வைத்துக்கொள்ள வேண்டும்" என்று சொல்லிவிட்டு அவரும் கிருஷ்ணையரும் அவ்வீட்டுக்குள் அங்குமிங்கும் உலாவும்போது, ஓர் அறையின் மூலையில் மூட்டை யொன்று கிடந்தது. அதைக் கோவிந்தையர் எடுத்து,

அவர்கள் பரபரப்பில் இந்த மூட்டையை எடுத்துப்போக மறந்து விட்டார்கள் போலிருக்கிறது. அதை நாம் எடுத்துப் பத்திரமாகக் காப்பாற்ற வேண்டும்." என்று சொல்லிக் கிருஷ்ணையர் கையிற் கொடுத்தார். அதை வாங்கின கிருஷ்ணையர்,

"இந்தச் சனியனை யவிழ்த்தால் அதற்குள் என்ன இருக்குமோ மிக்க வஞ்சனையுள்ள மனத்தினர்களாகையால் வந்து அவிழ்ப்பவர்களைப் பிடுங்கட்டுமென்கிற கருத்துடன் ஒரு கருநாகத்தையே கட்டிவைத்திருப்பார்கள்." என்று சொல்லி அந்த மூட்டையை வண்டியில் வைத்துக்கொண்டு சிந்தாமணியையும் அழகியையுங் கூட்டிக்கொண்டு கோவிந்தையருடன் மனோன்மணி சத்திரம் வந்து சேர்ந்தார்கள். இதற்குள் விடிந்து எட்டு மணியாயிற்று. கோவிந்தையர் அநுஷ்டானம் செய்து போஜனம் செய்துவிட்டு வருவதாக விடைபெற்றுக்கொண்டு அவரகத்திற்குச் சென்றார். பிறகு கிருஷ்ணையர் அந்த மூட்டையை யவிழ்த்துப் பார்க்கையில் அதில் சிலநகைகளும் நாணயங்களும், சில பத்திரங்களும் நடராஜ செட்டியாருக்கு வந்த ஐந்தாறு பத்திரிகைகளும் இருந்தன. அப்பத்திரங்கள் நடராஜ செட்டியாருடைய பூஞ்சோலை, தோட்டம் இல்லம் முதலியவைகளை குஞ்ஞுக்குட்டிக்கு அவர் கொடுத்ததாகப் பிறப்பித்த சாசனங்களாயிருந்தன. அப்பத்திரிகைகளெல்லாம் நடராஜ செட்டியாருக்கு அவருடைய சிநேகிதனான கண்மணிசெட்டியாரால் எழுதப்பட்டவை. அவைகளில் மூன்று பத்திரிகைகள் நிரம்ப முக்கியமுள்ளவைகளாகவும் கிருஷ்ணையருக்கு ஆறாத மனத்துன்பத்தை விளைத்தவைகளாகவும் இருந்தன. அவைகளைப்படித்துப் பார்த்தவுடன் கிருஷ்ணையருடைய முகம் கறுத்து அவர் மனத்தில் ஒருவாறு சந்தேகமும் ஒருவாறு இரக்கமும் உண்டாகி மதிமயங்கியிருந்தார். அதைப்பார்த்த சிந்தாமணி,

"சுவாமி! அந்தப்பத்திரிகைகளில் என்ன எழுதியிருக்கின்றன? அவைகளைப்படித்துப் பார்த்தவுடன் ஏதோ கவலையினால் உங்கள்முகத்தினொளி குன்றிவிட்டதே. அந்தப்பத்திரிகைகளைத் தாங்கள் தயவுசெய்து படித்துக்காட்டவேண்டும். அல்லது நானே படிக்கிறேன்." என்று சொன்னவுடன், கிருஷ்ணையர்,

"அம்மா! நீங்களவைகளைப்படிப்பது தகுதியன்று. என்னவோ தாறுமாறான சங்கதிகளெழுதப்பட்டிருக்கின்றன. அதைப்படித்தால் நீங்கள் மிக்க மனக்கவலைப்படுவீர்கள்." என்றார். அது கேட்டுச் சிந்தாமணி,

'ஐய! ஏன் அவ்விதமுரைக்கின்றீர்கள்? என் நாயகனுக்கு என் மைத்துனர் எழுதிய பத்திரிகைகள் தாமே? அவரும் என் மாமியாரும் சௌக்கியமாயிருந்தாற்போதும். அவைகளிலென்ன வெழுதப்பட்டிருந்தாலுமிருக்கட்டும்." என்று சொல்லி, பரபரப்புடன் அந்தப் பத்திரிகைகளைக் கையிலெடுத்துக் கொண்டு ஒரு பக்கத்திற் போயுட்கார்ந்து அவைகளைப் படித்துப்பார்த்த பின்னர் "ஐயோ! எல்லாச்சராசரங்களுக்குள்ளும் விளங்குகின்ற பரம்பொருளே! இவ்வடியாளுக்கு இக்கதியையா உன் கருணை கற்பித்தது! நான் நோற்ற நோன்பெல்லாம் இப்பயனுக்கா!" என்று அலறிக்கொண்டு கீழே வீழ்ந்து மூர்ச்சையானாள். இதைப்பார்த்து கிருஷ்ணையருடைய மனம் கொஞ்சங்கூடச்சகிக்கவில்லை. 'என்ன ஐயா என்ன ஐயா' வென்று அழுகியுங் கூச்சலிட்டாள். கிருஷ்ணையர் அவளை மௌனமாயிருக்கும்படி கட்டளையிட்டு, பிறகு சிந்தாமணிக்கு மயக்கம் தீர்வதற்காகவேண்டிய சிகிச்சைகளைச் செய்துகொண்டிருந்தார். இந்தப் பத்திரிகைகளில் வேறு சங்கதிகளுடன் அடியிற்கண்ட விதமாக எழுதப்பட்டிருந்தன.

I. இராமநாதபுரம்,
விசுவாவசு௵ ஆடி௴ 10௳.

தேவரீர் அண்ணா அவர்களுடைய பாதகமலங்களுக்கு அடியேன் கண்மணி வந்தனம் செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

* * * *

...................என் மாதா அவர்களுடைய திருமேனி நாளுக்குநாள் மெலிந்துகொண்டு வருகின்றது. அவளுக்கு ஆகாரம் செல்லவில்லை. அதற்குக் காரணம் மதினியாரவர்களின் நடத்தைதான். சென்ற இரண்டுமாதங்களாக அவர்கள் போனவிடம் தெரியவில்லை. நமது வீட்டிலிருந்து சில நகைகளையும் திரவியங்களையுமெடுத்துக்கொண்டு ஒரு வடுகனுடன் யாழ்ப்பாணத்திற்குப்போய்விட்டதாகவெளியாகின்றது. 'சிந்தாமணி சிந்தாமணி'யென்று கூப்பிட்டுக்கொண்டு என் மாதா அவர்கள் எப்பொழுதும் புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். மதினியாரவர்கள் பேரில் விசேஷமான பக்ஷத்தையவர்கள் செலுத்தியிருந்தபடியால் பிரிவாற்றாமையால் மனோவியாதிகொண்டு அவர்கள் வெகு சடுதியில் பரலோகம் சென்றுவிடுவார்களென்று பயப்படுகிறேன்.

தங்கள் ஊழியன்,
கண்மணி.

II. இராமநாதபுரம்,
விசுவாவசு௵ ஆவணி௴ 8௳

தேவரீர் அண்ணா அவர்களுடைய பாதகமலங்களுக்கு அடியேன் கண்மணி வந்தனம் செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்: தேவரீருடைய நிருபம் கிடைத்தது.

* * * *

தேவரீர் மதினியாரவர்கள் விஷயமாகச் சிறிதேனும் கவலைப் படக்கூடாது. அதைப்பற்றித்தேவரீருக்கு நான் எழுதககூடாதென்று என் மாதா அவர்கள் பலமுறை சொன்னார்கள். என் அறியாமையால் என் மனம் பொறுக்காமல் தங்களுக்குஎழுதித்தேவரீரவர்களைத் துயரத்தில் மூழ்கும்படி செய்தேன். மதினியார்வர்களே பெற்ற தாயென்று நினைத்துக்காயமுள்ள நாளெல்லாம் அவர்களுக்குப்பணிவிடை செய்யவேணுமென்று ஆசைகொண்டிருந்த இப்பாவியின் துரதிர்ஷ்டம் இவ்விதமாயிற்று. அவர்கள் நடத்தை மிக்க பகிரங்கமாகி நமது உறவினர்களுடைய வீடுகளிலெல்லாம் அவர்களைப்பற்றிய வம்புப்பேச்சாகவே முடிந்துவிட்டபடியால் நமது மனையைவிட்டு வெளியில் வர மிக்க நாணமாயிருக்கின்றது. ஐயோ! நமது குலத்தின் பெருமையென்ன! தேவரீருடைய கௌரவமும் கீர்த்தியும் எத்தன்மையுடையன! நமது பிதா அவர்களுடைய சீலத்தை எவ்வாறு உலகத்தார் வியந்து புகழ்கின்றார்கள்! நமது குடும்பத்திற்கு இத்தகையான வசை சம்பவிக்கவேண்டுமா? என்று என் மாதா அவர்கள் ஓயாமற் புலம்புகிறார்கள். எச்சமயத்தில் நான் மனவெறி

கொண்டு அந்த வடுகனைக்குத்திக் கொன்றுவிட்டு நானும் தூக்குமரத்திலிறக்கிறேனோ தெரியவில்லை. மானமழிந்தபின் அவ்விதமாவது உயிரிழப்பது மேம்பாடுடையதென்று நினைக்கிறேன்........

தங்கள் ஊழியன்,
கண்மணி.

**III.** இராமநாதபுரம்,
விசுவாவசு௵ ஐப்பசி௴ 20௳

தேவரீர் அண்ணா அவர்களுடைய பாதகமலங்களுக்கு அடியேன் கண்மணி வந்தனம் செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம். தேவரீருடைய புரட்டாசி௴ 25௳யுள்ள நிருபம் கிடைத்தது. * *

* * * *

...........என் மாதா அவர்களுக்குப் பைத்தியம் அதிகரித்துவிட்டது. யாரைக்கண்டாலும் சிந்தாமணியென்று கூப்பிட்டு அவளுடன் கட்டிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் படும் சோகத்தை எளியேன் கண்ணாற் பார்க்கமுடியவில்லை. மதினியாரவர்கள் கொண்டுபோன பொருள்கள் மொத்தம் ஐம்பதினாயிரம் ரூபா மதிக்கக்கூடியவைகள். என்மனஞ்சகிக்காமல் நானே யாழ்ப்பாணத்திற்குப் போனேன். மதினியாரவர்கள் என் தாயாராகையால் அவர்கள் எவ்விதப் பிழையான முறையிற் சென்றாலும் பிள்ளையாகிய எளியேனுக்கு அஃதொரு பிழையாகத்தோன்றவில்லை. இப்பொழுது அந்தவடுகன் மட்டுமல்ல. பொதுமகளைக்காட்டிலும்கேடுகெட்ட நிலைமையில் வந்துவிட்டது. தேவரீருத்தரவு கொடுத்தால் எளியேனும் தாயாரவர்களும் திருவனந்தபுரத்துக்கு வந்து விடுகிறோம். இங்குவருவதுமிக்கப் பழிப்புக்கு இடமாகுமென்று எண்ணுகிறேன். முடிவில் சீராய்நடந்தால் மனைவி. இல்லாவிடில் அவள் சந்தையிற்கொள்ளும் ஆடுமாடு போல்வாள் என்பது தேவரீர் நன்கறிந்ததே. இனிமனத்தை அப்பொருளின்மேற் செலுத்தாமல் நம்முடையதன்றென்று கைவிடுவதே விவேகம். எல்லா மறிந்த தேவரீரவர்களுக்குச் சிறியேன் எழுத வேண்டியதென்ன?

தங்கள் ஊழியன்,
கண்மணி.

(இன்னும் வரும்).

உமாதாஸ்.

---

# பாணாசுரன் கதை.

## 256-ம் அதிகாரம்.

### சித்திரலேகை அநிருத்தனையும் உஷையையும் சேர்த்துவைத்தல்.

சித்திரலேகை துவாரகாபுரியையடைந்து ஸ்ரீகண்ணபிரானது திருமாளிகைக்கு அருகில் இருந்துகொண்டு, அநிருத்தனைப்பாணாசுரனது ராஜதானியாகிய சோணிதபுரத்திலிருக்கும் உஷையிடத்து எவ்விதமாய்ச் சேர்ப்பிக்கிறதென்று யோஜித்துக்கொண்டிருக்குமளவில், நாரதமகாரிஷி ஜலத்தில் நின்று தியானம் செய்துகொண்டிருப்பதைக்கண்டாள். அவரைக்காணவும் சித்திரலேகை சந்தோஷத்தால் கண்கள் மலர, அவருக்குச்சமீபத்திற் சென்று அவரை நமஸ்கரித்து அவர் முன்னால் நாணத்தால் தலை வணங்கி நின்றாள். அவ்வாறு நின்ற சித்திரலேகையை நாரதர் ஆசீர்வதித்து, அவள் துவாரகாபுரிக்கு வந்திருக்கும் காரணமென்னவென்று வினவ, சித்திரலேகை அஞ்சலிபந்தத்துடன், உலகபூஜ்யரான தேவரிஷியை நோக்கி, "ஹே மஹானுபாவா! யான் இங்கு வந்த காரணத்தைச்சொல்லுகிறேன் கேளும். சோணிதபுரத்திற்கு அரசனாகிய பாணாசுரனுக்கு உஷையென்ற ஓர் அழகிய புத்திரியிருக்கின்றாள். அந்த உஷை பிரத்யும்னனுடைய புத்திரனாகிய அநிருத்தனிடத்து மிக்க காதல் கொண்டு அவனைத்தனக்கு நாயகனாக வரித்திருக்கின்றாள். பார்வதி தேவியின் அனுக்கிரகமும் அவ்வாறே ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது அநிருத்தனை எடுத்துக்கொண்டு சோணிதபுரத்திற்குக் கொண்டுபோகவேண்டுமென்ற எண்ணத்துடன் நான் இவண் வந்திருக்கின்றேன். இந்தக் காரியம் சித்திபெறுவதற்கு செய்யவேண்டுவன எவையோ அவற்றை அருள்புரிவீராக. நான் அநிருத்தனை எடுத்துக்கொண்டுபோன பிறகு அந்தச்சமாசாரத்தை கமலக்கண்ணனான ஸ்ரீ கண்ணபிரானுக்கு நீர் தெரிவிப்பீராகில் தோள்வலிவாய்ந்த பாணாசுரனுக்கும் ஸ்ரீ கண்ணபிரானுக்கும் ஒரு பெரும் போர் விளையும். மகா பராக்கிரமசாலியாகிய பாணனை அநிருத்தனால் போரில் வெல்லுதல் முடியாது. ஆனால் மகாபாகுவாகிய கேசவனை ஆயிரம்

கரங்களோடு கூடிய அவ்வசுரனை ஜயிக்கவல்லவன். ஹேமகரிஷே! நான் அனிருத்தனை எவ்விதமாய் யாவருமறியாமல் தூக்கிக்கொண்டு போகலாம். இந்தச்சமாசாரத்தைக் கேசவனுக்கு எவ்வாறு தெரியப் படுத்தலாம். உமது கிருபாகடாக்ஷம் எனக்கு இருக்குமாகில் நான் ஸ்ரீ கண்ணபிரானுக்கு அஞ்சவேண்டியதில்லை. ஸ்ரீ கண்ணபிரானுக்குக் கோபம் ஜனித்தால் அவன் கோபமானது மூவுலகையும் பஸ்மீகரிக்கவல்லது. தன் பௌத்திரனைக் காணாத விஸனத்தால் வருந்தும் கண்ணபிரான், என்னைச்சபித்துச் சாம்பலாக எரித்துவிடாமல் காப்பாற்றுவீராக. ஹே தேவரிஷே! உஷை தனது கணவனை அடையும்படிக்கும் நானும் கண்ணபிரான் கோபத்திற்கு ஆளாகாமலிருக்கும்படிக்கும் ஒருபாயத்தைத் தேடுவீராக" என்று இறைஞ்சினாள். அதுகேட்ட நாரதர் "ஹேசித்திரலேகா, நான்உனக்கு அபயதானம் கொடுத்தேன். நீ அஞ்சாதே. நீ அனிருத்தனை எடுத்துக்கொண்டு போய் எந்த அந்தப்புரத்தில் வைக்கின்றனையோ அந்த இடத்தில் ஒரு யுத்தம் நேரிடுமாகில் உடனே நீ என்னை ஸ்மரி. ஹே அழகிய மாதே! யுத்தங்களைப்பார்ப்பதில் எனக்கும் அதிகப்பிரியமும் சந்தோஷமுமுண்டு. எல்லா உலகங்களையும் ஸ்தம்பிக்கும்படியான தாமஸியென்றவித்தையை நான் உனக்குக் கற்றுக்கொடுக்கின்றேன். அருந்தவம்புரிந்து அவ்வித்தையை யான் கற்றேன்" என்று சொல்லி அம்மந்திரத்தை சித்திரலேகைக்கு உபதேசிக்க அவளும் அதைக் கற்றுக்கொண்டு மஹாத்மாவாகிய நாரதரிஷியை நமஸ்கரித்துவிட்டு அனிருத்தனுடைய அரண்மனையைத் தேடுவதற்காக ஆகாய மார்க்கத்திற் கிளம்பினாள். அப்பால் துவாரகாபதியின் மத்தியில் காமனுடைய வீட்டிற்குச் சமீபத்தில் அனிருத்தனது திருமாளிகையைக் கண்டாள். தங்கத்தாற் செய்த அக்கினிஹோத்திரமேடைகளுடன் கூடியதாய் மரகதத் தூண்கள் நாட்டப்பெற்று, மலர்மாலைகளாலும் பூர்ணகும்பங்களாலும் அம்மாளிகை அலங்கரிக்கப்பெற்றிருந்தது கூடகோபுரங்களின்மேல் அழகிய மயில்களினுருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பவளக்கொடிகளால் அலங்கரிக்கப்பெற்ற நவரத்ன கசிதமான திவ்யதிரு மாளிகையின் கட்டடவரிசைகள் கந்தர்வர்களின் இனிய கானவோசையால் நிறைந்திருந்தன. இத்திருமாளிகையில் பிரத்யும்னனென்ற காமனுடைய புத்திரனாகிய அநிருத்தன், நக்ஷத்திர மண்டலங்களாற் சூழப்பெற்ற சந்திரனைப்போல், அதிரூபலாவண்ணியத்துடன் கூடிய அநேக ஸ்திரீகளின் மத்தியில் விளங்கிக்கொண்டிருப்பதைக்கண்டாள். அப்பொழுது அநிருத்தன் ஒரு திவ்வியாஸனத்தில் குபேரனைப்போல் உட்கார்ந்துகொண்டு மதுபானஞ் செய்துகொண்டிருந்தான். கந்தர்வர்கள் பக்கவாத்தியங்களுடன் தாளந்தவறாது இனிய சங்கீதகானஞ்செய்தனர். அழகிய அப்ஸரஸ்திரீகள் நாட்டியமாடினர். ஆயினும், அநிருத்தன் மனம் இவைகளொன்றிலும் பற்றுமற்றிருப்பதையும் மதுபானத்திற் கூட மனம் வெறுப்புற்றிருப்பதையும் சித்திரலேகை கண்டு, 'இவன் மனம் அவன் நேற்றிரவில் கண்ட ஏதோ ஒரு கனவையே தியானித்துக்கொண்டிருக்கிறது. இது திண்ணம்' என்று நினைத்துச்சிறிது மனக்கவலை தீர்ந்தவளானாள். பிறகு அநிருத்தன் திருமாளிகைக்கு மேல் ஆகாயத்தில் மறைந்துகொண்டு 'தாமஸி' என்ற சக்தியால் அநிருத்தன் தவிர மற்றையோரை மோகனஞ்செய்து மயக்கினாள். பிறகு காமன் புத்திரனைநோக்கி "ஹே! வீர, யதுகுலோத்தமா, ரதிபுத்திரா, ஸுகமாயிருக்கிறீரா? இராப்பகல் நன்றாய்க் கழிகின்றனவோ! எனக்குச்சகியான உஷாதேவியைக்குறித்து,உன்னிடமோர் ஸமாசாரஞ் சொல்லவந்தேன். எந்த உஷா தேவியை நீ கனவிற் கண்டு மணந்தாயோ அவள் என்னை உன்னிடம் தூதனுப்பினாள். அவள் ஸதா உன்நினைப்பாகவே இருக்கின்றாள். உன்னைக்காணவேண்டுமென்ற அடங்காத அவாக்கொண்டு இடைவிடாது அழுதுகொண்டும் பெருமூச்செறிந்துகொண்டும் கொட்டாவி விட்டுக்கொண்டுமிருக்கிறாள். நீ அங்குச் சென்றால்தான் அவள் உயிர் தரிக்கும். உன்னைக்காணாவிடில் நிச்சயமாய் அவள் இறப்பாள். யதுகுலோத்தமனே உன்னுடைய ஹிருதயத்தில் அநேகஆயிரம் ஸ்திரீகள் இருந்தபோதிலும்உன்னையே ஸதாமனத்திடை நினைத்துக்கொண்டிருக்கும்உஷையை நீ பாணிக்கிரஹணம் செய்துகொள்வாயாக. பார்வதி தேவியாரும் உன்னையே அவளுக்கு ஏற்ற கணவனென்று வரமளித்திருக்கின்றார். நான் உனது சித்திரப்படத்தை உஷா கையிற் கொடுக்க, அதை அவள் பெற்றுக்கொண்டு ஹிருதயத்தில் தரித்துக்கொண்டாள். உன்னைக் காணலாமென்ற ஒரு நம்பிக்கையால் அவள் இப்பொழுது உயிரை வைத்துக்கொண்டிருக்கிறாள். ஆதலால் அவள்

விருப்பத்தை நிறைவுபெறச்செய்வாயாக. ஹே யதுகுலோத்துங்கா, உனது அடியிணைகளை நானும் உஷையும் வணங்குகின்றோம். இப்பொழுது உன்னை மணம்புரிய நினைக்கின்றவளின் பிறப்பையும் குணத்தையும் குலத்தையும் சுபாவத்தையும் சொல்லுகிறேன் கேட்பாயாக. உன்னைக் கணவனுக்கிக்கொள்ள நினைக்கின்றவள் விரோசனன் புத்திரனும், சோணிதபுரிக்கு அரசனுமாகிய பாணனென்ற அசுர வீரன் புத்திரி. அவள்மனம் உன் ஸ்வரூபத்தையே தியானித்துக்கொண்டிருக்கிறது. அவள் பிராணனையும் உன்னிடத்து வைத்துவிட்டாள். உமாதேவியாரும் நீயே அவளுக்குக் கணவனென்று வரங்கொடுத்துவிட்டபடியால் உன்னை மணந்து இன்புறலாம் என்ற நம்பிக்கையுடன் அணங்கினையொத்த அம்மடந்தையும் ஜீவித்துக்கொண்டிருக்கின்றாள்." என்று சொன்னாள். அது கேட்ட அநிருத்தன் சித்திரலேகையை நோக்கி, "ஹே ஸுந்தரி! என்கனவிற்கண்ட அவள் அழகையும், கண்ணீர்விட்டு அழுததையும், அவள் இங்கிதங்களையும் இராப்பகலாகத் தியானித்துக்கொண்டு என்னை மறந்திருக்கின்றேன். எனது காதலியைக்காண விருப்பமுள்ளவனாயிருக்கின்றேன். நீ எனக்குநலம் செய்யும்படியாக எனக்கு யோக்கியதை இருந்து நீயும் என் சிநேகத்தைவிரும்புவாயாயின் ஸகல குணசம்பன்னையாய் ஸர்வாவயவ சுந்தரியாய்இராநின்ற எனது ஆருயிர்க்காதலியிடம் என்னைச் சேர்ப்பாயாக." என்று சொல்லலானான். இது கேட்ட சித்திரலேகை, தன் சகியின்கருத்து இன்றே நிறைவுபெற்றதென மகிழ்வெய்தித்தனக்கு இஷ்டமானரூபத்தையெடுத்துக்கொள்ளத்தக்க மாயாவியாகையால் தனது மாயா சத்தியால் அநிருத்தனைச்சப்பிரகூடமஞ்சத்துடன் தூக்கிக்கொண்டு ஒருகணப்பொழுதில் ஸித்தர்கள் சாரணர்கள் முதலியோர் சஞ்சரிக்கின்ற மார்க்கத்தைத்தாண்டிச் சோணிதபுரத்தையடைந்து ஒருவருக்குந்தெரியாமல் உஷையின் அந்தப்புரத்துட் பிரவேசித்தாள். அழகிய ஆடை அணிந்து, ஸர்வாபரணங்களாலும் தன்னை அலங்கரித்துக்கொண்டு அணங்கனைய அழகுவாய்ந்த அநிருத்தனை அரண்மனையிற் கண்டமாத்திரத்தில், உஷை ஆச்சரியமடைந்து அவனைத் தனது அந்தப்புரத்திற்குள் அழைத்துக்கொண்டு சென்று அர்க்கியம் முதலியவை கொடுத்து அந்த யதுராஜகுமாரனைக் கிரமப்படிபூஜித்தாள். அப்



பால் சித்திரலேகையை நோக்கிச் சிறிது அச்சத்துடன் உஷை "ஹே ஸகி! நீ மகா சாமர்த்தியசாலி. இந்தக் காரியமானது எப்படி இரகசியமாயிருக்குமோ அறியேன்? இது பரம இரகசியமாயிருக்குமாகில் நமக்கு க்ஷேமமுண்டு. இல்லாவிடில் நம் உயிர் நம்முடையதன்று" என்று சொல்ல, பார்வதி தேவியின் கிருபாகடாக்ஷத்தால் எல்லாக் காரியமும் நன்கு முடியும் என்பதற்கு ஐயமில்லை. ஆயினும் இந்தக்காரியத்தை நாம் ஜாக்கிரதையாகவும் இரகசியமாகவும் முடித்துக்கொள்வோம். இஃது ஒருவராலும் அறியமுடியாது என்று உஷைக்குச் சமாதானம் சொல்லிப்போயினள். அப்பால் உஷை அநிருத்தனை நோக்கி "நான் செய்த தவப்பயனால் உன்னைக்காணும்படியான நற்பாக்கியமெனக்கு இன்று கிடைத்தது. என் கனவில் சோரனைப்போல் திருட்டுத்தனமாய் என்னிடம் வந்த உன்னைக்காணாது நான் இதுவரை பெருந்துயரிலாழ்ந்திருந்தேன். ஹே! வீர, ஸ்திரீகளின் ஹிருதயம் மிக்க மிருதுவானதென்று நீயறிவாய். நீ சுகமாயிருக்கிறாயா? என்றாள். உஷையின் மிருதுவான வசனங்களைக் கேட்ட அநிருத்தன் அவள் கண்ணிற்றளும்பிய பாஷ்பத்தைத் துடைத்து மந்தகாஸத்துடன் அவளை நோக்கி, ஹே அணங்கே, நீ சொல்லு மொழிகள் அமிர்தப்பிராயமான வசனங்களாயிருக்கின்றன. உன்னுடைய தயவால் நான் சௌக்கியமாயிருக்கின்றேன். எல்லாம் நல்ல சமாசாரந்தான். ஹே! சுந்தரி! இவ்வரிய மாளிகையை நான் இதுகாறும் பார்த்தவனல்லன். ஆயினும் ஒரே தடவை என் சொப்பனத்தில் நான் பார்த்ததாக ஞாபகமிருக்கிறது. ஹே மடந்தாய்! பார்வதி தேவியின் வார்த்தை ஒருகாலும் பொய்யாகாது. பார்வதி தேவியையும் உன்னையும் திருப்தி செய்வித்துச் சந்தோஷப்படுத்தலாமென்றுநினைத்து உனது தயவால் நான் இங்கு வந்திருக்கின்றேன். நீயே எனக்குத் துணைவி. சந்தோஷமாய் நாம் ரமிக்கலாம். என்று சொல்ல, உஷாதேவியும் காந்தர்வ முறைப்படி அநிருத்தனைக் கலியாணம் செய்துகொண்டு சக்கிரவாகப்பக்ஷிகளைப்போல் இணைபிரியாது அளவிடற்கரிய சந்தோஷத்தை அனுபவித்துக்கொண்டு சிலகாலம் கழித்தனர். சிலநாட் சென்றபின் அந்தப்புரக்காவலாளிகள் உஷை அநிருத்தனுடன் வசித்துக்கொண்டிருப்பதையறிந்து மிகப்பயந்து பாணாசுரனிடம் விரைந்

தோடி இந்தச் சமாசாரத்தைத் தெரியப்படுத்தலானர். அதுகேட்ட பாணாசுரன் தன் கிங்கரர்களை நோக்கி "அந்தோ என்ன அக்கிரமம் எனது நல்ல குலம் நாசமுற்றது. என்னால் உஷை கன்னிகாதானஞ் செய்யப்படாதிருக்கும்பொழுது, என்நகரிற் புகுந்து என் அரண்மனையுட் பிரவேசித்து, என் புதல்வியின் கற்பழித்த மூர்க்கனின் வலியும், க்ஷமையும், மதமும் என்னவென்றுசொல்லுவேன். ஆதலால்என் குலத்தின் பேரைக் கெடுத்த அந்தக்கொடும்பாவியான அநிருத்தனைக் கொன்று வாருங்கள் என்றுஆஞ்ஞாபிக்கக்கிங்கரர்கள் அரசன் ஆணையைச்சிரமேற்கொண்டு யுத்தசந்நத்தர்களாகிக்கவசங்களைத்தரித்து நானாவித ஆயுதங்களைக் கையிலேந்திப்புறப்பட்டனர். புறப்பட்டுவருகின்றஸைன்யத்தின் அமளியும் ஆரவாரமும் அநிருத்தன் செவிப்படஅவன் திடீரென்றுஎழுந்திருந்து இதென்ன அமளியென்று சொல்லிக்கொண்டு வெளியே வந்து பார்க்கவும் பாணாசுரனதுகாலாட்படைகள் தானிருந்த மாளிகையைச் சூழ்ந்துகொண்டு நிற்பதைக்கண்டான். உஷை அந்தச்சேனாசமுத்திரத்தைக்கண்டவுடனே, அநிருத்தனை நிச்சயமாய்க் கொன்றுவிடுவார்களென்று எண்ணிக்கொண்டு "ஓ என்னாருயிர் நாதனே! யான் என்செய்குவேன் என்று கண்ணீர்விட்டு அழுதுகொண்டிருந்ததைக் கண்ட அநிருத்தன் அம் மான்விழியாளைநோக்கி "ஹே மின்னிடையாய்! உன் பயத்தையகற்று. நான்இங்குள்ளவரை நீசிறிதேனும் பயப்படக்காரணமில்லை. பாணாசுரனது சைந்நியம் ஒருங்கு சேர்ந்து திரண்டுவரினும், அதற்கும் நான் அஞ்சாது கவலையற்றிருப்பேன். ஓ மடந்தாய்! என் பராக்கிரமத்தை இன்று உனக்குக்காண்பிக்கின்றேன், பார்" என்று சொல்லிக்கொண்டு படபடவென்று துடிக்கின்றதான உதடுகளைக் கோபத்தாற் கடித்துக்கொண்டு ஆயுதபாணியாய்ப்பாணனது போர் வீரர்கள் நின்றுகொண்டிருந்த இடத்திற்கருகில் வந்தான். பாணன் அனுப்பிய போர்வீரர்களுக்கும் அநிருத்தனுக்கும் யுத்தம் நிகழ்வதை அறிந்த சித்திரலேகை தேவரிஷியாகிய நாரதரை ஸ்மரிக்க, நாரதரும் அதைத்தெரிந்து ஒருகணப்பொழுதில் சோணிதபுரிவந்து சேர்ந்தார். அவ்வாறு வந்தவராகிய நாரதர் ஆகாயத்திலிருந்துகொண்டு அநிருத்தனை நோக்கி "ஹே வீர, இதோ இந்நகருக்கு வந்திருக்கின்றேன். நீ அஞ்சற்க என்று தைரியம் சொல்ல, அதிபராக்கிரமசாலியாகிய அநிருத்தன் நாரதரைக் கண்டு அவர்க்குவந்தனஞ்செய்து, வணங்கி, பிறகு மிக்க மனமகிழ்ச்சியுடன் யுத்தத்திற்கு ஆயத்தமாய் நின்றான். அங்குசத்தால் குத்துண்ட மத்தகஜத்தைப்போல் திடீரென்று கிளம்பி உதடுகளைக் கடித்துக்கொண்டு அரண்மனையினின்று கிளம்பி வராநின்ற அநிருத்தனைக் கண்டமாத்திரத்தில் போர் வீரர்கள் திகிலடைந்து ஓடத்தலைப்பட்டனர். எல்லாவிதமான யுத்தத்திலுந் தேர்ச்சியடைந்த அநிருத்தன் அந்தப்புரத்தின் வாயிலிற் கிடந்த ஓர் ஆயுதத்தை எடுத்துக்கொண்டு அதைச்சுற்றி ஓடாநின்ற யுத்தவீரர் களின்பேரில் எறிய அந்த யுத்தவீரர்களும் குண்டாந்தடி, கதை, கட்கம், ஈட்டி, அம்பு முதலியவைகளை அநிருத்தன்மேல் வருஷித்தார்கள். தானவஸைன்யத்தால் இவ்வாறு காயப்பட்ட அநிருத்தன் தளர்ச்சியடையாமல் சாயங்கால மேகத்தைப்போல் கர்ச்சித்துக்கொண்டு நின்றான். மேகமண்டலத்திற்கு மத்தியில் சஞ்சரிக்கின்ற சூரியனைப்போல் தானவசைன்யத்திற்குமத்தியில் பயங்கரமான பரிகாவைக் கையிலேந்தி நின்ற அநிருத்தனைக் கிருஷ்ணாஜனத்தைத் தரித்துத்தண்டத்தைக் கையிலேந்திக்கொண்டிருந்த நாரதர், "அநிருத்தா, பலே, பலே, சபாஷ்" என்றார். இணையற்ற வலிவாய்ந்த அநிருத்தனுடையபயங்கரமான ஆயுதங்களால் தாக்கப்பட்டதானவஸைன்யமானது காற்றால் கலைக்கப்பட்ட மேகங்களைப்போற்சிதறி ஓடிற்று. பராக்கிரமமுள்ள வீரனாகிய அநிருத்தன் மழைபெய்து ஓய்ந்தபிறகு மேகங்கள் ஆகாயத்தில் கர்ச்சிக்கின்றனபோல் சிங்கநாதம் செய்துகொண்டு, "ஹேதானவர்களே! நில்லுங்கள் நில்லுங்கள், ஏன் ஓடுகின்றீர்கள். என்று சொல்லிக்கொண்டு முழுவலித்தான். இவ்வாறு அநிருத்தனால் முறியடிக்கப்பட்டுப் புறங்காட்டி ஓடிய தானவ ஸைன்யம் பாணாசுரனிருக்கு மிடத்திற்கு வந்தது. இவ்வாறு அப்போர்வீரர்கள் தங்கள் தேகமெல்லாம் இரத்த வெள்ளம் பெருகப் பயத்தால் மலர்ந்த கண்களுடன், பாணாசுரனுக்குச்சமீபத்தில் வந்தும் பயம்நீங்கிச் சாந்தத்தை யடையாதவர்களாய் அடிக்கடி பெருமூச்செறிந்தனர். அதுகண்ட பாணன், "ஓ! தானவசிரேஷ்டர்காள், அஞ்சன்மின், அஞ்சன்மின். பயத்தை நீக்கி மீளவும் போர் புரியச்செல்லுங்கள். திரிலோகங்களிலும் நீங்கள் அடைந்திருந்த பெருமையை யிழந்து உபயோகமற்ற பேடிகளைப்போல் திகைக்கின்

நீர்களே. நல்ல குலங்களிற் பிறந்து சண்டையிற் சிறந்தவர்களென்று பேர்பெற்ற நீங்கள் யாரைக்கண்டு இவ்வளவுதூரம் அஞ்சுகிறீர்கள்? நீங்கள் இன்றைக்கு எனக்கு உதவிபுரிந்ததுபோதும். என் முன்னிலையில் நில்லாது அகலுங்கள்" என்று பலவிதமான கடுமொழிகளைக்கூறி அப்பால் இலக்ஷக்கணக்கான தனது சைன்யங்களை யுத்தபூமிக்குப் போகும்படி அனுப்பினான். பிறகு நானாவித ஆயுதங்களை யேந்திய அநேக பிரமதகணங்களாலாய ருத்திர சைன்னியத்தை அநிருத்தனுடன் போர்புரிய ஏற்படுத்தினான். அப்பொழுது, ஜ்வலிக்கின்ற கண்களோடுகூடியவனும் மின்னுடன்கூடிய மேகத்தையொத்தவனுமான பாணனது போர்வீரர்களால் வானெங்கும் நிரம்பியிருந்தது. அவர்களிற் சிலர் மத்தகஜத்தைப்போல் கர்ச்சித்துக்கொண்டு பூமியில் நிற்க, வேறுசிலர் வருஷாகாலத்துமேகஜாலங்களைப்போல் அந்தரத்தில் தோன்றினர். அப்பெரிய சேனாசமுத்திரமானது மறுபடியும் கூடவே, "நில், நில் ஓடாதே என்ற சத்தங்கள் நாலா பக்கங்களிலும் கேட்டன. வீரனாகிய அநிருத்தன் தான் ஒருவனாகவே நின்று அந்த மகா சேனையுடன் எதிர்த்துப்போர்செய்தது ஆச்சரியம்! ஆச்சரியம்! மகா பராக்கிரமம்பொருந்திய தானவ சேனாவீரர்களின் பாரிகம், தோமரம் முதலிய ஆயுதங்களை அவர்கள் கையினின்றும் பறித்துக்கொண்டு அவர்களையே அவைகளால் அடித்துமாய்த்தான். இவ்விதமாக யுத்தகளத்தில் சத்துருக்களைச் சங்கரித்துக்கொண்டு உலாவித்திரியும் மகாவீரனை அநிருத்தனைத்தயித்திய சைனியமானது கண்டு யுத்தகளத்தில் சங்காரம்செய்து இவ்வாறு விளையாடுகின்றவனாகிய இவன் யமன்தானோவென்று சந்தேகித்தனர். பிறகு அநிருத்தனால் எதிர்க்கப்பட்டுப் புறங்கொடுத்தோடிய அசுரர்கள் தேகத்தில் இரத்தம்பெருக, அநேகர் கஜங்களிலும், குதிரைகளிலும், ரதங்களிலும் ஏறிக்கொண்டு நாலுபக்கங்களிலும் ஓட்டத்தலைப்பட்டனர். விசனத்தாலும் பயத்தாலும் ஆக்கிரமிக்கப்பட்ட தானவ சைன்யமானது யுத்தகளத்தைவிட்டு ஓடும்பொழுது ஒருவர்மேல் ஒருவர் விழுந்து மடிந்தனர். தானவர்களுக்குண்டான இம்மாதிரியான பீதியும் பயமும் முன்னோர்காலத்தில் தேவாசுரயுத்தத்திலுங்கூட நேர்ந்ததில்லை. கதை, கட்கம், குண்டாந்தடி முதலியவைகளைக்கையிலேந்திய சிலர் இரத்தத்தைக்கக்கினர். சிலர் பர்வத



சிகரங்கள்போன்றதானவப்போர்வீரர்களுக்கு மத்தியில்வந்து தரையில் வீழ்ந்தனர். பாணனைத் தனிமையாக யுத்தகளத்தில் நிற்கவிட்டு அனேக தானவீரர்கள் பயத்தினாற் புறங்காட்டி ஆகாயத்தில் ஓடி ஒளிந்தனர். இவ்விதமாகத்தனது சைன்யமும் முறிந்தோடியதைக்கண்ட பாணாசுரன் ஸமித்துக்களால் ஹோமம் செய்யப்பட்டயாகாக்கினியைப்போற் சினத்தீ மூண்டு ஜொலித்தான். அந்தரத்திற் சஞ்சரியாநின்ற நாரதர் அநிருத்தன் செய்தயுத்தத்தைக்கண்டு மகிழ்ந்து பலே, பலே, நல்லகாரியம் செய்யப்பட்டது என்று சொல்லிக்கொண்டு ஆனந்தத்தாண்டவமாடினார். இதைக்கண்ட பாணன் கண்கள் கனற்கதுவ தன் மந்திரியாகிய கும்பாந்தன் கொண்டுவந்த ரதத்தில் ஆரோகணித்து ஓங்கின கத்தியும் கையுமாய் அநிருத்தன் இருந்த இடத்திற்குச் சமீபத்தில் தன் இரதத்தைச் செலுத்தினான். தனது ஆயிரம் கைகளிலும் அங்குலியங்களைத் தரித்துக்கொண்டு பட்டிசம், கட்கம், குண்டாந்தடி, ஈட்டி, பாலா, பாசு முதலிய ஆயுதங்களை யேந்திச்சிங்கநாதத்துடனே "பயலே! நில், நில் என்றுசொல்லிக்கொண்டு தனது பெரும்வில்லை வளைத்தான். பாணாசுரன்சொல்லியவார்த்தைகளை ஜபசீலனான அநிருத்தன்கேட்டுப் பின்பு பாணன்முகத்தைநோக்கி முறுவலித்தான். பாணாசுரனுடைய ஆயிரம் குதிரைகள் பூட்டிய ரதமானது பத்துப்பர்லாங்கு நீளமுள்ளதாயும், கரடித்தோலால் மூடப்பட்டு அனேக மணிகள் கட்டியதாயும் இரத்தவர்ணமான கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றதாயுமிருந்தது. தன்னை எதிர்த்துவந்த பாணாசுரனைநோக்கி யதுகுல சிரேஷ்டனான அநிருத்தன், முன்னோர்காலத்தில் ஹிரண்யகசிபுவைக்கொன்ற நரஹரியைப்போல் கவசதாரியாயும் கட்கபாணியாயும் யுத்தரங்கத்தில் மனம்சலியாது நின்றான். பிறகு அநிருத்தன் கவசமொன்றுமில்லாமல் கத்தியையும் சூலத்தையும் கையிலேந்தித்தன்னை எதிர்த்துவந்ததைப் பாணாசுரன்கண்டு அவனை எளிதிற் கொன்றுவிடலாமென வெண்ணி மகிழ்வெய்தி, மிகச் சினந்து தன் சைனியத்துள்ளவரை நோக்கி "அவனை அடியுங்கள்! கட்டுங்கள்! கொல்லுங்கள்! என்று சொல்லிக்கொண்டு அட்டகாசஞ்செய்யவும், அநிருத்தன் அவன்முகத்தைநோக்கி முறுவலித்தான். அந்தச்சமயத்தில் உஷை மிகப்பயந்து அழத்தொடங்க, அநிருத்தன் தன்மந்த

ஹாசத்தால் அவனைச்சாந்தப்படுத்தி யுத்தசன்னத்தனாய் நின்றான். அப்பால் பாணன் கோபத்தீமூள அநிருத்தனைக் கொல்லக்கருதி அவன்மேல்"க்ஷுரபத்திரகம்" என்ற பாணங்களைப் பிரயோகித்தான். அநிருத்தன் அவைகளையெல்லாம் தன் பாணங்களாற் சேதித்தான். பிறகு பாணன் அநிருத்தன் தலையை லக்ஷியம்வைத்து அநேகப்பாணங்களை வருஷிக்க அவைகளையும் அநிருத்தன்கண்டித்து உதயகால சூரியனைப்போல் விளங்கினான். பிறகு பாணன் வேகமான கூரிய அம்புகளைக்கொண்டு அநிருத்தனைப் பிளந்து பீடிக்கவும், ஓர் காட்டிலுள்ள யானையானது சிங்கத்தைக் கண்டமாத்திரத்தில் வலிமிழப்பதுபோல அனிருத்தனால் பாணன் ஆக்கிரமிக்கப்பட்டான். கூரிய பாணங்களாற் காயப்படுத்தப்பட்ட மகாபாகுவாகிய அநிருத்தன் கோபாக்கினிமூண்டு தனது அற்புதமான சாமர்த்தியத்தைக்காட்ட நினைத்து தேகத்தில் பாணன் சரமாரிபெய்து இரத்தமானது பிரவாகமாக ஓடிக்கொண்டிருந்தபோதிலும், பாணாசுரனது இரதத்தின் முன்வந்து நின்றான். பிறகு தானவ வீரர்கள் அநிருத்தனைக் கட்கங்களாலும், கதைகளாலும், ஈட்டிகளாலும் எதிர்த்துக்கடுமையாய்க் காயப்படுத்தினபோதிலும் அவன் சிறிதேனும் அஞ்சாமல் யுத்தகளத்தில் கோபத்தால் துள்ளித்தனது கத்தியால் பாணன்தேரில்கட்டிய கடிவாளவாரைச் சேதித்து அவனது குதிரைகளையும் வெட்டினான். அதைக்கண்டு சண்டையிற் சமர்த்தனாகிய பாணன் தனதுபாணவருஷத்தாலும் பட்டிகம் தோமரங்களை எறிவதாலும் அநிருத்தனைக் கீழே தள்ளிவிட்டான். பிறகு தானவர்களெல்லோரும் அநிருத்தன் இறந்தான் என்று நினைத்துக்கொண்டு சண்டையை நிறுத்திச் சிங்கநாதம் செய்து இரதத்திலேறி உட்கார்ந்துகொண்டனர். பிறகு பாணாசுரன் சிவந்த சூரியனைப் போலவும் எரிகொள்ளியைப் போலவும் ஜொலிக்கின்றதான மணிகள்கட்டிய 'சக்தி' யென்ற பயங்கரமான ஆயுதத்தை எடுத்து உறையின் வைதவ்பத்தைச் சிறிதேனும் கவனியாமல் அநிருத்தன்மேல் தொடுத்தான். தன்மேல் விழவந்த சக்தியாயுதத்தை மகா பராக்கிரமம்பொருந்திய அநிருத்தன் உபாரத்தாலிக் கையினாற்பிடித்துப் பாணன்மேல் அதை எறிந்தான். அவ்வாறு எறிந்த கொடிய சக்தியாயுதமானது பாணனது தேகத்தை ஊடுருவிச்சென்று பூமியிற் பிரவேசித்தது.

(இன்னும்வரும்) ஸி. நாராயணசாமி அய்யர்.

27 FEB MADRAS

குமரன் துணை

# விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 7 } 1908-வருஷம் அகடோபர், நவம்பர், டிசம்பர்மீ { பகுதி 10, 11, 12.

## லார்ட் மார்லியின் திருத்தங்கள்.

நம் இந்திய சரித்திரத்தில் 1908-ம் வருஷம் மிகவும் அற்புதமான ஆண்டு காணக்கிடையாக் கருந்தனம் கண்டெடுத்தோம். சென்ற இரண்டு வருஷங்களாக நாம் எதிர்பார்த்துக்கொண்டிருந்த சீர்திருத்தங்கள் இவ்வாண்டின் கடைசி மாதத்தில் அளிக்கப்பட்டிருக்கின்றன. தேசமெல்லாம் குழப்பமுண்டாகி ஒருவாறு அடங்கியும் அடங்காமலுமிருக்கப்பட்ட சமயத்தில் ஆலம்வீழ்போலு மமைச்சராகிய லார்ட் மார்லி நம் நாட்டின் நன்மையைக் கருதிச் சீர்திருத்தங்களை ஆங்கில பார்லிமெண்டில் பிரேரேபணை பண்ணி அவைகளை அங்கீகாரஞ்செய்யமுயன்றது நம் பாக்கியமே. ஒத்துக்கு மத்தளம் சேர்ந்ததுபோல நம் இராஜப் பிரதிநிதியும் பெரும்பான்மையில் அச்சீர்திருத்தங்களுக்கு இணங்கியே அபிப்பிராயங் கொடுத்தமைபற்றி நம் நாட்டார் இவ்விரு பிரபுக்களுக்கும் நன்றி பாராட்டக் கடமை பூண்டிருக்கிறார்கள். இச்சீர்திருத்தங்கள் நம் புத்திமான்கள் பலருக்கும் திருப்தியையும் சந்தோஷத்தையும் கொடுத்திருக்கின்றன என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இவர்களைப்புகழாதவர்களில்லை இச்சீர் திருத்

தங்களுக்கு இடையூறாகச் சிலர் குறுக்கிட்டும் லார்ட் மார்லி தம் புத்திவன்மையாலும் செய்தொழில் ஊக்கத்தாலும் நம்மேலுள்ள கௌரவமான அபிப்பிராயத்தாலும் அவைகளை அனுசரணைக்குக் கொணர்ந்துவிட்டார். லிபரல் கவர்ன்மெண்டில் தான் இந்தியாவுக்கு நன்மை கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஒருவாறு பலித்துவிட்டது. கான்ஸர்வெடிவ்ஸ்களும் நமக்கு விரோதமாக இருக்கவில்லை. ஆங்கிலேயருள் புத்திமான்கள் பலரும் நம் இந்தியாவின்மீது கருணைகாட்டியே இத்திருத்தங்களின்றியமையாவெனத் துணிந்து ஏற்படுத்தியிருக்கிறார்கள் நம் நாட்டு அன்னத்தை யுண்டு நமக்குக்கேடு சூழுஞ்சிலர் இவற்றைத்தடுக்க வியன்றும் அன்னமுயற்சி பலிக்கவில்லை. இந்தியாவின் பிரஸ்தாபம் என்றால் எழுந்திருந்துபோகுமியல்பையுடைய பார்லிமெண்டு மகாசபையில் தற்காலம் இந்தியாவென்றால் ஆவலுடன் பேசப்பட்டவர்களும் கேட்பவர்களும் இருக்கத்தலைப்பட்டது. நம் அதிர்ஷ்டமன்றோ.

இந்தியாவைப்பற்றிய அறிவு ஆங்கிலேயருக்கு அதிகப்பட அதிகப்பட அவர்கள் நம் விஷயங்களை நன்கு கவனிப்பார்களென்பது திண்ணம். நம் காருண்ய இராஜாங்கத்தார் நம் நாட்டு விஷயங்களில் அநுதாபம் பாராட்டிவருவதை நாம் நன்கறிவோம். நமக்கு விளையும் சிறிது கேடும் இராஜாங்க காரியங்களை இராஜ அபிப்பிராயப்படி நடத்தத்தெரியாத சிலரால் நேரிடுவனவே ஒழிய இராஜாங்கத்தார் நம்மிடம் என்றும் கருணை பூண்டவர்களென்பதை நாம ஒவ்வொரு சமயமும் அறிந்திருக்கிறோம். நம் சக்கரவர்த்தியார் சின்னாண்முன விடுத்த சந்தோஷ சமாச்சாரத்தை எவர்தாம் வியக்கவில்லை. அவர்களது உள்ளன்பை நாம் நன்கறிந்தோம் அவரது குமாரர் நம் நாட்டிற்கு வந்திருந்தபொழுது நமக்குச்சொன்ன அநுதாப வார்த்தைகள் வீண்போயா.

ஆகையால் நமக்கு நன்மை புரிவதில் நம் இராஜாங்கத்தாருக்கு என்றென்றும் திருப்தியே என்பதை நாம் என்றுமுணர்ந்து வருகிறோம். நம்போல் நம் இராஜாங்கத்தாரிடம் விசுவாசம் பாராட்டும் பிரஜைகள் நம் பிரிட்டிஷ் இராஜ்பத்திலுண்டோவென்பது சந்தேகமே. நமக்கு இப்பொழுது லார்டு மார்லி செய்திருக்கும் நன்மைகள் பின்னும் நம் மனத்தை ஆங்கிலேயரிடம் பிணிக்கத்தக்கனவாயிருக்கின்றன. நமக்குக்கிடைக்கவேண்டிய நன்மைகளெல்லாம் கிடைத்துவிடவில்லையென்றாலும் நாம் எதிர்பார்த்தவற்றிற்கு ஒருவாறு அதிகமாகவே நன்மைகிடைத்திருக்கின்றனவென்பது பலருடைய கருத்து. கிடைத்த நன்மைகளை நாம்சரிவர உபயோகித்துத் தேசநன்மைக்காகப் பாடுபட்டு உழைத்துவரின் பின்னும் பல நன்மைகள் நமக்கு அளிக்கப்படுமென்பதற் கையமில்லை.



தற்காலம் நமக்குக் கிடைத்திருக்கும் நன்மைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்:— நம் ஜில்லாக்களைப்பற்றின தினசரி விவகாரங்களை நடத்துவதில் ஜனங்கள் தக்க அதிகாரம்பெற்று ஜனப்பிரதிநிதிகளும் உத்தியோகஸ்தர்களும் ஒன்றுகூடி நிர்வாகஞ்செலுத்த வேண்டுமென்று லார்டு மிண்டோ பிரேரேபித்ததைநம் லார்டு மார்லி ஒப்புக்கொண்டிருந்தும் இதுவிஷயமாய் முடிவான தீர்மானத்தை சில காரணங்களை நோக்கி ஒத்தி வைத்திருக்கிறார். சில மாதங்களுக்குள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கடுத்த மேற்படி மாகாண விஷயங்கள்— மாகாணத்துச் சட்ட சபையும் நிர்வாகசபையும் விசாரிக்கப்பட்டு அவைகளில் இந்தியர்களது அபிப்பிராயம் விளங்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நம் சென்னை மாகாணத்துச் சட்டசபையில் இத்திருத்தங்களின்படி இனி 46 மெம்பர்களிருப்பார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் உத்தியோகஸ்தர்களாயிருக்கவேண்டுமென்று இந்திய கவர்ன்மெண்டார் கொண்ட கருத்தை லார்டு மார்லி அங்கீகாரம் செய்யாமல் உத்தியோகஸ்தரல்லாதவர்களை அதிகமிருப்பது சரியென்று தக்க காரணங்கள் கூறி லார்ட் மார்லி ஏற்பாடு செய்திருக்கிறார். இந்த 46-மெம்பர்களும் ஜனப்பிரதிநிதிகளடங்கிய எலெக்டோரல் காலேஜ் என்ற சிறுசபையார்களால் தற்காலம் நம் முனிஸிபாலிட்டியாரும் ஜில்லா போர்டாரும் நியமனஞ்செய்யும் விதம் நியமிக்கப்படுவார்கள். ஒவ்வொரு மாகாணமும் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு காலேஜ் அமைக்கப்படும். இந்தக் காலேஜில் மிராசுதார்கள், வர்த்தகர்கள் மகம்மதியர்கள், மற்ற வகுப்பார் முதலிய பற்பல வகுப்பாரால் தெரிந்தெடுக்

கப்பட்ட மெம்பர்கள் ஓரிடத்திற்கூடி சட்டசபைக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுப்பார்கள். மாகாணத்து நிர்வாக சபையில் தற்காலம் கவர்னரை நீக்கி இரண்டு மெம்பர்களிருக்கிறார்கள். இவ்விருவர் நால்வராகப்படுவார்கள். இந்நால்வரில் ஒருவரேனும் இந்தியராக விருப்பார். இதுகாறும் மாகாண சபைகள் சென்னை, பம்பாய், பங்காளம் முதலிய நாடுகளில்மட்டுமே இருந்து வருகின்றன. இனி மத்தியமாகாணம் முதலிய ஏனைச்சிறு மாகாணங்களுக்கும் இம்மாதிரியான சட்ட நிரூபண சபைகள் ஏற்படும்.

மாகாணச்சட்ட சபைக்கு மேற்பட்டது இராஜப்பிரதிநிதி சட்டசபை. அதில் இனி 63-பேர்களிருப்பார்கள். ஆனால் அவர்களில் பெரும்பான்மையோர் உத்தியோகஸ்தர்களாயிருப்பார்கள். இராஜப்பிரதிநிதி நிர்வாக சபையைப்பற்றி யாதொன்றும் சொல்லப்படவில்லை. லண்டன்மாநகரிலுள்ள இந்தியா கௌன்ஸிலிலேயே இந்திய மெம்பர்களிருந்து வருகிறார்கள். அவர்களால் தமக்கு மிகவும் உதவியிருந்து வருகிறது என்று லார்டு மார்லி கூறியிருக்கிறார். அவ்வாறிருக்க நம் இராஜப்பிரதிநிதி சபையில் அவ்வாறு யாதொன்றும் சீர்திருத்தம் செய்யாதது யாது காரணமோ. ஒருகால் பின்னர் பார்த்துக்கொள்ளலாமென்று நிறுத்திவைத்திருப்பார்போலும்.

தேசமன்னர்களும் ஜமீன்தார்களும் உயர்குலத்தோரும்சேர்ந்த ஓராலோசனை சபை ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று ஆதியில் லார்டு மிண்டோவின் அபிப்பிராயம். அதனை லார்டு மார்லி அங்கீகாரஞ் செய்யவில்லை. மன்னர்களில் சிலர்மட்டும் சேர்ந்த சபை ஒன்று கூட்டி அதில் மன்னர்கள் சம்பந்தமான விஷயங்களில்மட்டும் அச்சபையாரிடம் அபிப்பிராயம் கேட்டுத் தெளிதலில் தமக்கு யாதொரு ஆக்ஷேபணையில்லையென்றும் யுக்தம் என்று தோன்றினால் லார்ட் மிண்டோ அம்மாதிரி சபை ஏற்படுத்தலாமென்றும் லார்டு மார்லி கூறியிருக்கிறார்.

இவ்வாறு சபைகளின் மெம்பர்கள் அதிகப்படுத்தப்பட்டிருப்பதுமன்றி சபைகளுக்குரிய அதிகாரங்களும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. வரவு செலவுக் கணக்குகளைப்பற்றி விவாதங்கள் நடத்த மெம்பர்கள் அதிகாரம் பெற்றிருப்பதுமன்றி மற்றப்படி நிர்வாக சம்பந்தமாய் மெம்பர்கள் ஏதேனும் பிரேரேபணைசெய்யவேண்டுமென்று விரும்பினால் அதைக்கண்டு தீர்மானம் கொண்டுவரக்கூடுமென்றும் அத்தீர்மானத்தைக் கவர்ன்மெண்டு அங்கீகரித்தல் கட்டாயமாகாவிடினும் அதனை ஒரு சிபார்சாகக் கொள்ளவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.



கேள்விகேட்கும் விஷயத்திலும் புதிதான சுதந்தரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இம்மாதிரியெல்லாம் நமக்குக் கொடுக்கப்பட்ட நன்மைகளை நாம் தக்கவண்ணம் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமானால் ஒத்துழைத்து தேசநன்மைக்கென்று பாடுபடவேண்டும். அவ்வாறின்றி சுயநயம்பாராட்டி வீண்மார்ச்சரியத்தையும் ஜாதிவேற்றுமையையும் உண்டுபண்ணிக்கொண்டு குட்டிக்கலகம் செய்துகொண்டிருந்தால் இவற்றாலாய பயன்களை முற்றிலும் இழப்பதன்றி கேட்டையும் தேடிக்கொண்டவர்களாவோம். புத்திமான்கள் சுயநலத்தைக்கருதாது தேச நன்மைக்கென்றே பாடுபட்டு உழைக்கவேண்டும். தக்க அறிவினரையும் அநுபோகஸ்தரையும் சற்குணமுள்ளவர்களையும் மெம்பர்களாக ஏற்படுத்தவேண்டும். மற்றையோர் அன்னவர்களின் சொற்படி நடந்து அவர்களுக்குக் கைகொடுக்கவேண்டும். நாம் முன்னமே சொன்னபடி தேசக்ஷேமத்துக்கு அநுபவமும் அறிவும் உடையோரே உயிரொப்பார். அவ்வுயிருக்கு ஆதாரமான உடம்பு குடித்தனக்காரரும் வியாபாரிகளும், தொழிலாளிகளும்.

இந்நால்வராலுமே நாம் சதுர்வித புருஷார்த்தங்களின் பயன் பெற்றுய்யலாம். ஒருவரின்றி மற்றொருவர் யாதொன்றும் செய்யவொண்ணாது. ஒத்தால் வாழலாம். ஒற்றுமையில்லாக்குடி ஒருமிக்கக் கெடும். பரோபகாரத்திலும் பொதுஜன க்ஷேமத்திலும் கண்ணுங்கருத்துமாயிருந்து இராஜவிசுவாசத்தையும் பாராட்டிவருவோமானால் முன்போலவே என்றும் எந்நாட்டிற்கும் மேலாக நின்று நம் நாடு தழைக்குமென்பது திண்ணம்.

பத்திராதிபர்.

# மதுரை ராஜகோபுரம்.

இம்மதுரையம்பதியில் ஸ்ரீ சோமசுந்தரக்கடவுள் சந்நிதானத்தின் எதிரில் புதுமண்டபத்தின் கீழ்புறமாகக் கட்டப்பட்டு வேலை முற்றாது நிற்கின்ற ராஜகோபுரத்தைப் பற்றியறியாதவரில்லை. இது இந்நகரை யரசாண்ட திருமலை நாயக்கர் காலத்தில் சுமார் 250 வருஷங்களுக்கு முன் மிகப் பெருமிதமாகச் செய்யத்தொடங்கப் பெற்றது. இவ்வாறு ஏககாலத்தில் 64 கோபுரங்கட்கு அஸ்திவாரமிட்டு எல்லாம் இந்த நிலையிலேயே முற்றாது நிற்பதாக மிஸ்டர் டெயிலர் பாதிரியார் எழுதிய புஸ்தகத்தால் வெளியாகும். உலகத்திலுள்ள கோபுரங்களிலெல்லாம் பெரிதாகவும் வேலைத்திறமையமைந்ததாகவும் செய்து முடிக்கத்தொடங்கியதாலும் ஒன்றிரண்டு தொடங்காமல் 64 கோபுரங்கள் கட்ட ஒரேகாலத்தில் பிரயத்தனஞ் செய்ததாலும் வேலை முற்றுப்பெறவில்லை, இதன் வேலைப் பெருக்கத்தை நோக்கியே இன்றைக்கும் யாரேனும் ஒருபெரிய கட்டிடவேலை தொடங்கினால் "இஃதென்ன இராஜகோபுரத்துக்கு அடிப்போட்டது போல் இருக்கிறதே" என்று பலரும் சொல்வது வழக்கம். கோபுரங்கட்டுவது சாமான்ய வேலையன்று. "என்ன கோபுரங் கட்டி முடிக்கப் போகிறாய்" என்று வழங்கும் பழமொழியே இதையறிவிக்கும்.

மேலும் கோபுரம் என்பது ஒரு மனுஷனுக்கு முகம் எப்படிச் சிறந்துள்ளதோ அதுபோல ஒரு நகருக்குச் சிறப்பைத்தருவதாகும். இதுபற்றியன்றே "மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக்கோபுரமும்" என்றார் முதியோர். புறத்தோற்ற அழகுபற்றி இவ்வாறு கூறுவதொருபுறமிருக்க சாஸ்திரங்கள் கோபுரம் ஸ்தூல லிங்கமென்று கூறி கோபுர தரிசனமே சகல பாவங்களையும் நீக்குமென்று எத்தனையோ விசேஷித்துரைக்கின்றன. இதனால் தான் "கோபுரதரிசனம் பாப விமோசனம்" என்று பழமொழி வழங்குவதாயிற்று.

ராஜகோபுரம் என்பதன் பொருளாவது கோபுரங்கட்கெல்லாம் இராஜனாக விளங்குவது என்பதாம். மற்றக் கோபுரங்களெல்லாம் குடிகளாகவும் இது அக்குடிகளுக்கு ஓர் அரசனாகவுமிருப்பது என்று கொள்ளக்கிடக்கின்றது. இப்பெயர்க்குத் தக்கவாறே அதன் உருவமைக்கும்படி அடிப்படையிடப்பெற்றுள்ளது. இந்நகர்க்குவரும் ஒவ்வொருவரும் இதனை வந்து கண்டு மிக வியந்து செல்வதுண்டு.

இங்ஙனம் இந்து அரசர்களுடைய பெருமையையும் இந்தியத் தொழிலாளிகளின் வேலைத்திறத்தையும் விளக்கி நிற்கும் முக்கிய சாதனமாகிய இந்த இராஜகோபுரத்தின் தலைப்புற முழுதும் மண்ணிட்டு மூடிச்செடிகொடிகளை வைத்து வளர்த்துக் காலை மாலையில்



ஜனங்கள் வந்து உலாவி நல்லகாற்று வாங்குதற்கு ஏற்ற இடமாக்க வேண்டுமென்று இவ்வூர் முனிசிபல் சேர்மேனவர்களது அபிப்பிராயமென்றும், தேவஸ்தானக் கமிட்டியார்களும் அதற்கு இணங்கி அவ்வாறே செய்யத் தீர்மானித்திருப்பதாயும் அப்படிச்செய்ய அநேகமாயிரம் ரூபாய்கள் செலவிடும்படி சாங்க்ஷன் செய்திருப்பதாயும் அறிகிறோம்.

மதாபிமானிகளே !

இதைப்பற்றி என்ன செய்யவேண்டுமென்று சற்றே ஆராயப்புகுவாம். இவ்வூரில் காலை மாலைகளில் உலாவுவதற்காகவே அமைக்கப்பட்ட தோட்டங்களும் பிற இடங்களும் இருக்கின்றன. மேங்காட்டுப் பொட்டலில் ஒரு பூந்தோட்டம் மிக அழகாக முனிசிப்பாலிட்டியாரால் பரிபாலிக்கப்பெற்றுள்ளது. தமுக்கம் பங்களா இருக்கிறது. வண்டியூர் தெப்பக்குளமிருக்கிறது. வையைநதிக்கரை இருக்கிறது. பற்றுக்துறைக்குக் கிருஷ்ணராயர்தெப்பகுளத்தைசுமார் 15000 ரூபா செலவிட்டுத் தூர்த்து முனிசிபாலிட்டியார் தோட்டமாக்க மேடிட்டு வைத்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் இருக்கவும் இந்த ராஜகோபுரத்தையும் மேற்கண்டவாறு செய்யவேண்டிய அவசியமிருப்பதாகத் தோற்றவில்லை. தவிரவும் இக்கோபுரத்தைச் சுற்றிலும் சுத்தமான நல்லகாற்று வரத்தக்க வழியேயில்லை. வடக்கு தெற்கு கிழக்கு மூன்று புறங்களிலும் கக்கூஸ் நாற்றமும் சாக்கடை நாற்றமு மதிகம். இவை நிற்க,

கோபுர வடிவமே ஸ்தூல லிங்கவுருவம் என்று முன்னமே கூறினோம். ஷை லிங்காகாரமான கோபுரத்தின் தலையில் பலரும் ஏறியுலாவச்செய்வது சாஸ்திர யுக்தமன்று. பாவச்செயலுமாகும். இப்போது மேற்புறத்தைமட்டும் மண்ணிட்டு மூடத்தொடங்கினால் நாளடைவில் வேறுபல சௌகர்யங்கட்காகச் சுற்றுப்புறங்களையும் மூடி ராஜகோபுரம் என்ற பெயரும் இல்லாமற் போகவும் நேரிடும். ஸ்தூல லிங்காகாரமான கோபுரத்தின்மீது ஜனங்கள் ஏறியுலாவுதல் கூடாதானால் இப்போது அதன்மீது பல ஜனங்கள் ஏறி மலஜல விசர்ஜ்ஜனம் செய்கின்றார்களே அது தோஷமல்லவா? அதைவிட அவ்விடத்தைச் சுத்தப்படுத்தி வைத்துச் சனங்கள் ஏறியுலாவினாலாகாதா? என்று சிலர் கேட்கலாம். அதற்குச் சமாதானம் சொல்லுகிறோம். இப்போது அது பாதுகாப்பின்றிக் கிடப்பதால்தானே ஜனங்கள் அசங்கியப்படுத்த நேரிடுகிறது. மாசம் 1-க்கு நாலைந்து ரூபா செலவில் ஒருசேவகனை நேமித்துப் பாதுகாக்கச்செய்தால் ஜனங்கள் அசுத்தபடுத்தாமல் காப்பதுடன் புல்பூண்டு முளையாமலும் பாதுகாப்பான் அன்றோ. அநேக ஆயிர ரூபா செலவிடத்துணிந்தவர்கள் மாதம் நாலைந்து ரூபாய் செலவிடமுடியாதா? எத்தனையோ குளங்களை அசுத்தப்படுத்தாமல் காக்க ஒரு சேவகனை நியமித்திருப்

பதை அங்கங்கே பலருமறிவார்கள். குளத்துநீரை ஜனங்கள் அசுத்தப்படுத்துகிறார்களென்று அக்குளத்தையே மூடிவிடுவது யுக்தமாகுமா? ஆதலால் இப்போது அசுத்தம் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய மார்க்கத்தைமட்டுந் தேடுவதே சிறப்பாகும்.

ஒருவர் ஒரு காரியத்தைச்செய்து முடிப்பது அருமையேதவிர அதை அழிப்பது மிக எளிது. முனிஸிபல் சேர்மெனும் கமிட்டியார்களும் தக்க அந்தஸ்துடையவர்கள்; சேர்மெனவர்களோ கவர்ன்மெண்டார் மதிப்பை நன்குபெற்று அதனால் மிக்க பிரபலம்பெற்றவர். தேவஸ்தான கமிட்டியார்களோ பென்ஷன் போலீஸ் இன்ஸ்பெக்டரொருவர். பிரபல வக்கீல்களிருவர். தருமசீலர்களான நாட்டுக்கோட்டை நகரத்தாரிருவர். இவர்களெல்லாரும் சேர்ந்து முயன்றால் இக்கோபுரத்தைக் கட்டிமுடித்துப் பெரும்புகழடைவது அசாத்தியமல்லவே. இந்தத் தேவஸ்தானமோ வருஷமொன்றுக்கு ஒன்றரை லக்ஷ ரூபாவுக்கு மேற்பட்ட வருவாயுள்ளது. சுமார் 4-லக்ஷ ரூபாய் செலவிட்டால் இக்கோபுர வேலையை முற்றுவித்துப் புண்ணியமும் புகழுமடையலாம். இப்படிச்செய்வதன்றோ செயற்கரிய செய்கை. "செயற்கரியசெய்வார்பெரியர்" என்றபடி பலவகையாலும் தகுதிபெற்ற மேற்குறித்த கனவான்கள் மனத்தில் இதை ஜீர்ணோத்தாரணஞ்செய்யும் நினைப்பு உதயமாகாமற்போனது ஆச்சரியமே. இனியாவது இவர்களெல்லாரும் மறுபடி ஆலோசனை செய்து இந்நகர்க்கு அழகு குன்றாமல் வளரவும், நம் இந்துக்களின் பூர்விக தருமபரிபாலனமாகவும் எண்ணி முடித்துப் புண்ணியமும் புகழும் பெறுவது உத்தமம். இந்நகரவாசிகள் பலரும் மகாராஜாக்களும் ஜமீன்தார்களும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் பெரும்பொருளுதவிசெய்து எய்தற்கரிய புண்ணியமும் புகழுமடையும்படி சோமசுந்தரக்கடவுள் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

இந்நகர் மொட்டைக்கோபுரத்தை முழுக்கோபுரமாக்கியதும் யாருமறிந்ததே.

இவ்வாறு பெரிய காரியங்களைச்செய்து முடிப்பதுதான் என்றும் நிலைத்த புண்ணியத்தையும புகழையும் தருவதாகும்.

சேர்மெனவர்களும் கமிட்டியார்களும் புனராலோசனை செய்து இச்சமயத்தைத் தவறவிடாது ஷை ராஜகோபுரத்தைக்கட்டி முடிக்க முயலும்படி பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,
மு. ரா. கந்தசாமிக்கவிராயர்,
விவேகபாநுப்பத்திராதிபர், மதுரை.

## பாணாசுரன் கதை.

முன் 248-ப்பக்கத் தொடர்ச்சி.

அதனால் காயப்பட்டு மதியிழந்து தன்துவஜஸ்தம்பத்திற் சாய்ந்துகொண்டிருந்த பாணாசுரனை நோக்கி, கும்பாந்தனென்றமந்திரி, ஹே தானவவேந்தே! மகா சாமர்த்தியம்பொருந்திய இந்தச் சத்துருவை அலக்ஷியமாக நினைத்து நீயேன் இதுகாறும் கொல்லாது வைத்திருக்கின்றாய். இந்த வீரனானவன் தனது எண்ணத்தைச் சாதித்துக்கொண்டுவிட்டான். ஆயின அமரிக்கையுடன் போர் புரிகின்றான், உன்னுடைய மாயாபலத்தால் அவனுடன் நீ போர்புரிவாயாக. இல்லாவிடின் உன்னால் அவனை ஜயித்தல் அரிது. இப்பேர்ப்பட்ட சத்துருவை நீ அலக்ஷியமாக நினைத்து அவனுக்கு இடங்கொடுத்தல்சரியன்று. உன் மாயா சக்தியால் உன்னைக் காப்பாற்றிக்கொண்டு. எங்களையும் காப்பாற்றுவாயாக. உனது மாயையால் அவனை நீ வெற்றிகொள்ளாவிடின் அசுரர்களையெல்லாம் அவன் கொல்வான். ஆதலால் ஹே! வீர, அவன் எங்களைக் கொல்வதற்குமுன் நீ அவனைக் கொல்வாயாக. இல்லாவிடில் இன்னும் நூற்றுக்கணக்கான தைத்தியர்களையும் கொன்று உஷையையும் அபகரித்துச் செல்வான் என்றான். இவ்வாறு கும்பாந்தன் சொல்லிய வசனங்களைக்கேட்ட பாணன்கோபாக்கிராந்தனாய் இதோபார்! அனிருத்தனைக் கொன்றேன். கருடன் சர்ப்பத்தைப்பிடிப்பதைப்போல்அவனைப் பிடித்தேன்பார்! என்று சொல்லிக்கொண்டு கந்தர்வ நகரம்போன்ற தனது இரதத்திலேரிக்கொண்டு மாயையால் கண்ணுக்குத்தெரியாமல் திடீரென்று மறைந்து அனிருத்தன்மேல் சரமாரி பொழிந்தனன். அபஜயமறியாத ஜயசீலனான அனிருத்தன் மகா பௌருஷத்துடன் பாணாசுரனை தசதிக்கிலும் நோக்கியும் அவனைக்கண்டானிலன். தானவசிரேஷ்டனாகிய பாணன் தாமசியென்ற வித்தையாகிய மாயாசக்தியால் அனேக கூரிய பாணங்களை அனிருத்தன்மேல் வருஷித்து அவனை நாகபாசத்தாற்கட்ட, அவ்வாறு நாகாஸ்திரத்தாற் கட்டுண்ட அனிருத்தன் மைநாகபர்வதத்தைப்போல் அசைவற்று யாதொருவேதனையும் பயமுமில்லாமல் நின்றான். அப்பால் துவஜஸ்தம்பத்தில்சா

ய்ந்துகொண்டிருந்த பாணன் கும்பாந்தனைநோக்கி "ஹேமந்திரீ, நமது குலத்தின்பெருமையைக்கெடுத்த கொடும்பாவியாகிய இந்தத்துஷ்டனை இனிக்கொல்" என்று சொல்ல, அதற்கு மந்திரி, ஹே! தானவேந்திரா, ஒருவார்த்தை தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன் அனுமதிகொடுக்கவேண்டும். இவனைக்கொல்லுமுன் முதலில் நாம் அறிந்துகொள்ளவேண்டிய விஷயமொன்றுளது. இந்த மகா யுத்தத்தில் அவன் போர்புரியுங்கால் ஓர் தேவனைப்போல் அமர்செய்யக்கண்டேன். அவன் மகா சக்திவாய்ந்தவனாயிருக்கிறான். மிகப்பராக்கிரமம் பொருந்தியவனாகத்தோற்றுகிறான். தனுர் வித்தையில் தேர்ந்தவனாயிருக்கின்றான். ஆதலால் ஓ தைத்திய சிரேஷ்டா, இவனைக்கொல்வது தகுதியன்று. அவன் உனது குமாரத்தியையும் காந்தர்வமுறைப்படி விவாகம் செய்துகொண்டிருக்கிறான். ஆனால் அவள் அவனுக்குக் கன்னிகாதானமாகக்கொடுக்கப்படவில்லையாகையால் நீ உஷையை அவனைவிட்டுப் பிரித்துவிடலாம். இதையெல்லாம் ஆலோசித்து ஆராய்ந்தறிந்து அவனைப்பிறகு கொல்லவேண்டும். அல்லது அவனைப் பூஜிக்கவேண்டும். தேவராஜனைப்போல பராக்கிரமம்வாய்ந்த அவன் யாரோ தெரியவில்லை. அவன் உத்தமபுருஷனாயிருக்கின்றான். நாம் மரியாதைசெய்யத்தகுந்த பாத்திரவான். நாகாஸ்திரங்களாற் கட்டுப்பெற்றும் சிறிதும் அதனால் அவன் வருந்துகின்றானல்லன். அவன் நல்ல குலீனனாகவும், தைரியசாலியாகவும், பராக்கிரமம் வாய்ந்தவனாகவும், அநேக நற்குணங்கள் பொருந்தியவனாகவும் தோற்றுகிறான். நாகபாசத்தாற் கட்டுப்பட்டுத்தேகமெங்கும் ரத்தம் பிரவாகமாகஓடினபோதிலும்அவன்நம்மைச்சிறிதும்லக்ஷியஞ் செய்கிறானா,பாரும்? எல்லாவிதயுத்தப்பயிற்சியிலும்தேர்ந்தவனாக இருக்கின்றான். அவன் நம்மைப்பார்த்து தனது மூன்றுகீற்றுகளோடுகூடிய நெற்றியை நெறிக்கின்றதைப்பார். ஆயிரங்கரங்களுங்கூடிய உனது பராக்கிரமத்தைச்சிறிதும் மதியாமல் இருகரங்களையுடைய இவன் உனக்குச்சமதியாகப் போர்புரிந்தான். இப்பேர்ப்பட்ட சிறுவன் யாரோ? மேலும் உனது புத்திரியாகிய உஷை அவனிடத்து மிக்க பிரீதியும் மோகமுங்கொண்டிருக்கின்றாள். ஆதலால் அவளை நீ வேறொருவனுக்கு விவாகஞ்செய்துகொடுத்தல் சரியன்று. ஆனால்பராக்கிரமம்பொருந்திய இந்தச் சிறுவனே நல்ல குலீனனாயிருப்பானா



கில் அவனே உன்கன்னிகையைத் தானம்பெற்றுக்கொள்ளத் தக்கோனாவான். ஆதலின் இவனைக் கொல்லாது காப்பாற்றுவர்பார்க என்றான்.

பாணாசுரனும் மந்திரி சொல்லியதற்கிணங்கி "நல்லது அப்படியே ஆகட்டு"மெனப்பகர்ந்து அநிருத்தனைக் காராக்கிரகத்திற்கனுப்பி அங்குற்ற காவலாளிகளிடம் ஒப்புவித்துத்தன்னரண்மனைசென்றான். பாணன் தனது மாயாசக்தியால் அநிருத்தனை நாகபாசத்தினாற்கட்டிக் காராக்கிருகத்தில் வைக்க அதைக்கண்ட நாரதமாமுனி ஆகாசமார்க்கமாய்க்கிளம்பி துவாரகாபுரியையடைந்து நிகழ்ந்தவற்றை கருடவாஹனனான ஸ்ரீ கேசவனுக்குத் தெரியப்படுத்தினான். உஷை தனது பர்த்தா நாகாஸ்திரங்களாற் கட்டுப்பட்டதைக் கண்டு கண்ணீர் விட்டு அழுதுகொண்டிருந்ததைப்பார்த்த அனிருத்தன் "ஓ மடந்தாய்! நீயேன் அழுகிறாய்? அஞ்சற்க ஓ கமலாட்சி நாரதமகாமுனிவர் துவாரகாபுரிசென்று நிகழ்ந்தனவற்றை ஸ்ரீ கேசவரிடஞ்சொல்லுவார். சங்கசக்கரதரபாணியாகிய அந்த மகாபுருஷர் ஷோணிதபுரத்திற்கு வந்து இந்தக் கொடிய அசுரனாகிய பாணனை மாய்க்கப்போகின்றார். அவர் சங்கத்தொனியைக்கேட்ட மாத்திரத்தில் தானவசைனியம் நாசத்தையடையும். 'அசுரஸ்திரீகளின் கற்பமழியப்போகின்றது பார்! என்று சொல்லி அநிருத்தன் உஷையைச் சமாதானப்படுத்தினான்.

## Chapter 267.

### பரதேவதையாகிய கார்த்தியாயனி அனிருத்தனுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றல்.

மகா வீரனாகிய அனிருத்தனையும் உஷையையும் பாணாசுரன் காராக்கிருகத்தில் அடைக்கவும் அனிருத்தன் பரதேவதையாகிய சண்டியை தன்னைக் காப்பாற்றவேண்டிப் பலவாறாக ஸ்தோத்திரம் செய்தான். அச்சுதனும் அநாதியும் அந்தரங்கனும் சாசுவத

மாயுமிராநின்ற ஸ்ரீமன் நாராயணனை நமஸ்கரித்து தேவதைகளாலும் ரிஷிகளாலும் ராக்ஷஸர்களாலும் துதிக்கப்பெற்றவளான சண்டிதேவதையின் மகிமைகளை கானஞ்செய்கின்றேன். மகேந்திரனுகிய விஷ்ணுவுக்குச் சகோதரியான துர்க்காதேவியை எனது க்ஷேமார்த்தமாகப் பணிகின்றேன், உள்ளும் புறமும் என்னைச்சுத்திசெய்துகொண்டு பரிசுத்தமான மனத்துடன் கூடியவனுயும் அஞ்சலியஸ்தனுயிருந்துகொண்டு வரப்பிரசாதியாகிய உன்னைப்பணிந்து தொழுகின்றேன். என்னை இந்தப்பந்தகத்தினின்று நீக்கி எனக்கு ஆயுளையும் ஆரோக்கியத்தையும் கொடுப்பாயாக என்று ஸ்தோத்திரம் செய்தான். பக்தவத்ஸலையாகிய துர்க்காதேவி காராக்கிருஹத்தில் அனிருத்தனுக்குப் பிரசன்னமாகி அவனை அமிர்த வசனங்களால் தேற்றினுள். உடனே அனிருத்தன் துர்க்காதேவியை நமஸ்கரித்து பத்தாஞ்சலியுடனுய்நிற்க, பரதேவதையானவள் தனது விரல்களால் நாக பாசத்தைச்சேதித்து அனிருத்தனை நோக்கி, ஹே வத்ஸ! சில நாட் பொருத்திரு. சக்கராயுதபாணியாகிய ஹரி பாணுசுரனது ஆயிரம் கரங்களையும் கொய்து காராக்கிருகத்தினின்றும் உன்னை விடுவித்து துவாரகைக்கு அழைத்துச்செல்வார்" என்று சொல்லி அந்தர்த்தானத்தையடைந்தாள்.

## Chapter 268.

### அனிருத்தனைக்காணுமல் யாதவர்கள் கவலையுறல்.

இது இவ்வண்ணமிருக்க, துவாரகாபுரியில் அனிருத்தனைக் காணுமல் அவன் பாரியைகளும் ஸகிகளும் ஆதரவற்று அகதியான ஆட்டுக்குட்டிகளைப்போல் கதறினுர்கள். ஐயோ பிரபுவாகிய ஸ்ரீகண்ணபிரானது ரக்ஷணையில் நாமெல்லோருமிருந்தும் இப்படி பயத்தாலும் துக்கத்தாலும் கதியற்றவர்களைப்போல நாம் அழும்படியாகக் காலம் நேர்ந்துளதே. என் செய்வோம்? ஸ்ரீ கோவிந்தனது தோள் வலிச்சார்பில் அல்லவா, துவாதசாதித்தியர்களும், மருத்துக்களும், இந்திராதி தேவர்களும், தேவலோகத்தில் கவலையற்று வாழ்கின்றனர். அப்படிப்பட்ட கேசவனுக்கே இந்தக் கொடிய துக்கம் நேர்ந்ததே. என்ன செய்வோம். மகா வீரனுன அனிருத்தனைத் திருடிச்சென்றதால் வாசுதேவனுக்கு ஸகிக்க முடியாத சினத்தீயை மூட்டிய அந்தத்துராத்மா இந்த லோகத்தில் யாரைக்கண்டுதான் அஞ்சுவான்? அவன் சர்வ பக்ஷகனுன யமனையும் சாப்பிட்டுவிடுவான். ஸ்ரீ வாசுதேவனையும் போரில் எதிர்த்து நிற்க வல்லவனுவான். இக்கேடுவிளைத்தவன் சசிபதியாகிய இந்திரனுயினும் உயிர்தப்பிப்பிழைத்தலரிதாகும். அந்தோ! நமது நாயகனையாராவது திருடிச் சென்றுர்களோ? அல்லது அவர் நம்மை இந்த நிர்ப்பாக்கியமான நிலையில் வைத்துக் கைவிட்டுப்போயினரோ? ஐயோ என் செய்வோம். அவரைப்பிரிந்து எவ்வாறு ஒருகணமேனும் நாம் உயிர்தரித்திருப்போம்! என்று புலம்பிக்கொண்டு தன் நாயகனை விட்டு நீங்கிய சக்கரவாகப் பறவைகளைப்போல் வாய்விட்டலறி தாமரைபோன்ற கண்களினின்று நீர்வடித்தனர்.

இவ்வழுகைக்குரலைக்கேட்ட யதுகுலத்தலைவர்கள் சிங்கக்குட்டிகளைப்போல் தங்கள் கிருகத்திலிருந்து குதித்து ஓடிவந்து மிக்க பிரீதியுடன் அனிருத்தன் திருமாளிகையில் என்னநிகழ்ந்திருக்கின்றதோ அறியோமே? இது என்ன கூக்குரல்? ஸ்ரீ கிருஷ்ணபகவான் துணையும் கிருபையும் சம்பூர்ணமாயிருக்க பயமென்பது இங்கு வரக்காரணம் யாது? என்று சொல்லிக்கொண்டு, ஸ்ரீ கிருஷ்ணனது அரண்மனையினின்றும் ஒரு பெரிய பேரிகையை (beyle)எடுத்துவந்து சத்திக்க, அதன் தொனியைக்கேட்டு என்ன நிகழ்ந்தது? என்ன சமாச்சாரம்? என்று ஒருவர்க்கொருவர் கேட்டுக்கொண்டு, யாதவகுலத்தோரனைவரும் வந்து கூடினர். நடந்த விருத்தாந்தத்தைக் கேட்ட யாதவர்கள் கண்ணில் தீப்பொரி பறக்க நீர்தளும்ப நெட்டுயிர்ப்புடன்கூடியவர்களாயிருந்தனர். அவர்களுடன் கண்ணபிரானும் அடிக்கடி பெருமூச்செறிந்துகொண்டு சும்மாவிருந்தார். அதைக் கண்ட விப்புருது ஸ்ரீ கண்ணபிரானை நோக்கி "உமக்கேன் இந்தக்கவலை? உன் புயவலிச்சார்பைச் சேர்ந்த யாதவர்களும் சுயேச்சையாய்த் திரிகின்றனரே? ஜயம் அபஜயமிரண்டும் உன்னையே சேர்ந்ததென விட்டுவிட்டு, பராக்கிரமம் பொருந்திய வாஸவனும் சந்தோஷமாய் நித்தி

ரை செய்கின்றானே. அவ்வாறிருக்க, ஓ மகாபாகோ! உனது பந்துபாந்தவர்கள் ஆறாத்துயரில் ஆழ்ந்திருப்பதைக் கண்டிலையோ? அவர்களைத் தாமதமின்றி ரக்ஷிப்பாயாக. ஓ மாதவா! நீ வாயைத் திறவாது சும்மா இருக்கலாமா? என்று சொல்லி, பிரஹஸ்பதிக்குச் சமானமான மதிமானாகிய வாஸுதேவன் மீளவும் பெருமூச்சுவிட்டுக்கொண்டு விப்புருதுவை நோக்கி, “ஹே யாதவ சிரேஷ்டனே, எனக்கிருக்கின்ற மனக்கவலையைச் சொல்லுகின்றேன், கேள். என் பௌத்திரனாகிய அனிருத்தன் சிறையில் அகப்பட்டுக்கொண்டபடியால், பூமியிலுள்ள அரசர்களும் எனது சிநேகர்களும் நான் கையாலியலாதவனென்று என்னை அவமதிப்பார்களல்லவா? முன்னோர் காலத்தில் நமது அரசனாகிய ஆகுகனை சால்வனென்ற வேந்தன் சிறைபிடித்துச் செல்ல நாம் அச்சால்வனுடன் கொடும்போர்விளைத்து நமது மன்னனை மீட்சி செய்து கொணர்ந்தோம். ருக்மணி புத்திரனாகிய பிரத்யும்னன் பாலனாயிருக்கும்போது அவனை சம்வரனென்ற அசுரன் திருடிச் செல்ல, பிரத்தியும்னன் அவ்வசுரனைப் போரில் மாய்த்துத் திரும்பிவந்து சேர்ந்தான். அவ்வாறிருக்க இப்பொழுது அனிருத்தன் போனவிடத்தை யாமறியோம். இதற்குமுன் இவ்வளவு விசனத்தையும் வேதனையையும் யான் அனுபவித்தவனல்லன். இவ்வாறு என் தலையில் இடது காலை வைத்த அந்தத் துஷ்டனை அவன் இனத்தோருடன் போரிற் கொல்கின்றேன் பார்.” என்று சொன்னார். அதைக்கேட்ட் சாத்தியகி “அனிருத்தனிருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க நான்கு திக்குகளிலும் தூதர்களையனுப்பி அனிருத்தனை நாடுகள்தோறும் சென்று பர்வதங்களிலும் காடுகளிலும் பூமியின்மேலும் பாதாளத்திலும் தேடும்படி செய்வோம் என்று சொல்ல, தர்மாத்மாவாகிய ஆகுகன் போதுமான இரததுரகங்களுடன் தூதர்களையனுப்பி மரங்களும் கொடிகளுமடர்ந்த, ரிக்ஷவான், ரைவதகம் என்ற மலைகளிலும் உத்தியானங்களிலும் காடுகளிலும் தேடும்படி செய்தான். அப்பால் யாதவ சேனாதிபதியாகிய அநாதிருஷ்டி யென்பவன் உலையா முயற்சியுடன் கூடிய கண்ணபிரானை நோக்கி “ஹே, பிரபோ! அடியேன் சொல்லும் வார்த்தையைத் திருச்செவிசாற்றியருளவேண்டும். நீர் அதிலோமன், புலோமன், நாகன், சால்வன் என்ற அசுரர்களுடன் மலைந்து அவர்களைக்கொன்



றீர். தேவர்களின் நிமித்தமாக ஒரு கொடும்போர் நேர்ந்த காலையில் ஹயக்கிரீவன் என்ற ராக்ஷஸனை அவன் சுற்றத்தாருடன் மாய்த்தீர், ஹே கிருஷ்ணா, பாரிஜாதபுஷ்பத்தை ஸொர்க்கத்தினின்றுகொண்டு வருங்காலையில் ஒரு பெரிய யுத்தம் நேர அந்த யுத்தத்தில் நீ ஒருவனாகவேயிருந்துகொண்டு உன் புஜபலபராக்கிரமத்தால், ஐராவதமென்ற கஜத்தில் ஏறி உன்னுடன் போர்புரிந்த மகா பராக்கிரமசாலியான தேவேந்திரனை வெற்றிகொண்டீர். ஒருவேளை இந்த யுத்தத்தால் உம்மிடத்து தேவராஜனுக்கு வன்மமுண்டாகி அதைத்தீர்த்துக்கொள்ள ஒருவாறு அவன் அனிருத்தனைக்கொண்டு போயிருக்கலாமோ? மகவானைத்தவிற வேறு ஒருவனும் உம்மிடத்து இப்படிச் செய்யத்துணியான்.” என்று பகர்ந்தனன். அதுகேட்ட கண்ணபிரான் சர்ப்பத்தைப்போல் பெருமூச்செறிந்து அநாதிருஷ்டியை நோக்கி, ஹே! சேனாபதே, நீ யப்படிச்சொல்லுதல் கூடாது. தேவர்கள் இழிவான புத்தியுள்ளவர்களல்ல. நன்றியறியாமை, மூர்க்கத்தனம், ஆண்மையின்மை யென்ற குணங்கள் அவர்களிடத்து இல்லாதனவாம். தேவர்கள் நிமித்தமாய்தானவர்களைக் கொல்ல நான் எவ்வளவோ உழைத்திருக்கின்றேன். அவர்களின் நிமித்தமாக எத்தனையோ ராக்ஷஸர்களைப் போரில் மாய்த்திருக்கின்றேன்.

தேவர்கள்தானெனக்குப் பேருதவிசெய்வாராவார். என்மனம் அவர்களிடத்தேயே பற்றியிருக்கின்றது. தேவர்களே என் குணங்களை நன்றாயறிந்த என் பக்தர்களாகையான் அவர்கள் எனக்கு ஒருகாலமும் தீங்கு நினையார். உனது இழிவான புத்தியால் தேவர்களை நீ அவ்வாறு நினைக்கலானாய். தேவர்கள் ஸத்திய வாக்குள்ளவர்கள். ஆதலால் அவர்கள் இதைச் செய்திராரென்பது திண்ணம்.” என்று சொல்ல அக்குரூரரும் கண்ணபிரான் சொன்னதே அனுமோதித்துப் பேசினார். அப்பால் கண்ணன், தேவர், கந்தர்வர், யக்ஷர், ராக்ஷஸர் இவர்களில் எவரேனும் அனிருத்தனைத்திருடிச் சென்றிரார். மகாவீரனாகிய அனிருத்தனைப்பாதிவிரத்தியமில்லாததானவ ஸ்திரீகளில் ஒருத்தி மோசமாய்க் கொண்டுபோயிருக்கலாமெனத் தோற்றுகிறது.” என்று ஸ்ரீ கண்ணபிரான் சொல்லியதை யாதவரெல்லோரும் நன்றென்று அங்கீகரித்தனர். இதற்குள்ளாக அனிருத்தனைக்

கண்டுவரும்படி அனுப்பிய தூதர்கள் முகவாட்டத்துடன் கொலுமண்டபத்திற்குத் திரும்பிவந்து அரசனை நோக்கி, ஹே! ராஜன்! காடுகள், மலைகள், குகைகள், வழிகள், நதிகள், உத்தியானங்கள் முதலிய விடங்கள்தோறும் அடிக்கடி அனிருத்தனைத் தேடிப்பார்த்தோம். நாங்கள் தேடாத இடம் ஒன்றுமில்லை. அனிருத்தனை ஓரிடத்திலும் கண்டிலம். இனிச் செய்யவேண்டியதென்னவென்று தேவரீருடைய மகத்தாக்ஞையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்." என்று சொன்னார்கள். அதைக்கேட்ட ஸ்ரீ கண்ணபிரானும் யாதவகுலத்தலைவர்களும் கண்ணீர் பெருகவிட்டு ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கி, "ஐயோ! இனி என் செய்வோம்?" என்று சொல்லிக்கொண்டு இராமுழுவதும் பேசிக்கொண்டிருந்து கழித்தனர்.

பொழுது விடிந்து சூர்யோதயமானபின் தேவரிஷியாகிய நாரதர் மந்தஹாசத்துடன் ஸபாமண்டபத்திற்கு வந்தார். கிருஷ்ணன் அநேக யாதவ சிரேஷ்டர்களுடன் அங்கு இருப்பதைக்கண்டு "ஜய விஜயீபவா," என்று போற்றி உக்கிரசேன மகாராஜனுக்கு மற்றுமுள்ள யதுகுலோத்தமர்களுக்கும் வந்தனமளித்தார். அப்பொழுது பராக்கிரமமுள்ள கண்ணபிரான் வேறு யோசனையில் ஆழ்ந்து இருந்தவராயினும் நாரதமாமுனியைக் கண்டவுடன் சரேலென்றெழுந்திருந்து அவர்க்கு மதுபர்க்கம், கோ முதலியவைகளைத்தந்து வந்தனோபஜாரங்கள் செய்து, திவ்வியமான ரத்னகம்பளங்கள் விரிக்கப்பெற்ற ஆஸனத்தில் நாரதரை வீற்றிருக்கச்செய்தார். பிறகு நாரதர் யதுகுலத்தோரை நோக்கி "எல்லோரும் கையாலியலாத பேடிகளைப்போல் மனக்கவலை மேலிட்டவர்களாயும் தைனியர்களாயும் தைரியமிழந்தவர்களாயும் காணப்படுகின்றீர்களே! இதற்கு என்ன காரணம்? என்று கேட்க, ஸ்ரீ கண்ணபிரான் நாரதரை நோக்கி, ஹே! பிராமணோத்தமரே, நீர் மகாதபஸ்வி திருடவிருதர். உலகெங்கும் சஞ்சாரம் செய்கின்றவர். நீர் அறியாத விஷயம் ஒன்றுமில்லை. என் பௌத்திரனாகிய அனிருத்தனை எவனோ ஒருவன் இரவில் திருடிக்கொண்டு போய்விட்டான். அவனைக்குறித்து நாங்களெல்லோரும் கவலையுற்றிருக்கின்றோம். அனிருத்தனை நீர் பார்த்திருப்பீரோ? அல்லது அவனைக்குறித்துக் கேட்டிருப்பீரா? திருவாய்மலர்ந்தருளப்



பிரார்த்திக்கிறேன்." என்றார். அதுகேட்ட நாரதர் "ஹே! மதுசூதனா, கேள்! ஒப்பில்லாத புயவலி வாய்ந்த பாணாசுரனுக்கு உஷையென்று ஓர் புத்திரியிருக்கின்றாள். அவளுக்காக அனிருத்தனை சித்திரலேகையென்ற அப்ஸர ஸ்திரீ இரவிற் கொண்டுபோய்விட்டாள். அதனிமித்தமாய் பாணனுக்கும் அநிருத்தனுக்கும் முன்னோர்காலத்தில்நடந்த தேவாசுரயுத்தம்போன்ற ஓர்மகா யுத்தம் நிகழ, அப்போரில் பாணன் அபஜயமடைந்தான். அப்பால் அவன் பயந்து தனது மாயா சக்தியினால் அனிருத்தனை நாகாஸ்திரங்களாற் கட்டிப் பிறகு அவனைக் கொன்றுவிடும்படி ஆக்ஞாபிக்க, பாணாசுரன் மந்திரியாகிய கும்பாந்தன் அவனைக்கொல்லவேண்டாமென்று தடுத்தான். பாணாசுரன் மாயா சக்தியால் அனிருத்தனை இப்படிச் செய்யாவிடில் மகாவீரனாகிய உனது பௌத்திரனை அவன் ஜயிக்க வல்லவனல்லன் ஹே கிருஷ்ணா! அனிருத்தன் நீ சைன்யத்துடன் வரப்போகின்றாயென்ற எண்ணத்துடன் இன்னும் உயிரோடிருக்கின்றான். யசஸும் கீர்த்தியும் ஜயமும் அடைவதற்கு இதே தக்க ஸமயம். ஆதலால் சீக்கிரத்தில் புறப்படு." என்றார். அதைக்கேட்ட வாசுதேவன் புறப்படுவதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்ய, அவ்வாறு பிரயாணப்படும் தருவாயிலிருந்த ஜனார்த்தனன் மேல் நாகவாஸிகள் சந்தனத்தூளையும் நெற்பொரியையும் வாரியிறைத்தனர். அப்பொழுது நாரதமாமுனி கண்ணபிரானை நோக்கி, "ஓ மகாபாகு, அனிருத்தனிருக்கின்ற ஷோணித புரிக்கும் துவாரகைக்கும் பதினோராயிரம் யோசனை தூரமிருக்கின்றது. ஆதலால் நீ விநதை புத்திரனாகிய கருடனை ஸ்மரி. அவன்தான் இந்த வெகு தூரத்தை வாயுவேக மனோவேகத்துடன் கடந்து அதிசீக்கிரத்திலுன்னைப் பாணாசுரன் பட்டணத்திற் கொண்டுபோய்ச் சேர்க்க வல்லவன் என்று சொல்ல, கண்ணன் கருடாழ்வாரை ஸ்மரித்தான். ஸ்மரிக்கவே கருடன் கண்ணபிரான் முன்றோன்றி அஞ்சலியஸ்தனாய் நின்றுகொண்டு அவரை நமஸ்கரித்து "அடியேனாலாவதென்ன? ஆக்கியாபித்தருளவேண்டும். ஹே கோவிந்தா? எந்த நகரத்திலிறங்கி அதை த்வம்ஸஞ்செய்துவரவேண்டும்? உனது சக்கராயுதத்தின் தாபத்தையும் உன் கதையின் வலியையும் அறியாத மூடன் யாவன்? உனதருட்பிரசாதத்தால் எனக்குண்டான பலத்தை அறியாதவன் ஒருவனுமிலன். அகங்காரத்தால்

தனது நாசத்தைத்தேடிக்கொண்டிருக்கின்ற மூர்க்கன்யாவன்? வனமாலைதரித்தவலதேவன் தன் சிங்கமுகத்துடன்கூடிய ஹலமென்ற ஆயுதத்தை எவன் கழுத்தில் வைக்கப்போகின்றானோ? எவனுடைய சரீரம் பகவானுடைய கோபாக்கினியால் வெந்து மண்ணோடு மண்ணாகுமோ? உனது பாஞ்சஜன்ய சங்கத்தின் தொனியைக்கேட்டு எவன் மனமானது கலங்கி தன் பந்துக்களுடன் யமபட்டணம்போய்ச்சேருவானோ? என்று வசனிக்கலானான்.

வைநதேயன் சொல்லிய அமிர்தவசனங்களைக்கேட்ட பகவானாகிய ஸ்ரீ கோவிந்தன் "ஹே பக்ஷிராஜ! அபஜெயமென்பதை அறியாத அனிருத்தனை, பாணாசுரன், தன் குமாரத்தியி னிமித்தமாய் ஷோணிதபுரமென்ற விடத்தில் சிறையில்வைத்திருக்கின்றான். காமவிகாரத்தை யடைந்தவனான அனிருத்தனை நாகபாசத்தாற் கட்டிக் காராக்கிருகத்தில் பாணன் வைத்திருக்கின்றான். அவனை நாம் சிறைச்சாலையினின்று மீட்டுவரவேண்டும். ஆதலால் அனிருத்தனிருக்குமிடத்திற்கு என்னை எடுத்துக்கொண்டு சீக்கிரத்திற் செல்வாயாக. உனது மருமகளாகிய வைதர்ப்பியும் சதா அழுதுகொண்டிருக்கிறாள். உனது பிரஸாதத்தால் அவள் தன் குழந்தையாகிய அநிருத்தனை யடையட்டும். ஹே சர்ப்பநாசகா! முன்னொருக்கால் நீ என்னுடன் அமிர்தத்தை யபகரித்துவந்தவனன்றோ? நீஎனக்கு வாஹனன். விருஷ்ணிகுலத்தோரானவரும் உன் பக்தர்கள். உன்பக்தர்களின் அபீஷ்டத்தை இன்று தீர்த்துவைப்பாயாக. முன்னொருக்கால் நீ உனது பராக்கிரமத்தால் உனதன்னையாகிய வினதையை அடிமைத்தனத்தினின்றும் நீக்கினவனன்றோ? தேவமித்திரனானநீ அவர்களையுன் முதுகிற் சுமந்துகொண்டு தேசங்கள்தோறும் ஸஞ்சரிக்கின்றாய். உன்னுதவியிற்றான் அவர்கள் ஜயசீலர்களாயிருக்கின்றனர். மேருவைப்போற் கனமாயும், காற்றைப்போல் இலேசாகவுமிருக்கின்ற உனக்குச் சமான பலத்துடன் கூடியவர் முக்காலத்திலும் மூவுலகிலும் இலராவார். ஹே கலுழா, ஒரு க்ஷணிக தேசகாலம், அநிருத்த நிமித்தமாய் எனக்குதவி புரிவாயாக என்று சொன்னார்.

அதற்குக்கருடன்:—ஹேமஹாபஹோ! நன்றாய்ச்சொன்னீர். என் வெற்றியெல்லாம் உமதருட்பிரஸாதத்தாற் கிடைத்தவையே.



யாம். ஹே மதுஸூதன, நீர் செய்த ஸ்தோத்திரத்தால் நான் ஆசிபெற்றும் தன்னியனானேன். நாவிற்கும்மனத்திற்குமெட்டாதவுமது மகிமையை எல்லோரும் எடுத்துரைக்க நீர் என்னைக் கௌரவப்படுத்திப்பேசினீர். நீரே வேதநாயகன்; நீரேதேவநாயகன்; நீரேபலதாதா; நீரே எல்லோருடைய மனோபீஷ்டத்தையும் ஸித்திபெறச்செய்பவர். நீரே சதுர்முகன்; நீரே சதுர்புஜன்; நாலுவிதமான அக்கினியும்நீரே; நான்கு ஆசிரமதர்மங்களையும் நான்கு வர்ணத்தாரையும் உண்டுபண்ணியவர்நீரே. நீரே வித்வான். நீரே சாரங்கபாணி. சங்கசக்கரகதாதரன். நீரே தேவகிநந்தனன்; நீரேசாணூரஸம்ஹாரன்; நீரே கோவர்த்தனகிரி எடுத்துக் குடையாகப்பிடித்துக் கோக்களைக் காத்த ஸ்ரீ கோபாலன்; நீரே மல்யுத்தப்பிரியன்; நீரே மகாபுருஷன்; நீரே பிராமணப்பிரியன்; நீரே பிரமன்; நீரே தாமோதரன்; நீரே தானவஸம்ஹாரகன்; நீரே வாலியையும் ராவணனையும் சங்கரித்து அவர்கள் ராஜ்ஜியத்தைச்சுக்கிரீவனுக்கும் விபீஷணாழ்வாருக்கும் கொடுத்தவர்; நீரே க்ஷீராப்தியிற் பிறந்த மகாரத்னம்;உம்மிடத்தினின்றுதான் மகாநதிகள்உற்பத்தியாகின்றன. நீரேவருணன்; நீரேசூலாயுதபாணி;நீரே சார்ங்கதன்வா;நீரேதசாரஹன்;நீரே கோவிந்தன்;நீரேஆகாசம்; நீரே அந்தகாரம்;நீரேபலனைத்தருகின்றவர்;நீரேசொர்க்கத்தைக்காப்பவர்; நீரே பிரளயகாலமேகம், நீரே திரிலோகத்திற்கும் வித்தாகியகாமக்குரோதமோஹம், நீரே காமன்,நீரே காலன்,நீரேஸர்வஸம்ஹாரகன், நீரே ஹிரணியகர்ப்பன், நீரே மதுஸூதனன், நீரே சிருஷ்டிகர்த்தா; நீரே எண்ணற்கரியகுணங்களுடன்கூடிய தேவதேவன். இப்பேர்ப்பட்ட மகிமைதங்கிய நீர் என்குணங்களை எடுத்துரைத்தீர். பாவிகள் உமது கோபநோக்கால் காலதண்டத்திற் கிரையாகி நரகஞ்சேர்கின்றார்கள். சாதுக்கள் உமது அருள்நோக்கால் இம்மை மறுமை இரண்டிலும் ஆனந்தமனுபவிக்கின்றார். ஹே கோவிந்தா! ஏறும் என் முதுகில், செல்கின்றேன் பாணன் பட்டணத்திற்கு உமதுயகத்தாக்கினையை எதிர்பார்க்கின்றேன் என்றுசொல்லியசுபர்ணனாகியகருடன் வசனங்களைக்கேட்டு அவனை ஆலிங்கனஞ் செய்துகொண்டு ஸ்ரீகேசவன் சத்துருவைக்கொல்லுவதற்காக அர்க்கியங்கொடுத்து, சந்தோஷத்துடன் கருடவாஹனத்திலேறி உட்கார்ந்தான். மேகம்போலிருண்ட கேசமும், சதுர்ப்புஜங்களும்,நான்கு தந்தவரிசைகளும், செங்

தாமரைமலர்போன்ற கண்களும், மிருதுவானசரீரமும், முழங்கால்வரைநீண்ட புஜங்களும், ரத்தம்போற் சிவந்த விரல்களும்,நகங்களும் இனியகுரலும்,சிங்கநடையும்,கோடிசூரியதேஜசும்வாய்ந்துவேதவேதாங்கங்களுக்கு நியந்தாவாய் நீலமேகசியாமளனாய் ஸ்ரீவத்ஸாங்கித மார்பனாய் விளங்காநின்ற புருஷோத்தமன், துவாரகாபுரியை ஜாக்கிரதையாய்க்காத்துவரும்படி அங்குள்ளோருக்கு ஆக்கியாபித்து கருடன்மேல் ஆரோகணிக்க, பலராமனும், பிரத்தியும்னனும் அவர்க்குப்பின் ஏறிஉட்கார்ந்தனர். அப்பொழுது சித்தர்கள் சாரணர்கள்மகரிஷிகளெல்லாரும் கருடவாகனரூடராய் ஆகாயத்தில் தோன்றிய கேசவனை நோக்கி, "ஹே லக்ஷ்மிகாந்தா, உன்னையுத்தத்திலெதிர்த்துப் போர்புரியவல்லவர்யார்? தயித்தியவேந்தனாகிய பாணாசுரனைப் போரில்மாய்த்து ஜயசீலனாய்த் திரும்புவாய்" என்று பகர, பாவலோரும், கானகர்களும் 'ஜயவிஜெயபவா' என்றுபாட அக்காலத்தில் ஜனார்த்தனன் சோமன், சூரியன், சக்கிரன் இவர்களைப்போல் விளங்கினான். கருடனை வாகனனாகக்கொண்டு செல்லாநின்ற புண்டரீகாக்ஷனாகிய கேசவன் பாணாசுரனைக் கொல்வதற்காகப் பர்வதாகிருதியையெடுத்துக்கொண்டு அஷ்டபுஜங்களுடனும் அனேக முகங்களுடனும் சுதர்சனமென்ற வலது கைகள் நான்கிலும் கட்கம், சக்கரம், கதை,பாணங்களுடனும் இடதுகைநான்கிலும் சாரங்கமென்றதனுசு, வச்சிரம், கேடயம், பாஞ்சஜன்னியமென்ற சங்கம் இவைகளுடனும் உதயகாலசந்திரன்போல் விளங்கினான். மகாத்மாவாகியபிரத்யும்னன் போரில் தனது பராக்கிரமத்தைக் காட்டவெண்ணி ஸனத்குமாருடைய ரூபத்தை யெடுத்துக்கொண்டான். உடனே வினதா புத்திரனாகி மிக்கவலிவாய்ந்த கருடன் தனது ரக்கையை யடித்துக்கொண்டு பர்வதங்களெல்லாம் நடுங்குற எதிர்காற்றில் மனோவேகத்துடன்வித்தசாரணர்களுடையதூய்மையான பாதைகளைக் கடந்துசென்றான். அதைக்கண்ட பலராமர்கிருஷ்ணனைநோக்கி, "ஹேகிருஷ்ணா, திடீரென்று அகாரணமாய் நமது தேஜசானது மங்கி நாமெல்லோரும்பொன்போன்ற மேனியராய்த் தோற்றுகிறோம் இதுஎன்ன ஆச்சரியம்! இதற்குக் காரணம்யாது? மகாமேரு பர்வதத்திற்குச் சமீபத்தில் வந்திருக்கின்றோமா?" என்றுகேட்டார். அதுகேட்ட ஸ்ரீகிருஷ்ணன்,"ஹே பலதேவா,பாணாசுரனது பட்டணம் சமீபித்துவிட்ட



தென்று தோற்றுகிறது. அவன் பட்டணத்திற்காவலாயிருக்கின்ற அக்கினிதேவன் பாணாசுரனை ரக்ஷிப்பதற்காக ஜ்வலித்துக்கொண்டு வருகின்றான். அவனுடைய தேஜசால் நம்நிறம் மாறியதுபோலும்" என்றுசொல்ல, ஹலாயுதன் கிருஷ்ணனைநோக்கி, "ஹே கேசவா, பாணன் பட்டணத்திற்கு அருகில் வரவும் நம் சரீரத்தின்ஒளி நீங்குமாயின், பிறகு செயற்பாலதை நீ தீர்க்கமாக ஆலோசித்துச் செய்வாயாக" என்று சொல்லலானார். பிறகு பிரபுவாகிய கிருஷ்ணன் வினதைபுத்திரனைநோக்கி "ஹே! கருடா, செய்யத்தக்கனவெவையோ அவற்றை நீ செய்தால், என்புத்திக்கு எட்டியதை யான்செய்வேன்" என்றார். இவ்வாறு கிருஷ்ணனமொழிந்த வசனங்களைக்கேட்ட பராக்கிரமம் பொருந்திய கருடன், ஓரே பாய்ச்சலில் ஆகாயகங்கையை வந்தடைந்து அதின் ஜலத்தை ஏராளமாய் அருந்தி அவ்வக்கினியின்மேல் மழைபோல் வருஷிக்க, பிரளயகாலாக்கினிக்குச்சமானமான அத்தீயானது அவிந்து ஸ்ரீ கண்ணபிரானது நிறத்தையும்அவலட்சணமாக்கிற்று. பட்சிராஜன் இவ்வாறு அக்கினியைஅணைத்துத் தனது பலம்பொருந்திய இரக்கைகளை அடித்துக்கொண்டு, ஆகாயத்திலொரு பேரொலி ஒலிக்கப் பறந்து வேகமாய்ச் செல்லவும் ருத்திரமூர்த்தியின் பரிவார கணங்களாகிய அக்கினிகளெல்லாம் கருடாரூடர்களாய்வருகின்ற அவர்களை நோக்கி, "இம்மகாபுருஷர்கள்யாவர்? அவர்கள் இங்கு வரக்காரணமென்ன" என்று சொல்லிக்கொண்டு ஒன்றுந்தோன்றாமல் அம்மூன்று யதுகுலோத்தமர்களுடன் அமர்செய்யத்தொடங்கினர். அவ்வாறு யுத்தம்செய்யுங்காலையில் ஆகாயமெங்கும் சிங்க கர்ச்சனையைப்போல் பேரொலி யொலிக்கப்பெற்றது. அப்போது அக்கினிக்குத் தலைவரான அங்கிரன் யுத்தநடக்குமிடத்திற்கு ஓர் தூதனையனுப்ப, அதேகாலத்தில் பாணனும் அது என்ன அமளியென்று பார்த்துவரும்படி ஓர் அரசனை யனுப்புவித்தான். அவ்வரசன் உடனே புறப்பட்டு அவ்வமர்க்களத்திற்கு வந்துபார்க்க பஞ்சமகாக்கினிகளாகிய கல்மாஷன், குஸுமன், தகனன், ஷோஷணன், 'ஸ்வாஹா' கிருதமான ஹவிஸைப்பெற்றுக்கொள்ளாநின்ற தபனன் ஆகிய பஞ்சமகாக்கினிகள் தங்கள் பரிவாரங்களுடனும் சைன்னியங்களுடனும் வாசுதேவனுடன் கடும்போர்விளைத்துக்கொண்டிருப்பதைக் கண்ணுற்றான். 'ஸ்வதா' என்றஆகு

திமந்திரத்திற்குத் தேவர்களான பிதரன், பதகன், ஸ்வர்ணன், அகாபன், பிராஜன் என்ற அக்கினிதேவர்களும் ஜோதிஷ்டோமம், வஷட்காரம் என்ற மந்திரங்களுக்குத்தேவதைகளாயிருக்கின்ற யாகாக்கினிகளும் கிருஷ்ணனுடன் போர்புரிந்தனர். அதுகேட்டஅங்கிரனென்ற மகாக்கினி அக்கினிமயமான ரதமொன்றில் ஆரோகணித்து தேஜோமயமாய்ப் பிரகாசிக்கின்ற கதையைக் கையிலெடுத்து ஓங்கிக்கொண்டு அக்கினிதேவகணங்களுக்கு மத்தியில் விளங்கினன். பிறகு அங்கிரன் கிருஷ்ணன்மேல் தனது கூரிய அம்புகளைவிட, கிருஷ்ணன் கோபத்தாற் சீறி அடிக்கடி முறுவலித்து "ஹே தேவதைகாள், உங்களுக்குக்காலம்கிட்டியதுபோலும். ஒருகணப்பொழுது பொறுங்கள். எனது அஸ்திரங்களின் தாபத்தால் தகிக்கப்பட்டு நாலாபக்கங்களிலும் ஓட்டம்பிடிக்கப்போகின்றீர்கள்" என்று சொல்ல, அங்கிரன் கிருஷ்ணனுடைய உயிரைக்கவர நினைத்து தகதகவென்றுஜொலிக்கின்ற ஒருதிரிசூலத்தைக் கையிலேந்தி ஸ்ரீ கேசவனைக் குத்துவதற்காக ஓடிவந்தான். அதுகண்ட ஸ்ரீ கண்ணபிரான் ஸர்வஸம்ஹாரகனை யமனைப்போல் ஜொலித்துக்கொண்டு அர்த்தசந்திர பாணங்களால் அங்கிரனது கதையைஅறுத்துத்தள்ளி காலஸ்வரூபியான ஓர்பாணத்தை அவன்மேல்விட அது அவன் மார்பைப்பிளந்து சரீரத்தைக்கிழிக்க தேகமெங்கும் உதிரம் பெருகக்கீழேவிழுந்தான். அதைக்கண்ட பிரமபுத்திரர்களான அக்கினிகணங்க ளெல்லோரும் தங்கள் சைன்னியங்களுடன் பாணாசுரன்பட்டணத்திற்கு அதிசீக்கிரத்தில் ஓட்டம்பிடித்தனர். அப்பால் கிருஷ்ணனுடன் ஆகாயமார்க்கமாய் வராநின்ற ஸ்ரீ நாரதஸ்வாமி ஸ்ரீ கண்ணபிரானை நோக்கி "ஹே! கிருஷ்ணா! அதோ பார்த்தீரா பாணாசுரன் நகரமாகிய சோணிதபுரி? அந்தப்பாணாசுரனை இரட்சிப்பதற்காகவும் அவன் க்ஷேமார்த்தமாயும் கார்த்திகேயரும் உமாபதியாகிய உருத்திரரும் அப்பட்டணத்திலேயே சதா குடிகொண்டிருக்கின்றனர்." என்றுசொல்ல கிருஷ்ணன் நாரதமுனியைநோக்கி, மந்தஹாசத்துடன், "ஹே! மகரிஷே, பாணனை இரட்சிக்கவெண்ணி உருத்திரமூர்த்தியே யுத்தரங்கத்திற்கு அவன் நிமித்தமாய்ப் போர்புரியவருவாராயினும் அவருடனும்நாங்கள்யுத்தஞ்செய்யஒருதலையாகத்துணிந்திருக்கின்றோம்" என்றுநாரதரும் கிருஷ்ணனும் இவ்வாறு சம்வாதித்துக்கொண்டிருக்கை



யில், மகாவேகனான கருடன் அவர்களைப்பாணனது நகரத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தான். பாணன் பட்டணம் வந்துசேர்ந்தவுடனே கார்முகில் வண்ணனும், கமலக்கண்ணனுமாகிய ஸ்ரீ கேசவன் பாஞ்சஜன்னியமென்ற சங்கத்தைத் தொனிசெய்தான். அந்தச்சங்கநாதத்தைக்கேட்ட பாணனது போர்வீரர்கள்தாங்களும்பிரதியாகச் சங்கத்தொனிசெய்துகொண்டு பிரகாசிக்கின்ற அஸ்திரங்களைக் கையிலேந்தி யுத்தரங்கத்திற்குச் செல்லுங்காலையில், இணையிலா வலிவாய்ந்த அப்போர்வீரர்களின் கூட்டம் வருஷாகாலத்து மேகஜாலங்களைப்போல்தோற்றின. பிறகு தைத்தியதானவர்களும் உருத்திரமூர்த்தியும் பிரமதகணங்களும் பளபளாயமயமாய் ஜொலிக்கின்ற படைகளுடன் நித்தியப் பிரமமான கிருஷ்ணனுடன் போர்செய்யத்தொடங்கினர். எரிதழற்போல் ஜொலித்துப் பிரகாசியாநின்ற யக்ஷராக்ஷஸபன்னகர்கள், திறந்த வாய்களுடனும் உதிரத்தைப்பருகவெண்ணி யுத்தரங்கத்தில் கிருஷ்ணன், சங்கருஷ்ணன், பிரத்யும்னன், கருடன் இவர்களுடன் அமராடினர். பாணாசுரன் சைன்னியத்தின் பராக்கிரமத்தைநோக்கிய பலபத்திரர் கிருஷ்ணனைநோக்கி, "ஹேகிருஷ்ணா! நம்மையெதிர்த்திருக்கும் போர்வீரர்களை நம்தோள்வலிக்குப்பயந்து மனமுறிந்து ஓடும்படி செய்வாயாக" என்று சொல்லவும் புருஷோத்தமன் யமஸ்வரூபமாகிய அனேககொடிய பாணங்களையெடுத்து எதிர்த்துநின்ற அசுரர்களையும் மற்றையோரையுங் கொன்று, அனேகபகுதிகளாக நின்றுகொண்டிருக்கும் அசுரசைன்யத்திற்குச் சமீபத்தில்வந்தார். அவ்வசுர சைன்யங்கள் ஈட்டி, பட்டிசம், சக்தி, ரிஷ்டி, பிநாகம், பாரிகம் முதலிய ஆயுதங்களைக் கையிலேந்தி, பர்வதங்களைப்போலும் மேகங்களைப்போலு மிராநின்ற பயங்கரமான விலங்குகளாகிய வாகனங்களில் ஏறிக்கொண்டு வராநின்ற அப்பிரமதகணங்களாகிய பாணனது சயினியங்கள் காற்றினால் சிதறடிக்கப்பட்ட மேகங்கள்போன்றன. அனேக வீரர்கள் வில்லையும் கதையையும் சூலத்தையும் கட்கத்தையும் கையிலேந்தி யுத்தகளத்தில் அங்குமிங்கும் செல்வதின் அழகைக்கண்ட புருஷோத்தமனான ஸ்ரீ கிருஷ்ணனும் பலதேவனும் அவர்களுடன் போர்புரிய மிக்க அவாக்கொண்டனர். கண்ணபிரான் மேற்றிசையைநோக்கி யுத்தம்செய்ய பிரத்யும்னன் அவர் இடதுபுறத்திலும் பலாயுதன் வலப்புறத்திலும் சுபர்

னன் கீழ்த்திசையை நோக்கியும் ஒருவருக்கொருவர் துணையாகவிருந்துகொண்டு போர்செய்ய வாரம்பித்தனர்.

---

## Chapter. 270.

### கிருஷ்ணன் சைவஜ்வரமாகிய தாபஜ்வரமுடன் போர்புரிதல்.

ரோகணி புத்திரனாகிய பலதேவன் பிரளயகாலாந்தகனைப் போல் பயங்கரமான ரூபத்தையெடுத்துக்கொண்டு யுத்தரங்கத்தில் தனது சத்துருக்களை ஹலமென்ற ஆயுதத்தாற் பிடித்திழுத்துக் கதையாலடித்து அவர்களைத் துவம்ஸம் செய்தான். பராக்கிரமசாலியாகிய பிரத்தியும்னனென்ற நரோத்தமன் தனது பாணங்களால் தன்னுடன் போர்புரிந்த தானவர்களைக் கலக்கினான். அஞ்சனமலை போன்ற மேனியும் சங்கசக்கர கதாதாரனுமானஜனார்த்தனன் அநேகவிதங்களாய்ப் போர்புரிந்தான். வினதா புத்திரனாகிய கருடன் தயித்திய வீரர்களைத்தன் இறக்கைகளால் அறைந்துமூக்காலும் நகத்தாலும் கிழித்து யமபுரத்திற்கு அனுப்பினான். இவ்வாறாக நான்கு வீரர்களும் சரமாரி பொழிந்து தானவர்களை ஆக்கிரமிக்க அசுர சைன்யமானது புறங்கொடுத்தோடியது. இவ்வாறு புறங்காட்டி ஓடிய அஸுர சைன்யத்தைக்கண்ட உருத்திர கணத்திலொருவனாகிய சைவஜ்வரன் அவர்களைக் காப்பாற்ற வெண்ணிப் பித்தனைப்போல் அடிக்கடி பெருமூச் செறிந்துகொண்டு யுத்தரங்கத்திற்குக் காலால் நடந்து வந்தான். அவன் மூன்று பாதங்களுடனும் மூன்று சிரத்துடனும். ஆறு புயங்களுடனும் ஒன்பது முகங்களுடனும் கூடியவனாய்ச் சத்துருக்களைத் தகிக்கும்படியான ஓர் ஆயுதத்தைக் கையிலேந்திவந்த அந்த தாபஜ்வரன் கண்டோர்க்கு எமனைப் போல் தோற்றினான். அவன் யுத்தரங்கத்தில் வந்து மேகஜாலங்களைப்போலக் கர்ஜித்து, அடிக்கடி பெருமூச்செறிந்து, வாய்திறந்து கொட்டாவி விட்டான். தேகமெங்கும் மயிர்சிலிர்க்கக் கண்களிற்



பீளைசாய, தூங்கிவழிந்துகொண்டும், தன்னுடைய முகத்தைக் கோபத்தால் மகா கோரமாகச் செய்துகொண்டு, சங்கருஷணனை நோக்கி "ஹே! ஹலாயுதா, உனக்கேன் இந்தத் தோள்வலிச் செருக்கு" "அமர்க்களத்திற்கு நான் வந்திருக்கின்றதை நீ கண்டிலையோ? ஒரு கணப்பொழுது பொறு. என்முன் வந்தபின் நீ உயிர்பிழைத்தோடவுங் கூடுமோ? என்று சொல்லிக்கொண்டு முறுவலித்துப் பயங்கரமான முஷ்டியுடன் ஹலாயுதனை நோக்கி வேகமாயோடினான். அதைக்கண்ட ஹலாயுதன் தானும் சுற்றிச்சுற்றி வெகு சீக்ரமாயோட தாபஜ்வரன் தனது முஷ்டியால் அவனைக் குத்தமுடியாதவனாய்க் காலாக்கினிக்குச் சமானமான தனது அஸ்திரத்தை அவனது மார்பில் எறிந்தான். அவ்வஸ்திரமானது மகாமேரு மலையின் சிகரத்தில் விழுந்தாற்போல் பலராமன் மார்பிற் பாய்ந்து முனை மழுங்கிப்பூமியில் ஆயிரம் சில்லுகளாகி உடைந்து சிதறியது. ஆயினும் அந்த அஸ்திரத்தின் நுனியின் ஓர் பாகம் ஹலாயுதன் மார்பில் தங்கியிருந்தமையால், அவன் அதன் தாபத்தைப் பொறுதவனாய்க் கண்விழிகள் பெரிதாகி, மயிர்சிலிர்த்து, மதியிழந்து பித்தனைப்போல் பெருமூச்செறிந்து ஹே கிருஷ்ணா ஹே ஆபத்ரக்ஷகா! ஹே புண்டரீகாக்ஷா!! நான் எவ்விதமாக உன்னால் ரக்ஷிக்கப்படுவேன்? தாபஜவரன் விட்ட அஸ்திரமானது என்னைத் தகிக்கின்றது" என்று சொல்லிக்கொண்டு அங்குமிங்கும் பலராமன் நிலைகொள்ளாது ஓட, ஸ்ரீ கிருஷ்ணன், ஹலாயுதனை ஆலிங்கனம் செய்துகொண்டு "அஞ்சாதே" யென்று அபயம் கொடுத்துஅஸ்திரத்தால் எறிக்கப்படாமல் அவனைக் காப்பாற்றினான். அவ்வாறு பலராமனைக் காப்பாற்றியபின்,மதுசூதனன் சைவஜ்வரனை நோக்கி, "ஹே ஜ்வரா! உன் பராக்கிரமத்தையும் வலியையும் என்னிடத்துக் காட்டு" என்று அவனை யுத்தத்திற் கழைக்கத், தாபஜ்வரன் தன் வலக்கையில் வைத்திருந்த எரிகின்றஎரிபடையைக்கண்ணபிரான்மீதுபிரயோகிக்க மகாபலவானாகிய கண்ணபிரானும் சிறிது நிமிஷங்கள் வரை ஒரு தகிக்கின்ற உணர்ச்சியைத் தேகத்தில் தாக்க, மிகத் தபித்துச் சிறிது நேரத்திற்குப் பிறகு அவ்வக்கினியானது சாந்தத்தை யடைந்தது அப்பால் ஜ்வரன் ஸர்ப்பம் போன்ற தனது நெடிய கைகளால் கிருஷ்

ணைக் கழுத்திலும் மார்பிலும் உரக்க அடித்தான். இவ்வண்ணம் அமர்க்களத்தில் தாபஜ்வரனுக்கும் புருஷோத்தமனாகிய கிருஷ்ணனுக்கும் ஓர் பெரியயுத்தம்நடந்தது. அவர்கள் ஒருவரையொருவர் அடிக்கும்போதுண்டான சப்தமானது பர்வத சிகரங்கள் முறிந்து விழுந்ததுபோலும், இடிமுழக்கம் போலுமிருந்தது. இடைக்கிடை "அட்டா! அப்படியடிக்காதே! இப்படி அடியடா" வென்ற சத்தம் கேட்டது. இந்தக் கொடிய போரில் மகா பராக்கிரமசாலிகளாகிய இவ்விரண்டு வீரர்களும் ஒருவருக்கொருவர் தோற்காது யுத்தஞ்செய்தனர். அவதாரபுருஷரானஜகந்நாயகனும் இந்த ஜ்வரனால் தன் மனுஅவதாரத்திற்கு ஒருவாறு முடிவு நேருமெனச் சிறிது அஞ்சி ஆகாயசஞ்சாரியான ஜ்வரனைத் தன் புஜங்களால் அறைந்து நசுக்கினான். இவ்வாறு நசுக்கப்பட்ட தாபஜ்வரன் இறந்து விட்டானென்று எண்ணிக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணபிரான் அவனைத் தரையிலெறியவும், மகாசக்தனான ஜ்வரனானவன் ஸ்ரீ கண்ணபிரானது சரீரத்தை விட்டு நீங்காமல் சரீரத்தினுட் பிரவேசித்தான். இவ்வாறு ஜ்வரத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணன் உடல் சோர்ந்தான். நிமிர்ந்து நடக்கமுடியாதவனாய்ப்பூமியைப்பிடித்துக்கொண்டே நகரத்தொடங்கினான். நித்திரையுங் கண்ணைப் பீடிக்க ஆரம்பித்தது. நடையுந் தடுமாறியது. உரோமங்களெல்லாம் சிலிர்த்து நின்றன. அடிக்கடி நெட்டுயிர்ப்புற்றான். வாய் திறந்து கொட்டாவி விட்டான். அவன் உடல் அயர்ந்தான். மகாயோகியாகிய ஸ்ரீ கிருஷ்ணனும் இவ்வாறு சைவஜ்வரத்தாற் பீடிக்கப்பட்டானாயினும் தனது இயற்கையான நிஜஸ்வரூபத்தை வெகு நேரஞ்சென்றபின் அடைந்தான்.

புருஷோத்தமன், தன் சுபாவத்தை யடையவும் தான் ஆக்கிரமப்பட்டு வருந்துகின்றதை யுணர்ந்து அந்த ஜ்வரத்தை நாசஞ்செய்யத் தன் யோக சக்தியால் பயங்கரமான சீத ஜ்வரத்தைச் சிருஷ்டித்தான். அக்குரூரனான சீதஜ்ஜ்வரன் தாபஜ்வரத்தைப் பிடித்துக் கட்டிக்கண்ணபிரான் சந்நிதியிற் கொணர்ந்து நிறுத்தியது. அவ்வாறு தன் மகா சந்நிதானத்தில் நின்ற தாபஜ்வரத்தைக் கண்ணன் கோபத்தால் அடித்துத் தரையில் வீழ்த்தி அதைக் கிழித்துக்கொல்லுந்தருவாயிலிருந்தபொழுது, அத்தாபஜ்ஜ்வரனானவன் தவித்து மயங்கித்



திகைத்து, ஒன்றுந்தோன்றாமல் "ஹே ஜனார்த்தனா, எனக்கு அபயங் கொடுத்தருள்வாயாக என்று இறைஞ்சவும் ஹே, கிருஷ்ணா யதுகுல நந்தவர்த்தனா! ஹே பாபஹரிதா! தாபஜ்ஜ்வரத்தைக் கொல்லா தொழிவாயாக. அவன் உன்னால் ரக்ஷிக்கத் தகுந்தவனே" என்று ஒரு அசரீரி வாக்குண்டாயது. அதைக்கேட்ட ஆதிமத்தியாந்த ரஹிதனும். லோகாசாரியனுமான ஸ்ரீ கிருஷ்ணன், தாபஜ்ஜ்வரத்தைக் கொல்லாது விட்டான். உடனே தாபஜ்வரன் ஹிருஷீகேசனது பாத பத்மங்களை வணங்கி, "ஓ! யதுகுலோற்பவா, ஹே கோவிந்தா! ஹேப்பிரபோ, என் மனோபீஷ்டம் சித்திக்கும்படி அருள்புரிவாயாக, பூலோகத்தில் நானே ஒரு ஜ்வரனாய் ஒப்பற்றவனாயிருந்துகொண்டு பூலோகத்தில் விளங்கவேண்டும்" என்று சொல்ல ஸ்ரீ கிருஷ்ணனும் அவ்வாறே வரமீந்தருளினார். ஸ்ரீகண்ணபிரானாற் சிருஷ்டிக்கப்பட்ட சீதஜ்வரமென்ற வைஷ்ணவ ஜ்வரமானது ஸ்ரீகண்ணபிரானிடத்தேயே லயத்தை அடைந்தது. ஸ்ரீ புருஷோத்தமன் மறுபடியும் ஜ்வரனை நோக்கி "ஹே ஜ்வரனே நீ உலகத்திலுற்ற எல்லா சராசரப் பொருள்களிடத்தும், பரவி ஸஞ்சரிப்பாயாக. நீ மூன்று பகுதிகளாகப்பிரிந்து,ஒருபங்கு நாற்காற்பிராணிகளிடத்தும் மற்றோர்பாகம் ஸ்தாவரப்பொருள்களிடத்தும், மற்றொன்று மனுஷ்யர்களிடத்தும், சஞ்சரித்துக் கொண்டு வருவாயாக. மூன்றாவது பாகத்தில் நான்கிலொரு பங்காக நீ பக்ஷிகளிடத்து வசிப்பாயாக மேலும், நான்கு கூறாகப்பிரிந்து தினஜ்வரமென்றும் முறைஜ்வரமென்றும், மூன்றுமுறைஜ்வரமென்றும், நான்கா முறைஜ்வரமென்றும் பெயர்பெற்று மனிதவர்க்கத்திற் சஞ்சரிப்பாயாக. மரங்களில் பூச்சிரூபமாக இருந்துகொண்டும்,இலைகளில் அவற்றைவாடச்செய்து வெளிர்க்கும்படி செய்கின்ற நோய் ரூபமாக இருந்துகொண்டும்,பழவர்க்கங்களில் அதூர்யமென்ற வியாதி ரூபமாக இருந்துகொண்டும் தாமரைப் புஷ்பத்தில் மூடுபனிரூபமாக இருந்துகொண்டும், பூமியில் வனாந்திரத்தைப் போலும், ஜலத்தில் நீலிகா வென்ற செடியைப் போன்றும்,மயில்களிற் கொண்டையைப்போலும், பர்வதத்தில்தாதுவர்க்கத்தைப்போலும், கோக்களில் கோரகமென்ற பசுவியாதியைப் போலும் அநேக அநேக ரூபங்களை யெடுத்துக்கொண்டு பலவகைப் பேர்களுடன் வசிப்பாயாக. நீ உனது பார்வை மாத்திரத்தாலும்

கேவலம் ஸ்பரிசத்தாலும், பிராணிகள் இறக்கும். தேவர்களும் மனிதர்களுமே உன்வலியைத் தீர்க்கவல்லவராவர்." என்று சொல்லினர். அதுகேட்ட ஜ்வரம் மிக்க சந்தோஷமடைந்து, கரதாளத்துடன் ஸ்ரீ கண்ணபிரானைப் பலவாறாகத் தோத்திரஞ் செய்தான். "ஹே மாதவா எல்லாச்சராசர வஸ்துக்களிடத்தும் எனக்கு நீர் அரசரிமை ஈந்தீர். ஹே கோவிந்தா, ஹே புருஷோத்தமா, அடியேனை ஆக்ஞாபித்தருளவேண்டும். தங்கள் மஹத்தாக்ஞையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். முற்காலத்தில் திருபுர ஸம்ஹாரகனான ஹரனால் நான்சிருஷ்டிக்கப்பட்டேன். இப்பொழுது ஸ்ரீஹரியால் யுத்தத்தில் நான் அபஜெயமடைந்தமையால்அவனுக்குத்தொண்டனானேன். நீரே எனக்கு எஜமானன் ஹே சக்கரபாணி நீரென்னை ரெக்ஷித்து ஆசிர்வதித்தீர். உமது அபீஷ்டத்தை நிறைவேற்றக்காத்திருக்கின்றேன்." என்று சொல்ல பிரபுவாகிய கிருஷ்ணன் தாவஜ்வரனை நோக்கி "ஹே ஜ்வரா, எவனொருவன் இப்பெரும்போரில் நாம் காட்டியபராக்கிரமத்தைச் சிரத்தையுடன் படிக்கின்றானோ அந்த எனதுபக்தனை நீ பீடிக்கக்கூடாது" என்று சொல்ல ஜ்வரனும் நல்லது "அப்படியே யாகட்டும் எனப்புகன்று ஸ்ரீகிருஷ்ணபகவானை நமஸ்கரித்து யுத்தரங்கத்தை விட்டு நீங்கினான்.

## Chapter 272.

### ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் சங்கரருக்கும் யுத்தம்.

ஸ்ரீ கண்ணபிரான், பலதேவன், பிரத்தியும்னன் என்ற மூன்று வீரர்களும் கருடவாகனாரூடர்களாய் யுத்தகளத்தில் மூன்று அக்கினிகளைப்போல ஜொலித்து விளங்கிக்கொண்டு சரமாரிபெய்து தானவஸைன்யத்தைப்புறங்காட்டி ஓடச்செய்தனர். சக்கராயுதத்தாலும் ஹலாயுதத்தாலும் பாணவருஷங்களாலும் அடிபட்ட தானவஸைன்யமானது மகாகோபத்தையடைந்தது. காஷ்டத்தைப்போடப்பட்ட அக்கினியானது ஜொலித்தெழுவதுபோல ஸ்ரீ கிருஷ்ணனது சர



ங்களால் மூண்ட அக்கினியானது ஊழிக்காலத்துத் தீபோல் பற்றிக்கொண்டு தானவஸைன்யத்தைத் தகித்தது. தானவசயினியங்களெல்லாம் கிருஷ்ணபாணத்தால் தகிக்கப்பட்டுப் புறங்காட்டி ஓடுவதைக் கண்ட பாணாசுரன் அவ்வாறு ஓடுகின்றவர்களை நோக்கி, "ஹே! தைத்தியர்காள், தைத்தியகுலத்திற்பிறந்து பயத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு உங்கள்வலிக்குறைவைக்காட்டி புறங்கொடுத்தோடுவது உங்களுக்குத்தகுதியா? உங்கள் கவசங்களையும் கட்கங்களையும் கேடயங்களையும் கைக்கோடாலிகளையும் எறிபடைகளையும் துறந்து இவ்வண்ணம் ஓடுவது நீங்கள் பிறந்த குலத்திற்கடுக்குமா. உங்கள் குலத்தையும் உமாபதியாகிய சங்கரன் நம்முடன் வசித்துக்கொண்டு நமக்கு அனுகூலியாயிருப்பதையும் யோஜித்துப்பாருங்கள். பிறகு இவ்வாறு முதுகுகாட்டியோடுவது நம் குலத்திற்கடுக்குமாவென்றும் யோசியுங்கள். இதோ நான் உங்களுக்கு முன்னால் வந்துநிற்கின்றேன்" என்று சொல்லியும் அவன் வார்த்தையைக் கேட்காமல் பயத்தால் மதியிழந்து தானவர்கள் ஓட்டம்பிடித்தனர். யுத்தரங்கத்திற் பரமசிவனது பிரதமகணங்கள் மாத்திரம் மீளவும் போர்செய்ய நினைத்து மனந்தளராமல் தங்கிநின்றனர். போர்வீரர்களெல்லாம் நாலுபக்கங்களிலும் ஓடுவதைக்கண்ட மந்திரியாகிய கும்பாந்தன் அவர்களை நோக்கி, "ஓதானவவீரர்காள், சங்கரனும் கார்த்திகேயனும் பாணாசுரனும் யுத்தத்தில் ஸ்திரமாய் நிற்க நீங்கள் பயத்தால் ஆக்கிரமிக்கப்பட்டவர்களாய் ஏன் ஓடுகின்றீர்கள்? உங்கள் உயிரைத்திரணமாக நினைத்துப்போர்புரியுங்கள், என்றுசொல்லியும் தானவஸைன்யமானது புறங்காட்டி ஓடியது. இதைக்கண்ட ஒப்பில்லாதபராக்கிரமம் வாய்ந்த பரமசிவன் கோபத்தாற் கண்கள் சிவக்க, ஜோதிபோன்ற விமானத்திலேறிக்கொண்டு பாணாசுரனைக்காப்பாற்றவெண்ணி யுத்தஸன்னத்தராயிருந்தார். குமாரக்கடவுளும் அக்கினிபோல் ஜ்வலிக்கின்ற ஓர் ரதத்தில் ஆரோகணித்தார். ருத்திரமூர்த்தியானவர் கோபத்தால் உதடுகளைக்கடித்துக்கொண்டு ஸிம்மங்கள் கட்டியதன் ரதத்தை ஆகாயமார்க்கமாய் கிருஷ்ணனிருக்கின்ற இடத்தைநோக்கிச்செலுத்தினர். பூதகணங்களெல்லாம் சில ஸிம்மமுகத்துடனும் சில வியாக்கிரமுகத்துடனும் சில ஸர்ப்பங்களைப்போலவும் சில குதிரைகளைப்போலவும் சில கழுதைகளைப்போலும் சில ஒட்டகங்களைப்

போலும் சில ஆடுகளைப்போலவும் சில மயில்களைப்போலவும் சில மரவுரிதரித்தும், சில கொண்டையில் மயிருடனும், சில சடைமுடியுடனும், சில நிர்வாணமாயும், பல பல விதமாக ஒலமிட்டுக்கொண்டு தேவதேவனாகிய சங்கரனுடைய இரதத்திற்கு முன்னால் சங்கத்தொனிசெய்துகொண்டு சென்றன. அப்பூதகணங்களிற் சில அழகான முகத்துடனும், சில கோரமுகத்துடனும்,சிலதேவாஸ்திரங்களாலும் மலக்களாலும் அலங்கரித்துக்கொண்டும், சில ஸிம்மவியாக்கிராதிகளின் தோல்களைப்போர்த்துக்கொண்டும்,சில இரத்தங்களை முகத்திற்பூசிக்கொண்டும், சில கோரப்பற்களுடனும், சில மாம்ஸபக்ஷணத்தில் ஆசையுடனும், சத்துருஸம்ஹாரகனான சங்கரனைச்சூழ்ந்துகொண்டு அவன் ஆக்ஞையை யெதிர்பார்த்து நின்றன. சலியாத முயற்சியுடன் கூடிய ருத்திரமூர்த்தியின் இரதத்தைக்கண்ட ஸ்ரீ கிருஷ்ணன் கருடவாகனாரூடராய் யுத்தகளத்திற்கு வந்து சங்கரன் மேல் தன் பாணங்களை வருஷிக்கச் சங்கரனும் தன் இரக்கையுடன் கூடிய பாணங்களால் ஹரியையடித்தார். ஹரனது பாணங்களாலடிபட்ட ஹரியும் மிகக்கனன்று ஐந்திராஸ்திரங்களையெடுத்து சங்கரன் மேல்விட அதைக்கண்ட பூமியும் அஷ்டகஜங்களும் நடுக்குற்றன. பர்வத சிகரங்கள் முறிந்து கீழே வீழ்ந்தன. மலைகளெல்லாம் நதிகளின் ஜலத்தால் ஆக்கிரமிக்கப்பட்டன. இந்த ஹரிஹரயுத்தத்தில் நாற்றிசைகளும் பூமியும் அந்தரிக்ஷமும் நெருப்புப் பற்றியெறிந்தன. பூமியில் நானுபக்கங்களிலும் கொள்ளிகள் விண்ணின்று வீழ்ந்தன. குரூரதிருஷ்டியுள்ள காலங்கள் ஊளையிட்டன. வருணன் இரத்தசரமாரிபொழிந்தனன். பாணனுடைய ஸைன்யத்தின் பின்னணியில் எரிகொள்ளிகள் வீழ்ந்தன. சண்டமாருதம்வீசியது. நக்ஷத்திரங்கள் ஒளிமங்கி அந்தரத்திற் பறந்தன. இவ்வாறு தோன்றிய துர்நிமித்தங்களைக்கண்ட பிரமன்,உருத்திரருக்கும் கிருஷ்ணனுக்கும் சண்டை நேர்ந்ததையறிந்து, அப்ஸரஸ்கள் கந்தர்வர் யக்ஷர் வித்தியாதரர் ஸித்தர் சாரணர் முதலியதேவர்கள்சூழ அந்தரத்தில் நின்றுகொண்டு அந்த மகா யுத்தத்தைப் பார்க்கவந்தார். ஸ்ரீ ஹரியானவர் ஐந்திராஸ்திரத்தை உருத்திர மூர்த்தியின் மேல்விடவே அவ்வஸ்திரமானது எல்லாவற்றையும் தகித்துக்கொண்டு உருத்திரனது இரதத்திற்குச் சமீபத்திற் சென்றதும் நூறாயிரம் பாணங்களாக



அவர் இரதத்தின்மேல் விழ உருத்திரனும் கோபத்தால் ஆக்கிரமிக்கப்பட்டவராய், தனது பயங்கரமான ஆக்கினேயாஸ்திரத்தை யெடுத்து விஷ்ணுவின்மேற் பிரயோகித்தார். அவ்வாறு விடுத்த மகாஅற்புதமான ஆக்கினேயாஸ்திரம் ராமகிருஷ்ணன் பிரத்யும்னன் ஆகிய மூன்று வீரர்களையும் சரக்கூட்டால் மூட, அந்த அஸ்திரத்தின் அக்கினியால் தகிக்கப்பட்ட அவர்கள் துரும்புபோலிளைத்து இருந்தஇடந்தெரியாமற் போயினமையால் அசுரகணங்கள் ஸ்ரீ கிருஷ்ணன் ஆக்கினேயாஸ்திரத்தால் இறந்தானென்றெண்ணிக்கொண்டுசிங்கநாதஞ்செய்ய ஆரம்பித்தனர், அப்பால் தனுர்வித்தையிற்சிறந்த வாசுதேவன் ஆக்கினேயாஸ்திரத்தின் அனலை க்ஷமையுடன்பொருத்துக்கொண்டு வாருணாஸ்திரத்தை யெடுத்துப்பிரயோகிக்க ஆக்கினேயாஸ்திரத்தின் கொடூரமானது தணிந்தது. அதைக்கண்ட ருத்திரமூர்த்தி காலாக்கினிக்குச்சமானமான‘ பைசாசம்’, ‘ராக்ஷஸம்’, ‘ரௌத்திரம்’ ‘ஆங்கிரஸம்’ என்ற நான்குபாணங்களை யெடுத்து ஸந்தானஞ்செய்ய அவைகளை வாசுதேவன் ‘வாயவ்யம்’ , ‘ஸாவித்திரியம்’ , ‘வாஸவம்’ மோஹனம்’ என்ற நான்கு பாணங்களாலும் கண்டித்து காலாந்தகனைப்போல் திறந்தவாயுடன் கூடிய தனது வைஷ்ணவாஸ்திரத்தைச் சங்கரன்மேல்விடுத்தான். அவ்வாறு விடப்பட்ட வைஷ்ணவாஸ்திரத்தால் பாணாசுரன் ஸைன்யத்திலுள்ள பூதப்படைகளும், யக்ஷர்கள் அசுரர்கள் பிரமதகணங்கள் முதலியோர்களும் பயத்தால் நடுக்குற்று மதியிழந்து நாற்புறங்களிலும் சிதறியோடத்தலைப்பட்டனர். அதைக்கண்டமகாசுரனாகியபாணன் அதிசீக்கிரத்தில்யுத்தகளத்தை நோக்கி வேகமாயோடினான். தேவகணங்களாற் சூழப்பெற்றவச்சிரபாணியாகிய இந்திரனைப்போலபராக்கிரமம்பொருந்திய மகாரதர்களாலும் ஆயுதபாணிகளாகிய கோரரூபிகளான தயித்தியர்களாலும்சூழப்பெற்று அவர்களுக்கு மத்தியில் யுத்தரங்கத்தில் நின்றான். அக்காலத்தில் பாணாசுரன் நிமித்தியமாகப்பிராமணர்களெல்லாம் ஆசிமந்திரங்களை ஜபித்தனர். பாணாசுரன் பிராமணர்களுக்கு உத்தமமான கோக்களையும், வஸ்திரங்களையும், பலங்களையும், புஷ்பங்களையும், தங்கநாணயங்களையும் யதேஷ்டமாகத் தானங்கொடுத்துக் குபேரனைப்போல் விளங்கினான். அநேகசந்திரன்களாலும் கோடானகோடி நக்ஷத்திரங்களா

லும் மணிகளாலும் அலங்கரிக்கப்பெற்ற ஸ்வர்னகசிதமான பாணாசு
ரனுடைய மகாரதமானது அனேக சூர்யர்கள் உதயமாயின்போல்
ஜொலித்தது. பாணாசுரன்கோரரூபத்தையெடுத்துக்கொண்டு தனுர்ப்
பாணியாய் தானவர்களால் கொண்டுவரப்பெற்ற இரதத்தின்மேல் ஆ
ரோகணித்து யதுகுலோத்தமர்களாகியராமகிருஷ்ணர்களுடன்போர்
புரியச்சென்றனன். யுத்தவீரர்களுடைய இரதங்களால் நிரம்பிய பா
ணனது சேனாசமுத்திரமானது யுகாந்தகாலத்தில் ஊழிக்காற்றால்
அலைகள் மலைபோற்கிளம்ப சமுத்திரம் கொந்தளித்தெழுவதுபோற்
கிளம்பிச்சென்றது. தானவர்கள் தங்கள் கரங்களில் வில்லேந்தி ரத
ங்களிலேறிச் சென்றபொழுது அச்சயின்யமானது காடுகள் அடர்ந்த
பர்வதங்களைப்போல் விளங்கின. அவர்களைக் கண்டமாத்திரத்தில்
எல்லோரும் பீதியடைந்தனர். பரமசிவனுடைய முக்கண்களும் தீப்
பற்றியெரிவதைக்கண்டு திரிலோகங்களிலும் அந்தகாரம் மூடியது.
நந்தியும் உருத்திரனும் உருத்திரனுடைய இரதமும் கண்ணுக்குத்
தோற்றவில்லை. பிறகு ருத்திரன் கோபத்தாலும் பலத்தாலும் இரட்
டிப்பான தேஜசுடன் பிரகாசித்துக்கொண்டு திருபுரனைஸம்ஹரித்த
கூரியகணைகளைக்கையிலெடுத்துத் தன்தனுவில்வைத்து அதைக்கண்
ணபிரான்மேல் பிரயோகிக்க யத்தனித்தான். எல்லாருடைய ஹிரு
தய குகையிலும் விளங்காநின்றகிருஷ்ணபரமாத்மாவானவர் 'ஜிரும்
பண' மென்ற தனது ஆயுதத்தைக் கையிலேந்தி பரமசிவனை அத
னால் கொட்டாவிவிட்டு மதிமிழக்கும்படி செய்து தனுர்ப்பாணியாய்
ஸ்தம்பித்து நிற்கசெய்தான். தன்னுடைய வில்லால் ருத்திரஸ்வரூ
பியாகிய தன்னையே வில்லுடனும் அம்புடனும் ஸ்ரீ கிருஷ்ணன் தம்
பிக்கச்செய்து பாஞ்சஜன்யம் என்ற சங்கத்தொனியையும் சாரங்க
தொனியையும் சாரங்கமென்றதனுசின் டங்கார சத்தத்தையும் கே
ட்டும் ஜீவகோடிகளெல்லாம் நடுக்குற்று பயத்தால்ஆக்கிரமிக்கப்பட்
டன. இதன்மத்தியில் ருத்திரகணங்கள் யுத்தகளத்திற்குவந்து பற்
பலவிதமான மாயாரூபங்களை யெடுத்துக்கொண்டு பிரத்தியும்னனை
எதிர்த்துப்போர்புரிந்தன. பராக்கிரமசாலியாகிய தேவதேவன் அவ
ர்களைத்தனது வைஷ்ணவ மாயாவித்தையால் தூங்கும்படி செய்து
எண்ணற்கரிய பிரமதகணங்களுடன்கூடிய தானவர்களை தனதுபாண
ங்களாற் கொல்லத்தொடங்கினான். சலியாத முயற்சியுடன் கூடிய



ருத்திரமூர்த்தியானவர் வாயைத்திறந்து கொட்டாவிவிட அதினின்
றும் ஓர் ஜ்வாலை கிளம்பி பத்துத்திக்கையும் தகித்தது. அப்பொழுது
பூதேவியானவள் நடுநடுங்கி பிரமதேவனையணுகி "பிரமனே! மகாசக்
திகள் என்னைத்தாக்குகின்றன. உருத்திரனுடையவும் ஸ்ரீ கேசவனு
டையவும் பாரத்தை நான் சகிக்கவாற்றாதவளாய் மீளவும் அமிழ்ந்து
ஏகாண்டமான ஸமுத்திரமாக ஆய்விடுவேன். ஹேபிதாமகரே, என்
னாற் சகிக்கலாற்றாத இந்தப்பாரத்தை ஆலோசித்துப்பாரும். இந்தப்
பாரமானது நீங்கி சராசரவஸ்துக்களை நான் சுமந்துகொண்டிருக்கும்
படியானவழியைத்தேடும் என்று துதிக்கவும் பிதாமகர் காசிப புத்
திரியாகிய பூமியை நோக்கி ஓர் கணப்பொழுது பொறுத்துக்கொள்
உன்னுடைய பாரம் நீங்கி நீ சுகம் பெறுவாய் என்று சொன்னார்.
பிறகு பிர்மதேவன் ருத்திரனைநோக்கி "ஸ்ரீகிருஷ்ணனுடன் இவ்வாறு
நீர்போர்புரிவது சரியன்று கிருஷ்ணனே நீ நீயேகிருஷ்ணன் என்று
நீர் அறியீரோ? பாணாசுரனைக்காப்பாற்ற நீரேன் முயல்கின்றீர்.
அம்மகாசுரனைக்கொல்வதற்கான உபாயத்தை நீர் தேடுவீராக என்று
சொன்னார். இவ்வாறு பிரமன் சொல்லியதைக்கேட்ட திரியம்பகன்
யோகநிஷ்டையிலுட்கார்ந்து பரமாத்மஸொரூபத்தை அந்தர் முக
மாகநோக்க தனக்குள் திரைலோக்கியங்களையும் அண்டசராசரங்களை
யுமிருக்கக்கண்டான். மகாயோகியாகிய பரமசிவன்தனது யோகசக்தி
யால், தான்வில்லுங்கையுமாக ஸ்தம்பித்து நிற்பதைக்கண்டு தான்
கொடுத்தவரனையும் தான் துவாரகையிற் சொல்லிய வார்த்தைகளை
யும் நினைத்து ஒன்றும் சொல்லாமல் சும்மாவிருந்தார். தானேகிருஷ்
ணனென்றும் கிருஷ்ணனே தானென்றும் தானும் கிருஷ்ணனுமே
பிரமனென்றும் அறிந்து உபசாந்தியையடைந்து யுத்தகளத்தைவி
ட்டு நீங்கினார். பிறகு ருத்திரன் பிரமனை நோக்கி,
இனி நான் யுத்தஞ்செய்யமாட்டேன் பாணனுக்கும் கிருஷ்ணனுக்
கும் நேர்கின்ற இந்த யுத்தத்தில் பூபாரமானது நீங்கப்போகிறது"
என்றார். அப்பால் ஸ்ரீஹரியும் ஹரனும் யுத்தரங்கத்தைவிட்டு நீங்கி
ஒருவரையொருவர் ஆலிங்கனஞ்செய்துகொண்டு இருவரும் ஒருவ
ரானபிறகு அவர்கள்ஸ்வரூபத்தை ஒருவராலும்பார்க்க முடியவில்லை.
இவ்விதமாகப் பிரமன் ஹரிஹரன் இருவருக்கும் ஐக்கியபாவத்தை
யுண்டுபண்ணி தன்னருகிலிருந்த நாரதமுனிவரையும் மார்க்கண்டே

யரையும் கிருஷ்ணனையும் பரமசிவனையும் நோக்கி சொப்பனத்தில் மந்தரகிரிக்குச் சமீபத்திலுள்ள ஓர்வரியிற்கண்டேன். ஆனால் இவ்விடத்தில்ஹரன் ஹரிஸ்வரூபியாய் சங்கசக்கரகதாபாணியாய் பீதாம்பரதாரியாய் கருடவாஹனாரூடராய்இருப்பதையும் ஹரியானவன் சூலாயுதபாணியாய் வியாக்கிரஜனதரனாய் விருஷபவாகனாரூடராய் இருப்பதையும்கண்டு மகாஆச்சர்யத்தையடைந்தேன். ஹே மார்க்கண்டேயா இந்தத் தத்வரகஸ்யத்தை நன்குவிளங்கும்படி விரிவாயெடுத்துரைப்பாயாக" வென்று கேட்டார். அதுகண்ட மார்க்கண்டேயர் "சிவனேவிஷ்ணு விஷ்ணுவே சிவன் இருவரையும் நான் அபேதமாகக் காண்கின்றேன். இருவருமே சுபஸ்வரூபிகள் ஆதிமத்தியாந்தரஹிதர் அச்சுதர் நித்தியர் ஹரிஹரன் இருவருடையவும் ஏகைகபாவத்தை நான் விரிவாயுரைக்கின்றேன் கேளீர்; எவன் ருத்திரனோ அவனே விஷ்ணு. எவன் பிரமனோ அவனேருத்திரன். பிர்மா விஷ்ணு ருத்திரரென்ற திரிமூர்த்திகளும் ஒரே ரூபத்தை யுடையவர்களே. மூவர்களும் மகாயோகிகள். அர்த்தநாரீசுரர் ஸ்வயம்பு வரதர்கள் அகிலலோக பிரமாண்ட நாயகர்கள் ஒரு ஜலத்தை யெடுத்து மற்றோர் ஜெலத்தில் விட்டமாத்திரத்தில் அவ்விரண்டு ஜலங்களும் அபேதமாய்க்கலக்கின்றனபோல் விஷ்ணுவானவன் ருத்திரனிடத்திற் பிரவேசிக்க இருவரும் அபேதமாய் ஒன்றுகின்றார்கள். நெருப்பு நெருப்புடன் சேர்ந்து ஒன்றுவதுபோல் ருத்திரனும் விஷ்ணுவும் சேருங்கால் இருவரும் ஒன்றுகின்றார்கள்: ருத்திரனும் அக்கினியும் அபேதமானவை. அவ்வாறே விஷ்ணுவும்சந்திரனும் அபேதமானவை சராசரவஸ்துக்களுடன் கூடிய இந்த ஜகத்தும் அவைகளைக் காப்பாற்றுகின்றவரும் ஒன்றேயாம். மகேசுரரே சங்காரகர்த்தா. காலத்திரயத்திலுள்ள ஸ்ரீமன்நாராயணனும் மகேசுரனும்ஹிரண்யகர்ப்பனுக்கும்மகதத்வங்களுக்கும் ஆதிகாரணமாயிருக்கின்றனர். அவர்களே நமக்கு வேதங்களைக் கொடுத்தவர்கள். அவர்களே இந்த ஜகத்தைச் சிருஷ்டித்துக் காக்கின்றவர். அவர்களே இந்திரரூபமாயிருந்துகொண்டு மழை வருஷிக்கின்றவர்கள். அவர்களே சூர்ய ரூபமாக கிரணங்களைத் தருகின்றவர். அவர்களே வாயுரூபமாயிருந்துகொண்டு எல்லாவற்றையும் ரக்ஷிக்கின்றவர்கள். ஓபிதாமகரே பிர்மரகஸ்யத்தைச் சொல்லிவிட்டேன். இந்தச்சரித்திரத்தை எவனொருவன் படிக்கின்றானோ அல்லது கேட்கின்றானோ அவன் விஷ்ணுலோகம் அல்லது சிவலோகத்தையடைகின்றான். பிர்மா விஷ்ணு ருத்திரன் மூன்றுபேர்களும் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகர்கள். அவர்களுடைய மகிமையை நான் ஸ்தோத்திரஞ்செய்கின்றேன். விஷ்ணுருத்திரனால்பூஜிக்கத்தக்கவர். ருத்திரன் விஷ்ணுவாற்பூஜிக்கத்தக்கவர். அவர்களிருவரும் ஒருவரேயாயினும் பூமியில் இரண்டு ரூபங்களாக விளங்குகின்றனர். விஷ்ணு சங்கரரினின்றும் வேறல்லர். சங்கரர்விஷ்ணுவினின்றும் வேறல்லர். அதனாற்றான் முன்னோர்காலத்தில் ருத்திரனும் உபேந்திரனும் ஒன்றாக ஆயினர். ஒரே சரீரத்தையுடைய இருவர்களாகிய ருத்திரனையும் கிருஷ்ணனையும் போற்றுகின்றேன். முக்கண்ணனாகிய திரியம்பகனைப் பணிகின்றேன். புண்டரீகாக்ஷனாகிய விஷ்ணுவிற்குத்தெண்டன் சமர்ப்பிக்கின்றேன். செந்தாமரைக்கண்ணனாகிய குமரனையும் பிரத்தியும்னனையும் பணிகின்றேன். வராகாவதாரமெடுத்துத்தன்கோட்டிற்பூமியைத்தாங்கினவரையும் மயிற்றோகையைத் தாங்கினவரையும் கேயூரஹாராதரனையும் பணிகின்றேன். மண்டையோடுகளை மாலையாகத்தரித்த கபாலியென்ற பரமசிவனையும் மலர்மாலைபணிந்த விஷ்ணுவையும் சூலாயுதபாணியாகிய பரமசிவனையும் சக்கரபாணியாகிய விஷ்ணுவையும் பஞ்சனத்துவஜனையும் பிர்மத்துவஜனையும் நமஸ்கரிக்கின்றேன். வியாக்கிராஸனையும் பீதாம்பரதாரியையும் நமஸ்கரிக்கின்றேன் லெக்ஷ்மீபதியையும் உமாபதியையும் நமஸ்கரிக்கின்றேன். சூலபாணியையும் கதாபாணியையும் நமஸ்கரிக்கின்றேன். விபூதிபூசிய சரீரத்தையுடையவனையும் நீலமேகம்போன்ற திருமணியையுடையவனையும் நமஸ்கரிக்கின்றேன். ஸ்மசானத்தில் வசிக்கின்றவனையும் ஆசிரமவாஸியையும் நமஸ்கரிக்கின்றேன். கருடவாகனனையும் விருஷபவாகனனையும் நமஸ்கரிக்கின்றேன். ஒன்றுக்கு மேலான ரூபத்தையுடையவனையும் அனேகரூபங்களையுடையவனையும் நமஸ்கரிக்கின்றேன். ஸம்ஹாரகனையும் ஸமுத்திரசயனனையும் நமஸ்கரிக்கின்றேன். அனேகரூபங்களையுடையவனையும் பயிரவனையும் நமஸ்கரிக்கின்றேன் என்று மார்க்கண்டேயர் துதித்தார்.

## Chapter 274.

### கார்த்திகேயன் யுத்தகளத்திற்குச் செல்லல்.

இவ்வாறு கிருஷ்ணனும் ருத்திரனும் யுத்தரங்கத்தைவிட்டு நீங்கிய பின்னர் கார்த்திகேயன், மந்திரியாகிய கும்பாந்தன் கொண்டுவந்த இரதத்திலேறிக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணன் பலதேவன் பிரத்தியும்னன் முதலியவர்களிருக்குமிடத்தை நோக்கிஅந்தஇரதத்தைச்செலுத்தித் தனது பயங்கரமான கூரிய அம்புகளை யவர்கள்மேல் விடுத்தான். உடலெல்லாம் இரத்தவெள்ளம் பெருக அம்மூன்று யாதவர்களும் மூன்று அக்கினிகளைப்போல் வாங்கிக்கொண்டு குமரனோடு போர் புரிந்தனர். பிறகு யுத்தத்திற் சமர்த்தர்களாகிய அந்த மூன்று பேர்களும் தங்களுக்கு வாயு, அக்கினி, இந்திரன் இம்மூவர்களாலும் கொடுக்கப்பட்ட வாயுவாஸ்திரம், ஆக்கினேயாஸ்திரம், ஐந்திராஸ்திரம் என்ற மூன்று அஸ்திரங்களாற் குமரக்கடவுளையடிக்க, அக்குமரன் அம்மூன்று அஸ்திரங்களையும் சைவம், வாருணம், சாவித்திரியமென்ற தனது மூன்று அஸ்திரங்களாற் கண்டித்தான். ஆயினும் மகா சக்திவானாகிய குமரனால் விடப்பட்ட கணைகளை ஆக்கினேயம் முதலிய அஸ்திரங்கள் தங்கள் வைஷ்ணவ மாயா சக்தியாற் கவளீகரித்தன. மிக்க தேஜஸுடன் விளங்காநின்ற அதிபராக்கிரமசாலியாகிய குகன், தன் உதடுகளைக் கடித்துக்கொண்டு உலக நாசகனைப் போன்ற கோடிசூர்யப் பிரகாசமான பிர்மாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகிக்கவே உலகத்திலுள்ள பிராணிகளெல்லாம் ஸ்மரணை யிழந்து நாற்புறங்களிலும் ஓட, ஜகத்முழுவதும் பிரலாபித்தன. பிர்மாஸ்திரமானது தன்னை எதிர்த்து வரக்கண்ட ஸ்ரீகேசவன் சுதரிசனமென்ற தனதுசக்கரத்தால் அதைச்சேதித்தான். மாரி காலத்தில் மேகங்கள் சூரிய கிரணங்களை மறைப்பதுபோல், ஸ்ரீகேசவனுடைய சக்கராயுதமானது பிரமாஸ்திரத்தின் ஒளியை மங்கும்படி செய்தது. பிர்மாஸ்திரத்தின் ஒளியும், சக்தியும், தேஜஸும் மங்கக்கண்ட குகன் ஆஜ்யத்தால் ஆகுதிசெய்யப்பெற்ற அக்கினிபோற்கனன்றுகண்கள் சிவந்தான். பிறகு ஜ்வலிக்கின்ற பயங்கரமான தங்கத்தாலாய ஓர் சக்தி ஆயுதத்தைக் கையிலெடுத்து லக்ஷியந் தவறாததும் சத்துருக்களைச் சங்கரிக்கத்தக்கதும் எல்லா ஜெந்துக்களுக்கும் மிக்க பீதியையுண்டுபண்ணத் தக்கதுமான, பிரளய காலாக்கினிபோல் ஜ்வலிக்கின்றமணிகள்கட்டிய அந்தத் திவ்யாஸ்திரத்தை விடவே அவன் சக்தியானது ஆகாயத்திற் கிளம்பிக் கிருஷ்ணனைக் கொல்வதுபோல் மகா வேகத்துடன் வாயைத்திறந்துகொண்டு அங்குமிங்கும் சென்றது. அந்தச் சக்தி யாயுதத்தைக்கண்ட இந்திராதி தேவர்கள் மிகப் பயந்து "கிருஷ்ணனைத் தகித்துவிட்டது, தகித்துவிட்டது" ஆ-ஆ என்றார்கள். ஆயினும் இந்த சக்தியாயுதமானது ஸ்ரீ கிருஷ்ணன் முன் தோன்றவே அதை அவன் ஆஹாகாரசத்தம் செய்துகொண்டு அடித்துக்கீழே தள்ளவும் "பலே, பலே" யென்று இந்திராதிதேவர்கள் சிங்கநாதம் செய்தனர். அவ்வாறு தேவர்கள் கர்ச்சித்துக்கொண்டிருக்கும்பொழுது வாசுதேவன் தான் சக்கரத்தைத் தைத்தியர்களின் மேல்விட அதைக் கையிலெடுக்கவும் மகாதேவனுடைய சொற்கிணங்கி அழகிய கொட்டாவியானவள் குமாரக்கடவுளை ரக்ஷிப்பதற்காக நிர்மாணமாய் அங்கு வந்தாள். உமையின் எட்டிலொரு பங்காகிய 'லம்பாதேவி' அழகிய ஸ்வர்ன வடிவுள்ள சக்தியைப் போல அவர்களுக்கு மத்தியில் வந்து நிற்கவே, சிச்சி "சிச்சி, இவிடம் விட்டு ஓடுவாயாக. நிச்சயமாய் இவனை நாசம் செய்யக் கருதிய எனக்கு நீ ஏன் இடையூறு விளைவிக்கின்றாய்?" என்று கிருஷ்ணன் பன்முறை சொல்லியும் அதைக்கேளாது நிர்வாணமாய் நின்ற கொட்டாவியைப்பார்த்து "நீ குகனையழைத்துக்கொண்டு யுத்தரங்கத்தை விட்டு ஓடிப்போ, அப்படிச் செய்வதால் எங்களிருவருக்கும் நலமுண்டாகும். இல்லாவிடில் நான் போரை நிறுத்தினாலும் குகன் என்னுடன் போர் புரிவான்," என்று சொல்லி உபேந்திரனாகிய விஷ்ணு தனது சக்கராயுதத்தைக் கீழே வைத்தான். தேவ தேவனாகிய மாதவனுடைய வசனங்களைக்கேட்ட கொட்டாவி குகனையழைத்துக்கொண்டு ஹரனது சன்னிதானத்தில் நிறுத்தினாள்.



இவ்வாறு குகன் ஸ்ரீகிருஷ்ணனது சக்கராயுதத்தினின்றும் தன் தாயால் தப்புவிக்கப்பட்டதைக் கண்ட பாணாசுரன், தானே மாதவனுடன் போர்புரிய எண்ணங்கொண்டான். போர் புரியவே பூதங்க

ளும் யக்ஷர்களும் பாணாசுரனுடைய போர் வீரர்களும் ஒன்றும் தோன்றாமல்திகைத்துநாற்புறங்களினும்ஓடத்தலைப்பட்டனர். அவர்களில் பிரமதகணங்கள் மாத்திரம் ஓடாமல்நின்றனர். வச்சிரபாணியாகிய இந்திரன்தேவர்களுடன் செல்வதுபோல் பாணாசுரன் பிரதமகணங்களுடன் யுத்தரங்கத்திற் பிரவேசித்தான். அப்பொழுது பாணாசுரனது குருக்கள் அவ்வசுரனின் சத்துரு நாசத்தின்பொருட்டும் அவன் க்ஷேமார்த்தமாகவும் வேத மந்திரங்களையுச்சரித்துக் கொண்டு சுபச்சடங்குகள் செய்தனர்.

---

## Chapter 275.

### பாணாசுரனுக்கும் கிருஷ்ணனுக்கும் யுத்தம்.

பாணாசுரன் யுத்தசன்னத்தனாய் நிற்பதைக்கண்ட ஸ்ரீகேசவன் கருடவாகனத்திலேறிக்கொண்டு,பாணன்முன்செல்ல, அவன் கோபத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு வாசுதேவனைநோக்கி, "அடே! நில் நில் இன்றைத்தினம் நீ துவாரகைக்கு உன்பந்து பாந்தவர்களையும் சிநேகிதர்களையும் பார்ப்பதற்கு உயிர்பிழைத்துச் செல்லமாட்டாய். காலனால் தூண்டப்பட்டு என்னிடத்திற்கு வந்திருக்கின்றாய். யுத்தத்தில் தோற்று சாகுந்தருவாயிலிருக்கும்பொழுது மரங்களினுடையபொன்போன்ற இலைகளைப் பார்க்கப்போகின்றாய் "ஹே கருடத்துவஜா, எட்டுப்புஜங்களோடுகூடியநீ, ஆயிரம் புஜங்களுடன்கூடிய என்னுடன் என்னமாகப் போர்புரியத்துணிந்தாய்? சோணிதபுரத்தில் நீ இன்று உயிர்துறக்கப் போகின்றாய். அநேக ஆயுதங்களாலும் ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்ற எனது ஆயிரம் புஜங்களையும் பத்து லெக்ஷ புஜங்களாகப் பார்க்கப்போகின்றாய் என்று இவ்வாறு கர்ச்சித்துக்கொண்டிருந்த பாணனது வார்த்தைகள் கடலிற் புயற்காற்றாலுண்டாய பயங்கரமான அலைகளைப்போல் வியாபிக்க, பராக்கிரமம் பொருந்திய அவ்வசுரனுடைய கண்கள் கோபத்தாற் சிவந்து இரண்டு உதய சூரியர்களைபபோற் பிரகாசித்தன. இவ்வாறு பாணன்சொ



ல்லிய வார்த்தைகளைக்கேட்ட நாரதர் ஆகாயமானது பிளக்கும்படி சிரித்தார். நாரதமகாரிஷியானவர் சண்டையைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலுடன் யோகாசனத்தி லுட்கார்ந்துகொண்டும் எல்லாப்பக்கங்களிலும் சஞ்சரித்துக்கொண்டுமிருந்தார். இவ்வாறு அட்டகாசஞ்செய்த பாணாசுரனை நோக்கிக் கிருஷ்ணன், "ஓ திதிபுத்திரா ஏன் முட்டாள்த்தனமாய் கர்ச்சிக்கின்றாய்? வீரர்கள் தங்கள் கீர்த்தியைப்பற்றிப் பெருமைபேசார். அவ்வாறு வீண்பெருமை பேசுவதாற் பயனென்னை.? ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத வார்த்தைகளைப்பேசினாய். வார்த்தைகளால் ஓர் யுத்தத்தில் ஜயம்பெறுவதுசாத்தியமானால் சந்தேகமின்றி நீ ஜயசீலனாயிருப்பாய். ஆகையால் ஓ பாணா, நீ வெற்றிகொள் அல்லது நீ அபஜயமடைந்து பூமியில்குப்புறவிழுந்து கிடப்பாயாக" என்று சொல்லிக்கொண்டு தன்னுடைய பாணங்களைப் பிரயோகித்துப்பாணாசுரனைப் பீடித்தான். இவ்வாறு கிருஷ்ணனுடைய பாணங்களாலடிபட்ட பாணன், தன்னுடைய தகிக்கின்ற பாணங்களைக்கிருஷ்ணன்மேல் எய்தும் பாரிகம், தோமரம், கதை, சக்தி பட்டிசம் முதலியஅஸ்திரங்களால் அவனை மூடியும் தனது ஆயிரம்கைகளுடனும் ஆயிரம் புஜங்களுடனும்சக்கரபாணியாகிய கிருஷ்ணனுடன் கொடும்போர் விளைத்தான். பிறகு கிருஷ்ணனது அஸஹாயசௌரியத்தைக்கண்டு முன்னொருக்கால் ஹிரண்ய கசிபுவைக் கொல்லுவதற்காக பிரமன் தனதுதபோவலியால் சிருஷ்டித்த சத்துரு நாசகமான ஓர் திவ்வியாஸ்திரத்தை ஸ்ரீகிருஷ்ணன்மேற்பிரயோகித்தான். அவ்வாறு விடப்பட்ட அஸ்திரமானது வரும்பொழுது நாற்றிசையும் இருள்மூடின. அனேக துர்நிமித்தங்கள் எல்லாப் பக்கங்களிலும் தோன்றின. தானவர்கள் பாணாசுரனை நோக்கி பலே, பலே என்று சொல்லிப்புகழ்ந்து கரகோஷம்செய்தனர். தேவர்கள் ஹா, ஹா, ஹாவென்று ஹாஹாகாரம்செய்தனர். பிர்மாஸ்திரத்தினின்றும் தகிக்கின்றதான சரமாரிபெய்தன. அந்தப்பிர்மாஸ்திரத்தை பாணன் கேசவன்மேல் எய்தபொழுது காற்றும் மேகங்களும் அசையாமல் இருந்தவிடத்திலிருந்தன. ஸ்ரீ கிருஷ்ணனும் அதனாற் சிறிது தகிக்கப்பெற்றான். பிறகு மதுசூதனன் எமனுக்குச்சமானமான ஐந்திராஸ்திரத்தைக் கையிலெடுக்கவே உலகங்களெல்லாம் இருள்நீங்கி பிரமாஸ்திரத்தின் தாபமும்நீங்க தானவர்களெல்

லோரும் தைரியத்தையிழந்தனர். ஐந்திராஸ்திரத்தால் ஸ்ரீ கிருஷ்ணன் பாணாசுரனது பிர்மாஸ்திரத்தைக் கண்டிக்கவே தேவர்களெல்லாம் குதூகலத்தால் சிங்கநாதம் செய்ய ஆரம்பித்தனர். இவ்விதமாய்த்தன் அஸ்திரமானது கிருஷ்ணனாற் கண்டிக்கப்பட்டதைக்கண்ட பாணாசுரன் கருடாரூடனாயிருந்த கேசவனை நோக்கிக் கர்ணகடூரமான அனேக வார்த்தைகளைப்புகன்றுகொண்டு கதைகளாலும் பட்டிசங்களாலுந்தாக்க ஸ்ரீ கேசவன் முறுவலித்து அவ்வஸ்திரங்களைச் சேதித்துப் பிறகு சாரங்கமென்ற தனுசை எடுத்து வச்சிராயுதத்திற்குச்சமானமான சிலபாணங்களைப்பூட்டி பாணனது இரதத்தின் மேலும் குதிரைகளின்மேலும் துவசங்களின்மேலும் விட்டு அவைகளைச் சேதித்தான்; ஒரு க்ஷணப்பொழுது கிரமித்து பாணாசுரன் சிரத்திலிருந்தபிரகாசமான மகுடத்தையும் அவன் கவசத்தையும், தனுசையும் கேடயத்தையும் அறுத்துத்தள்ளி இரக்கைகளுடன்கூடிய சில கணைகளால் சிரித்துக்கொண்டே அவன்மார்பையும் பிளந்தான். அதனாற் பாணன் மிக்கவேதனையடைந்து ஸ்மரணைதப்பி, மயங்கியதை அரண்மனையின் உப்பரிக்கையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஸ்ரீ நாரதமாமுனிவர், உடனே எழுந்து கரகோஷம்செய்து கொண்டு "என்ன பாக்கியம்? என்னபாக்கியம்? எனக்கு ஜன்மஸாபல்யம் கிடைத்தது. நானும் கரைபேறினேன். இன்றைக்கு மகாபௌர்ஷம் வாய்ந்த தாமோதரனுடைய அற்புதமான சாமர்த்தியத்தைக்கண்டு மனங்களித்தேன்" ஹே மஹாபாகோ! தேவர்களாலும் போற்றப்படுகின்றவனே, நீ எதற்காகப் பூலோகத்தில் அவதரித்தாயோ அந்தக்காரியத்தைச் செய்து முடிப்பாயாக. திதிபுத்திரனாகிய பாணாசுரனைச் சங்கரிப்பாயாக" என்று கிருஷ்ண பரமாத்மாவின் மகிமைகளை ஸ்தோத்திரம் செய்துகொண்டு அங்குமிங்கும்உலாவினர்.

இந்த யுத்தத்தில் இருவருடைய துவசங்களும் ஒன்றோடொன்று போர்புரிய தேவதானவர்களின் குதிரைப்படைகளும் ஒன்றோடொன்று யுத்தஞ் செய்தன. கருடனும் மயிலும் தங்கள் இறக்கைகளாலும் மூக்கினாலும், நகங்களாலும் ஒன்றையொன்று அடித்துக்கொண்டு போர்புரிந்தன. வினதா புத்திரனாகிய கருடன் மிகக் கோபத்துடன் பாய்ந்து மயிலின் தலையைத் தனது மூக்காற் பிடித்



துக் கொண்டு தனது இறக்கைகளாலும், நகங்களாலும்அதையடிக்க ஆகாயத்தினின்றும் சூரியனானவன்கீழே வீழ்வதுபோல மயிலானது மதியிழந்துகீழேசாய்ந்தது. அவ்வாறுதனது வாகனமாகியகுக்குடம் கீழேவீழ்ந்ததைக்கண்ட பாணன் மிக்க கவலையடைந்து "ஐயோ என் வலிச்செருக்கால் மதித்து எனதுசிநேகிதர்களின் வார்த்தையையும் கேளாது அவர்களை யலக்ஷியம்செய்தேனாதலின் எனக்கு இந்த அவமானம் தேவ தானவர்கள் கண் முன்னர் நேர்ந்தது." என்று சொல்லிக்கொண்டு மிக்கதைன்யத்தையடைந்தான். இவ்வாறு மனச்சோர்வடைந்து மனமகிழ்ச்சியற்ற தனது பக்தனான பாணாசுரனை நோக்கிய உருத்திரமூர்த்தியானவர் தன் பக்தனை இரக்ஷிக்க வேண்டுமென்ற கவலைமேற்கொண்டு, நந்திதேவனைநோக்கி "ஹே நந்தி! யுத்தரங்கத்திற் பாணன் நிற்கின்றவிடத்திற்கு அதிவேகமாய்ச் சென்று ஸிம்மங்களாலிழுக்கப்பட்ட இந்தத் திவ்விய இரதத்தை அவனுக்குக் கொடுத்துவா. எனக்குப்போர்புரிய விருப்பமில்லை. என் பிரமத கணங்களுக்கு மத்தியில் நான் இங்கு நிற்கின்றேன். நீ சென்று பாணனை இரக்ஷிப்பாயாக". வென்றுசொல்ல மகாரதனாகிய நந்தி நல்லது அப்படியே யாகட்டுமென்று சொல்லிவிட்டு பாணன் பால் இரதத்துடன் சென்று," ஹே தைத்திய சிரேஷ்டனே, சீக்கிரத்தில் இந்த இரதத்திலேறு தாமதிக்க வேண்டாம். ஹே வீர! நான் உனக்குச் சாரத்தியம் செய்கின்றேன் ,, என்றான். தனக்குப் பரமசிவனாற் கொடுக்கப்பட்ட பிர்மநிர்மிதமான அந்த இரதத்திலேறிக்கொண்டு எல்லாவற்றையும் அழிக்கவல்லதான பிர்மாஸ்திரமென்ற ரௌத்திராஸ்திரத்தைப்பாணன்கையிலெடுத்தான். தாமரைமலரிற்றோன்றிய பிரமன் லோகரக்ஷணார்த்தமாய அந்த மகாஸ்திரத்தைச் சிருஷ்டித்தானாயினும், அந்த அஸ்திரமானது ஜ்வலித்து எரியுங்கால் உலகங்களெல்லாம் அல்லோல கல்லோல மடைந்தன. அதைக்கண்ட மாத்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அதைத் தனது சக்கராயுதத்தாற்சேதித்து, ஒப்பில்லாதபாகுவலிவாய்ந்த பராக்கிரமசாலியாகிய பாணனைநோக்கி "ஹே பாணா! உன்னுடைய வீண் பெருமைகள் இப்போதெங்கே போயின. இதோ பார் யுத்த சன்னத்தனாய் நிற்கின்றேன். என்னுடன் போர்புரிந்து உன் பராக்கிரமத்தைக்காட்டுவாயாக. முன்னோர் காலத்தில் கார்த்தவீரியார்ச்சுன

னென்று பெயர்பெற்ற ஆயிரம் புயங்களுடன்கூடிய ஓர் அசுரன் இருந்தான். அவனுடைய ஆயிரம் புயங்களையும் பரசுராமன் இரு புயங்களாகச் செய்தான். உன் புயங்களாலுண்டாய உன் வலிச் செருக்கும் அதே கதியடையப்போகின்றது. இதோ பார்! உன் மதத்தை ஒடுக்குகின்றேன். ஒரு கணப்பொழுது தாமதித்தால் உன்கர்வத்திற்குக் காரணமாகிய உன்புயங்களையுங் கொய்து உன் உயிரையுங் கவர்கின்றேன் என்றார். தேவாசுரயுத்தம் போன்ற இந்தக்கோரமான யுத்தத்தைக்கண்ட நாரதர் ஆனந்ததாண்டவமாடினர்; பூத பிசாசங்களெல்லாம் மகாத்மாவாகிய பிரத்யும்னனால்தோல்வியடைந்து யுத்தகளத்தை விட்டு நீங்கி சாக்ஷாத் சங்கரரிடம்சென்றன. வருஷாகாலத்து மேகம்போன்ற திருமேனியையுடைய ஸ்ரீ கிருஷ்ணன், ஆயிரம் பற்களையுடைய சக்கராயுதத்தை யெடுத்து சூரியசந்திரர்கள், வச்சிராயுதம், மின்னல் முதலியவைகளின் வலியும் தேவேந்திரனது தேஜஸும் பொருந்தியதாயும் தைத்தியர்களை நாசம்செய்ய வல்லதாயும், பிர்மாக்கினி, மகரிஷிகளின் கொடியதபாக்கினி, முத்தீக்கள் முதலியவைகளின் தேஜஸ்பொருந்தியதும் பதிவிரதாஸ்திரீகளினுடையவும் திரிலோகங்களிலும் சஞ்சரிக்கின்ற மிருகங்கள், பக்ஷிகள் முதலிய எல்லாப் பிராணிகளுடையவும் சந்தி வாய்ந்தவும், யக்ஷ ராக்ஷஸ. கந்தர்வர்கள் சக்கராயுதன் இவர்களுடைய பலம்பொருந்தியதுமான சக்கராயுதமானது சூர்யனைப் போல் ஜொலித்துக்கொண்டு பாணன்முன் வந்து நின்று அவனது சக்தியையும் தேஜஸையும் அபகரித்துக்கொண்டது. உயர்த்திய சக்கிராயுதத்துடன் நின்ற புருஷோத்தமனைச்சங்கரர் கண்டு அந்தத் திவ்விய ஆயுதத்தின் ஒப்பில்லா வலியை வேறொரு ஆயுதத்தாற் கண்டிக்க முடியாதெனவறிந்த பரமசிவன், கிரிஜாவை நோக்கி, “ஹே தேவீ, கேசவன் கையிலேந்திய சக்கராயுதத்தை ஜயிக்கவல்ல ஆயுதம் திரிலோகங்களிலுமில்லை. ஆதலால் கேசவன் அந்தத்திவ்யாயுதத்தைப் பாணன்மேற் பிரயோகிக்கும் முன்னர் நமது பக்தனாகிய அவனை அபாயத்தினின்றும் விடுவிப்பாயாக.” என்று சொல்லிய முக்கண்ணனுடைய வசனங்களைக்கேட்ட பார்வதி தேவி தன் அம்சமாகிய கொட்டாவியைப் பார்த்து, “ஹே! லம்பா, நீ சீக்கிரஞ்சென்று



பாணனை இரக்ஷி என்றாள். இவ்வாறு சொல்லிவிட்டு ஹைமவதியானவள் தனது யோக சக்தியால் மறைந்து கிருஷ்ணபரமாத்மாவிடம் சென்று தனது நிஜஸ்வரூபத்தைக்காட்டினாள். கிருஷ்ணபரமாத்மா யுத்தரங்கத்திற் கதாயுதபாணியாய் நின்றுகொண்டிருக்கிறதைக் கண்ட ‘லம்பா’ தனது வஸ்திரங்களை யவிழ்த்து நிர்வாணத்துடன் பாணாசுரனை ரக்ஷிக்கவெண்ணி வாசுதேவனுக்கு முன்வந்து நின்றாள். அவள் மறுபடியும் தமக்குமுன் வந்துதோன்றியதைக்கண்ட வாசுதேவன் ருத்திர மூர்த்தியின் அனுமதியின்பேரில் அவள் வந்திருக்கிறாளென்று அறிந்து அவளை நோக்கி, “ஓ செவ்விழியாளே, பாணனைக்காப்பாற்றும் நிமித்தமாக நீ இங்கு வந்திருக்கின்றாய். ஆனால் அவனை நான் கொல்லாது விடேன் என்றுசொல்ல, அது கேட்டு லம்பை, “ஓ தேவ! நித்தியமாயும்அச்சுதனும் ஹிருஷிகேசனும், பத்மநாபனும், ஜகத்சிருஷ்டிகனும், ஜெகத்காரணனும் இருக்கின்றவனான புருஷோத்தமன் நீதானென்று நான் அறிவேன். ஹேகேசவா, யுத்தத்தில் உன்னைத்தவிர உனக்குச் சமானனல்லாத பாணாசுரனை நீ கொல்லாதொழிவாயாக. பாணாசுரனை இரக்ஷிக்கிறதாக நீ யெனக்கு வாக்குத்தத்தம் செய்வாயாக. என்னுடைய புத்திரனான பாணனைக்கொன்றால் நான் அவனுக்குச் சொல்லியிருக்கின்ற வார்த்தைகள் பொய்யாய்விடும். ஓமாதவா, நான் அவனை இரட்சிக்கிறேனென்று ஒருவர மளித்திருக்கின்றேனென்று சொன்னாள். அதுகேட்ட ஸ்ரீ கிருஷ்ணன், “ஓமாதே நான் சொல்வதைக்கேள் இந்தப்பாணன்தான் ஆயிரம்புஜங்களுடன் கூடியவனென்ற வலிச்செருக்கால் யுத்தகளத்தில் அட்டஹாசம் செய்துகொண்டிருக்கின்றான். அவன் ஆயிரம் கைகளையும் இன்றே கொய்வேன். ஆயினும் உன் நிமித்தமாக பாணனாகிய உனது புத்திரனை இரண்டு கைகளுடன் விடுகின்றேன். அவன் தீர்க்காயுளுடன் கூடிவாழ்வான். ஆயினும்அவன் அஹங்காரகர்வத்தை நீத்து இனி என்னுடன் போர்புரிய எண்ணங்கொள்ளான்,” என்றுசொல்ல, தேவியும் அதனை ‘நன்றெ’ன்றங்கீகரித்தாள். பிறகு புருஷோத்தமனாகிய கிருஷ்ணன் பாணாசுரனை நோக்கி, “அடே! பாணா என்ன பௌர்ஷமா உனது பௌர்ஷம்! நீ என்னுடன் போர்புரியும் பொழுதெல்லாம் கொட்டாவியானவள்

உன்னைப் பலமற்றவனென நினைத்து யுத்தகளத்தில் எனக்கு முன்வந்து நிற்கின்றாள்" என்று சொல்லி ஸ்ரீ கண்ணபிரான் தன் கண்களைத் திறந்துகொண்டு சூர்யனைப்போல் பிரகாசம்பொருந்திய தனது அற்புதமான சக்கிராயுதத்தைச் சுழற்றி பாணன்மே லெறிந்தார். இவ்வாறு ஸ்ரீதரன் சக்கிராயுதத்தை யெறியவே அண்டசராசரங்களெல்லாம் நடுக்குற்று மதியிழந்தன. மாம்சபட்சணிகள் தங்களுக்குஆகாரம் கிடைப்பதைநினைத்துமகிழ்வுற்றன. சக்கராயுதமானது யுத்தரங்கத்தில் ஒருவரும் அதன் நிஜசொரூபத்தைப் பார்க்கமுடியாதபடி யுத்தரங்கம் முழுதும் கிருகிருவென்று சுழன்றுகொண்டு பாணாசுரனது ஆயிரம் புயங்களில் இருகரங்களைமாத்திரம்வைத்துவிட்டு மற்றவைகளை அறுத்துத்தள்ளி மீளவும் ஸ்ரீ கண்ணபிரான்கைகளுக்குத் திரும்பிவந்து சேர்ந்தன. அப்பொழுது பாரியான சரீரத்தையுடைய பாணாசுரன் தனது புயங்க ளறுபட்டதால் இரத்தப்பிரவாகத்தில் மூழ்கி உதர நாற்றத்தினால் மயக்கங்கொண்டு குமுறுகின்றமேகத்தைப்போல் அடிக்கடி கர்ச்சித்தான். அவனது சிம்மகர்ச்சனையைக்கேட்ட கிருஷ்ணன் அவனைக் கொல்ல நினைத்து மீளவும் அவன்மேல் தனது சக்கரத்தை விட எண்ணினார். அப்பொழுது குமாரனாகிய கார்த்திகேயன் கிருஷ்ணனை நோக்கி, "ஹே கிருஷ்ணா, ஹே! மஹாபாஹோ! நீ நித்தியமான புருஷோத்தமன். நீயே மது, கைதவன் முதலிய அசுரர்களைக் கொன்றவன். நீ ஸாலோக சரணியன் ஸர்வஜகத்காரணன். தேவாசுரபன்னகர்கள் எல்லோரும்ஒன்று சேர்ந்து உன்னை எதிர்ப்பினும் அவர்கள் உன்னை வெல்ல வல்லுவரல்லர். ஆதலின் உன்னுடைய திவ்யசக்கரத்தைப் பாணாசுரன்மேல் விடாதொழிவாயாக. பாணனை இரட்சிப்பதற்காக நான் வாக்களித்திருப்பதால் நீயவனைக் கொல்லவேண்டாம்" என்று சொன்னான். அதுகேட்ட கிருஷ்ணன் "ஓ தேவதேவாசுரர்களால் பூஜிக்கத்தக்கவனாகிய உனக்கு வந்தன மளிக்கின்றேன். இதோ என் சக்கரத்தை மீளவும் திருப்பியழைக்கின்றேன். உனது வேண்டுகோளின் பிரகாரம் பாணாசுரன் ஜீவிப்பான். யாரைச் சங்கரிக்கிறதற்காக நான் இங்கு வந்தேனோ அந்தப்பாணனை நீகேட்டுக்கொண்டபடி கொல்லாது விடுகின்றேன். நீ எனக்கு அனுமதிகொடுக்கவேண்டும். இதோ போய்வருகிறேனென்று மகேசுவரனாகிய பரமசிவனிடத்தில் விடை



பெற்றுக்கொண்டு நாகபாசத்தாற் கட்டப்பெற்று தன்வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த அநிருத்தன்பாற்சென்றான். கிருஷ்ணன் போயினபின் நந்திதேவன் பாணனைத்தன் இரதத்திலேற்றிக்கொண்டு மகேசுவரனிடத்திற் கொண்டுபோய் விட்டு, "ஓ பாணா, மகாதேவன் உன்னிடத்துக் கிருபையுடன் கூடியவராயிருக்கின்றார். நீ அவர் முன் தாண்டவமாடுவாயாகில் உனக்கு க்ஷேமமுண்டாமென்று சொல்ல, பயத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பாணாசுரன் தான் பிழைத்திருக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் தன் சரீரத்தில் உதிரம்பெருக்ச் சங்கரர் சன்னிதியில் நர்த்தனம் செய்தான். பக்தவத்ஸலரான மகாதேவன் பாணன்மேல் இரக்கங்கொண்டு அவனைநோக்கி," ஹேபாணா, உன்பால் எனக்குத் திருப்தியுண்டாயிற்று. நீ யுனக்கு வேண்டும் வரனைக்கேள்" என்றுசொல்லப் பாணன்," ஹேப்பிரபோ! உனக்கு என்னிடத்துப் பிரீதியுண்டாகி எனக்கு வரமளிக்க வேண்டுமென்ற விருப்பமும் உமக்கு உண்டானால், ஹேமகாதேவா! எனக்குச்சாகாதவரத்தைத் தந்தருளுவாயாக. மேலும் ஜ்வரம் என்றவியாதி என்னைத்தீண்டல்கூடாது என்றான். அதுகேட்ட மகாதேவர் ஓ பாணா நீயும் அமரர்களைப்போல் சாவாதிருப்பாய். மேலும் உன்னிடத்து அதிகப்பிரீதி யிருக்கின்றமையால் இன்னும் ஓர்வரம் கேள் என்றுசொல்லிய மகாதேவரை நோக்கிய பாணன், "ஓபாவா, காயப்பட்டு இரத்தம்பெருக நான்நர்த்தனம்செய்ததுபோல் எந்தச்சிவபக்தனாவன் நர்த்தனம் செய்கின்றானோ அவனுக்குப் புத்திரசந்தானமுண்டாகட்டும்" என்ற வரத்தைக்கேட்டான். அதுகேட்ட பரமசிவன் எவனொருவன் க்ஷமையுடனும் ஸத்தியமாயும் யோக்கியமாயுமிருந்துகொண்டு உபவாஸத்துடன் என்முன் தாண்டவ மாடுகின்றானோ அந்தப் பக்தனுக்குப் புத்திரோற்பத்தி யுண்டாகும் என்றார். மீளவும் பாணனைநோக்கி, "ஹே புத்திரா மூன்றாவதாக ஓர் வரம்கேள்" அதையளிக்கின்றேனென்றுசொல்ல, பாணன் ஹேஸ்வாமீ! விண்டு

வின்சக்கராயுதத்தாற் காயப்படுத்தப்பட்ட எனது சரீரமானது வேதனை நீங்கி முன்போல் ஆகும்படி பிரார்த்திக்கிறேன்" என்றான் அதைக்கேட்ட பரமசிவன் "அப்படியே யாகுக" வென்று அனுக்கிரகித்து "பாணனிடத்திருந்த மிக்கப் பிரீதியால் நான்காவது வரம் கேட்கும்படி சொன்னார்" அதற்குப் பாணன், "ஹேஸ்வாமீ! உமது பிரமதகணங்களில் முதல்வனாயிருந்துகொண்டு 'மகாகால'னென்ற பெயருடன் எக்காலத்தும நான் பிரசித்தியடைந்திருக்க வேண்டுமென்று பிரார்த்திக்க ஜோதிஸ்ஸொரூபியாகிய சங்கரர் அப்படியேயாகுகவென்று அனுக்கிரகித்து மீளவும் சொல்லலானார். நீ என்னுடைய இரக்ஷணையிலிருக்கின்றவனாகையால் நீதேவசரீரத்தையடைவாய் உன் சரீரமானது வியாதிகாயம் முதலியவைகளாற் பீடிக்கப்படமாட்டாது. நீ ஸதா என்னுடன் வஸிப்பதால்உனக்குப்பயமென்பது இல்லாமற்போம். நீ மகா பலிஷ்டனாகவும் பௌவருஷம் வாய்ந்தவனாகவுமிருப்பாய். நீ என்னுடைய மகாபக்தன். என்னுடைய பக்தர்கள் என்னிடத்திருக்கின்ற தெதைக்கேட்டாலும் தந்துவிடுவேன். ஆகையால் நீ இன்னொரு வரங்கேளென்று சொல்ல அதற்குப் பாணன் "ஹேபிரபோ! எனக்கு இரண்டு கரங்களிருந்தாலும் அவை அவலக்ஷணமாகத் தோன்றாமலிருக்கவேண்டும். உனது அருட்பிரசாதத்தால் என் சரீரம் கரங்களிழந்தமையால் அவலக்ஷணமாகத் தோன்றக்கூடாதென்று சொல்ல மகாதேவன் 'நல்லது' நீ சொன்னபடியே யாகக்கடவது" என்று சொல்லிவிட்டு பூதகணங்களாற்சூழப்பெற்ற பரமசிவன் அந்தர்த்தானத்தையடைந்தார். இவ்வாறு அநேக வரங்களைப் பெற்றுக்கொண்டு மகாகாலனென்றபெயரையடைந்து ஏகாதசருத்திரர்களுடன் பாணன் சஞ்சரித்தான்.

---



## Chapter 276.

### கிருஷ்ணன் அனிருத்தனைக் காண்டல். பாணாசுரன் ராஜ்யத்தைக் கும்பாந்தனுக்குக் கொடுத்தல். கோக்கள் நிமித்தமாய் வருணனுடன் போர் புரிதல்.

இது நிற்க, ஸ்ரீ கிருஷ்ணன் நாரத முனிவரை நோக்கி, ஹே! மகரிஷே! அனிருத்தன் இருக்கும் இடத்தைச்சொல்வீராக' என்று கேட்க நாரதர் ஸ்வாமி,"நாகபாசத்தாற்கட்டப்பெற்று அனிருத்தன் அந்தப்புரத்தில் உன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான்." என்று சொன்னார். அதற்குள் சித்திரலேகை அதிசீக்கிரமாய் வந்து கிருஷ்ணனை நோக்கி "ஹே! பிரபோ! தைத்தியவேந்தனாகிய பாணாசுரனுடைய ஸ்திரீகளின் அந்தப்புரம் இதுதான். கிருபைசெய்ய வேண்டும் என்று பகர, பலதேவன் கிருஷ்ணன், பிரத்தியும்னன் நாரதன் சுபர்னன், ஆகிய இவர்கள் அனிருத்தனைச் சிறையினின்றும் மீட்டும்பொருட்டு அந்தப்புரத்துட் பிரவேசித்தனர். பிரவேசிக்கவே அம்பு ரூபமாக அனிருத்தன் உடலைச்சுற்றிக்கொண்டிருந்த மகா சர்ப்பங்களனைத்தும் கருடனைக்கண்ட மாத்திரத்தில் அம்புகளாக மாறி உடலை விட்டுக் கிழே விழ்ந்தன. உடனே பிரதாபவானாகிய அனிருத்தன் கையைக் கட்டிக்கொண்டு கிருஷ்ணனை நோக்கி, "ஓ, கேசவா நீர் சத்துரு நிக்கிரஹன். யுத்தத்தில் இந்திரனும் உமக்கு நிகரல்லன்." என்று சொல்லிவிட்டு பிறகு பலதேவரைக்கண்டு நமஸ்கரித்து, அப்பால் கட்டிய கைகளுடன் கருடாழ்வாரைக்கண்டு தலை வணங்கினான். பிறகு தனது பிதாவாகிய பிரத்யும்னனை நமஸ்கரித்தான். உஷாதேவியும் தனது ஸகிகளாற் சூழப்பெற்று அதிபல பராக்கிரமம் பொருந்திய ஸ்ரீ வாசுதேவனையும் சுபர்ணனையும் வணங்கி மிக்க நாணத்துடன் புஷ்பதன்வாவாகிய பிரத்தியும்னனையும் நமஸ்கரித்தாள். பிறகு இந்திரன் வேண்டிக்கொண்ட பிரகாரம் மகாதேகஸ்வியாகிய நாரதர் கண்ணன்பால் வந்து "ஹே கோவிந்தா, அதிர்ஷ்ட வசத்தால் அனிருத்தனுடன் மறுபடியும்சேர்ந்தாய்

ஆகையாலிப்பொழுது பராக்கிக்கிரமத்தாலடைந்த உஷையை அனிருத்தனுக்கு விதிவத்தாய் விவாகம் செய்துவைப்பாயாக. சம்பந்திகள் ஒருவருக்கொருவர் வேடிக்கை விநோதமாகக் கேலி பண்ணிக்கொண்டிருப்பதைப் பார்க்க விரும்புகின்றேன்." என்று நாரதர் மொழிந்த வசனங்களைக்கேட்டு எல்லோருஞ் சிரிக்க, கிருஷ்ணனும் அப்படியே 'செய்யலாகும்' என்றார். இஃது இங்ஙனமிருக்க கும்பாந்தனென்ற மந்திரி கல்யாணச் சம்பாரங்களோடு கிருஷ்ணனது ஸன்னிதானத்திற்குவந்து அவர் திருவடித்தாமரைகளைத் தொழுது, "ஹே கிருஷ்ண ஹே மகாபாகோ, அஞ்சலியஸ்தனாய் உன்னைச் சரணாகதியாக அடைகின்றேன். என்னை ரக்ஷியும் ரக்ஷியுமென்றான். அதுகேட்ட கண்ணபிரான் கும்பாந்தனுக்கு அபயதானங்கொடுத்து அவனை நோக்கி, ஹே கும்பாந்தா, உனது நற்செய்கைகளைக்கேட்டு மிக்க சந்தோஷமடைந்தேன். சோணிதபுரியென்ற இந்த ராச்சியத்தை உனக்குத்தந்தேன். இந்த ராச்சியத்திற்கு நீ அரசனாகி இருந்துகொண்டு எக்காலத்துமென்னால் ரக்ஷிக்கப்பெற்று வாழ்வாயாக உன்னுடையபந்துபாந்தவர்களுடன், சுகமாகஜீவித்துக்கொண்டிருப்பாயாக வென்று சொல்லி ராஜ்பத்தைக் கும்பாந்தனுக்குத் தத்தஞ் செய்து அனிருத்தனுடைய கல்யாண மஹோத்ஸவத்தையும் நடத்தினார். அக்கினிதேவனே அவ்விடத்திற்கு நேரில் வந்துவிட்டார். அனிருத்தனும் உஷாதேவியும் மங்களஸ்நானம் செய்தபிறகு ஸர்வாபரண பூஷிதர்களாயிருந்தனர். அப்ஸரஸ்கள் வேடிக்கையும் விநோதமுமாக அனிருத்தனுடன் பரிகாஸம் செய்தனர். கந்தர்வர்கள் இனிமையான மங்கள வாழ்த்துகள் பாட, அப்ஸரஸ்கள் நடன நாட்டியமாட மணக்கோலமானது சிறப்புற்று விளங்கியது.

அனிருத்தனது கல்யாண மகோற்சவம் முடிந்து, தேவர்களாலும் பூஜிக்கப்பெற்றவரதாதாவாகிய ருத்திர மூர்த்தியையும் கௌரவப்படுத்தியபிறகு உபேந்திரனாகிய ஸ்ரீகிருஷ்ணன் தேவதைகளுடன் துவாரகைக்குத் திரும்பிப்போக யத்தனித்தான். அப்பொழுது கும்பாந்தன் கைகட்டி வாய் புதைத்து நின்றுகொண்டு புண்டரீகாக்ஷனாகிய மாதவனை நோக்கி "ஹே கேசவா, பாணாசுரன், அமிர்தம் போன்ற பாலைத்தருகின்ற சிலகோக்களை வருணனிடத்திலொப்புவித்திருக்கின்றான். அப்பாலைக் குடித்தலால் ஒருவன் மகா பராக்கிரமசாலியாகவும் யுத்தத்தில் அபஜயமடையாதவனுயுமாவான்." என்று சொல்ல ஸ்ரீ ஹரியின் மனது சந்தோஷத்தாற் பூரித்து வருணலோகம் செல்லவேண்டுமென்ற விருப்பத்தை வெளியிட்டார். பிறகு பிரம்மதேவன் கேசவனை ஆசிர்வதித்து தன்னுலகஞ்சென்றார். இந்திரன், மருத்து முதலான தேவதைகள் வெற்றியடைய விரும்பி கிருஷ்ணனது வாசஸ்தலமாகிய துவாரகைக்குப் புறப்பட்டார்கள். உஷையும் தன் ஸகிகளாற் சூழப்பெற்று பார்வதிதேவியுடன் மயில் வாஹனத்திலேறிக்கொண்டு துவாரகைக்குப் புறப்பட்டாள். அப்பால் இராமகிருஷ்ணாள் பிரத்தியும்னன் அனிருத்தன் ஆகிய இந்நால்வரும் கருடவாகனத்திலுட்கார அந்தப்பக்ஷிராஜனானவன் அவர்களை முதுகில் தூக்கிக்கொண்டு மரங்களை வேருடன் களைந்துகொண்டு பூதலம் நடுங்க, சென்ற இடங்கள்தோறும் கலங்க, ஆகாயமெங்கும் புழுதி மூட, சூரியனானவன் தன் ஒளி யிழக்க, ஆகாயமார்க்கத்தில் வெகு வேகமாய்ச் சென்றான். அவ்வாறு செல்கையில் வருணலோகத்தைக் கண்டு அதில் தேவாமிருதம்போன்ற க்ஷீரத்தைக் கொடுக்கின்ற பற்பல நிறங்களையுடைய பசுக்கள் சமுத்திரக்கரையிலிருந்த ஓர்காட்டில் மேய்ந்துகொண்டிருப்பதைக் கண்டு கும்பாந்தன் சொல்லிய அடையாளங்களால் அவைகளை பாணாசுரனுடைய பசுக்களென்றறிந்து ஜெகத்துக்கெல்லாம் ஆதிகாரணமாயிருக்கின்றவனான ஸ்ரீ கிருஷ்ணன் அந்தக் கோக்களைக் கைப்பற்ற ஆசைகொண்டு கருடனை நோக்கி, ஓகலுழா, அதோ இருக்கின்ற பசுக்கள் பாணாசுரனது கோக்களாம். ஒருவன் அதன் க்ஷீரத்தை யருந்துவதால் சாகாத்தன்மையை யடைகின்றான். கிழத்தனமும் ஜுரமும் அக்கோக்களின் பாலையருந்துகின்றவனிடத்து அணுகா. சத்தியபாமை அப்பசுக்களைக்கொண்டுவருவது அதர்மமில்லாவிடில் அவைகளைக்கொண்டுவரும்படி என்னைக்கேட்டுக்கொண்டாள். ஹே வினதை புத்திரா, இப்பசுக்கள் ஸத்தியபாமை என்னிடத்துச் சொல்லிய கோக்களே" யென்று சொன்னார். அதுகேட்ட கலுழன், ஹே கேசவா, இப்பசுக்களை வருணலோகத்தில் நான் இதற்குமுன் பார்த்திருக்கிறேன். என்னைக்கண்டமாத்திரத்தில் அவைகள் வருணனது அரண்மனையில்

சரேலென்று பிரவேசிக்கின்றன. ஆதலால் அவைகளையடைய நீ ஏதேனும் நல்ல உபாயம் ஒன்று செய்யவேண்டும்." என்று சொல்லிக்கொண்டு வருணனது வாசஸ்தலமாகிய சமுத்திரத்தைத் தன் இரக்கைகளை யடித்துக்கலக்கி அதற்குள் பிரவேசிக்கவே, வருணனுடைய பரிவாரங்களெல்லாம் பயத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுத் திகைத்து நின்றன. அப்பால் வருணனது மகா பராக்கிரமமுள்ள சைன்யமானது நானாவிதமான ஆயுதங்களை யெடுத்துக்கொண்டுவாசுதேவன்முன் தோன்ற ஸர்ப்பசத்துருவாகிய கருடனோடு கொடும்போர் விளைத்தனர். அப்போரில் வருணனது போர்வீரர்களெல்லாம் மகாத்மாவாகிய கேசவனால் தோல்வியடைந்து ஜொலிக்கின்ற ஆயுதங்களோடு கூடிய வருணனுடைய அறுபதினாயிரம் ரதங்களும் சமுத்திரத்திலோடி ஒழிந்தன. பலதேவன், ஜனார்த்தனன், பிரத்தியும்னன், அனிருத்தன், கருடன் ஆகிய பராக்கிரமம் பொருந்திய இவ்வீரர்கள் விடுத்தகணைகளால் வருணனது சைன்யம் நாசத்தையடைந்து இரட்சிக்கிறதற்கு ஒருவருமில்லாமையால் முறிபட்டோடியது.

இவ்வாறு தனதுசைன்யமானது கிருஷ்ணனது பராக்கிரமத்தால்முறிந்தோடியதைக்கண்ட வருணன் மிக்க கோபத்தையடைந்து கேசவனிருக்குமிடத்திற்குச் செல்ல அந்த கேசவன் தேவதைகளாலும்ரிஷிகளாலும் கந்தர்வர்களாலும் அப்ஸர ஸ்திரீகளாலும் போற்றிப் புகழப்படுவதையும் அவர் தலைக்குமேல் தண்ணீர் சொரிந்துகொண்டிருக்கும் ஓர் அழகிய பீதவர்ணக்கொடை பிடித்துக்கொண்டிருப்பதையும் கண்டான். சமுத்திரராஜனாகிய வருணன் தனதுபுத்திரபௌத்திரர்களுடனும் யுத்தவீரர்களுடனும் சென்று வில்லைக்கையிலேந்தி நாணேற்றி ஹரியைப்போர்க்கழைத்து சங்கத்தொனிசெய்துகொண்டு வெகு கோபத்துடன் தனது பாணங்களை வருஷித்து அவனை மறைத்தான். ஸ்ரீ ஜனார்த்தனனும் பாஞ்சசன்யமென்ற சங்கத்தை யெடுத்து சப்தித்துக்கொண்டு சரமாரிபெய்து நாற்றிசைகளும் நடுக்குறச்செய்தான். வருணன், தனது கூரிய கணைகளாலடிபட்டும் மந்தகாசத்துடன் போர்புரிவதைக்கண்ட ஜனார்த்தனன், ஹே, வருண சற்றுபொறு, இதோ எடுத்தேன் பார் சத்துருநாச



மான வைஷ்ணவாஸ்திரத்தை, உன்மேல் அதைத்தொடுத்தேன் பார் நீ இன்று உன் உயிர் துறந்தாய்! என்று சொல்லிக்கொண்டு வைஷ்ணவாஸ்திரத்தைத் தொடுக்கவே, வருணன் சிங்கநாதஞ்செய்துகொண்டு அதனைக் கண்டிப்பதற்காகத் தனது வாருணாஸ்திரத்தைப் பிரயோகித்தான். வருணாஸ்திரத்தை விடவே, அவ்வஸ்திரமானது ஏராளமான ஜலத்தைக் கக்கிக்கொண்டு செல்ல, அந்த ஜலமும் அக்னியின் ஜொலியாநின்ற வைஷ்ணவாஸ்திரத்தின் தாபத்தால் எரிய, வருணாஸ்திரமும் எரிந்து கீழே வீழ்ந்தது, மீளவும் ஜொலிக்காநின்ற வைஷ்ணவாஸ்திரத்தின் வலியைக்கண்டு சத்துருக்கள் பயந்து நாலா பக்கங்களிலும் ஓடத்தலைப்பட்டனர். அதுகண்ட வருணன், கண்ணபிரானை நோக்கி, "ஹே மகாத்மாவே! ஓர் காலத்தில் அவ்வியக்தமாயிந்தப் பிரகிருதியை நினைத்துப்பார். ஹே மகாயோகீ, சத்வகுண நிறைந்த உனக்கு இந்தத் தீயகுண மேற்படக் காரணம் யாது? ஹே தேவ, தமோ குணத்தை அகற்றிப் பஞ்ச பூதங்களின் காரியமாகிய அகங்காரமுதலிய குறைகளை நீக்குவாயாக. உனது வைஷ்ணவரூபத்திற்கு முதலிற் பிறந்தவன் யான். உனக்கு மூத்தோனாகிய யான் உன் மரியாதைகளுக்குப் பாத்திரனாயிருந்தும், நீ ஏன் என்னை இவ்வாறு தகிக்க நினைக்கின்றாய்? அக்கினியானது வேறோர் அக்கினி இடத்துத் தனது வலியைக்காட்டலாகுமா? ஆதலால் என்னிடத்துனக்குண்டாய கோபத்தை நீக்குவாயாக. நீயே ஜலத்திற்கு ஆதிகாரணன். உனக்கு மேலானவன் ஒருவருமிலர். மாயையாகிய பிரகிருதியைச் சிருஷ்டித்தவர் நீரே.

அழியக்கூடிய அந்தப் பிரகிருதியானது, ஜகத்காரணனை உன் சக்தியால் விஷ்ணு, அக்கினி சோமனென்ற ஜகத்தைச் சிருஷ்டித்தது. அவ்வாறிருக்க நீ என்னை எதிரிக்கக் காரணம் என்னை? பஞ்சபூதங்களுக்குக் காரணனையும், சுயம்புவாயும் நித்தியமாயும், அழியாததாயும், எல்லாமுந் தானேயாயும் வியக்தனையும், அவ்வியக்தனையுமிராநின்ற உன்னைப்போற்றுகின்றேன். இரக்ஷித்தற்குப் பாத்திரனன என்னை இரட்சிப்பீராக. நீயே ஜகத் காரணன், எல்லாப் பொருள்களையுஞ் சிருஷ்டித்து குழந்தைகள் பொம்மையை வைத்துக்கொண்டு விளையாடுவதுபோல் நீர் சிருஷ்டிப்பொருளை வைத்துக்

கொண்டு விளையாடுகின்றீர். நான் பிரகிருதிக்கு விரோதஞ் செய்கின்றவனுமல்லன். பிரகிருதிக்கு விரோதமான எல்லா மாறுதல்களையும் நீ நாசஞ்செய்கின்றாய். மாறுதல்களில் மாறுதலைச்செய்கின்ற வஸ்து உன்னிடத்து மாறுதல் செய்தல் முடியாது. நாஸ்திகர்களிடத்தும் துஷ்டர்கடளித்தும், நீ மாறுதலைச்செய்கின்றாய். ராஜஸதமோ குணங்களாகிய பிரகிருதியாலுண்டாய பாவங்கள் ஜகத்தில் அதிகரிக்கும்போது ஸ்தம்பனமும் (Stupifaction) அஞ்ஞானமு முண்டாகிறது. ஹேப்பிரபோ! நீ அறிவிற்குறைவிடம், ஸர்வஞ்ஞன். சிருஷ்டகன், நீ யேன் ஸ்தம்பிக்கச் செய்கின்றாய்? இவ்வாறு வருணன் சொல்லிய தோத்திர வசனங்களைச் சர்வக்ஞனாகிய கண்ணபிரான் "ஹே வருண, என்னைச்சாந்தப்படுத்த விரும்புவாயாகில்.இந்தக் கோக்களை யெல்லாம் எனக்குக் கொடுத்து விடுவாயாக என்று கேட்க அதற்கு வருணன் ஹே மாதவ! பாணாசுரனோடு நான் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறேன். அதற்கு மாறாக நடத்தல் எனக்கு யோக்கியமன்று. ஒரு மனிதனுக்கு யோக்கியதை யழியுமாயின், அவன் நல்லோர்களின் நிந்தைக்கு இடமாவான். ஹே! மஹாபாஹோ! நல்லோர்களெல்லோராலும் பூஜிக்கப் பெறுவார். வாக்குத்தத்தஞ் செய்தபிறகு அதற்கு மாறாக நடப்பவனுக்கு மறுமையில் நல்ல உலகங்கிடைக்காது. என் தர்மாசரணைக்குக் குறைவு நேரிடா வகை எவையோ அவற்றைச் செய்வீராக. என்னை வாக்குத்தவறி நடக்கும்படி செய்வது உமக்குத் தகுதியன்று. இந்தக் கோக்களை யெல்லாம் நான் உயிரோடிருக்கும் வரையில் ஒருவருக்கும் கொடுக்கிறதில்லையென்று நான் பாணனுக்கு வாக்களித்திருக்கின்றேன். இவைகளை அடைய வேண்டுமென்று உமக்கு விருப்பமிருந்தால், என்னைக் கொன்றுவிட்டு இவைகளை யபகரித்துச் செல்லலாம். என்னிடத்து உமக்குக்கருணையிருக்குமாயின் என்னை ரக்ஷித்தருள்வீராக என்று சொன்னான். கண்ணபிரானும் வருணன் சொல்லியது மெய்யென்றுணர்ந்து, புன்சிரிப்புடன் அவனை நோக்கி, "ஹே வருணதேவா, உனக்கும் பாணனுக்குமிருந்த உடன்படிக்கையால் அவன் பசுக்கள் எனக்கு வேண்டியதில்லை. நீ சத்தியவந்தனாயிருக்கின்றமையால் நீ உனக்கு இஷ்டமான இடத்திற்குச் செல்லலாம்." என்றுசொல்லவும் வருணன் கேசவனை அர்க்யம் முதலியவற்றாலுப



162412

சரித்துப் பிறகு பலதேவரையும் பூஜித்தான். சுரவம்ஸோப்தவரான் [illegible] சௌரி வருணனுக்கு அபயப்பிரதானங் கொடுத்துவிட்டுத் தேவர்கள், மருத்துக்கள், ஸாத்தியர்கள், ஸித்த சாரண [illegible] கந்தர்வர்கள், அப்ஸரஸ்கள் கின்னரர்கள் முதலியவர்களின் புடைசூழ ஆகாய மார்க்கமாய்த் துவாரகைக்குப் புறப்பட்டனர். பாணாசுரனும் வருணனும் அபஜெயமடைந்ததைக் குறித்துக் கலகப்பிரியரான நாரதஸ்வாமியும், மனமகிழ்வெய்தித் துவாரகையை நோக்கிப் பிரயாணப்பட்டார். சக்கரகதாதரனான ஸ்ரீ கேசவன் வெகுதூரத்திலிருந்து துவாரகாபட்டணத்தைப்பார்த்தவுடனே அப்பட்டணத்தின் அநேக வாயில்களையும் ஆகாயத்தையளாவி நிற்கும் கூடகோபுரங்களையும் கைலாச பர்வதத்தின் சிகரங்களையொத்த அழகிய மாடமாளிகைகளையும் கண்ணுற்று பாஞ்சஜன்யமென்ற தனது சங்கத்தைப் பூரித்துத்தன் வரவைத் துவாரகாபுரிவாஸிகளுக் கறிவிக்க அவர்கள் தங்கள் வீடுகளை யெல்லாம் புஷ்பங்களாலும் பூரண கும்பங்களாலும் பொறிகளாலுமலங்கரித்தனர். நவரத்னங்கள் நிறைந்து சிறந்து விளங்காநின்ற அப்பட்டணத்தின் தெருக்கள் புழுதியின்றிச் சுத்தமாய் அலகிடப் பெற்றன. பிராமணர்களும் வயதில் மூத்தோர்களும் அர்க்கியமளித்து "ஜய விஜயீ பவா" வென்று கட்டியங் கூறிக்கொண்டு மாதவனைப் பூஜித்தனர். கருடவாஹனாரூடராய் அவ்விடத்திற்றோன்றிய அஞ்சனமலைபோன்ற, அழகிய திருமேனியனான ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஜனங்களெல்லோருந் தலை வணங்கினர். க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் முதலியவர்களும் தங்கள் வர்ணக்கிரமப்படி ஸ்ரீ கேசவனைப் பூஜித்தனர். ரிஷிகளும், தேவர்களும், கந்தர்வர்களும், சாரணர்களும் புண்டரீகாக்ஷனான மாதவனைத் துவாரகையின் ஓர் உத்தியானத்தில் வரக்கண்டு ஸ்தோத்திரம் செய்தனர். இவ்வற்புதங்களையெல்லாம் கண்ட தாசார்ஹ சிரேஷ்டனாகிய புருஷோத்தமனும் பரமானந்த மடைந்தான். ஸ்ரீ கண்ணபிரான் பாணனை வெற்றிகொண்டு தங்கள் நகருக்குத் திரும்பிவருவதைக்கண்ட துவாரகாபுரிவாஸிகளாகிய யாதவர்கள் தோள்வலி வீரனான ஸ்ரீஜகந்நாதன் நமக்கு இரக்ஷகனாகவிருக்குமளவும் நமக்குக் குறையொன்றுமில்லை. அடக்கமுடியாத பாணாசுரனைப் போரில் வென்று புண்டரீ

கர்க்ஷன் கருடவாகனரூடராய் துவாரகைக்குத் திரும்பிவந்து நமது ஹிருதயங்களை ஆஹ்லாதப்படுத்தினான் என்று சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் தேவர்களும் மகாரதர்களும் வாஸுதேவனுடைய அரண்மனையிற் பிரவேசித்தனர். பிறகு ராமகிருஷ்ணன் பிரத்தியும்னன், அனிருத்தன், ஆகிய இவர்கள் கருடவாகனத்தினின்று மிறங்கி அரண்மனையுட் புகுந்தனர். ஹம்ஸங்களும், விருஷபங்களும், மான்களும், யானைகளும், குதிரைகளும், ஸாரஸங்களும், மயில்களும், பூட்டிய, அநேகவிதமான, திவ்விய ரதங்கள் ஆகாயத்தில் உலாவித்திரிந்தன. பிறகு ஸ்ரீ கிருஷ்ணன் பிரத்தியும்னனையும் மற்ற இராஜ குமாரர்களையும் நோக்கி "ஹே அரசிற்குமாரர்கள்! தேவராஜனையும் ஆதித்தியர்களையும் ருத்திரர்களையும் பரிவாரங்கள் சூழவந்திருக்கின்ற ஆயிரங்கண்களையுடைய நாகர்களையும், ஸப்த ரிஷிகளையும் இன்னும் ஆயுதபாணிகளாய் என்னைத் திருப்திசெய்யுமாறு இங்கு வந்திராநின்ற ஸமுத்திரங்களையும் திக்குகளையும் முறைப்படி பூஜிக்கக் கடவீர். இன்னும் யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் கின்னரர்களும் நக்ஷத்திர மண்டலங்களும் என்னைத் திருப்திசெய்வதற்காக வந்திருக்கின்றன. அவைகளையும் கிரமப்படி பூஜியுங்கள்" என்று சொல்லிய வாசுதேவனுடைய வசனங்களைக் கேட்ட இராஜகுமாரர்கள் மகாத்மாக்களாகிய தேவர்களை வணங்கி, அவர்கள் முன்னின்றார்கள். தேவர்களைக் கண்ட துவாரகாபுரிவாஸிகள் ஆச்சரியமடைந்து பூஜைக்காகவேண்டிய திரவியங்களைச் சேகரித்து வாசுதேவனுடைய இரக்ஷணையால் இந்தமகா அற்புதக் காட்சியைக் காணும்பாக்கியம் பெற்றோமென்று சொல்லிக்கொண்டு பூமாரிபெய்து சந்தனங்களாலும் கந்தங்களாலும், தேவதைகளை அர்ச்சித்தனர். ஐம்புலன்களையும் மனத்தையும் அடக்கிய துவாரகா புரிவாசிகள் நெற்பொறி தூபதீபம், நமஸ்காரம் முதலியவைகளால் தேவதைகளைப் பூஜித்தனர். பிறகு வாசவனாகிய இந்திரன் "ஆகுகன் வாசுதேவன், சாம்பன்" சாத்தியகி, விப்பிருது, அக்குரூரர் முதலிய பராக்கிரமசாலிகளை ஆலிங்கனம் செய்துகொண்டு உச்சிமோந்தான். பிறகு யாதவர்களை நோக்கி, "ஹே யாதவர்காள், இந்தப்பரமபுருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ணன், அனிருத்த



னைச் சிறையினின்றும், மீட்டு அதனால் தன் சௌர்யத்தையும் மகிமையையும் காட்டினான். பரமசிவன் குஹன் இவர்களுக்கு முன்னால் பாணாசுரனைப் போரில் வெற்றிகொண்டு அவனுடைய ஆயிரங்கரங்களையுந் துணித்து அவனை இருகரங்களுடையவனாகச் செய்து துவாரகாபுரிக்குத் திரும்பி வந்திருக்கின்றான். பார்த்தீர்களா நகரவாசிகளே எதற்காக மகாவிஷ்ணு இவ்வுலகத்தில் மானிட உருக்கொண்டு கிருஷ்ணனாக அவதரித்தாரோ அந்தக்காரியமும் முடிந்து நம் துக்கத்தையும் போக்கியிருக்கின்றான் யாதொரு கவலையுமின்றி இனி நீங்கள் மதுபானம் செய்து போகபோக்கியங்களை அநுபவித்துக் கொண்டு சந்தோஷமாய் உங்கள் வாழ்நாட்களைக் கழிப்பீர்களாக. இந்த கிருஷ்ண பரமாத்மாவின் இரக்ஷணையுள்ள வரையில் நானுங் கவலையற்றுத் தேவர்களுடன் சந்தோஷமாய் வசிக்கலாம்' என்று பலவாறாகக் கிருஷ்ணனது மகிமைகளை யெடுத்துக்கூறி அவனை மார்புறத் தழுவிக்கொண்டான். அப்பால் அவனிடத்து விடைபெற்றுக் கொண்டு புரந்தரன் தேவர்களுடனும், மருத்துக்களுடனும், தேவலோகம்சென்றான். மகரிஷிகளெல்லாம் "ஜய விஜயீ பவா ஜெய விஜயீ பவா" வென்று கேசவனை யாசீர்வதித்து யக்ஷ ராக்ஷஸ கின்னரர்களுடன் தங்கள் இருப்பிடம் சென்றனர். புரந்தரன் சொர்க்கலோகம் போயினபிறகு ஸ்ரீகிருஷ்ணன் யாதவர்களின் யோகக்ஷேமங்களை விசாரிக்க ஆரம்பித்தான். அப்பொழுது எல்லாப்பக்கங்களினின்றும் ஜனங்கள் கிருஷ்ணனுடைய சந்திரன்போன்ற முகத்தைப் பார்ப்பதற்கு வந்தார்கள். அவர்களுடைய பக்தியைக்கண்டு அனகனான கேசவன் மிகப்பிரீதிபடைந்தான்.

---

## Chapter 277.

### அனிருத்தன் கலியாணமும் அதற்குவந்தவர்களை உபஜரித்தலும்.

மஹாபாகுவாகிய ஆகுகன் சந்தோஷத்தால் கண்கள்மலர மிக்க தேஜஸ்வாய்ந்த ஸ்ரீகிருஷ்ணனைநோக்கி "ஹே குழந்தாய் நீ ஸாவதான

மாய்த்திரும்பிவந்ததைக்கண்டு நாங்கள் மிக்கசந்தோஷமடைந்தோம். அனிருத்தன் திரும்பிவந்தநிமித்தமாயும் அவன் கலியாண நிமித்தமாயும் ஓர் பெரிய மகோற்சவங்கொண்டாடுவோம். உஷாதேவி அனிருத்தனைப்பாணிக்கிரஹணம் செய்துகொண்டு தன் ஸகிகளாற் சூழப்பெற்று மகாசந்தோஷத்தை யனுபவித்துக்கொண்டிருக்கின்றாள். கும்பாந்தனுடைய பெண்ணையும் உஷையினுடைய ஸகியாகச்செய்யவேண்டுமென்ற எண்ணம் வைதர்ப்பி கொண்டிருப்பதால் அவ்வழகிய மடந்தையை சாம்பனுக்கு விவாகஞ்செய்துவைக்கலாம். மற்ற ராஜகுமாரிகளையும் இங்குள்ள ராஜகுமாரர்களுக்கு விவாகஞ்செய்துவைக்கலாம். கல்யாணமகோற்சவமானது உன்னுடைய கிருகத்தில் சிறப்பாய்நடக்கட்டும். இனிய குரலுடன்கூடிய அப்பெண்கள் அந்தப்புரத்தில் சிலர் வாத்தியங்கள் வாசித்துக்கொண்டிருக்கச் சிலர் ஆடிக்கொண்டும் சிலர் பாடிக்கொண்டும் சிலர் சந்தோஷத்துடன் ஒருவரோடொருவர் சம்பாஷித்துக்கொண்டும் சிலர் பூமாலைகளையும் நானாவித ஆடையாபரணங்களையுந் தரித்து அங்குமிங்கும் சென்றுகொண்டும் இருக்கின்றனர் பார். சிலர் மதுபானம்செய்துவிட்டு மற்றவர்களுடன் பேசிக்கொண்டிருக்க இன்னும் சிலர் சதுரங்கமாடிக்கொண்டிருக்கின்றனர் பார். இவ்வாறு தன்சகிகளால் சூழப்பெற்ற பாணாசுரனது அழகிய மடந்தையாகிய உஷைதேவியை உன்திருமாளிகைக்கு அழைத்துச்செல். உஷையும் உன் வம்சத்திற்கேற்ற மருமகளாக உனக்கு வாய்த்திருக்கிறாள் ஆகையால் அவளை உபசரித்து மங்கள வாத்தியங்களுடன் அழைத்துக்கொண்டுபோ என்று சொல்லவும் ஸ்திரீகளெல்லோரும் மங்களவாழ்த்துக்களைப் பாடிக்கொண்டு உஷையை அனிருத்தனது கிருகத்துக்கு அழைத்துக்கொண்டுபோனார்கள் தேவகி ரேவதி ருக்மணி முதலியவர்கள் அனிருத்தனைக் கண்டு ஆனந்தபாஷ்பம் சொரிந்தனர்.

உஷை இவ்வாறு மங்கள கோலாகலத்துடன் அனிருத்தன் அரண்மனையையடைந்து ஸ்திரீபுமான்களிருவரும் வெகு சந்தோஷமாய் வசித்துக்கொண்டிருந்தனர். சிலநாட்சென்றபின் சாதாரண ஸ்திரீகளைப்போல் உஷையின் கிருகத்தில் வசித்துக்கொண்டிருந்த



சித்திரலேகை யென்ற அப்ஸரஸ்திரீ உஷையினுடையவும் மற்றத் தோழிமார்களுடையவும் அனுமதிபெற்றுக்கொண்டு தேவலோகம் சென்றாள். தன்னுடைய ஸகிகளெல்லாம் இவ்வாறு புறப்பட்டுப் போனபிறகு அழகிய ராஜகுமாரியாகிய உஷையை மாயாவதி தன் திருமாளிகைக்கு அழைத்துச்சென்றாள். தன்மருமகளின் அழகையும் யவ்வனத்தையும் கண்ட வைதர்ப்பி உஷாதேவியை விலைமதித்தற்கரிய ஆடையாபரணங்களுடன் வரவேற்று யதுகுல வழக்கப்படி தன்மருமகளைச் சிறப்பாய் நடத்திவந்தாள்.

வைசம்பாயனர் சொல்லுகிறார்:—ஹேஜனமேஜயரே பாணாசுரன் விஜயத்தை சவிஸ்தாரமாய் யெடுத்துரைத்தேன். அப்பால் கிருஷ்ணன் யாதவர்களால் சூழப்பெற்று மிக்க ஐசுவரியத்தையனுபவித்துக்கொண்டு துவாரகையிலிருந்து பூலோகமுழுதையும் அரசுபுரிந்தான். இந்தக்கிருஷ்ணனே யதுகுலோத்தமனை வாசுதேவனென்ற பெயருடன் பிரசித்திபெற்று விஷ்ணுவின் அவதாரமாக விளங்கினான். பராக்கிரமமுள்ள விஷ்ணுவானவர் விஷ்ணு வம்சத்தில் வாசுதேவருக்கு தேவகீசுதனைப்பிறந்த காரணங்கள் என்னவென்றுகேட்டீர். அந்தக்காரணங்களையும் மிப்பொழுது சொன்னேன். ஸ்ரீகிருஷ்ணனே மகாஅற்புதங்களுக்கிருப்பிடம் அவனினும் அற்புதமான வஸ்து ஒன்றுமில்லை அவன் செய்யாத அற்புதலீலைகள் ஒன்றுமில்லை அவனேபூஜ்யர்களுக்குள் முதல்வன் அவனே வரதன அச்சுதனைக்காட்டிலும் மேலானவன் ஆதித்தியர் தயித்தியர்களுக்குள்ளுமிவன் அவனே ஆதித்தியன் அவனே வசுக்கள் ருத்திரர்களும் மருத்துக்களும் அசுவனீதேவர்களுமவனே பூமி அந்த நிமிஷம் திக்குகள் ஜலம் சந்திரசூர்யர்களுமவனே விஷ்ணுவே சிருஷ்டிஸ்திதியை ஸம்ஹாரகர்த்தா அவனே சத்தியன் அவனே தவஸ் அவனே பிதாமகராகிய பிரமன் ஆதலால் பாதவம்சோத்தமா இப்பேர்ப்பட்ட மகானுபாவனை ஸ்தோத்திரம் செய்வாயாக தேவர்களுக்கெல்லாம் பிரபுவான இவனே ஜகத்து நாகர்களில்முதல்வனான அனந்தனுமிவனே ருத்திரர்களில் முதல்வனான சங்கரனுமிவனே அண்டசராசரங்களுடன் கூடிய இந்த ஜகத்தானது நாராயணனிடத்தினின்

றும் உண்டானது இந்த ஸர்வஜகத்தும் ஜனார்த்தனனால் சிருஷ்டிக்கப்பட்டது நித்தியனான இவனே தேவர்களால் பூஜிக்கப்பெற்றவன் என்று

இவ்விதமாக கேசவனது மகிமையையும் பாணாசுரனது புத்தகத்தையுமெடுத்துச்சொன்னேன் அவைகளைக் கேட்டதினால் உனக்கு வம்சவிருத்தியும் வம்சக்ஷேமமுமுண்டாகும் பாணாசுரன் சண்டையையும் கேசவனது மஹோத்தமமான அற்புத செய்கைகளையையும் கேட்டு தியானிக்கின்றவர்களைப் பாபமென்பது அணுகாது. ஹே ராஜன் எவனொருவன் பகவானுடைய ஸர்வோத்தமமான குணங்களையும் லீலாவிசேஷங்களையும் தியானிக்கின்றானோ அவன் ஸர்வபயமும் நீங்கி விஷ்ணுலோகத்தையடைகின்றவனாவான். ஒவ்வொரு நாளும் காலையில் இந்தக்கதையைப் படனம் செய்கின்றவனுக்கு இம்மை மறுமை இரண்டிலும் துக்கமென்பது இல்லாமல் நீங்கும். இதைப்பாராயணம் செய்வதால் பிராமணர்கள் சாமவேதத்தில் தேர்ச்சியையும் க்ஷத்திரியர்கள் ஜயத்தையும் வைசியர்கள் தனத்தையும் சூத்திரர்கள் க்ஷேமத்தையும் அடைகின்றனர். இதைப்பாராயணம் செய்கின்றவன் தீர்க்காயுளுடன் கூடி சுகமாய் வாழ்வான்.

சௌதி சொல்லுகிறார்:—ஹே சௌனகாதி முனிவர்காள் இதுதான் ஹரிவம்ச கதை. இதைக்கேட்ட ஜெனமேஜெயமகாராஜன் பாபரகிதமானான். உங்களுக்கு இனிநான் சொல்லவேண்டுவதென்னவென்றார்.

ஹரிவம்சம் முற்றுப்பெற்றது.

ஸி. நாராயணசாமி ஐயர்,

பீ. ஏ., எல். டி.

---

# நூதனமான ஓர் ஸர்ப்பரக்ஷணசாலை.

(சுதேசமித்திரன்.)

ஸர்ப்பங்கள் கொடிய விஷமுள்ள பிராணியாயிருந்து அவற்றைத்தொடுபவரைக் கடித்துயமனுலகம்அப்பொழுதே சேர்க்கும்தன்மை வாய்ந்ததுபற்றி அவ்வித சர்ப்பங்களைப் பிடித்துப் போஷித்துப் பாதுகாப்பதில் எவரும் மனம் நாடமாட்டார். ஆதல்பற்றியே "பயப்பானாம் புஜங்கானாம், கேவலம் விஷவர்த்தனம்" என்னும்வடமொழி வாக்கியத்திற் கேற்ப "பன்னகந்தனக் கமிர் தங்கொடுத்தாலும் விடமொழியப்பயன் கொடாதே," என்னும் தென்மொழி வாக்கியமும் ஆன்றோரால் சொல்லப்பட்டிருக்கின்றதென்பதும் அறிக. இத்தகைய பாம்புகள் கத்துருவின் புத்திரரென்று புராதன புராணங்கள் பகர்கின்றன. இவ்விதப் பாம்புகளின் தரிசனமாத்திரமே எவரையும் திகிலடைவிக்குமெனவே "பாம்பைக்கண்டால் படையும் கலங்கும்" என்னும் தொன்றுதொட்ட பழமொழி மிகுதியும் பொருத்தமுற்றதேயென்று சொல்லலும் அவசியமேயாம். திருப்பாற்கடல் கடைந்த காலத்துத் தனது ஆலகால விஷத்தினால் பிரமாதிதேவர்களையும் கலங்கிக் கருகிப்போடச்செய்த சர்ப்பவர்க்கங்களைக் கண்டால் எவர்தாம்மிகக பீதியடையமாட்டார்? இப்பாம்பினால் மனிதர் கெடுதியைத்தவிர்த்து நன்மையினை அடையமாட்டாராகவே இப்பாம்பினைப் பிடித்து அவற்றின் பிறப்பு வளர்ப்புகளைப்பற்றி நன்கு அறியப்பிரியப்படுவார்யாவர்? மொத்தத்தில் இச்சர்ப்பசாஸ்திரங்களை நுண்ணிதில் அறிய அவாக்கொண்டவரிலரேனும் ஆஸ்திரேலியாவிலுள்ள ஸிட்னி (ydney)யின் சுற்றுப்புறத்தில் ஒருவர் இப்பாம்புகளைப்பிடித்து வளர்த்து அவற்றின் நடபாநடபங்களையும் பிறவற்றையும் அறிய அவாக்கொண்டு அவ்வாறு செய்துவருவதில் பாம்புபோன்ற வர்க்கங்களைப்பற்றிப் பலவற்றையும் நுண்ணிதாயும், தெள்ளிதாயும், தாம் அறிந்திருப்பதாகக் கூறுவாராகின்றனர். இந்நகரத்தில் இவ்வரவங்களின் ஆகாரார்த்தமாகவும் ரசாயனசாஸ்திர ரீதியாய்ப் பரிசோதனைகள் செய்து நடபங்களையும், விவரங்களையும் நன்கு அறிய

வேண்டியும் மண்டூகங்களும் தேரைகளும் இவ்வரவுபோஷணை சாலையில் கூடவே மிகவும் கவலையுடன் பரிபாலிக்கப் படுகின்றனவாம். இப்பாம்புகள் விசேஷமாய் மரம் செடிகளடர்ந்த நெருங்கிய புதர்களில் பிடிக்கப்படுகின்றனவாம். இந்நாக வேட்டையாடுவது மிகவும் அபாயகரமானதும், துன்பத்தைத் தருவதுமாயிருப்பதுடன், இவ்வேட்டைகள் முற்றுப் பெறுவதற்கு நீண்ட காலமுமாகின்றன இவ்வேட்டையாடுவதற்கு விசேஷ ஜாக்கிரதையும், கவலையும் கவனமும் வேண்டியிருக்கின்றன. உரகத்தைக் கண்டால் மனுஷனுக் கச்சமும் மனிதனைக்கண்டால் பாம்புக்குப் பயமுமிருக்கிறபடியால் இவ்வேட்டை கஷ்ட சாத்தியமேயாகின்றதென்பதற்குத் தடையின்று. இவ்வரவ வேட்டைக்காரர் அங்கு நாகங்களைச் சிரமமில்லாமலும், அவற்றின் பிராணன்களுக்கு அபாயமில்லாமலும்பிடித்துக்கொண்டுவரத் தங்கள் கைகளிலுள்ள ஜதைத்தார் கோல்களை அவற்றைப்பிடிப்பதில் உபயோகப்படுத்துவாராகின்றனர். ஒரு நீண்ட தார்க்குச்சியினுதவியினால் அப்பாம்புகளின் தேகத்தின் ஒருபாகம் பூமியின்மீது படியுமாறுகுத்தி விழ்த்தப்பட்டு, மற்றொரு தார்க்கோலினால்வேட்டைக்காரர் அவற்றின் கழுத்தைப்பிடித்து மாட்டித் தூக்குகிறார்கள். இது நடந்ததும், வேட்டைககாரர் அவற்றை தம் கை விரல்களினாலும், கட்டை விரல்களினாலும் அப்பாம்புகளின் கடைவாய்ப் பக்கமாக அவற்றின் தலையை வாயைத் திறக்கவொட்டாமல்பிடித்து அவைகளுக்குச் சிறிதேனும் பிராணாபாயமின்றிப் பிடித்து விடுகிறார்கள். பின்னர் இப்பாம்புகளை வேட்டைக்காரர் வாலினை முதலிலே நுழையும்படியாய்த் தாம் வைத்திருக்கிறதோர் சர்க்கரைப் பையில் அடைத்துவிடுகிறார்கள். இச்சர்ப்பவேட்டையில் ஒவ்வொரு வேட்டையாளரும், நடுநடுங்காமலிருக்கும் உறுதியான கைகளும், தீட்சணியமான கண்பார்வையும், திடசித்தமும் உடையவராயிராவிட்டால் இப்பாம்பு வேட்டை மிக்க அவகேடு விளைக்குமென்பதில் ஆட்சேபணையில்லை.

கட்செவி என்று சொல்லும்படியான இவ்வரவங்களை நம்மிந்தியா நாட்டுப் பாம்புப் பிடாரர்கள், தம் கைக்குட வாத்தியத்தினால் நாகவராளி ராகத்தைப் பாம்பு மனமகிழ ஊதி எந்த மேட்டுவளையில்



டாம்பு இருந்தாலும் மயங்கிவந்து தாமே போந்து வீழ்ப்பண்ணித் தம்கையிலுள்ள ஔஷத மகாத்மியத்தினால் அவற்றின் வலுவையடக்கி மயக்கித் தம் பெட்டிகள் நிறைய இவற்றைநிறைத்துக்கொண்டு போகும் சாம்பிரதாயத்தை ஸிட்னிவாசிகளறிந்திருந்தால் இப்பாம்புவேட்டையாடுவதில் அவ்வளவு சிரமம் எடுத்தலும் அவ்வளவுஅவசியமாயிராதிருக்கலாம்.

## ஸர்ப்பங்களின் உபயோகம்.

சமீபகாலத்திற்குள் ஸிட்னி ஸர்ப்ப ரக்ஷணசாலைக்குச்சென்றவரொருவரின் முன்னிலையில் ஸிட்னியின் சுகாதாரச்சாலையில் ஸர்ப்பங்களினால் நேரும் தீங்குகளின் நிவாரணார்த்தமான ஔஷதஞ்செய்வதற்கென்று பிடித்து இரட்சணிக்கப்பட்ட பெருத்த வேங்கைப் பாம்புகளும், நட்சத்திரவிரியன்கள், கண்ணாடிவிரியன் பாம்புகளும் மாதிரிகளாகக் கொணர்ந்து காட்டப்பட்டன. பாம்புகடிக்கு மாற்று மருந்து செய்வதற்கு முன்னர் ஹாலாஹல விஷம்போன்ற விஷங்களை யடக்கியிரா நிற்கும் பெரிய பாம்புகளை இவர்கள்கஷ்டப்பட்டுப் பிடித்துக்கொணர்ந்து அவற்றிலிருந்து விஷக்கிராகியம் செய்வதற்கு முன் அவற்றிற்கு ஏராளமான இரைகளை யிட்டுக் கொழுக்கச்செய்கிறார்கள். இவ்வாறு தீனிதின்று கொழுத்த பாம்புகள் அடைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளில் கைக்கடிகாரக்கண்ணாடிபோன்ற கண்ணாடியை ரப்பரோடு சம்பந்தப்படுத்தி இடுகிறார்கள். இக்கண்ணாடிகள் தம்மீது விழுந்தமாத்திரத்தில் மிகுதியும் வெருட்சிகொண்ட ஸர்ப்பங்கள் கட்டபர்ச்சாரப்பரினால் மூடப்பட்டிருக்கிற கண்ணாடியை உக்கிரத்துடன் கடிக்க உட்கண்ணாடியில் விஷத்துளிகள் பலபொருந்துகின்றன. உஷ்ணம் மிகுந்தகோடைகாலத்தில்தான் முக்கியமாய்ப் பணிகளினின்றும் விஷக்கிராகியமாகின்றது. கோடைக்காலத்திலேயே அவைகள் கோபமுள்ளவையாயும் சுறுசுறுப்புள்ளதாயும் துஷ்டத்தன்மையுள்ளதாயுமிருக்கிறபடியால் அக்காலத்திலேயே அவற்றினின்றும் விஷக்கிராகியம் செய்வதுமே தக்கதென்று சொல்லப்படுகின்றது; இப்படிக்கு விஷக்கிராகியம் செய்வதற்காகவே அநேக நவநவமான கடுவிஷம்கொண்ட உரகங்கள் பாம்புப் பெட்டிகளில் பத்திரமாய்க்கொணரப்பட்டு ஸிட்னியின் சுகாதாரசாலையில்

வைக்கப்பட்டவற்றில் அசௌகரியமான பாம்புகள் சௌகரியப்படுத்தப்பட்டு அனுப்பப்படுமாறு இரக்ஷணசாலைக்கே மீட்டும் திருப்பியனுப்பப்படுகின்றது. விஷக்கிராகியமாய்ப்போனபிறகு சாதுவாய் மாறின பணிகள் ஹிட்னியின் மிருகக்காட்சித் தோட்டங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

ஆகவே ஹிட்னிக்கு ஆலாஹால விஷத்தை யொப்பத்தான் நஞ்சினைக்கொண்ட அதிபுத்கிருஷ்டமான பாம்புகள் எங்கிருந்தகப்பட்டு அனுப்பப்பட்டாலும் விசேஷமான ஊதியம்பெறலாமென்று நன்கு விளங்குவதாகின்றது. விஷஜெந்துக்களையும் கொடிய வேங்கை சிங்கம் முதலிய பிராணிகளையும் நாம் நாட்டில் கொன்று தம் வீர பராக்கிரமத்தைக்காட்டியமுனிஸிபாலிடிகளிலும்பணக்கார்களிடத்திலும் சொற்பசிவேதனமே பெறும் வேடர்களும் வில்லியர்களும் வனசஞ்சாரிகளும்போன்ற நாகரீகமற்ற ஏழைகள் தாங்கள் செய்யும் முரட்டுத்தனமான வேலைகளைக் காடுகளில் புகுந்து கொடிய விஷப்பாம்புகளிடத்துக்காட்டி அவற்றை உயிருடன் பிடித்து ஹிட்னிக்கு அனுப்புவாரேல் விசேஷமான ஊதியம் நம்மிந்தியாவிற் பெறுவதைக் காட்டிலும் அங்கு பெறலாமென்பதில் ஆட்சேபனை சிறிதேனுமின்று. இப்பாம்புகளில் கொடிய விஷமுள்ளவைகள் நம்நாட்டில் ஏராளமாய்க் காடுகளில் அகப்படும். இப்படி அபூர்வமான பாம்பொன்று பிடித்தனுப்பினால் பாம்பொன்றிற்கு 6 பவுண்டு அல்லது 90 ரூபாய் அவர்கள் குறைந்த தொகையாகக் கொடுக்கிறார்களாம். இப்படிப்பட்ட பாம்புகள் நம்மிந்தியா நாடுகளில் எண்ணிறந்தன விருக்கும் என்பதில் தடையேயில்லை. பிடாரர்களுக்கு இவ்வேலை செய்வதற்கென்றால் விசேஷமான தார்க்குச்சியும் சர்க்கரைப் பையும்வேண்டுவதில்லை. தம்மகுடியினாலும், தாம் கற்றிருக்கும் மந்திரங்களினாலும் இப்பாம்புகளைக் கட்டிக் கூட்டில் அடைத்துக்கொண்டு வந்துவிடுவது சகஜமேயாகுமாதலின், இவ்விஷயத்தில் இவ்வூதியத்தை இவர்கள் பெறுவதற்குச் சௌகரியமாயிருக்கும்.

இம்மாதிரியான அபூர்வமான பாம்புகள் கோடானுகோடி அந்த ஹிட்னி அரவரக்ஷண சாலையில் எக்காலத்தில் வேட்டைக்காரர்களாற் கொணரப்பட்டுக் கூடைகளிலும் கம்பியினால் வலைப்பின்னல்



போன்ற மேல்மூடியுள்ள பெட்டிகளிலும் அடைத்துவைத்து இ[illegible]சிக்கப்படுகின்றன. இக்கூடைகள் பெட்டிகளினடியில் அவ்வரவங்களுக்கு மெத்தென்றிருக்கும்படியாய்க் கந்தைத் துணிகளும் வைக்கோலும் போடப்பட்டிருக்கின்றன.

ஸர்ப்பரக்ஷண சாலையின் கர்த்தன் இப்பாம்புகளை யிரட்சிக்கையில் அடிக்கடி அப்போதப்போது வியாதியினாலும் பிடிக்கப்படுகின்றான். இப்பிணிகளின் இரட்சணிய காலத்தில் அவற்றின் உடம்பினின்றும் வெளிப்படும் நஞ்சின் காற்றே இவன் அடிக்கடி நோயுற்று அப்போதப்போது வருந்துவதற்குக் காரணமென்று ஊகித்தறிந்துகொள்ளப்பட்டது. ஜாதிக்கட்டுப்பாடு இவைகளுள் மிக்கிருப்பதென்னும் ஒரு அபூர்வ விஷயத்தினால் இப்பாம்புச்சாதி மனிதனை நிகர்த்திருக்கின்றதென்று சொல்லக்கூடியதாயிருக்கின்றது.

கருநாகம் என்னும் ஜாதி பாம்புகளுடனும் சேராமல் தனியே வசிக்கப்பிரியப்படுவதனால் அவ்வவ்வர்க்கங்களில் இதனைச் "சர்ப்பச்சிரேஷ்டன்" என்று அழைக்கிறார்கள். ஜமக்காளவிரியன் என்னும் பாம்பு இச்சாதியில மந்தமானதும் சோம்பலுள்ளதுமாம். கண்ணாடி விரியன் என்னும் ஜாதி முரட்டுத்தன முள்ளதும் மற்றைய பாம்புகளின் மனைவிகளுடன் கலந்து விளைவதும், மிகுதியும் விழையும் பிரியமுடையதும், அச்சர்ப்பங்களின் குஞ்சுகளைப் பட்சிக்குந்தன்மையுள்ளதுமானதாம். வேங்கைவிரியனோ பழகுவதற்குக்கடினமானதும் நச்சுத்தன்மை மிகுதியும் வாய்ந்ததும் வஞ்சகமுள்ளதும் வேங்கை பூனையினங்களை போன்று தனக்கு அகப்பட்ட இறையை விழுங்குவதற்கு முன்னே அவற்றினுடன் பரிகாசமாய் விளையாடும் சுபாவத்தினையுடையதுமாம்.

மற்ற இப்பாம்புகளின் ஆகாரத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம். இப்பாம்புகளின் ஆகாரத்தைப்பற்றிச்சிறிது கவனிப்போம். இப்பாம்புகளின் ஆகாரார்த்தமாக ஏராளமான மண் கல்களையும் எலி பெருச்சாளிகளையும் குழிமுயல்களையும் முட்டைகளையும் இவற்றை இரக்ஷிக்கும் கர்த்தன் மிகுதியும் சேகரிக்கவேண்டியவனாகின்றான். மண்டூகங்களின் இரக்ஷணியம் இப்பாம்பு போஷணசாலையிலவசியமா

ருபபதற்கு மேற்கூறியவையே காரணமாகக்கொள்ளலும், அவசியமாகின்றது. ஊர்ந்துசெல்லும் பிராணிகள் பலவும் புல்தரையில் அடியில்லாத கூண்டுப்பெட்டிகளில் ஒரு பக்கத்தில் புதரொன்றடர்ந்திருக்கிற இடத்தில் மத்தியில் நீர் நிறைந்த குளத்துடனும் வைக்கப்படுகின்றன. இப்பேர்ப்பட்ட புதரும் நீர் நிறைகுளமும் பாம்புவர்க்கங்களுக்கும் தவளைச்சாதிகளுக்கும் மிகுதியும் இன்றியமையாமையேயாம்.

புற்புதர்களின் மத்தியில் கோடைகாலத்தில் இத்தவளைகளுட்கார்ந்திருக்கையில், மழை கண்டதுபோல் இனிமையாயிருக்கும்படியாய்த் தோட்ட வேலைக்குற்ற அநேக துவாரங்களுள்ள ஒரு குழாயின் உதவியினால் அவற்றின்மீது குளிர்ச்சியாய், ஒரு செயற்கை மழையும் பொழிவிக்கப்படுகின்றது. இச்செயற்கை மழைத்திவலைகளை அநுபவிக்கப் பிரியப்பட்டதாய் இம்மண்டூகங்கள் பல்லாயிரம் கால்களையும் தலைகளையும் தாராளமாய் நீட்டிக்கொண்டு மல்லாந்து வானநோக்கிய வண்ணமாய்ப் படுத்துக்கொள்வனவும், தங்கள் தங்கள்வாயை அகலவிரித்துக்கொள்வனவும் அப்புதர்களில்அங்குமிங்கும் களிப்புமிக்குத் தத்தித்தத்திக் குதிப்பனவு மாகின்றன. எவ்வளவு தண்ணீர் மிகுதியாயிருந்தாலும், குறைவாயிருந்தாலும் இத்தவளைகள் அதனை லட்சியம் செய்யாது கோடைகாலங்களில் தம்புராதன இருப்பிடங்களைவிட்டுக் கும்பலாய்க் கூடிக்கொண்டு சதுப்பு நிலங்களைநாடி வேற்றிடங்களுக்கு வெளியேறுகின்றன. இவ்வாறு வெளியேறின தவளைகளெல்லாம் நிழலான குளிர்ந்த பள்ளமான தாக்குகளில் இனிது சென்று சேர்ந்தபோது தங்கள் வயிற்றுப் பைகளில் நிரப்பியுள்ள நீரினால் அப்பள்ளத்தாக்கினை நீர்மயமாக்கி அக்குட்டைகளில் வசிப்பனவாகின்றனவென்றும், பாம்புகளினின்றுண்டாகும் விஷம் மிகுதியும் விலையேறப்பெற்றதென்றும், அந்நஞ்சு நிரம்பவும் குறைச்சலாய்ச் சில குன்றுமணி எடையுள்ளனதாகவே யிருக்கின்றதென்றும், அந்நஞ்சினின்றும் விஷத்தன்மை இலேசில் நீங்குவதில்லையென்றும், அப்படிப்பட்ட விஷத்தைக் கையினால் ஸ்பரிசிப்பதில் எவரும் ஜாக்கிரதையாய் ஒழுகவேண்டுமென்றும், ஆஸ்திரேலியாவின் ஸர்ப்பரக்ஷணசாலையின் அதிபரின் வார்த்தையினால் நன்றியக் கிடக்கிறது.



கத்திவைத்தாடும் குழந்தைகளும் பாம்போடு பழகும், யோரும் பிராணனுக்குத் துணியவேண்டும் என்னும் பழமொழிகளை வேறு மொழியாக்கி இச்சர்ப்பரக்ஷணத்தைப்பெரிதாகக் கொண்ட ஆஸ்திரேலியரின் குணதிசயமும் சிலாகிக்கத் தகுந்ததாகின்றது. இப்பேர்ப்பட்டவர் ஜனமேஜய மகாராஜனை போன்று சர்ப்பயாகம் செய்யாமல் ஸர்ப்பபோஷணஞ் செய்து அவற்றின் நுட்பங்களையுணர்ந்து உலகத்துக்குதவுவதும் பேருபகாரமேயாகின்றது. வண்ணாந்தை, கட்டிவிரியன், கழுவாநஞ்சன், கொம்பேறிமூக்கன், பச்சைப்பாம்பு இருதலைநாகம், மண்ணுளிப்பாம்பு, மலைபாளவிரியன், செந்தலைவிரியன், கண்ணாடிவிரியன், கழுதைவிரியன், சாரை, நீர்க்குறட்டை, தண்ணீர்ப்பாம்பு, விழலை, மயக்காரா முதலியவிஷப்பாம்புகள் நம்மிந்தியா நாட்டிலிருந்து ஆஸ்திரேலியாவிற் கனுப்பப்படும்படியான ஏற்பாடுசெய்வதும் அல்லது அதனைப்போன்று நம் நாட்டுக்குதவியாய்ச் சர்ப்ப ரக்ஷணசாலையொன்று நம் நாட்டிலே ...பாகப்பட் செய்வதும் நிரம்பவும் அநுகூலமாயிருக்குமென்பதில் ஆட்...பரில் இவ்விரு யின்று. அந்நாட்டிற்கு நம் நாட்டிலுள்ள பாம்புகள் அனு...ண்டு ஆல்ட்ரி டாலும், நம் நாட்டுள்ள விஷப்பாம்புகள் கோடானுகோடிகளும் சேர்ந் விடமதெரியாமல் போகும்படியாகி அநேகர் பாம்புக்கடிகளினால் ... தொந்தரவு வராமலிருக்கவும் ஏதுவாகும்.

---

வி. சுப்பிரமணிய ஐயர்

# வங்காளத்தில் வெளியேற்றங்கள்.

## பாபு கிருஷ்ண குமார மித்திரர்.

இவர் சஞ்சீவினி பத்திரிகாசிரியர். இரண்டொரு தினத்துக்கு முன் இவர் வீட்டண்டையுள்ள ஒரு பிரஸ் சோதனைக்கு இன்ஸ்பெக்டர் பிரியநாத் முக்கர்ஜீயால் சாக்ஷியாக வரவழைக்கப்பட்டு டானவுக்குப் போனதும் கிரிமினல் கோடின்படி இவரைச் சந்தேகாஸ்பதமாகப் பிடித்துவைக்க உத்தரவாயிருப்பதாகத் தெரிவித்தபடி இவரைச் சூப்பிரெண்டெண்டு ஆல்ட்ரிட்ஜிடம் ஒப்புவிக்க லா

று. ஆனால் இன்ன குற்றமென்றேற்படவில்லை. பிறகு இவரை
லால்பஜார் லாக்கப்புக்குக் கொண்டுபோய் ஒரு தனியறையில் வைக்க
லாயிற்று. இவர் வீட்டார் வெகுநேரங் காணமல் திகைத்தாலும்
இன்னவிடத்தில் வைக்கப்பட்டிருப்பதாயும் ஏற்படவில்லை. இவரைப்
பிடித்து வைத்திருக்கும் சங்கதி தெரிந்ததும், ஆனரபிள் பூபேந்திர
நாதவசு, போலீஸ் கமிஷனர் மிஸ்டர் ஹாலிடேயைக்கண்டு கிருஷ்ண
குமார மித்தருக்கு லாயராய் வராமல் சிநேகசகாயமாய் வந்திருப்ப
தாகத் தெரிவித்து, ஸஞ்சீவினி பத்திரிகையில் இவர் அராஜகீகத்
தைக் கண்டித்திருப்பதாயும், மிதவாதத்தில்சிறந்தவராய்அமிதவாதிக
ளினின்றுமிகவும் விலகியிருப்பதாகவும் சொல்லியும், மிஸ்டர் ஹாலி
டே விசாரணை நடேந்தறிவருவதால் மித்தரை ஜாமீன்பேரிலும்
விடுவித்துக்கொண்டு போகமுடியாதென்று நயமாகவே பதில் சொன்
னார். இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போதே சூப்ரிண்டெண்டு
டீட்ரிட்ஜ் அங்கே மித்தரை உட்காரவைத்து வாக்குமூலம்
கால்கவெக்கொண்டிருந்தார். ஒரு வக்கீல் இடையே வந்து மித்தர்
வானமூலத்தைக் கவனித்துக்கொண்டிருக்கவாவது உத்தரவாக
ள்வாக்கொடுத்தும் மறுத்துவிடப்பட்டது.

## பாபு சியாம சக்கிரவர்த்தி.

பிற்பகலில் இவர் கமிஷனரிடம் கொண்டுவரப்பட்டார். காலை
முதல் இவரைப் பார்க்கக் காத்துக்கொண்டிருந்த இவர் சகோதரர்
வகையார் கண்டு பேசவிடப்பட்டார்கள். மாலைநேரம் இவர் வெளி
யே போயிருந்தபோது தன் சிநேகிதரொருவரைப் புதிபசட்ட சங்
கதியைப் பார்க்க ஆவல்கொண்டு ஒரு பேப்பரை வாங்கிவர அனுப்பி
விட்டு வீட்டுக்குத் திரும்பி வருகையில் பிடித்துக் கொள்ளப்பட்
டார். வாரண்டாபீசரும் மனமிரங்கி பிடித்துக்கொண்டு வருவத
ற்குமுன் இவர் குடும்பத்தைக் கண்டுகொள்ள விடப்பட்டார். டாணா
வில் கிரிமினல் கோடின்படி இவர் சந்தேகாஸ்பதமாய்ப் பிடிக்
கப்பட்டதாகத் தெரிவித்தாலும், இன்னகுற்றமென் றேற்பட
வில்லை. அப்பால் லால்பஜார் லாக்கப்பிலே ஒரு தனி யறையில்
வைக்கப்பட்டிருந்து கமிஷனராபீசில் தன் சிநேகிதர்களைக்கண்டு
பேசியவரையிலும் கிருஷ்ணமித்தரும் பிடிபட்ட சங்கதி யிவருக்



குத் தெரியாது இவருக்காக பாரிஸ்டர் மிஸ்டர் சத்தர்ஜீ ஹாஜரா
யும் ஆனரெபில் பூபேந்திர பாபுவைக்கண்டு பேசவைத்த அளவிலு
ங்கூட கமிஷனர் பேசவிடவில்லை. இல்லாவிட்டாலும் இன்ன குற்
றமென்றாவது தெரிந்துகொள்ள இவர் சிநேகிதர்கள் ஆவலாயிரு
து வருவதாகத்தெரிவித்ததின்மேல், கமிஷனர் ஏதோ விசாரணை
யாய் வருவதால் நிகரமாய் அப்போதே யேதும் சொல்வதற்கில்லை
யென்றும், எல்லாம் திங்களன்று தெரியுமென்றும் பதில்கூறினார்.

ஞாயிறன்று இரவு 8-மணிக்கு மித்ராவுக்கு சாப்பாடு கொ
டுபோக, அவரும் சக்கரவர்த்தியும் சாப்பிட்டபோது கண்டு வந்
பிறகு அவர்களின் ஆப்தர்களுக்கும் காணப்படவில்லை. திங்களன்
அவர்கள் கமிஷனரைக்கண்டு கேட்டபோது இவ்விருவரும் மற்றவ
களும் 154-ஆவது செக்ஷன்படி பிடித்துக்கொண்டு போகப்பட்
தாய்ச் சொல்லிவிட்டார். ரகசிய உத்தரவுகளின்பேரில் இவ்விரு
ரின்றி இன்னும் 4, 5 பேரையும் சூப்ரிண்டெண்டு ஆல்ட்ரி
ஜோடு திரசில்லாமலே 5 யூரோப்பிய ஸார்ஜண்டுகளும் சேர்ந்
யாருக்கும் தெரியாதபடி பந்தோபஸ்தாய்க் கொண்டுபோய்விட்ட
கள். திங்களன்றும் ஆனரெபில் வசுவும், மிஸ்டர் சத்தர்ஜீயு
கண்டு கேட்டதற்கு கமிஷனர் தன்னிடம் அவர்களில்லையென்று
அவர்கள் இன்னவகையிலிருக்கிறார்களென்பதும் தனக்குத்தெரி
தென்றும், சந்தேகாஸ்பதமாய்ப் பிடித்து வைக்கப்பட்டதென்பது
போலிருப்பது கவர்னர் ஜெனரல் ஆர்டரின்படி சர்க்கார் கைதிகளா
யிருக்கிறார்களென்று பதில் கூறினார்.

இப்போது சக்கரவர்த்தி சூனார் சீர்திருத்தசிறைச்சாலையிலும்,
மித்தர் ராவல் பிண்டி காரிஸன் கட்டிடத்திலும் வைக்கப்பட்டிருப்
பதாகக் கல்கட்டா ஸ்டேட்ஸ்மன் கூறுகிறது.

சுதேசமித்திரன்,

# கல்கட்டா இந்தியமாதர்களின் சங்கத்தில் பரோடா மஹாராணியார் செய்த உபந்நியாசம்.

---

என் பிரியமுள்ள சகோதரிகாள்! இந்த மாதர் சங்கத்தில் என்னை அக்கிராசனாதிபத்தியம் வகிக்கக்கேட்டுக்கொண்டதால், எனக்கு ஒரு மேன்மையைத் தந்தவர்களானீர்கள். "மஹிலசமிதியார்" நான் பரோடாவிலிருந்தபொழுது என்னை இந்தச் சங்கத்தின் அக்கிராசனாதிபத்தியத்தை வகிக்கக் கேட்டுக்கொண்டபொழுது என்னைவிட இவ்விடத்தில் அநுபோகமுள்ளவர்களிருப்பதால், இந்த அநுமதிக்குச் சம்மதியற்றவளாக முதலில் இருந்தேன். ஆனால் இப்படிச் செய்தால் அது நீங்கள் விசுவாசத்துடன் மேற்கிலிருக்கும் என்னை அழைத்ததற்குத் தக்க ஈடாகமாட்டாதென்று நினைத்தேன். இதனாலே, வங்காள சகோதரிகள், இந்த அழைப்பை ஒப்புக்கொள்ளும்படி தூண்டப்பட்டேன். உங்களில் யாராவது ஒருவரை அக்கிராசனாதிபதியாக நியமித்திருந்தால் எவ்வளவு திருப்திகரமாகவிருக்குமோ அவ்வளவு திருப்திகரமாக இராவிட்டால் என்னை மன்னிக்கவேண்டும் ஏனெனில், நீங்களே என்னை அக்கிராசனாதிபதியாகத் தெரிந்தெடுத்தீர்கள்.

முதலில் நான் இப்பொழுது உங்களுடையமத்தியிலிருப்பதனாலுண்டாகும் சந்தோஷத்தைத் தெரிவிக்கிறேன். நான் சிலநாளைக்குமுன்தான் பிரான்சு, இங்கிலாந்து, இட்டலி, கிரீசு, ஜர்மனி, ஆஸ்திரியா, சுவிட்ஸர்லாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களிலிருந்து திரும்பிவந்தேன். அவ்விடத்திலுள்ள சித்திரவேலைகளையும், தொழில்களையும், ஆசாரங்களையும், கலாசாலைகளையும், பார்த்ததினால் அதிக கவலையுள்ளவளாகவும், சிரத்தையுள்ளவளாகவுமிருக்கிறேன். ஆனால் நான் உங்களிடம் வரும்போது வேறுபதியாகச் சென்ற ஒருவன் திரும்பக் குடும்பத்தைக் காணுவதுபோல உங்களிடம் சேருகிறேன். ஏனெனில், நமக்குள் பந்தமிருப்பதால் நாமெல்லோரும்



ஒன்றாகி இந்தியாவின் எப்பாகமும் நமது வீடாகின்றது, இரண்டு வருஷங்களுக்கு முன் என்னை ஆதரவுடன் வரவேற்றீர்கள். ஒரே காரியத்தில் பிரயத்தனப்பட்டிருக்கும் சகோதரிகளுக்கு மத்தியிலிருப்பதாலும் நான் பரோடாவிலிருப்பதுபோல் வங்காளத்திலிருப்பதை யெண்ணுகிறேன். உங்களுடைய "மஹிலசமிதி" இந்தஎண்ணங்களைக்கொண்டதாக விருக்கிறது. இதனுடைய நோக்கமாவது எல்லா மதத்திலுமுள்ள இந்தியமாதர்கள் ஜாதி மதபேதமின்றி ஒன்றாக்கும் எண்ணமுடையது. நம்ஆடவர்கள் வருஷத்துக்குவருஷம் கொஞ்சம் கொஞ்சமாகக் காங்கிரெஸ், கான்பரென்ஸ்கள் மூலமாக நெருங்கியனுபவம் பெறுகிறார்கள். தேசக்கட்டுப்பாடு பலப்படுவதற்கு ஆடவர்கள் பிரயத்தனப்படுவதைப்பார்க்கிலும், நம்முடைய முயற்சி அதிகம் வேண்டும் நாம் ஒருவரை யொருவர் மரியாதையாகவரவேற்று உபசரித்து, அதன் மூலமாக ஒரு ஜாதி மானக்கட்டை பலப்படுத்துகிறோம். நாம் ஒருவருக்கொருவர் வெகுதூரத்தில் ஆயிரமைலுக்கப்பால் இருந்தபோதிலும் ஒரேவிதமான எண்ணங்களாலும், பிரயத்தனங்களாலும் கட்டுப்பட்டவர்களாயிருக்கிறோம். உயர்ந்தவரானாலும்சரி, தாழ்ந்தவரானாலும்சரி, தனவந்தனானாலும், ஏழையானாலும் சரி—நம்முடைய புராணங்களைப்பற்றி நாம் பெருமையடைகிறோம். வருங்காலத்தை ஆசையுடனும் விருப்பத்துடனும் எதிர்பார்க்கிறோம். ஆகையினாலே இந்த மஹிலசமிதியின் கொள்கையாக இந்தச் சங்கம் கூட்டப்பட்டதே சந்தோஷகரமான செய்தியாகும். அடிக்கடி சந்திப்பதாலும், அநேகர் ஒன்றாகச் சேருவதாலும், ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகுவதாலும் நம்முடைய எண்ணங்களை நிறைவேற்ற சௌகரியமாகும்.

"மண்ல சமிதி" யின் மற்றொரு நோக்கமாவது இந்தியபாஷாவிருத்தியும் சரித்திர விருத்தியும் இந்த விஷயத்தில் கூட ஸ்திரீகளாகிய நமக்கு அதிக செல்வாக்கு புருஷர்களைவிட இருக்கிறது. நாம் நம்முடைய குழந்தைகளை இளமைப்பருவத்தில் பயிற்றுவிக்கிறோம்; அக்காலத்திலேயே புராதன சரித்திரத்தின்பேரில் ஆசையும் அதன் மூலமாய் கௌரவத்தையும் அது காரணமாக வித்தியாவிருத்திக்கு இடத்தையும் தேடலாம். இந்தப்புண்ணிய பூமியில் நூல்களியற்றிய ஸ்திரீகள் இருக்கிறார்களென்று நம்புகிறேன். ஆனால்நம்பாவர்க்கும்

ஆர்ந்த சக்தியில்லாவிட்டாலும் நம்முடைய சந்ததியாரை சரித்திரத்தில் ஆசைப்படும்படி செய்யாலாமென்னும் சந்தோஷத்தையடையலாம் பெரியவர்களாகிக் கல்விபயிலுவதைக்காட்டிலும் இளமையில் சொல்லியது நன்றாகப்பதியுமென்னும்போது நம்புங்கள் பின் சந்ததியாரை விருத்தியம்சத்திற் பார்க்கவேண்டியது. நமது கடமை ஆகையால் தாய்மார்களாகிய நாம் பின் சந்ததியாராகிய ஆடவர்களையும் மாதர்களையும் இந்தியாவுக்குப்பாடுபடும்படிபயிற்றுவிப்போம். கடைசியாக மண்டலசமிதியின் நோக்கம் இந்தியாவின் தொழில்கூடவென்று விருத்தி நினைக்கிறேன் இப்பொழுது வங்காள முழுமையும் பஞ்சாப் மாகாணத்திலும் பம்பாய் சென்னை மாகாணங்களிலும் தக்ஷிணத்திலும் சுதேசீயம் பரவும்படிசெய்ததற்கு நீங்களும் ஆதரணையென நம்புகிறேன்.

இந்தியா முழுவதும் இந்த தேசாபிமானக்கிளர்ச்சியில் சேரும் வரை நீங்கள் தைரியத்துடனும் பெருந்தன்மையுடனும் எதிர்பாராதபடி கட்டிக்காத்துவந்ததை ஒவ்வொருவரும் சந்தோஷத்தோடும் கவனித்துவருகிறார்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் இந்திய பண்டசாலை ஏககாலத்தில் உண்டாகிறது இயந்திரசாலைகள் மேற்கிந்தியாவில் விருத்தியாகின்றன. இந்தியப்பாத்திரங்களைக் [illegible] உபயோகப்படுத்துவது அபரிதமாகிறது தறிகளையும் உலோகவேலைகளையும் நிறுத்திக்கஷ்டப்பட்ட அநேக ஆயிரவர் சந்தோஷத்துடன் தங்களுடைய பழைய தொழிலுக்குத் திரும்புகிறார்கள் உட்கிராமாந்தரங்களிலுள்ள ஏழ்மை சகோதரிகள் ஏழைத்தொழிலாளிகளின் சம்சாரங்களும் தாய் தமக்கைகளும் கிளர்ச்சியுடனும் குதூகலத்துடனும் வேலை செய்கிறார்கள் சரித்திரம் ஜனாபிவிர்த்தியைக் குறிப்பது நிஜமானால் இந்த சுதேசிய அற்புதக்கிளர்ச்சியில் ஒவ்வொருவரும் சிரமத்துடன் நிலை நிற்கும்படி பாடுபடுவதை எழுதிவைக்க ஸ்திரீகளாகிய நாமும் சந்தோஷத்துடன் கலப்போம். நம்முடைய வாழ்க்கைக்குரிய உடை உணவுகளில் நம்மால் ஏழைத்தொழிலாளிகளின் கஷ்டங்களை நிவர்த்திக்கக் கூடியதாகவிருக்கிற அவர்களால் செய்யப்பட்ட சாமான்களை அன்புடனும்ஆதரவுகளுடனும் நமக்கும் நம் பிள்ளைகளுக்கும் வாங்குவோம் நாம் எங்கு வசித்தபோதிலும் சரி எம்மதத்தினராயினும் எக்கொள்கையினராயினும்சரி நாம் நம் தேசக்ஷேமகரத்தின்பொருட்டுசந்தோஷத்துடன் பாடுபடுவோம். ஒரு புதிய நூற்றாண்டுடன் புது உணர்ச்சியும் [illegible]து. நம்முடைய ஒப்புயர்வற்ற தாய் நாட்டிற்கு நல[illegible]லம் விடிந்து நிலைத்து எந்நாளும் மேலோங்கும்படி எல்லாம் வல்ல கருணாநிதியானவர் முழுமுதற்கடவுளைப் பிரார்த்திப்போமாக.

சுதேசமித்திரன்.

| (1) | (2) | | |
| --- | --- | --- | --- |